பாபாசாகேப்

# டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 32

## சுதந்திரத்திற்கான உரிமைகள்

*மனித ஜீவன்களை வணிகப் பொருள் போல் பாவித்து வேலை வாங்குவது, மேலும் ஒரு குற்றத்திற்காக தண்டனை யாக முறையாகத் தண்டிக்கப்பட்டிருந்தா லொழிய, கட்டாய வேலை வாங்குவது, அல்லது விருப்பமற்ற அடிமைத்தனம் உட்பட எந்த உருவத்திலும் கட்டாயமாக வேலை வாங்குவது, தடை செய்யப்படு கிறது, இந்தத் தடையை மீறுவது ஒரு குற்றமாகும்.*

*- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்*


நூலகப் பதிப்பு:

**விலை ரூ. 100/-**

டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்:

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு:

## தொகுதி 32

பாகம் இரண்டு

*(பிரிவு IV)*

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956

நாகரிகம் வேறோர் இடத்தில் அல்லாமல் ஏன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடங்குகிறது என்று வரலாற்று ஆசிரியர்கள் அடிக்கடி குழம்புகின்றனர், வியப்படைகின்றனர். அந்த குறிப்பிட்ட பகுதியில் வதியும் மக்களின் திறமையும் ஆற்றலும் இதற்குக் காரணமா? அல்லது ஆண்டவன் அல்லது இயற்கையின் அருள் நலத்தால், கருணாகடாட்சத்தால் இது நிகழ்கிறதா? இந்த விஷயத்தை மேலெழுந்தவாரியாகப் பரிசீலித்துப் பார்த்தால்கூட இந்த இரண்டு அம்சங்களும் இரண்டாம்பட்சமான பங்கே வகிக்கின்றன என்ற முடிவுக்கு நாம் வர முடியும். முதல் தலையாய பங்கை ஆற்றும் சிறப்பு சுற்றுச்சூழலையே சாரும். வளமிக்கச் சுற்றுச்சூழல், தனது பாதுகாப்பைப் பேணும் ஆற்றல், ஒதுக்க நிலை, அந்நியப் படையெடுப்பிலிருந்து பந்தோபஸ்து போன்ற நல்வாய்ப்புகள் இருக்குமானால் அங்கு நாகரிகம் விதைத்து, முளையிட்டு, தளிர்த்து, கிளைத்து வளர்ந்தோங்கவே செய்யும்.

— டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்.

This Volume XXXII in Tamil forms the Part Two (Sections IV) of the English Edition Volume 14 of **Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches - Published by the Education Department, Government of Maharashtra,** 1992.

**Dr. BABASAHEB AMBEDKAR**
**SPEECHES AND WRITINGS**

Copy rights (c)

Year : January, 2003

Language : Tamil

Volume No : 32

Price : Paperback - **Rs. 40/-**
Cloth bound - **Rs. 100/-**

Publishers : **Dr. AMBEDKAR FOUNDATION,**
Ministry of Social Justice and Empowerment,
Govt. of India,
15, Janpath, New Delhi - 110 001.

Distributors : **NEW CENTURY BOOK HOUSE (P) LTD.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.

Printers : **PAVAI PRINTERS (P) LTD.**
142, Jani Jan Khan Road,
Royapettah, Chennai - 600 014.
Ph: 28482441, 28482973.

This Volume XXXII in Tamil forms the Part Two (Sections IV) of the English Edition Volume 14 of **Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches - Published by the Education Department, Government of Maharashtra,** 1992.

*முதற் பதிப்பு: ஜனவரி, 2003*
*சுபானு ஆண்டு, மார்கழி - தை*

© உரிமைப் பதிவு

**விலை : ரூ. 40/-**

**நூலகப் பதிப்பு : ரூ. 100/-**

**வெளியீட்டாளர்:**
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்
சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சகம்,
இந்திய அரசு,
15, ஜன்பத் சாலை,
புதுடில்லி.

**விற்பனை நிலையம்:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,
41B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 98.

**அச்சிட்டோர்:**
**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,**
142, ஜானி ஜான் கான் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி: 28482441, 28482973

# ஆலோசனைக்குழு

**மாண்புமிகு டாக்டர் சத்தியநாராயண ஜாட்டியா,**
*சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சர்,*
*இந்திய அரசு*

***உறுப்பினர் - செயலாளர்***
*சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சகம்*
*இந்திய அரசு*

**ஆர். கிஷோர் பாபு**
**இயக்குநர்,**
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
புதுடில்லி.

***நிர்வாக ஆசிரியர் (தமிழ்):***
***ரா. ரங்கசாமி (மாஜினி)***
சென்னை, தமிழ்நாடு.

ஆங்கில நூல் வெளியீடு:

*கல்வித்துறை,*

*மகாராஷ்டிர மாநில அரசு, 1992.*

ஆங்கில நூல் தொகுப்பாளர்:

*திரு. வஸந்த் மூன்*

*மும்பை*

தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர்:

*ரா. ரங்கசாமி (மாஜினி)*

மொழிபெயர்ப்பாளர்கள்:

*முனைவர் அ. இளங்கோவன்*
*திரு. வெ. பரஞ்சோதி*
*கவிஞர் இளங்கோ*
*திரு. ரவீந்திர தாஸ்*
*திரு. ந. ஜெயராமன்*
*திரு. எம்.ஏ. பழனியப்பன்*

ஒப்புநோக்கியோர்:

*திரு. கே. நீலகண்டன்*
*திரு. ஏ.எஸ். மணி*

பிழைதிருத்த உதவி:

*திரு. வி. இராதாகிருஷ்ணன்*

# அணிந்துரை

ஆங்கிலத் தொகுதி 14 பாகம் 2 (தமிழில் 32) 1947 முதல் 1956 வரையிலான டாக்டர் அம்பேத்கரின் சொற்பொழிவுகளையும் எழுத்துகளையும் கொண்டுள்ளது. இந்த சொற்பொழிவுகளும் எழுத்துகளும் டாக்டர் அம்பேத்கரை பல்வேறு பாத்திரங்களில் காட்டுகின்றன; முதலில் அரசாங்க உறுப்பினராகவும் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினராகவும் அவர் செயல்பட்டதைப் பிரதி பலிக்கின்றன. எனினும் அரசாங்க உறுப்பினராகவும் எதிர்க்கட்சி உறுப்பினராகவும் இருந்தபோதிலும் அவரது எண்ணப்போக் கிலும் அணுகுமுறையிலும் ஒத்த தன்மை நிலவுவதைக் காண் கிறோம். இந்தத் தொகுதியில் அடங்கியுள்ள அவரது எழுத்து களிலும் பேச்சுகளிலும் அவரது சீரிய நேரிய தார்மிக நெறியும், பொது நலத்தின்பால், அவருக்கிருந்த ஆழ்ந்த கரிசனமும் அக்கறையும் இழையோடுகின்றன. தேர்தல் சீர்திருத்தங் களையும், வேட்பாளர்கள் தேர்வையும், அவர்களது தகுதிகளை யும் பற்றி டாக்டர் அம்பேத்கர் தெரிவித்துள்ள கருத்துகள் எவ்வளவு ஆழமானவை, தீர்க்கதரிசனமானவை என்பதை வாசகர்கள் தெள்ளத் தெளிவாகக் காணலாம். இந்த தொகுதி யில் இடம்பெற்றுள்ள பிரச்சினைகள் இன்றளவும் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பவையாக உள்ளன; பத்திரிகைகளிலும் அவை முக்கிய இடம்பெற்றுள்ளன. நற்பண்புக்கு, மனித நேயத் துக்கு டாக்டர் அம்பேத்கர் தலையாய முக்கியத்துவம் அளித்தார். இதேபோல் அரசியல் தலைமையின் நேரிய ஒழுக்கத்துக்கும், விழுமிய செயல்பாடுகளுக்கும் எல்லையற்ற பிரதானம் தந்தார். அதுமட்டுமின்றி இவ்வகையில் தாமும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து பிறருக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார்.

இந்தத் தொகுதி பலரால் மொழிபெயர்க்கப்பட்டிருப் பதால் மொழி நடையும், சொல்லாக்கமும், பதப் பிரயோகங் களும் வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாததாகி விட்டன. இதனை வாசகர்கள் பொறுத்தருள்வார்கள் என்று நம்புகிறோம். இதுவரை வெளிவந்துள்ள தொகுதிகளுக்குப் பேராதரவு அளித்து வந்துள்ளதைப் போன்றே இந்தத் தொகுதியும் வாசகர் களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று நம்புகிறோம்.

(ஒப்பம்) **டாக்டர் சத்திய நாராயண ஜாட்டியா**

சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சர்,

புதுடில்லி

இந்திய அரசு.

# பதிப்புரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கில மொழியில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்புகளை இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடும் பணியை இந்திய அரசின் சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சகத்தைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது. இந்தப் பணி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் 32-வது தொகுதியை நாட்டு மக்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உயர்ந்ததோர் இலட்சியத்தை நோக்கி நம் நாடு செல்லும் பயணத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்கள் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆங்கில நூல்களை இந்திய மொழிகளில் பெயர்த்து வெளியிடுவதில் முனைந்து பணியாற்றும் பதிப்பாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், அச்சகத்தார் ஆகிய அனைவரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள். இந்த அரிய பணியில் ஒத்துழைப்பு நல்கும் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஏனைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதியையும் மக்கள் வரவேற்று ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

ஆர். கிஷோர் பாபு
இயக்குநர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

புதுடில்லி

# தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர் உரை

இந்து சமுதாயத்தை சீர்திருத்துவதிலும், அதிலும் முக்கியமாக அந்த சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதிலும் எல்லையற்ற ஆர்வம் காட்டியவர் டாக்டர் அம்பேத்கர். இந்த முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை 1947 ஏப்ரல் 11 ஆம் தேதி இந்திய அரசியல் நிர்ணயசபையில் கொண்டு வந்தார். இந்த மசோதாவுக்கு ஒருபுறம் தீவிர ஆதரவும் இன்னொருபுறம் கடும் எதிர்ப்பும் இருந்தது. இந்த மசோதா மீது நான்காண்டுகளுக்கும் மேலாக விவாதம் நடைபெற்றது; எனினும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்றத்தில் வேறு எந்த மசோதா மீதும் இவ்வளவு நீண்டகாலம் விவாதம் நடைபெற்றதில்லை எனலாம். இந்த மிக முக்கிய மசோதாவுக்கு முன்னுரிமை தந்து, 1951 செப்டம்பர் 1 ஆம் தேதிக்குள் அதனை சட்டமாக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்தினார். ஆனால் இந்த மசோதாவை எதிர்த்தவர்கள் தொடர்ந்து முட்டுக்கட்டைப் போட்டு, மசோதா நிறைவேறுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தினர். இதனால் வெறுத்துப் போன டாக்டர் அம்பேத்கர் 1951 அக்டோபர் 10 ஆம் தேதி தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட்டு அவையை விட்டு மிகுந்த வேதனையோடு வெளியேறினார்.

இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா அரசியல் நிர்ணயசபையில் கொண்டுவரப்பட்டதிலிருந்து 1951 அக்டோபர் 10 ஆம் தேதி வரை நடைபெற்ற முழு விவாதமும் இந்த நூலில் நான்கு பகுதிகளாகத் தரப்பட்டுள்ளது. மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பும் விவரம் முதல் பகுதியில் தரப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் தயாரித்த வரைவு இந்து தொகுப்பும், அப்போது நடைமுறையிலிருந்த இந்து சட்டத் தொகுப்பும் இரண்டாவது பகுதியிலும், இந்த சட்டத் தொகுப்பு பற்றி நடைபெற்ற பொது விவாதம் மூன்றாவது பகுதியிலும், இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய ஷரத்து வாரியான விவாதம் நான்காவது பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. டாக்டர் அம்பேத்கரது அறிவும் செறிவும், ஆழ்ந்த சட்டப் புலமையும், குதர்க்க வாதங்களுக்கு சாட்டையடி கொடுக்கும் வேகமும் விவேகமும், சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவை உணர்வும், பகைவர்களையும் வியக்க வைக்கும் வாதத் திறமையும் இந்தத் தொகுதியில் தெள்ளத் தெளிவாகப் பிரதிபலிக்கக் காணலாம்.

**ரா. ரங்கசாமி (மாஜினி)**
தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர்

# பொருளடக்கம்

## பிரிவு IV


இந்து சட்டத் தொகுப்பு மசோதா
(கூறுவாரியான விவாதம்) 1-809

பின் இணைப்புகள் 811-830

# இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

## கூறுவாரியான விவாதம்

[1]**மாண்புமிகு சபாநாயகர்:** பொறுக்குக் குழுவினால் அளிக்கப் பட்டுள்ள இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்து தொகுக்கக் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை மேலும் பரிசீலனை செய்யும் பணியை அவை இப்பொழுது தொடரும்.

**திரு. ஆர்.கே. செளதுரி** (அசாம்) : ஐயா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் இந்த மசோதாவை எடுத்துக் கொள்ளும் முன் ஓர் ஆலோசனையைத் தாழ்மையுடன் எடுத்துரைக்க விரும்புகிறேன். பட்டியலிலுள்ள சிறிய மற்றும் மிக முக்கியமான மசோதாக்களை முடிவு செய்த பிறகு இந்து சட்டத் தொகுப்பைப் பரிசீலனை செய்து அதை முடிவு செய்யலாம்; அல்லது இப்பொழுது இந்து சட்டத் தொகுப்பைப் பரிசீலித்து முடிக்கும் வரை வேறு எந்த மசோதாவையும் எடுக்க வேண்டாம். இந்த இரண்டு வழிமுறை களில் ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த மசோதாவை எடுத்துக் கொண்டு, ஒரு கட்டம் வரை, சிறிது காலம் பரிசீலித்து விட்டு, பிறகு நீண்ட காலத்திற்கு அதைக் கிடப்பில் போட்டு விடு வார்கள். இது காலம் கடத்தும் முயற்சி என்றே இந்து சட்டத் தொகுப்பைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள் சிலர் கருதுகிறார்கள். எனவே எனது தாழ்மையான வேண்டுகோள் இதுதான்: இந்தச் சிறிய மற்றும் மிக முக்கியமான மசோதாக்களை, உதாரணமாக தடுப்புக் காவல் சட்ட மசோதாக்கள் போன்றவைகளை முடித்துக் கொள்வோம். இந்தச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டுள்ள பல நபர்கள் உயர்நீதிமன்ற உத்தரவின்படி விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு விரிவான மசோதாவை எதிர் பார்த்து அந்த விஷயம் முற்றிலும் தேக்க நிலை யில் உள்ளது. மசோதா ஒன்றைக் கொண்டுவர அரசு உறுதி அளித் துள்ளது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், நியாயத்தின் ஓட்டம் தடைபடாமல் இருக்கவும் மிக முக்கியமான தடுப்புக் காவல் சட்டத்தை நாம் நிறைவேற்றியாக வேண்டும் எனத் தாழ்மையாகத்

---

1. அரசியல் நிர்ணயசபை விவாதங்கள் (இனி அ.நி.வி. என்று அறியப்படும்) தொகுதி VIII, பிரிவு II, 1951 பிப்ரவரி 5, பக். 2356-77.

தெரிவித்துக் கொள்கிறேன். பிறகு வேலையில் அமர்த்துநர் கடப்பாடு பற்றிய மசோதாவைப் பார்ப்போம். பிறகு இந்து சட்டத் தொகுப்பை பரிசீலனை செய்து முடிவுக்குக் கொண்டு வருவோம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் என் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார் என நம்புகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புமிகு அமைச்சருக்கு இது ஏற்புடையதா?

**சட்டத் துறை அமைச்சர்** (டாக்டர் அம்பேத்கர்) : இல்லை ஐயா.

**மாண்புமிகு சபாநாயகர்:** அப்படியாயின் இந்துச் சட்டத் தொகுப்பை மேலும் பரிசீலனை செய்வோம்.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம்) : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை உள்ளது. நீண்டகாலமாக அவை முன்பு இந்தச் சட்டத் தொகுப்பு உள்ளது.

இதற்கிடையில் பல முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. முக்கியமாக அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தின்படி பல சட்டங்களும், பல சட்டப்பிரிவுகளும் செல்லுபடியாகாதவையாகி விட்டன. அரசியல் சாசனத்தின் சில குறிப்பிட்ட விதிகளுக்கு முரண்பட்டதாக இந்த மசோதா இருப்பதாகத் தோன்றுகிறது. அரசியல் சாசனத்தில் பல விஷயங் களை நாம் புகுத்தி யுள்ளோம். அதனால் பல சம்பந்தப்பட்ட சட்டங்கள் செல்லுபடியாகாமல் போனதைக் கண்டு ஆச்சரிய மடைகிறேன். அரசியல் சாசனத்தில் இரண்டு வழிவகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சட்ட விதிகள் பாகுபாடு காட்டுவதாக இருக்கக்கூடாது என்பது ஒன்று. இது விதி 15ல் கொடுக்கப்பட் டுள்ளது. அந்த விதியின் கூறு (1) கூறுகிறது:

> ''சமயம், இனம், ஜாதி, பால் ஆகியவற்றின் அடிப்படை யில் எந்தக் குடிமகனையும் அரசு பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது....''

இந்த மசோதா இந்துக்களுக்காக மட்டுமே கொண்டு வரப் பட்டுள்ளது. 'இந்துக்கள்' என்ற சொற்றொடரில், சாதாரணமாக

இந்துக்கள் என்று கருதப்படாத பல பிரிவினர்களைச் சேர்க்க முயற்சி நடந்துள்ளது. அதைத் தவிர, இந்த மசோதாவிற்கு சம்பந்தப்படாத பல பிரிவினர் இருப்பார்கள். பல்வேறு மதத்தினரிடையேயும், ஜாதியினரிடையேயும் பாகுபாடு காட்டப்படுகிறது என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 'மதத்தினால் மட்டும்' என்ற சொற்கள் எந்த வேறுபாட்டையும் அளிக்கவில்லை. நமது குடிமக்களில் பல பிரிவினர்களுக்கிடையே மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுகிறது. 'மதத்தினால் மட்டும்' என்ற சொற்றொடருக்கு அதிகப்பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு சமயப் பிரிவினர்களுக்கிடையே மத அடிப்படையைத் தவிர வேறு எந்த விதத்திலும் வேற்றுமை உருவாகக் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அது ஒரு விஷயம்.

அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பும் இரண்டாவது விதி யாதெனின்....

**திரு. தியாகி** (உத்தரப் பிரதேசம்) : ஐயா, கடந்த தடவை அவை ஒத்தி வைக்கப்பட்டபோது, எந்த வித காலம் கடத்தும் தீர்மானமும் கொண்டு வரக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப் பட்டது. அவரும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** அமைதி, அமைதி. அவர் எந்தவிதத் தீர்மானமும் கொண்டுவரவில்லை. அவரைப் பொறுத்த வரையில் ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்.

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் மிக்வும் சுருக்கமாகப் பேசுகிறேன், ஐயா.

**திரு. பி. தாஸ்** (ஒரிசா) : ஆனால், அவர் மிகவும் நீண்ட உரை நிகழ்த்துகிறார்.

**திரு. நசிருத்தீன் அகமது :** நான் குறிப்பிட விரும்பிய மற்றொரு விதி 25 (1) ஆகும்.

> ''பொது நல ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றுக்கு உட்பட்டு ....'' என்பது இவ்வாறு பொருள்படாது....

**திருமதி துர்க்காபாய்** (மதராஸ்) : ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதாகக் கூறிக்கொண்டு, மசோதாவின் நியாயத்தையே கேள்வி கேட்க உறுப்பினர் அனுமதிக்கப்பட்டுள்ளாரா?

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் வாதம் செய்கிறார். அவருக்கு வாதிக்க உரிமையுள்ளது. நம்மிடமிருந்து மாறுபட்ட கருத்துடைய வர்களிடம் நாம் பொறுமை இழந்துவிடக்கூடாது.

**திரு. சோனவானே** (பம்பாய்) ஒழுங்குப் பிரச்சினைதான் என்ன?

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் கூறுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்க வேண்டும்.

**திரு. சோனவானே :** அதைக் குறித்து விவாதிக்க அவரை அனுமதிக்கலாமா?

**மாண்புமிகு சபாநாயகர்:** உறுப்பினர் என்ன பேசப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் அவரைத் தடுக்க முடியாது. அவர் பேசி முடித்தால்தான் என்ன பேசினார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். இந்த ஒரே ஜனநாயகப் பாதையில்தான் நாம் செல்லவேண்டும்.

**திருமதி துர்க்காபாய் :** ஆனால், மசோதாவிலுள்ள சில விதி களைக் குறித்துப் பேச அவர் அனுமதிக்கப்படுவாரா?

**மாண்புமிகு சபாநாயகர்:** தம்முடைய வாதத்தை முன்வைக்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உள்ளதை மதிப்பிற்குரிய உறுப் பினர் அறிவார். உறுப்பினர் ஒருவர் தமது உரிமையைத் தவறாகப் பயன்படுத்தினால் அல்லது கூறியதையே திரும்ப எடுத்துரைத்தால், நிச்சயம் அவரைத் தடுத்து நிறுத்துவேன்.

**திரு. ராஜ்பகதூர்** (ராஜஸ்தான்) : அரசியல் சாசனத்தின் சில விதிகளை அவர் மிகவும் தரக் குறைவாகக் குறிப்பிட்டது சரிதானா என்பதைக் குறித்து நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும். ''பொதுநல ஒழுங்கு, ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவை'' அர்த்தமற்ற சொற்றொடர் கள் என்று அவர் கூறினார். இவ்வாறு அவர் குறிப்பிடலாமா?

**திரு. ஆர்.கே. சௌதரி :** ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அப்பிரச்சினையை அவைத் தலைவர் கேட்டுக் கொண்டிருக்கும்போது, மதிப்பிற்குரிய உறுப்பினர் எவரும் அதை இடைமறிக்கக் கூடாது.

**மாண்புமிகு சபாநாயகர்:** அமைதி அமைதி.

**திரு. நசிருத்தீன் அகமது:** விதி 25-ன் கூறு (1)ல் உள்ள ''பொது நல ஒழுங்கு, ஒழுக்கம், மற்றும் சுகாதாரத்திற்குட்பட்டு ''என்ற சொற்றொடருக்கு முக்கியத்துவம் எதுவும் இல்லை என்கிறேன். அவை சட்ட முக்கியத்துவமற்ற வழக்கமான சொல் அலங்காரம் என்றே நினைக்கிறேன். அந்த விதி மேலும் கூறுகிறது:

> ''.... எல்லோருக்கும் சம அளவில் மனச்சாட்சி சுதந்திரம் இருப்பதுடன், மத நம்பிக்கைகளைப் பின்பற்றவும், ஏற்றுக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் உரிமையுண்டு.''

திருமணத்தைப் பொறுத்தமட்டிலும், அது தங்கள் மத சம்பிர தாயங்களின் பகுதியாக உள்ளது என்றே எல்லா நம்பிக்கை உள்ள இந்துக்களும் கருதுகின்றனர். திருமணத்தை தமது மதச்சடங்கின் ஒரு பகுதியாகவே ஓர் இந்து கருதுகிறார். மேலும் ஒருவருக்கு மகன் இல்லையென்றால், நரகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்வதாக நம்பப்படுகிறது.

**திரு. தியாகி :** அமைதி, அமைதி. எனக்கு மகன் இல்லை.

**மாண்புமிகு சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது இருக்கையில் அமர்ந்து கொள்வாரா? அமைதி, அமைதி. மதிப்பிற் குரிய உறுப்பினர் குறுக்கீடு செய்யவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** ஒரு குறிப்பிட்ட நரகத்தை அடையாமலிருக்க, ஒருவருக்கு மகன் அவசியமாகிறது. அதற்குத் திருமணம் செய்துகொள்ளவேண்டும். ஓர் இந்துவின் பத்து **சம்ஸ்காரங்களில்** இது ஒன்றாகும். இது ஒரு மத சம்பிரதாயமாகும். ஒரு மகனை அடைவதற்கு ஒருவனுக்கு ஒன்றோ அல்லது அதற்கு அதிக எண்ணிக்கையிலோ மனைவி இருக்கலாம். எனவே விதி 25 (1)ன் கீழ்

கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை இந்த வகைமுறை தடை செய்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறைக்கு பயனற்ற ரீதியில் இந்த ஒழுங்குப் பிரச்சினையை நான் எழுப்பவில்லை. ஒரு குறிப்பிட்ட சட்டத்தை அதாவது இருதார மண தடைச் சட்டத்தை செல்லுபடியாகாது என்று அறிவித்த பம்பாய் உயர்நீதிமன்றம் இந்த விதியைப் பயன்படுத்தியுள்ளது.

**டாக்டர் அம்பேத்கர் :** பம்பாய் உயர்நீதிமன்றமா? அது சரியில்லை என்று நிச்சயமாகக் கூறுவேன். ஏதாவது நீதிபதியாக இருக்கலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது :** திருமணம் சம்பந்தப்பட்ட சில விதிமுறைகள், அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்காதா என்பதே நம் முன் உள்ள கேள்வி. மேலும் அரசியல் சாசனத்தின் விதி 15 (1) கீழ்வரும் பாகுபாட்டுடன் நடத்தும் அடிப்படையும் உள்ளது. இந்தக் கேள்வியின் பல்வேறு சிறு அம்சங்கள் சம்பந்தப் பட்ட விதிகள் பல உள்ளன. ஆனால் தற்போதைக்கு இந்த இரு விஷயங்களே போதுமென நினைக்கிறேன். ஒரு விஷயத்தின் சட்டத் தன்மை குறித்த ஐயப்பாட்டின் அடிப்படையில் அவைத் தலைவர் அதை நிராகரித்து விடமுடியாது என்ற கொள்கையை நான் நன்கு அறிவேன். ஆனால் இவை உண்மையான தடைக் கற்கள். எனவே தான் மசோதாவின் சட்டத் தன்மையைப் பரிசீலிக்கும்படி தாழ்மை யாகக் கேட்டுக் கொள்கிறேன். பல சட்டங்களும், சட்டப் பிரிவு களும் செல்லுபடியாகாதவை என்று அறிவிக்கப்பட்டதை நாம் நன்கறிவோம். அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்டபோது கூட, இவை செல்லுபடியாகாமல் போகக்கூடும் என அச்சம் தெரிவிக்கப் பட்டது. இந்த அடிப்படை உரிமைகளை நாம் நிறைவேற்றி விட்டோம். எந்தச் சட்டங்கள் அதற்கு முரண்பாடாக எந்த அள விற்கு உள்ளனவோ அந்த அளவிற்கு அவை செல்லுபடியாகாதவை என்றாகிவிடும். இதிலிருந்து தப்புவதற்கு வழிகிடையாது. இந்த விதிகளுக்கு முரணாக எந்தச் சட்டம் இருந்தாலும், எந்த அளவிற்கு முரண்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு அது செல்லுப்படி யாகாதது எனக் கருதப்படும். நம் முன்னே உள்ள முக்கியமான கேள்வி இதுதான். செல்லுபடியாகாதது என்று அறிவிக்கத்தக்க சட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டுமா? நாம் நமக்கு அளித்துள்ள அரசியல் சாசனத்தின் கோணத்திலிருந்து இந்த மசோதாவை நாம்

மறு பரிசீலனை செய்ய வேண்டாமா?

ஐயா, இந்த விஷயங்களையே உங்களுடைய ஆழ்ந்த கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நசிருத்தீன் அகமது எழுப்பிய முக்கிய கேள்விகளுக்கு விரிவாக விளக்கமளிக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அவர் கூறியதற்கு நான் இவ்வாறு சுருக்கமாக விடையளிக்கலாம். எல்லா விதிகளுக்கும் இல்லாவிட்டாலும் சில விதிகளைப் பொறுத்தவரையில் அவர் கூற்று உண்மையாக இருக்கலாம். ஆனால் அதற்கான சரியான நடைமுறை மற்றும் நேரம் எது என்றால், அரசியல் சாசனத்திற்கு முரணாக உள்ளது என்று கருதப்படும் விதிகள், அவை முன் விவாதத்திற்கு வரும்பொழுதுதான், அதற்கு முன்பல்ல. ஏனெனில் எல்லா விதிகளும் அதேபோன்று முரணானது என்று கூறி மசோதாவை பரிசீலனைக்குத் தகுதியற்றது என்று கூறுவது சரியல்ல.

மதிப்பிற்குரிய உறுப்பினர் வலியுறுத்திய எல்லா ஆட்சேபனைகளுக்கும் இவ்வாறு தீர்ப்பளிக்க எனக்கு இது ஒரு குறுக்கு வழியெனலாம். நான் அவர் கருத்தை ஏற்றுக் கொள்வதாக இதன் பொருள் ஆகாது. அவருடைய கருத்து சரி என்று வைத்துக் கொண்டாலும், அந்த விதிகள் பரிசீலனைக்கு வரும்பொழுதுதான் அதற்கான பொருத்தமான நேரமாகும். ஒரு குறிப்பிட்ட விதி சரியில்லை என்றோ, அரசியல் சாசனத்திற்கு முரணாக உள்ளது என்றோ அவை கருதும் பட்சத்தில், இந்த மசோதாவுடன் எதையாவது சேர்ப் பதற்கோ, நீக்குவதற்கோ, இந்த அவைக்கு முழு அதிகாரமும் உள்ளது. ஆனால் ஆரம்பத்திலேயே அவைத் தலைவரால் அதைத் தீர்மானிக்க முடியாது.

பாகுபாடு எவ்வளவு தூரம் உள்ளது என்பதைப் பற்றியோ, திருமணம் என்பது எவ்வளவு தூரம் மதச்சடங்கு என்பதைப் பற்றியோ விவாதங்களுக்குள் செல்ல வேண்டாமென்று நான் கருதுகிறேன்.

கூறுவாரியாக மசோதாவைப் பரிசீலிக்கலாம் என நினைக்கிறேன்.

**கூறு 2** - *(சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வரும் பகுதிகள்)*

**பண்டிட் எம்.பி. பார்கவா** (ஆஜ்மீர்) கூறு 1-க்குப் பிறகு கூறு 2ஐச் சேர்க்கக் கோரும் திருத்தம் ஒன்று என் பெயரில் உள்ளது.

**மாண்புமிகு சபாநாயகர்:** ஆமாம். உள்ளது மதிப்பிற்குரிய உறுப்பினர் அதை இப்பொழுது முன்மொழியலாம்.

**திரு. தியாகி:** ஐயா, அதற்கு முன்பு, நீங்கள் முன்பொரு சமயம் அளித்துள்ள தீர்ப்பையும், இப்பொழுது அளித்துள்ள தீர்ப்பையும் குறித்துப் பேசலாமா? ஒரு சமயம், ஒரு மசோதா செல்லுபடியாகாதது என்று அறிவிப்பதைக் குறித்து கேள்வி எழுப்பியபோது, அது நீதிமன்றத்தால் நிச்சயிக்கப்பட வேண்டுமே தவிர, அவைத் தலைவரால் அல்ல என்று தீர்ப்பு அளித்தீர்கள், அதே கருத்தையே இப்பொழுது நீங்களும் கொண்டுள்ளீர்களா அல்லது, சில கூறுகள் அரசியல் சாசனத்திற்கு முரணானது என்று நீங்களே உங்கள் உசிதப்படி தீர்ப்பளிக்கப் போகிறீர்களா?

**மாண்புமிகு சபாநாயகர்:** என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ள இன்னும் எந்த அடிப்படையும் இல்லை. ஆனால் அதற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட்டால் விஷயத்தை மறு பரிசீலனை செய்யலாம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** (பஞ்சாப்) ஐயா, சாதாரணமாக எல்லாக் கூறுகளையும் பரிசீலனை செய்த பிறகுதான் கூறு 1 எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்து தொகுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் கூறு எண் 1க்கான திருத்தங்கள் அடிப்படை விஷயங்கள் சம்பந்தமாக உள்ளன. சில மாநிலங்களுக்கு அதை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமானவை அவை. பட்டியலில் கூற எண். 1க்கு பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கூறு 1ஐ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது சாத்தியமா என்று உங்களை தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** சட்டத்தின் பல்வேறு வகை முறைகளின் இறுதி வடிவத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, பொருத்தமான சொற்றொடர்களில் கூறு 1ஐ வடிவமைப்பதற்கே, அது கடைசியில் எடுத்துக் கொள்ளப்படும் காரணமாகும். கூறு 1ன் உட் கூறு (1) மசோதாவின் பெயர் என்ன என்பதைக் கூறுகிறது : உட் கூறு (2) இந்தச் சட்டம் அமலாகும் நிலப்பரப்பை குறிக்கிறது. மேலும் உட்கூறு (3) எந்தத் தேதியிலிருந்து இந்த மசோதா அமலுக்கு வருகிறது

என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர் தெரிந்து கொள்வார்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** அமல்படுத்தப்படும் நிலப் பரப்பு பற்றிய விஷயம் மிகவும் முக்கியமானதுதான்.

**மாண்புமிகு சபாநாயகர்:** அதைப் பொறுத்தவரையிலும் கூட, மசோதாவின் எல்லா விதிகளையும் பரிசீலித்த பிறகு அதை மேலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். மசோதாவின் விதிகள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் அமல்படுத்தப்படுமா, அல்லது சில விதிகளைப் பொறுத்தமட்டில் சில மாநிலங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுமா என்பது தெளி வாகும். கூறு 1ஐ இறுதியில் எடுத்துக் கொள்வதே சாதகமானது என்று எனக்குத் தோன்றுகிறது. அதற்குள் மசோதாவின் விதிகளைக் குறித்து அவைக்கு மிகவும் தெளிவான சித்திரம் கிடைக்கும். அதுவே சிறந்த நடைமுறை என்பதால் கூறு 2லிருந்து தொடரலாம்.

பண்டிட் எம்.பி. பர்கவாவின் திருத்தத்தைப் பொறுத்தவரை யில் அது கூறு 1ன் திருத்தத்திற்கானதுதான். மசோதாவின் விதிகள் அமலாவது குறித்து ஒரு புதிய நிபந்தனையைச் சேர்க்க அவர் விரும்புகிறார்.

**டாக்டர் அம்பேத்கர் :** அது கூறு 1க்கான திருத்தமே.

**பண்டிட் எம்.பி. பர்கவா :** விளக்கமளிப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

**மாண்புமிகு சபாநாயகர்:** திருத்தம் இதுதான்:

''நாடாளுமன்றத்துக்கான இந்து வாக்காளர்களில் பெரும் பான்மையினர் கருத்துக் கணிப்பு ஒன்றில் இதை ஏற்றுக் கொண்ட பிறகு இந்தச் சட்டத் தொகுப்புச் அல்லது சில பிரிவுகள் மட்டும் அமலுக்கு வரும்.

உண்மையில் அது கூறு 1ன் உட்கூறு 3க்கான திருத்தமாகும். அதை அவர் தனியான கூறாகக் கொடுத்துள்ளார். மேலும் விவாதம் தேவை இல்லை. கூறு 2லிருந்து தொடங்கலாம்.

**திரு. சர்வாத்தே (மத்திய பாரத்) :** அதிகாரபூர்வ திருத்தங்கள் முதலில் முன்மொழியப்படுமா அல்லது எனது திருத்தமா?

**மாண்புமிகு சபாநாயகர்:** மசோதாவின் விதிகளைப் பொறுத்த வரை அதன் வரிசைப்படி எடுத்துக் கொள்வேன். அதிகாரபூர்வமான திருத்தங்கள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

**திருமதி துர்க்காபாய்:** அதிகாரபூர்வ திருத்தங்களை முதலில் எடுத்துக்கொண்டால், பிற திருத்தங்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச் சினைகளும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** நாம் வரிசைப்படி எடுத்துக் கொள்வோம்.

**டாக்டர் அம்பேத்கர்:** நேரத்தை மிச்சப்படுத்த ஒரு யோசனை அளிக்கலாமா...

**திரு. தியாகி:** நேரத்தை மிச்சப்படுத்துவதற்குச் சிறந்த வழி, மசோதாவை வாபஸ் பெறுவதுதான்.

**டாக்டர் அம்பேத்கர்:** அது மிகவும் அதிகப்படியான சேமிப் பாகிவிடும். பட்டியலிலுள்ள பல்வேறு திருத்தங்களை கவனித்தோ மானால் அவை ஒன்றுக்கொன்று அதிக வேறுபாடின்றி காணப் படுகிறது. மற்றத் திருத்தங்களிலிருந்து அடிப்படையில் வேறுபடும் எந்தத் திருத்தத்தையும் காணமுடியவில்லை. ஒரு திருத்தம் முன் மொழியப்பட்டு அதன்மீது விவாதம் நடந்து முடிவு எடுக்கப்பட்டு பிறகு அடுத்த திருத்தம் முன்மொழியப்பட்டு அதன் மீது விவாதம் நடந்து முடிவு எடுக்கப்படும் நடைமுறையைவிட, தங்கள் திருத் தங்களை முன்மொழிய உறுப்பினர்களை அனுமதித்த பிறகு ஒரு பொதுவான விவாதம் நடத்தும் நடைமுறையே சிறந்தது என்ற யோசனையை நான் முன்வைக்கிறேன். நேரத்தை மிச்சப்படுத்து வதற்கு என் ஆலோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** உண்மையில், இந்த நடைமுறையை நாம் பின்பற்றி வந்துள்ளோம். ஒரு பொதுவான விஷயத்தைக் குறித்து திருத்தங்கள் உள்ளபொழுது, அவை முன்மொழியப்பட்டு பொதுவான விவாதம் நடைபெறும். கடந்த காலத்தில் இந்த நடை முறையையே நாம் பின்பற்றி வந்தோம். எனவே, இப்பொழுதும் அதே நடைமுறையைப் பின்பற்றுவோம்.

**திரு. சர்வாத்தே:** கூறு 2க்குப் பதிலாக,

*"2. சட்டத் தொகுப்பின் செயல்பாடு - (1) எல்லா இந்துக்களுக்கும் சட்டத் தொகுப்புச் சட்டம் பொருந்தும்.*

*(2) இந்த சட்டத் தொகுப்பில் வரும் 'இந்து' என்ற சொற்றொடர், வேறுவிதமாகக் கொடுக்கப்படாவிடின், இந்தியக் குடிமகனைக் குறிக்கும்.*

*(3) 1872 (1872-III) ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தில் எது எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், அச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இந்துக்களுக்கு இது பொருந்தும். மேலும் இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு அச்சட்டத்தின் படி திருமணமாகாதவர்களுக்கும் பொருந்தும்" என்பதைச் சேர்க்க வேண்டும் என்று முன்மொழிகிறேன்.*

**மாண்புமிகு சபாநாயகர்:** மேலும் ஒரு யோசனை கூறுகிறேன். அச்சிடப்பட்ட திருத்தங்களும், மற்ற திருத்தங்களும் ஏற்கெனவே சுற்றுக்கு விடப்பட்டுள்ளன. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்கள் திருத்தங்களின் எண்களை மட்டும் குறிப்பிட்டால் போதும். அவை முன்மொழிந்ததாக எடுத்துக் கொள்வேன். ஒரு கூறு மற்றும் விஷயம் சம்பந்தப்பட்ட திருத்தங்கள் முன்மொழியப்பட்டு, விவாதிக்கப்படும்.

**திரு. தியாகி:** திருத்தங்கள் குறிப்பிடும் விஷயங்கள் தனியாக விவாதிக்கப்படும்.

**திரு. அவைத் தலைவர்:** ஆம்.

**போக்குவரத்து மற்றும் ரயில்வே இணை அமைச்சர் (திரு. சந்தானம்):** ஐயா, இந்து சட்டத் தொகுப்பின் அடிப்படைக்கு எதிராகச் செல்வது சரிதானா. சட்டத் தொகுப்பை கிருத்துவர்களுக்கும், முஸ்லீம்கள் மற்றும் இதரர்களுக்கும் நீட்டிக்க வேண்டும் என்று திருத்தம் கோருகிறது. இது சட்டத் தொகுப்பின் எல்லையை மீறியதாகாதா? இந்த விஷயம் குறித்து நீங்கள் ஒரு தீர்ப்பளிக்க வேண்டும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** முதலில் திருத்தங்கள் முன்மொழியப் படட்டும்.

**திரு. தியாகி:** முஸ்லீம்களை இந்துக்களாக்க இந்தத் திருத்தம் கோருகிறது. இது அரசியல் சட்டத்திற்கு எதிரானது. தங்கள் மதத்தை பின்பற்ற ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. முஸ்லீம்களை யும், கிருத்துவர்களையும் இந்து தொகுப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவது, அவர்கள் மத நம்பிக்கையில் தலையிடுவதாகும்.

**திரு. அவைத் தலைவர்:** திருத்தங்கள் முன்மொழியப் படட்டும்.

**திரு. தியாகி:** இந்தத் திருத்தம் ஏற்கெனவே முன்மொழியப் பட்டுவிட்டது. அது ஒழுங்கற்றதாக உள்ளது.

**திரு. இந்திரா வித்தியாவாசஸ்பதி** (உத்தரப் பிரதேசம்):

கூறு 2க்குப் பதிலாக,

''2. தங்களது மதம், ஜாதி, நம்பிக்கை எப்படியிருப்பினும் இந்தியர்கள் யாவரும் இச்சட்டத்திற்குட்படுகிறார்கள்'' என்பதைச் சேர்க்க வேண்டுமென, முன்மொழிகிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:**

கூறு 2க்குப் பதிலாக:

''2. பிரிவு 1ன் விதிகளுக்குட்பட்டு,

(a) மத அடிப்படையில் சீக்கியர்கள், ஜைனர்கள், புத்தர் கள், இந்துக்களாக உள்ள அனைவருக்கும்,

(b) மத அடிப்படையில் முஸ்லீம், கிருத்துவர், பார்சி அல்லது யூதராக இல்லாத எவருக்கும்,

(c) மத அடிப்படையில் முஸ்லீம், கிருத்துவர், பார்சி அல்லது யூதராக இல்லாதவரை மணந்த ஒவ்வொரு பெண் ணுக்கும்,

(d) பெற்றோர்களில் ஒருவர் மத அடிப்படையில் முஸ்லீம், கிருத்துவர், பார்சி அல்லது யூதராக இல்லாதவருக்கு முறையாக அல்லது முறைதவறிப் பிறந்த குழந்தைகளுக்கும்,

(e) முஸ்லீம், கிருத்துவர், பார்சி அல்லது யூத மதத்தைத் தவிர பிற மதங்களுக்கு மத மாற்றம் ஆனவர்களுக்கு இச் சட்டம் பொருந்தும்'' என்பதைச் சேர்க்க வேண்டும் என முன்மொழிகிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா (பீகார்):**

கூறு 2க்குப் பதிலாக:

''2. தொகுப்புச் சட்டத்தின் செயல்பாடு - எந்த மதத்தை பின்பற்றுவராக அல்லது ஆதரிப்பவராக இருந்தாலும், எந்த ஜாதியை அல்லது மதக்கோட்பாட்டை சேர்ந்தவரானாலும் பாரதம் என்ற இந்தியாவின் குடிமக்கள் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்தும்'' என்பதைச் சேர்க்க வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** ''கூறு 2ல் -

(1) உட்கூறு (1)ல் -

(i) (a) பிரிவில் ''இந்துக்கள், அதாவது இந்து மதத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட அனைவரும்'' என்பதற்குப் பதிலாக, ''மத அடிப்படையில் இந்துக்களான நபர்கள்'' என்று சேர்க்க வேண்டும்.

(ii) (d) பிரிவில் ''இந்து மதம்'' என்பதற்குப் பதிலாக ''இந்து, புத்தம், ஜைனம் அல்லது சீக்கிய மதம்'' என்று சேர்க்க வேண்டும்.

(2) உட்கூறு (4)ஐ நீக்க வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:**

(i) (a) பிரிவில், ''இந்துக்கள் அதாவது இந்து மதத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட அனைவரும்'' என்பதை ''மத அடிப்படையில் இந்துக்களான நபர்கள்'' என்று மாற்ற வேண்டும்.

(ii) கூறு 2-ல் உட்கூறு (1)ல் பிரிவு (b)ஐ நீக்கவும்.

(iii) கூறு 2ல் உட்கூறு (1)ல் பிரிவு (b)க்குப் பதிலாக

"(b) மத அடிப்படையில் புத்தர்களாக, ஜைனர்களாக அல்லது சீக்கியர்களாக உள்ள அனைவருக்கும்'' என்று சேர்க்கவும்.

(iv) கூறு 2ன் உட்கூறு (1)ன் பிரிவு (b)க்கு பதிலாக

"(b) மத அடிப்படையில் ஜைனராக உள்ள எவருக்கும்'' என்பதைச் சேர்க்கவும்.

(v) கூறு 2ன் உட்கூறு (1)ன் பிரிவு (b)ல் உள்ள ''ஜைனர் அல்லது சீக்கியர்'' என்பதற்குப் பதிலாக 'அல்லது ஜைனர்' என்று சேர்க்கவும்.

**சர்தார் ஹுக்கம் சிங் (பஞ்சாப்):**

''கூறு 2ன் உட்கூறு 91)ல் பிரிவு (c) (i) ல் உள்ள ''அல்லது சீக்கியர்''

என்பதை நீக்கவும் என முன்மொழிகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:**

(i) கூறு 2ன் உட்கூறு (1)ல் பிரிவு (c) (1)ல் உள்ள ''முறை தவறி'' என்பதற்குப் பிறகு ''18 வயதை அடைந்து, இந்து வாக இருப்பவர் மற்றும்'' என்பதைச் சேர்க்கவும்.

(ii) கூறு 2ன் உட்கூறு (1)ல் பிரிவு (c) (1)ல் உள்ள ''இந்துக் களாக உள்ளவர்களைப் பெற்றோர்களாகக் கொண்ட'' என்பதை ''இந்துக்களாக மற்றும் இந்துக்களாக இருந்து கொண்டிருப்பவர்களைப் பெற்றோர்களாகக் கொண்ட'' என்று மாற்றவும்.

(iii) கூறு 2ன் உட்கூறு (1)ல் பிரிவு (c) (II)ல் ''சேர்ந்த அல்லது சேர்ந்திருந்த'' என்பதைத் தொடர்ந்து ''மேலும் 18 வயதை அடைந்து இந்துவாக இருக்கும் ஒருவன்'' என்பதைச் சேர்க்கவும் என தாழ்மையுடன் முன்மொழிகிறேன்.

**திரு. எஸ்.பி. மிஸ்ரா (உத்தரப் பிரதேசம்):**

'கூறு 2ன் உட்கூறு (1)ன் பிரிவு (cc) (ii)யுடன் சேர்க்கவும்:

'' (iii) அத்தகைய பெற்றோர்கள் சார்ந்த குடும்பம், குழு, அல்லது சமுதாயத்தின் உறுப்பினராக வளர்க்கப்பட்ட எந்தக் கைவிடப்பட்டக் குழந்தைக்கும்'' என முன்மொழி கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:**

''கூறு 2ன் உட்கூறு (1)ன் பிரிவு (d)க்குப் பதிலாக

'' (d) மதமாற்றலுக்கு முன்புள்ள உரிமைகள் கடப்பாடுகளுக்குட்பட்டு இந்து மதத்திற்கு மதம் மாறியவர்களுக்கு'' என்பதைச் சேர்க்கவும் என முன்மொழிகிறேன்.

**பாபு கோபிநாத் சிங்** *(உத்தரப் பிரதேசம்):*

*''கூறு 2ன் உட்கூறு (1)ல், பிரிவு (d)யுடன்*

"(e) புத்த மதம், ஜைன மதம் அல்லது இந்து மதத்திலிருந்து தம் வாழ்நாளில் முஸ்லீமாகவோ, கிருத்துவராகவோ மாறியவருக்கு'' என்பதைச் சேர்க்கவும் என முன்மொழிகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:**

கூறு 2ன் உட்கூறு (2)ஐ நீக்க வேண்டும் என முன்மொழிகிறேன்.

**சர்தார் ஹுக்கம் சிங்:**

கூறு 2ன் உட்கூறு (2)ல்

'பார்சி' என்பதற்குப் பிறகு 'சீக்கியர்' என்பதைச் சேர்க்க வேண்டும், என முன்மொழிகிறேன்.

**திரு. பிரஜேஸ்வர் பிரசாத்** *(பீகார்):*

கூறு 2ன் உட்கூறு (2)க்குப் பிறகு

"(2A) இந்து, பௌத்தம், ஜைனம் அல்லது சீக்கிய மதத்தைச் சார்ந்த ஒருவரை மணந்துகொண்ட எந்த மதத்தை வெளிப்படையாக பின்பற்றும் பெண்ணுக்கு இத்தொகுப்புச் சட்டம் பொருந்தும்'' என்பதைச் சேர்க்க வேண்டும் என முன்மொழிகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:**

(i) கூறு 2ன் உட்கூறு (3)ஐ நீக்கவும்

(ii) கூறு 2ன் உட்கூறு (4)ஐ நீக்கவும்

(iii) கூறு 2ன் உட்கூறு (4)க்குப் பிறகு,

''(5) இந்தப் பிரிவில் எது எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், மாநிலச் சட்டமன்றம் அவ்வப்போது இயற்றும் சட்டத்தின்படி குறிப்பிட்ட கட்டங்களில், குறிப்பிட்ட காலங்களில் மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள குறிப்பிட்ட நபர்களுக்கு அல்லது பிரிவினருக்கு இத்தொகுப்புச் சட்டம் நீட்டிக்கப்படும் என முன்மொழிகிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** கூறு 2ல் இவ்வரம்புரையைச் சேர்க்கவும்:

''மேற்குறிப்பிட்ட கூறுகளில் எது எவ்வாறு கூறியிருப்பினும், இந்தத் தொகுப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து ஓராண்டுக்குள், வயதுக்கு வராதவர்களைப் பொறுத்தமட்டில் வயதுக்கு வந்த நாளிலிருந்து ஓராண்டுக்குள், நாடாளுமன்றம் இனி நிர்ணயிக்கும் முறையில், குறிப்பிட்ட அதிகார அமைப்பில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளாதவருக்கு இத்தொகுப்புச் சட்டம் பொருந்தாது'' என முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** திருத்தம் அல்லது திருத்தங்கள் அளித்துள்ள உறுப்பினர் ஒவ்வொருவரையும் அழைத்தாகிவிட்டது. ஆனால் திரு ஷிவ் சரண்லால் மற்றும் பேராசிரியர் கே.கே. பட்டாச்சார்யாவைக் காணவில்லை. நாம் திருத்தங்களின் எண்ணையே குறிப்பிட்டு அழைத்ததால் தங்கள் முறை சீக்கிரம் வந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள். இந்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொண்டபோது அவர்கள் தங்கள் இருக்கையில் இருந்தனர் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்தக் குறிப்பிட்ட கூறைப் பற்றி விவாதம் நடக்கையில் அவர்கள் அவைக்கு வந்து தங்கள் திருத்தங்களை முன்மொழிய விரும்பினால் அதை அனுமதிக்கலாம் என நினைக்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் (உத்தரப் பிரதேசம்):** ஐயா, நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்துள்ளேன். துணைப்பட்டியல் எண் 1ல் உள்ள திரு. ஜுன்ஜுன்வாலாவின் திருத்தம் எண் 18க்கான திருத்தம் அதில் ஒன்று.

**மாண்புமிகு சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் மேலும் செறிவான திருத்தங்கள் ஏதேனும் கொணர முன்வருகிறாரா?

**திரு. ஜே.ஆர். கபூர் :** இல்லை. நான் கொணர முனையும் திருத்தங்கள் உண்டு; ஆனால் இரண்டாம் தீர்மானத்தின் மீதன்று.

**மாண்புமிகு சபாநாயகர்:** இரண்டாம் தீர்மானம், திரு. ஜுன்ஜுன் வாலாவின் திருத்தத்தின் மீதான திருத்தமாகும். அதைக் கொணர இசைவு அளிக்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** முதலாவது தீர்மானத்தைப் பொறுத்த மட்டில், திரு. ஜுன்ஜுன்வாலா அவர்களின் 13-வது திருத்தத் திற்கான திருத்தமாகவே நான் அறிவிப்பு கொடுத்திருந்த போதிலும், அது முற்றிலும் தனித்த திருத்தம் எனும் வடிவிலேயே இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். அதனை மேலும் செம்மையான வடிவில் அமைப்பதற் காகவே அலுவலகம் தனித்த திருத்தமாய்த் தந்துள்ளது. எனவே, அதனை ஏற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன். இப் பொருண்மை மீது முழுமையான விவாதம் நடைபெற வழிவகுக்கப்படுவதால், இத்திருத்தத்தைக் கொணர அனுமதியளிப்பதன் வாயிலாய் இதைப் பற்றிய அறுதியான முடிவினை அடைய எவ்விதத்திலும் தடையாய் இராது என்பது உறுதி.

**மாண்புமிகு சபாநாயகர்:** முடிவுக்கு வருதல் என்பதல்ல பிரச்சினை. கடைசி நிமிடம் வரை திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருந்தால், வாக்கெடுக்கும் இறுதிக் கட்டத்தில் கூடத் திருத்தங்கள் கொணரப்படலாம். எனவே, தடையை விலக்கத் தயங்குகிறேன்....

**திரு. ஜே.ஆர். கபூர்:** ஐயா, சூழ்நிலையின் தனித்தன்மை காரணமாகவே, எனது வேண்டுகோளை முன்வைத்தேன். முதலில் நான் முதலாவது திருத்தத்தை, திரு. ஜுன்ஜுன்வாலா அவர்களின் துணைப்பட்டியல் 1-இல் 13-வது திருத்தத்தின் மீதான திருத்த மாகவே கொடுத்திருந்தேன். ஆனால், செம்மையான வடிவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, அலுவலகம்தான் அதனைத் தனித்த திருத்தமாய்க் கொணர்தல் நன்று எனக் கருதிச் செறிவான திருத்தமாய்த் தந்துள்ளது. சபாநாயகர் அவர்களுக்கு இசை விருப்பின், அதனை மூல வடிவிலேயே எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு சபாநாயகர்:** நன்று; வடிவத்திருத்தம் மட்டுமே என்பதால், அவர் திருத்தத்தைக் கொணர இசைவளிக்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** பின்வரும் திருத்தத்தைக் கொணர இறைஞ்சுகிறேன்.

i) கிளை விதி 2க்கு பதிலாகக் கீழ்வருமாறு மாற்றிடலாம்:

> ***2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு :*** *இச் சட்டத் தொகுப்போ அதன் பகுதிகளோ, இந்தியா எனும் பாரதத்தின் குடிமக்களில், பெரியவர்கள் எனப்படுவதற்குரிய வயதடைந்து, இச் சட்டத்தொகுப்பையோ அதன் பகுதிகளையோ ஏற்றுக் கொள்வதாக எழுத்து மூலம் ஒப்புதலறிக்கை தந்து, அதனை மத்திய அரசு இதற்கென வகுக்கும் விதிமுறைகளின்படிப் பதிவு செய்து கொள்பவர்கள் அனைவருக்கும் பொருந்தும்.*

நான் மேலும் கொணர இறைஞ்சுவதாவது:

ii) கிளை விதி 2க்கான வரைவின்மீது, திரு. பன்சாரி பிரசாத் ஜுன்ஜுன்வாலா அவர்கள் முன்மொழிந்துள்ள திருத்தத்தில், ''அத்தகைய நபர்'' எனத் தொடங்கி இறுதிவரையிலான தொடர்களுக்கு பதிலாக,

> ''அத்தகைய நபர், பெரியவர் எனக் கருதப்படும் வயது நிறைவான பின், இச்சட்டம் தமக்குப் பொருந்தும் என்று எழுத்து மூலமாய் ஒப்புதலறிக்கை தந்து, அதனை மத்திய அரசு இதற்கென வகுக்கும் விதிகளின்படிப் பதிவு செய்திருந்தாலன்றி''

எனும் தொடர் இடம்பெறலாம்.

**மாண்புமிகு சபாநாயகர்: தாக்கல் ஆகும் திருத்தங்களாவன:**

1. கிளை விதி 2க்கு மாற்றான வாசகமாவது:

> ***2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு (1)*** - இச் சட்டத் தொகுப்பு இந்துக்கள் அனைவருக்கும் பொருந்தும்.
>
> 2) இச்சட்டத் தொகுப்பைப் பொறுத்தமட்டில் 'இந்துக்கள்' எனும் சொல், வேறு வகையாக வரையறுக்கப்படாத பட்சத்தில் இந்தியக் குடிமக்கள் அனைவரையும் குறிக்கும்.

3) 1872-ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தில் (1872-இன் III), கூறப்பட்டிருப்பது எவ்வாறாயினும், அச்சட்டத்தின்படி இந்துக்கள் என வரையறுக்கப்பட்டவர் அனைவருக்கும், இப்போதைய சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வரும் முன்னதாக, அந்தச் சட்டத்தின்படியன்றித் திருமணம் செய்து கொண்டிருந்தாலும்கூடப் பொருந்தும்.

2. கிளை விதி 2க்கு மாற்றான வாசகமாவது :

"2. இச்சட்டத் தொகுப்பு, சாதி, மத, நம்பிக்கை வேறுபாடுகளின்றி இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பொருந்தும்.

3. கிளை விதி 2-க்கு மாற்றான வாசகமாவது:

"2. இச்சட்டத் தொகுப்பு, பிரிவு 1இல் வரையறுக்கப்படும் வரம்புகளுக்குட்பட்டு,

அ) இந்து, பௌத்த, சமண, சீக்கிய (மதத்தினர்) சமயத்தினர் அனைவருக்கும் பொருந்தும்.

ஆ) இசுலாமிய, கிறித்தவ, பார்சி, யூத மதங்களைச் சாராத அனைவருக்கும் பொருந்தும்.

இ) இசுலாமியர், கிறித்தவர், பார்சி, யூதர் ஆகியோரல்லாத ஆடவரை மணந்த (மகளிர்) பெண்கள்* அனைவருக்கும் பொருந்தும்.

ஈ) இசுலாமியர், கிறித்தவர், பார்சி, யூதர் ஆகியோரல்லாத பெற்றோர்க்கு முறையாகவோ முறையின்றியோ பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் பொருந்தும்.

உ) இசுலாமிய, கிறித்தவ, பார்சி, யூத மதங்கள் தவிர்த்த பிற மதங்களுக்கு மாறியவர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

4. கிளை விதி 2க்கு மாற்றான வாசகமாவது :

"**2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு:-** இந்தியா எனப்படும் பாரதத்தின் குடிமக்கள் அனைவருக்கும், சாதி, நம்பிக்- அவர்கள் சார்ந்துள்ள அல்லது பின்பற்றும் மதம் ஆகிய வேறுபாடுகளின்றி, இச்சட்டத் தொகுப்பு பொருந்தும்.

5. கிளை விதி 2-இல் - (உள்ள)

1) துணைக்கிளை விதி (1)இல்-

i) பகுதி (அ)வில் ''இந்துக்கள், அதாவது, இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவரும்'' என்ற தொடருக்கு பதிலாக, ''மதத்தினால் இந்துக்களாவோர் அனைவரும்'' என்ற தொடர் இடம்பெறலாம்.

ii) பகுதி (ஈ)இல், ''இந்து மதம்'' என்பதற்கு பதிலாக, ''இந்து, பௌத்த, சமண, சீக்கிய மதங்கள்'' என மாற்றப் படலாம்.

2) துணைக்கிளை விதி (4) நீக்கப்படலாம்.

6. கிளை விதி (2), துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (அ) இல் ''இந்துக்கள், அதாவது இந்து மதத்தைக் கடைப்பிடிப் போர்'' என்பதற்கு பதிலாக, ''இந்து மதத்தைச் சார்ந்தவர்கள்'' என மாற்றலாம்.

7. கிளை விதி 2, துணைக் கிளைவிதி (1) இன் பகுதி (ஆ) நீக்கப்படலாம்.

8. கிளை விதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (ஆ)வுக்கு மாற்று வாசகமாவது.

''ஆ) மதத்தினால் பௌத்தராகவோ, சமணராகவோ, சீக்கியராகவோ உள்ள அனைவரும்''

9. கிளை விதி (2), துணைக்கிளை விதி (1) இன் பகுதி (ஆ)வுக்கு மாற்று வாசகமாவது,

''ஆ) சமண மதத்தைச் சார்ந்தவர் யாவரும்

10. கிளை விதி 2, துணைக்கிளை விதி (1)இன் பகுதி (ஆ)வில் ''சமணர் அல்லது சீக்கியர்'' என்ற தொடருக்கு பதிலாக ''அல்லது சமணர்'' என மாற்றிடலாம்.

11. கிளை விதி 2, துணைக் கிளை விதி (1) இன் பகுதி (ஆ) வில் ''அல்லது சீக்கியர்'' எனும் சொற்கள் நீக்கப்படலாம்.

12. கிளை விதி 2, துணைக்கிளை விதி (1) இன் பகுதி (இ)யில், ''முறையின்றிப் பிறந்த'' என்பதையடுத்து, ''பதினெட்டு வயது நிரம்பியோ, மற்றும் இந்து சமயத்தவராகவோ இருப்பின்'' எனும் தொடர் செருகப்படலாம்.

13. கிளை விதி 2, துணைக் கிளை விதி (1)இன் பகுதி (இ)யில், ''இந்துப் பெற்றோர்களுக்குப் பிறந்தோர்'' எனும் தொடருக்கு மாற்றாக, ''இந்து அல்லது இந்துக்களாயிருந்த பெற்றோரின் மக்கள்'' எனும் தொடர் இடம்பெறலாம்.

14. கிளைவிதி (2), துணைக்கிளைவிதி (1)இன் பிரிவு C(ii)இல் ''சார்ந்த அல்லது சார்ந்திருந்த'' எனும் தொடரை யடுத்து, ''நபர், பதினெட்டு வயது நிறைவடைந்தவராகவும் அவரே இந்துவாகவும் இருப்பின்'' எனும் தொடர் சேர்க்கப் படலாம்.

15. கிளைவிதி (2), துணைக்கிளை விதி (1)இன் பிரிவு C(ii)வை அடுத்து,

"iii) கைவிடப்பட்டதொரு குழந்தைக்கும் அது வளர்க்கப் பட்டு வரும் சமுதாயம், குழு அல்லது பெற்றோரையொட்டி'' எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

16. கிளைவிதி (2), துணைக் கிளை விதி (1)இன் பிரிவு (d)க்கு மாற்றாக,

(d) ''இந்து மதத்திற்கு மாற்றப்பட்ட ஒருவருக்கு, மாற்றத் திற்கு முன்னர் அவருடைத்தான உரிமைகள், பொறுப்பு களின் வரம்புக்குள்ளாக''

எனும் தொடர் இடம்பெறலாம்.

17. கிளை விதி (2), துணைக்கிளை விதி (1)இன் பகுதி (d)யையடுத்து, ''பௌத்த, சமண, சீக்கிய, இந்து மதங் களிலிருந்து, தமது வாழ்நாளில் முஸ்லீமாகவோ, கிறித்தவ ராகவோ மதம் மாறியவருக்கு''

எனும் தொடர் இடம்பெறலாம்.

18. கிளை விதி (2)இன் துணைக் கிளை விதி (2) நீக்கப் படலாம்.

19. கிளைவிதி (2), துணைக் கிளை விதி (2)இல் ''பார்சி'' என்ற சொல்லையடுத்து ''சீக்கியர்'' என்ற சொல் சேர்க்கப் படலாம்.

20. கிளை விதி 2 இன் துணைக் கிளை விதி (2)ஐயடுத்து,

''(2A) எந்த மதத்தைச் சார்ந்தவராயினும், இந்து,

பௌத்த, சமண அல்லது சீக்கிய மதத்தவரை மணந்து கொண்ட பெண்கள் அனைவருக்கும் இச் சட்ட விதிகள் பொருந்தும்.”

எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

21. கிளை விதி 2இன் துணைக் கிளை விதி (3) நீக்கப் படலாம்.

22. கிளை விதி (2)இன் துணைக் கிளை விதி (4) நீக்கப் படலாம்.

23. கிளைவிதி (2)இன் துணைக் கிளை விதி (4)ஐ அடுத்து,

''(5) சட்டத்தின் இப்பிரிவின் கீழ் கூறப்படுவதெவ் வாறாயினும், எந்தவொரு மாநிலத்திலும், அம்மாநிலச் சட்டமன்றங்களால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் பகுதிகள், மக்கள், மக்கள் குழுக்களைச் சார்ந்தவர்கள் ஆகியோர்க்கு மட்டுமே இச்சட்ட விதிகள் பொருந்தும்''

எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

24. கிளைவிதி 2க்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப் படலாம்:

''மேற்கண்ட கிளை விதிகளில் கூறப்பட்டிருப்பதெவ்வா றிருப்பினும், நாடாளுமன்றத்தால் இதற்கென வகுக்கப்படும் முறைப்படி, தக்க அலுவலர்களிடம், சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் பதிவு செய்து கொண்டவர் களையன்றி ஏனையோருக்கு இச்சட்டம் பொருந்தாது; வயதடையாதோர், அவ்வய தடைந்த ஓராண்டு காலத் திற்குள் பதிவு செய்யலாம்.''

25. கிளை விதி (2)க்கு மாற்று வாசகமாவது:

''2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு:- இந்தியா எனப்படும் பாரத நாட்டின் வயதுவந்த குடிமக்களில், இந்திய அரசு இதற்கென வகுக்கும் விதிமுறைகளுக்கேற்ப, இச்சட்டத் தொகுப்போ அதன் பகுதிகளோ, தங்களுக்கும் பொருந்தும் என்று எழுத்து வாயிலாய அறிக்கை தந்து பதிவு செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே, இச்சட்டத் தொகுப்போ அதன் பகுதிகளோ பொருந்தும்.

26. திரு. பன்சாரி பிரசாத் ஜுன்ஜுன்வாலா அவர்கள் கிளை விதி 2இன் வரம்புரைக்கு முன் மொழிந்துள்ள திருத்தத்தில், காணப்படும் நிபந்தனைப் பகுதியை,

''அத்தகைய நபர், உரிய வயதடைந்த பின்னர், இச் சட்டங்கள் தமக்குப் பொருந்தும் என எழுத்து வாயிலாய் அறிவிப்பதோடு, அவ்வறிவிப்பை இதற்கென மத்திய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படி பதிவு செய்திருக்க வேண்டும்''

என்பதாக மாற்றியமைக்கலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஐயா, சுருக்கு வழிக்கான கருத்தொன்றைக் கூற விரும்புகிறேன். இங்கு ஒரே பொருளைப்பற்றி பெரும் எண்ணிக்கையிலான திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவையனைத்தையும் ஒரு சேர விவாதித்தால் குழப்பமே மிஞ்சும் என்பதுடன் நமது பொருண்மைக்கேற்ற முடிவு எதையும் அடைவதியலாது என்று எனது அனுபவத்தால் கூறுகிறேன். திருத்தங்களைத் தனித்தனியே எடுத்துக் கொண்டால், கூறியதையே திரும்பக் கூறுவதைத் தவிர்த்து நமது பேச்சுகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதை எனது தனிக் கருத்தாகக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** நாம் அனைவருமே கூறியது கூறலைத் தவிர்ப்பதில் உறுதியாயிருப்பின் அக்குறை நிகழுமென அஞ்ச வேண்டியதில்லை. இதனைக் கூர்ந்து நோக்கித் தவிர்ப்பதில் அவைத் தலைமைக்குக் கூடுதல் சுமை நேரலாமெனினும் இந் நோக்கினை எய்த முடிந்தவரை அவைத் தலைவர் முயல்வார்.

**டாக்டர் அம்பேத்கர்:** திரு. நசிருதீன் அகமது அவர்கள்பாலும் தடைகள் விதிக்கப்படும்!

**திரு. சர்வாத்தே:** ஐயா, எனது திருத்தமுன்மொழிவால், இம் மசோதாவின் கோள்வரம்பு மேலும் விரிவாகிவிடுமென்ற தடை எழுப்பப்பட்டது. எனது உரையின்போது, எனது திருத்தம் இம் மசோதாவின் நோக்கங்களுக்கோ, அரசியல் சட்ட விதிகளுக்கோ முரண்பட்டதன்று என்று நிறுவ முயல்வேன். (பண்டித தாகூர்தாஸ் பர்கவாவின் தலைமையில் விவாதம் தொடர்கிறது)

எனக்குத் தெரிந்தமட்டில் 'இந்து' என்பதற்குத் தெளிவான ஒற்றை வரையறை ஏதும் கிடையாது. இந்து என்ற சொல்லின்

கருத்தும் குறிப்பீடும் காலத்துக்குக் காலம் இடத்துக்கிடம் மாறுபட்டே வந்துள்ளன. இதே நிலை தொடர, ஒருகாலகட்டத்தின் எனது திருத்தத்தின் கூறப்பட்டுள்ள பொருளில் இச்சொல் நிலைப்பாடு அடையலாம். வெவ்வேறு பொருள்களில் 'இந்து' என்ற சொல் புரிந்து கொள்ளப்பட்டு வந்துள்ளது என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறவியலும். இந்து என்பதைற்கு இந்தியாவில் வாழ்பவர் என்று ***சத்தியப்பிரகாசம்*** கூறுவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். இந்தியாவில் பிறந்து அதனைப் புனித நாடாய்ப் போற்றுவோர் அனைவரும் இந்துக்களே என பம்பாய் சீர்திருத்தவாதி சாவர்க்கர் கூறியுள்ளார்.

மேலும் அவர்,

आसिंधु सिंधु पर्यंता, यस्य भारत भूमिका।
पितृभूः पुण्यभूश्चैव, सवै हिन्दुरिति स्मृतः॥

என்றும் கூறியுள்ளார்.

அதாவது, இந்தியாவைத் தாய்நாடாகவும், புனித நிலம் எனவும் கருதுவோர் யாவரும் இந்துக்களே என்பதே இதன் பொருளெனலாம். மேலும் அமெரிக்க, தென்னாப்பிரிக்க நாடுகளில், இந்தியாவிலிருந்து வருவோரனைவரையும் 'இந்துக்கள்' எனக் குறிப்பிடும் பழக்கம் நிலவி வருவதையும் நான் சுட்டிக் கூற வேண்டியதில்லை. எனவே எனது திருத்தத்தின் மூலம் நான் புதிய கருத்து எதையும் புகுத்த முனையவில்லை; மாறாக இந்து எனும் சொல்லுக்குரிய சரியான விளக்கத்தைத் தரவே முற்பட்டுள்ளேன். மேலும் இந்து என்ற சொல்லின் பொருள் எதுவாயினும், இந்த மசோதாவில் அச்சொல் இந்துச் சட்டத்தை மட்டுமே குறிப்பிடுவதாய் அமையவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:

''வரையறைகளின் துணைக் கிளை விதி (அ)வை நோக்கினால், இந்து எனும் சொல் ''இந்துக்கள், அதாவது இந்து சமயத்தைக் கடைபிடிக்கும் அனைவரையும்'' குறிப்பிடுமென்றும், கிளை விதி

(ஆ) இல்

''பௌத்த, சமண, சீக்கிய மதங்களைச் சார்ந்த அனைவரையும்'' குறிப்பிடுமென்றும் கூறப்படுகிறது.

எனவே, (இந்து) சட்ட விதிகள், இந்து சமயத்தவர்க்கு மட்டுமின்றி, சீக்கிய, புத்த, சமண சமயங்களைக் கடை பிடிப்போருக்கும் பொருந்துமாறு விரிவுபடுத்தவே இம்மசோதா முற்படுகிறது. இந்து சமயத்தின் வரலாற்றை நான் விவரிக்கத் தேவையில்லை. இந்து சமயத்திற்கு சனாதன வேத தர்மம் எனப் பொருள் கொண்டால், ஒரு காலகட்டத்தில் சமண சமயம் இந்து சமயத்திற்கு எதிராகவும் முரண்பட்டதாகவும் இருந்துள்ளது என்பதை அறிவோம். சனாதன வேததர்மம் என்பது வேதங்களைச் சார்ந்திருந்ததெனில் சமணம் வேதங்களைச் சார்ந்து அமையவில்லை. எனவே சமணமும், இந்து சனாதன வேத தருமமும் முற்றிலும் மாறுபட்ட சமயங்களே.

இக்கட்டத்தில் அவை, பிற்பகல் 2.30 மணிவரை உணவு இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

---

*பிற்பகல் இரண்டரை மணிக்கு, உணவுக்குப்பின் அவை மீண்டும் கூடுகிறது.*

*(பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவைத் தலைவர் பொறுப்பில் உள்ளார்.)*

**திரு. சர்வாத்தே :** உணவுக்காக அவை எழுந்தபோது, இம் மசோதா இந்து சமயத்தவரை மட்டுமின்றி, சனாதன வேதநெறியை யொட்டி இந்து சமயத்தோடு முரணியும் எதிர்த்தும் அமைந்த பௌத்த, சமண மதங்களைப் போன்ற பிற சமயத்தவரையும் (இந்து சட்டத் தொகுப்பின்) வரம்புக்குள் கொண்டு வர முனைகிறது என்பதை நிறுவ முயன்று கொண்டிருந்தேன். ஆனால் இவை யிரண்டும் இந்து சமயத்திற்கு எதிரானவையாய் இருப்பதறிந்தும் இந்து சட்ட வரம்பிற்குள் கொண்டுவர இம்மசோதா முனைகிறது. எனவே மசோதாவை முன்மொழிந்தவருக்குப் பிற சமயங்களை சட்டத்துக்குள் கொண்டுவர உரிமையுண்டெனில், மேலும் பிற சமயங்களையும் சேர்த்துக் கொள்ளலாமென்று திருத்தம் முன்மொழிய எனக்கு முழு உரிமையும் உண்டு. அவ்வாறு முன்மொழிந்த போதிலும் நான் சட்டத்தின் கொள்வரம்பிற்கு உட்பட்டே நிற்கிறேன் என்பது உறுதி.

மேலும் இங்கு விவாதிக்கப்படும் மசோதாவானது இந்து சட்டத்தைச் சீர்திருத்தி வரையறுக்க முற்படுகிறது. இம் மசோதா

கொண்டு வரப்படுவதன் நோக்கங்கள், காரணங்களின் விளக்க அறிக்கையில் சீர்திருத்தமும் பட்டியலிடப்பட்டிருப்பதை நன்கு நினைவுகூர்கிறேன். இச்சட்டம் இந்திய அரசியலலைமப்புச் சட்டத் திற்கு முரணானதை தவிர்ப்பதற்கு இச்சீர்திருத்தம் தேவையெனக் கருதப்பட்டிருக்கலாம். எனது கருத்தை நான் இங்கு தெளிவுபடுத் துதல் அவசியமாகிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 25-ஆவது விதி, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் தத்தம் மனச் சான்றுக் கேற்றவாறு எந்தவொரு சமயத்தையும் சுயேச்சையாகப் பின்பற் றவும், கடைபிடிக்கவும், பரப்பவும் தடையற்ற உரிமை வழங்கப் பட்டுள்ளது. எந்தவொரு மனிதருக்கும் சுயேச்சையாகத் தனது மதத்தைப் பின்பற்ற உரிமையுள்ளது. அவன் தனது சமய நெறிப்படி திருமணத்தை நடத்திக்கொள்ளத் தடையேதும் இருக்க முடியாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட முறைப்படிதான் திருமணம் நடைபெற வேண்டுமென இம்மசோதா கட்டுப்படுத்த முனைகிறது. இம் மசோதாவில் வரையறுக்கப்படும் கோட்பாடுகள் யாவும் அவனது சமயநெறிக்கு முற்றிலும் எதிரானவையாய் இருக்கலாம். இம் மசோதாவை மறுப்பதற்கு, அரசியலமைப்புச் சட்ட விதி 25இன் கிளைப் பிரிவு ஒன்றும் துணைவரக் கூடுமென்று எனக்குத் தோன்று கிறது. அக்கிளை விதியின் வாசகமாவது :

> ''(2) (அ) சமய வழக்கங்களோடு தொடர்புடைய பொரு ளியல், நிதியியல், அரசியல், மற்றும் பிற சமயச் சார்பற்ற செய்பாடுகளையும்
>
> ஆ) இந்து சமய நிறுவனங்கள் இந்து சமுதாய மக்கள் அனைவருக்கும் பரவலாகப் பயன்படுமாறு பொதுமய மாக்கும் சமுதாயச் சீர்திருத்தச் செயல்பாடுகளையும்
>
> கட்டுப்படுத்தும் தற்போதைய சட்டங்களையோ, வருங் காலத்தில் அரசுகள் இயற்றும் சட்டங்களையோ இந்த அரசியல் சட்ட விதி எவ்வகையிலும் வரம்பு செய்யாது.''

நான் முன் மொழியும் திருத்தத்தின் வாயிலாக நான் இந்து சமயத்தைச் சீர்திருத்த விரும்புகிறேன். கிறித்தவர்கள் பார்சிகள், யூதர்கள் உள்ளிட்ட இந்தியக் குடிமக்கள் அனைவரையும் இந்து சமயத்தவராக ஏற்றுக் கொள்வதன் மூலம் இந்து சமயத்தை விரிவு படுத்தலே சீர்திருத்தத்தின் அடிப்படைக் கூறு.

இந்துச் சட்டம் என்று தற்போது எதைக் குறிப்பிடுகிறோம். இந்துச் சட்டமாவது ஸ்ருதி, ஸ்மிருதிகளின் அதாவது வேதங்களின்

அடிப்படையில் அமைவதாய்க் கூறப்படுகிறது. ஆனால் **ஸ்ருதி, ஸ்மிருதிகள்** மட்டுமே இந்துச் சட்டங்கள் அல்ல. முறையான சட்ட மியற்றும் வரம்பதிகாரம் கொண்ட சட்ட மன்றங்கள் இயற்றும் சட்டங்களையும் சேர்த்ததுதான் இந்துச் சட்டங்கள். எனவே இயற்றப்பட்ட சட்டங்களும் வேதநெறிகளும் சேர்ந்த கூட்டாக இந்துச் சட்டத்தைக் கருதுவோம். இந்துச்சட்டங்களில் **ஸ்ருதி, ஸ்மிருதி** களின் பங்கு X என்றும் இயற்றப்பட்ட சட்டங்களின் பங்கு Y என்றும் கொண்டால், இந்துச் சட்டம் என்பது X + Y எனலாம். தொடக்க காலத்தின் X, 100% ஆகவும் Y 0 ஆகவும் இருந்துவந்தது. காலப்போக்கில் Yஇன் மதிப்பு கூடக்கூட அதற்கேற்ற X இன் மதிப்பு இறங்கிக் கொண்டே வந்தது. இந்துச் சட்டத்தின் முழுமை யும் Y என ஆதலின் மூலமே சீர்திருத்தம் நிறைவு பெறும்.

இந்து சமயத்தின் முதன்மையான அடிப்படை சாதியமைப்பே; இரண்டாவது அடிப்படை திருமண முறை. இந்துத் திருமணம் புனிதமானது மட்டுமின்றித் தெய்வ கட்டளையாலானது என்றும் பிரிக்கவியலாதது என்றும் கருதப்பட்டது. எனவே, பழமை வாத இந்துக்கள் கடைப்பிடிக்கும் ***சனாதன வேத நெறியில்*** மணவிலக் குக்கு இடமில்லை. தற்காலத்திலோ மணவிலக்கு ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறாகப் பண்டை மரபுகள் ஒவ்வொன்றாய் வழக்கொழிந்து வருகின்றன. சிற்சில இடங்களில் சாதிவேறுபாடு கள் முற்றுமாய்ப் புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் இச்சட்ட மசோதாவில் சாதி என்பதே எங்கும் இடம்பெறவில்லை. எனவே இம்மசோதா இந்து சமயத்தின் அடிப்படையான ***சனாதன வேத நெறியை*** அகற்ற முனைகிறது. அதாவது முன்னர் X, 100% ஆகவும் Y, 0 ஆகவும் இருந்த நிலையை மாற்றி X, 0 ஆகுவும் Y, 100% ஆகவும் மாற்ற இம் மசோதா முனைகிறது. அதன் வழி, முந்தைய நிலை அப்படியே தலைகீழாக மாற்றப்படும். ஒரு காலத்தில் **ஸ்ருதி, ஸ்மிருதிகளே** இந்துச் சட்டங்களாயிருந்த நிலை மாறி, அவற்றுக்குச் சிறிதும் இடமின்றிச் சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களைக் கொண்டே இந்து சட்டத் தொகுப்பு அமையும். இந்த நன்மைகள், ***சனாதன வேத நெறியைப்*** பின்பற்று வோர்க்கு மட்டுமின்றி, ஏனையோர்க்கும் கிடைக்க வேண்டும் என்பதையே நான் வலி யுறுத்துகிறேன். இது மசோதாவின் அடிப்படை நோக்கோடு இயைந்த கருத்தே. இந்திய எல்லைக்குள் வாழ்வோர் அனைவருக்கும் சமத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதே எனது குறிக்கோள். நான் இந்துக் களோ, சீக்கியர்களோ அன்றிப் பிற சமயத்தார் பக்கம் ஒருதலைச் சார்பாகப் பேசவில்லை.

இதுவரை கருத்தாய்வு செய்யப்படாத கிறித்தவர்கள் பார்சிகள் போன்ற பிற சமுதாயங்களுக்கும் இச்சட்ட மசோதாவை விரிவாக்க முனைகிறேன் என்று வேண்டுமானால் குறையாகச் சுட்டிக்காட்டப் படலாம். (கருத்தாய்வு செய்யப்படவில்லை என்பதனாலேயே சேர்க்கக் கூடாதெனில்), கருத்தாய்வு செய்யப்படாத சீக்கியர் களைச் சேர்த்திருப்பதும் குறைதான் என்பதே எனது பதில். எனவே, நியாயம் என்று பார்த்தால் மசோதாவின் மூலவரைவிற்கும், நான் முன்மொழியும் திருத்தத்திற்கும் வேறுபாடு ஏதுமில்லை. முறையான செயல்பாடு யாதெனில், இதுவரை கருத்தாய்வு செய்யப் படாத ஏனைய சமூகத்திற்கும் கருத்தாய்வு செய்தலே; இம்மசோதா அதுவரை நிறுத்தி வைக்கப்படலாம் அல்லது திருப்பியனுப்பப் படலாம்.

நியாய உணர்வு, நீதி, சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படை யில் வரையப்பட்டிருப்பதே இம்மசோதாவின் தலையாய சிறப்பாய்க் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருவருக்கு மூன்று மகன்களும் மூன்று மகள்களும் இருப்பதாய்க் கொள்வோம். அவருக்கு மகன்கள் மீது பாசம் இருப்பது போன்றே சம அளவில் மகள்களிடமும் பாசம் இருக்கவேண்டும். குறிப்பிட்ட பெற்றோர்க்கு மக்களாய்ப் பிறந்த காரணம் ஒன்றுக்காகவே மகன்களுக்கு வாரிசுரிமை கிடைக் கிறதென்றால், அதே காரணத்துக்காக மகள்களுக்கும் வாரிசுரிமை தரப்பட வேண்டுமன்றோ? இதுவே சரியான நியாயம் என்று ஏற்றுக் கொள்வோமெனில் இந்த நியாயம் இந்துக்களுக்கு மட்டுமின்றி முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகியோர்க்கும் பொருந்த வேண்டு மன்றோ? கிறித்தவர்கள் போன்ற ஏனைய சமயத்தவர்களுக்கும் கூட இதே நியாயம்தான் பொருந்த வேண்டும். எனவே இச்சட்டம் திருத்தப்பட வேண்டுமெனில், எந்தெந்த மக்களுக்கெல்லாம் சட்ட மியற்ற இந்த அவைக்கு வரம்புரிமையுண்டோ அந்த மக்கள் அனை வருக்கும் பொருந்துமாறு திருத்தம் அமைய வேண்டுமேயன்றி இந்துக்களை மட்டுமே கருத்தில் கொண்டு திருத்தம் செய்யப்பட லாகாது.

இக்கருத்தில் எனக்கு நல்ல ஆதரவு உண்டு என்பதையும் காட்ட விரும்புகிறேன். இம்மசோதா மீதான விவாதங்களின் முந்தைய கட்டம் ஒன்றில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நிகழ்த்திய உரையிலிருந்து மேற்கோள் ஒன்று காட்ட விரும்புகிறேன். இந்த அவையின் செயல்பாட்டு அறிக்கையின் பக்கம் 3651இல் பின்வரும் பகுதியை மேற்கோள் காட்டுவேன்:

> ''சமயஞ்சார் வாரிசுரிமைச் சட்டங்கள், சமயஞ்சார் திருமணச் சட்டங்கள் ஆகியவற்றுக்கு மாற்றாக, சாதி, சமய, சமூக வேறுபாடுகள் ஏதுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் பொருந்தும் வகையிலான பொதுக் குடிமைச் சட்டம் வேண்டுமென்று மாண்புமிகு நண்பர் கூற முனைகிறார் எனில், நான் அவரை முழுமையாக ஆதரிக்கிறேன்.''

என்று இந்துச் சட்ட மசோதா பற்றிப் பேசுகையில் ஒரு கட்டத்தில் அவர் பேசியுள்ளார்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** அவர் தமது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.

**திரு. சர்வாத்தே :** அவர் தமது சொல்லைக் காப்பாற்ற வேண்டும்.

எனது கருத்துக்கு ஆதரவாக அரசியலமைப்புச் சட்டத்திலும் ஒரு பகுதியுண்டென்பதையும் சுட்ட விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டத்தின் 44-வது விதி,

> ''இந்திய நாட்டு நிலப்பரப்பு முழுமையிலும் வாழும் குடிமக்கள் அனைவருக்கும் சீரான பொது உரிமையியல் சட்டத் தொகுப்பை உருவாக்குதற்கு அரசு செயல்பட வேண்டும்.''

என்று கூறுகிறது.

உரிமையியல் சட்டத் தொகுப்பு என்பதில், திருமணம், வாரிசுரிமை, தத்தெடுத்தல் குறித்த சட்டங்கள் அடங்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. குடிமைச்சட்டம் என்பதன் பயன் வரம்பு இந்துச் சட்டத்தோடு இசைவதாகவும், ஒருங்கே முடிவுறுவதாகவும் அமைய வேண்டும். அரசியலமைப்புச் சட்ட விதி கூறுவது போன்று அரசு செயல்பட, வழிவகை செய்யவே இத்திருத்தம் முனைகிறது. எனவே அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் கோட்பாட்டைச் செயல்படுத்துதற்குத் தாமதமின்றி முயற்சி மேற்கொள்வதன் அவசியத்தை எண்ணினால் டாக்டர் அம்பேத்கர் தான் எனது திருத்தத்தை வரவேற்கும் முதல் மனிதராய் இருக்க வேண்டும்.

இச்சட்டத் தொகுப்பு குறித்து முந்தைய அமர்வில் நடைபெற்ற விவாதத்தின்போது, முஸ்லீம் நண்பர்கள் சிலரும், பார்சி நண்பர்கள் சிலரும் இக்கருத்தை வலிவாக ஆதரித்துப் பேசினார்கள்; இம்மசோதாவின் பல்வேறு கூறுகளும் தங்களுக்கு மனநிறைவளிப்

பதாகவும் கூறினர். அவர்கள் அனைவரும் எனது திருத்தத்தை ஆதரிக்குமாறு வேண்டி வரவேற்கிறேன். இச்சட்டத்தின் கூறுகள், நியாயமாகவும், நலனளிக்கும் வகையிலும் அமைந்திருப்பதாய் அவர்கள் நம்பினால், இச்சட்டத் தொகுப்பு அனைவருக்கும் பொருந்துமாறமைய வேண்டுமென நான் வாதாடுவது போன்று, அவர்களும் வாதாட முன்வர வேண்டும்.

இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில், இந்து என்னும் சொல், வேறு பொருளில் குறிப்பாகப் பயன்படுத்தப்படாதமட்டில், இந்தியக் குடிமகன் என்றே பொருள் படவேண்டும் என்று நான் கூறுகிறேன். 'குறிப்பாக வேறு பொருளில் பயன்படுத்தப்படாத மட்டில்'' என்ற தொடரை நான் பயன் படுத்துதற்கான காரணம், அவரவர் சமய நடைமுறைகளுக்கு இச்சட்ட விதிகளில் சில இசைந்து வராத சூழ்நிலைகளில் அவற்றுக்கு விதிவிலக்களிப் பதன் வாயிலாக இச்சட்டத்தைப் பொதுச் சட்டமாக எல்லாச் சமயத்தவரையும் ஏற்றுக் கொள்ள வைக்கும் அளவுக்கு சட்டத்தில் நெகிழ்ச்சித்தன்மை இருக்க வேண்டும் என்பதற்காகவே. எடுத்துக் காட்டாக, முஸ்லீம்களும், கிறித்தவர்களும் கூட ஏற்றுக் கொள்ளும் வகையில், நெகிழ்ச்சித்தன்மையை, இத்தொடரால் அளிக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்குவேன். எனது வரையறையின்படி வெவ்வேறு மதத்தவர்களும் கூடத் தமது சமய மரபுகளினின்றும் வழுவாமலேயே இச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நெகிழ்ச்சித்தன்மை உண்டு. எனவே எவ்வகையிலும் தடை தோன்றுதற்கில்லை. எடுத்துக் காட்டாக, உரோமானியக் கத்தோலிக்க சமயத்தினர் தங்கள் சமய நெறியில் மணவிலக்குக்கு அனுமதியில்லை என்று கருதுவார்களெனில், மணவிலக்கு விதி களைப் பொறுத்தமட்டில் 'இந்து' என்ற சொல் உரோமானியக் கத்தோலிக்கர்களைக் குறிக்கமாட்டாது என விதிவிலக்கு அளிக் கலாம்.

இச்சட்டத்தின்படி சமயவழி, சட்ட வழி என இரு வகையான திருமணங்களுக்கும் இடமுண்டு. சமய வழி என்பதில் இந்து, சமண, கிறித்தவ சமயங்கள் உள்ளிட்ட பல்வேறு சமயங்களும் அடங்கும். ஒவ்வொரு சமயத்தவரும் அவரவர் சமய மரபுகளின்படித் திருமணம் செய்து கொள்வதற்குச் சமயவழித் திருமணம் என்ற வகையில் சட்டம் இடமளிக்கிறது. எடுத்துக்காட்டாக **சனாதன வேதநெறிகள்** சுட்டும் சடங்குகளைப் பின்பற்றுவோர் தொடர்ந்து அவ்வழியி லேயே திருமணம் செய்து கொள்ளலாம். நான் இங்கு சுட்ட விரும்புவதெல்லாம், ஒவ்வொருவரும் அவரவர் சமய மரபுகளுக்கு

இடையூறாக இச்சட்டம் செயல்படுமோ என அஞ்சத் தேவையில்லை என்பதே.

**திரு. தியாகி:** வேறொரு சட்டத்தின்படி ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டவர்களின் நிலை என்ன?

**திரு. சர்வாத்தே:** இதற்குத் தேவையான திருத்தங்களை, மாண்புமிகு நண்பர் தியாகி உரிய கட்டத்தில் பரிந்துரைக்கலாம்.

எனவே, எனது திருத்தம் அரசியல் சாசன விதிகளுடன் இயைந்து அமைவதுடன், மசோதாவைத் தாக்கல் செய்துள்ள, டாக்டர் அம்பேத்கர் உரைத்த நோக்கங்களுடனும் இசைவாயமைந்தும், இச்சட்டம் கொண்டுவரப்படுவதன் நோக்கங்களான காரண காரிய நீதி, நியாய முறைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் நோக்கில் அமைந்திருப்பதால், இந்த அவையும், இந்த மசோதாவின் முன்மொழிவாளரும் எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோபிநாத் சிங் அவர்கள் சில திருத்தங்களை முன்மொழிந்துள்ளார். அவை இன்று வந்துள்ளன. இந்த அவையின் நடைமுறை விதிகளின்படி, மசோதாவுக்குப் பொறுப்பாளரான மாண்புமிகு உறுப்பினரின் இசையவில்லையேல், அவைத்தலைவர் அவற்றை அனுமதிப் பதற்கில்லை. திருத்தங்களுக்கான அறிக்கை இன்றுதான் பெறப்பட்டது. எனவே, அவற்றை ஏற்றுக் கொள்ள இசைகின்றாரா என டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** அந்தத் திருத்தங்களின் படிகள் எனக்குக் கிடைக்கவில்லை; எனவே, நான் ஏதும் கூறுதற்கில்லை.

[1]**திரு. இந்திர வித்யாவச்சஸ்பதி** (இந்தி உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு): ஐயா, எனது திருத்தம் என்னவென்றால், இந்துச் சட்ட மசோதா, நிறைவேற்றப்பட்ட பின்னர், அது இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பொருந்துமாறு இருக்க வேண்டும். சாதி, சமய, நம்பிக்கை வேறுபாடுகள் அதில் இடம் பெறலாகாது.

---

1. நா.வி., தொகுதி VIII, பாகம் II, 1951 பிப்ரவரி 5, பக். 2387-92.

இதுவே எனது திருத்தமாகும். நான் ஓராண்டு காலமாய் நாடாளு மன்ற உறுப்பினராயிருந்து வந்தபோதிலும் இன்றுதான் முதன் முறையாக உரைநிகழ்த்த வந்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னதாக நான் ஒரு நிமிட நேர உரை கூட நிகழ்த்தியதில்லை; ஏனெனில் நாடாளுமன்ற நிகழ்வுகளின் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 50 ரூபாய் செலவாகின்றதென சபாநாயகர் அவர்கள் முன்னரே கூறியுள்ளார் - அதைப் பின்பற்றிப் நாடாளு மன்றச் செலவில் ஆயிரக்கணக்கான ரூபாயளவில் நான் சிக்கனம் செய்துள்ளேன். ஆனால், இன்று நான் சேமிக்கும் மனநிலை யில் இல்லை. ஏனென்றால் எனது உள்ளத்தில் அச்சம் ஒன்றுகூர்ந்து நிலவிவருகிறது. அதாவது, இந்த மசோதா நிறைவேற்றப்பட் டாலும் நிறைவேற்றப்படாவிட்டாலும் இடர்ப்பாடுகள் பல தோன்றும் என்பதே அவ்வச்சமாகும். நான் ஆர்வமிக்கதோர் சமூக சீர்திருத்தவாதியாதலால் சமுதாயச் சீர்திருத்தத்திற்கான சட்டங் கள் நிறைவேற்றப்பட வேண்டுமென விரும்புகிறேன். சமுதாயச் சீர்திருத்தங்களைக் கொணரச் சட்டமியற்றும் அதிகாரம் அரசுக்கு உண்டு. எனவே, அவ்வாறு இயற்றப்படும் சட்டங்கள் சமயச் செயல்பாடுகளில் தலையிடுமென்றாலும் அதற்காக அவற்றைக் குறைகூறவியலாது. மாறாக அரசும் சட்டமன்றங்களும் சமுதாயச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான சட்டங்கள் இயற்றுதற்குத் தேவை யான நடவடிக்கைகளையெடுக்கக் கடமைப்பட்டவையென்றே கருதுகின்றேன். தொடக்கத்திலிருந்தே இம்மசோதா இதே வடிவில் நிறைவேற்றப்படும் என்று பிரதமர் அவர்களும், டாக்டர் அம்பேத்கர்அவர்களும் உறுதி கூறிவந்துள்ளார்கள் என்ற போதிலும், இம் மசோதா அதன் இப்போதைய வடிவிலேயே நிறைவேற்றப்பட மாட்டாது என அஞ்சுகிறேன். பட்ஜெட் அமர்வு போன்றதொரு நீண்டதொரு அமர்வில்கூட, வெட்டதிகாரத்தைப் பயன்படுத் தினால் அன்றி இம்மசோதாவை நிறைவேற்ற இயலாது என்றே அஞ்சுகிறேன். நான் நாட்டு மக்கள் அனைவருக்கும் தொடர்பான இதுபோன்ற மசோதாக்களை வெட்டதிகாரம் பயன்படுத்தி நிறை வேற்றக்கூடாது. இது முதலாவதான இடர்ப்பாடு. அடுத்த இடர்ப் பாடு என்னவென்றால், இம் மசோதா நிறைவேற்றப்படுமெனில், இதுவரை எந்தத் தீமையை நாட்டிலிருந்து அகற்ற வேண்டுமென்று நாமெல்லாம் காலங்காலமாய் போராடி வந்திருக்கிறோமோ, அந்த மதவாதம் என்னும் கொடுந்தீமைக்கு நாமே ஊக்கமளிப் பவர்கள் ஆகிவிடுவோம். இந்துச் சட்டத்தொகுப்பு மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம், மதவாதமென்னும் பெருங்கேடு தலை

யெடுத்து என்றென்றும் நிலவ வழிவகுத்தவர்களாகி விடுவோம். இச்சட்டத் தொகுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் பொது வானதாய் அமையாது, ஆதலால் இது மதவாதம் தலைதூக்கவே வழிவகுக்கும் என்பது உறுதி. இந்த மசோதாவை நிறைவேற்றாது விட்டுவிடுவோமானால், சட்ட நெறி நின்று சமுதாயச் சீர்திருத்தம் செய்யலாமென்ற பாதைக்கே நிரந்தரமாய் மூடுவிழா நடத்தியவர் களாவோம். இந்த மசோதா நிறைவேற்றப்படாமலிருக்க வேண்டுமே யென்ற எனது எதிர்பார்ப்பு நிறைவேறும் என்பதற்கான நம்பிக்கை வெகுசொற்பமே. ஆனால் இம்மசோதா நிறைவேற்றப் பட்டுவிட்டால், மதவாதம் தலை தூக்க வழிவகுத்து, வரமாக எண்ணத் தொடங்கிய முயற்சி பெரும் சாபக்கேடாய் விளைந் திடுமோ எனும் அச்சமே மேலோங்கி நிற்கிறது. எனவே, சமுதாயச் சீர்திருத்தத்தின் பாதையில் இத்தகைய தடைகளும் இடர்ப்பாடு களும் குறுக்கிடும்போது, நான் குறுக்கிட்டுப் பேசியாக வேண்டு மென்று முடிவு செய்தேன். சமுதாயச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்படுவதை நான் வரவேற்று ஆதரிப்பவன் என்பதை முதலிலேயே தெளிவாகக் கூறிவிட விரும்பு கிறேன். முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் குறித்து விரிவாக ஆராய நான் இப்போது முற்படவில்லை. எனினும், பலதார மணம் போன்ற சில பொருண்மைகள் குறித்துச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்நாட்டில் ஒருதார மணம் என்பது, இந்துக் களுக்கு மட்டுமில்லாமல் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சட்டத்தின் வாயிலாகக் கட்டாயமாக்கப்பட வேண்டும் என வலி யுறுத்துகிறேன். மேலும் பெண்களுக்கு நீதியும் பொருளாதாரச் சம உரிமையும் அளித்து பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையும் வலி யுறுத்துகிறேன். இந்துப் பெண்கள் மட்டும்தான் ஒடுக்கப்படு கிறார்கள் என்பதை நான் ஏற்க (நம்ப) மறுக்கிறேன். பிற சமயப் பெண்களும் கூட அடக்கியொடுக்கப்படுகின்றனர். இந்தக் கொடுமை கள் யாவும் அழிய வேண்டியவை என்பது உறுதி. இத்தீமைகளை யெல்லாம் சமுதாயமே நீக்க முன் வருமெனில் வரவேற்போம்; இல்லையேல் சட்டங்கள் குறுக்கிட்டுத்தான் ஆகவேண்டும். நாடு முழுமைக்கும் சமத்துவம், சமநீதி ஆகிய கோட்பாடுகளின் அடிப் படையில் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போது, சமுதாயம் முழுமைக்கும் பொருந்துமாறு சட்டங்கள் இயற்றுதற்கு தடையேதும் இருக்க முடியாது. இதே நோக்கில் மணவிலக்குப் பிரச்சினை குறித்தும் எண்ணிப் பார்ப்போம். சாத்திரங்கள் மண விலக்குக்கு எதிராயிருப்பதாய்ப் பல மேற்கோள்கள் காட்டப்படு

கின்றன. இந்தப் பொருண்மையைப் பற்றி நான் விரிவாக விவாதிக்க முனையவில்லை என்றாலும், சாத்திரங்கள் இதைப்பற்றி ஏதும் கூறவில்லையென்று வாதிடல் பிழையென்று நானறிந்த வரையிலான தர்மசாத்திரங்களின் அடிப்படையில் உறுதியாய்க் கூறமுடியும். எந்தவொரு பொருளைக் குறித்தும் ஆதரவானதும் எதிரானது மான கருத்துக்கள் சாத்திரங்களில் பலபடக் காணப்படுகின்றன. மொத்தம் 137 ***ஸ்மிருதிகள்*** காணப்படுகின்றன. அவற்றுள் முதன்மை யானது ***மனு ஸ்மிருதி.*** அதில் கூறப்படுவதாவது:

*''வித்வத்பி சேவிதா சத்பிரிணித்யமத்சேஷரகிபிம்ஃ*
*ஹிருதயே நபியனுக்யாதோய. தர்மஸ்தானிபோதாத சன்னிபோத''*

(இதன் பொருளாவது: பாரபட்சமும் பற்றும் நீக்கிய, கற்றறிந்த நல்லோரால் பின்பற்றப்படுவதும் மனச்சான்றுக்கு முழுமையாக இசைவோடிருப்பதுவுமே அறம் (தர்மம்) ஆகும் என்பதே)

அவருக்கு முன்னரே பல ***ஸ்மிருதிகள்*** இருந்ததாக மனுவே கூறுகிறார். எனவே ***ஸ்மிருதிகள்*** என்பன பன்னெடுங்காலமாகவே நிலவிவருகின்றன என்பது தெளிவு. நமது சமுதாயத்திற்குச் சீர்திருத் தங்கள் ஏதும் தேவையில்லையென்பது பிழையான வாதமாகும். இத்தகைய வாதம் நாட்டு முன்னேற்றம் அனைத்திற்கும் பெருத்த தடைக்கல்லாகும். சமுதாயத்திற்குத் தேவையான சீர்திருத்தங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டியவையே. இந்த மசோதா வின் ஒவ்வொரு கிளை விதியும் தீர விவாதிக்கப்பட்டுத் தேவை யான திருத்தங்கள் அவ்வப்போது செய்யப்படுமாதலால், இப்போது விவரங்களைப் பற்றிப் பேச முனைவேனில்லை. எனவே, மசோதாவை ஒத்திப்போடுவதை நான் ஆதரிக்கவில்லை. ஆனால், இப்போதைய வடிவில் மசோதா நிறைவேற்றப்படுமானால், எண்ணற்ற இடர்ப்பாடுகள் தோன்றுமென்பதை மட்டும் உறுதி யாகக் கூறுவேன். என்னுடைய கருத்தில், அரசு இயற்ற வேண்டியது இந்தியச் சட்டம்தான்; (இந்துச் சட்டமல்ல) அது நாடு முழுமைக் கும் பொதுவாகப் பொருந்துவதாயிருக்க வேண்டும். சீர்திருத்தங் கள் இந்தியா முழுமைக்காகவும்தான் செய்யப்பட வேண்டும்.

இந்துக்களுக்கு மட்டுமே பொருந்துமாறு சட்டம் இயற்று வதால் விளையும் கேடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி, இந்நாட்டில் மதவாதம் வளர்வதை நாம் விரும்பவில்லை.

நமது நாடு சமயச் சார்பற்ற நாடு. இந்தச் சூழ்நிலையில் குறிப்பிட்டதொரு சமுதாயத்திற்கு மட்டுமாக அரசு சட்டம் இயற்றவியலாது. இதைப்பற்றி வழக்கறிஞர்கள் விரிவாக விவாதிக்கக்கூடும். ஆனால், ஒரு பாமரனின் நோக்கிலிருந்து நான் ஒன்றை மட்டும் கூறுவேன்; சமயத்திற்கு எந்த முக்கியத்துவமோ இடமோ கொடுக்காதவொரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றுவோர்க்கு மட்டுமெனச் சட்டமியற்றுதல், நீதி நெறிமுறைக்கு எதிரானது மட்டுமின்றி, அத்தகைய செயல்பாடு பிரிவினை வாதத்தை ஊக்குவிக்குமென்பதும் உறுதி.

இம்மசோதா, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது உருவாகியது. அக்காலத்தில் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரித்து வைக்கும் போக்கு கடைபிடிக்கப்பட்டதுடன், மதவாதத்தை ஊக்குவிப்பதற்கான செயல்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறுதான், மசோதாவுக்குத் தற்போதைய வடிவம் தரப்பட்டது. சமூகத்தின் எந்தவொரு பகுதியினருக்குமெதிராகவும் ஒருதலைப் பாகுபாட்டை அறவே ஒழிக்கவேண்டும் என்பதற்காக, பிரிட்டிஷார் காலத்திய சட்டக் கூறுகள் பலவற்றைத் தூக்கியெறிந்துள்ள நாம் இந்தவொரு கூறினை மட்டும் ஏன் இன்னும் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

**திருமதி துர்க்காபாய்:** ஒழுங்குப் பிரச்சினையொன்று எழுகிறது; மாண்புறு உறுப்பினர் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையே கேள்விக்குறியாக்குகிறார் எனக் கருதுகிறேன்.

**மாண்புறு உறுப்பினர்கள் சிலர் :** இல்லை; இல்லை.

**திருமதி துர்க்காபாய்:** அவர் அந்தக் கருத்தைத்தான் கூறியதாக எனக்குத் தோன்றியது. அவ்வாறாயின், இச்சிக்கல் குறித்து ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர் :** மாண்புறு உறுப்பினர் அவர்கள் முந்தைய உறுப்பினர் கூற விரும்பிய கருத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். இந்த அவைக்கு அதிகாரமில்லை யென்று அவர் ஒருபோதும் கூறவில்லை; மாறாக, இந்த அவைக்குச் (சட்டமியற்ற) முழு அதிகாரமும் உண்டு என்பதையே அவர் உறுதிபடக் கூறினார்.

**திரு. இந்திர வித்யாவாசஸ்பதி:** நான் கூறவேண்டியதை முழுமையாகக் கூறிமுடித்து விடுகிறேன்; அப்போது இது குறித்த ஐயப்பாடுகள் யாவும் அறவே நீங்கி விடும்.

இந்த மசோதாவின் மூலம் அரசு பெரியதொரு சாதனையை நிகழ்த்த விரும்புகிறது; அதாவது, பெண்களுக்கெதிராக இழைக்கப் பட்டு வரும் அநீதிகள் அனைத்தையும் நீக்க விரும்புகிறது. அரசின் இந்த நல்ல நோக்குகொண்ட செயலுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தர இந்தியச் சமுதாயச் சீர்திருத்தவாதிகள் எவருமே மறுக்க மாட்டார்கள் என உறுதியாய் எண்ணுகிறேன். இந்துப் பெண்களுக் கெதிராக இழைக்கப்படும் அநீதிகளை நீக்க முனைவோரை நோக்கி ஒரு வினாவை எழுப்ப விரும்புகிறேன். ஒரு ஆண் ஒரே சமயத்தின் நான்கு பெண்களை மணந்துகொள்ள அனுமதி தந்து, அதே அனுமதியைப் பெண்களுக்கு மட்டும் அளிக்க மறுப்பது அநீதி இல்லையா? இது நீக்கப்பட வேண்டிய பெரும் அநீதியென்பது உறுதி. இந்த அநீதி இந்துப் பெண்களுக்கெதிராக மட்டும் தானா இழைக்கப்படுகிறது? முஸ்லீம் பெண்களுக்கும் இது அநீதியே யன்றோ? இந்துப் பெண்களுக்கு மட்டும் நீதிகிடைத்தால் போதும், முஸ்லீம் பெண்களுக்கு நீதி தேவையில்லையென்று கருதுகிறார் களா என்று சகோதரி உறுப்பினர்களை வினவ விரும்புகிறேன். முஸ்லீம் பெண்களுக்கெதிராக இழைக்கப்பட்டுவரும் இந்த அநீதி யும் நீக்கப்பட்டேயாக வேண்டும். அநீதி தொடர்ந்து இழைக்கப் பட்டுக் கொண்டே வருவதை நாம் இனியும் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? இந்தச் சட்டத்தில் ஏன் அவர்களையும் அரசு சேர்க்கக் கூடாது? முஸ்லீம்களுக்காகவோ, பிற சமூகத்தவர்களுக் காகவோ, அவ்வாறு சட்டமியற்றுதல் அவர்களுடைய சமயச் செயல்பாடுகளில் குறுக்கிடுவதாகும் என்று கூறப்படுகிறது. சமுதாயச் சட்டங்கள் இயற்றுதல் அவர்களது சமயச் செயல்பாட்டில் குறுக்கிடு வதாகுமெனில், இந்தச் சட்டம் மட்டும் இந்துக்களின் சமயச் செயல்பாட்டில் குறுக்கிடுவதாகாதா? எனவே, நாம் நாட்டு மக்கள் அனைவருக்குமாகத்தான் சட்டமியற்ற வேண்டும். அவ்வாறு இயற்றப்படும் சட்டம் சமயச் செயல்பாட்டில் குறுக்கிடுகிறதெனில் அஃதும் எல்லார்க்கும் பொதுவானதாயிருக்க வேண்டும். ஆனால் இது எவ்வகையிலும் குறுக்கீடாகாது என்பதே எனது கருத்து. முஸலீம்கள், சீக்கியர்கள், கிறித்தவர்கள் உட்பட அனைவருக்கு மாகத்தான் சட்டம் இயற்றப்பட வேண்டும். இதில் பாகுபாடு ஏதும் இருக்கக்கூடாது; பாகுபாடான கருத்துக்கு இடம் இருக்கவியலாது. இந்துப் பெண்களுக்கு நீதி செய்ய நாம் முனைவது போன்றே, முஸ்லீம்

பெண்களுக்கு மட்டுமின்றிப் பிற சமயப் பெண்களுக்கும் நாம் நீதி யளிக்க முன்வர வேண்டும். எனவே, இப்போதைய வடிவில் இந்த மசோதாவை ஏற்கவியலாது.

இங்கு மற்றொரு கூறும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இச்சட்டம் இயற்றுவதில் மேலும் சில இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள நேரலாம். இருதாரத் தடைச் சட்டத்திற்கெதிராக பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அச்சட்டம் அரசிய லமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது என்பதையும் நாம் அறிவோம். செய்தித்தாள்களிலும் கூட இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

***மாண்புறு உறுப்பினர்கள் பலர் :*** *உயர் நீதிமன்றம் அல்ல; கீழ்நீதிமன்றம் ஒன்றுதான் (அத்தீர்ப்பை வழங்கியது).*

***திரு. இந்திர வித்யாவச்சஸ்பதி:*** நன்று; அது கீழ்நீதிமன்ற மாகவே இருக்கட்டும். அத்தகைய தடைகள் மீண்டும் எழலாம். இந்தச் சட்டமும் நீதிமன்றத்தில் எதிர்க்கப்படும். டாக்டர் தேஷ்முக் அவர்கள், அண்மையில் பம்பாயில் வெளியிட்ட அறிக்கையில், இந்தக் கூறு குறித்து நமது கவனத்தைச் செலுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார். இச்சட்ட மசோதாவை நாம் நிறைவேற்ற, அதை யெதிர்த்து உயர்நீதிமன்றத்திலோ உச்சநீதிமன்றத்திலோ வழக்கு தொடரப்பட்டால் நாம் புதிய இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இச்சட்டம் இந்துக்களுக்கே பொருந்துமென்று இயற்றப்பட்டால், அதனாலேயே இடர்ப்பாடுகள் தோன்றலாம். இம்மசோதா அவையில் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து தேவைக்கு மேல் மிகுதியான காலம் ஆகிவிட்ட போதிலும், இதை நிறை வேற்றுவதற்கான பணிகளில் இதுவரை முன்னேற்றம் ஏதும் காண வியலாத தேக்க நிலைக்கான காரணத்தை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். இந்து சமயச் சீர்திருத்த நிறுவனங்கள் (அமைப்புகள்) கூட இதனை முழுமையாக ஆதரிக்கவில்லை. சீர்திருத்தவாதிகளே கூட இதற்குத் திருத்தங்களைத் தாக்கல் செய்து கொண்டுள்ளனர். இதற் கெல்லாம் காரணம், சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால் தவறான செயல்பாடு ஒன்றில் நாம் ஈடுபட்டிருப்பதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. சில வரிகள் தவறாக வரையப்பட்டிருந்தால் அவற்றைச் சரிசெய்ய இரண்டு வழிகள் உண்டு. முதலாவது தவறான வரிகளுக் கிடையே புதிய வரியொன்றை வரைவது; இரண்டாவது வழி, தவறான வரிகளை அழித்து விட்டுப் புதிய நேர்க்கோடு ஒன்றை

வரைவது. ஆனால், நடப்பது என்னவெனில் ஒரு கோட்டை மற்றொரு கோட்டுடன் இணைப்பது போன்று இடைச் செருகல்கள் பல வலிந்து செய்யப்பட்டு வருகின்றன. என்னுடைய கருத்து என்ன வெனில், இம்மசோதாவை மறு ஆய்வுக்காக விலக்கிக்கொண்டு அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெறும் வகையில் மறு வரைவினைச் செய்து மீண்டும் சமர்ப்பிப்பதே சிறந்தவழி என்பதே. அரசியல் அமைப்பையும் பொருளியல் அமைப்பையும் ஒரே சீராக நாம் நிறுவியிருப்பதைப் போன்றே நாடு முழுமைக்கும் பொருந்து மாறு சீரான சமூக அமைப்பையும் நாம் நிறுவியாக வேண்டும்; அதற்கு வழிகோலும் வகையிலான மசோதா ஒன்றுதான் இங்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இந்துப் பெண்களுக்குச் சில இடர்ப்பாடுகள் உண்டெனில், அதே இடர்ப்பாடுகள் முஸ்லீம் பெண்களுக்கும் உண்டு. நாடு முழுமைக்கும் பொருந்துவதான சீரான பொருளியல் அமைப்பையும், முழு நிறையுடைமை கொண்டதொரு அரசியலமைப்புச் சட்டத் தையும் உருவாக்க முடிந்த நமக்கு சீரான சமுதாயச் சட்ட மசோதா ஒன்றை வரைதல் அரிதன்று. உண்மையே நிலையான பொருள் என்பதை நினைவு கொள்ளுங்கள்; காலமோ, இடமோ மனிதர்களோ உண்மையின் பாதையில் தடையாய் நிற்க முடியாதென்பதையும் நினைவு கொள்ளுங்கள். இந்தக் கோட்பாடு மெய்யென்றால் இது எல்லா மக்களுக்குமே மெய்யாதல் வேண்டும், அல்லவெனில் எந்தவொரு பகுதி மக்களுக்கும் கூட மெய்யாயிருக்க முடியாது. அரசின் நோக்கம் நன்றென்றே நான் கருதுகிறேன். அந்த நல்ல நோக்கம் நாட்டு மக்கள் அனைவருக்குமே நன்மை செய்யும் பாதையில் பயன்படுத்தப்படலே ஏற்புடையது. அந்த வகையில் இம்மசோதா மறுவரைவு செய்யப்பட்டு மீண்டும் தாக்கல் செய்யப் பட வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில், சமத்துவம், சுதந்திரம் ஆகிய வற்றின் அடிப்படையில் முன்னேற்றம் காண வேண்டுமென்று நாடு விரும்புவதாலும், சமத்துவத்தின் அடிப்படையில் அமையும் சட்டங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள நாடு தயாராயிருப் பதாலும், நாம் மாபெரும் சட்டச் சிக்கல்கள், இடையூறுகளை யெல்லாம் கடந்து பல சட்டங்களை இயற்றியுள்ளோம் என்பதை யும் இங்கு பணிவுடன் சுட்ட விரும்புகிறேன். எனவே, சமத்து வத்தின் அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பொருந்து மாறு ஒரு சட்ட மசோதா நிறைவேற்றப்படுமெனில் அது வரவேற்று

ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை உறுதியாக நம்புகிறேன். இதுவே எனது கருத்தோட்டமாகும். ஆனால் இந்த மசோதா அவ்வகையில் அமையவில்லை. இந்த மசோதாவை நிறைவேற்றிவிட முடியுமென்று அரசு பெரிதும் நம்புகிறது. அரசின் நம்பிக்கை வரவேற்கத் தக்கதுதான் என்றாலும், இம்மசோதாவை நிறைவேற்றுவதில் இடர்ப்பாடுகள் மிகப்பல உண்டு என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நிறைவேற்றுவதற்கு மூன்று மாத கால அமர்வு தேவைப்படலாம். அப்போதும் கூட மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையேதான் இதனை நிறைவேற்ற இயலும்; நிறைவேற்றிய பின்னரும் வேறு பல இடர்ப்பாடுகள் எதிர்ப்படும். நிறைவேற்றிய சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலும், நடைமுறைக்கு வரும்போது வழக்குகளின் வடிவத்திலும் பல இடையூறுகள் தோன்றக்கூடும். எனவே இம் மசோதாவை வரைவு செய்தவர்களை, குறிப்பாக டாக்டர் அம்பேத்கர் அவர்களை, நான் வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம், இம்மசோதாவை இந்துக்களுக்கு மட்டும் பொருந்துவதாய் விட்டுவிடாமல் இந்தியர் அனைவருக்கும் பொருந்துவதாய் மறுவரைவு செய்யவேண்டும் என்பதே. இந்த மசோதாவுக்காக வலிமையான உறுதியுடன் அரும்பாடுபட்டு உழைத்த தாங்கள், தங்களுடைய கண்ணோட்டத்தை மேலும் விரிவுபடுத்தினால் தங்களுடைய அனுபவத்திற்கும் சட்டத்தேர்ச்சிக்கும் இது அரிய செயலன்று என்றே நம்பி வேண்டுகிறேன். உண்மையின் பாதை எப்போதுமே நேர்மையானது என்பதால் இப்போது நாம் எதிர்கொள்ளும் சின்னஞ்சிறு குறைகளெல்லாம் எளிதில் களையப்பட்டு விடும்.

(சபாநாயகர் தலைமையேற்கிறார்)

இந்துப் பெண்களுக்கெல்லாம் முழுமையான நீதி கிடைக்க வேண்டுமென்று கோரும், அருமைச் சகோதரி உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், முஸ்லீம், மற்றும் பிற சமயஞ்சார் பெண்களுக்கெல்லாம் கூட இதே போன்று முழுமையான நீதி கிடைக்கவேண்டும் என்பதிலும் அக்கறை காட்டுங்கள் என்பதுதான். இச் சீர்திருத்தங்களை அவர்கள் (முஸ்லீம்கள்) ஏற்றுக்கொள்வார்களா என்று வாதாடப்படலாம். ஆனால் முஸ்லீம் நாடாகிய துருக்கியிலேயே சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இச் சீர்திருத்தங்கள் துருக்கியிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் போது நமது நாட்டிலும் அவை ஏற்றுக் கொள்ளப்படும். எனவே நமது சகோதரிகள், தமக்குள் எவ்விதப் பாகுபாட்டையும் கருதாமல்,

இச்சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்வதே சரியான பாதையாகும். அப்போதுதான் இன்றைய சூழ்நிலையில் தங்குதடையில்லாமல் மசோதாவை நிறைவேற்ற இயலும். நான் இவற்றையெல்லாம் கூறுவது இந்துச் சட்ட மசோதாவின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போடுவதற்காக அல்ல. நான் சீர்திருத்தங்களின் தீவிர ஆதரவாளன் என்ற முறையிலேயே, இம் மசோதா நிறைவேற்றப் படவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் நாடு முழுமைக்கும் ஏற்புடையதாக இம்மசோதா மறுவரைவு செய்யப்படவேண்டும் என்று இறைஞ்சி வேண்டுகிறேன். அத்தகைய மாற்றத்தோடுதான் மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்; இல்லையேல் அது நிறை வேற்றப்பட வேண்டியதில்லை.

**திரு. சிவ சரண்லால்** (உத்திரப் பிரதேசம்) : எனது பெயரில் நான் கொடுத்துள்ள திருத்தத்தைத் தாக்கல் செய்ய அனுமதி வேண்டு கிறேன். எனது பெயர் அழைக்கப்பட்ட போது நான் அவையில் இல்லை.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் இப்போது திருத்தத்தை தாக்கல் செய்யலாம்.

**திரு. சிவ சரண் லால்:** ''கிளைவிதி 2, துணைக் கிளை விதி (2)இன் நிபந்தனைப் பகுதி நீக்கப்படலாம்.'' எனத் தாக்கல் செய் கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** ''கிளை விதி 2, துணைக் கிளை விதி (2)இன் நிபந்தனைப் பகுதி நீக்கப்படலாம்.''

எனும் திருத்தம் தாக்கலாகியுள்ளது.

[1]**திரு. ஜே.ஆர். கபூர் :** ஐயா, தங்கள் அனுமதியுடன், நான் பேச விரும்பும் திருத்தத் தீர்மானத்தை ஒரு முறை படித்து விடு கிறேன். மாண்புறு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட அது உதவும். திருத்தத்தின் வாசகமாவது

கிளை விதி 2 இன்,.............

**திரு. ஜுன்ஜுன் வாலா:** எந்தத் திருத்தத்தைப் பற்றி மதிப்பிற் குரிய உறுப்பினர் குறிப்பிடுகிறார்.

1. நா. வி., தொகுதி VIII, பகுதி 2, பிப்ரவரி 1951, பக். 2392-98.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் இன்று அறிவிப்பு கொடுத்திருந்த திருத்தத் தீர்மானத்தின் மீதுதான் பேசுகிறார். அது பட்டியலில் அச்சிடப்படவில்லை.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** அவற்றின் படிகள் எங்களுக்குக் கிடைக்கவில்லையே.

**மாண்புமிகு சபாநாயகர்:** அது ஒருமுறை அவையில் படிக்கப் பட்டது. அவர் அதை மீண்டும் ஒருமுறை படிக்கவிருக்கிறார்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** திருத்தத் தீர்மானத்தின் வாசகமாவது:

''கிளை விதி 2க்கு மாற்று வாசகமாவது:

> ''2. *சட்டத்தின் செல்வரம்பு :-* இந்தியா எனப்படும் பாரத நாட்டின் குடிமக்களில், பெரியவர் எனத்தகும் வயது வரம்பை எட்டிய பின்னர், இச்சட்டத்தொகுப்பு அல்லது தொகுப்பின் பகுதிகள் தம்மைக் கட்டுப்படுத்தும் என்று எழுத்து மூலம் அறிக்கை தந்து, இதற்கென மத்திய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படிப் பதிவு செய்து கொண்டோர் அனைவருக்கும் இச்சட்டத் தொகுப்பு அல்லது உரிய பகுதிகள் பொருந்தும்.''

இரண்டாவதாக மாற்றுத் தீர்மானம் ஒன்றையும் தந்துள்ளேன். இந்தத் தீர்மானம் ஏற்புடையதாயில்லையெனில், மாற்றுத் தீர்மானமாக ஏற்றுக் கொள்ளுமாறு அவையை வேண்டிப் பின்வரும் வாசகத்தினையும் அவை முன் வைக்கிறேன்.

திரு. பனார்சி பிரசாத் ஜுன்ஜுன்வாலா அவர்கள் முன்மொழிந்து, துணைப்பட்டியல் 1இல், பதினெட்டாவதாய் இடம் பெற்றுள்ள, கிளைவிதி 2இன் நிபந்தனைப் பகுதியில் ''அத்தகைய ஒரு நபர்... என்று தொடங்கி இறுதிவரையிலான (...... அன்றி என முடியும்) பகுதிக்கு மாற்றாக,

> ''அத்தகைய ஒரு நபர், வயது வந்தோர் தகுதிக்கான வயதை எட்டியதும், இச்சட்டம் தம்மைக் கட்டுப்படுத்தும் என்று எழுத்து மூலம் அறிக்கை தந்து, அதை இதற்கென மத்திய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படிப் பதிவு செய்திருந்தாலன்றி'' எனும் வாசகம் இடம் பெறலாம். என்னுடைய திருத்தத்தைச் சேர்த்துக் கொண்ட பின்னர் திரு. ஜுன்ஜுன்வாலா அவர்களின் திருத்தத் தீர்மானம் பின்வருமாறு அமையும்:

''2. சட்டத் தொகுப்பின் செல்வரம்பு:- இச்சட்டத் தொகுப்போ, அதன் பகுதிகளோ இந்தியா எனப்படும் பாரத நாட்டின் குடிகளில்........

அறிக்கை தந்து ............என்ற பகுதிகள் இடம்பெறும். இவற்றை மீண்டும் முழுமையாக மீட்டுரைத்தல் தேவையில்லை.

இந்த அவை என்னை தவறாகப் புரிந்து கொள்ளாது என்ற நம்பிக்கை (முந்தைய இரு பேச்சாளர்களைப் போன்றே)யுடனும், முழுமையான பொறுப்புணர்வுடனுமே இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். ஏனெனில் எனது தீர்மானம், திரு சர்வாத்தே, திரு. இந்திர வித்யாவாசஸ்பதி ஆகிய இருவர் தந்துள்ள தீர் மானங்களோடு இசைந்து அவ்விரண்டையும் விட மேம்பட்ட அமைப்பு கொண்டது. நான் இத்திருத்தத்தை முன் மொழிவதன் முதலாவது நோக்கம், இந்துச் சட்ட மசோதா இந்த அவையால் நிறைவேற்றப்படுதலை எளிதாக்குதல்தான் எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது இரண்டாவது நோக்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளையும், பல்வேறு சமயங்களையும் சார்ந்த மக்கள் அனைவரும் எளிதில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக வும் இச்சட்டத்தொகுப்பு அமைய வேண்டும் என்பதே. எனது மூன்றாவது நோக்கம், சமயச் சார்பற்ற இந்தப் பரந்த நாட்டில், அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டு சமயச் சார்பற்ற நாட்டின் பின்னணியிலான அரசியலமைப்புச் சட்டம் ஒன்றையும் உருவாக்கி யுள்ள நாம், மதவாத வாடை வீசும் சட்டமொன்றை இயற்றியது என்ற அவப்பெயர் நாடாளுமன்றத்திற்கு வராமல் காக்க வேண்டு மென்னும் நல் அவாவே. சமுதாயம் முழுமைக்காகவும் அன்றி அதன் ஒரு குறிப்பிட்ட சமயஞ்சார் மக்களுக்காக மட்டும் சட்ட மியற்றினால் இந்த அவப் பெயரைத் தவிர்க்க முடியாது. வேறு வகையாகக் கூறுவதெனில், ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்த மக்களின் சமய மரபுகள், சமய உரிமைகள் குறித்துச் சட்டமியற்ற முயலும் அதே சமயத்தில் வேறுசில சமயங்களைச் சார்ந்த மக்களின் சமய மரபுகள், சமய உரிமைகளில் குறுக்கிட்டுச் சட்டமியற்ற அஞ்சு கிறோம் எனலாம். எனவே, எனது திருத்தம் ஏற்றுக் கொள்ளப் படுவதால் பல நன்மைகள் விளையுமேயன்றித் தீங்கேதும் விளை யாதென்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இன்று காலை அருமை நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பியது குறித்து நான் மகிழ்ச்சியே அடைகிறேன். அவர் எது குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப் பினார் என்பதை விட ஒழுங்குப் பிரச்சினையின் நோக்கமும்

எக்காரணங்களால் அவர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார் என்பதுமே எனக்கு மகிழ்ச்சி தருவன. பாகுபட்ட தன்மை கொண்ட சட்டமியற்ற அரசியலமைப்புச் சட்டம் நமக்கு அனுமதியளிக்க வில்லை என்பதே அவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை. அரசிய லமைப்புச் சட்ட விதிகள் 15, 25 ஆகியவை பற்றி அவர் குறிப் பிட்டுப் பேசினார். அவர் உள்ளத்தில் நிலவிய கருத்தோட்டத்தில், இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவினால், ஒரு பகுதி மக்கள் நலன்களும் பயனும் பெறுவார்களென்றால், அதே நலன்களும் பயன்களும் நாட்டின் ஏனைய பகுதி மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டாமா என்ற ஆர்வமே மேலோங்கியிருந்ததாக எனது கருத்துக்குத் தோன்றுகிறது. அவரது கருத்துப் போக்கு, இன்றைய காலப்போக்கினோடு நன்கு பொருந்தி வருகிறது என நான் உறுதி யுடன் கூறுவேன். அவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையைக் கருதும்போது, இந்துக்கள், பார்சிகள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் பொதுவானதாய்ச் சட்ட மியற்றுவதையே அவர் மகிழ்ந்து வரவேற்பார் என உறுதியாய்க் கூறுவேன். மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் 44-வது விதி, பொதுவான குடிமைச் சட்டம் இயற்ற அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கூறுவதையும் நண்பர் சர்வாத்தே அவர்கள் சுட்டிக் காட்டினார். அவ்விதி அடிப்படை உரிமைகள் குறித்த (மூன்றாம்) பகுதியில் இடம் பெறாமல், அரசியல் நெறி வழிகாட்டுக் கோட்பாடுகள் அடங்கிய (நான்காம்) பகுதியில் இடம் பெற்றிருப்பது மெய்தான் என்றாலும், நாடு முழுமைக்கும் சீரான குடிமைச் சட்டம் இயற்ற முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டம் நம்மைத் தெளிவாகப் பணிக்கிறது என்பது வெளிப்படை. இப்போதுதான் நாம் முதன் முதலாய்க் குடிமைச் சட்டத்தொகுப்பு ஒன்றினை உருவாக்க முயற்சி மேற்கொண்டிருக்கும் கால கட்டத் தில், அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியமான விதியிதனைப் புறக்கணித்துச் செயல்படுதல் விரும்பத்தக்கதாகுமோ? அரசிய லமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பான வழிகளில் நமது முயற்சி களின் தொடக்கமே அமைய வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன். நம்மில் பெரும்பாலோர் அரசியலமைப்பு உருவாக்க அவையில் உறுப்பினராயிருந்துள்ளோம்; இவ்வகையில் இன்று இடம்பெறாத செம்மைமிகு உறுப்பினர்கள் பலரும் அங்கே நம்முடன் பணியாற்றினார்கள். முஸ்லீம், பார்சி, கிறித்தவ சமயங் களைச் சார்ந்த உறுப்பினர்களும் பலர் அவ்வவையில் இடம் பெற்றி ருந்தனர். சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு சமயத்தையும் சார்ந்த உறுப்பினர்கள் ஆங்கே இடம் பெற்றிருந்தனர். எனது நினைவைப்

பொறுத்த வரை, உறுப்பினர்கள் யாவருமே அரசியலமைப்புச் சட்ட விதிகள் 15, 25, 44 மூன்றையும் ஒரு மனதாக ஆதரித்தோம். நாட்டில் நிலவும் பல்வேறு சமய நம்பிக்கைகள் யாவையும் சார்ந்த உறுப்பினர்கள் யாவரும், இந்த நாட்டில் எவ்வகையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்யும் கட்டத்தில், நிதானமாகவும், ஆழமாகவும் அமைதியாகவும் சிந்தித்து, அரசியலமைப்புச் சட்ட விதிகள் 15, 25, 44 ஆகியவற்றோடு இசைந்து போகக் கூடிய சீரான சட்டங்களே இயற்றப்பட வேண்டுமென்று ஒருமனதாய்த் தீர்மானித்து முடிவு செய்துள்ளோம். அதன் பின்னர், அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பாக நம்மைச் செயல்படக் கட்டாயப்படுத்தும் அளவுக்கு என்னதான் நிகழ்ந்து விட்டது? அரசியலமைப்பு விதிகளுக்கு மாறாகச் செயல்பட நம்மைத் தூண்டும் அளவுக்கு உண்மையில் ஏதும் நடந்துவிடவில்லை. மாறாக, இந்து சமயத்தைச் சார்ந்தவர்களையன்றி, ஏனைய சமயத்தவரிடையேகூட சீரான உரிமையியல் சட்டம் தேவையெனும் ஆர்வம் மேலோங்கிநிற்கிறது. திரு. நசிருத்தீன் அகமது அவர்கள் முஸ்லீம் சமூகத்தின் சார்பாளர்; நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்காக மட்டும் சட்டமியற்ற நமக்கு அதிகாரமில்லையென்பதை அவருமே கூடக் கூறுகிறார்; இயற்றப்படும் சட்டம் அனைத்து சமயங்களையும் சார்ந்த மக்கள் அனைவருக்கும் கட்டுப்படுத்தக் கூடிய பொதுச் சட்டமாயிருக்க வேண்டும் என்றுதான் கூறுகிறார். அவ்வாறிருக்க, பல்வேறு சமயங்களையும் சார்ந்த மக்கள் அனைவருக்கும் பொதுவான சட்டம் இயற்றுவதற்கு நாம் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? இங்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட திருத்தங்களிலிருந்து, சீக்கியர்கள் இச்சட்டத்திற்கு அப்பால் விலகியிருக்க விரும்புகிறார்களென்று அறிகிறேன். மாண்புறு நண்பர் சர்தார் ஹுக்கம் சிங் அவர்களின் திருத்தங்களில் ஒன்று இதனைத்தான் புலப்படுத்துகிறது. மேலும் சில மாண்புறு நண்பர்களின் திருத்தங்களிலிருந்து இச்சட்டத்திலிருந்து சில மாநிலங்களுக்கும், சில சமூகங்களுக்கும் விலக்கு அளிக்கும் வகையில் கிளைவிதி 2 திருத்தப்பட வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆர்வத்தை அறிகிறோம். மாண்புறு நண்பர் பண்டித தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் சமுதாய ஏற்றத்திற்கான சட்டங்கள் இயற்ற வேண்டுமென்பதில் ஆர்வம் மிகக் கொண்டவர்; பெரிய சமூக சீர்திருத்தவாதி. அவருங்கூட இச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளவோ மறுக்கவோ மாநிலங்களுக்கு உரிமையளிக்கும் வகையில் திருத்தம் கொடுத்துள்ளார்.

**திரு. தியாகி** (அது ஏற்றுக்கொள்ளப்பட்டால்): நாட்டின் பரப்பு முழுவதிலும் சீர்மையிருக்க வியலாதென்பது உறுதி.

**திரு. ஜே.ஆர். கபூர்:** உண்மைதான். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்களிடையேயும் பயன்படுத்தத்தக்கவாறு அதை மாற்றவேண்டுமெனில் எனது திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படத்தான் வேண்டும். நாட்டின் எந்தவொரு பகுதியில் மட்டுமோ, எந்தவொரு தனிச் சமுதாயத்திற்கு மட்டுமோ தான் என்று சட்டத்தின் செயல் வரம்பு கட்டுப்படுத்தப்படுவதை அது தவிர்க்கும். மாறாக, சட்டத்தின் செல்வரம்புக்குள் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள் உட்பட அனைத்துச் சமய மக்களையும் கொண்டு வர எனது திருத்தம் உதவும்.

இந்த மசோதாவின் மீதான பொதுவிவாதத்தின் போது மாண்புறு நண்பர்கள் டாக்டர் தேக்சந்தும், பண்டித தாக்கூர் தாஸ் பார்கவாவும் சில நல்ல கருத்துக்களைக் கூறினார்கள். இந்துச் சமுதாயத்தில் திருமணச் சட்டமும், மண விலக்குச் சட்டமும் மிக எளிமையாயிருக்கின்றன; இம்மசோதா சட்டமாகி நடைமுறைக்கு வந்தால் இந்துச் சமூகத்தினர்தான் அதனால் மிகுந்த இடர்ப்பாடுகளுக்காளாவார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டனர். பஞ்சாப் மாநிலத்தின் சில பகுதிகளில் திருமணம், மணவிலக்கு ஆகியவற்றை மிக எளிதில் செய்துகொள்ளும் மரபுகள் நிலவி வருகின்றன. அவர்களையெல்லாம் நாம் ஏன் இந்தச் சட்டத்தின் கீழ்க் கொணர்ந்து இடர்ப்படுத்த வேண்டும்?

**டாக்டர் தேஷ்முக்** (மத்தியப் பிரதேசம்): எளிதில் திருமணம், எளிதில் மணவிலக்கு!

**திரு. ஜே.ஆர். கபூர்:** மணவிலக்கைப் பொறுத்தமட்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு சமுதாய மக்களிடையே எளிமையான சட்டங்களே நிலவிவருகின்றன. இச்சட்டங்களை நாம் ஏன் கடுமையானவையாய் ஆக்கவேண்டும்? இச்சட்டங்கள் ஏன் கடுமையானவையாய் ஆக்கப்பட வேண்டுமென ஒரு சாரார் வினவ, நம்பிக்கையில்லாத மக்களிடையே இச்சட்டங்களை ஏன் திணிக்க வேண்டும் என்று கேட்போரும் பலருண்டு. எனது வேண்டுகோள் என்னவெனில், இந்தச் சட்ட மசோதா எந்த வடிவத்தில் நிறைவேற்றப்பட்டாலும் இவற்றை இந்துக்களில் சில பிரிவினர் மீதோ, சீக்கியர்கள் மீதோ, சமணர்கள் மீதோ வலிந்து திணிக்கக்

கூடாது. மாறாக, இச்சட்டத்தின் கீழ் வருவதா வேண்டாமா என்பதை ஒவ்வொருவரும் அவரவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமையிருக்க வேண்டும். இரண்டாவதாக, இச்சட்டத்தின் சில பகுதிகள், குறிப்பாக ஒருதார மணம், மணவிலக்கு ஆகியன குறித்த பகுதிகளை மேலும் தாராளமான தன்மையில் (ஏற்கனவே அவை மிக மிக நல்ல முறையில் உருவாக்கப்பட்டுள்ளன) மாற்றியமைப்போமாயின், இச்சட்டத்தின் நலன்களை முஸ்லீம் சமுதாய மக்களும் துய்க்குமாறு விரிவாக்கம் செய்யத் தடையேதுமிராது.

மாண்புமிகு நண்பர்கள் சர்வாத்தே, இந்திரா ஆகியோரும் திருத்தங்களைத் தாக்கல் செய்துள்ளனர். குறிப்பாக திரு. இந்திரா அவர்களது திருத்தம் இச்சட்டம் முழுமையாக முஸ்லீம்களின் மீதும் வலிந்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று கோருகிறது. ஆனால் எனது கருத்து இது முஸ்லீம்கள் மீது வலிந்து திணிக்கப் படக்கூடாது என்பது மட்டுமல்ல; இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட வேண்டுமென்று இந்து சமுதாயத்தினரையும் கூடக் கட்டாயப்படுத்தக் கூடாதென்பதே. இந்த நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும், அவர் இந்துவா, முஸ்லீமா, பார்சியா, கிறித்தவரா என்பன போன்ற பாகுபாடுகள் ஏதுமின்றி, இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுவதா வேண்டாமா என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்பட வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர் :** பெருந்தாராளவாதியாகி விட்டார்!

**திரு. ஜே.ஆர். கபூர்:** அது மட்டுமல்ல, சட்டத்தின் பல்வேறு பகுதிகளை மட்டும் பொறுக்கித் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை வேண்டும். இதை நான் மிகுந்த கவனத்தோடுதான் கூறுகிறேன். ஏனெனில், இம் மசோதாவில் காணப்படும் பல்வேறு கிளை விதிகள் சமூகத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே ஏற்கத்தக்கனவாய், ஏனையோரால் ஏற்கவியலாதனவாய்க் காணப்படுகின்றன.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** ஒவ்வொரு தனி நபருக்கும், கிளை விதி வாரியாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை வேண்டுமென்று அருமை நண்பர் கோருகின்றார்?

**திரு. ஜே.ஆர். கபூர் :** கிளை விதி வாரியாக அல்ல; பல்வேறு முக்கியமான பகுதிகளைப் பொருத்தமட்டில் அவ்வுரிமை தேவைதான். நான் எனது கருத்தைத் தெரிவிக்குங்கால், எனது திருத்தங்களை உள்ளடக்கியதாய் மசோதாவை மாற்றியமைப்பதற்கு, டாக்டர்

அம்பேத்கர், பண்டிட் பர்கவா போன்ற சட்ட மேதைகளின் கூர்ந்த சட்ட ஞானம் தேவைப்படும் என்பதை உணர்ந்தே பேசினேன். இப்பணி டாக்டர் அம்பேத்கர், பண்டிட் பர்கவா போன்ற சட்ட மேதைகளின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதல்லவென்றே உறுதியாக நம்புகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் ஒருதார மணம், மண விலக்கு ஆகியன குறித்த பகுதிகள் மிகவும் ஏற்கத்தக்கனவா யுள்ளன; ஆனால், நான் ஏற்றுக்கொள்ள விரும்பாத கிளை விதிகள் பலவுள்ளன. எனவே, அறிக்கை தந்து ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு தரப்பட்டால், திருணம், மணவிலக்கு பற்றிய பகுதிகளை ஏற்றுக் கொள்ள இசைந்தும், ஏனைய பகுதிகளை ஏற்க மறுத்துமே அறிக்கை தருவேன். பின்வரும் எனது யோசனையை ஆழ்ந்த கவனம் செலுத்தி ஏற்றுக்கொள்ளுமாறு இந்த அவையை இறைஞ்சி வேண்டு கிறேன்: முதலாவதாக, நாடு முழுமைக்கும் பொதுவாக நடைமுறைப் படுத்தத்தக்கதாய் இச்சட்டம் அமைய வேண்டும்; இரண்டாவதாக இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுவதா இல்லையா என்பதை அறிக்கை தந்து தேர்ந்தெடுக்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக் கும் தரப்பட வேண்டும்; மூன்றாவதாக, சட்டத்தின் எந்தெந்தப் பகுதியின் ஆளுகைக்குட்பட இசைகிறார் என்பதையும் அறிக்கை யில் குறிப்பிட ஒவ்வொருவருக்கும் உரிமை வேண்டும்.

**டாக்டர் தேஷ்முக்:** எடுத்துக் காட்டாக மணவிலக்கு குறித்து (கிளை விதியை ஏற்பதில்) கணவன், மனைவி இருவரிடையே கருத்து வேற்றுமை தோன்றினால், யார் முடிவு செய்வது?

**பணி, உற்பத்தி, வழங்கல் துறை அமைச்சர்** (திரு. காட்கில்): குழந்தை முடிவு செய்யும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினர் அவரது உரையைத் தொடரட்டும்!

**திரு. ஜே.ஆர். கபூர் :** மணவிலக்கு குறித்து, கணவன் மனைவி இருவரிடையே கருத்து வேற்றுமையுள்ளபோது, மனைவியின் பக்கத்தை ஆதரிப்பதன் மூலம் இங்குள்ள பெண் உறுப்பினர்களின் ஆதரவு எனக்குக் கிடைக்குமெனில், நான் மனைவி தேர்ந்தெடுப்பதே பொருந்தும் என ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனது பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டால், மசோதாவின் பல்வேறு பகுதிகளை மாற்றி மறுவரைவு செய்ய வேண்டியிருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். முதலில் நாம் கொள்கையைப் பற்றிய முடிவு

எடுக்கவேண்டும். அதாவது, முதலாவதாக நாடு முழுமைக்கு மாகவே நாம் சட்டமியற்றப் போகிறோம் என்பதையும், இரண்டாவதாக, இச்சட்டத்தின் ஆளுகை வரம்புக்குள் வருவதா இல்லையா என்பதை ஒவ்வொரு குடிமகனும் முடிவு செய்து கொள்ள உரிமை தருவோம் என்பதையும், மூன்றாவதாக சட்டத்தின் பல்வேறு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து ஏற்றுக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை தரலாம் என்பதையும் கொள்கையளவில் நாம் ஏற்றுக் கொண்டால், அதற்கேற்பத் தேவையான வகையில் திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். இது எத்துணை கடினமான பணி என்பதை நான் நன்குணர்வேன்; ஆனால் இம்மசோதாவை இப்போதைய வடிவில் இந்த அவையில் நிறைவேற்றுவதை விடவோ, அதற்கு இந்நாட்டு மக்களனைவரின் ஆதரவைப் பெறுவதைவிடவோ, மேலும் இந்து, சீக்கிய, சமண, புத்த சமயத்தவர்கள் மீது இச் சட்டத்தைக் கட்டாயமாகத் திணிப்பதைவிடவோ, அஃதொன்றும் கடினமான செயல் அன்று.

எனவே எனது பரிந்துரை குறித்துக் கூர்ந்த கவனம் செலுத்து மாறு கேட்டுக் கொள்கிறேன். எனது கருத்தை நாமனைவரும் நிதானமாகவும், அமைதியாகவும், உணர்ச்சி வசப்படாமலும், ஆதரவாகவோ எதிராகவோ ஒருதலைசார் உணர்வு கொள்ளாமலும் தீர ஆய்ந்து ஒரு முடிவுக்கு வர எண்ணினால் விரைந்து தீர்வு கிட்டும். அடுத்த ஐந்தாறு நாட்களில் மசோதாவை நிறைவேற்றவும் முடியும். அத்தகைய சட்டம் அனைவருக்கும் நிறைவளிக்கும்; சீரான சட்டம் வேண்டுமெனக் கோருவோருக்கும் அது நிறைவளிக்கும்; தங்கள் மீது வலிந்து திணிக்கப்படாது என்பதால் வைதிக இந்துக் களுக்கும் அது நிறைவு தரும். இச்சட்டத்தின் ஆளுகைக்குள் வருவதற்கு அறிக்கை தந்து தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை தரப் படுவதால் சீர்திருத்தச் சட்டங்கள் கோரும் சமூகச் சீர்திருத்தவாதி களும் இதை ஏற்றுக்கொள்வர். எனவே, இச்சட்டம் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்து, எவருக்கும் வருத்தம் தராத வகையில் இருக்கும். எனவே, எனது பணிந்துரைகளின் அடிப்படை யில், எனது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவையை வேண்டு கிறேன்.

எனது மாற்றுத் தீர்மானமும் இதே கருத்தோட்டத்தில்தான் அமைந்துள்ளது; ஆனால் அது இச்சட்டம் இந்து சமயத்தவர் களுக்கு மட்டுமே என வரம்புறுத்துகிறது. எனது முதலாவது திருத் தத்தின்படி, இச்சட்டமானது, விரும்பித் தேர்ந்து ஏற்றுக் கொள்பவர்

களுக்கு மட்டுமே பொருந்துவதாய், நாடு முழுமையின் மீதும் செல்வரம்பு கொண்டதாயிருக்கும். எனது முதலாவது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனில், ஏற்கெனவேயுள்ள வரைவினுக்கேற்ப இச்சட்டம் இந்து, சமண, பௌத்த, சீக்கிய மதத்தினர் மீது மட்டும், அவர்களிலும் தேர்ந்து விரும்பியேற்றுக் கொள்பவர்கள் மீது மட்டுமே செல்வரம்பு இருக்குமென்ற நிபந்தனையுடன், பொருந்தும் என்று கூறும் எனது இரண்டாவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

[1]**டாக்டர் தேஷ்முக் :** இங்கு கொடுக்கப்பட்டுள்ள (பல்வேறு) திருத்தங்களையும் குறித்து இரண்டு கருத்துக்களை மட்டும் கூற முனைகிறேன். பல்வேறு திருத்தங்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பினும் நான் முதலில் திரு. சர்வாத்தே அவர்களின் திருத்தத்தைப் பற்றியும், அடுத்து டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தத்தைப் பற்றியும் மட்டுமே பேச விழைகிறேன். அவற்றுள்ளும், நமது அரசியலமைப்புச் சட்டம் காட்டும் பாதையில் முன்னேற்றத்தை நோக்கியதாய் அமைந்திருப்பதால், திரு. சர்வாத்தே அவர்களுடைய திருத்தத்தை ஆதரிக்கவே என் உள்ளம் விரும்புகிறது; ஏனெனில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் நமது அரசியலமைச் சட்டத்தின் குறிக்கோள்களை நோக்கிய முன்னேற்றப் பாதைக்கு அது இட்டுச் செல்லும். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் குறிக்கோள்கள் குறித்து அக்கறை ஏதும் இல்லாத உறுப்பினர்கள் பலர் இந்த அவையில் உள்ளதாக எனக்குத் தோன்றுவதால், அவரது திருத்தம் தேவையென்று கருதுகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் கிளைவிதி 44 குறித்துப் பேச சில நிமிடங்கள் அனுமதிக்குமாறு வேண்டுகிறேன். அதன் வாசகமாவது:

> ''நாட்டின் குடிமக்களுக்காக, நாட்டின் பரப்பு முழுமைக்குமாக சீரான உரிமையியல் சட்டத் தொகுப்பை உருவாக்குதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்'' என்பதாகும்.

இக்கிளை விதி அரசுக் கொள்கைளுக்கு நெறி காட்டும் கோட்பாடுகளைக் கொண்ட (நான்காம்) பகுதியில் இப்போது இடம் பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் அரசு எடுக்கும் முடிவுகளை உச்சநீதிமன்றம் சட்டத்திற்குப் புறம்பானதென்று தள்ளுபடி செய்துவிடுமென்று கருதப்படவில்லையெனினும், இதைக் குறித்துத்

---

★ நா.வி., தொகுதி XV, பாகம் VII பகுதி II பிப்ரவரி 5, 1951, பக். 2392-2404.

தீர்ப்பு சொல்லும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு உண்டா என ஐயமுறுகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அரசுக் கொள்கைக்கான வழிகாட்டு நெறிகளுக்குச் சிறிதளவேணும் மதிப் பளிப்பதாயிருந்தாலோ, அல்லது அதன் மீது சீரிய கவனம் செலுத்து வதாயிருந்தாலோ, இந்தச் சட்ட மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் நாடுமுழுமைக்கும் சீரான குடிமைச் சட்டத்தை உரு வாக்கிட முடியாது என்பதை உணர்ந்திடுவோம். இதை நிறைவேற்று வதன் மூலம் அரசியலமைப்புச் சட்டத்துடன் சற்றும் இசையாதது மட்டுமல்ல, அதன் கிளை விதி 41க்கு முரணானதொரு செயல் பாட்டையே மேற்கொள்வோம். இதன் வாயிலாய் அனைவருக்கும் பொதுவான குடிமைச் சட்டம் இயற்றும் முயற்சிக்கு மாறாக, வெவ்வேறு பிரிவு மக்களுக்கு வெவ்வேறு சட்டங்களை நிறை வேற்றும் முயற்சியிலேயே இறங்கியுள்ளோம். எனவே, நாம் மேலும் தொடருவதற்கு முன்பாக, அதாவது மேலும் காலத்தை வீணடிப்பதற்கு முன்பாக, இது குறித்து ஆழ்ந்த கருத்துச் செலுத்து வோம். நாம் காலத்தை வீணடிக்கிறோம் என்று குறிப்பிடக் காரணம், அடுத்த மூன்று நாட்களில் நாம் கிளைவிதி 2ஐத் தாண்டி முன்னேறப் போவதில்லை என்று எனக்கு உறுதியாய்த் தோன்றுவது தான். அதன் பிறகு இந்துச் சட்டங்களுக்கு வர எவ்வளவு காலம் எடுத்துக் கொள்வோம் என்று என்னால் கணிக்கமுடியவில்லை. இச்சட்டத்தை நிறைவேற்ற நாம் உண்மையாகவே விரும்பினால், இதற்கெனத் தனியான கூட்டத் தொடர் ஒன்று தேவை என்று ஏற்கனவே இவ்வவையில் ஆலோசனையொன்று கூறப்பட்டுள்ளது.

மூன்று நாள் அமர்வுக்குப் பின்னரும் முன்னேற்றம் ஏதுமின்றித் தேக்கநிலைதான் எஞ்சும் எனில், நாம் வீணடிப்பது பணத்தை மட்டுமல்ல; இந்த அவையின் நேரம், ஆற்றல் ஆகியவற்றையும் தான். இதனால் நாம் எய்தப் போவதுதான் என்ன? ஒருசில உறுப் பினர்களின் விந்தையான விருப்பு வெறுப்புகள், முரட்டுப் பிடிவாதங் கள் ஆகியவற்றை விரித்துரைக்கும் திருப்தியை அவர்களுக்களிக்கப் போவதன்றி, வேறெந்த உறுபயனும் விளையப் போவதில்லை. இந்தச் சட்டம் நிறைவேறக் கூடாது என்று கூச்சல் போடவும் அவை உறுப்பினர்களை வழிமறிக்கவும் இரண்டாயிரம் பேர் கூடு கிறார்ளென்றால், நாம் இயற்றமுயலும் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்துடன் இசையாதது மட்டுமல்ல, அதற்கு எதிரானதும் கூட என வழக்குத் தொடரவும், தடையாணைகள் வாங்கவும் இரண் டொருவர் இல்லாமற் போக மாட்டார்கள்.

**திருமதி துர்க்கா பாய்:** ஏனையோர்களும் கூட நீதிமன்றங்களை அணுகலாம்.

**டாக்டர் தேஷ்முக் :** இரு சாராருமே நீதிமன்றங்களுக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டும். முதலில் வழக்குத் தொடர்ந்தவர்களின் செலவில் ஏனையோருக்கு நீதிமன்ற அழைப்புகள் வரும்.

**திருமதி துர்க்காபாய் :** பாகுபாடுகள் கொண்ட பகுதிகளை எதிர்த்து மற்றவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வார்கள்.

**டாக்டர் தேஷ்முக்:** ஆம், எல்லாவிடங்களிலும் காணப்படும் ஒருதலைப் பாகுபாடுகளே, இதற்கான எதிர்ப்புகளுக்கு முக்கிய காரணம். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் ஒருசாரார்க்குச் சாதகமாகவும், பிறசாரார்க்கு எதிராகவும் பாகுபாடுகள் பல காணப்படுகின்றன.

திருத்தங்களைப் பற்றி இரண்டாவதாக நான் கூற விரும்புவது, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன் என்பதுதான். பட்டியலில் 15 ஆவதாக அச்சிடப்பட்டிருக்கும் அவரது திருத்தத்தில், ''இந்துக்கள், அதாவது, இந்து சமயத்தைக் கடைபிடிப்பவர்கள் அனைவரும்'' என்ற தொடருக்கு பதிலாக, ''சமயத்தினால் இந்துக்களாவோர்'' என்ற தொடரைப் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. பற்பல திருத்தங்களுக்கும் மறுவரைவுகளுக்கும் பின்னர் மசோதாவின் எந்த வடிவம்தான் இப்போது கருத்தளவில் உள்ளது என்பது குறித்து அறிந்து கொள்வதே மிகக் கடினமாக இருக்கிறது. நமது இப்போதைய நிலைப்பாடுதான் என்ன? என்பதை அறிந்து கொள்ளுதல் எளிதன்று. மசோதா பொறுக்குக் குழுவிலிருந்து வந்தபோது இருந்த வடிவத்தில் நான் எவ்விதக் குறை யையும் காணவில்லை. அதிலிருந்த சொற்களாவன:

> ''2 (a) இச்சட்டத் தொகுப்பு இந்துக்கள் அனைவருக்கும், அதாவது இந்து மதத்தை அதன் வடிவங்கள் ஏதாவதொன்றிலோ, அதன் வளர்ச்சிப் படிநிலைகள் ஏதாவதொன்றிலோ, கடைப்பிடிக்கும் நபர்கள் அனைவருக்கும் பொருந்தும்.''

இவற்றுக்கு பதிலாக டாக்டர் அம்பேத்கர் முன்மொழியும் ''சமயத்தால் இந்துக்களாவோர்'' எனும் தொடர் வேறுபட்ட பொருள் எதையும் தருவதாக எனக்குத் தோன்றவில்லை. ''எல்லா இந்துக்களும்'' என்றால் ''சமயத்தால் இந்துக்களாவோர்''

அனைவரையும் குறிப்பிடுவதாகத்தானே பொருள். மூல வரைவில் 'இந்துக்கள்' என்பதற்கு இந்து சமயத்தைக் கடைப்பிடிப்போர் அனைவரும் என்று விளக்கமும் தரப்பட்டுள்ளது. அதாவது தம்மை இந்து எனக் கூறிக்கொள்வோர் மீது இச்சட்டத்தின் அதிகார வரம்பு செல்லும். இத்தொடரைத்தான் இப்போது மாற்ற முனைகிறோம். புதிய தொடருக்கு மாற்றிக்கொள்வதற்கான காரணங்கள் ஏதும் இதுவரை கூறப்படவில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தமது திறமையால் அவரது திருத்தத்தை இந்த அவை ஏற்குமாறு செய்து, அதனால் பழைய விளக்கத் தொடர் நீக்கப்படுமாயின், அப்போது தான் உண்மையான இடர்ப்பாடு எழும் என்று எனக்குத் தோன்று கிறது. 'கடைப் பிடிக்கும்' என்ற அடைமொழியை நீக்கிவிட்டால் 'இந்து' எனப்படுவோர் யார்? இந்துக்கள் அல்லாதோர் யார்? என்று வரையறுத்தல் கடினமாகிவிடும். புதிதாகப் பரிந்துரைக்கப் படும் 'சமயத்தால் இந்துக்களாவோர்' என்பதைக் கொண்டு ஒருவர் சமயத்தால் இந்துவா அல்லரா என்பதைப் பகுத்து உணர்தல் எங்ஙனம்? நாட்டு மக்கள் ஒவ்வொருவருமே அறிக்கை தர வேண்டு மென்பதா அவரது முன்மொழிவு? இதற்காக எத்தகைய நடைமுறை யைக் கையாளுதல் உகந்தது என்றோ அதன் பிறகும் எப்போது ஒருவரை இந்துவா அல்லரா என்று இனம் காணமுடியும் என்றோ என்னால் ஏதும் கூற இயலவில்லை. ஆனால் பொறுக்குக் குழுவிட மிருந்து மசோதா வந்த வரைவில் இடம் பெறும் தொடர் காலத்தின் சோதனையில் தேறி நிலவிநிற்பது என்பதை மட்டும் உறுதிபடக் கூறுவேன். எனது நினைவுக் கெட்டியவரை இத்தொடர், முல்லா அவர்களின் 'இந்துச் சட்டத் தொகுப்பில்' இடம் பெற்று உள்ளது என்பதுடன், அதற்கு முன்னரே பழங்காலத்திலிருந்து தொடர்ந்து புழங்கிவருகிறது என்பதையும் கூற முடியும். அச்சொற்களுக்கு 'நெடுங்காலப் புழக்கம்' என்கிற பயன்பாட்டு முதன்மையும் உண்டு.

இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குங்கால் (டாக்டர் அம்பேத் கரின்) திருத்தத்திற்குத் தேவையேதும் இல்லை என்பது தெளிவு; எனவே அத்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படலாகாது என்பதே எனது கருத்து. மாறாக, திரு. சர்வாத்தே அவர்களின் திருத்தத்தையேற்றுக் கொள்வதன் மூலம் நாம் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளையொட்டியே செயல்படுவோம் என்பதால், அவரது திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். இல்லை யெனில், அரசியலமைப்புச் சட்டச் சிக்கல்கள் காரணமாக நமது முயற்சிகள் யாவும் பயனின்றிப் போய்விடும் என்பதை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன்.

**திரு. சியாம் நந்தன் சகாய் (பீகார்) :** இது தொடர்பாய் நான் ஒரு கருத்தைப் பணிந்துரைக்கலாமா? இதுவரை பல திருத்தங்கள் முறைப்படித் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவேயன்றித் தாக்கல் செய்தவர்கள் எவரும் தங்கள் கண்ணோட்டத்தை விளக்கிப் பேசவில்லை. அத்தகைய திருத்தங்களில் மாண்புறு சட்ட அமைச்சர் அவர்களின் திருத்தமும் ஒன்று. திருத்தம் தராத பல்வேறு உறுப்பினர்களாகிய நாங்கள், பல்வேறு திருத்தங்களையும் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பதையும், திருத்தங்களை முன்மொழிந்த பல்வேறு உறுப்பினர்களின் காரண விளக்கங்களையும் அறிந்து கொள்ளத் திறந்த மனத்தோடு எதிர் நோக்கியுள்ளோம்; அப்போது தான் அவையின் செயல்பாடுகளில் பங்குபெறவும், இச்சூழ்நிலையில் நடந்து கொள்ள வேண்டிய பாங்கினை முடிவு செய்யவும் இயலும். எனவே, எனது கருத்து என்னவென்றால், முதலில் திருத்தம் தாக்கல் செய்தவர்களைத் தங்கள் விளக்கங்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்வோம். பின்னர் அக்கிளைவிதி குறித்து அவையில் பொது விவாதம் நடைபெறலாம். இதுதான் விவாதத்திற்கும் முடிவு எடுப்பதற்கும் உதவும். எவ்வாறாயினும், மாண்புறு சட்ட அமைச்சர் அவர்களை அவரது திருத்தம் குறித்து விளக்குமாறு வேண்டுவோம்; அதன் பின்னரே அதை எம்மால் ஆதரிக்கவோ, எதிர்க்கவோ இயலும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** திருத்தங்கள் தாக்கல் செய்த உறுப்பினர்களை ஒவ்வொருவராய்ப் பேச அழைக்கலாமென்றுதான் எண்ணி யிருந்தேன். ஆனால் திருத்தம் தாக்கல் செய்தவர்களை விடப் பிற உறுப்பினர்களே எனது கவனத்தை ஈர்ப்பதில் மிகுந்த முனைப்புடன் இருப்பதைக் கண்டதால்தான், அவர்களை முதலில் பேசுமாறு அழைத்தேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** திருத்தம் தாக்கல் செய்தோர் அனைவரும் ஓய்ந்து காணப்படுகின்றனர். கூறப்போனால், நானும் அவர்களது உரைகளைக் கேட்கவே ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புறு சட்ட அமைச்சர் அவர்கள் தாம் பேச விரும்பும் நேரத்தை எப்போதைக்கு வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால், தற்போது நான் அவரைப் பேச அழைக்காததற்குக் காரணம், விவாதத்தின் சற்றுப்

பிந்தைய கட்டத்தில் பேசுவாரெனில், பல்வேறு ஐயப்பாடுகளைத் தெளிவுறுத்த அவருக்கு எளிதாயிருக்குமென நான் கருதியதுதான்.

**டாக்டர் அம்பேத்கர்:** எந்தக் கட்டத்திலும் பேச நான் ஆயத்த மாயுள்ளேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** இரண்டு முறை உரையாற்ற அவருக்குவாய்ப்பு (உரிமை) உண்டு; அதாவது, இப்போது விவா தத்தில் கலந்து கொண்டு அவர் பேசினாலும்கூட, இறுதியில் பதிலுரையாற்ற உரிமையுண்டு.

**திரு. சியாமநந்தன் சகாய்:** இந்தக் கிளை விதி மீதான பொது விவாதத்திற்கு அவர் பின்னர் பதிலளிக்கலாம். ஆனால் அவரே ஒரு திருத்தத் தீர்மானம் தாக்கல் செய்துள்ளாரல்லவா?; அரசின் சார்பாக அவர் திருத்தம் தாக்கல் செய்ததற்கு உரிய காரணங்கள் உண்டு என அவைக்குக் காட்ட வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவரது நிலைப்பாடு சற்று வேறுபட்டதென்று நான் கருதுகிறேன். மற்ற உறுப்பினர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொண்ட பிறகுதான் அவர் தமது கண்ணோட்டத்தைத் தெளிவாக எடுத்துரைக்க இயலும். எனவேதான், அவரைச் சற்று பிந்தைய கட்டத்தில் பேச அழைக்கலாமென்று கருதியுள்ளேன்; ஆனால் கடைசியாக அல்ல.

**சர்தார் ஹுக்கம் சிங்:** திருத்தங்களைத் தாக்கல் செய்தவர்கள் அவர்களுடைய திருத்தங்களைப் பற்றிப் பேச விருப்பமில்லா திருக்கிறார்கள் என்ற எண்ணம் சபாநாயகருக்கு எவ்வாறு உண்டா யிற்றோ என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர்கள் எனது கவனத்தை ஈர்க்க முயலவில்லை என்று தான் கூறினேனேயன்றி, அவர்களுக்குப் பேச விருப்பமில்லை என்று நான் ஒருபோதும் கூறவில்லை. இடையே டாக்டர் தேஷ்முக் அவர்கள் எழுந்தமையால் அவரைப் பேச அழைத்தேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் எழுந்தனர்.

**மாண்புமிகு சபாநாயகர்:** தனிப்பட்ட சில காரணங்களுக்காக, பண்டித பார்கவா அவர்களை, இந்தக் கட்டத்தில் அழைக்க வேண்டா

மென்று எனக்குத் தோன்றுகிறது. திரு. ஜுன்ஜுன்வாலா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஜுஜுன்வாலா:** ஐயா, நான் இரண்டு மாற்றுத் திருத்தங்களுக்கு அறிவிப்பு தந்துள்ளேன். அவற்றுள் முதலாவதாவது :

> ''இந்தச் சட்டத் தொகுப்பானது இந்திய மக்கள் அனைவருக்கும், அவர் எந்தச் சாதியினராயினும், எந்த நம்பிக்கை கொண்டவராயினும், அவர் பின்பற்றும், அல்லது சார்ந்துள்ள மதம் எதுவாயினும் (இவ்வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பால்) பொருந்தும்.

நான் மாற்றுத் திருத்தம் ஒன்றையும் தாக்கல் செய்துள்ளேன். அதன் வாசகமாவது:

> ''இச்சட்டத்தில் மேற்கூறப்பட்ட கிளை விதிகளில் கூறப்பட்டிருப்பது யாதாயினும், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள், இதற்கென நாடாளுமன்றம் வகுக்கும் விதிமுறைகளின்படி தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளாத எவருக்கும் இச்சட்டம் பொருந்தாது; சிறுவராயின் உரிய வயது வந்த ஓராண்டுக்குள் பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தாது.''

எனது திருத்தங்களின் நோக்கம் இச்சட்டத்தை நீர்த்துப் போவதாகச் செய்வதல்ல என உறுதி கூறுவேன்; மேலும் இச்சட்டத்தின் எல்லாவிதிகளையுமே நான் எதிர்க்கவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் சுட்டிக்காட்டியவாறு, உயர்நீதிமன்றங்களாலும், உச்சநீதிமன்றத்தாலும் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானவை என்று தள்ளக்கூடிய சட்டங்கள் பலவற்றை நாம் நிறைவேற்றி வரும் நிலைமையை மாற்றுவது தான் எனது முதலாவது திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே, எந்தவொரு மசோதாவையோ, சட்டத்தையோ நமது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமுன்பாக, அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு இசைவாக இருக்கிறாத என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நம்மால் இயற்றப்பட்ட சட்டமொன்று, இறுதியில் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பளிக்கப்படுமாயின், இவ்வவையின் கணிசமான நேரத்தையும், ஏராளமான பணத்தையும் வீணடித்தவர்களாவோம். அதனால் உருப்படியான பயன் ஏதும் விளைவதில்லை. குடிமக்கள் எவரையும்,

சமயம், இனம், சாதி, பால் பிறப்பிடம் ஆகிய எந்தவகைக் காரணத்தாலும் பாகுபடுத்தி அரசு செயல்படலாகாது என அரசியலமைப்புச் சட்டவிதி 15 கூறுகிறது. மசோதாவின் கிளைவிதி (2) சட்டத்தை ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே பொருந்துமாறு ஆக்க முற்படுகிறது; எனது திருத்தமோ அதனை இந்தியா எனப்படும் பாரதத்தின் குடிமக்கள் அனைவருக்கும் பொருந்துமாறு மாற்றும். நாம் நிறைவேற்றவுள்ள சட்டத்தால் நன்மை விளையுமென்றால், அந்த நன்மை நாட்டு மக்கள் அனைவருக்குமே கிடைக்கட்டுமே. ஒரு சமூகத்துக்கு மாறாக மற்றொரு சமூகத்தைப் பாகுபடுத்திப் பார்ப்பது நல்லதன்று. நாட்டு மக்களின் நன்மைக்காக நாம் சட்டம் இயற்று கிறோமெனில், அதன்வழி ஒரு சமயத்தைப் பின்பற்றும் மக்களைப் பிற சமயங்களைப் பின்பற்றும் மக்களிடமிருந்து பாகுபாடு செய்யக்கூடாது. (நாமியற்றும் சட்டம்) நன்மைக்கு மாறான தென்றால் அதை ஒரு குறிப்பிட்ட சாதி, அல்லது குறிப் பிட்ட சமயத்தைப் பின்பற்றும் மக்களின் மீது மட்டும் திணிப் பதும் சரியன்று.

நான் தெளிவுறுத்த விரும்பிய கருத்துக்களில் முக்கிய மானதொன்று, இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் வரம்புக்குட்பட்டதுதானா என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பது; குறிப்பாக, இச்சட்டம் ஒரு குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றும் மக்களுக்கு மட்டுமே பொருந்துமாறு இயற்றுதலையே குறிப்பிடுகிறேன். இவ்வாறான சட்டங்களை நாம் அரசியலமைப்புச் சட்டம் விதி 25க்கு உட்பட்டே இயற்ற வேண்டும். எனவே, விதி 25இன் கீழ் சட்டமியற்ற இவ்வவைக்கு கொடுக்கப் பட்டிருக்கும் உரிமைகள் யாவையென நோக்குவோம். விதி 25(1) இன் வாசகமாவது:

> ''பொது ஒழுங்கு, பொது ஒழுக்கம், சுகாதாரம் உட்பட இப்பகுதியில் வரையறுக்கப்படும் பொதுநலக் கட்டுப்பாடு களுக்குட்பட்டு, தமது மனச்சான்றின் முடிவுக்கேற்ப எந்தவொரு சமயத்தையும் கடைபிடிக்கவும், பின்பற்றவும் பரப்பவும் குடிமக்கள் அனைவருக்கும் உரிமையுண்டு'' என்பதாகும்.

ஆனால் இந்துச் சட்ட மசோதாவில், அச்சட்டம் யாருக் கெல்லாம் பொருந்தும் என்பதை வரையறுக்கும் கிளை விதி 2இன் வாசகம் யாதென நோக்கிடுவோம்:

"(1) இச்சட்டம் பொருந்தக் கூடியவர்கள் யாவரெனில்

அ) இந்துக்கள் அனைவரும், அதாவது, வைணவர்கள், லிங்காயத்துக்கள், பிரம்ம, பிராத்தன, ஆரிய சமாஜங்களின் உறுப்பினர்கள் உட்பட இந்து சமயத்தை அதன் எந்த வடிவிலேனும் பின்பற்றுவோர் அனைவரும்;

ஆ) சமயத்தால் பௌத்த, சமண, சீக்கியர் அனைவரும்;

இ) (i) இப்பிரிவின் பொருள்படி இந்துக்களான பெற்றோர்க்கு முறையாகவோ, முறைபிறழ்ந்தோ பிறந்த குழந்தைகள் அனைவரும்;

(ii) ஒரு குழந்தையின் பெற்றோரில் ஒருவர், இச்சட்டத்தின் பொருள்படி இந்துவாயிருந்து, அவரது சமுதாயச் சூழலில் வளர்க்கப்பட்டிருப்பின், அது முறையாகப் பிறந்ததோ, முறை பிறழ்ந்து பிறந்ததோவெனிலும், அக்குழந்தையும்;

(iii) இந்து சமயத்துக்கு மாற்றம் செய்து கொண்டவர்கள்.

2) சமயத்தால் முஸ்லீம், கிறித்தவர், பார்சி, அல்லது யூதர் அல்லாதவர்கள் அனைவரும்:

இச்சட்ட மசோதா நிறைவேற்றப்படவில்லையெனில், சமய விவகாரங்களில் அவர்கள் பின்பற்றி வரும் மரபுகள் பழக்க வழக்கங்களால் இந்துச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கமாட்டார்கள் என்று நிறுவப்பட்டாலன்றி (இச்சட்டம் பொருந்தும்).

3) ஒருவர் இந்து சமயத்தவரோ அல்லரோ, இச்சட்டத்தின் ஆள்வரம்புக்குட்பட்டவராயின், இச்சட்டத்தின்படி அவரும் 'இந்து' என்றே கருதப்படும் வகையில் அச்சொல் பொருள்படும்.

4) 1872ஆம் ஆண்டின் (1872இன் III) சிறப்புத் திருமணச் சட்டத்தில் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், இச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் மணம் புரிந்து கொண்ட இந்துக்கள் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

பொது ஒழுங்கு, பொது ஒழுக்கம் சுகாதாரம் உட்பட (அரசியலமைப்புச் சட்டத்தின்) இப்பகுதியில் வரையறுக்கப்படும் பொது நலக்கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, தமது மனச்சான்றின் முடிவுக்கேற்ப, எந்தவொரு சமயத்தையும் கடைபிடிக்கவும் பின்பற்றவும், பரப்புதற்குமான முழு உரிமையை இந்நாட்டு மக்களனைவருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும்போது, இந்துக்களுக்கு மட்டுமென இப்படியொரு சட்டத்தை நாம் இயற்ற வேண்டிய தேவை என்னவென்று, என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த உரிமை இந்து சமயத்தவரோடு ஏனைய சமயத்தவர் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும்போது, இப்போது நம்முன்னே வைக்கப்பட்டிருப்பது போன்ற சட்டங்களால், இந்து சமயத்தவருக்கு மட்டும் அவ்வுரிமை மறுக்கப்படுவதற்கான காரணம் ஏதுமில்லை. இந்துக்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமய சுதந்திரத்தில் ஏன் குறுக்கிட முனைகிறார் என்று சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

எனினும், அரசியலமைப்புச் சட்ட விதி 25இன் கிளை விதி 2, பின்வருமாறு கூறுகிறது:

> "அ) சமய நடைமுறைகளோடு தொடர்பு கொண்ட, பொருளியல், நிதியியல், அரசியல் போன்ற சமயச் சார்பற்ற செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதற்காகவும்,
>
> ஆ) பொது அமைப்புகளான இந்துச் சமய நிறுவனங்களை சமுதாய நல, சமுதாயச் சீர்திருத்த நோக்கங்களுக்காக, இந்துச் சமயப் பிரிவினர் அனைவருக்கும் பொதுவானவையாக்கவும்,
>
> தற்போதுள்ள சட்டங்களை அரசு பயன்படுத்தவோ, புதிய சட்டங்களை அரசுகள் இயற்றவோ, இச்சட்ட விதியில் கூறப்பட்டுள்ளதெதுவும் தடையாயிராது."

இப்போது நாம் இங்கு நிறைவேற்றுதற்காக விவாதித்துக் கொண்டிருக்கும் இச்சட்டம், மக்களின் நலன் நோக்கிய சமுதாயச் சீர்திருத்த நடவடிக்கை என்றால், அது எல்லா சமயத்தவருக்குமாக உருவாக்கப்படாமல், ஒரு குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமாக உருவாக்கப்படுவது ஏன்?

**திரு. ராஜ்பகதூர்:** ஐயா, நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் செல்வரம்பு இந்தியக் குடிமக்கள் அனைவருக்குமாக இருக்க வேண்டுமென்று மூன்று, நான்கு உறுப்பினர்கள் இங்கு பேசினார்கள். இச்சட்டத் தொகுப்பு அவையில் முதலில் படிக்கப்பட்டபோது, கொள்கையளவில், இச்சட்டம் இந்துக்களுக்கு மட்டுமாய் இயற்றப்படுவதாய் இந்த அவை ஒப்புக் கொண்டுள்ளது. அப்படியிருக்க இதனை (ஏனைய சமயத்தவருக்கும்) விரிவாக்க வேண்டுமென உறுப்பினர்கள் இந்தக் கட்டத்தில் கோருதல் முறையாகுமா?

**மாண்புமிகு சபாநாயகர்:** நடைமுறைப் பொருளில், இவ்வொழுங்குப் பிரச்சினையின் சாரம் என்னவென்பதனை எனது சொற்களினாலேயே தெளிவுபடுத்த முனைவேன். இச்சட்ட மசோதாவில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயங்களைத் தவிர, பிற சமுதாயங்களுக்கும் இச்சட்டம் பொருந்த வேண்டுமென்று கோரும் திருத்தங்கள் யாவுமே, சட்டத்தை விரிவுபடுத்தும் தன்மை கொண்டனவாதலால் ஏற்கத்தக்கனவல்ல என்பதுதானே தங்களது ஒழுங்குப் பிரச்சினையின் சாரம்?

**திரு. ராஜ்பகதூர்:** இந்திய மக்களில் ஒரு பிரிவினருக்காக மட்டுமே இச்சட்டம் இயற்றப்படுவதாய் இந்த அவை ஏற்கெனவே ஒப்புக் கொண்டுள்ளது. எல்லா மக்களுக்கும் பொருந்தும் என்று இப்போது நாம் புதிதாய் முடிவெடுக்க இயலுமா?

**மாண்புமிகு சபாநாயகர்:** அதையேதான் மீண்டும் கூறுகிறீர்கள். அதாவது சட்டத்தின் பயன் வரம்பு இப்போது நீட்டிக்கப் படக் கூடாது என்பதுதானே தாங்கள் மறுக்க விரும்புவது. இச்சட்டத்தின் வரம்பை நீட்டிக்க முனையும் போக்கிலான திருத்தங்கள் பல ஏற்கத் தக்கனவா என்ற ஐயப்பாடு ஏற்கெனவே எனக்குண்டு. ஆனால் அதுபற்றி நான் இதுவரை எந்த முடிவுக்கும் வரவில்லை. முதலில், முன்மொழிந்த உறுப்பினர்களை உரையாற்ற அனுமதித்து விட்டு, அவற்றை வாக் கெடுப்புக்கு விடுவதா வேண்டாமா என்பதைப் பற்றிப் பின்னர் முடிவு செய்து கொள்ளலாமெனக் கருதியுள்ளேன்.

**டாக்டர் பி.எஸ். தேஷ்முக் :** எந்தவொரு சட்ட மசோதாவின் வரம்பையும் சுருக்கிக் கொள்ளவோ, விரிவாக்கவோ இந்த அவைக்கு முழுமையான உரிமையுண்டு. குறிப்பாகக் கிளைவிதி எதையும் (2ஐ) இதுவரை அவை நிறைவேற்றவில்லையாதலால்,

விரிவாக்குதற்கு முழு உரிமையும் அவைக்கு உண்டு. ஒருவேளை மசோதாவின் மூலவரைவில் இச்சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டிருந்தால், திருத்தமொன்றின் மூலம் சில மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றோ, சில மாநிலங் களுக்குப் பொருந்தாது என்றோ விலக்களிக்க இந்த அவைக்கு அதிகாரமில்லையென்று கூற முடியுமா? இந்த அவைக்கு முழு அதிகாரமும் உண்டு என்பதே என் கருத்து.

**மாண்புமிகு சபாநாயகர்:** சட்டத்தின் வரம்பை இந்திய நாடு முழுமைக்கும் விரிவாக்குதலோ, சில பகுதிகளுக்கு மட்டுமெனக் குறுக்கிக் கொள்வதோ, சட்டத்தின் கொள்கை விரிவாக்கம் ஆகாது. சட்டத்தின் கொள்கையென்பது ஆழ்ந்த சட்டநெறி சார்ந்த கருத்து; நிலப் பரப்பெல்லை சார்ந்ததன்று அது; கருத்தின் விரிவாக்க மாகும். அடிப்படையில், இச்சட்டத்தின் பயன்பாடு சீக்கியர்களுக்கோ, பௌத்தர்களுக்கோ, சமணர்களுக்கோ பொருந்தாதெென விலக்களிக்க, இந்த அவைக்கு முழு அதிகாரம் உண்டு; ஆனால் கிறித்தவர்கள், முஸ்லீம்கள், பார்சிகள், யூதர்கள் ஆகியோருக்கும் பொருந்துமென விரிவாக்க இந்த அவைக்கு அதிகாரமுண்டா என்பதே வினா.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இரண்டு வேண்டுகோள்களைப் பணிந்துரைக்க அனுமதி வேண்டுகிறேன்.

தங்கள் தீர்ப்பை வழங்கு முன்பு, எங்களுக்குப் பேச வாய்ப்பு தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** உறுப்பினர்களுக்கு எல்லா வாய்ப்புகளும் தரப்படும்.

பிற்பகல் 4 மணி

**குவாஜா இனையத் உல்லா (பீகார்) :** அரசிய லமைப்புச் சட்டம் நமக்குத் தந்துள்ள அடிப்படை உரிமைகளையும் மீறி, இந்துச் சட்டத் தொகுப்பின் வரம்புக்குள் முஸ்லீம் மக்களையும் கொண்டுவரும் நோக்கத்தில்தான் இத்திருத்தங்கள் யாவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

**மாண்புமிகு சபாநாயகர்:** அப்படியெடுத்துக் கொள்வதற் கில்லை. இந்தச் சட்டமே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உணர்வு களுக்கு எதிராகவுள்ளதா? என்னும் பரந்த கேள்வியின் ஒரு பகுதியே தங்கள் வினா.

**குவாஜா இனையத் உல்லா:** தெளிவாகவே தெரிவதென்ன வெனில்......

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினருக்குத் தெளிவாகத் தெரியலாம். ஆனால் எனக்கேதும் தெளிவாகத் தெரிய வில்லை. மாண்புறு உறுப்பினர்கள் கூறுவதை முதலில் கேட்போம்; பின்னர் நிதானமாக ஆய்ந்து பார்ப்போம். முன் கற்பிதங்களோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் பயனேது மில்லை. இது மிகப் பெரும் பகுதியான மக்களைப் பாதிக்கின்ற விவகாரம். இது அரசியலமைப்புச் சட்ட விதிகளுடன் முரணுகிறதா என்பதை நாம் முதலில் நோக்க வேண்டும்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** இத்திருத்தங்கள் ஏற்றற்குரியனவா என்பது குறித்து சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு வழங்குதற்கு முன்னர், இதைப் பற்றிப் பேச எங்களுக்கு வாய்ப்பு தர வேண்டுகிறேன்; ஏனெனில் திருத்தங்களின் ஏற்புடைமை குறித்து இதுவரை நாங்கள் (உறுப்பினர்கள்) யாருமே பேசவில்லை.

**மாண்புமிகு சபாநாயகர்:** வாய்ப்பு தரவே கருதுகிறேன். ஆனால் அவர்களது நோக்கம் என்ன என்பதை முதலில் அறிய விரும்புகிறேன்; சட்டத்தின் வரம்பை விரிவாக்க விரும்புகிறார்களா என்பது தெளிவாக வேண்டும். முதலில் அவர்கள் பேச வாய்ப் பளிப்போம்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டிருந்தது என்னவென்றால், சீர்திருத்த நோக்கிலோ, பொது மக்களின் நலன் குறித்த நோக்கிலோ, ஒருவகையான சட்டம் இயற்ற முற்படுவோமெனில், அதனை இயற்றுவதில் இவ்வவை ஒருதலைப் பாகுபாடாகச் செயல்படலாகாது என்பதே.

*(பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவைத் தலைமையேற்கிறார்)*

மக்களின் நலனுக்காக ஒரு குறிப்பிட்ட சட்டம் உருவாக்கப் படும்போது, ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்காக மட்டுமே யென்று வரம்பு கட்டிக் கொள்ளாமல், மக்கள் அனைவருக்காகவும் என்று அது உருவாக்கப்பட்டாலென்ன? ஒரு சட்டம் நன்மை தருவ தெனில் நன்றே? கேடுதரக்கூடியதெனில் தீயதே. இச்சட்டம் கேடு பயப்பதெனில், ஏன் இந்துக்களுக்கு மட்டும் பொருந்த வேண்டும்? இந்துக்களின் மீது அது ஏன் வலிந்து திணிக்கப்பட வேண்டும்?

தங்கள் பழங்காலக் கருத்துக்களின்படித் தங்கள் சமயத்தைக் கடைபிடித்துக் கொண்டு போகட்டும் என்று அவர்களை ஏன் விட்டுவிடக் கூடாது? இப்போதைய நிலையில் திருமண அமைப்பு போன்ற பழைய மரபுகள் பல சமுதாய நலனுக்கு உகந்தவாறு இல்லாது சமூகத்திற்குக் கேடு செய்வதால் இச்சட்டம் கொண்டு வருவதாய்க் கூறப்படுகிறது; இச்சட்டம் சமுதாயத்துக்கு நலன் விளைவிக்கும் என்றும் கூறப்படுகிறது. திருமணத்தைப் பற்றியோ, வாரிசுரிமை பற்றியோ, வேறெதனையும் பற்றியோ (எதனைப் பற்றி என்று அந்தந்தக் கிளைவிதிகள் குறித்த விவாதத்தின்போது பேசுவோம்) எதுவாயினும், ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு மட்டுமே நன்மை விளைவிக்கும் வகையில் எவ்வாறு அமைய முடியும். நவீன கால மனு என்று போற்றப்படும் மாண்புறு நண்பர் டாக்டர் அம்பேத்கர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்; இந்தச் சட்டம் முஸ்லீம்களுக்குப் பொருந்தாது என்று கூறுவதன் வாயிலாய் அவர்களுக்கு விலக்களிக்கிறீர்களே, இந்துக்களுக்கு மிகுந்த நலன் விளைவிக்கும் இச்சட்டம் முஸ்லீம்களுக்கு மட்டும் கேடு விளைவிக்குமென்று ஏன் கருதுகிறீர்கள்? இச்சட்டம் ஏன் எல்லா மக்களுக்கும் பொருந்தாமல், இந்துக்களுக்கு மட்டுமே பொருந்த வேண்டும்? என்பதையறிய விரும்புகிறேன். இச்சட்டம் நல்லதெனில் தங்களுக்கும் எனக்கும் சேர்த்து எல்லோருக்கும் அல்லவா அது பொருந்த வேண்டும். இரண்டாவதாக இச்சட்டம் கேடானதெனில், ஒரு பகுதி மக்கள் மீது மட்டும் அது ஏன் வலிந்து திணிக்கப்பட வேண்டும்? இறுதியாக, அருமை நண்பர் ஜஸ்பத் ராய் கபூர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, இத்திருத்தங்கள் ஏற்கத் தக்கனவா? அல்லவா? என்பது குறித்து எங்கள் நிலையை விளக்க வாய்ப்பளிக்குமாறு வேண்டுகிறேன்.

[1]**திரு. நசிருத்தீன் அகமது :** ஐயா, முந்தையதொரு சமயத்தில் மாண்புறு டாக்டர் அம்பேத்கர் தாக்கல் செய்த திருத்தம் குறித்து ஒழுங்குப்பிரச்சினையொன்றை நான் எழுப்பினேன். ஏனைய திருத்தங்களும் அவ்வொழுங்குப் பிரச்சினையின் தீர்வினை ஒட்டியன வேயாதலால், முதலில் எனது ஒழுங்குப் பிரச்சினை குறித்து விளக்க முயல்வேன். இந்தத் திருத்தத் தீர்மானத்தின் மொழி நடையே அவையை மிகவும் அவமதிக்கும் பான்மையில் அமைந்திருத்தலை அன்பு கூர்ந்து நோக்கவேண்டுகிறேன். அவரது திருத்தத்தில், ''கிளை விதி 2, துணைக்கிளை விதி (1) உருப்படி (அ)வில் 'இந்துக்கள்,

1. நா.வி., தொகுதி XV, பாகம் III, 1951 பிப்ரவரி 5, பக். 2404-23.

அதாவது இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்கள்' என்பதற்குப் பதிலாக, 'சமயத்தால் இந்துக்களாவோர்' என மாற்றுக'' என்றும், (இன்னும் இவ்வாறே வாசகம் தொடர்கிறது.) அடுத்து, '....... ஐ மாற்றியமைக்க', '.........ஐ நீக்குக' என்பன போன்ற தொடர்கள் இடம்பெறுகின்றன. இவையெல்லாம் கட்டளை வடிவில் உரைக்கப்பட்டுள்ளன. ஒரு தருணத்தில் டாக்டர் பட்டாபி அவர்கள் கூறியது போன்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பேராசிரியர் களின் தொனியிலும், சர்வாதிகாரிகளின் தொனியிலுமே பேசி வருகிறார். அவரது திருத்தமும் இத்தொனியிலான மொழிநடை யிலேயே உரைக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, திருத்தங்கள் அனைத்துமே இவ்வாறுதான் உள்ளன. அவையனைத்தையும் ஒவ்வொன்றாய் ஆய்ந்து பார்த்தே கூறுகிறேன். அவை யாவுமே அரசின் உயர் அதிகாரிகள் தங்கள் கீழதிகாரிகளுக்குக் கட்டளை யிடும் திருத்தக் குறிப்புகள் போன்ற வாசகங்களில் அதைச் செய், இதைச் செய் என்று இந்த அவைக்குக் கட்டளையிடுகின்றன. 'கீழ் வருவனவாறு மாற்றியமைக்க கீழ்வருவனவற்றை நீக்குக' என்பன போன்ற தொடர்கள் யாவும் இந்த அவைக்கு இனி வருங்காலத் தில் தரப்படும் மதிப்பு எத்தன்மைத்தாக இருக்கும் என்பதற்கான புதிய தர நிலைகள் போலும்! இத்தகைய மேலாதிக்கக் கட்டளை மொழியை எம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது. திருத்தங்கள் அனைத்துமே இதே நடையில் இருப்பதால், இத்தகைய மொழிநடை ஏற்புடையதுதானா என்பதை முதலில் முடிவு செய்வோம். எனவே, இத்திருத்தங்களின் ஏகாதிபத்திய வடிவம் முதலில் திருத்தியமைக் கப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன். வழமையான வடிவம் எப்படியிருக்க வேண்டுமென்ற ஆலோசனையையும் நான் தந்துள்ளேன். அது, இந்த அவைக்கு மட்டுமின்றி, இதற்கு முந்தைய அவையுடன், மேலும் எல்லாச் சட்டமன்ற அமைப்புகளிலும் பயன்படுத்தப்படும் வழமையான வடிவம்தான். இதை விட்டுவிட்டு முற்றிலும் புதிய (வேண்டத்தகாத) தரத்தில் நடையை இந்த அவை மட்டும் தனக்கென நிறுவிக் கொள்ள வேண்டுமா எனும் வினா வுக்கு முதலில் தீர்வு காண்போம். திருத்தத் தீர்மானங்கள் அனைத் தையும் கூர்ந்து நோக்கினால் அவை யாவுமே, இதே நடையில்தான் அமைந்துள்ளன என்பதைக் காண முடியும். இந்நடை ஏற்கத்தக்க நன்னடைதானா என்பதே நான் இங்கு எழுப்ப முனையும் ஒழுங்குப் பிரச்சினை. இது நன்னடையில்லையேல், இதனைத் திருத்தும் நோக்கில் நான் அடுத்துத் தந்துள்ள திருத்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதனால் நாம் இழக்கப்போவது ஏதுமில்லை; மாறாக நல்லொழுங்கு முறை, அலுவலக வடிவம்

ஆகியவற்றில் மேம்பாடுகள் பலவற்றை எய்துகிறோம். எனவே, இதனைக் குறித்துத் தமது தீர்ப்பினை முதலில் வழங்குமாறு சபாநாயகர் அவர்களை வேண்டுகிறேன்.

**அவைத் தலைவர்:** பேசப்பட்ட பொருள்கள் குறித்து ஒழுங்குப் பிரச்சினை ஏதும் எழ இடமிருப்பதாக, மாண்புறு உறுப்பினர் அவர்களின் உரை எனக்கு எதையும் உணர்த்தவில்லை; எனது தீர்ப்பு தேவைப்படுகின்ற நிலைமையேதும் எழவில்லை. அவர் வெளியிட்ட கருத்துக்கள் சிலவற்றைக் குறித்து, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உரிய நேரத்தில் பதிலளிப்பார். எனவே, தற்போது ஒழுங்குப் பிரச்சினை ஏதும் எழவில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** கொடுக்கப்பட்டுள்ள திருத்தத் தீர்மானங்களின் வடிவம் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா அன்றித் தள்ளப் படுகின்றதா என்பதையொட்டியே எனது திருத்தங்கள் இரண்டையும் நாம் கருதிப்பார்க்கவியலும் என்பதனால்தான் நான் உங்களது தீர்ப்பைக் கோரினேன். அவற்றின் வடிவம் நன்று என்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நாம் அனைவருமே அந்த நடைக்கு இறங்கி வந்து அவையின் தரம் தாழ்ந்து கெட ஒருமுகமாய்ச் செயல்படலாமே!

அடுத்துக் கிளைவிதி 2 குறித்து முக்கியமானதொரு கருத்தைப் பல திருத்தத் தீர்மானங்கள் வலியுறுத்துகின்றன; அதற்கு மாண்புறு உறுப்பினர்களில் பலரது ஆதரவும் கிடைத்து வருகிறது. அதாவது இச்சட்டம் இந்திய மக்கள் அனைவருக்கும் பொருந்த வேண்டும் என்பதே அது. நான் ஒழுங்குப் பிரச்சினையெழுப்ப எழுந்தபோது, இக்கருத்தை ஆதரிக்க முன்வருமாறு என்னிடம் கேட்கப்பட்டது. ஆனால், அப்படிப்பட்ட (பிழைச்) செயலினைச் செய்யவில்லை. எனது கருத்தில் இந்துக்களுக்கே கேடான தன்மையில் அமைந்துள்ள இச்சட்டத்தை அனைத்து மக்களுக்குமாய் விரிவுபடுத்துதல் கூடவே கூடாது. கேடானதொரு சட்டத்தை எல்லா மக்களுக்கும் பொருந்துமாறு செய்வதன் மூலம் நல்ல சட்டமாக ஆக்கிவிட முடியாது. இந்துக்களுக்கே அது கேடானதெனில், அது ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும். நான் இங்கு வலியுறுத்த முனைவதெல்லாம்....

**திரு. ஜே.ஆர். கபூர்:** பயன்விளைவை இந்துக்கள், இந்துக் கட்லலாதோர் யாவரும் சமமாகத்தானே பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது :** கேலிக் கூத்தான இந்த வாதத்தை நகைச்சுவைக்கு வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாமேயன்றி, இது சட்டமன்றத்திலே வைக்கக்கூடிய முறையான வாதமன்று; ஏற்றுக் கொள்ளவும் இயலாது. சட்டமொன்று கேடானது என்றால் அது யாரைக் கட்டுப்படுத்த இயற்றப்படுகிறதோ அவர்கள் மீது வலிந்து திணிக்கப்படலாகாது. அரசியலமைப்புச் சட்ட நோக்கில் இச்சட்டம் தாழ்மையையே கொண்டுவருகிறது. இந்தக் கருத்து இவ்வவைக்கு வெளியே வெகு தீவிரமாக எழுப்பப்பட்டு வருகிறது; இது பற்றிப் பரவலாகவும் பெருமளவிலும் (வெளியே) விவாதிக்கப் பட்டு வருகிறது. இச்சட்டத்தினை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல இயலாதென்பதும் மிக உறுதி. அரசியலமைப்புச் சட்டத் தில் நாம் பல கோட்பாடுகளை இயற்றியுள்ளோம். அதில் பல விதிகளை நாம் பொதுவான தன்மையில் அமைத்திருப்பதால் ஏற்கெனவே பல இடர்ப்பாடுகளில் சிக்கிக் கொண்டுள்ளோம். இந்த மசோதா நிறைவேற்றப்படுவதற்கு அரசியலமைப்புச் சட்டமே தடையாய்க் குறுக்கிடுகிறது.

**திரு. தியாகி:** எனில் அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்று வோம்.

**திரு. நசிருத்தீன் அகமது :** அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவு மே ‑சமானதாயிருப்பின், அதன் விளைவாக நமக்குப் பல இடர்ப்பாடுகள் எதிர்ப்படுகின்றனவென்றால், அரசியலமைப்புச் சட்டத்தையே ஏன் மாற்றக்கூடாது என்று அருமை நண்பர் கூறு கிறார். இந்துக்களுக்கென்று சட்டமியற்ற உங்களுக்கு எங்கிருந்து உரிமை கிடைத்தது? என நான் வினவுகிறேன். குடும்ப விவகாரங் களைப் பொருத்தமட்டில் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பாகுபடுத்திப் பார்க்கும் கொள்கையை ஏன் கடைப்பிடிக்கிறீர்கள்? இது காரண காரிய வாதத்துடனோ, நன்மையுடனோ ஒத்துவரா தெனக் கருதுகிறேன். இந்துக்கள் அவர்களது இல்லங்களிலும் சமய நடைமுறைகளிலும் இந்துக்களாகவே இருக்க வேண்டும். இந்த அரசியலமைப்புச் சட்டம் பிறிதோரிடத்தில் உறுதியளித் துள்ளவாறு, கிறித்தவர்கள், முஸ்லீம்கள் முதலிய பிற சமயத்தவர் களுக்கும் சிந்தனை, சமய, வழிபாட்டு உரிமைகள் அளிக்கப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தில் பற்பல குறைகள் காணப் படுவதால், அதைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமல்லவா என்று இந்த அவையை வினவ விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் திருத்தங்கள்

செய்தல் எளிது எனக் கருதுகிறேன்; இரண்டாண்டுகளுக்குப் பின்னர் திருத்தங்கள் செய்தல் மேலும் சிரமம் என எண்ணுகிறேன். இந்துக் களுக்காகவென்று நல்ல சட்டம் ஒன்றை நிறைவேற்றலை இயலு மாறு செய்யும் பொருட்டு அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த உகந்த காலம் இதுவே. சமயம், சமயம் சார்ந்த விவகாரங்களில் சட்டங்கள் குறுக்கிடலாகாது; அத்தகைய சட்டங்கள் மேல் மட்டத் திலிருந்து திணிக்கப்படலாகாது. (இதுதகைய சட்டங்கள்) மக்க ளாட்சிச் சமுதாயத்தில் நிலவும் சர்வாதிகாரப் போக்குகளுள் சேர்ந் தனவே.

**திரு. தியாகி:** திருமணமும், மணவிலக்கும் சமயத்திற்குட் பட்ட விவகாரங்கள் அல்லவே.

**திரு. நசிருத்தீன் அகமது:** இந்துத் திருமணம் என்பது அச் சமயத்தின் சமஸ்காரங்களில் ஒன்று என நம்புகிறேன்; அதாவது பத்தாவது சமஸ்காரமே திருமணம். எனவே, அது சமயத்தின் ஒரு பகுதியாதலால் அதை சமயத்திற்கப்பாற்பட்டதெனக் கூறுதல் வெட்டி விவாதமாகும். அரசியலமைப்புச் சட்ட வரம்புக்குள் இந்த அவை இறையாண்மை கொண்டதென்பதால், சட்டம் இயற்று தற்கான முழு அதிகாரமும் இந்த அவைக்கு உண்டு என்பதால், சமயங்களையே அழித்துவிட சட்டம் கொண்டுவந்து பாருங் களேன். நீங்கள் விரும்பினால் சமயங்களையே அழிக்கும் சட்டங் களை இயற்ற அதிகாரமுண்டு; செய்வீர்களா? இதைப்பற்றி நான் மேலும் முனைந்து பேச விரும்பவில்லை; ஆனால், இன்றைக்கு நாட்டின் நிலை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண் டாமா? நாட்டிலே போதிய உணவு இல்லை. நாம் உயிர் வாழ வேண்டிய உணவுக்காக அயல் நாடுகளிலிருந்து 200 கோடி ரூபா யளவுக்கு உணவு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. (குறுக் கீடுகள்) உடுத்தப் போதிய உடைகள் இல்லை; நாட்டு மக்களில் பலருக்கு வசிக்க வீடுகள் இல்லை; நாட்டு மக்கள் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வி கூடத்தர இயலவில்லை. ஆனால் 'அதே மக்களுக்கு இந்துச் சட்டத் தொகுப்பு என்னும் இலவசப் பரிசு மட்டும் அளிக்க முன்வந்துள்ளோம். மக்களை நீங்கள் மகிழ்ச்சி யுறச் செய்ய வேண்டுமெனில் நீங்கள் அவர்களுக்கு உணவையும் கல்வியையுமல்லவா தரவேண்டும்?

**தகவல் தொடர்புத்துறைத் துணை அமைச்சர் (திரு. குர்ஷித்லால்) :** இது சட்ட மசோதாவைப் பற்றி விவாதிக்கும்போது

எடுத்துரைக்க வேண்டிய வாதம். இப்போது நாம் ஒரு குறிப்பிட்ட கிளைவிதி (2)ஐ பற்றியே வாதித்துக் கொண்டிருக்கிறோம்.

**அவைத் தலைவர்:** அவர் தமது வாதங்களிலிருந்து என்ன முடிவினை இந்த அவை முன் வைக்கிறார் என்பதைக் கேட்கவே, காத்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. தியாகி:** எங்கள் சமய நூல்களிலிருந்து ஒரு முஸ்லீம் மேற்கோள்களைக் காட்ட இயலுவது எவ்வாறு என அறிய விரும்பு கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** சட்டத் தொகுப்பைப் பற்றி நாம் நினைப்பதற்கான நேரம் இதுவல்ல; அதைவிட முக்கியமான மக்களை மகிழ்வுறச் செய்யும் ஆக்கச் செயல்கள் பலவற்றில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. மாறாக அவர்களுக்கு ஆரம்பக்கல்வி அளித்தல் குறித்துச் சிந்திக்கலாம், உலக நிலவரமே படிப்படியாகச் சீரழிந்து கொண்டுவரும் ஆபத்தான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்தியாவை நோக்கிப் போர் படிப்படியாக நெருங்கிக் கொண்டுள்ளது.

**அவைத் தலைவர்:** உரைகளில் குறுக்கிட நான் விரும்புவ தில்லை; ஆனால் மாண்புறு உறுப்பினரோ வாதக் கடலில் மூழ்கி (தமது பணியை மறந்து) இருக்கிறார். எனவே குறுக்கீட்டுக்கு வருந்துகிறேன். அவர் தமது திருத்தத்தைப் பற்றிப் பேசுமாறு வேண்டுகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இந்தச் சட்ட மசோதாவைப் பற்றிக் கவனம் கொள்வதற்கு இது ஏற்ற தருணமல்ல என்பதைத்தான் நான் பணிவுடன் எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன்.

**திரு. குர்ஷித் லால்:** எடுத்துக் கொள்ளலாமா என்பது குறித்து நாம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கவில்லை.

**அவைத் தலைவர்:** மாண்புறு உறுப்பினரை அவரது திருத் தத்தைப் பற்றி மட்டுமே பேச வேண்டுகிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தம் சரியானதன்று என அவர் பேச விரும்பினால் அனுமதியுண்டு. ஆனால் இந்த மசோதாவையே எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று பேச முற்படுவாராயின், அவர் தமது வரம்பைக் கடந்து போகிறார் என்றே கருதுகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** நான் எனது யோசனையைக் கூற முற்பட்டதற்குக் காரணமே இம்மசோதா மீதான விவாதங்களை அரசு முடித்திட முடிவு செய்துள்ளதென்று......

**அவைத் தலைவர் :** மாண்புறு உறுப்பினரைத் தமது திருத்தம் பற்றி மட்டுமே பேச வேண்டுகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** (குறுக்கீடுகளைத் தொடர்ந்து) மாண்புறு உறுப்பினர்கள் பலருக்குக் குறுக்கீடுகளைத் தவிர வேறேதும் எண்ணமில்லை என்று கருதுகிறேன். ஐயா எனது பெயரில் பற்பல திருத்தங்கள் கொடுத்துள்ளேன்; அவை குறித்து ஒவ்வொன்றாகப் பேசுவேன். திருத்தங்கள் 16, 17 இரண்டும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தங்களுக்கு வடிவ மேம்பாடு தரும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டவை. வடிவ மேம்பாடு தவிர அவற்றுக்குக் கொள்கையென வேறேதுமில்லை. எனவே அடுத்து, 19 ஆம் திருத்தத்துக்கு வருகிறேன். அஃது

கிளை விதி 2, துணைக் கிளைவிதி (1) பிரிவு (c) (i) இல், ''முறை பிறழ்ந்து பிறந்த...'' என்ற தொடரையடுத்து

> ''அவர் பதினெட்டு வயது நிறைவடைந்தவராயும், அவரே இந்துவாயிருந்தாலும், மற்றும்!

எனும் தொடரை இடைச்செருகலாம்.

பல்வேறு மாறுபட்ட பொருள்கள் குறித்து பற்பல திருத்தங்கள் தனித்தனியே தாக்கல் செய்ய நேர்ந்துள்ளமையால் நீண்ட வாதங்கள் செய்ய வேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன். அதனாலேயே மாண்புறு உறுப்பினர்கள் சிலருக்கு வாதத்தின் கோவையைத் தொடர முடியாமற் போகிறது. நான் திருத்த முனையும் கிளை விதி (1)இன் வாசகமாவது :

> ''இந்த சட்டத் தொகுப்பானது,
>
> (c) (i), முறையாகவோ, முறையின்றியோ பிறந்த குழந்தை யாதாயினும், அதன் பெற்றோர் இருவருமே, இப்பிரிவின் பொருள்படி இந்துக்களாயிருப்பின், பொருந்தும்.''

**திரு. சதிஷ் சந்திரா (உத்தரப் பிரதேசம்):** இது பலமுறை படிக்கப்பட்டுள்ளது.

**அவைத் தலைவர் :** வாதத் தொடர்ச்சிக்காக அதைப் படிக்க அனுமதிக்கலாம்; மாண்புறு உறுப்பினரைப் பேச விடுங்கள்.

**திரு. தியாகி:** முறையற்றுப் பிறந்த குழந்தைகள் குறித்த தொடர் வாசிக்கப்படவில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஒரு இந்துவின் குழந்தை, அஃதும் முறையற்றுப் பிறந்ததாயிருப்பின், தொடர்ந்து இந்துவாயில்லாமற் போகலாம். இந்தத் துணைக்கிளை விதி, ஓர் இந்துவின் குழந்தை தொடர்ந்து இந்துவாகவேயிருக்கும் என்ற கற்பிதத்தின் அடியாக வரைவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது மதமாற்றம் செய்து கொள்ள நல்ல வாய்ப்புண்டு. அவர் அனைத்து மதங்களையும் உதறித் தள்ளி, நாத்திகராகலாம். அவர் ஒரு யூதராகவோ, கிறித்தவராகவோ, முஸ்லீமாகவோ மாறலாம்; மீண்டும் இந்து சமயத்துக்கே மறு மாற்றமும் அடையலாம். இந்து ஒருவருக்கு முறை பிறழ்ந்து பிறந்த குழந்தை இந்துவாகவே இருப்பார் என்பது, அவர் மாறமாட்டார் என்ற கற்பிதத்தின் அடிப்படையிலேயேயாகும். ஆனால் அவர் மாற்ற மடையலாம். அவர் மதமாற்றம் பெற்றால் எப்படி இந்துவாயிருக்க முடியும்? எனவே அவரது தந்தையின் சொத்துக்கு வாரிசுரிமையை இழப்பார். இந்துத் தந்தையொருவரின் குழந்தை முறையின்றிப் பிறந்தவரேயாயினும் தந்தையின் சொத்தில் அவருக்கு வாரிசுரிமை யுண்டு; ஆனால் அவர் மதம் மாறினால், இந்துவாகத் தொடரார். ஆதலின் தந்தையின் வாரிசு எனும் தகுதியை இழந்துவிடுவார்.

**திரு. தியாகி :** ஒரு தந்தைக்கு முறையற்ற குழந்தையேதும் இருக்க முடியாது; ஒரு தாய்க்குத்தான் முறையற்ற குழந்தை இருக்க முடியும்.

**திரு. நசிருத்தீன் அகமது :** அது ஒரு சட்டப்பிரச்சினையே; ஒரு தந்தைக்கு முறையற்ற குழந்தையேதும் இருக்கவியலாதெனில், இந்தக் கிளை விதியையே நீக்கிவிடலாமே.

**திரு. தியாகி :** ஆனால் அக்குழந்தை .... (குறுக்கீடுகள்)

**அவைத் தலைவர் :** அமைதி, அமைதி, அவர் தொடரட்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ''பதினெட்டு வயது நிறைவடைந்த வராயும், அவரே இந்துவாகவும் இருப்பின்....'' என்று எனது

திருத்தம் கூறுகிறது. வேறுவகையில் கூறுவதெனில் பதினெட்டு வயது என்பது ஒருவர் தாமே முடிவு செய்வதற்கும் சட்டரீதியாய்ச் செயல்படுதற்கும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் வயது; அவ் வயதை அடைந்த பின்பும் ஒருவர் தொடர்ந்து இந்துவாயிருப்பா ரெனில், அவர் இந்துதான். அவர் தமது தந்தையின் குழந்தையாக வாரிசுரிமையுடன், இந்துச் சட்டம் வழங்கும் நலன்கள் அனைத்தை யும் பெற்றுத் துய்க்க உரிமையுள்ளவர். வரைவில் உள்ள குறை யொன்றைக் களையவே எனது திருத்தம் முயல்கிறது. முறை பிறழ்ந்து பிறந்த ஒருவரும், பதினெட்டு வயது நிரம்பி, மத மாற்றமும் செய்து கொள்ளாமலிருந்தால், அவருக்கும் இதே உரிமைகள் உண்டு என்பதையே தெளிவுபடுத்த முனைந்தேன்.

எனது மற்றொரு திருத்தத்துக்கு வருவோம். அதுவும் வரைவு மாற்றம் குறித்ததே; அதன் வாசகம்:

> ''கிளைவிதி 2, துணைக்கிளை விதி (1), பிரிவு (c) (i) இல், 'அவரது பெற்றோர்கள் இந்துக்களாயிருந்தால்' என்ற தொடருக்கு மாற்றாக, 'அவரது பெற்றோர்கள் இந்துக்களா யிருந்தாலும், இந்துக்களாயிருந்திருந்தாலும்' என்ற தொடரைப் பயன்படுத்தலாம்''

ஒரு குழந்தையின் பெற்றோர் இந்துக்களாயிருந்து பின்னர் சமய மாற்றம் செய்திருக்கலாம். எனவே, இந்த உறவு குறித்து நான் கூற விரும்புவது....

**திரு. கே.சி. சர்மா (உத்தரப்பிரதேசம்) :** வரைவு குறித்த திருத் தங்களையெல்லாம், வரைவுக் குழுவின் பணியாக விடுப்பதே இந்த அவையின் மரபு என்பதை அவைத் தலைவர் அவர்களுக்குக் கவன மூட்டி, இதற்கென இவ்வவையின் நேரத்தை வீணடிக்க வேண்டா மென வேண்டுகிறேன்.

**அவைத் தலைவர் :** அப்படியேதும் மரபு நிறுவப்படவில்லை. குறிப்பிட்ட திருத்தத்தின் தன்மையையொட்டி முடிவு செய்வோம்.

**திரு. நசிருதீன் அகமது :** மாண்புறு உறுப்பினருக்கு எனது வாதங்களைக் கேட்பதில் அக்கறையில்லை, ஏதாவதொரு மறுப்பு கண்டுபிடித்துத் தடை செய்ய வேண்டுமென்பதில்தான் அக்கறை

என்பதையே இது காட்டுகிறது. இது வரைவு மாற்றம்தான் என்றாலும், கருத்து மாற்றத்தையும் உள்ளடக்கியதாகும். பிரச்சினை இதுதான்: முறையாய்ப் பிறந்திருந்தாலும், முறை பிறழ்ந்து பிறந்திருந்தாலும் ஒரு இந்துவின் குழந்தையும் இந்துவே என்று கூறுகிறீர்கள். ஒருவேளை தந்தை மதம் மாறியிருப்பின், வினா எழுகின்ற காலத்தில் அவர் இந்துவாயில்லாமலிருந்தால்? எனவேதான் அவர் இந்துவென்றாலும், இந்துவாயிருந்தவரென்றாலும் எனத் தெளிவுபடுத்த விரும்பினேன். ஒரு தந்தை தற்போது இந்துவாயில்லாமலிருக்கலாம்; ஆனால் சிக்கலுக்குத் தொடர்புடைய காலத்தில் இந்து சமயத்தை ஏற்றுக்கொண்டவராய் இருந்திருக்கலாம். நீங்கள் வெறுமனே இந்து என்று மட்டும் குறிப்பிட்டால் தற்சமயம் இந்துவாக இருப்பவரை மட்டுமே சுட்டவியலுமேயன்றி, அவர் முன்னர் இந்துவாயில்லாமலிருந்திருக்கலாம் என்பதையும் உள்ளடக்க இயலாது. எனவேதான், ''இந்து அல்லது இந்துவாயிருந்தவர்'' என்று மாற்ற விரும்புகிறேன். ஒருவர் வாழ்நாள் முழுதும் இந்துவாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. அத்தகைய பெற்றோரின் குழந்தையும் இந்துவே. ஒரு முஸ்லீம், இன்றைக்கு இந்துவாய் மாறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய குழந்தையின் நிலை என்ன எனும் வினா எழுகிறது. பெற்றோர் முஸ்லீம்களாக இருந்தபோது பிறந்த குழந்தை அதன் தந்தை இந்துவாக மாறியபின் அதுவும் இந்துவாகிவிடுமா? ஆகவே தான் கிளை விதியின் வரைவை மாற்ற வேண்டுகிறேன். வரைவு மாற்றத்தோடு இங்கு கருத்துமாற்றமும் பிணைந்துள்ளதல்லவா? எனவே இவை சிறுவிவகாரங்கள் எனினும் கூர்ந்த கவனம் தேவைப்படுவன என்பதை அவைமுன் பணிக்கிறேன். ஒருவர் கிறித்தவராகவோ முஸ்லீம்களாகவோ, யூதராகவோ இருந்தபோது பிறந்த குழந்தையும் அவர் இன்று இந்துவாக மாறினால் இந்துவாகி விடுமா என்பதே நாம் முடிவு செய்ய வேண்டிய வினா: இது ஆழ்ந்த அரசியலமைப்புச் சட்டச் சிக்கல் என்பதால் இதன் தீர்வில் அவை கூர்ந்த கவனம் செலுத்த வேண்டுகிறேன். முக்கியமான சிக்கல் என்னவெனில் இக்கருத்துக்களையெல்லாம் சட்ட அமைச்சர் கவனமாகக் கேட்டு உரிய பதில் அளிக்க வேண்டுமென்பதும், இவ்வாதங்களையும் அவற்றுக்கான பதிலையும் இந்த அவை கவனத்துடன் நோக்க வேண்டுமென்பதுதான். ஒருவேளை, டாக்டர் அம்பேத்கர் அவர்கள், ''திருத்தங்கள் அனைத்தையும் நான் எதிர்க்கிறேன்'' என்று கூற ''நாங்கள் பயபக்தியுடன் ஒப்புக் கொள்கிறோம்'' என்று இந்த அவை கூறலாம்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர்:** ஒருபோதுமில்லை; ஒருபோதுமில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** எனது அடுத்த திருத்தமான 21-வது திருத்தத்துக்கு வருகிறேன். இத்திருத்தத்தின் மூலம், ஒருவரின் சமயம் யாதெனும் சிக்கல் எழுங்கால், 18 வயது நிரம்பும்போது ஒருவர் இந்துவாக இருப்பாரெனில் அவர் இந்துவே என வலியுறுத்த விரும்புகிறேன்; ஏனெனில் பதினெட்டு வயது என்பது ஒருவர் தாமே முடிவு எடுக்கவும், சட்டபூர்வமாய்ச் செயல்படவும் முதிர்ச்சியுற்ற வயது என்பதால் அவ்வயதில் ஒருவர் சமய மாற்றமும் செய்து கொள்ளலாம். எனவே, பதினெட்டு வயது நிரம்பிய ஒரு பையனுக்கு சமய மாற்றம் செய்து கொள்வதற்கான உரிமைக்கும் எனது திருத்தம் வழிவகுக்கிறது. இது மூலவரைவு செய்தவர்கள் கருதிப் பார்க்காத ஒன்று. எனவே, அவையின் கருத்துக்காக இத்திருத்தத்தைப் பணிந்தளிக்கிறேன். தொடர்ந்து எனது அடுத்த திருத்தமாகிய 23-வது திருத்தத்துக்கு வருகிறேன். அதன் வாசகம் :

> ''கிளை விதி 2, துணைக்கிளை விதி (1) பகுதி (d)க்கு மாற்றாக, (d) இந்து சமயத்துக்கு மாறிய ஒருவருக்கு, மாற்றத்துக்கு முன் அவருக்கிருந்த உரிமைகளுக்கும், கடப்பாடுகளுக்கும் எவ்வித பாதிப்புமில்லாமல்'' என்று மாற்று வரைவு இருக்கலாம்.''

இந்து சமயத்துக்கு மாறிய ஒருவர் இந்துவே என்று கூறுகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் மனச்சான்றுபடி நடக்கவும், சமய மாற்றம் செய்துகொள்ளவும் முழு உரிமை உண்டென்பதைப் பகுத்தறிவுள்ளோர் யாவரும் ஏற்போம். ஆனால் அவர் சமயம் மாறுவதற்கு முன்னர் அவருக்கிருந்த உரிமைகளும் கடப்பாடுகளும் என்னாவது என்பதே கேள்வி. நிலையை மேலும் விளக்குவேன். திருமணமான கிறித்தவர் ஒருவர் இன்று இந்துவாக மாறுவதாய் வைத்துக் கொள்வோம். அவரது மனைவியின் கதி என்ன? ஒரு கிறித்தவருக்கும், இந்துவுக்குமிடையே திருமணம் என்பது சட்ட விரோதமானது என்பதால், தானாகவே அவர்களது திருமணம் முறிந்துபோகுமா? இந்து சமயத்துக்கு மாறிய ஒருவரை இந்துவாகவே நடத்த வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மாற்றத்திற்கு முன்னர் அவருக்கிருந்த உரிமைகளும் கடப்பாடுகளும் என்னாவது? உரிமைகளும், கடப்பாடுகளும் பற்பல; அவற்றையெல்லாம் அதனால் எழும் சிக்கல்களையெல்லாம் விவரித்து

அவையின் நேரத்தை நீடிக்க விரும்பவில்லை; சுருக்கமாக, இந்து வாக மாறியவர், மாற்றத்திற்கு முன்னர் அவருக்கிருந்த உரிமைகள், கடப்பாடுகளின் வரம்புக்குட்பட்டு இந்துவாகவே கருதப்படுவார் எனத் திருத்தக் கூறுகிறேன். இந்து அல்லாத ஒருவர் பெரும் சொத்து ஒன்றுக்கு உடைமையாளர் எனக் கொள்வோம்; இந்து வாக மாறுவதால் அவர் தம் சொத்து முழுவதையும் இழக்க வேண்டுமென்றா கூறுவோம்?; சமயம் மாறாதிருப்பின் ஒருவ ருடைய சொத்தில் அவருக்கு வாரிசுரிமை உண்டெனில், சமய மாற்றத்தால் அவ்வுரிமையை இழக்க வேண்டுமென்போமா? இது தொடர்பாகப் பல சட்டங்கள் என் நினைவுக்கு வருகின்றன என்றாலும், மாற்றத்திற்கு முன்னர் இருந்த உரிமைகளும், கடப்பாடு களும் மாற்றத்திற்குப் பின்னரும் இருக்குமென்று சுருக்கமாக வலியுறுத்தி அமைவேன். மாற்றத்திற்கு முன்னர் அவர் பெற்றிருந்த உரிமைகளின் நிலைப்பாட்டை நாம் மாற்றிவிடலாகாது. சமய மாற்றம் காரணம் காட்டி ஒருவர் உரிமைகளை இழக்குமாறு சட்டம் அமையக் கூடாது. ஒருவர் ஒருமுறை பெற்ற உரிமைகளின் இழப்பை அனுமதிக்கலாகாது. அவ்வாறே, ஒருவர் தமது கடப்பாடு களின் பொறுப்பிலிருந்து சமய மாற்றத்தால் விடுபட்டு விட முடியாது. பழைய உரிமைகள் கடப்பாடுகள் உட்பட எந்தப் பழைய செயல்பாடும் சமய மாற்றத்தினால் பாதிக்கப்படலாகாது.

எனது அடுத்த திருத்தமாவது, கிளை விதி 2இன் துணைக் கிளைவிதி (2) நீக்கப்பட வேண்டும் என்பதே. இந்த துணைக் கிளை விதி கூறுவதாவது:

> ''முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லாதோர் அனைவருக்கும் இச்சட்டத் தொகுப்பு பொருந்தும்.''

இத்துணைக் கிளை விதியானது தவறான கருத்துக்கள், தவறான உவமானங்களின் அடிப்படையில் உருவானது. பகுதி (a) இல் நாம் ஏற்கெனவே,

> ''இந்துக்கள் அனைவருக்கும், அதாவது இந்து சமயத்தை அதன் வடிவங்கள் ஏதாவதொன்றில் பின்பற்றுவோர் அனை வர்க்கும்'' இச்சட்டத் தொகுப்பு பொருந்தும் எனக் கூறி யுள்ளோம். அன்றியும் இச்சட்டத் தொகுப்பு,
>
> ''சமயத்தால் பௌத்தராகவோ, சமணராகவோ, சீக்கிய ராகவோ ஆவோர் அனைவருக்கும்'' பொருந்தும் என்றும் கூறியுள்ளோம்.

ஆனால், இச்சட்டத்தால் தங்களுக்குக் கிடைப்பதாய்க் கூறப்படும் நலன்கள் குறித்து சீக்கியர்கள் பெரிதும் அக்கறை காட்டவில்லையென்று நான் உணர்கிறேன். இந்து சட்டத் தொகுப்பினால் சீக்கியர்கள் பெறவிருப்பதாய்க் கூறப்படும் நலன்களை அருமை நண்பர் சர்தார் ஹுக்கம் சிங் அவர்கள் இழக்கத் தயாராயிருக்கின்றார். அவர் தொடர்ந்து சீக்கியராகவே இருக்கும் நிலையில், அவருக்கு இந்துச் சட்டம் பொருந்துமென்று திணிக்கப்படுவதை அவர் விரும்பி ஏற்பாரென நான் கருதவில்லை; மேலும்...

**திரு. தியாகி :** அவர் இந்துவாகி விடலாமே.

**திரு. நசிருதீன் அகமது:** சர்தார் ஹுக்கம் சிங் அவர்களே தமது சமூகத்திற்காகப் பேசட்டும். நான்......

**திரு. குர்ஷித் லால்:** தங்கள் சமூகத்திற்காக மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. நசிருத்தீன் அகமது:** அடுத்து பகுதி (C) (1)க்கு வருவோம். ஒரு குழந்தை முறையாய்ப் பிறந்ததாயினும், முறை பிறழ்ந்து பிறந்ததாயினும் இச்சட்டத் தொகுப்பு அதற்குப் பொருந்துமென்று அப்பிரிவு கூறுகிறது. இந்து என்பவர் இந்துவேயாதலின் இந்து ஒருவருக்குப் பிறந்த குழந்தையும் இந்துவாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் துணைக் கிளை விதி (2) ஒருவகையில் பிழைபடக் கூறுகிறது என்பதையே நான் சுட்ட விழைகிறேன்; சமயத்தால் முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ யூதராகவோ அல்லாதோர் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்துமென்று அது கூறுகிறது. வரைவு நோக்கில் கருதினால், சொல்லவரும் கருத்தைச் சுற்றி வளைத்து ஏனோ தானோவென்று கூறுவதாய்த் தோன்றுகிறது. மாறாக, முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் தவிர்த்த ஏனையோர் அனைவரும் இந்துக்களே என்று நேரடியாகவே சொல்லிவிடுவதற்கென்ன? அதற்கு பதிலாக முதலில் இந்துக்கள் இந்துக்களே என்கிறீர்கள்; அடுத்து, பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் ஆகியோரும் இந்துக்களே என்கிறீர்கள்; அதைத் தொடர்ந்து, முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் அல்லாத அனைவருக்கும் இச்சட்டத் தொகுப்பு பொருந்துமென்கிறீர்கள். தர்க்க ரீதியாய், நேரடியாக, முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் தவிர்த்த ஏனையோர் யாவரும் இந்துக்களே என்று கூறிவிடலாமன்றோ? உங்கள் வரையில் பொருள்

இவ்வாறுதான் முடிகிறது. எனவே, சட்டம் வரைவோர்பால் இக்கருத்து தொடக்கத்தில் இல்லாமலிருந்து, பிந்தையதொரு கட்டத்தில் புகுத்த முற்பட்டார்களாதலால்தான் இப்படிச் சுற்றி வளைத்துக் கூறப்பட்டிருப்பதாய் எனக்குப்படுகிறது. இல்லையேல், சொல்ல விரும்புவதை நேரடியாகவே சொல்வதற்கு வேறெந்தத் தடையும் இருந்திருக்கவியலாது.

ஆனால், கிளைவிதி 2, துணைக் கிளை விதி (2)இல் சிக்கல் ஒன்று உள்ளது. முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ பார்சியாகவோ, யூதராகவோ அல்லாத ஒருவர் இந்துவாகத்தான் இருக்க வேண்டு மென்று எந்த நியாயத்தைக் கொண்டு கூறமுடியும். நண்பர் ஒருவர் கூறியவாறு அவர் பொதுவுடைமையாளராயிருக்கலாமே; அல்லது ஜப்பானில் பின்பற்றப்பட்டுவரும் ***ஷிண்டோ*** சமயத்தவராக இருக்கலாம்; எந்த சமயத்தையும் சாராதவராயும் இருக்கலாம். ஒருவர் கிறித்தவராகவோ, முஸ்லீமாகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லது இந்துவாகவோதான் இருக்க வேண்டுமென்பதை மாற்றவியலாக் கேட்பாடாக எப்படி ஏற்றுக்கொள்ள இயலும். ஒரு மனிதர் எந்தவொரு சமயத்தையும் சாராதவராயிருக்கலாம்; அல்லது இந்தப் பெரிய சமயங்களல்லாத பிறிதொரு சமயத்தைப் பின்பற்றுபவராகவும் இருக்கலாம்.

**திரு. தியாகி:** எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது இந்து சமயமே.

**திரு. நசிருத்தீன் அகமது :** பிறர் அனைவருமே இந்து சமயத்துடன் சேர்ந்தவர்கள்தான் என்று பேசுதல், இந்துக்களின் செவிகளுக்கு வேண்டுமானால் இனிய விருந்தாயிருக்கலாம். ஆனால் இச்சட்டத்தொகுப்பு தருவதாய்க் கூறப்படும் நலன்களை ஏனையோர் மீது வலிந்து திணிக்கவேண்டுமா என்பதே இங்கு பிரச்சினை. எவரை வேண்டுமானாலும் நீ இந்துதான் என்று கூறி அவர் மீது இச்சட்டத்தைத் திணிக்க வேண்டுமா? இங்கு வெளிநாட்டவர் சிலர் இருப்பதாய்க் கொள்வோம்; அவர்களுடைய அலுவலர்களோ, பணியாளர்களோ நண்பர்களோ கூட இங்கிருக்கலாம். இப்போது நாம் சுற்றுலாப்பயணிகளுக்கு மிக ஊக்கமளித்து வருவதால், அத்தகையோரின் எண்ணிக்கை இங்கே பெருக வாய்ப்பு மிகுதி. அயல் நாட்டவர் ஒருவர் இங்கிருக்கும்போது இறந்து விட்டால், அவரது சொத்தின் வாரிசுரிமை யாருக்குக் கிடைக்கும்?

**டாக்டர் அம்பேத்கர்:** அவர் இந்தியாவில் இறந்தால், தாங்களே அவர் சொத்துக்கு வாரிசுரிமை பெறலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** பிரச்சினை என்னவென்றால், அந்நான்கு சமயங்களைச் சாராதோர் அனைவரின் மீதும் இந்துச் சட்டத்தின் நலன்களென நீங்கள் கூறிக்கொள்வன திணிக்கப் படுதல் தேவையா என்பதே. இந்து சமூகம் மிக மெத்தனமானது; இவ்வவையில் இந்துக்கள் பெரும்பான்மையினரே; ஆனால் அவைக்கு வெளியே அவர்கள் பெரும் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டுள்ள நிலையில், இந்த நலன்கள்(?) மக்கள் மீது திணிக்கப் படத்தான் வேண்டுமோ? இந்தச் சட்டத்தை முஸ்லீம்களோ, கிறித்தவர்களோ, பார்சிகளோ யூதர்களோ அல்லாத அனைவரும் இந்து சமயத்தைத்தான் சார்ந்தவர்கள் எனக் கூறுதற்கான நியாயம் என்ன? அவர்கள் மீது இச்சட்டம் திணிக்கப்பட வேண்டியது தானா என்பதற்கு இந்த அவை ஒரு முடிவு செய்தாக வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாததொரு கற்பிதத்தைப் புகுத்த முற்படு வதால், துணைக் கிளைவிதி (2) அறவே நீக்கப்பட வேண்டுமென்று இந்த அவையை இறைஞ்சுகிறேன். படிப்படியே எண்ணுவோம். அத்தகையோர் மீது இச்சட்டம் திணிக்கப்படக்கூடாது. பலர் பிற சமயங்களைப் பின்பற்றலாம்; வேறு பலர் எந்த சமயத்தையும் பின்பற்றாதோராயிருக்கலாம். நாளை இவ்வுலகில் புதிய சமயமே கூட ஒன்று தோற்றுவிக்கப்படலாம். இவர்கள் மீதெல்லாம் இந்துச் சட்டம் வலிந்து திணிக்கப்படுதல் கூடாது. மேலும் இச்சட்டத் தின் நடைமுறையாக்கம் படிப்படியாய் நிகழ்தல் வேண்டும். உண்மையில் மதிப்பிற்குரிய நண்பர் கபூர் அவர்களின் திருத்தத்தின் ஒரு பகுதியை நான் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கிறேன். காரணம், யார்யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும் என்று அது கூறுகிறது. திரு. ஜுன்ஜுன்வாலா அவர்களின் திருத்தமும் இதே நோக்கில் எழுந்ததுதான். விவரங் களில் வேண்டுமானால் சிறுசிறு வேறுபாடுகள் இருக்கலாம். இரண் டிற்கும் அடிப்படைக் கோட்பாடு, தேவையென்று ஏற்றுக் கொள் பவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும் என்பதுதான். எனவே, இந்து என்ற சொல்லுக்கு இந்தப் புதிய வரையறை தேவையற்றது. இந்துச் சட்டத் தொகுப்பானது (தொடர்புடைய) எல்லோரும் ஏற்கத்தக்கதாய், முரண் சிக்கல்களுக்கு இடமில்லாத வாறு அமைந்திருந்தால், (இதை நிறைவேற்ற) இடர்ப்பாடுகள் தோன்றியிரா. திருத்தத்தின் அப்பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதன் மூலம்....

**பண்டிட் கிருட்டிண சந்திர சர்மா (உத்தரப் பிரதேசம்) :** ஒவ்வொருவரும் அவருக்கு வேண்டியவாறு சட்டமியற்றிக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றன்றே பொருளாகிறது.

**திரு. நசிருத்தீன் அகமது :** விருப்பமில்லாத ஒருவரின் வாயில் வலிந்து மருந்து ஒன்றை ஊற்ற முயல்கிறீர்கள். இந்தச் சட்டம் எவ்வளவுதான் நல்லதாயிருந்தபோதிலும், விருப்பமில்லாத இந்து சமுதாயத்தின் மீது வலிந்து திணிக்கலாகாது.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** வேண்டாமென யார் கூறுவது? நாங்களனைவரும் அது வேண்டுமென்றே விரும்புகிறோம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** முதலில் நீங்கள் பொதுமக்களின் ஆதரவை உங்கள் பால் திரட்ட வேண்டும். அவர்களை நீங்கள் படிப்படியாக அணுக வேண்டும். முதலில் இதை விருப்பமுள் ளோர்க்கு மட்டும் பயன்படுத்துங்கள். சட்டம் நல்லதாயிருக்கு மெனில் எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ள முன் வருவார்கள்; ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளப் போட்டியிடுவார்கள். சட்டம் மக்களை விருப்பால் ஈர்க்க வேண்டுமேயன்றி வலிந்து திணிக்கப்படலாகாது. இவ்விரு திருத்தங்களின் கோட்பாடும் ஆலோசனையும் உணர்த்துவது இதனைத்தான். ஒவ்வொருவரும் தத்தமக்குச் சட்டமியற்றிக் கொள் கின்ற விவகாரமன்று இது. ஒரு சிலரால் 33 கோடி மக்களின் மேல் சட்டமொன்றைத் திணிக்கும் விவகாரமாகும்....

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** அதைக் கூற நீங்கள் யார்?

**திரு. சியாம் நந்தன் சகாய் :** இப்போதைய சரியான நிலவரம் அதுதான். மேலும் தொடர்க; அவரவர் உச்சக்குரலில் கூச்சல் எழுப் பட்டும்.

**அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், அமர்ந்து கொண்டே ஒருவர்பால் ஒருவர் தூற்றிக்கொள்ளக் கூடாது. அதனால் அவையில் குழப்பமே விளையும் மாண்புறு உறுப்பினர் உரையைத் தொடரலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** எனவேதான் இச்சட்டத்தின் கெடுபிடிகளை நீக்கும் வகையில் இதனை விரும்பியேற்றுக்

கொள்வோர்க்கு மட்டுமே பொருந்தும் என்ற யோசனையை நான் உளமார வரவேற்கிறேன். சட்டம் நல்லதெனில் படிப்படியாக மக்களனைவரும் அதனை ஏற்றுக் கொள்ள முன்வருவர். எனவே தான் இச்சட்டம் அதற்குத் தகுதியானவர்களுக்கு மட்டுமே பொருந்து மென்று ஆக்கப்பட வேண்டும்.

இந்தியா ஒரு பரந்த துணைக் கண்டம்; இங்கு மிக முன்னேறிய மக்களும் வாழ்கிறார்கள்; மிக மிகப் பின்தங்கிய மக்களும் வாழ்கிறார்கள். இந்தச் சட்டம் மாண்புறு உறுப்பினர்கள் பலருக்கு நல்லதாய்த் தோன்றுதவற்குக் காரணம் அவர்கள் மேட்டுக்குடி களிலிருந்து வந்தவர்கள் என்பதுதான். இச்சட்டம் மிக முற்போக் கானது; எனவே, உறுப்பினர்கள் பலர் எங்கிருந்து வந்துள்ளார்களோ அந்த முற்போக்குக் குடிகளுக்கு வேண்டுமானால் அது பொருந்த லாம். ஆனால், பழங்குடியினர், மலைவாழ் மக்கள், மற்றும் பல பிற்பட்ட மக்களுக்குள் பலர் கல்விக்கோ, ஏன் இரு வேளை உணவுக்கோ கூட வழியில்லாதவர்கள். இங்கிருந்து பேனாவால் எழுதிவிட முடியும் என்பதற்காக, இச்சட்டம் அவர்களுக்கெல்லாம் கூட அவர்களது விருப்பத்திற்கெதிராகத் திணிக்கப்பட வேண்டுமா? இவ்விரு திருத்தங்களும் கூறவரும் ஆலோசனைகளின் சாரம் இதுவே. சட்டமியற்றுவதில் தர்க்கத்தைவிட, அனுபவமே சிறந்த வழிகாட்டியாயிருக்க வேண்டும். எனவேதான், இச்சட்டம் அதனை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும் மட்டுமே செல்லுமென ஆக்கவேண்டும். இதற்கு அரைகுறைத் தகுதி நிலை யில் உள்ளவர்கள் காலப்போக்கில் வேண்டுமானால் முழுத் தகுதி பெறலாம்....

**திரு. குர்ஷித்லால்:** எனவேதான் இது தங்களுக்குச் செல்லு மென்று ஆக்கப்படவில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** இந்தச் சட்டத்தின் சிறப்புகளைப் போற்ற இயலாத அளவுக்கு நான் மிகவும் பிற்பட்டவன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். இச்சட்டம் ஒரு பெருங் குளறுபடியே. இந்துக் களின் சட்டம் அதிலொன்றும் அதிகமில்லை. முஸ்லீம் சட்டங் கள், கிறித்தவர் சட்டங்கள் போன்றவற்றிலிருந்து மோசமான பகுதிகளையெல்லாம் எடுத்து இணைத்த கூட்டேயிது. எனக்குப் பொருந்தாத, எனக்கு விரும்புதற்கேற்றதாயில்லாத இச்சட்டத்தை ஏற்றுக்கொண்டு மாண்புறு நண்பர் திரு. குர்ஷித்லால் அவர்களிட மிருந்து நாகரிகமான முற்போக்காளன் என்ற பெயர் வாங்குவதை

விடப் பிற்போக்காளன் என்று பெயரைடுப்பதையே பெரிதும் விரும்புகிறேன். இங்கே பெரிய சிக்கல் என்னவென்றால், நாட்டு மக்கள் அனைவரும் எதிர்க்கும் இச்சட்டத்தை அரசு உரிய காலத்துக்கு முன்னரே கொண்டுவருவதெனக் கொள்கையளவில் முடிவு செய்துவிட்டதுதான்.....

**திரு. பாரதி :** இதைச் சொல்ல நீங்கள் யார்? மக்கள் எதிர்ப்பதாகக் கூறுவது யார்?

**திரு. நசிருத்தீன் அகமது:** வெளியே சென்று பாருங்கள். காந்தி மைதானத்துக்கு நேற்று நீங்கள் சென்றிருந்தால் மக்களது எதிர்ப்பின் அளவை ஓரளவுக்கேனும் கண்டிருக்கவியலும்.

**மாண்புறு உறுப்பினர் ஒருவர் :** மாண்புறு நண்பர் எதற்காக அங்கே சென்றார்?

**திரு. நசிருத்தீன் அகமது:** நாட்டு நிலவரத்தை அறிந்து கொள்ளல் எனது பணியே: அவர்களுக்கு ஆலோசனை கூறவோ, கட்டுப்படுத்தவோ, வழிகாட்டவோ, தவறாக வழிநடத்தவோ நான் அங்கு செல்லவில்லையே. அவை உறுப்பினர் என்ற முறையில் பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்ளல் என் கடமையே. இந்து மக்களின் கருத்து குறிப்பிட்டதொரு திசையில் செல்கிறதென்றால், அதை அறிந்து இவ்வவைக்கு அறிவிக்கும் பணியை, நான் பிற்போக்கானவன் என்று இங்கே பழிக்கப்பட்டாலும், நான் செய்தே தீருவேன். பகுத்தறிவு, சமநீதி இரண்டையும் மறந்து விட்டு நவீனமானவர், சமர்த்தன் என்றெல்லாம் பெயரெடுப்பதில் எனக்கு அக்கறையில்லை.

மாண்புறு உறுப்பினர்களில் சிலர், ''அப்படிச் சொல்வது யார்?'' என்று ஆவேசமாய்க் கேட்டனர். அவர்களெல்லாம், இந்து சமூகத்திற்கு இச்சட்டம் ஏற்புடையதாயுள்ளது; இதை அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்ற எண்ணத்திலே பேசுகிறார்கள். நான் வங்காளத்தைச் சேர்ந்தவன். அவர்களது கருத்தை இவ்வரசு கேட்டபோது, அதைத் தாங்கள் எதிர்ப்பதாகவே வங்காள அரசு கூறியது.

**திருமதி ரேணுகா ரே** (மேற்கு வங்கம்) **:** இப்போது அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

**திரு. நசிருத்தீன் அகமது:** இப்போது அவர்கள் தமது கருத்தை மாற்றிக் கொண்டார்களா என்பது எனக்குத் தெரியாது.

**திருமதி துர்க்காபாய் :** நீங்களும் அவர்களோடு மாறத்தான் வேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** அவர்கள் அண்மையில் கருத்தேதும் வெளியிட்டதாக எனக்குத் தெரியவில்லை. (மேற்கு வங்க) அரசு ஏற்றுக்கொண்ட சட்டக் கருத்து, அவர்களது நீதித்துறைச் செயலர் வாயிலாய் அறிவிக்கப்பட்டு நமக்கெல்லாம் சுற்றறிவிக்கப்பட்டது; அதையன்றி வேறு வதந்திகள் உலவலாம்; எனக்குத் தெரியவில்லை. எமக்கு வேறெந்த மாற்றுத் தகவலும் சுற்றறிவிக்கப்படவில்லை. சில உறுப்பினர்களிடையே வதந்தியாக நிலவும் தகவல்களில் நான் கவனம் செலுத்துதற்கில்லை. வங்க அரசு மசோதாவை எதிர்க்கிறது. மக்கள் பலரும் எதிர்க்கின்றனர்.

**திரு. சோந்தி (பஞ்சாப்) :** அவர்கள் சமரசத்துக்கு வருவதாய்க் கூறப்படுகிறது.

**திரு. நசிருத்தீன் அகமது :** அவர்களுக்கு சமரசத்துக்கு வரும் நோக்கமேதும் இல்லை என்றே நான் கருதுகிறேன். எந்த வழக்கறிஞர் சங்கத்துக்கு வேண்டுமானாலும் சென்று என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் இதில் சலிப்படைந்துள்ளார்கள். இந்த அவையில் மசோதாவை விரைந்து நிறைவேற்றியே தீருவோம் என்ற மிகையார்வமே....

**மாண்புறு உறுப்பினர் ஒருவர்:** இத்திருத்தத்திற்கும் அதற்கும் தொடர்பேதுமுண்டா?

**அவைத் தலைவர்:** திருத்தம் 31க்கு தங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்; இது தொடர்புடையது தான்.

**திருமதி துர்க்காபாய்:** அவர் ஒன்றையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. தியாகி:** மேற்கு வங்க அரசு இந்துச் சட்டத் தொகுப்புக்கு எதிராக உள்ளது என்று மாண்புறு உறுப்பினர் கூறினார். மேற்கு வங்க அரசின் தலைமைச் செயலர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறாரா என்பதை அவரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**திரு. குர்ஷித்லால்:** தலைமைச் செயலரே வங்க அரசு ஆக மாட்டார்.

**திரு. நசிருதீன் அகமது:** இந்திய அரசு இம்மசோதாவைச் சுற்றறிக்கையாய் அனுப்பி (மாநில அரசுகளின்) கருத்தைக் கேட்டுள்ளது. பல்வேறு மாநில அரசுகளும் தெரிவித்த கருத்துக்கள் நமக்குச் சுற்றறிவிக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்க அரசுடன் எனக்குத் தனிப்பட்ட தகவல் தொடர்பு ஏதும் கிடையாது. நமக்கெல்லாம் சுற்றறிவிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் கருத்துக்களை உறுப்பினர்கள் தாங்களே காணலாம். காணில், மேற்கு வங்க அரசு இதனை எதிர்ப்பதைக் காண்பீர்கள்.

**பண்டிட் மாளவியா (உத்தரப்பிரதேசம்) :** அவர்கள் வசதிக்கு மாறானதை ஏன் பார்க்கப் போகிறார்கள்?

**திரு. நசிருத்தீன் அகமது:** வங்க மண்ணுக்கே இச்சட்டம் வசதியானதன்று என்பதை அவர்கள் காண்பார்கள். கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதிகள் வைதிகர்கள் அல்லர்; வம்பர்கள் அல்லர்; அவர்களைக் கற்றவர்கள், நுண்ணறிவு மேம்பட்டவர்கள், பண்பட்டவர்கள், சிறந்த மாந்தர் என்றே நாம் கருத்திற்குரியவர்கள். அவர்கள் அனைவரும் இச்சட்டத் தொகுப்பை எதிர்ப்பதாய்க் கூட்டாகப் பொதுக் கருத்து தெரிவித்துள்ளனர்.

**திரு. இராஜ் பகதூர்:** இம் மசோதாவின் அடித்தளத்தையும் கோட்பாட்டையும் இப்போது தாக்க மாண்புறு உறுப்பினருக்கு அனுமதியுண்டாவென அறிய விரும்புகிறேன். அவர் இப்போது கிளை விதி 2ஐப் பற்றிப் பேசுகின்றாரா, அன்றி முழு மசோதாவையும் பற்றிப் பேசுகின்றாரா?

**சர்தார் ஹுக்கம்சிங்:** இந்துக்கள் இச்சட்டத்தை விரும்பவில்லையென்ற அவரது கூற்றுக்குக் குறுக்கீடுகள் வந்தமையால் அவர் அளித்த பதிலே அது.

**அவைத் தலைவர் :** ஒழுங்கு, ஒழுங்கு தேவை. இதுவரை மாண்புறு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் யாவுமே 31வது திருத்தத்துக்குத் தொடர்புள்ளவைதாம். அதே சமயத்தில் முற்றும் பொதுப்படையாகவே தமது கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாமென்று அவரை வேண்டுகிறேன். அவர் தமது திருத்தம் தொடர்பான கருத்துக்களை மட்டும் கூறுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இச்சட்டத்துக்குக் கட்டுப்பட ஒப்புக் கொள்ளாதவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தலாமா என்பதே இப்போது அவை முன்னர் உள்ள கேள்வி. தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்படவில்லையெனில் விரும்பாதவர்கள் மீது சட்டத்தை வலிந்து திணிப்பதாகத்தானே பொருள். அதனால்தான் எனது கருத்துக்கு வலிமை சேர்ப்பதற்காக, கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேற்கு வங்க அரசு போன்ற சால்புயர் பொறுப்பாளர்களையும் மேற்கோள் காட்டினேன். எனவே, பிற்பட்ட மக்கள் மட்டுமின்றி சமூகத்தின் மேல் மட்டத்திலுள்ள அறிவு மிக்க, பண்பட்ட மக்களும் கூட இச்சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பதையல்லவா இது காட்டு கிறது. இதைக் காட்டத்தான் அம்மேற்கோள்களைப் பயன்படுத் தினேன்.

சட்டத்திற்கு இவ்வளவு எதிர்ப்புகள் இருப்பதால், இச் சட்டத்தினைப் பற்றிப் பெருத்த எதிர்பார்ப்புகளுடன், அதனால் பல நன்மைகளைப் பெறுவோம் என்று எண்ணிக்கொண்டு வரவேற் பவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்த வேண்டுமேயன்றி இச்சட்டத்தை வேண்டாமென்பவர்களுக்கும் பொருந்துமென்று வகுக்கக்கூடாது என்பதையே நான் மீண்டும் இறைஞ்சுகிறேன். இந்த இந்துச் சட்ட மசோதாவை எதிர்ப்பவர்கள் அவையிலே சிறுபான்மை யோராயினும், நாட்டு மக்களில் இதை ஆதரிப்பவர்கள் மிக மிகச் சிறுபான்மையோர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் இச்சட்டத்தை விரும்பாத நிலையில், உங்கள் சிந்தையில் இது நல்ல சட்டம் என்று தோன்றுவதால் மட்டும் அது இயற்றப் படலாமாவென்று வினவுகிறேன். மக்களாட்சிச் சமுதாயத்தில், நலனென்றாலும், மக்கள் விரும்பாத ஒன்றை வலிந்து திணித்த லாகாது. மக்கள் இதை விரும்பவில்லை; ஆகவே மக்கள் மீது இது வலிந்து திணிக்கப்படலாகாது. எனவேதான், இச்சட்டம் விரும்பி யேற்றுக் கொள்கின்ற மக்களுக்குத்தான் பொருந்த வேண்டும் என்று கூறும் இரண்டு உறுப்பினர்களின் தீர்மானங்களை நான் உளமார ஆதரிக்கிறேன். எனவே, இச்சட்டத்தை முதலில் இந்துக்களுக்கென மட்டும் ஆக்குவோம். அவர்களால் இது எப்படியேற்றுக் கொள்ளப் படுகிறது, எப்படி வரவேற்கப்படுகிறது என்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு பின்னர் மற்ற சமூகங்களுக்கும் விரிவாக்குதலைக் கருதுவோம். அதுதான் சரியான முறையாயிருக்கவியலும். ஏற் கெனவே கருத்து தெரிவிக்கப்பட்டவாறு, கொள்கையளவில் இதை ஏற்றுக் கொள்வோமெனில், இதை விரும்பியேற்றுக் கொள்பவர் களுக்காக மட்டுமே இச்சட்டம் இயற்றப்பட வேண்டும்; இதனால் கருத்து வேறுபாடுகளும் நீங்கும். இவ் அவைக்கு வெளியே பெரும் பான்மையோராயும், அவையினுள் சிறுபான்மையினராயும் உள்ள

மக்களின் கசப்புணர்வும் அறவே நீங்கும். இது குறித்துக் கருத்து வேறுபாடு ஏதும் எழாது. இச்சட்டம் நல்லதென்றால், அது மேட்டுக் குடி மக்களுக்கு மட்டுமே நல்லதாய் விளங்கக் காண்கிறேன். நாட்டின் நடுத்தர வர்க்க மக்களுக்கோ அடித்தள மக்களுக்கோ இதனால் சிறிதும் நன்மையில்லை. இக்காரணத்துக்காகவே, அத் திருத்தங்களில் அடங்கியுள்ள யோசனை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து, என்னுடைய திருத்தங்களில் ஒன்றில், துணைக் கிளை விதி (3) நீக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளேன். இத்துணைக் கிளை விதி கூற வருவதாவது :

> ''இச் சட்டத் தொகுப்பின் எல்லாப் பகுதிகளிலும் 'இந்து' என்று சொல் வருமிடங்களில், சமயத்தால் இந்துவாயிருக் கிறாரோ இல்லையோ இச்சட்டத் தொகுப்பின் ஆளுகை வரம்புக்கு உட்படுபவர் அனைவரையும் சுட்டும் பொருளி லேயே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

அதாவது, ஒருவர் இந்துவாயில்லாவிட்டாலும், இச்சட்டத் தின் ஆளுகைக்குட்படுபவரெனில் அவர் இந்துவே எனக் கூறு கிறோம். இது தலைகீழ்வாதமாகும்; இதற்கு பதிலாக இந்து என்பவர் இந்துவே எனக் கூறல் சாலும். சட்ட வரைவாளர் இப்படி நேரடியாய்க் கூறுவதில் நிறைவுகொள்ளாமல் சுற்றி வளைத்துக் குழப்பும் சொற்களைப் பயன்படுத்தியதுடன் துணைக் கிளைவிதி (3)ஐயும் சேர்த்துக் குழப்பத்தை மேலும் பெருக்கியுள் ளார். இச்சட்டத் தொகுப்பு யாருக்குப் பயன்படும்? மனிதன் என்றால் மாந்தரினத்தவனாகிய மனிதன் என்பது போன்ற வரை யரைகளால் யாருக்கும் எவ்விதமான பயனுமில்லை. அது உங்கள் சிந்தனைக் குழப்பத்தையே காட்டும். இந்து அல்லாத ஒருவரும், இச்சட்டத்தொகுப்பின் ஆளுகைக்கு உட்படுவாரெனில், அவர் இந்து அல்லாத போதிலும் இந்துவே என்று நீங்கள் கூற இயலாது. இக்கருத்தை எளிமையாகச் சொல்ல முயல்வதே நன்றாகவும் நிறைவு தருவதாயும் இருக்கும். இரண்டு கால்களும் இரண்டு கைகளும் உள்ளவர்கள் எல்லாம் இந்துக்கள் என்று நீங்கள் கூறினால் கூட எனக்கு மறுப்பில்லை; இந்துக்கள் இந்துக்களே என்று கூறி னாலும் கூடப் பொருளுள்ள தொடரே. ஏற்கெனவே, இந்துக் களெல்லாம் இந்துக்களே; சமண, பௌத்த, சீக்கிய சமயத்தவர் யாவரும் இந்துக்களே; அவர்களுக்கு முறை பிறழ்ந்து பிறந்த குழந்தைகள் யாவரும் இந்துக்களே; முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள் யூதர்கள் அல்லாதோர் யாவரும் இந்துக்களே என்றெல்

லாம் கூறியதுடன் திருப்தியடையாமல், ஒருவர் இந்து அல்லர் எனினும் இச்சட்டத் தொகுப்பின் ஆளுகைக்குட்பட்டவரெனில் அவரும் இந்துவே என்றும் கூறுகிறீர்கள். மாறாக நீங்கள் நேரடியாகவும், தர்க்க ரீதியாகவும், தெளிவாகவும் சொல்ல வருவதைக் கூற வேண்டும். இக் கிளை விதியின் வரைவில் பல பேரின் கைவண்ணம் இருப்பது தெளிவாகிறது; ஆனால் வரைவுதான் தெளிவாயில்லை. இப்படி மிகவும் சுற்றிவளைக்கும் தொடர்களால் பெருத்த குழப்பமே எஞ்சிநிற்கிறது. எனவேதான், துணைக் கிளை விதி (3) நீக்கப்பட வேண்டுமென மீண்டும் பணிந்து வேண்டுகிறேன். இந்து என்பவர் இந்து சமயத்தைப் பின்பற்றும் ஒருவராகத்தான் இருக்க வேண்டும். பௌத்தர்கள், சீக்கியர்கள் சமணர்கள் ஒப்புக்கொண்டால் (மட்டுமே) அவர்கள்மீதும் இச் சட்டத்தின் ஆளுகை வரம்பு செல்லலாம். முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லாதோரும் கூட (இசைவார்களெனில்) இச்சட்டத்துக்குக் கட்டுப்படுவர் எனப் (பின்னர்) விரிவாக்கலாம். ஆனால், 'இந்து அல்லாதோரும் இச் சட்டத்தின்கீழ் வருவரெனில் இந்துக்களே' எனக் கூறுதல் சற்றும் மனநிறைவு தராத தொடரே.

**திரு. தியாகி:** நடைமுறையில் இந்துக்கள் அல்லரெனினும், சட்டத்தில் இந்துக்களாயிருக்கலாம்.

பிற்பகல் 5 மணி

**திரு. நசிருத்தீன் அகமது:** ஒரு மனிதனை 'இந்து' என நீங்கள் அழைக்க விரும்பினால் எனக்கு மறுப்பில்லை. ஆனால் அதை நேரடியாகவே கூறி அவனை இந்துவெனப் பட்டியலில் சேர்த்து விடுங்களேன். சுற்றி வளைக்கும் சொல் தொடர்களும், சுற்றிவளைக்கும் வரையறைகளும் எதற்காக. தங்கள்பால் மிகுந்த மரியதையுடனேயே கூறுகிறேன், இது தங்கள் சிந்தனைக் குழப்பத்தைத்தான் காட்டுகிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** இவ்வவையிலுள்ள வேறெவரையும் விடத்தாங்களே மிகுந்த குழப்பவாதியென வருந்துகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** எனது திருத்தங்கள் மேலும் சில உள்ளன. அவற்றைக் குறித்து நாளை உரையாற்றுவேன்; இத்தகைய குறுக்கீடுகள் இல்லாதிருப்பின் நன்று.

மறு நாள் காலை (அதாவது, பிப்ரவரி 6, 1951 செவ்வாய்) பத்தே முக்கால் மணி வரை அவை ஒத்திவைக்கப்படுகிறது.

## இந்துச் சட்டத் தொகுப்பு (தொடர்கிறது)

[1]*சபாநாயகர்:* இந்துச் சட்டத் தொகுப்பின் பகுதிகள் சிலவற்றுக்குத் திருத்தங்கள் கூறும் பொறுக்குக்குழு அறிக்கை தந்த மசோதா இப்போது அவையின் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. கிளை விதி 2 இன்னும் விவாத கட்டத்திலேயே இருக்கிறது. திரு. நசிருத்தீன் அகமது அவர்கள் தமது உரையைத் தொடரலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்கம்) : ஐயா, இந்த அவை இன்று மிகுந்த நகைச்சுவையுணர்வில் திளைத்திருப்பதைக் காண்கிறேன். ஆனால் நாம் எடுத்துக்கொண்டுள்ள பொருளோ மிக முக்கியமானது; சீரிய கவனத்துடன் கருதப்பட வேண்டியது. நான் நேற்றுச் சில திருத்தங்கள் குறித்து உரையாற்றினேன். 31-வது திருத்தத்தை இப்போது எடுத்துக்கொள்வோம். அதன் வாசகமாவது :

> ''கிளை விதி 2, துணைக் கிளை விதி (4)க்குப் பின்னர், ''(5) சட்டத்தின் இப்பிரிவில் கூறப்பட்டிருப்பது யாதாயினும், எந்தவொரு மாநிலத்திலும், அந்த மாநில அரசு அவ்வப் போது சட்டமியற்றலின் மூலம் எந்தெந்த மக்களுக்கு, எந்தெந்தப் பகுதியினருக்கு, எந்தெந்த வகுப்பினர்க்கு இச் சட்டம் பொருந்துமென்று அறிவிக்கிறதோ அவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும்' எனும் துணைக் கிளை விதி சேர்க்கப்பட வேண்டும்.''

இந்த மசோதா மிகவும் முரண் சிக்கல் வாய்ந்ததாய்க் காணப் படுகிறது. எனவே இதனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் மிகுந்த நன்மைகள் கிடைக்குமென நம்புவோர் கூட, இந்து மக்கள் அனைவர் மீதும் இதனை வலிந்து திணிப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த அவை அப்படிப்பட்ட அவசர முடிவு எதையும் எடுக்கலாகாதென வேண்டுகிறேன். இதனை நிறைவேற்ற அவைக்கு அதிகாரமில்லை யென்று நான் கூறவில்லை; ஆனால் விருப்பமில்லா மக்களின் மீது ஒரு சட்டத்தை வலிந்து திணிக்கும் கடுமையான பொறுப்பை அவசரப்பட்டு ஏற்றுக் கொள்ளலாகாது என்றே வேண்டுகிறேன். குறிப்பாக பிரிட்டிஷ் அரசினரிடமிருந்து விடுதலை பெறுதற்காகச் சிறப்பாக அமைக்கப்பட்டதே இவ்வவை என்பதும் அதுவே

★ நாடாளுமன்ற விவாதங்கள், தொகுதி VIII, பகுதி II பிப்ரவரி, 6, 1951, பக். 2425-83.

காலப்போக்கில் அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

*சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்)* : ஐயா, இவையெல்லாம் தொடர்புள்ளவை தானா? விவாத உரைகளின்போது நான் குறுக்கிட விரும்புவதில்லை; ஆனால் இந்த ஒரு கிளை விதியைப் பற்றி மட்டுமே நான்கு மணிநேரத்துக்கு மேல் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

***மாண்புமிகு சபாநாயகர்:*** இவரது மாறுபட்ட குறிப்புகளிலிருந்து வலிவான வாதம் ஒன்றுக்கான ஆதாரத்தைத் தருகிறாரா என நானும் இரண்டொரு நிமிடங்களாய்க் கூர்ந்து கவனித்து வருகிறேன்.

***திரு. நசிருத்தீன் அகமது :*** அதாவது, இச்சட்டத் தொகுப்பை இயற்றுதற்கான அதிகாரத்தை நாடு இந்த அவைக்குத் தரவில்லையென்பதையே சுட்டுகிறேன். இது இந்தியாவின் சமய, சமுதாய அமைப்பினைப் பாதிக்கின்ற அடிப்படையான விவகாரம். எனவே இதில் நமது நிலை குறித்துச் சரியாகத் தெளிவு படுத்துதல் தொடர்புள்ள செயல்தான். இதன் வரலாற்றை நான் இங்கு விரிவாக எடுத்து உரைக்கப்போவதில்லை; அது ஏற்கெனவே மிக விரிவாக உரைக்கப்பட்டுள்ளது. எனினும், இங்கு உறுப்பினர்களில் மிகப் பலர் புதியவர்கள் என்பதையும், அந்தக் கட்டத்தில் அவர்கள் அவையில் இல்லை என்பதையும் மறந்து விடுதற்கில்லை. எனவே, முக்கியமான கூறுகளைச் சுருக்கமாகவேனும் கூறுதல் அவசியமே எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு சபாநாயகர்:*** இந்த அவையின் பிரதிநிதித்துவத் தன்மை, இத்தகைய சட்டத்தை இயற்றுதற்கான தகுதி, அதிகார வரம்பு ஆகியவை எல்லாம் ஏற்கெனவே தீர்க்கமாக விவாதித்து முடிவு செய்யப்பட்டவையென்பதை மாண்புறு உறுப்பினர்க்கு நினைவூட்டி அத்தகைய சிக்கல்களை மீண்டும் எழுப்புதற்குரிய கட்டம் இதுவன்று என்பதையும் நினைவூட்டுகிறேன். இப்போது நாம் மசோதாவைக் கிளைவிதி வாரியாக விவாதித்துக் கொண்டுள்ளோம். அவையின் தற்போதைய கவனத்தில் இருப்பது கிளை விதி 2. எனவே, உறுப்பினர் கிளை விதி 2ஐப் பற்றியும் அதற்கான திருத்தங்கள் பற்றியும் மட்டுமே பேசலாம். இதைப்பற்றிப் பேசும் போது பரந்துபட்ட கருத்துக்கள் சில முன்வைக்கப்படலாமெனி

னும், அவையின் பிரதிநிதித்துவத் தன்மை சட்டமியற்றும் அதிகாரத்தையும் கேள்விக்குறியாக்கும் அளவுக்குப் போகக்கூடாது. இதனால் முந்தைய கட்டங்களில் கூறப்பட்டவற்றையே தேவையின்றித் திரும்பக் கூறுகின்ற நிலையே தொடரும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஐயா, தங்கள் தீர்ப்புக்குத் தலை வணங்குகிறேன். இந்த அவையின் பிரதிநிதித்துவத்தன்மை குறித்தோ, சட்டமியற்றும் தகுதி குறித்தோ நான் வினா ஏதும் எழுப்பவில்லை. ஆனால் நாம் மக்களைக் கலந்தாலோசிக்கவில்லை என்றுதான் கூற வருகிறேன். நமக்கு சட்டமியற்றும் அதிகாரமிருந்த போதிலும், பிரதிநிதித்துவத் தன்மையிருந்தபோதிலும், இப்படி முழுமையான சமுதாயச் சட்டம் இயற்றுதற்கு நாம் மக்களிட மிருந்து அதிகாரம் (பெறவில்லை) பெற்றிருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. அதைத்தான் நான் இதுவரை வலியுறுத்தி வந்தேன். இதை மேலும் விவரிக்க நான் விரும்பவில்லை. எனது (31வது) திருத்தத்துக்கான வாதத்திற்கு வலிமை சேர்க்கவே அதுகுறித்து ஈண்டு பேச நேர்ந்தது. இந்தத் திருத்தத்தின் மூலம், ஒவ்வொரு மாநிலமும், அம்மாநிலத்தில் எந்தெந்தப் பிரிவு அல்லது பகுதி மக்களுக்கு எந்தெந்தக்கட்டத்தில், எந்தெந்த நிபந்தனைகளுக்குட் பட்டு இச்சட்டத்தின் ஆளுகை வரம்பை நிர்ணயிப்பதன் மூலம் கட்டுப்படுத்த வழிகோருகிறேன். எனவே, இச்சட்டம் ஒட்டுமொத்த மாக எல்லாருக்கும் பொருந்துவதாய் அமையக் கூடாதென்ற கருத்து, திருத்தத்தில் வெளிப்படுகின்றதல்லவா?

அந்தந்த மாநில மக்களின் நிலையை, அம்மக்களின் விருப் பங்கள், தேவைகள் ஆகியவற்றை மாநில அரசுகளே நன்கு அறியும். எனவே, இச்சட்டத்தை எந்த அவைக்குத் தேவையோ அந்த அளவுக்கு மட்டும் மாநில அரசுகள் அவ்வப்போது தகுந்த சட்டங்கள் இயற்றிச் சட்டத்தின் பயன் வரம்பை நிர்ணயிக்கலாம். அறிக்கைகளிலிருந்து நோக்கும்போது, மேற்கு வங்க அரசு இச் சட்டத்தை எதிர்க்கிறதென்பதை அறிகிறேன். நேற்று தனிப்பட்ட செவிவழிச் செய்தியென குறிப்பிட்ட மேற்கு வங்க அமைச்சர் ஒருவர் இச்சட்டத்தை ஆதரிப்பதாய்ச் சில உறுப்பினர்கள் கூறினா ரெனினும் அதை உறுதியான வங்க அரசின் நிலையெனக் கூற வியலாது. இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு மாநில அரசுக்கும் வெவ்வேறு விதமான சிக்கல்கள் நிலவக் காண்கிறோம். ஒவ்வொரு மாநிலத்தின் சிக்கல்களும் அதன் நாகரிக வளர்ச்சி, பொருளாதார நிலை, மற்றும் பிற சூழ்நிலைகள் ஆகிய வற்றையொட்டி அமைந்திருக்கும். இந்நிலைமைகள் மாநிலத்துக்கு

மாநிலம் வெவ்வேறு படிநிலைகளில் மாறுபடுகின்றன என்பதில் ஐயமில்லை. மாண்புறு உறுப்பினர்களில் ஒருசாரார் இச்சட்டம் நன்மை பயப்பது என்று நினைப்பரேல், அவர்களினும் பெருத்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இச்சட்டத்தால் தங்களுக்கு நன்மையேதும் கிடையாது என்று கருதுவோராவார். எனவே, இரு சாராருக்குமிடையே சமரசமான வழியொன்றைக் காணலாமென வேண்டுகிறேன். இச்சட்டம் தங்களுக்கு நன்மை பயப்பதாய்க் கருதுபவர்கள் இச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளட்டும்; ஆனால் ஏனையோர் மீது இதை வலிந்து திணிக்கவேண்டாம்.

மாநிலங்களைப் பொறுத்தமட்டில், ஆங்காங்கு நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப, அம்மாநிலங்களின் சட்டமன்றங்களே, இச் சட்டத்தின் பயன்பாட்டு வரம்புகளை நிலைமைக்கேற்ப முடிவு செய்ய இயலும். இம்மசோதாவின் பொறுப்பாளரான மாண்புறு அமைச்சர் அவர்கள் சட்டத்தின் பொதுச் சீர்மையில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார் என்றாலும், நடைமுறை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு அக்கோட்பாட்டைச் சற்று தளர்த்திக்கொள்ளத் தான் வேண்டும். இந்த மசோதாவைப் பற்றி மக்களின் சரியான கருத்தை நாம் மாநிலச் சட்டமன்றங்களின் வாயிலாகவே அறிய முடியுமாதலால், இச்சட்டத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளிடமே இருக்க வேண்டும். இந்தக் கோட்பாட்டுக்கு மறுப்புகள் ஏதும் இருக்கவியலாது. நீங்கள் கூறுவது போன்று, இந்தச் சட்டத்தினால் மிகுந்த நன்மைகள் உண்டு எனில், இந்தியாவிலுள்ள இந்துக்கள் யாவரும் இதை ஏற்கத் தயாராயுள் ளார்களெனில், மாநிலச் சட்டமன்றங்களிடம் இதைக் குறித்துக் கருத்து கேட்பதால் நாம் இழப்பதொன்றுமில்லையன்றோ. மாநில அரசுகள் பல்வேறு துறைகளின் மூலம் மக்களின் கருத்தை அறிய வியலும்; மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாகவும் பொது மக்களின் கருத்தை அறிதல் எளிது. எனவே, இச்சட்டம் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு மக்களுக்கு எவ்வாறு பயன்படுத்தப் பட வேண்டும் என்பதை அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களின் பொறுப்பில் விட்டு விடலாமென வேண்டுகிறேன். இதை நாம் செய்வோமெனில், இச்சட்டத்தின் பல கெடுபிடிகளில், மறுக்கக் கூடிய கூறுகளும் நீக்க இதற்கான எதிர்ப்புகளும் நீங்கிவிடும். ஒரு மாநில மக்கள் எந்த அளவுக்கு இச்சட்ட மசோதாவை ஏற்கத் தயாராயிருக்கிறார்கள். இது நலன் தருமென்பதில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை எந்த அளவுக்கு அந்த மாநிலச் சட்டமன்றங்கள் ஏற்றுக்கொள்கின்றன என்பதிலிருந்தே அறிய

முடியும். எனவே நீங்கள் கூறுவது போன்று இந்தச் சட்டத்திற்கு நாட்டில் ஏற்புடைமையும் வரவேற்பும் மிகுதியென்றால் எனது திருத்தம் எழுப்புகின்ற முக்கியமான கோட்பாட்டை ஏற்றுக்கொள் வதில் தயக்கமிருக்கக்கூடாது. சில மாநிலங்களில் சில மூலை முடுக்குகளில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் எதிரான விளைவுகள் தோன்றலாம். இச்சட்டத்தில் மணவிலக்கை பாதிக்கக் கூடிய விதிகள் பல உள்ளன; அதே சமயம் நாட்டின் பல்வேறு பகுதி களில் திருமணம், மணமுறிவு குறித்துப் பல்வேறு மரபுநெறிகள் பின்பற்றப்பட்டு வருவதையும் அறிவோம். இச்சட்டத்தை அப்படியே எல்லா மக்களின் மீதும் அமல் செய்வோமெனில், எளிமையான திருமண, மண விலக்கு முறைகளுக்கு மாறாக நாம் சிக்கல் மிகுந்த முறைகளையன்றோ புகுத்தி விடுவோம்? அதற்கேற்ற அளவுக்கு அவர்களுடைய தற்போதைய உரிமைகள் பாதிக்கப்படும். மேலும், இச்சட்டத்தில் கூறப்படுகின்ற திருமணச் சடங்குகளையும், மண முறிவுச் சடங்குகளையும் ஏற்க விரும்பாத மக்கள் பலர் உண்டு. அவர்களுக்கும்கூட நாம் இச்சட்டத்தினால் சிரமங்களையே விளை விக்கிறோம். எந்த நோக்கில் கருதினாலும் ஒரு குறிப்பிட்ட மாநிலத் தின் சூழ்நிலைகளையொட்டி அங்கு இச்சட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்னும் முடிவை அந்த மாநிலத்தின் சட்ட மன்றத்திற்கு விட்டுவிடலே முறையாகும்.

எனது கருத்துக்களை இங்கு எடுத்துரைப்பதற்குள் பன்முறை கேலிகிண்டல்களுக்கு ஆளாகியுள்ளேன் என்பதைத் தலைவர் அவர் களுக்குக் கவனமூட்டுகிறேன்.
(பகல் 12 மணி)

**பாபு ராம்நாராயண சிங் (பீகார்) :** இல்லை.

**திரு. நசிருத்தீன் அகமது :** அதுவே எனது சிறப்புரிமை; இருக் கட்டும். தாமதம் நிகழ்ந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு, அந்த இரண்டுக்குமே காரண கர்த்தர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்தான். முதல் காரணம் பொறுக்குக்குழுவுக்கு மசோதா அனுப்பப்பட் டமையே; அதற்கான காரணத்தை அவரேயறிவார்; பொறுக்குக் குழுவிடமிருந்து திரும்பி வந்தபோது ஏறத்தாழப் புதிய மசோதாவோ எனக் கருதத்தக்க வடிவில் வந்தது. இதனால் எழுந்த கருத்து முரண்பாடுகளின் சிக்கல்களால் ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. தாமதத்தின் இந்தப் பகுதிக்கு நான் காரணமல்ல என்பதைப் பணி வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பிழை ஏதாவதிருக்கு

மெனில், இந்தக் குறைகளைச் சுட்டிக் காட்டியதுதான்; அதன் பின்னர் அவையின் தீர்ப்புக்கு விட்டு விட்டேன்.

**திரு. பி. தாஸ் (ஒரிசா) :** எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** தாமதத்துக்குக் காரணம் டாக்டர் அம்பேத்கர்தான்; இதற்காக நான் அவரைக் குற்றம் சாட்டவில்லை; உள்நோக்கம் ஏதும் கற்பிக்கவில்லை.

**டாக்டர் அம்பேத்கர் :** என்னை மன்னித்து விட்டார் போலும்!

**திரு. நசிருத்தீன் அகமது :** அவர் நிலைமையை மேம்பாடு செய்யக் கருதியிருக்கலாம், ஆனால் சீர்கெடவே அது காரணமாயிருந்தது. தாமதத்துக்கான அடுத்த காரணம்....

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர் எவரும் தாமத உத்திகளைப் பின்பற்றியதாக அவரைக் குற்றம் சாட்டவில்லை. அவ்வாறிருக்க தேவையில்லாத விளக்கங்களையெல்லாம் ஏன் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது புரியவில்லை. என்னைப் பொறுத்தமட்டில், தற்போது அவர் நேரத்தை வீணடித்துக் கொண்டுள்ளார்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இல்லை ஐயா, குறைந்தபட்ச விளக்கமாக ஒரு சொல்லேனும் கூறித் தானாக வேண்டும். நான் குறிப்பிடாவிட்டாலும் அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டிருப்பது உறுதி; நூறாண்டு ஆனாலும் அவைக் குறிப்புகளிலிருந்து படித்தறிவார்கள். தாமதத்திற்கு இரண்டாவது காரணம், பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட மசோதாவில், ஏராளமான பொருளாழமிக்க மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தமையும், அவை உறுப்பினர்கள் அவற்றில் பொறுக்குக் குழு போதிய கவனம் செலுத்தாமையால் விளைந்த குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டி வாதிட நேர்ந்ததும் தான் என்பதைச் சுட்டக் கடமைப்பட்டுள்ளேன். அந்தக் கருத்து முரண்களெல்லாம் நீங்கிவிட்டன; மக்கள் அவற்றை விரைவில் மறந்துவிடுவர்; அலுவலர்களும் அதைவிட விரைவில் மறந்து விடுவார்கள். ஆனால் விந்தையான ஒன்றிப்பாலும், விசித்தரமான தீயூழ் காரணமாயும் அந்தத் தாமதத்துக்கு நான் காரணம் காட்டப்படுகிறேன். இச்சிக்கலையெடுத்துக் கொண்டு விவாதித்தல் மிக

அவசியமெனக் கருதுகிறேன். இந்த விவகாரத்தில், தாமத உத்திகள் அனுமதிக்கப்பட்டவையே என்று ஒரு சமயம் டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் கூறியுள்ளார். ஒரு மசோதா எதிர்க்கப்பட வேண்டியது என உறுப்பினர் ஒருவர் முடிவு செய்தால், அவர் தாமத உத்திகளைப் பயன்படுத்துதல் அனுமதிக்குரியதே. ஒரு சட்டத்தை அவர் எதிர்த்தேயாக வேண்டுமென்றால், நேர் வழிகளிலோ, கோணல் வழிகளிலோ இயன்ற வரை தாமதப்படுத்துவதும் தவறே அல்ல. ஆனால் நான் இந்த மாதிரிக் கோணல் வழிகளைப் பின்பற்றவில்லை எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மசோதா முரண்சிக்கல்கள் பல நிறைந்தது என்றே நம்புகிறேன்; அதனால் முரண் எதிர்வாதங்களைத் தவிர்க்க வியலாது. இம்மசோதாவிலேயே முரண் சிக்கல்கள் அடங்கியுள்ளன.

**டாக்டர் தேஷ்முக் (மத்தியப் பிரதேசம்):** அதாவது, டாக்டர் அம்பேத்காரிடத்திலேயே?

**திரு. நசிருத்தீன் அகமது:** இச்சட்டத்தின் வரைவு சுற்றறிவிக்கப்பட்ட போது, இந்துச் சட்ட ஆணையம், நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து பெருமளவில் மக்கள் கருத்தைத் திரட்டியது. கருத்துக்களின் பெரும்பகுதி மசோதாவுக்கு எதிராகவே இருந்தது. இந்தச் சட்டத்தின் மூலம் தங்களுக்கு விடுதலை கிட்டும் என்று ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் இதே பெண்மணிகள்தான், ஆணையம் வெவ்வேறு இடங்களில் பெருமளவில் கருத்துத் திரட்டுவதை எதிர்த்தார்கள்.

**திரு. தியாகி (உத்தரப்பிரதேசம்) :** இப்போது கிளைவிதி 2 குறித்து விவாதம் நடக்கிறது; (இவரது பேச்சு) அதற்கு எவ்வகையில் தொடர்புடையது?

**மாண்புமிகு சபாநாயகர்:** அதை அவைத் தலைமை கவனித்துக் கொள்ளும். மதிப்பிற்குரிய உறுப்பினர்களே அதைக் கவனித்துக் கொள்வார்களெனில், செய்யலாம்; அதனால் அவரது உரை மேலும் நீண்டு நாளை மாலை வரை தொடரக்கூடும். எனவே அவரது வழியிலேயே பேச விடுவோம். தொடர்பில்லாதவை பேசப்படின் தலைவரால் நிறுத்தப்படும்.

**திரு. நசிருதீன் அகமது:** ஐயா, இந்தக் குறுக்கீடுகளால்தான் இடர்ப்பாடுகள் விளைகின்றன என்பது உறுதி. ஒரு வினா எழுப்பப்

பட்டால் அதற்கு விடையளித்தல் அவசியமாகிறது. இந்தக் குறுக் கீடுகளெல்லாம் எனக்கு மிகவும் பழகிப் போய்விட்டதால் அவற்றை விட வேறேதும் எனக்கு வரவேற்றற்குகந்ததாய்த் தோன்றவில்லை.

ஐயா, கிளைவிதி 2 இச்சட்டம் யாருக்குப் பொருந்தும் என்பதை வரையறுப்பதாதலால் அது மிக முக்கியமானதே. இதற்குப் பல திருத்தங்கள் முன்மொழிப்பட்டிருக்கின்றனவெனினும், அவை யாவற்றின் அடிப்படை நோக்கமும் இச்சட்டம் நேரடியாக அனைவர் மீதும் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதுதான். இந்தச் சட்டத்தின் பெரும் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அவை அதனை ஆற அமர ஆழ்ந்து நோக்கி, அந்தந்தப் பகுதி நிலவரங் களுக்கேற்ப மெதுவாகவே செயல்முறைக்குக் கொண்டுவர வேண்டு மென்றே நான் ஆழ்ந்து உணர்கிறேன். இதை நாம் செய்வோ மெனில், இச்சட்டத்தின் தாக்கத்தை மக்கள் பொறுத்துக்கொள்ள வும், இதற்கெதிரான மறுப்புகள் பெருமளவில் மறையவும் வழி பிறக்கும்.

ஐயா, இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1]**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா** (பஞ்சாப்) : ஐயா, இந்து சட்டத் தொகுப்பு எந்தெந்தக் குடிமக்களுக்கு, எவ்வாறு பயன் படுத்தப்படும் என்பதை, கிளை விதி 2இன் வரம்புக்குள் வரும் மக்கள் யார் என்பதை முடிவு செய்தல் குறித்துத் தங்கள் சீரிய கண்ணோட்டத்திற்காகச் சில சொல் கூறப் பணிவுடன் முன்வரு கிறேன்.

கிளை விதி 2 இன் நோக்கு மிக விரிவானதாகையால் அதைப் பற்றிப் பல்வேறு தரப்பினரும் எடுத்துரைக்கும் கருத்துக் களும் ஆலோசனைகளும், இந்த அவையின் கூர்த்த கவனத்திற் குரியன என்பதில் நான் முந்தைய பேச்சாளரின் கருத்துடன் ஒன்று படுகிறேன். அதேசமயத்தில் நடைமுறை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, இச்சட்டத்தின் பயன்பாட்டை, இந்துச் சட்டம் என்பதன் வரம்பிற்குள் முன்னர் எவ்வகை மக்கள் வந்தனரோ, அவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் என வரம்புறுத்திக்கொள்ள வேண்டும் என்பது சூழலின் கட்டாயமென்றே கருதுகிறேன். அரசியலமைப்புச்

---

1. நா.வி., தொகுதி VIII, பாகம் II, 1951 பிப்ரவரி 6, பக். 2430-52.

சட்டத்தின் வழிகாட்டு நெறிகளின்படி நாடு முழுமைக்கும் பொதுவானதொரு குடிமைச் சட்டம் இயற்றப் பாடுபடுவோரின் பணியை நான் குறைத்து மதிப்பிடவில்லை. நானும் அதை ஆதரிப்பவனே; ஏன் நாடு முழுமையுமே அதை ஆதரிக்கிறது. நாம் அனைவருமே நாடு முழுமைக்கும் பொதுவானதொரு குடிமைச் சட்டத்தை எதிர்பார்த்து நிற்கிறோம். இந்நாட்டுக்கு அரசிய லமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கும் 30 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கான இந்துச் சட்டத் தொகுப்பை உருவாக்கிக் கொண்டு வருவதற்கும் அரும்பாடுபட்டுப் பெருந்தொண்டு ஆற்றியுள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களின் அரிய முயற்சியால் இந்நாட்டுக்குப் பொதுவான குடிமைச் சட்டம் கிடைக்குமென்று ஆவலுடன் எதிர் நோக்குகிறோம்.

ஆனால், அதேசமயத்தில், இதே இந்துச் சட்டத்தொகுப்பை நாட்டின் பொதுக் குடிமைச் சட்டமாக மாற்றி விடலாமென்பது நடைமுறைக்கொவ்வாத கருத்து என்றே எண்ணுகிறேன். (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் ''ஏன் முடியாது?'' எனக் குறுக்கிட்டுக் கேட்கிறார்). ஏன் முடியாது என்ற வினா கேட்கப்படுகிறது. அதற்கான காரணத்தை நான் நிச்சயமாக எடுத்துரைப்பேன். அதற்கு முன்னதாக, முந்தைய பேச்சாளர்களான திருவாளர்கள், சர்வாத்தே, வித்யாவச்சஸ்பதி, ஜஸ்பத்ராய் கபூர் ஆகியோர், இந்நாட்டுக்குப் பொதுக் குடிமைச் சட்டம் தேவை என்று வலியுறுத்தியதன் அடிப்படை உணர்வுகளை நானும் போற்றிப் பகிர்ந்து கொள்பவன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்துச் சட்டத் தொகுப்பின் மெய்யான அடிப்படைகளாயிருக்க வேண்டிய சில கோட்பாடு களையும் சட்டத் தொகுப்பில் இணைக்க டாக்டர் அம்பேத்கர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள் மிகவும் பாராட்டுவதற்குரியனவே. இந்த இந்துச் சட்டத் தொகுப்பின் அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பல கோட்பாடுகள் இந்துச் சட்டத் திலிருந்து மட்டுமே எடுக்கப்பட்வையல்ல என்பதனால், இதன் பயன்பாட்டை இந்து மக்களுக்கு மட்டுமேயென வரம்புறுத்திக் கொள்ளக் கூடாதென்று சிலர் கருதுகின்றனர். சில கோட்பாடு களைப் பொறுத்தமட்டில், அவற்றின் மிகப் பரந்த நோக்கு காரண மாக, வருங்காலத்தில் பொதுக் குடிமைச் சட்டம் ஒன்று உருவாவ தற்கு, அவையே அடித்தளமாய் நின்று உதவுமெனக் கருது கிறேன்.

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, பிப்ரவரி 6, 1951, பக். 2430-52.

முந்தைய பேச்சாளர் குறிப்பிட்டவாறு, திருமணம் என்பது பத்து சமஸ்காரங்களில் ஒன்று என்பது மெய்தான்; அது ஒரு சமய விவகாரம் என்பதும் சரியே. ஆனால், இந்தச் சட்டத் தொகுப்பில் நாம் குடிமைத் திருமணச் சட்ட விதிகளையும் சேர்த்திருக்கின்றோம். எனது பணிவான கருத்தென்னவெனில், குடிமைத் திருமணத்தைப் பொறுத்தமட்டில், அது நாம் எல்லாம் எதிர்நோக்குகின்ற குடிமைச் சட்டத்தில் தான் இடம்பெற வேண்டும்; அது நாட்டு மக்கள் அனைவருக்குமே சமமாக நன்மை பயக்கக்கூடிய சட்டம் என்பது தான். எனவே, இந்த இந்துச் சட்டத் தொகுப்பு என்பது, இந்துச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்தது மட்டுமல்ல, அனைத்து மக்களுக்கும் பொதுவானதாய் அமைந்ததுமல்ல என்று குறை கூறப் படுதல் ஓரளவுக்கு சரிதான் என்றே கருதுகிறேன். மேலும் 1872 ஆம் ஆண்டுச் சட்டத் தொகுப்பின் ஒரு பகுதியான, குடிமைத் திருமணச் சட்டத்தின் கோட்பாடுகள் இந்துச் சட்டத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கக் கூடாது என்பது என் கருத்து. எனவே, இத்தகைய விதிமுறைகளெல்லாம் நீக்கப்பட்டு இந்துச் சட்டத் தொகுப்பு இந்துக்களின் சட்டத் தொகுப்பாக மட்டுமே விளங்க வேண்டுமென்பதையே நான் விரும்புவேன். குடிமைத் திருமணச் சட்டத்தின் கோட்பாடுகள் இந்துச் சட்டத் தொகுப்பின் கோட்பாடு களுடன் கலந்து இணைக்கப்பட்டிருப்பதை நாம் அனுமதித்திருக்கக் கூடாது.

ஐயா, நமது முன்னோர்கள் உருவாக்கிய வகையிலான இந்துச் சட்டம் ஒன்றை நாம் இப்போது வைத்துக் கொள்ள முடியாது என்பதில் தெளிவுறுதியுடன் உள்ளேன். அன்றைய இந்துக்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் தனித்ததொரு சமுதாயமாய் வாழ்ந்து வந்தனர். நாகரிகத்தின் தாக்கமும், பிற சமயங்களின் தாக்கமும் அவர்கள் வாழ்வில் இடம் பெறத் தொடங்கவில்லை. ஆனால் இன்றைக்கோ, முஸ்லீம் சட்டங்களிலாகட்டும், கிறித்தவர் சட்டங் களிலாகட்டும், இந்துச் சட்டங்களிலாகட்டும், அடிப்படைக் கோட் பாடுகள் அவர்களது பழைய சமயச் சட்டங்களிலிருந்து மட்டுமே தோன்றியவையல்ல; மாறாகப் பிற சமயங்களின் தாக்கத்தின் விளைவாய், அனைத்து மாந்தர்க்கும் பொருந்தும் பொதுவான கோட்பாடுகளே அடிப்படையாய் அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாகக் கிறித்தவர் சட்டங்களின் சிறப்புக் கூறாகிய ஒருதார மணச் சட்டம், இன்று இந்து சட்டத் தொகுப்பில் இடம்பெற்றுள் ளது. அடுத்து, இந்துச் சட்டத் தொகுப்பை (இன்று) உருவாக்கி யுள்ளோர், மகள்களுக்கும் சொத்தில் பங்கிருக்க வேண்டுமென்று

விரும்புகிறார்கள். இந்தக் கருத்து, திருமணமான மகள்களைப் பொறுத்தமட்டிலும் இந்துச் சட்டங்களில், ஒருபோதும் இடம் பெற்ற தில்லை. சொல்லப்போனால் இந்துக்களால் ஏதாவதொரு கால கட்டத்தில் நடைமுறை வாழ்க்கையில் சோதித்துப் பார்க்கப்படாத கோட்பாடுகளோ, மரபுகளோ ஏதுமில்லை என்றே கூறிவிடலாம்.

*(திருமதி துர்க்காபாய் அவைத் தலைமையேற்கிறார்)*

இன்றைய நிலைமையோ வேறு; பண்டைக்காலக் கோட் பாடுகள் இந்துச் சட்டத் தொகுப்பில் இடம்பெற வேண்டும் என்று இன்று ஒருவர் கூறுதற்கு அவர் துணிச்சல் மிகுந்தவராயிருக்க வேண்டும். சமுதாயம் முன்னேறும்போது, கூடவே அதன் வாழ்க்கைக் கோட்பாடுகளும் முன்னேறுகின்றன. இன்றைய குடியாட்சி இந்தியா வில், மனுவின் சட்டங்கள் புகுத்தப்பட வேண்டு மென்று ஒருவர் கூறினால், அவரைப் பைத்தியக்காரர் என்றே கருதுவேன். இந்த அவையிலுள்ள எவரேனும், சூத்திரர் எவரும் **ஸ்ருதிகளைப்** படிக்கக் கூடாதென்று கூறுவோர் உண்டா? மாறாக, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஆதரிக்கின்றார் என்ற காரணத்துக்காகவே, இந்தச் சட்டத் தொகுப்பை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு நிலைமைகள் யாவும் மாறிவிட்டன; மதிப்புகள் யாவும் மாறிவிட்டன. இந்துக்கள் இன்றை வரையிலான பழமைச் சுவடுகளை அழித்துவிட்டனர். ''பிறப்பின் அடிப்படையிலான சாதி அமைப்பு இந்து சட்டத் தொகுப்பில் இடம்பெற வேண்டும்'' எனக் கூறும் அளவுக்கு இன்றைக்கு எவருக்கும் துணிவு வராது. சாதி அடிப்படையில் அமையின், இந்துச் சட்டத்தை அறவே ஒதுக்குவேன்.

பண்டைய மூல இந்துச் சட்டத்தில், சாதி அமைப்பென்பது, பிறப்பின் அடிப்படையிலானதன்று என்பதை நான் அறிவேன். இந்துச் சட்டத் தொகுப்போ, இந்துச் சமுதாய அமைப்போ பிறப்பின் அடிப்படையில் அமைந்ததுதான் என யாராவது எனக்கு மெய்ப் பிக்க முடியுமா என்று இந்த அவையிலுள்ளோர்க்கு மட்டுமின்றி அவைக்கு வெளியில் இருப்போர்களுக்கும் அறைகூவல் விடுக் கிறேன். ஆனால் இன்றைக்கு நாம் காண்பதென்ன? சாதிக்குப் பிறப்பே உண்மையான அடிப்படையாய் விளங்குகிறது; இந்துச் சட்டங்கள், சாத்திரங்கள் சரியான கருத்தின்படி, சாதிக்குப் பிறப்பு ஒருபோதும் அடிப்படையாய்க் கொள்ளப்படுவதில்லையென்பதும், பிறப்பால் வேறுபடுத்தலை அன்றைய இந்து சமுதாயம் அறியாது என்பதையும் மறந்துவிட்டோம். அன்றயை மனுவின் சட்டங்களை யெல்லாம், எடுத்துக்காட்டாக, 'சூத்திரர்கள் **ஸ்ருதிகளைப்** படிக்கக்

கூடாது' என்பது உட்பட, இன்றைக்குச் சட்டத்தில் புகுத்தப் போகிறோமா என்ன? இன்று நாம் அவற்றையெல்லாம் ஒரேயடியாகத் துறந்துவிட்டோம்.

இந்தச் சட்டத் தொகுப்பு கேடுகள் நிறைந்தது; இந்துக்களுக்கு மட்டுமே இது பொருந்த வேண்டும் என்பன போன்று கட்டுப்படுத்தப்பட வேண்டிய அளவுக்குக் கேடானது என்றெல்லாம் குறை கூறப்படுதலை நான் தவறென அறைகூவி, அதற்காகப் போராடவும் ஆயத்தமாகவுள்ளேன். இச்சட்டத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கோட்பாடுகளில் சில மிக மிகச் சிறப்பு வாய்ந்தவை; இந்தச் சட்டத் தொகுப்பை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்ளுமளவுக்கு மிகச் சிறப்பு வாய்ந்தவை. நான், முன்னரே குறிப்பிட்டவாறு, இதிலுள்ள விதிகள், சொற்கள் அனைத்தையும் எதிர்ப்பவனல்ல. இன்றைய காலகட்டத்தில் நமது சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு ஒத்திசைவான நல்ல கொள்கைகள் அனைத்தும் இந்த அவையினால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். சட்டத்தின் ஒரு சில விதிமுறைகளை மட்டுமே நான் எதிர்க்கிறேன்; அவை விவாதத்துக்கு வரும் போது அவற்றைக் குறித்து விளக்குவேன். ஆனால், இந்துக்களுக்கோ, முஸ்லீம்களுக்கோ பயன்படுத்த முடியாத அளவுக்கு இது கேடு மிக்க சட்டம் எனக் கூறுவதை, நான் அறவே ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

இந்துக்களைத் தவிர வேறு எந்த சமயத்தவருக்காவது இச் சட்டம் பயன்படுத்தப்பட முடியுமா என்பதைப் பற்றியும் கருதிப் பார்த்தேன். திரு. சர்வாத்தே, திரு. இந்திரா வித்யாவச்சஸ்பதி, திரு. ஜஸ்பத் ராய் கபூர் ஆகியோரின் மூன்று நான்கு திருத்தங்கள் இது குறித்துக் கூறுவனவே. இதைப் பொறுத்த மட்டில் எனது பணிவான கருத்தாவது, என்னால் இயலுமென்றால், நானே முன்வந்து அவற்றை ஆதரித்திருப்பேன். ஆனால் இந்த அவையிலுள்ள இந்துக்களல்லாத உறுப்பினர்களை நோக்கி, இவற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா எனப் பணிவுடன் கேட்கிறேன். இல்லை, அவர்கள் இதை விரும்பவில்லை.

**திரு. ஜே.ஆர். கபூர்** (உத்தரப் பிரதேசம்): இந்துக்களல்லாதவர்களும் கூட, இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளனரே.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அவ்வாறு கூறுதல் முற்றிலும் தவறாகும். முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் ஆகியோர்க்கு இச்சட்டம் பொருந்தாது என்று தெளிவாகவே கூறப்பட்டுள்ளது. எனவே, முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் ஆகியோரும் இதன் வரம்பில் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டு விட்டனர் என நண்பர் கூறுவதை ஏற்க முடியுமா?

**திரு. ஜே.ஆர். கபூர்:** முஸ்லீம்கள், கிறித்தவர்கள் போன்றோர் தவிர்த்த ஏனைய இந்து அல்லாதோர் என்றுதான் நான் கூறினேன்.

**அவைத் தலைவர் :** குறுக்கீடுகள் வேண்டாம்.

**திரு. ஆர்.கே. சௌதுரி (அஸ்ஸாம்) :** இப்போதும் கூட இந்துச் சட்டம், முஸ்லீம்கள், போராக்கள், கட்சுமேமன்கள் ஆகியோருக்கும் பொருந்துமாறு ஆக்கப்படப் போவதில்லையா என்று அவைத் தலைவரைக் கேட்டறிய விரும்புகிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** நான் கூறவந்ததை நண்பரே கேட்டு விட்டார். இன்று நாம் கருதிக்கொண்டுள்ள நோக்கில், இப்போதைய இந்துச் சட்டம் பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மக்களுக்குப் பொருந்தாது. தங்களை இந்துக்களாய்க் கருதாத மக்கள் சிலருக்கு அது பொருந்துமென்பது மெய்யே. அத்தகையோர் இச் சட்டத்தை ஏற்க ஒருபோதும் மறுத்ததில்லை. சீக்கியர், சமணர், பௌத்தர்களைப் பொறுத்தமட்டில் இந்துச் சட்டமே அவர்களுக்குப் பொருந்தும். இப்போது மட்டுமல்ல, பிரிட்டிஷ் அரசு நிறுவப் பட்டதிலிருந்து நெடுங்காலமாகவே அவர்கள் இந்துச் சட்டத்தின் கீழ்தான் வாழ்ந்து வருகிறார்கள். இதனையே அவர்கள் எப்போதும் பயன்படுத்தி வந்துள்ளனர். முஸ்லீம்கள் கூட அதனைப் பயன் படுத்தியுள்ளார்கள் (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்: இப்போது அவர்களை விலக்குகிறீர்களே) அவர்களை நாம் விலக்கப் போவதில்லை. இந்துச் சட்டத் தொகுப்பின் கிளைவிதி 2இன் படி, அச் சட்டம் முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் அல்லாத மக்கள் அனைவருக்குமே பொருந்தும். முஸ்லீம்களைப் பொறுத்த மட்டில், அவர்களது சட்டங்களைப் பொறுத்தமட்டில், நாம் எந்த வொரு மாற்றமும் செய்யவில்லை; அவர்களுக்கென்று நாம் எந்தச் சட்டத்தையும் இயற்றவில்லை. இந்துச் சட்டத்தினால் மாற்றம்

செய்யப்பட்டு அவர்களது மரபு நெறிகள் மறைந்து போயின என்று வர்களுக்குக் கூற நாம் விரும்பவில்லை.

எடுத்துக்காட்டாக பஞ்சாபை நோக்குவோம். இந்துச் சட்டத்துக்கு நாங்கள் அப்படியே கட்டுப்பட்டவர்கள் அல்ல. நான் பஞ்சாப் மாநிலத்தின் கிராமங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். நகரங்களைப் பொறுத்தமட்டில் இந்துக்கள் இந்துச் சட்டங்களினாலும், முஸ்லீம்கள் முஸ்லீம் சட்டங்களாலும் ஆளப்படுகின்றனர். பஞ்சாபின் பிற பகுதிகளைப் பொறுத்தமட்டில் அங்கு வழிகாட்டுவதும், மேலாதிக்கம் செலுத்துவதும் மரபுநெறிகள் மட்டுமே. இந்துக்களாகட்டும், முஸ்லீம்களாகட்டும், சீக்கியர்களாகட்டும் தீர்ப்புகளின் முதன்மை வழிகாட்டியாய் விளங்கியன பழைய மரபுகளே. இன்றைக்கும் கூடப் பழைய மரபுகளே எங்கள் மீது ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்றன. இராத்திகன் எழுதிய பஞ்சாபின் மரபு நெறிச் சட்டம் எனும் நூலின் தொடக்கப்பகுதியிலிருந்து ஒரு மேற்கோளை அவைத்தலைவர் அனுமதியுடன் வாசிக்க விரும்புகிறேன். அது கூறுவதாவது :

> ''இந்த மாநிலத்தில், வாரிசுரிமை, பெண்களின் சிறப்புச் சொத்துரிமை, திருமண உறுதிப்பாடு, திருமணம், மணமுறிவு, வரதட்சிணை, தத்தெடுத்தல், காப்பாளர் பொறுப்பு, சிறுவர் விவகாரம், முறையற்ற குழந்தைகள், குடும்ப உறவுகள், உயில்கள், பாரம்பரியச் சொத்து, நன்கொடை, பாகப் பிரிவினை, சமயச் சடங்குகள், சமயநிறுவனங்கள், வளம் அழிவு தொடர்பான வழக்குகளிலெல்லாம் தீர்ப்புகளுக்கான முதன்மை அடிப்படையாய் விளங்குவது மரபு நெறியே.''

பஞ்சாப் மாநிலத்தில் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் யாவரும் மரபுநெறிச் சட்டங்களின் ஆளுகைக்குட்பட்டு வாழ்பவர்களே. மரபு நெறிச் சட்டங்களோ, நடைமுறையில் இந்த மூன்று தரப்பினருக்குமே ஒன்றுதான். அவையே குடிமைச் சட்டத்திற்கு மிகச் சிறந்ததோர் அடித்தளம் அமைத்துத்தந்தன; அதன் விளைவாக எங்கள் வாழ்வில் ஆண்வழி மரபுரிமைக் கொள்கை இரண்டறக் கலந்து விட்டது; அக்கொள்கையின் அடிப்படையிலேயே பல மரபு நெறிகளும் உருவாகி நிலவி வருகின்றன. இந்த ஆண்வழி மரபுரிமைக் கொள்கை பஞ்சாபில் நிலைத்து நிலவி வருவதனால்,

திருமணமான பெண்களுக்கும் சொத்தில் பங்குண்டு என்னும் வாரிசுரிமைக் கோட்பாட்டை பஞ்சாபியர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். அசாம் மாநிலம் வங்காள உயர்நீதிமன்றத்தின் ஆளுகை வரம்புக்குள் வருவதற்கு முன்னர் அசாமிலும் ஆண்வழி மரபுரிமைக் கோட்பாடே நிலவிவந்தது. இந்த மரபுநெறிக் கோட்பாட்டின் ஊற்று எது என்று காணப்புகின், நாடெங்கிலும் நிலவிய இந்துச் சட்டங்களின் கோட்பாடுகளும் கருத்துக்களுமே பஞ்சாபிலும் பிறபகுதிகளிலும் நிலவும் மரபு நெறிகளுக்கு வித்தாகு மென்பதையறியலாம். மரபுநெறி என்பது பஞ்சாபுக்கு மட்டுமே உரித்தான சிறப்புக் கூறு அன்று; இந்தியாவில் நிலவும் பல்வேறு மரபு நெறிகளே, மூல இந்துச் சட்டங்களின் மாற்றத்திற்குப் பெரிதும் காரணமாய் இருந்துள்ளன.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** குறுக்கீட்டுக்கு மன்னிக்க வேண்டு கிறேன். இந்துச் சட்டத் தொகுப்பின் தெளிவான விதிகள், பஞ்சாபிய மரபு நெறிகளுக்கு அடங்கி விடுமா என்பதையும், இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு பஞ்சாபின் நிலை என்ன என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** பஞ்சாப் சட்டங்களைப் பொறுத்தமட்டில் அவற்றின் ஊற்று எதுவெனச் சுட்டினேன்; அதாவது, பஞ்சாப் சட்டநெறிச் சட்டத்தின், பிரிவு 5 மேலும் 1825 ஆம் ஆண்டின் ஒழுங்குச் சட்டம், 1872ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதி 5 ஆகியவற்றில் எழுதப்பட்ட இராத்திகன் அவர்களின் நூலின் பகுதி 1இல் இருந்தும் மேற்கோள் படித்துக்காட்டினேன். இந்துச் சட்டத்தொகுப்பினால் மாற்றப்பட்டாலன்றி இதுவே பஞ்சாபின் சட்டமாகும். பஞ்சாபிகள் அவர்களது மரபுநெறிச் சட்டங்களின் ஆளுகையிலேயே வாழவிரும்பினால், அப்படியே விட்டுவிடலா மென்னும் போக்கிலேயே திருத்தம் தந்துள்ளேன். (இந்துச் சட்டத் தின்) கிளைவிதி 1க்கு நான் தாக்கல் செய்துள்ள திருத்தத்தின் அடிப்படைக்கருத்து, இச்சட்டத்தின் ஆளுகையில் இருந்து பஞ்சா புக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான். காரணம், நினைவு தெரிந்த நாட்களாய் நாங்கள் மரபுநெறிகளையே பின்பற்றி வரு கிறோம் என்பதும், அந்த மரபுநெறிகள் இந்துச் சட்டத்திலிருந்தும், குடிமைச் சட்டத்தின் அடிப்படைக் கருத்தகளிலிருந்தம் உருவான வையே என்பதும் தான்.

இந்துக்களின் இன்றைய ஒட்டுமொத்த மனப்பான்மையைச் சுட்டிக்காட்டுதற்காக நான் சற்று பொருள் நழுவிப் பேசுவதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். பண்டைக் காலப் பொருளில் இந்நாட்டிலுள்ள எவரேனும் இன்று தம்மை இந்து என்று கூறிக் கொள்ள முன்வருவாரா என்று ஐயமுறுகிறேன். இன்றைய படித்த இந்துக்களின் மனப்பான்மையை நான் அறிவேன்; அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்ட உயர் குழுவினராய்த் தம்மைக் கருதுகின்றனர். அவர்களில் சிலர் ஆரிய சமாஜத்தையும், பிரம்மசமாஜத்தையும் பின்பற்றுபவர்கள். வேறு சிலரின் மனத்திலோ, அடிமனத்திலோ இஸ்லாமிய, கிறித்தவ சமயங்கள் உட்படப் பல்வேறு சமயங் களின் நல்ல கோட்பாடுகளின் அடிப்படையிலான கருத்துக்களின் கலவையே நிலவுகிறது. இப்படிப்பட்ட தேர்ந்தெடுத்த குழு ஒன்றின் உறுப்பினராயிருத்தலை விரும்புகிறோம் என்று எனது சார்பிலும், எனது கற்ற நண்பர்கள் பலரின் சார்பிலும் என்னால் கூறவியலும். உலகின் வெவ்வேறு சமயங்களிலிருந்தும் நல்ல கருத்துக்களை எடுத்துக் கொண்டு இவையே நல்லன என்றும் இவையே இந்துக் கருத்துக்கள் என்றும் கூறுகிறோம். உலகத்தின் பிற பகுதி மக்களும் இதே போன்றுதான் நடந்துகொள்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு விவிலியத்தை முழுமையாக நம்பும் உண்மைக் கிறித் தவர்கள் எவரேனும் உளரா? முகமதியச் சட்டத்திலிருந்தும் என்னால் மேற்கோள் காட்ட வியலும். உண்மையான முகமதியரை எங்கே காண முடியும்? முகமதியர்களின் இறைத்தூதர் 14 வயதுக்குக் குறைவான பெண்ணை மணந்து கொண்டதாக அறிகிறோம். இந்த அவையின் மாண்புறு உறுப்பினர்களுக்கு நன்கு நினைவிருக்கு மென்று கருதுகிறேன்; சாரதா சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, அச்சட்டம் சிறுமிகளை மணந்து கொள்ளும் உரிமையைப் பறிப் பதன் மூலம் முஸ்லீம்களின் சமய விவகாரங்களில் குறுக்கிடுகிற தென்று கூறி, அச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகத்தான், முகமது அலி அவர்கள் அரசியார் தோட்டத்தில் அச்சட்டத்துக்கு விரோதமான திருமணம் ஒன்றை நடத்தினார் என்பதை மறந்துவிட வியலாது. சமயப் பற்றில் ஒரு தலைச் சார்பாளர்கள் எவ்வாறு கூறிக்கொண்டாலும், இன்றைய காலகட்டத்தில் பழமைவாத இந்துக்கள், பழமைவாத முகமதியர்கள், பழமைவாதக் கிறித்தவர்கள் என எவருமிலர். இதுதான் அப்பட்டமான உண்மை. இன்றைய காலகட்டத்திற்கு இசைவானதொரு மசோதாவை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உருவாக்கியளித்திருப்பதில் வியப்பொன்று மில்லை. இச்சட்டத்தொகுப்பின் விதிகளில் சில, முற்றிலும் பழமை

வாதிகளுக்குப் புதியனவாய்த் தோன்றலாம். ஆனால் நவீன நாகரிகத்தில் நாம் மிகவும் முன்னேறியுள்ளோம் என்பதையும், அதிலிருந்து இனி பின்னோக்கிச் செல்ல இயலாது என்பதையும் நாம் உணர வேண்டும். சமூகம் எப்போதோ கைவிட்டுவிட்ட பழமைக் கருத்துக்களையெல்லாம் மீட்டும் உயிர்ப்பித்துக் கொண்டுவர எண்ணுபவர்கள் தப்புக்கணக்கு போடுகின்றனர். சொல்லப் போனால் டாக்டர் அம்பேத்கர் அவர்களே, அவரையுமறியாமல் அத்தகையதொரு முயற்சியில் .......

**திரு. ஆர்.கே. சௌதுரி:** மதிப்பிற்குரிய உறுப்பினர் என்ன சொல்ல வருகிறார் என்பது குறித்து மேலும் மேலும் குழப்பமே மிஞ்சுகிறது. இப்போதைய இந்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது பஞ்சாப் மரபுநெறிச் சட்டத்தை மாற்றச் செயல்பட வேண்டுமென மாண்புறு உறுப்பினர் விரும்புகிறாரா என்பதையும், பஞ்சாப் மரபு நெறிச் சட்டம் அனுமதித்து வரும் இருதார மணம் தடை செய்யப்பட விரும்புகிறாரா என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இரு தாரமணம் தடைசெய்யப்படாதெனில், இச் சட்டத்தின் ஆளுகையிலிருந்து பஞ்சாபுக்கு விலக்கு கோருவதனால், இருதார மணம் குறித்து உறுப்பினரின் கருத்தை அறியவும் விரும்புகிறேன்.

**அவைத் தலைவர் :** பேச்சாளர் தமது கருத்தைத் தெள்ளத் தொளிவாகவே கூறிவந்துள்ளார் என்பதை உணர்ந்து (குறுக்கிட்ட) மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் பேச்சாளரைத் தொடர்ந்து பேச அனுமதிக்குமாறு மட்டுமல்ல, அவரது பேச்சில் இனிமேலும் கூட அவ்வப்போது குறுக்கீடுகள் செய்வதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** எனது மாண்புறு நண்பர் அவர்கள் வினா எழுப்பியது குறித்து நான் மகிழ்ச்சியே அடைகிறேன். சில காலத்திற்கு முன்னர், இந்த அவையில் நான் ஒரு மசோதாவைத் தாக்கல் செய்தபோது, இருதார மணம் குறித்து எனது கருத்தை மிகத் தெளிவாகவே எடுத்துரைத்திருக்கிறேன். அந்த மசோதாவானது, இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள், உட்பட அனைவருக்கும், பஞ்சாப் உட்பட நாடெங்கிலும் ஒருதார மணச் சட்டத்தை நிறுவும் நோக்கு கொண்டது. மரபுநெறிச் சட்டங்களைப் பொறுத்தமட்டில், சமுதாயத்தின், மானுடத்தின் உயர் கொள்கைகளை முழுமையாகவோ, பெரும் பகுதியாகவோ தம்முள் அடக்கும் மரபுநெறிகளை அப்படியே ஏற்றுக் கொள்ளலாமென்பது

எனது கருத்து. பஞ்சாப் மட்டுமல்ல, நாட்டின் எந்த மூலை முடுக்கிலும் இருதார மணம் அனுமதிக்கப்படலாகாது என்பதே என் கருத்து; இதுவே (உறுப்பினருக்கு) எனது பணிவான விடை. அவரது மற்றொரு பொதுவான வினா மூலம், இந்தச் சட்டத் தொகுப்பு மரபுநெறிச் சட்டங்களை மாற்றுமா எனக் கேட்டுள்ளார். இதற்கு விடையாக, பஞ்சாபைப் பொறுத்தமட்டில் நாங்கள் எங்கள் மரபுநெறிகளையே பின்பற்றவும், அதன்படி நடக்கவுமே விரும்புகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரபுநெறிகள் போன்றவை குறித்து, நான் ஏற்கெனவே தாக்கல் செய்துள்ள திருத்தங்களை மாண்புறு நண்பர் நன்கு படித்திருப்பாரெனில், எல்லா இடங்களிலுமே நல்ல மரபுநெறிகள் வழக்கம் போலவே தொடரட்டும் என்பதே என்னுடைய அடிப்படைக் கருத்து என்பதைக் கண்டிருப்பார். ஏனென்றால், மக்களிடையே காலங்காலமாய்ப் புழங்கிவரும் மரபுச் சட்ட நெறிகளை, இந்தச் சட்டமசோதா முயல்வது போன்று, ஒரேயடியாய்த் திடுமென மாற்றுவதை நான் ஆதரிக்கவில்லை. (அப்படியே, அப்படியே என்ற முழக்கம்). அதே சமயம், இந்துச் சட்டத்தின் சில பகுதிகள் இந்திய நாடு முழுமைக்குமாக இயற்றப்படலாகாது என்றும் கருதுகிறேன். நான் விரும்பாத ஒரு கருத்துக்கு ஆதரவு அளிப்பது போன்ற நிலையில் என்னைச் சிக்கவைக்கும் நோக்கில் கைதட்டல் இருந்தமையால், நான் இந்த இந்துச் சட்டத்தொகுப்புக்கு எதிரானவன் அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இச்சட்டத்தில் சில பகுதிகள் நிறைவேற்றப்பட்டேயாக வேண்டுமெனக் கருதும் அதே சமயம், இதில் நான் விரும்பாத பகுதிகளும் சில இருப்பதைக் கூறவேண்டும் (குறுக்கீடுகள்). இந்த இந்துச் சட்டத் தொகுப்பில் உலகனைத்துக்கும் பொருந்தக் கூடியனவும், சமூகத்தை முன்னேற்றக் கூடியதுமான கோட்பாடுகள் பல உள்ளன. அவையனைத்தும் பஞ்சாப் மாநிலத்திற்காகவும் இயற்றப்பட வேண்டுமென விரும்புகிறேன்; அதனாலேயே இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன். நான் ஏற்கெனவே, தாக்கல் செய்திருந்த திருத்தங்களை மாண்புறு உறுப்பினர்கள் படிக்கவில்லையெனத் தோன்றுகிறது. திருத்தத்தின் வாசகம் வருமாறு :

கிளை விதி 2க்கு மாற்றாகப் பின்வருமாறு இடம்பெறலாம்.

''2. பிரிவு 2இன் விதிமுறைகளுக்கு உட்பட்டு, இச்சட்டத் தொகுப்பு பின்வரும் பிரிவினருக்குப் பொருந்தும்:

அ) சமயத்தால் இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் ஆகிய மக்கள் அனைவருக்கும்;

ஆ) சமயத்தால், முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சி யாகவோ யூதராகவோ அல்லாத மக்கள் அனைவருக்கும்;

இ) முஸ்லீமோ, கிறித்தவரோ, பார்சியோ, யூதரோ அல்லாத ஆடவரை மணந்த பெண்கள் ஒவ்வொருவருக்கும்;

ஈ) பெற்றோர்களில் ஒருவரேனும், முஸ்லீமாகவோ கிறித்தவராகவோ, பார்சியாகவோ யூதராகவோ அல்லாத வராயிருக்கக்கூடிய குழந்தைகள் (முறைப்படிப்படியோ, முறை பிறழ்ந்தோ பிறந்திருந்தாலும்) யாவருக்கும்,

உ) முஸ்லீம், கிறித்தவ, பார்சி, யூத சமயங்களைத் தவிர வேறெந்த சமயத்திற்கேனும் மாற்றம் செய்து கொண்ட வர்கள்.''

இந்த இந்துச் சட்டம், இந்த அவையால் திருத்தி நிறைவேற்றப் படும் வகையிலும், எனது விருப்பங்களுக்கு இசைந்தவாறும், பஞ்சாப் மாநிலத்துக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென்று விரும்பு கிறேன். பஞ்சாபைப் பொறுத்தமட்டில் அங்கு எங்கள் நடைமுறை களில் புழங்கி வரும் மரபுநெறிகள் திடுமென மாற்றப்படுவதை நான் விரும்பவில்லை. ஆனால், அவற்றோடிசைந்த சட்ட விதிகள் பஞ்சாப் மாநிலத்திற்குமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் விரும்புகிறேன். இருதார மணம் பஞ்சாபில் இனியும் இருக்கக் கூடாது; பஞ்சாப் மாநில முழுவதும் ஒருதார மணமே நிலவ வேண்டும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** அவ்வாறாயின் எனது பாராட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** நாட்டின் பல்வேறு பகுதி மக்களும், பல்வேறு பிரிவு மக்களும், இச்சட்டத் தொகுப்பிலிருந்து எந்தெந்தக் குறிப்பிட்ட பகுதிகள் தங்களுக்கு ஏற்புடையன என்று தேர்ந் தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான் மதிப்பிற்குரிய உறுப்பினரின் கருத்தா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**அவைத் தலைவர்:** மாண்புறு உறுப்பினர்கள் அவைத் தலைவரை நோக்கித்தான் பேச வேண்டுமேயன்றி, அவைத் தலைவர் வழியாக வினாக்கள் எழுப்பக்கூடாது.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா:** திரு. கபூர் அவர்கள் என்னை நோக்கி இந்த வினாவை எழுப்பியதற்கு மகிழ்ச்சியேயடைகிறேன். திரு. கபூர் அவர்கள் நேற்று பேசும்போது வினா எழுப்பியதற்கு இது பதிலடி போலும். நேற்று நான் கபூர் அவர்களிடம், ஒவ்வொரு கிளை விதியையும் தமக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொள்ள ஒவ்வொரு நபருக்கும் உரிமை தரப்படுமா என்றும், இச்சட்டத்தொகுப்புக்கு அவர் கட்டுப்பட இசைகின்றாரா என்றும் வினாத் தொடுத்தேன். இந்து சட்டத் தொகுப்பில் இருக்கும் பிரிவுகளில், எந்தெந்தப் பிரிவு களுக்குக் கட்டுப்பட இசைகிறார் என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை இந்து, முஸ்லீம், கிறித்தவ, பார்சி, யூத சமயத்தினர் உட்பட ஒவ்வொரு தனி மனிதருக்கும் தரப்படவேண்டுமென்பதே அவ ருடைய முன்மொழிவு எனக் கண்டோம்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** தன் விளக்கமாக, நான் அவ்வாறு ஒருபோது கூறவில்லையென்பதைச் சுட்ட விழைகிறேன். நான் கூறியதென்னவெனில், இந்தச் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளில் தமக்கு இசைவுடைய பிரிவுகள் என்னென்னவென்று தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொரு தனி நபருக்கும் தரப்பட வேண்டு மென்பதுதான். எடுத்துக்காட்டாக, இச்சட்டத்தில் திருமணம் பற்றிய பகுதியை எடுத்துக் கொண்டு ''நான் இந்த அத்தியாயத்துக்குக் கட்டுப்பட இசைகிறேன்'' என்று கூறும் உரிமை ஒவ்வொருவருக் கும் தரப்பட வேண்டும். குறிப்பிட்ட சில பகுதிகளை ஒரு தரப் பினரும், மற்றொரு பகுதியைப் பிறரும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலா மென்று நான் ஒருபோதும் கூறவில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா :** எனது கூற்றை மாண்புறு நண்பர் மறுத்துரைப்பது குறித்து வருந்துகிறேன். (அவர் பேசிய போது) இதே சொற்களால் தான் அவருக்கு வினா தொடுத்தேன். அவரது பதிலில், ஒரு குறிப்பிட்ட பகுதி கூடத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிப்பதைத் தாம் விரும்புவதாகக் கூறியிருந்தார். கெட்ட காலம்! இப்போது அவை அவருக்கு நினைவில்லை.

**திரு. ஜே.ஆர். கபூர்:** எனது நேற்றைய பேச்சைப் படிக்குமாறு அவரை வேண்டுகிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** தங்களுடைய நேற்றைய உரையைப் படித்தே இதைக் கூறுகிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** அவ்வாறு பேசவில்லையென்றே கூறு கிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அருமை நண்பர் இப்போது கூறுவதே அவருடைய சரியான கருத்தென்று எடுத்துக் கொள் கிறேன்.

எனது நண்பரை நான் மிகப் பணிவுடன் கேட்கிறேன்; ''திருமணத்தைப் பொறுத்தமட்டில் இந்துச் சட்டத் தொகுப்புக்குக் கட்டுப்படுகிறேன், ஆனால் வாரிசுரிமை பொறுத்தமட்டில் வேறொரு சட்டத்துக்குக் கட்டுப்படுகிறேன்' என்று ஒருவர் தேர்ந் தெடுத்துக் கொள்வதற்கு உரிமை தரப்படவேண்டுமென்கிறாரா அவர்? இந்துச் சட்டத்தின் ஒரு அத்தியாயத்துக்கு மட்டும் கட்டுப் படுகிறேன், பிற பகுதிகளுக்குக் கட்டுப்பட மாட்டேன் என்று தேர்ந்தெடுக்க எவருக்கும் உரிமை தருதல் இயலாத காரியம் என்றே கூறுவேன். இச்சட்டம் முழுமையுமே ஒருங்கே பின்னிப் பிணைந்ததும் இடைத்தொடர்புகள் கொண்டதுமாய் விளங்கு வதால், சட்டத்தின் ஒரு விதிமுறைக்குக் கட்டுப்படுவதாகவும், பிறிதொரு அத்தியாயத்தின் விதிமுறைகள் சிலவற்றுக்குக் கட்டுப் பட மாட்டேன் என்றும் எந்த ஒரு தனிநபரும் கூற அனுமதிக்க வியலாது. நேற்று நண்பரின் உரையின்போது நான் வினா தொடுத்ததற்குக் காரணமே, நாடுமுழுமைக்குமாக நண்பர் விதிக்க விரும்பிய தவறான திட்டமொன்றைத் தடுக்கும் நோக்கத்தில் தான். அவரது கூற்றுப்படி, முஸ்லீம் ஒருவர் இந்தச் சட்டத் தொகுப்பின் ஒரு அத்தியாயத்துக்குக் கட்டுப்படுவதாயும், பிற விவகாரங்களுக்கு முஸ்லீம் சட்டங்களுக்குக் கட்டுப்படுவதாகவும் கூற இயலும். இது இயலுமா? நடைமுறைக்கு ஒத்துவருமா?; இது முன் வைக்கத்தக்க கருத்துதானா? என்று நான் கேட்க விரும்பு கிறேன். இல்லை என்பதே எனது பதில். இது சிக்கலொன்றைக் குறித்த தவறான அணுகுமுறை எனக் கூறமாட்டேன்; இது சிக்கலே அன்று என்றுதான் கூறுவேன்.

நான் முன்னரே இவ்வவைக்கு உரைத்தவாறு, குடிமைச் சட்டம் பற்றிய சிக்கல் கூட இப்பொருளோடு தொடர்புடையதன்று.

இந்தியா முழுமைக்கும் பொதுவானதொரு குடிமைச் சட்டம் என விரும்புவோரின் உணர்வுகளை நான் போற்றுகிறேன். ஆனால் நடைமுறையில் முஸ்லீம்கள், கிறித்தவர்கள், யூதர்கள் முதலிய அனைவருக்குமாக, ஒரேயொரு பொதுக் குடிமைச் சட்டம் இயற்ற முடியுமென்பதை நான் ஒப்புக் கொள்ளவியலாது. இச்சட்டத் திற்கு நண்பர் நசிருதீன் அகமது அவர்களின் எதிர்க் கருத்து எத்தகையதென்று கண்டோம். இதற்கு அவர் அறவே ஒப்புக்கொள்ள வில்லை. அவர் அரசியலமைப்புச் சட்டம் உறுதியளித்துள்ள அடிப்படை உரிமைகளைச் சுட்டிக்காட்டி, இச்சட்டத்தை இயற்றவே இயலாது என்றார். இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட அவர் இசைவாரா என்று அவர்பால் வினா எழுப்பப்பட்டபோது, ''இந்துக்களுக்கே கேடாக விளங்கும் இச்சட்டத்தை முஸ்லீம்கள், கிறித்தவர்கள் போன்ற பிறரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஏன் விரும்புகிறீர்கள்?'' என எதிர்வினா தொடுத்தார். அதுதான் அவரது எண்ணப்போக்கு. மீண்டும் பணிவுடன் கூறுவேன், இந்த இந்துச் சட்டத்தை கிறித்தவர்கள் முஸ்லீம்கள் உள்ளிட்ட அனை வருக்கும் பொதுவாக்கவேண்டும் என்று கூறும் மாண்புறு நண்பர் களை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்று. இதை ஒரு நகைச்சுவைக்காகக் கூறுகிறார் களென்றால் என்னால் புரிந்து கொள்ள முடியும். இந்து சட்டத் தொகுப்பின் சில விதிமுறைகளின் அபத்தத் தன்மையை வெளிப் படுத்தி அதையே வேண்டாமென்று கூறும் நோக்கில் கூட அவர்கள் இவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால், இந்துச் சட்டத் தொகுப்பு, முஸ்லீம்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்களுக்கும் பயன்படுத்த வேண்டும் எனக் கூறுதல், செயல்பாட்டுக்கொவ்வாத திட்டம் என்றே உறுதியாய்க் கூறுவேன்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** அதன் கோட்பாடுகள்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** கோட்பாடுகள் அனைவருக் கும் பொருந்தும் என நான் கூறுவேன் என்று மாண்புறு நண்பர் சௌதுரி எதிர்பார்க்கிறார்; அவ்வாறு பொருந்தும் என நான் கூறினால் மீண்டும் என்னைப் பாராட்டத் தயாராகவும் இருக் கிறார். பழைய இந்துச் சட்டத்தின் கோட்பாடுகளில் கூடச் சில அனைத்துலகப் பொதுமை வாய்ந்தனவாயும், எல்லாச் சமயங் களுக்கும், எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருத்தத்தக்கனவாயும் இருப்பதை நான் தயக்கமின்றி ஒப்புக்கொள்கிறேன். அந்தக்

கோட்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவையே பொதுக்குடிமைச் சட்டத்தின் அடித்தளமாய் அமைய முடியும். ஏன் இப்போதுங் கூட, சாரதா சட்டம், நிறைவயதுச் சட்டம் போன்ற இன்றைய நடைமுறைச் சட்டங்கள் பலவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள், பொதுக் குடிமைச் சட்டத்துக்குத் தகுந்த அடித்தளமாய் அமையக் கூடியவையே.

அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆம், 15 ஆம் விதிகள் பற்றிப் பேசப்பட்டது. 25ஆம் விதியின் நெறிமுறைகள் சில கேலி செய்யப்பட்டன. மாண்புறு நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள், ''பொது ஒழுங்கு, பொது ஒழுக்கம், பொதுச் சுகாதாரம் குறித்த கட்டுப்பாடுகளுக்குட்பட்டு'' என்ற தொடரைத் தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும், அவை பொருளற்ற சொற்களே என்றும் கூடக் குறிப்பிட்டார். அவை பொருளற்ற சொற்களல்ல; அவை பொருள் பொதிந்த சொற்கள்; பொருள் பொதிந்த சொற்கள் மட்டுமல்ல, மிகுந்த கருத்தாழமும் கொண்டவையே. (அரசிய லமைப்புச் சட்ட) விதிகள் 25, 15 ஆகியவற்றின் பொருளாழத்தை அவர் புரிந்து கொள்ளத் தவறி விட்டார். அரசியலமைப்புச் சட்ட விதி 15இன்படி, பாகுபாடுகள் ஏதும் இருக்கவியலாது. ஆகையால், இந்துச் சட்டம், முஸ்லீம் சட்டம், கிறித்தவர் சட்டம் என வெவ்வேறு சட்டங்களிருக்க முடியாது என்றும் கூறப்பட்டது. எனது பணிவான கருத்து யாதெனில், நாடு முழுமைக்கும் பொதுவான குடிமைச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென நானும் விரும்புவேனென் றாலும், இந்தச் சட்டம், முஸ்லீம் சட்டம், கிறித்தவர் சட்டம் என வெவ்வேறு சட்டங்கள் நிலவுதல் இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரண்பட்ட நிலையன்று என்பதே எனது கருத்து. மேலும் இந்துச் சட்டத்தொகுப்பு இயற்றப்படுதற்கு ஆதரவு தெரிவிக்கும் நண்பர்களில் சிலர், இந்துச் சட்ட விதிகள் அரசியலமைப்புச் சட்ட விதிகள் 15, 25 ஆகியவற்றுடன் ஒத்திசைவு இல்லாதவை என்று பேசுதல் கேட்டு மிகவும் வருந்தினேன். எடுத்துக் காட்டாக, இந்துச் சட்டத் தொகுப்பின் மூலவர் கூட, இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தைப் பொறுத்தமட்டிலும், இந்துச் சட்டத் தொகுப்பைப் பொறுத்தமட்டிலும் சகோதரன், சகோதரிகளுக் கிடையிலாகட்டும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலாகட்டும் எவ்விதப் பாகுபாட்டுக்கும் இடமில்லையென்று கூறியது கேட்டு மிக வருத்தமுற்றேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** பால் இன காரணமான பாகுபாடுகள் மட்டுமே.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அதைக் குறித்தும் கூற வருகிறேன். பால் இன காரணமாக எவ்விதப் பாகுபாட்டுக்கும் இடமில்லையென்றும், அரசியலமைப்புச் சட்டத்தின் 15ஆம், 25ஆம் விதிகள் அத்தகைய பாகுபாட்டுக்கு அறவே தடையாயிருக்கின்றன என்றும் கூடப் பேசப்படுகிறது. இந்துச் சட்டத் தொகுப்புக்கு எதிரான உறுப்பினர்கள் கூட அரசியலமைப்புச் சட்ட விதிகள் 15, 25 ஆகியவை பாகுபாடுகள் ஏதும் செய்வதற்குத் தடையாயிருப்பதாய்ச் சுட்டிக்காட்டுகிறார்கள். பால் இன காரணமாக எவ்விதப் பாகுபாடும் இருக்க முடியாதெனில், இரு பாலாரையும் பாகுபடுத்துகின்ற சட்ட விதிகள் பலவற்றை இந்துச் சட்டத் தொகுதியில் எதற்காகச் சேர்த்தார் என்று மாண்புறு டாக்டர் அம்பேத்கர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்....

**டாக்டர் அம்பேத்கர்:** பால் இன வேறுபாடு மட்டுமே காரணமாகக் கொண்டு பாகுபடுத்தக்கூடிய சட்ட விதிகள் ஏதுமில்லை.

**பண்டித தாகூர்தாஸ் பர்கவா:** (சொத்தில்) திருமணமான பெண்ணுக்குக் கால்பங்கு என்றும், திருமணமாகாத பெண்ணுக்கு அரை பங்கு என்றும் கூறும் விதிமுறை இருக்கிறதே. ஆண் இறந்தால் ஒரு வாரிசுரிமைச் சட்டம், பெண் இறந்தால் வேறு வாரிசுரிமைச் சட்டம் என்ற பாகுபாடுகள் ஏன்?

**டாக்டர் அம்பேத்கர்:** இவற்றில் பால் இன காரணமான பாகுபாடுகள் ஏதுமில்லை.

**திரு. தியாகி :** இறப்பிலும் கூட.

**அவைத் தலைவர்:** பொறுக்குக்குழு அறிக்கையில் அவ்விதப் பாகுபாடு ஏதும் செய்யவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. கே.சி. சர்மா** (உத்தரப்பிரதேசம்) : அந்தக் கிளை விதி இப்போது விவாதத்தில் இல்லை. அவர் தமது திருத்தங்களைப் பற்றி மட்டும் பேசட்டும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** உண்மையில், திருமணமான மகளுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு கிடையாது என்னும் பாகுபாடுகூடப்பால் இன அடிப்படையில் மட்டுமே உருவாக்கப் பட்ட பாகுபாடு அல்ல என்று மாண்புறு நண்பர் சாதிக்கிறார். என்னுடைய கருத்து என்னவென்றால் திருமணமான மகளுக்குத் தந்தையின் சொத்தில் பங்கில்லை என்னும் விதி, ஒத்திசைவானது தான் என்பதே. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் முன்வைத்த வாதத்தைப் பற்றியே பேசுகிறேன். பராமரிப்பு பற்றி நோக்குவோம். மனைவியைப் பரா மரிக்கும் பொறுப்பு கணவனுக்கு உண்டு; ஆனால் மனைவிக்கு கணவரைப் பராமரிக்கும் பொறுப்பு உண்டா?

**திருமதி ரேணுகா ரே** (மேற்கு வங்கம்) : ஏன் கூடாது?

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** அதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உண்டு.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** ஏன் கூடாது என்று மாண்பு மிகு தோழியர் கேட்கின்றார். இத்தகை வீர உணர்வை அவர் மேற்கொண்டு இருத்தல் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. எனினும், அவர் தமது சகோதரி (உறுப்பினர்)களுடன் கலந்தாலோசித்தாரா? நமது அவைத் தலைவரே அவ்வாறு கூற மாட்டாரே. நமது நடைமுறை வாழ்க்கை நிலைகளுக்கு ஒவ்வாத வகையில் பால் இன பாகுபாடற்ற சமத்துவத்தை எல்லாவற்றிலும் திணிக்க முயல்வது தவறான கோட்பாடு என்றே கூறுவேன். திருமணமான பெண்ணுக்குத் தந்தையின் சொத்தில் பங்கில்லை என்று கூறுவதன் மூலம், இந்தச் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணாக எதையும் கூற வில்லை என்றே நான் உறுதி கூறுவேன். அவள் தனது கணவர், மாமனார் சொத்துக்களுக்கு வாரிசாகிறாள். நாம் பெண்களுக்கான உரிமைகளை உணர்ந்து அவர்களுக்கு முழு உரிமையும் வழங்கினா லன்றி, நமது பண்பாட்டு வலிமை பெரிதும் குன்றிவிடுமென்று அடித்துக் கூறுவேன்; ஏனெனில், பெண்களுக்குப் பொருளாதாரம் சுதந்திரம் அளிக்கப்படும்போது மெய்யான பண்பாட்டு வளர்ச்சி தோன்றவியலும். இதற்கு நாமெல்லாம் உறுதிபூண்டிருக்கிறோம் என்று, மசோதா கருதல் கட்டத்திலிருக்கும்போது கூறினேன்; இப்போதும் அதையே வலியுறுத்திக் கூறுகிறேன், நமது சகோதரி களுக்கு நாம் உரிமைகள் கொடுக்காதிருக்க முடியாது. நான் எதிர்ப்பதெல்லாம், இந்த உரிமைகள் கொடுக்கப்படும் முறையைத் தான்.

பஞ்சாபைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கெனவே கூறியுள்ளவாறு, திருமணமான பெண்ணொருத்தி, தனது கணவனின் குடும்பத்திற்குச் செல்லும்போது, அக்குடும்பத்தில் ஒருத்தியாவதுடன், அக்குடும்பத்துக்கு அச்சாணியாகிறாள் என்ற கோட்பாடு எங்களிடம் ஊறிவிட்டது. எனவே பஞ்சாபியரின் சிக்கல் என்னவென்றால், திருமணமான பெண்ணுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு தருதலைப் பஞ்சாபியர்களால் ஏற்றுக்கொள்ளவியலாது. ஏனைய கோட்பாடுகள் அனைத்தையும் நாங்கள் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறோம்; அவை இந்துச் சட்டத்தொகுப்புக்கு மட்டுமல்ல, பொதுக்குடிமைச் சட்டத்துக்கே நல்ல அடித்தளமாய் விளங்கக் கூடியவை. இது நடைமுறை வாழ்க்கை நிலையை ஒட்டி எழும் பாகுபாடேயன்றி, பால் இன காரணமாக மட்டும் எழும் பாகுபாடல்ல. ஆண்கள்தான் உணவு சமைக்க வேண்டும்; பெண்கள் சமைக்கக் கூடாதென்று நீங்கள் சட்டமியற்றுவதாய்க் கொள்வோம். அது சரியாகுமா? முற்றிலும் தவறு என்றே நான் கூறுவேன்.

**பண்டிட் கிருஷ்ண சந்திர சர்மா (உத்தரப் பிரதேசம்):** மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கிளை விதி பற்றிப் பேசுகிறார்? விவாதத்திலிருக்கும் கிளை விதிக்கும் இதற்கும் தொடர்பென்ன?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** தொழிற்சாலைச் சட்டத்தில், பேறுகாலச் (சலுகைகள்) சட்டங்கள் பல இருக்கின்றன. அவையெல்லாம் ஆண்களுக்கும் வேண்டப்படுமோ?

**திருமதி ரேணுகா ரே:** இவையெல்லாவற்றுக்கும், கிளை விதி 2க்கும் என்னதான் தொடர்பு?

**அவைத் தலைவர்:** ஒரே சமயத்தில் பல உறுப்பினர்கள் பேசுவதால், குழப்பமன்றி வேறேதும் விளையாது. தற்போதைய பேச்சாளரைத் தொடர்ந்து பேச விடுங்கள்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** தொடர்பு என்ன என்று வினா எழுப்பியவர்களுக்கு, தொடர்புள்ளது எது, தொடர்பில்லாதது எது என்ற பாகுபாடே தெரியவில்லை என்று பணிவுடன் கூற விரும்புகிறேன். நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் பேசியதை அனைவரும் கேட்டுக் கொண்டுதான் இருந்தீர்கள். அவர் பல்வேறு பரந்த பொருள்களில் பேசினார்; பதிலளிக்கும்போதுகூட விவாதத்துக்கு வந்த கருத்துக்கள் அனைத்தையும் குறித்துப் பேசித்தான் ஆக

வேண்டும். அப்போது, இதுதான் தொடர்புள்ளது; இன்னின்னவை தொடர்பில்லாதவை என்றெல்லாம் கூறமுடியாது. அவர் அப்போது பேசியவை தொடர்புள்ளவை தானெனில், இப்போது நான் பேசுவ தெல்லாம் தொடர்புள்ளவையே. மேலும் கிளை விதி 2 மிகவும் பரந்த கருத்து கொண்டதாகையால், அதைப்பற்றிப் பேசும்போது தொடர்புண்டா எனும் கேள்வி எழவே இடமில்லை. இந்துச் சட்டத் தொகுப்பு முஸ்லீம்களுக்கும் பொருந்துமா பொருந்தாதா என்பது குறித்து, திரு. நசிருத்தீன் அகமது அவர்கள் விரிவாய்ப் பேசினார். அதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தேர்ந்த வழக்கறிஞ ரான அருமை நண்பர் கிருஷ்ண சந்திர சர்மா அவர்கள் நான் கூறியதைத் தொடர்பில்லாதது என்று எவ்வாறுதான் கருதினாரோ என்று வியப்படைகிறேன்.

**திரு. ராஜ்பகதூர் (இராஜஸ்தான்):** ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை; அவை முன்னவர் இருக்கையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வேறு யாரேனும் அமரலாமா?

**அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது இருக்கைக்குச் சென்று அமரலாம்.

**திரு. தியாகி:** தவறு என்ன நடந்துவிட்டது? என்னைப் பார்த்து எல்லோரும் நகைக்கும்படி என்ன நடந்துவிட்டதென அறிய லாமா? இங்குள்ள இருக்கைகள் யாராவது அமருவதற்கென்று தானே இருக்கின்றன. ஓர் இருக்கை காலியாயிருக்கக் கண்டு அமர்ந் தேன்; அவ்வளவே.

**அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் விடுதலைப் போராட்ட உரிமையை இங்கு பயன்படுத்துகிறார் போலும். ஆனால் இது குறித்து மேலே உரையாடல் ஏதும் தேவை யில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** சட்டத்தின் முன் சமத்துவம் என்ற சிக்கல் எழுப்பப்பட்டது. அத்துடன் வேறு பல பொருள் களும் எழுப்பப்பட்டன. அரசியலமைப்புச் சட்ட விதிகள் 25, 15 ஆகியவை குறித்துப் பேசப்பட்டது. அந்த விதிகள் மீறப்படும் எனக் காரணம் கூறி இந்துச் சட்டம் நிறைவேற்றப்பட இயலாதது என்றும் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இவையெல்லாம் சரியல்ல. அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்துள்ள திருத்தங்கள்

ஏற்றுக்கொள்ளப்பட்டாலும்கூட, அப்பகுதியின் வாசகம் சரியாகவும் அமையாது ஆகையால்தான் நான் எனது திருத்தங்களைத் தந்துள்ளேன்.

இந்துக்களல்லாதவர்கள் மீதும் இந்துச் சட்டத்தை திணிக்க முயற்சி நடப்பதாக அருமை நண்பர் நசிருத்தீன் அகமது குற்றம் சாட்டினார். இந்துக்கள் என்று பொதுமக்களால் கருதப்படும் பொருளில் இந்துக்கள் அல்லாத பலர் ஏற்கெனவே (பழைய) இந்துச் சட்டத்தின் வரம்புக்குள்தான் இருக்கிறார்கள் என்பதை நண்பர் சற்றுக் கூர்ந்து நோக்கி உணருவாரேயானால், இவ்வாறு குற்றம் சாட்ட முன்வந்திருக்கமாட்டார். கௌர் அவர்களின் உரையைப் பார்ப்பீர்களாயின், 165 ஆம் பக்கத்தில் என்று எண்ணுகிறேன், தங்களை இந்துக்களாய்க் கருதாதவர் பலர் இன்னும் (பழைய) இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றனர் என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அதாவது நான் வேறு வகையாய்க் கூறுவதெனில், புவியியல் நோக்கில் இந்துக்களாவோர் பலரை இச் சட்டம் கட்டுப்படுத்துகிறது எனலாம். இந்து என்பது வெறும் நம்பிக்கைகளை மட்டுமே குறிப்பதல்ல. இந்து என்ற சொல் புவியியல் சார்ந்த பொருளையும் உடையதே. எனவேதான் (இந்நாட்டினரில்) முஸ்லீம், கிறித்தவ, பார்சி, யூத சட்டங்களின் வரம்புக்குள் வராதவர்கள் அனைவருமே இந்துச் சட்ட வரம்புக்குள் வந்துவிடுகின்றனர். இது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் புதிய புனைவு அல்ல. இந்துக்கள் அல்லாதவர்கள் இந்துச் சட்டத்தின் கீழ் வருவதை அவர் விரும்பவில்லை. எனவே, இது குறித்து நண்பர் நசிருத்தீன் அகமது அவர்களது வாதம் தவறானது. இது சமயமாற்றம் பற்றிய பிரச்சினையே அல்ல. ஒரு நபர் இந்துச் சட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறார் என்றால் அவர் இந்துவாக மாறிவிட்டார் என்று பொருளல்ல. திருமணம், வாரிசுரிமை, மணமுறிவு ஆகிய செயல்பாடுகளை ஒருவர் இந்துச் சட்டவிதிகளின்படி நடத்திக் கொள்வதனாலேயே ஒருவர் இந்து ஆகிவிட மாட்டார். இப்படியான (சமய மாற்ற) செயல்பாடுகளால் எங்களுக்கு ஆதாயம் ஏதுமில்லை. இந்துக்கள் அல்லது முஸ்லீம்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் யாருக்கு என்ன நன்மை? விகிதாசாரப் பிரதிநிதித்துவம், சிறப்புப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் காலமெல்லாம் முடிந்துவிட்டது. ஒரு மனிதர் நல்லதொரு குடிமகனாய் விளங்கும்வரை, அவர் இந்துவா, முஸ்லீமா, கிறித்தவரா, பார்சியா, யூதரா என்பதில் நான் அக்கறை காட்டுவதில்லை. எவரும் தமது மதத்தைக் கைவிட வேண்டுமென்றும் நான் விரும்பவில்லை. நண்பர் நசிருத்தீன் அகமது

அவர்களின் வாதமானது, இந்துக்களின் சதவீதம் அதிகமாயிருக்க வேண்டும், முஸ்லீம்களின் சதவீதம் குறைவாயிருக்க வேண்டும், பார்சிகளின் சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்றெல்லாம் கருதும் பழைய மனப்பான்மைகளே இன்றும் தொடர்கின்றன எனும் கற்பிதத்தின் அடியாய் எழுந்தது. உண்மையைச் சொல்லப் போனால், கிளை விதி 2இன் அடிப்படைக்கருத்து பழைய இந்துச் சட்டத்திலிருந்துதான் எடுக்கப்பட்டுள்ளது. அதன் முதல் பகுதியில், இந்தச் சட்டம் இந்துக்கள் அனைவருக்கும் பொருந்தும் என்றும், இந்து என்பவர்கள் இந்து சமயத்தை அதன் எல்லா வடிவங்களிலும், வளர்ச்சி நிலைகளிலும், வீரசைவம் உட்பட, கடைபிடிப்பவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் என்னுடைய பணிவான கருத்து, கிளையின் இந்தப் பகுதியே தேவையற்றது என்பதே. இது இந்துக்களுக்குப் பொருந்தும் என்று கூறினாலே போதும்; இது சமயத்தின் பல்வேறு வடிவங்கள், வளர்ச்சிப்படிநிலைகள் என்றெல்லாம் விளக்கிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. ஆகவேதான், என்னுடைய திருத்தத்தில், இந்தச் சட்டம் ''(அ) சமயத்தால் இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் ஆவோர் அனைவருக்கும்'' பொருந்தும் என்று கூறியுள்ளேன்.

எனது அடுத்த திருத்தம் ஒரு எதிர்மறைக் கூற்று ஆகும். யார்யாரெல்லாம் இந்தச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட மாட்டார்கள் என்று அது வரையறுக்கிறது. மரபுநெறிச் சட்டங்களும் சிறப்புச் சட்டங்களும் நடைமுறையில் உள்ளன. எடுத்துக்காட்டாக, பஞ்சாபி முஸ்லீம் ஒருவர் தாம் மரபு நெறிச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்புவதாயும், ஷரியத் சட்டத்திற்குட்பட விரும்பவில்லை என்றும் கூற முடியும். முஸ்லீம்களுக்கென நடைமுறையில் உள்ள சட்டங்கள் எவையும், இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படப் போவதில்லை. அவர்களுடைய மரபு நெறிகள் அனைத்தும் அப்படியே பத்திரமாயிருக்கும். எனது திருத்தம்,

> ''(ஆ) முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லாதோர் அனைவரும்;
>
> (இ) சமயத்தால் முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லாதோரை மணந்த பெண்கள் அனைவரும்;
>
> (ஈ) இப்பிரிவின் பொருள்படி இருவருமே இந்துக்களான பெற்றோருக்கு, முறையாகவோ, முறை தவறியோ பிறந்த குழந்தைகள் அனைவரும்;''

இந்தச் சட்டத்திற்கு உட்படுவர் என்று கூறுகிறது.

இதில் பகுதி (ஈ), தேவையற்றது எனப் பணிந்துரைக்கிறேன். இந்துக்களான பெற்றோர்க்குப் பிறக்கும் குழந்தைகள் எவரும் முறையாகப் பிறந்ததா, முறையின்றிப் பிறந்ததா என்ற வினாவுக்கே இடமின்றி இந்துக்களாகத்தான் இருக்க முடியும். அத்தகைய குழந் தையை இந்து எனக் கூறுவது தவறு என்பதற்காகக் கூறவில்லை; கூறுதல் தேவையில்லை என்பதுதான் எனது நிலை. அதாவது, இந்துப் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகள், அதன் காரண மாகவே இந்துக்களாய்த் தானிருக்க முடியும். எனவேதான், நான் இதற்கு மாற்றாக, யாராவது ஒரு பெற்றோர் முஸ்லீமாகவோ, கிறித்தவராகவோ, பார்சியாகவோ யூதராகவோ இல்லாதிருந்தாலும், அக்குழந்தை முறையாகப் பிறந்திருந்தாலும், முறைதவறிப் பிறந் திருந்தாலும் இச்சட்டத்திற்கு உட்படும் எனத் திருத்துதற்கு முன் மொழிந்திருக்கிறேன்.

இதில் வேறொரு நிபந்தனை விதியும் உண்டு; இந்நிபந்தனை விதி வேறொரு நோக்கத்திற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அப்படியே சொல் வயமாக எடுத்துக்கொண்டால், நாம் விலக்க விரும்பாத சில பிரிவினரும் கூட விலக்கப்பட்டுவிடுவர். எடுத்துக்காட்டாகப் பஞ்சாபிகள் அனைவரும் விலக்களிக்கப்பட்டு விடுவர். இந் நிபந்தனைப் பகுதியின் சொல்லாட்சி மிகவும் பொதுப்படையாக அமைந்துள்ளது. இதை இப்படியே இடம்பெற அனுமதிப்போ மாயின், பஞ்சாப் வாரிசுரிமைச் சட்டத்துடன் அது முரண்பட்டு நிற்கும். அதன் வாசகமாவது :

> ''அப்படிக் குறிப்பிடப்பட்ட மனிதர், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருப்பின், இந்துச் சட்டத்தின் ஆளு கைக்கோ, மரபு நெறிச் சட்டத்தின் ஆளுகைக்கோ, இங்கு கூறப்பட்டு இருக்கும் பொருள்கள் எவையிலேனும் அச் சட்டங்களின் நடைமுறைக் கட்டுப்பாட்டுக்கோ உட்பட் டிருக்க மாட்டார் என்று நிறுவப்பட்டால், அத்தகையவரை, அவ்வாறு தொடர்புள்ள விவகாரங்களில் இச்சட்டம் கட்டுப் படுத்தாது.''

இதன் அறுதிப் பொருள் பஞ்சாபிலுள்ள இந்துக்கள் இச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட மாட்டார்கள் என்பதே.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** அதனால் தீங்கு என்ன?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** தீங்கு இதுதான். இச்சட்டம் பஞ்சாப் உட்பட இந்தியா முழுவதும் இச்சட்டத்தின்கீழ் வர வேண்டு மென்று நான் விரும்புகிறேன். நமது சட்டங்களைப் பொறுத்த மட்டில் பயன்பாட்டுச் சீர்மை வேண்டும் என்றும் நமது மரபுநெறிச் சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் நான் ஒரு திருத்தம் தந்துள்ளேன். மேலும், நமது மாநிலச் சட்டமன்றங்கள் விரும்பி னால், இந்தச் சட்டத்தொகுப்பின் சில பகுதிகள் மட்டுமே அம் மாநிலத்துக்குப் பொருந்துமாறு தேர்ந்தெடுத்துக்கொள்ள வழி செய்யும் வகையில் இச்சட்டத்தின் விதிகள் திருத்தப்படலாமென்று ஆலோசனையும் கூறியுள்ளேன். இன்னும் ஒருபடி மேலே சென்று எங்களது வழமைச் சட்டங்களில் வாரிசுரிமை பற்றிய பகுதிகளை அப்படியே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூடக் கோரியுள்ளேன். அதேசமயம் இந்தியாவின் பிற பகுதி களினின்று நாங்கள் தனித்து விடப்படுவதையும் நான் விரும்ப வில்லை. உண்மையில் இந்துச் சட்டத்தின் அடிப்படை நோக்கமே அதுதான். இந்த மசோதாவை அவையின் கருதலுக்காகத் தாக்கல் செய்த போது, டாக்டர் அம்பேத்கர் அவர்கள், இந்தியா முழுமையுமாக இச்சட்டத்தின் ஆளுகைக் கீழ் வரவேண்டுமென்று அவர் விரும்பு வதாகவும், புகழார்ந்த பண்டைக் காலத்தில், இந்துக்களின் வாழ்க்கை நடைமுறைகளில் மெல்ல மெல்ல நுழைந்துவிட்ட சில மரபுகளால் விளைந்த சீர்கேடுகள் திருத்தப்படவேண்டுமென்றும் அவர் பேசியதைக் கேட்டுத் தெளிவாக நினைவில் நிறுத்தியுள் ளேன். நான் அவரது கருத்தோடு ஒத்துப் போகிறேன்; அத்துடன் பஞ்சாப் முழுமையும் இந்துச் சட்டத்தின் ஆளுகையிலிருந்து விலக்கப்பட நான் விரும்பவில்லை. தனித்த பாதையில் நாங்கள் மட்டும் செல்வதைவிட, இந்தியா முழுமையும் இச்சட்டத்தின் ஆளுகைக்குள் வரவேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன். எனவேதான் இந்த நிபந்தனைப் பகுதி நீக்கப்பட வேண்டும், அல்லது எங்களை விலக்காதிருக்குமாறு திருத்தப்பட வேண்டும் என்பதில் ஆவல் மிகுந்தவனாயுள்ளேன்.

எனது திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், துணைக்கிளை விதிகள் (3), (4) ஆகியவை தேவையேயில்லை. எனது கருத்துப்படி, இப்போது இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பவர்கள் அனைவருமே, எனது திருத்தத்தில் கூறப்பட்டிருக்கும் ஐந்து வகை யினருள் ஏதாவதொரு வகையில் உள்ளடங்கியேயிருப்பர். இந்த

மசோதாவைத் தாக்கல் செய்தவரின் கருத்தில் இருந்த நோக்கத்தை அப்படியே எய்துவதற்குத்தான் எனது திருத்தம் முயல்கிறது. சொல் அமைப்பு மட்டுமே வேறுபடுகிறது. இந்தச் சட்டத்தின் ஆளுகை வரம்பைப் பொறுத்தமட்டில், இந்துச் சட்டத்தின்கீழ் இப்போது யாரெல்லாம் உட்பட்டிருக்கின்றனரோ அவர்கள் அனைவரும், (புதிய) இந்துச் சட்டத்தின் ஆளுகை வரம்புக்குள் இருக்க வேண்டும் என்பதிலும், முஸ்லீம்கள், கிறித்தவர்கள், யூதர்கள் மட்டுமே விலக்களிக்கப்பட வேண்டுமென்பதிலும் அவருடன் நான் முழுமையாக ஒத்துப் போகிறேன். அவர்களெல்லாம் இச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதற்கு நான் அவ்வாறு விரும்புகிறேன் என்பது காரணமல்ல; அவர்களெல்லாம் இச்சட்டத்தின் ஆளுகையின்கீழ் வர விரும்பவில்லை என்பதொன்றே காரணம். இச்சட்டத்தின் ஆளுகையின் கீழ் அவர்களும் வரவேண்டுமென்று விரும்பினால், அவ்வாறு அவர்கள் தீர்மானம் இயற்றவோ, முன்மொழிவு ஒன்றின் மூலமோ தங்கள் கருத்தைத் தெரிவிக்கட்டும். இந்துச் சட்டத் தொகுப்பு, குடிமைச் சட்டத்திற்கு மெய்யான அடித்தளமாய் அமைய வேண்டுமென நான் விரும்புகிறேன். பொதுக்குடிமைச் சட்டத்தோடு ஒத்துப் போக இயலாத எந்தக் கோட்பாடும், இந்துச் சட்டத் தொகுப்பில் இடம் பெறுவதை நான் விரும்பவில்லை.

தத்து எடுத்தலைப் பற்றிய பஞ்சாபின் மரபுநெறிச் சட்டம், குடிமைச் சட்டத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது என்று அப்போது கூறியதையே இப்போதும் வலியுறுத்திக் கூறுகிறேன். எனவே அதனால் எவ்விதப் பொருள் வேறுபாடும் விளையப் போவதில்லை.

*__அவைத் தலைவர் :__ மாண்புறு உறுப்பினர், தமது உரையைப் பகலுணவுக்குப் பின்பு தொடர விரும்புகிறாரா? அல்லது மேலும் ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டு இப்போதே முடித்து விட விரும்புகிறாரா?*

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** பகலுணவுக்குப் பின்பு தொடரவே விரும்புகிறேன்.

*(பகலுணவுக்காக, பிற்பகல் இரண்டரை மணி வரை அவை ஒத்திவைக்கப்படுகிறது)*

*(பகலுணவுக்குப் பின்னர் பிற்பகல் இரண்டரை மணிக்கு அவை கூடுகிறது)*

*(துணை சபாநாயகர் தலைமையேற்றுள்ளார்)*

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** ஐயா, முன்னர் அவை கலையும்போது, இச்சட்டத் தொகுப்பில் தத்து எடுத்தல் பற்றிய விதிகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இந்த அவையின் உறுப்பினர்களில் பலர், இந்து சட்டத் தொகுப்புக்கு மாற்றாகப் பொதுக்குடிமைச் சட்டமே வேண்டுமென விரும்புகிறார்களாதலால், இந்துச் சட்டத் தொகுப்பின் தத்தெடுத்தல் பற்றிய விதிகள் மரபுநெறிகளால் மாற்றம் பெற்றவையே என்பதை விளக்கிக் கொண்டிருந்தேன். தத்தெடுத்தல் குறித்த பழைய முறைகள், காலப் போக்கில் பெரிதும் மாறுதலடைந்துள்ளன; தத்தெடுத்தல் என்னும் கருத்தே பல புதிய தன்மைகள், அவை சமயம் சார் தன்மைகள் அல்ல, புகுந்துள்ளன. தத்தெடுத்தலின் மூலம், தத்தெடுக்கப்பட்டவர், தத்தெடுத்தவருக்கு மகனாகிறார் என்ற பழைய கருத்தே இப்போது மங்கி மறைந்துவருகிறது. பஞ்சாபைப் பொறுத்தமட்டில் மரபு நெறிகளின் படி, ஒருவர் யாரை வேண்டுமானாலும், எவ்விதச் சடங்குமில்லாமல் தத்தெடுத்துக் கொள்ள முடியும். அது பழைய ரோமானியர்களின் நியமனதாரர் முறைக்கு ஒப்பானது. அதாவது, தத்தெடுத்தல் என்பது நடைமுறையில் குடும்பத்தின் வாரிசாக, குடும்பப் பெயரின் பாரம்பரியம் தொடர்தல் பொருட்டு நியமிக்கப் படுதலேயாதலால், ஒருவர் தம்மினும் வயதில் மூத்தவர் ஒருவரைக் கூடத் தத்தெடுத்துக்கொள்ள முடியும். அதாவது தம்மினும் மூத்த ஒருவரை இந்துச் சடங்குகளைப் போன்று எவ்விதச் சடங்குகளு மின்றிக் குடும்பத்தின் வாரிசாக நியமிக்க முடியும். அஃதன்றியும் தத்து எடுத்துக் கொள்பவருக்கும் தத்து எடுக்கப்பட்டவருக்கு மிடையிலான உறவுகள் இந்துச் சட்டத்தினைப் போலன்றிச் சற்று வேறுபட்ட வகையில் இருக்கும்.

**திரு. தியாகி:** அதாவது, பஞ்சாபில் தந்தையை விட மகன் வயதில் மூத்தவராயிருக்க முடியும் என்கிறீர்களா?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** சொல்லப்போனால், அருமை நண்பர் தொகுத்துள்ள வினா உண்மையில் இத்துடன் தொடர்பு கொண்டதன்று. எவ்வித சூழ்நிலைகளில் ஒருவர் வாரிசாக நியமிக்கப்படலாம் என்பதை எடுத்துரைத்தேன்; நியமிக்கப்படுவது

(குடும்பத்தின்) வாரிசுதான்; வாரிசாக நியமிக்கப்படுவதனாலேயே ஒருவன் மகனாகி விடமாட்டான். இதுதான் (பஞ்சாப் சட்டத்துக்கும், பிற சட்டங்களுக்கும்) வேறுபாடு தத்தெடுத்தல் முறையில், தத்தெடுக்கப்பட்ட மகன் குடும்பத்தின் பெயரைத் தாங்கி நிற்கிறான். தந்தையின் பெயரைத் தொடர்ந்து நிலை பெறச் செய்து, குடும்பத்தின் தொடர்ச்சி அறாமலிருக்க உதவுகிறான் பஞ்சாபில் குடும்ப மரபு தொடர்வது வேறு வகையில் ஆகும்; அங்கு வாரிசு ஒருவன் நியமிக்கப்படுகிறான்; அவன் குடும்பத்தின் பெயரைத் தாங்கி நிலைநிறுத்துகிறான். ஆதனால்தான் அங்கு மரபு நெறிப்படி நியமிக்கப்படும் வாரிசு மகனாக இருக்க வேண்டும் என்பதில்லை. இந்துச் சட்டத்தில், குறிப்பாகக் கூறப்படவில்லையெனினும், தத்து எடுத்தலின் மூலம் ஒருவருக்கு ஒரு மகன் கிடைக்கிறான் என்ற அடிக்கருத்து பொதிந்துள்ளது. இந்துச் சட்டத்தின்படி, ஒரு பெண் தனக்குக் கணவனாக வரக்கூடிய உறவுள்ள ஒருவரின் மகனைத் தான் தத்தெடுக்க முடியும் என நிலவும் மரபு இதற்குத் தக்க சான்றாகும். இதன் தெளிவான மற்றொரு விளைவு என்னவென்றால், ஒருவர் தமது மகள் வயிற்றுப் பேரனைத் தத்தெடுத்தல் செல்லாது என்பதாம்.

மேலும், இந்துச் சட்டத்தின்படி ஒருவர், தத்தெடுக்கப்பட வேண்டுமெனில், அவர் திருமணமாகாதவராயிருக்க வேண்டும் என்பதுடன் பதினைந்து வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். தத்து எடுத்தற்கு வயது, சடங்குகள் முதலான எந்தவிதக் கட்டுத்தடைகளும் இல்லாத மரபுநெறி .கொண்ட பஞ்சாபியர்கள் இத்தகைய விதிமுறைகளை ஆதரிக்க ஒருபோதும் முன்வர மாட்டார்கள்; அவர்களுக்கு இவை எரிச்சலூட்டுவனவாகவே இருக்கும்.

**திரு. தியாகி:** பஞ்சாபில் மகனும் மற்றொரு மனிதனே என்ற நிலை இருப்பதனால்தான் போலும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** குழந்தையே மனிதனின் தந்தை என்பதை உலகம் முழுவதுமேதான் ஏற்றுக்கொண்டுள்ளதே. எனவே இப்போது பஞ்சாபில் வாரிசு நியமனம் செய்யப்படுதல் என்பது தத்தெடுத்தல் போன்றதொரு மரபுச் செயல்பாடே. எனது பணிவான வேண்டுகோளாவது தென் பகுதிகளில் மரபாய் நிலவும் மருமக்கதாயம் போன்ற சட்ட முறைகளையெல்லாம் ஏற்று உள்ளடக்கும் வகையில் தாராளமாகத் தயவு காட்டிய டாக்டர் அம்பேத்கர்

அவர்கள், எங்கள் மரபுநெறிகளுடனும் ஒத்திசைவு காணும் வகையில் திருமணம், தத்தெடுத்தல் போன்றவற்றுக்கான விதிமுறைகளைத் தக்கவாறு திருத்தியமைத்து, வெவ்வேறு மரபுநெறிகளைக் கடைபிடிப்பவர்களுக்கும்கூட இந்துச் சட்டம் முரணாயிராதவண்ணம், இந்துச் சட்டத்தின் அமைப்பினைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதுதான்; இதன் மூலம் அவரவர் மரபு நெறிகளும் தொடர அனுமதிப்போம். இச்சட்டத் தொகுப்பு இந்துச் சட்டங்களின் மூல வேரையே தொடுவதொன்றாகும். இச்சட்டம் அனைத்துமடங்கிய முழுமையான தொகுதி என்பதற்காக வரவேற்கிறோம்; அதேசமயம் மக்களின் அன்றாட வாழ்க்கை நெறிகளில் அதிரடி மாற்றங்கள் தோற்றுவிக்கக் கூடிய முரண் கருத்துக்கள், விதிகளிருப்பின், அத்தகைய பகுதிகளையெல்லாம், முரண் எதிர்க் கருத்துக்கள் நீங்குமாறு தக்கவண்ணம் செம்மைப்படுத்தியளிக்குமாறு டாக்டர் அம்பேத்கர் அவர்களை நான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இச்சட்டத் தொகுப்பைத் தாக்கல் செய்தபோது அவர் மிக தாராளமானவராக, பல்வேறு மக்களின் விருப்புகளையெல்லாம் இதற்குள் கொணடுவர ஆவல் கொண்டவராக, அந்நோக்கில் எழும் திருத்தங்களை வரவேற்கும் உளத்தினராய் இருக்கக் கண்டோம்.

இந்துச் சட்டத்தின் இப்போதைய வடிவில், தத்தெடுத்தல், திருமணமான பெண்ணுக்குச் சொத்துரிமை ஆகியவை பற்றிய விதிகள், இவை வற்புறுத்தப்பட்டால் பஞ்சாபியர்கள் இந்துச் சட்டமே தங்களுக்கு வேண்டாமென்று தூக்கியெறியக்கூடிய அளவுக்கு அவர்களது மரபுநெறிகளுடன் முரண்படுகின்றன. இதையும் மீறி இவை எங்கள் மீது திணிக்கப்பட்டால், நான் கடைசியாகக் கூறியதுபோல் அங்கு புரட்சிதான் தோன்றுமென்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் பரட்சி தோன்றும் என்று கூறுவது, எங்களுக்கு அதற்கான வலிமையிருக்கிறது என்னும் அடிப்படையில் அல்ல; எங்கள் மரபுகளுக்கு முரணாக எதையும் எங்கள் மீது திணித்தால் அதையும் செரித்துக்கொண்டு போக எங்கள் உள்ளங்கள் ஒருபோதும் இசைய மாட்டா என்பதன் அடிப்படையிலேயே கூறுகிறேன். இந்துச் சட்டத்தால் நேரக்கூடிய ஒரு விளைவைச் சுட்டி விளக்குவேன். இந்துச் சட்டத்தில் தந்தை இறக்கும்போது தமது விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் சொத்தை எழுதிவைக்க அனுமதியிருப்பதால், மகள்களுக்குச் சொத்தில் பங்கேதும் இல்லாதவாறு கட்டாயப்படுத்தி எழுதுவிக்கப்படும் உயில்களின் எண்ணிக்கை பெருகும். மகள்களுக்குச் சொத்தில் பங்கு இல்லாமல் போவதை நான் ஒன்றும் எதிர்ப்பவனல்ல. பெண்

மக்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென நீங்கள் விரும்பினால், அதற்கு மக்களின் ஆதரவும் இருக்குமானால், தாராளமாக வழங்கிக் கொள்ளுங்கள். அதற்கு நான் மறுப்பேதும் கூறமாட்டேன். வேண்டத் தகாத சூழல்களில் அதைப் புகுத்த முனையும்போதுதான் எதிர்க்கிறோம். மக்கள் தங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் பெற்றுக் கொள்ளும் அளவுக்குப் பஞ்சாபியர்கள் அவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. எனினும், பஞ்சாபில் பெண்கள் நடத்தப்படும் அளவுக்குக்கூட நல்லமுறையில், சென்னை (மாநிலம்), போன்ற பல இடங்களில் அவர்கள் நடத்தப்படுவதில்லை. பஞ்சாபில் திருமணத்தின்போது மகட்கொடையாக ஏராளமான சொத்து பெண்மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பஞ்சாபில் எந்தவொரு திருமண விழாவுக்குச் சென்றாலும், குறிப்பாகச் செல்வந்தர்கள் வீட்டுத்திருமணங்களில் - ஆயிரக்கணக்கான ரூபாயளவுக்கு மகட் கொடை வழங்கப்படுவதைக் காணலாம். தந்தை தனது சம்பாத்தியத்தில் சேர்த்த சொத்தைப் பொறுத்தமட்டில், கடந்த 50 ஆண்டுகளில், எமது உயர்நீதிமன்றங்கள் மாற்றமொன்றைச் செய்துள்ளன. 1909ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, பெற்றோரின் சுய சம்பாத்தியத்தில் கூடப் பெண் மக்களுக்குப் பங்கேதும் இல்லாமல் இருந்தது. இப்போது, மகன் ஏதும் இல்லையேல், சுயசம்பாத்தியச் சொத்தில் (உரிமையுள்ள) அனைவரோடு மகளுக்கும் சமமான பங்கு கிடைக்கிறது. ஆனால், இது போதுமான நீதியாகாது என்றே நான் கருதுகிறேன். இந்திய நாட்டு பெண்மணிகளோடு, சேர்ந்து நானும், திருமணமாகாத பெண்களுக்கு சொத்தில் சமபங்கு, கிடைக்க வேண்டுமென்று கோருகிறேன்; அவர்களுக்கு (மகனுக்குக் கிடைப்பதில்) பாதிப்பங்கு கொடுத்தால் போதாது. ஆனால் மணமான பெண்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் தமது கணவரோடு சேர்ந்து மாமனாரின் சொத்தில் பங்கு பெற வேண்டும் என்றுதான் கருதுகிறேன். அதாவது, திருமணமானவுடன், கணவன், மனைவி இருவரும் தங்கள் சொத்துக்களை, ஒரே சொத்தாய் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் அச் சொத்தில் (திருமணமான) பெண்ணுக்கு முழு சொத்து உரிமை தரும் வகையில் நமது விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும்.

நமது நாட்டுப் பெண்களுக்கு முழு உரிமையும் தருவதை நான் எதிர்ப்பதாய்க் கருத வேண்டாம்; ஆனால் ஒரு பெண்ணுக்குத் தனது மாமனாரின் சொத்து, தந்தையின் சொத்து இரண்டிலுமே பங்கு தரவேண்டுமென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை; அதைத்தான் நான் எதிர்க்கிறேன். நமது சமூகம், குடும்பம் பற்றிய

கருத்துக்களுக்குக் கடுமையான அதிர்ச்சி மாற்றங்கள் கூடாது. இன்றைய நிலையில், மகனே குடும்பத்தின் அச்சாணி; அவனே குடும்பத்தைத் தாங்கி நடத்துகிறான். பெண்ணோ, மற்றொரு குடும்பத்திற்குச் சென்று அதன் உட்கருவாய் இணைந்து விடுகிறாள். இந்நிலையே தொடர வேண்டும். சமூகம் என்பதைப் பற்றிய நமது கண்ணோட்டமே முழுமையாக மாறினாலன்றி, (அது படிப்படியாய் மாற வேண்டுமேயன்றித் திடுமென ஒரேயடியாய் மாறிவிடலாகாதென்பதே எனது பணிவான கருத்து), இம்மாற்றம் மட்டுமே செய்யப்படின், இப்பெரும் மாற்றத்தின் விளைவாகப் பெண்கள் இருவகையிலும் இழப்பையே அடைவர்: திருமணத்தின்போது, ''இவ்வளவு மகட்கொடை ஏன் தரவேண்டும்?; அவளுக்குத்தான் சொத்தில் பங்கு உள்ளதே'' என்று மகன்கள் கேட்பர். வாரிசுரிமை (சொத்துரிமை) அடுத்த தலைமுறைக்கு மாறும் கட்டத்தில், தந்தை பெரும்பாலும் மகன்களின் தயவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கட்டாயமிருக்கலாம்; அப்போது ஏதேனும் (வஞ்சனையான) உடன்பாட்டுப் பத்திரம் அல்லது உயில் மூலமாய், மகளுடைய வாரிசுரிமை மறுக்கப்படலாகும். எனவே இருவகையாலும் பெண் மக்கட்கு, ஒன்றுங் கிடைக்காமல் போக நேரிடும்; இது நாம் நமது பெண்மக்களை நடத்துதற்குரிய நன்முறையன்று.

''எந்தெந்தக் குடிமக்களுக்கு இச்சட்டம் பொருந்தலாம்?'' என்று எங்களைக் கேட்பீர்களாயின், கடந்த பல நூற்றாண்டுக் காலமாக எங்களிடையே தொடர்ந்து பழங்கிவரும் எங்கள் மரபுகளையும், விருப்பங்களையும் மதிக்காத பான்மையில் இச்சட்டம் இயற்றப்படுமேயானால், அதனால் முரண்பூசல்கள் விளையுமேயானால், இறுதியாக, ''தயைகூர்ந்து எங்கள் போக்கிலேயே எங்களை விட்டுவிடுங்கள்'' என்றுதான் கூற நேரும் என்பதே எனது தாழ்மையான கருத்து. இந்தச் சட்டத்திலுள்ள நல்ல பகுதிகளுக்கு, எனது விருப்பாதரவு என்றும் உண்டு; எனவே நான் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பணிவுடன் வேண்டுவதெல்லாம், இதற்கு நல்லாதரவும் ஆதரவும் காட்டும் அனைவரையும் வேண்டுவதெல்லாம், இப்பொருள் குறித்த எங்களது விருப்பங்களை, உணர்வுகளை மதித்து, எங்கள் மாநிலத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் விரும்பும் மரபுநெறிகளை நாங்கள் தொடர்ந்து பின்பற்றி வர இடமளிக்கும் வகையில் இச்சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதே. இதன் சாரத்தையே, இம்மசோதாவின் பகுதி Iக்கான திருத்தமாகத் தந்துள்ளோம்.

**திரு. தியாகி:** பெரும்பான்மையோரின் கருத்தை அறிந்து கொள்வது எப்படி?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** பஞ்சாபைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையோரின் கருத்து என்ன என்பது தெளிவாகவே யுள்ளது. நீங்கள் எந்த நகரத்துக்கோ, சிற்றூர்க்கோ சென்று இந்த மசோதாவினால் பாதிக்கப்படக்கூடிய எந்த நபரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்; நான் இன்று பணிவுடன் அவையில் கூறிக் கொண்டிருப்பதைத்தான் அவரும் கூறுவார். பஞ்சாபைப் பொறுத்த மட்டில், இதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கும் இடமே கிடையாது. எனவேதான் நான் மிகப் பணிவோடு வேண்டுகிறேன், நீங்கள் இச்சட்டத்தைப் பஞ்சாபிலும் நடைமுறைப்படுத்துவதாயிருந்தால், இச்சட்டம் பஞ்சாபில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதே எனது விருப்பம், நான் குறிப்பிட்ட திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகிறேன். இச்சட்டம் கேடானதல்ல; இதில் ஏதோ கேடு பொதிந்திருப்பதாய்க் கூறப்படுவது முற்றிலும் தவறாகும். சட்டத்தில் எவ்விதத் தவறும் இல்லை. நாம் பல நூற்றாண்டுகளாய் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது நாட்டுக்கு விளைவிக்கப்பட்ட சேதம் விரைவில் சரிசெய்யப் பட வேண்டும். எனவே நான் இச்சட்டத்தை முழுமையாக ஆதரிக்கிறேன்; ஆனால் சமூகத்தில் காலம் காலமாய் நிலவிவரும் மரபு நெறிகள் மதிக்கப்படாது போனால், மக்களின் உணர்வுகள் மிகப் பாதிக்கப்படும்; அதன் விளைவாய் இந்து சமுதாயத்திலிருந்து எண்ணற்ற பல வழக்குகளை எதிர்கொள்ள நேரிடும். பஞ்சாபில் ஒவ்வொரு குடும்பமும் பாதிக்கப்படும். எனவே வழக்குகளைத் தவிர வேறெதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. மக்களின் விருப்பத்திற்கு மாறாக நீங்கள் சொத்துப் பிரிவினைச் சட்டம் ஒன்றையும் கொண்டுவரவுள்ளீர்கள். விளைவு என்னவாகும்? ஒவ்வொருவர் இறப்பின்போதும், ''தந்தையின் சொத்துக்களை எப்படி மதிப்பிடுவதென்று பார்ப்போம்'' என்ற சிக்கல்தான் முன்வந்து நிற்கும். தந்தையின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படும்; மகள்களின் சொத்துப் பங்கையும் விலைகொடுத்து வாங்கிக்கொள்ளக்கூடிய அளவில், மகன்களிடையே போதிய பணமிருக்காது; அதனால் இடர்ப்பாடுகளே விளையும். நாற்பதாண்டுகளுக்கு மேலாக வழக்கறிஞராய்த் தொழில்புரிந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் நான் இதனைக் கூறுகிறேன்.

**பண்டிட் கிருஷ்ணசந்திர சர்மா:** தாங்கள் குற்றவியல் நீதிமன்றங்களில்தானே தொழில் புரிந்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அவைத் தலைவரை நோக்கித்தான் பேச வேண்டும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** பேசிய மாண்புறு உறுப்பினரும் குற்றவியல் வழக்கறிஞர்தான். அவர் மீது நான் மிகவும் மதிப்பு வைத்துள்ளேன். இருப்பினும் குற்றவியல் வழக்கறிஞரின் பணி எத்தகையது என்பது குறித்து அவரது கருத்துவேறு, எனது கருத்து வேறு. நான் குற்றவியல் வழக்குகளில் மட்டுமின்றி, உரிமையியல் வழக்குகளிலும் பணிபுரிந்துள்ளேன். எனினும் நான் குற்றவியல் வழக்கறிஞர் எனப்படுவதில் பெருமிதம் அடைகிறேன்; ஆயினும் நான் (மற்ற சட்டங்களைப் பொறுத்தமட்டில்) கண்மூடியாய் இருக்க வேண்டுமென்பதில்லை. குற்றவியல் வழக்கறிஞர் எப்படியிருக்க வேண்டும் என்று நண்பர் கருதியிருப்பதற்கேற்ற வகையில் இருக்கும் குற்றவியல் வழக்கறிஞர் ஒருவர் சமூகத்தின் நடப்புகளை நன்கு அறிந்துகொண்டிருக்க வேண்டும். குற்றவியல் வழக்கறிஞர் என்ற முறையில் நண்பருக்கு மீரத்திலும் அதைச் சுற்றிலும் நடப்பவை என்ன என்பது தெரியாமலிருக்க முடியாது. மீரத்தின் நடப்பு நிலவரங்களை நான் நன்கறிவேன். அவை ஹிசாரிலும், ரோத்தக்கிலும் நிலவும் நிலவரங்களினின்று மாறுபட்டவையல்ல. எனவே, நான் பஞ்சாப் மக்களுக்காகப் பேசும்போது நண்பருக்காகவும் மீரத்துக்காகவும் சேர்ந்தே பேசுகிறேன், ஏனென்றால், முந்தைய காலங்களில் மீரத்தும் பஞ்சாபின் ஒரு பகுதியாகவே இருந்தது.

**பண்டிட் கிருஷ்ண சந்திர சர்மா:** ஹிசார் காளைகளுக்கும், மீரத் பசுக்களுக்கும் புகழ் பெற்றவை என்பதை அருமை நண்பருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தியாகி:** பசுக்களையும் காளைகளையும் பற்றி இங்கு பேச வேண்டிய தேவை என்னவென அறிய விரும்பகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்துச் சட்டத்தில் திருமணம் குறித்த பேச்சுக்கும் இடமுண்டு அல்லவா?

**திரு. இராஜ் பகதூர் :** சேவல், எருதுக் கதையெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்க இவ் அவையில் அனுமதி உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தயை கூர்ந்து ஒழுங்கு காக்கவும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா:** திருமணத்தைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டமையால், இந்துச் சட்டத்தில் சிவில் (பதிவு)த் திருமணக் கோட்பாடுகள் புகுத்தப்பட்டிருப்பதில் இந்த அவை தனிக்கவனம் செலுத்தி ஆய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது இந்துச் சட்டமென்றால், சிவில் திருமணம் (குறித்து) இடம்பெற வேண்டிய தேவை என்ன? திருமணத்தைப் பற்றிய விதிமுறைகள் மாற்றமேதும் இன்றி அப்படியே இருக்கலாம் என்றே நான் கருதுகிறேன். கூறியவற்றையே இங்கு மீண்டும் திரும்பக் கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இது இந்து (இந்துக்களுக்கான)ச் சட்டமேயெனில், முஸ்லீம்கள் போன்ற ஏனையோருக்கு இது பொருந்தாதெனில், சிவில் திருமணம் குறித்த விதிகளை இதில் கொண்டு வராதீர்கள். அவ்வாறு (பதிவு) திருமணம் செய்து கொள்ள இந்து ஒருவர் விரும்புவரேல், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் போன்ற ஏனைய பிறரையும் போன்று, அவரும் சிவில் ஒப்பந்தத் திருமணம் செய்து கொள்ளலாமே. இதுவே நமது கூட்டு உரிமையியல் தொகுப்புச் சட்டம். எனவே, சிவில் திருமணம் குறித்த விதிகள் இந்துச் சட்டத்தில் இடம்பெறலாகாதென்பது என் பணிவான கருத்து.

நான் இம்மசோதாவின் விதிமுறைகள் அனைத்தையும் குறித்து இங்கு பேச விரும்பவில்லை. ஆயினும், இம்மசோதா குறித்து நமது கண்ணோட்டம் என்னவென்பதையும், இதுபற்றி நமது உணர்வுகள் எத்தகையன என்பதையும், நாட்டு மக்களின் பொதுவான உணர்வுகள் எத்தகையன என்பதையும் இந்தக் கட்டத்திலாவது, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குத் தெரிவிப்பது அவசியம் என்று கருதியதால்தான் நான் அவ்வாறு பேசினேன். இச்சட்டம் கேடானதல்ல என்பதாலும், இச்சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று நாம் தீர்மானித்துள்ளபடியாலும், இச்சட்டத்தின் நல்ல விதிமுறைகள் அனைத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டுமென்பது என் கருத்து. இவற்றை நிறைவேற்றவதில், நான் குறுக்கே நிற்கவோ, தாமத உத்திகள் போன்ற செயல்களில் ஈடுபடவோ, இச்சட்டம் நிறைவேறுவதை எதிர்ப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கவோ மாட்டேன் என உறுதி கூறுவேன். நான் ஏன் இவ்வாறு வலியுறுத்திக் கூறுகிறேன் என்றால், நீண்ட நேரம் உரையாற்றுபவர்கள் மசோதா நிறைவேறத் தடையானவர்கள் என்ற கருத்துப் பொதுப்படையாகப் பரவியுள்ளது. இது முற்றிலும் தவறான கருத்து, என்பது என்னைப் பொறுத்தமட்டிலும் உறுதியே. இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்; அதேசமயம், பொதுமக்களின் பழைய மரபுகளோடும் எண்ணப் போக்குகளோடும் பெரும் பூசல் விளைவிக்கக்

கூடிய விதிமுறைகளை மட்டும் நிறைவேற்ற வேண்டாமென்று, இச்சட்டம் நிறைவேற்றப்படுவதில் அக்கறை கொண்டுள்ள அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

[1]**சர்தார் ஹுக்கம் சிங் (பஞ்சாப்):** ஐயா, மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா அவர்களது கண்ணோட்டத்தின்பால் நான் அனுதாபம் கொள்கிறேன். நான் புரிந்துகொண்டவரையில், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், ஆனால் அவர் மீதும் அவர் சார்ந்துள்ள பகுதி மக்கள் மீதும் இச்சட்டம் செலுத்தப்படலாகாது என்றும் அவர் கூறுகிறார். உண்மையில் நானும் அதையேதான் கூற வருகிறேன். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் ஆனால் இது என்மீது செலுத்தப்படலாகாது என்றும் விரும்புகிறேன். நானும் அவரைப் போன்றே ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்திருக்கலாமோ என்று தோன்றுகிறது; அப்படிச் செய்திருப்பின் அது தனித்ததொரு சமுதாயத்தைப் பழிவாங்குவதற்காக எனக் கருதப்படலாகாது; ஆனால் நான் இங்குக் காண்பது என்னவென்றால், இச்சட்டம் சில பகுதி மக்களுக்காகவென இயற்றப்படாமல், சில பிரிவு மக்களுக்காகவென இயற்றப்படுகிறது என்பதுதான். எனவேதான், இந்தச் சட்டம் சீக்கியர்கள் மீது செலுத்தப்படலாகாது எனத் திருத்தத் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்வது பொருத்தம் எனக் கருதினேன்.

ஐயா, சமூகம் எப்போதும் தேங்கியே இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களில் ஒருவனல்ல நான். நான் முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டவன்; காலத்தோடு சேர்ந்து நாமும் முன்னேற வேண்டும் என்றுதான் கருதுகிறேன். இந்திய சமூகத்தில் சீக்கியர்கள் முற்போக்கான பகுதியினரே என்பதை உறுதிபடக் கூறுவேன். ஆனாலும் இந்தச் சட்டத்தின் ஆளுகையிலிருந்து சீக்கியர்களுக்கு விலக்களிக்கப்பட வேண்டும் என்று நான் கூறுதற்குக் காரணம், பற்பல நூற்றாண்டுகளாக நாங்கள் பின்பற்றி வரும் மரபுகளுக்கும், நடப்புகளுக்கும் பாதகமான விதிமுறைகள் இச்சட்டத்தில் இருக்கின்றன என்பதனால்தான்.

பண்டிதர் ஐயா அவர்கள் குறிப்பிட்ட கிளை விதி 2, துணைக் கிளை விதி (2) இன் வாசகம் வருமாறு:

> ''அப்படிக் குறிப்பிடப்பட்ட மனிதர், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருப்பின், இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கோ,

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, பிப்ரவரி 6, 1951, பக். 2452-62.

மரபு நெறிச் சட்டத்தின் ஆளுகைக்கோ, இங்கு கூறப்பட்டுள்ள பொருள்கள் எவையிலேனும், அச்சட்டங்களின் நடைமுறைக் கட்டுப்பாட்டுக்கோ உட்பட்டிருக்க மாட்டார் என்று நிறுவப்பட்டால், அத்தகையவரை, அவ்வாறு தொடர்புள்ள விவகாரங்களில் இச்சட்டம் கட்டுப்படுத்தாது.''

பஞ்சாபில் நிலவும் மரபுநெறிகளையும், நடைமுறைகளையும் காத்துக் கொள்ள இத்துணைக் கிளைவிதி உதவலாம் என அவர் கூறவந்தாரென எனக்குத் தோன்றுகிறது. அவருடன் நான் உடன்படவில்லை; ஏனெனில் துணைக் கிளை விதி (2)

> ''சமயத்தால் முஸ்லீம்களாகவோ, கிறித்தவராகவோ, பார்சிகளாகவோ, யூதராகவோ அல்லாத எந்தவொரு நபரையும் இச்சட்டம் கட்டுப்படுத்தும்.''

என்று கூறுகிறது. இதையும் முந்தைய துணைக் கிளை விதியோடு சேர்த்து நோக்க, இந்துக்கள் அல்லது சீக்கியர்களின் மரபுநெறிகள், நடைமுறைகள் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆதலால் இது (எமது) மரபுநெறிகளையும், நடைமுறைகளையும் காக்கப் பயன்படாது என்பதே எனது பணிவான கருத்தாகையால், நான் அவரைப் போன்று எந்த நம்பிக்கையையும் வைக்கவில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இந்த விதிமுறை எமது மரபுநெறிகளையும் நடைமுறைகளையும் காக்கப் பயன்படுமென்று நான் ஒருபோதும் கூறவில்லை. ''அத்தகைய நபர் இந்துச் சட்டத்தின் ஆளுகையின் கீழ் வந்திருக்க மாட்டாரென்று மெய்ப்பிக்கப்பட்டால்'' என்ற நிபந்தனையைக் கருத்தில் கொண்டுதான், இந்துச் சட்டத்தினால் நாங்கள் ஆளப்படவில்லையென்று மெய்ப்பிக்கப்பட்டால்,... என்று கூறினேன். இந்த நிபந்தனை பஞ்சாபியர்களை உள்ளடக்கியமையவில்லை; எனினும் நமது மரபு நெறிகளும் நடைமுறைகளும் இதனால் காக்கப்பட மாட்டா. இச்சட்டம் இந்துக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும். நான் சொல்ல வந்தது என்னவெனில், நாங்கள் எமது மரபுநெறிகளால் ஆளப்பட அனுமதிக்கப்படுவோம் என்று பிறிதொரு கிளைவிதியின் கீழ் தெளிவாக உரைத்து, எங்கள் மரபுநெறிகள் யாவும் காக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால் இந்தக் கிளை விதியினால் ஓரளவுக்கு நிச்சயமற்ற தன்மை தோன்றுவதைத் தவிர்க்கவியலாது.

**சர்தார் ஹுக்கம் சிங் :** கிளைவிதி 2, துணைக் கிளை விதி (1) இல், இச்சட்டம் இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள்,

இந்துவாகச் சமயம் மாறியவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, என்னைப் பொறுத்தமட்டில் தெளிவற்ற தன்மை எதையும் நான் காணவில்லை. ஆனால், எந்த வகையில் பார்த்தாலும் எமது மரபுநெறிகளும், நடைமுறைகளும் காக்கப்படப் போவதில்லை என்பதிலாவது பண்டிதர் ஐயா அவர்கள் என்னுடன் உடன்படுவார் என்பதில் ஐயமில்லை.

ஐயா, இந்தியா முழுமைக்குமான சீரான சட்டம் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், அப்போது நான் இவ்வாறு மறுப்புக் கூற முன்வந்திருக்க மாட்டேன்; அதனால் பஞ்சாபி என்ற முறையில் சில தியாகங்களைச் செய்ய நேருமெனினும் பொருட்படுத்தியிருக்கமாட்டேன். நாம் எல்லோரும் ஒன்றுபட்ட நாடாக, ஒரே மக்களாக வளர முடியுமென்றால் அதற்காக மக்களில் சில பிரிவினர் சில தியாகங்களை செய்ய வேண்டித்தான் இருக்குமென்பதை உணர்ந்தே தியாகம் செய்ய முன் வருவோம். ஆனால் இங்கு அத்தகைய குறிக்கோள் இல்லை. இச்சட்டத்தால் மக்கள் அனைவரையும் ஒரே நாட்டவராய் ஆக்கும் முயற்சி ஏதும் இச்சட்டத்தால் செய்யப்படவில்லை. ஒரு சமுதாயத்திற்கும் பிற சமுதாயங்களுக்குமிடையே பாகுபாடு காட்டப்படுகிறது. ஆகையினால்தான் நான் இதனை எதிர்ப்பது நியாயமே என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த மசோதாவின் அத்தியாயங்கள் சிலவற்றை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெளிவுறுத்தியாக வேண்டும். இதில் நான் மூன்று பகுதிகளை மட்டுமே எதிர்க்கிறேன். இம் மசோதாவின் ஒவ்வொரு பகுதியின் இந்த அவையின் முன்பு தனித்தனியே வைக்கப்பட்டிருப்பின், மசோதாவின் மிகப் பெரும் பகுதி எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டிருக்குமென்று உறுதியாக நம்புகிறேன். ஆனால் இப்போதிருக்கும் நிலையில், மசோதாவை நாங்கள் முழுமையாக ஏற்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதால், எமது குரல் கேட்கப்படாமலேயே அது நிறைவேற்றப்பட்டு விடக்கூடாதென்பதற்காகவே நான் எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

எந்தெந்த விதிமுறைகளுக்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கிறேனென்றால், அவை (1) திருமணம், மணமுறிவு பற்றியவை (2)

தத்தெடுத்தல் பற்றியவை (3) வாரிசுரிமை பற்றியவை (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் : ''இதை விட்டால் வேறென்ன இருக்கிறது?''). இன்னும் கூடப் பெரும்பகுதிகள் பல இருக்கின்றன. ஏற்கெனவே இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் நபர்களை இது கட்டுப்படுத்துமெனப் பண்டிதர் ஐயா கூறினார். இது உண்மையே. நாங்கள் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டிருக்க (முன்னர்) இசைந்திருக்கின்றோம் என்றால், அதன் பின் இந்துச் சட்டம் மேற்கொள்ளும் வளைவு நெளிவான போக்குகளுக்கெல்லாம், அது புற உலகின்பால் ஈர்க்கப்பட்டுப் பிற சமயங்களிலிருந்து பிற சட்டங்களிலிருந்து கடன் வாங்கும் கருத்துக்களுக்கெல்லாம் நாங்களும் உடன்பட வேண்டுமென்பது கட்டாயமில்லை; ஒருமுறை இதன் வரம்புக்குள் வந்து விட்டோம் என்பதற்காக (ஒவ்வாத) மாற்றங்களுக்கெல்லாம், அவை இந்துச் சட்டவரம்புகளுக்குட்படா திருப்பினும், நாங்களும் உடன்பட வேண்டிய தேவை ஏதுமில்லை.

ஐயா, நான் மீண்டும் தவறான கருத்து ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சீக்கியர்கள் அனைவரும் இந்துச் சட்டத் துக்குட்படுவர் என்று இந்துச் சட்ட மசோதா கூறுகிறது. அருமை நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் ஏற்கெனவே மேற்கோள் காட்டிய, பஞ்சாப் மரபுநெறிச் சட்டத்தின் 5ம் பிரிவில் கூறப்படுவது:

> ''இந்த மாநிலத்தில், வாரிசுரிமை, பெண்களின் தனி (சிறப்பு)ச் சொத்துகள், திருமண உறுதிப்பாடு, திருமணம், மணமுறிவு, மகட்கொடை, தத்தெடுத்தல், காப்பாளர் பொறுப்பு, சிறுவர் விவகாரங்கள், முறையிலாது பிறந்தோர், குடும்ப உறவுகள், உயில்கள், பரம்பரைச் சொத்து பற்றுகள், கொடைகள், பாகப்பிரிவினை, சமயஞ்சார் பயன்பாடு, நிறுவனம், வளப்பெருக்கம், பேரழிவு முதலான அனைத்து வழக்குகளிலும் தீர்ப்புகளுக்குத் தலையாய அடிப்படை யாய் விளங்குவன மரபுநெறிகளே'' நான் இங்கே கேட்க விரும்புகிறேன். இவ்வளவு விவகாரங்களில் நாங்கள் மரபு நெறியினாலேயே ஆளப்படுகையில், நாங்கள் இந்துச் சட் டத்தின் ஆளுகைக்குட்படுவது எங்ஙனம்? எங்களது மரபு நெறிகளில் கூறப்படாது, இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப் பட்டு இருக்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான்; அதுதான் வாழ்க்கைப் பயணம் பற்றியது. இந்த விவகாரத்தில் கூட நான் நடைமுறை வழக்கங்களுக்கு உட்பட்டிருக்கிறேன்

என்பது (மட்டும்) மரபுநெறிச் சட்டத்தில் தெளிவாகக் குறிப் பிடப்படவில்லை.

(பிற்பகல் 3 மணி) சீக்கியர்களுக்காகவும் என்று முன்மொழியப்பட்டுள்ள இந்துச் சட்டம் தங்கள் மீது வலிந்து திணிக்கப் படுவதை அவர்கள் ஏற்க விரும்பாமைக்குக் காரணமாயுள்ள மூன்று பொருண்மைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக நான் கூறிக்கொண்டிருந்தேன். முதலாவது திருமணமும், மணவிலக்கு, மணமுறிவு தொடர்பானவை.

(மாண்புமிகு சபாநாயகர் தலைமை ஏற்கிறார்)

சீக்கியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது திருமண முறை மிக எளிமையானது. அதனை நாம் தூயநெறி அல்லது அறநெறி என்றழைக்கலாம். அது ஆனந்த திருமணம் என்று அழைக்கப்படு கிறது. திருமணத்தின் எளிய, சமயச் சார்பற்ற வடிவம் அது. மணமக்கள் குருகிரந்த சாகிப் அவர்களின் எதிரில் அமர்ந்து தாங்கள் வாழ்நாள் முழுவதும் இணைந்தே வாழ்வோமென்று உறுதியெடுத்துக் கொள்வர், தொடர்ந்து துதிப்பாடல்கள் பாடப் படும். நான் இதைக் கூறும்போது, இந்துச் சட்டத்தில் இதுவும் கவனத்தில் கொள்ளப்படுமென்றும் இந்துச் சட்டம் இதில் கைவைக்காது என்றும் வாதிடப்படலாம். ஆனால் எம்மை பாதிக்கக் கூடியவாறு பொருள் பொதிந்த பகுதிகள் அதிலுண்டு. நெருங்கிய உறவுமுறைகள் சில திருமண உறவுக்குத் தகாதவை என்று கண்டிப் பாக விலக்கி வைக்கப்படுதல், உலகெங்கிலும் நாகரிக சமுதாயங் கள் உறுதியாய்க் கடைப்பிடித்துவரும் நடைமுறையாகும். ஆனால், நமது சமூகத்தைப் பொறுத்தப்பட்டில் இந்த (விலக்கப்படும்) பட்டியல் மிக நீண்டதன்று. பல இடங்களில் பெற்றோரின் உடன் பிறந்தோர் பிள்ளைகளுக்கிடையே திருமணம் அனுமதிக்கப்படு கிறது. அத்தை மகள், சித்தி மகள் (மாமன் மகள்) ஆகியோரை மணக்கும் திருமணங்கள் பல நடைபெறக் காண்கின்றோம்; இவை யெல்லாம் தடுக்கப்பட வேண்டிய உறவுகள் என்ற எண்ணம் கூடப் பலரிடையேயில்லை. நீங்கள் (இந்துக்கள்) உங்கள் சமூகத்தை மேலும் மேலும் தடுக்கும் திசையிலேயே செலுத்திக் கொண் டிருக்கிறீர்கள் என்று கூறுவேன். ஆனால் நாங்கள் உங்களைவிட எவ்வளவோ முற்போக்காக இருக்கிறோம். நீங்களும் அதே திசையில் தான் வந்து கொண்டிருக்கிறீர்கள்; இதனால் நீங்கள் வியப்படைய வேண்டாம். பெண் மக்களுக்கும் சொத்தில் பங்குதர நீங்கள் முன்வருவதிலிருந்தே நீங்கள் அவ்வழியில் மேலும் முன்னேறுவீர்கள்

என்பது உறுதியே. நீங்கள் அந்தப் பாதையில் நடைபோட்டுத்தானாக வேண்டும்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** சீக்கிய ஜாத் (நிலக்கிழார்) இனத்தார் நிலை என்ன?

**சர்தார் ஹுக்கம் சிங் :** நான் கூறுவது பெரும்பாலும் சீக்கிய ஜாத்துகளைப் பற்றியே. நான் குறிப்பிடும் மரபு நெறிகள் ஜாத்துக் களிடையேதான் நிலவி, அவர்கள் அதை (ஒழுங்காக)க் கடைபிடித்து வருகின்றனர். சீக்கியர்களில் 90 சதவீதத்தினர் உழவர்களே; அவர்கள் சிற்றூர்களில்தான் வாழ்கிறார்கள்.

மகளுக்கும் (சொத்தில்) பங்கு உண்டு என்னும் வகையி லமைந்த இந்தச் சட்டத்தை இயற்ற நீங்கள் முடிவு செய்திருப் பதால் உங்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். இங்கு நான் எனது நிலையைத்தான் தெளிவாக்க முனைகிறேன்; ஆகவே எவரும் பரபரப்படையத் தேவையில்லை. பெண்ணுக்குப் பங்கு தருவதை நான் ஆதரிக்கிறேன்; எதிர்க்கவில்லை. ஆனால் இதை முன்மொழியும்போது, தடுக்கப்பட்ட மணஉறவுகளின் நீண்ட பட்டியல் படிப்படியாய்க் குறைந்து, காலப்போக்கில் சுருங்கிவிடும் வாய்ப்பிருப்பதைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். கண்டிப்பு வாய்ந்த இந்து சட்டத்தில் இருந்த பட்டியலோடு ஒப்பிடுங்கால் இப்போதைய பட்டியலே குறுகியதுதான் அன்றோ; காலப்போக்கில் இது இன்னும் சுருங்குமென்பது உறுதி.

**திரு. தியாகி:** அது குடும்பத்திற்கு மிக நெருங்கி வந்துவிடும்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** உறுதியாக இவ்விரண்டையும் தனித்தே வைத்திருக்க முடியாது. நீங்கள் முஸ்லீம் சட்டத்தில் திருமண விதிகளை அணுகும்போது, உடன் பிறந்தார் பிள்ளைகள் போன்ற சில உறவுகளைத் தடுக்கப்பட்ட பட்டியலில் சேர்க்க முடியாது. அதில் சிறிதும் ஐயமில்லை; அதற்குத் தயாராயிருங்கள். நீங்கள் அதை நோக்கித்தான் செல்ல வேண்டியிருக்குமேயன்றி, அதிலிருந்து நீங்கள் ஒருபோதும் விலகியிருக்க முடியாது.

இப்போது எம்மையும் உங்கள் சட்டத்தின் கீழ் வருமாறு அழைக்கிறீர்கள்; எமது அறநெறித் திருமண முறையையும் வைத்துக் கொள்ளலாமென்றால், அதில் தடுக்கப்பட்ட உறவுகளுக்கிடையே

திருமணம் தவிர்க்கவியலாதெனும் பொருள் அடங்கியுள்ளதன்றோ. நான் எனது உறவில் விரும்பும் எவரையும் மணக்க சுதந்திரம் கிடைக்கும்; ஆனால் எனது (சமூகம் தடை செய்த உறவில் மணந்தால்) சமூகத்திலிருந்து விலக்கிவைக்கப்படுவேன்; அந்த விலக்கு எதிர்காலத்திற்கானதாக மட்டுமிராது. அத்தகைய திருமணங்கள் பற்பல நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் (அறநெறிப்படி) செல்லாதவை. அதைச் செல்லுபடியாக்குதற்காக, அத்தகைய திருமணங்களைக் குடிமைத் திருமணங்களாய்ப் பதிவு செய்துகொள்ளக் கிளை விதி 21இன் கீழ் வழி வகுத்திருக்கிறீர்கள் என்பது உண்மைதான்; ஆனால் அவற்றின் எண்ணிக்கையைப் பற்றி எண்ணிப் பார்த்தீர்களா? நாங்கள் நீதிமன்றங்களுக்கும் பதிவாளர் அலுவலகங்களுக்கும் அலைந்து கொண்டிருக்க வேண்டுமா? இந்த முதுமையிலும் நான் எனது திருமணத்தை இப்போது பதிவு செய்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறீர்களா?

**டாக்டர் அம்பேத்கர்:** மீண்டும் திருமணம் செய்துகொள்ளவா விரும்புகிறீர்கள்?

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு. ஒழுங்கு.

**சர்தார் ஹூக்கம் சிங் :** இந்தச் சட்டத்தினால் ஐயம் எழ இடமுண்டு; நான் ஏற்கெனவே திருமணம் செய்துகொண்ட பெண், உங்கள் கருத்துப்படித் தடுக்கப்பட்ட உறவு வகையினளாயின், நிலை என்ன? அந்நிலையில் அத்திருமணத்தின் கதி என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. தியாகி :** உங்கள் குழந்தைகள் நிலை குறித்தும் கேளுங்கள்.

**சர்தார் ஹூக்கம் சிங் :** உறுதியாக எனது திருமணத்தை இப்போது குடிமைத் திருமணமாக நான் பதிவு செய்யவில்லையென்றால் எனது குழந்தைகள் முறை தவறிப் பிறந்தவர்களாகி விடுவார்கள்; இந்த வயதில் இப்படியொரு நிலையா! இத்தகைய நிலையிலுள்ள மனிதர்கள் எல்லாரும் இவ்வளவு முதிய வயதில் பதிவாளர் அலுவலகங்களுக்கு ஓடித் தமது திருமணங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றா நமது மாண்புமிகு அமைச்சர் விரும்புகின்றார்.

**திரு. தியாகி :** அவரே (பதிவு) செய்து கொண்டது போன்று!

**சர்தார் ஹுக்கம் சிங்:** அடுத்த சிக்கல் எமது பகுதியில் உழவர் குடிமக்களால் கரேவா திருமணம் என்றழைக்கப்படும் விதவையர் திருமணம் பற்றியது. இப்போதைய சட்டத்தில் அதைக் குறித்து எவ்வித வேறுபாடும் காட்டப்படவில்லை. இனிமேல் எம்மிடையே அறநெறித் திருமணம், சிவில் (பதிவு)த் திருமணம் ஆகிய இருவகை தவிர வேறெதற்கும் இடமில்லையாதலால், இந்த (கரேவா) திருமணங்களின் நிலைமை என்னவாகும்? இந்த விதவைத் திருமணங்கள் எவ்வளவு எளிய முறையில் நடத்தப் படுகின்ற என்பதை அறிந்தால் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிலர் வியப்படையலாம். அதில் எந்தவிதமான சடங்கும் கிடையாது; முற்றிலும் மதச்சார்பற்ற நிகழ்ச்சி அது.

மணமகனும் மணமகளும் ஒன்றாக உட்கார வைக்கப்படுவர்; அவர்கள் மீது சேதர் எனப்படும் சால்வை ஒன்று போர்த்தப்படும்; பின்னர் இனிப்புகள் வழங்கப்படும்; அத்துடன் அவர்கள் கணவன் மனைவியாகிவிடுகின்றனர். இத்திருமணங்களுக்கு ஏற்பிசைவு அளிக்க விதிமுறைகள் ஏதேனும் (இந்துச்) சட்டத்தில் உள்ளனவா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சுட்டிக்காட்ட முடியுமா? இச்சட்டத்தை அவர் தேவையின்றிச் சிக்கல் மிகுந்ததாக்குகிறார்.....

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அது இரண்டாம் தாரத் திருமணமாயிருந்தால், இடர்ப்பாடு தோன்றுமன்றோ?

**சர்தார் ஹுக்கம் சிங்:** அது எவ்வடிவான திருமணமாய் ஏற்றுக்கொள்ளப்படும் என்று, அவைத் தலைவர் அனுமதியுடன், மாண்புறு நண்பர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். எவ்விதச் சடங்குமில்லாத அதனை (சடங்கற்ற) அறநெறித் திருமணம் என்று கூறுவாரா. (குறுக்கீடுகள்) அவ்வாறு நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்; அது அறநெறித் திருமணமாகிவிட முடியாது. எவ்வாறாயினும் அதைக் குறித்த கருத்து முரண்போர் ஒன்றில் இப்போது இறங்க நான் விரும்பவில்லை

எனது அடுத்த சிக்கலான தத்தெடுத்தல் குறித்து நோக்கு வோம். நான் இப்போது கூறப்போவது மாண்புறு நண்பர்கள் சிலருக்குத் திடுக்கிடான செய்திகளாக இருக்கலாம்; ஆனால், அவையே, தத்தெடுத்தலைப் பொறுத்தமட்டில், இந்த நாட்டின் பிற பகுதிகளையெல்லாம் விட நாங்கள் எந்த அளவுக்கு முற்போக்கா

யிருக்கிறோம் என்பதற்கான அடையாளம் என்று நான் பெருமிதம் கொள்வேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** நீங்கள் எப்போதுமே எல்லோரையும் விட முற்போக்காகத்தான் இருந்து வருகிறீர்கள்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** இப்போது நான் கூறப்போவதைக் கேட்ட பின்னர், இந்த விவகாரத்திலும் கூட நாங்கள் மிகவும் முற்போக்காகத்தான் உள்ளோம் என்பதை நீங்களனைவருமே ஒப்புக் கொள்வீர்கள். மதிப்பிற்குரிய நண்பர் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் ஏற்கெனவே சுட்டிக்காட்டியவாறு, (எங்கள் மரபு நெறியில், குடும் பத்துக்கு) வாரிசு ஒருவர்தான் நியமிக்கப்படுகிறார். இதற்கு எந்த விதமான சமயச் சாயலும் கிடையாது. தகாத உறவிடைத் திருமணம் என்னும் பயங்கரமும் கிடையாது. எங்களுக்குப் பிண்டம் அளிக்கப் புதல்வர்கள் தேவை என்ற ஆதங்கம் ஏதும் எமக்கு இல்லை.

**திரு. ஹுசைன் இமாம் (பீகார்):** பிண்டம் அளிக்கும் வழக்கமும் உண்டோ?

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் மேற்கொண்டு உரையைத் தொடரட்டும்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** நாங்கள் விரும்புவதெல்லாம் எங்க ளுக்குப் பின்னர் எங்கள் சொத்தை அடைந்து பேணும் வாரிசுகள் தான்.

**டாக்டர் அம்பேத்கர்** (உங்களுக்குப்பின்): உங்கள் சொத்துக் கள் அரசுக்குச் சேரட்டும் என்று நீங்கள் விட்டுவிடலாமே?

**சர்தார் ஹுக்கம் சிங் :** (அரசுக்கு என்றால்) அது மாண்பு மிகு அமைச்சருக்குத்தான் போய்ச் சேரும்; அதை நாங்கள் யாரும் விரும்பவில்லை. உண்மையில் இது சமயச்சார்பற்றதொரு ஏற்பாடே; இதில் வயது, சாதி வரம்புகளுக்கோ, சடங்குகளுக்கோ இடமில்லை. எளிமையானதொரு அறிவிப்புத்தான் செய்யப்படு கிறது என்பதுடன், முந்தைய உரையின்போது நான் சுட்டிக் காட்டியவாறு, ஒருவர் தன்னைவிட மூத்தவரைக்கூட வாரிசாக்கிக் கொள்வதற்கும் இடமுண்டு என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தத்து எடுத்துக் கொள்பவர் தமது தந்தையின் வயதுடைய ஒருவரைக்

கூடத் தத்தெடுத்துக் கொள்ளலாம்; தத்தெடுக்கப்படுபவர் திருமண மாகிப் பல குழந்தைகளுக்குத் தந்தையாகவும் இருக்கலாம்; அதில் எவ்விதத் தீங்கும் இல்லை. இத்தகையதொரு நடைமுறையை நீங்கள் வேறெங்குமே காண முடியாது.. இத்தகைய மரபுகள், நடைமுறைகளெல்லாம் அழிக்கப்படுமென்றால், நாங்கள் மிகவும் விரும்பிக் கடைப்பிடிக்கின்ற, பற்பல நூற்றாண்டுகளாக எங்களால் பின்பற்றப்பட்டுப் பழக்கப்பட்டுப் போன மரபுநெறிகளெல்லாம் என்னாவது?

ஐயா, அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கெல்லாம் மிகச் சுவையானதாயிருக்கக்கூடிய மற்றொரு நிகழ்ச்சியைச் சுட்ட விரும்புகிறேன். அதில் கூர்ந்த கவனம் செலுத்துமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினர் தம் உரையைத் தொடர வேண்டுகிறேன்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** நான் பேசப்போகும் சுவையான பொருள் குறித்து, மாண்புறு அமைச்சர் கவனம் செலுத்த வேண்டு கிறேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு. ஒழுங்கு.

**டாக்டர் அம்பேத்கர்:** காந்தருவ திருமணத்தையும் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறேன். அதைப் பற்றித்தான் நான் உரையாடிக் கொண்டிருந்தேன்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** நமது தலைமைக் கொறடா அதைத் தான் விரும்புகிறார் எனில், எனக்கொன்றும் மறுப்பு இல்லை. ஐயா, தத்தெடுத்தல் குறித்து இந்த நாட்டில் பிற பகுதிகளில் அறியப்படாத சுவையான தகவல் ஒன்றைக் குறித்துத்தான் நான் பேசிக் கொண் டிருந்தேன். பெண்கள் கூட வாரிசுகளாய்த் தத்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பலவற்றை நானறிவேன்; அவர்கள் சொத்துக்கு வாரிசாகவே நியமிக்கப்பட்டனர்; (தத்தெடுத்தவருக்குப் பின்னர்). அச் சொத்துக்களை அவர்கள் அடைந்தார்கள். இந்த நடைமுறைக்கு மரபு நெறி ஏற்பிசைவு தந்து அதை அனுமதித்தது. இந்த வழக் காறுகள் அனைத்தும் மரபுகள், நடைமுறைகள் அனைத்தும், இந்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டபின் காற்றிலே பறக்கவிடப்

படுமா என்று தங்களைக் கேட்க விரும்புகிறேன். இவ்வளவு காலம் வளர்ச்சியுற்ற சமூகம் இப்போது குழப்பத்தில் மூழ்க வேண்டுமா? சட்டங்கள் என்பன ஒருசமூகம் அமைந்துள்ள முன்னேற்றங்களையும் வளர்ச்சி நிலையையும் எதிரொலிப்பதாக இருக்க வேண்டுமேயன்றி, சட்டத்துக்காக இலக்கு ஒன்றை முடிவு செய்து கொண்டு அந்த இலக்கை நோக்கிச் சமூகத்தை இழுக்கும் முயற்சி கூடாதென்பது எனது உறுதியான நம்பிக்கை. இத்தகைய முயற்சி துருக்கியில் செய்யப்பட்டுத் தோல்வி கண்டது என்பதை அறிவோம். எனவே, மெதுவாகப் போகவேண்டுமென அரசை வேண்டுகிறேன். இரு பக்கத்திலுமே மிகைப்புகள் பல இருக்க வேண்டுமென்பதையும், அதனால் இடர்ப்பாடுகள் தவிர்க்கவியலாமற் போவதையும் நன்கறிவேன்; ஆனால் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அதே இடர்ப்பாடுகள் தொடரும். தத்தெடுத்தல் என்பது மிகப் பழைமையான நடைமுறை என்பதையும், இச்சட்டம் இயற்றப்பட்டாலும் கூட, இழக்கவியலாத அளவுக்கு நாங்கள் நேசிக்கின்ற நடைமுறை என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இனி நாங்கள் மறுப்பு தெரிவிக்கின்ற மூன்றாவது பொருள், வாரிசுரிமை பற்றியது. நான் சில நிமிடங்களுக்கு முன்னர் கூறியவாறு பெண்களுக்குச் சொத்தில் பங்கு தருவதை எதிர்ப்பவனல்ல. பெண்ணுக்குச் சொத்தில் சம பங்கு தரக்கூடாது என்பது பால் இனம் காரணமாக மட்டும் காட்டப்படும் பாகுபாடு என்றே நம்புகிறேன். பாகுபாடு பால் இனம் காரணமாக மட்டுமேயல்ல என்று சற்று முன்னர் இங்கே கூறப்பட்டது. எனினும், ஆண்மகனுக்குச் சமமாகப் பெண் மகளுக்குச் சொத்தில் பங்கு தரப்படாமை பால் இனம் காரணமான பாகுபாடுதான் என்றே கருதுகிறேன். இல்லையேல், ஒரே பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளிடையே பாகுபாடு காட்ட வேறு காரணம் இல்லை. எனவே அவருக்கு ஏன் சமபங்கு தரக்கூடாதெனக் கேட்கிறேன். இதன் காரணமாக பெண்ணுக்குச் சொத்தில் சம பங்கு தரவேண்டுமென்றும் கூறுகிறேன். ஆனால் எனது மறுப்பு அதன் காரணமாக அல்ல. இது குறித்துக் கடைசியாக நான் பேசிய போது, அனேகமாய் 1949, டிசம்பர் 14ஆம் தேதியிலிருக்கலாம், ஒரு பெண்ணுக்குத் திருமணமாகும் வரை தந்தையின் சொத்தில் சமபங்கும், திருமணமான பின்னர் மாமனாரின் சொத்தில் சம பங்கும் கிடைக்கவேண்டுமென்று கூறியுள்ளேன். எப்படியும் அவளுக்குச் சொத்தில் பங்கிருக்க வேண்டும்; ஆனால் இது சமூகத்தின் இன்றைய கட்டுக்கோப்பைக் குலைக்காமல் நிகழ்த்தப்பட வேண்டும். எங்களுடைய சூழல்கள் விந்தையானவை. எனவே, நான் எதிர்பார்ப்பது,

இச்சட்டம் சில நிலப்பகுதிகளுக்காக என்றில்லாமல், சில மக்கட் பிரிவுகளுக்காக என்று.....

**பண்டிட் எம்.பி. பர்கவா (ஆஜ்மீர்):** அவ்வாறே ஆக்கப்படும்; அதற்கான அரசு திருத்தம் தரப்பட்டுள்ளது.

**சர்தார் ஹுக்கம் சிங் :** ஐயா, பஞ்சாப், சிறு நிலவுடைமை யாளர்கள் நிறைந்த மாநிலம். ஏற்கெனவே அவர்கள் பொருளா தாரப் பின்னடைவில் உள்ளனர். மற்றொரு கூறு பஞ்சாபில் ஆண் களோடு ஒப்பிடப் பெண்களின் எண்ணிக்கை குறைவு.

**டாக்டர் அம்பேத்கர்:** எனவே அவர்களது மதிப்பு கூடுதலா யிருக்க வேண்டும்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** ஆம் ஐயா, நீங்கள் அவர்களது மதிப்பை மிகுதியாக்கத்தான் போகிறீர்கள். இம்மதிப்பை நாம் ஓரளவு நிரல் செய்து கொள்ள முடியும். ஏற்கெனவே கூறியவாறு அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்கள். சிறிது காலத்திற்கு முன்னர் மக்கள் எவரும் மருமகன்கள் தொல்லையை விரும்பாத காரணத்தால், அங்கு பெருத்த எண்ணிக்கையில் பெண் சிசுக் கொலைகள் நடைபெற்றன என்பது நாம் நன்கறிந்த செய்தி. நீங்கள் பெண்களுக்குச் சொத்தில் பங்கு தருவதன் மூலம் பெண்சிசுக் கொலைகளுக்கே ஊக்கமளிப்பீர்கள் என்று வாதத்திற்காகவன்றி, மிக நாணயத்துடனேயே கூறுகிறேன். ஏனென்றால், நில உடைமை யாளர்கள் ஏற்கெனவே ஊதியமிலாச் சொத்திருப்பதாய்க் கருது கிறார்கள்; மிஞ்சிப் போனால் அவர்களிடம் துண்டு நிலத்துடன், இரண்டு எருதுகளும் ஒரு பசுவும் இருக்கலாம். அவனுடைய வேளாண்மைக்கு இன்றியமையாத இவ்விலங்குகளைப் பிரிதல் இயலாததொன்றாகும். தந்தைக்கு இரண்டு மகன்கள் இருந்தால், அப்போதும் சொத்துப் பிரிவினையன்றி வேறென்ன செய்யக்கூடும் என்று கேட்பது சரியான வாதமாகாது. திருமணத்துக்குத் தடை செய்யப்படும் உறவுகள் என்பதொரு (நீண்ட) பட்டியல் இருந்தே யாக வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். எனவே எமது மகள் களை அந்தப் பட்டியலில் இடம் பெறாத வகையினர் ஒருவருக்குத் தான் திருமணம் செய்விக்க முடியும். அதாவது (சொத்தின் பங்கு தாரராய்) அன்னியர் ஒருவரையும் புகுத்தி விடுகிறார். அவரோ உள்ளூரில் வாழமாட்டார்; அங்குள்ள சூழலோடு தம்மை இணைத்துக் கொள்ளவும் அவரால் இயலாது. அவர் மேற்கொள்ளப் போவதெல்

லாம் திருமணமான கையோடு (சொத்தில்) மனைவியின் பங்கை விற்றுவிட்டுப் போவதுதான். கிராமங்கள் ஒவ்வொன்றிலும் உட்பூசல்களும் உண்டு; ஒவ்வொரு ஊரிலும் கட்சிகளும் உண்டு. (தந்தையின்) நண்பர்கள் சொத்தை வாங்க முன்வரமாட்டார்கள்; ஆனால் (ஆகையால்) அப்பங்கு பகைவர்களுக்கு விற்கப்படும். இதன் காரணமாய்ச் சச்சரவுகள், கொலைகள், கலவரங்கள் இவையே விளையும்.

**திரு. தியாகி :** அவர் கூறுவது சரியே.

**சர்தார் ஹுக்கம் சிங்:** எனவேதான் இச்சட்டத்தைப் பஞ்சாபுக்குக் கொண்டுவர வேண்டாமென வேண்டிக்கொள்கிறேன். கொண்டு வருவதால் அங்கே குழப்பத்தையும் ஒழுங்குச் சீர்கேட்டையும்தான் உருவாக்குவீர்கள்.

**திரு. சியாம்நந்தன் சகாயா (பீகார்) :** மற்ற மாநிலங்கள் என்ன பிழை செய்தன? அவை அனைத்துக்காகவும் சேர்ந்து வாதாடலாகாதா?

**அவைத் தலைவர்:** ஒழுங்கு, ஒழுங்கு. நாம் மேலே தொடர்வோம்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** மற்றவர்களுக்காக நான் வாதாடினால், அதற்கான பிரதிநிதித்துவத்தன்மையும் அதிகாரமும் எனக்கில்லையெனப் பிறர் சாடக் கூடுமென எண்ணினேன். எனது மாநிலத்தைப் பற்றி, அதிலும் எனது சமுதாயத்தைப் பற்றிப் பேசுவதோடு அமைந்தேன். இல்லையேல், நான் முன்னரே குறிப்பிட்டவாறு எனது மாநிலம் முழுவதன் சார்பாகவே பேசக் கருதினேன்; ஆனால் அதற்கான எனது தகுதி கேள்விக்குறியாக்கப்படுமென அஞ்சினேன். இதனால் குழப்பமும் ஒழுங்குச் சீர்கேடும் விளைவதுடன், சமூக அமைப்பு முழுவதுமே குலைந்து விடுமென்றும் கூறினேன். அது இச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதாயிராது. அது ஒரு வளர்ச்சியாகவோ, முன்னேற்றமாகவோ இராது; மாறாகப் பின்னோக்குப் பாதையில் அடியெடுத்து வைக்கும் செயல்பாடாகவே இருக்கும். எனவே எங்களை பொறுத்தமட்டில் பின்னோக்கி எங்களையும் இழுக்காதீர்கள் என்றே வேண்டுகிறேன். நீங்கள் எங்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நாங்கள் செல்லும் பாதையில் எங்களைப் பின்தொடர்ந்து வரவேண்டும்; இவ்வாறாக நாடு முழுவதும் முன்னேற வேண்டும். இது எங்களுக்கே மட்டுமின்றி,

உங்களுக்கும், இந்த நாடு முழுமைக்கும் நன்மையையே விளைவிக்கும்.

நான் தெரிவிக்க விரும்புகின்ற மற்றொரு பொருளும் உண்டு.

***திருமதி துர்க்காபாய் (சென்னை) :*** *ஐயா, நான் ஒரு கேள்வி கேட்கலாமா?*

***மாண்புமிகு சபாநாயகர்:*** இத்தகைய வாதங்களும் எதிர்வாதங்களும் இல்லாமல், உறுப்பினரைத் தொடர்ந்து பேச அனுமதித்தல் நன்று; உண்மையில் இச்சட்டம் குறித்து முன்னேற்றம் காண வேண்டுமெனில் அதுவே நல்ல வழியாகும். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரிடமும் மிகுந்த அக்கறையோடு கேட்டுக்கொள்வதெல்லாம் ஒவ்வொரு கட்டத்திலும் கேள்வி கேட்டுக் குறுக்கிடுவதைவிட உரையைக் கூர்ந்து கேட்டு உறுப்பினர் வைக்கும் வாதங்களில் கவனம் செலுத்திக் கேட்க வேண்டும் என்பதே. குறுக்கிடுவதைவிட பேச்சாளர் கூறுவதையெல்லாம் முழுமையாகக் கேட்டுவிட்டுப் பின்னர் தங்கள் வாதங்களை எடுத்து உரைத்தலே நன்று எனக் கருதுகிறேன். பேச விரும்புகின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் முழு வாய்ப்பு தரவிருக்கிறேன்.

***திருமதி துர்க்காபாய் :*** *ஐயா, நான் ஒரு கேள்விதான் கேட்க விரும்பினேன்....*

***மாண்புமிகு சபாநாயகர்:*** *எதுவாயிருப்பினும், உறுப்பினர்கள் கூற வந்ததை முழுமையாகக் கூற அனுமதிப்போம். இல்லையெனில் இத்தகைய குறுக்கீடுகளும், பதில் பெறக் கருதும் முயற்சிகளும் என்னுடைய வேண்டுகோளையும் மீறி அடிக்கடி செய்யப்படும் இடையூறுகளும் பேச்சாளரின் சிந்தனைத் தொடர் அறுந்து விடக் காரணமாகி, காலவிரயத்தையும் விளைவித்து விவாதத்தின் சீரிய தன்மையையே போக்கிவிடக் காரணமாகும். இங்கு நாம் முக்கியமான பல பொருள்கள் பற்றிச் சட்டங்களை இயற்றிக் கொண்டிருக்கின்றோம். எனவே, நாம் ஒவ்வொருவரும், இடை விமரிசனங்கள் செய்வதையும், குறுக்குக் கேள்விகள் கேட்பதையும் விட்டுவிட்டுப் பேச்சாளர் ஒவ்வொருவரும் என்ன கூறுகிறார் என்பதைக் கவனத்துடன் கேட்போம். குறுக்கிட்டு விளக்கமளிப்பதும், ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கம் கேட்பதும் தவிர்த்துப் பேச்சாளரின் உரையைப் பொறுமையுடன் கேட்போம்.*

**சர்தார் ஹுக்கம் சிங் :** எனில், நான் எனது கடைசிக் கருத்தை எடுத்துக் கொள்கிறேன்; இது எனக்கு மிகத்துன்பம் தருவதுதான். சீக்கியர்களுக்கு ஏற்கெனவே சில அச்சங்கள் எழுந்துள்ளன என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அச்சங்களுக்குக் காரணமேதுமில்லை என்று சிலர் கூறலாம். எவ்வா றாயினும் சீக்கியர்களுடைய மரபுகள், பண்பாடுகள் யாவற்றையும் அழித்து அவர்களை (இந்து சமயத்திற்குள்) ஈர்க்க முயற்சி நடக்கிற தென்று அவர்கள் அச்சமடைந்துள்ளனர்....

**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் :** இல்லை. இல்லை.

**சர்தார் ஹுக்கம் சிங் :** இந்த அச்சத்திற்குக் காரணங்கள் உண்டு, தாங்கள் நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்ற குறை சீக்கியர்களுக்கு எப்போதுமே உண்டு. குறிப்பாக ஒரு குறையைக் கூற வேண்டுமெனில், அவர்களும் இந்துக்களோடு ஒன்றிவிட்ட வர்களே என்று கூறிக்கொள்ளும் போதிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குறித்துக் குடியரசுத் தலைவரின் ஆணை பிறப்பிக்கப் பட்டபோது, சீக்கியர்கள் புறக்கணிக்கப்பட்டனர். குடியரசுத் தலைவரின் அண்மைக்கால ஆணையொன்றில், இந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களாயிருக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன், 34 சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினராய் அறிவிக்கப்பட்டனர். எங்களுக்கு உறுதியாக்கப்பட்ட பாதுகாப்புகளையெல்லாம் துறந்தும், இந்து அல்லது சீக்கிய மதத்தைக் கடைப்பிடிப்பவர் களில் நான்கு சாதியினர் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். எங்களுடைய மனக்குறை சில நலன்கள் அளிக்கப்படும்போது, அதில் நாங்கள் சேர்க்கப்படுவ தில்லை; அருகிலும் வர அனுமதிக்கப்படுவதில்லை; தூரவிலக் கியே வைக்கப்படுகிறோம். ஆனால் சலுகைகள் ஏதும் தரப்படாத விடத்து, நடைமுறைகள், மரபுநெறிகள், வழக்காறுகள் அழிக்கப் படும்போது மட்டும், நாங்கள் அணைத்துக் கொள்ளப்படுகிறோம். ஆனால் இது எங்களுக்கு விருப்பில்லாத போலி அணைப்பு; ஏனெனில் நாங்கள் எங்கள் மரபுகளையும் நடைமுறைகளையும் நேசிக்கிறோம். நாங்கள் நெடுங்காலமாக அவற்றோடு ஒன்றி விட்டோம். எனவேதான் இந்தச் சட்டத்தின் வரம்பிலிருந்து எங்களுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று மிகுந்த அக்கறை யோடு வேண்டிக்கொள்கிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா:** ஐயா, அவைத் தலைவர் அனுமதியுடன் கேள்வி ஒன்று கேட்க விரும்புகிறேன். சீக்கியர்களாகவே சர்தார் படேல் அவர்களையணுகிக் குறிப்பிட்ட நான்கு சாதிகள்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் வேறெந்த சாதியும் சேர்க்கப்படலாகாது என்றும் ஏற்றுக் கொண்டார்கள் என்பது உண்மைதானே என்று மதிப்பிற்குரிய நண்பரைக் கேட்கிறேன். அது உண்மைதான் என்றால், அஃது ஒரு ஒப்பந்தத்தின் விளைவான செயல்தான் என்றால், மதிப்பிற்குரிய நண்பர் குறைபட்டுக்கொள்ள ஏதுமில்லை.

**சர்தார் ஹுக்கம்சிங்:** அது நீண்ட (விவாதப்) பொருள். மதிப்புக்குரிய சர்தார் அவர்களே, தமது சொற்களால், இந்நான்கு சாதிகளை மட்டுமே (தாழ்த்தப்பட்டோர் என்று) ஏற்றுக்கொள்வோம், அதுவும் நாங்கள் வேண்டிய பாதுகாப்புகளைத் துறப்பதானால்தான் எனக் கூறினார். அத்தகைய நலன்களைத் தியாகம் செய்துதான் இந்நான்கு சாதியார் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பிடிக்க முடிந்தது; அதுவும் கூடப் பஞ்சாப், பெப்சு ஆகிய இரு மாநிலங்களில் மட்டும்தான்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா:** அதுவும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தானே.

**சர்தார் ஹுக்கம் சிங் :** கிடையாது.

**அவைத் தலைவர் :** டாக்டர் அம்பேத்கர்.

**திரு. டி.என். சிங் (உத்தரப் பிரதேசம்):** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரை விவாதத்திற்கு பதிலாக அமையுமா?

[1]**டாக்டர் அம்பேத்கர் :** ஐயா, நான் முதலில் எனது திருத்தம் பற்றிப் பேசவுள்ளேன்; அதன் பின்னர் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிற தீர்மானங்கள் குறித்துப் பேசுவேன்.

நான் தாக்கல் செய்துள்ள திருத்தத்தில் மூன்று தெளிவான கூறுகளைக் காணலாம். முதலாவதாக, துணைக்கிளைவிதி (1)இல் இடம் பெற்றுள்ள கடைப்பிடிக்கும் என்ற சொல் நீக்கப்படலாமென

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 பிப்ரவரி 6, பக். 2462-73.

முன்மொழிந்துள்ளேன். இச்சொல் நீக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணம் இன்றைய இந்து சமுதாயத்தில், கடைபிடித்தல் என்ற சொல்லுக்கான சமயப் பொருளில், இந்து சமயத்தைக் கடைபிடிக்காதவர்கள் பலரும் இந்துக்களாயிருக்கின்றனர். எடுத்துக் காட்டு கூறவேண்டுமென்றால் முந்தைய நாட்களில் கல்கத்தாவில் பிரம்ம சமாஜிகளும், பம்பாயில் பிரார்த்தனா சமாஜிகளும், தாங்கள் இந்து சமயத்தைக் கடைபிடிப்பவர்கள் அல்லர் என்று தெளிவாகவே பொது அறிக்கை கொடுத்தவர்கள். அருமை நண்பர் தாகூர்தாஸ் பர்கவா தமது உரையில் குறிப்பிட்டவாறு, இக்கால இந்துக்களில் பலர் சமயப்பொதுநோக்கு (எல்லாச் சமயங்களிலிருந்தும் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளல்) கொண்டவர்களாய் வாழ்கின்றனர். ஒவ்வொரு சமயத்திலிருந்தும் நல்லன என்று எவை அவர்களை ஈர்க்கின்றதோ அவற்றைத் தம் முன்னோரின் சமயங்களைக் கூடப் புறக்கணித்துவிட்டு, ஏற்றுக்கொள்ளத் தயாராயுள்ளனர். எனவே, 'கடைபிடிப்பவர்' என்ற சொல் கிளை விதியில் இடம்பெற்றால், ஒருவர் இந்து சமயத்தைக் கடைபிடிக்கிறார் என்று மெய்ப்பிக்கப்பட்ட பிறகுதான் அவர் மீது இந்துச் சட்டம் ஆளுகை செலுத்தலாம் என்று பலர் வாதாட இட மளிக்கும். ஆனால் இச்சட்டத் தொகுப்பின் குறிக்கோள் நிச்சயமாக அதுவல்ல. சட்டத்தின் நோக்கம் இந்து சமய நம்பிக்கையைச் சார்ந்தவர்கள் அனைவரையும் இதன் ஆளுகைக்குள் கொண்டு வருவதுதான். 'கடைப்பிடித்தல்' என்ற சொல்லின் பயன்பாடு மறுப்புகளுக்கு இடமளிக்கும் தன்மையதாய் இருப்பதால், அதை நீக்கிவிட்டு மாற்றுச் சொல்லைப் பயன்படுத்தலாமென முன்மொழிந்துள்ளேன்.

எனது இரண்டாவது திருத்தம் கிளை விதி (ஈ) பற்றியது. கிளைவிதி (ஈ) இன் இப்போதைய சொல்லமைவு, இந்து சமயத்துக்கு மாற்றமடைந்தவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும் என்று கூறுகிறது. இந்து சமயம் என்பது மிகவும் விரிவான பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்பதை இவ் அவையோர் யாவரும் அறிவர்; வேதங்களில் நம்பிக்கை, வேதங்களில் கூறப்பட்டிருப்பவையெல்லாம் அசைக்கவியலாத உண்மைகளே எனும் நம்பிக்கை, நால் வருணத்தில் நம்பிக்கை, யாக, யக்ஞங்களை நடத்துவதே நற்கதி பெற உற்ற வழி என்பன போன்ற நம்பிக்கை கொண்டவர் என்ற பொருளிலல்ல. நாம் பயன்படுத்துகின்ற பரந்த பொருளில் அது இந்நம்பிக்கைகள் அற்ற பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் யாவரையும் உள்ளடக்கும். எனவே கிளை விதி (ஈ) விட்டு வைக்கப்பட்டால் இந்து சமயத்துக்கு மாற்றம் பெற்றவர்கள் என்பது

குறுகிய பொருளில் கருதப்பட நேரிடும். இத்தகைய எதிர்வாதத்தினின்று விடுபடுவதற்காக நான் முன்மொழியும் புதிய தொடர், ''இந்து, பௌத்த,.... சமயங்களுக்கு மாற்றமடைந்தவர்களுக்கு'' என்பதாகும்.

எனது மூன்றாவது திருத்தத்தில், துணைக் கிளைவிதி (4)ஐ நீக்கலாமென முன்மொழியப்படுகிறது. இந்த மசோதா அவை முன் வைக்கப்பட்டு, அதன் முதல் வாசிப்பு வரை, மசோதாவில் இத்துணைக் கிளை விதி (4) இடம்பெறவில்லை என்பதை அவையோர் நன்கு உணர்வர். பொறுக்குக் குழுவின் அமர்வுகளின் போதுதான் இக்கிளைவிதி மசோதாவில் சேர்க்கப்பட்டது. இச் சட்டத்தொகுப்பின் நோக்கமே, பல்வேறு விரிவினரான இந்துக்கள் அனைவரையும் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குள் கொண்டு வருதல்தான் என்பதால், 1872ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே திருமணம் புரிந்து கொண்டவர்களை மட்டும் தனித்த குழுவாய்ப் பிரித்துக் காண்பதில் பயனேதும் இல்லையென்பதே இக்கிளை விதியின் முன்மொழிவாளர்களின் கருத்தாகும். அக்காரணத்தாலேயே, இம்மசோதாவில் அனைவரையும் முழுமையாக ஒருசேர இடம் பெறச் செய்வதற்காகவே. துணைக்கிளைவிதி (4) கொண்டுவரப்பட்டது. பொறுக்குக் குழுவினர் இக்கிளை விதியைப் புகுத்தும்போது அவர்கள் கவனத்தில் கொள்ளாது விட்டு விட்டு விட்ட கருத்து ஒன்றை இப்போது நோக்குவோம். துணைக் கிளை விதி (4)ஐ நாம் ஏற்றுக்கொண்டு சட்டத்தில் இடம்பெறச் செய்வோமெனில், அது 1872 ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் மணம் புரிந்து கொண்டவர்களுக்கும் பொருந்துமாதலால், பாரம்பரிய உரிமை, வாரிசுரிமை ஆகிய விவகாரங்களில் இப்போதுள்ள இந்துச் சட்ட விதிகளின் படியே நடத்தப்படுவர். வாரிசுரிமை குறித்த வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் பரம்பரைச் சொத்தின் வாரிசுரிமையில் பெண்களுக்கென மிகத் தாராளமான விதிமுறைகள் வகுக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவோம். ஏற்கெனவே, சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் மணம்புரிந்து கொண்டதன் மூலம், புதிய வாரிசுரிமைச் சட்டத்தின்படி கிடைக்கக்கூடிய தாராளமான சலுகைகளுக்குத் தகுதி பெற்றிருப்பவர்களைப் பழைய சட்டத்தின் பிடிக்கே உந்தித் தள்ளுதல் சரியானதன்று என்பதால்தான் கிளைவிதி (4) விட்டு விடப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன். இல்லையேல் வாரிசுரிமை குறித்த இப்போதைய சட்டத்தின் கெடுபிடியான விதிமுறைகளில்

அவர்களைத் தேவையின்றிச் சிக்கவைக்க நேரிடும்; அதை நாம் விரும்பவில்லை.

ஐயா, நான் இப்போது, கிளைவிதி 2 குறித்த பல்வேறு உறுப்பினர்களின் விமரிசனங்களுக்கு வருகிறேன். தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு திருத்தங்களையும் ஆய்ந்து நோக்கும் போது, எனக்கும் எனதருமை நணண்பர் தாகூர்தாஸ் பர்கவா அவர்களுக்கும் எவ்வித வேறுபாடுமில்லை என்றே கருதுகிறேன். அவருடைய திருத்தம் ஏறத்தாழக் கிளைவிதி 2இல் உள்ளடங்கியுள்ளதெனலாம். எனது வரைவில் சேர்த்திருக்கத் தேவையில்லை என்று அவர் கருதும் சமுதாயங்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டதன் காரணத்தை முதலில், விளக்குகிறேன். ஏனைய திருத்தங்களைப் பொறுத்தமட்டில், திருத்தங்கள் செய்ய முனையும் முடிவுகள் மூன்றே என்பதை எவரும் எளிதில் காண முடியும். இவற்றுள் முதலாவது இந்துச் சட்டத் தொகுப்பு என ஒன்று தேவையில்லாதது என்பதாகும். மாறாகக் குடிமக்கள் அனைவருக்குமாகப் பொதுக் குடிமைச் சட்டமே தேவையென்றும் கூறப்படுகிறது. திருத்தத் தீர்மானங்களில் பல்வேறு விதமாய் வலியுறுத்தப்படுகிறது இக்கருத்து. இரண்டாவதாக, இந்து சமூகத்திற்கென்று இவ் அவையின் முன்னே கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டம், கிறித்தவர்கள் முஸ்லீம்கள், பார்சிகள், யூதர்கள் உள்ளிட்ட இந்து அல்லாத மக்களுக்கும் பொருந்த வேண்டுமென்று கூறப்படுகிறது. அதாவது, இந்த இந்துச் சட்டமே பொதுக் குடிமைச் சட்டமாக இருக்கும் என்று கூறுவதாகும் இது. மூன்றாவது கருத்து இச்சட்டம் விரும்பி ஏற்றுக்கொள்பவர்களுக்கு மட்டுமே செல்லும் என்பதாகும். அதாவது குறிப்பிட்டதொரு குடிமகனோ, அல்லது இந்து சமுதாய உறுப்பினரோ, நீதிபதி ஒருவரின் முன்னிலையில் சென்று தான் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட இசைவதாகப் பதிவு செய்து கொண்டால் தான் அவருக்கு இச்சட்டம் பொருந்தும்; இதையன்றி வேறு எந்த வகையிலும் நாட்டில் இச்சட்டத்தின் ஆட்சியைக் கொண்டு வர லாகாது என்பதாகும். இவையன்றி மற்றுமொரு ஆலோசனையும் கூறப்பட்டது. ஆலோசனையைக் கூறியவர் யார் என்பது எனக்கு நினைவில்லை; அந்த ஆலோசனைதான் இச் சட்டத் தொகுப்பின் ஏற்பியைவுக்காகப் பொது மக்களின் கருத்துக் கணக்கு எடுக்க வேண்டும், அல்லது தேர்தல் ஒன்று நடத்தியபின் முடிவு செய்ய வேண்டும் என்பதாகும்.

**பண்டிட் எம்.பி. பர்கவா :** அது பின்னர் வருவது.

**டாக்டர் அம்பேத்கர்:** யாரோ ஒருவர் கூறினார்; யாரென்பதைத்தான் நினைவு கூர முடியவில்லை.

**திரு. ஜே.ஆர். கபூர்:** அவர் பின்னர் அவ்வாறு கூறக் கருதியுள்ளார்.

**டாக்டர் அம்பேதகர் :** ஆம்.

நேற்று வரை இந்த இந்துச் சட்டத்தைத் தீவிரமாக எதிர்த்து பழைமை மிக்க இந்துச் சட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தவர்களில் சிலர், இன்று அனைத்திந்தியக் குடிமைச் சட்டம் ஒன்றை ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பதைக் கண்டு நான் மிகுந்த வியப்படைகிறேன். சிறுத்தைகள் தம் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை என்றொரு பழமொழியுண்டு. அந்தப் பழைமைவாதச் சிறுத்தைகள்தான் இந்த அவையின் முன் நான் வரும்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் மசோதாவைக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தன. அவர்கள் யாவரும் புதிய இந்துச் சட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் வகையில் புரட்சியாளர்களாகு மாறு திடீரென மனமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை. அவர்களுக்கு உரிமை இயல் சட்டம் தேவையென்றால், உரிமை இயல் சட்டம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நீண்ட காலம் ஆகுமென்றா கருதுகிறார்கள்? இந்த யோசனையை அவர்கள் முன்வைப்பதற்கான உள்நோக்கம் இதுவாயிருக்கலாம்: இந்துச் சட்டத் தொகுப்பின் வரைவுக்கே நான்கைந்து ஆண்டு காலம் எடுத்துக் கொண்டவர்கள் பொது உரிமை இயல் சட்டத் தொகுப்பின் வரைவுக்கு மேலும் பத்தாண்டுகள் எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: உரிமை இயல் சட்டத் தொகுப்பு ஆயத்தமாகவே உள்ளது. அவர்கள் விரும்பினால் இரண்டே நாட்களில் அதை இந்த அவையில் தாக்கல் செய்ய முடியும். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள விருப்பமுடன் ஆயத்தமாக இருந்தால் இந்த அவையே அதை அரைமணி நேரத்திற்குள் நிறைவேற்றி விடவும் முடியும்.

முதலில் உரிமை இயல் சட்டம் என்பதென்ன? என்று கேட்க விரும்புகிறேன். இந்திய வாரிசுரிமைச் சட்டம் என்பதே ஒரு உரிமை இயல் சட்டம்தான். கெட்ட காலமாக அது இந்துக்களுக்குப் பொருந்தாது. இந்திய வாரிசுரிமைச் சட்டத்தை விட மேம்பட்டதொரு உரிமை இயல் சட்டத்தை, தமது சட்ட மேதைமை

முழுவதையும் திரட்டி இயற்றக் கூடியவர் எவரேனும் உளரா என்று கேட்க விரும்புகிறேன். இந்திய வாரிசுரிமைச் சட்டத்தை அனைவருக்குமான உரிமையியல் சட்டமாக மாற்றுவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம், அச்சட்டத்தின் கிளைவிதி 2இல் கூறப் பட்டிருக்கும் ''இச்சட்டம் இந்துக்களுக்கு (மட்டும்) பொருந்தாது என வரும் தொடர் விலக்கப்பட வேண்டுமென்று ஒரு கிளை விதியை அதில் சேர்ப்பதுதான். அவ்வாறு செய்தால் நாளையே நமக்கொரு உரிமை இயல் சட்டம் கிடைக்கும். உரிமை இயல் சட்டத்தின் ஒரு பகுதியாகத் திருமணச் சட்டம் வேண்டுமென நீங்கள் விரும்பி னால் அதற்கான வரைவும் ஆயத்தமாகவே உள்ளது. ஏற்கெனவே, நம்மிடையே சிறப்புத் திருமணச் சட்டம் உள்ளது. நாம் செய்ய வேண்டியதெல்லாம், அச்சட்டம் இன்னின்னாருக்கெல்லாம் பொருந்தாது, இன்னின்னாருக்குத்தான் பொருந்தும் என வரும் தொடர்களை நீக்கி விடுவதுதான். அதாவது (அச்சட்டத்தின்) கிளை விதி 2இல் இச்சட்டம் (இந்தியக்) குடிமக்கள் அனைவருக்கும் பொருந்தும்என்று கூறிவிட வேண்டியதுதான், அத்துடன் பணி முடிந்து விடும். எனவே, இந்த ஆலோசனையைக் கூறியவர்கள், உண்மையிலேயே இப்பொருள்களில் நல்ல சட்டங்கள் தேவை யெனும் உள்ளார்ந்த அக்கறையோடுதான் கூறினார்களா என்று அறிய விரும்பினேன்....

**திரு. சோந்தி** (பஞ்சாப்): உளமாரக் கூறினார்கள் என்றே கொள்ள வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர்:** அவர்களைப் பற்றி நான் நன்கறிந்த வனாதலால், அவ்வாறு எடுத்துக்கொள்ள நான் தயாராயில்லை. ஆகவேதான் அருமை நண்பர் ரோகிணிகுமார் சௌதுரி அவர்கள் கூறிய ஆலோசனையை நேற்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ''தேவையான (திருத்த) நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டத்தை விரைந்து நிறைவேற்றுங்கள், அல்லது இதைக் கடைசியாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று அவர் கூறினார். அருமை நண்பர் ரோகிணி குமார் சௌதுரி அவர்கள், தாம் கூறிய யோசனையை நான் அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுத்தினால் அதை ஆதரிப்பார், எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார் என்று அவர்மீது எனக்கு நம்பிக்கை இருந்திருக்குமானால், அவருடைய யோசனையை என்னால் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் அவரே இப்போது தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையைக் காண்கிறேன். உறுதியான அணியாக அவரைப் பின்தொடர்ந்த அவரது நண்பர்களெல்லாம்

இன்று தனித்துப் பிரிந்துவிட்டனர். அவர்களெல்லாம் இன்று விழி திறக்கப்பட்டு, சட்டத்தை முழுமையாக இல்லாவிடினும், அதன் பகுதிகளை ஆதரிக்கத் தயாராக உள்ளனர். ஆகவேதான் பொதுக் குடிமைச் சட்டம் தேவையென்னும் கருத்து என்னை ஈர்க்கவில்லை; ஏனெனில் அக்கோரிக்கையில் போதிய உறுதிப்பாடுமில்லை; சீரிய அக்கறையுமில்லை என்று நான் நம்புகிறேன்.

இந்த (இந்துச்) சட்டம் குடிமக்கள் அனைவருக்கும் பொருந்த வேண்டுமெனும் கோரிக்கைக்கு, இந்த ஆலோசனையை முன்வைத்த அனைவருக்குமே அருமை நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா தகுந்த பதிலளித்து விட்டார் என்று கருதுகிறேன்; அதற்கும் மேலாக என்னால் ஏதும் கூறிவிட முடியாது. இந்த ஆலோசனை யைக் கூறிவர்கள் யாவரும், நாட்டின் பல்வேறு சமுதாயங்களின் உணர்வுகளை அறிய முடியாத அளவுக்கு, அறியாமையில், - ஏன் மடைமையில் என்றே கூறியிருப்பேன்- ஆழ்ந்திருக்கக் கூடியவர்கள் தானா என்று எனக்குத் தெரியவில்லை. நாம் ஒரு சமயச் சார்பற்ற நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களாயிற்றே என்பதெல்லாம் சொல்லிக்கொள்ள வேண்டுமானால் இனிதாயிருக் கலாம். சமயச் சார்பற்ற நாடு என்ற தொடரைப் பயன்படுத்தும் போது, நமது அரசியலமைப்புச் சட்டத்தில் அத்தொடருக்கான உண்மையான பொருள் என்ன என்பது தொடரைப் பயன்படுத்தும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் பலருக்குச் சரியாய்த் தெரியுமா என்பதில் ஐயமுறுகிறேன். நாம் சமயங்களை அழித்துவிட முடியும் என்பது அதன் பொருளல்ல; மக்களின் சமய உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்கத் தேவையில்லை என்பதும் அதன் பொருளல்ல; சமயச் சார்பற்ற நாடு (அரசு) என்பதன் பொருள் எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் பிற மக்களின் மீது திணிக்க இந்தப் நாடாளுமன்றத் திற்கு எவ்விதமான அதிகாரமும் கிடையாது என்பதே அதன் பொருள். அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்கிற வரம்பு அது ஒன்றுதான். மக்களின் உணர்வுகளைப் புறக்கணிப்பதற்காக நாம் இங்கு அனுப்பப்படவில்லை.

**பாபு ராம்நாராயண சிங்:** *அதைத்தானே செய்து கொண்டிருக் கிறீர்கள்.*

**டாக்டர் அம்பேத்கர் :** நான் அதைச் செய்யவே இல்லை என்பதை உங்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவேன். எனவே பகுத்தறி வுக்குச் சற்றும் ஒவ்வாதவாறு கூறப்பட்ட இந்த ஆலோசனையைப்

பற்றி நான் இங்கு மேலும் விவரிக்கப் போவதில்லை. அடுத்து இச்சட்டத்தொகுப்பு விருப்பத் தேர்ச்சியின் அடிப்படையிலேயே செலுத்தப்பட வேண்டும் என்னும் கருத்து பற்றி நோக்குவோம். இது மிக ஆபத்தான ஆலோசனை என்றே நான் கருதுகிறேன். இந்த ஆலோசனையின் பொருள் என்ன? அதாவது, நாடாளுமன்றம் என்பது எந்தவொரு விதிமுறையையும் பரிந்துரைக்கும் மன்றமே என்றுதானே பொருள்படுகிறது? இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப் படுகிறதென்று வைத்துக் கொள்வோம். பின்னர் நாடாளுமன்றம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்றுதான். வெளியேயுள்ள மக்களைப் பார்த்து, ''கனவான்களே, இதோ இதுதான் நாங்கள் இயற்றியுள்ள சட்டம்; இது நல்லதென்றே நாங்கள் நினைக்கிறோம்; இதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா, இல்லையா என்பது உங்கள் பொறுப்பே'' என்று கூறத்தான் முடியும். இதுதான் நாம் எடுக்கப்போகும் நிலை என்றால், நாம் தவறான முன்னுதாரணம் ஒன்றைத் தொடங்கி வைப்பவராவோம்; நாடாளுமன்றம் தன்பாட்டுக்கு முடிவில்லாமல் பரிந்துரைகளாகச் செய்து கொண்டே போகும்; இப்பரிந்துரைகள் நிறைவேற்றப்படுதல் என்பது பொதுமக்கள் கருத்துக் கணக் கெடுப்பின் வாயிலாகத் தான் என்றாகிவிடும். இந்த நாடாளு மன்றம் இறையாண்மை கொண்ட நாடாளுமன்றம் என்பதை வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன். (சட்டம் இயற்றுவதற்கு) மக்க ளிட மிருந்து அதிகாரம் கோருவதொடு சரி; அதன் பின் தனது ஒவ்வொரு செயலுக்கும் பொதுமக்களின் ஒப்பிசைவு வாங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்ற கடப்பாடு நாடாளுமன்றத்துக்குக் கிடையாது. அது எவ்வாறு விரும்புகிறதோ அவ்வாறே முடிவெடுக்கலாம்; அது மீயுயர் அதிகாரம் கொண்டது; எந்தச் சட்டத்தையும் இயற்றவும், நீக்கவும் அதற்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு முறை சட்டமியற்றும் போதும், சட்டங்களின் நுட்பங்கள் குறித்து ஆனா ஆவன்னா கூடத் தெரியாத பாமர மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தித்தான் எவ்வித முடிவும் எடுக்கவியலுமெனில், இந்நாடாளுமன்றச் செயல்பாட்டை நிறுத்தி வைப்போம். இதுதான் நிலையெனில் நாடாளுமன்றமே இல்லாதிருத்தலே நன்று.

இரண்டாவதாக, இந்த நாட்டின் சட்டமன்ற வரலாற்றில், இப்போது நாடாளுமன்றத்துக்கு அளிக்கப்படுவது போன்ற பரிந்துரை, அளிக்கப்பட்டதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டைக் கூட என்னால் காண முடியவில்லை. இந்துச் சட்டத் தொகுப்பு குறித்துப் நாடாளுமன்றம் சட்டம் இயற்றுவது இதுவே முதல் முறையல்ல. இந்தியச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்கள்

குறித்துத் தோராயமாகக் கணக்கிட்டுப் பார்த்தேன். இந்தியாவில் சட்டமியற்றும் அதிகாரம் பயன்படுத்தப்படத் தொடங்கிய 1833 ஆம் ஆண்டிலிருந்து மொத்தத்தில் 29 சட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன; அவற்றுள் சில மிகவும் கடுமையான தன்மை கொண்டவை, அடிப்படையான மாற்றங்களை விளைவித்தவை. ஆனால் இந்த அவையில் ஒருபோதும் அச்சட்டங்கள் இயற்றப் படப் பொது மக்களின் இசைவோ, பொதுக் கருத்துக் கணக் கெடுப்போ தேவையென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டதில்லை. (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்: அவை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் அல்ல). அப்படியெனில் நிலைமை மேலும் மோச மானது. தேர்ந்தெடுக்கப்படாத சட்டமன்றங்களே, சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தவும், அவற்றை மக்கள் மீது செலுத் தவும் செய்திருக்கின்றன என்னும் போது, மக்கள் பிரதிநிதித்துவத் தன்மை வாய்ந்த இந்த நாடாளுமன்றம் மக்களுக்காகச் சட்டம் இயற்றவியலாதது என்ற கோரிக்கை விந்தையல்லவா:

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** அப்படி யாரும் கூற வில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பொது மக்கள் கருத்துக் கணக்கெடுக்க வேண்டுமென்று கோரிய போது, இதைத்தானே கூறினார்கள்.

இப்போது கிளைவிதி 2இன் வரைவு குறித்துக் கூறப்பட்ட சில விமரிசனங்களை மீண்டும் நோக்கலாமென எண்ணுகிறேன். குறிப்பாக இந்த விமரிசனங்கள், அருமை நண்பர்கள் நசிருத்தீன் அகமது, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா ஆகியோரிடமிருந்து வந்தன. ஐயா, (அச்சமயம்) நேற்று தாங்கள் அவைத் தலைமைப் பொறுப்பில் இல்லை. ஆனால்....

**பேரா. ரங்கா (சென்னை) :** ஆனால் அவைத் தலைமை இருந்திருக்குமே.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆம். அவைத் தலைமை இருந்தது. நான் சொல்ல வந்தது என்னவென்றால், திரு. நசிருத்தீன் அகமது அவர்கள் மிகவும் குற்றம் சாட்டுகின்ற மனநிலையுடனே தொடங் கினார். எனது திருத்தங்களின் மொழிநடை கட்டளையிடும் தொனி யில் இருப்பதாய்க் கூறி அவையை எனக்கெதிராக ஒருதலையாய்த்

திருப்ப முயன்றார்: ''இதனை மாற்றி இடுக'' என்பது கட்டளை யாகுமென்றார். இன்னின்ன சொற்களுக்கு (தொடருக்கு) பதிலாக இன்னின்ன சொற்களை (தொடரை) மாற்றியமைக்குமாறு வேண்டப் படுகிறது'' என்பன போன்று நீட்டி நெளிக்கும் நடை மூலம் கூறுவதே அவைக்குத் தகுந்த மரியாதை காட்டுவதாகுமெனக் கருதினார் போலும். உண்மையில் கூறப்போனால், இந்தக் கருத்து குறித்து நான் பதிலேதும் கூறவேண்டியதில்லை என்று கூட விட்டிருக்கலாம்; ஏனெனில் வரைவு எனது பணியன்று, அதுவரை வாளர் குழு எனும் அமைப்பின் பணியேயாகும். அவர்கள் தங்க ளுக்கென வகுத்துக் கொண்டுள்ள வரைவு விதிகளின் படியே இப்பணியைச் செய்துள்ளார்கள் என்று எனது பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கலாம். ஆனால் நான், இத்தகைய மொழி நடையைப் பன்படுத்தியதன் மூலம் வரைவாளர்கள் தரமான நடையிலிருந்து தாழ்ந்து தவறு செய்து விட்டனரோ என ஆய்ந்து பார்த்தேன். இவையே உண்மையாகும். நசிருத்தீன் அகமது அவர்கள் கூறுவது போன்று ''இன்னின்ன சொற்களுக்குப் பதிலாக, இன்னின்ன சொற்களை மாற்றி இடலாமென வேண்டப்படுகிறது'' என்பது போன்ற நடை பொதுவாகச் சட்டத்தின் வரைவின்போது பயன் படுத்தப்படுவதைக் கண்டிருக்கிறேன். ஆனால் சட்ட வரைவுக்கான மொழி நடைக்கும், திருத்த வரைவுக்கான மொழி நடைக்கும் வேறுவேறான மொழிநடைகளே பயன்படுத்தப்பட்டு வந்திருப் பதாகவே தோன்றுகிறது. எனவே, வரைவாளர்கள் இந்தத் திருத் தங்களின் வரைவின்போது சட்ட வரைவுக்கான மொழிநடை யைக் கையாளாமல், திருத்த வரைவுக்கான மொழிநடையிலேயே வரைவு செய்துள்ளனர். இரண்டாவதாக ஒன்று கூறலாம். குடியரசுத் தலைவர் அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த அவைக்குச் சில ஆணைகளை அனுப்பியுள்ளார். அந்த ஆணைகளின் தொடர் மிகவும் தடிப்பு மிக்கதோர் புத்தகத்தின் உருவில் காணப்படுகிறது. அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை என்ன? அந்த நடையில்தான் வரைவாளர் குழு திருத்தத் தீர்மானங்களை வரைவு செய்துள்ளது. குடியரசுத் தலைவர் உருவாக்கியுள்ள முன்னுதாரணத்தையே பயன் படுத்தினோம் என்று வரைவுக்குழு சமாதானம் கூடக் கூறலாம். ''வழக்கமான நடையிலிருந்து மாறுபட்டுக் குடியரசுத் தலைவர் புதிய நடையில் ஏன் எழுத வேண்டும்?'' என எனது விசாரணை (ஆய்வு)யை மேலும் தொடர்ந்தேன். எனக்குக் கிடைத்த பதிலாவது, ''அச்சுச் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டுதான்'' என்பதாகும். இல்லையேல் ஏற்கெனவே தடிமன் மிகுந்த புத்தகங்கள் மேலும்

தடிமனாகி தாளுக்கும், மையிற்கும் கேடாய் முடிவதுதான் எச்சமாயிருக்கும். எனவே, வரைவாளர்கள், குடியரசுத் தலைவரின் நடையைப் பின்பற்றியே இத்திருத்தங்களை வரைவு செய்துள்ளனர். எனவே, அரசியலமைப்புச் சட்ட ஆணைகளின் நடையைப் பின்பற்றியதில் எனது வரைவாளர் தவறேதும் செய்யவில்லை. எனவே, என்னை மோசமானதொரு படப்பிடிப்பில் காட்ட விரும்பிய நண்பரின் முயற்சி முழுமையாகத் தோல்வியடைந்து விட்டதென்பதால் இது குறித்தும் மேலும் எதையும் கூறாது விட்டு விடுகிறேன்.

அடுத்து துணைக் கிளை விதி (ஈ) குறித்து நண்பரின் மறுப்பை நோக்குவோம். (இச்சட்டத்தால்) பலபேர் இந்து சமயத்திற்கு மாறுவார்களென நான் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார். சமயம் மாறுபவர்களுக்கு, அவர்கள் பிறந்த குடும்பத்திலுள்ள உரிமைகளைக் காப்பாற்றுதற்கு, இந்தத் துணைக் கிளை விதியிலோ, கிளை விதி 2 இலோ நான் எவ்விதக் காப்புரையும் சேர்க்கவில்லை என்பதே நண்பரின் குற்றச்சாட்டு என நான் புரிந்துகொண்டது சரிதானே! அருமை நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் மிக விரிவான சட்ட அறிவு வாய்ந்தவர்; எனினும் அவருங்கூட இயலாமை நீக்கச் சட்டம் என 1850ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பழைய சட்டம் ஒன்று இருப்பதை மறந்து விட்டாரென்பது வியப்பையே தருகிறது; சமயமாற்றம் செய்து கொள்பவர் ஒருவருக்கு அதனால் எழும் இயலாமையைப் போக்கி, அவரது மனச்சான்று உரிமையைப் பாதுகாப்பதற்கென்றே இயற்றப்பட்ட சட்டம் அது. பண்டைய இந்துச் சட்டத்தில், இந்து சமயத்திலிருந்து வெளியேறியவர்கள் **பதிதர்** என்று அழைக்கப்பட்டு, அவர்களுக்குச் சொத்தில் வாரிசுரிமை இழக்க நேரிடுமாகையால், பலர் சமயமாற்றத்திற்குத் தயங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பாதிரியார்கள் போராடியதால் இயற்றப்பட்ட சட்டம் அது; அந்தச் சட்டத்தை, அதன் விதிமுறைகளை அகற்றுவதற்காக இதுவரை (நாம்) நான் ஏதும் செய்துவிடவில்லை. இந்த இந்துச் சட்டத்தின் விளைவாக விலக்கிக் கொள்ளப்படும் சட்டங்களின் பட்டியலை அருமை நண்பர் பார்ப்பாரேயானால், அதில் 'சாதி(யால்) இயலாமை நீக்கச் சட்டம்' இடம் பெறவில்லை என்பதைக் காண்பார். எனவே, ஒருவர், சமயம் மாறவிரும்பினாலும், அவருடைய தந்தையின் சொத்தில் அவருக்குள்ள உரிமையைத் தக்கவைத்துக் கொள்ளலாம். ஆகவே, திரு. நசிருத்தீன் அகமது அவர்களின் குற்றச்சாட்டுக்குச் சிறு துளி ஆதாரமும் கிடையாது.

துணைக் கிளை விதி (2)ஐ எதிர்ப்பதாகவும் நண்பர் கூறினார். துணைக் கிளை விதி (2) கூறுவதாவது -

> ''இந்தச் சட்டம் சமயத்தால் முஸ்லீமாகவோ, கிறித்தவ ராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ அல்லாதார் அனை வருக்கும் பொருந்தும்.''

இது ஒரு எச்சமுறை விதி என்பது தெளிவு. இவ்விதியில் இந்துக்களில் ஒருவராகவோ, அல்லது பார்சிகள், யூதர்கள், கிறித்த வர்கள், முஸ்லீம்களில் ஒருவராகவோ அறியப்படாத மீதியுள்ள (எச்ச) மக்கள் அனைவரையும் பற்றி இச்சட்டத்தில் குறிப்பிடப் படுவதால் இது எச்சம் உரை விதிகளின் வகையைச் சேர்ந்த தாகும். இந்நாட்டில் நன்கு அறியப்பட்டுள்ள சமயங்களில் எதனை யும் பின்பற்றாத மக்களும் மிகப் பெரிய எண்ணிக்கையில் உள்ளனர் என்பதில் ஐயமில்லை. இவர்களைக் குறித்து நாம் என்ன செய்யப் போகிறோம்? இந்தச் சட்டம் அவர்களுக்குப் பொருந்துமா? அன்றிப் பொருந்தாதா? என்பது சட்டத்தில் சொல்லப் பட்டாக வேண்டும். அவர்களுக்கு இச்சட்டம் பொருந்துமென் றால், எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதையும் சொல்லியாக வேண்டும். இந்த நாட்டில், ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், காட்டுவாசிகள், பிற்பட்ட வகுப்பினர், ஆன்மவாதிகளுமான, பல்வேறு எண்ணற்ற பிரிவினரான மக்கள் மிகப்பெரும் எண்ணிக் கையில் வாழ்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அவர் களுக்காகவென்று சட்ட விதிமுறைகள் தேவையன்றோ? எச்சமுறை வகுப்பினரான இம் மக்களுக்கும் சட்டம் பொருந்துவதற்காகவே துணைக் கிளை விதி (2) தேவைப்படுகிறது. இவ்வாறு, அடை யாளம் தெளிவற்ற மக்களையெல்லாம் இந்து சமயத்திற்குள் புறக் கதவு வழியாக ஈர்த்துக் கொள்ள வழி செய்வதென்ற அரசின் அரசியல் உள்நோக்கமே (இந்த மசோதாவின் கிளை விதிக்குக்) காரணம் என்றுங்கூடக் கூறப்படலாம். ஆனால் எமது நோக்கம் அதுவன்று என்பதைக் கிளை விதியைக் கூர்ந்து நோக்கின் உணரலாம். இந்து மரபு நெறிகளும் நடைமுறைகளும் அவ்வகுப்பினரிடையே வழங்கி வருகின்றன என்பது மெய்ப்பிக்கப்பட்டால்தான் அவ்வகுப்பின ருக்கு இச்சட்டம் செல்லும்; இல்லையேல் விரும்பியவாறு நடந்து கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. எனவே, நமது நண்பரின் விமரிசனம் தவறு என மீண்டும் காண்கிறோம்.

(பிற்பகல் 4 மணி)

*பேரா. ரங்கா:* அவர்களாக விரும்பி (இச்சட்டத்தின் ஆளுகையிலிருந்து) வெளியேறிவிட முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* மரபுநெறிகளையும், நடைமுறைகளையும் பின்பற்றுகிறார்களெனில் சட்ட வரம்புக்குள் வருவர்; இல்லையேல் சட்ட வரம்புக்கு அப்பால் இருப்பர்.

ஐயா, இப்போது நான் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, சர்தார் ஹுக்கம் சிங் ஆகியோர் எழுப்பிய சிக்கல்களுக்கு வருகிறேன். சர்தார் ஹுக்கம் சிங் அவர்கள் தந்துள்ள திருத்தத்தின் படி இச்சட்டம் சீக்கியர்கள் மீது செலுத்தப்படலாகாது என்று தொடக்கத்தில் கோரியிருந்தார்; பின்னர் சற்று இறங்கி வந்து சில பகுதிகளை மட்டும் எதிர்ப்பதாய்க் கூறினார். இந்தச் சட்டம், கண்டிப்பான பொருளில் இந்துக்கள் எனப்படுவோர் மீது மட்டும் செலுத்தப்பட வேண்டுமா அல்லது ஏனைய பிறர் மீதும் செலுத்தப்படலாமா என்ற வினாவுக்கு விடையளிக்கு முன்னர், பொதுவாக இப்பொருள் பற்றியதொரு கருத்துத் தெளிவு தேவையென்று கருதுகிறேன். நான் முதன்மையானதாய் வற்புறுத்த விரும்புவதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கவனத்தில் இருத்திக்கொள்ள வேண்டுமென நான் எதிர்பார்ப்பதுமான கருத்து இதுவே. சமூக வியல் கண்ணோட்டத்தில், இந்தியாவிலாகட்டும், அன்றிப் பிற நாடுகளிலாகட்டும் நிலவும் பல்வேறு வகைச் சமயங்களையும் இரண்டு வகைகளாய்ப் பாகுபாடு செய்யலாம். முதல் வகை, சமய அமைப்பிலிருந்து பிரிக்கவியலாத சட்ட அமைப்பும் உள்ளடக்கிய சமயங்கள். இரண்டாவது வகை, சட்ட அமைப்பு ஏதுமின்றி வெறும் நம்பிக்கைகளின் அடிப்படையில் நிலவும் சமயங்கள், எனக்குப் புரிந்தமட்டில் இந்து சமயத்தின் வேறுபட்ட தன்மை, அதனின்றும் பிரிக்கவியலாது ஒன்றியிருக்கும் சட்ட அமைப்பு முறையே. இதைத் தெளிவாக மனதில் இருத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகிய யாவரும் இந்து சமயத்தின் கீழ்க்கொண்டவரப்படுவதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும். வைதிக பிராமணர்களிடமிருந்து புத்தர் கருத்து வேறுபாடு கொண்டபோது அவ்வேறுபாடு நம்பிக்கைகளோடு நின்று விட்டது. தன்னைப் பின்பற்றுவோருக்கெனத் தனியே சட்ட அமைப்பு எதையும் புத்தர் உருவாக்கவில்லை. சட்ட அமைப்பு மட்டும் அப்படியே இருக்கட்டுமென்று விட்டு விட்டார். அப்போது நிலவிய சட்ட அமைப்பு நன்முறையில் இருந்தது காரணமாயிருக்

கலாம்; அதில் குற்றங்குறைகளேதும் இல்லாமலிருந்திருக்கலாம். எனவே, அவர் சமயக் கருத்துக்களில் மாற்றங்கள் புகுத்தியது போதும் என்று, அதன் தொடர்பாய்ச் சட்ட அமைப்பில் மாற்றங்கள் ஏதும் தேவையில்லை என்று விட்டுவிட்டார்.

(துணை சபாநாயகர் தலைமை ஏற்கிறார்)

இதே முறையில்தான் மகாவீரர் தனியாக ஒரு சமயத்தைத் தோற்றுவித்தபோது, சமணர்களுக்கென்று தனியான சட்டமுறை எதையும் உருவாக்கவில்லை; அப்போதிருந்த சட்ட அமைப்பே ஏற்றதென்று விட்டு விட்டார். அவ்வாறே, சீக்கிய குருமார்கள் பலரில் ஒருவர்கூட சீக்கியர்களுக்கென்று தனியான சட்டநூல் எதையும் எழுதவில்லையென்று நான் கூறுவது, பிழையெனில் சர்தார் ஹுக்கம்சிங் அவர்கள் திருத்தட்டும். இந்த நாட்டில் சமயங்கள் பல மாறியிருப்பினும் சட்டம் என்பது நிலைத்தே வந்துள்ளது. இதை நீங்கள் இடர்ப்பாடு என அழைப்பீர்களோ, நல்லூழ் என அழைப்பீர்களோ, தீயூழ் என அழைப்பீர்களோ, குறிப்பிட்ட சொற்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால் செய்தி உண்மையென்பது மட்டும் உறுதி. ஆகையால்தான் சீக்கியர்களும் இச்சட்டத்தைப் பின்பற்றுகின்றனர்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** ஆனால், நீங்கள் இப்போது புதிய சட்டத்தையல்லவா உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆம், இச்சட்டம் புதியதுதான். சமணர்கள் வந்து, ''எங்களை என்ன செய்யப்போகிறீர்கள்? எங்களை எல்லாம் இந்துக்களாக்கிவிடப் போகிறீர்களா?'' என்று கேட்கிறார்கள். சீக்கியர்களும் அதையேதான் கேட்கிறார்கள்; பௌத்தர்களும் அதையேதான் கூறுகிறார்கள். ஆயின் அதைத் தவிர்க்க இயலாது என்பதுதான் எனது விடை. நீங்கள் யாவரும் இவ்வளவு காலமாக இந்தச் சட்டம் ஒன்றைத்தான் தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டம் முழுமையாகவே எங்களுக்கு வேண்டாம், இனி எங்களுக்கு இச்சட்டத்துடன் தொடர்பேதும் இல்லையென்று கூறுவதற்கான காலம் கடந்து விட்டது; இனி அவ்வாறு செய்ய முடியாது. எனவே இந்துச் சட்டமும் இச்சட்டத் தொகுப்பும் பௌத்தர், சமணர், சீக்கியர் யாவரையும் உள்ளடக்குதல் என்பது வரலாற்று வளர்ச்சியின் விளைவேயன்றி, நீங்களோ, நானோ இதற்கு மாற்றுவிடை ஏதும் கூறவியலாது. நாம் செய்யக்

*கூடியதெல்லாம், இச்சட்டம் தவறாகப் போய்விட்டதென்றால், தவறைச் சரிசெய்வதும், மாற்றியமைப்பதும், சமநீதி வாய்க்குமாறு சீர்திருத்துவதும்தான்; அதைத்தான் இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம். சீக்கியர்களைப் பொறுத்தமட்டில், பிரிவி கவுன்சில் (வழக்குகளையும்) தீர்ப்புகளை(யும்) நோக்கும்போது, 1830ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இச்சிக்கல் வெகுவாகப் பலமுறை வாதிடப்பட்டுள்ளதென்றும், சட்டத்தைப் பொறுத்தமட்டில் சீக்கியர்களும் இந்துக்களே என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் காண்கிறேன். 1830 இலிருந்து 1950 வரை எத்தனை ஆண்டு காலமாகச் சட்டத்தைப் பொறுத்த அளவில் நீங்கள் இந்துக்களாகவே கருதப்பட்டிருக்கிறீர்களென எண்ணிப் பாருங்கள்.*

***சர்தார் ஹுக்கம் சிங்:*** *அதில் ஒருபோதும் ஐயம் எழுந்ததில்லை.*

***டாக்டர் அம்பேத்கர்:*** *சட்டத்தில் நிலைத்த தீர்ப்பு என்று ஒரு கோட்பாடு உண்டு. அதாவது, ஒரு தீர்ப்பு தவறானதாகவே இருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு நெடுங் காலமாகப் புழங்கி வந்திருந்தால், அது தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கலாம் என்பதுவே அக்கோட்பாடு.*

***சர்தார் ஹுக்கம் சிங்:*** *நீங்கள்தான் இப்போது மாற்றப் போகிறீர்களே. நான் செய்ய வேண்டியது என்ன?*

***டாக்டர் அம்பேத்கர்:*** *ஐயா, இப்போது நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் எழுப்பிய சிக்கல்களை இப்போது எடுத்துக் கொள்கிறேன். அவருடைய உரையைக் கேட்டு உண்மையிலேயே நான் மிக மகிழ்ந்தேன்.*

***திரு. ஜே.ஆர். கபூர் :*** *புகழ்ச்சியின் மூலம் அவரை உங்கள் பக்கம் திருப்பிவிட முடியாது.*

***டாக்டர் அம்பேத்கர்:*** *நான் அவருக்குத் தூண்டில் ஏதும் போடவில்லை. உண்மையாகவே அவர் பல்வேறு (பாதுகாப்புக் குழிகளை) அரண்களை ஒன்றன் பின் ஒன்றாக வெட்டிக்கொண்டு இருந்தார் என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். ஆனால் அவரால் தமது முதல் அரணையோ, இரண்டாம் அரணையோ மூன்றாம் அரணையோ காத்துக்கெள்ள இயலாது என்பதை அவரே*

அறிவார் என்று அவரது இறுதி அரணிலிருந்து பார்த்துக்கொண்டு நான் கூறுகிறேன். அவரது இறுதியரண் என்பது வலிவற்ற சிறிய குழியே. அதாவது, திருமணம் செய்து கொடுக்கப்பட்ட மகளின் ஆதரவின்மை நிலையெனும் அவரது இறுதி வாதத்திற்குச் சரியான விடை அளிப்போமெனில் அவரது எதிர்ப்பு முற்றிலுமாக நீங்கி விடுமென்று கருதுகிறேன்.

அவர் மரபு நெறிச் சட்டங்கள் பற்றி வேறு வினாக்களை யும் எழுப்பினார். அதை ஏற்றுக்கொண்டு அவரது நிலைப்பாட்டை மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்தேன். பஞ்சாப் சட்டத்தின்படி தனிநபர் சட்டத்தின் சில கூறுகள் மரபுநெறிச் சட்டத்தின்படியே தீர்மானிக்கப்படவேண்டும். ஆனால், பஞ்சாபின் மரபு நெறிச் சட்டம் என்பது உண்மையில் இந்துச் சட்டம்தான் என்று நான் அறிந் திருப்பது போன்றே, நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவும் அறிந்திருப்பார் என நம்புகிறேன். பஞ்சாபில் மரபு நெறிச் சட்டம் என அழைக்கப்படுவது இந்துச் சட்டம்தான் என்பதை எவரும் மறுக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அதே சட்டத்தை அங்கு முஸ்லீம்களும் பின்பற்றி வந்தமையாலேயே, அது அங்கு (பஞ்சாபில்) இந்துச் சட்டமென்று அழைக்கப்பட வில்லை; மேலும் அங்கு முசல்மான்களும் பின்பற்றும் சட்டம் ஒன்றுக்கு இந்துச் சட்டம் என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியார் அஞ்சினர். ஆனால் இவை யாவும் சொல்லளவிலான வேறுபாடுகள்தான். பஞ்சாப் இந்துச் சட்டத் தினால் ஆளப்படவில்லை என்று எவரும் கூறிவிடமுடியாது; இந்துச் சட்டத்தினால்தான் பஞ்சாப் ஆளப்படுகிறது.

அடுத்து அவருடைய மாநிலத்தில் நிலவிவரும் மரபுநெறிச் சட்டங்களை நான் வெட்டி வீழ்த்துகிறேன் எனும் பெருங்குற்றச் சாட்டை எடுத்துக் கொள்கிறேன். பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா வும், சர்தார் ஹுக்கம் சிங்கும் கூறிய எடுத்துக்காட்டுகள் சிலவற்றை யும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் அவை யெல்லாம் எந்தவகையிலும் கருத்தை (பரிவை) ஈர்க்கவல்லன வல்ல. அவர்களுடைய திருமணச் சட்டத்தை எளிமைப்படுத்தப் பட்ட திருமணம் எனலாம்; அவர்களது மணமுறிவுச் சட்டத்தை எளிமைப்படுத்தப்பட்ட மண முறிவு எனலாம்; அவர்களது வாரிசு உரிமைச் சட்டத்தை எளிமைப்படுத்தப்பட்ட வாரிசுரிமை முறை எனலாம். ஆனால் அவற்றில் அடிப்படையான வேறுபாடுகள் ஏதுமில்லை. எனவே, எந்த அளவுக்குப் பஞ்சாபின் மரபுநெறிச்

சட்டம் காக்கப்பட வேண்டும், பஞ்சாப் எந்த அளவுக்கு இந்துச் சட்டத்திலிருந்து விலக்கு பெறவேண்டும் என்பது போன்ற சிக்கல் கள் குறித்து நான் இப்போது விவாதிக்கப் போவதில்லை. ஆனால் ஒரு கருத்தை மட்டும் நான் உறுதியாகக் கூறிவிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து எந்தவொரு மாநிலத் துக்கும் விலக்களிக்க ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். சட்டம் இந்த வடிவிலேயே இந்தியா முழுமைக்குமாக ஆக்கப்பட வேண்டும். இல்லையேல் இந்தச் சட்டமே தேவையில்லை.

மரபுநெறிச் சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் எனும், அவரது இரண்டாவது வேண்டுகோளை ஏற்கலாம்; ஆனால் (எந்தெந்த மரபு எவ்வாறு காக்கப்பட வேண்டுமென்பதை) ஒவ்வொரு தனித் தனிக் கிளை விதி குறித்த விவாதங்களின்போது அவர் எழுப்ப வேண்டிய சிக்கல் அது. அந்தக் கட்டத்தில் எந்தவொரு குறிப்பிட்ட மரபுநெறிச் சட்டம் நீக்கப்படுவதால் இடர்ப்பாடுகள் தோன்றும் என மெய்ப்பிக்கப்படுகிறதோ அதைப் பற்றி ஆழ்ந்த பரிவுடன் அப்போது நோக்குவேன் என உறுதிகூறுகிறேன். என்னால் முடிந்த அளவுக்கு இந்த இந்துச் சட்டத்தை எளிமையானதாக ஆக்கவே நான் விரும்புகிறேன்.

**திரு. தியாகி :** பஞ்சாபியத் திருமணங்களைப் போன்று!

**டாக்டர் அம்பேத்கர்:** எளியது என்னும்போது அதை எதிர்க்கும் பொருளிலோ அல்லது இந்துச் சட்டத்தைத் தனிமைப் படுத்தும் எதிரணிக்கு ஆதரவான பொருளிலோ (எள்ளியோ போற்றியோ) அச்சொல்லை நான் பயன்படத்தவில்லை.

அருமை நண்பர் கிளைவிதி 4ஐ ஊன்றி நோக்குவாராயின், அதனால் மரபுநெறிகள் ஒரேயடியாக நீக்கப்படவில்லை என்பதைக் காண்பார். எனவே, எந்தவொரு குறிப்பிட்ட கிளை விதியும் விவா தத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, (அதைப் பொறுத்தமட்டில்) அதன் ஆளுகையிலிருந்து பஞ்சாபின் எந்த மரபுநெறி காப்பாற்றப் பட வேண்டுமென்று நண்பர் கருதுகிறாரோ, அதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டியதன் தேவையை அவை ஏற்குமாறு எடுத்துரைப் பாரானால், அதை அவை பரிவோடு கருதிப் பார்க்கும் என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. இதற்குமேல் விரிவான பதில் இதற்குத் தேவையில்லையென்றும், இது தொடர்பான வாதம் இக்கிளை விதியின் வரம்புக்கு அப்பாற்பட்டதென்றும் கருதுகிறேன்.

[1]**திரு. ஆர்.கே. சௌதுரி :** எழுகிறார் -

**திரு.ராஜ்பகதூர்:** இந்தக் கிளைவிதி குறித்து இன்னும் எத்தனை பேர் பேசப் போகிறார்கள் என நான் அறியலாமா?

**டாக்டர் அம்பேத்கர் :** இந்தக் கிளைவிதி குறித்த விவாதத்தை இன்றோடு முடித்துக் கொள்ளலாம் என்பது என் கருத்து. இதன் மீது நாம் இரண்டு நாட்கள் செலவழித்துள்ளோம்; தேவையான தற்கு மிகுதியாகவே அதன்மீது விவாதமும் நடைபெற்றுள்ளது.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** ஐயா, இந்தச் சட்டத்தை இயற்று தலில் நான்தான் தனிமைப்படுததப்பட்டுள்ளேன்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** மதிப்பிற்குரிய உறுப்பினர் முதல் வரிசையில் வந்தமர்ந்து கொண்டு பேசலாமே.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** நாளை கேள்வி நேரத்தில் என்னை அங்கே அமரவிடுவீர்களா?

இந்த அவையில் நான் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வெளியே தனிமைப்பட்டு நிற்கிறார் எனும் உண்மையை அவர் பெருந்தன்மையோடு ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த அவையில் நான் இருக்கும் நிலை குறித்து எனக்கு வருத்தம் இல்லை. ஏனெனில் இந்த அவையின் மதிப்பிற்குரிய பெண் உறுப்பினர்கள் இந்த அவையில் மிகுந்த வலுச் சண்டைக்காரர்களாக இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லப் பட வேண்டிய உண்மையைக் கூறுதற்கும் அஞ்சியவர்களாய், அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் இருப்பதைக் காண் கிறேன். இது சிரித்து ஒதுக்கப்பட வேண்டிய நிலை அன்று என்று மிக மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று எனது மரியாதைக்குரிய நண்பர் பாபு ராம்நாராயண் சிங் எவ்வாறு தமது இருக்கையிலிருந்து வெளித் தள்ளப்படும் நிலைக்கு ஆளானார் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனித்திருக்கலாம். குறிப் பிட்ட பெண் உறுப்பினர் ஒருவர் தயவு கூர்ந்து மனமிரங்கி வந்தமை யால்தான் அவர் தமது இருக்கைக்கே செல்ல முடிந்தது.

---

1. நா.வி., தொகுதி VIII, பாகம் II, 1951 பிப். 6, பக். 2473-83.

ஐயா, இந்த அவையில் பெண் உறுப்பினர்களின் வல்லாண்மைப் போக்கு குறித்து நானே எச்சரிக்கிறேன். இதை நான் பேசியாக வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்து சமூகத்தில் பெரும்பாலான பிரிவினரின் விருப்பங்களுக்கெதிராக, இந்தச் சட்டத்தை இவ்வளவு விரைந்து முடுக்குமாறு நமது மாண்புமிகு அமைச்சரை யார் வேண்டிக் கொண்டார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இந்த அவையின் மதிப்பிற்குரிய பெண் உறுப்பினர்களின் உந்துதல் காரணமாய்த்தான் அவர் இந்த சட்டத்தைக் கொண்டு வந்துள்ளாரா?

ஆனாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கடமான நிலையில் தன்னந்தனியராய் இல்லை என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொறுக்குக்குழுவின் அறிக்கை இந்த அவையின் கருதலில் இருக்கும்போது, நமது மதிப்பிற்குரிய நண்பர் ஆச்சாரிய கிருபளானி அவர்கள் இந்த அவையின் உறுப்பினர்கள் ஒருவரும் உலக வாழ்க்கையில் அவருக்குத் துணையுமான அவரது மனைவியின் மனப்போக்கு குறித்து என்ன கூறினார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அவரது துணைவி வெளிநாடு சென்றிருப்பதால் அவர் துணிவுடன் பேசுவதாகவும், இருப்பினும் மனைவி நாடு திரும்பியபின் வீட்டுச் செலவுக் கணக்கை ஒப்படைப்பதோடு மனைவி இல்லாத காலத்து அவரது நடத்தை குறித்தும் விசாரணைக்குட்பாடுவார் என்றல்லவா கூறினார்.

ஐயா, இப்போது நமது நிலை என்ன என்பதை இது காட்டுகிறது. இதன் காரணமாகத்தான் தாங்கள் வாழ்க்கையின் நல்வாய்ப்புகள் அற்றவர்களும் தம் ஆடைகளைக் கூடச் சரியாக அணிந்துகொள்ளத் தெரியாதவர்களுமான அப்பாவி இந்துப் பெண்களின் உணர்வுகளையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு இச்சட்டத்தைக் கொணர முனைகிறீர்கள். இப்பெண்கள்தான் பகட்டும் பளபளப்புமிக்க புடவைகளுக்கு வழி இல்லாதவர்கள்; பூச்சுகளால் தங்களை அலங்கரித்துக்கொள்ள அறியாதவர்கள். இன்றைய தினம் தாங்கள் செயல்படுகின்ற முறையின் மூலம் இத்தகைய இந்து சமூகப் பெண்களைத்தான் தாழ்த்தியே வைத்திருக்க முயலுகிறீர்கள்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** இவையெல்லாம் கிளை விதி 2இல் உள்ளனவா?

**திரு. ஆர்.கே. சௌதுரி :** மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஜஸ்பத்ராய் கபூர் மூலமாக டாக்டர் அம்பேத்கர் கொடுத்துள்ள திருத்தம் ஒன்றைத் தவிர, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கொடுத்த (பிற) திருத்தங்கள் உட்பட இவ்வவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்தையும் நான் எதிர்க்கிறேன் என்பதை மிகத் தெளிவாகக் கூறிவிட விரும்புகிறேன். அந்த ஒரு தீர்மானம் மட்டும் நடைமுறையின் இந்துச் சட்டத் தொகுப்பையே எதிர்க்கும் பான்மையில் இருப்பதாலேயே அதை நான் ஆதரிக்கிறேன். இந்துச் சட்டத் தொகுப்பு முழுவதையும் ஒரு செத்தக் கடிதமாக ஆக்கிக்கொள்ள அது நமக்கு முழு உரிமையையும் தருகிறது. எவ்வாறெனில் அவருடைய திருத்தத்தின்படி, இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுகிறேன் எனத் தாமாக முன்வந்து கூறி அறிக்கை தருபவர்கள் மட்டுமே இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுவர்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** எனது ஆதராவளர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள் என இறைஞ்சத் தோன்றுகிறது.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** அருமை நண்பர் கபூர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், ஆதரவாளர்களை ஒதுக்கி விட அவர் கருதினாலும் ஆதாவாளர்கள் அவரை விட்டு அகல மாட்டார்கள் என்று கூறுகிறேன். இந்துச் சட்டத் தொகுப்பு குறித்த விவாதம் முடிவுறும் வரை அங்கு எங்குச் சென்றாலும் நான் அவரையே பின் தொடர்வேன். அருமை நண்பர் கபூர் அவர்களின் திருத்தம் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால், நாம் இன்று இருக்கும் நிலையிலேயே நடைமுறையில் தொடர்ந்து நீடிப்போம் என்பதுதான் விளைவாகும். இந்த இந்துச் சட்டம் என்பது ஒரு சிறப்பு இந்துத் திருமணச் சட்டமாகிவிடும்; அல்லது அதைப் போன்றதொன்றாகி விடும். இன்றைக்குங்கூட இந்து ஒருவர் சிவில் திருமணச் சட்டத்தின் கீழ் அறிக்கை ஒன்றைக் கொடுத்து விட்டுத் தடை செய்யப்பட்ட உறவு முறையில் திருமணம் செய்து கொள்ள முடியும். அவ்வாறே தாம் இந்த இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குள் வர விரும்புவதாய் அறிக்கை கொடுப்பவர்கள் மட்டுமே இச்சட்டத்தால் ஆளப்படுவார்கள் என்றால், நண்பர் கபூர் கூறியிருப்பது போன்ற தொரு அறிக்கையைத் தர, இந்து மக்களில், மூன்றில் இரண்டு பங்கு மக்கள், அல்ல அல்ல, ஏறக்குறைய நூறு விழுக்காடு மக்கள் மறுத்து விடுவார்கள். அதன் விளைவாய், இச்சட்டம் நடைமுறையில் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடும்; இன்றும் நம்மை ஆள்கின்ற பழைய இந்துச் சட்டமே தொடர்ந்து ஆட்சி செய்யும்.

பஞ்சாப் மரபுநெறிச் சட்டத்தைப் பற்றிய உரையைக் கேட்க மிகவும் சுவையாயிருந்தது. மாண்புறு நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் அது குறித்துப் பேசுகையில் அச்சட்டத்தில் இருதார மணத்திற்குத் தடையில்லை என்பதை ஒப்புக் கொண்டார். அருமை நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா விரும்புவது என்னவென்றால், இந்துச் சட்ட வரம்பிலிருந்து முழுமையாகவே பஞ்சாபுக்கு விலக்களிக்க வேண்டுமென்பதே; அதாவது இச்சட்டம் பஞ்சாபைத் தவிர ஏனைய இந்தியப் பகுதிகள் முழுவதிலும் செல்லும் என்பதாம். இதன் பொருள் இந்தியாவில் குற்றமாய்க் கருதப்படும் இருதார மணம், பஞ்சாபில் மட்டும் குற்றமாகாது; ஆதலின் மாண்புறு நண்பர் தாம் விரும்பியவாறு குதூகலமாய் இருக்கலாம். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; மாண்புமிகு நண்பர் டாக்டர் அம்பேத்கர் அவர்களால் இந்த நிலை குறித்து விளக்கம் அளிக்க முடியும் என்று நம்புகிறேன். நிலைமை இதுதான். மரபு நெறிக்குச் சட்டத்தின் அதிகாரம் இருக்கும்போது, அதுவும் அந்த மரபுநெறி மாற்றவியலாததாய் இருக்கும்போது, எந்தப் புதிய சட்டத்தாலும் அதை மீற முடியாது. சாதாரணமாக ஒரு மரபு நெறி குறித்து மெய்ப்பிக்கவிருக்கிறீர்கள் என்றால், அந்த மரபுநெறி மாறாது நிலவிவந்துள்ளது என்றும், ஒழுக்கநெறிக்குப் புறம்பானது அல்ல என்றும், அது பின்பற்றப்பட்டு வருகிறது என்றும் நிறுவ வேண்டிய பொறுப்பு உங்களுடையது. ஆனால் அதே மரபு நெறி சட்டத்தின் ஒரு பகுதியாகப் பொதிந்திருக்கும்போது, சில காலமாவது நடைமுறையிலிருக்கும்போது, மேலும் அது சட்டத்தால் விலக்கிக் கொள்ளப்படாமல், மாறாக ஏற்பிசைவு பெற்றிருக்கும்போது, அந்த மரபு நெறிச் சட்டங்கள் தள்ளுபடி செய்யப்படுவதாய் இந்தச் சட்டத்தில் உரைக்கப்பட்டாலன்றி, இந்துச் சட்டத்தின் விதிமுறைகள், மரபுநெறிச் சட்டங்களில் எவ்வாறு குறுக்கிட முடியும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் இந்துச் சட்டத்தொகுப்பை முழுமையாகப் படித்து ஆயவில்லை என்றாலும், பஞ்சாப் மரபு நெறிச் சட்டத்தை இந்துச் சட்டம் தள்ளுபடி செய்வதாக எங்கும் கூறப்படவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அச்சட்டம் தள்ளுபடி செய்யப்படவில்லையெனில், முரண்பட்ட சட்டங்கள் நாட்டில் நிலவும் நிலை தோன்றும். இந்தியா முழுமையிலுமுள்ள இந்துக்கள் யாவரும் இந்துச் சட்டத்தின் ஆளுகையில் இருக்க, மரபுநெறிச் சட்டங்கள் தொகுக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும் பஞ்சாப் மட்டும், இந்துச் சட்டத்தின் பாதிப்பிலிருந்து விலகியே இருக்கும். பஞ்சாபைச் சேர்ந்த இந்துக்கள் இருதார மணம் செய்து கொள்ளவும், அங்கு

மணமுறிவுக்கு எவ்வகையிலும் இடமில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவும், பஞ்சாபியப் பெண்கள் கொடுமைப்படுத்தப்படவும் (இது என்னுடைய சொற்கள் அல்ல, சில பெண் உறுப்பினர்கள் பயன்படுத்திய சொல்லே) இங்குள்ள பெண் உறுப்பினர்கள் அனுமதிக்கப் போகிறார்களா என்று அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நானோ எந்தப் பெண்ணையும் கொடுமைப்படுத்த முடியாது என்று கூறுகிறேன். பெண்களைக் கொடுமைப்படுத்தும் காலம் எல்லாம் மலையேறி விட்டது. இந்தக் காலத்தில் பெண்களின் வல்லாண்மையால் ஆண்கள்தான் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இந்த அவையின் மாண்புறு உறுப்பினர்கள் எவருக்கேனும் வெளிப்படையாய்க் கூறுமளவுக்கு அசட்டுத் துணிச்சல் இருக்குமெனில், இக்காலப் பெண்களின் கொடுமைகள் பற்றிக் கூற முன்வந்திருப்பர்.

எனவே, இந்தச் சட்டத் தொகுப்பைப்பற்றிய மதிப்பீட்டைச் செய்கையில் நின்று நிதானித்து கவனமாய்ச் செயல்படுமாறு அவையோரை வேண்டுகிறேன். இத்தகைய, மாபெரும் அதிரடி மாற்றங்களை உள்ளடக்கும் சட்டமொன்றை இயற்றுதற்கான அதிகாரம் இந்த அவைக்குக் கொடுக்கப்படவில்லை என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நமது தேர்தல் மறைமுக வழியில்தான் நடைபெற்றது என்று மதிப்பிற்குரிய நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் கூறியதையே நான் மீண்டும் கூறுகிறேன். இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கு நமக்கு அதிகாரம் இல்லையென்று கூறுவதற்கில்லை. இன்றைக்கு எந்தச் சட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு நமக்கு அதிகாரம் உண்டு. இந்திய அரசால் ஏற்று மதிக்கப்படும் விதிகளில் ஒன்று இந்திய வெளியுறவுப் பணிகளில் திருமணமான பெண்களை அமர்த்தக் கூடாது என்பது. அந்தச் சட்டத்தைத் தள்ளுபடி செய்துவிட்டு, அந்தப் பணிகளில் பெண்களை மட்டுமே அமர்த்த வேண்டும் என்று கூட நாம் சட்டமியற்றலாம்; அவ்வாறு சட்டம் இயற்ற நமக்கு முழுத்தகுதியும் உண்டு. நமக்குத் தகுதியில்லை என்னும் வினா இங்கு எழவில்லை. பெண்கள் காவல்துறையில் சேர்ந்து தடியேந்தி வரலாம்; கால்சராயும் தலைப்பாகையும் அணியலாம்; ஏன் தாடி கூட வளர்த்துக் கொள்ளலாம், மற்ற ஆண் காவலர்களைப் போன்று! ஆனால் அப்படியெல்லாம் ஏன் நம்மால் சட்டம் இயற்ற முடியவில்லை. நாம் அவ்வாறு சட்டமியற்றக் கூடாதெனத் தடையேதும் இல்லையே.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இவையெல்லாம் இப் பொருளின் கீழ் எவ்வாறு எழுகின்றன?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** நான் கூறியது ஓர் உவமானமே. அடுத்து நான் முக்கியமானதொரு கருத்துக்கு வருகிறேன். வாக்காளர்களிடமிருந்து அதிகாரம் பெறுவதற்கு நாம் வாய்ப்பு பெறவில்லை என்பதுடன் இம்மசோதாவின் சுற்றறிவிப்பின் வாயிலாய் நமக்கு அளிக்கப்பட்ட, கிடைத்த பெரும்பான்மை மக்கள் கருத்தையும் புறக்கணித்தே செயல்படுகிறோமாதலால், இந்தச் சட்டத்தை எந்த அளவுக்கு நம்மாலேயே ஏற்றுக் கொள்ள முடிகிறது என்பதை யாவது மிகக் கவனத்துடன் எண்ணிச் செயல்பட வேண்டும். எனவே தான் நான் மாண்புறு நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் இச் சட்டத்தை நிறைவேற்றுதற்கு மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று கூறுவதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து, இச்சட்டத்தில் பாகுபாட்டுத் தன்மை காணப்படுதல் பற்றியும், எவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்திற்கு அப்பட்டமாகவே புறம்பாக இச்சட்டம் அமைந்துள்ளது என்பது பற்றியும் நேற்று மிக விரிவாகவே பேசப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் உறுதி யளித்துள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும் நிலை குறித்து டாக்டர் அம்பேத்கரே பேசியதும் எனக்கு நன்கு நினைவிருக்கிறது. அவர் நினைக்கின்ற வகையில் இப்போதைய இந்துச் சட்டம் திருத்தியமைக்கப்படாவிட்டால், பின்னர், இந்துச் சட்டம் சூத்திரர் களுக்கும் சூத்திரர் அல்லாதோருக்குமிடையே பாகுபாடு செய் வதாக ஒரு சாரார் உச்ச நீதிமன்றத்திலோ உயர் நீதிமன்றத்திலோ வழக்குத் தொடுக்கும் நிலை உருவாகலாம் என்று அவர் கூறினார். சூத்திரர் ஒருவரை அவர் எந்த வயதினர் ஆனாலும் தத்தெடுத்துக் கொள்ள முடியும். ஒரு சூத்திரர் மிக நெருங்கிய உறவினராயிருந் தாலும் கூட அவரைத் தத்தெடுத்துக் கொள்ள முடியும், ஆனால் அதே நிலையிலுள்ள பிராமணர் ஒருவரை அவ்வாறு தத்தெடுக்க இயலாது. எனவே இப்போதைய இந்துச் சட்டத்தில் பாகுபாடு காணப்படுகிறதென்றும், இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக் கும் இந்துச் சட்டம் நிறைவேற்றப் படாவிட்டால், பழைய இந்துச் சட்டம் பாகுபாடு காட்டுகிறது என்ற காரணத்திற்காக நீதிமன்றங் களில் குறைகூறப்படலாம்.

அடுத்து இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு கருத்து குறித்து நோக்குவோம். மாண்புமிகு நண்பர்கள் ஜுன்ஜுன்வாலா,

நசிருத்தீன் அகமது ஆகியோர் எடுத்துரைத்த வாதங்களை இந்த அவை ஆழ்ந்த கவனத்தோடு நோக்குமாறு வேண்டுகிறேன். நானும், அரசியலமைப்புச் சட்டத்திற்கே ஊறு விளைவிக்கும் வகையில் இந்தச் சட்டத்தில் பாகுபாட்டுத்தன்மை அமைந்திருத்தல் குறித்து அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அருமை நண்பர் நசிருத்தீன் அகமது அவர்களும் நானும் ஒரே நிலைப்பாட்டி லிருப்பது போன்று நடந்துகொள்கிறோம். இங்கு ஒருவகையில் அவர் தனிமைப்பட்டு நிற்கிறார் எனில் நான் மற்றொரு வகையில் தனிமைப்பட்டு நிற்கிறேன். நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் விரும்பினால் (விரும்பாது கடவுள் தடுப்பாராக) அவரது இப் போதைய மனைவி உயிரோடு இருக்கும்போதே, இன்னொரு மனைவி தேவையெனக் கருதி அவர் மீண்டும் திருமணம் செய்து கொள்வாராயின் இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படியோ, இந்துச் சட்டத்தின்படியோ அவரையாரும் தண்டிக்க முடியாது; அதே சமயம், ஒரே அவையின் மற்றொரு உறுப்பினராகிய நான் அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றி மீண்டும் ஒரு திருமணத்தைச் செய்துகொள்வேனாயின் எனது நிலை என்ன வாகும்? என்மீது குற்றம் சாட்டி வழக்கு தொடரப்பட்டுக் குற்றம் உறுதி செய்யப்பட்டுச் சிறைத் தண்டனையும் வழங்கப்படும்; சிறைக்கு நான் செல்லும்போது அங்கு எனது நண்பர்களாலேயே அடித்து உதைக்கப்படலாம். என்னை இத்தோடு விட்டுவிட்ட தற்காகப் பொதுக்கூட்டம் ஒன்று கூடி உங்களைக் கடுமையாகக் குறை கூறலாம். இது பாகுபாடு இல்லையா? இது பாகுபாடு இல்லையென்றால் பாகுபாடு என்ற சொல்லுக்கு வேறென்ன பொருளென்று எனக்கு விளங்கவில்லை. நாங்கள் இருவருமே இறையாண்மை வாய்ந்த ஒரே அரசின் குடிமக்கள்; ஒரே அரசிய லமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்; இருவரும் ஒரே ஆட்சியின் கீழ் வாழ்பவர்கள். இருந்தபோதிலும் ஒருவருக்கு மட்டும் நான்கு முறை திருமணம் செய்துகொள்ள உரிமை உள்ளது; நானே இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவும் துணிய முடியாது. அப்படியாயின் பாகுபாடு என்பதற்குப் பொருள்தான் என்ன?

**திரு. தியாகி :** தங்கள் கெட்ட காலமே.

**திரு. ராஜ்பகதூர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் ஏற் கெனவே எத்தனை முறை திருமணம் செய்துகொண்டுள்ளார் என்ற தகவலை நான் அறியலாமா?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** அது தனிப்பட்ட விவகாரம். எடுத்துக் காட்டுகள் தொற்றும் தன்மையன. அருமை நண்பர் தியாகி அவர்கள் இப்படி நான் பாகுபடுத்தி வைக்கப்பட்டிருப்பது எனது கெட்டகாலம் என்றார். இதைக் கணக்கீட்டு முறையிலேயே எண்ணிப் பார்ப்போமே. ஏற்கெனவே ஒருமுறை மணந்து கொண்ட எனது நிலையே கெட்ட காலம் எனப்பட்டால், நெடுங்காலமாய்த் திருமணமே செய்துகொள்ள இயலாதிருப்பவரின் நிலைமையை என்ன சொல்ல! மாண்புறு நண்பர் நசிருத்தீன் அகமது அவர்கள் நேற்று இந்து சாத்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசி எமது மதிப்புறு நண்பர்கள் சிலரின் ஆதரவு எத்தன்மையது என்பதைக் குறிப்பாய்ச் சுட்டினார். அவர் இந்து அல்லவாதலின் தயக்க உணர்வு. காரணமாய் தாம் சொல்ல விரும்பியதை நேரடியாய்க் கூறுவதைத் தவிர்த்துக் குறிப்பால் உணர்த்தினார் போலும். ஆனால் நான் தெளிவாகவே உரைத்து ·விட விரும்புகிறேன். இந்துச் சட்டத்தை ஆதரிக்க விரும்புகின்றவர்களின் முதன்மையான கருதுகோள் இதுதான்: இந்து சமயம் இந்துச் சட்டத்துடன் நெருக்கமாக இணைந்துள்ளது என்பதும், இந்துச் சட்டம் இந்து சமயத்துடன் நெருக்கமாக இணைந்துள்ளது என்பதும் மெய்யே. எனவே இந்து சமயத்திலிருந்து இந்துச் சட்டத்தைப் பிரித்துப் பார்ப்பதில் பொருளில்லை. எனவே இங்கு நாம் எதிர்கொள்வது ஒரு சமய விவகாரமே. நமது மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள், தமக்கு மகன் பிறக்காவிட்டால் தாம் நரகத்துக்குப் போக நேரிடும் என்ற நம்பிக்கையுடையவர்களின் மக்கட் தொகையைக் கணக்கெடுப்பாராகில், இந்துக்களில் மூன்றில் இருபங்கு பேருக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது என்பதை நாம் காணுவோம். ஆம், ஆண்மகவு பிறக்காவிடில் தாம் நரகத்துக்குப் போக நேரிடுமென அவர்கள் நம்புகின்றனர்.

**திரு. தியாகி :** ஒருவருக்கு ஆண்மகவு பிறக்கவில்லையெனில் அதற்காக அவர் என்ன செய்து விட முடியும்? அவருக்கு என்ன வழி? ஆண்மகவுப் பேறு அவர் கையில் இல்லையே.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** தொடர்பற்ற வினாக்களை நீங்கள் எழுப்ப வேண்டியதில்லை. திருமணத்திற்கு வயது வரம்பு ஏதும் கிடையாது என்பதை அருமை நண்பர் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன். இது குறித்து டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கருணை கூர்ந்து தாராளம் காட்டியுள்ளார். அவர் ஒருமுறைக்கு மேல் திருமணம் செய்யக் கூடாது என்று கூறவில்லை. ஒருவர் ஒரு டஜன்

மனைவிகளைக் கூட மணவிலக்கு செய்துவிட்டு மீண்டும் மணம் புரிந்து கொள்ளலாம்.

**திரு. தியாகி :** ஒன்றன் பின் ஒன்றாக.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** ஆம் ஒரு சமயத்தில் ஒரு மனைவி தான்; ஒன்றுக்கு மேல் அனுமதியில்லை என்றுதான் இங்கு கூறப் பட்டுள்ளது. அவர், திருமணத்துக்கு வயது வரம்பு எதையும் விதிக்க வில்லை. இந்துச் சட்டத்தின் இந்தப் புதிய வடிவின்படி 85 வயதுப் பெண்மணியொருவர் 25 வயது இளைஞர் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளலாம். எனவே இந்த இந்துச் சட்டத்தில் நல உணர்வே ஏதுமில்லை.

**திரு. தேஷ்பந்து குப்தா (டெல்லி) :** அதன் மறுதலை (85 வயது ஆண் 25 வயது இளம்பெண்ணை மணத்தல்) பற்றி யாது கூறுகிறீர்கள்?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** மறுதலையும் கூடத்தான். ஒருவர் விரும்பினால் எந்த வயதிலும் திருமணம் செய்து கொள்ளலாமெனக் இந்துச் சட்டத்தின் ஆசிரியர் கூறியிருப்பது மனிதத் தன்மைக்கு முற்றிலும் எதிரான கருத்து எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை) :** கிளை விதி 2க்கு இது எந்த வகையில் தொடர்பு கொண்டது?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்துச் சட்டமானது தாமாக விரும்பி முன்வந்து ஏற்றுக் கொள்பவர்களைத் தவிர வேறு யார் மீதும் செலுத்தப்படலாகாது என்று அவர் கூறுகிறார். எனவே, அக்கருத்து வலிமை சேர்க்கும் வகையில் வாதங்களை உருவாக்கிக் கொண்டுள்ளார்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** இப்போது விவாதிக்கப்பட்டுவரும் கிளை விதிக்கே நேரடியாக வருவோம். அவ்விதியில் தற்போது இடம்பெற்றுள்ள (இந்து) சமயத்தைப் பின்பற்றுவோர் என்னும் தொடரை அப்படியே தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்று, தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன். மாண்புமிகு நண்பர் டாக்டர் அம்பேத்கர் அவர்களும் வேறு சிலரும் அதைச் சமயத்தால் இந்துக்களாவோர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்று திருத்த

விரும்புகிறார்கள். சமயத்தால் இந்து தான் என்று எந்தவொரு மனிதரையும் குறித்து மெய்ப்பித்தல் மிகக் கடினமான செயல். சமயம் என்ற சொல் எதைக் குறிப்பிடுகிறது? கட்டுப்படுத்தல் என்ற பொருள் கொண்ட religio என்ற சொல்லின் அடியாகத்தான் சமயம் (religion) எனும் சொல் உருவாயிற்று. நான் சமயத்தால் ஒரு இந்து என்று என்னால் கூறமுடியுமா? நான் இந்துப் பெற்றோர்களுக்குப் பிறந்தேன் என்றோ அல்லது நான் ஓர் இந்துவின் மகன் என்றோ கூறி, ஆகையால் நான் ஒரு இந்து என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் நான் சமயத்தால் ஒரு இந்து என்று கூறுதல் மிகக் கடினம். இந்து சமயம் மிக உயர்ந்த தரப்பாடுகளை வகுத்து நிறுவியுள்ளது. அந்தத் தரப்பாடுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டால் தம்மை இந்துக்கள் என்று கூறிக் கொள்வோரில் பெரும்பாலோர் மெய்யான இந்துக்கள் ஆகமாட்டார்கள். நான், என்னை இந்து சமயத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளலாம்; இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட நான் விரும்பலாம்; ஆனால் சமயத்தால் நான் இந்து என்று சொல்லிக் கொள்ள முடியாது. நான் அந்தச் சமயத்தின் கோட்பாடுகள் எவற்றையும் பின்பற்றாதவனாயிருக்கலாம். அவ்வாறிருக்க சமயத்தால் நான் இந்து என்று எவ்வாறு சொல்லிக்கொள்ள முடியும். இந்து என்பவர் புலால் உண்ணக்கூடாது. இந்து சமயத்தின்படி புலால் உணவு தடை செய்யப்பட்டதொன்றாகும். இந்த அவையில் உள்ளவர்களில் பலர் தம்மை இந்து என்று கூறிக்கொள்பவர்களாயிருக்கலாம்; ஆனால் இந்தத் தரப்பாட்டின் அடிப்படையில் நோக்கினால், அவர்களில் மிகப் பலர் இந்துக்களாக மாட்டார்கள். இந்துக்கள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களில் பலர் இந்துக் கோட்பாடுகளுக்கு முரணான செயல்பாடு கொண்டவர்கள். இருப்பினும் அவர்கள் இந்த இந்துச் சட்டத்தினால் ஆளப்படுவதை விரும்பலாம். எனவே, இந்து சமயத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் தான் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்படுவர் என்பது தவறான சொல்லாட்சி என்பது மட்டுமல்ல, நேர்மையான கோட்பாடுகளுக்கு முரணான செயலும் கூட, நான் இந்துவாயில்லாமலிருப்பினுங்கூட, இந்து சமயத்தை நான் பின்பற்றுபவனாயில்லாமலிருப்பினுங்கூட, இந்து சமயத்தைக் கடைபிடிக்கிறேன்; நான் என்னை இந்து என்று கூறிக் கொள்கிறேன். நான் என்னை இந்து என்று சொல்லிக் கொள்ளும் வரை, இந்துச் சட்டம் அல்லது இந்துச் சட்டத்தொகுப்பு எனக்குப் பொருந்தும்; நான் அதன் ஆளுகைக்குட்படுவேன். நான் இந்து சமயத்தைத் துறக்காத வரையிலும், நான் என்னை ஓர் இந்து என்று சொல்லிக் கொள்ளும்வரையிலும், நான் என்னை இந்து எனக்

கூறிக் கொள்வதனால், நான் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்படுவேன் அல்லது மாண்புமிகு நண்பர் ஜஸ்பத் ராய் கபூர் அவர்கள் கூறவது போன்று, ஒரு மனிதர் தாம் இந்துச் சட்டத்தினால் ஆளப்பட விரும்பினால் மட்டுமே அவர் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்படுவாரேயன்றி, வேறுவகையால் அல்ல, எனவே, ஒருவர் சமயத்தால் இந்துவாயிருக்க வேண்டும் என்பதொரு வரம்பை நாம் எவ்வாறு விதிக்க முடியும்?

நாட்டின் எமது மாநிலமாகிய அசாமில் வாழும் பழங்குடி மக்கள் பலரையும் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குட்படுத்த முயலப் படுகிறது. ஆனால் அவர்கள் இந்துக்கள் அல்லர். சமயத்தால் அவர்கள் இந்துக்கள் அல்லர்; திருமணத்திற்கென இந்து சமயம் வகுத்துள்ள கோட்பாடுகளை அவர்கள் பின்பற்றவில்லை. இந்துத் திருமணங்களில் விதிக்கப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட உறவுகள் என்பனவற்றை அவர்கள் அறியாதவர்கள்; பின்பற்றாதவர்கள். வாரிசுரிமைக்கான இந்து சமய விதிகளையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. இருந்தாலும் அவர்கள் யாவரும் தம்மை இந்துக்கள் என்று கூறிக்கொள்வதாலும் அவர்களிடையே வேறெவ்விதமான சட்ட நெறிகளும் இல்லாமையாலும் அவர்களனைவரும் இந்துச் சட்டத்தின் ஆளுகைக் குட்படுத்தப்படுகின்றனர். எனவே, 'இந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள்', 'சமயத்தால் இந்துக்களாவோர்' எனும் இரு தொடர்களில் எதை ஏற்பது எனும்போது, முந்தைய தொடரையே நான் ஆதரிக்கிறேன்.

அடுத்து, இந்தச் சிக்கல் குறித்த மற்றொரு கூறு பற்றி விளக்க முற்படுவேன். அதாவது சமய மாறிகள் குறித்த சிக்கலாகும்; இதுகுறித்து டாக்டர் அம்பேத்கர் அவர்களே கூட ஒரு திருத்தம் கொண்டுவந்துள்ளார். ஆனால் இந்து சமயத்தைப் பொறுத்தமட்டில் சமயமாறி என்ற சொல் தேவையற்றது என்றே நான் வலியுறுத்துவேன். எனக்கு மிகுதியாகத் தகவல் தெரியாது என்றபோதிலும் இந்து சமயத்திற்கு மீண்டும் மாறுதல் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும், ஏனென்றால் இந்து சமயம் பிறசமயத்தவரை மாற்றத்தூண்டும் சமயமல்லவாதலால் / பிற சமயங்களிலிருந்து இந்து சமயத்துக்கு மாற்றமென்பது இருக்க முடியாது. இந்து சமயத்திற்கு மாற்றம் பெற்றவர்கள் குறித்துப் பேசுவதே பொருள் அற்றது. இந்து சமயத்துக்கு மாற்றம் என்பது நடக்கவே இயலாதது. இந்து சமயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவர், தாம் இந்து அல்லர் என்றோ, தாம் ஒரு முஸ்லீம் என்றோ, கிறித்தவர் என்றோ,

யூதர் என்றோ, பார்சி என்றோ சொல்லிக் கொண்டால் அன்றி அவர் இந்துவே. காலங்காலமாகவே தொடர்ந்து வரும் நிலைமை இதுவே. எனவே இந்து சமயத்திற்கு மாற்றம் என்பது இருக்க முடியாது. இந்து சமயத்திற்கு மாறவேண்டுமானால் என்னென்ன சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அருள்கூர்ந்து சொல்வாரா?

**டாக்டர் அம்பேத்கர் :** பிராயச்சித்தம்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** யாராவது ஒருவரையேனும் இந்துவாக மாற்றிவிட முடியுமா? டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் இந்துவாக மாறினாரா? எவராவது இந்துவாக மாறியதற்கு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு எடுத்துக்காட்டையாவது கூற முடியுமா?

**டாக்டர் அம்பேத்கர்:** (இந்து சமயத்திற்கு மாறியதாகத்) தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளே பல உண்டு. அருமை நண்பர், முல்லாவின் 'இந்துச் சட்டம்' என்ற நூலைப் புரட்டினால், அதன் முதல் சில பக்கங்களிலேயே அவருக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** டாக்டர் அம்பேத்கர் அவர்கள் 'சுத்தி' என்பது குறித்துப் பேசுவாரெனில் அதுவேறு செய்தி. இந்து சமயத்திலிருந்து மாறிச் சென்ற ஒருவர் மீண்டும் இந்து சமயத்துக்கே திரும்பி வருவது தான் 'சுத்தி'. ஆனால் பிற சமயத்தவர் ஒருவரை இந்து சமயத்திற்கு மாற்றுவதற்கான சடங்கு என்ன? மாறிச் சென்றவருக்கான சடங்கு என்னவெனில், நான் அறிவேன்; அவர் குறிப்பிட்ட காலத்துக்கு உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்து சமயத்திற்கு மீட்டு மாற்றம் பெறுவதற்கான விதிமுறையை இச்சட்டத்தின் மூலம் வகுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயல்கிறாரா?

**திரு. ஆர்.கே. சௌதுரி :** இந்து சமயத்துக்கு மறுமாற்றம் தான் இருக்க முடியுமேயன்றிச் சமய மாற்றம் என்பது இருக்க முடியாது என்பதைத்தான் கூற முனைகிறேன். சமயமாறி என்ற

சொல்லைப் பயன்படுத்தாதீர்கள்; வேறு ஏதாவது சொல்லைப் பயன்படுத்துங்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒருவர் முதலிலேயே இந்து சமயத்தவராக இருந்திராதவர் என்றாலும் கூட, அவர் இந்துவாகச் சமய மாற்றம் பெறமுடியும் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** சமய மறுமாற்றம் என்பது வேண்டுமானால் நடைபெறலாம். ஆனால் சமய மாற்றம் நடைபெற முடியுமா? இந்த வேறுபாட்டைத்தான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன்.

**திரு. வெங்கட்ராமன் (சென்னை) :** ரத்தன் சி மொரார்ஜி, தலைமை நிருவாகி ஆகியோர் வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் எவர் வேண்டுமானாலும் இந்துவாகச் சமயம் மாறலாம் எனத் தீர்ப்பளித்துள்ளது.

**டாக்டர் அம்பேத்கர்:** இது ஒரு ஆங்கிலப் பெண்மணி தொடர்பான வழக்கு. கிறித்துவர் ஒருவர் இந்துவாகச் சமயம் மாற முடியுமா என்று (எதிர்த்து) வழக்கு தொடரப்பட்டது. முடியும் என்பதுதான் வழங்கப்பட்ட தீர்ப்பு.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** அத்தகைய சமய மாற்றத்திற்கான விதிமுறை அல்லது சடங்கு என்னவென்று மாண்புமிகு அமைச்சர் கூறுவாரா? காலந்தாழ்த்தியேனும் அதைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்து மரபுகள் முதலியனவெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் மாண்புமிகு உறுப்பினர் மிகுந்த அக்கறை கொண்டவரன்றோ? இந்து சமயத்திற்கு மேலும் மேலும் புதியவர்கள் மிகுந்த எண்ணிக்கையில் சேர்ப்பதால், அதுவும் இந்துச் சட்டத்தின் வாயிலாக முடிந்தவரை மிகுதியாய்ச் சேர்ப்பதால் தீங்கென்ன?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரும், இந்தச் சட்டத் தொகுப்பின் மூலவருமான டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பொருளற்ற சொற்களைப் பயன்படுத்தக்

கூடாது என்பதுதான் எனது அக்கறை. இந்துக்களைப் பொறுத்த மட்டில், 'சமய மாறி' என்பது பொருளற்ற சொல்.

**டாக்டர் அம்பேத்கர்:** அது சௌதுரி அவர்களின் பழமை யான வழக்கறுத்த கண்ணோட்டம்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** மூல இந்துச் சட்டத்தில் எங்கேனும் ஓரிடத்திலாவது, இந்து சமயத்திற்கு மாற்றம் பெற முடியும் என்று கூறப்பட்டிருப்பதாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சுட்டிக்காட்ட முடியுமா?

**டாக்டர் அம்பேத்கர்:** மொரார்ஜி, தலைமை நிருவாகி இடை யிலான வழக்கை நோக்குமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரை வேண்டு கிறேன்.

**போக்குவரத்து, இருப்புப் பாதைத்துறை இணை அமைச்சர்** (திரு. சந்தானம்) : கிரேக்கர் ஒருவர் இந்துவாக மாறினார் என்று பில்சாவிலுள்ள நினைவுச் சின்னம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

**டாக்டர் தேக்சந்து** (பஞ்சாப்): கிறித்தவர்களாகவும், முஸ்லீம் களாகவும் பிறந்தோர் பலர் இந்துக்களாக சமயம் மாறியுள்ளனர். நமது மாண்புறு நண்பர் விரும்பினால் அத்தகையோர் எவரே யேனும் அழைத்து வரலாம். அவர்கள் நமது ஆச்சாரியார்களால் இந்துக்களாக மாற்றப்பட்டு இந்து சமுதாயத்தில் ஒன்றி இணைந்து விடலாம். முஸ்லீம் ஆட்சிக்காலத்தில் கூட இந்து சமயத்துக்கு மாற்றங்கள் நடந்துள்ள விவரங்களை விளக்கும் நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன, மாண்புறு நண்பர் அவற்றை என்னிடமிருந்து பெற்றுத் தமது ஓய்வு நேரங்களில் படித்துப் பார்க்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** ஓ! அதை மட்டும் (நூல்கள் தரல்) செய்ய வேண்டாம். சௌதுரி அவர்கள் எதையும் படிப்பதில்லை.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சமய மாற்றத்தையும், சமய மறு மாற்றத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறார் என்று கருதுகிறேன். மேலும் சமய மாற்றத்தையும், சமயத் தீட்சை பெறலையும் கூடப் போட்டுக் குழப்பிக் கொள்கிறார். எவரும் இந்துவாகத் தீட்சை பெறமுடியும். ஆனால் நான் அதைப் பற்றி இங்கே பேசவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** *ஆனால் சமய மாற்றமும் செய்ய இயலும் என்றுதான் அவர் கூறுகிறார்.*

**திரு. ஆர்.கே. சௌதுரி:** *ஐயா, இந்தச் சிக்கலை இத்தோடு விட்டு விடுவோம்.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** *மாண்புறு உறுப்பினர் தமது உரையை முடித்துக் கொண்டார் அல்லவா?*

**திரு. ஆர்.கே. சௌதுரி:** *நான் நாளை வெளியூர் செல்ல விருப்பதால், நடைமுறையில் எனது உரை முடிந்து விட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** *மேலும் சில நிமிடங்கள் கொடுத்தால் போதுமா?*

**திரு. ஆர்.கே. சௌதுரி :** *இல்லை ஐயா, சில நிமிடங்கள் போதாது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** *அவ்வாறாயின் அவை ஒத்திவைக்கப்படுகிறது.*

*(மறுநாள், 1951 பிப்ரவரி 7ஆம் தேதி புதன் கிழமை காலை பத்தே முக்கால் மணி வரை அவை ஒத்திவைக்கப்படுகிறது.)*

---

## [1]இந்துச் சட்டத் தொகுப்பு

*(விவாதம் தொடர்கிறது)*

**மாண்புமிகு சபாநாயகர்:** இந்துச் சட்டத்தொகுப்பின் பகுதிகள் சிலவற்றுக்குத் திருத்தங்கள் கூறும் பொறுக்குக்குழு அறிக்கை தந்த மசோதா இப்போது அவையின் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. கிளை விதி 2 இப்போதைய விவாதத்தில் உள்ளது.

**திரு. கௌதம்** (உத்தரப் பிரதேசம்) : ஐயா, மேலே தொடருவதற்கு முன்னர், ஒரு கருத்தைக் குறித்துத் தெளிவுபடுத்துமாறு வேண்டுகிறேன். நேற்று பிற்பகல் நான் அவையில் இல்லையென்பதால்தான் நான் இந்த வினாவை எழுப்ப நேர்ந்தது. இக்கிளை விதி குறித்த விவாதத்தின்போது உறுப்பினர் ஒருவர் பயன்படுத்திய மொழிநடைக்குச் சில உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்களென அறிகிறேன். இது சபாநாயகர் அவர்களின் கவனத்தை ஈர்த்ததா? ஈர்த்திருப்பின் உரையாற்றுவோர், பிற உறுப்பினர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல், தங்கள் வரம்புக்குள்ளாக இருந்து பேசுமாறு, தகுந்த அறிவுரைகள் அளிக்குமாறு சபாநாயகர் அவர்களை வேண்டுகிறேன்.

**திரு. எம்.ஏ. ஐயங்கார்** (சென்னை): நடந்ததென்னவென்பதை நான் கூறலாமா, ஐயா?

**மாண்புமிகு சபாநாயகர்:** அவற்றையெல்லாம் திரும்பக் கூறுதல் தேவையற்றது.

**திரு. எம்.ஏ. ஐயங்கார்** (சென்னை) : இல்லை. அந்தக் கூற்றுகளையெல்லாம் அப்படியே இங்குக் கூறினால், நான் பேச எழுந்த நோக்கமே கெட்டுவிடும். ஆகையால், அவ்வாறு செய்யமாட்டேன். நேற்றுப் பேசிக்கொண்டிருந்த உறுப்பினர் ஒருவரின் நாவிலிருந்து, பாவம், அவரையறியாமலேயே சில விமரிசனங்கள் தவறி வந்து விட்டன. அவர் எப்போதும் நகைச் சுவையாய்ப் பேசக்கூடியவர் என்பதை நாம் நன்கறிவோமாதலின் அதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. கெட்டகாலமாக நேற்றைய விவாதம் நாம் விரும்பத்தகாத அளவுக்குத் தரம் தாழ்ந்து அமைந்து விட்டது. அப்போது அவைத் தலைமை ஏற்றிருந்த நான் அப்பகுதிகள் எனக்குச்

1. அ.நி.வி., தொகுதி VIII, பகுதி II, 1951, பிப்ரவரி, 7. பக். 2486 - 2357.

சுட்டிக்காட்டப்பட்ட உடனேயே அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணை பிறப்பித்து விட்டேன். அத்துடன் சிக்கலும் முடிந்து விட்டதாகவே கருதினேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் வாய் தவறித் தகாத கூற்றினையுரைத்து விட்டதற்காக வருத்தம் தெரிவிக்க, ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்; அத்துடன் அந்தச் சிக்கல் முடிவடைந்தது. தற்போது அவையின் பதிவேடுகளில் அது இடம் பெறவில்லை. எனவே அதனை மீண்டும் இங்கே எழுப்பி சபாநாயகரின் நடவடிக்கையை வேண்டுவது தேவையில்லையென்று கருதுகிறேன்.

***மாண்புமிகு சபாநாயகர்:*** அவை உறுப்பினர்கள் இவற்றைத் தங்கள் கருத்தில் கவனமாய்க் கொண்டு, இது போன்ற நிலைமைகள் இனியும் உருவாகாமல் பண்படக் கருத்துக்களைக் கூறுவார்கள் என நம்புகிறேன்.

***திரு. பிராங்க் அந்தோணி*** (மத்தியப் பிரதேசம்): ஆளும் கட்சியினர் தவறான முன் நிகழ்வு ஒன்றை உருவாக்கி விட்டார்கள்.

***மாண்புமிகு சபாநாயகர்:*** மசோதா குறித்த விவாதத்தை இனித் தொடர்வோம்.

***திரு. பி. தாஸ்*** (ஒரிசா) : ஐயா, கிளைவிதி 2இன் மீதான விவாதம், இம்மசோதா முழுவதையும் பற்றிய பொது விவாதமாகவே மாறிவிட்டது. இந்துச் சட்டத்தொகுப்பை நிறைவேற்றுதற்கு இறுதி நாளாக அவைத் தலைவர் நிர்ணயித்த நாள் இன்றுதான்....

***மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் :*** இல்லை. இல்லை.

***மாண்புறு சபாநாயகர்:*** ஒழுங்கு. ஒழுங்கு. மாண்புறு உறுப் பினர் காலவரம்பு ஏதும் விதித்திட விரும்புகிறாரா?

***மாண்புறு உறுப்பினர்கள் பலர் :*** கூடாது. கூடாது.

***திரு. பி. தாஸ்:*** கிளைவிதி 2 குறித்த விவாதம் முடிவுற வேண்டு மென்று விரும்புகிறேன்....

***மாண்புறு உறுப்பினர்கள் பலர் :*** கூடாது. கூடாது.

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு. ஒழுங்கு. வேண்டும் என்றோ கூடாது என்றோ மாண்புறு உறுப்பினர்கள் கூச்சல் எழுப்ப வேண்டியதில்லை. போதுமான அளவுக்கு விவாதம் நடந்துவிட்ட தாகப் பொது விவாதத்தை முடித்து விடலாமென்று தீர்மானம் கொண்டுவாருங்கள்; ஏற்றுக் கொள்கிறேன். நான் ஏற்றுக் கொண் டாலும் கூடத் (தீர்மானம் நிறைவேற்றி) அவை முடிவு செய்வதன் மூலம்தான் விவாதம் முடிவுக்கு வர இயலும். விவாதத்தின் தன்மை குறித்து நோக்கினால், அது மிக மிகப் பொதுவான தன்மையில் தான் நடைபெறுகிறது என்று எனக்கே தோன்றினாலும் கூட அதை எப்படிக் கட்டுப்படுத்துவதென்று எனக்கே தெரியவில்லை; குறிப்பாகக் கிளைவிதி 2இன் தன்மை அப்படிப்பட்டது. சில சமுதாயங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்றும், சில சமுதாயங் களுக்கு விலக்களிக்க வேண்டுமென்றும் கோரப்படுகிறது. இரு தரப்பிலும் திருத்தங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆக சேர்க்கப் பட வேண்டியவை, விலக்களிக்கப்படவேண்டியவை ஆகியன குறித்து முடிவு செய்ய ஒட்டுமொத்த நோக்கு தேவைப்படுகிறது. அதனால்தான் விவாதங்களைக் கட்டுப்படுத்துவதில் எனக்கு சிரமம் விளைகிறது. இருப்பினும் (இக்கட்டத்தில்) வினா எழுப்புவதற்கோ விளக்கம் கேட்பதற்கோ ஏதும் இல்லையென்று கருதுகிறேன். உடனடியாக மசோதா மீதான விவாதத்தைத் தொடருவோம்.

[1]**திரு. சியாம் நந்தன் சகாயா** (பீகார்) : விவாதம் இரண்டு முழு நாட்கள் நடந்துள்ளது. இச்சட்டத்தை நாடு எவ்வாறு வரவேற்கப் போகிறது என்பதற்கு இந்த அவையில் நிகழ்த்தப்பட்ட உரைகளை ஓர் அளவீடாகக் கருதினால், மிகுந்த நம்பிக்கையாளரும் மசோதா வின் தீவிர ஆதரவாளருமான டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கே கூட சரியான முடிவுக்கு வருவதில் எந்தச் சிரமும் இராதென்று நம்புகிறேன்.

**திரு. பி.கே.பி. சின்கா** (பீகார்) : ஐயா எனது கருத்து என்ன வெனில், மசோதாவின் ஆதரவாளர் இன்னும் பேசவேயில்லை என்பதே.

**திரு. சியாம் நந்தன் சகாயா:** இம்மசோதாவை ஆதரிப்பவர் களெல்லாம் அவையில் எழுந்து தங்கள் ஆதரவைத் தெரிவிக்க விரும்ப வில்லையென்றால், அது இந்த அவையின் குறையோ, மசோதாவை

1. அ.நி.வி., தொகுதி VIII, பகுதி II, 1951 பிப்ரவரி 7, பக். 2488 - 99.

ஆதரிக்க விரும்பாதவர்களின் குறையோ அன்று. மசோதாவுக்கு உள்ளத்தில் ஆதரவு பூண்டு அதனை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாத உறுப்பினர்கள் எத்தனை பேர் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்.

**திருமதி ரேணுகா ரே** (மேற்கு வங்கம்): வாக்கெடுப்பு நடத்திப் பாருங்கள் தெரியும்.

**திரு. ராஜ்பகதூர்** (ராஜஸ்தான்) : ஐயா, நான் புரிந்து கொண்டது சரியானால், தற்போது தாங்கள் திருத்தங்கள் தாக்கல் செய்த உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பளித்துள்ளீர்கள்.

**மாண்புமிகு சபாநாயகர்:** எவராயிருப்பினும், மசோதாவை ஆதரிப் பவராயினும் சரி, எதிர்ப்பவராயினும் சரி, பேச விரும்பினால் வரவேற்கிறேன்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஐயா, எனக்குப் படுவதைச் சொல்வதென்றால், இந்த மசோதா, பல்வேறு கட்டங்களில், இந் நாட்டு மக்களின் முன்பு நெடுங்காலமாகவே வைக்கப்பட்டுள்ளது; மசோதாவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் செய்தித்தாள்களிலும், பொது மேடைகளிலும், ஏன் இந்த அவையிலுமே கூடப் பல்வேறு சூழ்நிலைகளில் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள் ளன. இக்கருத்துகளையெல்லாம் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், அவற்றிலிருந்து இச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு மிகுந்த எதிர்ப்பு இருப்பது தெளிவாகப் புலப்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அன்றியும்....

**திரு. சோனாவானே** (பம்பாய்) : ஓர் ஒழுங்குச் சிக்கல் ஐயா. நாம் இப்போது, துணைக் கிளைவிதி 2இல் கூறப்படும் ''சட்டத்தின் ஆளுகை வரம்பு'' குறித்துத்தான் விவாதித்துக் கெண்டு இருக்கிறோம். ஆனால், மாண்புறு உறுப்பினர் சட்டத் தொகுப்பைப் பற்றிய பொது விவாதம் நடத்த அனுமதிக்கப்படுகிறாரா?

**திரு. சியாம் நந்தன் சகாயா:** ஐயா, நான் தங்கள் அனுமதியுடன் ஒன்று கூற....

**மாண்புமிகு சபாநாயகர்:** இதில் ஒழுங்குச் சிக்கல் ஏதும் எழ வில்லை. சில நிமிடங்களுக்கு முன்னர் தான் 'சட்டத்தின் ஆளுகை

வரம்பு' குறித்துப் புகும்போது, சில சமுதாயங்களைச் சேர்த்துக் கொள்வதையும், சில சமுதாயங்களுக்கு விலக்களிப்பதையும் குறித்துப் பேசும்போது, இம் முடிவுகள் எவ்வாறு அச்சமுதாயங் களுக்கு நலன் விளைவிக்கவோ, கேடு செய்யவோ காரணமாகின்றன என்பதைக் குறித்து விவாதித்தல் முற்றிலும் தொடர்புள்ளதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமாகும் என்று தீர்ப்பு கூறினேன். எனவேதான் சட்டத் தொகுப்பின் குறிப்பிட்ட சில பகுதிகளைப் பற்றி மட்டுமே பேசுமாறு இந்தக் கட்டத்தில் விவாதத்தைக் கட்டுப்படுத்துதல் எளிதன்று. எடுத்துக்காட்டாக, நேற்று சர்தார் ஹுக்கம் சிங் அவர்கள் பேசும்போது திருமணம் குறித்தும், வாரிசுரிமை குறித்தும் கூடப் பேசினார். இந்த மசோதா சீக்கியர்களுக்கும் பொருந்த வேண்டுமா என்பது குறித்த விவாதத்தில் அவர் இவை பற்றிப் பேசுவதைத் தொடர்பில்லாதது எனக் கூறித் தடை செய்ய இயலாது. திருமணங் கள், மரபு நெறிகள், வாரிசுரிமை போன்ற விவகாரங்களில், இம் மசோதா சீக்கியர்களுக்கு எவ்வகையில் பாதகமாக அமைந்துள்ளது என்பதை விளக்கிக்காட்ட அவருக்கு உரிமையுண்டு. இவ்வாறுதான் கருத்துக்கள் தொடர்பு உடையனவாகின்றன. எனவே, இம்மாதிரிச் சிக்கல்கள் இனியும் திரும்பத் திரும்ப எழுப்பப்படாதிருத்தலே நன்று.

**திரு. சோனவானே :** ஆனால் ஐயா....

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு. ஒழுங்கு.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நான் கூறிக்கொண்டிருந்த வாறு, இதுவரை வெளியிடப்பட்ட கருத்துக்கள் யாவும் - அளவில் மிக்கவை - அவை மாண்புமிகு சட்ட அமைச்சரின் கைவசம் தற்போது இருப்பன - கூரிய கவனத்தோடு ஆராயப்பட்டால், அவை இம் மசோதாவின் பல்வேறு விதிமுறைகளுக்கு எத்தகைய எதிர்ப்பு நிலவுகிறது என்பதைக் காட்டுவதோடுமன்றியும், இந்து சமூகத்தில் இந்த மசோதாவைப் பற்றி எத்தகைய மனவேதனை, எவ்வளவு அச்ச உணர்வு, எத்துணை கவலையுணர்வு ஆகியவை நிலவு கின்றன என்பதையும் தெளிவாய்க் காண முடியும். இந்த சமுதா யத்தை மாற்றுப் பாதையில் செலுத்துவதில் ஆர்வமிக்கவர்கள், தங்கள் நோக்கத்தில் எவ்வளவு கூரிய ஈடுபாட்டுடன் இருக்கின்றனர் என்பதை நான் நன்கு அறிவேன்; நன்கு உணர்ந்துள்ளேன். இது ஒன்றும் வரலாற்றில் புதிய நிகழ்வு அல்ல. இந்த மசோதாவின் மூலவர் இங்கு கூறியதைப் போன்றே, ஒவ்வொரு சீர்திருத்தவாதி யும், சமயத்தைப் பற்றிய அவரது கருத்தே சரியானது என்றும், ஏனைய

மாற்றோர் கூறுவன யாவும் வழக்கிறந்த பழைமைகள் என்றே கூறி வந்துள்ளனர்; அவ்வாறு கூறியிரா விடில் அவர்கள் சீர்திருத்தவாதி களாயிருந்திருக்க மாட்டார்கள். எனவே, இன்று புதிய சமயம் ஒன்றைத் தோற்றுவித்திருக்கும் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைக் கூறுகிறேன். அவரது புதிய சமயம் வருங்கால சந்ததியினரால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடும்; ஏற்கப்படாமல் புறக்கணிக்கப்படவும் கூடும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் அதைக் கட்டாயச் சட்டமாக்க முயலுதல், தற்கொலைக் கோட் பாடாகுமென்று அவரையும், அரசையும் உறுதியாக எச்சரித்தல் எனது கடமை.

**சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்) :** தற்கொலைக்கு நாங்கள் ஆயத்தமாகவே இருக்கிறோம்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இந்தச் சீர்திருத்தம் ஒன்று சமுதாயச் சீர்திருத்தமாகவோ, அன்றிச் சமயச் சீர்திருத்தமாகவோ தான் கருதப்படும். இது ஒரு சமுதாயச் சீர்திருத்தமெனில், இச்சட்டம் நாட்டு மக்களை அனைவர் மீது ஆளுகை செலுத்த வேண்டு மென்று மாண்புறு உறுப்பினர் ஒருவர் பேசியபோது, சட்ட அமைச்சர் அவர்கள் ஏன் எதிர்த்தடை வாதத்தில் இறங்கினார் என்பதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. இது தொடர்பாகப் பேசும் போது, அவர் இந்நாட்டிலுள்ள இந்துக்களல்லாதவர்களின் கருத்துக் களுக்கும் உணர்வளிக்க வேண்டுமெனப் பரிந்து வாதாடினார். இந்துக்களல்லார் மீது இத்துணை பரிவு காட்டும் அவர், அதே போன்ற பரிவினை இந்துக்களின் உணர்வுகள் குறித்துக் காட்டாம லிருப்பது கண்டு மிக வியப்படைகிறேன். இந்த அவையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த, இந்து சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஒருவர் பின் ஒருவராய், இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் பல அவர் சமூகத்தின் மீது ஆளுகை செலுத்தினால் எவ்வாறு அவர்கள் பாதிக்கப்படுவர் என்பது குறித்த உணர்வுகளைத் தெரிவித்துள்ளனர். எனவே, இங்குள்ள சிலரது கருத்துப்படி, இச்சீர்திருத்தம் தேவையானதுதான் என்றாலும், மிக அவசரமானதுதான் என்றாலும், இதனைக் கட்டாயச் சட்டமாக் குதல், நியாயமாகாது என்றே கருதுகிறேன். எனவேதான், இந்து சமூகத்தவராகட்டும், பிற சமூகத்தினராகட்டும், இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட இசைவதாய் ஏற்றுக்கொண்டு பதிவு செய்து கொள்பவர்கள் மட்டுமே இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்படுவர் என்று கூறும் திரு. ஜஸ்பத் ராய் கபூர் அவர்களின் திருத்தத்தை முழு

மனத்துடன் ஆதரிப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு மாறாக இதனை ஒரு சமயச் சீர்திருத்தமென்று கருதுவோமாயின், அதற்கு இது உற்ற காலமும் அல்ல சமயச் சார்பற்ற அரசு இத்தகைய செயல்பாட்டில் இறங்குதல் முறையானதுமன்று என்பதை டாக்டர் அம்பேத்கர் அவர்களே ஒப்புக் கொள்வார் என்று கருதுகிறேன். இதை ஒருவகை சமுதாயச் சீர்திருத்தமாகவே நான் கருதுகிறேன். எனில், பன்னெடுங்காலமாகவே நாம் அறிந்து வந்துள்ளவாறு சமுதாயச் சீர்திருத்தவாதிகள், மக்கள் தாமாகவே மனம் மாறி அவற்றை ஏற்றுக் கொள்ளும் வரை காலம் கனியக்காத்திருக்க வேண்டியவர்களே. நாகரிக வாழ்வில் வலிந்து சமய மாற்றம் செய்விப்பதும் கூட அனுமதிக்கத் தக்கதல்ல. எனவே, இந்த இந்துச் சட்டத்தைக் கருவியாகக் கொண்டு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் விரும்பாத மக்களையெல்லாம் தமது சமயத்திற்கு வலிந்து மாற்றிவிட முயல மாட்டார் என உறுதிபூணுகிறேன். (பகல் 12 மணி)

சட்ட அமைச்சர் அவர்கள், நேற்றுத் தமது உரையைத் தொடங்கும்போது, அவர் சற்று நடுக்கத்துடனே காணப்பட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக அவர் மன்னிப்பாராக. ஏனெனில், இயல்பாக அவர் தாறுமாறாகப் பிறரைத் தாக்கிப் பேசுபவரல்லர். இந்த அவையிலும் அரசியலமைப்புச் சட்டப் பேரவையிலும் மிகத் தரமான வாதங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவர்; மிகக் கடினமான வாதங்களே அவற்றில் பெரும்பாலானவை ஆனால் நேற்றோ அவர் தமது பேச்சில் மாற்றுத் தரப்பினரைத் தாறுமாறாகத் தாக்கிப் பேசத் தொடங்கினார். திருத்தங்களைத் தாக்கல் செய்தவர்களை யும், அவை குறித்து உரையாற்றியவர்களையும் பொருளற்றுப் பேசு வதாகவும், ஏன் எனது நினைவு சரியாயிருக்குமெனில், மூடத்தன மாயிருப்பதாகவும் தாக்கினார்....

**பண்டித எம்.பி. பார்கவா** (ஆஜ்மீர்): பகுத்தறிவில்லாது பேசுவ தாகவும் கூறினார்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஆம், பகுத்தறிவற்றவர்களென்றும் கூடப் பேசினார். அவர் அவ்வாறு பேசியதை நான் விரும்பாத போதிலும், அவர் பேச்சு என்னைப் புண்படுத்திய போதிலும், இந்த இந்துச் சட்டத் தொகுப்பை இப்போதுள்ளவாறே நிறைவேற்ற வேண்டும் எனும் அவரது கருத்தோடு ஒத்துப் போகாதவன் என்ற முறையில், இம் மசோதாவின் மூலவரான அவர், நிலை தடுமாறிப்

போகும் அளவுக்கு நடுக்கமுற்றிருந்தார் என்பதால் ஓரளவுக்கு மகிழ்ச்சியே அடைந்தேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் (உத்தரப் பிரதேசம்):** வாதத்தில் வலுவில்லை யென்றால், எதிராளியைத் தாக்கிப் பேசுதல் மரபு.

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு. ஒழுங்கு.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நாம் இப்போது இச்சட்டத்தின் விதிமுறைகளைக் கூர்மையாக ஆராய்ந்து பார்ப்போமெனில், இச் சட்டத்தை நிறைவேற்றிவிடுவதனாலேயே தீர்வு காணப்பட்டு விட முடியாத மாபெரும் இடர்ப்பாடுகள் சில உண்மையிலேயே இருக் கின்றன என்பதைக் காணுவோம்.

(மாண்புமிகு துணை சபாநாயகர் தலைமை ஏற்கிறார்).

சொல்லப்போனால், சமுதாயச் சீர்திருத்தம் என்பது ஒரு தனி மனிதரின் கண்ணோட்டத்தை மட்டுமே பொறுத்ததன்று; ஒட்டுமொத்த சமுதாயத்தின் கருத்தறிந்து செய்யப்படவேண்டிய தாகும். எந்த வகையாக இச்சமூகம் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வந்துள்ளது என்பதைப் பற்றியெல்லாம் கருத்தில் கொள்ளாமல், இச்சட்டத்தின் விதிமுறைகளில் சில நடைமுறைப்படுத்தப்படுமே யானால், அது இச்சமுதாயம் இன்றிருக்கும் நிலையிலிருந்து உடைந்து நொறுங்கிப் போவதில் தான் முடியும். எனவே, ஒருவேளை இச்சட்டம், நிறைவேற்றப்படுமேயானால், இச்சட்டத்தின் ஆளுகைக்குத் தாங்கள் உட்பட விரும்புவதாக இசைவு தெரிவிப் போர், தங்கள் கண்களிரண்டையும் அகலத்திறந்து வைத்துக் கொண்டு, தேர்ந்தெடுத்துக் கொள்ளுமளவுக்கு இளக்கத் தன்மை யுடன் நிறை வேற்றப்பட வேண்டுதல் அவசியம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்துச் சட்டத் தொகுப்பு ஒன்று தேவையென்று முடிவு செய்தவர்கள் அப்போதைய நோக்கம் என்ன என்பதைக் குறித்தும் சற்றுக் காணுவோம். ஐயா, ராவ் குழு என்று பரவலாக அறியப்பட்ட இந்துச் சட்டக் குழுவின் முக்கியமான பரிந்துரையொன்றைத் தங்க ளுக்கும் இந்த அவைக்கும் சுட்ட விரும்புகிறேன். அந்த அறிக்கை யின் 13ஆவது பக்கத்தில், 50ஆவது பத்தியில் அவர்கள் கூறியிருப்ப தாவது :

*"இச்சட்டத் தொகுப்பின் விதிமுறைகளில் பெரும்பாலானவை ஒப்பிசைவு நோக்கில் அல்லது இயலுமையூட்டு நோக்கில் அமைந்திருக்குமேயன்றி பழைமைப் பற்றாளர்கள் மீது எவ்விதமான கட்டாயத்தையோ, கடப்பாடுகளையோ திணிப் பதாய் இரா. வளர்கின்ற இந்து சமுதாயத்தின் ஆண் பெண்கள் அனைவருக்கும், அவர்கள் வாழ விரும்பும் வாழ்க்கை முறை யைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையைப், பழைய பாதையிலேயே தொடர்ந்து வாழ விரும்புவோரின் உரிமை களை எவ்விதத்திலும் பாதிக்காதவாறு, பயன்படுத்திக் கொள்ள இயலுமை உண்டாக்குதல் மட்டுமே இச்சட்டத்தின் விளை பயனாக இருக்கும்."*

*இந்தப் பரிந்துரை மிகவும் தெளிவானது; அக்குழு நாடு முழுவதும் பயணம் செய்து இந்து சமுதாயத்தினரிடையே கருத்துத் திரட்டப்பட்ட பின் செய்த பரிந்துரை அது. இந்தப் பரிந்துரை ஆழ்ந்து கருதியே செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே, இன்று நமது கருதலில் இருக்கும் இந்த மசோதா எந்தக் குழுவின் பரிந்துரைகளின் விளைவாக உருவாகியுள்ளதோ அந்தக் குழுவின் முக்கியமான இந்த முடிவிலிருந்து நாம் மாறுபடக் காரணம் ஏதுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குழு திரட்டிய ஏராளமான சான்றுகள் யாவும் ஆழ்ந்து ஆராயப்பட்டுள்ளனவா, ஆமெனில், அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு வருகிறதா என்பதை அறியேன். இச்சட்டத்தின் ஆளுகை வரம்பு குறித்துக் குழுவின் பரிந்துரையின்படியே இந்திய அரசின் முடிவும் அமையும் என்பதில் எனக்கு ஐயமில்லை.*

*நேற்றுச் சில நண்பர்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த இம் மசோதா குறித்துப் பொதுமக்களிடையே கருத்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று கோரியபோதும், நமது சட்ட அமைச்சர் அவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்ததோடல்லாமல், எதிர்ப்பின் உச்சமாக அவர் பொது மக்களை அறியாமையிலுள்ளவர்கள் என்றும் இந்த விவகாரம் பற்றி ஏதுமறியாதவர்கள் என்றும் கூடப் பழித்தார்....*

***திரு. பாரதி (சென்னை) :*** *சட்ட நுணுக்கங்களை அறியாதவர்கள் என்றுதான் கூறினார்.*

***திரு. சியாம்நந்தன் சகாயா:*** *அவரது உரையைத் தாங்கள் கேட்டீர்கள்; நானும்தான் கேட்டேன். உரைப் பதிவுகளும் இருக்*

கின்றன. இது சட்ட நுணுக்கம் குறித்த விவகாரமே அன்று. இந் நாட்டிலுள்ள இந்து சமூகத்தினர் ஒவ்வொருவரும் சமயவியல், சமூகவியல் சட்டங்களைப் பொறுத்தமட்டில் தங்களுடைய தேவை என்ன என்பதை முழுமையாக அறிவார்களாதலால், பொதுக் கருத்துக் கணக்கெடுப்பின் மூலம் முடிவுக்கு வருவதில் எந்த வித சிரமமும் கிடையாது என்பதே எனது க்ருத்து. நமது அரசிய லமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பியும், வயதுவந்தோர் வாக் குரிமையை உறுதியாக ஆதரிப்பவருமான ஒருவர், குடியாட்சி முறைகளை இழிவுபடுத்தும் வகையில் பேசிவிட்டாரே என்பதை எண்ணிப்பார்த்தால், எனக்கு மிகவும் வியப்பூட்டுவதாக மட்டு மின்றிப் பெரிதும் அதிர்ச்சியளிப்பதாகவும் இருந்தது; சிறுத்தை கள் தம் புள்ளிகளை மாற்றிக் கொள்ளாது என்று அவர் நேற்றுக் கூறிய உண்மை நேற்றைப் போல இன்றும் உண்மையாய் இராதோ என்ற ஐயம் எனக்குள் தோன்றியது. எந்த ஒரு காலத்திலும், எந்த வொரு நாட்டிலும், மக்களாட்சியைத் தொடங்கும்போது, நாம் விரும்பத்தக்க அளவுக்கு வாக்காளர்கள் கல்வி பெற்றிருக்கிறார் களா எனப்பார்த்துக் கொண்டு அதற்குப் பின்னர் தொடங்குவ தில்லை என்பதை மறந்து விடக்கூடாது. மக்களாட்சியே மக்க ளுக்கோர் ஆசிரியர் என்பதையும் நாம் எவ்வளவுக்கெவ்வளவு மக்களிடம் கருத்து கேட்டு அவர்களது எண்ணங்களை வெளியிட வாய்ப்பளிக்கிறோமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு (மக்களாட்சி) உணர்வும், (அரசியல்) கல்வியும் ஊட்டுவோம் என்பதையும் மறந்துவிடலாகாது. எனவேதான் இந்துச் சட்டத்தொகுப்பு குறித்து பொதுமக்கள் கருத்துக் கணக்கெடுப்பு நடத்துவதைவிட, வாக்காளர் களைக் கலந்தாலோசிப்பதற்கு உகந்த முறை வேறேதும் இருக்க முடியாது என்பதை நமது சட்ட அமைச்சர் அவர்கள் கருதிப் பார்க்க வேண்டுகிறேன். இன்றைய வாக்காளர்களுக்குப் போதிய அளவு அரசியல் விழிப்புணர்வு இருக்கிறதோ இல்லையோ, சமய உணர்வு கள், சமயச் சட்டங்கள் போன்றவற்றில் அவர்கள் முழுமையான விழிப்புணர்ச்சி பெற்றேயிருக்கின்றனர் என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். நகரத்திலோ, கிராமத்திலோ தெருவில் போகும் எந்த மனிதரைப் பார்த்துக் கேட்டாலும், தமக்கு நன்மை தருவது எது என்பதை அவரால் கூற இயலும். எனவே நான் மீண்டும் வேண்டிக்கொள்வது, இப்போது கூடக் காலமும் வாய்ப்பும் தாழ்ந்து விடவில்லையாதலால், இத்தகையதொரு செயல்பாட்டில் வாக்காளர் கருத்தையும் அறியும் நன்முயற்சியை மேற்கொண்டு சட்ட அமைச்சர் அவர்கள் நலம் நாட வேண்டும் என்பதுதான்.

***மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:*** அவருக்கு வாக்காளர் தொகுதி அவரேதான்.

***திரு. சியாம்நந்தன் சகாயா:*** ஆனால் இப்போதைய நிலையைப் பார்க்கும்போது அவர் அதைச் செய்யமாட்டாரெனவே தோன்றுகிறதாகையால் இதனை ஓர் ஒப்பிசைவு சட்டமாகவேணும் ஆக்குமாறு நான் அவரை வேண்டுகிறேன். இதை அவர் பிடிவாதமாக ஒரு கட்டாயச் சட்டமாகவே ஆக்குவாராயின், எனது எச்சரிக்கையை எந்த அளவிற்குப் பொருட்படுத்துவார் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், நான் அவருக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். எந்த இந்து சமயத்தையும் அதன் மரபுகளையும், பழைய சமயச் சட்டங்களையும், நேற்று நமது சட்ட அமைச்சர் கூறியது போன்று வழக்கறுந்த பழைமை என்று கூறி, அடிமை வம்ச அரசர்களும், லோடிகளும், கில்ஜிகளும், சையதுகளும், மொகலாயர்களும் அழித்தொழிக்க முயன்று தோற்றார்களோ அவ்வாறே அவரும் தோல்வியுறுவார். வழக்கிழந்த பழைமைச் சட்டங்கள் என்று கூறி எவற்றை அவர் அழித்தொழிக்க முயல்கிறாரோ, அம் முயற்சியில், ஆயிரமாண்டுகளுக்கு மேலாக இந்நாட்டில் அதிகாரம் செலுத்தியவர்கள் எவ்வாறு முயன்று தோற்றார்களோ அதேபோன்ற தோல்வியைத்தான் நமது சட்ட அமைச்சரும் சந்திக்கப் போகிறார். இந்து சமூகத்தின் சட்ட அமைப்புகள் வெறும் சட்டங்களைவிட ஒருபடி மேலான ஆழமுள்ளவை. அதன் அடித்தளம் மிக ஆழமானது; மக்களைக் கலந்தாலோசிக்காமல் அவசர அடியாக நிறைவேற்றப்படும் சட்டங்களால் அதனை அசைத்து விட ·முடியாது.

அமைச்சரின் உரையைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது, ***அமிர்த பஜார் பத்திரிகா*** எனும் இதழில் ஆண்டுதோறும் குறிப்பிட்டதொரு நாளில் வெளிவரும் கதையொன்றுதான் எனது நினைவுக்கு வந்தது.

வறுமை மிக்க முதிய பண்டிதர் ஒருவரின் கதை அது. அவரது மனைவி அவரை வீட்டுச் செலவுக்கு எப்போதும் பணம் கேட்டு நச்சரித்துக்கொண்டே இருப்பாள். அவரும் அவ்வப்போது தம்மால் சம்பாதிக்க முடிந்த இரண்டொரு ரூபாய்களைக் கொடுப்பார், இவ்வாறாக வறுமையிலும் ஒருவாறு குடும்ப வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. திடீரென ஒருநாள் அவருக்குப் புதுமையானதொரு எண்ணம் உதித்தது. தம் மனைவியை அழைத்து, ''இனிமேல் நமக்குப் பணக்கவலை ஏதும் கிடையாது; ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதிப்பதற்கான புதிய வழியொன்றை நான் கண்டுபிடித்து

விட்டேன்'' என்று கூறினார். ''அதென்ன புதிய வழி'' என்று மனைவி கேட்க, ''நேற்றிரவு நான் சில புதிய கவிதைகளை இயற்றியிருக்கிறேன். அவற்றை எடுத்துக் கொண்டு நாளை காலை அரசரைக் காணச் செல்லுவேன். அரசவையில் அவற்றைப் படித்துக் காட்டுவேன். அரசவையில் வீற்றிருக்கும் பண்டிதர்களில் எவராவது எனது கவிதைகளுக்குப் பொருள் விளக்கம் கூற முடிந்தால் அவருக்கு நான் ஒரு லட்சம் ரூபாய் பணம் தருவதாகவும் அப்படியாராலும் கூற முடியாவிட்டால் அரசர் எனக்கு ஒரு லட்சம் ரூபாய் தந்துவிட வேண்டும் என்றும் பந்தயம் கட்டுவேன். இந்தப் பந்தயத்தில் நான் வென்று ஒருலட்சம் ரூபாயுடன் திரும்பி வருவேன்'' என்றார். அவர் மனைவி நகைத்து விட்டு, ''நீங்கள் ஒரு முட்டாளாகத்தான் இருக்க வேண்டும்; ஒருவேளை அரசவைப் பண்டிதர்களில் ஒருவர் இக்கவிதைகளுக்குச் சரியான விளக்கமளித்து விட்டால், அரசருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கப் பணத்துக்கு எங்கே போவீகள்?'' என்று கேட்டாள். பண்டிதர் தாமும் நகைத்துவிட்டுக் கூறினார், ''பெண்களுக்கே கற்பனைத் திறன் சிறிதும் கிடையாது; படைக்கப் பட்ட காலத்திலிருந்தே ஒருபோதும் கிடையாது....''

**மாண்புறு உறுப்பினர் ஒருவர் :** இது உங்கள் கருத்தா?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** என் கருத்தன்று; அது பண்டிதரின் கருத்துத்தான். பெண்களைப்பற்றி நான் இழிவாகப் பேச முடியாது. தொடர்ந்து பண்டிதர் கூறினார், ''அது மிகவும் எளிது.'' ''அதெப்படி?'' என்று மனைவி கேட்கப் பண்டிதர் கூறினார்: ''எவருடைய விளக்கத்தையும் சரியானது என்று நான் ஒப்புக்கொண்டால்தானே! அரசவைப் பண்டிதர்கள் ஒவ்வொருவராக வந்து (தமது விளக்கத்தைக் கூறிப்) போவார்களேயன்றி, எவருடைய விளக்கத்தையும் சரியானதென்று நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்; கடைசியில் அரசர் எனக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுத்துத்தானே ஆகவேண்டும்.'' இம்மாதிரிதான் இந்த அவையில் எவ்விதமான அறிவுரை, கருத்து, ஆலோசனை எது எடுத்துரைக்கப்பட்டாலும், நமது சட்ட அமைச்சரும் அந்தப் பண்டிதரைப் போன்றே ஒப்புக்கொள்ள மறுப்பாரானால் நாம் என்ன செய்ய முடியும்? வெளியே மக்களின் கருத்து என்ன என்று கூறி நாம் அவரை வேண்ட முடியும், நாம் நமது தொகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்து வந்து அங்கு கிடைக்கும் தகவல்களை அப்படியே உண்மையாய் எடுத்துரைப்போம் என்பதில் சற்றும் ஐயமில்லை.....

**டாக்டர் அம்பேத்கர்:** தங்களிடம் இருப்பதை விட அதிக மாகவே தகவல் என்னிடம் உண்டு.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** என்னிடமிருப்பதை விடத் தங்களிடம் மிகுதியான தகவல் இருக்கலாம். ஆனால் நான் என்னைப் பற்றி மட்டுமே குறிப்பிடவில்லை. இவ்வவை உறுப்பினர் அனை வரையும் சேர்த்தே குறிப்பிட்டேன். தங்களிடமிருப்பதை விடக் கூடுதலாக என்னிடம் தகவல் இருப்பதாய் கூறத் துணியேன்....

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** ஒரு லட்சம் ரூபாய் என்ன ஆயிற்று.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** பண்டிதருக்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைத்துவிட்டது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : (பஞ்சாப்):** பொது மக்களின் கருத்து மசோதாவுக்கு ஆதரவாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே இந்த அவையில் ஒப்புக் கொண்டிருக்கிறார் அல்லவா?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஒப்புக்கொண்டாரா? மிக்க மகிழ்ச்சி. அதுவே எனக்கு வலிமையான ஆதரவாகும். அவ்வா றாயின் இம் மசோதாவை அவைக்குக் கொண்டுவர வேண்டிய தேவையே இல்லையே. அதிகாரத்தில் இருக்கும் ஒருவருக்குச் சங்க டங்கள் நேரும்போதெல்லாம் அதிகாரத்தைத் துணைக்கழைப்ப தோடு, அவரிடம்தான் வேறெவரிடமும் இல்லாத அறிவு, தகவல் யாவும் தம்மிடம் இருப்பதான உணர்வு மேலிடும். விக்டோரியா பேரரசி ஒருமுறை கிளாட்ஸ்டோனைக் கடிந்து, ''தலைமையமைச்சர் அவர்களே, நான்தான் அரசி, இங்கிலாந்தின் இறை என்பது தங்க ளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்'' என்று கூறியபோது, கிளாட்ஸ் டோன் அவர்கள், ''ஆம் அரசியாரே, ஆனால் நான்தான் இங்கி லாந்து மக்கள்'' என்று பதிலடி கொடுத்தார். எனவே சட்ட அமைச்சர் அவர்களே இந்தியாவின் இறைமை இன்று தங்கள் கையிலிருக்கலாம்; ஆனால் நாங்கள் இந்திய மக்கள்; நாங்கள் கூறுவதைக் கேட்க மறுத்தால் இறைகள் யாவரும் போன வழியி லேயே தாங்களும் மறைய நேரும். தாங்கள் விரும்பினாலும், விரும்பாவிடினும் இது நடப்பது உறுதி.

இந்துச் சட்டத் தொகுப்பை இப்போது நிறைவேற்ற முயல்வது போல் நாம் முயலக்கூடாது என்று எனது கருத்தை வெளிப்படையாகக் கூறுவதற்கு மன்னிக்கவும். சமயச் சீர்திருத்தம், சமூகச் சீர்திருத்தம் ஆகியவையெல்லாம் தேவையானவைதான். இந்த அவையில் எவருமே, ''நாங்கள் இருக்கும் நிலையிலேயேதான் தொடர்ந்து இருக்கப் போகிறோம்'' என்று கூற மாட்டார்கள். அப்படியானால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்? இந்தச் சட்டம் ஒப்பிசைவுத் தன்மையதாக இருக்கட்டும் என்றுதான் கேட்கிறோம். மக்கள் இதைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ளட்டும். அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்து முழுமையாக ஆய்ந்து இது நாட்டின் நலனை மேம்படுத்த உதவுமென்று கருதினால், அவர்களே இதை விரும்பி ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் கடவுள் பேரால் கேட்கிறேன்; இதைக் கட்டாயமாக்காதீர்கள்.

**திரு. ஆர். வேலாயுதன்** (திருவாங்கூர் - கொச்சி) : அப்படியெனில் சட்டம் இயற்றல் என்பதன் பொருள் தான் என்ன? இச் சட்டம் இல்லாவிட்டால் என்ன?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** சட்டமியற்றல் என்பதன் பொருள் என்ன என்பதை நான் விரைவில் விளக்குவேன். நீங்கள் சட்ட மன்றத்துக்குப் புதியவர்போலும்; இல்லையேல் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டிருக்க மாட்டீர்கள். எவ்வாறாயினும் இன்னும் சில நிமிடங்களில் தங்களுக்கு விடை கூறுவேன்.

**திரு. ஆர். வேலாயுதன்:** இந்துச் சட்டத் தொகுப்பை நான் படித்துள்ளேன்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நீங்கள் இந்துச் சட்டத் தொகுப்பைப் படித்து விட்டீர்களா, மிகவும் நன்று. நேரடியாக சொர்க்கத்துக்கே போய்விடலாம்.

இந்தச் சட்டத்தையும் அதன் வெவ்வேறு பகுதிகளையும் பார்ப்போமாயின், விவரங்கள் பற்பலவற்றையும் நோக்குமிடத்துச் சிற்சில விதிவிலக்குகள் சட்டத்திலேயே கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சில விவகாரங்களில், மருமக்கதாயம், அலிய சந்தான சட்டங்களைப் பின்பற்றுகின்ற இரண்டு சமுதாயங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிலவகைத் திருமணங்கள், அதாவது

சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்து கொண்டவர்களும், வாரிசுரிமைச் சட்டத்தின் ஆளுகைக்குள் வருதற்கு உதவும் பொருட்டு, துணைக் கிளை விதி (4) நீக்கப்படுவதாய்ச் சட்ட அமைச்சர் நேற்றுக் கூறினார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது தாராளம் மிகுந்தது எனக் கூறினார்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நன்று.. அவர்களுக்குத் தாராள மிகுந்ததாய் அச்சட்டம் இருக்குமென்றால், தாராளம் மிக்க சட்டங்கள் எல்லோருக்குமே நலம் புரியவேண்டுமென எதிர்பார்க்கலாகாதா. அவர் இந்துச் சட்டத்தைத் தொகுக்கிறாரேயன்றி புதிய சட்டங்கள் எதையும் இயற்றவில்லையே; இருக்கின்ற சட்டங்களை முறைப்படுத்தித் தொகுத்துக் காலத்துக்கேற்றவாறு புதுப்பிக்கும் நோக்கில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வருகிறார்: அவ்வளவே. நீங்கள் விரும்பினால் மிகுந்த தாராளம் காட்டுங்கள்; யார் தடுக்கிறார்கள்?

இந்துச் சட்டத்தின்மீது இதுவரை வழங்கப்பட்ட தீர்ப்புகள், தரப்பட்ட விளக்கங்களையெல்லாம் தக்கவாறு துணை கொண்டு, இந்துச் சட்டத்தை நீங்கள் முறைப்படுத்திச் சில முற்போக்கான சீர்திருத்தங்களையும் புகுத்தப் போவதாய்க் கூறுகிறீர்கள். அதுதான் உண்மையெனில், திருமணமான இந்துக்களில் ஒருதரப்பினருக்கு ஒருவகையான வாரிசுரிமைச் சட்டமும், பிறிதொரு தரப்பினருக்கு வேறுவகையான வாரிசுரிமைச் சட்டமும் வகுக்கப்படுவதற்கான தேவையிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. அப்படித்தான் செய்வீர்கள் என்றால் செய்யுங்கள். (எதிர்க்கும்) எங்களில் சிலர் குடிமைச் சட்டம் நிறைவேற்ற ஆதரவு காட்டுவோம் எனக் கூறியவை உளமாறக் கூறப்பட்டவையன்று என நீங்கள் கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. எங்கள் உணர்வு யாதென்றால், நாடு முழுவதையும் சீரானதோர் அடிப்படையில் கொண்டு வரவேண்டின், அதற்குச் சில தியாகங்கள் தேவைப்படுமெனில், நாங்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம் என்பதே. ஆனால் நீங்கள் ஒரேயொரு சமுதாயத்தை மட்டுமே (தியாகம் செய்யத்) தேர்ந்தெடுத்தால், அதையெதிர்த்துப் போராடத் தயாராகவே இருக்கிறோம். நீங்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்கள் விவகாரங்களில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணிச் செயல்படுகையில் ''எங்கள் சமயத் தனிப்பான்மைகளில்

தலையிடாதீர்'' என்ற ஏனைய சமுதாயத்தினரின் கோரிக்கையை மட்டும் ஏற்றுக் கொள்கையில்தான் இடர்ப்பாடுகள் எழுகின்றன.

இந்துச் சட்டத்திற்கும் அப்பாற்பட்டுச் செயல்பாட்டிலிருக்கும் மரபு நெறிச் சட்டங்களுக்கு, இந்துச் சட்டத்தில் ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்துச் சடமுதாயத்தைச் சேர்ந்தவர்களிலும் தனித்தனியான மரபு நெறிச் சட்டங்களின் ஆளுகையிலிருப்போருக்கும் விதிவிலக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது; எனவே, இந்த வேறுபாடுகள், விதிவிலக்குகள், அனுமதிகள், ஆகிய யாவும் பிறிதொரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்படும் என்பதை இந்துச் சட்டமே எடுத்துரைக்கின்றது. எனவே, இச்சட்டத்தை ஒப்பிசைவுச் சட்டமாக மாற்றி விடுமாறு சட்ட அமைச்சர் அவர்களை வேண்டுவது தகாத கோரிக்கை அல்ல.

நமது சட்ட அமைச்சர் அவர்களின் அருளும் பரிவும் கூர்ந்த கருதலுக்காக முன்வைக்க மேலும் பல இடர்ப்பாடுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, இனிமேல் மணமுறிவுகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று விதிவகுக்கப்பட்டுள்ளது. நான் இதைப் படிக்கும்போது - இதை மட்டுமல்ல சட்டத்தின் இம்மாதிரியான பல பகுதிகளைப் படிக்கும்போதும் - இந்தச் சட்டம் உண்மையிலேயே வழக்கறிஞர்களின் சொர்க்கமாய்த் திகழப்போகிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இச்சட்டத்தினால் எந்தப் பிரிவினர் உண்மையாகவே பயன்பெறுவார்கள் என்று எண்ணிப்பார்த்தால், அது நமது அமைச்சருடன் முன்னாளில் இணைந்து பணியாற்றிய வழக்கறிஞர் சமுதாயம்தான். நாளையே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படலாம். ஒருவேளை நடைபெற்ற விவாதமெல்லாம் போதும் என்று கூறி நாளையே நாம் இச்சட்டத்தை நிறைவேற்றி விட்டோமானால், உடனடியாக எந்த மக்களை அறியாமை மிக்கவர்கள் என்று வருணித்து அவர்களிடையே பொதுக் கருத்துக் கணக்கெடுப்பு நடத்த நமது சட்ட அமைச்சர் மறுத்து விட்டாரோ, அவர்களெல்லாம் நாளை மறுநாள் முதற்கொண்டு தங்கள் மண முறிவுகளையும் திருமணங்களையும் பதிவு செய்து கொள்ளப்போகிறார்கள் என்றா எதிர்பார்க்கிறீர்கள்?

**டாக்டர் அம்பேத்கர்:** மணமுறிவுகளைப் பதிவு செய்ய விதிமுறை ஏதுமில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள நேருவதற்கு வருந்துகிறேன். ஆனால் இன்று அவை

கலையும் முன் அந்த விதிமுறையை அமைச்சருக்கு வாசித்துக் காட்டுவேன். அதைப் பற்றி ஏற்கெனவே திருத்தம் ஒன்றும் தாக்கல் செய்துள்ளேன்.

**திரு. பாரதி:** திருமணத்திற்குத்தான் பதிவு முறை உண்டே யன்றி மணமுறிவுக்கு அல்ல; எனவே தாங்கள் கூறியது பிழை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினர் அவர்கள், இந்துச் சட்டத்தின்படி நீதிமன்ற ஆணையின் கீழன்றி மணமுறிவு செய்துகொள்ள இயலாது என்பதைத்தான் குறிப்பிடுகிறார்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஆம். மாண்புமிகு உறுப்பினர் கறுப்புக் குதிரை வேறு கருங்குதிரை வேறு என்று கண்டுபிடித்திருக் கிறார். இருந்திருந்தும் அவர் இம்மாதிரியான வாதத்தில் இறங்குவார் என நான் எதிர்பார்க்கவில்லை. இருக்கட்டும். மணமுறிவு பதிவு அலுவலகத்திற்குப் பதிலாக, நீதிமன்றத்திலேயே பதிவு செய்யப் படுமென்பது எனது வாதத்திற்குக் கூடுதல் வலிமை தருகிறதே யன்றி அதற்கு எதிரானது அல்ல. நமது நாடு மிக விரிந்த எண்ணிக்கை யில் மக்கள் வாழும் நாடு - முப்பத்து மூன்று கோடி மக்கள் வாழும் நாடு -; இவர்களில் பெரும்பாலோர் சிற்றூர்களில் வாழ்பவர்கள்; சட்டங்கள், நடைமுறைவிதிகள், நீதிமன்ற முறைமைகள் ஆகியன குறித்து ஏதும் அறியாதவர்கள். இவர்களெல்லாம் திருமணத்திற்கும் மணமுறிவுக்கும் ஒவ்வொருவராய்ப் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்னும் நிலைமையை எண்ணிப்பார்க்கவும் முடியுமா? பதிவுதான் செய்ய வேண்டியிருக்கும் என்று நான் முதலில் நினைத்தேன்; அதில் வழக்கறிஞர் கட்டணம் என்பது வெகு சொற்பமாகவே இருக்கும். ஆனால் இவற்றுக்கெல்லாம் மக்கள் நீதிமன்றங்களுக்குத்தான் போக வேண்டுமென்றால், இந்தச் சட்டம் வழக்கறிஞர்களின் சொர்க்கமாய்த் திகழப்போகிறதென்பதில் எனக்குச் சிறிதும் ஐய மில்லை என்பது மட்டுமல்ல, இந்த அவையும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும்கூட மறுக்க மாட்டார்கள் என்பது உறுதி.

இப்பரந்த பெரிய நாட்டில், இன்னும் கொஞ்ச காலத்திற் காவது - நெடுங்காலத்திற்கே தேவைப்படுமென்று நான் கருதி னாலும் உடனடியாகக் கொஞ்ச காலத்திற்காவது - இத்தகைய கட்டாயச் சட்டம் ஒன்றை நிறைவேற்றுதற்குத் தகுந்த காரணம் ஏதும் கிடையாது. மக்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்; தேவைதான் என்று நினைத்தால் மக்களே ஏற்றுக் கொள்வார்கள்.

இச்சட்டத்தைப் பற்றி நாம் வெகுவாகப் பேசியுள்ளோம்; இச்சட்டத்திலேயே அதன் பெருமை குறித்தும், அது எத்துணை முற்போக்கானது என்பதைப் பற்றியும் பெருமை பேசப்படுகிறது; இந்நாட்டுப் பெண்களுக்கெல்லாம், இதைத் தருகிறோம் அதைத் தருகிறோம் என்றெல்லாம் வேறு கூறிக் கொண்டிருப்பதால், இவற்றை யெல்லாம் ஓரளவுக்கு நம்பத்தான் வேண்டியுள்ளது. ஆனால் இன்றைய இந்து சமுதாய நிலையை நாம் நன்கு ஆய்ந்து பார்த்தோமெனில், இந்துக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் பெண்களே அலெக்சாண்டர்களாக (சர்வாதிகாரிகளாக) விளங்கி வருவதை உணருவோம். தங்கள் கண்ணில் படுவதையெல்லாம் ஆட்சி செய்யும் அந்த உயர்ந்த நிலையில் இருந்து அவர்களை வெறும் துணைவியர் எனும் நிலைக்கு அல்லவா இறக்க முயல்கிறீர்கள். கூட்டுக் குடும்ப முறை நாம் படிப்படியே துறந்து கொண்டிருக்கும் இக்கட்டத்தில், துணை என்பதற்கு மதிப்பு என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். கூட்டுக் குடும்ப அமைப்பில் துணைவர் ஒவ்வொருவருக்கும் ஒரு மதிப்பும், தகு நிலையும் உண்டு. இவை நெருங்கிய தொடர்புடையனவாதலால், துணைவர் துணைவியரிடமும், துணைவி துணைவரிடமும் அக்கறை கொண்டிருந்தார்கள். கூட்டுக் குடும்ப முறையை அழிப்பதோடன்றிப் பெண்களை துணைவியர் எனும் நிலைக்குத் தாழ்த்த விரும்புகிறீர்கள். நீங்கள் ஒரு துணைவர் (துணைவியர்) என்றால் உங்களுக்குக் குறிப்பிட்ட உரிமைகள், குறிப்பிட்ட பங்கு இவைதான் கிடைக்கும். ஆனால் தற்போதோ பெண்கள்தான் இல்லங்களில் முழுமையாக ஆட்சி செலுத்தி வருகிறார்கள்.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆம். பெருமளவு உண்மையே.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நாளை நீங்கள் அவர்களை வெறும் துணைவியர் (பங்குதாரர்) ஆக்கிவிடப் போகிறீர்கள்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** எதில் பங்குதாரர்?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** சொத்தில் பங்குதாரர்கள்.

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்:** வாழ்க்கைத் துணை இல்லையா?

**திரு. சியாம்நந்தன்சகாயா:** சொத்தில் பங்குதாரர்கள் என்று தான் கூறினேன். எப்படியும் பெண் தந்தை வீட்டிலிருந்து கொஞ்சம்

சொத்து கொண்டுவருகிறாள். அச்சொத்து அவளுக்கே தனியுடைமை. தனக்கென ஒரு பிடிப்பு அதில்தான் இருப்பதாக அவள் உணர்கிறாள். அவள் புதிதாய்ப் புகும் கணவன் வீட்டைச் சார்ந்தவளாக அவளை ஆக்கினால் என்ன? சொத்துக்களால்தான் தொல்லைகளே உண்டாகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். பல குடும்பங்களில், ஒன்றிரண்டு அல்ல மிகப் பல குடும்பங்களில், மனைவியின் சொத்து மீதான நிருவாக அதிகாரம் கணவனிடத்து இல்லாமல் மூன்றாம் மனிதரிடம் இருப்பதை அறிவேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** அதற்குத் தகுந்த காரணம் இருக்கக் கூடும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** தங்கள் சட்டம் இந்து சமுதாயத்தை இந்த நிலைக்குத்தான் கொண்டுவந்து நிறுத்தும். இந்நிலை தான் சிலருக்கு உகந்தது என்றால், அவர்கள் (மட்டும்) அதை ஏற்றுக் கொள்வதில் எனக்குத் தடையேதுமில்லை.

**திரு. ராஜ் பகதூர்:** இதன் விளைவாக, மணமுறிவுக்கான தேவை ஏற்படுகிறது.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** தங்களைப் போன்ற இளைஞர்கள் மணமுறிவுச் சட்டங்களுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் உங்கள் நலத்தை எண்ணிப் பேண (மூத்தோர்) பலர் இருக்கின்றோம்.

இந்தச் சட்டத்திலுள்ள இவ்விடர்ப்பாடுகளை நான் தெளிவுறக் கூறினேன்; இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுமுகத்தான், இச்சட்டத்தை ஒப்பிசைவுச் சட்டமாகவே நிறைவேற்றுமாறு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களையும் இந்த அவையையும் வலியுறுத்திக் கோருகிறேன். அப்படிச் செய்யாவிடில், நாட்டிலுள்ள இந்துக்கள், அரசு நினைப்பதைப் போன்று இதை அவ்வளவு இலகுவாக விட்டுவிட மாட்டார்கள். நாடெங்கும் பலத்த எதிர்ப்புக் குரல் எழும்.

**டாக்டர் அம்பேத்கர் :** எழாது.

**திரு. ஹிமத் சிங்கா (மேற்கு வங்கம்) :** டாக்டர் அம்பேத்கருக்கு அச்சமில்லை போலும்.

**டாக்டர் அம்பேத்கர் :** அவ்வாறு நடக்கும் என்று நான் சிறிதும் கருதவில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு அச்சம் ஏதுமில்லை என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. அவர் எதற்கும் அச்சப்பட வேண்டியதில்லை. ஒரு தகவலைச் சொல்லாமல் தவிர்க்கவே முயன்றேன்; ஆனால் இப்போது என்னால் அதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. நான் எனது தொகுதிக்குக் கடைசியாகச் சென்றிருந்தபோது தொகுதி மக்கள் சிலர் என்னை அணுகி, ''இதற்கு முன்னர் தாங்கள் காங்கிரஸ்காரராக இருந்த தில்லையே'' என்று கேட்டனர். நானும், ''ஆம். இதற்கு முன்னர் காங்கிரஸ்காரனாக இருந்ததில்லை'' என்று பதில் கூறினேன். அதற்கு அவர்கள், ''நீங்கள் முஸ்லீம்களோடு சேர்ந்து உண்கிறீர்கள்; உங்களிடம் பழைமைப் பாங்கு ஏதும் காணப்படவில்லையாதலால், நீங்கள் ஈடுபாடு கொண்ட இந்து அல்ல'' எனக் கூற, ''அந்தப் பொருளில் நோக்கினால் நான் பழைமைப் பற்று கொண்ட இந்து அல்ல'' என்று பதில் கூறினேன். அதைக் கேட்டு விட்டு அவர்கள், ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதைப் போன்று, இந்து சமுதாயத்தையும், காங்கிரஸ் கட்சியையும் வீழ்த்த ஒரே ஆயுதமாக, இந்த இந்துச் சட்டத்தைக் கண்டுபிடித்திருக்கிறீர்களா? காங்கிரஸ் அரசு, மக்கள் கருத்தை மதித்து, நெளிவு சுளிவாக நடக்க இதற்குப் பின்னும் அறியவில்லையெனில், விரும்பியது போல் அரசு செய்து கொள்ளட்டும். அவர்களை என்ன செய்வதென நாடும் மக்களும் முடிவு செய்வோம்'' என்று கூறினார்.

[1]**திரு. அளகேசன் (சென்னை):** நேற்று அவை இருந்த மன நிலையில், நாம் எதிர்கொண்டுள்ள செயல்பாட்டில் கவனம் சிதைந்து, விவாதம் எங்கெங்கோ திசைகெட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேற்றைவிட இன்று சற்று உன்னிப்பான அக்கறை காட்டும் நிலையில் அவையோர் இருப்பது குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நேற்று,

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951, பிப்ரவரி 7, பக். 2499 - 2504.

இந்தச் சட்டத் தொகுப்பையும், அவரது திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆர்வமிக வேண்டினார். எப்போதுமே அவர் மிகச் சிறந்த வழக்கறிஞர் என்பதை அறிவோம். அவரது உரையின் உட்பொருளை விட, அதை அவர் ஆற்றிய விதமும் தொனியும், அவரை எதிர்ப்பவர்களைக் கூட, அவர் கருத்துக்கு மிக நெருங்கி வரச் செய்யுமளவுக்கு மிகத் திறம்பட அமைந்திருந்தன.

**திரு. வெங்கட்ராமன்** (சென்னை) : ஆனால் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே.

**திரு. சி. சுப்பிரமணியம்** (சென்னை): அதனால்தான் ''மிக நெருங்கி'' எனக் கூறினார்.

**திரு. அளகேசன் :** அவர் கருத்துடன் முழுமையாக இசைந்து விடத்தான் விரும்புகிறேன். ஆனால் அவ்வாறு கருத்து சொல்ல முடிய வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க நேருகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் பொது உரிமையியல் சட்டம் கொண்டு வருமாறு இன்னமும் வேண்டவே விழைகிறேன். இக்கருத்தை நேற்று அவர் பழித்ததோடன்றி, பொது உரிமையியல் சட்டம் கோரு வோரின் செயலுக்கு மறைவான உள்நோக்கம் கற்பிக்குமளவுக்குக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார். எடுத்துக்காட்டாக, இந்துச் சட்டத்தை முழுமூச்சாக எதிர்த்துப் போராடுவோர், பொது உரிமையியல் சட்டத்தை எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்றுகூடக் கேட்டார். அவர்களுடைய உள்நோக்கத்தையே அவர் சந்தேகப்பட்டார். ஆனால் மிகுந்த மரியாதையுடன் நான் அவரைத் திருப்பிக் கேட்கிறேன், ''அவர்கள் இந்த இந்துச் சட்டத்திற்கு எதற்காக எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்?'' என்று. இது ஒரே சீராக நாடு முழுமைக்குமாக உருவாக்கப்படவில்லையென்பது, ஒரே காரணமா யில்லாவிட்டாலும், முக்கியமானதொரு காரணம் அல்லவா. அது ஒரேயொரு சமூகத்திற்காகவென்றல்லவா உருவாக்கப்படுகிறது; அது எவ்வளவு பெரிய சமூகமாயிருந்தாலும் (பல சமூகங்களில்) ஒரேயொரு சமூகம் தானே? எனவே இந்த இந்துச் சட்டம் நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்காக ஆக்கப்படுகிறதேயன்றி, நாடு முழுமைக்குமாக ஆக்கப்படவில்லை. இந்தச் சட்டம் நாடு முழு வதையும், நாட்டு மக்கள் அனைவரையும் தழுவவில்லை என்பது

எதிர்ப்புக்கான முழுக் காரணமில்லையெனினும், காரணங்களில் ஒன்றல்லவா?

மேலும், உரிமையியல் சட்டத்தை அவரால் நாளையே தாக்கல் செய்ய முடியும் என்றும் கூறினார்; அவரது சட்ட நூல் வரையும் திறனைப் பற்றி எவரோ ஐயமுற்றதாக அவர் கருதி விட்டார்போலும். அனைத்தையும் தழுவி பொதுச் சட்டம் ஒன்றை நாளையே தாக்கல் செய்தால் அவை தன் கருதலுக்கு எடுத்துக் கொள்ளுமா என்று கூட அச்சுறுத்தினார். அதைப் பற்றிய முக்கிய மான கூறு அஃதன்று. நாளையே இந்த அவை முன்பாகப் பொதுக் குடிமைச் சட்டம் ஒன்றை அவர் தாக்கல் செய்கிறார் எனில், அவை அதன் எல்லாக் கூறுகளையும் எல்லா நோக்குகளிலும் கருதிப் பார்க்கத்தான் வேண்டியிருக்கும்; அக்கட்டத்தில் அதற்குத் திருத்தம் தாக்கல் செய்ய முனைவோரில் அவரே முதல் மனிதராயிருப்பார். இந்திய வாரிசுரிமைச் சட்டத்தை மேலும் மேம்படுத்த, எப்படிப் பட்ட சட்ட வல்லுநராலும் முடியவே முடியாதென்று நேற்றுக் கூறினார். சட்ட வரைவில் பெருங்கலைஞரான அவர், எவ்வளவு மேம்பாடு மிகுந்த சட்டத்தை அவர் கையில் கொடுத்தாலும் ஓயாமல் அதைத் திருத்திக் கொண்டேயிருக்கக் கூடிய வல்லவர் அவர். இந்த இந்துச் சட்டத் தொகுப்புக்கே கூட வேறு எந்த உறுப்பினரையும் விட அதிகமான எண்ணிக்கையில் திருத்தங்கள் கொடுத்திருப்பவர் அவர்தான். மற்றவர்கள் மாற்றம் வேண்டுகிறார்களாதலின், அவரால் மாற்ற முடியும்; அவர் மாற்றத்தான் வேண்டும்.

நாடாளுமன்றத்தின் உச்ச மேலாதிக்கம், இறையாண்மை ஆகியவற்றைப் பற்றியும் அவர் வெகுவாகப் பேசினார். இவை யெல்லாம் கிடையாதென்று யாரும் கூறவில்லையே; அப்படி யிருக்க நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை வலியுறுத்திக் கூறுதற் பொருட்டு, அதன் எசமானர்களையே பழித்துப் பேசும் அளவுக்குப் போக வேண்டுமா? அதுதான் அவர் உரையின் விரும்பத்தகாத பகுதியாகிவிட்டது. நமது அவை இறையாண்மை கொண்டது தான்; எனினும் நாம் மக்களின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டவர் களே; மக்களின் விருப்பிலிருந்துதான் நமக்கு அதிகாரங்களே கிடைத்துள்ளன.

**பாபு ராம்நாராயண் சிங் (பீகார்) :** சபாஷ், அப்படிக் கூறுங்கள்!

**டாக்டர் அம்பேத்கர்:** தாங்கள் இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருப்பதற்கு பதிலாக ஏன் கிராமத்திலேயே வாழ்ந்திருக்கக் கூடாது? இவ்விடத்தைவிட அங்கு மிகச் சிறந்த எசமானராக நீங்கள் திகழ முடியும்.

**திரு. அளகேசன் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களை எதிர்க் கேள்வியொன்று கேட்க நான் விரும்புகிறேன். இந்துச் சட்டத் தொகுப்பை எதிர்ப்பவர்களால் பொதுக் குடிமைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று அவர் கூறினார். எதிர்ப்பவர்கள் யார் என்று தமக்கு நன்கு தெரியுமாதலால், அது நடக்கவியலாத தெனக் கூறுவதாயும் உரைத்தார். இந்நாட்டின் நாடாளுமன்றத்திற்கும், பல்வேறு மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கும், விரைவில், அதுவும் ஓராண்டு காலத்திற்குள்ளாக நாடு முழுவதும் தேர்தல்கள் நடைபெறப் போவதை அனைவருமே அறிவோம். இந்த அவை இறையாண்மையும் உச்ச மேலதிகாரமும் கொண்டதென்பதற்காக, இருக்கின்ற ஒவ்வொரு பொருண்மையின் மீதும் சட்டமியற்றிக் கொண்டிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. சில சட்டங்கள் இயற்றுவதைத் தள்ளிப்போடலாம்: மிகக் குறுகிய காலத்திற்குள் தேர்ந்தெடுக்கப்படவுள்ள அவை சட்டமியற்றுவதற்காகச் சில பொருண்மைகளை விட்டுவைப்பது நன்மையே. தேர்ந்தெடுக்கப் படவுள்ள புதிய அவைக்கு, நிதானமாக ஆய்ந்து சட்டங்களை இயற்றப் போதிய அவகாசம் இருக்குமென்பதையும், மக்களின் மனநிலை, விருப்பு வெறுப்புகள், உணர்வுகளை நன்கு அறிந்திருக்க நம்மை விட அவர்கள் மிகுந்த வாய்ப்புப் பெற்றிருக்க முடியும் என்பதையும் மாண்புமிகு சட்ட அமைச்சரே ஏற்றுக் கொள்வார் என்பதில் ஐய மில்லை. எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நம்மை விடப் புதிய அவையே மேலான தகுதி பெற்றிருக்கும் என்பதையும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டாரா என்ன? அப்படி அவர் ஒப்புக் கொள்ள மறுத்தால், இந்சத் சட்டத்தை இயற்றும் பொறுப்பைப் புதிய அவையின்பால் ஒப்படைத்துவிடலாம் என்பதை அவர் மறுத்தால், புதிய அவை இந்தச் சட்டத்தை நிறைவேற்ற இசையாது என்று அவர் அஞ்சுவதுதானே காரணமாயிருக்க முடியும்? எனக்கு விருப்பமில்லா விட்டாலும் கூட, அவருடைய செயலுக்கு நான் உள்நோக்கம் கற்பிக்க முடியும் அன்றோ? (மதிப்பிற்குரிய உறுப்பினர் களில் ஒருவர் : அதுதான் கற்பித்து விட்டீர்களே) அப்படியில்லை யெனில், அவர் இந்தச் சட்டத்தை, முழுமையான நெறிப்படுத்தும்

சட்டத்தை, நாட்டின் புதிய நாடாளுமன்றத்தின் முன்வைக்கத் தயங்குவது ஏன்? இதற்கு அவர் திருப்தியான பதில் கூற வேண்டும்.

ஆனால், இந்த அரசுக்கெதிராகக் கூறப்படக் கூடிய தலையாய குறை இதுதான். நாம் (விடுதலைப்) புரட்சியில் வெற்றியடைந்த பின்னர் மற்றெந்தக் களங்களையும் விட, உளவியல் துறையில் தான் மிகுதியான தோல்வி கண்டுள்ளோம். நாம் மக்களுக்கு உற்சாகம் ஊட்டத் தவறி விட்டோம்: எந்த உணர்வுகளால் மட்டுமே மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த முடியுமோ அந்த நல்லுணர்வுகளைத் தூண்டத் தவறிவிட்டோம். இதன் காரணமாகவே அனைவரும் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். ஏன்? என்பதை நாம் இன்னும் சற்றுக் கவனமாக ஆழ்ந்து சிந்திப்பது பயன் தருமென எண்ணு கிறேன். என்னுடைய கருத்தென்னவெனில் (பழைய ஆட்சியின்) தொடர்ச்சி எனும் வகையிலேயே நமது கொள்கை பெரும்பாலும் அமைந்திருப்பதுதான் இதற்குக் காரணம் என்பேன். மக்களை உற்சாகப்படுத்தக் கூடிய, மகிழ்வூட்டக் கூடிய மாற்றங்கள் எதையும் செய்யாமல் பழைய ஆட்சி மரபுகளையே மேலும் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். இந்துச் சட்டத் தொகுப்பே இதற்கொரு சரியான எடுத்துக் காட்டு. இச்சட்டத்தைப் பற்றிய கருத்துருவே, முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலையில்தான் தோன்றியது; இந்துக்களோடு தொடர்புடைய அனைத்துமே தவறானவை, அதில் எதுவுமே சரியா யிருக்க முடியாது என்னும் மனப்பான்மையில் உருவாகியது அது. நாம் சீர்திருத்தம் விரும்பினோம்; மாற்றம் விரும்பினோம்; ஆனால் நிலைமை குறித்த சரியான புரிதல் இன்றியே இவற்றை விரும்பி னோம். அதே எண்ணத்தில்தான் இன்னும் தொடர்ந்து கொண் டிருக்கிறோம் என்பதே நான் கூற விரும்பும் கருத்து. நாம் இந்தச் சட்டத்தை, இந்து சமுதாயத்துக்காக என்று மட்டுமே, அது எவ்வளவு பெரிய சமுதாயமாயிருப்பினும், என நிறைவேற்ற முயல்கிறோமே யன்றி, எல்லா மக்களுக்குமாக என்றல்ல. இதில் நாம் புத்தாக்கம் எதையும் புகுத்தத் தவறியமையாலேயே இத்துணை குழப்பத் தில் இப்போது ஆழ்ந்துள்ளோம். மக்களை உணர்வுபூர்வமாக அணுகி ஆதரவு தேட வேண்டிய தேவையிருப்பதையுணராது அதில் கடுமையாகத் தவறியுள்ளோம். எல்லாப் பாத்திரங்களுக்குமே தலைசிறந்த நடிகர்களையழைத்து நாடகம் நடத்தியும், மொத்தத் தில் சுவைஞர்களைக் கவராத நாடகத்தைப் போன்றுதான் நமது செயல்பாடும் தோல்வி கண்டதெனக் கூற முனைவேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவர முயல்வதன் விளைவாக, நாட்டு மக்களிடையே என்னவிதமான உணர்வுகள் எழுந்துள்ளன? நாம் நாட்டு மக்கள் அனைவருக்குமே பொருந்தக் கூடிய வகையில் பொதுமைச் செயல்பாடு (பொதுச் சட்டமியற்றல்) ஒன்றில் ஈடுபட்டிருப்போமாயின், நாடு முழுமையிலும் உற்சாகமானதொரு வரவேற்பைக் கண்டிருப்போம்; அத்தகைய சட்டம் குறித்து நடைமுறை உண்மையுணர்ந்த நிலையில் மக்களின் ஆதரவு கிடைத்திருக்கும். நாமும் நடைமுறை நிலவரங்களின் அடிப்படையில் அதை ஆய்ந்து இப்போது விவாதித்துக் கொண்டிருப்போம். ஆனால் இப்போதோ அதைச் செய்யத் தவறி விட்டோம். அதை மட்டும் நாம் செய்திருப்போமெனில், நாம் சாதி, சமய வேறுபாடுகளை ஒழிப்பதில் உண்மையிலேயே அக்கறை கொண்டு போராடுகிறோம் என்று இந்த நாட்டு மக்களை நம்ப வைப்போமாயின், சமயச் சார்பற்ற குடியாட்சியை உருவாக்கும் குறிக்கோளை நோக்கிய உணர்வுடன் செயல்படுகிறோம் என மக்களை நம்ப வைத்திருப்போமாயின், அக்குறிக்கோளைத்தான் செயற்படுத்த முனைகிறோம் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டியிருக்க முடியும். ஆனால் இப்போதோ, காவல் துறையின் தடை மறிப்புகளுக்கு அப்பால் இந்த அவைக்கு வெளியேயிருந்து எதிர்ப்புக் குரல்களைத்தான் கேட்க முடிகிறதேயன்றிச் சிறு ஆதரவையும் திரட்ட நம்மால் முடியவில்லை; சிலபோது அவையில் பார்வையாளர் அரங்கில் வண்ண வண்ணச் சேலையணிந்த பார்வையாளர் கூட்டம் எப்போதோ காணப்படுதலன்றி வேறு பயன் ஏதுமில்லை. இதை விடப் பெரிதான ஆதரவு எதையும் நம்மால் பெற முடியவில்லை. நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் மட்டும், நாட்டு மக்கள் அனைவருக்குமாகப் பொதுச் சட்டம் கொண்டுவருவாரேயானால், நாடு முழுவதுமே அதில் ஆழ்ந்த அக்கறை காட்டி நடைமுறை உண்மையோடொட்டிய உணர்வுடன் அதனை எதிர் கொண்டிருக்கும். இப்போது சாதியெனும் அமைப்பை இறுகப் பற்றிக் கொண்டு உழலும் நாடென உலகம் நம்மைத் தாழ்வாக நோக்கும் நிலை மாறி, வெளியுலகமும் நம்மை நன்மதிப்புடன் வரவேற்குமென்றே கூறத் துணிவேன். அத்தகைய தவறான கருத்தினை மாற்றப் பொதுச் சட்டம் ஒன்றே தக்க கருவியாயிருக்க முடியும்.

இந்துச் சட்டம் பிற சமூகங்களையும் தழுவியதாயிருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டுகளும் பல உண்டு. ஷரியத் சட்டம்

இயற்றப்பட்ட 1937-ஆம் ஆண்டு வரை, மலபாரின் மாப்பிள்ளை சமூகத்தினர், கட்சைச் சேர்ந்த மோமின்கள், கோஜா சமூகத்தினர், ஆகாகான் நெறியைப் பின்பற்றுவோர் ஆகிய அனைவரும் இந்துச் சட்டத்தின் ஆளுகையில் இருந்ததாய்க் கேள்வியுறுகிறேன். பாகிஸ்தானின் மூலவர் கூட இந்துச் சட்டத்தின் ஆளுகையின்கீழ் இருந்தவர் தான் என்றும் கேள்வியுறுகிறேன். நிலைமை இவ்வாறிருக்க, இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் உட்பட அனைவருக்குமென பொதுச் சட்டம் கொண்டுவருதற்குத் தாங்கள் தயக்கம் காட்டுவது ஏன்?

நேற்று, நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், பண்டித தாகூர்தாஸ் பர்கவா அவர்களின் உரை குறித்து மிக மகிழ்ச்சியடைந்தார். அவர் இந்துச் சட்டத்தை ஒரேயடியாய் வானளாவப் புகழ்ந்தார்; இச்சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக சட்ட அமைச்சர் மீது பெரும் புகழ்மாலை சூட்டினார். இவ்வளவுக்குப் பின்னும் அவர் ஒருவகையில் தயக்கம் காட்டினார். அதாவது அவர் விதித்த முக்கியமான நிபந்தனை, இச்சட்டம் பஞ்சாபில் மட்டும் ஆளுகை செய்தல் கூடாது என்பதுதான். இச்சட்டத்திற்குத் திருத்தங்களை முன்மொழிந்தவர்களெல்லாம், இந்துக்கள் அல்லாதோரை இச்சட்டத்தின் ஆளுகைக்குள் கொண்டு வருகிறார்கள் என்று குற்றம் சாட்டியதுடன், இந்துக்களல்லாதோருக்கு இதில் சற்றும் விருப்பமில்லையென்று குறிப்பிட்டு, அவையிலுள்ளோரில் இந்துக்களல்லாத உறுப்பினர்கள் இதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் உள்ளனரா என்றும் கூடக் கேட்டார். தாம் விரும்பவில்லை என்று தமது பதிலையும் வலியுறுத்திக் கூறினார். ஆனால், இந்த அவையின் இந்துக்களல்லாத உறுப்பினர் பலரிடம் நான் கலந்து பேசியுள்ளேன்; அவர்கள் யாவரும் பொதுச் சட்டம் உருவாக்கப்படுவதை விரும்பி வரவேற்கிறார்கள்.

**டாக்டர் அம்பேத்கர் :** இந்துக்கள் அல்லாதோரா?

**திரு. அளகேசன் :** ஆம். இந்துக்கள் அல்லாதோர் தான்.

**திரு. பாரதி:** அந்த உறுப்பினர்களின் பெயர்களை அறிந்து கொள்ளலாமா?

**திரு. அளகேசன்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் அதைப் பின்னர் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நமது இப்போதைய செயல்பாட்டால் இந்துக்கள் அல்லாத அவை உறுப்பினர்களுக்கு அநீதி செய்கிறோம். இந்த விவாதங்களில் அவர்களால் ஆர்வம் ஏதும் காட்ட இயலாது உள்ளனர்.

**டாக்டர் அம்பேத்கர்:** திரு. நசிருத்தீன் அகமது ஆர்வம் காட்டினாரே?

**திரு. அளகேசன்:** அவர் தமது வாடிக்கையாளரின் கருத்தைத் தான் எதிரொலித்தார். இந்துக்களல்லாத பிற உறுப்பினர்கள் பின்னணியில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டுள்ளனர். அவர்களால் இவ் விவாதங்களில் உயிரூட்டமான ஈடுபாடு எதையும் காட்ட இயலவில்லை. இச்சட்டத்தை ஆதரித்தால் பழைமைப் பற்று கொண்ட இந்துக்களின் சமய உணர்வுகளைப் புண்படுத்தி விடுவோமோ என் அஞ்சுகின்றனர்; எதிர்த்தாலோ பயங்கரமான சக்திகளின் பகையை எதிர்கொள்ள நேருமோ என மேலும் அஞ்சுகின்றனர். எனவே அவர் அவையில் செயலறு நிலையை மேற்கொண்டுள்ளனர்.

**பேரா. ரங்கா (சென்னை):** அவர்கள் மசோதாவை ஆதரிக்கிறார்கள்.

**திரு. அளகேசன்:** இது ஐயத்திற்குரியது. எனவே இந்தச் செயல்பாட்டை நாம் மேலும் மிகுந்த பிரதிநிதித்துவத்துடன் மேற்கொள்ள வேண்டும்; ஏனெனில், அதை வேண்டாமென மறுப்பதற்குக் காரணம் ஏதுமில்லை. ஒரு தாரமணம் இந்துக்களுக்கு நன்மையெனில், அதேபோன்று முஸ்லீம்களுக்கும் நன்மையாகத்தான் இருக்க வேண்டும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** மிகுந்த நன்மையாயிருக்க வேண்டும்.

**திரு. அளகேசன்:** இற்றையக் கால இந்திய முஸ்லீம்கள் சமயக் காரணங்களைக் காட்டி அதை எதிர்க்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்; ஏனெனில், அரபுப் பேரரசு விரிவடைந்து கொண்டிருந்த

கட்டத்தில்தான், அதன் பொருட்டாக, முஸ்லீம்கள் நான்கு மனைவியர் வரை மணந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இனம் காக்கவும் விரிவடையவும் வேண்டித்தான் நான்கு மனைவியர் வரை மணந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார்கள் போலும். ஆனால் இன்றைக்கு இந்த நாட்டில் நாம் முற்றிலும் மாறான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளோம். நமது பிரதம அமைச்சர் குழந்தைகளோடு வேண்டி விரும்பி விளையாடித் தம் கவலைகளை மறக்க முனைகிறார் எனினும், அவர்களின் புதிய வரவுகளை வரவேற்க அவர் விருப்புடன் இல்லையென்பதும் உண்மையே. இதை அவர் தெளிவாகவே கூறியுள்ளார் என்பது மட்டுமல்ல, கூடுதலான எண்ணிக்கை குழந்தைப் பிறப்பு என்பது அவரை மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவரையுமே அச்சுறுத்திக் கொண்டுள்ளது. இது அப்பட்டமானதோர் உண்மையாகும். நமது முஸ்லீம் நண்பர்களின் தற்போதைய சமயச் சட்டங்கள், வாழ்க்கை நடைமுறைகள் எவ்வாறிருப்பினும், இவ்வுண்மையை உணர்ந்து சீரான வழியைப் பின்பற்ற முன்வருவர் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்நாட்டுக்காகப் பொதுக் குடிமைச் சட்டம் ஒன்றை உருவாக்குவதற்குக் கடக்கவியலாத பெருந்தடைகள் இருப்பதாய்க் கருதுவதற்கில்லை.

சீனாவின் எடுத்துக்காட்டைக் கூறலாம் என்று கருதுகிறேன். சீனாவும் நமது நாட்டைப் போன்றே பழம்பெரும் நாடு. அங்கும் பண்டைக் காலத்திலிருந்து நிலவும் சட்டத்தொகுப்புகள் எல்லாம் ஒருபுறமிருக்க, டாக்டர் சன்யாட்சென் அவர்கள் உருவாக்கி மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் நாட்டுப் பற்று, (தேசியம்), மக்களாட்சி, மக்கள் அளாவிய பொருளாதாரம் எனும் மூன்றுமே அக்கோட்பாடுகள் என்பதை அவையோர் அறிவர். சீனாவின் சூழ் நிலையைப் போன்ற நமது சூழ்நிலையும் அமைந்திருப்பதால், நாமும் சீனாவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, நமது தேசத் தந்தை நாட்டு மக்களின் முன்பு வைத்த கோட்பாடுகளுக்குச் செயல் வடிவம் தந்து அவற்றை மெய்மையாக முயலலாம். இந்த நாட்டில் வாழும் மக்களனைவரின் பெரும் சமயங்களையெல்லாம் ஒருங் கிணைத்து ஒரு குடைக்கீழ் கொண்டுவரத்தக்க பொது உரிமையியல் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதைவிட அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கக்கூடிய செயல் வேறேதும் இருக்க முடியாது.

அருமை நண்பர் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள், இச்சட்டம் தம் (மாநிலத்தின்) மீது ஆளுகை செலுத்தாது என்று உறுதியாய்க் கருதியதால்தான், அச்சட்டத்திலுள்ள பெரும்பாலான பகுதிகளைத் தமது நாவண்மையைத் திரட்டிப் பாராட்டிப் பேசினார். இச்சட்டத்தின் முக்கியமான அடிப்படைக் கூறுகளையெல்லாம் அவர் வரவேற்றதற்கு, அவை இந்நாட்டுக்கான பொது உரிமையியல் சட்டத்தை உருவாக்க அடிப்படையாய்த் திகழக்கூடியவை என்பதுதான் காரணம், இச்சட்டத்தின் மூலம் அக்குறிக்கோளை நோக்கிச் சரியான அடியெடுத்து வைக்கப்பட்டிருப்பதாய் அவர் கருதுகிறார். ஆனால் அவரது கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். பொது உரிமையியல் சட்டம் இயற்றும் பணியில் குறுக்கீடாக வந்து அதைத் தாமதப்படுத்துவதுதான் இச்சட்டத்தின் விளைவு என்றே நான் அஞ்சுகிறேன். இப்போது இந்து சமுதாயத்திற்காக நம்மாலானதைச் செய்து விட்டோமல்லவா, அதனால் இனிமேல் பொதுக்குடிமைச் சட்டம் பற்றி எவ்வித அக்கறையும் எடுத்துக் கொள்ள மாட்டோம். ஏனென்றால் பொதுவாக எல்லோருமே நினைப்பது என்னவென்றால், இந்துக்கள் தொடர்பான விவகாரங்கள் அனைத்திலுமே நாம் தலையிடத் தயாராக உள்ளோமேயன்றி பிறர் சமய விவகாரங்கள் என்றால் பெரிதும் தயக்கம் காட்டுகிறோம் என்பதே: ஆனால இந்தக் கண்ணோட்டத்திற்கு ஆதாரமில்லை எனக் கூறுதற்கில்லை.

**பேரா. ரங்கா :** ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம்.

**திரு. அளகேசன்:** பேராசிரியரின் நன்னம்பிக்கை மெய்யாக வேண்டும் என்பதுதான் எனது விருப்பமும்; அதாவது, நீங்களெல்லாம் மற்றவர்களையும் அணுகி அவர்களையும் சீர்திருத்த முயல வேண்டுமென்றுதான் நான் விழைகிறேன். ஆனால் மக்களிடையே பரவலாக நிலவி வருவது மட்டுமின்றி நாளுக்கு நாள் வலிமை கூடி வருவதுமான கருத்தென்னவெனில், நாம் இந்து சமய விவகாரங்களில் தலையிட முந்துகிறோமேயன்றிப் பிற சமயங்கள் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டோம் என்பதுதான். எனவே எனது கண்ணோட்டத்தில் இச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்குக் குறுக்கே நிற்பது இந்த உளவியல் தடையே என்பேன். நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தமது கூர்த்த அறிவையெல்லாம் ஒன்று திரட்டி இந்தத் தப்பெண்ணத்தைப் போக்கவும், இந்த அவையிலுள்ளோரை நம்பச் செய்வது மட்டுமின்றி நாட்டு மக்களையும் அவரது திட்டத்தில், போராட்டத்தில் நன்னம்பிக்கை கொள்ளச் செய்யவும் முயல்வாரென நம்புகிறேன்.

[1]**திரு. விஸ்வநாத தாஸ்** (ஒரிஸா) : ஐயா, இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா மீதான விவாதங்களில் நானும் எனது கருத்துக் களை எடுத்துரைக்க வாய்ப்பு தந்துள்ளமைக்கு எனது மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மசோதா மீதான விவா தங்களில் நான் பின்னணிப் பார்வையாளராகவே இருந்துவிடலாம் என்றுதான் முயன்று கொண்டிருந்தேன். ஆனால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேச என்னைத் தூண்டிவிட்டன.

அவருடைய உரையின் போது - ஆற்றொழுக்கும் பகுப்பாய்வுத் தன்மையும் வாய்ந்த உரையென்று நான் கூறவும் வேண்டுமோ - தேவையில்லாத, யாரும் வேண்டாத தொடர்கள் சிலவற்றை அவர் பயன்படுத்தினார். பொதுக் கருத்துக் கணக்கெடுப்பு தேவையெனும் கோரிக்கையை அவர் ஏற்க மறுத்து விட்டார். நானும் கூடப் பொதுக் கருத்துக் கணக்கெடுப்பைப் பெரிதும் ஆதரிப்பவனல்ல; அதுவும் இவ்வளவு நிகழ்வுகள் நடந்த பின்னர் அது தேவையில்லைதான். ஆனால் பொதுக் கருத்துக் கணக்கெடுப்பே பொருளற்றது என்று அவர் பேசியதுதான் பொருளற்ற உரையின் உச்சம் என்றே நான் கருதுகிறேன். திருமணம், மணமுறிவு, தத்தெடுத்தல், கூட்டுக் குடும்பம், பெண்கள் சொத்து, வாரிசுரிமை, வாழ்க்கைப்பயணம் முதலான இன்னும் பல மிக முக்கியமான வாழ்க்கைக் கூறுகள் அனைத்தையும் குறித்துச் சட்டமியற்றிக் கொண்டிருக்கிறோம். நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களே கூட, இந்துச் சட்டம் என்பது சமுதாயத்தின் சட்டக் கட்டுக்கோப்பை மட்டுமே சார்ந்த தல்ல என்றும், நமது சமய நம்பிக்கைகளையும் பெரிதும் சார்ந்த தாகுமென்றும் உணர்ந்து ஒப்புக்கொண்டிருக்கும்போது, மக்களிடம் நேரடியாய்க் கருத்தறியாமல், மக்களின் வாழ்க்கை, வளங்கள் நடைமுறைகளைப் பாதிக்கும் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த பொருண்மைகளில் சட்டமியற்றுதல் நியாயந்தானா என்று அவரே எண்ணிப்பார்க்க வேண்டாமா? சட்டமியற்றுதலுக்காகப் பொதுக் கருத்துக் கணக்கெடுப்பு எந்த நாட்டிலேனும் நடப்பதாய்த் தெரிய வில்லை என்று அவரது உரையின் போது கூறினார். நாட்டுடைமை யாக்கல் போன்ற சாதாரண முடிவுகளைக் கூட எடுப்பதற்குப் பெரிய அரசியல் கட்சிகளும் அஞ்சி, பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவதை நாம் மக்களாட்சி நாடுகளில் காண்கிறோம்.

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951, பிப்ரவரி 7, பக். 2504 - 17.

அங்கெல்லாம் சம்பந்தப்பட்ட முடிவுகளுக்கு ஆதரவு வேண்டி, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்துவதைக் காண்கிறோம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் எத்தகைய சிக்கலுக்கு முடிவு வேண்டி நாடாளுமன்றங்கள் கலைக்கப்பட்டு மறு தேர்தல்கள் வாயிலாய் மக்கள் ஆதரவு கோரப்பட்டதோ அவற்றை விட நாம் சட்டமியற்றிக் கொண்டிருக்கும் பொருண்மைகள் குறைவான முக்கியத்துவம் வாய்ந்தனவா என்று நமது சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நாம் சட்டமியற்றிக் கொண்டிருக்கும் பொருண்மைகள் யாவும் மக்கள் ஆதரவு கோரத் தக்கவையல்ல என்று கூறுதல் அவர் தம் உயர்தகுதிக்கு உகந்த பதிலா என்றும் கேட்க விரும்புகிறேன். ஏனைய நண்பர்கள் (உறுப்பினர்கள்) இங்கு கோரியதுபோன்று, பொதுக் கருத்துக் கணக்கெடுப்பையோ, நாடாளுமன்றக் கலைப்பையோ அதுபோன்ற செயற்பாடுகளையோ, அவை பொருத்தமானவை, தர்க்கரீதியானவை, அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டவை என்பதை ஏற்றுக் கொண்டாலும் கூட, அப்படியொரு கோரிக்கையை நான் நினைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. நாமோ மறைமுகமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம்தான்; முறையாக நேர்முகமாய்த் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றம் பொறுப்பேற்றுக் கொள்ளும் வரை, அன்றாடப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டிச் செயல்படுதலே நமது வரம்பு. இந்நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் தகுதியை நான் கேள்விக்குறியாக்கவில்லையெனினும் இது ஒரு இடைக்கால நாடாளுமன்றமே என்பதை மறுக்கவியலுமா? ஆனால் இத்தகையதொரு முக்கியத்துவம் வாய்ந்த சட்டத்தை இயற்றுவதில் மக்களது கருத்தையும் ஆதரவையும் தெரிவிக்கும் வாய்ப்பை மறுத்தல் அரசியலமைப்புச் சட்ட நோக்கில் விந்தையான போக்கு என்றே எனக்குத் தோன்றுகிறது. மக்களிடம் கருத்துக் கேட்டால் இச்சட்டத்திற்கு ஆதரவு அளிக்க மறுத்துவிடுவார்கள் என உறுதியாய் அறிவதால்தான் அவர் இவ்வாறு மறுக்கிறாரா? அப்படி இல்லை யென்றால், நெடுங்காலமாகப் பல முனைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகி வந்து கொண்டிருக்கும் இச்சட்டம், இந்த அவையிலேயே நிறைவேற்றப் பட்டுவிட வேண்டுமென்பதில் அவர் பிடிவாதமாய் இருப்பது ஏன்? எதற்காக இந்த அவையே இச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்? இந்த அவை அப்படியென்ன பாவம் செய்தது? இது மறைமுகமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை என்பதுதான் காரணமா? அவர் எந்த அளவுக்கு மக்கள் பிரதிநிதியோ அதே அளவுக்கு நானும் மக்கள் பிரதிநிதியே என்பதைக் கூற விரும்புகிறேன். நான் ஒரிசா மாநிலச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்

பட்டவனென்றால், அவர் பம்பாய் மாநிலச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்; அவ்வளவே. அவருடைய வாக்காளர்களைக் கலந்து ஆலோசித்தாரா, இச்சட்டம் குறித்து அவரது வாக்காளர்கள் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளனரா என்று சட்ட அமைச்சர் அவர்களை வினவ எனக்கு உரிமையுண்டு.

**டாக்டர் அம்பேத்கர்:** மக்கள் எனக்கு அதிகாரம் தரத் தேவையில்லை.

**திரு. விஸ்வநாத தாஸ்:** மக்கள் தங்களுக்கு அதிகாரம் தரத் தேவையில்லை என்கிறீர்கள். இதுதான் உங்கள் தொகுதி மக்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பு போலும். இத்தகைய அரசியலமைப்புச் சட்டக் கண்ணோட்டத்தைத்தான் தாங்கள் நமது நாட்டு மக்களின் கருத்தில் பதிக்க விரும்புகிறீர்கள் போலும். நமதருமை நண்பரான சட்ட அமைச்சர் அவர்களுக்கு, அவரது பெருத்த பங்களிப்புடன் இந்த அவை நிறைவேற்றியுள்ள, அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளதை அவருக்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''.... இந்தியாவை இறையாண்மை வாய்ந்த மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவர்க்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதியைப் பெற்றுத் தரவும் .....'' என்ற பகுதியை நோக்க வேண்டுகிறேன். ''எந்த அறியாமை நிறைந்த மக்கள் என்னை இங்கே அனுப்பியுள்ளார்களோ, எந்த மக்கள் அவர்களுடைய மாநிலத்தின் சார்பாய்ச் செயல்பட எனக்கு வாய்ப்பளித்தார்களோ, எந்த மக்கள் அமைச்சராய்ப் பொறுப்பேற்று அதிகாரம் செலுத்த எனக்கு வாய்ப்பளித்தார்களோ, அந்த மக்களின் கருத்தையறிய அக்கறை காட்ட மாட்டேன்'' என்பதுதான் தங்களுடைய மக்களாட்சியுணர்வா என்றும் அவரைக் கேட்க விரும்புகிறேன். ஐயா, இவையெல்லாம் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ளவை தாம். நாம் நமது மக்களுக்கு சமூக நீதி, பொருளாதார நீதி, இவற்றுக்கெல்லாம் மேலாக அரசியல் நீதி ஆகியவற்றை அளிப்பதாய் உறுதி கூறியுள்ளோம். அவரை இங்கே தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள மக்களின் கருத்தறிந்து செயல்பட மறுப்பதன் மூலம், அவர் இந்நாட்டு மக்களுக்கு அரசியல் நீதியை வழங்க மறுத்தவர் ஆகாரா என்று நமது மாண்புமிகு நண்பரைக் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** அடுத்த முறை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்.

**திரு. விஸ்வநாத தாஸ் :** அதனால் பரவாயில்லை. தாங்கள் தங்கள் ஆதரவிலேயே தொடர்ந்து செயல்படலாம். மக்களுடைய வாக்குகள் தங்களுக்குத் தேவையில்லை என்பதால்தான், அதை வெகு எளிதில் புறக்கணிக்கத் தயங்கவில்லை தாங்கள்.

**டாக்டர் அம்பேத்கர்:** எனது தேர்தல் வெற்றியை விட இச்சட்டத் தொகுப்பு மீதுதான் எனக்கு அக்கறை மிகுதி.

**திரு. விஸ்வநாத தாஸ் :** நானும் எனது தேர்தல் வெற்றியைப் பற்றிக் கருதவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனது பொறுப்பு குறித்துத்தான் எண்ணிச் செயல்படுகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** பிற்பகல் ஒருமணியாகிறது. தாங்கள் உரையை முடித்து விட்டீர்களா?

**திரு. விஸ்வநாத தாஸ்:** பிற்பகலிலும் எனது உரையைத் தொடர்வேன்.

*(பிற்பகல் இரண்டரை மணி வரை, பகலுணவுக்காக அவை ஒத்திவைக்கப்படுகிறது).*

---

*(பகலுணவுக்குப் பிறகு பிற்பகல் இரண்டரை மணிக்கு அவை மீண்டும் கூடுகிறது)*

*(மாண்புமிகு துணை சபாநாயகர் தலைமையேற்றுள்ளார்)*

**திரு. விஸ்வநாத தாஸ் :** ஐயா, இன்று காலையில் எனது உரையின் போது, மக்களாட்சி நடக்கும் நாடுகளில் முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலைகளில், எவ்வாறு சட்டமியற்றல் ஆளும் கட்சியால்......

**திரு. ராம்ராஜ் ஜெஜ்வாரே** (பீகார்) : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. ஆளும் கட்சியினர் எவரும் அவையில் இல்லை.

**துணை சபாநாயகர் :** அரசின் சார்பில் அவையில் யாருமில்லை என்பது வருந்தற்குரியது. சட்ட அமைச்சர் அவர்கள் தற்போது உள்ளே வந்துள்ளார்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** ... இயற்றப்படவிருக்கும் சட்டத்தை ஆளும் கட்சி அறிக்கையாய் மக்கள் முன் வைத்துத் தேர்தல் நடத்தி, மக்களின் ஆதரவு கிடைக்குமானால் தனது கோட்பாடுகளைச் சட்டமாக்கத் துணிகிறது. ஆனால் மறைமுகமாய்த் தேர்ந்தெடுக்கப் பட்ட நமது அவையைப் போன்ற நாடாளுமன்றங்களில் அதெல்லாம் முடியாது என்பதை அறிவேன். இருப்பினும் நமக்கென்று வாக்காளர்கள் உண்டு. அவர்கள் விவரமறிந்த வாக்காளர்களே. எந்த வாக்காளர்கள் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்துப் பெருமைப் படுத்தியுள்ளார்களோ அவர்களை, ஒன்றும் அறியாதவர்கள் என்று மாண்புமிகு சட்ட அமைச்சரோ, இந்த அவையிலும் அவைக்கு வெளியேயுமுள்ள அவரது நண்பர்களோ கூறிவிட முடியாது. அவர்கள் அனைவரும் மாநிலச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களே. சட்ட அமைச்சரும் இந்த அரசும், இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் குறித்து மாநிலச் சட்டமன்றங்களின் கருத்தை அறியத் தேவையான நடவடிக்கைகளையெடுத்திருக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்; அதன் வழியாய் இச்சட்டம் குறித்து நாடே தனது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு இருந்திருக்கும். அதே சமயத்தில் அந்நடவடிக்கையால் இச்சட்டத்தை நிறைவேற்றுதல் எளிதாகவும் வசதியாகவும் ஆக்கப்பட்டு இருக்கும்: நம்மைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்கள் கருத்து தெரிவித்த பின்னர் அதற்கெதிராக மாண்புமிகு உறுப்பினர்கள் வாக்களிக்க இயலாது என்பதால் எளிது என்றேன்; எதிர்க்க வேண்டுமெனில் அவர்கள் தம் உறுப்பினர் பதவிகளைத்தான் துறக்கவேண்டியிருக்கும்; வசதி என்று எதனால் கூறுகிறேன் என்றால் "இச்சட்டத்தை எதிர்க்கிறேன், ஆனால் தொடர்ந்து அவை உறுப்பினராய்ப் பதவியில் நீடிப்பேன்'' எனக் கூறும் துணிவு எவருக்கும் வராது. எவரும் இரண்டு வகையிலும் தம் விருப்பைச் செலுத்தவியலாது. தம்மைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களின் கட்டளையைச் செயல்படுத்த மறுத்து விட்டு எவரும் தொடர்ந்து அவை உறுப்பினராய் இருக்க முடியாது. எனவே முக்கியமான இந் நடவடிக்கையை மேற்கொள்ள அரசும், சட்ட அமைச்சரும் தவறிவிட்டனர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்; அதற்கான வாய்ப்பு முன்பு இருந்தது போன்றே இன்னும் இருக்கிறது. சட்ட அமைச்சர் அவர்களுடன் இச்சட்டம் அவசரமானது, இந்த அவையாலேயே நிறைவேற்றப்பட வேண்டியது என்பதில்

மட்டும் எனக்குக் கருத்து வேறுபாடு இருப்பினும், அவரது பிற கருத்துக்களுடன் நான் இசைந்து போகிறேன்.

நீங்கள் பொதுக் கருத்துக் கணக்கெடுப்பு நடத்துதற்கான முயற்சியேதும் செய்ய வேண்டாம்; ஆனால் சட்டமன்றங்களின் கருத்தறிந்து முடிவு எடுக்கப் போதிய காலம் உள்ளது. எப்படியிருப் பினும் இந்த நிதிநிலை அமர்வில் நாம் இம்மசோதாவை நிறை வேற்றப் போவதில்லை. மேலும், இம் மசோதா நிறைவேற்றப் பட வேண்டிய தேவையுண்டு என்று அரசுக்கே அக்கறை ஏதுமில்லை யென்று ஐயமுறுகிறேன்.

***மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர்:*** இல்லை, இல்லை (அக்கறை உண்டு)

***திரு. விஸ்வநாத தாஸ்:*** நமதருமை நண்பர்கள் தம் ஆர்வ மேலீட்டால் இல்லை இல்லை என்று கூறலாம். ஆனால் என் மனதில் சரியென்று தோன்றும் கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் எடுத்துரைக்க எனக்கு உரிமையுண்டு. அவர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருப்பின், அதனை மூன்று நாள் விவாதத்திற்காக இந்த அவையின் முன்னர் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். இதன் பின்னணியிலுள்ள பொருள்தான் என்ன? நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பையும், அவையில் பரவலான கருத்து வேறுபாடுகளையும் தோற்றுவித்த இச்சட்டம் எழுப்பியுள்ள சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு கண்டு, மூன்று நாள் விவாதத்தில் இம்மசோதாவை நிறைவேற்றிச் சட்டப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய முடியுமென்று அருமை நண்பர் பி. தாஸ் அவர்கள் கூறிய வாறு, சட்ட அமைச்சரும் இந்த அரசும் எவ்வாறு எதிர்பார்க்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையென்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். முட்டாளின் சொர்க்கத்தில் வாழ மறுப் பவன் நான். இத்தகைய தன்மை வாய்ந்த சட்டத்தை இயற்ற (ஆளும்) கட்சி (தேர்தல் மூலம்) அதிகாரம் பெற்றிருந்தால் அன்றி, நாட்கணக்கில் விவாதம் நடத்தி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தத்தம் கருத்தை எடுத்துரைக்கப் போதிய வாய்ப்பு தந்து அவரது கருத்துக்கள் சட்டத்தில் இடம்பெற முயற்சி செய்யவும் வாய்ப் பளிக்கப்பட வேண்டும். எனவே இம் மசோதாவுக்கு மூன்று நாள் விவாதம் போதும் என்று முடிவு செய்த சட்ட அமைச்சரின் விவேகத் தில் ஐயுற வேண்டியுள்ளது; அதுவும் எப்படிப்பட்ட காலத்தில்

கொண்டுவந்துள்ளார்? நிதி நிலை அமர்வில்தானா இது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இருப்புப் பாதைத் துறை வரவு செலவுத் திட்டம், பொது வரவு செலவுத் திட்டம் மட்டுமின்றி மேலும் நாற்பத் தைம்பது மசோதாக்கள் கருதலுக்குக் காத்திருக்கும் அமர்வு இது. அரசுக்குக் கடுமையான பணப் பஞ்சம் என்றும் கூறப்படுகிறது. புதிய வரிவிதிப்பு வரப்போவதாய் செய்தத்தாள்கள் அறிவிக்கின்றன. அது எந்த அளவுக்கு மெய்யாகுமென்று நான் அறியேன். அதில் துளியளவேனும் உண்மையிருக்குமெனில், கடந்த ஒன்றரையாண்டு காலத்துக்கு மேலாகக் கடுமையான விவாதத்தில் இருக்கும் சொத்துத் தலைவரி மசோதாவை இன்னும் நிறைவேற்ற முயற்சி ஏதும் செய்யாமல் இருப்பது ஏனென்று ஆளுங்கட்சி உறுப்பினர் களை வினவ எனக்கு உரிமையுண்டு. நமது செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து முதன்மை தர வேண்டுமென்பதை வலி யுறுத்துகிறேன். இதுவரை நீங்கள் எந்தச் சிக்கலுக்குத் தீர்வு கண்டிருக் கிறீர்கள்? எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு காணவில்லை என்ப துடன், புதிய சிக்கல்களை உருவாக்குவதில் தான் வெற்றிகண்டுள் ளீர்கள். எனவே இம்மசோதா நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக்கப் பட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு, குறிப்பாகச் சட்ட அமைச்சர் அமைச்சர் அவர்களுக்கு அக்கறையோ விழிப்பான செயல்பாடோ இல்லையென்றே நம்புகிறேன். உண்மையிலேயே அக்கறை இருந் திருக்குமெனில், அவை முன்னவர் அவர்கள் உறுதியளித்தவாறு இதற்கெனச் சிறப்பு அமர்வு ஒன்றுக்கோ, சிறப்பு அமர்வுத் தொடர் ஒன்றுக்கோ ஏற்பாடு செய்து, இம்மசோதா மீது விரிவான விவாதம் நடத்தி அதனைச் சட்டமாக்க முனைந்திருப்பார்கள்.

ஐயா, இந்த அவையின் முன்னவர்தான் இம்மசோதாவின் வெற்றியோ தோல்வியோ அது தம்முடையதுமாகும் என்று கூறினாரேயன்றி, அதில் சட்ட அமைச்சருக்கு அக்கறை கிடையாது என்று கூறுவதற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இருந் திருந்தால் அவர் இந்த அளவுக்கு அவையை அவமதித்து நடந்து கொண்டிருக்கமாட்டார்; தனிப்பட்ட உறுப்பினர்பாலும் இவ்வாறு அவமதிப்பு காட்டியிருக்க மாட்டார்.

**திரு. சியாம் நந்தன் சகாயா:** அதை மறந்து விடுங்கள்; இப் போதைய நிலைமையே வேறு.

**திரு. விஸ்வநாத தாஸ்:** நான் உறுப்பினர்களிடம் பேச வில்லை, அவைத் தலைவரான தங்களை நோக்கித்தான் பேசிக்

கொண்டிருக்கிறேன். பிற உறுப்பினர்கள் எனது உதவிக்கு வர எண்ணு வதை விரும்பிப் போற்றக் கடமைப்பட்டவனாயினும், அவர்கள் எனது உரையில் குறுக்கிடாதிருப்பதையே பெரிதும் விரும்புகிறேன்.

எனவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த அவையின் உறுப்பினர்கள்பால் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்து அவரது இரண்டாவது கூற்றுக்கு, அதாவது இந்தியாவுக்கான பொது உரிமையியல் சட்டம் கோருவோர் பகுத் தறிவுக்குப் புறமாகப் பேசுவதாய்க் கூறியதற்கு, வருகிறேன். ஏன் கூறினார்? எனக்குத் தகாத இத்தகைய அவமதிப்பான கூற்றைப் பெறுதற்குக் காரணங்கள் யாவையென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதைக் கூறியதோடு மட்டும் அவர் நிற்கவில்லை, அவரால் இரண்டு நாட்களில் குடிமைச் சட்டத்தை அவை முன் அளிக்க இயலும் என்றும் கூறினார்.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆம்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** அப்படியானால் அவர் அதையே செய்யட்டும். அதற்காக நாங்களெல்லாம் மாதக்கணக்கில் காத்து கொண்டு இருக்கிறோமே. இரண்டே நாட்களில் பொதுக்குடிமைச் சட்டத்தைப் பெற நம்மால் இயலுமென்றால், அதையேதான் நாங்கள் வேண்டுகிறோம். அவர் அருள்கூர்ந்து அதையே கொண்டு வர வேண்டுகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** தாஸ் அவர்களே, தாங்கள் பேசியது போதும். ஏற்கெனவே மிகக் களைப்படைந்திருப்பீர்கள்; தங்கள் ஆற்றலை (மீண்டும் செலவழியாது) சேமியுங்கள். தாங்கள் நலத் துடன் இல்லையென்பதைக் காண்கிறேன்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** அருமை நண்பரின் அறிவுரையைக் கருத்தில் கொள்வேன்.

சாதி அமைப்பினால் இந்தியாவுக்கு எவ்வித நன்மையும் கிடையாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது எவ்வளவு விரைவில் மறைகிறதோ அந்த அளவுக்கு நன்மையே. எனது நீர்ப் பாண்டத்தை ஒருவர் தொட்டுவிட்டதாலோ, எனது உணவை ஒருவர்

சமைத்ததனாலோ, அவர் பிற சாதியைச் சார்ந்தவர் என்பதாலேயே எனது சாதி கெட்டுவிட்டது எனப்படும் தீண்டாமை நிலவும் சமுதாயத்தில் வாழ்வதை என்னால் எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை. இது தீங்கான அமைப்பே. எனவே அம்முறையைக் கைவிடுவோம். அதுவும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவுக்கு நன்று. அதே நேரத்தில், எமது முன்னோர்கள், எமது மூதாதையர்கள், தீண்டாமைச் சாதி அமைப்பைவிட உயர்வானதும், மேதகைமை வாய்ந்ததுமானதோர் சமூக அமைப்பை நிறுவியிருந்தார்கள் என்பதை என்னால் உணராமலிருக்க முடியவில்லை.

**चातुवर्ण्यं मया सृष्ट गुणकर्म स्वभावश :**

''பண்புகள், செயல்கள், இயல்புகள் இவற்றையொட்டி, நான் நான்கு வருணங்களைத் (சாதி வகைகளை) தோற்றுவித்திருக்கிறேன்'' என்பது இதன் பொருள்.

கீதையில் வரையறுக்கப்பட்ட இச்சமூக அமைப்பு முறை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படியாக அமைந்திருக்கிறதல்லவா? இதற்கு மாறாக, நமதருமை நண்பர் செய்து கொண்டிருப்பது என்ன? என்னை மேம்படுத்துவதற்கு மாறாகக் கீழே தாழ்த்துவதாக அல்லவா அவரது செயல் அமைகிறது. அவரோடு மேம்பாடடையவே நான் விரும்புகிறேன், ஆனால்....

**திரு. ஜே.ஆர். கபூர்:** சொர்க்கத்துக்கே செல்லுங்கள்; நரகத்துக்கு வேண்டாம்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** சொர்க்கத்திற்குச் செல்கிறேனோ, திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கிறேனா, அவருடன் தாழ்வடைய மட்டும் இசைய மாட்டேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதெப்படி என்று நீங்கள் அறியவில்லை.

**திரு. விஸ்வநாத தாஸ்:** அந்தப் பெரும் பிழையைச் செய்ததற்காக நான் மிக மகிழ்ச்சியே அடைகிறேன்.

பொதுச் சட்டம் என்பது நமக்குத் தெரியாததொன்று அல்ல. போர்த்துக்கீசிய இந்தியாவில் இன்று நடைமுறையில் இருப்பது பொதுச் சட்டம் தான். போர்த்துக்கீசிய இந்தியாவிலும் இந்துக்கள்

பலர் வாழ்கின்றனர். போர்த்துக்கீசிய இந்தியாவை விட மிகவும் முன்னேற்றமடைந்துள்ள இந்தியாவில் நாம் ஏன் கொண்டுவரக் கூடாது? அதுவும் நமதருமை நண்பர் கூறியது போன்று அது அவ்வளவு எளிதாயின், இந்த அவையில் அதை அவர் கொண்டு வரட்டுமே; கொண்டுவந்தால் இப்போது அவரை எதிர்த்து அணி திரண்டுள்ள எங்களில் சிலர், அவர் பக்கம் ஆதரவாளராய் மாறக் காண்பார். ஆனால் இந்த இந்துச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், நாங்கள் அவரோடு ஒத்துப்போக இயலாது; ஒத்துப் போகவும் நாங்கள் தயாரில்லை. உங்களால் முஸ்லீம் சமுதாயத்தைச் சிறிதும் தொட முடியாது; தொட்டால் அவர்களது சம்யத்துக்கு ஆபத்து வந்து விட்டதென்று கூக்குரல் எழும். கிறித்தவ சமூகத்தின் மீது கைவைத் தாலும் இதே கூக்குரல்தான் எழும். ஆனால் நீங்கள் இந்து சமுதா யத்தை எப்படி வேண்டுமானாலும் உதைக்கலாம்; கடுமையான சீர்மையுடன் உங்கள் புதிய பரிசோதனைகளையெல்லாம் அதன் மீது பரப்பலாம் என்றால் அதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட் டோம். பகுத்தறிவு வாதத்தின் அடிப்படையில் நமதருமை நண்பர் அமைக்க விரும்பும் சமூக அமைப்பை அறுபது வயது முதியோ னாகிய என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நமது நாட்டில் ஆன்மிக வாதத்திற்கும் பகுத்தறிவு வாதத்திற்குமிடையே இடை யறாத போராட்டம் காலங்காலமாய்த் தொடர்ந்து நடந்துகொண்டே யிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் ஆன்மிகம் மேலோங்கியும், பகுத்தறிவு வாதம் தாழ்ந்துமே இருந்து வந்திருப்பதையும் காண் கிறோம். பகுத்தறிவுவாதிகள் நாத்திகர்கள் என்றும் ஆன்மிகவாதி கள் ஆத்திகர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். நாத்திகனாக மாற நான் மறுக்கிறேன். இந்துச் சட்டத்தின் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க விரும்பும் சமுதாய அமைப்பை நிறுவுவதற்காகப் பண்டைக் காலத்திலேயே போராட்டங்கள் நடை பெற்றன; முடிவில் இந்தியச் சமுதாயம் அதை ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தள்ளிவிட்டது; அதைப் போன்றே இன்றைய இந்தியா வும் அத்தகைய சமுதாய அமைப்பு தேவையில்லையென உதறித் தள்ளுமென்று கூறத் துணிவேன். இதனை ஒப்பிசைவுச் சட்டமாக ஆக்க அருமை நண்பர் மறுப்பதற்குக் காரணமே, சமூகம் அவ ருடைய கருத்தோடு ஒத்துப் போகாது எனும் அச்சமே. இந்நாட்டு மக்களை அவருடைய கருத்தோடு ஒத்துப் போகச் செய்வது இயலாது என்பதாலேயே பொதுக் கருத்துக் கணக்கெடுப்பையும் கூட அவர் ஏற்க மறுக்கிறார். மறைமுகமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தச் சிறு (எண்ணிக்கையில் உறுப்பினர் கொண்ட) நாடாளுமன்றத்தைத்

தவிர வேறெந்தச் சட்டமன்றத்தின் கருத்தையும் கேட்க அவர் மறுப்பதும் இவ்வளவு கசப்பான மருந்தை வேறெந்தச் சட்டமன்றமும் ஏற்காதென்பதை அறிவார் ஆதலால்தான் வேறெந்தச் சட்டமன்றத்தையும் கேட்பதற்குக் கூட அவர் எதிர்ப்பு தெரிவிக்கிறார். இந்த அச்சங்கள்தான் நமது மாண்புமிகு சட்ட அமைச்சரையும் அவரையொத்த கருத்துள்ள உறுப்பினர்களையும் இந்த நாடாளுமன்றத்திலேயே இந்துச் சட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்று எண்ணத் தூண்டியுள்ளன. எனது தலைவரான பிரதமர் அவர்கள் ஏற்றமோ தாழ்வோ இச்சட்டத்தைத் தாம் ஆதரிப்பதாகக் கூறியுள்ளமையால், அவருடைய கூற்று கட்சியின் ஒப்புதலைப் பெறாமலேயே கூறப்பட்டதென்றாலும் நாங்கள் அவரை ஆதரிக்கக் கடமைப் பட்டவர்கள். நாங்கள் அவரை ஆதரிப்பவர்களாதலால், மாண்புமிகு சட்ட அமைச்சர் மூலமாகவே அவருக்கு எங்கள் வேண்டுகோளை....

**டாக்டர் அம்பேத்கர் :** சரியற்ற ஊடகம்.

**திரு. விஸ்வநாத தாஸ் :** அவர் சரியான ஊடகமில்லையென்றால், எனது வேண்டுகோளை அவைத் தலைவர் அவர்கள் மூலமாகவே தெரிவித்தாக வேண்டும். ஏனெனில் எஞ்சியிருக்கும் ஒரே ஊடகம் அவர்தான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஆனால் இதுவோ நிறமற்ற ஊடகம்.

**திரு. விஸ்வநாத தாஸ் :** இந்துச் சட்டத்திலிருந்து மிகவும் சர்ச்சைக்குரிய பகுதிகளை நீக்கிவிடுமாறு அவரை நான் மிகவும் வேண்டுகிறேன்; இவ்வாறு நீக்கிடல் இச்சட்டத்தை நிறைவேற்றுவதை மிக எளிதாக்கிவிடும். தனிப்பட்ட முறையில் இச்சட்டத்தை என்னால் ஏற்க இயலாதென முன்னர் கூறியதையே மீண்டும் வலியுறுத்துகிறேன்; இந்த மசோதாவில் உத்தேசிக்கப்பட்டிருப்பது போன்று பகுத்தறிவுவாதத்தின் அடிப்படையில் இந்து சமுதாயத்தை மாற்றி யமைக்கும் எந்த முயற்சியையும் கூடாது என்றுதான் எனது மரணப் படுக்கையிலிருக்கும்போது கூட நான் கூறுவேன்.

எனது மாண்புமிகு நண்பர் இச்சட்டத்தை எளிதாக்கவே தாம் முயன்றிருப்பதாய்க் கூறினார். நானும் இங்குள்ள எனது பல நண்பர்களும் மாணவர்களாயிருந்தவர்கள்தான்; எனவே பாடநூலைப்

படிக்காமல் எளிமையாக்கப்பட்ட குறிப்பேடுகளைப் படிப்பதில் நன்கு பழக்கமுள்ளவர்கள்தான். இத்தகைய எளிதாக்கப்பட்ட குறிப்பேடுகளை வெளியிட்டே கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஏராளமாய்ப் பணம் சம்பாதித்துள்ளதையும் அறிவோம். இதனால் மாணவர்கள் எவ்வளவு கடுமையான இடர்ப்பாடுகளுக்குள்ளானார்கள் என்பதை நன்கு அறிவேன். இந்த இடர்ப்பாடுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், கல்கத்தா பல்கலைக்கழக ஆணையத்தின் அறிக்கையில் - சேட்லர் ஆணையத்தின் அறிக்கை யென்று நினைக்கிறேன் - குருட்டுப் பாடம் என்பதன் கேடுகள் விவரிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். ஆம் அது குருட்டுப் பாடம் என்றுதான் கூறப்பட்டது. இந்துச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் நான் குருட்டுப் பாடம் படிக்க விரும்பவில்லை. இந்துச் சமூகத்தை மட்டுமல்ல, வேறு எந்தச் சமூகத்தையுமே, குருட்டுப் பாடத்தின் - இத்தொடரைப் பயன்படுத்துதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்; வேறு நல்ல தொடர் கிடைக்கவில்லை - அடிப்படையிலான சமூக அமைப்புக்கு இட்டுச் செல்ல வேண்டாமென நண்பரை மிக வேண்டுகிறேன்.

அன்றாட வாழ்க்கையிலிருந்து கூட எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறுவேன். மருத்துவர்களில் கற்றறிந்த வல்லுநர்களும் உண்டு; போலிகளும் உண்டு. மருத்துவ வல்லுநர் ஒருபோதும் ரசம், பாஷாணம் போன்றவற்றைக் கொண்டு மருத்துவம் செய்ய மாட்டார்கள்; அதற்கு மிகத் தயங்குவார்கள். போலி மருத்துவனோ எடுத்த எடுப்பிலேயே தனது பையைத் திறந்து ரசம், பாஷாணம் இவற்றைக் கொண்டே மருத்துவம் தொடங்குவான். பாதரசம், ஆர்செனிக் போன்ற ரச, பாஷாணங்களைத் தயக்கமின்றிப் பயன்படுத்துவான். நமது மாண்புமிகு நண்பரிடமிருந்து ஆர்செனிக் மருத்துவத்தை ஏற்றுக் கொள்ள நான் மறுக்கிறேன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இணக்கமாய் ஒருங்கிணைந்து வாழும் இந்து சமுதாயத்திற்கு இந்த நச்சு மருத்துவம் தேவையில்லை என்று அவரிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். உலக வரலாற்றை நோக்கும்போது இந்துக் குடும்பம் அல்லது இந்து இல்லமே மகிழ்ச்சி நிறைந்த ஒரே குடும்ப அமைப்பாய்த் திகழ்வதைக் காண்பீர்கள். சிற்சில சூழ்நிலைகளில் சிரமங்கள் சில இருக்கலாம்; ஆனால் முப்பது கோடி மக்களைக் கொண்ட சமுதாயத்தில் இஃதொன்றும் பெரிதல்ல. ஆனால் மேலை நாடுகளைப் போன்று சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் கொடூரங்களையும் துன்பங்களையும் இங்குக் காண்பதற்கில்லை என்பது நன்கறிந்த உண்மை. நமது சமூகத்தில் மாற்றங்கள்

தேவையில்லை என்று கூறமாட்டேன்; அவை கட்டாயம் தேவை தான். புரட்சியால் மாற்றமோ வளர்ச்சியால் மாற்றமோ ஆனால் விரும்பத்தக்க மாற்றம்தானா என்பதை நன்கு கருதிய பின்னர் சட்டமியற்றும் முயற்சியை மேற்கொள்ளலாமே.

இச்சட்டத்தின் கீழ் திருமணங்களைப் பற்றிக் கூறும்போது பீகாரைச் சேர்ந்த நண்பர் ஒருவர் - நீதித் துறையில் தேர்ந்த வல்லுநர் அவர் - திருமணத்தில் கணவன் மனைவி இருவரும் துணைவர்கள் ஆகின்றனர் என்று கூறினார். அவர் கூற்றை நான் வன்மையாக மறுக்கிறேன். இச்சட்டம் அவர்களைத் துணைவர்களாக ஆக்குவ தில்லை. துணைவர்களாக ஆக்குமென்றால் அதனை ஏற்றுக் கொள் வதில் எனக்குத் தயக்கம் ஏதும் இராது. ஆனால் நமது சட்ட அமைச்சர் கொண்டு வரும் சட்டத்திலோ அவர்களது உறவு ஒப்பந்த உறவாகத்தான் இருக்கும். இதனால் சமஸ்காரங்களில் விதிக்கப்பட் டுள்ளவாறு திருமணத்தின் புனிதத்தன்மை அற்று விடும். அவர் கொண்டுவருவதே மேற்கத்திய ஒப்பந்த முறைத் திருமணம்; அது பதிவின் வாயிலாய் மிகக் கெடுபிடியாகப் பின்பற்றப்படும் என்றும் தெரிகிறது. நீங்கள் வசதி இருப்பவர்களுக்காகச் சட்டமியற்று கிறீர்களா? அன்றி வசதி இல்லாதவர்களுக்காகவா? இருப்பவர் களுக்காகத்தான் நீங்கள் சட்டமியற்றப் போகிறீர்கள் என்றால் தாராளமாய்ச் செய்யுங்கள், உங்கள் வகையினரான மன்றாடிகள், வக்கீல்கள் வழக்கறிஞர்கள் வளம் கொழிக்கட்டும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இருப்பவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? மனைவி இருப்பவர்களையா?

**திரு. விஸ்வநாத தாஸ் :** அவர்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நீங்கள் கிராமங்களுக்குச் சென்று பாருங்கள். இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது; இந்திய வாழ்க்கை என்பது கிராம வாழ்க்கையே. மேல் வர்க்க மக்கள் சிலரைத் தவிர ஏனைய மக்கள் தங்கள் திருமணங்களைப் பத்துப் பதினைந்து ரூபாய் செலவில், அல்லது அதற்கும் குறைவான செலவில் கூட நடத்துகிறார்கள். இப்போது நீங்கள் பதிவுத் துறைகளையும் அத்துடன் சேர்ந்த அலுவல் சடங்குகளையும் புகுத்தித் திருமணச் செலவுகளைக் கூட்டவே வழி செய்கிறீர்கள்.

இந்தப் புதிய தலைப்பில் (பதிவுத்துறை) அரசுக்குக் கூடுதல் செலவு எவ்வளவு ஆகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தாரா

என்று சட்ட அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன். ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டு நடைமுறையில் செயலாக்கப்படும்போது அதனால் அரசுக்குக் கூடுதலாக ஆகக் கூடிய செலவினைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அவையின் மீது திணிக்கப்படும் மசோதாக் கள் குறித்து எனது மிக வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் அக்காலத்தில் சட்டமன்ற மேலவை உறுப் பினராய் இருந்துள்ளேன். அப்போது தன்னாட்சி மாற்ற விதிகளின் கீழ் ஒவ்வொரு மசோதாவின் விளைவாகவும் உருவாகும் செலவீடு களைக் கணக்கிடுதல் அன்றைய பொறுப்பிலா ஆட்சியின் கடமை யில் ஒரு பகுதியாய் இருந்தது. இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த மசோதாவின் நிதியியல் விளைவுகள் என்ன என்றும், அரசு நிதித் துறைக்கு இதனால் கூடுதல் செலவு எவ்வளவு ஆகுமென்றும் கணக்கிட்டுப் பார்த்தாரா என்று அருமை நண்பரைக் கேட்க எனக்கு உரிமையுண்டு.

*(மாண்புமிகு சபாநாயகர் தலைமை ஏற்கிறார்)*

இச்சட்டத்தின் விளைவாய் எழும் வழக்குகளில் பெரும் பாலானவை மாவட்ட நீதிமன்றங்களில்தான் - அதாவது முன்சீப் நீதிமன்றங்களைவிட மேல்படியில் உள்ளது - பெரும்பாலும் முடிவு செய்யப்படும். அவை உறுப்பினர் என்ற முறையில் இந்த மசோதா வுக்கு ஆதரவு தருமாறு வேண்டப்படுகிறேன். அவ்வாறாயின் ஒவ்வொரு செலவினத்திலும் செலவு செய்யப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்று அறிந்து கொள்ள எனக்கு உரிமையுண்டு. நீங்கள் பதிவுத் துறையினைத் தொடங்கப் போகிறீர்கள்; அத்துடன் சிறப்புத் திருமண நீதிமன்றங்களையும் தொடங்கப் போகிறீர்கள். இப்போது ஆகிக்கொண்டிருக்கும் செலவு எவ்வளவு, இனி வருங் காலத்தில் எவ்வளவு செலவு செய்யக் கருதியுள்ளீர்கள் என்பதை அறிந்து கொள்ள எனக்கு உரிமையுண்டு. இத்தலைப்பின்கீழ் கற்பனை செய்தும் பார்க்கவியலாத அளவுக்கு அரசுச் செலவு கூடுதலாகுமெனத் தோன்றுகிறது. முப்பத்து மூன்று கோடி மக்களைக் குறித்து எண்ணிப்பாருங்கள். தாங்கள் நகைக்கலாம்.........

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினர் அவைத் தலைமையை விளித்து மட்டுமே பேசலாம்.

**திரு. விஸ்வநாத தாஸ் :** மிக வருந்துகிறேன் ஐயா. மாண்பு மிகு சட்ட அமைச்சரோ அன்றிப் பிற உறுப்பினர்களோ நகைக்கலாம்.

அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் முந்தைய அரசுகள் செய்ததைப் போன்றே, ஒரு மசோதாவை அவை முன் வைக்கு முன்பாக அதன் விதிமுறைகள் ஒவ்வொன்றையும் செயற்படுத்துவதனால் ஏற்படக் கூடிய அரசுச் செலவு விவரங்களின் அறிக்கைத் தாளையும் தருவது இந்த அரசுக்கும் கடமைதான் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாட்டு மக்களில் ஒரு சதவீதத்தினர் மட்டுமே வழக்காடக் கருதுவார்கள் என்றாலுங்கூட நாடு முழுவதும் நீதிமன்றங்களும் பதிவுத் துறைகளுமாய் நிரம்பி வழியும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** நாம் இப்போது மசோதாவின் கிளைவிதி 2 குறித்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம்; அதாவது இச்சட்டம் யாருக்குப் பொருந்தும் என்பது குறித்துத்தான் விவாதம் நடைபெறுகிறது. மாண்புறு உறுப்பினரோ இச்சட்டத்தின் விதிமுறைகளை நிருவகிப்பதற்கு ஆகும் செலவுகளைப் பற்றிப் பேசுகிறார். மசோதாவில் திருமணம் குறித்து விவாதிக்கும்போது இதை எடுத்துக் கொள்வதே தக்கது அல்லவா? திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் எனக் கூறும் கிளைவிதியை விவாதிக்கும் போதுதான் இச்சிக்கல் எழும். இது முழு மசோதா மீதான பொது விவாதத்திற்குரிய கட்டமல்ல. இப்போது கிளை விதிகளை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொள்ளும் கட்டமே. எனவே உறுப்பினரின் உரையில் அவ்வப்போது குறுக்கிடுவதற்கு பதிலாக, இதைப்பற்றிய அவரது கருத்துக்களை இப்போது தவிர்த்து, திருமணங்களைக் கட்டாயம் பதிவு செய்ய விதிக்கும் கிளைவிதி பற்றிய விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் வரை பொறுத்திருக்க வேண்டுகிறேன்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** ஐயா, தங்கள் வழிகாட்டுதலுக்கு நன்றி கூறி மனத்தில் இருத்திக்கொள்வேன். ஆனால் இதைக் குறித்து எனது பணிவான கருத்தையும் கூறத்தான் வேண்டியுள்ளது. கிளை விதி 2க்கு கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்களில் ஒன்று, இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அதன் பல்வேறு விதிமுறைகளையும் செயல்படுத்துவதில் தேர்ந்தெடுத்து ஏற்றுக்கொள்ள மாநிலச் சட்டமன்றங்களுக்கு வாய்ப்புரிமை தேவை எனக் கோருகிறது. பல்வேறு மாநிலங்களிலும் எழும் முதன்மையான சிக்கல் நிதிச் சிக்கலே எனப்பணிவுடன் தெரிவிக்கிறேன். தாங்கள் நல்ல உள்ளத்தோடு திருமணம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஆனால் பணச் செலவு செய்ய வேண்டியிருப்பது திருமணத்துக்காக மட்டும் அல்ல.......
(பிற்பகல் 3 மணி)

**மாண்புமிகு சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமணம் பற்றிக் குறிப்பிட்டதால்தான் நானும் திருமணம் பற்றிக் குறிப்பிட்டேன். மேலும் அதை ஓர் எடுத்துக்காட்டாகத்தான் குறிப்பிட்டேன். இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால்தான் இதைச் செயற்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு வரும். இந்தக் குறிப்பிட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டாலும் கூட, இறுதியாக இந்த அவை எந்தெந்த விதிமுறைகளை ஏற்று நிறைவேற்றுகின்றதோ அந்த விதிமுறைகள்தான் செயற்பாட்டுக்கு வரும். எனவே, நாம் எடுத்துக்கொள்ளும் எந்தவொரு விதிமுறை பணச்செலவு விளைவிக்கக் கூடியதோ, அந்தவிதிமுறை குறித்து அவை விவாதம் செய்யும்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அது தொடர்பான வாதங்களை எடுத்துரைத்தல் ஏற்புடையதாகும்; இந்தக் கட்டத்தில் அல்ல என்பதைத்தான் தெளிவாகக் குறிப்பிட்டேன்.

**திரு. விஸ்வநாத தாஸ் :** மிக்க நன்றி ஐயா, இது குறித்து மேலும் பேசமாட்டேன்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஐயா, இது தொடர்பாக நான் ஒரு கருத்தைப் பணிந்து தெரிவிக்கலாமா? புதிய விதிகளின்படி, அரசுக்குச் செலவு வைக்கக் கூடிய எந்தச் சட்டமும், அதற்கான செலவின மதிப்பீட்டுடன்தான் அவை முன் வைக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விதியைக் குறிப்பிட்டுத்தான்.........

**மாண்புமிகு சபாநாயகர்:** இது குறித்து மேலும் விவாதிப்பதற்கு ஏதுமில்லை. இப்போதைய விவாதத்தை அது எவ்வகையிலும் பாதிக்கக் கூடியதன்று. மேலும் அப்புதிய விதி நடைமுறைக்கு வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே மசோதா தாக்கல் செய்யப்பட்டு விட்டதென நம்புகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆம் ஐயா. மேலும் இச்சட்டம் அரசுக்கு வருவாய் ஈட்டக் கூடியதுதான் என்றும் அருமை நண்பருக்குக் கூற முடியும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** அது வேறு விவகாரம். அதைப் பற்றி நமக்கு இப்போது அக்கறை இல்லை.

**திரு. விஸ்வநாத தாஸ் :** இது வருவாய் தேடித்தரும் செயல்பாடு என்று அருமை நண்பர் கூறுகிறார்.

**மாண்புமிகு சபாநாயகர்:** இதுகுறித்து நாம் மேலும் விவாதித்தல் தேவையில்லை.

**திரு. விஸ்வநாததாஸ்:** நன்று. இந்த மசோதாவை நிறைவேற்றுதல், அதிலும் குறிப்பாக இந்தக் கிளை விதியை நிறைவேற்றுதல் முற்போக்கான செயல் என்று நமது மாண்புமிகு நண்பர் கூறுகிறார். அவ்வாறாயின், எனக்கு மறுப்பேதுமில்லை. அவர் தமது நிழலாய்த் தோற்றுவித்த இந்தச் சட்டம் முற்போக்கானதுதான் என்று என்னை ஏற்றுக்கொள்ளச் செய்வாராயின், நான் அவருக்கு உறுதியாக ஆதரவு தருவேன். ஆனால் எனக்கோ இச்சட்டத்தின் சில பகுதிகள் எவருமே எண்ணிப் பார்த்தறியக் கூடிய வகையில் மிகவும் பிற்போக்கானவை என்றே தோன்றுகின்றன. இது தொடர்பாக அருமை நண்பருக்கு மற்றொரு நிலையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; குழந்தை மணத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்து இருபதாண்டுகளாகியும் அது இன்றும் ஒரு ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கிறது.

**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர்:** இல்லை. இல்லை.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் மேலே தொடரட்டும்; அது அவர் தனிக் கருத்து.

**டாக்டர் அம்பேத்கர்:** அவரது தவறான கருத்து.

**திரு. விஸ்வநாத தாஸ்:** எனது கருத்து உண்மையிலேயே தவறானதாயின் நான் மகிழ்ச்சியேயடைவேன்; ஆனால் எனது அனுபவம் அதற்கு மாறானதாகவன்றோ உள்ளது. ஆனால் நமது மாண்புமிகு நண்பரான சட்ட அமைச்சர் செய்திருப்பதென்ன? குழந்தைத் திருமணச் சட்டம் செத்துவிட்டதாகவோ உயிருடனிருப்பதாகவோ எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்வோம். ஆனால் நமதருமை நண்பர் செய்திருப்பது முற்போக்காளராக அவரைக் காட்டுகிறதா? அவர் திருமண வயதைப் 18 என முன்மொழிந்து அதை நிறைவேற்றியும் விட்டார். அதை 18 வயது என ஏன் நிர்ணயிக்க வேண்டும்? பதினெட்டு என்ற எண்ணில் அவருக்கேன் இத்தனை பற்று என என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பையன், திருமண வாழ்க்கைக்கும், தாம்பத்திய உறவுக்கும் 18 வயதிலேயே ஈடுபடுத்தப்படுவான் என்பதை என்னால் சிறிதும் எண்ணிப்பார்க்கக் கூட இயலவில்லை; கற்பனைக்கும் அரியது அது.

இத்தகைய விதி விரும்பத்தக்கதுதானா என்று அவர் தமது நலத் துறை ஆலோசகர்களிடம் வேண்டுமானால் கலந்தாலோசிக்கட்டும். இருபது அல்லது இருபத்தொரு வயதாக அதை உயர்த்துங்கள். தாங்கள் முற்போக்காளர் என்பது மெய்யெனில் உயர்த்துங்கள், வயதுக்கு வரம்பு நிர்ணயிப்பதெனில், அதை நியாயப்படுத்தக் கூடிய காரணங்களுடன் செய்ய வேண்டும், அதனால் மிகப் பெரும் எண்ணிக்கையிலானோர்க்கு நலம் விளைய வேண்டும். அதனால் தான் சில வகையில் இச்சட்டம் முற்போக்காக இல்லை என்று கூறுகிறேன். சாதாரணமாகப் பதினெட்டு வயதில் மண வாழ்க்கையில் ஈடுபடுவோரை அரிதாகவே காண முடியும். வெகு சிலரே அப்படி ஈடுபடுவர். எனவே, 18 வயது, 16 வயது எனத் தாங்கள் நிர்ணயித்த வயது வரம்புகள் தேசிய நோக்கில் எனக்குப் பிற்போக்கானவையாகவே தோன்றுகின்றன.
*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு சபாநாயகர்:** குறுக்கீடுகளால் பேச்சாளரின் உரை நீண்டு போவதன்றியும் விவாதமும் திசை திரும்பிப் போய் விடுவதை இந்தக் கட்டத்தில் நான் மிகத் தெளிவாகக் கூறியாகவேண்டும். மேலும், தற்போது உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினரையும் கூட அவர் எழுப்பிக் கொண்டிருக்கும் சிக்கல்கள் எவையும் இந்தக் கிளை விதிக்கோ, அதன் மீதான திருத்தங்களுக்கோ எவ்விதத்திலும் பொருண்மைத் தொடர்பு இல்லாதவை என்று நினைவுறுத்தவும் கருதினேன். ஏதோ மசோதாவின் மீதான பொது விவாதத்தில் பேசுவது போன்று அவர் திருமண வயது குறித்து மேலும் பேசவிருக்கிறார். இத்தகைய தொடர்பற்ற விவாதங்களை நான் அனுமதிக்கப் போவதில்லை. நாம் இப்போது மசோதாவின் கிளை விதியொன்றைப் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டுள்ளோம்; இக் கிளை விதியின் பொருள் வரம்புக்குள் உரையைக் கட்டுப்படுத்திக் கொள்வோம். இல்லையெனில் இச்சட்டமியற்றல் என்பது முடிவற்ற தொடராய் நீண்டு கொண்டேயிருக்கும். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் நான் குறியாயில்லை - சட்டம் நிறைவேற்றப் படலாம்; நிறைவேற்றப்படாதும் போகலாம் - ஆனால் கிளை விதிகளைப் பற்றிய விவாதங்கள் அவற்றுடன் பொருண்மைக்குத் தொடர்புறும் வரம்புகளுக்குள் அமைய வேண்டுமென்பதில் நான் உறுதியாயிருக்கிறேன்; மசோதா கிளைவிதி வாரியாக ஒன்றன் பின் ஒன்றாய் இறுதிவரை விவாதிக்கப்படும். இது எனது உறுதியான முடிவு. இம்மசோதாவின் எந்தவொரு பக்கம் (வெல்கிறதென்பதில்) குறித்தும் எனக்கு அக்கறை கிடையாது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது உரையைக் கிளை விதி 2இன் விதிமுறைகளையும், அவற்றின் மீதான திருத்தங்களையும் பொறுத்த அளவில் வரம்புறுத்திக்கொண்டு பேசுமாறு கடுமையாகப் பணிக்கிறேன்.

**திரு. விஸ்வநாத தாஸ்:** தங்களுக்கு மிக்க நன்றி ஐயா. ஆனால் மாண்புமிகு நண்பரான சட்ட அமைச்சர் அவர்கள் தமது உரையின் போது இச்சட்டம் முற்போக்கானது என்று கூறியதால் தான், அதைப் பற்றி நானும் குறிப்பிட்டு அது முற்போக்கானதன்று எனக் கூற வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டேன்.

இந்தச் சட்டம் இல்லாதவர்களுக்காக உருவாக்கப்பட்டதென்று கூறினேன்; அது எப்படி என்பதையும் விளக்கினேன். கிளை விதி 2இன் வரம்புரையானது தேவையற்றதும் மிகையானதுமாகும் என்பதே அக்கிளைவிதியை நான் எதிர்ப்பதற்குக் காரணம். அது புதிய சிக்கல்களைத்தான் உருவாக்குகிறது என்பதால் தேவையற்றது என்றும், தேவையில்லாமல் சேர்க்கப்படும் எதுவுமே கிளை விதியின் கட்டுக்கோப்பைக் குலைத்துப் புதிய சிக்கல்களை உருவாக்கும் என்பதால் மிகையானது என்றும் கூறினேன். எனவே எந்தவொரு சட்டத்திலும் இத்தகைய மிகைமைகள் தவிர்க்கவே படுகின்றன.

துணைக் கிளைவிதி (4) ஏன் இருத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான காரணத்தை என்னால் காண முடியவில்லை. மகனைவிட மகளுக்கு அதிகப் பங்கு கிடைப்பதையோ, மகளை விட மகனுக்கு அதிகப் பங்கு கிடைப்பதையோ நான் பொருட்படுத்தவில்லை. அது மகனுக்கும் மகளுக்குமிடையே முடிவு செய்யப்படவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில், குடும்பச் சொத்து துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதைவிட, மருமக்கதாயச் சட்டத்தைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வேன். அப்படியிருக்க, முழுச் சொத்தும் மகளுக்கேதான் போய்ச் சேர வேண்டுமென்று நண்பர் முன் மொழியினும் நான் எதிர்க்கப்போவதில்லை. பெண்களுக்கே சொத்து போகட்டும். சொல்லப் போனால், மலபாரில் பாரம்பரியச் சொத்துரிமையின் பெரும் பகுதி பெண்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. எனவே நீங்களும் அவ்வாறே செய்கிறீர்களோ, மகன்களுக்கும் மகள்களுக்கும் சொத்தில் சமபங்கு அளிக்க முயல்வீர்களோ என்பதெல்லாம் எனக்குச் சிறிதும் அக்கறையில்லாத விவகாரங்கள். என்னைப் பற்றி எடுத்துக் கொண்டால் எனது சொத்தில்

பங்குகோர எனக்கு மகள்கள் யாருமில்லை; எனினும் மகள்களின் நலத்தில் எனக்குப் போதிய அக்கறையுண்டு. கிளை விதி (4) இன் வாயிலாகத் தந்தையின் வீட்டில் மகளுக்கும் பங்கு கிடைக்கும் என்று கூறுவதனால், அவளது நிதி எதிர்பார்ப்புகளை மேலும் கூட்டுகிறீர்கள். அவள் சொத்தில் தனக்குள்ள பங்கை சீதனத்தின் மூலமாகவும் 1872ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம் வழங்கும் சிறப்புச் சலுகைகள் மூலமாகவும் பெறுகிறாள். இதற்கு மேலும் துணை கிளை விதி (4)ஐம் சட்டத்தில் இருத்திக்கொள்வது, தேவையற்றதும், வேண்டத்தகாததுமென்று கருதுகிறேன்.

இந்தியாவின் சமூகக் கட்டுக் கோப்பை ம்ாற்றுதற்கு நாம் ஏதேனும் செய்தாக வேண்டிய காலம் வந்து விட்டதாய் உணர் கிறேன். செய்வதெதுவும் மக்களுடைய, மக்களில் சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த பிரிவினருடைய ஒப்பிசைவைப் பெற்றுத்தான் செய்யப் பட வேண்டும். எனவே தங்களையும் ஆளும் கட்சியுறுப்பினர் களையும், நான் வேண்டுவதென்னவென்றால், கிளைவிதி 2இலும் மசோதாவின் பிற பகுதிகளிலும் காணப்படும் சர்ச்சைக்குரிய பகுதி களையெல்லாம் அரசு நீக்குமாறு செய்து இச்சட்டம் எளிதில் நிறைவேற்றப்பட வழிவகுக்க வேண்டும் என்பதே.

[1]**திரு. எம்.ஏ. ஐயங்கார்:** இது வரை இந்த மசோதா மீதான விவாதத்தின் எந்தவொரு கட்டத்திலும் பங்குபெறும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைக்கப் பெறவில்லை. விவாதத்தின் தொடக்கக் கட்டங்களில், சபாநாயகர் அவர்கள் இல்லையாதலின் அவைத் தலைமைப் பொறுப்பை நான் ஏற்க நேர்ந்திருந்தது. அப்போதெல் லாம் எனது கருத்துக்களை என் மனத்திற்குள்ளேயே காத்துக் கொள்ள எப்போதும் முயன்று வந்தேன்; ஆனால் இந்தப் பொருண்மை குறித்த எனது கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டிய காலம் வந்து விட்டது. முதலில் நான் பழைமை என்பதற்காகவே எதையும் பற்றிக் கொள்பவனுமல்ல, புதிது என்பதற்காகவே எதையும் எதிர்ப் பவனும் அல்ல என்பதை இந்த அவைக்கும், மசோதாவின் மூலவருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒன்று பழைமை வாய்ந்தது என்பதற்காகவே நாம் அதனைப் பற்றித் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவ்வாறே ஒன்று புதிது என்பதற் காகவே அதை நாம் பழித்துக் கொண்டிருக்கவும் வேண்டிய தில்லை. அறிவார்ந்த மனிதர்களாகிய நாம் எதையெடுத்துக் கொண்

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951 பிப்ரவரி 7, பக். 2517-31.

டாலும் அதன் நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து நல்லவற்றைப் பற்றிக் கொண்டு தீயவற்றைக் கைவிடுதலே, நமக்குகந்த நல்வழி யாகும். எனவே இங்கு வலியுறுத்தப்பட்ட கருத்துகள் சிலவற்றை, நான் விருப்பு வெறுப்பின்றி ஆய்ந்து நோக்க முயல்வேன். நான் இவற்றின் முழுமையான ஆய்வில் ஈடுபட்டு மசோதாவின் மறுவாசிப்பாக எனது உரையை அமைக்க மாட்டேன்; மாறாகப் பொதுவான தொடர்புள்ள கருத்துகளையே பேசவுள்ளேன்.

முதன்முதலாக, அவையின் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் சிலவற்றையும், அவற்றுக்கு மசோதாவின் மூலவரது எதிர்ப்புகளையும் அலசி முடிவு கட்டலாமென்று கருதியுள்ளேன். முதலாவதாக ஒரு திருத்தத்தில், இச்சட்டம் மிக ஆழ்ந்து பரந்த விளைவுகளுக்கு வித்தாகக் கூடியதாகலின், இது ஒப்பிசைவுச் சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. அதாவது, ஒவ்வொரு தனிநபரும் தாம் இந்தச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட உடன்படுவதாகப் பதிவு செய்து கொள்வதன் வாயிலாகவோ, அறிக்கை வாயிலாகவோ தேர்ந்தெடுக்கும் உரிமை தரப்பட வேண்டும். தொடக்க காலத்திலிருந்தே, பிரிட்டிஷார் இந்த நாட்டில் சட்டங்கள் இயற்றத் தொடங்கிய காலத்திலிருந்தே, நிறைவேற்றப் பட்டதொரு சட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா எனும் விருப்பத் தேர்ச்சியுரிமை தனிநபர்களுக்குத் தரப்படுவதற்கான முன் எடுத்துக் காட்டுகள் ஏதும் கிடையாது.என்று சட்ட அமைச்சர் கூறினார். அவரது நினைவாற்றல் குறுகி விட்டதோ என அஞ்சு கிறேன். 1920ஆம் ஆண்டின் கட்சு மேமோன்கள் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இஸ்லாத்துக்குச் சமயமாற்றம் பெற்ற இந்துக்கள், தொடர்ந்து தாங்கள் பிறந்த இந்துச் சட்டங்களின் ஆளுகைக்கே உட்பட்டு வந்தனர். எனவே கட்சு மேமோன்களிடையே, கூட்டுக் குடும்பச்சட்டமும் தங்களுக்குள் தத்தெடுத்தலும் நிலவிவந்தன. பின்னாளில், இஸ்லாத்தைத் தழுவிய அனைவரும் இஸ்லாமியச் சட்டமான ஷரியத் சட்டத்தின் ஆளுகையின் கீழ்தான் வரவேண்டும் எனச் சீர்திருத்தவாதிகள் சிலர் கோரினர். வாரிசுரிமை, திருமணம், சொத்தின் தலைமுறை மாற்றம், மணமுறிவு ஆகிய விவகாரங்கள் பலவற்றுக்கும் இஸ்லாத்திலும் பல்வேறு சட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. இதே பொருண்மைகள் குறித்து இந்துக்களின் **ஸ்மிருதி** காராக்களின் அடிப்படையிலமைந்த இந்துச் சட்டங்களும் உண்டு. இஸ்லாத்துக்கு சமய மாற்றம் அடைந்தவர்களின் வசதிக்காக இச் சட்டத்தில், ஒரு இயலுமை விதிமுறை சேர்க்கப்பட்டது. அதன்படி

கட்சுமேமோன்களில் எவரும், இந்துச் சட்டத்தையே தழுவிக் கொள்ள விரும்பினால், குறிப்பிட்ட அதிகாரியின் முன்னிலையில் தாம் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குட்படுவதாக அறிக்கை தந்து தேர்ச்சி செய்து கொள்ளலாம். இந்துச் சட்டத்தையோ சமய மாற்றத்து முன்னர் அவர் கடைப்பிடித்து வந்த மரபு நெறிச் சட்டத் தையோ தேர்ந்தெடுத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு.

**திரு. ராஜ் பகதூர் :** அது மிகவும் தனித்த சிறப்பு நிகழ்ச்சி.

**திரு. எம்.ஏ. ஐயங்கார் :** நான் பொது வழக்கு ஒன்றையும் சுட்டவே வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிறிது பொறுமை யுடன் இருக்க வேண்டும். கட்சு மேமோன்கள் சட்டம் 1923ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு கீழ்க்காணும் விதிமுறைகளாவன அதில் காணப்படுகின்றன:-

> "(அ) தாம் ஒரு கட்சு மேமோன் என்றும், தாம் யாரெனக் கூறிக்கொள்கிறாரோ அதுசரிதானென்றும்
>
> (ஆ) 1872ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு II இன் பொருள் படித் தாம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளத் தகுதியுள்ளவர் என்றும்
>
> (இ) தாம் பிரிட்டிஷ் இந்தியாவில் வசிப்பவரென்றும் வரையறுக்கப்பட்ட அதிகாரிகள் ஏற்குமாறு மெய்ப்பிக்கும் எந்தவொரு நபரும், வரையறுக்கப்பட்ட படிவத்தில் வரை யறுக்கப்பட்ட அதிகாரிகளின் முன்னிலையில் நிரப்பி இச் சட்டத்தின் பயனைத் தாம் பெற விரும்புவதாய் அறிக்கை தந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் அறிக்கை தந்தவரும் அவரின் வயது வராக் குழந்தைகளும், அவரின் சந்ததியாரும் சொத்துத் தலைமுறை மாற்றம், வாரிசுரிமை தொடர்பான விவகாரங்களில் முகமதியச் சட் டத்தின் ஆளுகைக்குட்படுவார்கள்."

அருமை நண்பர் ராஜ் பகதூர் அவர்களது வாதம் அவரது நிலைப்பாட்டையே கீழறுக்கிறது; ஏனென்றால் இது நாடு முழுமைக் குமாக இயற்றப்பட்ட சட்டமன்று; மாறாகக் குறிப்பிட்ட சமூகத் தின் நலன்களைப் பேணுதற்கெனத் தனியே இயற்றப்பட்டது.

இப்பகுதி இயலுமை நல்கும் பிரிவேயாகும். கட்சுமேமோன்கள் மட்டுமே இந்நாட்டில் முஸ்லீம்கள் அல்லர்; நாட்டின் பிற முஸ்லீம் களின் எண்ணிக்கை அவர்களைவிட மிகப் பன்மடங்காகவே இருக்கு மன்றோ. முஸ்லீம்களில் 99.9 சதவீதத்துக்கும் மிகுதியானவர்கள் ஷரியத் சட்டத்தைப் பின்பற்றும் போது, மிகச் சிறு பகுதியின ரான கட்சுமேமோன்களுக்கு மட்டுமெனத் தனியே சட்ட விதிமுறை எதற்காக இயற்றப்பட வேண்டும். எனவே அருமை நண்பரின் இந்தக் குறுக்கீடு, அவரது வாதத்தை வலுப்படுத்து தற்கு மாறாக, மாற்றுக் கட்சிக்கு வலிவு கூட்டத்தான் உதவியுள்ளது. ஒரேயொரு எடுத்துக்காட்டு இருந்தால் கூட அதுவே போது மானது. தற்போது என்மீது புத்த சமயத்தைத் திணிக்க உங்களால் முடியுமா? அன்றி இந்து சமயத்தைப் பிறர் மீது திணிக்க என்னால் இயலுமா? வாரிசுரிமை, திருமணம், சொத்துத் தலைமுறை மாற்றம் ஆகியன யாவும் ஏறத்தாழ ஒரே அடிப்படையில்தான் அமைந் திருப்பவையென்றாலும், சமய மாற்றம் பெற்ற ஒருவருக்கு மாற்றத் திற்கு முன்னர் அவர் பின்பற்றி வந்த தொன்மைச் சட்டத்தின் ஆளுகைக்குள்ளே இருந்து கொள்ளவும் தேர்ச்சி வாய்ப்பு அளிக்கப் பட்டிருந்ததல்லவா. அவர் சமய மாற்றம் பெற்றாலும் கூடத் தம்மை ஆளும் சட்டங்களையும் புதிய சட்ட அமைப்புக்கு மாற்றிக் கொள்ளுதல் அவருடைய விருப்பத் தேர்ச்சிக்கே விடப்பட் டிருந்தது. இதில் எவ்விதமான வற்புறுத்தலும் இடம் பெறவில்லை. எனவே ஆலோசனையாய்த் தரப்பட்டுள்ள திருத்தம் ஏற்கப்பட்டா லன்றி இச்சட்டம் பல்வேறு திறந்தினரான மக்கள் மீது வலிந்து திணிக்கப்படும் நிலைதான் உருவாகும். இந்துக்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் தமது பழைமைச் சட்டத்திற்குப் புறம்பாகத் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், அவர்களுக்குக் கைகொடுக்கக் குடிமைத் திருமணச் சட்டம் உள்ளது. ஆனால் ஆரம்பத்தில் அச்சட்டம் தாங்கள் இந்துக்களோ, கிறித்தவர்களோ, சமணர்களோ, பார்சிகளோ அல்லர் என அறிவிப்பவர்களுக்காக என்றே உருவாக்கப்பட்டது. பின்னர்தான் தான் அது மாற்றப் பட்டது. மாற்றத்திற்கு முன்னர் கிறித்தவ ஆணும் கிறித்தவப் பெண்ணும் தங்கள் சமயத்தைத் துறந்தாலன்றி இச்சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்துகொள்ள இயலாது; அவ்வாறே ஒரு முஸ்லீம் பெண்ணும் முஸ்லீம் ஆணும் தம் சமயத்தைத் துறக்காமல் இச் சட்டத்தில் கீழ்த் திருமணம் செய்துகொள்ள இயலாதிருந்தது. ஆனால் நாம் எப்போதும் முற்போக்காளர்களாகவே இருந்து

வந்துள்ளோம். நாம் நம்மையே அழித்துக் கொள்ளும் அளவுக்கு அனைவரையும் அரவணைத்துக் கொண்டும் வந்துள்ளோம். இந்துக்கள் தங்கள் சமயத்தை (திருமணத்திற்காக)த் துறக்க வேண்டிய தில்லை என்று இச்சட்டத்தைத் திருத்தினோம். இந்துக்கள் எந்த வகையான திருமணமாயினும் உரிமையியல் திருமணச் சட்டத்தின் கீழ் நடத்திக் கொள்ளலாம், என்பதைத்தான் நாம் செய்துள்ளோம். இதற்குமேல் வேறென்ன வேண்டும்? தற்போது தங்கள் பழைய சட்டங்களைப் பின்பற்றி வரும் மக்களைத் துப்பாக்கி முனையில் உங்கள் சிந்தனைப் போக்கிற்கு மாற்ற விரும்புகிறீர்கள். நான் எனது சமயத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென நீங்கள் ஏன் விரும்பு கிறீர்கள்? துணுக்களவுச் சிறுபான்மையினரான கட்சுமேமோன் களின் நலன்களைக் காப்பதற்கென்றே தனியாகவொரு சட்டம் இயற்றப்பட்ட எடுத்துக் காட்டையும் கூறினேன். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நம்மில் பெரும்பாலோரையெல்லாம் வழக்கறுந்த பழைமையாளர்கள் - இது மிக மென்மையான சொல்தான் - என்று கருதுவதால்தான், அவர் இத்தகையதொரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். இந்த அறுபதாம் வயதில் கூட அவர் எந்த நம்பிக் கையைச் சார்ந்தவரென்பதை அவரே அறியார் எனில் பிழை யன்று. ஆனால் ஒரே நாளில் நான் மாற வேண்டுமென அவர் கோருகிறார். இதற்கு எதிராக நான் குரல் எழுப்பினால், அதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம், ஏனைய உறுப் பினர்களைப் போன்றே நானும் இந்த சமூகத்தில் வாழத் தகுதி பெற்றவன்தான். நான் எனது சமயத்தைக் குறித்து அவமான மடையவில்லை. இதை நான் இந்த நாட்டு ஆண் பெண் மக்க ளிடையே மட்டுமல்ல, இந்த வெளியுலகம் அனைத்திற்குமே எடுத்துரைப்பேன்; எங்கள் வாழ்க்கையை வழி நடத்தும் நெறிகளை யும், எமது முன்னோர்கள் வகுத்த சட்ட நெறிகளையும் குறித்துப் பெருமையே படுகிறோம் என்று. உலகின் பிற நாட்டு மக்களும், நமது சமயத்தைப் பின்பற்றுவதுடன் அதனடியாக விளங்கும் கோட்பாடுகளையும் கடைபிடிப்பார்களேயானால், உலகில் ஓயாது நடைபெறும் போர்களெல்லாம் நடைபெற மாட்டா; உலகெங்கும் அமைதியும் சமாதானமுமே நிலவும். நாம் எப்போதுமே மேலை நாடுகளிலிருந்து அரைகுறையானவற்றையே ஏற்றுப் பின்பற்றப் பழகி வந்து விட்டோம். மேலை நாடுகளில் புழக்கத்திலிருந்து அகன்ற மகிழுந்து (கார்)களே இங்கு மாதிரி மகிழுந்துகளாய் வலம் வருகின்றன.

இந்து சமயத்திலிருந்து இஸ்லாத்துக்கு சமய மாற்றம் அடைகின்றவர்களைப் பொறுத்தமட்டில், அவர்களது தத்தெடுத்தல் முதலான விவகாரங்களில், இந்து அமைப்பின் மரபுநெறிச் சட்டமே அவர்களுக்குப் பொருந்துமென்று, இதே அவையில் 1937-ஆம் ஆண்டில் சட்டம் இயற்றினோம். அதைப் போன்றே தென்னிந்தியாவில் மாப்பிள்ளை இனத்தினர் முஸ்லீம்களாக இருந்தபோதிலும், இந்து மரபு நெறிகளையே அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் அம்மரபு நெறிகளை ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதே தவறு; அவர்கள் அம்மரபு நெறிகளிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். எனவே அவர்கள் வாரிசுரிமை, சொத்துத் தலைமுறை மாற்றம் ஆகியவற்றுக்கு ஒரு நெறியையும் சமய வாழ்வுக்குப் பிறிதொரு நெறியையும் பின்பற்றினார்கள். ஷரியத் சட்டம் என அழைக்கப்படும் சட்டத்தை நாம் 1937இல் நிறைவேற்றினோம். இது இந்தியா முழுதும் வாழும் அனைத்து முஸ்லீம்களுக்குமான சட்டமாகும். ஷரியத் சட்டத்தின் பிரிவு 3 கூறுவதாவது:

> (1) (அ) தாம் ஒரு முஸ்லீம் என்றும் (ஆ) இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (IX of 1872) 11வது பிரிவின் பொருள்படிதாம் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியுள்ளவரென்றும் (இ) தாம் பிரிட்டிஷ் இந்தியாவில் வாழ்பவரென்றும் எவரொருவர் தகுந்த சான்றுகளுடன் வரையறுக்கப்பட்ட அதிகாரிகள் முன்பு மெய்ப்பிக்கின்றாரோ, அவர் வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிரப்பி அறிக்கை மூலம் தம்மைப் பதிவு செய்து கொள்கிறாரோ அவரும் அவரின் வயது வராக் குழந்தைகளுக்கும் அவரின் சந்ததியினருக்கும் தத்தெடுத்தல், உயில்கள், வம்சாவளிச் சொத்து உள்ளிட்ட விவகாரங்கள் அனைத்திலும் இச்சட்டத்தின் கிளைவிதி 2இன் விதிமுறைகளே பொருந்தும்.

எனவே நமதருமை நண்பர் மாண்புமிகு ஜஸ்பத் ராய் அவர்களின் திருத்தத்தில் புதுமை என்பது சற்றும் கிடையாது. நாம் எடுத்துக் கொண்டிருக்கும் செயல்பாடு மிகுந்த எச்சரிக்கையுடன் நடத்தப்பெற வேண்டியதாகும். சமுதாயத்தின் பெரும்பகுதி மக்கள் இச்சட்டத்தை விரும்பவில்லை. அதுமட்டுமன்று; அவர்கள் தங்கள் விவகாரங்களைத் தாங்களே பேணவும் வல்லவர்கள். இந்த அவையானது, அதுவும் நமதருமை நண்பரின் தலைமையில், நாட்டு மக்களை நோக்கி, அவர்கள் பின்பற்றி வருவதெல்லாம் தவறு என்றும் அவர்கள் தம் வழிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும்

அறிவுரை கூற உரிமை பெற்றுள்ளதா? இந்தப் நாடாளுமன்றத்துக்கு அவ்வாறு செய்ய உரிமையில்லை என்ற கருத்தில் நான் கூறவில்லை, எனினும், பிரிட்டிஷார் காலத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டதைப் போன்ற வழிமுறைகளில் இந்த நாடாளுமன்றம் சட்டமியற்ற முடியாது என்பது எனது சொந்தக் கருத்து. நாம் இப்போது எழுத்து வடிவிலான அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதலில் செயல் படுகிறோம். மக்களின் தனிப்பட்ட விவகாரங்களும் திருமண உறவுகள் அவர்கள் ஏற்கெனவே பின்பற்றிக் கொண்டிருக்கும் நடை முறைகளும் அவர்களது அடிப்படை உரிமையாதலால் அவற்றில் ஒருக்காலும் கைவைக்கப்படலாகாது என்பதும் என் சொந்தக் கருத்து. திருமணத்தைப் பொறுத்தமட்டில், நான் கடைப்பிடிக்கும் வழக்கும், கைக்கொள்ளும் நடைமுறையும் பொது ஒழுக்கநெறிக்கு மாறானதாகவோ, அருவருக்கத்தக்கதாகவோ, பண்பாடற்றதாகவோ இல்லாதவரை, அது எனது சொந்த விவகாரமென்றும், பிறர் எவர்க்கும் அதில் தலையிட உரிமையில்லையென்றுமே கருதுவேன். எனவே, இவ்விவகாரத்தில் நாம் மிக நிதானமாகச் செயல்படுதலே ஏற்றது.

முற்போக்குக் கூறுகளைப் பொறுத்தமட்டில் நாம் ஏற்கெனவே பல சட்டங்களை இயற்றியுள்ளோம். இந்து விதவைத் திருமணச் சட்டம் ஓர் எடுத்துக்காட்டு. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் குறித்து அருமை நண்பர் பேசினார். குழந்தைத் திருமணங்களை அது குறைத்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் மொத்தத்தில் திருமணங்களையே அல்லவா அது குறைத்து விட்டது. நாடெங்கும் இன்று பெருகிவரும் புதிய சிக்கல், நாடெங்கும் மணமாகாத பெண் களின் பெருந்திரளைக் காண்கிறோம். படைத்துறையில் செவிலியர், மருத்துவர் பணிகளுக்கு ஆள் சேர்ப்பு நடத்தினால் அதில் சேர முன்வரப் பெண்களுக்குப் பஞ்சமே இராது. இது உங்களால் உரு வாக்கப்பட்ட புதிய சிக்கல்தானே - இதற்குமுன் இத்தகைய சிக்கலைக் கேள்விப்பட்டதும் உண்டா? பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா உட்பட நமதருமை நண்பர்கள் பலர் குழந்தை மணத் தினால் சிறுமியர் விதவையாகி விடுகின்றனர் என்று கூக்குரலிட் டனர். ஆனால் ஒரு ஆண் பதினைந்து வயதுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் மட்டும் நெடுங்காலம் வாழ்வான் என்பதற்கு உறுதிப்பாடு உண்டா? பதினைந்து வயதுப் பெண்ணை மணந்துகொள்வோர் நெடுங்காலம் உயிர் வாழ்வர் என்றும், பதினைந்து வயதுக்குக் குறைந்த பெண்ணை மணந்து கொள்வோர் விரைவில் இறந்து விடுவார்கள் என்றும் அறிவார்ந்த கடவுள்

விதித்திருப்பாரென்று என்னால் நினைக்க முடியவில்லை. எனவே இது குறித்து எவருமே உறுதி கூற முடியாது. இது இருதரப்பு வசதிகளையும் சமன் செய்தல் பற்றிய விவகாரமாகும்.

மனித இனத்தைத் தவிர வேறெந்த உயிரினத்திலும் திருமணம் என்பதைப் பற்றி நாம் கேள்விப்பட்டதும் கிடையாது. விலங்குகள் திருமணம் செய்து கொள்வதில்லை. அவற்றுக்கிடையே மணமுறிவுச் சட்டம் கிடையாது; குடும்ப வாழ்க்கையும் கிடையாது. மனித இனத்தில்தான், வசதியின்மையைத் தவிர்ப்பதற்காக, நான்கு பேறுகளில் ஒன்றாகத் திருமண அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. மாமுனிவோர் கூறியவாறு, மறு உலகநெறியான வீடு, சமூகத்தை நெறிப்படுத்தும் அறம், அரசியல், பொருளியல் இரண்டும் இணைந்த பொருள் ஆகிய மூன்றுக்கும் அடிப்படை மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையே. நமது முன்னோர்கள் எல்லாம் இல்லறத்தின் மாட்சியையே பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். ஆனால் மேலை நாடுகளின் சமுதாயத்தில் தனிமனிதத்துவமே பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளது. நமது சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பமே. எந்த வசதியின்மையையும் ஈடுசெய்யக் கூடிய அளவில் முழு நிறைபெற்றதாக எந்த ஒரு அமைப்பும் இருக்க முடியுமென்று நான் கூறவரவில்லை. நமது திருமணச் சட்டங்களைப் பொறுத்தமட்டில், எந்தவொரு பெண்ணும் துறவியாக வாழ்வதாயிருந்தாலன்றி திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதில்லை. பெண்கள் எவருக்கும் விடுதலை வாழ்வுக்கு உரிமை கிடையாது என்று சமஸ்கிருத சுலோகம் ஒன்று கூறுகிறது. ஆனால் இது தவறாய்ப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஒரு பெண் எடுத்த எடுப்பிலேயே இருபத்தைந்து வயதினளாய்ப் பிறந்து விடுவதில்லை. அவள் தாயின் வயிற்றினின்று பிறந்து, வளர்ந்து பெரியவளாகிப் பின்னர் முதியவளுமாகிறாள். ஆணாகட்டும் பெண்ணாகட்டும் இருபாலாருமே மழலை குழந்தை, குமரப் பருவங்களில் பிற மனிதர் வழிகாட்டலில் வாழவேண்டியவர்கள்தாம். ஒரு பெண் சிறுமியாயிருக்கும் வரை தந்தையின் பேணலில்தான் வாழ வேண்டியவள். அவள் முதியவளாகும்போது அவளைப் பேண மகனைத் தவிர வேறு சிறந்த ஆதரவு இருக்க முடியுமா? எனவே ஆணுக்காகட்டும் பெண்ணுக்காகட்டும் வாழ்க்கையின் வைகறையில் தந்தையின் ஆதரவும் இறுதிக் காலத்தில் மகனது ஆதரவும்தான் துணையிருக்கின்றன. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறித்த வினாவை நோக்குவோம். ஆண், பெண் இருவரையும் கடவுளே படைத்துள்ளாராதலால், ஒன்று பெண் ஆணிடத்தில் சென்று வாழ்க்கை நடத்த

வேண்டும், அல்லது ஆண் பெண்ணிடத்தில் சென்று வாழ்க்கை நடத்த வேண்டும். மகிழ்ச்சியான மணவாழ்க்கையென்றால், ஒரு ஆணிடத்தில் சென்று பெண் வாழ வேண்டும் அல்லது பெண்ணிடத்தில் சென்று ஆண் வாழவேண்டுமேயன்றி இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை ஏதுமுண்டோ? இக்கேள்வியை நான் டாக்டர் அம்பேத்கர் அவர்களிடமே கேட்கிறேன். (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர்: அவர்கள் சேர்ந்துதான் வாழ்கிறார்கள்) ஆம் இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்துதான் வாழ்கிறார்கள். அதைத்தான் நானும் கூற வருகிறேன். குடும்பத்தில் ஒன்று ஆணின் குரல் மேலோங்கியிருக்க வேண்டும் அல்லது பெண்ணின் குரல் மேலோங்கியிருக்க வேண்டும். கருத்து வேற்றுமையொன்று எழுவதாய்க் கொள்வோம். ஆங்கே ஆணின் குரல் ஓங்கியிருந்தால் பூசல் ஏதும் தொடராது. அல்லது பெண்ணின் குரலுக்கு ஆண் அடங்கிவிட்டாலும் அங்கே பூசல் முடிந்துவிடும். தமது மகளை யாருக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்பதில் கணவன் மனைவியரிடையே கருத்து வேற்றுமை தோன்றினால், பெண்ணின் திருமணம் எப்போது நடைபெறும்? இதனால் எழும் சிரமங்களைக் குறித்துத்தான் எனது கருத்தை வெளியிட்டேன். ஆண்கள் மகன்களைத்தான் தோற்றுவிக்கிறார்கள் என்றும், கருதிவிடக் கூடாது. நான் மிகுந்த அக்கறையோடுதான் இதை அவையின்பால் கூறுகிறேன். நான் அவையோர்பால் பணிந்து கூற விரும்புவதென்னவெனில், உறுப்பினர்களில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அவையிலுள்ள பெண் உறுப்பினர்கள், தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் கண்ணோட்டத்தில், இச் சட்டம் தங்களுக்கு நன்மை தரும் சட்டம் என ஆர்வம் காட்ட, அதே சமயம் ஆண் உறுப்பினர்கள் இது பெண்களுக்கே சாதகமான சட்டம் என்று இதன்பால் எதிர்ப்புணர்வு பூண்டிருப்பதுமே. இது குழந்தை யாருக்குச் சொந்தம் என்று கணவனும் மனைவியும் பூசலிடுவதற்கு ஒப்பாகும். அது எந்த ஒருவருக்கும் தனிப்பட்ட சொந்தம் அல்ல. எனவே இச்சட்டம் இறுதி வடிவெடுக்கும்போது, அது இந்நாட்டு மக்களில் ஆண் பெண் இருபாலாருக்குமே சொந்தமானதாகும். ஆதலால் இதை விருப்பு வெறுப்பின்றி நோக்குவோம்.

நாம் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் மூவாயிரம் ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வந்துள்ளோம். மேலை நாடுகளிலிருந்து வந்த நீதித்துறை அறிஞர்கள் பலர் நமது சமூக அமைப்புகளின்பால் ஈர்க்கப்பட்டுள்ளனர் என்பதற்கு நான் பல எடுத்துக்காட்டுகளைத் தர முடியும். அவர்களில் சிலர் சமய மாற்றமும் பெற்றார்கள்.

மாக்ஸ் முல்லர் இங்கு ஒரு மடத்தையே நிறுவியுள்ளார். அவர்களது கருத்துக்களையும் நாம் அறிய முடியும். அவர்கள் நமது அமைப்புகளை அவர்களது நாடுகளில் நிலவும் அமைப்புகளோடு ஒப்பிட்டுப் பார்த்துள்ளனர். அவர்களில் சமயம் மாற விரும்பினாலும், அவர்களது சமூகப் பழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றில் கொண்ட பற்று மிகுதியால் மாறவில்லை. அவர்கள் எவ்வாறு நமது சமூக அமைப்புகளால் ஈர்க்கப்பட்டார்களோ அவ்வாறே இன்று அவர்களது வழிமுறைகள் நம்மை ஈர்க்கின்றன.

இது பயனுடையதா அல்லவா என்று முதலில் ஆய விரும்புகிறேன். முதலில் இந்துச் சட்டம் எனும் கருத்தின் மூலவர்களான இந்துச் சட்டக்குழு உறுப்பினர்கள் கூறியிருப்பதென்ன என்பதை நோக்குவோம். திரு. ராவ் அவர்களே, இது மத்திய-மாநிலப் பொதுப் பொருண்மையாதலால், சட்டத்தின் சில பகுதிகள் குறிப்பிட்ட மாநிலங்களில் எந்தெந்த வகுப்பினருக்குச் செயலாக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் அந்தந்த மாநில அரசுகளுக்குப் பங்கிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். எந்தெந்தப் பகுதிகளில் செயல்படுத்துவது, அதை உடனடியாகச் செயற்படுத்துவதா அல்லது குறிப்பிட காலவரைக்குப் பின்னர் செயல்படுத்துவதா என்பன போன்றவற்றையும், இம் மசோதாவின் மூலவர் உட்பட்ட சீர்திருத்தவாதிகள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்; தங்களது சமய உரிமைகளும் நம்பிக்கைகளும் பாதிக்கப்படுவதாக எவரும் அச்சமுறாத வகையிலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். நாம் படிப்படியாக மக்களையும் நமது கருத்துக்கு இணக்கமாகக் கொண்டு செல்ல வேண்டும். இப்போது நாம் இந்து சமயத்தின் மீது போர் தொடுக்கவில்லையென்பதை உணர வேண்டும். இது நாம் அமெரிக்காவின் சார்பில் சேர்வதா அல்லது சீனாவை ஆக்கிரமிப்பாளர் என்று குற்றம் சாட்டுவதா என்பன போன்று உடனடியாக முடிவு எடுக்கப்பட வேண்டிய அவசரச் செயல்பாடும் அன்று. இங்குமங்குமாக ஒரு சிலருக்குச் சிரமங்கள் சில இருக்கலாம். ஆனால் (எச்செயல்பாட்டிலும்) வசதிப்பாடுகளின் சமனிலை காக்கப்பட வேண்டுமென அவைத் தலைவர் வாயிலாய் அவையினரை வேண்டுகிறேன். மானிட சமூக அமைப்புகள் எவையுமே முழுநிறைவானவை அல்ல என்பதும் நம் கருத்திலிருக்க வேண்டும்.

சிறு விவரங்களில் கவனம் செலுத்தாது, திருமணம் எனும் அமைப்புமுறை குறித்து மட்டுமே கருத்துச் செலுத்துவோமெனில், சாரதாச் சட்டம் இயற்றப்படுதற்கு முன்னர் நமது பெண்களில்

பெரும்பாலோர், 99 விழுக்காடுப் பெண்கள், திருமணம் செய்து கொண்டனர் என்பது நிறுவப்பட்ட உண்மை. பெண்கள் மண முடித்துக் கொள்ள வேண்டியதில்லை, ஆண்களும் மணம் புரிந்து கொள்ள வேண்டியதில்லை, பெற்றோரில்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகட்டும், போர்க் குழந்தைகளைப் போன்று நாற்ப தாயிரம் ஆதரவற்ற குழந்தைகள் பிறரால் பேணப்படலாம் என்றா நீங்கள் யாவரும் கூறவருகிறீர்கள்? நமது நாட்டில் அத்தகைய நிலையை உருவாக்குதல் உகந்த செயலாகுமா? நீங்கள் புதிய சிக்கல் ஒன்றை உருவாக்குகிறீர்கள்; அது சரிதானா? ஒன்று பெண் ணின் குரலுக்கு ஆண் அடங்கிப் போக வேண்டும் அல்லது ஆணின் குரலுக்குப் பெண் பணிந்து போக வேண்டும் என்பதுதானே இதுவரை இருக்கும் நிலைமை. அவ்வாறில்லையெனில் இல்லம், குடும்பம் என்பனவெல்லாம் என்ன ஆகும்? அதனால்தான் பெண்கள் சட்டத்தின் கீழ்க்கொண்டுவரப்படவில்லை. அன்னிய முறையில் கல்வி பெற்ற பெண், தனது நம்பிக்கைகளின் ஆணிவேர்களை இழந்து, கணவனின் சொத்து தனக்கு வர வேண்டுமெனக் கருதாது, தந்தையின் சொத்து தனக்கு வரவேண்டுமென விரும்புகிறாள். அவள் பொறுப்பற்றவளாயிருக்கிறாள். தன் வசம் பணம் இருக்க வேண்டும் என விரும்புவதுடன் தான் ஆணுக்கு ஏன் அடங்கி நடக்க வேண்டும் என்றும் எண்ணுகிறாள். ஒவ்வொரு குடும்பத்தின் நடப்பிலும் உள்ள சிரமங்களைப் பார்த்துள்ளேன்; எனது அனுபவத்தின் துணை கொண்டுதான் இவற்றைக் கூறுகிறேன். ஓர் ஆணுக்கு நான் ஏன் அடங்கி நடக்க வேண்டும் என்று நினைப்பதனாலேயே ஒரு பெண் திருமணம் செய்துகொள்ள மறுக்கிறாள்; சொத்தில் தனக்கும் ஒரு பங்கு தரவேண்டுமெனக் கோருகிறாள்; நான் என்றென்றும் உயி ரோடிருப்பேன் என்று எனது மகள் எதிர்பார்க்க முடியுமா? மகிழ்ச்சி யைத் தருவது பணம் ஒன்று மட்டுமே அல்ல. ஒரு செல்வந்தரின் மகள் அவருடைய சொத்தை வாரிசுரிமையாய்ப் பெறுகிறாள் என வைத்துக் கொள்ளுவோம். அவள் கணவன் அவளைக் கடுமையாய் வேலைவாங்குவதையும் அடித்து வதைப்பதையும் அச்சொத்து தடுத்து விடுமா? அவ்வாறு செய்யாமல் அவனை எது தடுக்க முடியும்? மக்கள் பலர் இச்சட்டத்தை ஆதரிப்பதாய்க் கூறுகின்றனர், நான் அவை உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை; அவர்கள் எல்லாம் அறிந்தவர்கள். அவைக்கு வெளியில் உள்ள மக்கள் பலர் கூறுவதைத்தான் இங்கு எடுத்து உரைக்கிறேன். இன்றைய இந்துச் சட்டப்படி பெண் (மகள்) என்பவள் விலக்கி யொதுக்கப்படுபவள் அல்லள். ஒரு மனிதர் குழந்தைகளே இல்லா மல் இறந்து விட்டால் அவரது சொத்து முழுவதும் அவருடைய

விதவைக்கே போய்ச் சேருகிறது. அதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. இப்போது நாம் (புதிதாய்ப்) புகுத்தவிருப்பது என்னவெனில், மகன்(கள்) இருந்தாலும் கூட மகளுக்கும் சொத்தில் பங்கு இருக்க வேண்டும் என மாற்றுவதுதான். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்போ மகனுடையதுதான். நாமெல்லாம் செல்வமிகு கோட்டீஸ்வரர்கள் அல்லர். ஜமீன்தார்கள் யாவரும் அழிக்கப்பட்டுவிட்டனர். மன்னர்களும் அத்தகுதியை இழந்தனர். இப்போதைய மக்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. அவர்களைக் கருத்தில் கொண்டுதான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். மக்களில் பலர் மிகவும் வறுமையில் வாடுபவர்கள்; கணவன் மனைவி இருவருமே கூலிவேலை செய்து அன்றாட வருவாயைத் தேடும் நிலையில் உள்ளவர்கள். நடுத்தர வர்க்க மக்களிலும் பெரும்பாலோரின் நிலைமை என்ன? அநேகமாய்க் கணவன் ஓர் எழுத்தராகப் பணிபுரிந்து மாதம் ரூபாய் 100 அல்லது 200 சம்பாதித்துக் கொண்டிருப்பான். அவன் தனக்கு 50, 55 வயதாகும் காலத்தில் தன் மகன் 21 அல்லது 25 வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையில் அவனைப் படிக்க வைக்கிறான்.

அவன் ஓய்வுபெறும் வயதில் பேணப்பட வேண்டிய பிள்ளைகள் பலர் இருப்பர். அதுவரை அவன் திரட்டிய சொத்தோ வெகு சொற்பமாகவே இருக்கும். இந்திய நாட்டில், நான் வாழும் பகுதியில், நில உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கையில், ஐந்து அல்லது பத்து சதவீதத்தினரே ஐந்து ஏக்கருக்கு (சுமார் 2 ஹெக்டேர்) மேல் நிலம் வைத்திருப்பவர்கள். நமது நாட்டில் நிலம் ஒன்றே தலையாய சொத்து. பம்பாயிலும் அகமதாபாதிலும் வேண்டுமானால் சில தொழிலதிபர்கள் இருக்கலாம். ஆனால் நாட்டில் பெரும்பாலான மக்களுக்குத் தொழிலும் (முதலும்) கிடையாது; நிலமும் கிடையாது. நடுத்தர வர்க்க மனிதர் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய ஒரே தொழில் எங்காவது எழுத்தர் பணியைத் தேடிக் கொண்டு சிறிதளவு பணம் சம்பாதிப்பதுதான்; அதையும் கடுமையாக உழைத்துத்தான் சம்பாதிக்க முடியும். குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு அந்த மகனுடையதாகிறது. தந்தையின் சொத்தாக அவன் பெறுவது ஒரு துண்டு நிலமோ ஓர் ஓலைக் குடிசையோதான். அவனுடைய தம்பி தங்கைகளையும் முதிய பெற்றோர்களையும் அவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது. ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டு கொண்டிருந்த போது இருப்புப் பாதை ஊழியர்களுக்கு, நிலைய அதிகாரிகள்

முதலாக அனைவருக்கும் குடும்பத்தோடு ஆண்டு முழுதும் இலவசப் பயணம் செய்ய அனுமதிச் சீட்டு தருவதுண்டு. இங்கு நான் வருத்தத்தோடு கூற வருவது என்னவெனில் இன்னும் இலவசப் பயண அனுமதிச் சீட்டு தரப்படுகிறது. தொடர்ந்து குடும்பம் என்றால் ஊழியரின் மனைவி பிள்ளைகளுக்கு மட்டும்தானா? முதிய பெற்றோர்கள் குடும்ப உறுப்பினர்களாக ஏற்கப்பட வேண்டாமா? ஒரு மகன் வயது வந்து திருமணமும் ஆனவுடன் மகன் குடும்பத்தை விட்டே வெளியேறிவிடும் மேலைநாட்டார் வழக்கத்தின் அடிப்படையில் வேண்டுமானால் அது சரியாயிருந் திருக்கலாம். மகளும் அவ்வாறே மணமானவுடன் குடும்பத்தி லிருந்து வெளியேறி விடுகிறாள். முதிய பெற்றோர்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக் கொண்டு காலம் கழிக்க வேண்டியது தான்! அத்தகைய மிருக வாழ்க்கை நமது நாட்டிலும் வேண்டும் என்று விரும்புகிறீர்களா? மற்றவர்களோடு எனக்குப் பூசல் ஏது மில்லை. சமய சமரச முறையில் தனித்துவம் முக்கிய இடம் வகித்தல் தீயூழே. கணவன் மனைவி இருவரும் ஒருவராய் இணைந்து முதியோரைப் பேண வேண்டும். பல்லாண்டுகளுக்கு முன்னரே நமது முன்னோர்கள் நிறுவிய கூட்டுக் குடும்ப அமைப்புதான் இயற்கையோடியைந்த முறையென உணரலாம். தந்தை, தாய், மகள், பேரன் ஆகிய அனைவரும் ஒரே இல்லத்தில் இணைந் திருக்க வேண்டும். இதுவே இன்பம் நிறைந்த ஒரு இல்லம், இங்கு வேலையின்மை என்பதே கிடையாது, இதுவே உண்மையான சமதரும அமைப்பென்பேன். சமதருமம், பொதுவுடைமையென் றெல்லாம் கூறப்படுவன வெறும் வாய்வீச்சுகளே. (குடும்பத் தலைவனாகிய) கணவன் ஒருவரால் தனது பிள்ளைகளைப் பேணவும் மற்றொருபால் தன் பெற்றோரைப் பேணவும் உழைத்துச் சம்பா திக்கிறான்.

இந்தத் திருமண - மணமுறிவுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் சென்னையில் 38 விண்ணப்பங்கள் பதியப்பட்டன. (குறுக் கீடுகள்). மணவிலக்குக்குப் பின் ஆண்கள் மறுமணம் செய்து கொள்ள முடியுமேயன்றிப் பெண்களில் ஒருவராலேனும் மறுமணம் செய்துகொள்ள முடியாது. மணமுறிவுக்கு விண்ணப்பித்திருந்த 38 பேரில், 30 விண்ணப்பதாரர்கள் கணவர்களே.

**உணவு, வேளாண்மைத் துணை அமைச்சர் (திரு. திருமல ராவ்) :** அவர்களெல்லாம் நடுத்தர வர்க்கத்தினரா?

**திரு. எம்.ஏ. ஐயங்கார்:** அவர்களில் பெரும்பாலோர் நடுத்தர வர்க்கத்தினரே; அவர்களிலும் பெரும்பாலோர் கற்றவர்களே, ஆனால் கெட்டகாலமாக மேற்கத்தியக் கல்வி பெற்றவர்கள். நான் குறிப்பிட்டவாறு பெரும்பான்மையான விண்ணப்பங்கள் கணவர்களிடமிருந்தே வந்துள்ளன. அவர்களில் ஒரேயொருவர் மட்டும் மனைவியை மலடி என்று காரணம் காட்டியிருந்தார். நான் அதனையும் இச்சட்டத்தில் சேர்க்க விரும்புகிறேன். மற்றொரு வழக்கில் கணவன் கல்வி கற்றவர், வழக்கறிஞர், மாதம் 100 ரூபாய் சமர்பாதிப்பவர். மனைவியோ மருத்துவராகப் பணியாற்றுகிறாள், மாதம் 400 ரூபாய் சம்பாதிக்கிறாள். மனைவி கணவன் வேண்டுமென்கிறாள், கணவனும் மனைவி வேண்டுமென்கிறான். இதில் இழுபறி என்னவென்றால் கணவன் தன்னுடன் வந்து வாழட்டும் என மனைவி கோருகிறாள், கணவனோ மனைவிதான் தன்னுடன் வந்து வாழ வேண்டுமென்று விரும்புகிறான். திருமணமானதிலிருந்தே மூன்றாண்டகளாகக் கணவன் மனைவியரிடையே இப்பூசல் தொடர்ந்து நிலவி வந்தது. ''அவள் துணை இல்லாமல் நான் எவ்வளவு காலம் வாழ்வது?'' என்று கணவன் கேட்டான். நீதிமன்றம் கணவனை மனைவி கைவிட்டு விட்டாள் என்று தீர்ப்பளித்து மணமுறிவுக்கு ஆணை பிறப்பித்தது. கணவன் இறந்த பின்னர் விதவையை மறுமணம் செய்து கொள்ளப் போகிறவன், திருமணம் நடைபெறுமுன் அவளைத் தொட்டிருக்க மாட்டானோ என்று எவருக்கும் தெரியாதல்லவா என்று அவையிலும் அவைக்கு வெளியிலும் உள்ள சகோதரிகளைக் கேட்க விரும்புகிறேன். இவ்வளவுக்குப் பிறகும் கூட விதவையர் மறு மணத்தில் முன்னேற்றம் அதிகமில்லை (குறுக்கீடு). நான் விரிவுரையாற்றுவதாய் நண்பர் கூறுகிறார். அவர் கூறுவது முற்றிலும் உண்மையே. விதவையர் மறுமணச் சட்டம் நெடுங்காலத்துக்கு முன்னரே நிறைவேற்றப் பட்டது; இன்றும் அதற்கு ஊக்கத் தூண்டல் தேவைப்படுகிறது.

அன்றையச் சட்டமன்றத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர், வங்காளத்திலிருந்து வந்த உறுப்பினர், மனைவியிழந்தோர் எவரும் கன்னிப் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது எனும் ஒற்றை விதி கொண்ட மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். மனைவி இழந்தவர்கள் விதவைகளை மட்டுமே மணந்து கொள்ளலாமென விதி வகுத்தால் அப்படியாவது சில விதவைகளுக்கு மறு வாழ்வு கிடைக்கும் எனும் நோக்கிலேயே அம்மசோதாவை அவர் கொண்டுவந்தார்; ஆனால் அவர் நண்பர்களிலேயே பலர் அவரை எள்ளி நகையாடியதால் அம்மசோதாவை அவர் திரும்பப்

பெற்றுக் கொண்டார். தாம் செய்தது பிழையென்றும் ஒப்புக் கொண்டார். ஒரு பெண் மணமுறிவு செய்து கொண்டவள் என்று அறிந்தால், அவளை மனைவியாய்த் தொடவோ, மறுமணம் புரியவோ எவரேனும் முன்வருவாரோ? அங்குமிங்குமாக ஒரு சில தனிப்பட்ட நபர்களின் வசதிக்காகச் சமூக அமைப்பை இவ்விதம் குலைக்க நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். சிலருக்குச் சிரமங்கள் இருக்கலாம் என்பதற்காகக் காணும் மாற்றுவழி இதினினும் மிகக் கொடுந்தீங்கையே விளைவிக்கும்.

கடத்தப்பட்ட பெண்களை மீட்டுச் செல்வதற்காக பாகிஸ் தானிலிருந்து தூதுக்குழுவொன்று வரவிருப்பதாய் இன்று காலை அறிந்தேன். கடத்தப்பட்ட ஆண்கள் என்று எப்போதும் கேள்விப் பட்டதுண்டா? கணவன் மனைவி இருவரும் இல்லாமல் உலகில் ஒருமைப்பாடு இருக்கவியலாது என்னும் வகையில் இயற்கை நம்மைப் படைத்துள்ளது. பதகோனியர்களில் கூட மனைவி கணவன் உயரத்துக்குத்தான் இருப்பாள். எந்தவொரு சமுதாயத்திலும் பெண்ணை விட ஆணே உயரம் மிக்கவனாயிருப்பான். நான் ஒரு பெண்ணைப் போலக் கீச்சுக் குரலிலும் பெண்மணியொருத்தி ஆண் குரலிலும் பேசினால் நன்றாயிருக்குமா? எனவே நான் ஆணாகத்தான் இருக்க வேண்டும்; பெண் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். எனது பேச்சு நண்பர்களிடையே நகைப்புக்கிடமாகிறது என்பதை உணர்கிறேன்; எனினும் பெற்றோர்களையும், வயது வராத குழந்தைகளையும் பேணிக்காக்கும் குடும்பமே சிறந்த அமைப் பெனக் கடவுள் ஏற்பாடு செய்துள்ளார் எனக் கருதுகிறேன். பாசம் என்பது செல்வத்தினால் வந்துவிடாது. அன்பும் பாசமும் தாமாக ஊற்றெடுத்து வரவேண்டுமேயன்றி அவை பணத்தினால் ஒரு போதும் உண்டாவதில்லை. நம்மில் பலர் ஏழைகள்; நாம் திருமணம் செய்து கொண்டு ஒரு மகனைப் பெற்றுக்கொள்கிறோம்; நமது பெற்றோரை அவர்களது முதிய காலத்தில் பேணிக்காக்கும் கடமையை நாம் ஒழுங்காய் நிறைவேற்றியது போலவே, நம் மகன் களும் நம்மை முதுமைப் பருவத்தில் பேணிக்காப்பான் என நம்புகிறோம். ஆன்றோர் கட்டளைகளுக்குப் பெரும் ஆற்றலுண்டு; அதனால்தான் கடந்த 3000 ஆண்டுகளில் இயற்றப்பட்ட பல சட்டங் களைவிடப் பழைய சட்டங்களே மேலோங்கியிருக்கின்றன.

நான் நாடாளுமன்ற உறுப்பினராய் ஆகும்போது பற்றாள னாய் நடந்து கொள்வேனென்று உறுதியுரை கூறினாலன்றி என்னை இங்கே அமர அனுமதிக்க மாட்டீர்கள். ஆனால் திருமணங்களைப்

பொறுத்தமட்டில், கணவன் மனைவியின் கையைப் பிடித்து வைக்கோலை மிதிக்கவைத்து ''எங்கள் உள்ளங்கள் இரண்டும் கங்கையையும் யமுனையையும் போல ஒன்று கலந்துவிட்டன'' எனக் கூறுதல் போன்ற பழைய மரபுகளையெல்லாம் நீக்கிவிடப் போகிறீர்களா என்று உங்கள் அனைவரையும் கேட்கிறேன். இது வெறுமனே சலிப்பு தரும் சடங்கன்று. வெறும் பாலுறவுக்காக மட்டுமா நாம் திருமணம் செய்துகொள்கிறோம்? மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கைக்காகவும், சந்ததிப் பெருக்கத்திற்காகவுமே திருமணம் என்று நமது பழம் ஏடுகள் வகுத்துள்ளன. குருட்டு, செவிட்டு ஊமைக் குழந்தைகளைப் பெற்று விட்டு இவற்றைக் காக்க வேண்டியது சமுதாயத்தின் பொறுப்பு என்று விட்டு விட நமக்கு அனுமதியில்லை. பந்தயக் குதிரைகளில் கூட இன வம்சாவளி பார்ப்பதுண்டு. ஆனால் மனிதர்களில் மட்டும் யார் யாரை வேண்டு மானாலும் மணந்து கொண்டால், தேவதைகள் போன்று நிறைவான குழந்தைகள் பிறப்பார்கள் என்று எதர்பார்க்கிறோம். புதிய சட்டத் தில் நாம் பரிந்துரைக்கும் திருமணம் பந்தயக் குதிரையையும் நொண்டிக் கழுதையையும் சேர்த்துப் பூட்டுவதற்கே ஒப்பாகும். கால்நடை மந்தைகளைப் பெரிதளவில் வைத்திருந்த நமது முன்னோர் களும் அவற்றின் வளம் பெருக முதல் தர இனப்பெருக்கச் சேர்க்கை யில் அக்கறை காட்டினர் என்று இந்துச் சட்டத் தொகுப்பின் தேர்ந்த உரையாசிரியரான ஜஸ்வால் கூறுகிறார். இதுவே நமது நாட்டின் மதிப்புமிகு நடைமுறையாகும். இட்லர் கூட அவரது நாட்டில் தூய இனப்பெருக்கம் வேண்டுமென விரும்பினார். முசோலினி யும் கூடத் தமது நாட்டில் அத்தகைய திருமணங்கள் பலவற்றை நடத்தியுள்ளார்.

நமது சாத்திரங்களிலும், ''அபுத்ரசிய கதிர்மஷ்த்தி''; ன்னம்னோ நரகத்யாஸ்மஸ்த் திரயாதே பிதாத்ரம் சுதா'' என்று கூறப்பட் டுள்ளது. அதாவது, தந்தை புத் என்றும் நரகத்திற்குப் போகாமல் காப்பவன் மகனே என்பது பொருள். இந்த ஆன்றோர் கட்டளை யின் விளைவாகத்தான் நம் நாட்டில் ஏராளமாய்க் குழந்தைகள் பிறக்கின்றன. இல்லையேல் பெற்றெடுக்கும் ஒவ்வொரு குழந் தைக்கும் நூறு பவுண்டு பணம் தாய்மார்களுக்குத் தந்தாக வேண்டி யிருக்கும். இந்தப் பண்பாட்டை நாம் எள்ளலாமா? இதையெல் லாம் நான் ஏன் கூறவேண்டியுள்ளதென்றால் ராவ் குழுவின் தலைவர் இந்துச் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாதவர் என்பதால்தான். பொறுக்குக்குழு உறுப்பினர்களிலும் பலர் இந்துச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொண்டவர்கள் அல்லர்; சில உறுப்பினர்கள் திருமணமே செய்து கொள்ளாதவர்கள்.

**திரு. கேசவராவ் (சென்னை) :** அவர்கள் மணமாகாதவர்கள் என்று யார் கூறுவது?

**மாண்புமிகு சபாநாயகர்:** ஒழுங்கு, ஒழுங்கு. விவாதம் பொருண்மையிலிருந்து விலகிப் போவதாய்க் கருதுகிறேன்.

**திரு. எம்.ஏ. ஐயங்கார்:** இனி மசோதாவின் வரம்புக்குள்ளாகவே பேசுவேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** அவர் ஏற்கெனவே 35 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொண்டுவிட்டார்; இது மிக நீண்டு விட்டதோவென அஞ்சுகிறேன். சுருக்கமாய்க் கருத்தைப் பேசி முடித்தல் சாலும்.

**திரு. எம்.ஏ. ஐயங்கார் :** நான் கூற வந்தது.....

**திரு. திருமலராவ்:** குழு உறுப்பினர்களின் தனிப்பட்ட விவகாரங்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

**திரு. எம்.ஏ. ஐயங்கார்:** விவாதத்தில் மானாவாரியாய்க் கருத்து வெளியிடப்பட்டதாய் வெளியிலுள்ளவர்கள் பேசக் கூடாதல்லவா; நான் கூறியது எனது தனிப்பட்ட கருத்துத்தான். இவ்வாறு கூற நேர்ந்ததற்கு நானும் மிக வருந்துகிறேன். ஸ்மிருதிகர்த்தாக்கள் தேவையின்றி ஸ்மிருதிகளை மாற்றிக் கொண்டேயிருக்கிறார்கள் என்று பேசப்படுவதைக் கேட்டுக் கொண்டு நான் தலைகுனிந்து அமைதியாய் இருக்க வேண்டுமா? நாம் மட்டும் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? காலையில் ஒரு சட்டம் இயற்றுகிறோம்; பிற்பகலிலேயே அதற்குத் திருத்தமும் செய்கிறோம். ஸ்மிருதிகர்த்தாக்கள் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப ஸ்மிருதிகளை மாற்றினார்கள். ஒரு புறம் அவர்களை வழக்கறுந்த பழைமையாளர்கள் என்று கூறுகிறோம். அவர்கள் மாற்றம் செய்தாலே அதையும் குறை கூறுகிறோம். இத்தனை ஸ்மிருதிகள் ஏன் இருக்க வேண்டும்? ஏனென்றால், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சட்டப்பிரிவு தொடர்பானவை. இவ்வளவு மகத்தான அளவில் சட்டமாற்றம் செய்யப்படும்போது அதற்கேற்ற அளவில் பயபக்தி ஏதும் காணப்படவில்லை என்பதையே நான் கூற வருகிறேன். நாம் இந்தச் சிக்கலை வேறு கண்ணோட்டத்தில் அணுகுகிறோம். இந்தச் சட்டத்தின்

வாயிலாய் இந்து சமுதாயத்தைக் குறுக்காய், நெடுக்காய்ச் சரிவாய் வெட்டித்துண்டு துண்டாகக் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறோம். ''நான் இந்து சமயத்தைச் சேர்ந்தவனல்ல'' என்று ஒருவன் கூறட்டும் என்கிறீர்கள். ''இந்து சமயத்தைக் கடைபிடிப்பவர்'' எனும் தொடர் கூட உங்களுக்கு அருவருப்பு தருகிறது. உங்களை இந்துக்கள் என்று ஏன் கூறிக் கொள்கிறீர்கள்? இந்துத்துவத்தில் என்னதான் இருக்கிறது? சில கூறுகள் முக்கியமானவை; கர்மா எனும் கோட்பாட்டில் பௌத்தர்களும் சமணர்களும் கூட நம்பிக்கை வைத்துள்ளனர். வேதங்கள் எனக்கு மட்டும் தனியுரிமை அல்லவே. ஊக்கப் புத்துணர்ச்சி தரும் வேதங்களின் தொன்மைச் சிறப்பை நான் நம்புகிறேன். முஸ்லீம்கள் அவர்களுடைய திருமறையில் பெரும் நம்பிக்கை வைக்கவில்லையா. சீர்திருத்தச் சமயமான சீக்கிய சமயத்துக்கும் கூட போற்றி வணங்கும் நூல் ஒன்று உண்டு. எனது வேதங்களைக் குறித்தும், என்னை ஒரு இந்து என்று சொல்லிக் கொள்வதற்கும் நான் ஏன் அவமானப்பட வேண்டும்? நான் பிரம்ம சமாஜியோ, ஆரிய சமாஜியோ, வைணவனோ யாராயிருப்பினும், வேதங்களில் நம்பிக்கை இல்லையேல் நான் இந்துவே அல்லன்.

நமது நாட்டில் சமயம் அரசியலிலும் புகுந்துவிட்டது நமது தீப்பேறுதான். சாதி, இனப் பாகுபாடுகளின் காரணமாகத்தான் பலர் இஸ்லாமியராய்ச் சமயம் மாறிவிட்டனர் என்று கூறப்படுகிறது. அவர்களை நான் கேட்கிறேன், சீனாவில் தனிப்பெரும் சமயமாய்த் திகழ்ந்த பௌத்தம் என்னவாயிற்று? இந்தோனேசிய மக்களின் ஒரே சமயமாய் அன்று பௌத்தம் விளங்கவில்லையா? இந்தோனேசியாவில் இப்போது பௌத்தம் எங்கே போயிற்று? மலேசியாவில் பௌத்தம் எங்கே போயிற்று? சீனாவில் ஏராளமான மக்கள் இஸ்லாத்துக்கு மாற்றம் அடையவில்லையா? எனவே, உங்களுக்கெல்லாம் எவ்வெப்போது இடர்ப்பாடுகள் வருகின்றனவோ அப்போதெல்லாம் இந்து சமயத்தைத் தாக்கி, அது மிகப் பழைமையான அமைப்பென்றும் இடையூறுகளுக்கெல்லாம் அதுதான் காரணமென்றும் கூறுகிறீர்கள். ஆனால் மெய்யான தீர்வு வேறு என நான் கூறுகிறேன். இந்து சமயத்தால் பின்னடைவுகள் சில இருப்பினும், இந்துக்களின் திருமண அமைப்பும், மணமுறிவை அனுமதிக்காத போக்கும், குடும்பத்திற்குப் பொறுப்பு இல்லாத மகள்களுக்கிடையிலுமாகப் பங்கிடப்பட்டுக் குடும்பச் சொத்து சிதறாது காக்கும் மரபு போன்ற நடைமுறைகள்தான் இந்திய மக்களின் வலிமைக்கான ஊற்றுக்கண்களாய் இருந்து வந்துள்ளன. நான்

உங்களிடம் எளிய வினாவொன்று கேட்பேன். மகளுக்கு மணம் புரிவித்தபின்பு நான் என் மகனோடிருக்க வேண்டுமென்கிறீர்களா? அல்லது எனது மருமகனோடு இருக்க வேண்டும் என்கிறீர்களா? ''ஜமதா தசமோ கிரகத்'' என்று கூறப்பட்டுள்ளது. அதாவது மருமகன் தான் பத்தாவது கிரகம் என்று கூறுவர். எனது முதுமைக்காலத்தில் நான் யாராவது ஒருவரின் ஆதரவில்தான் வாழ்ந்தாக வேண்டும். மருமகனிடம் போய் வாழ்வதைவிட, மகனிடமே வாழ்வதுதானே உயர்வு? மகளுக்கும் சொத்தில் பங்கு கொடுத்தால் என்னவாகும்? ''என்னுடன் வந்து இருங்கள்'' என்று மகள் கூறலாம். ஆனால் லீயர் மன்னரின் கதிதான் எனக்கும் கிட்டும். நிலைமையை ஆழ மாகவும் உணர்வு பூர்வமாகவும் சிந்தித்துப் பார்க்குமாறு தாய்மார் களையும் சகோதரிகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எனது இல்லத்துணைவியோடு, கலந்தாலோசியாமல் இங்கு வந்து பேசுகிறேன் என யாரும் தவறாக எண்ணிவிட வேண்டாம். இதைப் பற்றி நாங்கள் நெடுநாளாகப் பேசி வந்துள்ளோம்.

இத்தகைய சூழ்நிலை நிலவுவதால் நாம் நிதானமாகவே செயல்படுவோம். முற்போக்காளராய் இருக்க விரும்புவோர் அவர்கள் வழியிலேயே செல்லட்டும். 'சதி' என்பது ஒழுக்கநெறிக்கு முரணானது என்றும், அதைத் தடை செய்தது சரியே என்றும் நானும்தான் கருதுகிறேன். இஃதொது இயலுமை நல்கு விதிமுறை தான் என்று கூறுகிறீர்கள். அண்ணன் தங்கையை மணந்து கொள்ளலாம் என்று ஏன் நீங்கள் சட்டமியற்றக்கூடாது? அதுவும் இயலுமை நல்குச் சட்டமாகத்தானே இருக்கும். (முற்போக்காக) ஒரு குறிப்பிட்ட வரம்பு வரைதான் போகமுடியும்; அத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான். தகாத மணஉறவுகளை நாம் அனு மதிக்கக் கூடாது. திருமண உறவு முறை மூன்று நிலைகளுக்கப் பாற்பட்டதா, ஏழு நிலைகளுக்கப்பாற்பட்டதா என்பதே இங்கு வினா. மரபியல் நூல்கள் சிலவற்றையும் நான் படித்திருக்கிறேன். புதுப்புது உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. குருதி யில் மூன்று வகையுண்டென்றும் அவை ஒன்றோடொன்று சேராது என்றும் கூறுகிறார்கள். நான் திண்ணைப்பள்ளியில் சோதிடமும் பயின்றுள்ளேன். திருமணத்திற்கு முன்பு ரஜ்ஜு, சர்ப்ப, கணப் பொருத் தங்கள் பார்க்கப்பட வேண்டுமென்று சோதிடத்தில் கூறப்பட் டுள்ளது. இதில் கணப்பொருத்தம் மேலை நாட்டவரால் கண்டு பிடிக்கப்பட்டதாய்த் தோன்றுகிறது. மறைந்த டாக்டர் ரவீந்திரநாத தாகூர் ஒரு பெருங்கவிஞர்; மேலை நாட்டவர் அவ்வாறு கூறிய

பின்புதான் நாமும் அவரைப் பெருங்கவிஞர் என ஏற்றுக் கொண்டுள்ளோம். அவ்வாறுதான் திருமண உறவுமுறைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும், நமது பழைய ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருப்பதை மிக நல்லவையே என்றும் மேலைநாட்டவர் எவராவது வந்து கூறியபின்தான் ஏற்றுக்கொள்ளப் போகிறோம். தாவிக்குதிப்பதற்கு முன்னர், போய்க் குதிக்குமிடம் வழுக்கலற்ற உறுதித் தரையா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டுமென்பவர்களைப் பிற்போக்காளர்கள் என்று அழைப்பீர்களெனில் நானும் ஒரு பிற்போக்காளன்தான். நெடுங்காலமாய் நிலைத்து வந்துள்ளவற்றையே நன்கு பற்றிக்கொள்ளுங்கள் என்றே இந்த அவையோருக்கு வலியுறுத்துகிறேன்.

நான் உரையை முடிக்குமுன் இது தொடர்பான மற்றொரு கூறினையும் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்; அதுதான் மருமக்க **தாயச்சட்டம்.** மலபார் மக்கள் அறிவாற்றல் மிக்கவர்கள், அரசுச் செயலகத்திற்குச் சென்று பாருங்கள்; அங்கு செயலர்கள் யாவரும் மேனன்களாய் இருப்பதைக் காண்பீர்கள். அவர்களைக் குறித்து நான் பெருமிதமே அடைகிறேன். அவர்களது வாழ்க்கை நடைமுறைகள் நம்மிடமிருந்து மாறுபட்டவை. அவர்கள் நம்மினும் மிகுந்த மகிழ்ச்சியாய் வாழ்கிறார்களா என்று அவர்களையே கேட்டுப் பாருங்கள். இந்த (இந்து)ச் சட்டத்தை அவர்கள் மீது திணிக்க நீங்கள் ஏன் முயலவில்லை? அலிய சந்தானச் சட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கணவன் வீட்டிற்கு அவ்வப்போதுதான் வந்து போவான் என்பதும் மனைவி வீட்டிலேயே இருந்து தனக்குப் பிறக்கும் குழந்தைகளைத் தனது பொறுப்பிலும் தனது உடன் பிறந்தார் பொறுப்பிலும்தான் வளர்ப்பாள் என்பதுமான அவர்களது வாழ்க்கைமுறை இயற்கைக்கு எதிரானது என்று மற்றவர்கள் கருதலாம்; அதை விந்தையானதென்றும் நாம் நினைக்கலாம். இயற்கையான பாசம் என்பது வேறு. எனது குழந்தைகளைப் போன்று மிகுந்த பாசத்துடன் நான் எனது தங்கையின் குழந்தைகளை அரவணைத்துக் கொள்ள முடியுமா? ஆனால் அம்மக்களின் மரபுச் சட்டம் அதுதான். இந்துச் சட்டத்தின் கீழும் அவர்கள் அந்நெறியிலேயே தொடரட்டும் என்றுதானே விட்டு விடுகிறோம். ஆனால் அருமை நண்பர் தாகூர்தாஸ் பர்கவா அவர்கள் பஞ்சாபில் மாறுபட்ட மரபுநெறிச் சட்டங்கள் புழங்கி வருவதாய்க் கூறினால் மட்டும், அவர் தீப்பொறி பறக்கும் வாதங்களை வைக்கவில்லையென்பதால், அவற்றையெல்லாம் தூக்கியெறிந்து விடுமாறு கூறுகிறோம். இவை

யெல்லாம் நீதிநெறிமுறைக்குப் புறம்பான கோட்பாடுகள். மரபுநெறியைக் கடந்து சட்டம் செல்ல வேண்டியதில்லை. மரபு நெறிகள் மானுடரால் நிறுவப்பட்டவையே. மொழிக்கு (இலக்கியத் துக்கு) முன்னதாகவே இலக்கணம் தோன்றியதாய்க் கூறுவதற்கு ஒப்பானதே இது. ஒரு குழந்தை முதலில் பேசக்கற்றுக் கொள்கிறது; அதன் பின்னர்தான் இலக்கணம் கற்றுக்கொள்கிறது. எனவே, மரபு நெறிகள் தவறானவை எனக் கூறுதல் நீதிநெறிக்குப் புறம்பான சட்டக் கோட்பாடாகும்.

பழக்க வழக்கங்கள் மரபுநெறிச் சட்டமென ஏற்றுக் கொள்ளப் பட வேண்டுமெனில் அவை மிகப் பழைமை வாய்ந்தனவா யிருக்க வேண்டும், ஒழுக்கநெறிக்குட்பட்டிருக்க வேண்டும்; தெளி வுறுதியுடன் இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்படுகிறது. இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் மரபுநெறிகள் நீதி மன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நம்முடைய முடிவு களுக்கு மாறாக இருக்கின்றன என்பதற்காகக் காலங்காலமாய்த் தொடர்ந்து நிலைபெற்று விட்ட நடைமுறைகளையெல்லாம் துறக்க வேண்டுமெனக் கூறுதல் தவறானது என்பது எனது கருத்து. அவ்வாறு கூற நமக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த விவகாரங் களில் கருத்துச் செலுத்த நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை யென்று நான் கூறவரவில்லை. இந்தச் சட்டத்தை சமூகத்தின் மீது வலிந்து திணிக்க வேண்டாம் என்றுதான் அருமை நண்பரைக் கேட்டுக் கொள்கிறேன். அது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்துவிடும். மக்களாக முன்வந்து எங்களுக்குச் சீர்திருத்தம் தேவை என்று கோரட்டும். குடிமைத் திருமணச் சட்டத்தின்கீழ் எத்தனைபேர் திருமணம் செய்துகொண்டுள்ளார்கள் என்ற புள்ளி விவரம் அறிய விரும்புகிறேன். மக்கள் அறியாமையில் இருப்ப தாய்க் கூறுகிறோம்; அவர்கள் உண்மையிலேயே அறியாமையில் ஆழ்ந்துள்ளனரா என்பதை வருங்காலமே உணர்த்தும். எனவே போய்ச்சேருமிடம் தெரியாமல் தாவிக்குதிக்க வேண்டாம் என்று மாண்புறு உறுப்பினர்களை வேண்டுகிறேன். (பிற்பகல் 3 மணி). நாம் தனித்தனிச் சட்டங்களாகவே அவ்வப்போது இயற்றிக் கொள்ள லாமே. விதவையர் மறுமணச் சட்டத்தை நாம் தனித்ததொரு சட்டமாக நிறைவேற்றவில்லையா. பெண்களுக்குச் சொத்தில் வாரிசுரிமை அதிகாரம் அளிக்கத் தனிச் சட்டம் இயற்றியுள்ளோம். குழந்தைத் திருமணங்களைத் தடைசெய்வதற்குத் தனித்ததொரு சட்டம் இயற்றியுள்ளோம். எனவே பொறுத்திருந்து நிதானமாகச்

செயல்படுவோம் என்பதே எனது ஆலோசனை. அதனால் நாம் எதையும் இழக்கப் போவதில்லை. நாம் மணமுறிவை அனுமதிக்கப் போவதில்லையாதலால் எதையும் இழக்கப் போவதில்லை. மண முறிவு தேவை என்போர்க்கு மட்டும் அதை அனுமதியுங்கள். குடிமைத் திருமணச் சட்டத்தின் கீழ் நடைபெறும் திருமணங்களில், நாங்கள் குடிமைத் திருமணச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட இணங்குகிறோம் என்று இருவரிடமும் கூட்டாகச் சான்றுறுதி பெறப்பட வேண்டும். இந்தச் செயல்பாட்டுக்கு எதிராகப் பலத்த எதிர்ப்பு இருக்குமெனில், எதிர்ப்பாளர்களின் கருத்தை மாற்ற முயல்வோம். இது குறித்து மாண்புறு உறுப்பினர்கள் நிதானத் துடனும் துணிவுடனும் எண்ணிப் பார்க்க வேண்டும். புற உலகத் தோடு ஒன்றிணைந்து போகவேண்டும் என்பதற்காக புதிய, விந்தை யான வழிமுறைகளில் ஈடுபட்டு நமது நடைமுறை அமைப்பை அகற்றிவிடலாகாது என்று வேண்டுகிறேன். கிறித்தவம் என்றால் என்னவென்று நாமறிவோம். எனினும் கிறித்தவ நாடாகிய ஜெர்மனி யில் சண்டைகள் இல்லாமலா இருக்கின்றன? கிறித்தவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வதில்லையா? சாதிச் சழக்குகள் காரணமாகத்தான் நமது நாடு கிரேக்கர்களிடம் தோல்வி யுற்றது என்று எப்படிக் கூற முடியும்? நம்மைப் பழிப்பவர்களுக்கு நாமே மேடையமைத்துக் கருத்தும் எடுத்துக் கொடுக்கலாமா? நாமும் முன்னேறியுள்ளோம், அதுவும் கணிசமாகவே முன்னேறி யுள்ளோம். சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப் படவில்லை. நமது பெண்மணிகள் அங்கே சென்று வாக்குரிமை கோரிப்போராட அப்பெண்களைத் தூண்டலாமே. நமது சமூகத்தைப் பற்றியும் நமது பெண்களைப் பற்றியும் நாம் கோரமாகச் சித்தரிப் பதில் பயனில்லை. நமது பெண்களில்தான் சீதைகளும் சாவித்திரி களும் தோன்றினார்கள். அவர்களெல்லாம் தமது கணவர்களைப் பின்பற்றி நடந்தார்கள். இன்றோ நமது மனைவியரைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டும் போலும். நமது புராணங்களை கணவர்கள் மனைவியரைப் பின்பற்றி நடக்குமாறு மீண்டும் மாற்றியெழுதி னால் குடும்பத்தில் அமைதி நிலவுமெனில் அதைத்தான் செய் வோமே. இன்று நாங்கள் கணவன் - மனைவியாய் அமைதியாய் இருக்கிறோம். நாளை நான் ஒரு திரைப்படத்துக்குப் போய் அலங்கார மினுக்கில் ஓர் அழகியைப் பார்த்து வந்தேன். ஆயின் திரைப்படத் தில் வந்தவளைப் போல மனைவி அழகியாய் இல்லையென்று அவளை அடிக்க வேண்டுமா? அதற்கடுத்தநாள் மணவிலக்கு கோரி விண்ணப்பிக்க வேண்டுமா? கூடாது. பெண்பாலோர் வலிமையற்ற

வர்கள். அவ்வாறு கூறுவதற்காக அவர்கள் என்னோடு பூசலிடலாம். ஆனால் நீங்கள் கடவுளை வேண்டி உலகமெங்கும் பெண்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்றோ அல்லது ஆண்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்றோ வரம் பெற்றாலன்றி, இந்த அமைப்பு களையெல்லாம் அழித்துவிட முடியாது. இந்த அமைப்புகள் யாவும் அவசியமானவை. குடும்ப வாழ்வில் சமனிலை நிலவுதற்கு இவை யெல்லாம் அவசியமே. அன்றியும், பொருளாதார நோக்கிலும், ஒருமைப்பாட்டு நோக்கிலும், வேலையில்லாமை போக்கும் நோக் கிலும் எனப் பலவகையான நலன்களெல்லாம் நிலைத்து நிலவ இவை யாவும் அவசியமானவையே. கணவன் இறந்தால் விதவை யைப் பேணிக்காக்கக் கொழுந்தன் இருப்பான். விதவை தன் சுயவலிமையில் வாழ்வதற்குதவ வாழ்க்கைப் பணச் சட்டமும் கொண்டுவந்துள்ளோம். தந்தையின் சொத்தில் கணிசமான பங்கைப் பெற்றுக்கொண்டு, (அது தரும் துணிவில்) கணவனைப் பிரிந்து வாழ எண்ணும் பெண்களைத்தான் நான் எதிர்க்கிறேன். அவர்களிட மிருந்தும் மணமாகாத பெண்களின் பட்டாளத்திடமிருந்தும் கடவுள் தான் நம்மைக் காக்க வேண்டும்.

**திரு. டி.என். சிங்** (உத்தரப் பிரதேசம்) : ஐயா, எனது பெயரில் நானும் ஒரு திருத்தம் தாக்கல் செய்துள்ளேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** திருத்தங்களைத் தாக்கல் செய்த அனைவருக்கும், பிறருக்கும் பேச வாய்ப்பு அளிக்கப்படும்.

[1]**திரு. ராஜ் பகதூர் :** இங்கு எனக்கு முன்னர் பேசிய மாண்புறு உறுப்பினர்கள் அனைவரின் உரைகளையும் நான் மிகப் பொறுமை யுடன் கேட்டுக் கொண்டிருந்தேன், அவ்வப்போது தேவையான விளக்கங்களைப் பெறத் தொடர்புள்ள வினாக்கள் சிலவற்றையே எழுப்பினேன் (இந்த மசோதாவின் விதிமுறைகள் அனைத்தையும் நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்). எனது ஆதரவு தவறான உற்சாகத்தின் அடிப்படையிலோ, இளமையின் அவசர வேகத்தி னாலோ தோன்றியதில்லை. ஆனால் இன்றைய காலகட்டத்தில், நமது நாடு விடுதலையடைந்துள்ள நிலையில், காலத்தோடு ஒட்ட நாமும் முன்னேறியாக வேண்டுமென்றால், இத்தகையதொரு சட்டம்

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951, பிப்ரவரி 7, பக். 2532-36.

மிகத் தேவையானதென்றும் இல்லையேல் நாம் தோல்வியுறுவோம் என்றும் உணர்வதன் விளைவாகவே நான் ஆதரிக்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில் கொண்டுவரப்பட்ட எந்தவொரு மசோதாவும், எந்தவொரு சட்டமியற்றல் செயல்பாடும், இந்துச் சட்ட மசோதாவைப் போன்று எதிர்முரண் பூசல்களைக் கிளப்பிய தில்லை என்பது அனைவருமறிந்த உண்மைதான். உணர்ச்சிப்பாடு, ஒருதலைப்பாகுபாட்டு உணர்வுகள், மூட நம்பிக்கைகள் யாவும் ஒன்று திரண்டு நமது சீரான சிந்தனைத் திறனுக்குத் திரையிட்டுள் ளன. மூடநம்பிக்கைகளும் ஐயுறவுக் கண்ணோட்டமும் மேலோங்கி நிற்கும் சூழ்நிலையில், நாடும் இந்த அவையும் மசோதாவின் சாதக பாதகங்களைப்பற்றிய சமனான முடிவுக்கும், சமனான தீர்ப்புக்கும் வருதல் என்பது சற்றுக் கடினம்தான்.

இம்மசோதாவின் திறனாய்வாளர்களை மூன்று வகையாய்ப் பகுக்கலாம். முதலாவது வகையினர், மாண்புமிகு சபாநாயகரைப் போன்று, போலித்தனமின்றி மெய்யாகவே நாம் உறுதியுடன் காலத்திற்கேற்ப முன்னேறிக் கொண்டுள்ளோம் என்றும், இத்தகைய தொரு சட்டத்தை நிறைவேற்றுதலின் மூலம் இந்து சமுதாயத் துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஏதும் நேர்ந்து விடாதென்றும் உறுதியாக நம்புகிறவர்கள். அடுத்த வகையினர் இம்மசோதா வுக்குப் பொறுப்பானவர்களை எப்போதுமே குறை கூறிக் கொண் டிருப்பவர்கள்; இவர்களுக்கு சொல்லப்படுவது என்ன என்பதை விட சொல்வோர் யார் என்பதுதான் குறியாகும். இவர்கள் தம் சிந்தனைகளை மட்டுமல்ல நாட்டு மக்களையும் இருட்டிலேயே இருத்த முயல்பவர்கள். நமது மக்கள் அறியாமையில் ஆழ்ந்திருப் பவர்கள் என்பதும், இவ்விரு எதிர்முனைகளுக்கிடையே அவர்கள் அல்லாடுகிறார்கள் என்பதும் நன்கறிந்த உண்மை. ஒரு நாடு விடுதலை அடையும்போது அந்நாட்டு மக்கள் தங்களுக்குச் சீரான சட்டங்கள் வேண்டுமென விழைவதும், இருக்கின்ற சட்டங்களை முறைப்படுத்தித் தொகுக்க முனைவதும் இயற்கையே என நாம் நன்கறிவோம். இது தேசிய விழிப்புணர்வோடு ஒருங்கிணைந்த விழைவேயாகும். இந்திய மக்கள் தங்களது சட்டமன்றச் சார்பாளர் கள் வாயிலாய் இத்தகைய விருப்பத்தைத் தெரிவித்தல் இதுவே முதன்முறையும் அன்று. இத்தகைய தீர்மானம் ஒன்றை 1921 ஆம் ஆண்டிலேயே மத்திய மாநிலத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கே.ஜே. பாக்தே கொண்டுவந்தார்; சர் தேஜ் பகதூர் சாப்ரு அவர்கள்

அன்றைய சட்ட அமைச்சர். இந்துச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும் அப்போது நடைமுறையில் இருந்த சட்டங்கள் யாவும் தொகுக்கப்பட்டு சரியாக முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தீர்மானத்தின் சாரம். இதைக் குறித்து மத்திய சட்டமன்றத்தில் அவ்வப்போது கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன. தகைமை சான்ற உறுப்பினர்களில் ஒருவராகிய கங்காநாத் ஜா அவர்கள் இந்துச் சட்டத்தின் முறைமையாக்கம் எப்போது செய்யப்படும் என்று அவையில் வினா எழுப்பியுள்ளார் என்பதையும் அறிகிறேன். அந்தக் காலத்தில்தான் நாடெங்கிலும் விழிப்புணர்வு மேலோங்கி இச்சட்டத்தை முறைப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கையும் எழுந்ததென அறிகிறேன்.

இங்கு எழுப்பப்பட்ட கருத்துக்களில் ஒன்று இச்சட்டம் கிறித்தவர், முஸ்லீம்கள் உள்ளிட்ட இந்து அல்லாதோர் அனைவருக்குமாகப் பொருந்துமாறு இயற்றப்பட வேண்டும் என்பதுடன், பொது உரிமையியல் சட்டமும் ஒன்று தேவை என்பதாகும். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகள் சில சுட்டிக்காட்டப்பட்டு இச்சட்டம் அவ்விதிகளுக்கு முரணாயிருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் பொது உரிமையியல் சட்டம் கொண்டுவரப்பட்டாலும் அதே உறுப்பினர்கள், அரசியலமைப்புச் சட்ட விதி 44-இல் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய உரிமை, சிந்தனை உரிமைகளைப் பொதுக் குடிமைச் சட்டம் மீறுவதாகக் குறை கூறுவார்கள். இத்தகைய மறுப்பு எழுப்பப்படும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை. எனவே, பொது உரிமையியல் சட்டம் கோருவது பொருளற்ற போலித்தனமே.

இன்றைய இந்து சமுதாயத்தின் நிலையை நோக்குவோமாயின், திருமணம், தத்தெடுப்பு, வாரிசுரிமை போன்ற பல்வேறு விவகாரங்களில் ஏராளமான வேறுபாடுகளும் பிரிவுகளும் இருப்பதைக் காணலாம். இந்தப் பல்வேறு சட்டங்களையும் முறைப்படுத்தாமல் நாம் துளியும் முன்னேற முடியாது. சமூகத்தின் பிற பிரிவினரை நோக்கினால் அவர்களிடையே இவை ஓரளவுக்குத் தெளிவாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக கிறித்தவ, முஸ்லீம் மகளிர்க்குச் சில உரிமைகளும் சலுகைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றை இந்துப் பெண்களுக்கும் தர இச்சட்டம் முயல்கிறது. கிறித்தவ, முஸ்லீம் பெண்களுக்குத் தற்போது பாரம்பரியச் சொத்தில் ஓரளவு உரிமை உண்டு. முஸ்லீம் பெண்களுக்கு, மணமுறிவும் அவர்களது சட்டத்தில்

அனுமதிக்கப்பட்டுள்ளது.

**மாண்புறு உறுப்பினர் ஒருவர் :** கிடையாது.

**திரு. தியாகி :** அது உரிமையன்று; சுமையே.

**திரு. ராஜ் பகதூர்:** தாங்கள் அதைச் சுமையென்று கூறலாம்; ஆனால் கூறுமுன் முதலில் இம்மசோதாவின் விதிமுறைகளை நன்கு படித்துப் பார்க்குமாறு வேண்டுகிறேன். தமது மனைவியைக் கைவிட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கூடத் திரும்பிப் பார்க்காத இந்துக்கள் பலருண்டு. இந்துக்கள் தமது சமயத்தைப் பெரிதும் மாற்றிக் கொண்டுள்ளனர். முதல் மனைவி உயிருடன் இருக்கும் போதே பல பெண்களை வைப்பாட்டிகளாக்கிக் கொள்ளும் இந்துக்கள் பலருண்டு. இத்தகைய ஒழுக்கக்கேடான சூழ்நிலையில் நீங்கள் ஏன் உங்கள் கருணை மறத்தையும் வீரத்தையும் காட்டி, பரிதாபத்துக்குரிய அந்த இந்துச் சகோதரிகளுக்கு மணமுறிவை அனுமதிக்கக்கூடாது. நான்கைந்து முறை திருமணம் செய்துகொள்ள இந்து ஆண்கள் அனுமதிக்கப்படுகின்றனர். திருமணம் புனிதமானது என்றால் அது ஆண், பெண் இருபாலார்க்கும்தானே. கணவனுக்குத் தூய்மையாகவும், கற்புடனும், உண்மையுடனும் நடந்துகொள்வது பெண்ணின் கடமை என்றால் ஆணும் அதே கடமைகளுக்குக் கட்டுப்பட வேண்டுமல்லவா? இதில் ஏன் ஒருதலைப்பக்கக் கண்ணோட்டம். கடவுள் ஆண்கள் பக்கமாகத்தான் சாய்ந்துள்ளார் என்றால் அது நமது சமூகத்துக்கோ நாட்டுக்கோ எந்த வகையிலும் பயன் விளைவிக்காது.

மற்றொரு கோணத்திலும் இதனை நோக்குவோம். இன்றைய உலகில் நாட்டின் எல்லைகளுக்கு அச்சுறுத்தலோ போரோ நிகழ்ந்தால், இது பண்டைக் காலப் போர்களைப் போன்று நடத்தப் படுவதில்லை. முழுமையான போராகவே நடத்தப்படுகிறது. கடந்த உலகப் பெரும்போரில் பிரிட்டானிய ஆண்கள் பதுங்கு குழிகளிலும் போர் முனைகளிலும் பணிபுரிந்தார்கள் எனில், அந்நாட்டுப் பெண்கள், நாட்டகப் பொறுப்புள்ள பணிகள் பலவற்றை மேற் கொண்டார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் புகைவண்டிகளை ஓட்டினார்கள்; பேருந்துகளிலும் ஆயுதத் .தொழிற்சாலைகளிலும் பணியாற்றினார்கள். ஆனால் நமது நாட்டிலோ பெண்கள் தாழ்வாக

வும் சுமையாகவும் கருதப்படுதல் நமது தீப்பேறு. நமது நாட்டில் சாதாரண மனிதர்களும் பெண்களைத் தமது காற்செருப்பைப் போன்று மதிக்கின்றனர்; அறுந்து விட்டால் தூக்கியெறிந்து விட்டுப் புதியதாய் வாங்கிக் கொள்ளலாம் என்றும் எண்ணுகின்றனர்.

**மாண்புறு உறுப்பினர் ஒருவர்:** இதுதான் இராஜஸ்தான் மக்களின் கருத்தா?

**திரு. ராஜ் பகதூர்:** இராஜஸ்தானில் மட்டுமல்ல, நாட்டின் கிராமப்புறங்களில் பெரும்பாலோர் கருத்து இதுதான். உயர்நிலைக் குடும்பங்களிலும் நிலைமை இதுதான். இக்கசப்பான உண்மையை நாம் உணரும் காலம் வந்துவிட்டது. நாம் விடுதலை பெற்றதன் விளைவாய் ஏற்பட்டுள்ள புதிய பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமெனில், இவ்வுண்மையை நாம் நன்கு உணர வேண்டும். பாரத வர்ஷம் என அழைக்கப்படும் நமது தாய்த்திருநாட்டை நன்கு பாதுகாக்க வேண்டுமெனில், நமது பெண்களையும் ஆண் களோடு சரிநிகர் சமானமாய் உயர்த்துதல் நமது கடமை. இதை மேற்கத்திய அல்லது புதுமைப் போக்கு என்று ஒதுக்காமல் காலத்தின் தேவை என உணரவேண்டும். பெண்களைப் பற்றிய நமது கண் ணோட்டம் சரியானதாய் அமையவில்லையெனில் நம் நாட்டின் பாதுகாப்புக்கெதிரான அச்சுறுத்தல்களை நாம் திறம்படச் சமாளிக்க முடியாது. நமது சமூகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான தகுதிநிலை அளிக்கப்படாவிட்டால், நாட்டின் மறுசீரமைப்புப் பணியைச் செவ்வையாகச் செய்ய இயலாது, தற்போது அத்தகைய தகுதி நிலை அவர்களுக்குத் தரப்படவில்லையென்பது அப்பட்ட மான உண்மை. இருப்பிலுள்ள சட்டங்கள் சீரமைக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டு எளிய மக்களுக்கும் எட்டுமாறு கொண்டு வரப் படவில்லையெனில், நமது நாட்டுமக்களை ஒருமைப்படுத்துதல் இயலாத பணியாகும்.

இது தொடர்பாக நாட்டில் நாம் இன்று எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் சிலவற்றைச் சுட்ட விரும்புகிறேன். நமது இன்றைய சட்டங்கள், பிரிவி கவுன்சிலில் பிரிட்டிஷ் நீதிபதிகள் தந்த விளக்கங் களின் தொகுப்பாகவே உள்ளன. ஒரே விவகாரம் குறித்து முற்றிலும் முரண்பாடான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பது யாவரும் அறியும் செய்தி. எடுத்துக்காட்டாக ஒரே விவகாரத்தில் இருபுறமும்

சாய்வது போல் வெவ்வேறு தீர்ப்புகள் பல வழங்கப்பட்டுள்ளன. அன்றியும் இன்றைய நிலையில் சட்ட வல்லுநர்கள், வழக்கறிஞர் கள், நீதிபதிகளுக்கு எட்டுமாறுதான் சட்டங்கள் உள்ளன; சட்டம் என்ன என்பது எளிய மக்களுக்குத் தெரியாது. இப்போதைய சட்டங் களை முறைபடத் தொகுத்து பகுத்தறிவுக் கிணங்குவதாய் அமைக்கத் தேவையான வண்ணம் திருத்தி சட்டம் எளிய மக்க ளுக்கும் எட்டுமாறு ஆக்குதல் விரும்பத்தக்கதல்லவா? இல்லையேல் நமது மக்களை இணைத்து ஒன்றுபடுத்தல் என்பது இயலாது போய்விடும்.

சட்டங்கள் முறைபடத் தொகுக்கப்பட வேண்டுமா என்பது அல்ல இன்றைய வினா. இதன் கடுமையான எதிர்ப்பாளர்கள் கூட முறைபடத்தொகுத்தல் தேவையே என்பதை ஏற்கும் நிலைக்கு வந்துவிட்டனர். எனவே எந்த அளவுக்கு முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய கேள்வி. இது தொடர்பாக மூன்று நான்கு கருத்துகளில் கசப்பூட்டும் முரண்பூசல்கள் நிலவி வருகின்றன.....

**மாண்புறு உறுப்பினர் ஒருவர்:** இது பொதுவான விவாதம் அன்று.

**திரு. ராஜ் பகதூர்:** இச்சட்டம் முழுமையாக நாட்டு மக்கள் அனைவருக்குமாக ஆக்கப்பட வேண்டுமென்று கோரிய மாண்புறு உறுப்பினர்கள் சிலர் எழுப்பிய கருத்துகள் குறித்துத்தான் விவாதம் நடைபெறுகிறது.

முதலாவதாக, திருமண, மணமுறிவுச் சட்டங்களைக் குறித்தும் இரண்டாவதாக வாரிசுரிமை குறித்தும் கடுமையான முரண்பூசல்கள் எழுப்பப்பட்டன. இவ்விரு முக்கிய விவகாரங்களைப் பற்றி மட்டும் இப்போது எடுத்துக் கொள்கிறேன். இது குறித்து மசோதா வில் இடம் பெற்றுள்ள விதிமுறைகள், அவற்றுக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள திருத்தங்கள் ஆகிய வற்றை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்வது இயலா தெனில், அவற்றில் சிறிதளவு மாற்றம் செய்யலாம். ஆனால் மணமுறிவு குறித்த அடிப்படைக் கோட்பாடுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இதற்கு எடுத்துக்காட்டு ஒன்று தருவேன். ஒரு மனிதர் இஸ்லாத்துக்கோ அல்லது வேறேதாவதொரு சமயத்துக்கோ மாறினார் எனில், அவரது மனைவியும் குழந்தைகளும் கூட அச்சமயத்துக்கு மாறியாக வேண்டுமென இப்போதைய சட்டம் கட்டாயப்படுத்துகிறது. இத்தகைய கட்டத்தில் நமது பெண்கள் விரும்பினால் இந்து சமயத்திலேயே தொடரலாம் என அனுமதியளித்தல் விரும்பத் தக்கதுதானே? இத்தகைய நிலையில் மணமுறிவே கூடாதென்று கோட்பாட்டு அடிப்படையில் எவரும் மறுக்கவியலாதன்றோ?

வாரிசுரிமையைப் பொறுத்தமட்டில், தந்தையின் சொத்தில் திருமணமான மகளுக்குப் பங்கு தருவதை நான் ஆதரிக்கவில்லை. ஆனால் திருமணமாகாத மகள் இருப்பின், அவளது சகோதரர்க்குச் சமமான பங்கு அவளுக்குக் கொடுக்கப்படவேண்டும். இம்மாற்றம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், கற்றறிந்த நண்பரான பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா அவரது கண்ணோட்டத்தையும் ஏற்றுக் கொண்டதாய் அமையும்.

முடிவாக, இம்மசோதாவை எதிர்ப்பதற்கான காரணங்களை நோக்கினால், சில அரசியல் உள்நோக்கங்களும் எதிர்ப்புக்கான மூல காரணம் எனத் துணிந்து கூறுவேன். தேர்தல்கள் அண்மையில் நெருங்கி வந்துகொண்டிருப்பதால் காங்கிரசைத் தாக்குதற்கு எதை ஆயுதமாய்க் கொள்ளலாம் என்று தேடியவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாகிவிட்டது. தேர்தல்கள் நெருங்குவதால் காங்கிரசின் எதிர்ப்பாளர்கள் இம்மசோதாவை மையமாய்க் கொண்டு மக்களிடையே காங்கிரசுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்ட முயன்று வருகின்றனர். தேர்தல் போராட்டத்தில் இதை ஒரு ஆயுதமமாய்ப் பயன்படுத்த அவர்கள் விரும்புகின்றனர். எனவே நாம் இச்சட்டத்தின் ஒவ்வொரு விதிமுறையும் நிதானமாக நன்கு துருவி ஆராய்ந்து ஒவ்வொரு சிக்கலுக்கும் உகந்த தீர்வை எய்தி மக்களின் மனத்தில் மூட்டப்பட்டிருக்கும் மயங்கங்களையெல்லாம் களைந்து தெளிவான கருத்துக்களை அவர்கள் மனத்தில் ஊன்றுதல் மிகச் சரியான தெளிவான பாதையாகும். கிளை விதிகளை ஒன்றன் பின் ஒன்றாக ஆய்கின்ற கட்டத்தில் பெரும்பாலான மூடநம்பிக்கைகளும், ஐயப்பாடுகளும் நீக்கப்பட்டு முரண்பட்ட கருத்துக்களுக்கு தீர்வுகாணப்பட்டு இணக்கமான கருத்தொற்றுமையை நாம் அடைய முடியும் என்பது தெளிவு. இதன் விளைவாக பொது

மனச்சான்றுக்கும், பொது ஒழுக்கநெறிக்கும் ஊறு செய்யும் எதுவும் மசோதாவில் இடம் பெறாதென உறுதி பூணலாம்.

ஐயா, இந்தச் சொற்களுடன், நான் திருத்தங்களை எதிர்க்கிறேன் என்றும் கிளை விதியை ஆதரிக்கிறேன் என்றும் முடிக்கிறேன்.

(மாண்புமிகு துணை சபாநாயகர் தலைமையேற்கிறார்)

**சேத் கோவிந்ததாஸ்** (மத்தியப் பிரதேசம்): முதலாவதாக நான் கூற வருவது....

**திரு. உசேன் இமாம்** (பீகார்) : ஐயா, தகவல் ஒன்றை வேண்டுகிறேன். டெல்லி மணிக் கூண்டுக்கு நேர்ந்த விபத்து குறித்து பணித்துறை, உற்பத்தி, வழங்கல் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவாரா? டெல்லி மணிக்கூண்டு இடிந்து விழுந்து விட்டது.

**மாண்புறு உறுப்பினர்கள் சிலர்:** அதற்கான நேரம் இதுவன்று.

**சேத் கோவிந்ததாஸ்:** உரை முடிந்தபின்னர் தாங்கள் இதைக் கேட்கலாம்; உரையின் நடுவில் குறுக்கிட்டு அல்ல.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** என்ன நிகழ்ந்தது என்பது குறித்து அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு மிக்க ஆவல் இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறுதற்குரிய தகவல் ஏதேனும் இருப்பின் சேத் கோவிந்ததாஸ் அவர்களின் உரை முடிந்த பின்னர் விபத்து குறித்துக் கூடுதல் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.

**பணி, உற்பத்தி, வழங்கல்துறை அமைச்சர் (திரு. காட்கில்) :** ஒரு மணி நேரத்துக்கு முன்னர்தான் இது குறித்துச் செய்தியறிந்தேன். இரண்டாவதாக, டெல்லியில் இன்று நடைபெற்றது எனது நிருவாகப் பொறுப்புக்கு உட்பட்டதன்று. மணிக்கூண்டு எனப்படும் சொத்து, டெல்லி நிருவாகத்தில், டெல்லி நகராட்சிக் குழுவின் பொறுப்பில் நிருவகிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் இதைப்பற்றி மேலும் தகவல் அறிய வேண்டும் என்பது அவையின்

விருப்பமானால், தகுந்த பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு இன்று மாலை ஐந்து மணியளவில் ஓரளவு தகவல் தரமுடியும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவ்வாறே செய்வோம்; மாண்புமிகு உறுப்பினர் தமது உரையைத் தொடரலாம்.

[1]**சேத் கோவிந்ததாஸ்** (*இந்தி உரையின் மொழிபெயர்ப்பு) : ஐயா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இப்போது தாக்கல் செய்யாதிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என்று கூறவந்தேன். இவ்வாறு நான் கூறுவதால், நான் பழைய மரபுகளையே பின்பற்ற விரும்புகிறேன் என்றும், **ஸ்மிருதிகளிலும் வேதங்களிலும்** கூறப்பட்டுள்ளவற்றையெல்லாம் அப்படியே பின்பற்ற வேண்டுமென விரும்புகிறேன் என்றும் கருதிவிடக் கூடாது. எனக்கு ஓரளவு சமஸ்கிருத மொழியறிவு உண்டு; நான் இந்தியப் பண்பாட்டை நேசிக்கிறேன் எனவே வேதங்களையும் **ஸ்மிருதிகளையும்** அறிவேன்; எந்தவொரு பொருள் குறித்தும் அவை ஒரே கருத்தைக் கூறவில்லை. ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறித்து ஒரு **வேதமோ ஸ்மிருதியோ** ஒரு கருத்தைத் தெரிவித்தால் மற்றொரு வேதத்திலோ **ஸ்மிருதியிலோ** அதற்கு மாறாகக் கூறப்பட்டிருக்கும். நாம் எப்போதுமே அறிவை விரும்புபவர்கள். நமது வரலாற்றிலும் பண்பாட்டிலும் அறிவுக்கே முதன்மை தரப்பட்டுள்ளது. ***'காலபேதம் தர்மபேதம்'*** அதாவது காலம் மாறும்போது அதற்கேற்பச் சமய நெறியும் மாறவேண்டும் என்ற உண்மையை நாம் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டவர்கள். நமக்குச் சீர்திருத்தங்கள் தேவையென்பதையும், சீர்திருத்தங்கள் சட்டங்களின் வழியாகவே நிறைவேற்றப்பட வேண்டுமென்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ***'சதி'*** ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக ராஜா ராம் மோகன்ராய் வாதாடிய நாட்களெல்லாம் எனக்கு நன்கு நினைவிருக்கின்றன. அந்த நாட்களிலும் கூட ***'சதி'*** ஆதரிக்கப்பட வேண்டிய மரபு எனக் கூறியவர்கள் உண்டு. ஈசுவரசந்திர வித்யாசாகர் விதவை மறுமணத்துக்கு ஆதரவாக வாதாடியபோது அவரைப் பலர் வன்மையாக எதிர்த்த நாட்களையும் நன்கு நினைவில் வைத்துள்ளேன். சாரதா சட்டத்தைப் பற்றிப் பலரும் பேசியுள்ளனர். சாரதா சட்டத்தின் விளைவாகக் குழந்தை

1. நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951, பிப்ரவரி 7, பக். 2545-49.

மணம் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளதென்பதையும், இத்தீய வழக்கத்தை ஒழிக்கச் சாரதா சட்டம் பெருமளவில் முயன்றுள்ளது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே நாம் எப்போதுமே பகுத்தறிவுக் கண்ணோட்டத்தையே கொண்டிருந்துள்ளோம் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். நாம் **வேதங்களையும் ஸ்மிருதிகளையும்** கண்மூடித்தனமாகப் பின்பற்றக்கூடாதென்பதையும், சீர்திருத்தத்திற்காக நமக்குச் சட்டங்கள் தேவை என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நேற்று நமது அமைச்சர் கூறிய ஒரு கருத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தச் சட்டம் இந்தியா முழுமையிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் பொருந்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தவர்களைப் பார்த்து அவர் நகைத்தார். நாம் ஒரு வர்க்க வேறுபாடற்ற, சாதிவேறுபாடற்ற சமூகத்தை, இப்போதைய சமூகத்தினின்று முற்றிலும் மாறுபட்ட சமூகத்தை அமைக்கும் வகையில் தற்போது காணப்படும் பல்வேறு சமூகங்களையும் பின்னிப்பிணைய வேண்டுமெனில், பாகுபாடேதுமின்றி நாட்டு மக்களனைவருக்கும் பொருந்தும் வகையிலான சட்டம் ஒன்று தேவையென்பதைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் நேற்று, அவரது தகுதிக்குத் தாழ்வான சில விமரிசனங்களை எடுத்துரைத்தார்; ஒருவேளை என் கருத்து தவறாயிருக்கலாம். எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் அவர் மிக எரிச்சலூட்டப்பட்டு, பொறுமையிழந்து, மசோதாவின் நிறைவேற்றத்துக்கு நாங்களெல்லாம் முட்டுக்கட்டை போடுவதாய் எண்ணிவிட்டார். ஆனால் நிலைமை அதுவன்று; இது பெரும்பான்மையான மக்களின் கருத்து; அந்தப் பெரும்பான்மையோரில் நானும் ஒருவன். அதாவது, இச்சட்டம் இந்தியச் சமுதாயம் முழுமைக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றிப் பொருந்த வேண்டும் என்பதே பெரும்பான்மையோர் கருத்து. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறியவாறு (பொது உரிமை இயல்) சட்டத்தை இரண்டு நாட்களில் தாக்கல் செய்ய முடியுமெனில் அது எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி தரும். (தொடர்ந்து) அதை அரை மணிநேரத்தில் நிறைவேற்ற முடியும் எனில் அதுவும் மிக நன்றே. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இவ்வளவு பொறுப்பான பதவியில் இருந்துகொண்டு, தமது கருத்துக்கு மாறான கருத்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து நகைத்தல் நன்றன்று. அரசியல் அமைப்புச் சட்டத்தில், அடிப்படை உரிமைகள் குறித்த பகுதியிலில்லாவிட்டாலும் முகப்புரையில் கூறப்பட்டிருப்பதாவது:

> ''இந்திய நாட்டின் முழுமையிலும் வாழும் மக்கள் அனைவருக்குமான பொது உரிமையியல் சட்டம் ஒன்றை உருவாக்குதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.''

எனவே, இது அரசியலமைப்புச் சட்டத்திலேயே தெளிவாக உரைக்கப்பட்டுள்ள கருத்து. அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ள மசோதாவோ இக்கருத்துக்கு எதிரானது. வர்க்க, சாதிப் பாகுபாடுகளால் நாம் ஏற்கெனவே பெரிதும் அல்லல் பட்டிருக்கிறோம். நம் நாடு விடுதலையடைந்ததையடுத்து நாம் நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியுள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பிறகு நம் முன்னே கொணரப்பட்டுள்ள முதல் சமுதாயச் சட்ட மசோதா இதுதான், அரசியலமைப்புச் சட்டத்தின் குறிக்கோள்கள் சிலவற்றை இச்சட்டத்தில் நாம் கொண்டு வந்திருக்கலாம்; இச்சட்டத்தை மட்டும் மக்கள் அனைவருக்குமாக இயற்றுவோமானால், அது மிக எளிதில் சாதிக்கப்பட்டிருக்கக் கூடிய இலக்கே. அப்படிச் செய்திருப்பின், இச்சட்டத்தை இப்போது எதிர்ப்பவர்கள் கூடத் தமது எதிர்ப்பினைக் கைவிட்டிருப்பார்கள்.

வெளிப்படையாக யாவர்க்கும் தெரியும் மற்றொன்று பற்றியும் கூறவேண்டும். இம்மசோதாவில் நல்ல கூறுகள் பல உள்ளன. சொல்லப்போனால், கருத்து வேறுபாட்டுக்குரிய ஒரு சில கூறுகளைத் தவிரப் பன்மடங்கு பெருமளவில் நல்ல கூறுகள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. இம்மசோதாவில் அடங்கியுள்ள பல்வேறு அடிப்படைக் கருத்துக்களில் மிக முக்கியமானது ஒன்றுண்டு. சொத்தின் வாரிசுரிமையில் பெண்களுக்கும் பங்கு வேண்டும் எனும் கருத்தே மிகுதியான எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது. திரு. சியாம்நந்தன் சகாயா அவர்களிடம் நான் மிகுந்த மதிப்பு கொண்டிருக்கிறேன்; இருப்பினும் அவர் கூறியவாறு நமது இல்லங்களில் பெண்கள்தான் ஆதிக்கம் செய்கின்றனர் என வாயால் கூறிவிடுதல் எளிது. ஆனால் உண்மை நிலவரம் எத்தகையது என்றால் அலமாரியைப் பூட்டி இது உன்னுடையதுதான் எனக் கூறிவிட்டுச் சாவியை மட்டும் நம் கையில் வைத்திருப்பதற்கொப்பானது தான். பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாமையால் தோன்றும் விளைவுகளை நாம் பார்த்தும் உணர்ந்துமிருக்கிறோம். பல பெண்களின் வாழ்க்கை எத்தகையது என்பதையும் நன்கறிவோம். கற்பும் கண்ணியமும் வாய்ந்த செல்வக் குடும்பத்துப் பெண்கள் பலர் தங்களுக்கெனச் சொத்து இல்லாமையமையால் தமது கௌரவத்

தையும், தகுதிநிலையையும் இழந்து துன்புறும் அவலம் இல்லையென்று திரு. சியாம்நந்தன் சகாயாவோ, அவரையொருத்த கருத்துடையவர்களோ மறுக்க இயலுமா? எனவே, என்னைப் பொறுத்த மட்டில், பெண்களுக்குச் சொத்தில் வாரிசுரிமை தேவை என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை. ஆனால் அந்த உரிமை தந்தையின் சொத்திலா, மாமனாரின் சொத்திலா என்பது தான் விடை காணப்பட வேண்டிய வினா.

**கியானி ஜி.எஸ். முசாபிர்:** மாமனார் சொத்தில் பங்குபெற மறுப்பேதும் இல்லை.

**சேத் கோவிந்த தாஸ்:** இது மிகப் பெரிய கேள்விக்குறி. இன்று நமது திருமண அமைப்பில் மனைவி கணவன் வீடு சென்று வாழுமாறு அமைத்திருக்கிறோம். சமுதாயத்தில் திருமணம் என்ற அமைப்பே இல்லாதிருந்த காலமும் உண்டு. மகாபாரதத்தில் வரும் **உதாலக், ஸ்வேதகேது** ஆகியோரின் கதை திருமணம் என்பதே இல்லாத காலங்களும் இருந்ததுண்டு என்பதையே தெளிவாக உணர்த்துகிறது. அதைத் தொடர்ந்து தாய்வழிக் குடும்பங்களின் காலம் வந்தது; அதில் கணவன் மனைவியின் வீட்டில் சென்றுதான் வாழ்வான்; குடும்பச் சொத்துக்கு அவர்களின் பெண் மக்களே வாரிசாவர். இன்றும்கூட மலபாரைப் போன்ற சிற்சில இடங்களில் அத்தகைய அமைப்பு நிலவுகிறது. பின்னர் தந்தை வழிக் குடும்பத்தின் காலம் வந்தது. நமது சமூக அமைப்பின் பெரும் பகுதி தந்தைவழிக் குடும்ப அமைப்பேயன்றித் தாய்வழிக் குடும்ப அமைப்பு அன்று. எனவே இத்தகைய சமூக அமைப்பில் தந்தையின் சொத்தில் பெண்ணுக்குப் பங்கு தரலாமா என்பதே இன்றைய பெரும் சர்ச்சைக்குக் காரணம். பெண்களுக்குச் சொத்தில் வாரிசுரிமை என்பதைப் பொறுத்தமட்டில், அவ்வுரிமை கட்டாயம் தேவையென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்; அதே சமயம் மணமாகாத பெண்ணுக்குத் தந்தையின் சொத்திலும், மணமான பெண்ணுக்குக் கணவனின் சொத்திலும் உரிமை தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இம் மசோதாவின் வேறுசில கிளை விதிகள் குறித்தும் கருத்து வேற்றுமை எழலாம். இம்மசோதாவைப் பொறுத்தமட்டில் இரண்டு செயற் கூறுகளை அது உள்ளடக்குகிறது. முதலாவதாகத் தற்போது நிலவும் பல்வேறு சட்டங்களையும் உள்ளடக்குவதாய் அமைந்துள்ளது. இரண்டாவதாகச் சமூக சீர்திருத்த நோக்கில் மேலும் சில கிளைவிதிகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. நான்

ஏற்கெனவே கூறியவாறு, மசோதா இந்தக் கட்டத்தில் தாக்கல் செய்யப் படாதிருந்தால் அது மிக ஏற்றதாயிருந்திருக்கும். நமது குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் காங்கிரஸ் தலைவரா யிருந்தபோது, இத்தகையதொரு மசோதாவைக் கொண்டுவர வேண்டாமென்று மிக வேண்டினார். எனவே இம் மசோதாவை இப்போது கொண்டுவர வேண்டாம் என்பதே அவர் கருத்து. ஆனால், இப்போதைய நிலையில் இம் மசோதா திரும்பப் பெற்றுக் கொள்ளப் படுமானால், அதற்கான காரணம் குறித்துத் தவறான விளக்கங்கள் அளிக்கப்படும். அடுத்த தேர்தல் மக்களை எதிர் நோக்கியுள்ளது. தேர்தல்களுக்கு நான் அவ்வளவாக முக்கியத்துவம் அளிப்ப தில்லை; மேலும் இப்போது இம்மசோதா நிறைவேற்றப்பட்டு, இது நிறைவேற்றப்படக் காங்கிரஸ்தான் காரணம் என்று எதிர்ப் பிரச்சாரம் செய்யப்பட்டாலும் அதனால் தோல்வியுறும் அள வுக்குக் காங்கிரஸ் ஒன்றும் வலிவில்லாத கட்சியன்று. அப்படித் தோல்வியுறும் அளவுக்குச் சிறிய கட்சிதான் காங்கிரஸ் எனில் அது விரைவிலேயே தோல்வி கண்டு மறையட்டும். எனவே தேர்தலை முதன்மையாக வைத்து அதன் வெற்றி தோல்வி வாய்ப்புகளின் அடிப்படையில் செயல்படுவோரிடமிருந்து நான் பெரிதும் மாறுபடு கிறேன். சுயராஜ்யக் கட்சி முதன் முதலாய்த் தேர்தலில் இறங்கிய 1923 மற்றும் 1926ஆம் ஆண்டுகள் எனக்கு நன்கு நினைவிருக் கின்றன. அப்போது நான் மத்திய கவுன்சிலுக்கு ஜமீன்தார் கட்சி யின் வேட்பாளனாகப் போட்டியிட்டேன். காங்கிரசும் ஜமீன்தார் களும் எதிரணியினர் என்றும் இருசாராருமாய் ஒரே தரப்புக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் அப்போது கூறப்பட்டது; எனினும் அப்போது எனக்கெதிராக எவரும் போட்டியிடவில்லை. அதன் பிறகு 1925இல் மாநில கவுன்சிலுக்கு நான் போட்டியிட் டேன்; அப்போதும் மாநிலக் கவுன்சிலுக்கான வாக்காளர்கள் எவரும் காங்கிரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்று கூறப்பட்டது. சர் மானெக்ஜி தாதாபாய், சர் ஹரிசிங் கௌர் ஆகிய இருவரும் எனக்கெதிராய்ப் போட்டியிட்டனர். அப்போது நான் நான்கில் மூன்று பங்கு வாக்குகள் பெற்று வெற்றிபெற்றேன். எனவே, அரசி யலில் தீண்டத்தகாதவரென எவரையும் ஒதுக்கும் நிறுவனமல்ல காங்கிரஸ் என்றும், இச்சட்டத்தை நிறைவேற்றுவதால் தோற்று விடக்கூடிய கட்சியுமல்ல அது என்றும், அப்படியிருப்பின் நாம் எப்போதும் தேர்தல் பயத்திலேயே காலங்கடத்திக் கொண்டிருக்க நேருமென்றும் கருதுகிறேன். எனது கருத்தென்னவென்றால், நாம் இம்மசோதாவை ஆதரிப்போமாயின், நமது தலைவரான பிரதமர் அவர்கள் இது நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கருதுவர் ஆயின்,

தேர்தல் பயம் காரணமாக நாம் இதை நிறைவேற்றத் தயங்குதல் பெரும் தவறு என்றே கருதுகிறேன். நாம் இதை நிறைவேற்ற விரும்பவில்லையெனில் அதுவேறு விஷயம். ஆனால் தேர்தல் பயம் காரணமாகவே நாம் இதை நிறைவேற்றத் தவறுவோமாயின் அதைவிடத் தீங்கு வேறேதுமில்லை. தேர்தல் பயம் காரணமாக இம்மசோதாவை ஒத்திவைக்கலாம் என விரும்புவோர்க்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இந்த மசோதா நிறைவேற்றப்படாதென்றால், காங்கிரஸ்காரர்களை மீண்டும் தேர்ந் தெடுத்தாலும் பயனில்லை, இம்மசோதா விவகாரம் போலத்தான் மீண்டும் செயல்படுவார்கள் என்று பேசப்படும். எப்படிப்பட்ட கொடூர சித்தரிப்புகள் செய்யப்படும் என்பது இப்போது நாம் எண்ணிப் பார்க்கவும் இயலாத ஒன்று. எனவே இம்மசோதாவை நாம் தேர்தல் தோல்வி பயத்தின் பின்னணியில் அணுகலாகாது. மாறாக அதன் தகுதி கருதியே முடிவு செய்ய வேண்டும். இது தொடர்பாக நான் ஏற்கெனவே கூறியதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்; இம் மசோதாவில் இரண்டு பகுதிகள் உள்ளன, ஒன்று ஒருங்கிணைத்தல், மற்றது சமூகச் சீர்திருத்தங்கள். சமூகச் சீர்திருத்தம் தொடர்பான விதிமுறைகள் பலவற்றை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவற்றை யெல்லாம் நீக்கிவிட வேண்டும்; ஏனெனில் அவற்றுக்குரிய காலம் இதுவன்று. அவ்வாறே கருத்து வேறுபாட்டுக்கு இடமளிக்கும் பகுதிகளும் நீக்கப்பட்டு ஒருங்கிணைப்புக்குரிய பகுதிகள் மட்டுமே இப்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்விரு பகுதி களுக்கிடையே தெளிவான வேறுபாட்டை உணர்கிறேன், எனவே எனது ஆலோசனைக்கு உரிய கவனம் சட்ட அமைச்சரால் தரப்பட வேண்டுமென விரும்புகிறேன். ஒருங்கிணைத்தலைப் பொறுத்த மட்டில், அது அவசியம் செய்யப்பட வேண்டுமென விரும்புகிறேன்; அத்துடன் நம்மிடையே கருத்து வேறுபாடுக்கு இடமளிக்காத ஏனைய பிற பகுதிகளும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று விரும்பு கிறேன். எந்தவிதிமுறைகளுக்கெதிராகக் கருத்து வேறுபாடுகள் நிலவுவதுடன், நாட்டில் பலத்த எதிர்ப்பியக்கமும் நிலவுகிறதோ அவற்றை விட்டுவிட வேண்டும். வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் அடுத்த தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் சமூகச் சீர்திருத்தம் குறித்த விதிமுறைகளை இச்சட்டத் திற்கான திருத்தங்களாக நிறைவேற்றுவோம். இத்தகைய அணுகு முறை இருதரப்புக்குமே உரிய இடமளிக்கும். அதாவது, இருக்கின்ற வெவ்வேறு சட்டங்களை ஒருங்கிணைக்க உதவுவதுடன், கருத்து வேறபாடுகளைத் தவிர்க்கவும் அது உதவும்.

செய்யப்பட வேண்டுவது மேலும் ஒன்று உண்டு. அருமை நண்பர் ஐஸ்பத் ராய் கபூர் அவர்கள் கூறியவாறு இச்சட்டம் எல்லோருக்குமான கட்டாயச் சட்டமாக ஆக்கப்படக் கூடாது. சமூகச் சீர்திருத்தங்கள் சட்டத்தின் வாயிலாகவே நிறைவேற்றப்பட வேண்டுமென்பது மெய்தான்; ஆனால் அதனை மேற்கொள்ளு முன்பு சீர்திருத்தங்களுக்கு ஆதரவாகப் பொது மக்களின் கருத்தைத் திரட்ட வேண்டியது அவசியம். எனவே, இச்சட்டத்தை மக்கள் அனைவரையும் பிணிக்கும் சட்டமாக இயற்றாமல், இதனை ஏற்றுக்கொள்ள முன்வருவோர்க்கு மட்டுமே பொருந்துமாறு இயற்றக் கோருவதொன்றும் மோசமான ஆலோசனையல்ல. எனவே, இந்த மசோதா இப்போது கொண்டுவரப்படாதிருந்தால் மிக நன்றாயிருந்திருக்கும் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு நோக்குவோமாயின், திரு ஐஸ்பத் ராய் கபூரின் திருத்தத்தையேற்று இச்சட்டம் காலப்போக்கில் அனைவருக்கும் பொருந்துமாறு விதி வகுக்கவோ, விதி வகுக்க முயலவோ வேண்டும். அதே சமயத்தில் இச்சட்டத்தை மக்களனைவரின் மீதும் வலிந்து திணிக்காதிருக்கவும் ஆவன செய்ய வேண்டும். ஏற்க விரும்புவோர்க்கு மட்டுமே பொருந்துமாறு அது இயற்றப்பட வேண்டும், அல்லது சர்ச்சைக்குரிய பகுதிகளை இப்போதைய நிலையில் நீக்கிவிடுவோம், ஒருங்கிணைப்புப் பகுதி குறித்த அனைவருக்கும் ஒன்றுபட்ட கருத்து இருப்பதால் அதைத் தடையின்றி நிறைவேற்றலாம்.

[1]**திரு. உசைன் இமாம்:** ஐயா, நமதருமை நண்பர் சேத் கோவிந்ததாஸ் அவர்கள் அருமையானதோர் உரை நிகழ்த்தியுள்ளார். அவரைப் போன்றே நானும் எனது தாய்மொழியில் உரையாற்ற விரும்புகிறேன்.

**பேரா. ரங்கா:** ஆங்கிலத்தில் பேசினாலென்ன? நாங்களெல்லாம் புரிந்து கொள்வோமே.

**திரு. உசைன் இமாம்:** இந்து சட்டத் தொகுப்பு என எண்ணிப்பார்த்தால், நான் சாதாரணமாக இந்த விவாதத்தில் கலந்து கொண்டிருக்க மாட்டேன்; ஏனெனில் இது எனது சகோதர சமுதாயம் ஒன்றுக்கு என இயற்றப்படுவதால் அச்சமுதாய மக்கள் தங்களுக்குத் தேவை என்னவென்று தீர்மானிக்க உரிமை பெற்றிருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

★ நா.வி., தொகுதி VIII, பகுதி II, 1951 பிப்ரவரி 7, பக். 2550-55.

**திரு. தியாகி** (உத்தரப் பிரதேசம்): திருத்தங்களின் வாயிலாய் இதன் வரம்பு உங்கள் மீதும் செல்லும்.

**திரு. உசைன் இமாம்** : அக்காரணத்தால் தான் நான் பேச எழுந்துள்ளேன்.

மாண்புறு நண்பர்களில் சிலர் எம்மையும் இச்சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வர ஆவல் காட்டுகின்றனர். எமது அமைப்பினும் மேம்பட்டதாக ஒரு பொதுச் சட்டம் கொண்டுவரப்படுமெனில் அவ்வமைப்பின் கீழ் இணைவதற்கு எங்களிடம் எதிர்ப்பு ஏதும் இராது. ஆனால் இவ்வமைப்பு மிகவும் பிற்பட்டதாயுள்ளது என்பதுடன் நீங்கள் எந்த அளவுக்கு உங்களைத் தாழ்த்திக் கொண்டுள்ளீர்களோ அதே அளவுக்கு எங்களையும் கீழிழுக்க முயல்கிறீர்கள் என்பதே எனது குற்றச்சாட்டு. எனவே உங்கள் அளவுக்குத் தாழ்ச்சியடைவதிலிருந்து நாங்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்றே விரும்புகிறேன்.

இந்துச் சட்டத்தொகுப்பு மசோதாவின் பின்னணியில் ஒரு மிக நீண்டதொரு வரலாறே இருக்கிறது என்பதைக் கூறியாக வேண்டும். ஒரு கட்டத்தில், 1944-45ஆம் ஆண்டில் இந்துச் சட்டம் குறித்து நியமிக்கப்பட்ட குழுவில் பங்கு பெறுகின்ற வாய்ப்பு பெற்றிருந்தேன். வலிமை குறைந்த பாலினரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்களிடம் எனக்கு இயல்பாகவே அனுதாபம் உண்டு. எந்தவொரு சமுதாயத்திலோ, நாட்டிலோ தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட பிரிவினர் இருக்கின்றார்களோ, அந்த நாடோ, சமுதாயமோ முன்னேற்றம் காண்பது இயலாது என்று நம்புகிறேன். சட்டத்தின் முன்னர், குறிப்பாக வாரிசுரிமையும் பிற உரிமைகளும் பொறுத்த மட்டில் ஒவ்வொருவருக்கும் சமத்துவம் என்பது முற்றிலும் கட்டாயமான தேவையாகும். ஆனால் பிறர் உணர்வுகளைப் புறக்கணித்துச் செயல்படுதல் எங்களுக்குப் பயனற்ற வேலையாகும். நான் உணர்வது ஒருபுறமிருக்க, ஏனையோர் உணர்வதென்ன என்பதை நான் அறிதல் வேண்டும். வல்லாண்மை என்பது அறவே கூடாது என்பதைத் தாங்களும் மிகக் கடுமையாகவே உணர்த்தியுள்ளீர்கள்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவினை முடித்த நாள் நாம் என்றும் நினைவு கூரத்தக்க பொன்னான நாள். அப்போது

அரசியலமைப்புச் சட்டப் பேரவையில் உரையாற்றிய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> ''இந்தியாவைப் போன்று, மக்களாட்சி நெடுங்காலம் புழக்கத்திலின்மையால் மக்களாட்சிக்குப் புதிதெனக் கருதத் தக்க நாடு ஒன்றில் மக்களாட்சி முறையழிந்து சர்வாதி காரத்துக்கு இடமளிக்கின்ற அபாயம் எப்போதுமே உண்டு. புதிதாய் உருவாகியுள்ள இம்மக்களாட்சி அதன் வடிவத்தில் மாற்றம் இன்றி (மக்களாட்சி என்ற போர்வையிலேயே) நடைமுறையில் சர்வாதிகாரத்துக்கு இடம் கொடுத்தற்கு வாய்ப்பு மிக உண்டு. மிகுந்த பெரும்பான்மையான (தேர்தல்) வெற்றியின் விளைவாய், இரண்டாவது வகை சர்வாதிகாரம் என்பது மெய்ம்மை நடைமுறையாய் உருவாவதற்கான ஆபத்து மிக அதிகமாகவே உள்ளது.''

மாண்புமிகு அமைச்சர் அவர்களை, அவரது உரையின் அடிப்படையிலேயே, இந்திய நாட்டின் முப்பத்தாறு கோடி மக்கள் அனைவரும் கட்டாயமாக இச்சட்டத்தின் வரம்புக்குள் வர வேண்டு மென்று இந்த அவை சட்டம் நிறைவேற்றுமெனில், அது சர்வாதி காரம் ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன். பழமைவாதிகள் சமூகத்தின் முன்னேறிய பிரிவு மக்களுக்கு முற்போக்குப் பாதையில் செல்ல அனுமதி மறுத்ததைப் போன்ற செயல்தானே இது. மிகப் பெரும்பான்மையோர் மீது சிறுபான்மைக் கூட்டமொன்று செலுத்தும் சர்வாதிகாரமே இது. எனதருமைச் சகோதரிகளுக்கும், சீர்திருத்தச் சகோதரர்களுக்கும் உங்கள் உள்ளத்தையே தொட்டுப் பாருங்கள் என்று கூற விரும்புகிறேன். எதிலும் குறிக்கோளைக் கனிவிக்க நியாயமான வழியொன்று இருக்கும். முழுக்களமும் உங்கள் முன்னே பரந்து கிடக்கின்றது. பழைமைப் பற்றாளர்கள் மூர்க்கமாக எதிர்க்க வில்லை என்பது மட்டுமல்ல, தங்கள் நிலையைச் சமாளித்துக் காத்துக் கொண்டு பின்வாங்கிக் கொண்டும் இருக்கிறார்கள், தங்கள் தோல்விமுகப் போராட்டத்தில் சீர்திருத்தவாதப் போர்வையையும் அணிந்து பார்க்கின்றனர். அவர்கள் போராட்டமும் உந்தமிழந்து கொண்டுதான் இருக்கிறது. தடுக்கவொண்ணாத விசையை நீக்கற் கரிய முட்டுத்தடை தடுத்துக் கொண்டிருக்க முனைதல் காலங் காலமாகவே தொடரும் போக்குதான். ஆனால் முட்டுத் தடையின்

கணம் நாளுக்கு நாள் இலகுவாகிக் கொண்டேயிருப்பதுடன் அதன் ஆணிவேர்களும் நாளாக நாளாக நெக்குவிட்டுக் கொண்டுள்ளன. எனவே, பழைமையாளர்கள் கடந்த காலத்தைப் போன்று பிடிவாத மாக இப்போது நடந்து கொள்ள மாட்டார்கள். அதற்காகச் சீர்திருத்த வாதிகள் போர்க்கோலம் பூணுதல் தேவைதானா? தாங்கள் நினைப்பது தான் மக்கள் அனைவருக்கும் நல்லதென்று அந்த நாட்களில் பழைமை வாதிகள் வல்லாண்மை செலுத்தியதைப் போன்று இன்று சீர்திருத்தவாதிகள் செய்தல் தகுமா? மக்கள் அவற்றை மிக நல்லன என்று ஏற்றுக்கொள்ளாமல் கேட்டினும் கேடாகவன்றோ கருதுகின்றனர். இதை நீங்கள் எதற்காகச் செய் கிறீர்கள்? இதுதான் இன்றைய சிக்கல் என்பதால் எனது சமுதாயமும் இதில் அக்கறையோடு சேருகிறது.

நம்முன் கொண்டுவரப்பட்டுள்ள இச்சட்டத்தின் மூலம் நீங்கள் உருவாக்க விரும்பும் சமுதாய அமைப்பை விட எமது சட்ட அமைப்பும், எமது சமுதாயத்தில் செல்வத்தின் பகிர்மான அமைப்பும், மிகுந்த மக்களாட்சிப் பண்பும், சம தருமப் பண்பும், சொல்லப்போனால் பொதுவுடைமைப் பண்பும் வாய்ந்திருப்பதாக நாங்கள் உணருகிறோம்.

கிளைவிதி 2க்கான திருத்தங்களில் முக்கியமானவற்றை மூன்று வகையாய்ப் பகுக்கலாம். முதலாவதாக, சில திருத்தங்கள், குறிப்பாகத் தொகைப் பட்டியலில் 13-ஆவது, 14ஆவது ஆகியவை, மசோதாவின் ஆளுகை வரம்பை விரிவாக்கக் கோருபவை. அடுத்து 18-வது திருத்தத்தைப் போன்ற சில மசோதாவின் ஆளுகை வரம்பைக் குறைக்குமாறு கோருபவை. மூன்றாவது வகைத் திருத் தங்கள், சட்டத்தின் ஆள்வரம்பை, அதற்குட்படுவதாக விரும்பி ஏற்றுக் கொள்பவர்களுக்கு மட்டும் என்று குறுக்க முனைகின்றன. இவையெல்லாவற்றுக்கும் பொதுவாக நடுத்தன்மையான கருத்து திரு. ஜஸ்பத் ராய் கபூர் அவர்களுடையதேயென்றும் அது ஆழ்ந்து கருதி ஏற்கப்பட வேண்டியது என்றும் கருதுகிறேன்; டாக்டர் அம்பேத்கர் அவர்களால் நம் முன்வைக்கப்பட்டுள்ள சட்டத்தை விடச் சிறந்ததொரு சட்டத்தை அது நல்குமா என்பதை இவ் அவை கருதிப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் தமது விருப்பத் திற்கு மாறானதாயினும் இதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கலாகாது.

அவையின் கருதலுக்காகச் சில உண்மைகளை உரைக்க விரும்புகிறேன்; டாக்டர் அம்பேத்கர் அவர்கள் திருத்தங்களின் வாயிலாக உருவாக்க முனையும் சட்டம், பொறுக்குக் குழுவின் பரிந்துரையிலிருந்து கணிசமாக மாறுபட்டுள்ளது என்பதும், அதன் விளைவாக மறு சுற்றறிவிப்பின் வாயிலாக இத்திருத்தங்களுக்கு முந்தைய வடிவில் நாட்டு மக்கள் இதையேற்றுக் கொள்ள விரும்புகிறார்களா அன்றித் திருத்தங்களுடனா என்ற கருத்தாய்வு நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அதற்கான அவகாசம் இல்லை என்பதுமே அவ்வுண்மைகள். இந்த அவை கலையும் கட்டத்தில் இருக்கின்றது. மிஞ்சிப் போனால், அதுவும் போரின் விளைவான விரும்பத்தகாத திசையில் காணப்படும் போக்குகளால் அன்றி, மேலும் சில மாதங்களுக்கே இந்த அவை நீடிக்கும். பழைமைப் பற்றாளர்களின் சவாலை இப்போது எதிர்கொள்வது நன்று அல்லவா என்று பெண் உறுப்பினர்களையும் சீர்திருத்தவாதிகளையும் கேட்கிறேன். திரு. ஜஸ்பத் ராய் கபூர் அவர்களின் திருத்தம் கோருவதன்படி, இச்சட்டத்தின் கீழ் வந்து அதன் ஆளுகைக்குட்பட எந்த அளவுக்குப் பொது மக்களின் ஆதரவை உங்களால் திரட்ட இயலும் என்பதே இப்போதைய கேள்வி. அதை அறியத் தேர்தலை விடச் சிறந்த வாய்ப்பு ஏதுமில்லை. நாட்டின் வயது வந்த குடிமக்கள் அனைவரும் வாக்குச் சாவடிகளுக்கு வரப்போகிறார்கள். வாக்குச் சாவடிகளில் வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்கின்ற வேளையில் கூடவே பதிவேடு ஒன்றையும் வைத்து, இந்தச் சட்டத்தின் ஆளுகைக்குள் வரவிரும்பும் வாக்காளர்கள் அப்பதிவேட்டில் தம் விரல் ரேகையை வைப்பதன் மூலம் தமது விருப்பத்தைப் பதிவு செய்யலாம் என ஏற்பாடு செய்வோம் எனில், வாக்குப் பதிவின் முடிவில் இதற்கான மக்கள் தீர்ப்பும் கிடைத்து விடும். அதன் அடிப்படையில் நீங்கள் பழைமையாளர்களை எதிர்கொண்டு நாட்டுமக்களில் மிகப் பெரும்பான்மையோர் இச்சீர்திருத்தத்தை விரும்புகிறார்களென நிறுவ முடிந்தால் பழைமையாளர்கள் தாமே பின்வாங்குவர்; அந்த நாள்தான் சீர்திருத்தவாதிகளின் மெய்யான வெற்றித் திருநாள். ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை. மக்களை உங்கள் கருத்துக்கு ஆதரவாகத் திரட்டச் சீரிய முயற்சிகளை நீங்கள் செய்யாமல், அவர்கள் இதை விரும்பவில்லை என்று பரவலான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டும், அதற்கு மாறாக மக்கள் இதனை விரும்புகிறார்கள் என்றும் உங்களால் மெய்ப்பிக்க இயலாத நிலைமையில், அதை வலிந்து திணிக்கும் பொறுப்பை இந்த அவையின் மீது ஏன் சுமத்த விரும்புகிறீர்கள்?

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அருமை நண்பர் ஜஸ்பத் ராய் கபூர் அவர்களின் திருத்தத்தை அப்படியே முழுமையாக

ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லாவிட்டால், அவர் குறைந்தது ஷரியத் சட்டத்தின் எடுத்துக்காட்டையாவது பின்பற்றி சட்டத்தின் ஒரு பகுதியை அனைவருக்கும் கட்டாயமானதாகவும், எஞ்சிய பகுதிவிரும்பி ஏற்றுக் கொள்வதாய்ப் பதிவு செய்து கொள்பவர் களுக்கு மட்டும் பொருந்துவதாகவும் இயற்றலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது இந்த இரண்டாவது ஆலோசனை இதுவே.

**திரு. ஜே.ஆர். கபூர் :** அவை எந்தெந்தப் பகுதிகள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து உரைப்பாரா?

**திரு. உசைன் இமாம்:** இச்சட்டத்தில் கடுமையான எதிர்ப்பினை விளைவிக்கும் பகுதிகள் சில உள்ளன என்பதைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக மகளுக்குச் சொத்தில் பங்களித்தலுக்குத் தாங்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பதைச் சுட்டலாம். நீங்கள் விரும்பினால் இந்தப் பகுதியை அனைவருக்கும் பொருத்த வேண்டியதில்லை என்று முடிவு செய்தால், இப்பகுதி அதாவது, அதிகாரம் IV, இதனை விரும்பி ஏற்றுக்கொள்பவர்களுக்கு மட்டுமே பொருந்துமென்று விதிமுறை வகுக்கலாம்.

சொத்துச் சிக்கல் தொடர்பான டாக்டர் அம்பேத்கரின் திருத் தங்கள் தோற்றுவிக்கக்கூடிய கடுமையான அபாயங்கள் குறித்தும் நான் எச்சரிக்க விரும்புகிறேன். மதிப்பு மிக்க நண்பர் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா அவர்கள் பெண்கள் திருமணமாகாமல் இருக்கும் போது தந்தையின் சொத்தில் பங்குபெற வேண்டுமென்றும், பின்பு திருமணமாகும்போது மாமனார் இல்லத்தில் கணவனின் சொத்தில் பங்கு பெற வேண்டுமென்றும் ஆலோசனை தெரிவித் துள்ளார். ஆனால் மணமுறிவு பெற்ற பெண்களை மறந்து விடக் கூடாது. அவர்களுக்காக நவீன மனு என்ன ஏற்பாடு செய்துள்ளார்? கணவன் சொத்தின் பங்கை இழக்கும் மணமுறிவு பெற்ற பெண் களுக்காக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எவ்வித ஏற்பாடும் செய்ய வில்லை. அவர் வகுத்துள்ள ஏற்பாட்டின்படித் திருமணமாகாத பெண்ணுக்கு அரைப்பங்கும், திருமணமான பெண்ணுக்குக் கால் பங்கும் என்பதில் எவ்வித மாற்றமும் இன்றி நிலையான பங்காகவே இருக்கும். ஆனால் பண்டிட் தாகூர்தாஸ் அவர்கள் மணமுறிவுற்ற பெண்களுக்குப் பங்கேதும் தரப்பட வேண்டுவதில்லை என்று கூறு கிறார். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் ஏற்பாட்டின்படியாவது அவளுக்குக் கால்பங்கு சொத்து கிடைக்கும். ஆனால் பண்டிட் தாகூர் தாஸ் ஆலோசனைப்படி மணமானவுடன் அதை அவள் இழந்து

விடுவாளாதலின் மண முறிவுக்குப் பின்னர் அவள் ஒன்றுமற்று நிற்பாள்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா :** (அவசியமில்லை) எனது ஆலோசனைப் படிப் புதிய கணவனின் சொத்தில் அவளுக்குப் பங்கு உரிமையுண்டு.

**திரு. உசைன் இமாம்:** அவள் மறுமணம் செய்து கொள்ளா விட்டால்? டாக்டர் அம்பேத்கர் அவர்களது ஏற்பாட்டிலுள்ள மற்றொரு ஆபத்து, அது ஒழுக்கக் கேட்டுக்கு வழிவகுக்கக் கூடும்; திருமணம் செய்துகொண்டால் ஒரு பெண் தனது சொத்தில் பாதியை இழக்க நேரிடும் என்பதால், அதாவது தந்தையின் சொத்தில் கால் பங்குதான் கிடைக்கும் என்பதால் ஒழுக்கக்கேட்டுக்கு வழிவகுக்கும். செல்வந்தப் பெண்கள் ஒருபோதும் ஏழைகளை மணக்க மாட்டார்கள்.

**டாக்டர் அம்பேத்கர்:** செல்வந்தர்கள் குறித்து அவ்வளவு அக்கறை ஏன்?

**திரு. உசைன் இமாம்:** தற்போதைய சமூக அமைப்பை மாற்றிக்கொண்டு, மாண்புமிகு நண்பர் பிரிஜேஸ்வர் பிரசாத் அவர்கள் பரிந்துரைக்கும் மாஸ்கோ - பீகிங் அச்சுக் கூட்டில் போய்ச் சேர நீங்கள் கருதாத வரையில், சொத்து, மூலதனம் ஆகியன குறித்து நாம் அக்கறை காட்டியே ஆகவேண்டும். அந்த நாள் வரும்போது இவற்றில் அக்கறை காட்டுவதை விட்டுவிடலாம்.

பிறவி மக்களாட்சியாளரான டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வாக்காளர்களைக் குறித்துத் தாழ்வான கருத்துக்களைத் தெரிவித்தது எனக்கு மிக வியப்பையே அளித்தது. நமது வாக்காளர்கள் எவ்வளவு தான் அறியாமை மிக்கவர்களாயிருப்பினும், நமது மக்களாட்சியின் பாங்கினை அறியக்கூடிய ஒரே உரைகல் அவர்கள்தானே. அதுவும் நீக்கப்பட்டு விட்டால் நமது மக்களாட்சி என்பது பொருளற்று, உயிரற்று வெறும் பொம்மையாய்ப் போய்விடும். இட்லர் என்ன செய்தார் என்பதை எண்ணிப்பாருங்கள். அவரும் தேர்தல்கள் நடத்தினார். ஆனால் அவர் உருவாக்கிய அமைப்பில் தேர்தல்கள் (மாண்புறு உறுப்பினர் ஒருவர்: எளிதாக்கப்பட்டன) எளிதாக்கப் படவில்லை; மாறாக ஒரு சர்வாதிகாரியின் வல்லாட்சிக்கு அவை போர்வையாக அமைக்கப்பட்டன. வாக்காளர்களுக்கு முடிவெடுக்கும் உரிமை ஏதும் கிடையாதென்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களே

விரும்பியதை விரும்பியவாறு செய்ய முழு உரிமையும் கொண்டவர்கள் எனும் கோட்பாட்டை நாம் ஏற்றுக் கொண்டால், அதே நிலைமைதான் இங்கும் உருவாகும்.

மத்தியச் சட்டமன்றத்தில் இருபதாண்டுகள் பணியாற்றிய நான், இந்த அவையின் சட்டமியற்றும் தகுதியைக் கேள்விக்குறியாக்குவதில் கடைசி நபராகத்தான் இருப்பேன். எனினும், இத்தகைய முக்கியமான மசோதாவை நிறைவேற்றும் பொறுப்பை, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அமையவிருக்கும் புதிய அவைக்கு விட்டுவிடுதல் நன்று அல்லவா? மக்களின் கருத்தறிந்து செயல்படுதற்கான வழிமுறையாகவே இதனை நான் உரைக்கிறேன். நாம் வாயளவிலேனும் மக்களாட்சி நடத்தும் வரை வாக்காளர்களே நமது தலைவர்கள் என்பது உறுதி. நமது தலைவிதியை நிர்ணயிப்பவர்களும் அவர்கள்தான். இதுவோ அனைவரையும் பாதிக்கக்கூடிய செயல்பாடு. பொறுக்குக் குழுவின் அறிக்கையின்படியிலான மசோதா, நமது அரசியலமைப்புச் சட்ட மாற்றத்தின் விளைவாக, ஒவ்வொரு தனிச்சொத்தையும் பாதிக்கப் போகிறதென்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். நிலச் சொத்து என்பது முழுமையாக மையச் சட்டப் பேரவையின் பொருண்மைக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதாகையால், ஒரு ஏக்கர் பரப்புள்ள சிறு பண்ணைகள் கூட இம்மசோதாவின் வரம்பிலிருந்து விடுபடவியலாது. அவ்வாறிருக்க பொறுக்குக் குழுவின் அறிக்கையில் இம்மசோதாவினால் பதினைந்து முதல் பதினாறு விழுக்காடு வரையான மக்கள் மட்டுமே பாதிக்கப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. எனவே நிலம் மையச்சட்டப் பேரவையின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், தேர்வுக் குழுவைக் கூடக் கலந்து ஆலோசிக்காமல், நூறு விழுக்காடு மக்களையும் பாதிக்கும்படியான மாற்றத்தைப் புகுத்துவது முறையாகுமா? மக்களாட்சி நெறியாகுமா? பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்புதல் எனும் முறைமையைக்கூட வழுவி, இவ்வளவு தூரம் வேகமாக முன்னேறுதல், அவையின் சுயமரியாதையையும் கருத்தில் கொண்டு நோக்கும்போது, முற்றிலும் சரியானதன்று என மிக மரியாதையுடனும் பணிவுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். சிந்திய பாலுக்காக இப்போது புலம்புவதால் பயனேதும் இல்லையென்பதை நான் நன்கறிவேன். ஆனால் இவ்வாதங்களை எடுத்துரைப்பதற்கான காரணம், அவை, இம்மசோதா விருப்பத் தேர்ச்சிக்குரியதாய் ஆக்கப்பட வேண்டும் என்பதற்கு வலுவான காரணங்கள் என்பதால்தான். நாம் பிழைகள் பல செய்து விட்டபோதிலும், இவ்வளவு தூரத்துக்கு வந்து விட்ட மசோதாவை

இப்போது புறந்தள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் குறைந்தது இச்சட்டத்தின் ஆளுகையின்கீழ் வர விரும்புகிறார்களா என்று மக்களாகத் தேர்ச்சி செய்து கொள்ளும் வாய்ப்பையளிக்கும் அளவுக்கேனும் நாம் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டாமா? மக்களின் விருப்பத் தேர்ச்சியானது, நண்பர் ஜஸ்பத்ராய் கபூர் அவர்கள் பரிந்துரைக்குமாறு பொதுப்படையாகவோ, நான் தற்போது கூறும் ஆலோசனைகளைப்படி சில வரம்புகளுக்குட்பட்டதாகவோ இருக்கலாம்.

*(மாண்புமிகு சபாநாயகர் தலைமை ஏற்கிறார்)*

பிற்பகல் 5 மணி

இப்போதைய மதிப்பீட்டின்படி அரசுக்கு ஏராளமான கால அவகாசம் உள்ளது. இம்மசோதாவை இப்போதே உடனடியாகத் தொடர்ந்து நிறைவேற்றற்கான செயல்பாடுகளுக்கான உத்தேசம் இல்லை. எனவே அரசு இதனை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது. எனவே நன்றாய்க் கருதிப் பார்த்து இதனை விருப்பத் தேர்வுச் சட்டமாக ஆக்குமாறு அரசினை இறைஞ்சி வேண்டுகிறேன். அஃது இயலாதெனில் பகுதி கட்டாயமாகவும் பகுதி விருப்பத் தேர்ச்சியாகவும் இருக்கும்படியேனும் மாற்றப்பட வேண்டும். அன்றேல் இது மக்களாட்சியன்று வல்லாட்சியே என்பேன்.

**மாண்புமிகு சபாநாயகர்:** விவாதம் மேலும் அரை மணி நேரம் தொடரலாம்.

**திரு. காட்கில் :** இன்று காலை சாந்தினி சௌக் பகுதியில் நிகழ்ந்த விபத்து ஒன்றைக்குறித்து அவைக்குத் தகவல் தர வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**மாண்புமிகு சபாநாயகர்:** அதை இப்போது எடுத்துக் கொள்வதற்கு பதிலாக 5.30 மணிக்கு எடுத்துக் கொள்ளலாம்.

## [1]இந்துச் சட்டத் தொகுப்பு *(விவாதம் தொடர்கிறது)*

### கிளைவிதி 2 *(சட்டத்தின் பயன் வரம்பு) - தொடர்கிறது*

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம்): ஒழுங்குச் சிக்கல் ஒன்றை எழுப்ப விரும்புகிறேன்.

**திருமதி துர்க்காபாய்** (சென்னை): எந்தப் பொருள் குறித்து மாண்புறு உறுப்பினர் அவர்கள் ஒழுங்குச் சிக்கல் எழுப்புகிறார் என அறியலாமா? ஏனெனில் ஒழுங்குச் சிக்கல் எழத்தக்க பொருள் ஏதும் இப்போது அவை முன்னர் வைக்கப்படவில்லை. முதலாவதாகத் தீர்மானம் ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**திரு. சோந்தி** (பஞ்சாப்): அதைக் கூறத் தாங்கள் யார்? தாங்களொன்றும் அவைத் தலைமை ஏற்றிருக்கவில்லையே (குறுக்கீடுகள்)

**திருமதி துர்க்காபாய்:** முதலில் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும்.

**மாண்புமிகு சபாநாயகர்:** இவ்வவையின் முன் தற்போதுள்ள பணியாவது, பொறுக்குக் குழுவின் பரிந்துரையின்படி இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தி முறைப்படுத்துதற்கான மசோதாவை மேலும் கூர்ந்து ஆய்வுசெய்தல் ஆகும். இம் மசோதாவின் கிளைவிதி 2 தற்போது அவையின் கருதலில் உள்ளது.

**திரு. ஆர்.கே. சௌதுரி** (அஸ்ஸாம்): இது குறித்து ஏதும் பேசப்படும் முன்பாக, செய்யப்படும் முன்பாக, சபாநாயகர் மூலம் இந்த அவையை நான் வேண்டுவதெல்லாம் தேவையற்று உணர்ச்சி வயப்படுதல் தவிர்க்கப்பட வேண்டுமென்பதுதான். சற்று முன்னர் திருமதி துர்க்காபாய் அவர்கள் நடந்து கொண்ட முறை பெரிதும் மாறுபட்டிருந்ததென்பதை வருத்தத்துடன் சுட்ட வேண்டியுள்ளது.... (குறுக்கீடுகள்).

மேலும், இச்சட்டத்தை இந்த அவை நிறைவேற்றினாலும் கூட, அதற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்பிசைவு நிறுத்தி வைக்கப் படக் கூடுமென்று நேற்றைய செய்தித் தாள்களில் வெளியிடப்

---

1. நா.வி., தொகுதி XV, பகுதி 2, 1951, செப். 17, பக். 2674-2738.

பட்டுள்ள கருத்து அரசின் கவனத்தை ஈர்த்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ஒழுங்கு. ஒழுங்கு.

**திருமதி துர்க்காபாய் :** மாண்புறு உறுப்பினர் என்னைக் குறிப்பிட்டுப் பேசியுள்ளமையால் நான் விளக்கமளிக்கலாமா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் (பேச) நின்று கொண்டிருக்கும்போது அன்று.

**திருமதி துர்க்காபாய்:** மாண்புறு உறுப்பினர் என்னைப் பற்றிக் கூறியதற்கு மறுப்பு விளக்கம் அளிக்க எனக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ஒழுங்கு. ஒழுங்கு. பிற உறுப்பினர்களை உணர்ச்சிவயப்பட வேண்டாமென்று அறிவுரை கூறிய உறுப்பினரே உணர்ச்சி வயப்பட்டுத்தான் பேசினார். ஒருவர் (தராசின்) வலப்பக்கம் என்றால் மற்றவர் இடப்பக்கம் இருக்கிறார்.

இங்கு குடியரசுத் தலைவர் பற்றியும் பேசப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாகவோ, எதிராகவோ கருத்து கூறுவதில் குடியரசுத் தலைவரின் பெயரைத் தொடர்புறுத்தலாகாது. உறுப்பினர் எவரும் தமது உரையின்போது வாதத்தின் போக்கை பாதிக்கும் நோக்குடன் குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது என்று விதி 159 (VI) கூறுகிறது. இங்கு குடியரசுத் தலைவர் பெயரைக் குறிப்பிடல் அறவே கூடாது.

**திரு. காமத்** ( மத்தியப் பிரதேசம்) : ஒழுங்குச் சிக்கல் அல்ல, முறைமைச் சிக்கல் ஒன்றைச் சுட்ட விரும்புகிறேன். இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா போன்று பெரும் செயல்பாடு ஒன்று அவையின் கருத்திலிருக்கும்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தம் முன்னர் பெரிய கூடையொன்றை வைத்துக் கொண்டிருத்தல் முறை தானா?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** அவையின் கவனத்திலுள்ள ஆழ்ந்த தலைப்புக்கு இது பொருந்துவதன்று. இந்துச் சட்டத்தொகுப்பு குறித்து குடியரசுத் தலைவர் அவர்கள் இந்த அவையில் உரையாற்றவுள்ளார் என்பது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** செய்தித்தாள்கள் வெளியிட் டிருப்பவை என்னவாயினும், குடியரசுத் தலைவரைப் பற்றிக் குறிப் பிட்டுப் பேச இங்கு அனுமதியில்லை. திரு. நசிருத்தீன் அகமது அவர்களே, தங்கள் ஒழுங்குச் சிக்கல் என்ன?

**திரு. நசிருத்தீன் அகமது :** *(எழுகிறார்)*

**சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்) : மாண்புறு உறுப்பினர் தமது ஒழுங்குச் சிக்கலை எழுப்புமுன், விவாதத்தின் முந்தைய கட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போது, பெண் உறுப்பினர் களுக்கெனச் சில தனிச் சலுகைகள் தரவிருப்பதாய்த் தாங்கள் கூறியதன்பால் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். ஆனால் இந்த மசோதாவை நாம் விவாதிக்கின்ற கட்டத்தில் பெண் உறுப்பினர் களுக்குத் தனிச்சலுகைகள் ஏதும் தரப்படலாகாதென்றும், ஆண் பெண் இருபால் உறுப்பினர்களையும் சரிசமமாகவே நடத்த வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்துச் சட்டத் தொகுப்பு வேண்டுமா அல்லது தங்களுக்குத் தனிச் சலுகைகள் வேண்டுமா என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டிய காலம் நெருங்கி விட்டது . *(குறுக்கீடுகள்)*

**திருமதி துர்க்காபாய்:** துணை சபாநாயகர் அவர்கள் உறுதியான தொரு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று விரும்புகிறேன். சிறிது காலத்திற்கு முன்னர், பெண் உறுப்பினர்கள் தமக்குத் தனிச் சிறப்புச் சலுகைகள் வேண்டுகின்றனர் என்று அவைத் தலைவர் குறிப் பிட்டது மெய்தான். அவ்வாறே எங்களுக்கு எவ்விதச் சிறப்புச் சலுகை களும் தேவையில்லை என்று பெண் உறுப்பினர்கள் வன்மையான மறுப்புத் தெரிவித்ததும் மெய்தான். எனவே, மாண்புறு உறுப்பினர் அவர்கள் பேசியது மிகத் தவறு; அவர் கூறியது உண்மையன்று.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவையின் பெண் உறுப் பினர்கள் தங்களுக்கெனத் தனிச் சலுகைகள் எதையும் வேண்ட வில்லை என்பதை நன்கு அறிவேன்: அஃது அவர்களின் நோக்கமாயும் இருக்கவியலாது. பேச்சு வாக்கில் அவ்வாறு ஏதேனும் குறிப்பிட் டிருப்பேன் எனில் அது நகைச் சுவையின் பொருட்டாகவேயன்றிப் பெண் உறுப்பினர்களைக் குறித்துத் தவறான கருத்து தெரிவிப்பதற் காக அன்று. பெண் உறுப்பினர் எவருமே தனிச் சலுகைகளையோ, சிறப்புரிமைகளையோ ஒருபோதும் வேண்டி நின்றனர் அல்லர். என்னைப் பொறுத்தமட்டில், எனக்கு மகள்களும் உண்டு மகன்களும்

உண்டாதலின் நான் சரிநீதியுடனே நடந்து கொள்வேன். தற்போது ஒழுங்குச் சிக்கல் என்ன என்பதை மட்டும் தெளிவாகக் கூறினால் போதும்; விளக்க வாதங்கள் தேவையில்லை. அதைக் குறித்து நானே ஏதேனும் மேல் விவரம் கேட்டால் மட்டுமே கூடுதலாய்ப் பேசலாம். உறுப்பினர்கள் இதனைத் தம் கவனத்தில் இருத்துவர் என நம்பு கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் முதலில் ஒழுங்குச் சிக்கலை உரைத்துப் பின்னர் தெளிவுறுத்தலுக்காக விளக்கமளிப்பேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எனக்குப் புரியவில்லை யெனில் தெளிவுறுத்துமாறு நானே கேட்பேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இம்மசோதாவின் பயன்பாடு இந்தியாவின் முந்தைய சமஸ்தானங்களுக்கும் விரிவாக்கப்படுதலைக் குறித்தே எனது ஒழுங்குச் சிக்கல். இவற்றுள் சில பகுதி ஆ (B) வில் உள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏனையவை பகுதி அ (A) மாநிலங் களுடன் இணைக்கப்பட்டுவிட்டன. எனவே இவை பற்றியதே சிக்கல் என்பதால் எனது கருத்தையும் அதில் செலுத்துகின்றேன்.

**மாண்புறு உறுப்பினர்கள்:** இதில் ஒழுங்குச் சிக்கல் என்ன இருக்கிறது?

**பண்டிட் மைத்ரா (மேற்கு வங்காளம்):** இந்த மாநிலங்களில் எல்லாம் மசோதா வெளியிடப்படவில்லை என்பதுதான் மாண்புறு உறுப்பினரின் சிக்கலா?

**திரு. நசிருத்தீன் அகமது :** ஆம். இந்த மாநிலங்களில் மசோதா வெளியிடப்படவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ஒழுங்குச் சிக்கல் எனக்குப் புரிந்து விட்டது. (காலை 10 மணி).

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் சில உண்மைகளைக் கூற வேண்டியுள்ளது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒழுங்குச் சிக்கலைப் பொறுத்தமட்டில், அந்தச் 'சில உண்மைகள்' தேவையில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** இதுகுறித்து அவைத் தலைவரின் தீர்ப்புகள் ஏற்கெனவே உள்ளன. திரு. சர்வாத்தே அவர்கள் 1949, பிப்ரவரி 24இல் எழுப்பிய சிக்கல் குறித்துத் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவை இப்போது கிளை விதி 2-ஐ விவாதித்துக் கொண்டுள்ளது. தங்கள் ஒழுங்குச் சிக்கல் கிளைவிதி 2 உடன் தொடர்பு கொண்டதா?

**திரு. நசிருத்தீன் அகமது :** ஆம். கிளைவிதி 2 அந்நாளைய இந்திய சமஸ்தானங்களுக்கும் பொருந்தும். (ஆதலால் தொடர்புள்ளது).

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இம்மசோதாவின் ஆளுகை அல்லது பயன் வரம்பு கிளைவிதி 1ஆல் நிருணயிக்கப்படுவதை மாண்புறு உறுப்பினர் நன்கறிவார். கிளைவிதி 1(2) கூறுவதாவது :

''இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் இது பொருந்தும்.''

இவ்வாறு மசோதாவின் ஆளுகை வரம்பு கட்டின்றி அனுமதிக்கப்படலாமா அல்லது முதலில் கருதப்பட்டவாறு அரசியல் அமைப்புச் சட்டத்தின் (எழும் வரம்பீடுகளின்) கீழ் பயன்படுத்தப் படாதா என்ற வினாவைப் பொறுத்தமட்டில் தங்கள் ஒழுங்குச் சிக்கல் தொடர்பு கொண்டதாயிருக்கலாம். ஆனால் இது அந்தக் கட்டத்தில்தான் எழுப்பப்படுதல் முறையேயன்றி இப்போது அல்ல. நாம் இப்போது பொதுவான கூறுகள் சிலவற்றை நோக்கவுள்ளோம். இம் மசோதா பகுதி 'ஆ', பகுதி 'இ' மாநிலங்களுக்குப் பொருந்துமா அல்லவா என்பதைக் கிளை விதி 1 மீதான விவாதத்தின்போது எடுத்துக்கொள்வோம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இதனால் வசதியின்மைதான் விளையும். முறைப்படி அது உரிய காலத்தில் எடுத்துக் கொள்ளப் படுமென்பது மெய்தான்: ஆனால் அதுவரை நம்மைக் காத்திருக்க வைத்தல் ஆகாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எனது தீர்ப்பைக் கூறி விட்டேன். இக்கிளைவிதி 2 சமஸ்தானங்கள் எவற்றுக்கும் பொருந்தாது என மாண்புமிகு உறுப்பினர் கூறவில்லை; ஒரேயொரு சமஸ்தானத்தில்

கிறியதொரு கிராமத்திற்கு இவ்விதி பொருந்துமென்றாலும் கூட நாம் கிளைவிதி 2ஐ எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். நாம் கிளை விதி 1க்கு வரும்போது, அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் எங்கெங் கெல்லாம் இது பொருந்தக் கூடாதோ அவற்றையெல்லாம் நாம் நீக்கிவிடலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இதிலுள்ள சிரமத்தைக் கூறி விடு கிறேன். சமஸ்தானங்களைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும், அவர்களுக்கு இச்சட்டம் பொருந்தாதென்பது இப்போதே தெரிந்து விடுமெனில், இம்மசோதாவைப் பற்றி அவர்கள் அக்கறை காட்ட மாட்டார்களாதலால், விவாதம் சுருக்க முடிந்துவிடும். மாறாக, இச்சட்டம் அவர்களுக்குப் பொருந்துமா பொருந்தாதா என்பது பற்றி அறியா நிலையில் அவர்களும் விவாதங்களில் கலந்துகொள்ளத் தான் வேண்டியிருக்கும். எனவே, இந்தக் கட்டத்தில் நமது நிலை என்ன, அவர்களது நிலை என்ன என்பன குறித்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளல் அவசியமே.

**மாண்புமிகு துணை சபாநாயகர் : :** மற்றெல்லாக் கிளை விதி களையும் முடித்த பின்னர் நாம் கிளைவிதி 1 எடுத்துக் கொள்ளத் தான் போகிறோம் என்பதை மாண்புறு உறுப்பினர் மிக நன்றாய் அறிவார். சமஸ்தானங்களைச் சேர்ந்த உறுப்பினர் எவராயினும், தங்களுடைய மக்களுக்கும் இது பொருந்தும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே செயல்படலாம். முதற்கண் அவ்வாறு செயல் படட்டும்; பின்னர் வேண்டுமானால் நசிருத்தீன் அகமது அவர் களுடன் இணைந்து, இச்சட்டத்தின் ஆளுகையிலிருந்து விடுபட முயலலாம்; அதற்குப் போதிய அவகாசம் உண்டு.

**திரு. சியாம்நந்தன் சகாயா** (பீகார்) : இம்மசோதா குறித்த விவாதத்தை மேலும் தொடருமுன்பாக, செய்தித் தாள்கள் வழியாக அறியப்படுகின்றவாறு, இம்மசோதாவின் இரண்டு பகுதிகள் அதாவது திருமணம், மணமுறிவு குறித்தவை மட்டுமே எடுத்துக் கொள்ளப்படும் என்பது மெய்தானா என்பதை அறிந்து கொள்ள அவைக்கு முழு உரிமையுண்டு. நாம் எந்த திசையில் போய்க் கொண் டிருக்கிறோம் என்பதையும் இறுதியாக எத்தகைய முடிவு எடுக்கப்பட வுள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையோர் தெளிவுற அறியுமாறு உரைக்க வேண்டுகிறேன். இந்தவொரு கருத்து குறித்தே தங்கள் கவனத்தையும் அவையின் கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன். இந்த அவை, அவைத் தலைவர், மாண்புமிகு

அமைச்சர் ஆகிய யாவரின் கவனத்திற்கும் நான் சுட்ட விரும்பும் மற்றொரு பொருள் உண்டு. தற்போது மசோதாவின் வடிவம் அடையாளம் காணவியலாத அளவுக்கு மாற்றம் அடைந்துள்ளது. உண்மையைச் சொல்லப்போனால், மசோதாவைத் தாக்கல் செய் துள்ள மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களே ஏராளமான திருத் தங்களைத் தந்துள்ளார்; அவற்றுள் பற்பல நேற்றுதான் எங்கள் கைக்குக் கிடைத்துள்ளன. இந்துச் சட்டத் தொகுப்பு போன்ற மசோதாவின் முக்கியத்துவத்தைத் தாங்களும் நன்கறிவீர்கள். இதைக் குறித்து உறுப்பினர்கள் பலரும் காட்டிய ஆழ்ந்த அக்கறையை யும் தாங்கள் கண்டுள்ளீர்கள். திடிரென்று இப்போது என்னென்ன திருத்தங்கள் செய்யப்படுகின்றனவென்றும், அவற்றின் விளைவு கள் யாதென்றும் உடனடியாகத் தெளிந்துணர்தலில் எங்களுக்கு மிகுந்த இடர்ப்பாடு தோன்றியுள்ளது. மேலும் இத்திருத்தங்களின் அடியாக விவாதங்களின் போக்கு அமையுமாதலின் இத்திருத்தங் களுக்குக் குறிப்பாக டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தங் களுக்குத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டியிருக்குமா என்பதை யும் எங்களால் முடிவு செய்ய இயலவில்லை. இவையெல்லாம் தான் தற்போது எம் அனைவரையும் எதிர்நோக்கியுள்ள இடர்ப்பாடு களாகும். இந்த அவையில் எடுக்கும் முடிவுகள், நாட்டு மக்களுக்கு அவையின் மீது மரியாதையைத் தோற்றுவிக்கும் வண்ணம், இந்த அவை சட்டத்தொகுப்பைத் தீர ஆய்ந்து தக்க முடிவெடுக்க வேண்டும் என்றால், இத்திருத்தங்களின் வாசிப்புக்குப் போதிய கால அவகாசம் தரப்பட வேண்டும். ஐயா, மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது, அது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுத் பொறுக்குக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றிருந்தது, என்பது தங்களுக்கு நினை விருக்கும். அதன் பின்னர் டாக்டர் அம்பேத்கர் பெரும் எண் ணிக்கையிலான திருத்தங்களை அனுப்பியுள்ளார். ஒரு பக்கம் இத்திருத் தங்களும், மறுபால் பொறுக்குக் குழுவின் அறிக்கையும் நம்முன் இருந்தன; இப்போதோ அத்திருத்தங்களெல்லாம் ஏதுமில்லை, மாறாகப் புதிய திருத்தங்கள் பல அனுப்பப்பட்டுள்ளன. இவை யெல்லாம் ஒருங்கு தொகுக்கப்பட்டு அவையின் கருதலுக்கு வசதியான வகையில் முன்வைக்கப்பட வேண்டும்; இச்சட்டத் தொகுப்பின் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு அவையும் கூர்ந்து கவனம் செலுத்த வேண்டும். எனவே இத்திருத்தங்களை அவை மிகுந்த கவனத்தோடு கருதி ஆயும் வகையில் விவாதத்திற்கான செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும்; இந்துச் சட்டத் தொகுப்பின் நிறைவேற் றத்திற்காக அரசு கடைசியாய் வகுத்துள்ள அவையின் செயல் முறைத் திட்டம் யாதென்று சட்ட அமைச்சர் அவைக்குத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** இதோடு சேர்த்து பதிலளிக்கும் வகையில் வினாவொன்றை எழுப்ப விரும்புகிறேன்....

**திரு. பி. தாஸ் (ஒரிசா) :** ஐயா, நான் கூறவிரும்புவது....

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இதற்குமேல் ஏதும் கூற வேண்டுவதில்லை. திருத்தங்களைப் பொறுத்தமட்டில், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் முன்னர் ஒரு தொகுதி திருத்தங்கள் தந்திருந் தார்; இப்போது அவற்றுக்குத் திருத்தங்களாக மற்றொரு தொகுதி தந்துள்ளார்.

**சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்):** மிகச் சில...... அவையும் சொற்திருத்தங்களே.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அவை கருத்துத் திருத்தங் களாகவே இருந்தால்தான் என்ன; வெகு முன்பாகவே, கடந்த செப்டம்பர் 5ஆம் நாளிலேயே அவை சுற்றறிவிக்கப்பட்டுள்ளன. எனினும் (அவற்றின் மீதான) விவாதத்தின்போது, மாண்புறு உறுப் பினர் எவரேனும் அவற்றுக்குத் திருத்தங்கள் கொணர விரும்பி னால், அவை ஏற்கத்தக்கனவாயுமிருப்பின், அப்போது பரிசீலிக்கப் படும்.

**டாக்டர் அம்பேத்கர் :** இதற்கு எவ்வித மறுப்பும் என்பால் கிடையாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இந்த விவகாரங்கள் குறித்து நான் மிகவும் நுணுக்கமாக முறைமை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இந்தச் சிக்கல் களுக்கெல்லாம் இணக்கமான தீர்வுகளையே எய்த விரும்புவதாய்க் கூறுகின்றார். எனவே அவையின் எல்லாப் பகுதியினரும் இந் நோக்கு குறித்த தமது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன். விவாதங்கள் வெகு எளிதில் இணக்கமாய் அமைவதற்கு உறுதுணை யாக, விதிமுறைச் சிக்கல்களுக்கு விலக்களிக்கவோ, நிலையாணை களைத் தற்காலிகமாய் நிறுத்திவைக்கவோ செய்வதன்மூலம் எந்த வொரு கிளைவிதி குறித்தும் இணக்கமான முடிவுக்கு வர உதவ முடியுமெனில் அதற்கெப்போதும் ஆயத்தமாகவே உள்ளேன் என்றும் உறுதி கூறுகிறேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இடர்ப்பாடு ஏதும் வராது. ஆனால் இத்திருத்தங்களையெல்லாம்

மீண்டும் தொகுத்து சுற்றறிவிப்புக்கு விடுவதென்றால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மசோதாவின் போது நாம் எவ்வாறு திருத் தங்களாம் மாக்கடலில் தத்தளித்தோம் என்பதை உறுப்பினர்கள் யாவருமே நன்கறிவீர்கள்; திருத்தங்கள் பல நேரடியாகவே அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருப்பதால், திருத்தங்கள் குறித்து அவைத் தலைவருக்குத் தெரியாது. இது நாம் எளிதில் உலாவரக் கூடிய காடன்று; உட்புகவே இயலாததொன்றாகும். பார்க்கப் போனால் முந்தைய திருத்தங்கள் மீது சில திருத்தங்கள் வந்துள்ளன; அவ்வளவோ, அவை குறித்து நாம் எளிதில் ஆய்ந்திட முடியும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஐயா, மேலும் ஒரு கருத்து.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மசோதா மீதான செயல் பாட்டை எடுத்துக்கொள்வது குறித்து மாண்புறு உறுப்பினர்கள் உறுதியான முடிவுக்கு வரவேண்டும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** (அவ்வாறாயின்) உறுதியான முடிவுக்கே வருவோம்.

**திரு. பி. தாஸ் :** அவர் மீண்டும் பேச அனுமதிக்கப்படு கிறாரா?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நான் ஒரு கருத்தைக் கூறி விடு கிறேன். இதுவரை நாம் பின்பற்றி வந்த நடைமுறைப்படி முதலில் திருத்தங்கள் தாக்கல் செய்யப்படும். பின் அவையாவும் ஒருசேர விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும். ஆனால் இந்துச் சட்டத் தொகுப்பு விவாதத்தில் ஒவ்வொரு திருத்தமுமே சிறப்பான பொருள் வாய்ந்தவையாதலின், இந்த நடைமுறை பயன்படாது எனப் பணிந்துரைக்கிறேன். இது வெட்டுத்தீர்மானம் ஒன்றன் மீதான விவாதமோ அல்லது நிதிக் கோரிக்கை மீதான விவாதமோ அன்று. ஒவ்வொரு திருத்தமுமே குறிப்பிட்ட பொருளாழம் வாய்ந்தவை. எனவே, இந்துச் சட்டத் தொகுப்பு மீதான விவாதத்தில் ஒவ்வொரு திருத்தமும் தனித்தனியே எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதுகிறேன்; ஒவ்வொரு திருத்தமும் தீர அலசப்பட்டு தெளிவான முடிவொன்று எய்தப்பட வேண்டும்; ஒன்று அது ஏற்றுக் கொள்ளப் படவேண்டும் அல்லது ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும்; அதன் பிறகுதான் அடுத்த திருத்தம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த

மசோதாவுக்கு இச்செயல்முறைதான் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** ஒரேயொரு தகவலை மட்டும் நான் கேட்கலாமா? நாம் கடைசியாக பிப்ரவரியில் இம்மசோதாமீதான விவாதங்களை நடத்திய பிறகு சில திருத்தங்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. இவையே அதன் பின்னர் வந்த புதிய திருத்தங்கள். பிப்ரவரியில் விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் இப் புதிய திருத்தங்கள் குறித்தும் பேச அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இந்தப் பரிந்துரை உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும். இப்புதிய திருத்தங்கள் குறித்து நான் கடைபிடிக்கவிருக்கும் நடைமுறை இதுதான். பொதுவாக ஒவ்வொரு திருத்தமும் தனித்தனியே எடுத்துக் கொள்ளப்பட்டு அதுகுறித்து இறுதி முடிவு எய்தப்பட்ட பின்னரே அடுத்த திருத்தத்தினை எடுத்துக் கொள்ளல் வழக்கம். ஆனால் இங்கு ஒத்த தன்மையான திருத்தங்கள், சொல்லமைவில் வேறுபட்டிருப்பினும் பொருளமைப்பில் ஒன்று பட்டுள்ள திருத்தங்கள் யாவற்றையும் ஒருசேரத் தாக்கல் செய்யுமாறு மாண்புறு உறுப்பினர்களை வேண்டுவதன் மூலம் அவை யாவற் றையும் குறித்து ஒரே விவாதம் நடக்க வழிகோல எண்ணியுள் ளேன். பொருளமைவில் மாறுபடும் திருத்தங்கள் தனித்தனியே எடுத்துக் கொள்ளப்படும். ஒத்த தன்மையுள்ள திருத்தங்கள் எவை எவையென மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கூற இயலுமெனில் மிக உதவியாயிருக்கும். மாண்புறு உறுப்பினர்களும், திருத்தங் கள் தாக்கல் செய்யும்போது இவ்வேண்டுகோளைக் கருத்தில் கொள்ளலாம்; தாக்கல் செய்யப்படும் திருத்தத்திற்குத் தமது திருத் தமும் ஒத்த தன்மையுடையதெனக் கண்டால், தமது திருத்தத்தையும் ஒருங்கே தாக்கல் செய்ய அனுமதி கேட்கலாம்; அதன் வழி ஒத்த திருத்தங்கள் அனைத்தின் மீதும் ஒருசேர விவாதம் நடத்த இயலும்.

**திருமதி ரேணுகா ரே (மேற்கு வங்காளம்) :** அனைவரும் ஏற்றுக்கொண்டால், உரைகளுக்கு நேர வரம்பு விதிக்கலாம்.

**மாண்புறு உறுப்பினர்கள் :** கூடாது. கூடாது.

**பணி, உற்பத்தி, வழங்கல் துறை அமைச்சர் (திரு. காட்கில்) :** ஒரே (ஒத்த) பொருள் குறித்த திருத்தங்களை அவைத் தலைவரே

ஒருங்கு தொகுத்து அவற்றின் மீது ஒருசேர விவாதம் நடத்த விடுத்தல் நன்றெனக் கருதுகிறேன்; கால விரயத்தைக் கணிசமாய்க் குறைக்க அது உதவும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் கூறியதும் இதுவே தான். ஆனால் அவற்றைத் தொகுக்க எனக்கு நேரமில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தமது திருத்தங்களைத் தாக்கல் செய்யுங்கால், ஒவ்வொரு திருத்தத்தின்போதும், அதே பொருள் குறித்த திருத்தங்கள் ஏதேனும் உள்ளனவா என மாண்புறு உறுப்பினர்களிடம் கேட்டு, இருப்பின், அவற்றையும் சேர்த்துத் தொகுத்துப் பொதுவான விவாதத்திற்கு விடுக்கவுள்ளேன். இது நாளை கடைப்பிடிக்கப் போகும் நடைமுறை.

இன்றைக்கு நடப்பில் உள்ள பணி, கிளை விதி 2இன் மீதான விவாதம் தொடரட்டும்.

**திருமதி ரேணுகா ரே:** எனது ஆலோசனை அவையின் கருதலுக்கு விடப்படுமா?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நான் எடுத்துரைத்த கருத்துகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுதற்கு ஏதுமில்லையா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அமைச்சர் ஏதும் கூற விரும்புவதாய் நான் கருதவில்லை. அவர் ஏதும் கூற விரும்புகிறாரா?

**டாக்டர் அம்பேத்கர்:** ஏதுமில்லை ஐயா.

**கல்வியமைச்சர்** (திரு. மௌலானா ஆசாத்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றியபோது நான் அவையில் இல்லாமைக்கு வருந்துகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இம் மசோதாவின் பகுதிகள் எவையேனும் தற்போது கருதப்படாமல் விடுபடவுள்ளனவா என்பதை அவர் அறிய விரும்பினார். அச்சமயம் கிளைவிதி 2இன் மீதான விவாதம் நடந்து கொண்டிருந்தமையால், அவ்விவாதமே தொடரட்டும் என நான் விரும்பினேன்; திருத்தங்களின் தாக்கலை அனுமதிக்கும் கட்டத்தில் 'நான் இருந்தேன். அச்சமயத்தில் மாண்புறு உறுப்பினர் குறுக்கிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

மசோதாவின் எப்பகுதிக்கேனும் முன்னுரிமை கொடுத்து அவற்றை முதலில் தாக்கல் செய்யவிருக்கிறாரா என்றறிய விரும்பினார்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** செய்தித்தாள்களில் வெளிவந்த அறிக்கைகளின் காரணமாகவே, சரியான நிலையை அறிந்து கொள்ள விரும்பினேன்.

**திரு. ஜவகர்லால் நேரு :** முந்தாநாள் நான் இப்பொருள் குறித்துப் பேசியதை நினைவு கூர்கிறேன். இம்மசோதாவின் பகுதிகள் I, II ஆகியவற்றை தற்போது எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளோம் என்றும் காலம் அனுமதித்தால் மேலும் சில பகுதிகளையும் எடுத்துக் கொள்ளவிருக்கிறோம் என்றும் கூறியுள்ளேன். எவ்வாறாயினும் இவ்விரு பகுதிகளையும் அரை குறையாய் விட்டுவிட விரும்பவில்லை. எஞ்சிய பகுதிகளைக் காலம் இருப்பின் பரிசீலிக்கலாம் என்று கருதினாலும் இவ்விரு பகுதிகளையும் முடித்துவிட வேண்டும் என்றே விரும்புகிறோம்.

**திரு. காமத்:** இம் மசோதாவின் கருதலுக்காகக் குறிப்பிட்ட நாட்களின் எண்ணிக்கையாகக் காலவரம்பு ஏதும் முடிவு செய்யப் பட்டுள்ளதா?

**திரு. ஜவகர்லால் நேரு:** இந்த வாரத்திற்குள் முடித்துவிட முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இம்மாதமா அல்லது இவ்வாரமா?

**திரு. ஜவகர்லால் நேரு:** இவ்வாரம் என்றுதான் கூறினேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** தலைவர் அனுமதியுடன், பட்டியல் Iஇல் திருத்தம் எண் 4ஐத் தாக்கல் செய்ய விரும்புகிறேன். கிளை விதியின் பிற பகுதிகளோடு ஒத்திசைவு எய்தல் பொருட்டு, 'வகுப்பு' எனும் சொல்லுக்கு பதிலாக 'இனம்' எனும் சொல் மாற்றியிடப்பட அத்திருத்தம் கோருகிறது. நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

நான் முன் மொழிந்துள்ள, எண். 3 ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில், பகுதி (I) (i)க்குப் பிறகு, "(i a) பகுதி (C) (ii)இல் 'வகுப்பு' என்ற சொல்லுக்கு மாற்றாக, 'இனம் அல்லது வகுப்பு' எனும் தொடர் இடம்பெறலாம் என்பதாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் தாக்கலாகியுள்ளது:

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன் மொழிந்துள்ள, எண் 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில் பகுதி (I) (i)க்குப் பிறகு,

"(i a) பகுதி (C) (ii)இல் 'வகுப்பு' என்ற சொல்லுக்கு மாற்றாக, ''இனம் அல்லது வகுப்பு' எனும் தொடர் மாற்றி இடம் பெறலாம்;''

ஏற்கெனவே டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கடந்த அமர்வி லேயே திருத்தம் எண். 3ஐத் தாக்கல் செய்திருந்தார். அந்தத் திருத் தமும் இப்புதிய திருத்தமும் அவைமுன் வைக்கப்படுகின்றன. இதே பொருள் தொடர்பாக மாண்புறு உறுப்பினர்களில் வேறு எவரேனும் திருத்தங்கள் தந்துள்ளீர்களா? திருத்தம் இதே பொருள் சார்ந்ததாய் இருக்க வேண்டுமேயன்றி ஒட்டுமொத்தமாய்க் கிளை விதி 2இன் மீதானதாய் இருக்கலாகாது.

**திரு. ஜே.ஆர். கபூர்** (உத்தரப் பிரதேசம்): ஐயா, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருத்தங்கள் எண் 3, எண் 4, ஆகியவற் றுக்கு எங்களிடம் திருத்தங்கள் இருந்தால் அவற்றை நாங்கள் இப்போது தாக்கல் செய்யலாம் என்பதுதான் தங்கள் உட்கருத்தா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஆம்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** எனில், தங்கள் அனுமதியுடன், 2ஆவது பட்டியலில் 95ஆவது திருத்தத்தை முதலில் தாக்கல் செய்ய விரும்பு கிறேன். உண்மையில் சொல்லப்போனால், முதலில் நான் இதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 3வது திருத்தத்திற்குத் திருத்த மாகவே இதற்கு அறிவிப்பு கொடுத்திருந்தேன்; ஆனால் இங்கு அது தனித்திருத்தமாகவே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு வேளை வசதி யின் பொருட்டு அலுவலகம் இவ்வாறு செய்திருக்கலாம். திருத்தம் எண் 95 என்பது அம்பேத்கர் அவர்களின் திருத்தத்தின் மேலான திருத்தத் தீர்மானம் அன்று என எவரும் மறுக்காதிருப்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது:

(i) கிளைவிதி 2க்கு மாற்று வாசகமாவது:

''2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு:- இந்தியா எனும் பாரதத்தின் குடிமக்களில் வயதுவந்தோர் எனும் தகுதிக்கான வயது நிறைந்தவர்களில், இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட

விரும்புவதாய் எழுத்து மூலம் அறிக்கை தந்து, இதற்கென மைய அரசு வரையறுக்கும் விதிமுறைகளுக்கு ஏற்ப அவ்வறிக்கையைப் பதிவு செய்து கொள்ளும் அனைவருக்கும் இச்சட்டத் தொகுப்பு பொருந்தும்.

அன்றியும், திருமணத்துக்கு முன்னர் எனில் மணமகன் மணமகள் இருவரும் அல்லது திருமணத்துக்குப் பின்னர் எனில் கணவன் மனைவி இருவருமே அத்தகைய அறிக்கை பதிவு செய்திருந்தால் மட்டுமே இச் சட்டத்தின் IIஆம் பிரிவிலுள்ள திருமணம், மணமுறிவு தொடர்பான விதிமுறைகள் அவர்களுக்குப் பொருந்தும்.''

அடுத்து இதேபொருள் தொடர்பு கொண்ட பட்டியல் 2இல் 97ஆவது திருத்தத்தையும் தாக்கல் செய்யத் தங்கள் அனுமதி வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்வதாவது:

(ii) மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3வது திருத்தமாய் அச்சிடப்பட்டிருக்கும் திருத்தத்தில் பகுதி (2)க்குப் பின்னர்,

''(3) துணைக் கிளை விதி (3)க்கு அடுத்தபடியாகப் பின்வரும் துணைக் கிளை விதி சேர்க்கப்பட வேண்டும்:-

(4) எந்தவொரு நபர் வயது வந்தோராய்க் கருதப்படத் தகும் வயது நிறைந்தவுடன், இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்புவதாய் எழுத்து மூலம் அறிக்கை தந்து, இதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளுக்கேற்ப அவ்வறிக்கையைப் பதிவு செய்து கொள்கிறாரோ அவருக்கு இச்சட்டத் தொகுப்பு பொருந்தும்.

அன்றியும் திருமணத்துக்கு முன்னர் எனில் மணமகன் மணமகள் இருவருமே, அல்லது திருமணத்திற்குப் பின்னர் எனில் கணவன் மனைவி இருவருமே அத்தகைய அறிக்கை பதிவு செய்திருந்தால் மட்டுமே, அவர்களுக்கு, இச்சட்டத்தின் IIஆம் பிரிவிலுள்ள திருமணம், மணமுறிவு தொடர்பான விதிமுறைகள் பொருந்தும்.''

மற்றொன்றையும் தாக்கல் செய்ய இறைஞ்சுகிறேன்:

(iii) மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3 ஆவதாய் அச்சிடப்பட்டிருக்கும் திருத்தத்தின் பகுதி (1)(ii) இல் உள்ள, கிளைவிதி 2இன் துணைக் கிளை விதி (1)இல் 'சீக்கிய சமயம்' என்பதன் பின்னர்,

''அல்லது முஸ்லீம், கிறித்தவ, பார்சி, யூத சமயங்களைத் தவிரப் பிறிதெந்தச் சமயத்திற்காயினும்'' எனும் தொடர் சேர்க்கப்பட வேண்டும்.

(iv) கிளை விதி 2இன் துணைக் கிளை விதி (1) பகுதி (C) (ii) வுக்குப் பின்னர்,

"(iii) அரசாங்கத்தால் வளர்க்கப்படும் அனாதை அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் அனைவருக்கும்'' எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

**திரு. பி.கே.பி. சின்கா (பீகார்) :** மாண்புறு உறுப்பினர்கள் தமது திருத்தங்களை முழுமையாக வாசித்தால் அவையே நீண்ட உரைகளாகிவிடுவதால், அதைத் தவிர்க்க உறுப்பினர்கள் தமது திருத்தத்தின் வரிசை எண்ணை மட்டும் குறிப்பிட்டுத் தாக்கல் செய்தால் போதும் என்பது என் கருத்து.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நாம் நமது கண்களை மூடிக் கொள்வதால் பயனில்லை. இம்மாதிரி ஆலோசனைகள் தருவதற்கு ஒரு வரம்பு வேண்டும். திருத்தங்கள் வாசிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும்; இதில் நாம் அவசரப்பட்டு வேகம் காட்ட இயலாது. இப்பொருள் குறித்து நியாயமான முறையில் விவாதங்களுக்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்படும் என்பது உறுதி. சில சமயங்களில் எனக்கே கூடப் புரியாமல் போகலாம். முறைமை குறித்த விவகாரங் களையன்றியும், திருத்தங்களை வாசிக்க வேண்டாமென்று நானாக உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டாலன்றி, திருத்தங்கள் வாசிக்கப் பட்டாக வேண்டும்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** தங்கள் வழிகாட்டலுக்கு மிக்க நன்றி, ஐயா.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதற்காக, மாண்புறு உறுப்பினர் நீட்டி நெளிக்க அனுமதிப்பதாய்ப் பொருள் கொள்ள லாகாது.

**திரு. ஜே. ஆர். கபூர் :** நமது மாண்புமிகு நண்பரின் ஆலோ சனையை நாம் பின் பற்றுவதாயின், அதன் அறுதி விளைவாக, குறிப்பிட்ட உறுப்பினரின் பெயரில் உள்ள திருத்தங்கள் அனைத்தும் தாக்கலாகின்றன என்று மிகச் சுருக்கமாகவும் கூறலாம்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** இதுகுறித்து மேலும் நீட்ட வேண்டியதில்லை.

***திரு. ஜே.ஆர். கபூர் :*** நான் மேலும் இறைஞ்சித் தாக்கல் செய்வ தாவது :

(V) கிளைவிதி 2இன் துணைக் கிளை விதி (3)க்கு மாற்றாக

''(3) இந்தச் சட்டத்தில் 'இந்து' என்ற சொல் பயன் படுத்தப்படும் இடங்களிலெல்லாம், அது சமயத்தால் இந்துக் களாவோரை மட்டுமின்றி, மற்றெவ்வகையிலேனும் இச் சட்டத்தின் ஆளுகைக்குட்படுவோரையும், இது குறித்து மைய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படி இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட இசைவதாய் அறிக்கை தருவோரையும் சுட்டும் பொருளிலேயே பயன்படுத்தப்படுவதாய்க் கருதப் பட வேண்டும்''

என்பதை மாற்றியிடலாம்.

அடுத்து பட்டியல் 5இல் திருத்தம் எண். 272ஐ எடுத்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** துணைக் கிளை விதிகளை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொள்ளலாமென்று கருதுகிறேன். கிளை விதி 2இல் துணைக்கிளைவிதிகள் பல உள்ளன. இந்தத் துணைக் கிளைவிதிகளின் மீது திருத்தங்கள் ஏதேனும் கொண்டுவரப்படுத லில்லையாயின், நாம் இப்போது துணைக் கிளைவிதி (1) குறித்து மேற்கொண்டு தொடருவோம். பிறகு ஏனைய துணைக் கிளை விதி களை எடுத்துக் கொள்வோம். இந்த ஆலோசனை குறித்து சட்ட அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

***டாக்டர் அம்பேத்கர் :*** இந்நடை முறை எனக்கு முற்றிலும் உடன்பாடானதே.

***திரு. ஜே.ஆர். கபூர்:*** திருத்தங்களை அனைத்தையும் தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு பணிந்து வேண்டுகிறேன். அரசியலமைப்புச் சட்டப் பேரவையில் நாம் கடைபிடித்த நடைமுறையை நாளையி லிருந்து பின்பற்றிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மாண்புறு உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் திருத்தங்களைத் தாக்கல் செய்ய இன்று மட்டும் அனுமதிக்கிறேன். நாளை முதல் அவை துணைக் கிளை விதிகள் வாரியாய்த் தொகுக்கப்பட்டே எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(vi) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3வது ஆக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில் பகுதி (2)க்கு மாற்றாக,

> ''(2) துணைக் கிளைவிதி (4)க்கு மாற்றாகப் பின்வரும் விதி மாற்றியிடப்படலாம்:
>
> '(4) மைய அரசு விதிக்கும் நடைமுறையின்படி இச்சட்டத்தின் அல்லது சட்டத்தின் சில பகுதிகளின் ஆளுகைக்கு உட்பட இசைவதாய் அறிக்கை தரும் நபர் எவரேனும் அவருக்கு (அறிக்கைக்கேற்ப) இச்சட்டத்தின் முழுமையுமோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளோ பொருந்தும்''

(vii) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து பட்டியலில் 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள, கிளைவிதி 2க்கான திருத்தத் தீர்மானத்தில் பகுதி (1)க்குப் பிறகு,

> ''(1அ) துணைக் கிளை விதி (2)க்கான விதிப்புரையின் இறுதியில் 'மைய அரசு விதிக்கும் நடைமுறையின்படி அவர் இது குறித்தான விவகாரங்களில் இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட இசைவதாய் அறிக்கை தந்திருந்தாலன்றி' எனும் தொடர் சேர்க்கப்படலாம்'' எனும் விதி சேர்க்கப் படலாம்.

(viii) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள, கிளைவிதி 2இன் மீதான திருத்தத்தில், பகுதி (1)க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டியதாவது:

> ''(1அ) துணைக் கிளைவிதி (3)இல் 'விதிமுறைகள்' என்பதற்கு மாற்றாக, 'எந்தவொரு விதிமுறையோ அல்லது விதிமுறைகளோ' என்ற தொடர் மாற்றியிடப்படலாம்.''
>
> இத்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில், மாற்றாக,

(ix) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து, 3வது ஆக அச்சிடப்பட்டிருக்கும், கிளைவிதி 2க்கான திருத்தத்தில், பகுதி (1)க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டிய தாவது:

> "(1. அ) துணைக் கிளை விதி (3)இன் இடையில், "இங்கு கூறப்பட்டுள்ள பொருள்களில் ஒன்றோ ஒன்றுக்கு மேற் பட்டோ" எனும் தொடர் சேர்க்கப்படலாம்."

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 'ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட' என்பதுதான் வழமையான தொடர்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** தங்கள் திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறேன் ஐயா. இத்துடன் டாக்டர் அம்பேத்கரின் திருத்தம் எண் 3இன் மீதான எனது திருத்தங்கள் முடிவடைகின்றன.

மேலும் கடந்த அமர்வில் தாக்கல் செய்யப்பட்டிருந்த எனது திருத்தத்தின் மீதே திருத்தம் ஒன்றும் உண்டு. அதையும் தங்கள் அனுமதியுடன் தற்போது தாக்கல் செய்கிறேன்.

நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது:

(x) கிளைவிதி 2 குறித்து நான் முன்மொழிந்து 93 ஆவதாக அச்சிடப்பட்டிருக்கும் திருத்தத்தில் பின்வரும் வரம்புரை சேர்க்கப் படலாம் :

> "திருமணத்துக்கு முன்னர் மணமகன், மணமகள் இருவருமோ, அன்றித் திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி இருவருமோ பகுதி IIஇல் உள்ள திருமணம், மணமுறிவு தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய் அறிக்கை தந்திருந்தால்தான் அவ்விதி முறைகள் அவர்களைக் கட்டுப்படுத்தும்."

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதைப் போன்ற திருத்தம் ஒன்று ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஜே.ஆர். கபூர்:** இப்போது தாக்கல் செய்யப்படவிருப்பது எனது முந்தைய திருத்தம் ஒன்றன் மீதான திருத்தமாகும். அடுத்து

எனது திருத்தம் எண் 125ஐத் தாக்கல் செய்ய விரும்புகிறேன்.

நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(xi) கிளைவிதி 2க்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

''எந்தவொரு நபரும், உரிய வயது நிறைவடைந்தபின் இச்சட்டத்தின் பகுதிகள் II, VII இரண்டிலுமோ அல்லது இரண்டில் ஒன்றிலோ அடங்கியுள்ள திருமணம், மணமுறிவு, வாரிசுரிமை ஆகியன குறித்த விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய் எழுத்து மூலம் அறிக்கை தந்து, அவ்வறிக்கையை அதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளுக்கேற்பப் பதிவு செய்து கொண்டாலன்றி அவ்விதிமுறைகள் அவரைக் கட்டுப்படுத்தா.''

''மேலும் இச்சட்டத்தின் பகுதி (II)இல் உள்ள திருமணம், மணமுறிவு குறித்த விதிமுறைகள், மணமகன் மணமகள் இருவரும், அல்லது கணவன் மனைவி இருவரும் இத்தகைய இசைவறிக்கை தந்து (பதிவு செய்து) இருந்தால் மட்டுமே அவர்களை இவ்விதிகள் கட்டுப்படுத்தும்.''

மேலும் நான் இன்று காலையில் அறிவிப்பு கொடுத்திருந்த திருத்தம் ஒன்றுதான் எஞ்சியுள்ளது. அஃதொரு சிறிய திருத்தமே. அதையும் இப்போதே தாக்கல் செய்ய அனுமதி வேண்டுகிறேன்.

நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(xii) மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தாக்கல் செய்து 3ஆவது ஆக அச்சிடப்பட்டுள்ள, கிளை விதி 2இன் துணைக் கிளை விதி (1) இன் மீதான திருத்தத் தீர்மானத்தில் பகுதி (1) (ii) க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டியதாவது :

"(iii) பின்வருமாறு புதிய பகுதி (2)ஐச் சேர்க்கலாம்:

'(2) இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் எந்தவொரு சமயத்திற்கேனும் சமய மாற்றம் செய்துகொள்பவருக்கு.'

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அதாவது, இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நாளில் ஒருவர் இந்துவாயிருந்தால், அதற்குப் பின்னர் அவர் வேறெந்தச் சமயத்திற்கு மாறினாலும் அவர் இந்தச் சட்டத்திற்குட்பட்டேயிருக்க வேண்டும் என்பதுதான் திருத்தத்தின் நோக்கமா?

**திரு. ஜே.ஆர். கபூர்:** எந்த நபராவது இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு சமய மாற்றம் செய்து கொண்டால் அவருக்கு இச்சட்டமே பொருந்த வேண்டும் என்பதுதான் திருத்தத்தின் நோக்கம். எடுத்துக்காட்டாக, இந்து ஒருவர், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் முஸ்லீமாகச் சமய மாற்றம் செய்து கொள்வாரெனில், அப்போதும் கூட அவர் தமது விருப்பம் போல இரண்டு, மூன்று, நான்கு மனைவிகளைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் பட மாட்டார். அதாவது இச்சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து விடுபடுவதற்காகவென்று எவரும் முஸ்லீமாய்ச் சமய மாற்றம் செய்து கொண்டு அதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் வாழ அனுமதி பெற்றுவிட இயலாது. எனது திருத்தத்துக்கு வேறு சில விளைவுகளும் உண்டு எனினும் முக்கியமானதாதலின் இந்த ஒரு விளைவை மட்டுமே விளக்கினேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஒரு மனைவியுடன் அல்லல் படுவதே போதாதா? இரண்டு மனைவியர் எனும் பேச்சுக்கே இடமில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இன்று கிளைவிதி 2இன் மீதான திருத்தங்கள் - யாவும் அனுமதிக்கப்படுகின்றன. நாளை அவற்றைத் தொகுத்தளிக்க முயல்வேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (பஞ்சாப்):** மாண்புறு நண்பர் தற்போது தாக்கல் செய்துள்ள திருத்தங்களில் எவையேனும், கடந்த பிப்ரவரி அமர்வின் போதும் தாக்கல் செய்யப்பட்டனவா என்றறிய விரும்புகிறேன். இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்களில் ஒன்று - இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுவதாய்த் தனிநபர்கள் அறிக்கை தருதல் குறித்தது - ஏற்கெனவே இவ் அவையில் விவாதிக்கப்பட்டதென்று எண்ணுகிறேன். இதன் மீது அவர் உரையும் நிகழ்த்தினாரென்று நினைக்கிறேன். அத்திருத்தம் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டும் விட்டதென்றே கருதுகிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** எனது முந்தைய திருத்தங்களை நான் மீண்டும் இங்கு கொணராதிருப்பதில் அக்கறையோடு கவனம் செலுத்துகிறேன் என்பதை மாண்புறு நண்பருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதைய திருத்தங்கள் சிலவற்றின் பொருண்மை குறித்தனவாய் எனது முந்தைய திருத்தங்கள் இருந்திருக்கலாம்

என்பதை ஏற்கிறேன். ஆனால், முந்தைய திருத்தங்கள் உரிய நோக்கத்தை எய்துதற்கு ஏற்றனவாய் இல்லாமை கண்டும், அப்போது அதற்கு மாண்புறு நண்பர் தாகூர்தாஸ் பர்கவா தெரிவித்த எதிர்ப்புகளைக் கருத்திற் கொண்டு அதனைச் சரிசெய்யவுமே இப்போது புதிய திருத்தம் முன்மொழியப்படுகிறது. இச்சட்டத்தின் முழுமையான வரம்புக்குள் அடங்கியிருக்குமாறும், மேலும் அது (அவையினரால்) ஏற்கத்தக்கதாயும் ஆக்கும் வண்ணமும் தற்போது அது திருத்தப்பட்டுள்ளது.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது : கிளைவிதி 2க்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

> ''இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படுவதாய் வரையறுக்கப்பட்ட அதிகாரிகளிடம் வரையறுக்கப்பட்ட முறையில் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளாத நபர்கள் எவருக்கும், சட்டத்தின் இப்பகுதியில் கூறப்பட்டிருப்பதெவ்வாறாயினும், இச்சட்டம் பொருந்தாது.''

**சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்): நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

> ''கிளைவிதி 2இல், 'சீக்கியர்' எனும் சொல் வருமிடங்கள் அனைத்திலிருந்தும் அது நீக்கப்படலாம்''.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இச்சட்டம் சீக்கியர்களைக் கட்டுப்படுத்தலாகாது என்பதே மாண்புமிகு உறுப்பினரின் விருப்பம் என்று நான் கொள்கிறேன்.

**சர்தார் பி.எஸ். மான் :** ஆம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒவ்வொரு கட்டத்திலும் திருத்தத்தின் வீச்சு யாதென நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** இத்தகையதொரு திருத்தம் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருத்தம் எண் 236இன் பொருண்மையும் சர்தார் ஹுக்கம் சிங் அவர்களது திருத்தத்தின் பொருண்மையும் ஒன்றேதான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** கடந்த காலச் செயல்பாடுகள் யாவற்றையும் மறப்போம்; புதிதாய்த் தொடங்குவோம். ஒவ்வொரு கிளைவிதியாய் ஆய்ந்து தொடர்புகளை உருக்காட்டலே அவையின் நோக்கமாதலால், கூறியது கூறலால் தீங்கேதுமில்லை. ஒரு திருத்தம் (அவையின்) கவனத்தை ஈர்ப்பதற்காக மீண்டும் தாக்கல் செய்யப் பட்டாலும் தீங்கேதுமில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அவ்வாறாயின், நான் பிப்ரவரி அமர்வில் திருத்தம் ஒன்று தாக்கல் செய்து அதன் மீது உரையும் நிகழ்த்தியுள்ளேன், அத்திருத்தத்தை மீண்டும் தாக்கல் செய்ய வேண்டுமா?

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** தேவையில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** அவற்றை நாம் இப்போது அறிந்தே யுள்ளோம்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** திருத்தம் எண். 123 இன்பால் தங்கள் கவனத்தை ஈர்க்கலாமா? இது திரு. ஜுன்ஜுன்வாலா அவர்கள் பெயரில் உள்ளது. சற்று முன்பு வரை அவர் இங்குதான் இருந்தார். ஓர் அவசர அழைப்பின் பேரில் அவர் வெளியே செல்ல நேர்ந்தமை யால், இதனைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருமாறு அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார். அவர் வந்து அதனைத் தாக்கல் செய்வார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் வரட்டும்; வந்தபின் அவரே தாக்கல் செய்யலாம்.

**திருமதி ரேணுகா ரே:** இன்று காலையில்தான் தாங்கள் கருணை கூர்ந்து ஒரே பொருண்மை குறித்த திருத்தங்கள் யாவும் ஒருசேரத் தாக்கல் செய்யப்படலாம் என்று கூறினீர்கள். அவ்வா றாயின், கடந்த மூன்று நாட்களாகத் தாக்கல் செய்யப்பட்டு விவா திக்கப்பட்டும் வந்துள்ள திருத்தங்களையும் கூட மீண்டும் அனுமதிக்க வுள்ளீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவை நிலுவையாய் இருக் கின்றனவே.

**திருமதி ரேணுகா ரே:** கடந்த பிப்ரவரி அமர்வில் சில திருத்தங்கள் தாக்கல் செய்யப்பட்டு அவற்றின் மீது மூன்று நான்கு நாட்கள் விவாதமும் நடைபெற்றது. அவையெல்லாம் கூடத் திரும்ப அனுமதிக்கப்படுகின்றனவா என்றறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் செய்யக் கருதியிருப்பது என்னவென்பதைக் கூறிவிடுகிறேன். ஏற்கெனவே திருத்தம் தாக்கல் செய்துள்ள உறுப்பினர் எவரேனும் அது குறித்து கவனம் ஈர்க்க விரும்பினால், அவர் விழைவைச் சுட்டிக் காட்டலாம். நான் அதைக் குறித்துக் கொள்வதுடன் அலுவலகமும் குறித்துக் கொள்ளும். உரிய நேரம் வரும்போது அதனையும் சேர்த்து அவைமுன் வைப்பேன். அவற்றின் மீது ஏற்கெனவே உரை நிகழ்த்தப்பட்டிருப்பின், அது மீண்டும் நிகழாது கவனித்துக் கெள்வேன். அவ்வளவுதான் கூற வியலும்.

**திரு. காமத்:** ஆனால் அத்திருத்தங்களின் மீதான விவாதத்துக்குத் தடை இல்லையே? அத்திருத்தங்களெல்லாம் ஆய்ந்து முடிக்கப்பட்டுவிட்டன என்றா பொருள்?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இல்லை. திருத்தங்கள் அனைத்துமே விவாதத்தில்தான் உள்ளன. எந்தத் திருத்தமும் ஆய்ந்து முடிக்கப் படவில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** அவையோர் எல்லாவற்றையும் மறந்திருப்பர்; ஆதலின் கூறியது கூறலைத் தவிர்ப்பதற்கில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர்கள் கூறியதையே திரும்பக் கூறிக்கொண்டிருந்தால் எனது நிலை திண்டாட்டமாகி விடும் என்பதை உணர வேண்டும். இதைத் தவிர்க்க எனக்குக் கூடுதல் கவனம் தேவையென்பதை எனக்கு நானே நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

**டாக்டர் தேக் சந்து** (பஞ்சாப்) : நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (அ)வில் ''உறுப்பினர்கள்'' என்ற சொல்லுக்கு மாற்றாக ''பின்பற்றுவோர்'' எனும் சொல் இடம் பெறலாம்.

இது ஒரு வடிவத் திருத்தமே; இத்திருத்தத்தை ஏற்றுக்கொள் வதாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார். கிளைவிதியின் திருத்திய வாசகத்தில் ''பிரம்ம, பிரார்த்தன அல்லது ஆரிய சமாஜத்தைப் பின்பற்றுவோர்'' எனும் தொடர் வரும்.

**திரு. பட் (பம்பாய்) :** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வ தாவது :

கிளை விதி 2, துணைக்கிளைவிதி (2)க்கு மாற்றாக பின்வரு மாறு திருத்தியமைக்கலாம்:

> ''(2) ஒரு நபர் ஏற்கெனவே இந்துச் சட்டத்தின் ஆளுகை யின்கீழ் இருந்தாலோ அல்லது அவரது விவகாரங்கள் தொடர்பாகப் பயன்பாட்டு வகையில் சில பிரிவுகளுக்குட் பட்டிருந்தாலோ, அவருக்கு இச்சட்டம் பொருந்தும்.''

நான் இதையன்றி வேறெந்தத் திருத்தத்தையும் தாக்கல் செய்யவில்லை. ஆனால், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் 'வகுப்பு' அல்லது 'இனம்' எனப் பயன்படுத்தியுள்ள இடங்களில் 'குழு' என்பதையும் பயன்படுத்துவாரா என வேண்டுகிறேன்.

**திரு. பர்மன் (மேற்கு வங்கம்) :** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

கிளை விதி 2, துணைக் கிளைவிதி (2) இன் வரம்புரையில் ''அத்தகைய விவகாரங்கள் தொடர்பாக'' என வரும் இடத்தில் அதற்கு மாற்றாக,

> ''அந்நபர் தாமாக விரும்பித் தேர்ந்தெடுக்காத அத்தகைய விவகாரங்கள் தொடர்பாக''

எனும் தொடர் இடம்பெறலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புறு உறுப்பினர், இந்துச் சட்டத்தின் ஆளுகையின்கீழ் வரத் தமக்கும் விருப்பிசைவு தர வாய்ப்பு வேண்டுகிறார்.

**டாக்டர் அம்பேத்கர் :** அதையொத்த வேண்டுகோள்தான்.

**திரு. பர்மன்:** எனது நோக்கம் என்னவெனில், இந்துச் சட்டத்தின் மரபுகளையும் நடைமுறைகளையும் தாமாக விரும்பி ஏற்றுக் கொண்ட ஒருவர் தாம் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டவரல்லர் எனக் கூற அனுமதிக்கப்படலாகாதென்பதே; ஆனால் அந்த நபர் குறிப்பிட்ட சில விவகாரங்களில் இந்துச் சட்டத்தின் ஆளுகையின் கீழ் வருதற்குரியரல்லர் என்று மூன்றாம் தரப்பு நபர் ஒருவர் வாதிடவும், நிறுவவும் இடமுண்டு. ஆனால் அவராகவே விரும்பி ஏற்றுக்கொண்டிருப்பின் மூன்றாம் நபர்கள் அதை மறுப்பதை அனுமதிக்கலாகாது என்பதே திருத்தத்தின் நோக்கம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒருவர் தாமாகவே விருப்பிசைவு தெரிவித்திருப்பாரெனில், அவர் இந்துச் சட்டத்தின் பழைய விதிமுறைகளுக்கு உட்பட மாட்டார். மாண்புறு உறுப்பினர் இதையே தெளிவுபடுத்த விரும்புகிறார் போலும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(i) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (ஆ) நீக்கப்படலாம்.

(ii) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (அ)வில், ''இந்துக்கள், அதாவது இந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள் அனைவரும்'' என்ற தொடருக்கு மாற்றாக, ''சமயத்தால் இந்துக்களாவோர்'' எனும் தொடர் இடம் பெறலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இத்திருத்தம் மாண்புமிகு அமைச்சர் அவர்களது திருத்தமேயன்றோ.

**திரு. நசிருத்தீன் அகமது:** சொல் மாறுபாடு ஒன்று உண்டு. அடுத்து, நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(iii) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (ஆ)வுக்கு பதிலாக

''(ஆ) சமயத்தால் சமணராகும் நபர் எவருக்கும்'' என்பதை மாற்றியிடலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது ஒரு மாற்றுத் திருத்தம்?

**திரு. நசிருதீன் அகமது :** மேலும் நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

> (iv) கிளைவிதி 2, துணைக்கிளைவிதி (1)இன் பகுதி (ஆ)இல் ''சமணர் அல்லது சீக்கியர்'' என்பதற்கு மாற்றாக, ''அல்லது சமணர்'' என இடம் பெறலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சீக்கியர்களையும் பௌத்தர் களையும் நீக்கிவிட அவர் விரும்புகிறார்.

**திரு. நசிருத்தீன் அகமது :** ஆம் ஐயா.

**டாக்டர் அம்பேத்கர் :** பல்வேறு வகையான திருத்தங்கள் வந்துள்ளன.

**திரு. நசிருத்தீன் அகமது :** அவற்றுள் சில மாற்றுத் திருத் தங்களே.

**டாக்டர் அம்பேத்கர்:** பௌத்தர்களும் சீக்கியர்களும் நீக்கப் படலாமென ஒரு திருத்தம் கூறுகிறது; சமணர்கள் நீக்கப்படலாமென மற்றொரு திருத்தம் கூறுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சமணர்கள் நீக்கப்படலாகா தென்பதே உறுப்பினர் விருப்பம்.

**திரு. நசிருத்தீன் அகமது :** சமணர்கள் இருக்க வேண்டும். திருத்தங்களில் பல்வித வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் இவற்றுள் எவற்றை அவை ஏற்றுக்கொள்ளும், குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் ஏற்றுக்கொள்வார் என்பதை உறுப்பினர்கள் அறியாததே.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவரது திருத்தங்கள் அனைத்திலும் 'சமணர்' இடம்பெறுவதைக் காண்கிறோம். பௌத்தர்களையும், சீக்கியர்களையும்தான் அவர் நீக்கிவிட விரும்பு கிறார்.

**திரு. நசிருத்தீன் அகமது:** 'சமணர்கள்' இருப்பதை நான் எதிர்க்கவில்லை; ஆனால் சீக்கியர்கள் தாம் சேர்க்கப்படுவதைக் கடுமையாய் எதிர்க்கின்றனர்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர்கள் இப்போது இந்துச் சட்டத்தின் ஆளுகையில்தான் இருக்கின்றனர்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இத்தகைய இந்துச் சட்டம் அவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட வேண்டுமா என்பதே தலையாய சிக்கல். அவர்களும் இந்துக்களே என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்போது கொண்டுவரப்படும் சட்டம் இந்து முரண் சட்டம். இந்து எதிர் சட்டமாயிருப்பதால்தான் வலிந்து திணிப்பதற்கு எதிர்ப்பு?

அடுத்து நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(v) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பிரிவு (இ) (1)இல் ''முறையின்றிப் பிறந்த'' என்பதற்குப் பின்னர், ''பதினெட்டு வயது நிறைவடைந்தவராயும், அவரே இந்துவாகவும் இருப்பின்'' எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

(vi) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (ஈ)இல் 'பெற்றோர்கள் இருப்பின்' என்பதற்கு பதிலாக, ''இருந்திருப் பின்'' என்று மாற்றியிடப்படலாம்.

(vii) கிளைவிதி 2, துணைக் கிளை விதி (1) இன் பகுதி (ஈ)யில்,

''மாற்றத்திற்கு முன்னர் அவருக்கிருந்த உரிமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் பாதகமில்லாதவாறு'' எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இங்கு, சற்று நிறுத்த விரும்புகிறேன். முதலில் இதன் விளைவுகளைப் புரிந்து கொள்வோம். இந்து ஒருவர், இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சமய மாற்றம் செய்வாரென்றாலும், அவரது உரிமைகளும் கடப்பாடுகளும் இச் சட்டத்தின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட வேண்டுமென்று, திரு. ஜஸ்பத் ராய் கபூர் விரும்புகிறார். ஆனால் இத்திருத்தமோ, சமய மாற்றம் செய்யும் ஒருவரது உரிமைகளும் கடப்பாடுகளும் பாதிக்கப்படாது என்று கூறுகிறது.

**திரு. நசிருத்தீன் அகமது :** அவருடையது பிழை எனில், எனதும் அதேயளவுக்குப் பிழையானதே. நாம் குழப்ப வட்டம் ஒன்றில் சிக்கியுள்ளோம். சமய மாற்றம் என்ற கருத்துக்கே எதிரானவை யாய் இரு திருத்தங்களும் உள்ளன. ஒருவர் சமயமாற்றம் செய்தால், தமது கடந்த காலத்தைத் துறந்து புதிய வாழ்க்கையைத் தொடங்கு கிறார். கபூர் அவர்களின் திருத்தம் தந்திருப்பது போன்றே, நானும் தந்துள்ளேன். இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்; அல்லது இரண்டுமே தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சமய மாற்றத்தினால் சட்ட உரிமைகளோ, சிவில் உரிமைகளோ மறுக்கப்படலாகா தென்பதே, இருவரின் திருத்தங்களின் சாரம். சொத்து, வாரிசுரிமை ஆகியவற்றில் ஒருவரது உரிமைகளும் கடப்பாடுகளும் சமய மாற்றத்தால் பாதிப்படைய லாகாது.

**திரு. நசிருத்தீன் அகமது:** கிறித்தவராய்ச் சமய மாற்றம் அடையும் இந்துக்களின் கடந்த கால உரிமைகளைக் காப்பதற்கெனப் பழைய சட்டம் ஒன்றுண்டு. அது பழைய உரிமைகளோடு, கடப்பாடு களையும் நிலைநிறுத்துகிறது.

(viii) அடுத்து நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

கிளை விதி 2, துணைக் கிளை விதி (1)க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டுவதாவது:

> "(1அ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும், பழங்குடி இனத்த வர்க்கும் இச்சட்டம் பொருந்தாது."

**டாக்டர் எம்.எம். தாஸ்** (மேற்கு வங்கம்) : தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சார்பில் பேச மாண்புமிகு உறுப்பினருக்கு என்ன உரிமை யுண்டு என அறிய விரும்புகிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** தற்போது நான் திருத்தங்களைத் தாக்கல்தான் செய்கிறேனேயன்றி அவற்றை விளக்க முனைய வில்லை; எனவே அருமை நண்பர்க்கு நிறைவான பதில் அளிக்க முயல்வேனில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வரையறையின்றிப் பிறர் மீது பற்று வைப்போர் சிலருண்டு.

**திரு. நசிருத்தீன் அகமது :** எனது காரணங்களை உரைப்பேன்; இச்சட்டத்தில் சில பகுதிகள் அவர்களால் செரித்துக் கொள்ள இயலாதவை. எடுத்துக் காட்டாக அவர்களது திருமண, மணமுறிவு நடைமுறைகள் மிக எளியவை. நீங்கள் அவர்களது வாழ்க்கையைச் சிக்கல் மிகுந்ததாக்கப் பார்க்கிறீர்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பினர் தாம் இந்துச் சட்டத்தையே முழுமையாய் எதிர்ப்பதை மறந்துவிட்டார். அவர்களின் நடைமுறையில் திருமண மணமுறிவு முறைகள் மிக எளியன எனில், இப்புதிய முறைகள் புகுத்தப்பட வேண்டாமெனில், அது கருதிப் பார்க்கப்பட வேண்டிய கருத்து (அவர்கள் இந்து சமூகத்தைச் சேராதவர்கள் என்றால் இச்சட்டமே அவர்களுக்குப் பொருந்தாது போய்விடும்).

**திரு. நசிருத்தீன் அகமது:** எனது எதிர்ப்பு சட்டத்தின் முழுமைக்கும் என்பதுடன் அதன் ஒவ்வொரு பகுதிக்கும் தான் - தனித் தனியாகவும் ஒட்டுமொத்தமாகவும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தொகுப்புப் பகுதியொன்றும் உண்டு என்பதை மாண்புறு உறுப்பினர் மறந்துவிட்டார். அவரது திருத்தத்தின்படி மறுக்கவியலாத சில பகுதிகளும்கூடப் பொருந்தா எனக் கொள்ள நேரிடும். மாண்புறு உறுப்பினர் விரும்புவது என்ன என்பது குறித்துத் தொடக்க நிலை ஆய்வில்தான் உள்ளோம்.

**திரு. நசிருத்தீன் அகமது :** அடுத்து நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(ix) கிளைவிதி 2இன் துணைக்கிளைவிதி (2) நீக்கப்படலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இஃதொரு எச்சமுறை திருத்தமாகும்; முற்றிலும் பொருள் அற்றதாய்த் தோன்றுகிறது. பின்னர் இச்சட்டம் எதைக் கட்டுப்படுத்தும்? இந்திய வாரிசுரிமைச் சட்டத்தையா?

**திரு. நசிருத்தீன் அகமது :** ஒரு மனிதர் தமக்கெனப் புதிய சமயம் ஒன்று கொண்டவராய் இருக்கலாம். ஜப்பானில் ஷின்டோயியம் என்றொரு சமயம் உண்டு. அந்த சமயத்தைக் கடைபிடிக்கும்

ஒருவர் இந்தியாவுக்கு வந்தாரென்றால் அவருக்கு இந்துச் சட்டத்தைப் பொருத்துவீர்களா அன்றி முஸ்லீம் சட்டத்தையா? அவர் தமக்கு உரிய சட்டத்தினால்தானே ஆளப்பட வேண்டும்? இச்சட்டத்தின் வரம்புரையில் ஒருவர் பிறிதொரு சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவரா என்பது மெய்ப்பிக்கப்பட்டால், அவருக்கு இந்துச் சட்டம் பொருந்தாது என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு மெய்ப்பிக்கும் பொறுப்பு யாரைச் சாரும்? எந்தச் சமயத்தையும் சாராத ஒருவர் இந்தியாவுக்கு வருவதாய்க் கொள்வோம். ஆனால் அவருக்குக் குடிமை உரிமைகளும் கடப்பாடுகளும் உண்டு. எனில், அவர் இந்துச் சட்டத்தின் ஆளுகைக் குட்படுவாரா? ஏன் முஸ்லீம் சட்டம் அல்லது கிறித்தவர் சட்டம் அல்லது சீக்கியர் சட்டத்தின் ஆளுகைக்கு உட்படக் கூடாது? ஒவ்வொரு மனிதரும் அவருக்கு உரித்தான சட்டத்தின் ஆளுகைக்கே உட்பட வேண்டும். இவ்வரம்புரையை நான் தக்க சமயத்தில் விளக்குவேன். இதன் வரம்புரை வெகுதூரம் எல்லை கடந்து செல்கிறது. இந்தியாவுக்கு வரும் ஒருவர் தாம் முஸ்லீமோ, கிறித்தவரோ, பார்சியோ, யூதரோ அல்லாதவர் எனில் தமது தகைமை நிலையை நிறுவ வேண்டிய பொறுப்பு சுமத்தப் படுகிறார். அவர் தமக்கு இந்துச்சட்டம் பொருந்தாது என நிறுவுதல் எவ்வாறு இயலும்?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பன்னாட்டுத் தனிநபர் சட்டமே அவரைக் கட்டுப்படுத்தும். இந்தியாவுக்கு வருகிறார் என்பதனாலேயே அவர் இந்துச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட மாட்டார்.

**திரு. நசிருத்தீன் அகமது :** தமது நிலையை நிறுவும் பொறுப்பு அயலவர் ஒருவர் மீது சுமத்தப்படுகிறது என்பதே சிக்கல். இதனால் அவர் பல இடையூறுகளுக்கு ஆளாகலாம்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** இந்துக்கள் அல்லாதோரில், பழைய இந்துச் சட்டத்தின் சில பகுதிகளின் ஆளுகைக்கேனும் உட்படுதற் குரியோர்க்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும். (பழைய) இந்துச் சட்டத்தின் எப்பகுதியும் ஒருவருக்குப் பொருந்தாதெனில், இச் சட்டமும் அவருக்குப் பொருந்தாது.

**திரு. நசிருத்தீன் அகமது :** இச்சட்டம் பொருந்துமா என்பது அதன் சொல்லாட்சியைக் கொண்டுதான் முடிவு செய்யப்பெறுமே யன்றி, உட்பொருளைக் கொண்டன்று.

**திரு. ஜே.ஆர். கபூர் :** செல்லாட்சி தெளிவாகத்தான் உள்ளது. வரம்புரையில், ''அத்தகைய நபர் .... என்று மெய்ப்பிக்கப்பட்டால்'' என வருகிறது. இங்கு ''அத்தகைய நபர்'' என்பது துணைக் கிளை விதி 2இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவரைக் குறிக்குமே யன்றி அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ இருந்து வரும் நபர்களை யன்று.

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வ தாவது :

(X) கிளைவிதி 2இன் துணைக்கிளைவிதி *(3)* நீக்கப்படலாம். இத்துணைக் கிளைவிதி ஒரு சுழல் வாதமாகவே எனக்குத் தோன்று கிறது. அது கூறுவதாவது :

> ''இச்சட்டத் தொகுப்பின் எப்பகுதியிலேனும் 'இந்து' எனும் சொல் இடம் பெறும்போதெல்லாம், சமயத்தால் இந்துவாய் இல்லாமலிருப்பினும், இச்சட்டத் தொகுப்பின் ஆள் வரம்புக்கு உட்படக்கூடியோர் அனைவரையும் அது குறிக்கும்''

இச்சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்தும் என்பதைத் தான் நாம் தெளிவுறுத்த வேண்டும். நாமோ, இச்சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்துமோ, அவர் இதற்குக் கட்டுப்பட்டவர் என்று கூறுகிறோம். இந்துக்களையன்றி வேறு எந்த மக்களுக்கு இச் சட்டத் தொகுப்பு பொருந்தும்? என்பதே நான் விடையளிக்க வேண்டிய வினா. அதற்கு இச்சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்துமோ அவர் இந்து எனக் கூறல் சுழல்வாதமேயாகும். நாம் கருத்தைத் தெளிவாக உரைத்தாக வேண்டும். நான் பிழையே செய்வதில்லை என்று கூறிக்கொள்ள மாட்டேன். ஆனால் இங்கு இடர்ப்பாடிருப்பதாய் உணர்கிறேன்.

அடுத்து நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது:

(xi) கிளை விதி 2இன் துணைக்கிளை விதி *(4)* நீக்கப்படலாம்.

**டாக்டர் அம்பேத்கர் :** அது எனது திருத்தமும் கூட.

**திரு. நசிருத்தீன் அகமது :** மேலும் நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

(xii) கிளைவிதி 2இன் துணைக்கிளைவிதி (4)ஐ அடுத்துப் பின்வரும் துணைக் கிளைவிதி சேர்க்கப்படலாம்.

''(5) இப்பிரிவில் கூறப்பட்டிருப்பது எவ்வாறிருப்பினும், எந்தவொரு காலத்திலும், எந்தவொரு கட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில அரசுகள் சட்ட மியற்றலின் வாயிலாய், மாநிலத்தில் எப்பகுதியினருக்கு, எவ்வகுப்பினருக்கு, எப்பிரிவினருக்கு இச்சட்டம் பொருந்து மென அவ்வப்போது முடிவு செய்கிறதோ அவர்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும்.''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தத் திருத்தத்தைப் பொறுத்தமட்டில், அதற்கு உரிய கட்டம் இதுதானா என்பதை நாம் முடிவு செய்தாக வேண்டும்; அல்லது....

**டாக்டர் அம்பேத்கர்:** அது கிளை விதி Iஇன் கீழ் வர வேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இது கிளைவிதி Iஇன் கீழ் கருதப் படுதல்தான் முறையானதென்று நாங்கள் எண்ணினால்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இத்திருத்தம் நிறுத்தி வைக்கப்படுகிறது; கிளை விதி Iஇன் மீதான விவாதத்தின்போது எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜுன்ஜுன்வாலா (பீகார்):** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :

கிளை விதி 2க்குக் கீழ்க்காணும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

''மேற்காணும் கிளை விதிகளில் கூறப்பட்டிருப்பது எவ்வா றிருப்பினும், எந்தவொரு நபர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டுகளுக்குள்ளாகவோ, சிறுவராயின் உரிய வயது நிறைவடைந்து ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவோ, தாம் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்பவில்லை யென்று, நாடாளுமன்றத்தால் இதற்கென வரையறுக்கப் படும் முறைப்படி, வரையறுக்கப்படும் அதிகாரிகளிடம் பதிவு செய்துகொள்கிறாரோ, அவருக்கு இச்சட்டம் பொருந்தாது.'

இச்சட்டத்தின் கீழ் வர விரும்புவோர்க்கு அவ்வாறு பதிவு செய்துகொள்ளும் பொறுப்பைச் சுமத்தும் வகையிலான திருத்தம் ஒன்றை ஏற்கெனவே தாக்கல் செய்துள்ளேன். அது ஏற்றுக்கொள்ளப் படாதெனில், இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்பாதோர் மீது அவ்வாறு பதிவு செய்து கொள்ளும் பொறுப்பைச் சுமத்தும் திருத்தம் இது.

*திரு. பட் : நான் இறைஞ்சித் தாக்கல் செய்வதாவது :*

*கிளை விதி 2இன் துணைக்கிளை விதி (3)இல் ''இருப்பினும் ஆளுகைக்குட்படுவோர்'' என்பதன் பின், ''அல்லது ஆளுகைக் குட்பட விரும்புவோர்'' என்பது சேர்க்கப்படலாம்.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் இத்திருத்தங் களை முறைப்படி அவைமுன் வைப்பேன். கிளைவிதி 2 குறித்து ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்களும், அவை முன் வைக்கப்பட்டுத்தான் உள்ளன. இனித் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அவை விவாதம் தொடங்கு முன்னர் தாக்கல் செய்யப்பட வேண்டும்; ஏனெனில், விவாதத்தினிடையே திருத்தங்கள் தாக்கல் செய்யப்பட்டால், ஏற்கெனவே உரையாற்றிய உறுப்பினர்கள் அத்திருத்தங்கள் மீது கருத்து தெரிவிக்க வாய்ப்பின்றிப் போய்விடும். இது விதிமுறை நுணுக்கச் சிக்கலன்று. புதிய திருத்தங்கள் பொருள் ஆழம் கொண்டவையாயிருப்பின் பிற திருத்தங்கள் குறித்து முன்னரே உரையாற்றிய உறுப்பினர்கள் இவை குறித்துக் கருத்துத் தெரிவிக்க இயலாது போய்விடும். ஆனால் இந்த விவாதத்தில், அப்படிக் கருத்து தெரிவிக்க மாண்புமிகு உறுப்பினர் எவரேனும் விரும்பினால், தேவையெனில் அவருக்கும் ஒரு வாய்ப்பு தரக் கருதுவேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** சிறு வாய்ப்பு ஒன்று.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒரு சிறு வாய்ப்புதான். ஆனால் அவர்கள் ஏற்கெனவே கூறியதைத் திரும்பக் கூறிக் கொண் டிருக்கக் கூடாது. அது நீங்கலாக, எந்தவொரு கிளைவிதி, துணைக் கிளைவிதி மீதும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை அவ்விதி மீதான விவாதத்தின் தொடக்கத்திலேயே தாக்கல் செய்து விடுமாறு மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டுகிறேன். இல்லையேல் திரும்பத் திரும்ப திருத்தங்களின் தாக்கலும், எல்லா விவகாரங்களையும் குறித்த உரைகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கக் காரணமாகும்.

டாக்டர் அம்பேத்கரின் திருத்தங்களை நான் ஏற்கெனவே அவை முன் வைத்துள்ளேன். இப்போது, இன்று தாக்கல் செய்யப் பட்ட திருத்தங்களையும் அவைமுன் வைக்கிறேன்.

தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்களாவன :

(1) கிளைவிதி 2க்கு திரு. ஜே.ஆர். கபூர் அவர்கள் முன் மொழிந்து 93-வதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

> ''திருமணத்துக்கு முன்னர் மணமகன், மணமகள் இருவருமோ, அன்றித் திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி இருவருமோ பகுதி IIஇல் உள்ள திருமணம், மணமுறிவு தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய் அறிக்கை தந்திருந்தால்தான் அவ்விதிமுறைகள் அவர்களைக் கட்டுப்படுத்தும்.''

(2) கிளைவிதி 2க்கு மாற்று வாசகமாவது:

> ''2. சட்டத் தொகுப்பின் பயன்பாடு :- இந்தியா எனப் படும் பாரதத்தின் குடிமக்களில், உரிய வயதடைந்த பின் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட இசைவதாய் எழுத்து மூலம் அறிக்கை தந்து, அதை மைய அரசு அதற்கென வகுக் கும் விதிமுறைகளின்படிப் பதிவு செய்து கொண்டவர்களை மட்டுமே இச்சட்டம் கட்டுப்படுத்தும்.
>
> திருமணத்துக்கு முன்னர் மணமகன், மணமகள் இரு வருமோ, அன்றித் திருமணத்திற்குப் பின்னர் கணவன் மனைவி இருவருமோ, பகுதி IIஇல் உள்ள திருமணம், மண முறிவு குறித்த விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய் அறிக்கை தந்திருந்தால்தான் அவ்விதிமுறைகள் அவர்களைக் கட்டுப்படுத்தும்.''

(3) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து, 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில், கிளை விதி 2, துணைக் கிளைவிதி (1)க்கான திருத்தத்தின் பகுதி (1) (ii)க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டியதாவது :

''(iii) பின்வருமாறு பகுதி (2) சேர்க்கப்படலாம்:

> '(உ) இச்சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் எந்தவொரு சமயத்திற்கோ, நம்பிக்கைக்கோ மாற்ற மடைந்தவருக்கு'

*(4) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில், கிளை விதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (1) (ii)க்கான திருத்தத்தில், ''சீக்கிய சமயம்'' என்பதற்குப் பின்னர், ''அல்லது முஸ்லீம், கிறித்தவ, யூத, பார்சி சமயங்களைத் தவிரப் பிறிதேதாவதொரு சமயத்திற்கோ, நம்பிக்கைக்கோ'' எனும் தொடர் சேர்க்கப்படலாம்.*

*(5) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தின், பகுதி (1)க்குப் பிறகு சேர்க்க வேண்டியதாவது :*

> *''(1 அ) துணைக் கிளை விதி (2)க்கான வரம்புரையில் 'அவர் அத்தகைய விவகாரங்களில் இச்சட்டத் தொகுப்பின் ஆளுகைக்குள் வர இசைவதாய் இதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படி அறிக்கை தந்திருந்தாலன்றி' எனும் நிபந்தனை சேர்க்கப்படலாம்.''*

*(6) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3ஆவதாக அச்சிடப்பட்டிருக்கும் திருத்தத்தின் கிளை விதி 2க்கான திருத்தத்தின் பகுதி (1)க்குப் பிறகு,*

> *''(1 A) துணைக் கிளைவிதி (3)இல் ''விதிமுறைகள்'' என்பதற்கு பதிலாக ''விதிமுறைகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ என்று மாற்றியிடப்படலாம்.''*

> *என்பது சேர்க்கப்படலாம்.*

*(7) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து, 3 ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தின் கிளை விதி 2, பகுதி (1)க்குப் பிறகு, சேர்க்கப்பட வேண்டியதாவது:*

> *'' (1A) 'இங்கு விளக்கப்பட்டுள்ள விவகாரம் அல்லது விவகாரங்கள் தொடர்பாக' என்று துணைக் கிளைவிதி (3) இல் சேர்க்கப்படலாம்.''*

*(8) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து, 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தில், பகுதி (2)இன் மாற்று வாசகமாவது:*

> *''(2) துணைக்கிளை விதி (4) பின்வருமாறு மாற்றியமைக்கப் படலாம்:-*

'(4) இந்தச் சட்டத்திற்கு முழுமையாகவோ, அதன் பகுதி அல்லது பகுதிகளுக்கோ உட்படுவதாய், அதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படி இசைவினை அறிக்கை தந்துள்ள எந்த ஒரு நபருக்கும் கூட இச்சட்டம் முழுமை யாகவோ பகுதி அல்லது பகுதிகளாகவோ பொருந்தும்.'''

(9) மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் முன்மொழிந்து 3ஆவதாக அச்சிடப்பட்டுள்ள திருத்தத்தின் பகுதி (2)க்குப் பிறகு சேர்க்கப்பட வேண்டியதாவது:

''(3) துணைக்கிளை விதி (3)க்குப் பிறகு பின்வரும் துணைக் கிளைவிதி சேர்க்கப்படலாம்:

'(4) (வயது வந்தோராய்க் கருதப்படுதற்குரிய) வயது நிறை வடைந்த எவரும், இந்தச் சட்டத்திற்கோ அதன் பகுதி களுக்கோ உட்பட இசைவதாய் அறிக்கை தந்து, அவ்வறிக் கையை இதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளின் படி பதிவு செய்து கொள்வோர் எவருக்கும் இச்சட்டமோ அதன் உரிய பகுதிகளோ பொருந்தும் :

திருமணத்துக்கு முன் மணமகன் மணமகள் இரு வருமோ, அன்றித் திருமணத்திற்குப்பின் கணவன் மனைவி இருவருமோ, பகுதி IIஇல் உள்ள திருமணம், மணமுறிவு குறித்த விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய் அறிக்கை தந்திருந்தால் மட்டுமே அவர்களுக்கு அவ்விதிமுறைகள் பொருந்தும்.

(10) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (அ)வில் ''இந்துக்கள், அதாவது இந்து சமயத்தைக் கடைப்பிடிப்போர்'' என்பதற்கு பதிலாக, ''சமயத்தால் இந்துக்களாவோர்'' என்று மாற்றி யிடப்பலாம்.

(11) கிளை விதி 2, துணைக்கிளை விதி (1)இன் பகுதி (அ)வில் ''உறுப்பினர்கள்'' என்பதற்கு பதிலாக, ''பின்பற்றுவோர்'' என மாற்றி யிடப்படலாம்.

(12) கிளைவிதி 2, துணைக் கிளைவிதி (1)இன் பகுதி (ஆ) நீக்கப்படலாம்.

(13) கிளைவிதி 2, துணைக்கிளைவிதி (1)இன் பகுதி (ஆ)வுக்கு பதிலான மாற்று வாசகமாவது :

''(ஆ) சமயத்தால் சமணரான எந்தவொரு நபருக்கும்''

*(14)* கிளைவிதி 2, துணைக் கிளைவிதி *(1)*இன் பகுதி *(ஆ)* வில் ''சமணர் அல்லது சீக்கியர்'' என்பதற்கு பதிலாக, ''அல்லது சமணர்'' என மாற்றியமைக்கலாம்.

*(15)* கிளை விதி 2இல் ''சீக்கியர்'' என வருமிடங்களில் எல்லாம் அதை நீக்கலாம்.

*(16)* கிளை விதி 2, துணைக் கிளைவிதி *(1)*இன் பகுதி *(இ)* (i)இல், ''முறையின்றிப் பிறந்த'' என்பதற்குப் பின்னர் சேர்க்கப்பட வேண்டியதாவது:

> ''அவர் பதினெட்டு வயது நிறைவடைந்தவராயும், அவரே இந்துவாகவும் இருப்பின்''

*(17)* கிளை விதி 2, துணைக் கிளை விதி *(1)*இன் பகுதி *(இ)* (i)இல், ''பெற்றோர்கள்.... இருப்பின்'' என வருவதையடுத்து,

''அல்லது.... இருந்திருப்பின்'' எனும் தொடர் சேர்க்கப் படலாம்.

*(18)* கிளை விதி 2, துணைக் கிளைவிதி *(1)*இன் பகுதி *(இ)* (ii)க்குப் பின்னர், சேர்க்கப்பட வேண்டியதாவது:

> ''(iii) எந்தவொரு அனாதைக்கோ, திக்கற்று அரசினால் வளர்க்கப்பட்ட குழந்தைக்கோ''

*(19)* கிளை விதி 2, துணைக் கிளை விதி *(1)*இன் பகுதி *(ஈ)* யில்,

> ''சமய மாற்றத்திற்கு முன்னர் அவருக்கிருந்த உரிமைகளுக்கும், கடப்பாடுகளுக்கும் பாதிப்பு ஏதுமின்றி''

எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

*(20)* கிளை விதி 2, துணைக் கிளைவிதி *(1)*க்குப் பின் சேர்க்கப் பட வேண்டியதாவது :

> ''(1 A) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும், பழங்குடி இனத்தவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தாது.''

*(21)* கிளைவிதி 2இன் துணைக் கிளை விதி *(2)* நீக்கப்படலாம்.

(22) கிளை விதி 2இன் துணைக் கிளை விதி (2) பின்வருமாறு மாற்றியமைக்கப்படலாம்:

> "(2) இங்கு கூறப்பட்டுள்ள விவகாரங்களில் இந்துச் சட்டத்தின் அல்லது மரபு நெறியின் அல்லது நடைமுறையின் ஆளுகையில் ஒருவர் இருந்து வந்திருப்பின், அவரது சமயம் எதுவாயினும், அவருக்கு இச்சட்டம் பொருந்தும்."

(23) கிளை விதி 2, துணைக் கிளை விதி (2)இன் வரம்புரையின் இறுதியில், "குறிப்பிட்ட அவ்விவகாரங்களில்" என வருவதைக் கீழ்வருமாறு மாற்றியமைக்கலாம்:

> "அந்நபர் தாமாக விரும்பித் தேர்ந்தெடுக்காத விவகாரங்களில்"

(24) கிளை விதி 2இன் துணைக் கிளைவிதி (3) நீக்கப்படலாம்.

(25) கிளைவிதி 2இன் துணைக் கிளைவிதி (3) பின்வருமாறு மாற்றியமைக்கப்படலாம்:

> "இச்சட்டத் தொகுப்பில் 'இந்து' எனும் சொல் எங்கு இடம் பெற்றாலும், அதற்கு, குறிப்பிட்ட நபர் ஒருவர் சமயத்தினால் இந்து அல்லரேனும், (பழைய) இந்துச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவராகவோ, இச்சட்டத்தின் ஆளுகைக் குட்பட இசைவதாய், இதற்கென மத்திய அரசு வகுக்கும் விதிமுறைகளுக்கேற்ப அறிக்கை தந்தவராயிருப்பின், அவரையும் குறிக்கும் வகையில் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(26) கிளை விதி 2, துணைக் கிளை விதி (3)இல் "எனினும்... ஆளுகைக்கு உட்பட்டிருப்பின்" என வருவதையடுத்து "அல்லது ஆளுகைக்கு உட்பட விரும்பினால்" எனும் தொடர் சேர்க்கப்படலாம்.

(27) கிளை விதி 2இன் துணைக் கிளை விதி (4) நீக்கப்படலாம்.

(28) கிளை விதி 2க்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

> "எந்தவொரு நபரும், இச்சட்டத்தின் II அல்லது VII அல்லது II, VII இரண்டிலும் காணப்படும், திருமணம், மணமுறிவு

ஆகியவை குறித்த விதிமுறைகளுக்கு உட்பட இசைவதாய், உரிய வயதடைந்தபின் எழுத்து மூலம் அறிக்கை தந்து, அவ்வறிக்கையை இதற்கென மைய அரசு வகுக்கும் விதிமுறைகளின்படி பதிவு செய்திருந்தால் அன்றி, அவருக்கு மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் பொருந்தா.

மேலும் திருமணம், மணமுறிவு ஆகியவை குறித்து பகுதி IIஇல் காணப்படும் விதிமுறைகளுக்கு உட்படுதற்கான இசைவு அறிக்கையை மணமகன் மணமகள் இருவருமோ, அல்லது திருமணத் திற்குப் பின்னர் எனில் கணவன் மனைவி இருவருமோ தந்திருந்தா லன்றி அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட விதிகள் பொருந்தா.''

*(29)* கிளை விதி 2க்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப் படலாம்:

''மேற்காணும் கிளை விதிகளில் கூறப்பட்டிருப்ப தெவ்வாறு இருப்பினும் எந்தவொரு நபர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டுகளுக்குள்ளாகவோ, அல்லது சிறுவர் ஆயின், உரிய வயது நிறைவடைந்த பின்னர் ஐந்தாண்டுகளுக்கு உள்ளாகவோ, தாம் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்பவில்லையென்று, நாடாளுமன் றத்தால் (இனி) வகுக்கப்படும் விதிமுறைக்கேற்ப, நிர்ண யிக்கப்பட்ட அதிகாரிகளிடம் தமது பெயரைப் பதிவு செய்து கொள்கிறாரோ, அவருக்கு இச்சட்டம் பொருந்தாது.

*(30)* கிளைவிதி 2க்கு பின்வரும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

''சட்டத்தின் இப்பிரிவில் கூறப்பட்டிருப்பது எவ்வா றாயினும், எந்தவொரு நபரும் தாம் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட இசைவதாய் வரையறுக்கப்பட்ட அதிகாரிகளிடம், உரிய முறையில் தமது பெயரைப் பதிவு செய்து கொண்டிருந் தாலன்றி, அவருக்கு இச்சட்டம் பொருந்தாது.''

இத்திருத்தங்களுடன், வரிசைக்கிரம அறிக்கை நட்சத்திரக் குறியிடப்பட்டுள்ள, கடந்த அமர்வில் தாக்கல் செய்யப்பட்ட திருத் தங்களும் அவை முன் வைக்கப்படுகின்றன. கிளைவிதியும், அதன் மீதான திருத்தங்கள் அனைத்தும் தற்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பொதுவாக மாண்புறு உறுப்பினர்களில் இதுவரை விவா தத்தில் கலந்து கொள்ளாத உறுப்பினர்களை மட்டுமே தமது

இருக்கையிலிருந்து எழுந்து தமது விழைவைத் தெரிவிக்குமாறு வேண்டுவேன். ஏற்கெனவே பேசியுள்ள மாண்புமிகு உறுப்பினர் எவரேனும் புதிய கருத்து ஏதும் தெரிவிக்க விரும்பினால், அவருக்கு வாய்ப்பளிப்பது குறித்து பின்னர் கவனிக்கப்படும்; தேவையெனில் வாய்ப்பு தரப்படும்.

**பண்டிட் மாளவியா** (உத்தரப் பிரதேசம்) : ஐயா, விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இக் கிளை விதிக்கு மேலும் புதிய திருத்தங்களைத் தாக்கல் செய்ய எவரேனும் விரும்பினால் தாங்கள் அனுமதி வழங்குவீர்களா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இயல் நடைமுறையில் அவ்வாறு அனுமதி தருவதால், இடர்ப்பாடுகள் மிக விளைவதையே நான் கண்டுள்ளேன். பின்னைய காலகட்டங்களில் திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டால் அவை குறித்து அவையோர் புதிதாய்ச் சிந்திக்க வேண்டிய நிலைமை உருவாகும். இது வசதிக் குறைவே. மேலும்....

**பண்டிட் மாளவியா:** ஆனால் இப்போது நிலவும் தனித் தன்மை வாய்ந்த சூழலைக் கருத்தில் கொண்டு நோக்கினால்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விவாதத்தின்போது மாறுபட்ட கருத்துகளிடையே சமரசம் விளைவிக்கும் நோக்கில் கொண்டுவரப்படும் திருத்தங்கள் இருப்பின் அவை ஏற்கப்படலாம் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் முற்றிலும் புதிய திருத்தங்கள் தாக்கல் செய்யப்படின், அவை மீண்டும் புதிய விவாதத்தைத் தோற்றுவிக்குமென அவையோரே உணர்வர்; எனவே அவற்றை அனுமதிப் பதற்கில்லை.

**குவாஜா இனையத் உல்லா** (பீகார்) : அரசியலமைப்புச் சட்டத் துடன் முரண்படும் திருத்தங்கள் முறையற்றவை என்று தள்ளப்பட மாட்டாரா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அத்தகைய நிலைமை தோன்றும் போது மாண்புறு உறுப்பினர் அவர்கள், முறையற்றவை, அவையின் வரம்புக்கு அப்பாற்பட்டவை ஆகிய கருத்துகளைக் குறித்து அந்தக் காலகட்டத்தில் எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டு கிறேன்.

**திரு. எம். நாயக் (ஒரிசா) :** தாக்கல் செய்யப்படும் திருத்தங்களில் எவையேனும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயரில் இருந்தால், அது ஏதாவது ஒருவர் தாக்கல் செய்ததாய்க் கருதப்படுமா? அல்லது, அவ்வுறுப்பினர்கள் அனைவருமே தாக்கல் செய்ததாய்க் கருதப்படுமா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** குறிப்பிட்ட உறுப்பினர்கள் அனைவருமே தாக்கல் செய்ததாகத்தான் எடுத்துக் கொள்வேன்.

**திரு. எம். நாயக்:** திருத்தம் தாக்கல் செய்த மாண்புறு உறுப்பினர் தற்போது அவையில் இல்லையெனில் என்ன நிகழும்?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் பாதுகாப்பான நடைமுறையையே பின்பற்றவிருக்கிறேன். குறிப்பிட்டதொரு திருத்தத்தை ஒருவருக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தந்திருக்கலாம் என்பது மெய்யே, அவர்களில் ஒருவர் தமது இருக்கையில் இல்லையெனில், அவர்களில் மற்றொருவர் அதைத் தாக்கல் செய்யத் தடையில்லை. அனைவருமே அவரவர் இருக்கையில் இருக்கும்போதுதான், அவர்கள் அனைவருமே தாக்கல் செய்ததாகக் கொள்ளலாமா எனும் வினா எழுகிறது. மிகுந்த எச்சரிக்கையை மேற்கொண்டு அவர்கள் அனைவருமே தாக்கல் செய்ததாய் எடுத்துக் கொள்வோமெனில், அத்திருத்தத்தைப் பின்வாங்கிக் கொள்ளும் நிலைமை உருவாகும்போது, தாக்கல் செய்த உறுப்பினர் ஒருவர் தமதிருக்கையில் இல்லார் எனினும், ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் அதைப் பின்வாங்கிக் கொள்ள இயலும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** இப்போது வந்துள்ள புதிய திருத்தங்களில் எவற்றையேனும் நான் எதிர்க்கிறேன் எனில் அதை எப்போது தெரிவிக்கலாம்?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர் எழுந்து நிற்க, பேச வாய்ப்பளிக்கப்படும்போது திருத்தங்கள் அனைத்தையுமே குறித்துப் பேச அவருக்கு உரிமையுண்டு. (மாண்புறு உறுப்பினர் ஒருவர் : குறிப்பிட்டதொரு வகை மீதா?) எல்லா வகைத் திருத்தங்களையும் தாக்கல் செய்துள்ளோம். கிளை விதி 2ஐப் பொறுத்த மட்டில், மாண்புறு உறுப்பினர்கள் தந்துள்ள திருத்தங்கள் யாவற்றையுமே ஏற்றுக்கொண்டுள்ளோம். நாளை அவற்றைப் பொருள் வாரியாக வகைப்படுத்தித் தொகுதிகளாய்ப் பிரிக்கவுள்ளேன். கிளைவிதி

யுடன் அதுகுறித்த திருத்தங்கள், திருத்தங்களின் மீதான திருத்தங்கள் யாவுமே விவாதிக்கப்படலாம்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** இன்றும் முந்தைய அமர்விலும் தாக்கல் செய்துள்ள திருத்தங்கள் யாவற்றையும் தொகுத்துப் பட்டியலிட்டு உறுப்பினர்களிடையே சுற்றறிவிப்பு தருமாறு தங்கள் அலுவலகத்துக்குக் கட்டளையிட வேண்டுகிறேன். இவை எளிய வடிவில் அமையுமாதலின், உறுப்பினர்கள் அவ்வப்போது நோக்கிக் கவனம் கொள்ள இது எளிதாயிருக்கும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தங்கள் பல்வேறு பட்டியல்களில் தரப்பட்டிருந்தாலும், அவையாவும் தொடர் வரிசைக் கிரமமாகவே தரப்பட்டுள்ளன; எனவே அவற்றை மீண்டும் தொகுக்க வேண்டுமென்பது தேவையில்லை. இன்று தாக்கல் செய்யப்பட்ட திருத்தங்களின் சுற்றறிவிப்பைப் பொறுத்தமட்டில், நான் குறித்துக் கொண்டிருப்பது போன்றே உறுப்பினர்களும் குறித்துக் கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** நானும் அவற்றைக் குறித்துக் கொண்டுள்ளேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** கிளைவிதியின் குறிப்பிட்டதொரு பகுதி மீதான திருத்தங்கள் வெவ்வேறு இடங்களில் காணப்படலாம். எனவே வசதியை முன்னிட்டு அவற்றையெல்லாம் ஒருங்குபடத் தொகுத்தலே நன்று.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தாக்கல் செய்யப்பட்ட திருத்தங்களை மீண்டும் திரும்பப் பட்டியலிடுவதை விட அவற்றின் வரிசை எண்கள் தொகுக்கப்பட்ட பட்டியலைச் சுற்றனுப்புமாறு அலுவலகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** அவை துணைக் கிளைவிதிகள் வாரியாய்த் தொகுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இல்லங்களை விட்டு நெடுந்தொலைவு இங்கு வந்திருப்பது நாடாளுமன்றப் பணிகளுக்காகத்தான். இப்பணியை அலுவலகம் செய்ய வேண்டுமென்று நான் கருதவில்லை. மாண்புறு உறுப்பினர்கள்

செய்ய வேண்டிய பணி இது. (திருத்தங்கள் குறித்து) மாண்புறு உறுப்பினர்கள் ஒரு கருத்து கொண்டிருக்கலாம். அலுவலகம் மாறுபட்ட கருத்து கொண்டிருக்கலாம். நாடாளுமன்றச் செயலரும் இதுகுறித்த அவரது கருத்துகளை எடுத்துரைக்கலாமென மாண்பு மிகு உறுப்பினர் கருதுகின்றாரா?

பண்டிட் மாளவியா அவர்களின் திருத்தத்தைப் பொறுத்த மட்டில், ஒரு விதி விலக்காக அதனை அனுமதிக்கிறேன். ஏனைய விவகாரங்கள் குறித்து நாளை முதல் எந்தவொரு திருத்தமானாலும் அதன் படிகள் எனக்கும் சட்ட அமைச்சர் அவர்களுக்கும் முன்னதாகத் தரப்பட வேண்டுமென்பது ஒரு விதியாகவே கடைபிடிக்கப்படும். இன்று வேண்டுமானால் தாங்கள் செய்ய விரும்பும் திருத்தங் களைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்க மாண்புறு உறுப்பினர்களுக்கு நேரம் இல்லையென ஏற்றுக்கொள்ளலாம். பண்டிட் மாளவியா அவர்கள் தமது திருத்தத்தை வாசிப்பாராயின் நாம் குறித்துக் கொள்ளலாம்.

**பண்டிட் மாளவியா :** நான் இறைஞ்சித் தாக்கல் செய்வ தாவது : கிளை விதி 2க்குக் கீழ்க்காணும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

> ''இச்சட்டத்தில் கூறப்பட்டிருப்பது எவ்வாறு மாறாக இருப்பினும், எந்தவொரு மாநிலத்திலும் கருத்துக் கணக் கெடுப்பு நடத்தப்பட்டு அதனடிப்படையில் அம்மாநிலச் சட்டமன்றம், அம்மாநில மக்களுக்கு இச்சட்டம் பொருந்து மெனத் தீர்மானித்தால் அன்றி அம்மாநில மக்கள் எவருக்கும் இச்சட்டம் பொருந்தாது. அன்றி, அதன் பின்னரும், இச் சட்டத்தின் ஆளுகைக்குள் வர விருப்பமில்லையென்று தீர்மானிக்க குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உரிமையுண்டு; அவ்வாறு இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படத் தமக்கு விருப்பம் இல்லையென அறிக்கை தரும் எவருக்கும் இச்சட்டம் பொருந்தாது.''

**திருமதி ரேணுகா ரே:** ஐயா, இங்கு இரண்டு சிக்கல்களை எழுப்ப நான் விரும்புகிறேன். முதலில் இஃதொரு தாமதிக்கும் உத்தியே. இது குறித்து மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே தீர்ப்பு ஒன்று வழங்கியுள்ளார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் நேரடியாகவே விவாதத்தைத் தொடங்கிவிடக் கூடாது. தங்கள்

கருத்து நியாயமானதெனினும் நான் அழைக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும்.

**திருமதி ரேணுகா ரே:** நான் எழுப்பியது ஓர் ஒழுங்குச் சிக்கல்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இருக்கலாம். முதலில் மாண்புறு உறுப்பினர் தமது இருக்கையிலிருந்து எழுந்து நிற்க வேண்டும். பின்னர் நான் பேச அழைத்த பின்னரே பேச வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர் :** இது கிளை விதி 1இன் கீழ் வர வேண்டிய தொன்று.

**பண்டிட் மாளவியா:** இது சட்டத்தின் பயன்பாடு குறித்தது தானேயன்றி, அதன் வீச்சு குறித்தது அன்று.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எப்படியிருப்பினும் அது இங்கேயே இருக்கட்டும்

**திருமதி ரேணுகா ரே:** ஐயா, நான் எழுப்பியுள்ள சிக்கல்கள் இரண்டு. முதலாவதாக இப்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தம் சொல்வதெழுதிக்கொள்ளல் முறையில் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளமை இதுவரை எங்குமே அறிந்திராத நடைமுறையாகும். அடுத்து இத்திருத்தம் ஒரு காலதாமத உத்தி என்பது....

**பண்டிட் மாளவியா :** ஐயா, இது காலதாமத உத்தி என்பதை நான் மறுக்கிறேன்.

**திருமதி ரேணுகா ரே:** இது காலதாமத உத்தியே. இதுகுறித்து சபாநாயகரின் தீர்ப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவு கூர வேண்டுகிறேன். இரண்டாவதாக, நாடாளுமன்றத்தைக் காக்க வைத்து திருத்தமொன்றை வாசித்து எழுதுவிக்கும் முறை இனி தொடர்ந்து பின்பற்றப்படவுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தாமத உத்திகளைப் பொறுத்தமட்டில், இங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தங்களை

ஏற்றுக் கொள்வதோ, ஒதுக்கித் தள்ளுவதோ அவையின் உரிமை என்பதை மாண்புறு உறுப்பினர் நன்கு அறிவார்; அவைக்கு இசைவாயில்லாதன ஒதுக்கித் தள்ளப்படும். மாண்புறு பெண் உறுப்பினர் அவர்களின் அறிவுரையை ஏற்று நடக்க நான் தயாரா யிருக்கிறேன். இத்திருத்தம் பொருத்தமானதுதானா, தொடர்புடை யதா தொடர்பில்லாததா என்பதை நான் இன்னும் ஆய்ந்து பார்க்க வில்லை. அதனை அவை முன்வைப்பதற்கு முன்னதாகவே அதன் கருதலுக்கு எனது நேரத்தை ஒதுக்குவேன் என உறுதி கூறுகிறேன். தொடர்பற்றதெனில் அதை அவை முன் வைக்கும் பேச்சுக்கு இட மின்றிப் போகும். இது குறித்த எனது தீர்ப்பைப் பின்னர் வழங்கு வேன்.

சொல்லியெழுதுவித்தலைப் பொறுத்தமட்டில், சிறு சிறு சொற்றொடர்களை எழுதிக் கொள்ளல் நமது வழக்கம்தான் என்றா லும், உறுப்பினரின் திருத்தம் இவ்வளவு நீண்டதாயிருக்குமென நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்பதால்தான் சொல்வதை எழுதிக் கொள்ளலுக்கு நான் இசைவு தந்தேன். இனி மேலே தொடர்வோம். திருத்தத்தை அவையின் முன்னர் வைக்கிறேன்.

திருத்தம் தாக்கலாகிறது.

கிளை விதி 2க்குக் கீழ்க்காணும் வரம்புரை சேர்க்கப்படலாம்:

''இச்சட்டத்தில் கூறப்பட்டிருப்பது எவ்வாறு மாறாக இருப்பினும், எந்தவொரு மாநிலத்திலும் அங்கு கருத்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதனடிப்படையில் அம்மாநிலச் சட்டமன்றம், அம்மாநில மக்களுக்கு இச்சட்டம் பொருந்து மென்று தீர்மானித்தால் அன்றி, அம்மாநில மக்கள் எவருக்கும் இச்சட்டம் பொருந்தாது. அன்றி, அதன் பின்னரும், இச் சட்டத்தின் ஆளுகைக்குள் வர விருப்பம் இல்லையென்று தீர்மானிக்கக் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உரிமையுண்டு; அவ்வாறு இச்சட்டத்தின் ஆளுகைக்குட்படத் தமக்கு விருப்பம் இல்லையென்று அறிக்கை தரும் எவருக் கும் இச்சட்டம் பொருந்தாது.''

**பண்டிட் மாளவியா:** நாம் மிகுந்த கவனத்துக்குரிய விவகாரம் ஒன்றை ஆலோசித்துக் கொண்டிருக்கிறோமாதலால், ஒரு வேண்டு கோள்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பின ருக்கு வாய்ப்பு கிடைக்கும்.

**பண்டிட் மாளவியா:** நாம் அனைவரும், பயன்படுத்துகின்ற மொழியில், சொற்களில் மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்தோடும் இல்லையென்றால் நாம் அவையின் நேரத்தையும் நமது முயற்சியையும் வீணடிப்பதில்தான் முடியும் என்பதில் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். தங்கள் அனுமதியோடு, தாமத உத்தி என்ற சொல் இங்கு பயன்படுத்தப்பட்டதற்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புகிறேன். உறுப்பினர் ஒருவருக்கு ஒரு வகையான கருத்து இருக்கலாம்; வேறோர் உறுப்பினர் அதற்கு மாறுபட்ட கருத்து கொண்டிருக்கலாம். குறிப்பிட்ட செயல்பாடு நடைபெற வேண்டுமென நாம் கருதி அதை எடுத்துரைக்க அது தாமத உத்தி என்று பழிக்கப்பட்டால், உரைப்பவரின் பணி இடர்ப்பாடாகிறது. எனவே இதுகுறித்து நமக்கு மிகவும் கவனம் தேவை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை மீண்டும் விடுக்கிறேன்: மாண்புறு உறுப்பினர்கள் தேவையின்றி உணர்ச்சிவசப்பட வேண்டாம். 'தாமத உத்தி' என்பது அவையில் பயன்படுத்தத்தக்க சொல்தான். மாண்புறு உறுப்பினர் தாம் கொணரும் செயல்பாட்டில் வெற்றிபெற ஆவல் மிக்கவாராயிருக்கலாம். ஆனால், இச்சொல்லின் பயன்பாடு அவர் மீது சேறுவாரியிறைக்கும் முயற்சியன்று. திருத்தங் களில் பொருள் பொதிந்தனவும் உண்டு; வெறும் தாமத உத்திகளும் உண்டு. எனவே, அது நாடாளுமன்றத்தில் அனுமதிக்கத்தக்க சொல்லே. ஆனால் நான் உறுப்பினர்கள் அனைவருக்குமே வேண்டு கோள் ஒன்று விடுக்கிறேன். (நாம் புனிதமானதொரு நோக்கத்தில் ஈடுபட்டிருக்கிறோம்) இங்கு விவாதிக்கப்படுவது இந்துச் சட்டம்; அதில் திருமணம் மற்றும் விவகாரங்களையும் குறித்த சிக்கல்கள் நம்மை எதிர்கொள்கின்றன. எனவே இதில் சீரிய கவனத்தோடு கூடிய அக்கறையை நாம் செலுத்த வேண்டும். நம்மிடையே உள்ள வேறுபாடுகளை அகற்றிப் பொதுவான கருத்து உடன்பாட்டுக்கு வர நம்மால் இயலும் என்பதுடன் இந்நாட்டை நன்கு வழிநடத்தவும் முடியும்; இவ்விவகாரத்தைப் பொறுத்த மட்டில் நமது நாடாளுமன்றத்தின் நோக்கமும் இதுவே. எனவே, மிகச் சிறந்த உற்சாகத்துடனும், மகிழ்வுமிகு மன நிலையுடனும் இக்கிளைவிதிகளின் கருதலில் ஈடுபடுவோம். எந்தவொரு குறிப்பிட்ட திருத்தமெதுவும் தொடக்கத்தில் ஏற்றுக்கொள்ள இயலாததெனத் தோன்றினாலும், முதலில் அதனைக் கேட்டுக்கொள்வோம்; கேட்கும் வரை அதைப் பற்றிய நமது மதிப்பீட்டை ஒத்தி வைப்போம். அவையின் எல்லாப் பிரிவினருக்குமே இதுவே எனது

பணிவான வேண்டுகோள். முரண்பூசல்களில் ஈடுபட்டு நம்மிடையே கோபதாபங்கள் தோற்றுவிக்கத் தேவையில்லை. நமது சிந்தையை நிதானமாகவே இருத்துவோம்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** ஐயா, தங்களிடம் அறிவுரையொன்று கேட்கலாமா?....

**டாக்டர் அம்பேத்கர் :** தாங்கள் ஏன் அடிக்கடி அறிவுரை கேட்கிறீர்கள்?

**திரு. ஆர்.கே. சௌதுரி:** சற்று முன்னர்தான் தாங்கள் திருமதி ரேணுகா ரேயை அம்மையீர் என்று அழைத்தீர்கள். அவைத் தலைவர் அவர்களால் இவ்வாறு (மிக மரியாதையுடன்) அழைக்கப்படும் உரிமை எந்த உறுப்பினருக்காவது உண்டா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மிக வருந்துகிறேன். எனது தவறைத் திருத்திக் கொள்ள விரும்புகிறேன். அவை உறுப்பினர் எவரும் பிற உறுப்பினர் எவரையும் முன்னிலை விளியில் பேசுவதை நான் விரும்பவில்லை. அவ்வாறே நானும் எந்த உறுப்பினரையும் நேரடியாக விளித்துப்பேச மாட்டேன். இனி மிகுந்த கவனத்துடன் இருப்பேன். ஆனால் இதையெல்லாம் எனக்குச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. ஏராளமாக அறிவுரை கேட்டாகிவிட்டது. மேலே பணியைத் தொடருவோம்.

**உள்விவகார அமைச்சர் (திரு. இராசகோபாலாச்சாரி):** ஐயா, கடைசியாக வந்த திருத்தம் குறித்த ஒழுங்குச் சிக்கல் இன்னும் முடிவாகவில்லை என்றே கொள்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தங்கள் அனைத்தின் நிலையும் அதுதான். அத்திருத்தத்தை வெறுமனே அவை முன் வைத்துள்ளேன். எந்த நேரத்திலும் அவையினரோ நானோ அதனைப் பரிசீலிக்கலாம்.

இப்போது நான் மிகுந்த எண்ணிக்கையில் திருத்தங்கள் தந்துள்ள உறுப்பினருக்கு முன்னுரிமையளிக்கவுள்ளேன். தொடர்ந்து இதே அடிப்படையில் அடுத்தடுத்த முன்னுரிமைகள் அளிக்கப்படும். கடைசியாகத் திருத்தம் ஏதும் தராத ஆனால் பேசவிரும்பும் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். இது குறித்து முன்னரே பேசி

யுள்ள மாண்புறு உறுப்பினர் எவருக்கேனும் தேவைப்பட்டால் அதன் பிறகு வாய்ப்பளிக்கப்படும்.

**திரு. இராசகோபாலாச்சாரி:** நான் ஓர் ஆலோசனை கூற லாமா? குறுகிய உரையுடன் முடித்துக் கொள்ள இயலும் என நம்பி வாக்குறுதியளிக்கும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாமே.

**மாண்புறு உறுப்பினர்கள் :** கூடாது. கூடாது.

**திரு. இராசகோபாலாச்சாரி :** அவர்கள் பின்னர் மற்றவர் களுக்கு வழி விடுவார்கள். நீண்ட உரையாற்ற விரும்பும் ஒருவரது வாய்ப்பு பிறிதொருவரின் உரையால் பாதிக்கப்பட்டால் நாம் அனுதாபப்பட வேண்டியதில்லை. ஆனால் ஐந்து நிமிடங்களுக்கு உரையை முடித்துக்கொள்ள விரும்பும் பலரது வாய்ப்புகள் நெடுஞ் சொற்பொழிவாளர் ஒருவரது உரையால் பாதிக்கப்படுதல் நியாய மில்லை அன்றோ.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தாங்கள் கூறுவது நிச்சயமாக நல்ல ஆலேசானைதான். எனினும் அதில் ஓர் இடர்ப்பாடு காணு கிறேன். குறிப்பிட்ட மசோதா ஒன்றன் மீதான பொது விவாத மென்றால் உறுப்பினர்கள் பலர் பேச வாய்ப்பளிக்கும் நோக்கில் பொதுவாகச் சுருக்கமாய்ப் பேச விரும்புவோருக்கே முன்னுரிமை கொடுத்து விடுவேன். ஆனால் திருத்தங்களைப் பொறுத்தமட்டில், திருத்தங்கள் ஏதும் தராத உறுப்பினர்கள் மிகப் பலர் இருப்பதால் அவர்களே முழுநேரத்தையும் எடுத்துக் கொள்ள, திருத்தம் தந்துள்ள உறுப்பினர் எவருக்கும் வாய்ப்பு கிட்டாமலே போகவும் நேரிட லாம்.

**திரு. இராசகோபாலாச்சாரி:** இத்தகைய இடையூறுகள் வருமெனக் கருதாதுதான் எனது ஆலோசனையைக் கூறினேன். ஏனெனில், விவாதம் தடீரென முடிவுக்கு வந்துவிடலாம்; மிக முக்கியமான கருத்துக்களைச் சுருக்கமாய்த் தெரிவிக்கக் காத்திருந் தோர்க்கு வாய்ப்பு கிட்டாமற் போகலாம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** உறுப்பினர் ஒருவர் நீண்ட உரையாற்றுவாரா, சுருக்கமாய் உரையாற்றுவாரா என்பது முன்ன தாகவே எப்படித் தெரியும்?

**திரு. இராசகோபாலாச்சாரி :** இது நெட்டுரையாளருக்கும், குற்றுரையாளருக்குமிடையிலான போராட்டம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர்கள் அனைவருமே எவ்வளவு சுருக்கமாக இயலுமோ அவ்வளவு சுருக்கமாகவே உரையாற்ற வேண்டும் என்பதைப் பொதுக் குறிப்பாகக் கொள்ள வேண்டும்.

**குவாஜா இனையத் உல்லா:** கடந்த அமர்வில் தாக்கல் செய்யப்பட்ட திருத்தங்கள் சிலவற்றை எதிர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதை எவரும் தடுக்கவில்லை.

**திரு. பாரதி (சென்னை):** திருத்தங்களைத் தாக்கல் செய்தவர்களுக்குத்தான் முன்னுரிமை என்று தாங்கள் கூறியதுதான் அவருக்குத் தடையாயுள்ளது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விவாதத்தை நடுவில் திடீரென நிறுத்திவிடுவேனென்று நான் ஒருபோதும் கூறவில்லை. இனி விவாதம் தேவையில்லையென்று அவையே தடை செய்யும் வரை அன்னவருக்கும் வாய்ப்பு கிடைக்கும். நிறைய எண்ணிக்கையில் திருத்தங்கள் தாக்கல் செய்துள்ள உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தருவதாகத்தான் கூறினேன். மற்றவர்களும் தாராளமாய்ப் பேசலாம்.

[1]**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி (மேற்கு வங்கம்) :** எழுகிறார்....

**அவைத் துணைத் தலைவர்:** டாக்டர் முகர்ஜி அவர்கள் திருத்தமேதும் தரவில்லை. எனினும் தற்போது உரையாற்றலாம்.

**திரு. எஸ்.பி. முகர்ஜி :** நான் எவ்வகை உறுப்பினர் எனில்....

**திரு. இராசகோபாலாச்சாரி:** விதிகள் அனைத்திற்கும் முரணானது இது.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** நான் திருத்தங்கள் ஏதும் தராத உறுப்பினர்களில் ஒருவன், மேலும் மகத்தான இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரை நான் ஏதும் பேசவில்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** அச்சமயம் அவர் ஓர் அமைச்சராயிருந்தார்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** ஐயா, இந்துச் சட்டத் தொகுப்பை மீண்டும் பரிசீலிப்பதற்காக நாம் ஏழு மாதங்கள் கழித்து இங்கே கூடியுள்ளோம். இந்த இடைப்பட்ட காலத்தில் பல நிகழ்வுகள் நடந்துவிட்டன. இச்சட்டம் குறித்து அவையிலும், அவைக்கு வெளியிலும் தெரிவிக்கப்பட்ட திறனாய்வுக் கருத்துகளையும் கருத்தில் கொண்டு, திறந்த மனத்தோடு அரசு பல திருத்தங்களைச் செய்ய முன்வந்துள்ளது எனக்கு மன நிறைவு தருகிறது என்பதை எடுத்துரைத்தல் சாலும்.

**திரு. காட்கில் :** நியாயமே.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** நமது நாட்டு வரலாற்றில் எந்தவொரு செயல்பாட்டுக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ இத்துணை அளவில் திறனாய்வுக்கு இடமளித்ததில்லை என நம்புகிறேன்.

**திருமதி ரேணுகா ரே:** சதி ஒழிப்பு மறந்துவிட்டதா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வேண்டாம். மாண்புறு உறுப்பினர் பிறிதொரு மாண்புமிகு உறுப்பினரின் உரையிடையே குறுக்கிட வேண்டாம். இது விவாதம் கொதிப்பேற இடந்தருமென்று முன்னரே எச்சரித்துள்ளேன். உறுப்பினர் ஒருவரின் ரசனைக்கு ஏற்பிலாத ஒன்றைப் பிறிதோர் உறுப்பினர் அவர் மீது திணிக்க முயலக்கூடாது.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் கிளைவிதி பொதுவான தன்மை வாய்ந்தது. இச்சட்டத்தொகுப்பு முழுவதன் பயன்பாட்டு வரம்பு பற்றியது அது என்னும் கண்ணோட்டத்தில் அதற்குத் தொடர்பு கொண்டனவாய்ச் சில பொதுவான கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

இச்சட்டத்தொகுப்பு இந்துக்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமா அல்லது சட்ட அமைச்சரின் திருத்தத்தில் கூறப்பட்டிருப்பது போன்று சீக்கியர், சமணர், பௌத்தர் உட்படப் பிற வகை மக்களுக்கும் பயன்படுத்துமாறு ஆக்கப்படலாமா எனும் வினா எழுந்துள்ளது. மேலும் இச்சட்டம் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பயன்படுத்தப்படலாகாதா எனும் வினாவும் எழுந்துள்ளது. இவ்வினாக்கள் கடந்த பிப்ரவரியிலேயே, இந்த அவையில் எழுப்பப்பட்டன என்பதை நான் அறிவேன், இது குறித்து மேலும்

விவரிக்க விரும்பேன். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தில் அரசின் கொள்கைக்கு வழிகாட்டு நெறிகள் குறித்துக் கூறும் பகுதியில் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பொருந்துமாறு பொதுக் குடிமைச் சட்டம் இயற்றும் பொறுப்பு இந்நாடாளுமன்றத்துக்கு விதிக்கப்பட்டு உள்ளது என்பதை மிக உறுதியாகக் கூற முடியும். இம்மசோதா மீதான விவாதம் தொடங்கியபோது நாம் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தோம். ஆனால் புதிய அரசு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட சமூகத்தின் ஒரு பிரிவு மக்களுக்கு மட்டுமே பயன்படுத்தக் கூடியதென்று அதன் பெயரே வெளிப்படுத்தும் விதத்திலான சட்டமொன்றை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது வருந்துதற்குரியதாகும். நாம் ஒரு சமயச் சார்பற்ற நாட்டினர் என்று கூறப்படுகிறது. உண்மையிலேயே நாம் 'சமயச் சார்பின்மைகள்' என்ற கூறத்தக்கதொரு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளோம். நான் சட்ட நுணுக்கப் போக்கில் இந்த வினாவை எழுப்பவில்லை எனினும், இந்திய மக்களில் ஒரு பிரிவு மக்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதொரு சட்டத்தை இயற்றும் உரிமை இந்த நாடாளுமன்றத்திற்கு உண்டா என்ற வினா எழுப்பப் பட்டாக வேண்டும். இவ்வினாவிற்குச் சட்ட அமைச்சரின் பதில் என்ன என்பதையும் நான் அறிவேன்; முந்தைய உரையொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார். உண்மையில் இந்நாடு விரும்புகிறது என்றால் அனைத்திந்தியக் குடிமைச் சட்டத்தை உருவாக்குவதில் சிரமம் ஏதுமில்லையென்று அவர் கூறியுள்ளார். அதுதான் விடையென்றால், நாம் ஏன் அத்தகைய சட்டத்தை உருவாக்கக்கூடாது? இச்சட்டத்தொகுப்பில் முன் மொழியப்பட்டுள்ள விதிமுறைகளில் சில ஏனைய சமூகங்களுக்கும் பயன்படுத்தப்பட இயலுமா என்பதில் எனக்கு ஐயமுண்டு. குறிப்பாக முஸ்லீம்களுக்கு இவை பயன்படுத் தற்குரியனவல்ல. நாம் ஒருதார மணத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டுள்ளோம். ஒருதார மணம் என்பது இந்துக்களுக்கு மட்டுமே நல்லதென்றோ, பௌத்தர்களுக்கு மட்டுமே நல்லதென்றோ, சீக்கியர் களுக்கு மட்டுமே நல்லதென்றோ எவரும் கூற முன்வரவில்லை. ஒருதார மணமுறையைப் பரிந்துரைக்கும் அனைவருமே இது, உலகின் நாகரிக மக்கள் முழுமைக்காகவும் இல்லையென்றாலுங் கூட இந்திய மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் கோட்பாடு என்பதை நாணயமாக நம்புகிறவர்கள்தான், அதவாது இந்திய நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களின் ஆளுகைக்குட்படக் கூடியவர்கள் அனைவரையும் குறித்தே கூறுகிறேன். ஒருதார மண முறை குறித்து மட்டுமே, அது குடிமக்கள் யாவருக்கும் பொருந்தும் என்பதாக

ஒரு சட்ட மசோதாவைக் கொண்டு வந்தால் என்ன? அதற்கு எவ்வாறு மறுப்பு ஏதும் இருக்க முடியும்? சட்ட அமைச்சரே சுட்டிக்காட்டிய இடத்திலிருந்தான், அதாவது திரு. நசிருத்தீன் அகமது அவர்களிட மிருந்துதான் அதற்கு எதிர்ப்பு வரக்கூடும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஒரு மனைவியுடன் படும் அல்லலே போதும். எனக்கு, உறுதியாக, இரண்டு மனைவியர் தேவையில்லை.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இதற்குச் சட்ட அமைச்சரிடம் விடையுண்டு. எவ்வாறாயினும் ஒருதார மணம் குறித்துச் சட்ட மசோதா அறிமுகப்படுத்தப்படுமானால்,...

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இதே அவையில் அத்தகைய தொரு சட்ட மசோதாவை நான் அறிமுகப்படுத்தியுள்ளேன்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** அத்தகையதொரு சட்ட மசோதா கொண்டுவரப்பட்டால், சட்ட அமைச்சர் அவர்களுக்குக் குறைந்தது நசிருத்தீன் அகமது அவர்களின் ஆதரவாவது கிடைத்திருக்கும். ஆனால் முஸ்லீம் சமூகத்தில் தலையிட இந்த அரசுக்குத் துணிவு இல்லை.

**திரு. பாரதி :** ஏன்?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** சோதித்துத்தான் பாருங்களேன்.

**திரு. காட்கில் :** பொறுத்திருந்து பாருங்கள்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** நான் கூறும் ஆலோசனை இது தான் : இச்சட்டத்தில் ஒருதார மணம் குறித்த பகுதி முஸ்லீம்களுக் கும் பொருந்துமாறு மசோதா திருத்தப்படும் என்று சட்ட அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்ய வேண்டும்.

**திரு. இராசகோபாலாச்சாரி :** அரசின் துணிவைச் சோதிப்பதற் காகவா நாம் சட்டமியற்ற வேண்டும்?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** அரசின் நேர்மையையும், தனி மனிதர்களின் நேர்மையையும் சோதிப்பதற்காகவும் சட்டங்கள்

கொண்டுவரப்படலாம். இன்று அரசின், மற்றும் உள்துறை அமைச்சரின் நேர்மையையும் ஒருதலை பான்மையும் மிகவும் கேள்விக் குறியாகியுள்ளன.

**திரு. பாரதி :** கிடையவே கிடையாது.

**டாக்டர் அம்பேத்கர் :** இல்லவே இல்லை.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** இச்சட்ட மசோதாவுக்கு ஆதரவு நாடுவோரின் பலவீனம் யாதென நான் அறிவேனாதலின் மேற்கொண்டு இவ்வினாவை அலச முற்படப் போவதில்லை. அவர்களுக்கு முஸ்லீம் சமூகத்தில் தலையிடத் துணிவு கிடையாது. அதற்குத் திரு. நசிருத்தீன் அகமது அவர்களிடமிருந்து எதிர்ப்பு வராதெனினும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எதிர்ப்பு கிளம்புமாதலால் அத்தகையதொரு செயல்பாட்டில் இறங்க அரசு துணியாது. ஆனால் இந்து சமூகத்தில் தலையிட்டால் விளைவுகள் என்னவானாலும் கவலையில்லையென்ற துணிவுடன் நீங்கள் செயல் படலாம்.

**திரு. இராசகோபாலாச்சாரி:** ஏனெனில், நாம்தான் அந்த சமூகம்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இந்த அவைக்கும், அரசுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோளின் அடிப்படையே வேறு. எனது உரை முரண்பூசலை விளைவிக்கலாகாதென விரும்புகிறேன்.

**திரு. காமத் :** அதனாலென்ன? எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு முரண்பூசலைக் கிளப்புங்கள்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** சமூகச் சீர்திருத்தம் தொடர்பான பொருண்மைகளில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் இணக்கமான சூழ்நிலையில் விவாதம் நடைபெற வேண்டும் என நான் விரும்புவதால், (நான் முரண்பூசலை விரும்பவில்லை) இது உள்துறை அமைச்சரின் சார்பில் சட்ட அமைச்சர் கொண்டுவரும் செய்தித்தாள் சட்டமன்று. சமூகச் சீர்திருத்தம் குறித்து சுமுகமாகச் சட்டமியற்றுதற்கு மாறாய் நாடாளுமன்றத்துக்கு வெளியே காவல் துறையின் துணை கொண்டு இச்சட்டம் இயற்றிப்படுதலை நாம் விரும்பவில்லை. இதனால் யாருக்கும் பயனேதுமில்லை. சமூகச்

சீர்திருத்தம் தொடர்பாக இயற்றப்படும் சட்டம் எதுவாயினும், நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையோரின் ஆதரவுடன் அது இயற்றப்படவேண்டும். உள்துறை அமைச்சர் எழுவதைக் காண்கிறேன்.

**திரு. இராசகோபாலாச்சாரி:** நான் குறுக்கிட வரவில்லை. அவருக்கு உதவவே வருகிறேன். எனது குறுக்கீட்டினால் மாண்புறு உறுப்பினரின் வாதத்துக்கு ஒரு பிறழ்ச்சி தோன்றிவிட்டது. அவருடைய குறிப்பிட்ட வாதமொன்றுக்குத்தான் மறுப்பு தெரிவித்தேன். அவரது வாதத்தின் அடிப்படையை ஆதரிக்கிறேன்.

**மாண்புறு உறுப்பினர் ஒருவர் :** தாங்கள் அவரது ஆதரவாளரா!

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** நமது உள்துறை அமைச்சருக்கு, பதவியிலிருந்து ஓய்வு பெறும் காலம் நெருங்க நெருங்க விவேகமும் மிகமிக விரைவாக உதித்துக் கொண்டு வருகின்றது போலும். எவ்வாறாயினும், இந்நாட்டில் சமூகச் சீர்திருத்தம் கொண்டுவர நாம் முனைவதாயின், அதற்கு முடிந்த அளவில் மக்களின் ஆதரவை முதலில் திரட்ட வேண்டும்.

சமூகச் சீர்திருத்தம் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட நாடாளுமன்றத்துக்கு உரிமையில்லை எனும் நோக்கில் எனக்கு உடன்பாடு இல்லை. நமது பழைய நூல்கள் - வேதங்கள், **ஸ்மிருதிகள், ஸ்ருதிகள்** ஆகியவற்றின் புனிதம் குறித்தும் நான் அறிவேன். வரலாற்று நோக்கில் கருதினால் முன்னாளைய சட்டமியற்றியோர் உருவாக்கிய சட்டங்களுக்குப் பின்னாளில் உரையாசிரியர்கள் புதுப்புதுப் பொருள் களைக் கூறி வந்துள்ளனர் எனக் காண்கிறோம். படிப்படியாக உரை யாசிரியர்களும் அருகிவிட்டனர்; கடந்த 150 ஆண்டுகளாக நாம் காண்பதென்ன? வெகுதொலைவில், இலண்டனில் அமர்ந்துகொண்டு ஐரோப்பிய நீதிபதிகளும், நமது சட்டசபைகளும் நமது சமூகச் சீர்திருத்தங்களைப் பாதிக்கும் செயல்பாடுகளில், அவ்வப்போது ஈடுபட்டு வந்துள்ளனர். எனவே காலங்காலமாய் இந்நாட்டு மக்கள் தற்போதைய சட்டத்தின்கீழ் அனுபவித்து வந்துள்ள உரிமைகளிலும் சலுகைகளிலும் குறுக்கிடும் சட்டங்களை இயற்ற நாடாளுமன்றத்துக்கு உரிமை இல்லையென இப்போது வாதிடல் காலங்கடந்த செயலாகும்.

**பண்டிட் மைத்ரா:** தற்போது அமைக்கப்பட்டுள்ளவாறாய் அமைந்த இந்த நாடாளுமன்றத்திற்கு அல்ல.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** இந்த நாடாளுமன்றத்தின் உரிமை குறித்துப் பேசுவதெனில், இயல்நிலையில் அது சங்கடத்திற்குரிய பொருளேயாகும். இந்த அவையின் உறுப்பினராய் இருந்து கொண்டு நானே அதன் சட்டமியற்றும் வரம்பைக் கேள்விக்குறியாக்குவது கடினம்தான், ஆனால் மக்களின் விருப்பம் யாதென எடுத்துரைக்கும் உரிமையைப் பொறுத்தமட்டில், இன்னும் சில மாதங்களில் மக்கள் (தேர்தல் வாயிலாக) அளிக்கும் தீர்ப்பின்படியே அது முடிவு செய்யப்படும். எனவே இந்தப் நாடாளுமன்றம் நேர்மையுடனும் தகுதியுடனும் பெறுதற்கு உரிமையில்லாத அதிகாரங்கள் குறித்து அரசின் பக்கம் நின்றோ அதற்கு எதிராக நின்றோ விவாதித்துக் கொண்டிருப்பதில் பயன் ஏதுமில்லை. எனது கருத்து என்னவென்றால் இச்சட்டத்தின் சில பல அடிப்படைக் கூறுகளுக்கு நாட்டு மக்களிடையே பலத்த எதிர்ப்பு நிலவுகிறது என்பதே. மசோதாவை ஆதரிக்கின்ற மாண்புறு உறுப்பினர்கள் இந்த எதிர்ப்பின் ஆழத்தை உணர்ந்து செயல்பட வேண்டுகிறேன். இச்சட்டத்தில் எனக்கு உடன்பாடான பகுதிகள் சில இருக்கலாம்; ஆனால் நான் இச் சட்டத்தைப் பகுதியாகவோ முழுமையாகவோ எதிர்ப்பவர்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்க முயல்கிறேன். இதை ஆதரிப்பவர்களின் ஆழ்ந்த உணர்வுகளுக்கு நாம் எவ்வாறு மதிப்பளிக்கிறோமோ, அவ்வாறே இதை எதிர்ப்பவர்களின் ஆழ்ந்த உணர்வுகளுக்கும் நாம் மதிப்பளிக்கவேண்டும். இதற்கு எவ்வாறு தீர்வு காண்பது? மசோதாவின் சில பகுதிகளின் மீதான கருதல் களநிலைப் பாடுகள் காரணமாக தீக்கப்படுவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் செய்தித் தாள்களிலிருந்து அறிகிறோம்.

**டாக்டர் அம்பேத்கர்:** களநிலைப்பாடுகள் காரணமாகவா?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** ஒருவகையான பூவா தலையா போடப்பட்டிருப்பதாகக் கருத்து நிலவுகிறது. ஒரு பக்கம் திருமணம், மணமுறிவு; மறுபக்கம் சொத்துரிமை; இவற்றுள் திருமணம், மணமுறிவு ஆகியவை இன்றைக்கு ஒருவாறு வெற்றி பெற்று சொத்துரிமை தற்போதைக்குப் பின்னணிக்குத் தள்ளப்பட்டு விட்டது.

**மாண்புறு உறுப்பினர் ஒருவர்:** சொத்துரிமைதான் இப்போதைக்கு வெற்றி பெற்றுள்ளது.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** கிளைவிதி 2க்கு அவையின் முன் வைக்கப்பட்டுள்ள திருத்தங்களையெல்லாம் கருத்தில் கொண்டு, இச்சட்டத்தின் ஆளுகையின்கீழ் வர விரும்புவோர்க்கு அதன் விதி முறைகளின் பயன் முழுமையாய்க் கிட்டுமாறும், அதே சமயத் தில், இதன் விதிமுறைகளின் புனிதத்திலோ, சட்ட நெறிமுறை யிலோ, நீதிமுறையிலே நம்பிக்கையில்லாதவர்கள் பழைய இந்து சட்டத்தின் ஆளுகையிலேயே இருக்க உரிமை தரவும் நாம் வழிமுறை வகுக்க இயலுமா?

**திரு. பாரதி:** அது சீர்மையாகுமா?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இந்த அவையின் கருதலுக்கு வைக்கப்படுமாறு ஆணையிடப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள பல்வேறு திருத்தங்களின் கண்ணோட்டத்தில், இப்பொருளுக்கு முற்றிலும் தொடர்பு கொண்ட வகையில் நான் முன்வைக்கின்ற ஆலோசனை இது.

நமது பிற்பட்ட நிலை குறித்து பல அயல் நாடுகள் எல்லாம் குறைகூறும் நிலையில் இருக்கிறோம் என்று கூறப்படுகிறது. கடந்த சில நாட்களாக, நமது இந்துச் சட்ட மசோதா எப்போது நிறை வேற்றப்படுமென்று சீனமக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண் டிருப்பதாகக் கூறப்படுவதை நான்றிவேன்.

**பண்டிட் மைத்ரா:** ஹானலூலுவிலும் கூடத்தான்!

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** அமெரிக்க மக்களில் ஒரு பகுதி யினர், இந்திய மக்களின் முற்போக்குத் தன்மையின் அளவுகோலாக, இந்துச் சட்டத்தொகுப்பு குறித்த அவர்களது கண்ணோட்டத்தையே கருதி, (நமது செயல்பாடுகளைக்) கூர்ந்து கவனித்து வருவதாகவும் அறிகிறோம்.

**திரு. காட்கில்:** நமது பண்டைய முனிவர்களும் வானகத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** அஃது முற்றிலும் தொடர்பற்ற கருத்தென எண்ணுகிறேன். அமெரிக்க நாட்டின் சட்டங்களை நோக்குவோம். அமெரிக்கச் சட்டங்கள் குறித்துச் சில தகவல்களை முயன்று பெற்றுள்ளேன். அங்கு 26 வெவ்வேறு மாநிலங்களில் அமெரிக்கர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் இடையே திருமணம் அனுமதிக்கப்படுவதில்லையென்பதை அறிகிறேன்; அது மட்டுமல்ல, ஆப்பிரிக்க இரத்தத்தின் தொடர்பு ஒரு சிறிதேயிருப்பதாய்க் கருதப்படினும் அமெரிக்கருக்கும் நீக்ரோ இனத்தவருக்குமிடையே நடைபெறும் திருமணம் செல்லாது எனக் கூறுமளவுக்குச் சென்றுள்ளனர் எனவும் அறிகிறோம். சில மாநிலங்களில் அமெரிக்கருக்கும் சீனருக்குமிடையே திருமணம் தடைசெய்யப்பட்டுள்ளது; வேறு சில மாநிலங்களில் அமெரிக்கருக்கும் மங்கோலியருக்குமிடையே திருமணம் தடைசெய்யப்பட்டுள்ளது. நடைமுறையில் அங்குள்ள மாநிலங்கள் ஒவ்வொன்றிலுமே வெவ்வேறு திருமணச் சட்டங்கள் நிலவுகின்றன. சற்று முன்னர்தான் சீரான தன்மை என்னாவது என்று ஒருவர் குறுக்கிட்டு கேட்டார். திருமணச் சட்டங்களில் முழுமையான சீர்மை இல்லாமலேயே அமெரிக்க மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும், நலத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள் என எண்ணுகிறேன். எனவே சீர்மை என்பதே இப்பொருள் மீதான அறுதிக்கோட்பாடாயிருக்க வேண்டியதில்லை. சீர்மை என்றால், தேக்கநிலை, இறப்புநிலை இவைதான் நினைவுக்கு வருகின்றன....

**திருமதி ரேணுகா ரே:** எழுகிறார் ....

திருமதி ரேணுகா ரே கூட அந்த நிலைக்கு வந்துவிட்டாரோ எனக் கருதுகிறேன்.

**திருமதி ரேணுகா ரே:** நாம் அமெரிக்கர்களைத்தான் பின்பற்ற வேண்டுமா?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** அமெரிக்கர்களைத்தான் பின்பற்ற வேண்டுமென்று நான் கூறவில்லை. அவர்களுக்கும் முன்னோடிகளான நமது நாட்டு நெறிகளைப் பின்பற்ற வேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். அதை இதுவரை பின்பற்றாதிருக்கும் திருமதி ரேணுகா ரேயும் இனி அதைத்தான் அவர் பின்பற்ற வேண்டுமென்றும் கூறுகிறேன்.

அமெரிக்காவின் நிலை குறித்து இத்துடன் விடுவோம். அடுத்து உரோமானியக் கத்தோலிக்கர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களது கட்டுப்பாடு மிக்க சட்டத்தின்படியும், அவர்கள் சமயத்தின் படியும் மணமுறிவு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் ஏறத்தாழ எல்லா நாடுகளிலும், தேவைப்பட்டால் உரோமன் கத்தோலிக்கர்களும் மணமுறிவு செய்துகொள்ளலாம் என்று குடிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அங்கெல்லாம் அவர்களது சமயத்தில் கைவைக்கப்படவில்லை. சமயம் தனியே இயங்க அவர்கள் அனுமதித்துள்ளனர், எனினும் உரோமன் கத்தோலிக்கர்களில் குடிமைச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்புவோர்க்கும் அதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தலையை அசைப்பதைக் காண்கிறேன்; ஆனால் அது ஒப்புக்கொள்வதற்காகவா அன்றி மறுப்பதற்காகவா என்பதுதான் தெரியவில்லை. எவ்வாறாயினும் அதை அவர் பின்னர் விளக்குவார் - தவறு எனில் திருத்திக் கொள்ள ஆயத்தமாகவே இருக்கிறேன். இச்சட்டங்களைப் பெறுதல் கடினமாகவே இருந்தது. எனினும் நாடாளுமன்ற நூலகத்தில் கிடைக்கும் நூல்களிலிருந்து படித்தறிந்ததன் மூலம் இவ்விரு அமைப்புகளுக்குமிடையே (சமயம், குடிமைச் சட்டம்) தெளிவான வேறுபாடு செய்யப்படுவதை அறிய முடிந்தது.

தற்போது நாம் திருமணம், மணமுறிவு ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்த முனைந்துள்ளோம். இவற்றில் இந்நாட்டிலுள்ள முற்போக்காளர்கள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு, ஆண், பெண் இருசாரார்க்கும் கவலை தரக்கூடியது என்னதான் உள்ளது?

**திரு. காமத்:** அவையிலுள்ளோரா? வெளியிலுள்ளோரா?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** அவர்கள் மணமுறிவுக்கும், ஒருதார மணத்திற்கும் விதிமுறைகள் இருக்கவேண்டுமென்பதில் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இவ்விரண்டு பொருண்மைகள் குறித்துத்தான் மிகுந்த அக்கறை காட்டப்படுகிறது. தற்போது நாம் மணமுறிவு குறித்து மட்டுமே நோக்குவோம். ஏற்கெனவே மணமுறிவை அனுமதித்து இந்தியச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் உள்ளன. ஒருகாலகட்டத்தில் தாம் இந்து அல்லர் என்று அறிக்கை தராத எவரும் குடிமைச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொள்ள இயலாதிருந்தது. அதுவும் கூட இப்போது மாற்றப்

பட்டுவிட்டது. இந்து ஒருவர் இந்துவாகவே இருந்து கொண்டு தமது விருப்பத்திற்கேற்றவாறோ, இணையர் இருவரின் விருப்பத் திற்கேற்றவாறு திருமண ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும். அவ்வாறே, இந்து என்ற தன்மையை இழக்காமலேயே, கலப்புத் திருமணங்களைச் செய்துகொள்ள அனுமதிக்கும் சட்டங்களை யும் இயற்றியுள்ளீர்கள். பெரும்பாலான மக்களிடையே வலுத்த எதிர்ப்பு உணர்வைத் தூண்டக் கூடியதான உடன்பிறந்தோரிடைத் திருமணத்தை அனுமதிக்கும் சட்டங்களும் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**டாக்டர் தேக் சந்த் :** அது முந்தைய நாடாளுமன்றத்தால்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :** அன்று; சட்டமன்றப் பேரவையால்.

திருமணச் சட்டங்களில் முற்போக்கான வளர்ச்சி தேவை யெனும் கோரிக்கைகளை நமது சட்டமன்றங்கள் எவ்வாறு மதித்துச் செயல்பட்டு வந்துள்ளன என்பதையே இவையெல்லாம் காட்டு கின்றன. இப்பொருள் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் (மத்திய மாநில) பொதுப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது; பம்பாய், சென்னை மாநிலங்கள் இப்பொருள் குறித்துச் சட்டங்கள் இயற்றி யுள்ளனவென்றும் நம்புகிறேன். (மாண்புறு உறுப்பினர் ஒருவர் : மைசூரும் கூட) பல்வேறு சமஸ்தானங்களில், ஏதாவதொரு வடிவில் இப்பொருள் குறித்து மாநிலச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள் ளன (மாண்புறு உறுப்பினர் ஒருவர்: வட இந்தியாவில் எங்கு மில்லை) ஆங்கு மக்களின் விருப்பத்தோடு இயைந்தவாறு சட்டங் கள் இயற்றப்பட்டுள்ளன. இந்துக்கள் அனைவரும் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளுமாறு சட்டங்களை இயற்ற ஏன் விரும்புகிறீர்கள் என்பதுதான் இப்போதைய சிக்கல். தொடர்பு கொண்ட தரப் பினரின் விருப்பத்திற்கு எதிராக மணமுறிவுச் சட்ட அமைப்பின் நலன் கூறுகள் கடைபிடிக்கப்பட்டேயாக வேண்டுமென்று நீங்கள் விரும்பமாட்டீர்கள். இஃதொரு இயலுமை நல்கும் செயல்பாடு தான்; அதற்கான அதிகாரமும் ஏற்கெனவே உள்ளது.

மாறாக, இலட்சக்கணக்கான மக்களின் உணர்வுகளுக்கு நீங்கள் எத்தகைய அடிகொடுக்க முற்படுகிறீர்கள்? இப்போது நீங்கள் எழுத்து அளவில் தூயநெறித் திருமணத்துக்கு இடமளித்துள்ளீர்கள்.

*அதன் விவரிப்பையும் கூடத் தூயநெறி என்பதிலிருந்து 'தார்மீகம்' என மாற்றுப் பெயரிட்டு அதற்குக் கவர்ச்சியான கிழை வண்ணம் கொடுக்க முனைந்துள்ளீர்கள். ஆனால் அடிப்படைக் கருத்தில் மாற்றம் ஏதுமில்லை. இந்த மசோதாவை ஆதரிக்கும் உறுப்பினர் களை ஆழ்ந்த கருதலுக்குரிய வினாவொன்று கேட்க விரும்பு கிறேன்: இந்த முன்மொழிவினால் நீங்கள் எதைச் சாதிக்கவிருக் கிறீர்கள்?*

*தூயநெறித் திருமணத்தைப் பொறுத்தமட்டில், அது இலட்சக் கணக்கான மக்களின் உள்ளங்களில் ஆழ வேரூன்றிப் பதிந்திருக்கும் முறைமையாகும். இதில் கற்றோர், கல்லாதோர், எழுத்தறிவு கொண்டவர், எழுத்தறிவில்லாதவர் ஆகிய வேறுபாடு இன்றி இந்துத் திருமணம் முறிவுக்குரித்ததல்லவென்ற கருத்து வேரூன்றியுள்ளது. இது சமயம் குறித்த பொருளேயன்றி உடலும் சதையும் குறித்த பொருளன்று. இஃது இலட்சக்கணக்கான மக்களின் மனதில் ஆழ வேரூன்றியுள்ள கருத்து என்பதை எனது மாநில மக்களிடையே கலந்து பழகியதிலிருந்து மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு பகுதி மக்க ளிடையே கலந்து பழகியும் அறிந்துள்ளேன். எந்தக் காரணத்திற் காகவும் திருமணச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் சற்றும் இல்லாதவர்களெல்லாம் மிகவும் அதிர்ச்சியடைந்துள் ளனர். இந்நாட்டிலுள்ள இந்துக்களில் இந்துத் திருமணங்களின் சமயத்தன்மையை முழுவதுமாகக் கைவிட்டு, மணமுறிவுச் சட்டங் களைத் தங்கள் நோக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்பு வோருக்கு ஏற்கெனவேயுள்ள சட்டங்களிலேயே போதிய வாய்ப் பிருப்பதாக நன்னோக்கம் கொண்டவர்களும் சீர்திருத்தவாதிகளும் ஒப்புக் கொள்கின்றனர். இருப்பினும், அச்சட்டத்தை அதி நவீன மாகவும், காலத்திற்கேற்பவும் திருத்தியமைக்க விரும்புவோரின் நலனுக்காக் அச்சட்டத்தையே வேண்டுமொனாலும் நாம் திருத்தி யமைக்கலாம். மாறாக இந்துத் திருமணத்தின் புனிதத்தையும் அடிப்படையையும் ஏன் அழிக்க வேண்டும்? அதனால் உங்களுக்குக் கிடைக்கும் இலாபம் என்ன? இந்தக் கேள்விக்கு நிறைவானதொரு விடையை என்னால் பெற முடியவில்லை. ஏனெனில் இப்போது வகுக்கப்பட்டுவரும் புதிய வழிமுறைகள் இந்துக்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டுமென்று எவரும் கருதவில்லை. மெய்யாகவே அவ்வாறு விரும்புவோர் எவருமிலர். எனவே, விருப்பத்தேர்வுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு மக்கள் அதனைப்*

பயன்படுத்திக் கொள்வரேல், இயல்பாகவே உங்கள் நோக்கம் வெற்றியடையும்.

இந்தியாவில், குறிப்பாக இன்றைய இந்தியாவில், 90 விழுக்காடு மக்களான சூத்திரர்களிடையே ஏதாவது ஒரு வடிவில் மணமுறிவு அல்லது திருமணக் கலைப்புக்கான சட்டங்கள் நிலவி வருவதாய்க் கூறப்படுகிறது. எனவே உங்கள் சிக்கலுக்கான விடையை இங்கே காணலாம். எந்தச் சமூகங்களிலும், சாதிகளிலும் மணமுறிவுக் கான தேவை நிலவுகிறதோ, அவர்களுக்கெல்லாம் அதற்கான இந்துச் சட்டம் ஏற்கெனவே கைவசத்தில் உள்ளது. இந்திய மக்களில் பத்துப் பதினைந்து விழுக்காடு மக்கள் மட்டும் ஏன் இந்த மாற்றங் களை எதிர்க்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். மாற்றங் களுக்குக் குறுக்காக யாரோ நிற்கிறார்கள் என்பதல்ல சிக்கல். நீங்கள் விரும்பினால் முன்னேறவோ, பிற்போக்காய்ச் செல்லவோ எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். ஆனால் உங்கள் வழி முறைகளில் நம்பிக்கை இல்லாதவர்களை, முழுமையாய் நீதிநெறி முறையின்படி நிறுவத்தக்கனவும், மனித நடத்தையின் மிகவுயர்ந்த படித்தரம் வாய்ந்ததுமான நெறிமுறைகளைப் பின்பற்றுவோரை யும் நீங்கள் ஏன் உங்கள் வழியில் பின்னிழுக்க விரும்புகிறீர்கள்? இந்த அடிப்படையான வினாவுக்கு என்னால் விடையேதும் காண முடியவில்லை.

நமது அமைப்பு பிற்போக்கானது என்று அடிக்கடிக் கூறப் படுகிறது. ஆனால் இந்து சமூகம் பல்வேறு கடும் பின்னடைவு களுக்கும் இடையூறுகளுக்குமிடையே எவ்வாறு தன்னைக் காத்துக் கொண்டு வந்துள்ளது என்பதை வியந்து போற்றி இந்திய மகான் களும் மேலைநாட்டுப் பேரறிஞர்களும் எழுதியுள்ளவற்றின் சாரங்கள் பலவற்றை நான் தொகுத்து வைத்துள்ளேன். இந்து சமூகத் தில் யாவும் நன்றாகவே இருக்கின்றன என்று கூற நான் ஒருகணமும் எண்ணியதில்லை. குறைபாடுகள் எங்கேயிருக்கின்றன என்பதை நானறிவேன். ஆனால் தலைமுறை தலைமுறையாக, ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக இந்து சமூகம் எவ்வாறேனும் தனது உயிரோட் டத்தை இழக்காமல் காலத்திற்கேற்பத் தன்னை ஓரளவுக்கு மாற்றிக் கொண்டு வாழ்ந்து வருகிறது என்பது மிக வியப்புக்குரிய இணை யற்ற, வேறெங்கும் காணவியலாததொரு விந்தையாகும். இதற்கான காரணம் என்ன? காரணம் பண்டைய துறவிகளும், முனிவர்களும் எடுத்துரைத்த உண்மைகளும், அவற்றுக்குத் தொடர்ந்து அளிக்கப்

பட்ட விளக்கங்களும் மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலானவை யல்ல. சமுதாயத்தின் தேவைகள் மாறி வந்திருப்பதற்கேற்பச் சட்டங் களும் மாற்றப்பட்டு வந்துள்ளன. இந்தியாவைப் போன்ற பெரிய தொரு நாடு இன்று அரசியலால் ஒன்றுபட்டுள்ளது. இது அரசி யலில் மட்டுமின்றிச் சமூகத்திலும், பண்பாட்டிலும், பொருளாதாரத் திலும் உறுதியாக ஒன்றிணைந்து வளர வேண்டுமென்பதை நாம் ஐயப்பாடு ஏதுமின்றி விரும்புகிறோம். அதேபொழுதில், இந் நாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதன் நகரங்கள், சிற்றூர் களான பல்வேறு பகுதிகளில் கற்றோர், கல்லாதோர், தொலைநோக் குடையோர் அல்லாததோர் எனப் பல்வேறு வகையினராய் ஆங்காங்குத் தனியாக, சமுதாய, முன்னேற்றங்களுக்கும் நலங் களுக்கும் உகந்ததான சமூகக் கட்டுக் கோப்பை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் நாம் மறந்து விட முடியாது. எவ்வாறோ சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது. வேறெந்த நாட்டி லேனும் கடுமையான தாக்குதல்களையும் தாக்குப்பிடித்துச் சமுதாய அமைப்பு மாற்றமடையாமல் நிலவுதலைக் காண முடியுமா?

இந்தியா எழுநூறு ஆண்டுகள் முஸ்லீம்களின் ஆட்சியில் இருந்து வந்துள்ளது. இதைக் குறித்து அப்போது முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளில் பல இன்றைய சூழ்நிலைகளின் பின்னணியில் நோக்கும்போது பழைமை வாதங்களாய்த் தோன்றலாம். ஆனால் அவையெல்லாம் அந்தந்தக் காலத்தில் சமுதாயத்தைக் கட்டிக் காத்து நிலை நிறுத்தும் நோக்கில், பல்வேறு பொருள்கள் குறித்தும், நாடாளுமன்றத்தில் இன்று அமர்ந்திருப்பவர்களில் எவருக்கும் தகுதியில் சற்றும் குறைவில்லாத மாமனிதர்களால் உருவாக்கப் பட்ட கோட்பாடுகள்.

இந்நாட்டில் அவ்வப்போது பல இயக்கங்கள் தோன்றி யுள்ளன. பிரம்ம சமாஜத்திலிருந்து ஆரிய சமாஜம் வரை பல இயக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட்டன. சமூகம் தேக்க நிலையடைந்து பழைமையடையும்போதெல்லாம் அவ்வப்போது சமூகத்தில் தலை சிறந்த மாமனிதர்கள் சிலர் தோன்றி இந்திய அறிவின் ஊற்றுக் கண்களான வேதங்களிலிருந்தும் உபநிடதங்களிலிருந்தும் மேற்கோள் களைத் தமது புதிய விளக்கங்களுடன் சமூகத்தில் பழைமையெனும் கேடுகளையும் அறநெறிப் பிறழ்ச்சிகளையும் அகற்றிப் புத்துயிர் கொடுத்தனர். ஆனால் இன்று நடைபெற்று உள்ளது என்ன? நூறாண்டுகளுக்கு முன் எந்தக் கொள்கைகளை பிரம்ம சமாஜம்

நிலைநிறுத்த முனைந்ததோ அவற்றை இந்து சமூகம் தன்னகப் படுத்திக் கொண்டு அதையொட்டி மாற்றமடைந்த சமூகமாய் இன்று காணப்படுகிறது.

முன்பொரு நாள் பௌத்தம் குறித்தும் பேசப்பட்டது. அண்மை யில் பௌத்தராய்ச் சமய மாற்றம் அடைந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களே இது குறித்துப் பேசப் பிறரினும் தகுதி வாய்ந்தவர். எனினும் அண்மையில் சில அயல் நாட்டு நண்பர்கள் மகா போதி சங்கத்தின் தலைவர் என்ற முறையில் என்னைக் காண வந்திருந்தனர் (மாண்புறு உறுப்பினர் ஒருவர்: தாங்கள் பௌத்தரா?) பௌத்தனா யில்லாமலேயே நான் அச்சங்கத்தின் தலைவராய் உள்ளேன். நான் ஓர் இந்துவாயிருப்பினும் அதன் தலைவராய் உள்ளேன், ஏனெனில் இந்துவாயிருந்து கொண்டே புத்த சமயத்தின் பெருமையை ஏற்றுக் கொள்ளும் தாராள மனப்பான்மை கொண்டவன் நான். நான் கூற வந்த கருத்து இதுவே: அயல் நாட்டு நண்பர்கள் என்னிடம் வந்து, ''புத்தரின் பிறந்த நாடாகிய இந்தியா பௌத்தத்தைக் கொன்று விட்டது'' என்று குறைபட்டுக் கொண்டார்கள். அந்த முரண் சிக்கல் களுக்குள் இப்போது நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் மிகப் பிரசித்தமாக வெளிப்படும் கருத்து இதுதான். புத்தர் தமது மாபெரும் கோட்பாடுகளைப் போதிக்கத் தொடங்கியபோது அவை உலகத்தைக் காக்க என்று பொதுப் படையாகவன்றி இந்தியாவை யும் காக்கத் தோன்றிய கோட்பாடுகளேயாகும். இந்து நாகரீகத் தின் உயிர் குருதியையே அழிக்குமாறு உருவான சில போக்குகளின் வளர்ச்சியைத் தடுப்பதில் புத்தர் வெற்றி பெற்றார். புத்தர் இந்துக் களால் ஓர் அவதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்து சமயத்தில் உள்வாங்கிக் கொள்ளப்பட்டுள்ளார். இந்தியாவில் பௌத்தத்தை எதிர்த்துப் போராடியோர் பலர் இருந்திருப்பினும் அவர்கள் போராடியது சரியா தவறா என்ற வினாவை நாம் இப்போது எழுப்ப வேண்டியதில்லை - படிப்படியாக, பௌத்தம் இந்திய மண்ணின் வளர்ச்சியே என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்தியப் பண்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**திரு. காட்கில் :** இச்சட்டமும் அதே முடிவை எய்தலாம்.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** ஒருக்காலும் இயலாது. அப்படிப் பட்டதொரு மயக்கத்தை உருவாக்கி அதிலேயே திகழ நண்பர் விரும்புகிறார்.

பௌத்த சமயத்தைப் பொறுத்தமட்டில் அது அயல்நாடுகளில் பரவியது. அச்சமயத்தின் அடிப்படைகள் படிப்படியாக இந்துக் கோட்பாடுகளுக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டன. இவற்றையெல்லாம் நான் கூறுதற்குக் காரணம் இந்து நாகரிகமோ இந்துப் பண்பாடோ இயக்கம் நின்றுபோய்த் தேக்க நிலையடைந்து நசிந்து வருகிறது என்று எவரேனும், குறிப்பாக அயல்நாட்டினர் எவரேனும் குறை கூறுவதை நாம் ஒருபோதும் பொறுத்துக் கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தவே. நமது பண்பாட்டிலும் நாகரிகத்திலும் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்துவரும் களுக்குப் புத்துயிரளித்து வந்துள்ளனர். அந்த ஊற்றுக்கண்ணைத் தான் இச்சட்டத் தொகுப்பு அழிக்க முனைகிறது. கிளை விதி 4இன் விளைவை எண்ணிப் பார்க்க எனது உள்ளம் நடுங்குகிறது. இந்துச் சட்டத் தொகுப்பின் கிளைவிதி 4ஐப் படித்துப் பாருங்கள். இச்சட்டத் தொகுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மரபு நெறிகள், நடைமுறைகள் ஆகியவற்றைத் தவிர ஏனையவெல்லாம் ஏற்புடையனவல்ல எனக் கூறி வாயையல்லவா அடைக்கிறீர்கள். நண்பர் காட்கில் அவர்கள் இது புத்தர், மனு போன்றோரின் நவீனகாலச் சட்டத் தொகுப்பென்று கூறுகிறார். *(மாண்புறு உறுப்பினர் ஒருவர்: எத்துணை பெரும் வீழ்ச்சி).* பண்டைய கோட்பாடுகளின் அடிப்படையில் தோன்றிய இந்த நடைமுறைகளும் மரபுநெறிகளும்தான் காலந்தோறும் இந்து சமூகம் வளர்ந்து வளமடையக் காரணமாய் இருந்து வந்துள்ளன.

*(பகல் 12 மணி)*

இன்றைய நாளில், இப்பெருமன்றம் - இதன் அறிவார்ந்த மாண்புறு உறுப்பினர்களாகிய - நாம்தான் இந்திய சமயம், பண்பாடு ஆகியவற்றின் ஊற்றுக்கண் என்று இச்சட்டத் தொகுப்பில் எவற்றையெல்லாம் இணைத்து இறுதி வடிவம் தரவிருக்கிறோமோ அதைக் கூறவிருக்கிறோம். இவை தவிர நீதிமன்றங்களோ நடுவர்களோ பிறிதெவற்றையும் கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்கவும் இடமிருக்கப் போவதில்லை. இந்தியா விடுதலை பெற்ற பின்னும் இந்த 1951 ஆம் ஆண்டில் கூட இந்துச் சட்டம் தொடர்பான சிக்கல்களுக்கு விடைகாண நீதிமன்றத் தீர்ப்புகளின் எடுத்துக்காட்டுகள், பாட நூல்கள் ஆகியவற்றின் உதவி ஏதும் இன்மையால் நமது உச்ச நீதிமன்றம் மூல நூல்களையும் அவற்றின் விளக்கங்களையும் துணையாகக் கொண்டுதான் தீர்ப்புகளை வழங்க வேண்டியுள்ளது

என்பதை இந்த அவை அறியாதா என்ன? தலைமுறை தலைமுறையாய் வாழும் மெய்ம்மையான உங்கள் சமயத்தின் ஊற்றுக் கண்ணை இன்று கொன்று கொண்டு அதையே முற்போக்கான செயல்பாடு என்று கூறுகிறீர்கள்; அதுவும் எவருக்குமே பயன் இல்லாத ஒரு செயல்பாட்டுக்காக; நாட்டைப் பிளவுபடுத்தவே இச்செயல்பாடு உதவும். எவருக்கும் உள்நோக்கம் கற்பிக்க நான் விரும்பவில்லை. ஆனால் இதை முன்மொழிவோருக்கோ ஆதரிப்போருக்கோ ஆழ்ந்த உள்நோக்கம் இருக்க வேண்டும். இதை ஒப்புக்கொள்ள நான் எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் நான் வேண்டுவதெல்லாம் இதுதான்: இதன் விதிமுறைகளை மக்கள் அனைவருக்கும் கட்டாயமாக்காதீர்கள். (**மாண்புறு உறுப்பினர் ஒருவர்:** இதில் கட்டாயம் எங்கே காணப்படுகிறது?) மணமுறிவு கட்டாயம் இல்லைதான். ஆனால் இந்துத் திருமணத்தின் புனிதம் உடைவது கட்டாயம்தான்; அதுவே மிகத் தீமைதான். மணமுறிவு நடைபெறுகிறதா இல்லையா என்பது முற்றிலும் வேறு விவகாரம்; ஆனால் நீங்கள் மரபுகளையும் நம்பிக்கைகளையும் கடுமையாக மீறுகிறீர்கள். நான் பேசிக் கொண்டிருக்கும்போது ஒருவர் தென்னிந்தியா மிக முற்போக்கானதென்றும், நமது கருதலில் இருக்கும் சட்டங்கள் பல அங்கு ஏற்கனவே நடைமுறையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். தென்னிந்தியாவுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறுகிறேன். தென்னிந்தியா முன்னேற்றத்திற்கு மேல் முன்னேற்றமாக, மணமுறிவுக்கு மேல் மண முறிவாகத் தொடர்ந்து நடைபோடட்டும். எனக்குத் தென்னிந்தியாவுடன் எவ்விதப் பூசலும் இல்லை; ஆனால் அதை விருப்பமில்லாத மற்றவர்கள் மீது ஏன் திணிக்க வேண்டும். சொல்லப்போனால் எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் ஒரு கடிதம் வந்தது - அஃதொரு அஞ்சல் அட்டை; எழுதியவர் யாரெனத் தெரியவில்லை.

**திரு. காட்கில்:** இறந்த கடிதங்களின் அலுவலகத்திலிருந்து வந்ததோ?

**திரு. எஸ்.பி. முகர்ஜி:** இது இறந்த கடிதங்களின் அலுவலகத்திலிருந்து வந்தது அன்று. திரு. காட்கில் விரும்பினால் அவருக்கே அதை அன்பளிப்பாய்க் கொடுத்து விடுகிறேன். அது இறந்த கடிதம் அன்று. நாட்டில் மரபுநெறிகள் எந்த அளவுக்கு மாறுபடுகின்றன என்பதற்கு இஃதொரு எடுத்துக்காட்டே. கிருஷ்ணா மாவட்டத்தின் கிராமத்து மனிதர் ஒருவர் எழுதியிருப்பதைக் கேளுங்கள்:

''இந்துச் சட்டம் குறித்து வெளியிடப்பட்டுள்ள மசோதா வின் விதிமுறையொன்று, ஒரு பெண்ணுக்கும் அவளது தாய் மாமனுக்குமிடையே நடைபெறும் திருமணம், அது தடுக்கப் பட்ட உறவுமுறை என்பதால், செல்லாது என்று கூறுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள மரபே ஆந்திராவிலும் தமிழ்நாட் டிலும் பரவலாகக் காணப்படும் நடைமுறையாகும்; பிராம ணர்கள் கூட ஒரு பெண்ணுக்கு மிகவும் தகுதியான முறை மாப்பிள்ளை அவளது தாய் மாமனே என்று கருதுகின்றனர். இது தடுக்கப்பட்ட உறவு முறையென்பது வக்கீல்கள் உள்ளிட்ட பலருக்குத் தெரியாததொன்று. எமது மக்களில் மிகப் பெரும்பான்மையோரும் இதை அறியார்கள். இந்த விதிமுறை குறித்த அறியாமையின் விளைவாய், இவ்வாறு திருமணம் செய்து கொண்டோர்க்கு மிகப் பெரும் இடர்ப் பாடுகள் விளையும். எனவே இதுகுறித்துத் திருத்தமொன்று தாக்கல் செய்யுமாறு தங்களை வேண்டுகிறேன்...''

அவர் இதுகுறித்து டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு எழு தாமல் என்னை ஏன் தேர்ந்தெடுத்தார் எனத் தெரியவில்லை -

''....எங்கள் மரபைத் தடையிலிருந்து காக்கவோ, திருமணம் குறித்த பகுதி நடைமுறைக்கு வருவதற்குச் சிறிது கால அவகாசம் கிடைக்கவோ திருத்தம் கொணர வேண்டுகிறேன்.''

அப்பகுதிகளில் வாழும் மக்களின் முற்போக்குத் தன்மை பற்றிப் பேசியவர்களின் கவனத்துக்காக இத்தகவலைக் கூறுகிறேன். அவர்கள் மிக முற்போக்காகத்தான் இருந்து வருகிறார்கள் போலும். (மாண்புறு உறுப்பினர் ஒருவர்: இது மெய்தானா?) இக்கடிதம் இறந்த கடிதங்களின் அலுவலகத்திலிருந்துதான் வந்ததா என்பதை நான் அறியேன், ஆனால் நமது தென்னிந்திய நண்பர்கள் இந் நிலைமை மெய்தானா என்பதற்குச் சான்று கூறுவார்கள் (குறுக்கீடு). பதிலுக்கு எனக்கு மாறாக எழுத்தாளர் பாரதி அவர்களிடம் கேட்கு மாறு சுட்டுகிறேன். நான் நிறுவ விரும்பும் கருத்து இதுதான்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** அஃதொரு முற்போக்கு மாநிலம் அல்ல.

**டாக்டர் பி.எஸ். முகர்ஜி:** அவரைப் பின்பற்றுவோர்கள் அதை முற்றிலும் முற்போக்கு என்று கருதலாம். இது ஒரு

கண்ணோட்டம்தான். எந்தவொரு மாநிலத்தின் அறிவுடைமை யையோ, அறிவின்மையையோ வினாவாக்கிட நான் முற்பட வில்லை. இம்மரபு இப்பரந்த நாட்டின் இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்களிடையே நிலவி வருவதாய் இருக்கலாம். இயற்கை யாகவே குறிப்பிட்டதொரு முறையில் மரபுகள் வளர்ச்சியடைந் திருக்கலாம். ஆனால் எனது முன்மொழிவின் சாரம் இதுதான். இச்சட்டத்தை எல்லாருக்கும் கட்டாயமாக்க வேண்டாம் - அதாவது திருமணம், மணமுறிவு குறித்தவற்றைத் தற்போதைக்காவது, அதை விரும்பி ஏற்றுக்கொள்பவர்க்கு மட்டுமே, இச்சட்டத்தின் விதிமுறை களுக்கு உட்பட இசைவதாய் வருங்காலத்தில் அறிக்கை தருபவர் களுக்கு மட்டுமே, பொருந்தும் என்றும் தூய நெறி திருமணங் களுக்குப் பொருந்தா என்றும் ஆக்குமாறு வேண்டுகிறேன்; அவர்களும் விரும்பினால் ஏற்றுக்கொள்ள இடமளிக்கலாம். (*மாண்புறு உறுப்பினர் ஒருவர்: கடந்தகாலத் திருமணங்களின் நிலை என்ன?*) இச்சட்டம் எதிர்காலத் திருமணங்களைப் பற்றியது அன்றோ? தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மண முறிவுக்காக நாம் சட்டம் இயற்றவில்லை. நாம் எதிர்காலத்தில் கவனம் செலுத்துகிறோம்; நாம் எதிர்காலத் தலைமுறையினருக்கு அளிப்பதற்காகவே எண்ணுகிறோம். அவர்கள் அமைதியாகவும் வசதியாகவும் வாழ வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் ஏற் கெனவே திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் இது பொருந்த வேண்டுமென நாம் நினைப்போமாயின்...

**டாக்டர் அம்பேத்கர்:** ஏற்கெனவே திருமணம் ஆனவர்களுக்கு இது பொருந்தாது.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இதற்னெவும் நீங்கள் விதிமுறை யொன்று உருவாக்கலாம். நீங்கள் ஏற்கெனவே திருமணமானவர் களுக்கும் இதைப் பயன்படுத்த விரும்பினால் நான் அதற்கொரு தீர்வு தருகிறேன். இச்சட்டத்தின் ஆளுகைக்குள் வர விரும்புபவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அறிக்கை தந்து விருப்பத்தேர்வு செய்து கொள்ள வழிவகுக்கலாம்; விரும்பினால் இம்மொழி நடையில் உரைக்கலாம். (*மாண்புறு உறுப்பினர் ஒருவர்: எல்லா இடத்தும் ஏன் கூடாது?*) எல்லாவிடத்தும்? இதை நான் ஏற்காததற்குக் காரணம் யாருக்காக முடிவெடுக்க உங்களுக்கு உரிமை கிடையாதோ

அவர்களுக்காக நீங்கள் முடிவு செய்வதை நான் ஒப்ப முடியாது. நீங்கள் தூயநெறித் திருமணம் இப்போதைய முறையிலேயே மாற்ற மேதுமின்றித் தொடர்ந்து நடைபெறலாமென்றும் மாற்றப்பட்ட புதிய திருமண முறையை யார் வேண்டுமானாலும் பின்பற்றலா மென்றும் சட்டம் நிறைவேற்றிக் கொண்டுள்ளீர்கள். தங்கள் விருப் பத்தை மக்கள் வருங்காலத்தில் முடிவு செய்து கொள்ளட்டும். அதற்கென்று கட்டாயம் ஏதும் தேவையில்லை. இப்போதைய மக்களுக்கு நீங்கள் காலக்கெடு ஒன்று விதிக்கலாம்; விதிக்காமலும் விடலாம். குறிப்பிட்ட தரப்பினர் எவரேனும் இச்சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட விரும்பினால் அவர்கள் பதிவாளர் முன்னிலை யிலோ, தலைமைப் பதிவாளர் அல்லது தலைமை இயக்குநர் முன்னிலையிலோ, அல்லது இதற்கென உங்களால் வரையறுக்கப் படும் எவரிடமோ அறிக்கையைப் பதிவு செய்து உரிய பயனைப் பெறலாம் என்றுகூட நீங்கள் விதிவகுக்கலாம். இதனால் நீங்கள் இழக்கப்போவது என்ன? என்று உங்களை மிக உன்னிப்புடனேயே கேட்கிறேன்.

**பண்டிட் குன்ஸ்ரு** (உத்தரப் பிரதேசம்): அதனால் நாம் பெறும் ஆதாயம் என்ன?

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைக்காமல் தவிர்ப்போம் என்பதுதான் ஆதாயம்.

**பண்டிட் குன்ஸ்ரு:** இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு இளக்கத் தன்மையுடன்தான் இருக்கும். இதன் மணமுறிவு குறித்த விதிமுறைகளைப் பயன்படுத்துமாறு அது எவரையும் கட்டாயப் படுத்தவில்லை. இச்சட்டத்தின் ஆளுகையின் கீழ் வரும் உரிமை இணையர்கள் அனைவருக்கும் எப்போதைக்கும் உண்டு.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இக்கண்ணோட்டம் அழுத்தமாக எடுத்துரைக்கப்படலாம். ஆனால் வேறுபாடு இதுதான். இலட்சக் கணக்கான மக்கள் மிகப் புனிதமாய்க் கருதும் திருமண உறவு பிரித்தற்கிலாதது என்னும் தன்மையையல்லவா நீங்கள் அழிக் கின்றீர்கள். பண்டிட் குன்ஸ்ரு அவர்களோ, இவ்வவை உறுப்பினர் கள் பலரோ எனது கருத்தை ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். திருமணம் என்பது இரண்டு நபர்களுக்கிடையே செய்து கொள்ளப்படும் ஓர்

உடன்பாடுதான் என்றும் இஃதோர் ஒப்பந்தமேயன்றி மேலே ஏதேனுமில்லையென்றும் நம்புவோருடன் பூசலிட நான் விரும்ப வில்லை; இத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு எதிராக நான் கூறுதற்கு ஏதுமில்லை. அவர்கள் தமது கண்ணோட் டத்தை வைத்துக்கொள்ளட்டும்; ஆனால் இந்நாட்டில், அதற்கு மாறான கருத்தை, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நிலவி வரும், நமது மரபுகளிலும் சமயத்திலும் ஆழவேரூன்றியிருக்கும் திருமண முறையின் புனிதமானது என்று ஆழமாக, உணர்வுபூர்வமாக நம்பு வோர்களும் இருக்கின்றனர். இவர்களது உரிமையை இந்த அவையில் அமர்ந்துகொண்டு உங்கள் எழுத்தின் வாயிலாய் அகற்றி விடுதற்கு உங்களுக்கு உரிமை ஏது? பண்டிட் குன்ஸ்ரு அவர் களுக்கு இதுவே எனது பதில். (*திரு. பாரதி: ஒருதார மணமுறை*) அதற்கு அடுத்து வருகிறேன், திரு. பாரதி அவர்கள் கவலைப்பட வேண்டிய தில்லை. மணமுறிவு குறித்த எனது கருத்துக்கு அவர் உடன்படு கிறார்; அதனால்தான் ஒருதார மணம் குறித்து மிகுந்த அக்கறை காட்டுகிறார் என்று நம்புகிறேன். எனது வழிமுறை அதுதான். சரியாகவோ, தவறாகவோ இந்து சட்ட மசோதாவினால் இந்நாடு கடுமையாய்ப் பிளவுபட்டுள்ளது என்பதை நம்புங்கள். அவ்வாறு நிகழ்ந்திருக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. நமது சமுதாய அமைப்பில் சீர்திருத்தங்களைச் செய்து கொண்டு நாம் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் அம்முன்னேற்றம், நாட்டின் பெரும்பாலான மக்களின் ஆதர வுடன் நடைபெற வேண்டுமேயன்றி, இந்த அவையின் கட்டாயத் தினாலோ வெளியே பரவலாக நிலவும் எதிர்ப்புகளைப் புறக் கணித்தோ அன்று. மாறாக அவர்களது சிந்தனையில் தெளிவுறுத் தலின் வாயிலாகவே இது நடைபெற வேண்டும். பழைமைவாதப் பிரதிநிதிகளுடன் நான் இதைப் பற்றிக் கலந்தாலோசித்தபோது...

**டாக்டர் அம்பேத்கர்:** அதாவது கரபத்ரிஜி அவர்களுடன்

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இல்லை; அண்மையில் நான் அவரைச் சந்தித்ததில்லை.

**பண்டிட் மைத்ரா:** அவரைக் கலந்தாலோசித்திருந்தால், அதில் தீங்கு என்ன?

**டாக்டர் அம்பேத்கர்:** தீங்கேதுமில்லை. நான் அவரை அழைத்திருந்தேன்; அவரும் வர விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் பின்னர் அவர் வர மறுத்துவிட்டாரேயன்றி நான் அவரை ஒதுக்க வில்லை.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** இந்தப் பொருள் குறித்து நான் கரபத்ரிஜியுடன் அண்மையில் கலந்தாலோசித்ததில்லை. அவருடன் இதைப் பற்றிக் கலந்தாலோசிப்பதில் எனக்குத் தயக்கம் ஏது மில்லை. ஆனால் நான் கலந்தாலோசிக்கவில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** உண்மையில் நான் அவரைக் கலந் தாலோசனைக்காக வருமாறு அழைத்திருந்தேன்; ஆனால் அவர் தான் வரவில்லை.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** பழைமைவாதிகள் அல்லர் எனினும் அத்தகைய நோக்கு கொண்டவர்கள் பலருடன் நான் இது குறித்து ஆலோசித்துள்ளேன். எவ்வாறோ இன்று நாடு பிளவு பட்டுள்ளது. இனி எவ்வாறு தொடர்ந்து செயல்படுவது? நான் முன்னரே கூறியவாறு இஃதொரு செய்தித்தாள் குறித்த சட்டம் அன்று. ஏதோ ஒரு திடீர் ஆபத்தைத் தவிர்த்துக் காக்க வேண்டிய அவசரநிலையில் செயல்பட வேண்டிய கட்டாயச் சூழல் இல்லை. இது அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான திருத்தமும் அன்று. இஃதொரு அரசியல் விவகாரமும் அன்று. சொல்லப்போனால் அரசியல் விவகாரங்களில் நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக் கலாம். ஆனால், நமது பெரும் நாட்டின் நாகரிகத்தை முற்போக் கான திசையில் முன்னேற்றுவதற்கான சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டிய தேவை தோன்றும்போது, அதுகுறித்து அடிப்படை யான கருத்தொற்றுமை இருக்க வேண்டும். அதற்கான செயல்பாடு குறித்துப் பொதுவான அணுகுமுறை வேண்டும். தற்போது பழக் கத்தில் இருக்கும் நடைமுறைகளைப் பின்பற்றுபவர்களோ, தற்போது நிலவி வரும் சட்டங்களின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பவர்களோ பிற்போக்காளர்கள் அல்லர். இன்றைய கட்டத் தில் இம்மசோதாவை ஆதரிக்கின்றவர்கள், முற்போக்கு என்றும் முன்னேற்றம் என்றும் தாங்களாகவே கற்பித்துக் கொண்டுள்ள சில கருத்துக்கள் குறித்துப் பெருமிதமும் களிப்பும் கொண்டு இந்த விவகாரத்தில் தாங்கள் கருதுவதே அறுதித் தீர்ப்பு என்றும் தாங்கள்

தான் முற்போக்காளர்கள் என்றும் ஏனையோர் யாவரும் பிற்போக்காளர்கள் என்றும் கருதுதல்தான் அவலநிலை. இதுவே மிகத்தீயூழ் என்பேன் (மாண்புறு உறுப்பினர் ஒருவர் : உதட்டுச் சாயம்). நான் உதட்டுச்சாயம் பற்றிப் பேசவேயில்லை; நான் முன்னேற்றம் குறித்துத்தான் பேசினேன். நாம் மற்றவர்களின் கண்ணோட்டத்தையும் நோக்கியாக வேண்டும். இந்த சமூகத்தில் முற்றிலும் நசிவுத் தன்மையதான, தீயொழுக்கமான, பிற்போக்கான நிகழ்வுகள் ஏதேனும் நடந்து கொண்டிருந்தாலன்றித் தற்போது நிலவும் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களின் கண்ணோட்டத்தை நோக்கித்தான் செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட போக்குகள் எவற்றையேனும் சுட்டிக்காட்ட முடியுமென்றால் டாக்டர் அம்பேத்கருடனும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர விரும்பும் ஏனையோருடனும் நானும் ஒன்றுபட்டு நிற்பேன். ஆனால் வெறும் கருத்து வேற்றுமைக்காக மாறுபட்ட கண்ணோட்டங்களுக்காக வென்றால் உங்களையொத்த கண்ணோட்டம் கொண்டவர்களோடு உங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதே போதும். ஆனால் உங்கள் கண்ணோட்டத்தினின்று மாறுபடும் லட்சோப லட்சக்கணக்கான மக்களின் மீது உங்கள் கருத்துக்களைத் திணிக்க முயல்வது ஏன்? இந்தக் கருத்தைத்தான் சட்ட அமைச்சர் அவர்களிடமும் அரசிடமும் நான் மிக வன்மையாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத் தொகுப்பின் விதிமுறைகளின் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவற்றைத் துறந்து செல்ல இடமளிக்கும் வழிவகையொன்றை முன்வைப்பேனாயின் நீங்கள் என்னைக் குறைகூறலாம். நீங்கள் இங்கே போதிக்க விரும்புகின்ற கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்களுக்காக நீங்கள் ஏதேனும் செய்ய விரும்பினால் அதில் விரைந்த முன்னேற்றம் காணுதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். தாமும் தம் முன்னோர்களும் நம்பிப் பின்பற்றிய மரபு நெறிகளைத் தொடர்ந்து கடைபிடித்து வாழ்வோர் உங்களினும் நாட்டுப்பற்றில் எவ்வளவிலேனும் குறைவில்லாத இந்தியர்களே யாவர். அவர்கள் மீது உங்கள் கருத்துக்களை ஏன் திணிக்க முற்படுகிறீர்கள்?

மணமுறிவு குறித்துப் பேசுகிறோமே, மணமுறிவுச் சட்டம் நடைமுறையிலுள்ள நாடுகளிலெல்லாம் அது சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு அளித்து விட்டதா?

**திரு. ஹிமத்சிங்கா (மேற்கு வங்கம்) :** மேலும் அதிகமாகவே தோற்றுவித்துள்ளது.

**டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:** சமுதாயவியல் பற்றிய நூல்கள் சிலவற்றை நான் அண்மைக் காலத்தில் படித்துப் பார்த்துள்ளேன். இஃதொரு குழப்பமான மானிடச் சிக்கல் என்பதால் மக்கள் மிக்க கவலையடைந்துள்ளனர். இச்சிக்கல்களுக்கு தீர்வு எதையும் இவ் வுலகம் இன்னும் காணவில்லை. மணமுறிவு முறையை ஏற்றுக் கொள்ளவர்களிடையே மணமுறிவுகளின் எண்ணிக்கை விரைந்து பெருகிவருகின்றது. அவர்களால் அமைதிகான முடிந்ததா? அவர் களால் மகிழ்ச்சியுடன் வாழ முடிகிறதா?

**மாண்புறு உறுப்பினர் ஒருவர் :** இல்லை.

**டாக்டர் எஸ்.பி.முகர்ஜி:** மாறாகப் புதிய சிக்கல்கள் பல தோன்றியுள்ளன. உளப்பாகுபாட்டியல் பற்றிய அண்மைக்கால நூல்கள் சிலவற்றைப் படித்துப் பாருங்கள். இருபாலாரிடையே ஒத்துப்போகும் பாங்கின்மையே மேலை நாடுகளின் பெரும்பாலான தீங்குகளுக்கெல்லாம் காரணம் என்று அந்நூல்களில் சுட்டப்பட் டிருப்பதைக் காணலாம். இவையெல்லாம் மிகக் குழப்பமான சிக்கல்கள். வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் ஏதோ கூறுவதன் அடிப்படையில் நாம் கண்மூடித்தனமாக மேலை நாட்டு முறை களைப் பின்பற்ற வேண்டுமா? இதைப் பின்பற்றாவிட்டால் நீங்கள் பிற்போக்களார்களா? இந்நாட்டில் முற்போக்களர்கள் என எவரு மிருப்பின் அவர்களெல்லாம் தம்மை மாய்த்துக்கொள்ள உதவும் நீண்ட கயிராகவே இதை நீங்கள் அளிக்கிறீர்கள். ஆனால் மாற்று வழியில் தங்கள் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு வாழ்வோரின் பாதை யில் குறுக்கிடாதிருங்கள்.

ஒருதார மணத்தைப் பொறுத்தமட்டில் ஒரேயொரு நிபந் தனையுடன் நான் அதை ஏற்றுக் கொள்வேன். இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பொதுவானதாய் அதை ஆக்குங்கள். ஒருதார மணமுறை இந்துக்களுக்கு மட்டும்தான் நன்று என்றும், ஏனைய பிறருக்கெல்லாம் நன்றல்லவென்றும் கூறிவிட முடியாது. ஒரே சீர்திருத்த சமுதாயக் கோட்பாட்டை முன்னிருத்துங்கள்.

***பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:*** இதில் நம்பிக்கை இல்லாதவர்கள் மீது இதனை ஏன் திணிக்க வேண்டும்?

***டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:*** ஒரு தார மணம் ஒரு சமூக அமைப்பு முறை என்ற வகையில் இந்தியாவிற்கு உகந்ததென்று நீங்கள் நம்பினால், அதனை இந்து கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது; அதனை மனித நேய அடிப்படையில் பார்க்க வேண்டும்; அனைவருக்கும் பொருந்தச் செய்யலாம். இதிலாவது மத சார்பற்ற அரசாக நடந்து கொள்ள வேண்டும். முழுமையாக உறுதிகொண்டு, இந்திய குடி மக்கள் அனைவருக்கும் இந்த ஒரு தார மணமுறை பொருந்தச் செய்யப்படும் என்று கூறுங்கள். இதனை உங்களால் செய்ய இயலவில்லையாயின், ஒரு பிரிவினருக்கு மட்டும் இதனை பொருந்தச் செய்யாதீர்கள். இங்கே நாம் புள்ளி விவர தகவல் காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். புள்ளி விவரங்கள் உண்மையானதாகவோ அல்லது புனையப்பட்டதாகவோ இருந்தாலும் சரி அதனையே நாம் நம்புகிறோம். சில தகவல்களை பெற நான் முயற்சி செய்கிறேன். ஆனால் பெற முடியவில்லை. இந்தியாவில் எத்தனை பேர் இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்டுள்ளார் என்ற புள்ளி விவரம் பெற நான் விரும்புகிறேன்.

***திரு. ஹிமத் சிங்கா :*** அல்லது ஒரே நேரத்தில் இரு மனைவிகளை வைத்திருப்பது பற்றி.

***டாக்டர் எஸ்.பி. முகர்ஜி:*** இதையேதான் நானும் கூறுகிறேன். முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது, இரண்டாவது திருமணம் செய்து கொள்ளுவோர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. உண்மையில் இது ஒரு பிரச்சினை அல்ல. ஏற்கெனவே, முற்போக்கான கருத்துக்களின் காரணமாக சமுதாயம் இதனை சரிக்கட்டிக் கொண்டுள்ளது. பொருளாதார நிலைமைகள் மற்றும் பொதுமக்களின் கண்டனம் காரணமாக இம்முறை மறைந்துள்ளது. பின்னர் ஏன் ஒரு பெரும் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்வதாகவும் ஒரு சட்டத்தை, இயற்றப் போவதாகவும் நீங்கள் தம்பட்டம் அடிக்கிறீர்கள்? இதனை ஒரு கொள்கையாக நீங்கள் ஏற்றுக்கொண்டால், இப்போது நான் கூறியது போன்று இந்தியா முழுமைக்கும் இதனைப் பொருந்தச் செய்யுங்கள்.

இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பொறுத்தமட்டில் எந்த முடிவு எடுக்கப்படப் போகிறது என்பது எனக்குத் தெரியாது.

இந்த மசோதாவின் எஞ்சிய பகுதி குறித்து நம்மால் பரிசீலிக்க முடியாமல் போகலாம், அவ்வாறு செய்ய நேரம் இல்லாமல் போகலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். பின்வருமாறு நான் தெரிவிக்கிறேன்: இந்த இந்து சட்டத் தொகுப்பை அப்படியே நிறைவேற்றிவிட்டு, இதனை ஏற்பது தனிநபர் விருப்பத்திற்கு விட்டுவிடலாம். இதனை விரும்புபவர்கள் பின்பற்றட்டும்; ஆஸ்தீகக் கருத்துக்களை தீவிரமாக பின்பற்றுபவர்களுடன் நான் பேசிப் பார்த்தேன். அவர்களுடன் விவாதித்துள்ளேன். இத்தகைய மசோதா என்னவாக இருந்தாலும் அதனை நிறைவேற்றுவதற்கு எதிராக அவர்களில் சிலர் இருந்த போதிலும், தங்களைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு உரிமை வேண்டுமென்று எண்ணுவது போல், மற்றவர்களும் தங்களைப்பற்றியும் தங்கள் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க சுதந்திரம் வேண்டுமென்று அவர்கள் கருதுகின்றனர். அதுதான் ஒரு மகத்தான தொடக்கமாகும். இந்த சட்டத் தொகுப்பிற்கு எதிர்ப்பு இருக்கக்கூடும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். எதிர்ப்புகள் இருப்பினும், டாக்டர் அம்பேத்கரும் அவருடன் சேர்ந்து பணியாற்றியவர்களும் ஆற்றியுள்ள மகத்தான பணியாகும் இது. இது ஒரு மிகவும் சிக்கலான பிரசினையாகும். இதனை அவர், மிக உயர் திறமையுடன் ஆய்வு செய்துள்ளார். அதற்காக அவர் நாடாளுமன்றம் வழங்கக் கூடிய கௌரவ டாக்டர் பட்டத்தை ஏற்றுக் கொள்ள அவர் தயாராக இருந்தால், டாக்டர் அம்பேத்கருக்கு நாம் டாக்டர் பட்டம் வழங்க சித்தமாக இருக்கிறோம். ஆனால், இதனை எதிர்க்கின்ற லட்சக்கணக்காக இந்துக்களின் உள்ளங்களில் திணிக்கின்ற ஒரு நடவடிக்கையாக இதனை நாம் காண்போமேயாயின், நீங்கள் இந்திய மக்களுக்குப் பணியாற்ற வில்லை என்றுதான் கூறுகிறேன். இப்போதும் கூட நாம் செல்ல வேண்டிய வழி இதுதான். நாம் நமக்குள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டியதில்லை. இந்த அடிப்படை பிரச்சினையில் கருத்து வேறுபாடு கொள்ள ஒப்புக் கொள்ளலாம். சமூக விரோதமானதாக அல்லது இந்து சமுதாயத்தை அரிக்கின்றவைகளான சில விஷயங்கள் இருப்பதாக நீங்கள் குறிப்பிட்டுக் கூறினால், அவை பற்றி கட்டாயமான ஷரத்துக்களை அமைக்க நாம் ஒத்துக்கொள்வோம். மற்றபடி, நீங்கள் தயாரித்துள்ள புதிய மிகப்பெரிய சட்ட அமைப்பை சில ஆண்டுக் காலம் அப்படியே வைத்திருப்போம். இந்துவோ அல்லது இதனை ஏற்றுக் கொள்ள விரும்பும் வேறு எந்த இந்தியக் குடிமகனோ ஒரு உறுதி மொழி அறிவிப்பு செய்யலாம். திருமணம் அல்லது விவாகரத்து அல்லது சொத்து ஆகியவை குறித்த ஷரத்துக்கள் என்னவாக இருப்பினும் அவ்வாறு உறுதிமொழி அறிவிப்பு அளித்தவர்களுக்குப்

பொருந்தும். ஒரு மாபெரும் சகாப்தத்தின் ஆரம்பமாகும் இது. சொல்லப்போனால் இறுதியாக முடிவு செய்யப் போகிறவர் யார்? தேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளன. நீங்கள் முன்னோக்கிப் பார்க்கலாம். பிரதம அமைச்சர் கூறியுள்ளது போல, மக்கள் ஆதரவு அலை வீசி அனைத்து எதிர்ப்புகளையும் அடித்துச் சென்றுவிடும்.

**திரு. காமத் :** சூறாவளி....

***டாக்டர் எஸ்.பி. முகர்ஜி :*** ஆம், சூறாவளி வரும். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் ஷரத்துக்களைப் பொறுத்தமட்டில், சூறாவளி வரலாம். அவர்கள் மக்களிடம் சென்று, இதனை அவர்கள் மீது திணிக்கவில்லை என்று எடுத்துக் கூறட்டும். அவர்களிடம் பின்வருமாறு கூறலாம்: ''உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறோம். நாங்கள் உருவாக்கியுள்ள பேரின்ப வீடு இங்கே உள்ளது. இந்த பேரின்ப வீட்டிற்கு வந்து முக்தி அடையுங்கள்''. மக்களிடம் சென்று விளக்குங்கள்: உண்மையிலேயே இது ஒரு பேரின்ப வீடு என அவர்கள் உணர்ந்தால், அவர்கள் வந்து அதனை எடுத்துக் கொள்ளட்டும்; திறந்த மனதோடு எடுத்துக் கொள்ளட்டும். இன்னும் போதிய அவகாசம் உள்ளது. கலாசார, அரசியல் துறைகளில் பல்வேறு தாக்குதல்களும் பொருளாதார ஆதிக்கமும் பலமுனைகளிலிருந்து விநியோகத்திலும், பல்லாயிரம் ஆண்டுகளாக இந்து கலாசாரம் நிலைபெற்று வந்துள்ளது. அவை அனைத்தையும் நாம் சமாளித்து வந்துள்ளோம். இப்போது நாம் சுதந்திர நாடாக இருக்கிறோம். கடந்த காலத்தில் இருந்ததைவிட இப்போது நாம் ஒளிமயமான எதிர் காலத்தை காண இருக்கிறோம். ஆனால், கருத்துக்கள், கொள்கைகள், போக்குகள், பழக்கவழக்கங்கள் வேறுபடுகின்ற பரந்துபட்ட இந்த நாட்டில் சமூக சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயற்சிக்கும்போது இதில் அமைதியாக, நிதானமாக செயல்படுவதைத் தவிர வேறு வழியில்லை. உண்மையானவை என்று நீங்கள் நம்புகிற கொள்கைகளைக் கைவிட வேண்டுமென நான் உங்களைக் கேட்கவில்லை. தற்போதைக்கு மட்டும் என்றும் நான் கேட்கவில்லை. மக்களிடம் அதுவும் இந்து மக்களிடம், அதாவது உலகத்தில் எந்த ஒரு பகுதியிலும் இருக்கக்கூடியவற்றை விட எவ்வகையிலும் தரம் குறையாத சட்ட திட்டம் மற்றும் சம்பிரதாயங்களின்கீழ் இன்னும் வாழ விரும்புகிற இந்து மக்களிடம் சென்று அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். உண்மையை அவர்களாகவே தெரிந்தெடுத்துக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள். இந்த அவை முன்பும், அரசின் முன்பும் வைக்கும் என்னுடைய இந்த வேண்டுகோள் செவிமடுக்கப் படும் என்று நம்புகிறேன்.

***திரு.பி.கே.பி சின்ஹா:** இந்த அவையிலும் நாட்டிலும் உள்ள சிறந்த பேச்சாளர்களில் ஒருவரான டாக்டர் முகர்ஜி மீது எனக்கு ஆழ்ந்த வருத்தம் ஏற்படுகிறது. டாக்டர் முகர்ஜியும் இந்த மசோதாவை எதிர்க்கும் ஏனையோரும் பின்வரும் கருத்தை தெரிவித்துள்ளனர்: அதாவது ஒரு சிவில் சட்டத்தை ஏன் இயற்றக் கூடாது? இந்த மசோதாவின் வரம்பை இந்தியாவில் உள்ள அனைத்து சாதியினர், சமுதாயத்தினர், மதத்தினர்களுக்கும் பொருந்தும் வகையில் ஏன் நீட்டிக்கக் கூடாது? மேலும் அவர்கள் கேட்கிறார்கள். இந்த மசோதாவின் பல்வேறு விதிகளைப் பின்பற்றும் பொறுப்பை பல்வேறு மாநிலங்களிடம் அல்லது பல்வேறு மக்களிடம் ஏன் விட்டுவிடக் கூடாது? இந்த மசோதாவை கொண்டு வந்தவர்கள். இத்தகைய விமர்சனங்களுக்குச் சிறப்பான முறையில் பதில் அளித்துள்ளனர். இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் பல்வேறு தரப்பினர்களுக்கிடையே வேறுபாடு காட்டப்படுவது தொடர்பான அரசியல் சாசனத்தில் உள்ள பிரிவை குறிப்பிட்டுள்ளனர்.

அந்த பிரிவைக் கருதிப் பார்க்க வேண்டுமென்பது அவர்களின் கருத்தாகும். ஒரு சமூகத்தினர்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில் இந்த மசோதாவில் ஷரத்துக்களை நீங்கள் வைத்திருந்தால், அரசியல் சாசனத்தின்படி அது செயல்திறனுடையதாகாது. இது தொடர்பாக அவர்கள் பம்பாய் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை நீதிமன்றங்கள் சிலவற்றின் தீர்ப்புகளைக் .குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அவை, கீழ் நிலை நீதிமன்றங்களின் முடிவாகும். அப்போதிலிருந்து, பம்பாய் உயர் நீதிமன்றம் அங்கு விசாரணைக்கு வரும் வழக்குகளில், அரசமைப்புச் சட்டத்தில் உள்ள வேறுபாடு குறித்த பிரிவு மீறப்படவில்லையென்றும், அப்பிரிவு இருந்த போதிலும், ஏனைய சமுதாயத்தினர்களிலிருந்து பிரிந்து, இந்து சமுதாயத்தினர்களுக்காக மட்டும் நாம் சட்டத்தைப் பெற்றிருக்க முடியும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. ஆகையால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் பல்வேறு மாநிலங்கள் அல்லது மக்கள் முடிவு செய்து கொள்ள விட்டுவிடலாம் என்ற பிரச்சினை உள்ளது. எந்த காரணங்களின் அடிப்படையில் அவர்கள் இந்த வாதங்களை எடுத்து வைத்துள்ளனர்? அவர்கள் கூறுகிறார்கள்: ''இந்த மசோதாவின் ஷரத்துக்கள் இந்து சட்டத்தின்

★ அரசியல் நிர்ணயசபை விவாதங்கள், தொகுதி XV, பகுதி II, செப். 1951, பக். 2723 - 32.

அடிப்படைக் கோட்பாட்டிற்கு முரண்பட்டவையாக உள்ளன. அவை புரட்சிகரமானவையாக உள்ளன. அவை இந்த சட்டத்தில் எட்ட முடியாத மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றன. இந்த மாற்றங்கள் அனைத்தும் அவசியமானவை அல்ல. தங்கள் கருத்துக்கு ஆதரவாக அவர்கள் இந்த வாதங்களை முன் வைக்கின்றனர். இந்த மசோதாவின் ஷரத்துக்களை நான் பகுத்துப் பார்த்து அவர்களின் கருத்துக்கு ஆதாரமாக என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன். திருமணம் மற்றும் விவாகரத்துப் பிரச்சினைகள் குறித்த தற்போதைய என்னுடைய கருத்தை கூறுகிறேன். இந்த அத்தியாயம் குறித்து மட்டுமே இப்போது விவாதிக்கப்பட உள்ளது.

**பண்டிட் எம்.பி. பார்கவா (ஆஜ்மீர்):** பகுதி 2 குறித்து மட்டுமே நீங்கள் கருத்து தெரிவியுங்கள்.

**திரு. பி.கே.பி. சின்ஹா :** ஆம். நான் பகுதி 2 குறித்து மட்டுமே கருத்து தெரிவிக்கிறேன். திருமணம் மற்றும் விவாகரத்து அத்தியாயத்திலிருந்து மட்டுமே என்னுடைய வாக்குமூலங்களை நான் விளக்குவேன். அதற்கு அப்பால் நான் செல்லமாட்டேன். இந்த அத்தியாயம் நான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒன்று இது இதனுடைய செயல்வரம்பை பரவலாக்குகிறது. அந்த வரம்பிற்குள் ஒருவர் திருமணங்களை செய்து கொள்ளலாம். குறிப்பிட்ட சாதி அல்லது தொகுதிக்கு வெளியே நீங்கள் செல்லலாம். மற்றும் இன்னும் அந்தத் திருமணங்கள் சட்டவிரோதமானதாக மாட்டா. அவர்களின் குழந்தைகள் சட்டவிரோதமானவர்களாக மாட்டார்கள். இரண்டாவதாக, இந்த மசோதா தடை வரம்புகளைக் குறைக்கிறது. பல தடைகள் இருந்தன. சில சாதிகளைத் தாண்டி ஒருவர் செல்ல இயலாது. ஒரே கோத்திரத்திற்குள் அல்லது பிரவாரத்திற்குள் ஒருவர் திருமணம் செய்து கொள்ள இயலாது. சில உறவுகள், தாய் தந்தையர் தொடங்கி சில நிலைகளுக்குள்ளேயே இருக்கும். இந்த தடைகளை இந்த மசோதா குறைக்கிறது. மேலும் இது ஒரு தார மணக் கொள்கையை அறிமுகப்படுத்துகிறது. கடைசியாக, விவாகரத்து கொள்கையை அறிமுகப்படுத்துகிறது.

முதற்கண், விரிந்து வரும் திருமண உறவு முறையில் இத்தகைய பிரச்சினைகள் உள்ளன. இத்தகைய நடவடிக்கை குறித்த கொள்கைகள் உண்மையில் இந்து சட்டக் கோட்பாடுகளுக்கும், இந்து மதத்திற்கும் முரண்பட்டவையாக உள்ளனவா? என்னுடைய கருத்துப்படி அவ்வாறு இல்லை. இந்த நடவடிக்கை ஆஸ்திகர்களைப் பாதிப்ப

தாகவும், அவர்களின் மத நம்பிக்கைகளையும், அவர்களின் மத உணர்வுகளையும் புண்படுத்துபவையாக இருப்பதாகவும் முகர்ஜி கூறினார். என்னையே நான் ஒரு தீவிர சமயக் கோட்பாட்டாளனாகக் கருதிக் கொள்வதை ஒப்புக் கொள்வதில் நான் வெட்கப் படவில்லை. கங்கையில் குளிப்பதற்காக நாங்கள் கங்கை கரைக்குச் செல்லும் போது அங்கே நான் டாக்டர் முகர்ஜியை அடிக்கடி சந்திப்ப தில்லையா? வாரணாசியில் சிவன் கோயிலில் அவரை நான் அடிக்கடி சந்தித்ததில்லையா? எங்களுடைய ஆஸ்தீக உணர்வுகளின் தன்மையும் அளவும் ஒரே மாதிரியானவை. இருப்பினும் இந்த மசோதாவில் உள்ளவை எதுவும் என்னுடைய மத நம்பிக்கை மற்றும் மத உணர்வுகளைப் பாதிக்கவில்லை எனக் காண்கின்றேன். இந்து சமுதாயத்தின் மூலத் தன்மை அல்லது பழமையான நிலை என்ன? நாம் மகாபாரதம் மற்றும் இதர வேத நூல்களில் காண்பது தான் என்ன? இப்போது இருப்பது போன்ற சாதி வேறுபாடுகள் அப்போது இல்லை. அவரவர்கள் செய்யும் தொழில்கள் அடிப்படையில் பிரிவுகள் இருந்தன.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** பிறப்பால் ஒவ்வொரு மனிதனும் சூத்திரன். ஆன்மீக நெறிமுறைகளால் அவன் பிராமணன் ஆகின்றான்.

**திரு. பி.கே.பி. சின்ஹா:** ஆனால் சில பாதகமான அம்சங் களினால் நிலைமை மாறுபாடுள்ளது. இது சம்பந்தமாக மேற்கோள் களை காட்டி விவாதத்தை நீட்டிக்க நான் விரும்பவில்லை. மற்றபடி நான் உங்களுடைய விளையாட்டையே விளையாடுபவனாகி விடுவேன். நான் ஏற்கனவே கூறியவாறு, இப்போது உள்ளதுபோல வேறுபாடுகள் எதுவும் அப்போது இல்லை. ஆரியர் ஒவ்வொருவரும் வேறு ஆரியர் எவரையும் மணந்து கொள்ளலாம். ''அனுலோமா'' மற்றும் ''பிரதிலோமா'' திருமணங்களை இந்து சட்டம் அனுமதிக் கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த நடவடிக்கையின் ஷரத்துக்களை நாம் பின்பற்றுவதன் மூலம் நாம் பழைமையான முறைகளை மீண்டும் பின்பற்றக் கூடிய நிலை ஏற்படும் என்பது உறுதி. ஆனால் பழைய முறைகள் நம் நாட்டில் வேண்டத்தகாத சில மாற்றங்களினால் பரவிக்கிடக்கின்றன.

**பண்டிட் மாளவியா :** இந்த கருத்தை மதிப்பிற்குரிய உறுப் பினர் சிறிது விவரித்துக் கூற முடியுமா?

***திரு. பி.கே.பி. சின்ஹா :*** நான் போதுமான அளவிற்கு விவரித்துக் கூறியுள்ளேன். இதற்கு மேலும் விவரிக்க வேண்டுமாயின் ஏழு நாட்களுக்கு பேச வேண்டியிருக்கும்.

***பண்டிட் மாளவியா :*** நான் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்தியாவில் எங்கே "பிரதிலோமா" திருமணங்கள் அனுமதிக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

***திரு.பி.கே.பி. சின்ஹா:*** அனுலோமா மற்றும் பிரதிலோமா திருமணங்கள் பொதுவாக அனுமதிக்கப்பட்டன என்பதை இந்து சட்ட நூல் எதிலும் நீங்கள் காணலாம்.

***மாண்புமிகு துணைத் தலைவர்:*** அனுலோமா திருமணங்கள் தான் அனுமதிக்கப்பட்டன; பிரதிலோமா திருமணங்கள் அனுமதிக்கப் படவில்லை.

***திரு. பி.கே.பி. சின்ஹா:*** இது அனுமதிக்கப்படவில்லை. குழந்தைகள் சண்டாளர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் இந்து சமுதாயத்தின் ஒரு பிரிவாக அமைகின்றனர்.

***மாண்புமிகு துணைத் தலைவர்:*** இவை அனைத்தும் நாடாளு மன்ற சட்டங்களால் முடிவு செய்யப்பட்டுவிட்டன.

***திரு.பி.கே.பி. சின்ஹா :*** இது குறித்து நாடாளுமன்ற சட்டங்கள் பல உள்ளன. 1872 ஆம் ஆண்டு தனி திருமணச் சட்டம் 1949 ஆம் ஆண்டு இந்து திருமண செல்திறன் சட்டம். இவை இந்துக்கள் சீக்கியர்கள் மற்றும் சமணர்களிடையே திருமணங்களையும் மற்றும் வெவ்வேறு சாதிகள் மற்றும் உட்சாதிகளுக்குமிடையேயான திருமணங்களையும் அனுமதிக்கின்றன. மேலும், ஒரே சாதியின் உட்பிரிவுகளுக்கிடையேயான திருமணத்தை அனுமதிக்கும் இந்து திருமண (தகுதியின்மையை நீக்கும்) சட்டம் உள்ளது. ஆகையால், இந்த சட்டங்கள் எல்லாம் இங்கே உள்ளன: இவை அனைத்திந்திய தன்மை கொண்டவை. ஓர் இந்து வேறு ஓர் இந்துவை, சீக்கியரை அல்லது சமணரை மணந்து கொள்ளலாம். இங்கு நாம் என்ன செய்கிறோம் எனில், பழைய சட்டங்களையே நாம் மீண்டும் சட்டமாக்கிக் கொண்டிருக்கிறோம். சட்டங்கள் இங்கே இருக்கும்

போது அவற்றையே ஏன் நாம் மீண்டும் சட்டமாக்குகிறோம் என்று டாக்டர் முகர்ஜி கேட்டார். அச்சட்டங்கள் இருக்கும்போது அவற்றையே இந்து சட்டத் தொகுப்பில் சட்டமாக மீண்டும் இணைத்தாக்குவது மூலம் நாம் அப்படி என்ன தவறு செய்து விட்டோம் என்று அவரிடம் நான் பதிலுக்குக் கேட்டேன்.

இப்போது, இரண்டாவது அம்சத்திற்கு வருகிறேன். அதாவது தடைகளை குறைத்துக் கட்டுப்படுத்துதல் என்ற அம்சத்திற்கு வருகிறேன். இந்து திருமண (தகுதியின்மைகளைக் நீக்குதல்) சட்டத்தின்படி ''சகோத்ர'' மற்றும் ''சப்ரவார'' திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன மற்றும் இந்த சட்டத் தொகுப்பில் புதிதாக எதுவும் அறிமுகப்படுத்தவில்லை என்பதெல்லாம் உண்மையில்லையா? இந்த ஷரத்து ஏற்கனவே இந்து சட்டத்தில், பிராமணர்களுக்கிடையே மட்டும்தான் ''சகோத்ர'' திருமணம் விலக்கி வைக்கப் பட்டிருந்தது. க்ஷத்திரியர்கள் மற்றும் வைசியர்களுக்கு கோத்திரம் என்பது ஆன்மீக அல்லது மத முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். கோத்திரம் என்பதற்கு அவர்கள் ஒரே மூதாதையர் வழி வந்தவர்கள் என்று பொருள் கொண்டதில்லை. பிராமணர்களைப் பொறுத்த மட்டில் மட்டுமே கோத்திரம் என்பது அவர்கள் ஒரே மூதாதையர் வழி வந்தவர்கள் என்று பொருள்படும். சூத்திரர்களைப் பொறுத்த மட்டில், 'சகோத்ர' திருமணம் எப்போதும் அனுமதிக்கப்பட்டது. சட்டத்தின் கீழ் அது ஏற்கனவே இருந்தவாறு அல்லது தற்போது இருக்கின்றவாறு 'சகோத்ர' திருமணங்கள் சட்டப்படியானவை, செல்திறன் உள்ளவை என்றும் எனவேதான் அது இந்த சட்டத் தொகுப்பில் சேர்க்கப்பட்டு வருகிறது என்றும் நாம் அறிகிறோம்.

இது விஷயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு கட்டுப்பாடு தந்தை வழியில் ஐந்து தலைமுறைகளும் தாய் வழியில் மூன்று தலைமுறைகளும் தடை அளவு குறைக்கப்படுவதாகும். இந்நாட்டில் நிலவிவரும் இந்து சட்டம் மற்றும் பழக்க வழக்கம் மற்றும் நடைமுறைகளைப் பொறுத்த மட்டில், பெருமளவிற்கு ஒரே சீரான தன்மையில்லை. பல விமர்சர்கள் ஏழு மற்றும் ஐந்து தடைகளை பரிந்துரைத்தனர். ஏனையோர் ஐந்து மற்றும் மூன்று தடைகள் பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஐந்து மற்றும் மூன்று தடைகளுக்கு மேல் போக வேண்டிய அவசியமில்லையென அவர்கள் கருதினர். யஜுர் வேதத்தில், இந்தக் கட்டுப்பாடு மூன்று மற்றும் இரண்டு ஆகும். சில வேத புத்தகங்களில் இது இரண்டிற்கு மேல் செல்லவில்லை. இந்த மசோதாவில் பழைய முறையையே குறிப்பாக தொடக்கத்தில்

அதாவது ஏனையோரின் தொடர்பால் மாசுபடுவதற்கு முன் இருந்த வாறான இந்து சட்ட முறையையே திரும்பவும் நாம் கொண்டு வந்துள்ளோம் என்பதுதான் என்னுடைய வாதமாகும்.

(திரு. ஹிமத் சிங்கா தலைமை பீடத்தில் அமர்கிறார்.)

ஒருதார மணம் குறித்த கொள்கையைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு நடைமுறையில் இந்து சட்டத்தின் கீழ் உள்ளவாறு இந்து பெண் ஒரு கணவரை மட்டுமே பெற்றிருக்க வேண்டும்.

**திரு. காமத் :** தம்பதியருள் உயிருடன் இருக்கும் ஒருவர்.

**திரு. பி.கே.பி. சின்ஹா:** உயிருடன் இருப்பவர் அல்லது இறந்தவரும்கூடத்தான்.

**திரு. காமத் :** ஒரு தம்பதிக்கு இறந்தவர் ஒருவரும், உயிருடன் இருப்பவர் ஒருவருமாக இருக்கலாம்.

**திரு. பி.கே.பி. சின்ஹா :** சிலரது விஷயங்களில் ஒன்று மட்டுமே உயிருடன் இருப்பவர் அல்லது இறந்திருக்க கூடியவர்.

ஆண்களைப் பொறுத்தமட்டில், பலதார மணத்தை இந்து சட்டம் அனுமதிக்கிறது என்ற தவறான கருத்து நிலவுகிறது. ஆனால், யாக்ஞவல்கியர், மனு மற்றும் அபஸ்தம்பர் ஆகியோரின் சில நூல் களில் விளக்கிக் கூறப்பட்ட சில சூழ்நிலைகளில் மட்டுமே ஓர் இந்து இரண்டாவது மனைவியை வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கூறுகள் அவையின் முன் விவாதத்திற்கு வரும் போது அந்த சுலோகங் களையும், மேற்கோள்களையும் எடுத்துக் கூறுவேன்.

**பண்டிட் மாளவியா:** அக்கருத்தை நீங்கள் ஆதரித்துக் கூறு கிறீர்களா?

**திரு. பி.கே.பி. சின்ஹா:** இல்லை. ஒருதார முறைதான் இருக்க வேண்டும் என்று சட்ட திட்டங்களை வகுத்து, பம்பாயிலும் சென்னையிலும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த ஒருதார மண முறைக் கொள்கை, தனி திருமணச் சட்டத்திலும், மற்றும் சிவில் திருமண சட்டத்திலும் இந்துக்களுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது திருமணமான பெண்கள் (தனி குடியிருப்பு மற்றும் பராமரிப்புச்) சட்டத்தின் மூலம் மறைமுகமாக ஒரு தம்பதியருக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. கணவன் மற்றொரு மனைவியை தேடிக் கொண்டால் அல்லது வைப்பாட்டி வைத்து கொண்டால் முதல் மனைவி தனி இருப்பிடத்தையும் பராமரிப்பையும் பெற இச்சட்டம் வகை செய் கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் நலம்தரும் என்பதை இது அங்கீகரித்துள்ளது. இந்த கொள்கையிலிருந்து மாறுபடுவது தீமையானதாகும். இத்தகைய இனங்களில் அந்தப் பெண் தனி குடியிருப்பையும் பராமரிப்பையும் பெற உரிமைப் பெறுகிறாள்.

**திரு. காமத் :** ஒரு பெண் பல கணவர்களை வைத்துக் கொள் ளுவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**திரு. பி.கே.பி. சின்ஹா:** இப்போது விவாகரத்து என்ற பிரச்சினைக்கு வருகிறேன். டாக்டர் முகர்ஜி சீற்றம் அடைந்தார். இந்து திருமணம் புனிதமானது; கலைக்க முடியாதது; நிலையானது என்று அவர் கூறுகிறார். ஒரு பெண்ணை ஓர் ஆண் திருமணம் செய்து கொள்ளும் தவறை செய்துவிட்டால், அவர் தப்பிக்க வேறு வழியில்லை. ஆனால் பழைய நூல்களிலிருந்து நான் காண்பது என்னவெனில், டாக்டர் முகர்ஜி கூறுகின்ற அளவிற்கு, இந்து திருமணங்கள் புனிதமானதோ, நிலையானதோ அல்ல. நான் ஒரு மேற்கோளை இங்கு படித்துக் காட்டுகிறேன். அது ஒரு பெண் மற்றொரு கணவரை தேடிச் செல்ல உரிமை உள்ளது என்று கூறு கிறது. இதுதான் **நாரதர்** மற்றும் **பரஷுரர்** என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்.

**नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पत्यौ।**
**पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते।**

> "ஐந்து இடர்ப்பாட்டு நிலைகளில் அதாவது கணவன் காணாமல் போய் விட்டால், அல்லது இறந்து விட்டால் அல்லது துறவறம் பூண்டுவிட்டால், அல்லது ஆண்மை யிழந்து விட்டால் அல்லது சாதியிலிருந்து நீக்கப்பட்டால் ஒரு பெண் மற்றொரு கணவனை அடைய ஆணையிடப் படுகிறது."

**பண்டிட் மாளவியா :** அதுகுறித்த விளக்கக் குறிப்பையும் படிக்க முடியுமா?

**திரு. பி.கே.பி. சின்ஹா :** இதனை நான் உங்களின் விருப்பத்திற்கே விட்டு விடுகிறேன். ஆகையால் டாக்டர் முகர்ஜி கூறுவது போல் நாம் நம்புகிற அளவிற்கு திருமணம் கலைக்கப்படாதது அல்ல. இவை தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில், இந்து திருமணங்கள் முறித்துக் கொள்ள வாய்ப்புகள் இருந்தன. அதன் மூலம், இதில் ஒப்பற்றக் கொள்கை முறை இருப்பது மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும், இந்த சிவில் திருமண சட்டம், விவாகரத்து கொள்கையை அங்கீகரிக்கிறது. இந்த நவீன யுகத்தில், இந்தியாவின் தற்போதைய நிலையில், இந்து சமுதாயத்திற்கு விவாகரத்து குறித்த சட்டம் ஒன்றை நாம் பெறவில்லையாயின், இந்து சமுதாயத்தின் இறுதியான முறிவிற்கும் ஒருமைப்பாடற்ற நிலைக்கும் நாம் தயாராக இருக்க வேண்டியிருக்கும்.

இது தொடர்பாக டாக்டர் முகர்ஜியின் மாநிலமான வங்காளத்தில் பரபரப்பை ஏற்படுத்திய இரண்டு அல்லது மூன்று நிகழ்வுகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அங்கு நடைமுறையில் உள்ள இந்து சட்டம் விவாகரத்து பெறுவதற்கு எவ்வித வாய்ப்பையும் அளிக்கவில்லை. பிராமண சாதியை சேர்ந்த தம்பதிகள் சம்பந்தப்பட்ட குறைந்தது இரண்டு நிகழ்வுகள் பற்றி எனக்குத் தெரியும். திருமணமாகி, சில காலம் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அதன் பிறகு, அவர்களுடைய வாழ்வில் கசப்பு ஏற்பட்டது. அவர்கள் பிரிய வேறு வழியே இல்லை. இந்த இரு நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மனைவிகள் கல்கத்தாவில் உள்ள புகழ்பெற்ற மசூதிக்கு சென்று இஸ்லாமுக்கு மதம் மாறினார்கள். அதன் மூலம் அவர்கள் தாம்பத்திய வாழ்க்கையை முறித்துக் கொண்டனர். இந்திய சமுதாயம் இத்தகைய நிலையை அடைந்துள்ளது. விவாகரத்துக்கான சட்டத்தை நாம் பெறவில்லையாயின் இத்தகைய சம்பவங்களுக்கு நாம் தயாராக இருக்க வேண்டியிருக்கும். இந்த ஷரத்துக்கு எதிராக இருப்பதன் மூலம் டாக்டர் முகர்ஜி, இந்துக்களின் நலனுக்காக ஏதேனும் நல்லதை செய்யப் போகிறாரா அல்லது, மத தீவிரவாதிகளை போல அவரும் இந்து மதத்திற்கும், இந்து சமுதாயத்திற்கும் ஊறுவிளைவிக்கப் போகிறாரா என்பது எனக்கு தெரியவில்லை.

**திரு. சட்டோபாத்தியாயா** (மேற்கு வங்காளம்) **:** அதற்குப் பின்னர் மீண்டும் அவர்கள் இந்துக்களாக மாறவில்லையா?

**திரு. பி.கே.பி. சின்ஹா:** எப்படி இருப்பினும் ஒருவர் விவாக ரத்து பெற வேண்டுமாயின் வேறு ஏதாவது ஒரு மதத்திற்கு மாற வேண்டியுள்ளது. இதைத்தான் நான் வலியுறுத்துகிறேன்.

விவாகரத்து பெறுவதற்காகவே பலர் வேறு மதங்களுக்கு மாறி உள்ளனர். எந்த அளவிற்கு முன்னேற்றமும் வளர்ச்சியும் பெறப் பட்டுள்ளது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். சமுதாயம் எந்த நிலையை அடைந்துள்ளது என்பதை நாம் காண வேண்டும். வெளி உலகத்துடன் இந்தியா தொடர்பு கொள்ள முடியாத கால கட்டத்தில் நாம் வாழவில்லை. எண்ணங்களும் கருத்துக்களும் எல்லை கடந்து நம்மை தாக்கக்கூடிய கால கட்டத்தில் நாம் வாழ் கிறோம். சில உரிமைக் கோட்பாடுகளும் சுதந்திர தத்துவங்களும் எண்ணங்களும் ஆடவர் பெண்டிற் உள்ளங்களில் குறிப்பாக இளைய தலைமுறையினர்களின் உள்ளங்களில் பதிந்திருக்கக் கூடிய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய எண்ணங் கள் நாம் அனுமதிக்காவிட்டால் இன்றைக்கு நாம் காண்கிற இந்த இந்து சமுதாயம் இதே நிலையில் எதிர்காலத்திலும் நீடித்து இருக்குமா என்ற அச்சமும் சந்தேகமும் என் மனத்தில் உருவா கின்றன.

மாகாண சட்டங்கள் இருக்கின்றன. இப்பிரச்சினையை ஏன் மாகாண அரசுகளிடமே விட்டுவிடக் கூடாது என்று என்னுடைய நண்பர்கள் சிலர் வலியுறுத்துகின்றனர். நமக்கு மத்திய சட்டம் என்று ஒன்று இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துவதன் காரணம் இதுதான். திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல், வாரிசுரிமை, பாரம்பரிய உரிமை ஆகியவை அரசியல் சாசனத் தின் பொதுப்பட்டியலில் 5ஆம் இனத்தின் கீழ் உள்ளன. மாநில சட்டமன்றமும் இவ்விஷயங்கள் குறித்து சட்டம் இயற்றலாம். சில மாநில அரசாங்கள் இத்தகைய சட்டம் இயற்றி உள்ளன. நாம் சட்டம் இயற்றாமல் விட்டு விட்டால் விளைவுகள் என்னவாகும்? எந்த பழக்க வழக்கங்களுக்காக டாக்டர் முகர்ஜி கண்ணீர் வடிக் கிறாரோ அந்தப் பழக்க வழக்கங்கள் பல்வேறு மாநிலங்கள் இயற்றும் சட்டங்களால் வழக் கொழிந்துவிடும். அதனால் பல்வேறு மாநிலங்களிலும் வெவ்வேறு வகையான சட்டங்கள்தான் வழக்கத் தில் இருக்கும். பழக்க வழக்கங்கள்தான் வளர்ச்சி மற்றும் மேம்பாட் டிற்கான ஒரே சாதனமாக இருந்தால் அந்த சாதனம் அழிந்துவிடும். இந்தியாவில் பல்வேறு மாகணங்கள் அல்லது மாநிலங்கள் இருப்பது போல, பல்வேறு வகையான சட்டங்கள் 26 அல்லது 30 தனித்தனியான

சட்டங்கள் இருக்கும். இதனால் இந்து சமுதாயத்திற்கும் நாட்டின் நிலையான தன்மைக்கும் எவ்வகையான பாதிப்பு ஏற்படும் என்று நினைத்துப் பார்க்கும்போது என் நெஞ்சம் பதைபதைக்கிறது. ஏனெனில், நாட்டின் இன்றியமையாத கட்டமைப்பு ஒரு வலுவான சீரான சமுதாயமே ஆகும்.

அடுத்து கலப்புத் திருமணம் குறித்த பிரச்சினையாகும். முந்தைய காலங்களில் ஒரு பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் அதே பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்து அப்பிராந்தியத்திலேயே இறந்து இருக்கின்றனர். அவர்கள் அப்பிராந்தியத்துக்குரிய பழக்க வழக்கங் களை மட்டுமே பின்பற்றி வந்துள்ளனர். ஆனால், இன்று நாம் காண்பது என்ன? இந்த நாடாளுமன்றத்தில், இதன் பார்வையாளர் பீடங்களில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்துள்ள வர்களை நாம் காண்கின்றோம்.

**திரு. காமத் :** ஓர் ஒழுங்கு பிரச்சினை: பார்வையாளர் பீடங் களைப் பற்றி இங்கு குறிப்பிடலாமா?

**திரு. பி.கே.பி. சின்ஹா :** நான் பார்வையாளர் பீடங்களைப் பார்த்து கூறவில்லை. நான் நாட்டை பற்றி பேசும் போது, பார்வை யாளர் பீடங்கள் பற்றியும் பேசலாம்.

நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் இங்கே இருக் கிறார்கள். இந்த மாநகரில் மட்டும் அல்ல. இந்நாட்டின் ஒவ்வொரு முக்கியமான நகரங்களிலும் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர் களையும் நீங்கள் காணலாம். கல்கத்தாவில் திருவாங்கூரிலிருந்து வந்த மக்களைக் காணலாம். திருவாங்கூரில் பீகார் மற்றும் கல்கத்தாவைச் சேர்ந்த மக்களைக் காணலாம். பழக்க வழக்கங்களின் தடைகள் மற்றும் ஆஸ்தீக உணர்வுகள் இருந்த போதிலும், வெவ்வேறு மகாணங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து வாழும் வழிகளைக் கண்டுகொள்கின்றனர். திருமணங்களும் செய்து கொள் கின்றனர். பல்வேறு மாகாண சட்டங்கள் அமலாக்கப்பட நாம் அனுமதித்தால் அத்தகைய திருமணங்கள் செய்து கொள்பவர்களுக் கும் அவர்களின் சந்ததியினர்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பு என்னவாக இருக்கும்? உதாரணத்திற்கு பம்பாயைச் சேர்ந்த ஒருவர் பீகாரைச் சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறார். பின்னர் பீகாருக்குப் போய் அவர் அங்கு மற்றொரு பெண்ணையும் திருமணம் செய்து கொள்கிறார். பம்பாயில் ஒரு தார மணமுறை தான் சட்டப்படி செல்லுபடியாகும். பீகாரில் அவருடைய திருமணம்

என்னவாகும்? அவருடைய குழந்தைகள் பீகாரில் சட்டப்படியான குழந்தைகளாகக் கருதப்படுவர். ஆனால் அவர்கள் பம்பாய் செல்லும் போது அங்கே அவர்கள் சட்ட விரோதமானவர்களாகக் கருதப்படு வார்கள். அவர்களுக்கு சிவில் உரிமைகள் இருக்காது. வேறு வேறு சாதிகள் மற்றும் மாகாணங்களிலிருந்து வரக்கூடிய நூற்றுக்கணக் கான தம்பதியர்களின் கதி என்னவாகும்? அந்தக் குழந்தைகளின் உரிமைகள் என்னவாகும்? விருப்பப்படி நடக்க தனி நபர்களை நீங்கள் அனுமதித்தால், பல முரண்பாடுகள் தோன்றக்கூடும். ஒருவர் புதிய சட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கலாம். அவருடைய தந்தை பழைய இந்து சட்டப்படி நடக்க விருப்பம் தெரிவிக்கலாம். விருப்பம் தெரிவித்தவரின் மகன் புதிய சட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்காமல் இருக்கலாம். அத்தகைய குடும்பத்திற்கு எந்த சட்டங்கள் பொருந்தும்? ஆகையால் என்னுடைய நண்பர்களின் கருத்துகள் பின்பற்றப் பட்டால் இத்தகைய குழப்பங்கள்தான் உருவாகும். இத்தகைய குழப்பங்களை களைய நூற்றுக்கணக்கான நீதிபதிகள் தேவைப்படு வார்கள். ஆகையால் இந்து சமுதாயத்தின் நலனுக்காக அத்தகைய தொரு சட்டத்தைப் பெறாமல் நம்மால் இருக்க முடியாது என்ற நிலையை நாம் அடைந்துள்ளோம் என்று கருதுகிறேன்.

இதற்கு முன்னர் மகாணங்களில் சில கட்டுப்பாடுகள் இருந்தன. சில மாகணங்களில் வாழ்பவர்கள் ஒரு சமூக மரபை பெற்றிருந்தனர். ஒரே சாதியை சேர்ந்த மக்கள், ஒரே மாதிரியான அறிவு வளர்ச்சியையும் ஒரே மாதிரியான கலாசார நெறிமுறை களையும் பெரும்பாலும் பெற்றிருந்தனர். அத்தகைய சூழ்நிலை களில், ஒருவர், தன்னுடைய சாதியைச் சேராத ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால், அவருடைய வாழ்க்கை முற்றிலும் வித்தியாச மான ஒரு வாழ்க்கையாகவே அவருக்கு இருக்கும். ஆனால் இன்று இத்தகைய கலாசார, பொருளாதார மற்றும் அறிவுத்தர வேறுபாடுகள் மறைந்து வருகின்றன. இந்திய சமுதாயம் ஒன்றாக உருவம் பெற்று வருகிறது. இதற்கு முன்னர் ஒரே சாதிக்குள் அல்லது ஒரே மாகாணத்திற்குள் நடைபெறும் திருமணங்களுக்கு ஒருவகை நியாயம் இருந்தது. இப்போது அத்தகைய நியாயம் எதுவும் இல்லை. ஏனெனில், பல்வேறு சமுதாயப் பிரிவுகளின் கலாசாரம் அறிவுத்திறம் மற்றும் பொருளாதாரத் தரம் ஒவ்வொரு பிரிவுக்கும் சமமாகவே வளர்ந்து வருகிறது. மனத இன மேம்பாட்டுக் கொள்கைப் படி ஒருவரது சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொள்வது முந்தைய சூழலில் கெட்டது எனக் கருதப்பட்டது. ஆனால் இன்று இக்கொள்கைகள் முற்றிலும் மாறுபட்ட முறையில் பொருள்

கூறுகின்றன. இந்த மசோதாவை முன்மொழிந்த மாண்புமிகு அமைச்சரும் இது விஷயத்தில் நமக்கு வழிகாட்டுகிறார்.

இந்த சட்டத் தொகுப்பிற்கு எதிராக நாட்டில் நிலவும் தீவிரமான உணர்வுகள் பற்றி டாக்டர் முகர்ஜி பேசினார். நான் ஒரு கிராமவாசி. இன்றைய வாழ்க்கை முறையில் நிலவும் அபிவிருத்தியடைந்துள்ள நகரங்கள் ஒன்றைச் சேர்ந்தவன் அல்ல. இப்பொருள் குறித்து கிராம மக்கள் கொண்டுள்ள மனநிலை எனக்குத் தெரியும். அவர்களின் மனதில் தவறான எண்ணங்கள் உள்ளன என்பதும் எனக்கு தெரியும். அதற்குக் காரணம் என்ன வென்றால், இந்த சட்டத் தொகுப்பை எதிர்ப்பவர்கள் கடந்த ஐந்தாண்டு காலமாக அல்லது அதற்கும் மேலாக தீவிரமான எதிர்ப்பிரசாரம் செய்து வருகின்றனர். ஆனால், அதே நேரத்தில் இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள் மௌனம் சாதித்து வந்துள் ளனர். என்னுடைய பகுதியில் கூட, பெரும்பாலோர் இம்மசோதா வின் ஷரத்துக்களை எதிர்த்தனர். ஆனால் நான் இந்த ஷரத்துக்கள் பற்றி அவர்களிடம் விரிவாக எடுத்து விளக்கிய போது அவர்களில் 70 சதவீதத்தினர் என்னுடைய விளக்கத்தை ஏற்றுக் கொண்டனர் என்று என்னால் இங்கு கூற முடியும். இத்தகைய ஒரு திருத்தம் சமுதாயத்திற்கு தேவை என்பதை அவர்கள் உணர்ந்தனர். மக்க ளிடையே தீவிரமான எதிர்ப்பு உணர்வு உள்ளது என்று டாக்டர் முகர்ஜி கூறியதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்த உணர்வு கள் ஆழமாகவும் பரந்தபட்டவையாகவும் உள்ளன என்று அவர் கூறியதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களின் உணர்வுகள் அறியாமையின் அடிப்படையில் உருவானவை. எதிர்ப்பு பரவி விரிந்துள்ளது என்றும் கூறமுடியாது. ஏனெனில் மக்கள் பெரும்பாலும் இச்சட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல. பணம் படைத்த ஒரு சிலர்தான், தங்களுடைய சொத்து, சுயநலம் ஆகியவற் றிற்காகக் கவலைப்படுகிற ஒரு சிலர்தான் இந்த நடவடிக்கைகளுக் கெதிராக இத்தகைய பிரச்சாரத்தை துவக்கி விட்டுள்ளனர். இத்தகைய சில ஆஸ்தீக மக்களுடன் நான் நெருங்கிப் பேசி இருக்கிறேன். அவர்கள் இந்துக் கொள்கைகள் அல்லது **ரிஷிகள்** அல்லது **ஸ்மிருதிகள்** ஆகியவை பற்றிக் கடுகளவு கூட கவலைப்படுவ தில்லை. அவர்களின் எதிர்ப்பினைக் கிளப்பி இருப்பது சொத்து குறித்த பகுதிகள்தான்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** அதுதான் இப்போது கைவிடப் பட்டுள்ளதே.

**டாக்டர் தேஷ்முக் (மத்திய பிரதேசம்) :** ஆனால் மனைவியும் சொத்துதானே.

**திரு. பி.கே.பி. சின்ஹா:** இவைதான் என்னுடைய விவாதத்தின் மூன்று கூறுகளாகும். இதில் புரட்சிகரமானது எதுவும் இல்லை. நாம் கொண்டுவர உள்ள அனைத்தும் ஏற்கெனவே சட்ட புத்தகங்களில் உள்ளவையே. இரண்டாவதாக, இந்த மசோதா இந்து மதத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு எதிரானவை அல்ல. மாறாக, இது நம்முயற்சிக்கு முழுவடிவம் அளிக்கிறது. சக்கரம் முழுச் சுற்றை முடித்துள்ளது. இந்துச் சட்டம் மீண்டும் தொன்மையும் தூய்மையும் பெறுகிறது. மூன்றாவதாக இன்றைய சூழ்நிலையில் இந்து சமுதாயம் வாழ்ந்து நிறைபெற இச்சட்டம் இன்றியமையாததாகும்.

பீகாரைச் சேர்ந்த என்னுடைய நண்பர்களில் ஒருவரான திரு. சியாம்நந்தன் சகாயா முன்னர் பேசியபோது டாக்டர் ஜெயகர் பற்றி குறிப்பிட்டார். மிக சிறிய பத்தியை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 1951ல் வெளியிடப்பட்ட **பாரதத்தில் இந்து சட்டம்** என்ற புத்தகத்திற்கு மதிப்புரை எழுதுகையில் - இந்த மதிப்புரை 1951ல் எழுதப்பட்டது - இந்த அம்சம் குறித்து - டாக்டர் ஜெயகர் என்ன கூறியுள்ளார்? இந்து சட்டம் பற்றி பொதுவாக அல்ல; நான் குறிப்பிட்ட இந்த அம்சம் குறித்து அவர் கூறுகிறார்:

> ''விரைவில் களையப்பட வேண்டிய சட்டத்தின் ஷரத்துக்களில் இன்று காணப்படும் சில முக்கியமான குறைகளை ஆசிரியர் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை.''

**மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் :** ஆசிரியர் யார்?

**திரு. பி.கே.பி. சின்ஹா:** ஆசிரியர் மற்றொருவர்; ஆனால், மதிப்புரை எழுதியவர் டாக்டர் எம்.ஆர். ஜெயகர் - இவர் ஓர் இந்து சட்ட அறிஞர்; அரசியல்வாதி அல்ல.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** அரசியல்வாதியும் கூட.

**திரு.பி.கே.பி. சின்ஹா :** என்னுடைய நண்பர் திரு. சியாம் நந்தன் சகாயா அரசியல்வாதியான டாக்டர் ஜெயக்கர் பற்றி குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். நான் கற்றறிவாளர் டாக்டர் ஜெயகர் பற்றி குறிப்பிடுகிறேன்.

**திரு. சியாம் நந்தன் சகாயா:** அரசியல்வாதிகள் அறிவாளிகள் அல்ல என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?

**திரு.பி.கே.பி. சின்ஹா:** அவர்களும் அறிவாளிகளே. தம்முடைய முன்னுரையில் டாக்டர் ஜெயகர் தொடர்ந்து கூறுகிறார்:

> "நவீன காலத்தில் இடமாற்றம், பரிவர்த்தனை ஆகிய வசதிகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. வேறுபட்ட சட்ட முறைகளால் நிருவாகிக்கப்படும் பிராந்தியங்களில் பல்வேறு இன மக்கள் ஒன்றாக வாழ்வதற்கு, காலத்திற்கேற்ப பல காரணங்கள் நிர்பந்தம் செய்துள்ளன என்று அவர் அபிப் பிராயம் தெரிவித்துள்ளார். அவைகளின் சட்ட சம்பந்தமான உறவு முறையில் மனித வாழ்க்கையைச் சிக்கலாக்குவதற்கு இவ்வகையான புதிய அம்சங்கள் உடைந்தையாக உள்ளன. நகராட்சி மற்றும் முற்றிலும் உள்ளூர் சம்பந்தமான சூழ்நிலை களை ஒழுங்குபடுத்த உருவாக்கப்பட்ட விதிகள் போதுமானதாக இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது; அல்லது பிராந்தியத்தில் அந்நியர்கள் புகுவதாலும் தங்கி யிருப்பதாலும் ஏற்படும் இத்தகைய பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வகையில்லாமலும்கூட இருக் கிறது. இவ்வாறான புதிய சூழ்நிலைகளை மேற்கொள்ள ஒரு சட்டத் தொகுப்பு ஏற்கனவே தேவைப்பட்டது."

[1]**டாக்டர் தேஷ்முக்:** "பாராட்டுகள், பாராட்டுகள்" என்று கூறி, பேசுவதற்கு நான் எழுந்து நிற்கும்போது நான் இன்று சொல்லப் போவதைக் கேட்டு அனேகமாக ஏமாற்றம் அடைவார்களோ என அஞ்சுகிறேன்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** உங்களுடைய மனம் மாறிவிட்டதா?

**டாக்டர் தேஷ்முக்:** ஆம்; அனேகமாக ஓரளவுக்கு மாறி யுள்ளது.

**ஓர் உறுப்பினர்:** அறிவாளிகள் எப்போதும் அவ்வாறுதான் செய்வார்கள்.

---

1. அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, செப்டம்பர் 17, பக்கங்கள் 2732-38 1951

**டாக்டர் தேஷ்முக்:** நான் பொறுக்குக் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்துள்ளேன். இக்குழுவின் அறிக்கையுடன், என்னுடைய கருத்து வேறுபாட்டுக் குறிப்பு ஒன்றையும் இணைத்துள்ளேன். ஆனால் அதில் நான்கு கருத்துக்கள்தான் உள்ளன. அந் நான்கு கருத்துக்களோடு, இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ள அனேக ஷரத்துக்களுடன் எனக்கு உடன்பாடு உண்டு என்பதை என்னுடைய குறிப்பு தெரிவிக்கின்றது. நமக்கு முன்னால் ஒருசில வேறுபட்ட இலட்சியங்கள் இருக்கும்போது, இந்து சமுதாயத்தின் முழு அமைப்பினைத் திருத்துவதற்கும் தீவிரமாக மாற்றுவதற்கும் உரிய தருணம் வரவில்லை என்று நான் எப்போதும் உணர்ந்துள்ளேன். இந்து சமுதாயம் பரந்து கிடக்கும் நம் நாடு பெரியது. மக்கள் பெருக்கம் மிக்க பெரிய சமுதாயம் இந்து சமுதாயம். நமக்கு கல்வி அறிவு இல்லை; படிக்காதவர்கள் அதிகம். இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, இந்து சமுதாயத்தைப் பெரிய அளவில் அல்லது புரட்சிகரமாக திருத்துவதற்கு நீங்கள் விரும்பினால், இத்தகைய மாற்றங்களைப் புரிந்துகொள்ள இயலாத மக்கள் பெரிதும் இன்னல்பட வேண்டியதிருக்கும். இக்கருத்தின் அடிப்படையில், இந்து சட்டம் சம்பந்தப்பட்ட வரை தேவைப்படும்போதும் சில சூழ்நிலைகள் ஏற்கும் போதும் சமுதாய அமைப்பில் நாம் அறிமுகம் செய்ய விரும்புகின்ற திருத்தங்களைப் புரிந்து கொள்கின்ற திறன் பொதுமக்களுக்கு இருக்கின்றபோதுதான் இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும்.

எனவே இந்து சட்டத்தைத் தொகுப்பது மட்டும் நமக்கு உதவி செய்யாது; இந்து சமுதாயம் முழுவதையும் சீர்திருத்த வேண்டுமென்பது உங்களுடைய ஆசையாக இருந்தாலன்றி, அவ்வாறு செய்வதற்கான சமயம் இன்னும் வரவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். பிரிவு கவுன்சில் மற்றும் உயர்நீதிமன்றங்கள் அளித்துள்ள விளக்கங்கள்படியும், **ஸ்மிருதிகள்** வரையறுத்துள்ளபடியும் இந்து சட்டம் ஓரளவுக்கு தெளிவாகவுள்ளது. சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். விளக்கமளிப்பதில் சில முரண்பாடுகளும் இருக்கக் கூடும். ஆனால் அவைகளைப் புரிந்துகொள்ள முடியும். கடந்த 150 ஆண்டுகளாக நமக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டுத்தான் உள்ளது. இதனால் பெரிய துன்பமோ அல்லது இடையூறுகளோ ஏற்பட்டதில்லை.

**திரு. லட்சுமணன்** (திருவாங்கூர் - கொச்சி) : ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இப்போது நாம் பொது விவாதம் செய்கிறோமா அல்லது கூறு 2 பற்றி விவாதிக்கிறோமா?

**மாண்புமிகு அவைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து அவர் முற்றிலும் சரியாகவே பேசுகிறார்.

**டாக்டர் தேஷ்முக் :** இக்கூறு பற்றிய விவாதத்தைப் பொறுத்த வரை, நான் கூறுவது பொருத்தமானதாகவே உள்ளது. ஓர் இலட்சியம் என்ற முறையில் நவீன காலத்திற்கேற்ப சமுதாயத்தைத் திருத்தவும், சட்டம் முழுவதையும் மாற்றவும் நாம் முயற்சி செய்தால், அது இங்கு நாம் செய்யும் முயற்சிக்கு மாறுபட்டதாகவே இருக்கும் என்பது தான் நான் குறிப்பிட்டுக் கூறுவதாகும். அதுவும், இங்கு நாம் தற்போது செய்வதும் கூட, இந்து சமுதாயத்தினை முழுவதும் மாற்றும் சாதனமாக இந்து சட்ட தொகுப்பு மசோதா உள்ளது என்று நான் கருதவில்லை. சில மாற்றங்களுடன் தற்போதுள்ளவற்றைத் தொகுக்கத்தான் நாம் முயற்சி செய்கிறோம். ஏனெனில், தற்போது இந்த நவீன யுகத்தில் புதுப்புது கருத்துக்களை உண்மையிலே பின்பற்ற நாம் விரும்பினால் தனியார் சொத்துரிமை என்பது நெடுங்காலம் நிலைத்திருக்கும் என்று நான் கருதவில்லை. எனவே, சொத்துரிமைச் சட்டத்தை விவாதிப்பதாலும், இது 'மிதாக்ஷரா' அல்லது 'தாயபாகா' முறைப்படி உள்ளது என்று வாதிப்பதாலும் அல்லது தலைமகனுக்குச் சொத்துரிமை கொள்கை போன்ற வேறு சில அம்சங்கள் பற்றி விவாதிப்பதாலும் என்ன பயன் ஏற்படப் போகிறது? தற்போது நம்மைக் கட்டுப்படுத்தும் இந்து சட்டம் மக்கள் அனைவரும், இந்து சமுதாயம் முழுவதும் அறிந்துள்ள சட்டம் எனப் போதுமான அளவு அறியப்பட்டு உள்ளவரை, சமுதாயம் மீது அதிகாரம் செலுத்துகின்ற சட்டம் முழுவதையும் புரட்சிகரமாக மாற்றுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்று தனிப்பட்ட முறையில் உணர்கிறேன். ஏனெனில், அவ்வாறு செய்வது இப்போதுள்ள இடையூறுகளைக் காட்டிலும் அதிகமான இடையூறுகளைத்தான் அது விளைவிக்கும். அதே நேரத்தில் இப்போதுள்ள இத்தகைய இடையூறுகள், தொந்தரவுகள், துயரங்கள் யாவும் நீக்கப்பட வேண்டுமென்பதை ஆதரித்தும், வலியுறுத்தியும் வந்துள்ளேன்; இத்தகைய தொந்தரவுகளால் மனிதனது துயரங்கள் அதிகரித்துள்ளன. இவற்றைப் பொறுத்தவரை இந்த மசோதாவை ஒவ்வொரு உறுப்பினரும் ஆதரிக்க வேண்டுமென்று நினைக்கிறேன்; நமது சமுதாய அமைப்பு பாதிக்கப்படும் என்று எங்கெங்கு கண்டறியப்படுகிறதோ, இடைஞ்சல்களுக்கும், இடையூறுகளுக்கும் அது எங்கெங்கு இடமளிக்கிறதோ, அங்கெல்லாம் அத்தகைய சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்; எத்தகைய பழமை முறையுடனும் உடன்பாடு கூடாது.

பிற்பகல் 1 மணி

**திரு. காமத் :** உறுப்பினர் பேசுவதை நாம் கேட்க விரும்பினாலும், ஒரு மணி அளவில் அரைமணி நேர விவாதம் ஒன்று நடைபெற உள்ளது.

**திரு. அவைத் தலைவர் :** அது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. காமத்:** நமக்கு முன் அறிவிப்பு எதுவும் கொடுக்கப் படவில்லை.

**திரு. அவைத் தலைவர் :** இதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் தேஷ்முக் :** இடையூறுகளைக் களைவதைப் பொறுத்தவரை, இம்மசோதாவை ஆதரிப்பவர்களைக் காட்டிலும் நான் ஒருபடி மேலே செல்லவும் தயாராக உள்ளேன். பலதார மணத் தடை, ஏகதாரம் அறிமுகம், அமலாக்கம் ஆகியவை பெரிதும் விரும்பத்தக்க சீர்திருத்தங்கள். இந்து சமுதாயம் சட்ட அடிப்படையில் மணமுறிவுக்கு வழிவகை செய்ய வேண்டிய தருணம் இது. சில கட்டுப்பாடுகள் புகுத்தப்படலாம். ஆனால், நம்முடைய கவனத்திற்கு வரும் சில உண்மைகள், நிகழ்வுகள் குறித்து நாம் கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது. அதனை வைதீகர்கள் மற்றும் சநாதன நண்பர்கள் விரும்ப மாட்டார்கள். உண்மையிலே, அவர்களில் பலர் எத்தகைய மாற்றத்தையும் விரும்புவதில்லை. துரதிர்ஷ்டவசமாக இது தான் உண்மை நிலை. இப்போது நான் ஒரு தவறான எண்ணத்திற்கு விளக்கமளிக்க வேண்டும். எல்லா வகையிலும் ஒவ்வொரு அம்சத்திலும் தீவிரமாக இம்மசோதாவை எதிர்ப்பவனாக சில சநாதன நண்பர்கள் கருதுகின்றனர். எனவேதான், என்னுடைய உரையின் துவக்கத்தில் நண்பர் பண்டிட் முகுத் பீகாரி லால் பர்கவா இன்று நான் பேசப் போவதை அனேகமாக வரவேற்க மாட்டார் என்று குறிப்பிட்டேன். இருப்பினும், இவ்விரண்டு அம்சங்கள் மட்டுமே இந்த ஷரத்துக்களில் அமைந்திருக்க வேண்டும்.

மேலும், நம்முடைய விதவைகளின் நிலையை அபிவிருத்தி செய்யக் கூடிய சில ஷரத்துக்கள் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மனிதாபிமானமற்ற இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ள பலரை எனக்குத் தெரியும். விதவைகள் சொத்துரிமை பொறுத்தவரை, பல மசோதாக்கள் இதற்கு முன்னர் கொண்டுவரப்பட்டன. சில

சட்டங்களையும் நிறைவேற்றியுள்ளோம். ஆனால், என்னைப் பொறுத்தவரை, யாருக்காக அவைகள் உருவாக்கப்பட்டனவோ, அவர்கள் அதனால் எவ்விதப் பயனும் அடையவில்லை. அவர்கள் சம்பந்தப்பட்டவரை, சில ஷரத்துக்களை அவர்களுக்காக நாம் சேர்க்க வேண்டுமென்று அவையின் உறுப்பினர்களை வேண்டிக் கொள்கிறேன்.

**திரு. பாரதி :** அதுபற்றி இப்போது நாம் விவாதிக்கவில்லை.

**டாக்டர் தேஷ்முக் :** இத்தகைய பிரிவினரை நமது பரிசீலனையிலிருந்து விட்டுவிடுகிறோம் என்றும், இவ்விஷயங்கள் பற்றி மட்டும் - அதாவது திருமணம் மற்றும் மணமுறிவு - நாம் விவாதிப்போம் என்றும் எவ்வித அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதா என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில், நான் அவையில் இல்லை; என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது.

**திரு. பாரதி :** அதுபற்றி நாம் விவாதிப்பதாக இல்லை.

**திரு. அவைத் தலைவர் :** உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும்.

**டாக்டர் தேஷ்முக் :** ஒரு மனிதன் ஒரு நேரத்தில் ஒரே மனைவியைத்தான் வைத்திருக்க வேண்டுமென்னும் சட்டத்தை நிறைவேற்றுவது பற்றிதான் நாம் விவாதிக்க வேண்டுமென உத்தேசிக்கப்பட்டிருந்தால், நான் பெரிதும் ஆட்சேபனை செய்ய மாட்டேன். என்னுடைய நண்பர் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி கூறியது போல், தானாகவே மடிந்து வரும் ஒரு பொருள் பற்றி பெரியதாகப் பேசப்படுகிறது. இன்றைய வாழ்க்கைப் போராட்டமும், செயல்பட்டு வரும் பொருளாதார சக்திகளும் விரும்பப் படுகின்ற மாற்றத்தைக் கொண்டு வருகின்றன. எனவே, இது தேவைப்படுகின்ற ஒரு சீர்திருத்தமாக இருந்தாலும், இதற்காக சிலர் உயிரையும் விடத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் கருதவில்லை.

விவாகரத்தை பொறுத்தவரை, அதற்குச் சாதகமாக பெரிதும் பேசலாம் என்று நினைக்கிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இந்த ஷரத்து ஏற்கப்பட வேண்டும். பல உறுப்பினர்கள் கூறியது போல், இது ஓர் அனுமதிக்கப்பட வேண்டிய சீர்திருத்தமாகும். விவாகரத்திற்காக வழிவகை செய்வதால் மட்டும் -

சாதாரணமாக இத்தகைய வழிவகை இருப்பதால் மட்டும் - ஒவ்வொருவரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி விவாகரத்துப் பெறுவார்கள் என்று கூற முடியாது.

இப்போதைய நிலை என்ன? சில மாநிலங்களில் - உதாரணமாக பரோடாவில் - விவாகரத்து அனுமதிக்கப்படுகிறது. தமக்குள்ளே ஒத்துப் போக முடியாத பலர், அல்லது இதர காரணங்களுக்காக இணைந்து போக முடியாதவர்கள் பரோடாவுக்குச் சென்று, சில காலம் அங்கு தங்குகின்றனர். அம்மாநில குடிமக்கள் என்ற ஒருவகையான சான்றிதழைப் பெற்றுக் கொண்டு, தங்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். திருமணமான தம்பதியர் ஒத்துப் போக முடியாவிட்டால், - ஏதாவது காரணம் இருக்கலாம் - அவர்களில் ஒருவர் ஒரு நோயால் வாடலாம் - அல்லது அவர்கள் உறவு சீர்கெட்டுப் போகும் இதர பல காரணங்கள் இருக்கலாம்; அதனால் தனியாகப் பிரிந்து செல்ல கூடியவர்களாக இருக்க கூடும். இன்றைய சூழ்நிலையின்கீழ் இந்த சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது மனிதாபிமான எண்ணமாகும். தனி நபர் ஒருவர் விவாகரத்து பெற்றுப் பிரிந்துபோகும் உரிமை வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில், விவாகரத்தைப் பொறுத்த வரை, அத்தகைய வழிவகை செய்வது விரும்பத்தக்கதாகும். ஆனால் ஒரு விஷயத்தில் டாக்டர் அம்பேத்கருடன் எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. அதாவது வழக்கமாக உள்ள விவாகரத்தை அங்கீகரிக்காததே அது. அவர் விரும்புகிறார் எல்லா விவாகரத்து வழக்குகளும்.....

**திரு. ஆர்.கே. சௌதுரி :** எனக்கு ஒரு விளக்கம் தேவை. ஆஸ்தீக திருமணங்கள் விவாகரத்துப் பெறுவதையும் அதே நேரத்தில் அத்தகைய திருமணங்கள் தொடர்வதையும் உறுப்பினர் விரும்புகிறாரா?

**டாக்டர் தேஷ்முக்:** எவ்விதமான இடையூறும் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இப்போதும்கூட ஆஸ்தீக திருமணங்கள் பல ரத்தாகின்றன. இது பல சமுதாயங்களிலும், இந்து சட்டத்தின் படியும் நடைபெறுகின்றன. பின்தங்கிய வகுப்புகள் என்று சொல்லப் படுகின்ற, உண்மையிலேயே இதர சமுதாய மக்களைவிட முன்னேறியுள்ள மக்களிடையே நடைபெறும் திருமணங்கள் ஆஸ்தீகமானவை அல்ல என்று யார் கூற முடியும்? வழக்கத்தால் அவை அங்கீகரிக்கப்பட்டவை; அவர்களிடையே உள்ள விவாகரத்தும் வழக்கத்தாலும், சாதி பஞ்சாயத்தாலும் அங்கீகரிக்கப்

பட்டவை. இவையாவும் ஒரு கட்டுமுறை மூலம் நடைபெற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் விரும்புகிறார். அவ்வாறு செய்தால், வழக்கறிஞர்கள் தேவை; பலவிதமான சாட்சிகளை முன்நிறுத்த வேண்டும். இம்முறை முழுவதும் இத்தகைய மக்களுக்கு இடையூறாகவே இருக்கும்.

**டாக்டர் அம்பேத்கர்:** வழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட திருமணங்களும் இருக்கட்டும்.

**டாக்டர் தேஷ்முக் :** இப்போதுள்ள குறைகளை நீக்குவதற்கு மட்டும் இம்மசோதாவின் ஷரத்துக்கள் வரையறுக்கப் பட்டால், மேற்கொண்டு எதுவும் நாம் செய்யவில்லையென்றால், இதை ஆதரிக்க நான் தயாராக இருக்கின்றேன். இந்தியாவிலுள்ள ஒவ்வொருக்கும் இது பொருந்துவதாக ஆக்கப்படப் போவதில்லை என்பதால், இது இந்துக்களுக்கும் பொருந்துவதாக இருக்கக்கூடாது என்று நான் சொல்ல மாட்டேன். இதை ஒரு பெரிய பிரச்சினையாக நான் எழுப்பியுள்ளேன். ஏனெனில், இந்து சமுதாயம் முற்றிலும் புரட்சிகரமாக மாற்றப்படுவதற்காக இம்மசோதா கொண்டுவரப் பட்டிருந்தால், இந்தியாவிலுள்ள அனைவருக்கும் ஷரத்துக்கள் யாவும் பொருந்துவதாக ஏன் நாம் அமைக்கக் கூடாது என்று எண்ணினேன். ஆனால், இது ஒருவகை சீர்திருத்தமாக உத்தேசிக்கப் பட்டிருப்பதாலும், குறிப்பாக ஒரு சில பிரிவு மக்களுக்குத்தான் பொருந்துவதாக உள்ளதாலும், இக்கருத்து பற்றி எனக்கு எவ்வித கோபமும் இல்லை.

**டாக்டர் முகர்ஜி:** மக்களின் விருப்பத்திற்கு ஏன் இதை விட்டுவிடக் கூடாது என்று ஒருபடி முன் சென்று கேட்டுள்ளார். அத்தகைய வழியை நாம் மேற்கொள்ளுவதாக இருந்தால், சமுதாயம் விரும்புகிற சிறிய சீர்திருத்தத்தைக் கூட நாம் செய்ய முடியாது. இதர பல அம்சங்கள் சம்பந்தப்பட்டவரை அவர் நியாயமாக இருந்தும், அவர் ஏன் இத்தகைய கருத்தைக் கொண்டுள்ளார் என்று தெரியவில்லை. மாற்றம் எதுவும் தேவையில்லை என்ற உணர்வு இதில் காணப்படுகிறது. இந்தியாவிலுள்ள அனைத்து சமுதாயத்திற்கும் ஏகதார முறை பொருந்துவதாக ஆக்கப்பட்டால், விவாகரத்து ஷரத்துக்கள் எல்லாவற்றையும் அவர் ஆதரிக்கத் தயாராக உள்ளார். அவ்வாறு கூறுவது நியாயமானதாகத் தோன்றினாலும், சட்டத் தொகுப்பினை நிறைவேற்றுவதற்கு உதவிபுரிவதை விட, முட்டுக் கட்டை போடும் தந்திரமாகவே அது தோன்றுகிறது. இந்து சமுதாயத்தில் குழப்பம் உண்டுபண்ணாத புரட்சிகரமான சீர்திருத்தத்தை

விரும்பு பவர்களில் நானும் ஒருவன். குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியதான ஷரத்துக்கள் இல்லை. ஏனெனில் விவாகரத்தை ஒவ்வொரு வரும் விரும்ப வேண்டியதில்லை அதாவது இந்த ஷரத்தினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுமில்லை. கணவனும் மனைவி யும் சொல்லெண்ணத் துயரங்கள் அனுபவிப்பதும், தனித்துப் பிரிந்து விடுவதை விரும்புவதுமான எண்ணற்ற வழக்குகள் இருக்கின்றன. அத்தகைய வழக்குகள் சம்பந்தபட்டவரை அவர்கள் பிரிந்து செல்லு வதற்கான வழிவகை செய்கிறோம். கடந்த காலங்களில் திருமணம் என்பது புனிதமானது என்றும் ஓர் ஒப்பந்தம் அல்ல என்றும் கருதப் பட்ட காரணத்தால் அத்தகைய விஷயங்களில் தலையிட வேண்டு மென்று நான் கருதவில்லை. புனிதமான திருமணங்களையும் வழக் கத்தின் அடிப்படையில் முறித்துவிடலாம் என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன். புனிதமான திருமணத்தை அங்கீகரிப்பது, வழக்கத் தின் அடிப்படையிலான திருமணத்தை அங்கீகரிப்பதுதான்; ஏனெனில் அது வழக்கத்தின் நியதிக்குட்பட்டதாகும். திருமணங்களில் பலவகை உண்டு. சில வகை திருமணங்களில் **சப்தபதி** உண்டு. வழக்கத்தின் அடிப்படையிலான திருமணம் பற்றி நான் கூறும் திருத்தம் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று நம்புகிறேன். முதலில் அனைத்து வழக் கங்களும் நீக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. அந்நிலையி லிருந்து டாக்டர் அம்பேத்கர் தன்னை திருத்திக் கொண்டுள்ளார் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் அவர் அதை திருத்த வேண்டியதிருக்குமென நினைக்கிறேன். தன்னுடைய கருத்து ஒன்றை விளக்க வேண்டியது இருந்தபோது, அவர் சொன்னார்: வழக்கம் என்று சொல்லப்படுவது, அறிவுபூர்வமாகவும், நியாயமான தாகவும், இதர சில தேவைகளை நிறைவு செய்வதாகவும் இருக்க வேண்டும். நியாயமானது என்பதன் தரங்களுக்கேற்ப வழக்கம் என்பது இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நியாய மானது என்பது என்ன? அது சமுதாய பிரிவுகளுக்குப் பிரிவு, மனித னுக்கு மனிதன் மாறுபட்டதாக இருக்கக்கூடும். நியாயமானது என்று டாக்டர் அம்பேத்கர் கருதுவது, காமத் அல்லது பண்டிட் எம்.பி. பர்கவாவுக்கு முற்றிலும் நியாயமற்றதாக இருக்கலாம்.

**திரு. காமத்:** எல்லோரையும் நீங்கள் ஒன்றாகச் சேர்த்துக் கூறுகிறீர்களா?

**டாக்டர் தேஷ்முக் :** ஆ, இல்லை! ஒன்றாக இணைத்து அல்ல; தனித்தனியாகவே. வழக்கம் என்ற கருத்தின்படி, டாக்டர் சற்று அதிகமாகவே சொல்ல வேண்டுமென கேட்டுக் கொள்வேன்;

ஏனெனில் வழக்கம் என்பதற்கு ஒரு வரலாறு உண்டு; அதனை நியாயத்தின் அடிப்படையில் வாதிட முடியாது. வழக்கம் என்பது மோசமானது என்றுதான் இம்மசோதாவின் மூலவர்கள் கருதினர். அதனால்தான் எல்லா வழக்கமும் மோசமானது என்றும், எச்சூழ்நிலையிலும் வழக்கம் என்பது அங்கீகரிக்கப்பட மாட்டாது என்றும் வகை செய்திருந்தனர். சட்டத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஷரத்துக்களின்படி சமுதாயம் முழுவதும் நிருவகிக்கப்பட வேண்டியதுள்ளது; அதிலிருந்து மாறுபட்டவை அங்கீகரிக்கப்பட மாட்டாது. அதிர்ஷ்ட வசமாக, வழக்கத்தை அங்கீகரிக்கத் தயாராக உள்ள நிலைக்கு நீங்கள் வந்துள்ளீர்கள். ஆனால் எந்த அளவுக்கு என்பது இப்போதைய கேள்வியாகும். ஒரு வகையில், அது நியாயமானதாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்; ஆனால் பலவகைகளில் அது வார்த்தைகளில் முரண்பட்டதாக உள்ளது.

**டாக்டர் அம்பேத்கர் :** ஏன்?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் அது நியாயமானதாக இருக்க வேண்டும்.

**டாக்டர் தேஷ்முக் :** வழக்கமான திருமணத்தில் மணமக்கள் நெருப்பைச் சுற்றி ஏழு அடிகள் எடுத்து வைக்க வேண்டுமென்பது இன்றியமையாத ஒரு சம்பிரதாயமாகும். இதில் எவ்விதமான நியாயம் இருப்பதை என்னால் காணமுடியவில்லை. அது என்ன காரியத்தை சாதிக்கிறது? திருமணத்தைப் பொறுத்தவரை அது (அந்த வழக்கம்) எவ்விதம் உதவுகிறது?

**திரு. காமத் :** இது அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.

**டாக்டர் தேஷ்முக் :** அம்மாதிரியே....

**திரு. அவைத் தலைவர் :** உறுப்பினர் தமது உரையை தொடர உள்ளாரா?

**டாக்டர் தேஷ்முக் :** ஆம், தலைவர் அவர்களே, சற்று அதிக நேரம் நான் எடுத்துக் கொள்வேன்.

*(அதன் பின்னர் 1951 செப்டம்பர் 18, செவ்வாய்க் கிழமை அன்று எட்டரை மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது).*

## *இந்து சட்டத் தொகுப்பு (தொடர்ச்சி)

### கூறு 2 (சட்டத் தொகுப்பை பொருந்துறச் செய்தல்)

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பொறுக்குக்குழு அறிக்கைப் படி, இந்து சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்தவும், தொகுக்கவுமான மசோதாவை மேற்கொண்டும் இந்த அவை பரிசீலனை செய்யும்.

**டாக்டர் தேஷ்முக்** (மத்திய பிரதேசம்) : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நேற்று என்னுடைய உரையை முடிக்காது விட்டதற்கும் இப்போதைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் கருத்தை ஏற்றுக்கொள்ளாத இரண்டு நேர்த்தியான பெண்கள்......

**திரு. சோந்தி** (பஞ்சாப்) ''நேர்த்தியான பெண்கள்'' என்பதன் பொருள் என்ன?

**டாக்டர் தேஷ்முக் :** பண்புள்ள மற்றும்....

**திரு. சோந்தி :** நவீன பெண்கள் என்று நீங்கள் சொல்லலாம்.

**டாக்டர் தேஷ்முக் :** நாம் வழக்கமாகப் பார்ப்பதுபோல் அத்தகைய நவீனமானவர்கள் அல்ல.

நான் கூறுவது போல் இப்பெண்கள் தங்களுடைய கருத்துக்களை தீவிரமாகவும், உண்மையாகவும் என்னிடம் கூறினார்கள். இச்சட்டமுன் வடிவ வரைவை வேறு கோணத்தில் அவர்கள் பார்க்கிறார்கள் என்பது தெளிவாகிறது. தங்களுடைய கருத்தை போதுமான வகையில் பிரதம அமைச்சர் பரிசீலனை செய்யவில்லை என்றும், அவரிடம் நேரில் தங்கள் கருத்தையும் உள்ள உணர்வுகளையும் தெரிவிப்பதற்குத் தடை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றன என்றும் என்னிடம் குறை கூறினார்கள். பிரதம அமைச்சர் அவையில் இருப்பதால் இதைக் கூறுகின்றேன். இக்குற்றச்சாட்டு உண்மையானால், இப்போதும் காலம் கடந்துவிடவில்லையென்றால், பிரதம அமைச்சரை நேரில் கண்டு, தங்கள் கருத்தினை அவரிடம் கூறுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்றால், நான் அதற்கு நன்றி கூற

---

★ அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 18, பக்கங்கள் 2742-50.

கடமைப்பட்டவனாவேன். விவாகரத்து, ஏகதாரம் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் உட்பட, இந்து சட்டத் தொகுப்பினை எல்லா வடிவத்திலும் அல்லது அமைப்பிலும் அவர்கள் முழுமையாக எதிர்க்கிறார்கள். இந்து தத்துவம், இந்து மதம் மீது இது ஒரு தாக்குதல், இதனால் யாருக்கும் நன்மை இல்லை என்று கூறுகிறார்கள். அடிப்படையில் இவை புரட்சிகரமான மாற்றங்கள்; சில சக்திகள் இவற்றை ஆதரிக்கின்றன என்பது அவர்களுடைய வாதமாகும்.

**சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்):** நான் தெளிவுபெறும் வகையில் ''அவர்கள்'' என்ற வார்த்தையை உறுப்பினர் என்ன பொருளில் கூறுகிறார் என்று அறிய விரும்புகிறேன். அவருடைய வாக்கியத்தின் முற்பகுதியை நான் கேட்கவில்லை.

**ஓர் உறுப்பினர் :** இரண்டு நேர்த்தியான பெண்கள் என்று அவர் கூறினார்.

**திருமதி துர்க்காபாய் :** (சென்னை : மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நன்மை கருதி, இப்பெண்மணிகளின் பெயர்களை உறுப்பினர் தெரிவிப்பாரா? ஏனெனில், அத்தகைய கருத்தினைக் கொள்ளாத பல பெண்களையும் அது குறிக்கும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இரண்டு பெண்கள் உலகத்தின் பிரதிநிதிகளாக இருக்க முடியாது.

**டாக்டர் தேஷ்முக் :** இங்குள்ள என்னுடைய படித்த சகோதரி இந்த அவையின் உறுப்பினராக இருக்க உரிமை கொண்டாடுவது போல், அவர்களும் பிரதிநிதிகள்தான். மேலும், ஐயா, இங்குள்ள என்னுடைய சகோதரியின் கருத்துடன் உடன்பாடு உள்ள அவருடைய மனப்பாங்குள்ள பலரை தங்களுடைய விவாதத்தின்போது மனமாற்றம் செய்துள்ளதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர். விவாகரத்தை அப்பெண்கள் எதிர்க்கிறார்கள்; ஏனெனில் அவர்கள் கூறுகிறார்கள்....

**பிரதமர் மற்றும் வெளி உறவு அமைச்சர் (திரு. ஜவஹர்லால் நேரு) :** அவர்கள் யார்?

**டாக்டர் தேஷ்முக்:** ஐயா, இவ்வாறு தலையிடுவதால், பிரதம அமைச்சர் அப்பெண்களைச் சந்திக்கவில்லை என்பதை அவர் ஒத்துக்கொள்கிறார்.

**திரு. ஜவஹர்லால் நேரு :** அவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது.

**டாக்டர் தேஷ்முக் :** இந்தியாவின் மகளிர் கழகம் என்பது ஒன்று உள்ளது; மற்றும்.....

**திருமதி துர்க்காபாய் :** ஆம், அதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. இவ்விரண்டு பெண்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.

**உணவு - வேளாண்மைத் துறை துணை அமைச்சர் (திரு. திருமல ராவ்):** இந்த அவையின் உறுப்பினர்களல்லாத இருவரை அவர் குறிப்பிடுகிறார். அவர்களுக்காக அவரால் எதுவும் கூற முடியாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அவர்களுக்காக சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ எதுவும் கூறத் தேவையில்லை.

**டாக்டர் தேஷ்முக் :** ஒரு மகளிர் கழகம் இருப்பதாக திருமதி துர்க்காபாய் ஒத்துக் கொண்டது குறித்து எனக்கு மகிழ்ச்சி.....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இம்மசோதா குறித்து பற்பல அபிப்பிராயங்கள் உள்ளன. அவற்றைக் கூற மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. சில பெண்கள் அவரிடம் வந்து முறையீடு செய்திருக்கக் கூடும் என்ற அபிப்பிராயமும் உண்டு. மேலும் அவர்களைப் பற்றி குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. அவர்களின் அபிப்பிராயத்தை ஏற்பதும் அல்லது ஏற்காததும் குறித்து அவைதான் முடிவு செய்ய வேண்டும். அடிக்கடி இரண்டு பெண்கள் என்று கூறுவதற்குப் பதிலாக, தான் ஆதரிக்கவோ அல்லது விவாதிக்கவோ விரும்புகிற விஷயத்தை உறுப்பினர் குறிப்பிட்டுப் பேசலாம்.

**திரு. ஜவஹர்லால் நேரு:** இதில் உள்ள சிரமம் என்னவென்றால் என்னைப் பற்றி அவர் குறிப்பிட்டதாகும். எனக்கு தெரியாத பகுதிகளைச் சேர்ந்த எனக்கு முன்பின் தெரியாதவர்களை நான் அறியாத வர்களை சந்திக்க வேண்டுமென்றும் விரும்புகிறார். என்னால் அது எப்படி முடியும்?

**டாக்டர் தேஷ்முக் :** அவர்கள் பிரதம அமைச்சர் முன்வரும் போது, அவர்கள் தெரியாதவர்களாகவும், பார்க்கப்படாதவர்களாக வும் இருக்க மாட்டார்கள்.

**திரு. கருணாகர மேனன் (சென்னை):** அவர்கள் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களா? அல்லது அறுபதுக்குக் குறைந்த வர்களா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இவ்விரண்டு பெண்களுக் கும் பிரதம அமைச்சர் பேட்டியளிக்கவில்லை என்பது புரிகிறது. பெயர்களைக் கூற உறுப்பினர் விரும்பாவிட்டால், எழுத்து மூலம் தெரிவிக்கலாம்.

**திருமதி துர்க்காபாய்:** பெயர் குறிப்பிடப்பட அவர்கள் விரும்பவில்லை என்றால்.

**டாக்டர் தேஷ்முக் :** அப்படி அல்ல. மாறுபட்ட கருத்துள்ள வர்கள் பெண்கள் என்று கூறியவுடன் இங்குள்ள நமது சகோதரிகள் பதட்டம் கொள்கின்றனர் (குறுக்கீடுகள்) என்னைப் பார்க்க வந்த பெண்கள் மட்டுமல்ல, பல பெண்கள் அகில இந்திய பெண்கள் சங்கத்திலிருந்து ராஜிநாமா செய்துள்ளார்கள் என்பதும் இவர் களுக்குத் தெரியும்.

**பல உறுப்பினர்கள் :** அவர்கள் யார்? (குறுக்கீடு)

**டாக்டர் தேஷ்முக்:** நான் அவர்களின் பெயர்களைக் கொடுப் பதோடு மட்டுமல்லாமல், அந்தப் பெண்களை உங்கள் முன்னால் நிறுத்தினால், நீங்கள் அனேகமாகப் பயந்து போய்விடுவீர்கள். அவர்கள் எண்ணிக்கை அவ்வளவு அதிகமானது; எனவே அவர் களின் பெயர்களைக் குறிப்பிடுவது இயலாத காரியமாகும்.

**திரு. சித்வா (மத்திய பிரதேசம்):** அவர்களை யாருக்கும் தெரியாது. அரசியல் சாசன மாளிகையில் நேற்று அவர்கள் ஆதரவு திரட்டிக் கொண்டிருந்தனர்.

**டாக்டர் தேஷ்முக்:** அவர்களில் இருவரை நேற்று நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.

**திரு. சித்வா :** அவர்கள் எனக்குத் தெரியாத பெண்கள்.

**டாக்டர் தேஷ்முக்:** அவர்களைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர் இருக்கையில் அமரவும். இது சர்ச்சைக்குரிய விஷயமாகும். இதற்கு ஆதரவாக பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயம் இருக்கிறது. எதிரான அபிப் பிராயம் நிலவுகிறது. யாருக்கும் தெரியாத பெண்களைப் பற்றியும், ஆண்களைப் பற்றியும் பேசுவதில் பயன் எதுவுமில்லை. அவ்வாறு செய்வது அவையின் நடவடிக்கைகளுக்கு மதிப்பைப் பெருக்காது. இவ்விரண்டு பெண்கள் பற்றி உறுப்பினர் ஓயாது குறிப்பிட வேண்டியதில்லை. இருவர் மட்டுமல்ல, இரண்டாயிரம் பேர் இம்மசோதாவுக்கு எதிராக உள்ளனர். மற்றொரு அணியில் இருபது இலட்சம் பேர் உள்ளனர். எனவே, ஆதரவாகவும், எதிர்ப்பாக வும் கருத்து உள்ளது. விருப்பு வெறுப்பின்றி மசோதாவை நாம் விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். இச் சபையின் மதிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் எதையும் நாம் சொல்ல வேண்டாம். யாருக்கும் தெரியாத பெண்கள், ஆண்கள் என்ற சொற்றொடர்கள் நாடாளுமன்ற முறை சார்ந்ததாக அனேகமாக இல்லை என்று சொல்லலாம். மீண்டும் மீண்டும் இரண்டு பெண்கள் என்ற வார்த்தைகளைக் கூறி, உறுப் பினர்கள் இவ்விஷயம் பற்றித் தொடர்ந்து பேசவேண்டாம்.

**டாக்டர் தேஷ்முக்:** குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால், அவ்வாறு செய்வதில் எனக்கு ஆசை எதுவுமில்லை. ஐயா, அவையில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திருத்தங்கள் பற்றி இப்போது நான் பேசுகிறேன். இம்மசோதாவை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக பல மாற்று யோசனைகளை எனது நண்பர் டாக்டர் முகர்ஜி கூறினார். அவைகளில் ஒன்று விருப்பத்திற்கு விட்டுவிடும் ஷரத்துக்கள். மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தலாம் என்றும் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. வாக்கெடுப்பில் பெரும்பான்மையினர் சட்டத் தொகுப்பை ஆதரித்தால், இது எல்லாருக்கும் பொருந்து வதாக ஆக்கப்பட வேண்டும். எந்த மாநிலத்திலும் அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மாநில சட்டப்பேரவை இந்து மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தால், அது அந்த மாநிலத்திலும் அமலாக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தைக் கொண்டுவரும் அறிவிப்பை நான் துணைத் தலைவரிடம் கொடுத்துள்ளேன். மாநில அரசாங்கங்களும் சட்டப் பேரவைகளும் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொள்வதற்கு அதிக ஆதரவு இருக்கிறது. சொல்லப்போனால், சமுதாய சீர்திருத்தங்களையும் இதர சீர்திருத்தங்

களையும் ஹிட்லர் மற்றும் இதர சர்வாதிகாரிகள் மக்கள் மீது திணித்த பாதையை நாம் பின்பற்றவில்லை. நாம் ஒரு ஜனநாயக நாடு; ஜனநாயக வழிகளைப் பின்பற்றுவதில் நாம் தீவிரமாக உள்ளோம். ஜனநாயகம் வேண்டுமென்றால், இது ஓர் இனச் சட்டம்தான், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கோ அல்லது இதர காரியங்களுக்கோ இது தேவையில்லை. (சமுதாய முன்னேற்றத் திற்கு இது தேவை என்று சிலர் கருதுகின்றனர்). இதுகுறித்து இரண்டு கருத்துக்கள் இருக்கலாம். இரண்டையும் ஒரேவிதமாக உறுதியாகவும் நேர்மையாகவும் மேற்கொள்ள வேண்டும்.

இங்கு கூறப்பட்ட சில ஆலோசனைகளைப் பொறுத்தவரை உலகின் இதர பகுதிகளில் ஏற்பட்டுள்ள அனுபவம் முற்றிலும் மகிழ்ச்சி தருவதாக இல்லை. உதாரணத்திற்கு விவாகரத்து சட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பலதரப்பட்ட விவாகரத்துக்கள் உள்ளன; விவாகரத்தைப் பெறுவதற்கு வேறுபட்ட வழிவகைகள் உள்ளன. தனி நபர் சுதந்திரத்தின் அடிப்படையில் சமுதாயத்தைத் திருத்த விரும்பியவர்களும் விவாகரத்தை ஆதரித்துப் பேசியவர்களும் தோல்வியுற்றுள்ளனர். வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள பின் விளைவு களைப் பார்க்கும் போதும், நம்மில் சிலர் மற்றவர்களை சாதாரண மாகப் பின்பற்றும் நிலையிலும், - அக்கருத்தை ஆதரிப்பது மிகவும் நாகரீகமானது என்று அவர்கள் நினைக்கின்றார்கள் - இது மிகவும் மதியீனமானது என்றும், கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாக உள்ளது என்றும் சிலர் கருதுகின்றனர். கண்மூடித்தனமாகப் பின்பற்றும் உணர்வு உள்ளது; அதற்கு ஆதரவும் இருக்கிறது. ஏனெனில் வெளி நாடுகளில் உண்மையிலேயே ஏற்பட்டுள்ள விளைவுகளை அறிந்து கொள்ளும் பொறுமை இவர்களிடம் இல்லை. எனவே, சீர்திருத்தக் காரர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாத ஆஸ்தீக கருத்தும் சமமான உண்மையுடன் உள்ளது. காரணம் உடையதாகவும் உள்ளது. இந்து மதம், இந்து சட்டம் மற்றும் இந்து வழக்கங்கள் ஆகியவை ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வரலாற்றின் தாக்குதல்களையும் தாங்கி நிலைத்து நிற்கின்றன என்பதை நாம் அறியும்போது, நம் நாடுதான் அல்லது இனம்தான் அல்லது சமுதாயம்தான் தனக்கே உரித்தான பாங்கினைப் பெற்றுள்ளது என்று இயற்கையிலேயே நாம் உணர் கின்றோம். ஒரேவிதமானதாக இருப்பதற்குப் பதிலாக - அவ்வாறு இருப்பதன் விளைவுகள் பலவகையில் கேடுள்ளதாக உள்ளன - பல்லாயிரம் ஆண்டுகளாக உருவாக்கப்பட்டிருந்ததுபோல், ஒரு முறையினை ஏன் நாம் உருவாக்கிச் செயல்படுத்தக்கூடாது? இந்து மதமும், இந்து சட்டமும்தான் ஒரே மதமாகவும், சட்டமாகவும்

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக உருவாக்கப்பட்டு வந்துள்ளன. அவை தேக்க நிலையிலிருந்ததில்லை; இந்து சட்டமும் வழக்கமும் எக்காலத்திலும் நிலைபெற்று நிற்கும் திறனற்றவையாக இருந்த தில்லை என்பதை டாக்டர் அம்பேத்கர் ஒத்துக் கொள்வார் என்று உறுதியாக நம்புகிறேன்; அவ்வப்போது அவை சூழ்நிலைக்குத் தக்கவாறு பரிமளித்து வந்துள்ளன; இனியும் அவ்வாறே அவை அனுசரித்துச் செல்லும் திறன் படைத்தவைகளாகும்.

நாம் பிற்போக்கானவர்கள் என்று சீனர்களும், அமெரிக்கர் களும் கூறுவதாக இங்கு மேற்கோள் காட்டிக் கூறப்பட்டது, ஏனெனில் நம்மிடம் முற்போக்கான சமுதாய முறை இல்லையாம். நமது சமுதாயம் பற்றிய இத்தகைய விமர்சனங்களை ஏற்றுக் கொள் வதற்கு முன்னர், அவர்கள் யார் என்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். சீனர்களும், அமெரிக்கர்களும் நமது மதத்தையும் சட்டத்தையும் பற்றி எவ்வளவு படித்துள்ளார்கள் என்று நான் கேள்வி எழுப்பலாமா? நமது சமுதாயத்தில் சீர்திருத்தம் செய்ய ஆலோசனை கூறுவதற்கு முன்னர் அல்லது நமது மதத் தினைக் கண்டிப்பதற்கு முன்னர் அவர்கள் இந்து மதத்தின் உணர் வினைக் கிரகித்துக் கொண்டுள்ளார்களா? இது மிகப் பொருத்த மான கேள்வியாகும். வெளிநாடுகளைச் சேர்ந்த சில நபர்கள் அடங்கிய ஒரு குழு நமது மதத்தை விரும்பவில்லை என்பதற் காகவும், நமது சட்டத்தில் அல்லது வழக்கத்தில் மாற்றங்கள் செய்ய ஆலோசனை கூறுகிறார்கள் என்பதற்காகவும் நாம் அவர் களின் கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களின் கருத்தின் பின்னணியை ஆராயாமல் சில நபர்களடங்கிய ஒரு சிறு குழுவைத் திருப்தி செய்ய முயற்சி செய்தால், வயதான தந்தையும் அவன் மகனும் வழியில் கண்டவர்களைத் திருப்தி செய்ய முயன்ற கழுதை யின் கதை நமக்கும் பொருந்துவதாகிவிடும். ஆரம்பத்தில் அவர்கள் கழுதையை நடத்திச் சென்று கொண்டிருந்தனர். வயதான தந்தை யும் அவர் மகனும் நடந்து சென்றனர். அவர்களைப் பார்த்து ''வய தானவரோ அல்லது மகனோ கழுதை மீது சவாரி செய்யாது, ஏன் நடந்து செல்லுகின்றனர்'' என்று கூறி சிரித்தார்கள். எனவே, தந்தை கழுதை மீது ஏறிக் கொண்டு, மகனை நடக்கவிட்டார். அப்போதும் மக்கள் சிரித்தனர். ''இதோ பார், பாவம் சிறுவனை நடக்க விட்டு விட்டு, இந்த மனிதன் சவாரி செய்கிறான்'' என்றனர். எனவே, சிறுவனும் கூட.....

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** *எல்லோருக்கும் கழுதை கதை தெரியுமே!*

**திரு. பாரதி** *(சென்னை) : இங்கே யார் கழுதை?*

***டாக்டர் தேஷ்முக்:*** *அவர்கள் பைத்தியக்காரர்களுக்குகின் றனர் என்பதை வலியுறுத்த நான் விரும்புகிறேன்.*

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** *கழுதைக் கதையின் விவரங்களை இங்கு விவரிக்க வேண்டாம்.*

***டாக்டர் தேஷ்முக் :*** *அடிக்கடி முட்டாள்தனமாக்கும் முயற்சி நடைபெறாதிருந்தால், இந்தக் கதையை இங்கு நான் சொல்லி இருக்க மாட்டேன். வெளிநாட்டவர்களின் அபிப்பிராயங்களின் மதிப்பினை அறிந்திருக்க வேண்டுமென நினைக்கும் மிகவும் புத்திசாலியானவர்கள் எப்படியோ ஒருவகையில் நாங்கள் ஒத்துக் கொள்ளுவதற்கும் எங்களை மாற்றவும் முயற்சி செய்கிறார்கள். சில வெளிநாட்டவர் சில மாற்றங்கள் தேவை என்று சொல்லு வதால் அவர்கள் அவ்வாறு கூறிவருகிறார்கள். அத்தகைய அபிப் பிராயங்களை நான் ஏற்றுக் கொள்ளவும் மாட்டேன். இதன் அடிப் படையில் எவரும் தம்முடைய கருத்தை விட்டுக் கொடுப்பதை விரும்பவும் மாட்டேன்.*

*இந்த மசோதாவைப் பொறுத்தவரை, தகுத்த சூழ்நிலைகள் ஏற்படும் போது அதை அறிமுகம் செய்ய வேண்டும்; மக்களின் எண்ணத்திற்கு எதிராக அதை திணிக்கக் கூடாது. இந்த மசோதாவை ஆதரிகின்ற படித்த பெண்கள் கூட்டம் அதிகம் உள்ளது என்பது உண்மைதான். இதை நிறைவேற்றுவது அவசியம் என்ற கருத்தில் அவர்கள் உறுதியாக உள்ளனர் என்று கூறப்படுகிறது. பெண்களது கல்வியின் அளவினை நாம் சரியாகக் கணக்கிட்டால் இந்தப் படித்த பெண்களின் எண்ணிக்கை கடலில் ஒரு சொட்டு என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தீவிர சீர்திருத்தமும் நம் முடைய சட்டத்தில் மாற்றமும் வேண்டுமென்று கூறும் பெண் களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகும். மற்றொரு வகையில் பார்த்தால், ஆங்கில அல்லது அயல் நாட்டுக் கல்வி இல்லாததைத் தவிர, தங்களைப் போல் அறிவு படைத்த அப்பெண்களின் மாற்றுக் கருத்தை கேட்பதற்குக் கூட அவர்களுக்கு பொறுமை இல்லை. நான் 'அவர்கள்' என்று கூறியது, தாங்கள் யார், யாராகத் தாங்கள் இருக்க*

வேண்டுமென்று விரும்புகிற பொது அறிவு படைத்த நமது கிராமங்களில் வாழும் இலட்சக்கணக்கான பெண்களைக் குறிக்கும். நீங்கள் கூறும் மாற்றங்கள் குறித்து அவர்களுக்கு அச்சம் இருக்கிறது. ஏனெனில் விவாகரத்து முறையை அறிமுகப்படுத்தினால் அது ஒவ்வொருவரின் உள்ளப்பாங்கையும், முழு சமுதாயத்தின் மனப் போக்கினையும் மாற்றிவிடும். நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான் : விவாகரத்து என்ற எண்ணத்துடன் விவாகம் செய்து கொள்கிறீர்களா? அல்லது விவாகத்தில் நிரந்தரமாகப் பிணைந்து நிற்க விரும்புகிறீர்களா? விவாகரத்து எளிதில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொண்டால், அது ஒரு பெரிய உள மாற்றத்தை உண்டுபண்ணும். உண்மையில் நாம் அந்த மாற்றத்தையும் அதன் விளைவுகளையும் ஏற்கத் தயாராக இருக்கிறோம். இம்மசோதா நிறைவேறுவதை ஆதரித்து வாதித்திட்டு வரும் படித்த பெண்கள், அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி, குறிப்பாக படிப்பறிவு இல்லாத பெண்களுக்கு ஏற்படும் பாதகங்கள் பற்றி சிந்தித்து பார்க்கவில்லை. விவாகரத்து பெற்ற பின்னர், படித்த பெண் ஒருத்தி தன் சொந்தக் காலில் நிற்க முடியும்; நல்ல வருமானம் கிடைக்கும் வேலை எங்கேயாவது கிடைக்கும்; ஒருக்கால் ஒரு சிறப்பான கணவனும் கூட அவளுக்குக் கிடைக்கலாம். ஆனால், படிக்காத ஒரு பெண்ணின் நிலை என்ன? ஆண் ஆணவம் பற்றி படித்த இங்கு அமர்ந்துள்ள என்னுடைய பெண் நண்பர்கள் குறை கூறுகின்றனர். ஆண்கள் பெண்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் என்று கூறுகின்றனர். ஆனால், ஆண் ஆதிக்கத்திற்கும் இத்தகைய மனக் கிலேசங்களுக்கும் ஆட்பட்டுள்ள படிக்காத பெண்ணுக்கு என்ன நடக்கும்? விவாகரத்தின் விளைவுகள் பற்றி உதாரணமாக, குழந்தைகளின் வளர்ப்பு, பாதுகாப்பு பற்றி படித்த பெண்மணிகள் எப்போதாவது சற்று சிந்தித்துப் பார்த்தார்களா?

எனவே, இந்த மசோதாவுக்கு ஆதரவாக நான் கருத்துக் கூறினாலும், எவ்வித சீர்திருத்தம் செய்யும் போதும், அல்லது நம்முடைய சட்டத்தின் எந்தப் பகுதிகளையும் மாற்றம் செய்யும் போதும், அவ்வாறு செய்வதால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி அமைதியாக ஆய்வு செய்வது உசிதமானது என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அவ்வாறு செய்தாலன்றி, நாம் தேவையற்றவைகளைச் செய்ய முயற்சி செய்கிறோம் என்று பொருள் ஆகிவிடும். இந்த சட்டத்திலும் இந்து மதத்திலும் நீங்காது இருக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. அனேகமாக சற்று மாற்றத்துடன் அவை இருக்கலாம். சில ஆலோசனைகளில் இந்து மதத்திற்கு எதிரான உள்ளப் பாங்கு இருக்கின்றது; இந்துவாக இருக்கும் ஒவ்வொன்றையும்

சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள்; இழிவாகவும் கருதுகிறார்கள். அவர்கள் எங்கேயோ அல்லது எப்படியோ ஒருவகை கருத்தைக் கொண்டுள்ளனர். அதாவது அழுகிமுடை நாற்றமெடுத்துப் போன வற்றைத்தான் இந்தியாவில் காண்கிறோம்; வெளிநாடுகளின் வழி களில் செல்லாமல் வெளிநாட்டு எண்ணங்களை ஏற்று, இங்கும் அவற்றை அறிமுகம் படுத்தாவிட்டால் அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இந்து சமுதாயம் முன்னேறாது என்ற கருதுகின்றனர். நல்ல எண்ணத்துடன்தான் அவர்கள் இத்தகைய உள்ள உந்தல் பெற்றுள்ளார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அயல்நாடுகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்று வதால் மட்டும் நீங்கள் நிலைபெற்று வாழ்ந்திட முடியாது என்ற வேறுபட்ட ஒரு கருத்து இருக்கிறது. காலத்துக்கேற்ற வகையில் மாற்றம் செய்து கொள்வது தொடர்ந்து வாழ்வதற்கான வழியாகும்; சட்டம் மற்றும் சமுதாயத்தின் அடிப்படைகளையும், அடித்தளத் தையும் மாற்ற முயற்சி செய்து கொண்டு போவதால் மட்டுமல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இக்கருத்தின் அடிப்படை யில், போதுமான எச்சரிக்கை தேவை என்று கூறுகிறேன். நான் நேற்று பேசியபோது, விவாகம் மற்றம் விவாகரத்து பிரிவுகளுடன் இம்மசோதாவை நிறைவேற்றத்தான் உத்தேசிக்கப்பட்டிருக்கிற தென்றும், பிற பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது எனவும் நினைத்தேன். ஆனால் இம்மசோதாவை ஆதரிப்பவர்களின் எண்ணம் இதுவல்ல என்று இப்போது தெரிகிறது. இதர பகுதிகளை விட்டுவிட அவர்கள் விரும்பவில்லை. நேரம் கிடைப்பதைப் பொறுத்து இரண்டு அத்தியாயங்களை மட்டும் நிறைவேற்ற அவர்கள் தயாராக உள்ளனர். மசோதாவின் இதர பகுதிகளையும் விட்டுவிடவும் விரும்பவில்லை. அதுதான் அவர்களின் கருத்து என்றால், பல உறுப்பினர்கள் தங்களது எண்ணத்தை மாற்றிக் கொள்வார்கள் எனத் தெரிகிறது; ஏனெனில் அது நிலையான உடன்பாடு என்று கருத முடியாது; இவ்விரண்டு அத்தியாயங்களும் நிறைவேற்றப்பட்ட பின்னர், மசோதாவின் சொத்துரிமைப் பிரிவையும் இதர பிரிவுகளை யும் நிறைவேற்ற அனேகமாக வற்புறுத்துவார்கள். சட்டத் தொகுப்பு செய்வதன் வரலாற்றைப் பார்த்தால், முக்கியமான வலுவான மக்களின் எதிர்ப்பு இருந்து வந்திருப்பதைக் காணலாம். மாற்றம் செய்வதை பல வழக்கறிஞர்கள் சங்கங்கள் எதிர்த்து இருப்ப தோடு ஒருங்கிணைப்பதையும் அவைகள் எதிர்த்துள்ளன. அதற்காக நியமிக்கப்பட்ட குழு நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தபோது எண்ணிலடங்காத சங்கங்களும், தனி நபர்களும் உத்தேச மாற்றங் களை வன்மையாகக் கண்டித்ததை கண்டன. இச் சூழ்நிலையில்,

இரண்டு அத்தியாயங்களை நிறைவேற்றிய பின்னர், மசோதாவின் இதர பகுதிகளையும் எடுத்துக் கொள்வோம் என்று கூறுவது முறை யானதல்ல என்று எண்ணுகிறேன். இந்நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில், மசோதாவிலுள்ள திருமணச் சட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டுமென்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சொத்துரிமைப் பிரிவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவது சில உறுப்பினர்களின் எதிர்ப்பு அல்லது ஆதரவைப் பொறுத்துள்ளது. மசோதா முழுவதையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கருதினால், மாநிலங்களது சட்டப் பேரவைகளின் ஒப்புதலுக்கு அதை விட்டுவிடுவது அறிவுடைமை யாகும். அவ்வாறு செய்வதால், மாநிலங்களின் மக்கள் கருத்தைத் திரட்ட போதுமான கால அவகாசத்தை நாம் கொடுப்பதாகும். இந்து சட்டத்தில் சேர்க்கப்படும் பல விவரமான மாற்றங்களுக்கு முக்கியமான பொதுமக்கள் ஆதரவு இருந்தால், சம்பந்தப்பட்ட மாநிலம் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஒரு மாநிலம் ஏற்கவும், மற்றொரு மாநிலம் நிராகரிக்கவும் செய்யும் பட்சத்தில், அதனால் தீங்கு ஒன்றுமில்லை; ஏனெனில் இது ஒரு இனச் சட்டம். தனி நபர் அல்லது தனி நபர் குழுக்கள் தாங்கள் விரும்புகின்ற சட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற முழுமையான வாய்ப்பு இருக்க வேண்டும்.

ஒருதார மணம், விவாகரத்து சம்பந்தப்பட்ட ஷரத்துக்களை நான் ஆதரிக்கிறேன். அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறுகிறேன். இருப்பினும் சில திருத்தங்கள் தேவை. நேற்று ஒரு திருத்தத்தை முன் மொழிந்தேன் - அதாவது வழக்கமான விவாக ரத்து முறை தொடர வேண்டுமென்று. இந்த ஆலோசனை ஏற்கப்பட வுள்ளது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தற்போதைய முன்மொழிதல் விவாகம் மற்றும் விவாகரத்து சட்டங்கள் பற்றியதாகத்தான் இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும். தற்போது வேறு எந்தச் சட்டத்தையும் இந்நாடாளுமன்றம் நிறைவேற்றக் கூடாது என்றும் கூறுகிறேன்.

***திருமதி ஜெயஸ்ரீ** (பம்பாய்) : மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறு 2க்கு முன்மொழிந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன். கூறு 2ன் உட்கூறு(4) விலக்கப்படுவது மகிழ்ச்சி தருகிறது. உட்கூறு கூறுவ தாவது :

---

★ அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 18, பக்கங்கள் 2750-54.

''1872 ஆம் ஆண்டு (1872ன் III வது சட்டம்) சிறப்பு திருமணச் சட்டத்தில் என்ன கூறப்பட்டிருந்தாலும், இச்சட்ட தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னர் அச்சட்டத்தின் ஷரத்துக் களின்கீழ் திருமணங்கள் செய்து கொண்ட அனைத்து இந்துக் களுக்கும் இந்த சட்டத் தொகுப்பு பொருந்தும்.''

*காலை 10 மணி*

இந்த உட்கூறு கைவிடப்பட்டது மகிழ்ச்சியானதாகும். ஏனெனில் சிறப்பு திருமணச் சட்டத்தின்படி மக்களுக்கு அதிக மான உரிமைகள் இருந்தன. இது இந்திய வாரிசுரிமை சட்டத்திற்கும் பொருந்தும். இந்து சட்ட தொகுப்பின்படி சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்தாலும் சிறப்பு திருமணச் சட்டத் தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமைகள் இப்புதிய தொகுப்பின்கீழ் கிடைக்காது.

**மாண்புமிகு துணை அவைத் தலைவர் :** சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் தத்து எடுத்துக் கொள்ள முடியாது. இந்த மசோதாவின் படி தத்து எடுத்துக் கொள்ளலாம். இது ஓர் அனுகூலம் அல்லவா?

**திருமதி ஜெயஸ்ரீ :** வழிவழிச் சொத்துரிமைகள் இந்து சட்டத் தொகுப்பின் கீழ் கிடைப்பதைவிட அதிகமான உள்ளன என்று கூறு கிறேன். எனவே இந்த மசோதாவிலிருந்து இந்த உட்கூறு நீக்கப் பட்டுள்ளது மகிழ்ச்சி தருவதாகும்.

முஸ்லீம், பார்சி, கிறிஸ்தவர் ஆகிய அனைவருக்கும் பொருந்து கின்ற வகையில் இதை விரிவான, முன் மாதிரியான சட்டத் தொகுப்பாக ஏன் நாம் அமைக்கக்கூடாது என்ற வாதத்தைப் பொறுத்தவரை, உறுப்பினர்கள் அவ்வாறு செய்யத் தயாராக இருக் கிறார்களா என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்திய வாரிசுச் சட்டம் மற்றும் சிவில் திருமணச் சட்டம் ஆகிய வற்றின் நிலைக்கு நாம் இதை அமைத்தால், இது ஒரு இலட்சிய சட்டத் தொகுப்பாக இருக்கும். ஆனால், இன்று நம்முடைய சமுதாயம் இந்து சட்டத் தொகுப்பின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு முற்போக்குள்ளதாக இருக்கத் தயாராக இல்லை. ஆகையால் சிறப்புத் திருமணச் சட்டத் தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள பரந்த கொள்கைகளை உறுப் பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்கு சந்தேகம் உண்டு.

முஸ்லீம்களும் ஒரு தார மணம் என்னும் கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டுமென்று டாக்டர் முகர்ஜி நேற்று கூறினார். முஸ்லீம் சட்டம் பெண்களுக்கு மிக அதிகமான உரிமைகளை வழங்குகிறது என்று கூற விரும்புகிறேன். இன்றைய இந்து சட்டத்தில் பெண்களுக்கு அத்தகைய உரிமைகள் வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் ஏகதார விவாகம் பற்றி கூறுகிறார்.

**திருமதி ஜெயஸ்ரீ:** ஒருதார மணம் மற்றும் புனித விவாகம் பற்றி கூறுகிறேன். நம்முடைய புனித விவாகம் பொறுத்தவரை, திருமணத் தம்பதிகள் பின்வருமாறு உறுதிமொழி எடுத்துக் கொள் கின்றனர்:

"என்னுடன் இத்தகைய ஏழு அடிகளை எடுத்து வைத்ததன் மூலம் நாம் தோழர்களாகியுள்ளோம். நான் எப்போதும் இத் தோழமையை விடாது கைக்கொள்வேன். நான் உன்னிடமிருந்தோ, நீ என்னிடமிருந்தோ எப்போதும் விலகிப் போக மாட்டோம். நாம் ஐக்கியமாகி இருப்போமாக. இருவரும் இணைந்தே முடிவு எடுப்போம். ஒருவரை ஒருவர் நேசிப்போம். ஒவ்வொருவரின் தோழமையில் இணைந்து தயார் நிலையில் இருப்போம்; உள்ளத் தால் ஐக்கியப்பட்டு இருப்போம்; பலத்திலும் வளத்திலும் இணைந்து வளர்வோம். நமது அபிலாஷைகளில், உறுதிப்பாடு களில் மற்றும் துன்பங்களில் இணைந்து நிற்போம்".

இன்றைய சமுதாய அமைப்பில் இந்தப் புனித விவாதத்தின் இலட்சியங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறேன். டாக்டர் முகர்ஜி இன்றைய நிலையிலுள்ள இந்து திருமணச் சட்டத்தில் சீர்திருத்தம் எதுவும் தேவை இல்லை என்று கருதுகிறாரா? அல்லது அது பற்றி தன்னுடைய நியாயமான அபிப் பிராயத்தைக் கூறுகிறாரா? ஓர் ஆண்மகன் தான் விரும்பியபடி எத்தனை முறையும் திருமணம் செய்து கொள்ள இந்து சமுதாயம் அனுமதிக்கிறது. திருமண சடங்கின் போது நாம் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி பெண்களுகாகத்தான். நமது சட்டங்கள் ஒருதலைப் பட்சமானவை. அவை பெண்களுக்காகத்தான் ஏற்பட்டவை. ஓர் ஆண் தன்னுடைய மனைவி இறந்து போன பின்னர், மயானக் கரையில் இறுதிச் சடங்குகளை அவன் நடத்தப் போகும்போதுகூட அவனுடைய மறுமண சம்பிரதாயங்கள் தொடங்கும். இதை நாம்

அனைவரும் அறிவோம். எனவே, திருமணத்தை ஆண் மகன் சாதாரணமானதாகத்தான் கருதுகிறான். இருந்தாலும், இந்து திருமணங்கள் புனிதமானவை என்று பேசுகிறோம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விதவைகளும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

**திருமதி ஜெயஸ்ரீ :** இந்த விஷயத்தில் பெண்கள் அதிகமாக பழமைவாதிகளாகவே உள்ளனர். பெண்கள் விதவைகளானாலும் தாங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் இரண்டாவது திருமணத்தை நாடுவதில்லை; ஆனால் இந்து சட்டத்தின் ஒருதலைப்பட்சமான நிலையின் காரணமாக நரிபிரதிஷ்தா குறைந்துள்ளது.

'ஹரிஜன்' ஏட்டில் வெளியான **மஷ்ருவாலாவின்** கட்டுரையை உறுப்பினர்கள் படித்திருக்கலாம். இன்று பெண்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம் என்பது பற்றி அவர் தெளிவாக எழுதியுள்ளார். மகாபாரதத்தில் துரௌபதியின் துகில் எவ்வாறு உறியப்பட்டது என்பதை அறிவோம். அவள் கிருஷ்ண பரமாத்வாவிடம் பிரார்த்திக்கிறாள்.

"कौरवार्णवमग्नामामुद्धरस्व जनार्दन"

(''கௌரவர்களின் கடலில் மூழ்குகிறேன். ஓ கிருஷ்ணா! என்னைக் காப்பாற்றுவாயாக!'')

நம்முடைய சமுதாயத்தால் அல்லல் படும் ஏழைப் பெண்களின் இத்தகைய குரல் இன்றும் கேட்கிறது. நமது இந்து சமுதாயத்தை சநாதன சமுதாயம் என்று அழைக்கிறோம். அதாவது, சதாநுதன் (எப்போதும் புதிய) - அது எப்போதும் மாறிக்கொண்டே உள்ளது. மாற்றம்தான் வாழ்க்கையின் சாரம். சமுதாயம் மாறி வரா விட்டால், அது தேங்கிக் கிடக்கிறது. மாற்றங்களை ஏற்றுக் கொண்டதால்தான், நமது சமுதாயம் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து வந்திருக்கின்றது.

விவாகரத்தை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சிறிது நேரத்திற்கு முன்னர் டாக்டர் தேஷ்முக் கூறியதுபோல் நமது திருமணங்கள் புனிதமானவை. நாம் நமது ஸ்மிருதிகளில் படிப்பதுபோல் (பராசர மற்றும் நாரத) பண்டைக்

காலத்திலிருந்து விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இன்று இந்து சட்டத் தொகுப்பில் திருமணத்தின் புனிதத்தை நிலைப்படுத்தவும் கணவன்-மனைவி நலனைப் பாதுகாக்கவும் நாம் முயற்சி செய்கிறோம். விவாகரத்து கோருவதைத் தடுப்பதற்கான முன் பரிகாரங்களை சட்டகர்த்தாக்கள் அமைத்துள்ளனர். அவை : கணவன் - மனைவி உரிமைகள் மீண்டும் வழங்குதல், சட்டப்படி பிரிதல் ஆகியவை. எனவே, விவாகரத்து எளிதாகப் பெறுவதல்ல. 1937ல் பரோடாவில் விவாகரத்து சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1939-ல் அங்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்புப்படி, விவாகரத்து, சட்டப்படி பிரிதல் ஆகியவற்றின் எண்ணிக்கை 42. இவற்றில், கொடுமைப்படுத்திய வழக்குகள் 11; கொடுமைப்படுத்தி கைவிடப்பட்ட வழக்குகள் 2; கணவனால் கைவிடப்பட்ட வழக்குகள் 7; மனைவியால் கைவிடப்பட்ட வழக்கு 1; கணவன் கொடுமைப் படுத்தல், வழக்கமாகக் குடித்தல் மற்றும் இரண்டாவது முறை திருமணம் செய்து கொண்ட வழக்கு 6. இவ்வழக்குகளைப் பார்த்தால் விவாகரத்து என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. சில சிறப்பு சூழ்நிலைகளின் கீழ்தான் விவாகரத்து வழங்கப்பட் டுள்ளது.

மேலும், கீழ்த்தட்டு வகுப்பினரிடம் விவாகரத்து முறை உள்ளது என்பதை நாம் அறிவோம். மேல்தட்டு மக்களிடம்தான் இந்த முறையை அறிமுகப்படுத்த இச்சட்டத் தொகுப்பு வகை செய்கிறது. 'மதத்திற்கு ஆபத்து' என்ற குரலை நேற்று டாக்டர் முகர்ஜி எழுப்பினார். மனைவியை அடித்துத் துன்புறுத்துவது மத ஈடுபாடா என்று அவரிடம் கேட்க விரும்புகிறேன். தன்னுடைய கணவன் அடித்துத் துன்புறுத்தியதாக ஒரு பெண் சென்னை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடர்ந்தாள். இந்து சட்டம் மனைவியை அடிப்பதை அனுமதிக்கிறது என்று கற்றறிந்த நீதிபதி தீர்ப்பளித்தார். எனவே, அத்தகைய கொடூரமான பழக்கங்கள் மதம் சார்ந்தவையா என்று கேட்கின்றேன். கடவுளிடம் எப்போதும் தனிப்பட்ட முறையில் உறவு கொள்ளுவதுதான் மதம்.

"ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति"

(ஏ, அர்ச்சுனா! உயிர் வாழும் எல்லா ஜீவன்களிடமும் ஆண்டவன் இருக்கின்றான்.)

ஒரு குறிப்பிட்ட சட்டத்தை நிறைவேற்றுவதால் மட்டும் மதத்திற்கு ஆபத்து வரும் என்பதல்ல. நான் சொன்னது போல், இந்து

மதம் பரந்து விரிந்த ஒரு சமுத்திரம். அதில் அவ்வப்போது மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்களை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதனால்தான் இந்து மதத்தின் கட்டமைப்பு நெடுங்காலமாக நிலைபெற்றிருக்கிறது. இந்து கட்டமைப்பில் மாற்றங்கள் தேவை என்பதையும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தற்போது நமது சட்டம் ஒரு தலைப்பட்சமாக உள்ளது. நமது பெண்களுக்கு எவ்விதமான நிவாரணமும் நாம் அளிக்கவில்லை. இன்றுள்ள அமைப்பினை மாற்றிட முயற்சி செய்யும் தேசிய திட்டக் குழுவை நாம் அமைத்துள்ளோம். சமுதாய கட்டமைப்பு மாற்றப் பட்டாலன்றி, சீர்கெட்டுப்போன சமுதாய தளத்தின் மீது எழுப்பப் படும் திட்டங்கள் எதுவும் பயன் தரமாட்டா. இது தொடர்பாக, நமது சமுதாய அபிவிருத்திக்கான சில ஆலோசனைகளை கூற ஆசைப்படு கிறேன். திட்டமிட்ட சமுதாயத்தில் ஆணுக்கு நிகரானவள் பெண். சம அந்தஸ்து; சமமான வாய்ப்புகள்; சமமான பொறுப்புகள் - பெண்கள் அந்தஸ்தை உயர்த்துவதற்கான வழிகாட்டியாக இவை இருக்க வேண்டும். பாலியல் அடிப்படையில் பெண்கள் எவ்விதப் பணியிலிருந்தும் விலக்கப்படக்கூடாது. சமமான, முழுமையான சமுதாய, பொருளாதார உரிமைகளைப் பெண்கள் அனுபவிக்க திருமணம் ஒரு முன் நிபந்தனையாக இருக்கக் கூடாது.

இன்று முறையாகத் திட்டமிட்டு முன்னேறும் வகையில் பெண்களின் அந்தஸ்து இருக்கின்றதா என்ற கேள்வியை கேட்கிறேன். குடும்ப வாழ்வு, பெண்கள் சொத்துரிமை பெற்று மகிழ்ச்சியடைதல் ஆகியவை பெரிதும் தேவைப்படுகின்றன. திருமணம், மரபு வழி சொத்துரிமை அளிக்கும் சட்டங்களும் தேவையாகும். எனவேதான் இன்றைய இந்து சமுதாயத்தில் சில மாற்றம் ஏற்பட்டாலன்றி இப்போதுள்ள சமுதாய தளத்தின்மது நல்லதொரு சமூக அமைப்பினை ஏற்படுத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை.

சட்டத் தொகுப்பு ஒன்று தேவை என்று பெண்கள் சங்கம் எப்போதும் கோரி வந்துள்ளது. ஒரு பொதுவான சட்டத் தொகுப்பு உருவாவதை ஆதரித்தும் வருகிறோம். இந்துப் பெண்களுக்கு மட்டும் சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் கோரவில்லை. நமது பெண்கள் இப்போது துன்பப்படுகிறார்கள் என்பதையும், பின்னிலையிலுள்ளார்கள் என்பதையும் நாம் அறிவோம். இவ்வகையில், பார்சி, கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் பெண்கள் இந்து பெண்களைக் காட்டிலும் மிகவும் முன்னேறியுள்ளனர். எனவேதான் இந்து சட்டத் தொகுப்பை நாங்கள் ஆதரிக்கிறோம். நான் முன்னர் சொன்னதுபோல் இந்த இந்து சட்டத்தொகுப்பினை ஓர் இலட்சிய

சட்டமாக ஆக்கினால், இதர சமுதாயப் பெண்களும் இதை ஏற்றுக் கொள்ள ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள்.

இவ்விஷயம் குறித்துப் பல பெண்கள் அகில இந்திய மாதர் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டனர் என்று டாக்டர் தேஷ்முக் கூறினார். அதற்கு மாறாக, எங்களுடைய சங்கம் இத்தகைய மாற்றங் கள் வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்தே குரல் எழுப்பி வந்தது என்று கூறுவேன்; எங்களுடைய வேண்டுகோளுக்குப் பின்னர்தான் விவாகம், பெண்களுக்குச் சொத்துரிமை போன்ற சிறு சிறு சட்டங் கள் அறிமுகப்படுத்தப்பட்டன. விதவைகளுக்கு சொத்துரிமை வழங்கும் மசோதா ஒன்றை பம்பாயில் டாக்டர் தேஷ்முக் கொண்டு வர விரும்பியபோது, அந்த மசோதாவை அவசரப்பட்டு கொண்டு வர வேண்டாம் என்றும், மகள்களுக்கு சொத்துரிமை, தத்து எடுத்தல் மற்றும் இதர அம்சங்கள் அதனுடன் சேர்க்கப்படும் வரை காத்திருக் கலாம் என்றும் அவரிடம் வேண்டிக் கொண்டோம். அப்போது, அந்த மசோதாவை அவசரமாக அறிமுகம் செய்யப்போவதாகவும், இதர சீர்திருத்தங்களையும் அதில் இணைக்க விரும்புவதாகவும் எங்களிடம் கூறினார். எனவே, இச் சீர்திருத்தங்களை வெகுகாலத் திற்கு முன்பே கொண்டுவந்திருக்கவேண்டும். பொதுமக்கள் அபிப் பிராயத்தைப் பெறவில்லை என்று கூறமுடியாது. இந்த இந்து சட்டத் தொகுப்பு கடந்த பத்தாண்டுகளாக மக்கள் கவனத்தில் இருந்து வந்திருக்கிறது. பொது மக்கள் அபிப்பிராயம் என்ன என்பதை அறிந்து கொள்ளவில்லை என்று சொல்லுவதில் பயன் எதுவுமில்லை. போதுமான அளவிற்கு பொதுமக்கள் ஆதரவு திரட்டப்பட்டுள்ளது. சில பெண்கள்தான் இந்த நடவடிக்கையை ஆதரிக்கிறார்கள் என்று சொல் லுவது முற்றிலும் தவறாகும். பல்வேறு இடங்களில் பல பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளோம்; இந்தியா முழுவதிலுமுள்ள பெண் கள் ஆதரவு அளித்து வருகின்றனர்; இந்து சட்டத் தொகுப்பிற்கு பெண்கள் சார்பில் என்னுடைய முழு உளமார்ந்த ஆதரவை அளிக் கின்றேன்.

[1]**மாண்புமிகு பொதுப்பணித்துறை உற்பத்தி மற்றும் விநியோகத்துறை அமைச்சர் (திரு. காட்கில்)** : என்னுடைய நண்பர் டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜியின் உரையை மிகுந்த கவனத் துடன் கேட்டேன். அது முற்றிலும் பயனுள்ளதாக இல்லையென்று நான் கூற மாட்டேன். அவர் கூறிய இரண்டு விஷயங்கள் எனது உள்ளத்தைத் தொட்டன. முதலாவதாக சமுதாய சீர்திருத்தத்தைப்

பொறுத்தவரை, பொதுமக்கள் அபிப்பிராயம் முடிந்த மட்டும் பெரு மளவில் தேவையாகும். இரண்டாவதாக, இது ஓர் அரசியல் விஷய மல்ல; அவர் அல்லது அவளுடைய அரசியல் கருத்துக்கள் எவ்வாறு இருப்பினும், இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஆர்வம் காட்டு கின்ற விஷயமாகும் இது என்று அவர் கருத்துத் தெரிவித்தார். எனவே, இவ்விரண்டு விஷயங்களைக் கேட்ட பின்னர் நான் உறுதி யாக இருக்கிறேன். இந்த அவையில் விட்டுக் கொடுக்கின்ற, உடன் பாடு உள்ள ஒரு சூழ்நிலையை உருவாக்க நம்மால் முடியுமானால், அரசியல் சாசனத்தில் இடம்பெறுகின்ற ஒன்றை நாம் முடிவு செய்ய இயலும். இது பற்றி தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் நாம் பெருமை கொள்ளலாம்.

டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி இந்தியக் கலாசாரம் பற்றி பெருமையாகப் பேசினார்; அது செயலூக்க மிக்கது என்று கூறினார், இந்தியக் கலாசாரம் சூழ்நிலைகளுக்கேற்ப கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் படைத்தது; புதிய போக்கினை கிரகித்துக் கொள்ளும் திறனால் இதுவரை அது நிலைத்து நிற்கின்றது. இது நமக்கு பெருமையும் மகிமையும் தருவதாகும். மேலும் நாம் முன்னேற எவ்வித முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும், சட்டம் பொது நீதிக்கேற்ப எவ்வாறு அமைய வேண்டுமென்றும் ஆலோசனை செய்ய வேண்டிய அவசியத்தை நமது சிந்தையில் கொள்ள வேண்டும். தற்காலத்தில் பழைய முறைகள் பயன் தருபவை யாக இருக்க முடியாது. எனவே நவீன முறைகளை மேற்கொள்ளுவது நமக்குள்ள கடமையாகும். சில தீமைகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. நான் ஒரு நல்ல இந்து; இந்து கலாசாரம் மீது நான் கொண்டுள்ள மதிப்பு யாருக்கும் குறைந்தது அல்ல. இருப்பினும், நமது சமுதாயத்திற்குள் ஊடுருவியுள்ள குறைபாடுகள் பற்றி நான் கண்ணை மூடிக்கொள்ளவில்லை. சமத்துவம், சமூக நீதி இலட்சியங் களோடு, நாம் ஏற்றுக் கொள்ளும் அரசியல் சாசனத்தினால் நாம் பெரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளோம். முழு சமத்துவம் நிலவும் சமுதாயத்தை உருவாக்க நாம் விரும்புகிறோம். அதுவே நமது இலட்சியம் என்றால், பழைய முறைகள் மூலம், பழைய கோஷங்களை எழுப்பிக்கொண்டு அந்த இலட்சியத்தை அடைய முடியாது. வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற முறையினை ஏற்றுக்கொண்டது மூலம் அரசியல் சமத்துவத்தை நாம் அளித்துள் ளோம். சமூகநீதியைப் பெற விரும்புகிறோம். ஒவ்வொரு மனிதனின் ஆளுமை வளர சம வாய்ப்புகளை உருவாக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர உதவி புரியும் சில பொருளாதார

அமைப்புகளை ஏற்படுத்தி, முடிந்தவரை பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கவும் விரும்புகிறோம். குறைந்தபட்சம் உற்பத்தி சாதனங்களை நாட்டுடைமை ஆக்கி, தகுந்த ஊதியங்களைப் பெற்று, இலாபங்களைக் கட்டுப்படுத்தி, பொருளாதார அமைப்பில் தனியார் துறைக்கு இடமளிக்கும் பட்சத்தில் அது அரசாங்கத்தின் ஒழுங்குமுறை கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமென்ற வரையறையை நிர்ணயித்துத்தான் அதனை அடைய முடியும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமென்றால் சட்டத்தின் மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் களையவும், சமூக நீதியை எய்தவும் முயற்சி செய்கிறோம். சட்டத்தின் மூலம் அரசியல் சமத்துவத்தை பெற்றுள்ளோம்; சட்டத்தின் மூலம் பொருளாதார சமத்துவத்தைப் பெற முயற்சி செய்கிறோம்; குறைந்தபட்சம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைய முயற்சி செய்கிறோம்; அதே முறையில், அதாவது சட்டத்தின் மூலம் சமூக சமத்துவத்தை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இந்து சட்டத்தைத் தொகுப்பதால் பல்லாண்டு காலமாக செயல்பட்டுவந்து, இதுவரை முன்னேற்ற முறையினைத் தந்த இந்து சட்ட ஆதாரங்கள் அனைத்தையும் நாம் வெளியேற்றி விடுகிறோம் என்று என்னுடைய நண்பர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி கூறினார். **ஸ்மிருதிகள், ஸ்ருதிகள்** மற்றும் **சடாசரங்கள்** ஆகியவை இந்து சட்டத்தின் ஆதாரங்கள் என்பதையும், ஒருவரின் மனச்சாட்சிக்கு ஆதாரம் என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். அவை யாவும் உண்மைதான். நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அல்லது அரசியல் கட்டமைப்பு இப்போது இருப்பதிலிருந்து வேறுபட்டிருந்த நேரத்தில் அவை யாவும் நல்லவைகளாகவும், போதுமான வகையில் செல்லுபடியானவையாகவும் இருந்தன. மேற்கத்திய நாடுகளிலும் சட்ட நிறைவேற்றம் அல்லது சட்டப் புனைவு மூலம் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியும் என்று கருதப்படுகிறது. அதாவது, சட்டம் வெளிப்படையாக மாறாது அப்படியே உள்ளது; ஆனால் வழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது; அது வழக்கத்தாலும் மாறியுள்ளது. சட்டம் பொது ஒழுக்க நியதிக்கு ஒத்ததாக அமையச் செய்யத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சட்டமியற்றப்படுவதே மேற்கத்திய நாடுகளில் நவீனப் போக்காக இருக்கிறது. பொது ஒழுக்க நியதியையே சட்டம் எப்போதும் பின்பற்றிச் செல்லுகிறது. பொதுமக்கள் அபிப்பிராயம் முன்னேறிச் செல்லுகிறது; ஏனெனில் சமுதாயத்தின் உயிர் அது; தேங்கித் தத்தளிக்காமல் தொடர்ந்து முன்னேற்றம் பெற்று அது முந்திச் செல்லுகிறது;

ஏனெனில் அது வாழ்க்கையின் சட்டம். எனவே, சட்டம் பின்னால் வரும் சமுதாயத்தின் மகிழ்ச்சிக்கு அபாயத்தை விளைவிக்கின்ற அளவிற்கு இரண்டிற்குமுள்ள இடைவெளி விரிவானதாக இருக்கக் கூடாது. எனவே இரண்டிற்குமிடையே கால இடையீடு முடிந்த வரை குறைந்ததாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்வது சமுதாய நலனை உள்ளத்தில் கொண்டுள்ள சிந்தனையுள்ள ஒவ்வொரு குடிமகனின், ஒவ்வொரு நபரின் கடமையாகும்.

இரண்டாவது முறையினை எப்போதும் சார்ந்து இருப்பது நல்லதல்ல. அந்த முறை யாது? சட்டப் புனைவும், தெள்ளத் தெளிவான சொற்களுக்கு வலிந்து பொருள் கொள்ளும்படி நீதித் துறையை அனுமதிப்பதும், சமுதாயத்தில் தற்போது நிலவும் கருத் துக்கு இசைந்தவாறு சட்டத்தை மாற்றுவதற்கு முயலும்படி நீதித் துறையைக் கேட்டுக் கொள்வதுமே இந்த முறையின் சாராம்சம்.

மூன்றாவதாக வழக்கம் என்பது தற்கால சூழ்நிலைமை களுக்கு உகந்ததல்ல. அரசின் சட்ட அதிகாரம் போதிய அளவு இல்லாத போதுதான் நேர்மையையும் நியாயத்தையும் சமூக நலன் களையும் பாதுகாக்கும் அளவுக்கு அந்த அதிகாரம் வளர்ச்சியுறாத போதுதான் வழக்கம் சிறந்ததாகக் கருதப்படும். இன்றைய உலகில் சட்டத்தைவிட வழக்கம் வலிமை வாய்ந்தது என்று பேசுவது முறை கேடானதாகும்.

இன்றைய நவீன உலகில் வழக்கம் என்பது சட்டத்திற்கு மீறி மேலோங்கியிருப்பது முறையற்றதாகும். வழக்கம் இவ்வளவு பரந்தளவிலிருக்குமானால்; வழக்கத்தை சட்டத்துடன் இணைத்துக் கலந்திடுமாறு சட்டப்பேரவை உறுப்பினர்கள் நடவடிக்கை எடுப் பார்கள்; சட்ட ஆட்சியில் அதற்கு பெருமை அளித்திடுவார்கள்.

இவ்வாறு இருக்கும்போது, நாம் புரட்சிகரமான சிலவற்றை செய்கிறோம்; அவ்வாறு செய்யும் முறையினால் இயல்பாக இருந்த சட்ட ஆதாரங்கள் யாவும் மூடப்பட்டு விடும் என்று என்னுடைய நண்பர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி கூறும் வாதத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் கூறுவது சரியல்ல. நாம் மரபுவழி என்ன பெற்றிருந்தாலும், அதை பல வங்கிகளில் போட்டு வைப்பதற்குப் பதிலாக, ரிசர்வ் வங்கியின் உத்திரவாதமும், பலமும், கௌரவமுள்ள வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம் - அதாவது சட்டம் என்னும் வங்கியில் இதைத்தான் நாம் செய்துள்ளோம். உண்மையில் பார்த்தால், அவை முன் உள்ள இச்சட்டத் தொகுப்பில் இப்போது அமலிலுள்ள சட்டத்திலிருந்து எண்பது சதவீதம் வரை யிலான பகுதியை ஒருங்கிணைத்துள்ளோம். ஓரளவுக்கு இது

முற்போக்கான அம்சம் என்பதில் சந்தேகம் இல்லை. உறுப்பினர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: நாம் விரும்புகின்ற அல்லது எவ்வாறு இருக்க வேண்டுமென்று மனக்கண் முன் நாம் காண்கின்ற சமுதாயத்தின் எதிர்காலத் தேவைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தேவைகளை நிறைவு செய்வது மட்டுமே போதாது. எனவே இது நம்முடைய கடமையா, இல்லையா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொருளாதாரத் துறையில் திட்டமிடுவது நன்மை தரும் என்றால், சமூகத் துறையில் அது எப்படி மோசமானதாக இருக்கக் கூடும்? நமது சமுதாயம் அவ்வாறு அமைய வேண்டுமென்பதே நமது ஆசை. அந்த இலட்சியம் பற்றி நாம் ஒத்துக்கொண்டால் ஊகத்தின் அடிப்படையில் நாம் ஒத்துக்கொண்டதாக எடுத்துக் கொண்டால், ஏனெனில், அரசியல் சாசனத்தில் அதனை நமதுஇலட்சியங்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டுள்ளோம் - அந்த இலட்சியம் நோக்கி நமது சமுதாயத்தை எவ்வாறு முன்னேற்றுவது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இத்துறையில் அரசியல் கட்டுப் பாடற்றவணிகக் கோட்பாட்டை பின்பற்றுவதா? அல்லது முன்னோக்கிச் சிந்தித்து, நமது இலக்குகளை அடைந்து, சட்டத்தின் மூலம் படிப் படியாக, காலப்போக்கில் சமுதாய வாழ்வின் ஓர் இன்றயமையாத அங்கமாகி, திட்டமிட்டபடி இலட்சிய எல்லையை அடைவதா?

**திரு. ஆர்.கே. சௌதுரி** (அஸ்ஸாம்): அது கேள்விக்குரியதாகும்.

**திரு. காட்கில் :** அரசு சாராதவர்களின் முயற்சிக்கு விட்டு விட்டால் காலப்போக்கில், இன்னும் இரண்டு தலைமுறைக்குள் இப்போது நாம் விரும்புவது போன்றவாறு விஷயங்கள் யாவும் முன்னேற்றம் அடைந்துவிடும். அக்காலகட்டத்தில் பொதுமக்கள் அபிப்பிராயமும் மேலும் முன்னேற்றம் அடைந்ததாக இருக்கும்.

வேறு வகையில் சொன்னால், வளர்ந்து வரும் பொது மக்கள் அபிப்பிராயத்திற்கும் சட்டத்திற்கும் இடையே உள்ள கால அவகாச அம்சத்தை நாம் எப்போதும் குறைத்துவிட முடியாது. எனவே, இச் சட்டத் தொகுப்பில் முற்போக்கு சிந்தனை அம்சம் இருந்தால் அது நியாயமானதாகும்; அது விவேகத்தின் நற்பயன் என்று கூறுவேன்.

பல கருத்துகள் அடிப்படையில் இச்சட்டத் தொகுப்பை எதிர்க்கிறார்கள். இவ்விஷயங்களில் சட்டப் பேரவை தலையிடுவதை விரும்பாத உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்றம் அல்லது

நாட்டின் சட்டப்பேரவை இவ்விஷயங்களில் தலையிட உரிமை இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இந்த நாடாளுமன்றம் கலைக்கப் பட்ட பின்னர் பதவியேற்கும் உறுப்பினர்கள்தான் இது விஷயம் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டுமெனுமன அவர்கள் விரும்புகிறார்கள். முதலாவது கூறப்பட்ட கருத்தைப் பொறுத்தவரை, இது காலம் கடந்ததாகும். கடந்த 150 ஆண்டு களாக தொடர்ந்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டங்களின் பெயர் என்னவாக இருந்தாலும், அவை யாவும் இந்து சமுதாயத் திலும், வாழ்க்கை முறையிலும் இரண்டறக் கலந்துவிட்டன. இச்சட்டத் தொகுப்பு நிறைவேறிய பின்னர் அவ்வாறுதான் நடக்கு மென்று நான் கூறியதை என்னுடைய நண்பர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி ஏற்றுக் கொள்ளவில்லை. எங்களைப் பார்த்து - அதாவது அரசாங்கத் தரப்பில் உள்ளவர்கள் - 'மதச் சார்பற்றவர்கள்' எனக் குறை கூறினர். ராஜா ராம் மோகன்ராய் ஆரம்பித்து கேசவ சந்திரசென், தாகூர் மற்றும் மிகுந்த மதிப்பும், சிறப்பும் பெற்ற பெருமக்கள் வரை கொண்டு வரப்பட்ட சமுதாய சீர்திருத்தங்கள் நடைபெற்ற வங்காள மாநிலத்தைச் சேர்ந்தவர் டாக்டர் முகர்ஜி என்பதையும், அவருடைய சமூகச் சீர்திருத்தக் கருத்து என்ன என்பதை யும் தெரிந்து கொண்டுதான் இவ்வாறு பேசுகிறேன். இந்து சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ளவற்றை அவர் உண்மையிலேயே எதிர்க்கிறார் என்று நான் நம்பமாட்டேன். ஆனால், அநேகமாக 'தேர்தல்வாதி'யாக அவர் இருப்பார் எனத் தோன்றுகிறது; அவ்வா றென்றால், இதற்கு பரிகாரத்தையும் முடிவையும் பொதுத் தேர்தலில்தான் காணமுடியும். பொது மக்கள் அபிப்பிராயம் எப்பக்கத்திலுள்ளது என்பதை கூறுவது மிகவும் கடினம் என்பதை யும் ஒத்துக் கொள்கிறார். அவர் சரியாகத்தான் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். பொதுமக்கள் அபிப்பிராயம்....

**பண்டிட் மாளவியா** (உத்தரப் பிரதேசம்) : இந்து சட்டத் திருத் தத்தை ஒரு பிரச்சினையாக தேர்தலில் அரசாங்கம் முன்வைக்குமா?

**திரு. காட்கில் :** அரசாங்கம் நிலை எவ்வாறு இருப்பினும், அது ஏற்கனவே அவ்வாறுதான் உள்ளது. பொது மக்கள் அபிப் பிராயம் எந்தப் பக்கம் உள்ளது என்று கூறுவது கடினம் என்பதுதான் ஒரு குறை. இந்த அவையின் உறுப்பினர்களிடம் தாழ்மையாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: இப்போது அவையின் நம்பிக்கையை பெற்றுள்ள அரசாங்கத்துக்கு சமுதாய சீர்திருத் தத்தைக் கொண்டுவர எவ்வித உரிமையும் இருக்கிறதா? அல்லது இல்லையா? உரிமை மட்டுமல்ல; அரசமைப்பின் விதிகள் அரசாங் கத்தை வலியுறுத்துவதின் அடிப்படையிலும்கூட நீங்கள் எங்களுக்கு

சில குறிக்கோள்களை வரையறுத்துக் கொடுத்துள்ளீர்கள்; சில நெறிமுறைகளையும் தந்துள்ளீர்கள். இவற்றின் அடிப்படையில் நாங்கள் எதுவும் செய்யாவிட்டால், வாக்காளர்கள் எங்களைப் பார்த்து கூறுவார்கள்: எங்களை முட்டாள்களாக்கவே இந்த அரசியல் சாசனத்தை நிறைவேற்றி இருக்கிறீர்கள். இந்நாட்டின் மக்களில் பாதியாக உள்ள பெண்கள் பின்வருமாறு கூறுவார்கள்: சமூக நீதி பற்றிப் பேசுகிறீர்கள். சமூக நீதி எங்கே இருக்கிறது? (ஓர் உறுப்பினர் : கேள்வி): பொது வாக்கெடுப்பு நடத்தினால் இந்த உறுப்பினர் இந்த அவையின் பதவியை இழப்பார் என்று உறுதியாக நம்புகிறேன்.

**பண்டிட் மைத்ரா** (மேற்கு வங்காளம்): ஆறு பெண்களை மக்கள் தொகையில் பாதி என்று கூறுகிறாரா?

**திரு. காட்கில் :** என்னுடைய நண்பர் ஒத்துக்கொள்ளவதை விட என்னுடைய சகோதரிகள் பற்றி எனக்கு நன்றாக தெரியும். இருப்பினும், என்னுடைய நண்பர் கூறியதுபோல், இப்போதிலிருந்து மூன்று மாதங்களில் நிலைமை தெளிவாக இருக்கும். இந்து வாழ்க்கை முறை, திருமணம், விவாகரத்து மற்றும் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கின்ற பல சட்டங்களை சட்டமன்றம் வற்புறுத்தியுள்ளது. எனவே, இந்த நாடாளுமன்றத்திற்கு உரிமை இல்லை என்று இப்போது கூற முடியாது. இந்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறதா? அல்லது இல்லையா? இதுதான் கேள்வி. நான் ஏற்கெனவே இதற்குப் பதிலளித்திருக்கிறேன். இந்நாட்டிற்கான ஓர் அரசியல் சாசனத்தை உருவாக்கும் தகுதி இந்நாடாளுமன்றத்திற்கு உண்டு என்று இதுவரை கருதப்பட்டது. அப்படியிருக்கும்போது ஒரு சாதாரண சட்டத்தை நிறைவேற்ற இந்நாடாளுமன்றம் தகுதி படைத்தது அல்ல என்ற கருத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**பண்டிட் மைத்ரா :** அரசியல் சாசனத்தை அளிக்கவே இந்த நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**திரு. காட்கில்:** இந்நாடாளுமன்றம்தான் அரசியல் சாசனத்தை நிறைவேற்றியது. அதிலுள்ள அத்தியாயத்தில்தான் தற்காலிக ஷரத்துக்கள் உள்ளன. இந்த அத்தியாயத்தை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர். தற்போதுள்ள சட்டங்களில் 80 சதவீதம் மத்திய சட்டப் பேரவை அல்லது மாநிலச் சட்டப் பேரவைகள் நிறைவேற்றியவைதான் என்று நான் கூறினேன். தார்மீகத் திருமணம் பற்றி

டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி வாதத் திறமையுடன் பேசினார். இச்சட்டத் தொகுப்பு அதைத் தடை செய்யவில்லை. துஷ்யந்தன் - சகுந்தலை திருமண வகையிலிருந்து பிரதிவிராஜ்-சம்யுக்தா திருமண வகை வரை - அதாவது கந்தர்வ திருமணம் முதல் ராக்ஷஷ திருமணம் வரை சுதந்திரமான திருமணங்கள் செய்து கொள்ள வாய்ப்பு உள்ளது. இம்மன்றத்தின் உறுப்பினர் அல்லது பொது மக்கள் எட்டு வகைத் திருமண முறைகளையும் பின்பற்றலாம். இச்சட்டத் தொகுப்பு காதல் செய்வதைத் தடுக்கவில்லை; பெண்ணின் சம்மதத்துடன் பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக கடத்திச் செல்லுவதையும் இது தடை செய்யவில்லை. எட்டு வகை இந்து புனித திருமணங்களை பொறுத்தவரை, அவை எவ்வகையிலும் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. உங்களுக்குள்ள குறை என்ன? 'புனிதம்' என்ற வார்த்தை 'தார்மீக' என்று மாற்றப்பட்டது என்பதா? நாம் அனைவரும் விரும்பியதால் மாற்றப்பட்டது. அதில் எவ்விதப் பொருளும் இல்லை. எனவே, தார்மீக என்று வார்த்தையைப் பயன்படுத்துவோம். அது பொருத்தமுள்ளதாக இருக்கிறது. ஓரளவு பொருளுடையதாகவும் இருக்கிறது. அதனால்தான் 'தார்மீக' என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஒரு உறுப்பினர் :** அது தவறாக வழங்கும் பெயர்.

**திரு. காட்கில்:** இந்து 'திருமணம்' என்ற கருத்துப் படிவம் குறித்து டாக்டர் ஷியாம் பிரசாத் திறமையுடன் பேசினார். மெச்சத் தக்க அவருடைய உணர்வுகளை நானும் பகிர்ந்து கொள்கிறேன். திருமணம் இரண்டு உடல்கள் இணைவது என்பதைக் காட்டிலும் ஒரு வகை உயர்வு நிலை பெற்றதாகும். ஆத்மீக உயர்வுக்கான கூட்டு முயற்சியே அது. உலகின் எந்த மொழியிலும் கூற முடியாத உணர்வுகளின் பாதுகாவலன் அது என்று கூறலாம். இது ஒரு உன்னதமான கருத்துப் படிவமாகும். அதில் எனக்கு உடன்பாடு உண்டு. அதேநேரத்தில், இலட்சியம் சில கட்டத்தில் நெறிபிறழ்ந்துப் போவதும் உண்டு. சமுதாய தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சில காரியங்கள் ஒரு முன்னேற்ற சமுதாயத்தில் ஏற்படுவதை நாம் காண்கின்றோம். நம்முடைய மேற்கத்திய தொடர்பின் காரணமாக சில அம்சங்களில் குறைவாகவே காணப்படுகிறோம். நமது கலாசாரம் சிறியது என்று இதற்குப் பொருளல்ல. நாம் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நமக்கு சவால் விடப்படுவதாகவே இதன் அர்த்தமாகும்.

இந்த சவாலை ஏற்றுக் கொள்கின்ற தனித் திறமை நமக்கு உண்டு; அந்தத் திறமையை செயல்படுத்தி நாம் எனவே, என்னுடைய நண்பர் டாக்டர் ஷியாம் பிரசாத் முகர்ஜி குறிப்பிட்டுக் கூறிய சட்டங் கள் யாவும் முற்றிலும் சரியானவைகளே.

வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதைத் தடுப்பதற்கு என்ன இருக்கிறது? 1951 ஆம் ஆண்டில், இது சரியானதா? ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட சமுதா யத்தில் பிறந்ததினால், அவன் ஊருக்கு வெளியே நிரந்தரமாக குடியிருக்க வேண்டுமென்பது சரி தானா? தாழ்த்தப்பட்ட சமுதாயத் தில் இன்று பிறந்த ஒருவர், தனது தகுதியால் மதிப்புமிக்க ஒரு பதவியை வகித்தால், வேறு உயர் சாதியில் பிறந்தவருக்கு நாம் கொடுக்கும் சமூக அந்தஸ்து, சமூக அங்கீகாரம், சமூக வரவேற்பு ஆகியவற்றை அவருக்குக் கொடுக்கக் கூடாது என்பது சரிதானா? குணத்தைக் கணக்கில் கொள்ளாது வர்ணத்தை நிர்ணயிப்பதா? அல்லது குணத்தின் அடிப்படையில் அல்லது 'சாதனை' அடிப் படையில் நிர்ணயம் செய்வதா? உங்களுடைய சமத்துவ உணர்வுக்கு இது ஒரு சவால். முன்னர் பிரதிலோமா திருமணம் மீது விதிக்கப் பட்ட தடை முற்றிலும் உடைக்கப்பட்டால், நீங்கள் அதை வரவேற்க வேண்டும். அதை அடைவதற்குத்தான் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய வேறுபாடுகள் ஏன் இருக்க வேண்டும்? திருமணம் அவரவர்களது முழு விருப்பத்தால் நடைபெறுகிறது என்றால் அதற்கு சட்டம் ஏன் முட்டுக் கட்டையாக இருக்கு வேண்டும்? ஒரு சாதியைச் சேர்ந்தவர் மற்றொரு சாதியைச் சேர்ந்த வரை ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட அனைத்து தடைகளும் மறைய வேண்டும்; எந்த ஒரு பிராமணனும் வேத நூல் படிவம் ஒன்றை வைத்துக் கொண்டு பிறந்ததை நான் பார்த்ததில்லை; அதே போல் ஒரு சத்திரியன் வாளுடன் பிறந்ததை நான் பார்த்ததில்லை; ஒரு ஹரிஜன் துடைப்பத்துடன் பிறந்ததை நான் பார்த்ததில்லை. பிறவியில் அனைவரும் சமம்; சாவிலும் அனைவரும் சமம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சமத்துவ சூழ்நிலை நிலவுவதற்கு அரசாங் கமும் சமுதாயமும் ஆவன செய்ய வேண்டும். இக்கோட்பாட்டிற்கு எதிராக வாதிடுபவர், மனித சமுதாயத்திற்கு எதிராகவும், மனிதனை மனிதாக்கும் கொள்கைக்கு எதிராகவும் சுய மரியாதைக்கு எதிராக வும் வாதிடுபவராவார். இப்போது இங்கு நாம் என்ன செய்கிறோம்? நம்முடைய பழமையான பாரம்பரியத்திற்கு எதிராக எதுவும் நடக்க முயற்சி செய்யவில்லை. மாறாக, என்னுடைய நண்பரும சகாவுமான

டாக்டர் அம்பேத்கர் மீது நான் சுமத்தும் குற்றச்சாட்டு இது தான்: அவருக்கு வயது ஏறிக் கொண்டே போகிறது; அதனால் சமுதாய சீர்திருத்தம் பற்றிய ஆர்வம் அவருக்கு குறைந்து கொண்டே வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அவருடைய வார்த்தைகள் எரிசரங்கள் போல் இருந்தன. இன்று அவரிடம் நிதானம் குடி கொண் டுள்ளது. ஒரு நாள் அவர் கூறினார்: இந்த இந்து சட்டத் தொகுப்பில் அங்குமிங்கும் சில மாற்றங்கள் நீக்கங்கள் சேர்ப்புகள் செய்துள் ளேன். இந்த சட்டத் தொகுப்பை நான் நிறைவேற்றியாக வேண்டும். ஏனெனில், சில நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஒரு முயற்சியை இத்தலைமுறையினர் மேற் கொண்டனர் என்று போற்றப்படுவர். அவர் மிக ஆவலாக இதை எதிர்ப்பார்க்கிறார். விட்டுக் கொடுக் கின்ற மனப்பாங்கும் இப்போது அவரிடம் உள்ளது. எனவே, நாம் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை என்று எதிர்வாதமிடும் உறுப்பினர்களைப் பின்வருமாறு எச்சரிக் கிறேன்: திருமணம் விவாகரத்து... போன்ற விஷயங்களில் வயது வந்தோர் வாக்களிக்கும் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அடுத்த நாடாளுமன்றம் மிகவும் தீவிரமாகவே இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**சில உறுப்பினர்கள்:** இந்த விஷயத்தை அடுத்து வரும் நாடாளுமன்றத்திற்கு விட்டுவிடுங்கள்.

**திரு. காட்கில் :** ..... ஆரம்பத்தில் சொத்துரிமை விஷயத்தில் அது (நாடாளுமன்றம்) அவ்வளவு தீவிரமாக இருக்காது. திருமணம், விவாகரத்து ஆகியவை பொறுத்தவரை, நாட்டின் என்னுடைய பகுதியில் - மகாராஷ்டிரம் - வாழும் மக்களின் மனப்பாங்கு, பொது நோக்கு பற்றி நான் அறிந்தவரை எனக்கு சிறிதளவும் சந்தேக மில்லை.

**திரு. பட் (பம்பாய்) :** எல்லாவற்றையும் அடுத்துவரும் நாடாளுமன்றத்தின் முடிவுக்கு விட்டுவிடுங்கள்.

**திரு. காட்கில் :** அதை நாம் வரவேற்றிருப்போம். அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சியங்கள், நோக்கங்கள் முடிந்தவரை செயலாக்கப்படுவதற்கு நாம் ஆவன செய்ய வேண்டு மென்ற கடமை நம்மீது புகுத்தப்படாமலிருந்தால் நீங்கள் கூறுவதை நான் ஒத்துக் கொண்டிருப்பேன். இச்சட்டத் தொகுப்பை ஆதரிக்க நான் முன்வந்துள்ளேன்.

**திரு. பட் :** வானம் இன்று இடிந்து விழுந்துவிடாது.

**திரு. காட்கில் :** இது நிறைவேற்றப்பட்டால் சொர்க்கலோகம் இடிந்து விழுந்து விடுமா? வானம் மேலே, நாம் கீழே உள்ளோம். இங்கு என்ன நடைபெறுகின்றன என்பதைக் கவனியுங்கள்.

**திரு. ஆர்.சி. உபாத்தியாயா** (ராஜஸ்தான்) : அதனால்தான் மழை பெய்யவில்லை.

**திரு. காட்கில் :** டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி பின்வருமாறு கேட்டார்: ''இந்துக்களுக்கு மட்டும் ஏன் ஒருதார மணச் சட்டம்?'' நான் ஒரு கேள்வி கேட்கிறேன்: ஒருதார மணம் நல்லது என்றால், மற்றொருவர் அதனைப் பின்பற்றாததால் அது மோசமானதாகிவிடுமா? ராமராஜ்யம் பற்றிப் பேசுகிறோம். ராமபிரான் வாழ்விலும், செயலிலும் சிறப்புடையது எதுவும் இருக்குமானால், அது அவருடைய 'ஏக பத்னிவிரதம்'தான். நீங்கள் உண்மையாக இருக்கிறீர்களா என்பது பற்றி நான் சோதிக்க விரும்புகிறேன். நீங்கள் ராமராஜ்யம் விரும்புகிறீர்களா? அப்படியென்றால், குறைந்தது இச்சட்டப் பகுதிக்காவது ஆதரவு தாருங்கள். உங்கள் வசதிக்கேற்ப தேர்தல் நேரத்தில் மட்டும் ராமராஜ்யம் பற்றி பேசுவது நல்லது அல்ல. அது உங்கள் வசதிக்குகந்ததாக இல்லாத போது.....

**திரு. ஆர்.கே. சௌதுரி :** தசரதனது ராஜ்யம் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? ராமனின் தந்தை தசரதன் என்ன செய்தார்.

**திரு. காட்கில் :** பழைய தலைமுறையினரிடமிருந்து புதிய தலைமுறை எய்திய ஒரு முன்னேற்றம் இது. மூன்று தாய்களால் ஏற்படும் இடையூறுகள் பற்றி அவர் அறிந்திருந்தார். தனது மகன்கள் ஒருத்தியைத்தான் (மணக்க) வேண்டுமென்று அவர் முடிவு செய்தார். வாழ்க்கை முறை பற்றிய விஷயங்கள் எவ்வாறு அபிவிருத்தி அடைந்து வருகின்றன என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

**ஓர் உறுப்பினர் :** விவாகரத்து அப்போது இருந்ததா?

**திரு. காட்கில் :** அந்த வழக்கம் இருந்திருக்கிறது.

नष्टे मृते प्रव्रजिते क्लीबेच पतिते पतौ।
पतिरन्यत् विधीयते।

(கணவன் காணாமல் போனால், அயல்நாட்டிற்கு சென்று விட்டால், ஆண்மை இழந்து விட்டால், அல்லது நெறிகெட்டுப் போனால், மரணமடைந்தால், வேறு ஒருவரை கணவனாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.)

இந்த சுலோகத்திலிருந்து இது தெளிவாகிறது.

விவாகரத்து நல்லது என்றால், முஸ்லீம் சமுதாயத்திற்கும் அதை விஸ்தரிக்கலாம் அல்லவா என்பது டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜியின் வாதமாகும். அரசாங்கம், அது இந்த அரசாங்கமானாலும் சரி அல்லது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப் பேற்கும் அரசாங்கமானாலும் சரி மதவேறுபாடின்றி, இந்த சட்டம் எல்லோருக்கு பொருந்துகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்காது என்பதில் எனக்குச் சந்தேகம் எதுவு மில்லை.

**சில உறுப்பினர்கள் :** இப்போது ஏன் இல்லை?

**திரு. காட்கில் :** பம்பாயில் ஒருதார சட்டம் பற்றி விவாதம் நடைபெற்ற போது டாக்டர் முகர்ஜி நேற்று மேற்கொண்ட அதே விமர்சன முறையில் பம்பாய் சட்டப் பேரவையில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். இத்தகைய ஒரு சட்டம் கொண்டுவரப்படுவதை பம்பாய் அரசாங்கம் வரவேற்கும் என்று தனது அமைச்சர் மூலம் தெரிவித்தது எனக்கு ஞாபகத்திலுள்ளது. ஆனால் இவ்வாறு செய்ய இந்த அரசாங்கம் பயப்படுகிறது என்றும் முஸ்லீம் சமுதாயத்தின் உணர்வினைப் புண்படுத்துக்கின்ற எதையும் அது மேற்கொள்ளாது என்றும் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி நினைக்கிறார். இந்நாட்டு மக்களில் 90 சதவீதமாக உள்ள இந்துக்கள் இந்த நட வடிக்கையை ஏற்றுக் கொண்டால், மீதியுள்ள பத்து சதவீத மக்களுக்குச் சட்டமியற்ற அரசாங்கத்தின் கரங்களை இது வலுப்படுத்துமா அல்லது வலுப் படுத்தாதா என்று சிந்திக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு தெரிந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே மீண்டும் நான் ஞாபகப்படுத்த வேண்டும். 1930ல் முதலாவது குழந்தைகள் திருமணக் கட்டுப்பாட்டு மசோதா பரிசீலனையில் இருந்தது. பின்னர் 1936ல் மூலப்படிவம் விவாதிக்கப்பட்டபோது என்னுடைய நண்பர் திரு.பி. தாஸ் திருத்தங்களை முன்மொழிந்தார். முஸ்லீம் சமுதாயத் தின் இன சட்டத்தில் இது தலையிடுகிறது என்ற காரணத்தின் அடிப்படையில் இந்த அவையின் உறுப்பினர்களாக இருந்த ஏனைய

முஸ்லீம் தலைவர்கள் எதிர்த்தபோதிலும், திரு. ஜின்னா இதை ஆதரித்தார். முல்லாக்கள் என்ன கூறினாலும், மதத்திற்கும் பொது அறமுறைக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் பொது அறநெறி முறைதான் மேலோங்கி நிற்கும் என்று ஜின்னா கூறினார். சட்டப் பேரவையின் விவாதப் பதிவேடுகளிலிருந்து இதுவே அவரின் வாதம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஒரு மனைவிக்கு மேல் வைத்திருப்பது பொது அறநெறிக்கு எதிரானது என்று நீங்கள் நம்பினால், ஒரு தார முறையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். சமுதாயத்தின் உயர்ந்த நலனுக்கும், தனி நபர் மகிழ்ச்சிக்கும் ஒரு தாரம்தான் தேவை. முஸ்லீம் சமுதாயத்திலுள்ள முற்போக்கு சக்திகள் இதனை உடனடியாக ஏற்றுக் கொள்ளும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. முற்போக்கு எண்ணமற்றவர்கள் இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதனை அமலாக்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அதுபற்றி எனக்கு சந்தேகமில்லை. அந்த அரசாங்கத்தில் நான் ஓர் உறுப்பினராக இருக்கும் நிலை ஏற்பட்டால், என்னால் முடிந்தவரை அதை அமலாக்குவதற்கு முயற்சி செய்வேன். இது என்னுடைய சொந்த உணர்வாகும். இது அமிர்தம் என்றால், யாரோ சிலர் அதைச் சாப்பிடவில்லை என்பதால், அது விஷயமாகிவிடுமா? இது தான் என்னுடைய வாதமாகும். இவ்வாறு வாதிப்பது இந்த அவையின் அறிவாற்றல் சிறப்பிற்கு இழுக்கானதாகும் என்று கருதுகிறேன்.

விவாகரத்து பற்றிக் கூறும்போது, திருமணமான ஒவ்வொரு தம்பதியரும் விவாகரத்து செய்து கொள்ள வேண்டுமென்று யாரும் வாதிடவில்லை. அதே நேரத்தில், சமுதாய பதட்டம் குறைவதற்கு அரசாங்கம் ஆவன செய்வது அதன் கடமையாகும். ஒவ்வொருவரும் அதிகபட்சம் திருப்தியும், சந்தோஷமும் கொண்டவர்களாக வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முயற்சிகள் செய்ய வேண்டும்; அத்தகைய அதிகாரமுள்ள நீதி நிருவாக அமைப்புகளை அல்லது சட்ட ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதற்கான நிலைமைகளை அரசாங்கம் உருவாக்குவது அதன் கடமையாகும். இந்நாட்டில் எண்பது சதவீதத்தினர் அல்லது அதற்கு அதிகமான மக்கள் ஒரு வகை விவாகரத்து வழக்கத்தை வைத்துள்ளனர். அவர்கள் அதுபற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் ஐந்து அல்லது பத்து சதவீதத்தினர் அல்லது எண்ணிக்கை எப்படி இருப்பினும், திருமண வாழ்வின் நிலைகள் காரணமாக அல்லது வேறு பல காரணங்களுக்காக - அனேகமாக நவீன காலப்பெண் மிகவும் அறிவாற்றல் மிக்கவள் - தன்னுடைய கணவனுடன் சேர்ந்து வாழ்வது முடியாத காரியம் என்று தெரிந்து கொள்ளும் பட்சத்தில் திருமணம் ஆயுள்கால

தண்டனையாக அவளுக்கு இருக்கக் கூடாது. இருவரில் ஒருவர் இறந்தாலொழிய சந்தோஷயம் என்பது இருக்காது. இத்தகைய சூழ்நிலைகள் அதிகம் இல்லை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விதிவிலக்குகள் இருக்கவே செய்கின்றன. எனவே, அதற்காக சில வழிவகைகள் இருக்க வேண்டும். விவாகரத்தை நீங்கள் கடுமை யானதாக ஆக்கலாம். மேற்கத்திய நாடுகள் போல் அதை மலிவான தாக ஆக்கிவிடக் கூடாது. என்னைப் பொறுத்தவரை, நீங்கள் நிறை வேற்றும் இச்சட்டம் மிகவும் பிற்போக்கான ஆஸ்தீக சட்டமாகும். என்னிடம் கேட்டால் மனஉறவு இருவருக்கும் போதுமானதாக இல்லை என்று தெரிந்தால்கூட விவாகரத்தளிக்கலாம் என்று சொல்லுவேன். விவாகரத்துக்கான ஷரத்துக்களின்கீழ் என்ன நிபந் தனைகள் உள்ளன? இரண்டு கட்சிக்காரர்களும் சந்தோஷமாக இருக்க முடியவில்லை என்பது ஒன்று. கற்பிழப்பு அல்லது கற்பிழப்பு குற்றச்சாட்டு அல்லது கொடுமைப்படுத்துதல் அல்லது கைவிட்டு விடுதல் ஆகிய இன்னல்களை அனுபவிக்க வேண்டுமா? அதன் நோக்கம் என்ன? எப்போதும் ஓட்டல்களில் தங்கி, அவ்விதம் தங்கியதற்கான பட்டியல்கள் முதலியவற்றை சாட்சியங்களாக அவர்கள் அளிக்க வேண்டுமா? ஒத்துப் போகாதவர்கள் பிரிந்து போகட்டும். அவ்வாறு செய்வதே நியாயமானதாகவும் உண்மை யானதாகவும் இருக்க முடியும். அவ்வாறு செய்வதால் அதிகப்பட்ச மகிழ்ச்சியை அவர்கள் பெறலாம். விவாகரத்து சமுதாய சீரழிவில் முடியும் என்று சிலர் நினைக்கிறார்கள். மக்களில் 90 சதவீதத் தினருக்கு விவாகரத்து வசதி கிடைக்கிறது. இருப்பினும் தலைமுறை தலைமுறையாக சமுதாயம் முன்னேறி வந்துள்ளது. இம்முறை யினை மீதியுள்ள ஐந்து அல்லது பத்து சதவீத மக்களுக்கு விஸ்தரிப் பதால், சமுதாயத்தின் ஒருமைப்பாட்டையே அது மாற்றும் என்று நான் கருதவில்லை. மற்றொரு வகையில், பின்விளைவுகள் யாவும் நன்மை பயப்பதாகவே இருக்கும். உண்மையில் திருமணங்களைக் கட்டுப்படுத்துதல், மற்றும் கோத்ரத்திற்குள்ளேயே திருமணம் செய்யக் கூடாது என்று கூறும் பழைய தடை ஆணைகள் யாவும் நல்ல காரணங்களின் அடிப்படையிலுள்ளன. இக்கட்டுப்பாடுகள் யாவும் குடும்ப வழி மேம்படுத்தும் கருத்தின் அடிப்படையில் கூறப்பட் டவை. இந்த ஆணைகளின் கருத்து இவ்வாறு இருந்தால், சாதிக்கு வெளியே ஓர் இளைஞன் அல்லது பெண் திருமணம் செய்து கொள்ளுவதால் ஏற்படும் நன்மை பெரும் பொருத்தமாக அமையும். சந்ததிகளில் வீரம் இருக்கும்; சிறப்பான குணநலன்கள் உள்ளவர் கள் பிறப்பார்கள். விஞ்ஞான ரீதியில் இவ்விஷயத்தை விரிவாகக் கூற இது தருணமுமல்ல; நேரமும் அல்ல. சபிந்தாக்கள் அல்லது சகோத்ரங்

களிடையே திருமணமாவதற்கு எதிரான இவ்வகை தடை ஆணைகளின் பின்னணியில் இன மேம்பாட்டு இயல் கருத்துக்கள் இருந்தன என்பதை மட்டும் நான் மேலும் சொல்லுவேன். அவை மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

**திரு. ஏ.சி. சுக்லா** (மத்தியப் பிரதேசம்) : வயதானவர் இளம் பெண்ணைத் திருமணம் செய்வது மேம்பாட்டுக்காகவா? இல்லையா?

**திரு. காட்கில் :** வயதானவர் இளம் பெண்ணைத் திருமணம் செய்வதை நீங்கள் தடை செய்ய வேண்டும்.

**திரு. ஏ.சி. சுக்லா :** ஒரு வயதானவருக்கும் இளம் பெண்ணுக்கும் பிறந்த குழந்தையின் நிலை என்ன?

**திரு. காட்கில் :** முடிந்தவரை அது உடல் நலமுள்ளதாகவே இருக்கும்.

இந்து சமுதாயத்தின் முற்போக்குத் தன்மையைப் பாதிக்கும் அனைத்துச் சட்டங்களும் அல்லது வழக்கங்களும் நீக்கப்பட வேண்டும். பிரம சமாஜ், சதாநன சமாஜ் பற்றி டாக்டர் எஸ்.பி. முகர்ஜி மேற்கோள் ஒன்று காட்டினார். ராஜாராம் மோகன்ராய் முதல் ரானடே, திலக் மற்றும் அகர்கர் வரை, நாம் பெருமைப்படும் சிறந்த சமூக சீர்திருத்தவாதிகள் இருந்திருக்கின்றனர். அத்தகைய சீர்திருத்தப் பணி ஏன் நின்றுவிட்டது? கடந்த காலத்தில் செய்யப்பட்டது நல்லவையாக இருந்தால், முன்னேற்றத்திற்கு அத்தகைய கொள்கைகளை நாம் தொடர்ந்து பின்பற்றி இருக்க வேண்டும். அத்தகைய முற்போக்கான வழிமுறையை நாமும் பின்பற்றினால், அதற்கு நீங்கள் ஏன் இப்போது பயப்பட வேண்டும்? தலைசிறந்த மனிதனாக மனு இருந்தார்; அவர் இறந்த பின்னர் வரும் நூற்றாண்டுகளில், மனுவைப் போன்ற சிறந்த மனிதர் இருக்க முடியாது என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்? யாக்ஞவல்கியர் போன்று சிறந்த நல்ல மனிதனாக திரு. அகமது உள்ளார் என்று நினைக்கிறேன். ஜெநூவா மட்டும் இல்லை. மற்றபடி, அவர் ஓர் அற்புதமான வியாக்யான கர்த்தா. மனு அல்லது கர்ஜியா போன்ற உயர்ந்த மனிதர்தான் டாக்டர் அம்பேத்கர்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** இவர் ஒரு மனு.

**திரு. காட்கில் :** இதர வயதான குடிமகன் போன்று நானும் நல்லவன்தான். இன்றைய தலைமுறையினர் சமுதாயத்தைத் திருத்தியமைக்க முடியாது என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்? இந்தியா ஒரே குடையின் கீழ், ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக பத்து அல்லது பதினோரு நூற்றாண்டுகளாக இருக்க முடியவில்லை. இத்தகைய தலைமுறையினர் இப்பணியினைச் செய்து முடித்திருந்தால், சமுதாயத் துறையில் சில முன்னேற்றங்களைச் செய்து சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் தகுதி இத்தலைமுறையினருக்கு இருக்கிறதல்லவா? இக்கேள்விக்கு எனக்கு விடையளியுங்கள். நாம் பாராட்டிக் கொள்கிறோம். அரசியலில் பெரிய சாதனை நிகழ்த்தியதாக நம்மை நாமே சிலாகித்துக் கொள்கிறோம். சமுதாயத் துறையிலும் ஒரு வகை சாதனை படைக்க ஏன் அஞ்சுகிறீர்கள்? இத்தாழ்வு மனப்பான்மை உங்களுக்கு ஏன்? உண்மையில், மனு செய்தது நல்லவைதான். ஆனால்,

"तातस्य कूपोयमिति ब्रुवाणा
क्षारं जल कापुरुषाः पिबन्ति"

ஏனென்றால், என்னுடைய பாட்டனின் பாட்டன் இக்கிணற்றைத் தோண்டினார்; இக்கிணற்றின் தண்ணீர் உப்பு; இருந்தாலும் நான் குடிக்க வேண்டும். ஆம், இது என்னுடைய உள்ளப் பாங்காகும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** அப்படியானால், உங்களுடைய பூணூலை ஏன் நீங்கள் தூக்கி எறியக்கூடாது?

**திரு. காட்கில் :** அதை நான் தூக்கியெறிந்துள்ளேன். இதோ பாருங்கள்.

**பண்டிட் மாளவியா :** மாண்புமிகு அமைச்சர் அவர் விரும்பும் போதெல்லாம் அதை அணிந்து கொள்கிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. காட்கில் :** இல்லை; அவ்வாறு செய்யவில்லை. இது என்னைப் பற்றியதாகையால், இது பற்றி சற்று விரிவாகக் கூற அனுமதியுங்கள்.

**பிரஜேஷ்வர் பிரசாத் (பீகார்) :** துணைத்தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்கு பிரசினை. மாண்புமிகு அமைச்சர் அவையில் வயிற்றைக் காட்டுவது நாடாளுமன்ற முறை சார்ந்ததா?

**திரு. காட்கில் :** சரி; எதிர்ப்புயிருந்தாலும் அது பாராட்டப் பட்டுள்ளதல்லவா!

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது பற்றிய கேள்வி எழுப்பப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. ஒருவர் எதை அணிந்துள்ளார் என்பன போன்ற கேள்விகளை கேட்பது முறையாகாது. இது சிக்கலை ஏற்படுத்தும்.

**திரு. பட் :** நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். யக்ஞம் நடைபெறும்போது அவர் யக்னோபவிதா செய்ய முடியுமா?

**திரு. காட்கில் :** உறுப்பினரின் ஆவலை என்னால் நிறைவு செய்ய இயலும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த மசோதாவை ஆதரிப் பதற்காக மாண்புமிகு அமைச்சர் தம்முடைய யக்னோபவிதாவை விட்டுவிட வேண்டாம். அவர் அதை வைத்துக் கொண்டே, இந்த மசோதாவை ஆதரிக்கலாம்.

**திரு. காட்கில் :** சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் தானா சிறையிலிருந்த போது இந்து மதம் பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். நான் ஒரு நல்ல பிராமணன் அல்ல என்று நினைத்தேன்; ஜெனு வைத்திருப்பதால் மட்டும் நான் பிராமணனாக முடியாது; எனவே அதை விட்டுவிட்டேன். நான் ஒரு நல்ல பிராமணனாக இருக்கும் போதுதான் ஜெனுவை அணியமுடியும். சோமநாத் பிரதிஷ்டை விழாவில் நான் கலந்து கொண்ட போது அணிந்தேன். அப்போது எனக்கு ஓர் அகத் தூண்டுதல் உணர்வு ஏற்பட்டது. அங்கிருந்தபோது உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற்றதை உணர்ந்தேன். சற்று நேரம் அதை அணிந்திருந்தேன். பின்னர் அதை தூக்கி எறிந்து விட்டேன்; ஏனெனில் மேலே சுவர்க்கத்திலிருந்து கீழே தூசியில் விழுந்தேன். கீதையில் கூறப்பட்ட மாபெரும் இலட்சியங்களைப் பின்பற்றும் பிராமணன் ஜெனு அணிவதுதான் நியாயமாகும்.

अभय, अहिंसा, अस्तेय, आर्जवम्

(அஞ்சாமை, அகிம்சை, திருடாமை மற்றும் நேர்மை முதலிய இலட்சியங்கள் வேண்டும். மற்றபடி பல்வகையான காரியங்களைச் செய்து கொண்டு ஒரு ஜெனுவை அணிவதால் நன்மை இல்லை.)

எவ்வித மாற்றங்களையும் செய்ய நமக்குத் தகுதியுள்ளதா என்பது இப்போதைய கேள்வி. காலம் காலமாக இந்து சமுதாயம் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்பதுதான் அதன் வரலாறு. மற்றபடி பல்வேறு **ஸ்மிருதிகள்** இருப்பதையும், ஒரு **ஸ்மிருதி** ஒன்றையும், மற்றொன்று வேறு ஒன்றையும் நிர்ணயிப்பது பற்றி நீங்கள் எவ்வாறு விளக்கமளிக்க முடியும்? இதற்கு விளக்கம் என்ன? சமுதாயம் தொடர்ந்து முன்னேறி வருகிறது; சடாச்சரம் அல்லது வியாவகார தர்மத்துக்கு ஏற்ப ஏதாவது ஒன்று தேவைப்படுகிறது. சிறந்த சாஸ்திரி ஒருவர் சனாதன தர்மம் பற்றி தந்த விளக்கம் வருமாறு:

सनातनः नित्य नूतन :

(நித்தியம் எப்போதும் புதியதே)

மாற்றம் என்பது இயற்கையின் இயல்பு. மாற்றம் செய் அல்லது செத்து மடி. முன்னேற்ற சமுதாயம் நம்முடைய சமுதாயம்; அது ஆற்றல் மிக்கது. டாக்டர் முகர்ஜி குறிப்பிடுவதும் இதைத்தான். எனவே, மாறிவரும் சூழ் நிலைகளுக்கேற்ப நாமும் தொடர்ந்து மாற்றத்தைத் தழுவிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால் உறுதியாக, நிலையாக எதுவும் இல்லை என்று அர்த்தமல்ல.

**பண்டிட் மைத்ரா :** மாண்புமிகு அமைச்சர் இப்போது கூறியது போல் சமஸ்கிருத இலக்கியத்தில் எங்கே சனாதன தர்மம் விளக்கப் பட்டுள்ளது? சனாதன என்பது.....

सदाभव इति सनातन : நித்யம் என்பது அதன் பொருள்.

இந்த வார்த்தையின் சொல்லிலக்கணம் இதுதான். இச் சொல்லின் இலக்கண அர்த்தமும் இதுதான்.

**திரு. காட்கில் :** சனாதனம் என்ற வார்த்தைக்கு இலக்கண முறையில் தரப்படும் பொருளை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

**திரு. பட் :** காகா சாஹப் அவருடைய சொந்த விளக்கத்தை வைத்துக் கொள்ளலாம்.

**திரு. காட்கில் :** அது குறைந்த முக்கியத்துவமுள்ளது அல்ல. காகா சாகிப்புக்கு கொஞ்சம் சமஸ்கிருதம் தெரியும். வரலாற்றுக் காலம் முழுவதும் முன்னேறிச் செல்லுவதற்கான மனப்போக்கு இந்து

சமுதாயத்திற்கு இருந்து வந்துள்ளது. அதனை இப்போது நாம் ஏன் நிறுத்த வேண்டும்? நவீன சூழ்நிலைமைகளில் மாற்றங்களை சட்டம்தான் செய்ய வேண்டும். வழக்கங்கள் அல்ல. நாளை ஏதாவது தேவைப்பட்டால், இன்றைய தலைவர்கள் சட்டப் பேரவை மூலம் மாற்றங்களைச் செய்வார்கள். அமைதியான, ஒரு சூழ்நிலையில் இவ்விஷயத்தை பரிசீலனை செய்ய வேண்டுமென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். சில தீமைகள் இருக்கின்றன என்று ஒத்துக் கொண் டால், அவற்றை நாம் ஏன் நீக்கக் கூடாது? குழந்தை திருமணக் கட்டுப்பாடு சட்டம் குறித்து என்னுடைய நண்பர் திரு.பி. தாஸ் திருத்தம் முன்மொழிந்து பேசியபோது, ஒரு வயதிற்குட்பட்ட 1300 விதவைகள் இருக்கிறார்கள் என்று நான் சொன்னது ஞாபகத்தி லுள்ளது. அது ஒரு சமூகத்தீமை இல்லையா? ஓராண்டுக்கு கீழ்ப்பட்ட சிறுமியர் விதவைகளாக உள்ளனர். அவர்கள் மறுமணம் செய்து கொள்வதை நீங்கள் தடுத்தால், சமுதாயத்தில் ஏற்படும் விளைவு எவ்வாறு இருக்கும்? நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் நன்மையே ஏற்பட்டுள்ளது. இன்று சராசரி திருமண வயது கணிச மாக உயர்ந்துள்ளது. சிறு வயதில் திருமணம் செய்வது இப்போது பிரச்சினை அல்ல; திருமணம் செய்து கொள்வதே பிரச்சினைதான்.

நேரம் காலை 11 மணி

1930ல் இச்சட்ட நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. அனைத்து சமூகங்களும் ஒன்று சேர்ந்து கொண்டதால் எதிர்ப்பு மிகவும் வலுவாக இருந்தது. அப்போது கொடுக்கப்பட்ட விளக்கம் எனக்கு ஞாபகத் திற்கு வருகிறது. சட்டம் அமலுக்கு வருமுன் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கல்கத்தாவிலிருந்து சந்திரநாகூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப் பட்டது. ஏனென்றால், சந்திரநாகூர் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதியல்ல. சிந்து நதியின் நடுப்பகுதிக்கு ஆயிரக்கணக்கான குழந் தைகள் கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது; ஏனென்றால், அப்போது இச்சட்டத்தைப் பொறுத்தவரை அயல் நில அதிகார ஆட்சிக்கு அப்பாற்பட்ட பகுதி எதுவுமில்லை. திரு.பி.தாஸின் ஆலோசனைப்படி அயல் நில அதிகார ஆட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட பிராந்தியம் என்ற அம்சம் இணைக்கப்பட்டது. சந்தேகத்திற்கு இடமின்றி தீமைகள் பல இருப்பது பற்றி தகராறு இல்லை; இத்தகைய தீங்குகள் தொடர வேண்டுமென்று அல்லது அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்று எவரும் விரும்பவில்லை. இதற்குப் பரிகாரம் கடுமையாக அல்லது சற்று கடுமை தணிந்ததாக இருக்க வேண்டுமா என்பது பற்றி

எதிர்க்கட்சி உறுப்பினர்கள், என்னுடைய நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத் கருடன் விவாதித்து ஒரு நடுநிலையான முடிவுக்கு வரலாம். முன்னேற்றத்திற்கான சில நடவடிக்கைகளை இந்த அவை எடுக் கட்டும்; உண்மையான அல்லது வேண்டுமென்று எழுப்பப்பட்ட எதிர்ப்பு இருந்த போதிலும் இந்து சமுதாயத்தைச் சீர்திருத்த உரிய நடவடிக்கை எடுக்க அவைக்கு தைரியம் இருந்தது என்ற விவரம் வரலாற்றில் இடம் பெறட்டும் என்பது என்னுடைய ஆலோசனை யாகும். அவ்வாறு செய்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப் பட்ட முறையிலும், கூட்டாகவும் புகழாரம் கிட்டும். அவையினர் இத்தருணத்தில் இதைச் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறேன். ஆலோசனையாக கூறப்பட்ட அனைத்தையும் நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல. அல்லது எல்லாவற்றையும் நிராகரிக்க வேண்டும் என்பதுமல்ல; மூடிய மனத்துடன் நாம் இருக்க வேண்டாம். திறந்த மனத்துடன் இருப்போம். சமுதாயத் தில் தீமைகள் உள்ளன என்பதை ஒத்துக் கொள்வோம். இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் தேவை என்பதையும் ஒத்துக் கொள்வோம். இவற்றைத்தான் நான் கூறுவேன். என்னுடைய நண்பர் மாண்பு மிகு டாக்டர் அம்பேத்கர் அறிமுகம் செய்துள்ள இந்து சட்டத் தொகுப்புக்கு அவை ஆதரவு அளிக்குமென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** பண்டிட் குன்ஸ்ரூவை பேசுவதற்கு நான் அழைக்கும் முன்னர், முதல் வாசிப்பின்போது விவாதம் நடைபெறுவது போன்று உரையாற்றுகிறார்கள்; அவை முன்பு உள்ள கூற 2பற்றி இவர்கள் பேசவில்லை என்பதை நான் கூற வேண்டும். கூறு 2ல் நான்கு உட்கூறுகள் உள்ளன. அது பற்றி திருத் தங்கள் குறிப்பிடுகின்றன. சரியான கூறு பற்றி பெரும்பான்மை யான உறுப்பினர்கள் பேசவில்லை. இந்த அவை இதை தள்ளுபடி செய்யவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ வேண்டுமென்று உறுப் பினர்கள் விரும்புகிறார்கள் என்பது தெளிவாக உள்ளது. உண்மை யில், இன்று ஒரு கட்டத்தில் இதை நிறுத்தி விடலாமென்று நினைத்தேன்....

**பல உறுப்பினர்கள் :** இல்லை; இல்லை.

**பண்டிட் மைத்ரா :** இது ஒரு முக்கியமான கூறு, இம்மசோதா வின் உயிர் நாடி போன்றது இது.

**டாக்டர் அம்பேத்கர் :** விவாதத்தைப் பத்தாவது நாளில் கூட நிறுத்திக் கொள்வதை நான் ஏற்றுக் கொள்வேன்.

**பண்டிட் மைத்ரா:** 15 நாளில் அவ்வாறு செய்யுங்கள். இதைச் செயற்படுத்துதல் ஒருவரின் விருப்பத்தைப் பொறுத்தது என்று முடிவானால், இப்போதே இதை நாம் நிறைவேற்றுவோம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதற்கு முன்னர் இக்கூறு பற்றி 17 அல்லது 18 உறுப்பினர்கள் பேசியுள்ளனர்.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம்): இவை அனைத்தும் முழுமையாக மறந்துபோயின.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதனால்தான் எல்லாக் கூறுகள் பற்றியும் குறிப்பிட்டுப் பேச அனுமதித்தேன். இச்சட்ட முன் வரைவு முழுவதும் பற்றித் தான் விவாதம் நடைபெற்று வருகிறது. கூறு 2 பற்றி மட்டுமல்ல. எப்படியும் விவாதம் முடிவடைய வேண்டும். எனவே, கூறு 2 மற்றும் இதற்கான திருத்தங்கள் சம்பந்தமான விஷயங்கள் பற்றி மட்டும் விவாதிக்க வேண்டுமென்று உறுப் பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விவாதத்தைக் குறைக்க நான் விரும்பவில்லை. ஆனால் இத்தகைய விவாதத்திற்கு முடிவே இருக்காது. பண்டிட் குன்ஸ்ருவைப் பேசுமாறு நான் அழைக்கும் போதெல்லாம், அவைக்கு சில ஆலோசனைகள் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. நான் கூறுபவை குறிப்பாக அவருக்கு மட்டும் கூறப்படுபவையல்ல.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** சற்று முன்னர் பேசிய மாண்புமிகு அமைச்சருக்குப் பதில் கூற வேண்டும். அவர் கூறுவதை நாம் கேட்க வேண்டாமா!

**பண்டிட் மைத்ரா :** முதல் இரண்டு பகுதிகள் பொறுத்தவரை விவாதம் தொடர்ந்து நடைபெறும். இச்சட்டத் தொகுப்பில் கூறுகள் 2 மற்றும் 4 அடிப்படையான கூறுகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்விரண்டையும் நிறைவேற்றிய பின்னர், எல்லைப்புற மெயில் அல்லது பஞ்சாப் மெயில் வேகத்தில் நீங்கள் போகலாம். சமுதாயத் திற்கு இச் சட்டத்தைப் பொருந்துவதாக ஆக்குவதுதான் முக்கிய விஷயமாகும். 16 அல்லது 17 உறுப்பினர்கள் பேசியுள்ளதை வைத்து நீங்கள் முடிவு எதுவும் செய்துவிடக் கூடாது. 30 கோடி மக்களுக்கான சட்டத்தை நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்கள். எனவே இதுபோன்ற மிக முக்கியமான விஷயம் மிகவும் ஆழமாக பரிசீலிக்கப்பட வேண்டும். அவ்வப்போது, ஒழுங்கற்ற முறையில் இம்மசோதா

எடுத்துக் கொள்ளப்பட்டால் அது நம்முடைய குற்றமல்ல. அறிமுகம் செய்கிறார்கள்; எதிர்ப்பு ஏற்படும் போது நிறுத்தி வைத்துக் கொள் கிறார்கள். பிறகு ஆதரவு கிடைக்கும் போது மீண்டும் அதை பரி சீலனை செய்ய விரும்புகிறார்கள். அது நம்முடைய குற்றமல்ல. சிறப்பு கூட்டத் தொடரில் கொண்டு வந்திருந்தால் முழுநேரத் தையும் அவை அதற்காக ஒதுக்கியிருக்கும். விவாதம் நடந்தபோது நாம் என்ன கூறினோம், இப்போது நமது வாதம் என்ன என்பதை நன்கு அறிந்திருப்போம். இப்போது நம்முன் உள்ளது பழைய சட்ட முன் வரைவு அல்ல; இது புதியது.

**சர்தார் டி.எஸ். மான்** (பஞ்சாப்) : ஐயா, முன்மொழியப்பட்ட மசோதாவின் மீதான விவாதத்தை முடிவு செய்யப்போவது குறித்து நீங்கள் இங்கு குறிப்பிட்டதாலும், அதுபற்றி அச்சம் இருப்பதாலும், சில சமுதாயங்கள் சம்பந்தமாக திருத்தங்கள் கொண்டுவந்துள்ள உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப் பளிக்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். அப்போதுதான் அவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூற முடியும். திருத்தங்களைக் கொண்டு வந்தவர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் வரை விவாதம் முடிவடைந்து விட்டது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தங்களை முன்மொழிந்த வர்களைத் தேடினேன். இதற்கு முன்னர் தங்களுடைய திருத்தங்கள் மீது பேசியவர்களை பேச அழைக்கவில்லை. திருத்தங்கள் கொண்டு வந்தவர்களில் இது வரை பேசாத நான்கு உறுப்பினர்களை தேர்வு செய்துள்ளேன். இருக்கையிலிருந்து அவர்கள் எழுந்து நிற்பார்கள் என்று பார்த்தேன். நேற்று முழுவதும் அவர்கள் யாரும் எழுந்து நிற்கவே இல்லை. எனவே, அவர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நிற்க விரும்பவில்லையென்றால், அவர்கள் பேச அழைக்கப்படும் வரை விவாதம் முடிவு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது என்று அவர்கள் வாதமிட முடியாது. சர்தார் பி.எஸ். மான் ஒரு சீட்டு எனக்கு அனுப்பினார். ஏனெனில் நேற்று அவர் என்னுடைய கவனத் திற்கு வரவில்லையாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** நேற்று கூட நான் எழுந்து நின்றேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மசோதா ஆய்வு செய்யும் கட்டத்திலேயே அதனுடைய முக்கிய கொள்கைகள் ஏற்கனவே

விவாதிக்கப் பட்டன. இக்கூறைப் பொறுத்தவரை, இது உடனடியாகப் பொருந்து வதாக ஆக்கப்பட வேண்டுமா அல்லது தன் விருப்பத் திற்கான விஷயமா என்பது குறித்து திருத்தங்கள் கொண்டு வரப் பட்டுள்ளன. சட்டத் தொகுப்பை முழுமையாக எடுத்துக் கொள்ளுவதா அல்லது இதற்கு முந்திய சில சிறு சட்டங்கள் விஷயத்தில் நடைபெற்றது போல் இதை ஏற்றுக்கொள்ளுவதா அல்லது ஏற்றுக் கொள்ள வேண்டாமா என்பது இங்கு முடிவு செய்யப்பட வேண்டும் என்று நான் கருதவில்லை.

**திரு. ஜே.ஆர். கபூர்** *(உத்திரப் பிரதேசம்)* : என்னைப் பொறுத்த வரையில், முந்திய சமயங்களில் பேசாதவர்களுக்கு வாய்ப்பளித்த பிறகு முன் மொழிந்தவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பேன் என்று நீங்கள் தெரிவித்த கருத்திற்கேற்ப நான் நேற்று உங்கள் கவனத்தை ஈர்ப்பதற்காக எழுந்து நிற்கவில்லை. அதுதான் என்னுடைய காரணம்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் எழுந்து நின்றிருந் தாலும்கூட அவரை அழைக்கும் எண்ணம் எனக்கில்லை.

**திரு.ஜே.ஆர். கபூர்:** நான் முன் மொழிந்துள்ள புதிய திருத் தங்கள் சம்பந்தமாகவும் .....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தங்கள் எல்லாவற்றை யும் அட்டவணையிட்டு சுற்றுக்கு அனுப்பி இருக்கிறேன். உறுப்பினர் புதிய திருத்தம் எதையும் கொடுக்கவில்லை. ஏற்கனவே அவர் கொடுத்துள்ள திருத்தங்களைத்தான் மறுபடியும் அளித்துள்ளார். மற்றவர்கள் பேசுவதற்கு அழைத்த பின்னர், ஏற்கனவே பேசிய வர்கள் குறித்து யோசித்துப் பார்ப்பேன். ஆனால், விதியின்படி ஏற்கனவே பேசிய எந்த உறுப்பினரையும் பேச அழைக்க விரும்ப மாட்டேன். நேற்று நான் அவையில் இல்லாதபோது டாக்டர் தேஷ்முக் அழைக்கப்பட்டு இருக்கிறார். நான் இங்கு இருந்திருந் தால் அவரைப் பேச அழைத்திருக்க மாட்டேன்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** என்னுடைய திருத்தங்கள் இரண்டு வகைப் படும்: ஒன்று பழையவை; மற்றவை புதியவை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மற்றவர்களுக்கு வாய்ப் பளித்த பின்னர், இந்த விஷயத்திற்குப் பின்னர் வருகிறேன்.

**திரு. பட்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மன்னிக்கவும். நான் உங்களுக்கெதிரில் அமர்ந்துள்ளேன்; இருப்பினும் நான் உங்கள் கவனத்திற்கு வரவில்லை. நேற்றிலிருந்து எழுந்து தான் நிற்கின்றேன். திருத்தங்களைக் கொடுத்தவர்கள் எழுந்து நிற்க வில்லை என்று சொன்னீர்கள். உங்களுக்குச் சிறிது ஞாபக மறதி இருக்கக்கூடும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அமைதி, அமைதி. நான் உறுப் பினரைப் பார்க்கவில்லை என்றோ அல்லது என்னுடைய கவனத்தை அவர் ஈர்க்கவில்லை என்றோ என் மீது பழி சுமத்த வேண்டாம். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்களுடைய நேரம் வரும் வரை அமைதியாக இருக்கையில் அமருவதற்கு பொறுமை இல்லை. அவைக்குள் வந்தவுடன் அவர்களை அழைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்; அவ்வாறு அழைக்கப்படாவிட்டால் அவை யிலிருந்து வெளியேறி மன்ற கூடத்திற்கு சென்று விடுகின்றனர். இவை அனைத்தையும் நாம் மனதில் வைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது. அடுத்து யாரை அழைக்க வேண்டுமென்று முடிவு செய்து, நான் அழைக்கின்றபோது அவர் இருக்கையில் இல்லாவிட்டால், அவரை நான் பொருட்படுத்த மாட்டேன். என்னுடைய மனதில் வைத்துள்ள பட்டியல்படி அத்தகைய உறுப்பினர்களை நான் அழைக்க மாட்டேன். காமன்ஸ் சபையில் கூட இத்தகைய பழக்கம் இல்லை. நான் அவை நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருந்த போது உறுப்பினர் எழுந்து நிற்கவில்லை. என்னிடம் ஒரு குறிப்பு உள்ளது. திருத்தங்கள் குறித்து, இதுவரை பேசாமல் இருக்கும் உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வைத்திருக்கிறேன். இங்கு அமர்ந்திருப்பதற்கு அவர்களுக்குப் பொறுமை இல்லை. நான் அழைக்கவில்லை என்றவுடன் மன்ற கூடத்திற்குப் போய் விடுகிறார்கள்.

**பண்டிட் மைத்ரா:** நீங்கள் நடந்து கொண்டிருக்கும் முறை பற்றி சிறிதளவும் அதிருப்தி இல்லை. நேர்மையாகவும் நியாய மாகவும் முற்றிலும் பாரபட்சமின்றி நீங்கள் எங்களை நடத்து கிறீர்கள் என்ற உணர்வு எங்களுக்கு உள்ளது. இதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். துணை சபாநாயகருக்கு எதிரான உணர்வு எங்களுக்கு இல்லை.

**பண்டிட் கிருஷ்ண சந்திர சர்மா (உத்திரப் பிரதேசம்):** திரு. பட் கூறிய வார்த்தைகளை அவர் வாபஸ் பெறலாம் என்று கருதுகிறேன்.

***பண்டிட் மைத்ரா:*** ஆட்சேபனை செய்ய வேண்டும் என்று அவர் கருதவில்லை.

***திரு. பட்:*** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நான் இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் நின்று கொண்டுதான் இருந்தேன் என்பதைத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினேன்; ஒருவேளை நீங்கள் அதைக் கவனியாது இருந்திருக் கலாம்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்: :*** திருத்தங்களைக் கொண்டு வந்து, இதுவரை பேசாதவர்களை அடுத்து நான் கவனிக்கிறேன்.

[1]***பண்டிட் குன்ஸ்ரூ (உத்திரப் பிரதேசம்):*** நீங்கள் கூறியதை ஒப்புக் கொள்கிறேன். துணை சபாநாயகர் அவர்களே, இக்கூறு பற்றி விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். இக்கூறின் சிறப்பு கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இது பற்றி முக்கியமான கேள்விகள் நேற்று எழுப்பப்பட்டன. நேற்று நடைபெற்ற விவா தத்தின் போது கூறப்பட்டவைகள் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் மனங்களை மங்கலடையச் செய்துள்ளன என்று நினைக்கின்றேன். எனவே, இவை பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டியது துரதிருஷ்டவசமானதாகும். அவ்வாறு கூறுவதால் நாம் விவாதிக்க உள்ள இச்சட்டத் தொகுப்பின் சில பகுதிகள் பற்றியுள்ள தப்பெண்ணம் நீக்கப்பட முடியும்.

நேற்று எழுப்பப்பட்ட சில விஷயங்கள் பற்றி என்னுடைய நண்பர் திரு என்.வி. காட்கில் மிகவும் வியக்கத்தக்க வகையில் பேசினார். இவ்விஷயம் பற்றி சற்று அதிகமாகவே கூறுவதற்கு முயற்சி செய்கிறேன். ஏனென்றால், நேற்று கூறப்பட்டவை இந்து சட்டத்தின் உணர்வை மட்டுமல்ல, இந்து சமுதாயத்தில் ஏற்கனவே ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கணக்கில் கொள்ளாது புறக் கணித்து விட்டன. இம்மசோதாவை பரிசீலனை செய்யும்போது, அதனுடைய ஷரத்துக்களை மட்டும் நம்முடைய கவனத்தில் கொள்ளுவது போதுமானதாகாது.

எந்தச் சமுதாயத்திற்காக நாம் சட்டம் இயற்றுகின்றோமோ அந்தச் சமுதாயத்தின் குணங்களையும் நாம் அறிந்து கொள்ளுவது அவசியமாகும். அதனுடைய முக்கிய குணாதிசயம் மாறும் இயல்

★ தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 18, பக்கங்கள் 2772-77.

புடையதாகும். இப்போது அது மாறி வரும் கால கட்டத்திலுள்ளது. நமது சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள ஒரே ஒரு முக்கியமான தாக்கத்தைக் குறிப்பிட வேண்டுமென்றால், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நமது சகோதரிகளிடையே பெருமளவில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வைத்தான் கூற வேண்டும். தங்களின் நியாயமான உரிமைகள் பற்றி அவர்கள் உணர்ந்துள்ளனர்; தங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவாக அமைப்பு சார்ந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சட்டத் தொகுப்பு நம்முடைய விவாதத்திற்கு வருவதற்கான பெருமை இந்தப் படித்த தெளிவு பெற்றுள்ள பெண்களை ஓரளவு சேரும். பெண்கள் மத்தியில் கல்வி அறிவு வெகுவாகப் பரவி வருகிறது என்ற உண்மையையும் இங்கு சொல்ல வேண்டும்.....

**திரு. ஆர்.கே. சௌதுரி:** மேற்கத்திய கல்வியைச் சொல்லுகிறீர்களா?

**பண்டிட் குன்ஸ்ரூ:** நீங்கள் பெற்றுள்ள கல்வி. அத்தகைய கல்வியைப் பெற்று இருந்தும் நீங்கள் ஒரு நல்ல இந்து என்று உரிமை கொண்டாடுகிறீர்கள். அதே கல்வியைத்தான் நமது சகோதரிகளும் பெற்று வருகின்றனர். அவர்கள் தேசியத்தை மறந்து விடுவார்கள். அல்லது அவர்களுடைய மதம் அல்லது கலாசாரத்தை மதிக்காத மனப்பாங்கினை மேற்கொள்வார்கள் என்று நினைப்பதற்குக் காரணம் எதுவுமில்லை. கல்வி பெற்றுவரும் நமது பெண்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. ஆண்களுடன் சரிநிகர் சமம் என்ற சமத்துவ அடிப்படையில் வாக்குரிமை பெறுவார்கள். அத்தகைய சக்திகளால் உருவாக்கப்படும் சமுதாயத்தில் ஆண்கள், பெண்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியும் என்பதை சிந்தித்துக்கூட பார்க்க முடியுமா? சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக அநியாயத்தைப் பாதுகாக்க மதத்தின் பெயரைப் பயன்படுத்துவோர். இந்து மதத்திற்கு மிகப் பெரும் பாதகம் செய்கின்றனர். இக்கூட்டத் தொடரில் நாம் விவாதிக்க உள்ள மசோதாவின் ஷரத்துக்களில் இந்து சட்டத்தின் மிகச் சிறந்த கோட்பாடுகளுக்கோ அல்லது எப்போதுமே அதற்கு ஆதார அடிப்படையாக இருந்து வந்துள்ள உணர்வுக்கு முரண்பட்டதாகவோ எதுவும் இல்லை என்பதை என்னால் கூறமுடியும்.

நாம் விவாதிக்க உள்ள மசோதாவின் சிறப்பு அம்சங்கள் யாவை? ஒருதார மணமும் விவாகரத்தும்தான் அந்த சிறப்பு அம்சங்கள். ஒருதார மணம் சம்பந்தப்பட்டவரை, கடந்த காலத்தில் நடை

பெற்றுள்ளதை கணக்கில் கொண்டு பார்க்கும் போது சமுதாய சீர்த் திருத்த சட்டத்தை இயற்ற இந்நாடாளுமன்றம் தகுதி படைத்தது அல்ல என்று இப்போது வாதிடுவது மிகவும் காலம் கடந்ததாகும் என்று டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி உண்மை நிலையைக் கூறினார். இச்சட்ட ஆளுமையின் கீழ் முஸ்லீம்களையும் கொண்டு வந்தால் ஒருதார மணக் கருத்தை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் பேசினார். இம்மசோதாவின் பொதுவான கருத்துக்கள் விவாதிக்கப்பட்டபோது, வாரிசுரிமைச் சொத்தைப் பொறுத்தவரை முஸ்லீம் சமுதாயத்தைப் பின்பற்றுமாறு இந்து சமுதாயம் வற்புறுத்தப் படுவதாக சில உறுப்பினர்கள் அச்சத்தைத் தெரிவித்தது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. முஸ்லீம்களில், தகப்பனார் சொத்தில் மகள்களுக்கு உரிமை இருப்பது நமக்குத் தெரியும். இருப்பினும், இவ்விஷயத்தில் இந்துக்கள், முஸ்லீம்களின் முறையைப் பின்பற்று வதற்கு நாம் சாதகமாக இல்லை. இந்துக்களுக்குப் போல் முஸ்லீம் களுக்கும் பொருந்துவதாக இருந்தாலன்றி, இந்து திருமணம் பற்றி எவ்வித சட்டத்தையும் இயற்றக் கூடாது என்று கூறுவதற்கு நமக்கு என்ன உரிமை உள்ளது? தங்களுடைய தகப்பனார்களின் சொத்துக் களில் பங்கு பெறுவதற்கு பெண்களை அனுமதிக்கக் கூடாது என்பவர் கள் இந்துக்களுக்குப் பொருந்தும் திருமணச் சட்டம் முஸ்லீம்களுக் கும் எல்லா அம்சங்களிலும் பொருந்துவதாக இருக்க வேண்டு மென்று கூறுவதற்கு எவ்வித உரிமையுமில்லை.

இப்போது இங்கு முன்வைக்கப்பட்ட அனைத்து வாதங் களையும் இந்து சட்டக் குழு கவனமாக பரிசீலனை செய்தது. எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்த பின்னர், இக்குழு என்ன சொன்னது என்பதை அவைக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். அவை தற்போதைய உண்மைகளுக்குச் சம்பந்தப்படாதவைகளாகவோ அல்லது திருப்தியளிக்காதவை களாகவோ இருக்கின்றன என்ற முடிவுக்கு குழு வந்தது. அது கூறியதாவது :

> ''மசோதாவில் ஒருதார மண ஷரத்தினை வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். தன் இஷ்டம் போல் கணவன் தன்னுடைய மனைவியை விட்டு நீங்கி இரண்டாவது திருமணம் செய்து கொள்ளுவதை இதுதடுத்து நிறுத்தும். மனைவியை விட்டு நீங்க, மறுதிருமணம் செய்து கொள்ளும் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வரு கின்றன என்பதற்கான போதுமான சான்றுகள் நம்மிடம் உள்ளன; ஒருதார முறையைச் சட்டமாக்கி இப்பிரச்சினை யைத் தீர்க்கலாம்.''

இக்குழுவின் கருத்து வலுமிக்கதாக இருப்பதாக நான் நினைக்கிறேன். எந்த அடிப்படையிலும் ஒருதார மண முறையை எதிர்ப்பவர்கள் ஒருதார மணத்திற்கு ஆதரவாக குழு முன் வைத்துள்ள மெய்யான காரணங்களுக்குப் பதில் கூறியாக வேண்டும்.

பம்பாய் மாகாணத்தில் ஒருதார மணம் சட்டத்தால் அமலாக்கப்பட்டது என்ற உண்மையை இக்குழு கவனத்திற்கு கொண்டு வந்தது. இந்துக்கள் பலதாரங்கள் செய்து கொள்ளுவதைத் தடுப்பதற்காக நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு சட்டம் கொண்டு வரப்பட்டது. சென்னை மாநிலத்திலும் இத்தகைய சட்டம் அமலிலிருப்பதாக இப்போது நாம் கூறலாம். இந்து மதத்தைச் சேர்ந்தவர் ஆட்சி செய்கின்ற இந்துக்கள் பெரும்பான்மையினராக உள்ள பரோடா சமஸ்தானம் ஒருதார மணம் மற்றும் விவாகரத்துக்கு ஆதரவாக பல ஆண்டுகளுக்கு முன்னர் சட்டம் ஒன்றை இயற்றியது.

**டி.டி. பந்த்** (உத்திரப் பிரதேசம்) : அச்சமஸ்தான ராஜா அதை மீறினார்.

**பண்டிட் குன்ஸ்ரு** : எல்லா இடங்களிலும் இந்துக்கள் இந்து சட்டத்தை மீறினால், உண்மையான இந்துக்களை எங்கே பார்ப்பீர்கள்? இந்த அவையில் மட்டுமா?

இம்மசோதாவுக்கு இசைவு தெரிவித்து அதன் ஷரத்துக்களை அமலாக்கும் பொறுப்பை மாநிலங்களுக்கு விட்டு விட வேண்டும் என்று நேற்று கோரிக்கை வைக்கப்பட்டது. ஒருதார மணமுறை ஏற்கெனவே அமலில் உள்ள இரண்டு முக்கியமான மாநிலங்களை நாம் பார்க்கின்றோம். இந்தியாவின் வேறு சில பிராந்தியங்களும் உள்ளன. உதாரணமாக மலபார் மாவட்டத்திலும் திருவாங்கூர் - கொச்சி சமஸ்தானத்திலும் இந்துக்களிடையே பலதார திருமணத்தை தடை செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலும், மிக பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் ஒருதாரத் திருமணங்கள் நடந்துள்ளன என்று நேற்று நடைபெற்ற விவாதத்தில் சந்தேகமின்றி ஒத்துக் கொள்ளப்பட்டதன் அடிப்படையிலும் பார்த்தால். ஒருதார மணம் சம்பந்தப்பட்ட ஷரத்து தடையில்லாத இணக்கத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று இப்போது யாரும் கேட்க முடியுமா? இந்த மசோதாவில் இந்த ஷரத்து ஒன்றுதான் தன் விருப்ப அடிப்படையில்

அல்லாமல் பல நல்ல காரணங்களுக்காக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உண்மையில் அது வலுக்கட்டாயமாக இருக்க வேண்டும். இந்து சமுதாயத்தின் பெரும்பான்மையினர் இக்கருத்தை ஏற்றுக் கொண்டதாகவே தெரிகிறது. இம்முறை அமலில் உள்ள பிராந்தியங்களில் இந்து சட்டம் சீர் கெட்டுவிடவில்லை. இந்த அவையில் நல்ல இந்து உறுப்பினர்கள் இருப்பது போல் அப்பிராந்தியங்களிலும் நல்ல இந்துக்கள் உள்ளனர். இந்நாட்டில் இந்துக்களிடையே ஒருதார மணத்தை சட்ட ஆட்சியின் ஓர் அங்கமாக நாம் நிர்ணயிக்க வேண்டுமென்று என்னுடைய நண்பர் டாக்டர் அம்பேத்கர் விரும்புவது வலுவான அடிப்டையில்தான் என்று கருதுகிறேன்.

நான் அடுத்தபடியாகப் பேச விரும்புவது விவாகரத்தாகும். இவ்விஷயத்திலும் ஷரத்தக்கள் தனி நபர் இசைவுக்கு விட்டுவிட வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கனவே இது தனிநபர் இசைவுக் குட்பட்டதாகவே இருக்கிறது. இச்சட்டம் இயற்றப்பட்டவுடன் மகிழச்சியாக இல்லாத தம்பதிகள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று, உடனடியாக விவாகரத்துக் கோரும் வலுக்கட்டாயத்திற்குள்ளாக மாட்டார்கள். சட்டத்தின் ஷரத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வது அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. இப்போதுள்ள நிலை பொறுத்துக் கொள்ள முடியாததாக இருப்பதால் தனித்துச் செல்ல அல்லது விவாகரத்து பெற விரும்புபவர்களுக்கு உதவிடவும், அச்சத்தை அகற்றிடவும் இதை விட வேறு என்ன செய்ய முடியும்? இப்பொருள் பற்றி ஆய்வு செய்யும் இந்து சட்டக் குழு கூறியதாவது:

> ''எங்கள் முன் அளிக்கப்பட்ட சான்றுகளிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவில் கணவன்களால் கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.''

இக்குழு மேலும் கூறுகிறது:

''இதர சாட்சிகள் பல கடினமான வழக்குகளை எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தனர். அவ்வழக்குகளில் மறு விவாகம் விரும்பப்பட்டது; அவ்வாறு செய்து கொள்ளவும் முடியும். ஆனால் தற்போதுள்ள சட்டத்தின் காரணமாக அவ்வாறு செய்ய முடியவில்லை. இத்தகைய வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்காது; சதவீதக் கணக்கிட்டாலும் இது ஒரு தடுக்க முடியாத பிரச்சினையுமில்லை. ஆனால், நாம் ஏற்கனவே கூறியதுபோல் இந்தியாவில் இத்தகைய நூற்றுக்கணக்கான வழக்குகள் உள்ளன. இப்பிரச்சினையிலுள்ள பெண்களில் ஒரு சிறிய பகுதியினர் மறு

விவாகம் செய்து கொள்ளும் நேரத்தில் விவாகரத்து வேண்டுமென்று விரும்பினால், அவர்களைப் பார்த்து சட்டம் 'இல்லை' என்று கூற வேண்டுமா என்பதுதான் கேள்வி. அமைதியாக நடைபெற்றுள்ள பல மறு விவாகங்கள் பற்றி எங்களிடம் பல சாட்சிகள் கூறினார்கள். அத்தகைய மறு விவாகங்களை சமுதாயம் ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்கிறது.''

மீண்டும் சொல்லப்போனால், நம்முடைய திருமணச் சட்டத்தில் விவாகரத்துக்கான ஷரத்து இடம் பெற வேண்டிய அவசியமில்லை என்ற கருத்துக்கு எதிரான மறுக்க முடியாத பல உண்மை விவரங்கள் உள்ளன. அதனைப் பயன்படுத்துமாறு எவரும் வலுக் கட்டாயப் படுத்தப்படவில்லை. மௌனமாகத் துன்பப்படுவோர், நிவாரணம் விரும்புவோர் ஆகியோருக்கு நிவாரணம் மறுக்கப்படுவதற்கான காரணம் எதுவுமில்லை. சில மாநிலங்களில் ஒருதார முறை சட்டபூர்வமாக அமலில் இருப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஒருதார மணம் அமலில் இருப்பதாக நான் குறிப்பிட்ட எல்லா மாநிலங்களிலும் விவாகரத்தை சட்டம் அனுமதிக்கிறது. இதனால் அங்குள்ள இந்து சமுதாயத்திற்கு என்ன ஏற்பட்டுள்ளது? முன்னர் இருந்ததைவிட திருமணத்தின் புனிதம் குறைந்து விட்டதா? அங்குள்ள இந்துக்கள் திருமண இணைப்பை ஒரு புனிதமான இணைப்பாக கருதவில்லையா? இந்து மதம் அல்லது இந்து கலாசாரம் மீது அவர்களுக்கு மரியாதை இல்லையா?

**பண்டிட் மைத்ரா:** இதற்கு எடுத்துக்காட்டு இங்கே இருக்கிறது.

**பண்டிட் குன்ஸ்ரு:** இப்பொருள் பற்றி நான் குறிப்பிட்டுக் கூறிய மாநிலங்களின் மக்களுக்கும் நண்பர் பண்டிட் மைத்ராவுக்கும் இடையே ஒரு விவாதம் நடைபெறுவதை நான் விரும்புகிறேன். இந்து கலாசாரம் மற்றும் இந்து சமுதாயத்தின் மீது காட்டுகின்ற மரியாதையில் அவருக்கு அம்மக்கள் குறைந்தவர்கள் என்று கூறி நம்பச் செய்வது அவருக்கு அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை அவர் உணர்வார்.

**பண்டிட் மைத்ரா :** இதுபற்றி சட்டம் இயற்ற தனிப்பட்ட மாநிலங்களை விட்டுவிடுங்கள்; ஏன் திணிக்கிறீர்கள்?

**பண்டிட் குன்ஸ்ரு :** பல பிராந்தியங்களில் இச்சட்டம் அமலில் இருக்கிறது என்று நான் முன்னரே கூறியுள்ளேன். இரண்டாவதாக தனி நபரின் தன்விருப்பத்துக்கு இதிலுள்ள ஷரத்து விட்டுவிடும்

என்பதை விரிவாக விளக்கவும் முயன்று இருக்கிறேன். தனி நபர் இசைவுக்கு விட்டுவிடவும் என்று நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

**பண்டிட் மைத்ரா:** அனைவரும் தத்தமது விருப்பப்படி செய்து கொள்ள அனுமதியுங்கள் என்று பொருள்.

**பண்டிட் குன்ஸ்ரு:** மனக்கசப்புற்ற தம்பதியர் நிவாரணம் பெற விரும்புவது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. பிரிந்து போகவோ அல்லது விவாகரத்து பெற்றுக் கொள்ளவோ யாரும் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள். உங்களுக்கு இதைத் தவிர மேலும் என்ன வேண்டும்?

பம்பாய், சென்னை மாநிலங்களைக் காட்டிலும், இச்சட்டம் பரோடாவில் அனேகமாக நீண்டகாலமாக அமலில் இருக்கிறது. 1940-41 மற்றும் 1941-42 ஆகிய ஆண்டுகளிலும் விவாகரத்தை அனுமதிக்காத சாதிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்த விவாகரத்து வழக்குகள் மூன்றுதான் என்பது இந்து சட்டக் குழுவுக்கு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. 90 சதவீத மக்கள் விவாகரத்து பெற ஏற்கனவே வழி இருக்கும் போது உயர் சட்டத்தைப் பின்பற்றுகின்றவர்களும் திருமணம் கலைக்கப்பட முடியாதது என்று கருதுபவர்களுமாக உள்ள எஞ்சிய பத்து சதவீத மக்களுக்காக ஏன் ஒரு சட்டம் என்று நேற்று என்னுடைய நண்பர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி கேட்டார். அவர் இப்போது இருக்கையில் இல்லை. ஆனால் அவருக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்து சமுதாயத்தில் என்ன நடைபெறுகிறது என்று நாம் அறிவோம். ஒரு கணவன் குடிக்கிறார்; தன் மனைவியை அடிக்கிறார்; அல்லது அவளைக் கைவிட்டுவிடுகிறார் என்றால், இது புனிதமான செயலா? இந்து திருமணத்தின் புனிதத் தன்மைக்கு இது ஏற்றவாறு உள்ளதா? ''ஏன் இதை நிறுத்தக் கூடாது?'' என்று எனக்குப் பின்னால் இருந்து ஓர் உறுப்பினர் வினவுகிறார்.

**பண்டிட் மைத்ரா:** கணவன்மார்களை அடித்து உதைக்கும் மனைவிகளும் உள்ளனர்.

**பண்டிட் குன்ஸ்ரு:** மனைவிகள் மாசற்றவர்கள் என்று நான் சொல்லவில்லை. மனைவிகளிடம் அவர்களுக்கே உரித்தான குறைகள் உண்டு; சட்டம் மனைவிகளுக்கு மட்டுமல்ல, கணவன்மார்களுக்கும் பொருந்தும். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கினால், இந்து சமுதாயத்தின் மேல் வகுப்பினர் அதாவது பிராமணர்,

சத்திரியர், வைசியர் ஆகிய சாதிகளைச் சேர்ந்த ஆண்கள் இதர சாதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் காட்டிலும் உயர்ந்த இலட்சிய நோக்கு உடையவர்கள் என்று உரிமை கொண்டாடுவது விவேக மானதல்ல.

மேலும், இம்மசோதா இந்து சமுதாயத்தில் பெரிய குழப் பத்தை உண்டு பண்ணியுள்ளது என்று சொல்லப்பட்டது. மசோதா வின் ஷரத்துக்கள் பற்றி மக்களுக்கு தவறான தகவல்கள் தரப்பட் டுள்ளதன் விளைவாகத்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை என்னால் காணமுடிகிறது. மசோதாவின் ஷரத்துக்கள் முறையாக மக்களுக்குக் கூறப்பட்டால் அவர்களுடைய பல தவறான எண்ணங் கள் மறையும். மேலும், மக்களுடைய அச்சத்தை இந்த அவையில் மிகுந்த சிரத்தையுடன் தெரிவிக்கும் உறுப்பினர்கள் இதனுடைய ஷரத்துக்கள் உண்மையாகவே என்ன என்பதை சற்று சிரத்தையுடன் விளக்கிக் கூற முயற்சி செய்தால்.....

**பண்டிட் மைத்ரா :** அதை அரசு செய்யட்டும்.

**பண்டிட் குன்ஸ்ரு:** ....இப்போதுள்ள அதிருப்தி பெருமளவில் மறையும்.

மசோதாவின் ஷரத்துக்கள் பற்றி தகவல் அளிக்க சரியான முறையில் அரசாங்கம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டுதான் இருக்கிறது. இந்த நல்ல பணியில் பங்குகொள்ளுவது சத்தியத்திலும், இந்து சட்டத்திற்கு அடிப்படையாக உள்ள ஆத்மீகத்திலும் நம்பிக்கையுள்ளவர்களின் கடமை அல்லவா?

இந்த மசோதாவுக்கு எதிராக கிளப்பி விடப்பட்டுள்ள தப்பபிப்பிராயத்தை களைய ஏன் அவர்கள் முன்வரக் கூடாது?

**பண்டிட் மைத்ரா:** அதை அவர்களே முடிவு செய்ய விட்டு விடுங்கள்.

**பண்டிட் குன்ஸ்ரூ:** என்னுடைய நண்பர் உண்மைகளை முற்றிலும் உதாசீனப்படுத்துகிறார். என்னால் அவரை திருப்திப்படுத்த முடியவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

**பண்டிட் மைத்ரா :** அது என்னுடைய துரதிர்ஷ்டம் கூட.

**பண்டிட் குன்ஸ்ரு:** .... உண்மையைக் காண விரும்பாமல் அவர் கண்களை மூடிக்கொண்டால் ...

**பண்டிட் மைத்ரா :** நான் அவற்றை நேரடியாகவே பார்க்கிறேன்.

**பண்டிட் குன்ஸ்ரு:** .... மற்றும் .... இம்மசோதாவை அறிமுகப் படுத்துவதற்கு முன்னர் ஒருதார மணம், விவாகரத்து எனும் வார்த்தைகளை இந்தியாவில் எவரும் எப்போதும் கேள்விப்பட்டதில்லை என்றும் கூறுகிறார்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** ஒருதார மணம் என்றால் சுவையற்றது என்று பொருள்.

**பண்டிட் குன்ஸ்ரு:** நாம் பரிசீலனை செய்கின்ற ஷரத்துக்களுக்கு அடிப்படையாகவுள்ள கொள்கையை ஆதரிப்பவர்களும், ஆண் - பெண் இருபாலரிடமும் சமத்துவம் நிலவ முயற்சி செய்பவர்களும், இந்து சமுதாயத்தை புதுப்பித்திட முயற்சி செய்பவர்களும், இந்து சமுதாயத்தை மகத்தானதாகவும், உலகம் பாராட்டத் தக்கதாகவும் உயர்த்துவதற்குத் துணை நின்ற பெரும் தத்துவங்களின் காலத்திற்குச் செல்ல வேண்டுமென்று விரும்புபவர்களும் இந்து சமுதாயத்திற்கும், கலாசாரத்திற்கும் தாங்கள் செய்யக் கூடிய பெரிய சேவையைச் செய்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள பாதையில் தொடர்ந்து விடாமுயற்சியுடன் செல்லுவார்கள் என்றும், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தது போன்று உலகம் முழுவதும் இந்து மதம் மதிக்கப்படத்தக்கதாக அதனை ஆக்குவார்கள் என்றும் நம்புகிறேன்.

[1]**திரு. பட்** (உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு): ஐயா, ஆங்கிலத்தில் பேசுமாறு என்னைப் பணித்துள்ளனர். ஆனால், ஆங்கிலத்தில் என்னால் பேச முடியாது. இந்துஸ்தானியில் போல், அம்மொழியில் என்னுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் தகுந்த வகையில் வெளிப்படுத்த என்னால் முடியாது. எனவே என்னை மன்னிக்கவும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** ஐயா, அடுத்து மொழி இந்தியை நாங்கள் புரிந்துகொள்ள முடியாது. வேகமாக உறுப்பினர் பேசினால் அவர் கூறுவதைத் தெரிந்து கொள்ளவும் இயலாது. மெதுவாக அவர் பேசினால் புரிந்து கொள்ளலாம்.

---

1 அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 18, பக்கங்கள் 2815-35.

திரு. பட்: மாண்புமிகு அமைச்சர் கூறியதற்குப் பதிலளிப் பதற்காக மட்டும் நான் உங்கள் முன் நிற்கவில்லை. என்னுடைய கருத்தைக் கூறவே முன் வந்துள்ளேன். நாம் ஒரு மிகப் பெரும் பணியைச் செய்ய உள்ளோம். பெரும் கடுமுயற்சி தேவைப்படும் ஒரு பணி, நம்முடையது. நாம் பரதன், பகீரதன், ராமன், கிருஷ்ணன், மனு மற்றும் யாக்ஞவல்கியர் ஆகியோரின் வழிவந்தவர்கள் : நம்முடைய வாழ்க்கைக்கு பொருந்தும் வகையில் இந்து சட்டத்தை முறைப்படுத்தி, தொகுப்பது மிகப் பெரிய கடினமான முயற்சி யாகும். திரு. கௌர் இங்கிலாந்து பற்றி சொன்னார்:

''இங்கிலாந்தின் சட்டங்களைத் தொகுக்க பல்வேறு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அத்தகைய முயற்சிகள் இதுவரையிலும் தோல்வியைத்தான் தழுவின."

''இங்கிலாந்து ஒரு முன்னேற்றமடைந்த நாடு; இருப்பினும் அதன் சட்டங்களைத் தொகுக்க முடியவில்லை. நம் நாட்டில் பல சிக்கல்களும் முரண்பாடுகளும் உள்ளன. வழக்கங்கள் பலதரப்பட்ட இயல்புகள் உடையவை. எனவே, நமது பணியின் முக்கியத் துவம் உண்மையிலே பெரியது. மாண்புமிகு அமைச்சர் காட்கில் கூறியது போல், இப்பணியை நம்மால் செய்ய முடியவில்லை யென்றால், பகீரதன் செய்தது போல் தெய்வீக கங்கையையும் யமுனா வையும் எவ்வாறு சமவெளிக்குக் கொண்டுவரப் போகிறோம்? அவருடைய தைரியத்தை நான் பாராட்டுகிறேன். நாம் அனைவரும் அவருக்கு உறுதுணைபுரியவே விரும்புகிறோம்; அவர் முயற்சி களைத் தடை செய்ய அல்ல. தகுந்த நேரத்தில் பொருத்தமான வழிகள் மூலம் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூற விரும்புகிறேன். இந்து சாஸ்திரங்களின் தெய்வீகத்தையும், முக்கியத்துவத்தையும் மதிப்பிற்குரிய பண்டிட் குன்ஸ்ரு பறித்துக் கொள்ள விரும்புகிறார் என்று கூற மாட்டேன். ஆனால் அதே நேரத்தில் லோகாயத வழியை நோக்கி நாம் செல்லுவதை நான் விரும்பவில்லை. நம்முடைய வசதியைக் கணக்கில் கொண்டுதான் விஷயங்களைப் பரிசீலிக்க வேண்டும். காலப்போக்கில் இச்சட்டம் செயலற்றுப் போவதை நாம் விரும்பவில்லை. நமது இந்து சாஸ்திரங்களும் திருத்தப்பட்டுள்ளன. இன்று டாக்டர் அம்பேத்கரை மனு என்று அழைக்கிறார்கள்; திரு. காட்கில் யாக்ஞவல்கியர் என்று அழைக்கப்படுகிறார். அத்தகைய பெயரை திரு. நசிருத்தீன் அகமதுக்கும் திரு. காட்கில் அளிக்கலாம்.

**திரு. ஷியாம் நந்தன் சகாயா** (பீகார்) : அவரை நாரதர் என்று அழையுங்கள்.

**திரு. பட்:** இன்று நாம் முன்னேறியுள்ளோமா அல்லது பின் நோக்கி சென்றுள்ளோமா என்று கூறுவது கடினமாகும். உணவு, உடை, உறையுள் சம்பந்தப்பட்ட வரை, மொகலாயர் ஆட்சி காலத்தில் நம்முடைய முன்னோர்கள் இருந்த வாழ்க்கைத் தரத்தில்தான் இன்றும் நாம் இருக்கிறோம். நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போன்று நம்முடைய வாழ்க்கைத் தரம் இன்றும் இருக்கிறதா? முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த வசதிகள் இப்போது நமக்கு இருக்கின்றனவா? இதன் அடிப்படையில் பார்க்கும்போது நாம் முன்னேறியுள்ளோம் என்று கூற முடியாது. அதிகமான சட்டங்களை இயற்றுவதில் நாம் முன்னேறியுள்ளோம் என்று கூறமுடியுமா? அல்லது அதிக உடல்நலம் பெற்றுள்ளோம்; தைரியம் பெற்றுள்ளோம்; உண்மையான ஆரியர்களாகி உள்ளோம். எனவே நாம் முன்னேறியுள்ளோம் என்று கூறமுடியுமா? இது ஒரு கடினமான கேள்வி; என்னால் இதற்குப் பதில் கூற இயலாது; அதற்கு நேரமும் இல்லை. இது ஒரு புதிய விஷயம்; இதனுடைய பல்வேறு அம்சங்கள் பற்றி பேச விரும்பவில்லை. என்னுடைய திருத்தங்கள் மற்றும் கூறு 2 பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசுவேன். காலத்திற்கேற்றவாறு நம்முடைய **ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களும்** மாறித்தான் வந்துள்ளன. நம்மிடம் **தர்ம சாஸ்திரங்கள்** உள்ளது பற்றி மாண்புமிகு அமைச்சர் கூறியதை நான் ஒத்துக் கொள்கிறேன். திரு. மைத்ரா அவற்றின் பொருளை ஒரு வகையாக விளக்கலாம். திரு. காட்கில் வேறு விதமாக விளக்கலாம். தனக்கே உரிய வகையில் டாக்டர் அம்பேத்கர் அவற்றுக்குப் பொருள் விளக்கம் அளிக்கலாம். நான் சாஸ்திரங்கள் கற்றறிந்த வல்லுனராக இல்லாவிட்டாலும், என்னுடைய விளக்கம் வேறுபட்டதாகவே இருக்கும். நான் சொல்ல விரும்புவது இது தான்: நம்முடைய மதம், நமது **சாஸ்திரங்கள்** மற்றும் **ஸ்மிருதிகள்** அனைத்தும் நித்தியமானவை. அவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன; காலங்கள் மாறும்போது புதிய மாற்றங்களும் அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப அவை மாறி வருகின்றன; எக்காலத்திலும் பின்தங்கியதில்லை. பிற மதம் அல்லது சமுதாயத்தின் வேத நூல்களுக்கு அவமரியாதை எதுவும் காட்டாது, இந்து சாஸ்திரங்களும், பாரம்பரியமும் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கின்றன என்பதைக் கூற ஆசைப்படுகிறேன். எனவேதான் இந்து மதம் கால ஓட்டத்திற்கு ஏற்றவாறு பொலிவு பெற்று வருகிறது. இந்த அர்த்தத்தில்தான் அவை நித்தியமானவை என்று கருதுகிறேன்.

***பண்டிட் மாளவியா :*** *சட்டத் தொகுப்பு நிறைவேறிய பின்னர் அதற்கு இடமில்லை.*

***திரு. பட்:*** *அவர்களைப் பயமுறுத்த நாம் விரும்பவில்லை. இந்து சட்ட தொகுப்புக் குழு மசோதா ஒன்றைத் தயாரித்து, 1947 ஏப்ரல் திங்களில் அவையில் அறிமுகப்படுத்தியது என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. 'இலக்குகளும் காரணங்களும்' என்னும் அறிக்கையில் பின்வரும் வாசகம் இடம்பெற்றிருந்தது: ''சட்டத் தொகுப்பு மற்றும் ஒரேவிதமான சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு ஆதரவாக பொதுமக்கள் கருத்து வலுப் பெற்றுவருகிறது.'' இத்துடன் நமது காகா சாகிப் கூறுகிறார்: ''எந்தத் தரப்பு வலுவாக இருக்கிறது என்று கூறுவது கடினமாகும்.''*

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** *அதிகாரப்பூர்வமான அறிக்கையில் 'காகா சாகிப்' யார் என்று அறிந்து கொள்ளுவது கடினமாக இருக்கும்.*

***திரு. பட்:*** *நீங்கள் கூறுவதன் உண்மையை நான் ஒத்துக் கொள்கிறேன். காகா சாகிப் அதாவது மாண்புமிகு காட்கில் சற்று முன்னரும் மற்றவர்கள் நேற்றும் கூறியவாறு, ஆங்கிலம் தெரிந்த மக்கள் மற்றும் ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட - ஆனால் முற்போக்குக் கருத்து உள்ளவர்கள் - இதனை ஒத்துக் கொள்வார்கள். இது உண்மை என்றால், இம்மசோதாவுககு எதிராக பல ஆர்ப்பாட்டங்கள் ஏன் நடைபெறுகின்றன? இரண்டு தரப்பினரும் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நாடாளுமன்ற மாளிகையைச் சுற்றிலும் சட்ட தொகுப்பு மசோதாவை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றனர். இரண்டு தரப்பிலும் படித்த மேதைகள், அறிவாளிகள், ஆண்களும் பெண்களும் உள்ளனர் என்பதை நான் அறிவேன்.*

***டாக்டர் அம்பேத்கர் :*** *அவர்கள் அனைவரும் பைத்தியக்காரர்கள். நம்முடைய மனநோயாளிகள் காப்பகங்களில் இடமில்லாததால் அவர்கள் வெளியிலே ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.*

***திரு. பட்:*** *மசோதாவை எதிர்ப்பவர்கள் மன நோயாளிகள் என்று மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார். அவருடைய இக்கூற்றை எதிர்க்கிறேன் என்று மிகுந்த மரியாதையுடனும் தாழ்மை*

யுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை நீங்கள் மன நோயாளிகள் என்று கூறினால், நீங்கள் நூறு மடங்கு மன நோயாளி என்று உங்களைப் பார்த்து அவர்கள் கூறுவார்கள். தன்னுடைய எதிரிகளை ஒருவர் பைத்தியக்காரர்கள் என்று அழைத்தால், நாம் பொறுமையிழந்துள்ள ஒரு காலத்தில் அவர் வாழ்கிறார் என வலியுறுத்திக் கூறுவேன். பிறர் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாத அல்லது பொறுத்துக் கொள்ளாத அரசாங்கம் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இங்கு நடைபெற்றது. மனு என்று அழைக்கப்படுகிற டாக்டர் அம்பேத்கர், அவருடைய எதிரிகள் மன நோயாளிகள் என்றும், மன நோய் காப்பகங்கள் சிறியவைகளாக இருப்பதால் அவர்கள் வெளியே இருக்கிறார்கள் என்றும் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஆனால்....

**திரு. ஆர்.கே. சௌதுரி :** உறுப்பினர் இந்தியில் பேசுவதால் அவருடைய நகைச்சுவையை நாம் அனுபவிக் முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி தெரிந்தவர்களுக்குப் புரியும்; ஆனால் அவர் கூறுவது ஒன்றுமே எங்களுக்குப் புரியவில்லை.

**பண்டிட் மாளவியா :** அது நகைச்சுவையல்ல; வஞ்சப் புகழ்ச்சி.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா** (பஞ்சாப்): என்னுடைய நண்பருக்குப் புரியவில்லை; புரிந்திருக்குமானால், டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டதுபோல் அவர் வேறு இடத்தில் இருப்பார்.

**திரு. ஆர்.கே. சௌத்ரி :** இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் மனநோயாளிகள் என்று டாக்டர் அம்பேத்கர் கூறியது எனக்குப் புரிந்தது. அவ்வாறு கூறுவது நாடாளுமன்ற மரபுக்குட்பட்டதா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் அவ்வாறு கூறவில்லை.

**திரு. பட்:** டாக்டர் அம்பேத்கருக்குச் சில கருத்துக்கள் இருக்கலாம்; என்னுடைய கருத்து வேறுபட்டதாக இருக்கலாம். 1947ம் ஆண்டிற்குப் பின்னர் இம்மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. இக்குழு தன்னுடைய அறிக்கையை 1948 ஆகஸ்டு திங்கள் சமர்ப்பித்தது. அதன் பின்னர் மீண்டும் இம்மசோதா விவாதத்திற்கு வந்தது. திரு. துணை சபாநாயகர் அவர்களே,

நம்முடைய அரசாங்கம் எவரையும் புண்படுத்தவோ அல்லது மக்களிடையே பதட்டத்தை உண்டு பண்ணும் எதையும் செய்யவோ விரும்பவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நம்முடைய அரசாங்கம் பண்டிதர்களிடம் ஆலோசனை நடத்தியது. சில பண்டிதர்கள் கூறியதை டாக்டர் அம்பேத்கரிடம் கேட்டார்கள். அவர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூற ஒரு வாய்ப்பளித்தார். அவர்களுக்கு அது மனத் திருப்தியளிக்கவில்லை; இருப்பினும் அவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பு கிடைத்தது; சரிதான். அவர்களுடைய கருத்தினை அவர் ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதற்குப் பின்னர் சில புதியவைகளைச் சேர்த்து, திருத்தம் செய்துள்ளார். ஒவ்வொரு நாளும் புதிய திருத்தங்களைக் கொண்டு வருகிறார்; அது நல்லது தான்; அவ்வாறு செய்வதில் தவறு எதுவுமில்லை. தன்னுடைய எதிரிகளைத் தன்பக்கம் இழுத்து, அவர்களின் குறைகளை ஆய்ந்து, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மசோதாவை அவர் முன் வைக்க விரும்புகிறார். இதனை மனதில் வைத்துத்தான் அரசாங்கம் இம்மசோதாவை அறிமுகம் செய்தது. அதனுடைய கூறு 2 குறித்து விவாதித்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த மசோதா பல்வேறு வித கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. ஆனால், நான் சரியாகப் புரிந்து கொண்டு இருந்தால், இப்போதைக்கு இரண்டு பாகங்கள் மட்டும் - அதாவது திருமணம், திருமண முறிவு சம்பந்தப்பட்டவை - விவாதிக்க எடுத்துக் கொள்ளப்படும். திரு. காட்கில் ஆலோசனைப்படி, ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டால், அது நம்முடைய பலத்தை எடுத்துக் காட்டும். செயல்படுத்தப்படக் கூடியது பற்றி எவ்வித எண்ணமும் இருந்தால், அத்துடன் நிறுத்திக் கொள்ளுவது நல்லது என்று கூறுவேன். என்னுடைய முந்தைய உரையில் கூறிய கருத்தை மீண்டும் கூறுகிறேன். இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் தேர்வு செய்யப்படவுள்ள அடுத்த அவை அமைக்கப்படும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும். அடுத்த அவை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுபவர்கள் வாக்காளப் பெருமக்களிடம் இப்பொருள் பற்றி பேசுவார்கள். இது ஒரு சூடான பிரச்சினையாக எழுந்துள்ளது; இதை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியது இருக்கும். மக்களிடம் இப்பிரச்சினையை விட்டுவிடுங்கள். இவ்விஷயம் பற்றி மக்களின் தீர்ப்பை அவர்கள் பெறுவார்கள். உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் புதிய அவையில் தாங்கள் என்ன செய்வோம் என்பதை அவர்கள் மக்களிடம் விளக்கட்டும்.

1929ல் குழந்தைகள் திருமணத் தடைச் சட்ட மசோதா மீது பேசுகின்ற போது, காய்தே ஆஜம் ஜின்னா பின்வருமாறு கூறினார் : '14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கக் கூடாது. என்னுடைய தொகுதி மக்கள் இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவை உறுப்பினர் பதவியை நான் ராஜிநாமா செய்வேன்; வேறு யாரையாவது அவர்கள் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்!' நாம் என்ன விரும்புகிறோம் என்பது பற்றி உறுதியாக இருக்க வேண்டும். இறுதி கட்டத்தை அடைந்துள்ளோம்; எவரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது. அதிகப் பட்சம் முடிந்தவரை சிறந்த மசோதாவை நமக்கு அறிமுகம் செய்யப் பட வேண்டும். அப்போதுதான் நாம் எவ்வளவு சிறப்பாகச் செயல் பட முடியும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். ஒரு பொருளைப் பற்றி மட்டும் ஏன் பேச வேண்டும்? ஒவ்வொரு கூறையும் நாம் ஆய்வு செய்திட வேண்டும். ஒரு குழந்தையை உரு வாக்க வேண்டுமென்பதில் டாக்டர் அம்பேத்கர் ஆர்வமிக்கவராக இருக்கிறார். அக்குழந்தை குருடாக, நொண்டியாக, ஊமையாக இருந்தாலும் பரவாயில்லை என்று நினைக்கிறார். அவர் விரும்புவது ஓர் ஆண் குழந்தை; அதனால் யாராவது ஒருவர் அவருக்குப் பிண்டம் போடுவார்கள்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** அதனால் அவருக்கு மோட்சம் கிடைக்குமா?

**திரு. பட் :** மன்னிக்கவும். ஓராயிரம் ஆண்டுகள் அவர் வாழ வேண்டும்; நான் சூசகமாகத்தான் பேசுகிறேன். இம்மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று டாக்டர் அம்பேத்கரும் பண்டிட் ஜவஹர்லால் நேருவும் திட்டவட்டமாக விரும்பினால், மன நோயாளிகள் என்று கருதப்படுபவர்களையும் இக்கருத்தினை ஏற்கும் படி வசப்படுத்த வேண்டும். அவர்களை வசப்படுத்த எம்முறை யினையும் கையாளுங்கள், பல வந்தம் செய்யுங்கள்; உங்களுக்கு எங்கள் ஆதரவு உண்டு. நாங்களும் உங்கள் வழிக்கு வரக்கூடும்; ஆனால், அரைகுறையான, பயனற்ற, ஒழுங்குமுறையற்ற சட்டத்தை நிறைவேற்றுவதைத் தயவு செய்து தவிருங்கள். அதற்கு மாறாக அது உயர்ந்த இலக்குகளைக் கொண்டதாக இருக்கவேண்டும். நாங்கள் கூறுவதைச் சேர்த்துக் கொள்வதற்காக, 'இதை செய்கிறோம்; அதைச் செய்கிறோம்' என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். சரியானது, என

உங்களுக்கு தெரியாததைச் செய்யாதீர்கள். அடுத்த அவையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், மற்றவர்களின் கட்டளை களுக்குத் தலைவணங்க மாட்டோம் என்றும், இவ்விஷயம் குறித்து மக்களின் தீர்ப்பு எங்கள் பக்கம் உள்ளது என்றும் மிகுந்த தைரியத்துடன் நாம் சொல்லாம். மக்கள் தீர்ப்புக்கு மட்டும்தான் தலைவணங்குவோம். நான் அமைதியானவன். இது பற்றி நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு தொழிற்சாலைக்கு சென்றிருந்தேன். அங்குள்ளவர்கள், இந்து சட்ட தொகுப்பு மசோதாவைப் பற்றிப் பலவாறு கூறப்படுவதன் பொருள் என்ன என்று கேட்டார்கள். இந்த நடவடிக்கை குறித்து ஏன் நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று பதில் கேள்வி எழுப்பினேன். அவர்கள் கூறினார்கள் : ''இது நமது மதத்திற்கு ஒரு முடிவு கட்டிவிடும்; நமது சமுதாயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும்; நாம் வீழ்ச்சியடை வோம்.'' அவர்களுடன் பேசினேன். அவர்களில் பலர் புத்திலிகள்; அவர்கள் மசோதாவை ஆழமாகப் படித்து இருக்கின்றனர். இம் மசோதாவை எதிர்ப்பவர்கள் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் தான் எதிர்க்கிறார்கள் என்று நாம் எண்ணக்கூடாது. விவாகரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறும்போது இப்போது நடைமுறையிலுள்ள வழக்கத்தின்படி விவாகரத்தை எளிதில் அவர்களால் பெறமுடியும் என்று சொன்னார்கள். ''ஒரு பெண் நடத்தை கெட்டவள் என்று நாங்கள் கூறவும், ஆண்கள் கூடா ஒழுக்கம் உள்ளவர்கள் என்று பெண்கள் குற்றம் சாட்டவும் எங்களை ஏன் நீதிமன்றங்களுக்கு இழுக்கிறீர்கள்?'' இவ்விஷயங்களை நம்முடைய பஞ்சாயத்துக் களில் தீர்த்துக் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட தம்பதிகளைப் பற்றி தெரிந்துகொண்ட பின்னர், அவர்களைப் பிரித்து விடுவார்கள் என்று அவர்கள் கூறினார்கள். இப்போது இது பற்றி மிக அதிகமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். விவாகரத்து சம்பந்தப்பட்ட விதிகள் இப்போது கடுமையாக இல்லை; அவ்வாறு இருக்கக்கூடாது; அவ்வாறு இருப்பின் அவை இந்து மதத்திற்கு ஆபத்துதான் என்று டாக்டர் அம்பேத்கர் வாதிட முடியுமா? இந்து மதத்திற்கு அதனால் ஆபத்து எதுவுமில்லை. இம்மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட் டால் இந்து மதத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று சொல்லும் மக்களும் இருக்கிறார்கள். எந்தத் தரப்பினர் சரியாக உள்ளனர் என்பதை அறிய நாம் மூளையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியது இருக்கிறது. ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். பின்னர், அத்தொழிற்சாலை யிலுள்ளவர்களிடம் வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று

கேட்டேன். தகப்பனார் சொத்தில் மகளுக்குப் பங்களிக்கும் பிரச்சினை பற்றி சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது இதுதான்: இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் மன நோயாளிகளுமல்ல; அறிவற்றவர்களுமல்ல. ஆதர்ஷ மகிளா சங்கத்தைச் சேர்ந்த சிலர் என்னிடம் வந்து இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அவர்கள் கூறுவது நியாயமானதாகவும் அறிவுபூர்வமானதாகவும்தான் உள்ளது. திருமதி ரேணுகா ரே, திருமதி துர்க்காபாய் அல்லது இதர பெண் உறுப்பினர்கள் நன்கு படித்தவர்கள்; அறிவாளிகள். அவ்வாறு சொன்னால், அவைக்கு வெளியே உள்ள பெண்கள் விஷயங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளும் திறனற்றவர்கள் என்றோ அல்லது சிலர் குறிப்பிட்டது போல் தலையாட்டுப் பொம்மைகள் என்றோ அர்த்தமாகாது. இப்போது நான் குறிப்பிட்ட பெண்கள் என்னுடன் விவாதித்தனர். இந்து சமுதாயத்தின் கட்டமைப்பினைச் சீர்குலைக்கும் காரியங்கள் எதையும் நாம் செய்யக் கூடாது என்று கூறினார்கள்.

சிவில் திருமணச் சட்டம் மூலம் நாம் ஒரு வழிவகுத்துள்ளோம். இச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்பவர்கள். விவாகரத்தைப் பெற முடியும். இதைத் தவிர மேலும் நாம் எதையும் ஏன் செய்ய வேண்டும்? நமது வழக்கங்கள் அப்படியே இருக்கட்டும். சில குறிப்பிட்ட மக்கள் சில குறிப்பிட்டவைகளைச் செய்யக் கூடாது என்று நாம் கூறவில்லை. காலப்போக்கில் மக்கள் தெரிந்து கொள்ளத் தொடங்கி விடுவார்கள்.

திரு. குன்ஸ்ரு ஒருதார மணம் பற்றிப் பேசினார். வாழ்க்கைக்குத் தேவையானவை போதுமான அளவு மக்களிடம் இல்லை. ஒரு மனைவியை வைத்துக் குடும்பம் நடத்துவதே பலருக்குக் கடினமாக இருக்கும்போது ஒவ்வொருவரும் இரண்டு மனைவிகளை வைத்துச் சமாளிக்க முடியுமா? முஸ்லீம்கள் நான்கு மனைவிகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால், ஒவ்வொருவரும் நான்கு மனைவிகள் வைத்துள்ளனரா? சிலர்தான் இரண்டு மனைவிகள் வைத்துள்ளனர். ஒருவர் நான்கு மனைவிகள் வைத்திருப்பது மிகவும் அபூர்வமாகும். இதுவிஷயம் பற்றி எனக்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கிடைக்கவில்லை. நமது புள்ளி விவரத்துறை இன்னும் அபிவிருத்தியாகவில்லை. ஏக காலத்தில் ஒரு முஸ்லீம் நான்கு மனைவிகளை வைத்துக்கொள்ள எவ்வாறு அனுமதிக்கப்பட்டார் என்பது இப்போ

துள்ள கேள்வியாகும். ஹஸ்ரத் முகமது போரிட்ட ஒகாத் போரில் ஆண்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். அதனால் பெண்கள் எண்ணிக்கை பெருமளவில் இருந்தது. எனவே, பெண்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் வசதிபடைத்த ஆண்கள் நான்கு பெண்களை மனைவிகளாக திருமணம் செய்து கொள்ள கட்டளையிடப்பட்டனர். இத்தகைய நிகழ்வுகள் ஜெர்மனி மற்றும் பிரான்சு நாடுகளில் ஏற்பட்டன. நம்முடைய நாட்டில் பெண்கள், ஆண்கள் எண்ணிக்கை அனேகமாக சரிசமமாக உள்ளது. ஆண்களைக் காட்டிலும் பெண்கள் எண்ணிக்கை சில ஆயிரங்கள்தான் குறைவாக உள்ளன.

(பண்டிட் தாக்கூர் தாஸ் பர்கவா தலைவர் இருக்கையில் அமர்கிறார்.)

ஆனால், துரதிருஷ்டவசமாக பெண்கள் எண்ணிக்கை இரண்டு கோடிகளாக உயர்ந்து விட்டால், புதிய சூழ்நிலையைச் சமாளிக்க ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும். காலத்திற்கும், சூழ்நிலைக்கும், இடங்களுக்கும் ஏற்ப நமது சட்டங்ள் வகுக்கப் பட்டன என்பதையும், இப்போதும் கூட அதே அடிப்படையில்தான் சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன என்பதையும் விரிவாக விளக்க விவரங்கள் தர உள்ளேன். அத்தகைய சட்டத்தை டாக்டர் அம்பேத்கர் விரும்புகிறார். அச்சட்டம் குணப்படுத்துவதாக அமைய வேண்டும். நம் நாட்டில் திருமணம் வசதிக்காக மட்டுமல்ல. திருமணம் என்பது தூய்மையான, எளிமையான ஓர் ஒப்பந்தம் என்று டாக்டர் அம்பேத்கர் கருதலாம். இந்த வார்த்தைகளை முன்னணி வழக்கறிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், லோகாயத அடிப் படையில் மட்டுமே நம்முடைய சமுதாயம் அமையவில்லை. வேளாண்மை, சமூக இயல், விலங்கியல் ஆகியவை சம்பந்தப் பட்ட நம்முடைய புராதன சாஸ்திரங்களின் அடிப்படையில் நம் சமுதாயம் அமைந்துள்ளது. பூர்வாங்க தோற்றம் பற்றிய கருத்தின் அடிப்படையில், நாம் அனைவரும் மானிடர்களாக இருப்பது போன்று, குதிரை மற்றும் கழுதை ஓர் இனத்தைச் சேர்ந்தவை. மனிதர்கள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையில் வேறு பட்டவர்கள். தான் பிறந்து வளர்ந்த சூழல் மற்றும் சீதோஷ்ன நிலை போன்றவற்றை ஒரு நபர் விரும்புகிறார். இதர உயிர் வாழ் இனங் களுக்கும் இது பொருந்தும். ஹிசாரிலிருந்து ஒருவரை வேறு இடத்

துக்கு அழைத்து சென்று, அப்புதிய இடத்தில் அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்று பாருங்கள். உதாரணமாக மரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். காஷ்மீர் மரம் ராஜஸ்தானில் வளருமா? ராஜஸ் தானில் மாமரங்களை நட்டு வளர்க்க செய்யப்பட்ட பல முயற்சி கள் தோல்வியுற்றன. எப்படி இருப்பினும் அதற்குப் பின்னால் ஒருவித கோட்பாடு இருக்கிறது. நிலம், விதை, நீர், சீதோஷ்ணம் போன்றவை இத்துடன் சம்பந்தப்பட்டவைகள். ஒரு மரத்தை எந்த இடத்திலும் நட்டு வளர்க்க முடியாது. இதைப் போல்தான் திருமணமும். யாரோ ஒருவரை வேறு யாரோ ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்துவிட முடியாது. மரங்களை வளர்ப்பதிலும், எந்த மரத்தில் ஒட்டு வைத்து கன்று வளர்ப்பது என்ற முறை உள்ளது. மேலும் விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. நம்முடைய சமுதாயம் சில அரசியல், கல்வி, சுகாதாரம் பாலியல் முறை மற்றும் ஆக்க மேம்பாட்டியல் ஆகியவற்றின் மீது அமையப்பட்டுள்ளது என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு ஆதாரம் வேண்டுமென் றால், தன் னுடைய இந்து திருமணம் செல்லுபடி சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தி டாக்டர் பகவான் தாஸ் ஆற்றிய நீண்ட உரை யிலிருந்து ஒரு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். சாஸ்திரங்களி லிருந்து பல மேற்கோள்களை தமது உரையில் எடுத்துக்காட்டிய டாக்டர் பகவன்தாஸ் சொன்னதாவது:

> ''தூய்மை, சுத்தம் எல்லாவகையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் சுகாதாரம், குடும்ப வழி சிறப்புத் தோன்றல் ஏற்படுத்துதல், பால் இயல் கொள்கையாகும். உணவு மற்றும் திருமணம் சம்பந்தப்பட்ட வரை தூய்மை யும் சுத்தமும் இருக்க வேண்டும். ஒத்த பழக்கங்கள், உணர்வு கள், தூய்மையான குணாதிசயங்கள் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து உண்ண வேண்டும். திருமணம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால் தனி நபரின், இனத்தின் சுகாதாரமும் மகிழ்ச்சியும் பேணி வளர்க்கப்படும்''.

**டாக்டர் அம்பேத்கர் :** ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்ற அளவிற்குப் போதுமான மீன் இல்லை.

**திரு. பட் :** மக்கள் தொகை புள்ளிவிவரம் சிலவற்றைப் பார்த்தேன். பல ஆண்கள் 60 வயதிலும் திருமணம் செய்து கொள்

கிறார்கள் என்ற விவரம் மக்கள் தொகை புள்ளிவிவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று நான் கூறியதற்காக திரு. சித்வாவும் மற்றும் இதர உறுப்பினர்களும் மன்னிக்க வேண்டும். இந்த வயதில் திருமணம் செய்து கொள்ள விரும்பாதவர்களில் நானும் ஒருவன்.

நம்முடைய வாழ்க்கை முறை சம்பந்தமாக எதையும் கட்டாயப் படுத்துதல் கூடாது என்று கூறினேன். ஒருவருடைய வாழ்க்கை முறை அவருடைய குணாதிசயங்களுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். இன்று இல்லாவிட்டாலும், காலப்போக்கில் அது ஏற்பட்டுவிடும். பண்டிட்ஜி எதைச் செய்தாலும் நாட்டின் நலனை முன் வைத்துத்தான் செய்வார் என்று உறுதியாக நம்புகிறேன்; அதனால்தான் அவரை நம்முடைய தலைவராகக் கருதுகிறோம். அவரிடம் நமக்கு நம்பிக்கையில்லாவிட்டால் அவரைத் தலைவராக நாம் கருத மாட்டோம். அம்மாதிரியே நம்முடைய பெற்றோர்கள் எதைச் செய்தாலும், அது நம்முடைய நன்மைக்குத்தான் என்று நாம் நம்புகிறோம். அவர்களிடம் நமக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், நாமே நம்முடைய வாழ்க்கைத் துணைவியரைத் தேட ஆரம்பிப் போம். அப்படியானால், நம்முடைய இயற்கை, பழக்கவழக்கங்கள், வசதிகள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்வோம். இவ்விஷயங் களின் பால் நம்முடைய நம்பிக்கை அமைந்துள்ளது. நம்முடைய சமுதாயத்திற்கு இடையூறுகளை உண்டு பண்ணுகின்ற அல்லது அதிருப்தியைப் பரப்புகின்ற சட்டம் எதையும் நாம் உருவாக்கக் கூடாது. சொல்லப் போனால், ஒவ்வொரு சட்டத்தின் நோக்கமும் சமுதாயத்தை சந்தோஷமாகவும், வளமாகவும் ஆக்குவது தான். டாக்டர் அம்பேத்கர் இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டு மென்ற குறிக்கோள் கொண்டிருந்தால், இலட்சம் மக்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் இந்த மசோதாவால் ஏற்படும் நன்மைகளை எடுத்து விளக்க வேண்டும். மசோதாவை எதிர்க்கும் பண்டிட் ஒருவரும் அவருடைய கருத்தை எடுத்துரைக்கட்டும். இரகசிய வாக்கெடுப்பு மூலம் மக்கள் தங்கள் கருத்தை தெரிவிக்கட்டும். அது உங்களைத் திருப்தி செய்யும்.

**திரு. நசிருத்தீன் அகமது :** அதுவே முடிவானதாகும்.

**திரு. ஷியாம் நந்தன் சகாயா :** இந்த அவையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துங்கள். அதுவே முடிவானதாகும்.

திரு. பட் : நீங்கள் பயப்படும் காரணத்தினால்தான் மக்களிடம் இதை சமர்ப்பிக்க முன்வரவில்லை. ஒரே ஒரு மனிதர் இருந்தார்; அவர்தான் காந்திஜி. மக்கள் மன்றத்தில் ஒவ்வொன்றையும் வைப்பதில் அவர் நம்பிக்கைக் கொண்டிருந்தார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று கருதினார். ஆனால், தொழிலதிபர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை பகிஷ்காரம் செய்யப் போவதாக அச்சுறுத்தினார்கள். பம்பாயிலுள்ள முல்ஜி ஜேத்தா மார்க்கெட்டிற்கு காந்திஜி சென்று, திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒரு கோடி ரூபாய் வசூலிக்க வந்துள்ளதாகச் சொன்னார். அப்போது தொழிலதிபர்கள் என்ன கூறினார் தெரியுமா? ''ரூபாய் ஒரு கோடி அல்ல, ஐந்து கோடி ரூபாய் தருகிறோம். ஆனால் தீண்டாமை ஒழிப்பு கொள்கையை உங்களுடைய திட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.'' அப்படியொரு நிபந்தனையின் கீழ் அவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய் அல்ல, ஒரு பைசாக் கூட தமக்கு வேண்டாமென்று காந்திஜி பதிலளித்தார். தம்முடைய கொள்கை வழி நின்று, சுயராஜ்யம் பெற முயலுவதாக காந்திஜி கூறிவிட்டார். மக்கள் மன்றம் செல்லுவது அரசாங்கத்தின் கடமை. நாங்கள் சாதாரணமானவர்கள்; பெரிய அளவில் சாஸ்திரங்களைக் கற்றவர்களல்ல. உங்களிடம் ஞானம் இருக்கிறது; பண்டிதர்களிடம் செல்லுங்கள்; இதை எதிர்க்கும் சங்கராச்சாரியரிடம் செல்லுங்கள்; இதை வரவேற்காத, நீங்கள் வாழவைக்க விரும்புகின்ற பெண்களைச் சந்தியுங்ககள்; அவர்களைச் சமாதானப் படுத்தி உங்கள் வழிக்குக் கொண்டு வாருங்கள். பெண்களுக்கு மட்டுமே இந்த மசோதா பயன்படும் என்று நான் கருதவில்லை. பெண்களுக்கு மட்டும் இது ஒரு மாக்னா கார்ட்டாவாக இருக்குமென்று நான் கருதவில்லை. சமுதாயம் முழுவதும் பயன்பெற நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். அதற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். இப்போது விவாதத்திலுள்ள பொருள் புதியது என்று நீங்கள் கருதக் கூடாது. இதை மனதில் கொள்ளுங்கள். 1942-ஆம் ஆண்டு பற்றி கூறத் தேவை இல்லை. 1937 ஆம் ஆண்டில் இந்த விஷயத்தை முன்னிலைப்படுத்திய ஒரு மசோதாவை டாக்டர் தேஷ்முக் அறிமுகப்படுத்தினார். 1856ல் திரு. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் மற்றும் ராஜா ராம் மோகன்ராய் போன்றோர் விதவை மறுமணம் போன்ற சீர்திருத்தத் திட்டங்களை கொண்டு வந்தனர். இத்தகைய முயற்சிகள் நடைபெற்றுத்தான் வருகின்றன. இவ் விஷயம் பற்றி வேதப் பண்டிதர்களும் வேதங்கள் பற்றி வியாக்கியானம் செய்பவர்களும் பல்வேறு வகையில் எழுதியுள்ளனர். இச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டாமென்று நான் உங்களைக்

கேட்கவில்லை. இப்போது ஏன் இதை அறிமுகப்படுத்துகிறீர்கள்? உங்களுக்கு ஏன் பொறுமை இல்லை?

அன்பு கூர்ந்து இன்னும் சிறிது காலம் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். பொதுத் தேர்தல் விரைவில் வரவிருக்கிறது. அடுத்த ஆண்டு மேதிங்கள் புதிய அவை கூடும். அப்போது நீங்கள் மிகச் சிறந்த சட்டங்களையெல்லாம் அறிமுகம் செய்து நிறைவேற்றலாம். இப்போது இங்குள்ள சிலர் மீண்டும் புதிய அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அவையில் மீண்டும் அமரும் வாய்ப்பு எனக்குக் கிட்டினால், விவாதங்களில் நானும் கலந்து கொள்வேன். அதற்கு முன்னர் இறுதி மசோதாவை மக்கள் முன்னிலையில் வையுங்கள். அறைகுறையான மசோதாவைக் கொண்டு வந்து, ''சகோதரரர் கோகுல் அவர்களே, இதை நிறைவேற்றுங்கள்'' என்று சொல்லாதீர்கள். இத்தகைய போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. சாப்பிடுவதற்கு ஏதாவது ஒன்றை முழுமையாகக் கொடுங்கள். அசுத்தமான ஒன்றை கொடுத்து அல்லது தரமானது எதுவும் இல்லாததால் ரேஷன் கடை அரிசியை நான் சாப்பிட வேண்டுமென்று சொன்னீர்களேயானால் நான் சாப்பிட மாட்டேன். சாப்பிடுவதற்கு வேறு எதையும் வைத்துக் கொள்வேன். பசி என்பது வேறு விஷயம். மாற்று உணவு எதுவும் இருந்தால் அதைத்தான் விரும்புவேன். அசுத்தமானதைச் சாப்பிடுவதைவிட, நான் மரத்தின் இலைகளைச் சாப்பிடுவதையே விரும்புவேன். எனவே, இந்த மசோதாவைத் தள்ளி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். நாங்க்ள் கூறியவற்றை ஓரளவு நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கீறீர்கள் என்று நம்புகிறேன். அதற்கு நான் நன்றி கூறுகிறேன். உங்களுக்குள்ள அறிவாற்றலை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் காலத்தின் தேவைகளை நீங்கள் நிறைவு செய்துள்ளீர்கள். இன்னும் ஒருபடி முன்சென்று, தாராள மனப்பாங்குடன் நீங்கள் இருக்க வேண்டும். இந்த மசோதாவை நிறைவேறுவது நான்கு மாதங்கள் தாமதப்பட்டால் ஏற்படும் தீங்குகள் என்ன என்றும், இப்போது நிறைவேற்றப்பட்டால் பெண்களுக்குக் கிட்டும் நன்மைகள் என்ன என்றும் என்னுடைய சகோதரிகளுக்கு நான் எடுத்துக் கூறுவேன். இது நிறைவேற்றப்பட்டால் வானம் இடிந்து விழுந்து விடாது; எவரும் தீங்கிழைக்கப்படப் போவதில்லை; நிதி ஆதாயமும் இருக்குப் போவதில்லை. எனவேதான் இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

ஒரு தொழிற்கூடத்தில் சிலருடன் நான் பேசியதை மீண்டும் இப்போது குறிப்பிடுகிறேன். வழக்கத்திற்கேற்ப விவாகரத்து விஷயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென்பது அவர்கள் விருப்பம். ஆனால், வழக்கங்கள் என்றால் என்ன? வழக்கங்களுக்கு ஒரு பெரிய சக்தி உண்டு. டாக்டர் அம்பேத்கர்கூட இதை மறுக்க மாட்டார். நம்முடைய வழக்கங்களை நீங்கள் நீக்கிவிடுவதை எதிர்க்கிறேன். இன்னும் சில ஆண்டுகளுக்கு இது நடக்காத விஷயமாகும். பின்தங்கிய வகுப்பினரையும் உங்கள் பக்கம் இணைத்துச் செல்ல விரும்பினால் உங்கள் வேகத்தைக் குறைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நாங்களும் உங்களைப் பின்பற்ற முடியும். மகாத்மாவுக்கு மிக முன்னேற்ற கருத்துக்கள் உண்டு. திரு. எம்.என். ராய் பெய்ஸ்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்பு வாதம் பற்றி காந்திஜியிடம் விவாதித்தார். அப்போது நான் உடன் இல்லை; அவர்கள் நடத்திய உரையாடல் பற்றி வெளியான தகவல்களை இங்கு குறிப்பிடுகிறேன். காந்திஜி சொன்னார்: ''திரு. ராய், நீங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்''. திரு. ராய் நீண்ட வலுவான உரை நிகழ்த்தினார். இதைக் கேட்ட பின்னர் மகாத்மா சொன்னார்: ''நீங்கள் கூறுவது இவ்வளவுதானா?'' அதற்குப் பின்னர் மகாத்மா சில வார்த்தைகளில் சில நிமிடங்களே பதில் கூறினார். திரு. ராய்க்கு ஆச்சரியமாக இருந்தது. மகாத்மாஜி இவ்வாறு தான் உணர்கிறாரா என்று திரு. ராய் கேட்டார். அதற்கு மகாத்மாஜி சொன்னது: நீங்கள் என்னை நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய சமுதாயம் முன்னேறும்போது நான் என் கருத்துக்களை கூறுவேன். நம்முடைய சமுதாயம் பின்னிலையில் உள்ளது என்பது எனக்குத் தெரியும். முற்போக்குக் கருத்துக்களை மக்கள் போதுமான அளவிற்கு வளர்த்துக் கொள்ளவில்லை. இருப்பினும் என் வழியில் மக்களை அழைத்துச் செல்ல வேண்டியதுள்ளது.'' எனவேதான் டாக்டர் அம்பேத்கர் கருத்துக்கள் எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், அதனால் ஏற்படும் நன்மைகள் எதுவாக இருப்பினும், நாங்கள் உங்களுடன் உடன்பட்டு வராத பட்சத்தில், 15, 20 அல்லது 25 அமைச்சர்களை வைத்துக் கொண்டு டாக்டர் நீங்கள் சாதிக்கப் போவது என்ன?

திரு. நேரு அல்லது டாக்டர் அம்பேத்கர் கேட்டுக் கொண்டதனால்தான் பெரும்பாலானோர் சில விஷயங்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை என்னால் காண முடிகிறது. அம்மாதிரியே நானும் கேட்டுக் கொண்டால் என்னை யார் பின்பற்றுவார்கள்? இம்மாதிரியான முறையில் மக்கள் இதை விரும்பவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவிக்காவிட்டால் நான் உங்களை ஏமாற்றுபவ

னாவேன். இதை மீண்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் உங்கள் தொண்டர்கள் என்பது போல், வாக்காளப் பெருமக்கள் எங்களுடன்தான் இருக்கிறார்கள். அவர்களின் நலத்தையும் நல் வாழ்வையும் நாம் கவனிக்க வேண்டியதுள்ளது. ''சாஸ்திர ருர்ஹி பளியாசி'', அதாவது சாஸ்திரங்களை வழக்கங்கள் புறக்கணிக் கின்றன என்று கூறப்பட்டுள்ளதை நீங்களும் அறிவீர்கள். சொல்லப் போனால், சட்டங்களும் சாஸ்திரங்களும் மனிதர்களால் உருவாக்கப் பட்டவை. சாஸ்திரங்களைக் காட்டிலும் வழக்கங்கள் முதன்மை பெற்றவைகளாக இருக்கும் போது, நம்முடைய சமுதாயம் சட்டங் களை ஏன் புறக்கணிக்கக் கூடாது? இந்த அம்சம் பற்றியும் கவனத் தில் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு குறைபாட்டினை எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். திரு. குன்ஸ்ரு அவரது இருக்கையில் இல்லை. எனவே, டாக்டர் அம்பேத்கர் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நாம் சிந்தனையிழந்தவர்களாக இருக்கின்றோம். மேல் நாட்டவர்கள் நம்முடைய திருமணச் சட்டங்களும் சடங்குகளும் மிகவும் நல்லவை என்று சொன்னால், நாம் அதை ஏற்றுக் கொள்கின்றோம். நம் முடைய சாஸ்திரங்கள், உபநிடதங்கள் மற்றும் வேதங்கள் உலகி லேயே மிகச் சிறந்தவை என்று மாக்ஸ் முல்லர் கூறும்போது, அவர் கூறுவது உண்மை என்று நம்புகிறோம். அவர் கூறியுள்ள விளக்கங்களை மேற்கோள் காட்டிப் பேசுகிறோம். ஆனால் நம் முடைய விமர்சர்களும், பண்டிதர்களும் அம்மாதிரி விளக்கங் களைச் சிறப்பான முறையில் கூறினாலும், அவர்களது விளக்கங் களை ஒருவரும் படிப்பதில்லை.

காசு கொடுத்தாலும் கூட **யாக்ஞவல்கிய ஸ்மிருதியின்** பிரதிகள் டில்லி முழுவதிலும் எங்கும் கிடைக்கவில்லை என்று இப்போதுதான் என்னிடம் சொன்னார்கள்.

**டாக்டர் அம்பேத்கர் :** என்னிடம் பல பிரதிகள் உள்ளன.

**திரு. பட் :** உங்களிடம் பிரதிகள் இருப்பின் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள். நூலகத்தில் இது கிடைக்கவில்லை. **சன்ஸ்கார் கௌஷ்துபா** மற்றும் **யாக்ஞவல்கியர் ஸ்மிருதியும்** நூலகத்தில் இல்லை. இவையாவும் உங்களிடம் உள்ளன. அவற்றை நீங்களே சொந்தமாக வாங்கியிருக்கலாம். உங்களுக்கு அறிவுப் பசி அதிகம்;

கற்பதில் உங்களுக்கு கங்கு கரையற்ற ஆர்வம்; அதுமட்டுமல்ல. நீங்கள் ஒரு கற்றறிந்த அறிஞர்; ஒரு பண்டிதரும் கூட. இந்த நூல்கள் மூலம் நாங்கள் பயனடையவும், தேவையான தகவல்கள் தெரிந்து கொள்ளவும் வசதியாக இந்நூல்களை நூலகத்தில் தயவு செய்து வைக்கவும். ஈட்ஸ் செய்துள்ள **கீதாஞ்சலி** மொழிபெயர்ப்பு எனக்கு எப்போதும் திருப்தியளித்ததில்லை. ஏனென்றால் நான் கல்லூரி யில் படிக்கும் காலத்திலிருந்து **இரவீந்திரநாத தாகூரின் கீதாஞ் சலியை** நான் வங்காள மொழியைக் கற்கும் வரை படிப்பதில்லை என்று உறுதியுடன் இருந்து வருகிறேன். எந்த மூல மொழியில் இத்தகைய நூல்கள் எழுதப்பட்டனவோ, அந்த மொழி அறிவு இல்லாமல் அவைகளைப் படிப்பது பயன்தராது என்று கருதுபவன் நான். இதுவரை தமிழ் மொழியை என்னால் கற்க முடியவில்லை. ஆனால் அதை கற்க முயலுவேன். இளமைக் காலத்திலிருந்து என்னிடம் இத்தகைய மனப்போக்கு இருக்கிறது. மூல மொழி **கீதாஞ்சலிக்கும்** ஈட்ஸ் செய்துள்ள இந்நூலின் மொழிபெயர்ப்புக்கும் வித்தியாசம் அதிகம் இருப்பதைக் கண்டேன். பயன்தரத்தக்கவை எதுவும் மொழிபெயர்ப்பில் இல்லை. மிகுந்த வேறுபாடு இருப்பதைப் பார்க்கிறேன். ஒப்பிட்டுப் பார்த்தால் இந்திய மொழி மொழி பெயர்ப்புகள் சிறப்பாக உள்ளன. புனைப் பெயரில் ஒருவர் செய் திருந்த **அபாங்க** விருத்தத்தில் செய்திருந்த மராத்தி மொழி பெயர்ப்பு ஒன்றை பார்த்தேன். இந்தியர்களான நாம் நம்முடைய சாதனைகளைப் பார்த்து வியக்க மறந்து, நமது கண்களை பொதுவாக மூடிக் கொள்கிறோம். ஆனால் அந்நியரான ஒருவர் அப்பொருள் மீது ஒளி பாய்ச்சி விளக்கும்போது அதிசயித்துப் போய் பின்வருமாறு கூறுகிறோம்: ''ஆம்; இப்போது தான் எங்க ளுக்குத் தெரிகிறது.'' நம்முடைய கண்களைப் பறிக்கின்ற எத்தகைய ஒளி விளக்குகள் வெளிநாட்டவர்களால் போட்டுக் காட்டப் பட்டுள்ளன. இப்போது இவற்றை நாம் பாராட்ட முன்வந்துள் ளோம். இக்கேள்வியை நான் இங்கு எழுப்புகிறேன். நம்முடைய சொந்த விளக்குகள் காட்டுவதிலுள்ள குறைபாடுகள் என்ன? நம் மிடையே உள்ள தெளிவுரை விளக்குகளில் காணப்படாதவை யாவை? நல்ல கண்ணோட்டத்தில் நம்முடைய கருத்துக்களைப் பார்ப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். முழுமையான தெளிவு ஏற்பட்டால் ஒவ்வொருவரும் திருப்தி பெறும் வகையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும். அவ்வாறு ஏற்படுவது அனைவரின் நலனுக்குகந்ததாக அமையும்.

இப்போது, இந்து என்பதன் பொருள் என்ன என்பது பற்றியும் 'இந்து' என்ற வார்த்தை எங்கே இருந்து வந்தது என்பது குறித்தும் குறிப்பிட்டுப் பேசுகிறேன். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இப்பொருள் பற்றி தெளிவாகப் பேசுவதற்காக சில நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். மன்னியுங்கள். கிரேக்க மற்றும் ஈரான் சரித்திரங்கள் அல்லது வரலாற்று உண்மைகள் பற்றிய விவரங்களை ஆராய விரும்பவில்லை. கடந்த காலத்தில் கிரீஸ், ஈரான் ஆகிய நாடுகளுடன் நமக்கு இருந்த உறவுகள் பற்றிப் பேசப் போவதில்லை. ஆனால், 'இந்து' என்னும் வார்த்தை எங்கே இருந்து வந்தது என்பது குறித்து மட்டும் சிறிது பேச விரும்புகிறேன். என்னுடைய திருத்தம் முற்றிலும் இப்பொருளுடன் சம்பந்தப்பட்டதாகும். 'இந்து' என்ற வார்த்தையின் தோற்றம் பற்றி நிலவும் ஒரு கருத்து: **காந்தர்வ தேசத்தில்** இரண்டு நகரங்கள் இருந்தன. ஒரு நகரம் 'இந்தாஸ்' என்று அழைக்கப்பட்டது. இந்தப் பெயரிலிருந்து 'இந்து' என்ற வார்த்தை உருவானது. இரண்டாவது கருத்து: 'இந்து' என்ற வார்த்தை சிந்து நதியைக் குறிக்கும் 'சிந்து' என்ற வார்த்தையிலிருந்து உருவானது; மொழியியல்படி 'எஸ்' என்ற எழுத்து 'ஹெச்' என்று மாறியது. இவ்வாறு 'சிந்து' என்ற சொல் 'இந்து' என்று மாறிவிட்டது. பல இடங்களில் **இந்துவானி** என்னும் வார்த்தை வருகிறது. இந்த வார்த்தையின் மூலம் என்ன என்பதை அறிந்து கொள்ளுவது கடினமானதாகும். மத்திய செயலக நூலகத்திற்குப் போய் இருந்தேன். அது மிகவும் அவலமான நிலையிலுள்ளதைக் கண்டேன். இதைக் காட்டிலும் மிகவும் மோசமான நூலகத்தை நான் கண்டது இல்லை. இப்பொருள் சம்பந்தமான நூல்கள் வேண்டுமெனக் கேட்டேன். இப்பொருள் பற்றிய நூல்கள் சேகரிப்பு இல்லை என்றும், சில பருவ ஏடுகளின் ஆண்டு மலர்களில் அங்குமிங்கும் வெளியான சில கட்டுரைகள் இருக்கலாம் என்றும் கூறினார்கள். இவற்றைத் தவிர வேறு எதுவும் நூலகத்தில் கிடைக்கவில்லை. இங்கே சென்றதற்குப் பதில் ராயல் ஏசியாட்டிக் கழக நூலகம் போய் இருந்தால் ஏதேனும் உபயோகமான குறிப்புகள் கிடைத்திருக்கும்; துரதிருஷ்டவசமாக எனக்கு நேரம் இல்லாததால் அங்கே போக முடியவில்லை. சில வேளைகளில் பத்திரிகை மசோதா மற்றும் இந்து சட்ட தொகுப்பு மசோதா பற்றிய விவாதங்கள் இருப்பதாலும் நான் வெளியே செல்ல முடியவில்லை. இருப்பினும், 'இந்து' என்ற வார்த்தையின் உண்மையான மூலம் குறித்த விவரங்களைப் பற்றி பேச விரும்பவில்லை. 'இந்து' என்ற வார்த்தைக்கு இந்து பூமியில் அதாவது பாரதம் முழுவதும் குடியிருப்பு வாசம் செய்யும் மக்கள் என்று பொருளாகும். இம்

மக்களை ஆரியர்கள் அல்லது தாசர்கள் (தாஸ்யூ) என்று நீங்கள் எப்படி அழைத்தாலும், இப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் இந்துக்கள். கடந்த காலத்தில் இந்தியாவில் வசித்த மக்கள் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாவர். ஒரு பிரிவு ஆரியர்கள் என்றும் மற்றொரு பிரிவு தாசர்கள் (தாஸ்யூ) என்றும் அழைக்கப்பட்டனர். இத்தகைய வேறுபாடு இருப்பினும் அம்மக்கள் இந்துக்கள்தான். எனவே சட்டமாக்கப்படவுள்ள மசோதாவில் 'இந்து' என்ற வார்த்தைக்கு என்ன பொருள் விளக்கம் தரப் போகிறீர்கள் என்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். திரு. குன்ஸ்ரு தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போன்று எத்தனை நபர்களிடம் ஆலோசனை நடத்தப்பட்டது? எத்தனை நபர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்? அவற்றில் எத்தனை அபிப்பிராயங்கள் அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன? இவ்விஷயங்கள் எல்லாம் குறித்து இங்கே விவாதம் செய்ய விரும்பவில்லை.

திருமணச் செல்லுபடி சட்டம் குறித்து விவாதிக்கின்றபோது இந்து என்பவர் யார் என்பதை டாக்டர் பகவான் தாஸ் விளக்கிப் பேசினார். இந்து என்றால் அது ஒரு தேசீய இனம் மட்டுமல்ல. சுமார் 1937 ஆம் ஆண்டு வாக்கில் 'ஷரியத்' சட்டம் அவையில் அறிமுகம் செய்யப்பட்டபோது, அவருடைய சுபி நண்பர் ஒருவர் முஸல்மான் என்பவர் யார் என்று விளக்கம் தந்தார். அதைத்தான் நான் இங்கு படித்துக் காட்டினேன். மசோதாவை அறிமுகம் செய்து பேசியபோது அவர் கூறினார்:

> "இஸ்லாம் மதத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஆனால் முகமது அவர்களிடம் எல்லாரும் விசுவாசம் வைத்திருப்பது அவசியமாகும். இருப்பினும் சில பிரிவினர் **கலிமா** பாகம் இரண்டில் நம்பிக்கை வைப்பது அவசியம், இன்றியமையாதது என்று கருதுவதில்லை; மேலும், பூமியிலுள்ள மக்களுக்கு உதவி செய்ய தேவனால் அனுப்பப் பட்ட பல தீர்க்க தரிசிகளில் முகமதுவும் ஒருவர் என்று அப்பிரிவினர் கருதுவதாகவும் என்னிடம் சொன்னார்கள்."

இக்கருத்தை மறுத்து, பதிலளிக்கும்போது சர் யாமின் கான் (ஆகரா டிவிஷன்) கூறியது:

> "இதை எந்த முஸ்லீமும் நம்பவில்லை. கலீமாவின் இரண்டு பாகங்களிலும் - அதாவது லா இலஹா இல்லாலாஹ்' மற்றும் 'மகமது ரஜூலுல்லாஹ்' - ஒரு முஸ்லீம் நம்பிக்கை வைப்பது அத்தியாவசியமாகும்."

இதற்குப் பதில் கூறும் வகையில் டாக்டர் பகவான் தாஸ் கூறியது: ''எனக்கு ஒரு சுபி நண்பர்தான் அவ்வாறு சொன்னார்.'' திரு. யாமின் கான் உடனே கூறிய பதில்: ''இரண்டாவது பாகத்தில் நம்பிக்கையில்லாதவர்களை முஸ்லீம்கள் என்று கருத முடியாது.''

நான் தாழ்மையுடன் கூறுவது இதுதான்: இந்து மதத்திலிருந்து வெளியேறி, வேறு எந்த மதத்தையும் தழுவியுள்ளவர்களின் சமூக வழக்கங்கள் இந்து சமுதாயத்தை சாந்தவர்களின் வழக்கங்கள்போல் இன்னும் இருந்தால், இச்சட்டத் தொகுப்பு அவர்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும்; அவர்கள் அவ்வாறு விரும்பினால் இந்த உரிமை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இந்துக்களுக்குக் கிடைக்கும் இத்தகைய நன்மைகளை அவர்களும் பெறுவதை ஏன் நீங்கள் அனுமதிக்கக் கூடாது? சொல்லப்போனால், அதை மறுப்பதற்கான ஆட்சேபனைகள் என்ன உள்ளன? கிறிஸ்தவ மதத்திற்கு மாறினாலும், சில இந்திய கிறிஸ்தவர்களின் சமூகப் பழக்க வழக்கங்கள் இந்துக்களைப் போன்றுதான் உள்ளன. அவ்வாறெனில், இச்சட்டத்திலிருந்து அவர்களை நீங்கள் ஏன் ஒதுக்க வேண்டும்? இந்துக்கள் அனுபவிப்பது போன்று இச்சட்டத் தொகுப்பின் பயனை அவர்களும் அனுபவிக்க நீங்கள் ஏன் அனுமதிக்கக்கூடாது?

எனவே, மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் இவை அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்து மதத்தைச் சாராத எச் சமுதாயம் இதனால் பயனடையும் என்பதை நான் கூற வேண்டுமா? விவரங்களைக் கூற விரும்பவில்லை. ஆனால் அவர் அதன் மீது கவனம் செலுத்துவதற்கு விவரங்கள் தருவேன். உதாரணமாக சொல்ல வேண்டுமானால், டாக்டர் கௌர் மற்றும் திரு. குப்தா இந்து சட்ட வல்லுநர்கள். இச்சட்டத் தொகுப்பு பொருந்தக்கூடிய இந்து மதம் சாராத சமுதாயங்களை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குட்சி மெமான் பற்றி......

**திரு. ஷியாம் நந்தன் சகாயா :** உங்களுக்கும், அவருக்கும் தெரியும். ஆனால் எங்களுக்கு அது பற்றி தெரியாது. அவற்றை வாசியுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** அவற்றைப் படித்துக் காட்டுங்கள்.

**திரு. பட் :** வகுக்கப்பட்ட மெமான் சட்டம் .....

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:** நேரத்தைப் பற்றி யோசிக்க வேண்டாம்; தயவு செய்து படித்துக் காட்டுங்கள்.

**திரு. பட்:** அதை நான் படித்துக் காட்டப் போகிறேன். குட்சி மெமான் சட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> ''ஆகையால், மரபுரிமை மற்றும் சொத்துரிமை விஷயங்களில் முகமதியர் சட்டத்தின் அதிகார வரம்பிற்குக் கீழ் வர விரும்பும் குட்சி மெமான்களுக்கு உகந்ததாக இருக்கும் வகையில், இதன் மூலம் சட்டமியற்றப்படுகிறது.'' செயற்பாட்டுப் பிரிவு கூறுவதாவது :

> ''பிரிட்டிஷ் இந்தியாவில் குடியிருக்கின்ற வயது வந்துள்ள எந்தக் குட்சி மெமோனும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் எழுத்து மூலமாக, சமர்ப்பித்துள்ள சாற்றுகையில் சட்டத்தின் பயன்களை தான் அனுபவிக்க விரும்புவதாக உறுதி கூறலாம்; அதன் பின்னர், அவ்வாறு உறுதி கூறுபவரும் அவருடைய வயது வராத குழந்தைகளும், சந்ததியினரும் மரபுரிமை, சொத்துரிமை சம்பந்தப்பட்ட விஷயங்களில் முகமதியர் சட்டத்தின் வரம்பின்கீழ் வருவார்கள்''

**திரு. ஷியாம் நந்தன் சகாயா:** இது ஒரு விருப்பத்தின் அடிப்படையிலான கூறு. எனவே, இதற்கு முன்மாதிரி ஒன்று இருக்கிறது.

**திரு. பட்:** எனவே, மேற்கூறிய கூறில் ஒருவித தாராளநிலை அனுமதிக்கப்பட்டிருப்பது போல், மாண்புமிகு சட்ட அமைச்சர் ஒரு வகையான ஷரத்தினையும் இதில் சேர்ப்பார் என்று நம்புகிறேன். அவ்வாறு செய்யாவிடில், அதனுடைய செயலாக்க வரம்பை நீங்கள் குறைப்பதாகும். அப்போதைய உள்துறை உறுப்பினரான திரு. ஹென்றி கிரெய்க் இது பற்றி குறிப்பிட்டு பேசியுள்ளார். அவர் கூறியதாவது :

> ''இதுபோன்ற விஷயங்களில் ஒருவர் அறிந்திராத ஒரு விதி அல்லது சட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவரை நிர்ப்பந்திக்காமல் அவரது சொந்த விருப்பத்துக்கு விட்டு விடுவது விவேகமானதல்லவா என்பதை மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்வது உசிதம் என்று நினைக்கிறேன்.''

**திரு.பி. தாஸ் (ஒரிஸ்ஸா) :** சர் ஹென்றி கிரெய்க் ஒரு பிரமச்சாரி என்று நினைக்கிறேன். சமுதாயத்தைப் பற்றி அவர் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

**திரு. பட் :** 1937-ஆம் ஆண்டு விவாதங்கள் தொகுப்பு 3ல் பக்கம் 2544ல் வெளியிடப்பட்டுள்ளதிலிருந்து நான் இந்த மேற்கோளை கையாண்டிருக்கிறேன். எனவே, நாமும் இத்தகைய ஷரத்து ஒன்றை சேர்த்துக் கொள்ள வேணடும். நாம் அனைவரும் பாராட்டுகின்ற பரோடா சட்டத்தைப் பாருங்கள். பரோடா நம்மை விட பல ஆண்டுகள் முந்திவிட்டது. இப்போது அப்பிராந்திய மக்கள் எங்கே உள்ளனர் என்றும், அம்மக்கள் அனுபவிக்கும் நன்மைகள், தீமைகள் என்ன என்றும் கேளுங்கள். அவர்கள் பல்வேறு சட்டங்களை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்றும் கேட்டுப் பாருங்கள். அனேகமாக கடந்த காலம் மிகவும் சிறந்ததாக இருந்தது என்பதை ஒத்துக் கொள்வார்கள். எவ்விதமான உள்நோக்கத்துடனும் இவற்றை எல்லாம் உங்களிடம் நான் கூறவில்லை. சமூக சட்டங்களைப் பொறுத்தவரை இந்தியாவின் இதர பகுதிகளைக் காட்டிலும் மைசூர் முன்னிலையில் உள்ளது என்றுதான் கூற வேண்டும். மேலும், நான் தவறாகச் சொல்லவில்லை யென்றால் மைசூரைச் சேர்ந்த நண்பர்கள் மன்னிக்க வேண்டும் - மைசூர் மற்றும் இதர பிராந்தியங்கள் முன் வருவதற்கு முன்னரே, சர் சாயாஜி ராவ் கெய்க்வாடு முதன் முதலில் கல்வி மற்றும் சுகாதார சீர்திருத்தங்களை கொண்டு வந்தார் என்பதை உறுதியாகக் கூறுவேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** அவர் ஒரு தவறு செய்தார்.

**திரு. பட் :** நீங்கள் ராஜஸ்தான் மக்களாகிய எங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறீர்கள். நாங்கள் மந்தமான மக்களாக இருக்கின்றோம் என்பது தெரிகிறது. நாங்கள் செல்லும் வேகம் உங்கள் விமான வேகத்துடன் ஒப்பிட முடியாது. ஒட்டக வேகம்தான் எங்களுடைய வேகம். எனவே உங்கள் விமான வேகத்தை மட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. பரோடா இந்து சட்டம் நிர்ணயித்திருப்பதாவது;

> ''பரோடா மாநிலத்தில் குடியிருக்கும் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.
>
> (அ) பிறப்பால் இந்துவாக இருப்பவர் எவரோ அல்லது இந்து மதத்திற்கு மாறியவர் அல்லது இச்சட்டத்தின் எந்தப் பகுதியும் யாருக்கு எந்த அளவிற்கு பொருந்துவதாக இச்சட்டம் இருக்கிறதோ அவர்களுக்கு இது பொருந்தும்.

விளக்கம் I: இந்து சட்டம் அல்லது அதன் எப்பகுதியும் பழக்க வழக்கத்தால் எந்த மக்கள் பிரிவுக்குப் பொருந்துகிறதோ அப்பிரிவு இந்துக்கள் என்று கருதப்படுவர்.''

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இது எந்தச் சட்டத் தொகுப்பு?

**திரு. பட்:** பரோடா இந்துச் சட்டத் தொகுப்பு.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** ஒருதாரச் சட்டம்.

**திரு. பட்:** ஆம். அது கூறுவதாவது:

> ''இந்து சட்டம் அல்லது அதன் பகுதி எதுவும் வழக்கத்தாலும் மற்றும் வழக்காற்று முறையாலும் எந்த மக்களுக்குப் பொருந்துகிறதோ அம்மக்கள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு இந்து சட்டம் அல்லது அதன் எந்தப் பகுதியும் பொருந்துகின்ற அல்லது தொடர்பான விஷயங்கள் பொறுத்த வரை இந்துக்கள் என்று கருதப்படுவார்கள்.''

இந்து மதத்தை ஒருவர் பின்பற்றினாலும் அல்லது பின்பற்ற வில்லை என்றாலும், அவருக்கு இச்சட்டம் பொருந்துமென்றால் அவர் ஓர் இந்து என்று கருதப்படுவார் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்கள் தான் என்று நான் சொல்லுவேன். கலாசாரத்தின் அடிப்படையில் மட்டும் நான் இப்படிக் கூறவில்லை. ஆங்கிலேயர் கருத்துப்படியும் தான் இவ்வாறு கூறுகிறேன். இந்துஸ்தானிகள் அல்லது இந்தியர்கள் என்று நாம் ஏன் அழைக்கப்படுகிறோம்? உண்மையில் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் பிறந்தவரை 'இந்து' என்ற வார்த்தை குறிப்பிடுகிறது; நிச்சயமாக அவருடைய மதத்தைக் குறிப்பிட வில்லை. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பிறந்தவரைத்தான் இது குறிப்பிடுகிறதே தவிர, அவருடைய இந்து நம்பிக்கையை அல்ல; இம்மண்ணில் குடியிருப்போர் அனைவரையும் இது குறிப்பிடுகிறது. பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> ''(ஆ) இந்து மதத்தைப் பின்பற்றுவதைத் துறந்து விடாதவர்கள் இந்துக்களாக இருப்பவர்களாகக் கருதப்படுவர்.''

இதுதான் நான் கூறுவது. எனவே, மாண்புமிகு அமைச்சர் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இதுவரையிலும் நான் பேசாத பொருள் பற்றி இப்போது பேச விரும்புகிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** குறிப்பாக எந்தத் திருத்தத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்?

**திரு. பட்:** என்னுடைய திருத்தம் - அதாவது, ''நிருவாக ஆட்சிக்குட்பட விரும்புபவர்கள்'' என்ற திருத்தம். நான் கூற விரும்பும் யாவும் இதில் அடங்கும்.

இன்னும் ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு திரு. காட்கில் மற்றும் குன்ஸ்ரு ஆகிய இருவரும் இவ்விஷயம் பற்றி அதிகமாக பேசியுள்ளார்கள். சாரதா சட்டம் அதாவது குழந்தைத் திருமணத் தடுப்பு சட்டம் 1928-ல் கொண்டுவரப்பட்டபோது, ஆரம்பத்தில் அதன் தலைப்பு ''இந்து குழந்தை திருமணம்'' என்று இருந்தது. 1929ல் குழுவின் அறிக்கை பெறப்பட்டபோது, அதில் சில மாற்றங்கள் செய்யப் பட்டு, அதனுடைய பெயர் ''குழந்தைத் திருமணத் தடுப்பு மசோதா'' என்று மாற்றப்பட்டது. இக்குழுவில் சில முஸ்லீம்களும் உறுப்பினர் களாக இருந்தனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் அதை எதிர்த்தார்கள். 1929ல் அவையில் இது விவாதிக்கப்பட்டபோது, அவர்கள் மீண்டும் எதிர்த்தனர். எதிர்ப்புகள் இருப்பினும், அது ஒரு நல்ல சட்ட நடவடிக்கையாக இருந்ததால், அதை இந்தியா முழுவதிலும் அமலாக்குவது விரும்பத்தக்கது என்று கருதப்பட்டது. திரு. ஜின்னா நீங்கலாக அனைத்து முஸ்லீம் உறுப்பினர்களும் இது முஸ்லீம் மக்களுக்குப் பொருந்தாது என்று கூறினர். அவர்களுடைய சமயத் தலைவர்கள் அதை எதிர்க்கிறார்கள் என்றும், அதனால் முஸ்லீம்களுக்கு இதை பொருந்துவதாக ஆக்கக்கூடாது என்றும் வாதிட்டனர்.

எனக்கு ஞாபகம் சரியாக இருக்குமானால், அப்போது திரு. சாட்டர்ஜி என்ற ஒரு கிறிஸ்தவர் அவை உறுப்பினராக இருந்தார். இது தங்களுடைய மதத்திற்கு எதிரானது என்து அவரும் கூறினார். அதனால் அது கிறிஸ்தவர்களுக்குப் பொருந்துவதாக இருக்கக் கூடாது என்று கருத்துக் கூறினார். இத்தகைய முறையில் பலர் பேசினார்கள். இது ஒரு நல்ல சீர்திருத்த நடவடிக்கையாக இருந் ததால், எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது, அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பொருந்தும் என்று அரசாங்கம் கூறி, அமலாக்கியது. ஒரு தார மணம் ஒரு நல்ல சீர்திருத்தம் என்று கருதினால், அனைத்து

மக்கள் மீதும் ஏன் இக்கட்டுப்பாட்டை விதிக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும். இச்சட்ட அதிகாரத்திலிருந்து சிலரை ஏன் ஒதுக்க வேண்டும்? சில முஸ்லீம் நண்பர்களுக்கு இரண்டு மனைவிகள் இருக்கலாம் - அத்தகையோர் எண்ணிக்கை இந்து சமுதாயத்தில் மிகவும் குறைவுதான். பொதுவாகப் பார்த்தால் கீழ்ச்சாதி மக்கள்தான் இரண்டு மனைவிகளை வைத்துக் கொள்கின்றனர். பொதுவாகச் சொல்லுவதென்றால் இயற்கையாகவோ அல்லது சூழ்நிலைகள் காரணமாகவோ பெரும்பான்மையான இந்துக்கள் ஒருதார மணமுறையைப் பின்பற்றுகின்றனர். ஒருவருக்கு ஒரு மனைவி கிடைப்பதே சிரமமாக இருக்கும்போது இரண்டு மனைவிகளை எங்கே இருந்து பெறுவது? அப்போது பொறுக்குக்குழு அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டது:

> ''குழந்தைகள் திருமணத்தை முறைப்படுத்துவதன் மீது கட்டுப்பாடு விதிப்பது சட்டப்பேரவையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள மசோதாவின் நோக்கமாகும். பொதுவாகச் சொன்னால் குறிப்பிட்ட வயதிற்குக் கீழ் உள்ள சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் இடையே நடைபெறும் திருமணங்கள் செல்லுபடியாகாது என்று அறிவிக்கும் முறை பின்பற்றப் பட்டது.''

'குழந்தைத் திருமணங்கள் செல்லுபடியாகாது' என்று அறிவிப்பதே சாரதா சட்டத்தின் இலக்கும் குறிக்கோளுமாகும் என்ற உண்மையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குப் பின்னர், இதன் நோக்கம் மாற்றப்பட்டது. அவ்வாறு ஏன் மாற்றப் பட்டது? மிகவும் கடுமையாக இருக்குமென்ற காரணத்திற்காக அவ்வாறு மாற்றப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருதார மணம் பற்றி பின்னர் பேசுகிறேன். மாற்றம் செய்யப்பட்ட பின்பு பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது:

> ''அரசாங்கத்தின் ஆணைப்படி மசோதா சுற்றுக்கு விடப் பட்டது. நடந்து முடிந்துவிட்ட திருமணம் செல்லுபடியாகும் விஷயத்தில் தலையிடுவது மத மற்றும் சட்ட அடிப் படையில் ஆட்சேபனைக்குரியது என்ற வலுவான கருத்து இருப்பது வெளியானது.
>
> ''இப்போது இந்த ஆட்சேபனைகள் மறுக்க முடியாதவை என்பது எங்கள் அபிப்பிராயம்; அத்தகைய குழந்தைத் திருமணங்கள் செல்லுபடியாகா என்று அறிவிப்பதன்

வாயிலாக அன்றி, அவைகளில் பங்கு பெறுபவர்கள் மீது தண்டனை விதித்து, மசோதா குழந்தைகள் திருமணத்தைக் கட்டுப்படுத்தும் தன் விளக்கத்தினை நிறைவேற்ற வேண்டுமென்று பெருமளவில் நிலவிய கருத்தின் அடிப்படையில் நாங்கள் செயல்பட்டோம்.''

அது ஏற்படுத்தியுள்ள ஒரு வேறுபாட்டை நீங்கள் காண வேண்டும். நிராகரிக்கப்பட வேண்டுமென்று முன்னர் எண்ணப் பட்டவை நிராகரிக்கப்படவில்லை. அத்திருமணங்கள் செல்லுபடியாகாதவை என்று கருதப்படவில்லை. அவர்கள் மீது சில தண்டனைகள் அளிக்கப்பட்டன. மேலும் இவ்வாறு நிர்ணயித்துக் கூறப்பட்டது:

'இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த மசோதா இந்துக்கள், சமணர்கள், சீக்கியர், பிரம சமாஜத்தினர், ஆரிய சமாஜவாதிகள் மற்றும் பௌத்தர்கள் ஆகியோருக்கு பொருந்தும்; இது, திருமணம் செல்லுபடியாவது சம்பந்தப்பட்ட நடவடிக்கை. ஒரு குழந்தைத் திருமணத்தில் பங்கு கொள்ளுபவர்கள் மீது குற்றவியல் தண்டனையளிக்கும் ஒரு நடவடிக்கையாக அமையும் வகையில் இம்மசோதாவை நாம் திருத்த உத்தேசித்து இருப்பதால், குறிப்பிட்ட சமுதாயங்களுக்கு மட்டும் இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பது மனக் கசப்பளிப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் குழந்தைத் திருமணங்கள் இதர சமுதாயங்களிடையே அடிக்கடி இல்லாவிட்டாலும் நடைபெறத்தான் செய்கின்றன. எனவே, திருத்தப்பட்ட மசோதா அமலாவதில் பொதுவாக இருக்க வேண்டும் என்றும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள அனைத்து வகுப்புகள், சமுதாயங்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டுமென்றும் கருதுகிறோம்.''

''இது குறிப்பிடத்தக்க வேறுபாடாகும். மக்கள் மனதை நன்கறிந்த பின்னர் இவ்வாறு செய்துள்ளனர். எனவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் சமுதாயத்தின் கருத்தை மனதில் கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். இதுதான் என்னுடைய வேண்டுகோள்.

கிறிஸ்தவ திருமணச் சட்டத்தில் கிறிஸ்தவர்கள் திருமணம் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பதையும் பார்க்க வேண்டும். பார்சி சட்டத்தில் பார்சிகளின் உண்மையான நிலை பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்று கவனிக்கவும். அதன் விளக்கம் விரிவாக

இல்லை. ஜொராஸ்டியன் மதத்தைத் தழுவும் ஒருவர் பார்சி என்று கருதப்படுவார். நம் நாட்டில் பல மத உட்பிரிவுகள் உள்ளன. மக்கள் ஏதாவது ஒரு உட்பிரிவை பின்பற்றுகின்றனர். அதனால்தான் எல்லா மக்களும் 'இந்துக்கள்' என்று கருதப்பட வேண்டுமென்று கூறுகிறேன்.

இதுவரை 'பி' பிரிவு மாநிலங்களுக்கு சாரதா சட்டம் பொருந்தாமல் இருந்தது. 1980ல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் படி, இந்த விஷயம் பொது அதிகாரப் பட்டியலில் உள்ளது. எந்த மாநிலத்திற்கும் இது பொருந்துவதாக ஆக்கலாம். நீங்கள் விரும்பும் எதையும் அம்மாநிலங்களுக்குப் பொருந்துவதாகவும் ஆக்கலாம். இந்த ஷரத்து இருந்தபோதிலும் 'பி' பிரிவு மாநிலங்களில் இதுவரை இச்சட்டம் அமலாக்கப்படவில்லை.

**திரு. பி. தாஸ்:** டாக்டர் அம்பேத்கர் இதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** இவை அனைத்தும் ரத்து செய்யப்படும்.

**திரு. பட்:** ஆக, விவாகரத்து பற்றிய சட்டம் குறித்து மாண்பு மிகு சட்ட அமைச்சருடன் பேசிக் கொண்டிருந்தேன். சமூகப் பழக் கங்களுக்கு எதிராக செல்லாதவரை ஒரு சட்டம் தொடர்வதற்கு அவர் அனுமதிக்க வேண்டும் என்று அவரைப் பெருமதிப்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சீர்திருத்தங்களை ஆதரிப்போருக்காக சிவில் திருமணத்துக்கான விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. பி. தாஸ்:** டாக்டர் அம்பேத்கர் இதை மனதில் கொள் ளுவார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:** அவைகளுக்கும் கதவு மூடப்படும்.

**திரு. பட்:** இதுகாறும் கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளவர் களுக்கு இனி கதவை மூட வேண்டாம். அவர்கள் கதவு வழியாக அல்லது ஜன்னல் வழி வருகிறார்களா என்று பார்க்க வேண்டாம். சமுதாயத்தின் பலதரப்பட்ட பிரிவுகள் மத்தியில் கல்வியிலும், இதர துறைகளிலும் பின்னிலையிலுள்ள மக்களிடையாவது இந்த வழக்கம் தொடர்ந்திட அனுமதியுங்கள்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்து சமுதாயம் செயல் படுவது குறித்து சிறிது அறிந்து கொள்வதற்கு சுற்றுப்பயணம் எதுவும் மேற்கொண்டதில்லை. தயவுசெய்து இத்தகைய பயணத்தை மேற்கொண்டு, மக்களைச் சந்தியுங்கள். உங்களுடைய நூல்களை அவர்களிடம் காட்டி, நீங்கள் அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் அவர்கள் நன்மைக்கே என்று அவர்களை நம்பச் செய்யுங்கள். தங்கம் எப்போதும் கல்லாக மாறுவதில்லை. அம்மாதிரி ஓர் நம்பகத் தன்மையை இழந்துவிடாது; தங்கம் மேலும் மிளிரும். ஆகையால், தங்கம் மேலும் ஜொலிக்க அனுமதியுங்கள்; விவாகரத்து என்றால் என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளட்டும். அத்தகைய சீர்திருத் தங்கள் வேண்டுமென்று விரும்புபவர்கள் சிவில் திருமணச் சட் டத்தை பயன்படுத்திக் கொள்ள முழு சுதந்திரம் உள்ளது. அந்தச் சட் டத்தின்கீழ் கூட விவாகரத்துப் பெறக்கூடிய வசதி உண்டு. அவர் களுக்கு ஒரு வழியினைக் காண நான் ஒரு யோசனை கூறுகிறேன். சிவில் திருமணச் சட்டத்தின்கீழ் அவர்கள் திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்; அதனால் அவர்கள் தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள பெரும்வழி திறந்திருப்பதை காணமுடியும்.

**திரு. ஆர்.சி. உபாத்தியாயா:** கணவன் விவாகரத்தை விரும்பு கிறான்; மனைவிக்கு விருப்பம் இல்லை. இந்நிலையில் உங்களுடைய ஆலோசனை என்ன?

**திரு. பட்:** கணவன் சொற்களுக்கு மனைவி செவிமடுக் கிறாள். வீட்டில் கணவனை 'தெய்வமாக' கருதுகிறாள்; அவள் படித்திருந்தவளாக இருந்தாலும் அவ்வாறு எண்ணுகிறாள். இவ்வாறு சொல்வதால், மனைவிகளை இந்துக்கள் அடிமையாகக் கருதுகின் றனர் என்று அர்த்தமல்ல. அவள் இல்லத்தரசி; ஒரு தேவி. இவை யாவும் மனைவியைக் குறிக்கும் சொற்கள். தங்களுடைய பெண் களை அடிமைகளாகக் கருதும் அளவிற்கு இந்து சமுதாயம் சீரழிந்து விடவில்லை. அத்தகைய அபிப்பிராயம் யாருக்கும் இருந்தால், அந்த அபிப்பிராயத்தை கைவிட்டுவிட வேண்டும். பின்தங்கிய வகுப்பார் இல்லங்களிலும்கூட பெண்கள்தான் குடும்பத் தலைவி கள். தங்கள் பெண்கள் கூறுவதை ஆண்கள் அப்படியே செய்கின் றனர். சாஸ்திரங்களில் இடம்பெற்றுள்ள வழக்கங்கள் ராஜஸ்தானி லும் இதர இடங்களிலும் இருக்கின்றன. தோஷி சாஸ்திரம் என்று ஒரு சாஸ்திரம் அழைக்கப்படுகிறது. வயதான பெண்கள் கூறும் வார்த்தைகளை ஏற்று, அவர்கள் அறிவுரைப்படித்தான் மக்கள் செயல்

படுகின்றனர். ஒரு புனித திருமணச் சடங்கின்போது, ஒரு புரோகிதர் தவறு செய்தால், அது உடனடியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது; சுலோகங்களைக் கூறி, எந்த இடத்தில் தவறு ஏற்பட்டது என்று குறித்துக் காட்டப்படுகிறது. **சப்தபதி** முதலியவற்றில் எவ்வித தவறுமிருக்குமானால், எந்த இடத்திலிருந்து தவறு ஏற்பட்டுள்ளது என்பதை சுலோகங்களைக் கூறி நாம் சுட்டிக்காட்டுகிறோம். சுலோ கங்களுடன் வழக்கங்களும் இணைந்துள்ளன; எனவே, இந்து சமுதாயத்தில் பெண்கள் கௌரவிக்கப்படவில்லை என்று யூகித்துக் கொள்ளக்கூடாது.

ஒரு குடிகாரன் நல்ல மனிதனாக, உயர்ந்தவனாக அல்லது படித்தவனாக இருக்கலாம். அவ்வாறு இருந்தாலும், அவன் ஒரு குடிகாரன்தானே? மது மயக்குகிறது. வேறு என்ன செய்ய முடியும்? ஒரு குடிகாரன் - ஆண் அல்லது பெண்ணாக இருக்கலாம் - தாழ்ந்த சாதி அல்லது உயர் சாதியைச் சேர்ந்தவராக இருக்கலாம். குடிப் பழக்கத்தால் அவன் அல்லது அவள் ஒரு இழிவான நபராவார்.

**ஆர்.சி. உபாத்தியாயா:** அவர்களுக்காக என்ன செய்ய முடியும்?

**திரு. பட்:** அடுத்த நாள் குடிமயக்கம் தானாகப் போகும்; பின்னர் தெளிவு ஏற்படும். அது ஒரு பழக்கமாக மாறிவிடுவதை நீங்கள் அறிவதில்லை. நம் எல்லோரிடமும் பல நல்ல பழக்கங்களும் தீய பழக்கங்களும் இருக்கின்றன; மதி மயக்கத்தைப் பொறுத்த வரை, ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று பாட்டில் விஸ்கி சாப்பிட்டுவிட்டு, நிதானம் தவறாது இருக்கும் பலரை நான் அறிவேன். மாண்புமிகு டாக்டருக்குத் தெரியும், பம்பாய் வழக் கறிஞர்கள் கவுன்சிலைச் சேர்ந்த பல வக்கீல்கள் ஒன்றிரண்டு புட்டி குடிக்காமல் நீதிமன்றத்தில் வாதிட இயலாது.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** கூறு 2ன் எந்த ஷரத்தின்கீழ் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:** வெளியேற்றப்பட்ட வர்கள் சொத்துக்கள் மசோதா பற்றி விவாதித்துக் கொண்டிருக் கிறோம்.

**திரு. பட்:** தலைவர் அவர்களே, என்னை மன்னிக்கவும். சிறிது வழி தவறுதல் உள்ளது. என்னுடைய நண்பர்கள் சிலர் இதுபற்றி

பேசினார்கள் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஒருதார மண ஷரத்தினை அதில் சேர்த்தோ அல்லது சேர்க்காமலோ, மசோதாவில் மேம்பாட்டை அல்லது தரக்குறைவை நீங்கள் அனு மதித்துள்ளீர்கள் என்று யாரும் குறிப்பிடவில்லை. சட்ட முறை யிலான தடைகளைப் புகுத்துவதன் தேவைதான் என்ன? நீங்கள் அவ்வாறு புகுத்த வேண்டுமென்று நினைப்பீர்களேயானால், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நாட்டின் எல்லாப் பிரிவு மக்கள் மீதும் இதைப் புகுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் முஸ்லீம்களும் அதுபற்றி மனவருத்தப்பட மாட்டார்கள். இது நல்ல செயல் என்று அவர்கள் கருதி, அவர்களுக்கும் அது பொருந்து வதாக ஆக்கப்பட வேண்டுமென்று விரும்புவார்கள். சாரதா சட்டம் எல்லோருக்கும் பொருந்துவதாக இருப்பதுபோல், அனைத்துத் தர மக்களுக்கும் இது பொருந்துவதாக விஸ்தரிக்கப்பட வேண்டும். விவாகரத்தை பொறுத்தவரை, முஸ்லீம் மக்களிடையே ஏற்கனவே இது நடைமுறையிலிருக்கிறது. எனவே, எச்சட்டம் இயற்றினாலும், அது ஒவ்வொருவருக்கும் பொருந்துவதாக ஆக்கப்பட வேண்டும். அச்சட்ட அதிகாரத்திலிருந்து எவருக்கும் விலக்கு அளிக்கக் கூடாது; பொதுவாக இந்தியர்கள் அனைவருக்கும் அது பொருந்துவ தாக்கப்பட வேண்டும்.

எங்களுடைய கருத்துக்களுக்கு செவிமடுத்து ஆதரவா யுள்ளீர்கள் என்பதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். எங்களுடைய எண்ணங்களை பெருமளவில் இப்போது ஏற்றுக்கொண்டுள்ளதால், இப்போதைய நிலைமையையும் உணர்ந்துள்ளீர்கள். இப்போது நீங்கள் வேறு எதையும் செய்யாவிட்டாலும், தயவு செய்து ஒன்றை மட்டும் செய்யுங்கள். மூல மசோதாவிலிருந்து விவாகரத்து மற்றும் திருமணக் கூறுகளை நீக்கி, அவைகளை தனி சட்டமாக இயற்றி, எல்லா இந்தியர்களுக்கும் அது பொருந்துவதாக அமைத்துவிடுங் கள். அவ்வாறு செய்யும்பட்சத்தில் அனைவரும் சந்தோஷமடை வார்கள்; அத்துடன் உங்களைப் பாராட்டுவார்கள்; நீங்கள் உண்மை யிலேயே ஒரு காரியத்தைத் தைரியமாகச் செய்துள்ளதாகப் பேசு வார்கள். எதிர்ப்புகள் அனைத்தும் தானாகவே மறைந்துவிடும். தங்களுக்கும் அதிக அளவில் திருப்தி அளிக்கும் சரியான நடவடிக் கையை அரசாங்கம் எடுத்துள்ளதாக மக்கள் கூறுவார்கள். அது முழுமையான திருப்தி அளிப்பதாக இல்லாவிட்டாலும், தற்போதைய சூழ்நிலையில் அதிகப்பட்சம் இதைத்தான் செய்ய முடியும் என்று திருப்தி கொள்ளுவார்கள். இன்றைய சூழ்நிலையை ஆய்வுசெய்து, இம்முறையை தயைகூர்ந்து கைக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அவ்வாறு செய்ய முற்படும்போது, அதில் மேலும் என்ன இருக்க வேண்டும், நீங்கள் எத்தகைய அபிவிருத்தியைச் செய்ய வேண்டும் என்பதை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்வது அவசியம் (குறுக்கீடு). எனவே, இவற்றை எல்லாம் மனதில் கொள்ள வேண்டுகிறேன்; அப்போதுதான் காலணி காலில் எங்கே கடிக்கின்றது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள இயலும். அப்போது எதிர்ப்பு பலமாக இருப்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். பல சகோதரிகள் இங்கு வந்து உங்களை வேண்டிக் கொள்ளக்கூடும். அப்போது உங்களுக்கு உண்மை நிலவரம் புரியும். இன்னும் பலர் வந்து எதிர்ப்புத் தெரிவிக்கும்போது இந்த நடவடிக்கைக்கு எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். எங்கிருந்தும் எதிர்ப்பு வருவதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாமென்று கூறுவேன். சற்று பொறுத்திருங்கள். எப்படிக் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, அரசாங்கம் சாரதா சட்டத்தை நிறைவேற்றியதோ அப்படி அனைவருக்கும் பொருந்தும் ஒரு சட்டத்தை நிறைவேற்றுங்கள். காலத்தைப் பற்றி கவலை வேண்டாம். புதிய மசோதா ஒன்றைத் தயாரியுங்கள்; வரும் பிப்ரவரியில் நாம் சந்திக்கின்றபோது, அவை முன் அதை வைக்கலாம்.

**திரு. ஷியாம் நந்தன் சகாயா:** அது பகூன் (பங்குனி) மாத மாகும். அது பொருத்தமான காலம்தான்.

**திரு. பட்:** ஆம்; பகூன் (பங்குனி) மாதம்தான். என்ன மாதமாக இருந்தாலும், என்னுடைய கருத்தை முன்வைக்கிறேன். இவை அனைத்தையும் ஒரு கேளிக்கையாக நான் கூறவில்லை. இதனால் இந்தியா முழுவதும் பயன்பெறும். சில தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக்களுக்கு மட்டும் நன்மை கிடைக்க ஏன் நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்; நாடு முழுவதும் நலம் பெற வேண்டும். எல்லோருக்கும் வேண்டுகோள் விடுங்கள். இதை ஒரு முழுமையான சட்டமாகச் செய்யுங்கள்.

இந்த வார்த்தைகளுடன், மாண்புமிகு அமைச்சர் என்னுடைய ஆலோசனைகளை பரிசீலனை செய்ய வேண்டுகிறேன். இறுதியாக, இச் சட்டத்தை நிறைவேற்ற இது தக்க தருணமல்ல என்றும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்வதால் கேடு எதுவும் விளையாது. அரசாங்கத்திற்குப் பாராட்டுக்கள் கிடைக்கும். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நான் அதிகம் நேரம் எடுத்துக் கொண்டேன். எவ்வகை

யிலும் என்னுடைய உரையை நீட்டிக்க விரும்பவில்லை. நம்முடைய அரசாங்கத்திற்கு புகழ் ஏற்படுகின்ற வகையில் வெளிப்படையான மற்றும் தாழ்மையான எங்களுடைய வேண்டுகோளை அரசாங்கத்தின் பிரதிநிதியாக இங்கு உள்ள மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

[1]**சர்தார் பி.எஸ். மான்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, என்னுடைய கருத்தைக் கூற அழைத்தமைக்காக நான் உங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த மசோதாவின் செயல்பாட்டிலிருந்து சீக்கியர்கள் விடு விக்கப்பட வேண்டும் என்றும் அதன் அதிகாரத்திற்குள் (315 பிஎஸ்டி) சீக்கியர் சமுதாயம் உட்படுத்தப்படக் கூடாது என்றும் கூறும் திருத்தம் ஒன்றை நான் முன்மொழிந்துள்ளேன். சீக்கியர், அல்லது இந்துக் கள் அல்லது முஸ்லீம்கள் என்று சாதாரணமாகக் குறிப்பிட்டுக் கூறாத ஒரு திருத்தத்தை முன்மொழியத்தான் விரும்பி இருப்பேன். ஆனால் பிரதான கூறு அமைக்கப்பட்டுள்ள முறையினைப் பார்க்கும் போது இந்த வார்த்தையைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளேன். பஞ்சாபிகள் என்ற பிராந்திய வார்த்தையையும் பயன்படுத்த விரும்பி இருப்பேன். ஆனால் இம்மசோதாவைத் தயாரித்தவர்கள் இந்து, சமணர், பௌத்தர் மற்றும் சீக்கியர் என்ற வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளனர். எனவேதான் என்னுடைய திருத்தத்திலும் இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறேன். உண்மை யில் இம்மசோதா பஞ்சாப் மற்றும் பெப்சு ஆகிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படக்கூடாது என்று கூறும் திருத்தம் ஒன்றையும் நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய வாதம் குறுகிய வகுப்புவாத அடிப்படையிலோ அல்லது மத அடிப்படையிலோ இல்லை. இதுபற்றி பின்னர் பேசுகிறேன். இந்து சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் சீக்கியர்களைக் கொண்டுவரும் முயற்சி விரும்பத்தகாத அரசியல், வகுப்புவாத உணர்வினைத் தோற்றுவிக்கும் என்ற உண்மை யினை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

பல்லாண்டுகளாக சீக்கியர்கள் இந்து சட்டத்தின் அதிகாரத் தின்கீழ் இருந்தனர் என்பதை விளக்க ஒரு நிகழ்ச்சியை முன்னர் ஒருநாள் டாக்டர் எடுத்துக் காட்டினார். அவரிடம் மன்னிப்புக் கோருகிறேன். அவர் எடுத்துக் காட்டிய சட்டம் விவசாயம் சாராத

---

1. அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 18, பக்கங்கள் 2835-40.

மக்களுக்குத்தான் பொருந்தும் என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். சீக்கியர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள்; சீக்கியர் களில் 95 சதவீதத்தினர் விவசாயிகள்.

நேரம் பிற்பகல் 1 மணி

இதனை மனத்தில் கொண்டு எச்சட்டம் அவர் களுக்குப் பொருந்தும் என்று பொதுப்படையாகப் நோக்கும்போது, சீக்கியர்களில் வணிகம் செய் பவர்களையும், கத்ரி சீக்கியர்களையும் அல்லது நகரங்களில் வாழும் இதர சீக்கியர்களையும் கணக்கில் கொள்ளக்கூடாது. பெரும்பான்மை யினராக உள்ள விவசாய சீக்கியர்களைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் பின்பற்றும் சட்டம் எது என்று அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஓர் உதாரணமல்ல, பல உதாரணங் களை என்னால் கூறமுடியும். பஞ்சாபில் இதர விவசாயிகள் போல், சீக்கிய விவசாயிகளும் மத சார்பற்ற சட்டத்தின்கீழ் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நிரூபிக்க பல்வேறு நிகழ்வுகளை என்னால் எடுத்துக் கூறமுடியும். சொல்லப்போனால், இந்து சட்டத் தொகுப் பில் கூறப்பட்டிருப்பதற்கும் முன்கூட்டியே அச்சட்டம் பின்பற்றப் பட்டுள்ளது. எனவே, முற்றிலும் ஒரு மதச்சார்பற்ற ஒரு சட்டத் தின் அதிகாரத்தின்கீழ் நாங்கள் வாழ்ந்துள்ளோம். பெரும்பான்மை யாக உள்ள விவசாயப் பெருங்குடி மக்களாகிய எங்களுக்கு ஒரே மாதிரியான சட்டம் இருக்கிறது. மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள மக்களின் சட்டத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. பெரும்பான்மையான மக்கள் - 95 சதவீதமாக உள்ள மக்கள் - மத்தி யில் அனுசரிக்கப்படும் சட்டத்தைத்தான் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் கூறியது போல், பஞ்சாபில் முற்போக் கான சட்டம் உள்ளது; சொத்து வாரிசு உரிமையைப் பொறுத்த மட்டில், ஒருவர் முஸ்லீம் அல்லது கிறிஸ்தவர் அல்லது சீக்கிய ராகவோ இருந்தாலும், அனைவருக்கும் பொருந்தும் ஒரே மாதிரி யான, பொதுவான சட்டம்தான் உள்ளது. அது வழக்கத்தின் வழியான சட்டம். இங்கு இந்து சட்டத் தொகுப்பை அறிமுகம் செய்துள் ளீர்கள். குறுகிய வகுப்புவாதம் ஆகியவற்றை எல்லாம் மீறி, ஒரே மாதிரியான பொதுச் சட்டம் எங்களுக்கு பஞ்சாபில் இருக்கிறது என்று கூறி, உங்கள் கருத்தினை நான் எதிர்க்கின்றேன். இந்த நடவடிக்கை மூலம் வகுப்புவாதத்தை நீங்கள் பஞ்சாபில் முதன்முறையாக புகுத்து கிறீர்கள் (குறுக்கீடு) ஆம்; பழக்க வழக்கங்கள் அங்கு உள்ளன. நெடுங்கால வழக்கில் அவை இருப்பதன் நிமித்தம் அவை அங்கீ கரிக்கப்பட்டுள்ளன. பழக்க வழக்கங்களைப் பின்னுக்குத் தள்ளி விட பல்வேறு முயற்சிகள் நடைபெற்றன. இவையாவும் மோசமான

முயற்சிகள்; கோபுரத்திலிருந்து சட்டங்களைப் பிரகடனப்படுத்துவதும், நெடுங்காலமாக நிலைத்து வந்துள்ள, காலங்களின் ஞானத்தையும் காலத்தால் வளர்ந்து வரும் உணர்வுகளையும் உள்வாங்கிக் கொண்ட சமுதாயத்தின் கட்டமைப்பை பதினைந்து நாட்களுக்குள் மாற்றுவதும் முற்றிலும் தவறான, மதிகேடான கொள்கையாகும். ஒரு குறிப்பிட்ட வயோதிக பிராமணரால் ஒரு குறிப்பிட்ட சட்டம் அமைக்கப்பட்டதால் அதை மாற்றவோ அல்லது தொடவோ கூடாது என்று நான் கூறவில்லை. ஒரு வகை புனிதத்தன்மை அடிப்படையில் என்னுடைய கருத்தை வாதிடவில்லை. வழக்கங்கள் வழிமுறையாக நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்துள்ளன; அவை சீர்திருத்தமும் பெற்றுள்ளன என்றுதான் கூறுகிறேன். வழக்கங்கள் நெகிழ்ச்சியுடையதாக இருந்தமையால், அங்குள்ள மக்களின் இயல்புக்குப் பயன்படுகின்ற சில யதார்த்த பழக்கங்களையும் அவை ஏற்று கொண்டுள்ளன. இது பற்றி நான் பின்னர் பேசுகிறேன். எழுத்தில் வடிக்கப்பட்ட வாசகங்களைக் காட்டிலும் வழக்கங்கள் முன்னுரிமை பெறுகின்றன என்பதைக் குறிப்பிடத் தான் இதனை கூறினேன். வழக்கங்கள் பஞ்சாபில் உள்ளன; இன்னும் அவை சட்டங்களாக உள்ளன.

இதைத்தவிர, இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிற்போக்குத் திட்டத்தினைக் காட்டிலும், என்னுடைய வழக்கங்கள் முற்போக்கானவை என்று நிரூபிக்க விரும்புகிறேன். அவை பல்வேறு அம்சங்களில் மிகவும் முற்போக்கானவை.

இந்தக் காரணத்திற்காகவும், சீக்கியர்கள் இந்த சட்டத் தொகுப்பிலிருந்து விதி விலக்களிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இதுவரை இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை அவையில் திரு. மண்டல் முன்மொழிந்தது முதல் இம்மசோதாவை செம்மைப்படுத்துவதற்கு டாக்டர் அம்பேத்கர் முயற்சி செய்து கொண்டு இருப்பினும், அவர் மண்டலின் சிறு குழந்தையைத்தான் சுமக்கிறார் - பொறுக்குக் குழுவில் ஒரு சீக்கிய உறுப்பினர் கூட இடம் பெறவில்லை. இந்த உண்மை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது; உறுப்பினர்களையும் இது ஆச்சரியத்திற்குள்ளாக்கும்.

**டாக்டர் அம்பேத்கர்:** கியானி குர்முக்சிங் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

**சர்தார் பி.எஸ். மான் :** இல்லை; இந்த முக்கியமான விஷயம் குறித்து சீக்கியர்களின் கருத்து கேட்டறியப்படவில்லை. மேலும்,

சீக்கியர்களிடையே கணிசமான அளவு கிளர்ச்சியும் இல்லை. ஏனெனில், இந்து சட்டத் தொகுப்பு வரைவிலிருந்து விவசாயச் சொத்துக்களுக்கு விதி விலக்களிக்கப்படும் என்று எங்களிடம் கூறினார்கள். மசோதா குறித்து சீக்கியர் சமுதாயம் சற்று கவலை கொள்ளாமல் இருந்துவிட்டனர். இந்து சட்டத் தொகுப்பு மசோதா தங்களைப் பாதிக்காது என்று 95 சதவீத மக்கள் மெத்தனமாக இருந்தனர்.

**திரு. ஏ.சி. சுக்லா:** சீக்கியர்கள் தங்கள் மாநாடுகளில் இச்சட்டத் தொகுப்பிற்கு எதிராக தீர்மானங்கள் எவையேனும் நிறைவேற்றி இருக்கிறார்களா?

**சர்தார் பி.எஸ். மான்:** உறுப்பினரைக் காட்டிலும் சீக்கியர்களுக்காக நான் சிறப்பாக பேச முடியும். சில பெண் உறுப்பினர்கள் இங்கு உள்ளனர். இது போன்ற முக்கியமான பிரச்சினை குறித்து அவர்களுடன் ஆலோசனை செய்து, அவர்கள் கூறுவதற்குச் செவி மடுத்து, அவர்கள் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், இந்த அவையில் ஏழு சீக்கிய சமுதாய உறுப்பினர்கள் இருக்கின்றோம். யாராவது ஒரு சீக்கியர் சமுதாய உறுப்பினர் சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு முழுமையாகவும், முற்றிலுமாகவும் ஆதரவு அளிக்கின்றார் என்று கூற இயலுமா என உறுப்பினருக்கு சவால் விடுகிறேன்.

**திரு. ஏ.சி. சுக்லா:** அவைக்கு வெளியிலே இருப்பவர்கள் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

**சர்தார் பி.எஸ். மான் :** இதே மண்டபத்தில் மீண்டும், மீண்டும் பல உறுப்பினர்கள் தொடர்ந்து வாதாடியுள்ளனர். இங்குள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் வழியில் நாம் செல்ல வேண்டியதில்லை.

அதைத் தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், வெளியிலேயே உள்ள மக்களின் தீர்ப்புக்கு இதை விட்டு விடுவோம்.

அது வரையிலும் இங்குள்ள பெரும்பான்மையான இந்து உறுப்பினர்களின் ஆதரவுடன் இதை நிறைவேற்றக் கூடாது. நான் ஓர் இந்து அல்ல. இந்து சட்டத்தை நான் பின்பற்றியதே இல்லை. சீக்கியர்களை மதமாற்றம் செய்யும் சட்டம்தான் இது என்பதைக் கூறும் நிர்ப்பந்தத்திற்கு நான் ஆளாக்கப்பட்டுள்ளேன். இதற்கு முன்னர் பின்பற்றப்படாத, கிராம மக்கள் கேள்விப்படாத, புது

கண்டுபிடிப்புகளாக உள்ள முற்றிலும் விரும்பத் தகாத கொள்கைகளை நீங்கள் புகுத்துகிறீர்கள். எங்களுக்கு அந்நியமான சிலவற்றை எங்கள் தொண்டையில் திணிக்கிறீர்கள். பெண் உறுப்பினர்கள் இங்கு சிலர்தான் உள்ளனர். இருப்பினும் அவர்களுடன் கலந்தாலோசித்துள்ளீர்கள். சில விரும்பத்தகாத, பிற்போக்கான ஷரத்துக்களை எங்கள் மீது கட்டாயமாகத் திணிக்கக் கூடாது என்று நாங்கள் ஏழு சீக்கிய உறுப்பினர்களும் ஒரு மனதாகக் கருதுகின்றோம். இதுவே சீக்கிய மக்களின் அபிப்பிராயமுமாகும்.

இதற்கான தீர்மானங்களை அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்களா என்று என்னுடைய நண்பர் கேட்டார். சீக்கியர்களின் கருத்து கேட்டறியப்படவில்லை என்பது என்னுடைய மனக்குறையாகும். சீக்கியர் இனச் சட்டம் மற்றும் அவர்கள் மதத் தத்துவங்கள் குறித்து சீக்கிய சமுதாயத்தின் சார்பில் பேசும் **எஸ்.ஜி.பி.சி**, சீக்கியர் சங்கங்கள் ஆகிய அமைப்புகளிடமிருந்து டாக்டர் அம்பேத்கர் அறிக்கைகள் பெறவில்லை என்பதிலிருந்து சீக்கியர் சமுதாயம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்ற உண்மை புலனாகிறது.....

**சர்தார் ஹுக்கம் சிங்** (பஞ்சாப்): இச்சட்டத் தொகுப்பிற்கு எதிராக சில மாநாடுகளில் தீர்மானங்கள் கூட நிறைவேற்றப்பட்டுள்ளன.

**சர்தார் பி.எஸ்.மான் :** என்னுடைய நண்பர் சர்தார் ஹுக்கம் சிங் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற தகவலை எனக்களித்து, தெளிவு படுத்தியுள்ளார். மசோதா முதலில் அறிமுகப் படுத்தப்பட்ட போதும் அல்லது பொறுக்குக் குழு அமைக்கப்பட்ட போதும் சீக்கிய உறுப்பினர் எவரிடமும் ஆலோசனை பெறப்படவில்லை. பொறுக்குக் குழுவில் சீக்கியர் யாரும் இடம்பெறவில்லை. கியானி குர்முக் சிங் முஷாபிர் அக்குழுவில் இருந்ததாக டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார். அவர் அவ்வாறு உறுப்பினராக இருந்திருந்தால் அவரின் ஆலோசனை பெறப்பட்டதா? பொறுக்குக் குழுவில் இடம்பெற்றிருந்த ஒரே ஒரு சீக்கிய உறுப்பினரின் கருத்திற்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டதா? அப்போது பொறுக்குக் குழுவில் அவர் உறுப்பினரல்ல. அவை ஒத்திவைக்கப்பட்டது; பின்னர், இன்னும் சில பண்டிட்களிடம் ஆலோசனை நடத்த டாக்டர் அம்பேத்கர் ஒத்துக்கொண்டார். அப்போது முறைப்படி அல்லாத ஒருவகையான மாநாட்டை அவர் கூட்டினார். தற்செயலாக, சர்தார் குர்முக் சிங் முஷாபிர் தன்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுமாறு கேட்டுக்

கொள்ளப்பட்டார். டாக்டர் அம்பேத்கர் கூறுவது போல், சர்தார் குர்முக் சிங் முஷாபிர் மூலம் சீக்கியர் அபிப்பிராயத்தைப் பெற்றிருந்தால், சீக்கியர் சமுதாயத்தைப் பொறுத்தவரை அவருடைய அறிவுரையைக் கேட்டறிந்து கொள்ளுங்கள். ஆனால் சீக்கிய உறுப்பினர்களை பொறுக்குக் குழுவில் இடம்பெறச் செய்வது முறையானது என்று அரசாங்கம் கருதவில்லை. சீக்கியர் சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள் பதட்டம் அடைந்ததே இல்லை. ஏனெனில், விவசாய சொத்துக்கள் பாதிக்கப்படாது என்றும், அவற்றிற்கு விதி விலக்களிக்கப் படும் என்றும் நம்பும்படியாகவே இந்த நாள்வரை சொல்லி வந்துள்ளனர். திடீரென்று, இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்ட போது, விவசாய சொத்துக்களும்கூட இந்த மசோதாவின் அதிகார வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. முதலில் நாங்கள் மெத்தன மாக இருந்து விட்டோம். காரணம்; இந்த வரைவின் ஷரத்துக்கள் பற்றி உண்மையில் நாங்கள் சிந்திக்கவில்லை; விவசாய சொத்துக் களுக்கு விதிவிலக்கு முதலில் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது இந்த வகையில் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது; இந்த மசோதா தாறுமாறானது, பல அம்சங்களில் பிற்போக்கானது; சில விஷயங்களில் முற்போக்காக உள்ளது; இது ஒரு கதம்பம். நாங்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எங்கள் முகத்தில் வீசி எறியப்பட்டுள்ளது. இதனுடைய ஷரத்துக்கள் பற்றி என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை என்பதை நான் வெளிப்படையாக ஒத்துக் கொள்கின்றேன். இதற்கும் மோசமான நிலையில்தான் கல்வி யறிவில்லாத நபர் அல்லது கிராமங்களிலுள்ள ஏழைக்குடியானவர் அறிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளார். எழுத்தறிவற்ற வரும் அல்லது ஏழை உழவனும் இருக்கிறார். ''இது உங்களைப் பாதிக்காது, கவலைப்படாதீர்'' என்று ஏழை குடியானவரிடம் கூறப் பட்டது. கணிசமான அளவிற்கு சீக்கியர் அபிப்பிராயம் என்ன வென்று அறிந்து கொள்ளப்படவில்லை யென்பது என்னுடைய மனக்குறை.

இங்குள்ள பெரும்பான்மையினரான இந்து உறுப்பினர் களின் உதவியுடன் இதனை நிறைவேற்றிவிடுவீர்கள்; ஆனால் சீக்கிய மக்களின் உள்ளங்களில் ஒரு கசப்பான உணர்வைத்தான் இது உருவாக்கும். இம்மசோதாவை ஒருமித்த முறையில் எங்கள் மக்கள் எதிர்த்தாலும், உடனடியாக பெரும்பான்மையான ஷரத்துக்கள் அவர்களுக்குப் பொருந்தாது என்று நம்பச் செய்யப்பட்டாலும், இக்கூட்டத்தொடரின் கடைசி நேரத்தில், சீக்கிய மக்கள் உணர்வுக்கு எதிராக இது நிறைவேற்றப்பட்டு விட்டது என்ற கசப்பான உணர்வு சீக்கியர் உள்ளங்களில் உருவாகும்.

**ஓர் உறுப்பினர் :** அப்படியானால், உங்களுடைய உறுப்பினர்கள் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கவும்.

**சர்தார் பி.எஸ். மான் :** ஆம்; என்னைக் காட்டிலும் சீக்கியர் சார்பாக மிகத் திறமையாக வாதிடக் கூடிய என்னுடைய மதிப்பு மிக்க நண்பர் சர்தார் ஹுக்கம் சிங் தன்னுடைய எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார். சொல்லப்போனால், அவருடைய ஆலோசனையை மறுப்பதற்கு இது ஒரு அரசியல் விஷயமல்ல. அவர் எதிர்வரிசையில் அமர்ந்துள்ளதால் அவருடைய அறிவுரையை நிராகரிக்கலாம் என்று கூறுவதற்கு இது அவ்வளவு பெரிய விஷயமல்ல. இனச் சட்டம், மதக் கோட்பாடுகள், மற்றும் தத்தெடுக்கும் இந்து சட்டம் போன்ற விஷயங்களில் இங்குள்ள பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; நாங்கள் ஏகமனதாக இதை எதிர்க்கின்றோம். எங்களுடைய எதர்ப்பினைப் பொருட்படுத்தாது மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து, இந்த மசோதாவை எங்கள் மீது திணித்தால் அது விபரீதமான நடவடிக்கை என்று, சர்வாதிகார நடவடிக்கை என்று கருதப்படும்; இது வகுப்புவாத உணர்வை கிளர்த்திவிடும். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இங்கே ஏழு சீக்கிய உறுப்பினர்கள் தான் இருக்கின்றோம். மதம், இனச் சட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்டவரை, ஒரு பிரிவின் பிரதிநிதிகள் மிகக் குறைவாக உள்ளனர் என்று கருதாது, தகுந்த அங்கீகாரம் தரப்பட வேண்டும். ஏற்கனவே விதி விலக்குகள் அளித்துள்ளீர்கள். நீங்கள் பலருக்கு விதி விலக்கு அளித்துள்ளீர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் நான் வாதிட விரும்பவில்லை. ஒரு முஸ்லீம் நான்கு மனைவிகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே நானும் நான்கு முறை திருமணம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கூறவில்லை. அதாவது, விதி விலக்களித்துள்ளீர்கள் என்பது உண்மைதான். ஏன் விதிவிலக்கு? ஏனெனில் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்களின் இனச் சட்டம் முற்றிலும் வேறுபட்டவை என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அது முற்றிலும் வேறுபட்டும், இந்து சட்டத்திற்குப் பல அம்சங்களில் நேரடியாக எதிரானதாகவும் இருப்பதால் விதிவிலக்கு அளித்துள்ளீர்கள். அதனால் அவர்கள் தலைமீது இந்து மசோதாவை சுமத்தும் நிர்பந்தம் ஏற்படவில்லை. அவ்வாறு பார்க்கும் போது அவர்கள் விஷயத்தில் நீங்கள் தாராளமான மனத்துடன் நடந்து கொண்டிருக்கிறீர்கள். அவர்களின் சொந்த பழக்க வழக்கங்கள், மதக் கோட்பாடுகள் முதலியவை சம்பந்தப்பட்டவரை, இங்கு இந்துக்கள் பெரும்பான்மையானராக இருந்த போதிலும் சிறுபான்மையினர் மீது இம்மசோதாவைத் திணிக்க நீங்கள் விரும்பவில்லை.

முஸ்லீம் சட்டம், கிறிஸ்தவர் சட்டம், பார்சிகளின் சட்டம்கூட அடிப்படையில் வேறுபட்டவையாக இருப்பதால், இதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், குறிப்பிட்ட பொருள் பற்றி சட்டம் இயற்றினால், உதாரணமாக திருமணம், வாரிசு முறை அல்லது விவாகரத்து ஆகியவை பற்றி சீக்கியர் சட்டமும் முற்றிலும் மாறுபட்டது என்பதை இச்சபையில் நிரூபிக்க என்னை அனுமதிக்கவும். எனவே, முஸ்லீம்களுக்களித்துள்ள விதிவிலக்கை எங்களுக்கும் அளிக்குமாறு கோருகிறேன். தாங்கள் முற்றிலும் வேறுபட்ட சட்டங்களின் அதிகார வரம்புக்குள் இருப்பதாக நிரூபித்துள்ளதால், அவர்களுக்கு விதி விலக்களிக்கப்பட்டுள்ளது. நீங்கள் சட்டம் இயற்ற முயற்சி செய்யும் ஒவ்வொரு இனத்திலும் நான் ஒரு வேறுபட்ட சட்ட ஆட்சிவரம்பிற்குள் இருக்கிறேன் என்றும் உங்களுடைய சட்டத்திலிருந்து என்னுடைய சட்டம் முற்றிலும் வேறுபட்டது என்றும் இங்கு நான் நிரூபிக்கும் பட்சத்தில், பார்சிகள், முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்ட விதிவிலக்கு எனக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

***மாண்புமிகு அவைத் தலைவர்:*** *மதிப்பிற்குரிய உறுப்பினர் நாளைக்குத் தொடர்ந்து பேசலாம்.*

*1951 செப்டம்பர் 19 புதன்கிழமை எட்டரை மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

## [1]இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

*(காலை 9.30 மணி)*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** கூறு 2 பற்றி இன்று ஆறாவது நாளாக விவாதம் நடைபெறுகிறது என்பதை விவாதம் ஆரம்பிக்கும் முன்னர் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலும் அனைத்துத் தரப்பு அபிப்பிராயங்களும் இங்கு எடுத்துக் கூறப் பட்டுள்ளன *(குறுக்கீடு)*. ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு அனு மதிக்கப்பட வேண்டுமென்று இதற்கு அர்த்தம் அல்ல. சட்டத் தொகுப்பு முழுவதற்கும், குறிப்பிட்ட கூறுகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் போதுமான அளவிற்கு இவ்விஷயம் விவாதிக்கப் பட்டுள்ளது. கூறு 2 பற்றியது வரை விவாதத்தை நாம் முடித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் தமக்குள்ள நேரம் முழுவதையும் எடுத்துக் கொள்ளாமல், இதர உறுப்பினர்களும் பேச வாய்ப்பளிக்க வேண்டும். அதனால் கூறு 2 பற்றிய விவாதத்தை இன்று முடித்து விடலாம். எல்லா அம்சங்கள் பற்றியும் ஏற்கனவே விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளதால், உறுப்பினர்கள் சுருக்கமாக, மணித் துளிகளாகப் பேசுமாறு வேண்டுகிறேன்.

**[+]சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்): அவை நேற்று ஒத்தி வைக்கப்பட்ட போது மசோதாவின் செயலாக்கத்திலிருந்து சீக்கியர் கள் விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென்று நான் வாதிட்டேன். என்னுடைய வாதம் இரண்டு கருத்துக்களின் அடிப்படையில் அமைந்தது. முதலாவதாக, பஞ்சாப்பிலுள்ள எங்களுக்குப் பிராதான மான தொழில் விவசாயம், மக்கள் தொகையில் 95 சதவீதத்தினர் விவசாயிகள். பஞ்சாப் விவசாயிகளில் சீக்கியர்கள்தான் பெரும் பான்மைப் பிரிவினராவர். நாங்களும், இந்து, முஸ்லீம் விவசாயி களும் பிராமணீய சட்ட ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டவர்களல்ல. நாங்கள் முற்றிலும் வேறுபட்ட மதச்சார்பற்ற சட்டத்தின் அதிகாரத் திற்குட்பட்டவர்கள். மதச்சார்பற்ற பழக்க வழக்கங்கள் எங்களை முறைப்படுத்துகின்றன. இவையாவும் உத்தேச மசோதாவின் ஷரத்துக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. இரண்டாவதாக, இம்முக்கியமான விஷயம் குறித்து சீக்கியர்களின் கருத்து கலந் தாலோசிக்கப்படவில்லை என்று கூறினேன். இரண்டாவது கருத்துப் பற்றி நான் பேசிக் கொண்டிருந்தேன்.

---

1. அ.நி.வி., தொகுதி XV பாகம் II, செப்டம்பர் 19 , பக்கங்கள் 2841-98.
2. அதே பகுதி, 1951 செப்டம்பர் 19, பக்கங்கள் 2841-48.

இவ்விஷயம் குறித்து நான் இப்போது ஆய்வு செய்துள்ளேன். இந்து சட்டக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பொது அபிப்பிராயத்தின் முழு விவரங்களையும் நான் படித்துப் பார்த்தேன். சீக்கியர் சமுதாயத்தின் சார்பில் எந்த ஓர் அதிகாரபூர்வமான அபிப்பிராயமும் இந்த மசோதாவை ஆதரித்ததாக இல்லை என்பதை அறிந்து வருத்தப் பட்டேன் (ஓர் உறுப்பினர் : அதிகாரப்பூர்வமான என்றால் என்ன?) இது எப்படி அதிகாரப்பூர்வமானது என்று ஒரு குறுக்கீடு எழுகிறது. இந்திய அரசாங்கத்தின் சட்டப்படி வாக்களிக்கும் சட்ட முறை குழு ஒன்று சட்டத்தால் எங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ளது என்பது பல உறுப்பினர்களுக்குத் தெரியாது. எங்கள் சமுதாயத்தின் பிரதிநிதியாக இதில் 151 உறுப்பினர்கள் இருக்கின்றனர். சீக்கியர்களின் மத சட்டங்களையும் மற்றும் குருத்வாரக்களையும் நிருவாகம் செய்யும் குழு இது. இதன் பெயர் சிரோமணி குருத் வார பிரபந்தக் குழு **(எஸ்.ஜி.பி.சி.)** என்பது. இக்குழுவில் மிகவும் தீவிரமான அல்லது வகுப்புவாத சீக்கியர்கள் அதிகாரம் செலுத்துவதாக இந்த அவையில் நினைக்கக்கூடும். ஆனால், இன்று இக்குழுவின் தலைவராக இருப்பவர் வேறு யாரும் அல்ல - ஒரு தீவிரமான காங்கிரஸ்வாதி சர்தார் நகோக்தான். இக்குழுவில் காங்கிரசு கட்சியினர்தான் முழு அதிகாரம் செலுத்துகின்றனர். சட்டமுறையில் அமைக்கப்பட்ட இக்குழு தீவிர வகுப்புவாத உணர்வு கொண்டது அல்ல; இம் மசோதாவை இக்குழு கடுமையாக எதிர்த்துள்ளது. இம்மசோதாவுக்கு எதிராக சீக்கியர்கள் கூட்டங்களும் பல மாநாடுகளும் நடத்தப் பட்டுள்ளன. மேலும் **எஸ்.ஜி.பி.சி கூறிய** கருத்து சீக்கிய மக்களின் ஒருமித்த அபிப்பிராயமாகும்.

**மாண்புமிகு சட்ட அமைச்சர்** (டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்) : எங்கே?

**சர்தார் பி.எஸ். மான் :** அவைக்கு வெளியே. அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். தங்கள் சமுதாயங்களின் பிரதிநிதிகளாக இந்த அவையில் உறுப்பினர்களாக உள்ள பெரும் பான்மையினர்கள் விரும்புகிறார்கள் என்பதால், இம்மசோதாவை சட்டமாக நிறைவேற்றி விடுங்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பிரதிநிதிகள் பழமைப்பட்டவர்கள், அவைக்கு வெளியே உள்ளவர்களின் உண்மையான அபிப்பிராயத்தை அவர்கள் பிரதி பலிக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவைக்கு வெளியே என்றாலும் அல்லது உள்ளே என்றாலும் ஏதாவது ஒரு முடிவில் நீங்கள் இருக்க வேண்டும். சீக்கியர் சமுதாயத்தின் பிரதி

நிதிகளாக நாங்கள் ஆறு உறுப்பினர்கள் இங்கே இருக்கிறோம். (ஓர் உறுப்பினர்: ஏழு உறுப்பினர்கள் என்று நேற்று சொன்னீர்கள்.) ஏழாவது உறுப்பினர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவருடைய அபிப்பிராயத்தின் அடிப்படையில் நீங்கள் தங்கள் நிலைபாட்டை அமைத்துக் கொண்டாலும் அதனை ஏற்றுக் கொள்கிறேன். அவருடன் நான் கலந்து பேசவில்லை. ஏனெனில் விவசாயிகளின் கருத்து என்ன என்பதை நான் நன்கு அறிவேன். அவரும் ஒரு விவசாயிதான். இங்குள்ள ஆறு உறுப்பினர்களும் பெப்சு மற்றும் பஞ்சாபின் பிரதி நிதிகள். நாங்கள் அனைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களல்ல. அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள். சர்தார் சாஷேட் சிங் போன்ற சுயேட்சைகள், அகாலி தலைவர் சர்தார் ஹுக்கம் சிங் போன்ற காங்கிரஸ் கட்சி எதிர்ப்பாளர்கள், காங்கிரஸ்காரர் சர்தார் குர்முக் சிங் முஷாபிர் போன்றோர் உள்ளனர். சீக்கியர்கள் இந்த மசோதாவை விரும்புகிறார்கள் என்று யாருடைய அபிப்பிராயத்தின் அடிப்படை யில் கூறுகிறீர்கள் என்று அரசாங்கத்தைக் கேட்கிறேன். இதனை நாங்கள் ஒரு மனதாக எதிர்க்கின்றோம். இதை சவாலாகக் கூறுகிறேன். கிறிஸ்தவர்கள் மீது திணிக்காதது மாதிரி எங்கள் மீதும் இதை திணிக்க வேண்டாம். பஞ்சாபில் கிறிஸ்தவ மக்களின் தொகையும் எங்க ளுடைய மக்கள் தொகையும் ஒரே அளவில் உள்ளது. கிறிஸ்தவர் களுக்கு விதிவிலக்கு அளித்துள்ள நீங்கள் சீக்கியர்களுக்கு விதிவிலக்கு அளிக்கத் தயாராக இல்லை. அவையில் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள நாங்கள் இதை விரும்பவில்லை. வெளியே உள்ள மக்கள் விரும்பு கிறார்கள் என்று நீங்கள் கூறினால், சட்ட அமைச்சரையும், இப்போது அரசாங்க ஆதரவாளராக உள்ள இணை அமைச்சர் திரு. தியாகியை யும் கேட்கிறேன். நாங்கள் விரும்புகிறோம் என்பதற்கு எவர் ஒருவரது அத்தாட்சியையும் நீங்கள் தரமுடியுமா? *(குறுக்கீடுகள்)*

**நிதித்துறை இணை அமைச்சர்** *(திரு. தியாகி): மாறுபடுவதாக குறிப்பால் உணர்த்துகிறார்.*

**சர்தார் பி.எஸ். மான் :** மன்னிக்கவும், திரு. தியாகியை குறிப் பிட்டுச் சொல்லிவிட்டேன். நான் இந்த மசோதாவை எதிர்க்கின் றேன்; அவர் குறுக்கீடு அவரிடமிருந்து வந்ததாக நினைத்தேன்.

**திரு. தியாகி :** நான் மனைவியை இழந்தவன். திருமணத்திலோ அல்லது விவாகரத்திலோ எனக்கு எவ்வித ஆர்வமும் இல்லை.

**மாண்புமிகு போக்குவரத்து, இரயில்வே துறை இணை அமைச்சர்** *(திரு. கோபாலசாமி) :* யாருக்குத் தெரியும்? இன்னும் நீங்கள் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** இங்கு மனைவியை இழந்தவர்களில் பலர் விவாகரத்து முறையை விரும்புகின்றனர். ஏனெனில் அதன் மூலம் அவர்களுக்கு விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கை உள்ளது. இருப்பினும் திரு. தியாகி இதற்கு விதிவிலக்கு. அவர் மனைவியை இழந்தவராக இருந்தாலும், விவாக ரத்து முறையை எதிர்க்கிறார். அனேகமாக இது வழக்கத்திற்கு மாறான நிலை.

**சர்தார் சொசெட் சிங் (பெப்சு) :** பக்கத்து வீட்டுக்காரர் விவாக ரத்தில் அவருக்கு ஆர்வம் இருக்கலாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** எனவே, நான் கூறியது போன்று எங்களிடம் கலந்தாலோசிக்கவில்லை. சீக்கியர் சமுதாயம் பற்றி அரசியல் அபிப்பிராயங்கள் பல்வேறு விதமாக இருந்தாலும், இன்றைய அரசாங்கங்கள் காங்கிரஸ் சீக்கியர், அகாலி சீக்கியர் அல்லது சுயேட்சை சீக்கியர் அல்லது அரசாங்கத்திலுள்ள சீக்கியர் சொல்லுவதைச் செவிமடுப்பதில்லை. சீக்கியர்களிடம் போதுமான அளவு ஆலோசனை செய்யப்பட்டது என்ற விநோதமான முடிவுக்கு அரசாங்கம் எப்படி வந்தது என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. நேற்று நான் பேசி முடித்த பின்னர் சில நண்பர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள்: "திரு. மான், இது சரிதான். உங்களுடைய வழக்கங்கள் வேறுபட்டவை என்பதையும் ஒத்துக்கொள்கின்றோம். உங்களிடம் போதுமான வகையில் கலந்தாலோசனை செய்யப்படவில்லை என்பதையும் நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், உங்களுக்காக நாங்கள் ஏன் சட்டம் இயற்றக் கூடாது? ஏனென்றால், பல்லாண்டு காலமாக நீங்கள் இந்துக்களாக இருந்து வந்திருக்கிறீர்கள். இந்து சட்ட வரம்பிற்குட்பட்டவர்களாக இருந்து இருக்கிறீர்கள்.'' நாங்கள் எப்போதாவது இந்து சட்டத்திற்குட்பட்டவர்களாக இருந்து இருக்கிறோம் என்பது பற்றிக் கூறுகிறேன். ஆனால் நாங்கள் இந்துக்களா என்ற கேள்வி பற்றி மீண்டும் இதற்கான வாதத்தை இங்கு முன்வைக்க விரும்ப வில்லை. இது சம்பந்தமாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு துண்டுப் பிரசுரம் நேற்று என் கைக்குக் கிட்டியது. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ஒரு கிராமத்துக்குப் போய் ஒரு சீக்கியனைப் பார்த்து 'நீ ஓர் இந்து' என்று சொன்னால், அவன் வார்த்தைகளில் பதிலளிக்க மாட்டான்; பளீர் என்று கன்னத்தில் ஓர் அறை கொடுப்பான். அந்த வாதத்தை இங்கு நான் முன் வைக்கவோ துணியவோ மாட்டேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (பஞ்சாப்) :** பஞ்சாபில் சீக்கிய விவசாயிகள் இந்து விவசாயிகளிடமிருந்து எவ்வாறு வேறுபட்டவர்கள்?

**சர்தார் பி.எஸ். மான்:** நான் விவாதம் செய்ய விரும்பி இருப்பேன். உண்மையில் சொல்லப் போனால், நான் பேசுவது அனைத்தும் அதன் அடிப்படையில்தான். ஒரு விவசாயி என்ற முறையில் நான் இந்து, முஸ்லீம் விவசாயிகளிடம் பழகியிருக்கிறேன். சீக்கிய விவசாயி, இந்து மற்றும் முஸ்லீம் விவசாயி ஒரே வகையான பழக்க வழக்கங்களடங்கிய சட்ட முறையினை பின்பற்றுகின்றனர். இது என்னுடைய வழக்கறிஞர் நண்பருக்கு நன்கு தெரியும். சீக்கியர் என்ற வார்த்தையை நான் உபயோகிக்கிறேன் என்றால் இம்மசோதா தான் அதற்குக் காரணமாகும். பஞ்சாப் விவசாயிகள் இதிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று வாதிட நான் விரும்பி இருப்பேன். ஆனால் இம்மசோதா ஒரு பிற்போக்கான, வகுப்புவாத மசோதா - இந்துக்கள், சீக்கியர்கள் ஜெயின் முதலிய சாதிகளுக்கென்று சட்டமாகிறது; மத சார்பற்ற சமூகப் பிரிவுகள் என்று குறிப்பிடாமல் வகுப்புவாதப் பிரிவுகள் என்று கூறுகிறது. எனவே, அவ்வாறு இருக்கும்போது நான் என்ன கூறமுடியும்?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** கிராமங்களில் வாழும் விவசாயம் சாராத தொழில் செய்யும் இந்து விவசாயிகளும் விவசாயம் செய்யும் இந்துக்கள் போன்று அதே பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மை இல்லையா?

**சர்தார் பி.எஸ். மான் :** ஆம்; அதுதான் பஞ்சாபிலுள்ள சட்டத்தின் சிறப்பு. பஞ்சாப்பில் கிராம சமுதாய நெறிகள் அதிகாரம் செலுத்துகின்றன; மதவாதச் சட்டங்கள் அல்ல. நாட்டின் இதர பிராந்தியங்களைக் காட்டிலும் முற்போக்கான நிலை இது. மண்ணின் ஆட்சிக்குட்பட்டவர்கள் நாங்கள்; நிலச் சட்டங்களைச் சுற்றி எங்கள் வாழ்வு சுழல்கிறது. அவை மதச் சார்பற்ற சட்டங்கள். இக்குறுக்கீட்டுக் கேள்விக்குப் பதிலளிக்கும் முறையில் ஒரு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 'ராட்டிகன் டைஜெஸ்ட்' டிலிருந்து மேற்கோள் காட்டுகிறேன். இச்சட்ட வரைவு பஞ்சாப்புக்கு பொருந்துவது குறித்த வரையில், இது ஒரு சீர்திருத்தம் அல்ல; முன்னேற்ற நடவடிக்கையுமல்ல. ஏனெனில், இது மிகவும் பிற்போக்கானது; ஆஸ்தீகமானது; பழமை தழுவியது; வகுப்புவாத அடிப்படையிலானது. மதச்சார்பற்ற நிலையைப் பொறுத்தவரை, பஞ்சாப்பிலுள்ள எங்களுடைய சட்டம் மிகவும் முற்போக்கானது. எங்களுடைய கிராம மக்கள் ஒரேவிதமான சட்ட தொகுப்பின் அதிகார வரம்பிற்குட்பட்டவர்கள். பல்லாண்டுகளாக இந்து, முஸ்லீம் மற்றும் சீக்கிய மக்கள், விவசாயிகள், விவசாயம் சாராத் தொழில் செய்பவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களும்

நிலத்துடன் இணைந்து வாழ்ந்து வந்துள்ளோம். அவர்கள் பன்னெடுங் காலத்தின் ஞானத்தையும், உணர்வுகளையும் பெற்றுள்ளனர்; ஒரு விதமான சட்டத் தொகுப்பு ஆட்சிக்குட்பட்டவர்கள். டாக்டர் அம்பேத்கர் திடீரென்று இந்து சட்டத் தொகுப்பை கொண்டு வந்திருக்கிறார் - அவருக்கு எங்கள் மீது பொறாமை போல் தெரிகிறது; அவர் கூறுகிறார்: ''உங்களை வெட்டி, துண்டு துண்டாகப் பிரிக்கப் போகிறேன்.'' ஒன்று நீங்கள் ஓர் இந்துவாக அல்லது ஒரு முஸ்லீமாக இருக்க வேண்டும்! இந்த மசோதாவின் விளைவு இதுதான்.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம்) : இன்னும் சொல்லப் போனால் ''எல்லா மதங்களையும் விட்டுவிடுங்கள்.''

**சர்தார் பி.எஸ். மான்:** இவ்விஷயத்தில் ராட்டிகன் டைஜெஸ்ட் என்ன கூறுகிறது? அது பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> ''ஷாரா அல்லது சாஸ்திரங்கள் அம்மக்களிடையே உண்மையான நேரடி செல்வாக்குப் பெறவில்லை என்று கிராம மக்களுடைய பழக்க வழக்கங்களை மிகவும் நன்கறிந்தவர்களால் நீண்டகாலமாக அறியப்பட்டிருந்தது.'' பின்னர் மேலும் குறிப்பிடுகிறது :
>
> ''பிராமணனை இந்து சட்டம் அளவு மீறி புகழ்கிறது; மதச் சார்பற்ற விதிகளுக்கு புரோகித காரணங்களைக் கூறுகிறது. பஞ்சாபில் இந்துக்கள் மற்றும் இந்து மதத்திலிருந்து மாறிய முஸ்லீம்கள் பிராமணனைப் பார்த்து அஞ்சுவர் அல்லது உணவளிப்பர். ஆனால், சிவில் விவகாரங்களில் பிராமணரை இதர மனிதர்களுடன் ஒரே மாதிரியாகத்தான் பஞ்சாப் வழக்க முறை கருதுகிறது. அடிப்படையில் புரோகித இயல்பில்லாத சம்பிராதாயமில்லாத சமயச் சார்பற்றது இது.''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பஞ்சாப்பிற்கு இப்போது ஷரியத் சட்டம் பொருந்துவதாக இல்லையா?

**சர்தார் பி.எஸ். மான் :** பஞ்சாப் மாநில மக்களை இரண்டு தனிப் பிரிவுகளாக பிரிக்கிறேன். ஒரு பிரிவில் 95% மக்களும், மற்றொரு பிரிவில் 5 சதவீத மக்களும் உள்ளனர். 95 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்வு நிலத்துடன் பிணைந்துள்ளது......

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தியா இரண்டாகப் பிரிக்கப்படாத காலத்தில்தான் ஷரியத் சட்டமாக்கப்பட்டது. இல்லையா?

**சர்தார் பி.எஸ். மான் :** பஞ்சாப் சட்டங்கள் பற்றி குறிப்பிட வேண்டும். பஞ்சாபில் வழக்கம்தான் முக்கிய சட்ட அதிகாரம் பெற்றுள்ளது. ஷரியத் மற்றும் இந்து சட்டம் அங்கு ஆளுமை பெற்றவையல்ல.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** ஷரியத் சட்டத்தால் அது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

**சர்தார் பி.எஸ். மான் :** வழக்கம் அடிப்படையிலான சட்டம் இல்லாத போது, ஷரியத் சட்டம் செயலுக்கு வரும். இது மிகவும் தெளிவாகவே உள்ளது. இப்போது என்னுடைய பேச்சின் போது குறுக்கீடு நடைபெறுவதை நான் விரும்பாததால், அதுபற்றி பின்னர் குறிப்பிடுவேன். எங்களுக்குச் சட்டம் இருக்கிறது - 1872 ஆம் ஆண்டு பஞ்சாப் சட்டங்கள் - கூறு5 - பஞ்சாப்பில் வழக்கத்தின் அடிப்படையிலான சட்டம்தான் முதலில் செல்லுபடியாகும்; இவ்வாறு வழக்கத்தின் அடிப்படையிலான சட்டம் இல்லாத இடத்தில் இந்து சட்டம் அல்லது ஷரியத் சட்டம் செல்லுபடியாகும் என்று இச்சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**திரு. ஆர்.சி. உபாத்யாயா** (ராஜஸ்தான்) **:** வழக்கங்கள் எழுதப்பட்டுள்ளனவா?

**சர்தார் பி.எஸ். மான் :** எழுதப்பட்டவை மட்டுமல்ல; அவை தொகுக்கப்பட்டு, ஆய்ந்து முடிவு செய்யப்பட்டவை - பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாக அல்ல, காலம் காலமாக உள்ளன.

**ஓர் உறுப்பினர் :** உங்களுடைய வழக்கம் இந்துக்கள் வழக்கம் மாதிரி இல்லையா?

**சர்தார் பி.எஸ். மான் :** குழந்தைத்தனமான கேள்வி! என்னுடைய வழக்கம் இந்து வழக்கத்தலிருந்து முற்றிலுமாகவும் அடிப்படையிலுமாக வேறுபட்டது என்று என்னுடைய நண்பருக்கு நான் நிரூபிக்க வேண்டுமானால், அவர் எங்களுக்கு விதிவிலக் களிக்கத் தயாராக உள்ளாரா?

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா :** ஒரு வழக்கம் நியாயமானதாக இருப்பின், அதனை டாக்டர் அம்பேத்கர் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும் *(குறுக்கீடு)*.

**சர்தார் பி.எஸ். மான் :** குறுக்கீடுகள் பலவிதம். குறுக்கீடு செய்பவரை நான் நம்பச் செய்துவிட்டால், அவர் ஏற்றுக் கொள்வ தாகக் கூறுகிறார். நம்புவதற்குத் தயாராக இல்லாதவரை நம்பச் செய்ய என்னால் முடியுமா என்று தெரியவில்லை. தம்மை நம்பச் செய்து விட்டாலும் கூட, அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார்.

*மேய்னே* எழுதிய *'இந்து சட்டம்'* கூறுவதை மேற்கோளாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது பெருமளவில் அதிகாரப் பூர்வமான விமர்சனமாகும். பல்லாண்டுகளாக இது நடைமுறையில் உள்ளது. இது குறிப்பிடுவதாவது :

> ''கிராம சமுதாயங்கள் சம்பந்தப்பட்டவரை, பஞ்சாப் மற்றும் அருகே உள்ள மாவட்டங்களில் மட்டும் பழமையான பலத்துடன் திளைத்து இருக்கின்றன. அவை இந்தியாவிற்குள் முதலில் நுழைந்தவுடன் இப்பகுதியில்தான் ஆரியர்கள் நடமாடி இருக்க வேண்டும். இருப்பினும் இப்பகுதியில் பிராமணீயம் வேரூன்றத் தவறிவிட்டது. மேலும் மதச்சார்பு அம்சங்கள் அங்குள்ள மக்களின் மதச்சார்பற்ற சட்டங்களில் ஒருபோதும் இடம் பெறவில்லை.

இந்நீண்டகாலத்தில் மனுவிடமிருந்து நான் விடுதலை பெற்று இருக்கும் நிலையில், இப்போது ஒரு நவீன மனுவுக்கு நான் அடிபணிய வேண்டுமானால், இது காலத்தின் சர்வாதிகாரப் போக்கு என்று கூறாமல் வேறு எப்படிக் கூறமுடியும்? பிராமணீய சட்டத்திற்கு ஆட்படாமல் நீண்ட காலமாக பஞ்சாப்பில் எனக்கு மதச் சார்பற்ற சட்டம் இருந்துவரும் போது, மனுவின் மதத்தை நான் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும்போது, இனிமேலும் அம்பேத்கரின் மதத்தை பஞ்சாப் ஏற்றுக் கொள்ளாது என்பதை அவையில் உறுதியுடன் கூறுகிறேன் *(குறுக்கீடு)*. பல அம்சங்களில் மனு தனிச் சிறப்புப் பண்புடையவர் என்ற பெருமையை அவருக்கு அளிக்கிறேன். ஆனால், என்னுடைய நவீன மனு - ஆ, அவருக்கு எத்தகைய வீழ்ச்சி! அவர் (நவீனமனு) தனிப்புதுமை உடையவர் அல்ல; முற்போக்குவாதியு மல்ல *(குறுக்கீடு)*. அந்த நவீன மனு யார் என்றா கேட்கிறீர்கள். நன்று; நான் அவர் பெயரைச் சொல்லத் தேவை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் :** நான் நவீன மனு அல்ல.

**சர்தார் பி.எஸ். மான் :** பஞ்சாப்பில் வகுப்புப் பிரிவுகளை நாங்கள் அங்கீகரிப்பதில்லை. இச்சட்டம் அங்கு முதல் முறையாக வகுப்புவாத அம்சத்தை அறிமுகம் செய்கிறது. மேய்னேயின் 'இந்து சட்டம்' நூலிலிருந்து (9வது பதிப்பு; பக்கம் 48) நான் வாசித்துக் காட்டுகிறேன். அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

> "பஞ்சாப்பில் பிராமணீயம் எக்காலத்திலும் வெற்றி பெறவில்லை; இதிலிருந்துதான் பஞ்சாப் வழக்கங்களின் சிறப்பு உருவாகிறது. அவ்வாறு பஞ்சாப்புக்கும், சமஸ்கிருத சட்டத்திற்கும் இடையே பொதுவான அம்சம் இருப்பதைக் கொண்டு அதன் மூலாதாரம் பிராமணீயம்தான் என்று நாம் கருத வேண்டிய அவசியமில்லை. பஞ்சாப்பில் வழக்கம் அடிப்படையில் அமைந்த சட்டத்திற்கு பிராமணர்கள் கருவூலங்களல்ல. இதை உறுதிப்படுத்திக் கொள்ள ஜிர்கா அல்லது ஆதிவாசி கவுன்சில் ஒன்று இருந்தால் அதனை அணுகிக் கேட்க வேண்டும்; அல்லது ஆதிவாசிகளில் மூத்தவர்களிடம் விசாரிக்க வேண்டும்."

**திரு. ஆர்.கே. சௌதுரி : (அஸ்ஸாம்) :** உங்கள் பேச்சில் குறுக்கீடுவதற்கு வருந்துகிறேன். விஷயத்திற்கு நேரடியாக வருவோம். மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருதார மண முறையை விரும்புகிறாரா அல்லது விரும்பவில்லையா? இதுதான் கேள்வி.

**திரு. தியாகி :** சுற்றி வளைத்து ஏன் பேசுகிறீர்கள்?

**சர்தார் பி.எஸ். மான் :** திருமணம் மற்றும் விவாகரத்து பற்றி மட்டும் அரசாங்கம் முடிவு செய்ய விரும்புவதாக தவறான எண்ணம் பத்திரிகை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளை விட்டு விடப் போவதாகவும், விவாகம் மற்றும் விவாகரத்து பற்றி மட்டும்தான் இப்போது முடிவு செய்யப் போவதாகவும் அவையில் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் நிச்சயமாகக் கூறி இருக்கிறாரா? இச்சட்டத் தொகுப்பை முற்றிலுமாகப் பயன்படுத்துவது பற்றி நான் விவாதித்துக் கொண்டு இருக்கிறேன். இதர பகுதிகள் விட்டுவிட மாட்டா என்ற எண்ணத்தின் அடிப்படையில் நான் மேற்கொண்டும் பேசுகிறேன். தவறான நம்பிக்கையையும், அலட்சியமானப் போக்கினையும் உறுப்பினர்களிடையே அரசாங்கம் உருவாக்கிவிட்டு, இதர

பகுதிகளையும் நிறைவேற்ற மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுவார்கள் என்று எனது நண்பர்களை எச்சரிக்கின்றேன்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** என்னுடைய கேள்விக்குப் பதில் கூறுங்கள். வழக்கத்தின் அடிப்படையிலான சட்டம் ஒரு தார திருமண முறையை பஞ்சாப்பில் அனுமதிக்கிறது. ஒரு தார திருமணச் சட்டம் தொடர்வதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**சர்தார் பி.எஸ். மான் :** ஒவ்வொரு சட்டமாக, முழுமையாக நான் விவாதிப்பேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதர விஷயங்களை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. திருமணம் மற்றும் விவாகரத்து விஷயம் மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று பிரதம மந்திரி கூறியுள்ளார்; இதை அவர் தெளிவாகக் கூறியுள்ளார் என்று நினைக்கிறேன். இது சரி என்று ஒத்துக் கொண்டால், உறுப்பினர் தம்முடைய இருக்கையில் அமருவார் என்று நம்புகிறேன்.

**சர்தார் ஹூக்கம் சிங் (பஞ்சாப்):** இத்தருணத்தில், இக்கூறு ஒத்துக் கொள்ளப்பட்டால், மற்ற அத்தியாயங்கள் விவாதத்திற்கு வரும்போது, மீண்டும் இக்கூறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? இதை பயன்பாட்டுக்கு கொண்டுவருவது என்று முடிவு செய்துவிட்டால், இப்போதே முழு விஷயமும் விவாதித்திடப்பட வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இம்மசோதா திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்டதாக மட்டும் இருந்தால் இதர பகுதிகள் ஒரு தனி மசோதாவாக கொண்டுவரப்படுவதாக இருந்தால், இக்கூறு ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்று உறுப்பினர் கருதுவாரா?

**திருமதி துர்க்காபாய் (சென்னை) :** சொத்துரிமை சம்பந்தப்பட்ட முக்கியமான அதிகாரங்கள் விட்டுவிடப்படும் என்று உறுப்பினர் எந்த அடிப்படையில் கூறுகிறார்? இத்தகவல் எங்கிருந்து அவருக்குக் கிடைத்தது?

**சர்தார் பி.எஸ். மான் :** இப்போதுதான் முதன் முறையாக பெண் உறுப்பினர் என்னுடைய பாதுகாப்பிற்கு வந்துள்ளார். இதர பகுதிகள் விடப்படாததால்தான் மசோதாவின் அனைத்துப் பகுதிகள் பற்றியும் பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு.

**திரு. பாரதி** (சென்னை) : கால அவகாசம் முதலியன இல்லாத காரணத்தினால் இதர பகுதிகள் விவாகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட இயலாது என்று பிரதம அமைச்சரும் மற்றும் சட்ட அமைச்சரும் ஏற்கனவே கூறியுள்ளனர். இது திடமான உறுதிமொழியாக இல்லா விட்டாலும், நடைமுறையில் இது ஓர் அதிகாரப்பூர்வமான முடிவு என்று நாம் கருதலாம். நடைமுறை அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அனேகமாக 99 சதவீதம் இதர அத்தியாயங் கள் இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று நான் கூறுவேன். வரும் பிப்ரவரி அல்லது மார்ச்சு திங்களில் இவை எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பு உண்டு. நடப்புக் கூட்டத் தொடரில் இது முற்றிலும் முடியாத காரியமாகும். அத்தியாயம் IIஐ முடித்தாலே அது ஒரு பெரிய விஷயமாகும். எனவே, இதர உறுப் பினர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன். குறைந்தது இந்தப் பகுதியை யாவது நாம் நிறைவேற்ற வேண்டும். விவாதத்தின் நன்மை கருதி டாக்டர் அம்பேத்கர் ஏதாவது அறிவிப்பு செய்ய வேண்டும். திடமாக உறுதி அளிக்காவிட்டாலும், திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப் பட்ட ஷரத்துக்கள் மட்டும்தான் நடப்புக் கூட்டத் தொடரில் நிறை வேற்றப்படும் என்றுகூட அவர் கூறலாம்.

**பண்டிட் எம்.பி. பர்கவா** : (ஆஜ்மீர்) இவ்வாறு வாதிடும்படி அரசாங்கம் உறுப்பினருக்குத் தகவல் அளித்துள்ளதா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்**: இரு தரப்பு சார்பாகவும் உறுப்பினர்கள் பேசுவதற்கு உரிமை உள்ளது.

**டாக்டர் தேஷ்முக்** (மத்தியபிரதேசம்) : நாம் விவாதம் செய்யும் சட்டத் தொகுப்பின் பல்வேறு பகுதிகளில் கூறு 2 தனியான வேறுபாடு எதையும் குறிப்பிடவில்லை. இதர அத்தியாயங்கள் பற்றி, சொல்ல விரும்புகின்ற அனைத்தும் பற்றி இப்போது உறுப்பினர் கூறா விட்டால், பின்னால் அவர் எதையும் கூறமுடியாது; ஏனெனில் கூறு 2 சட்டத் தொகுப்பு முழுவதற்கும் பொதுவாகப் பொருந்து வதாக உள்ளது; திருமணம் மற்றும் விவாகரத்து ஆகியவை பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. கூறு2 ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் சட்டத் தொகுப்பு முழுவதற்கும் அது பொருந்தும், திருமணம் மற்றும் விவாகரத்துக்கு மட்டும் பொருந்துமென்று ஒரு திருத்தம் கொண்டுவந்தாலன்றி - அரசாங்கத்திடமிருந்து அத்தகைய திருத்தம் எதுவும் கொண்டு வரப்படவில்லை - உறுப்பினர் இதர அத்தியா யங்கள் பற்றி பேசுவதைத் தடுக்க முடியாது.

**திரு.ஜே.ஆர். கபூர் (உத்திர பிரதேசம்) :** இதே வடிவத்தில் அல்லது திருத்தப்பட்ட வடிவத்தில் கூறு 2 நிறைவேற்றப்பட்டாலும், எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியும் அல்லது அத்தியாயமும் பின்வரும் காலத்தில் எந்த சமுதாயத்திற்கும் பொருந்தாது என்று ஒருவர் கூறுவதைத் தடுக்க முடியாது. பரம்பரை சொத்துரிமை மற்றும் வாரிசு உரிமை பிரச்சினையை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். அந்த அத்தியாயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, சட்டத் தொகுப்பின் இந்தப் பகுதி சீக்கியர்கள் அல்லது வேறு எந்த சமுதாயத்திற்கும் பொருந்தாது என்று தெரிவிக்கும் கூறு ஒன்றினைச் சேர்த்துக் கொள்ள நமக்கு நிச்சயமாக உரிமை உண்டு. கூறு 2ஐ அவை நிறைவேற்றுவதன் மூலம் இவ்விஷயம் பற்றி பின்னர் விவாதிக்க வழி உண்டு; ஒத்துக் கொள்ளக் கூடிய அத்தகைய திருத்தங்களுக்குட் பட்டு, விவாகம் மற்றும் விவாகரத்து பற்றியதை நாம் ஏற்றுக் கொண்டு, இம்மசோதாவை பற்றி மேல் நடவடிக்கை தொடர்வது உசிதமானதாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** என்ன சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப் பட்ட அத்தியாயம்தான் எடுத்துக் கொள்ளப்படுமென்று பிரதம அமைச்சர் அறிவித்திருப்பதை மனதில் கொண்டு, இப்பொருள் பற்றிய விவாதத்தை முடித்துக்கொள்ள உறுப்பினர்களை நான் வேண்டிக் கொள்ள முடியும் என்று நினைத்தேன். அவர் குறிப்பாக அவ்வாறுதான் கூறினார். இப்போது, மற்ற அத்தியாயங்களுக்கும் கூறு 2 பொருந்துவதாக இருந்தால், அவைகளைப் பற்றி குறிப்பிட வேண்டாம் என்று உறுப்பினர்களை நான் எப்படிக் கேட்க முடியும்? இதுவே என்னுடைய அச்சமாகும். மாண்புமிகு சட்ட அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும். இல்லையென்றால் விவாதம் விரிவான தாகிவிடும். அந்நிலையில் விரைவில் முடிக்க வேண்டுமென்று நான் கூறுவது நியாயமானதாகாது.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** முன்பு ஒரு நாள் மாண்பு மிகு பிரதம அமைச்சர் அவைக் கூட்டம் ஆறாம் தேதி முடிவடையும் என்று கூறினார்.

**திரு. நசிருத்தீன் அகமது :** அது தாற்காலிகமானது.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** எப்படி இருப்பினும் அவ்வித அறிவிப்பு இருக்கிறது. அரசாங்கத்தின் தெளிவான நிலையை

விட்டுக்கொடுக்காமல், திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப் பட்ட அத்தியாயத்தைத் தவிர வேறு எதையும் இக்கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ள முடியாது என்று நான் கூற முடியும். அந்த அத்தி யாயத்தின் இறுதியை நாம் விவாதிக்கின்ற போது, இந்த இரண்டு பாகங்களும் முழுவிவரம் தருபவைகளாக அமைக்கப்படவும், திருமணம் மற்றும் விவாகரத்து அடங்கிய அட்டவணைகளை அவற் றுடன் இணைக்கவும் சில திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்து இருக்கிறேன். நடப்பு கூட்டத் தொடரைப் பொறுத்த வரை, அதுதான் அரசாங்கத்தின் நோக்கமென்று அவை கருத வேண்டும். உதாரணமாக, இதர பாகங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, எந்த சட்ட அமைச்சராக இருப்பினும், அவரும் மசோதா தயாரிப்பாளர்களும் அப்பகுதிகள் முழு விவரங் கள் அடங்கியதாக இருக்கும்படி சந்தேகமின்றி பார்த்துக் கொள்வார் கள். அதே விளக்கமும், விதிகளும் இதர பகுதிகளில் மீண்டும் வரையப்பட வேண்டியது இருக்கும்; அப்பகுதிகள் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாக அமலாக்கப்படுகிறதா என்பதை அல்லது அனைத்து சமுதாயங்களுக்கும் பொருந்துவதாக்கு வதாக அல்லது விதிவிலக்கு எதுவும் அளிக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்வது அவை மற்றும் அரசாங்கத்தின் முடிவிற்கு விடப்பட்டுள்ளது. இப்பிரச்சினையை வருங்கால அரசாங்கம், சட்ட அமைச்சர் மற்றும் நாடாளுமன்றத்தன் முடிவிற்கு விட்டுவிட வேண்டுமென்று நினைக்கிறேன்.

நேரம் காலை 10 மணி

**திருமதி ரேணுகா ரே** (மேற்கு வங்காளம்) : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. கடந்த கூட்டத் தொடரில் கூறு 2 மூன்று நாட்கள் வரை விவாதிக்கப்பட்டது. இப்போது மூன்று நாட்கள்; ஆக மொத்தம் ஆறு நாட்கள். இம் மசோதாவின் பல்வேறு ஷரத்துக்களது தகுதிகள் பற்றி எல்லாரும் பேசியுள்ளார்கள். பரிசீலனை கட்டம் முடிந்த பின்னர், கூறு 2 விவாதிக்கப்பட்டதுபோல், ஒரு கூறு பற்றி விவாதிக்கின்ற நிலையில், மசோதாவின் அனைத்து விவரங்கள் பற்றி ஆய்வது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திருமதி துர்க்காபாய்** : எனக்கு ஒரு விளக்கம் தரமுடியுமா? மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியது போல், இந்த அவை சொத்துரிமை பற்றிய கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாலும் - ஏனெனில் அவை சமத்துவக் கொள்கை அடிப்படையில் அமைந் துள்ளன - இக்கூறுகள் சம்பந்தப்பட்ட தனி ஒரு மசோதாவை

*அறிமுகம் செய்ய இக்கூட்டத் தொடரில் இல்லாவிட்டாலும், அடுத்த கூட்டத் தொடரில் அவ்வாறு அறிமுகம் செய்ய அரசாங்கம் எண்ணி யுள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் :** என்னுடைய அதிகார வரம்பிற்கு இது முற்றிலும் அப்பாற்பட்டது. மன்னிக்கவும். இதற்கு பிரதம அமைச்சர்தான் பதிலளிக்க வேண்டும்.

**திரு. தேஷ் பந்து குப்தா** *(டில்லி): மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறிய கருத்தின் காரணமாக, இம்மசோதாவின் தலைப் பினை மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா?; ஏனெனில் இப்போது இது சட்டத் தொகுப்பு அல்ல.*

**மாண்புமிகு பிரதம அமைச்சர் மற்றும் வெளி விவகாரத்துறை அமைச்சர்** *(திரு. ஜவஹர்லால் நேரு)* : உறுப்பினரது கேள்வியின் பொருளை நான் அறிந்து கொண்டிருந்தால், அவரின் கேள்வி இதுவாகத்தான் இருக்கும்: அதாவது மசோதாவின் இதர பாகங்கள் இக்கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படுமா அல்லது பின்வரும் கூட்டத் தொடரிலா? அரசாங்கத்தைப் பொறுத்த வரை, மசோதாவின் அனைத்துப் பாகங்களையும் நாங்கள் ஆதரிக்கின் றோம். எங்களுக்கு கால அவகாசம் இல்லாதது ஒரு இடர்ப்பாடாகும்; பாகம் IIஐ விவாதித்து, இக்கூட்டத் தொடரில் நிறைவேற்றிட நாங்கள் முடிவு செய்தோம். வேறு எப்பகுதியையும் விட்டு விடுவது எங்கள் நோக்கம் என்று இதற்குப் பொருள் அல்ல; இதர பாகங்களும் நிறை வேற்றப்படுவதையே நாங்கள் பெரிதும் விரும்புகிறோம். ஆனால், உண்மையைச் சொல்லப் போனால், இக்கூட்டத் தொடரில் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்பு இல்லை. வாய்ப்புக் கிடைக்கும் போது இதர·பாகங்களையும் எடுத்துக்கொள்ளவே விரும்புகிறோம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்: :** இக்கேள்வி எழுப்பப்பட்ட போது மாண்புமிகு பிரதம அமைச்சர் அவையில் இல்லை. சர்தார் மான் பேசிய போது, சீக்கியர்களுக்கு பொருந்தும் இதர பகுதிகள் பற்றி குறிப்பிட்டார். அப்போது எழுப்பப்பட்ட கேள்வி இதுதான் : இப் போதைய நடவடிக்கை திருமணம் மற்றம் விவாகரத்து சம்பந்தப் பட்டதாகவே இருக்கும்; அதனால் விவாதம் இவ்விரண்டு விஷ யங்கள் பற்றித்தான் இருக்கும் என்று பிரதம மந்திரி ஏற்கனவே அறிவிக்கவில்லையா? இக்கூறு பற்றி விவாதித்த நாட்களின் எண் ணிக்கையை கருத்தில் கொண்டு , இன்றே இந்த விவாதத்தை முடித்துக்

கொள்ள விரும்புகிறேன். விவாகம் மற்றும் விவாகரத்து பற்றி மட்டும் விவாதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் மசோதாவின் தலைப்பு பற்றிக் கூட தகுந்த திருத்தங்களை முன் மொழியலாம் என்றும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அப்போது கூறினார். மசோதாவின் இதர பகுதிகளைப் பொறுத்தவரை, ஒரு புதிய மசோதா அறிமுகப் படுத்தப்படும்; அதில் இதர சமுதாயங்கள் அல்லது பிராந்தியங் களுக்கு இம்மசோதாவை அமல்படுத்துவது பற்றியும் கூறப்பட் டிருக்குமென்று சொல்லப்பட்டது. அத்தகைய மசோதா எப்போது அறிமுகப்படுத்தப்படுமென்றும் கேட்கப்பட்டது. பிரதம அமைச்சர் மட்டும்தான் இதற்குப் பதிலளிக்க முடியுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் பதில் கூறினார். எனவேதான், பிரதம அமைச்சருக்கு இங்கு நடைபெற்ற விவாதம் பற்றித் தெரிவிக்கப்பட்டதா என்ற சந்தேகம் எனக்குக் கொஞ்சம் இருந்தது.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:** கூறு 55 விவாதிக்கப்பட்ட போது, நான் ஒரு விஷயத்தைக் கூற மறந்து விட்டேன். குறிப் பிட்ட பகுதியை முழு விவரங்களடங்கியதாக ஆக்கும் நோக்கத் துடன் தகுந்த திருத்தங்களை அறிமுகம் செய்வதோடு, திருத்தப் பட்ட வகையில், இதர பாகங்கள் எப்படியிருந்தாலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட ஒரு தீர்மானத்தையும் நான் முன்மொழிவேன்.

அடுத்த விஷயம் பற்றி, நடைமுறை விதிகளை ஆராய்ந்தேன். இரண்டு வழிமுறைகள் உள்ளன. எனக்குத் தெரிந்த முதலாவது முறைப்படி, இதர கூறுகளை முன்மொழிந்து நிராகரித்து விடலாம். அதன் பின்னர் அவற்றை ஒன்றாகச் சேர்த்து ஒரு தனித் தொகுப் பாகவோ அல்லது தனிப் பகுதி அல்லது தனி மசோதவாகவோ தயாரித்து, அரசாங்கம் விரும்பும் போது அவையில் முன் மொழிய லாம். அனுமதிக்கக் கூடிய மற்றொரு முறை - உங்களுடைய தீர்ப்பிற் குட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையில் - நடைமுறை விதிகளின்படி, இப்பகுதிகளை அப்படியே விட்டுவிடலாம். விதிகளின்படி நாடாளுமன்றத்தின் முன் உள்ள ஒரு மசோதாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியை அல்லது பாகத்தை நாடாளுமன்றம் எடுத்து விட்டு, அப்பகுதிகளைத் தனி மசோதாவாகத் தயாரித்து, சட்டமாக நிறைவேற்றுவதற்கு தடை எதுவும் இல்லை என்பது எனக்குத் தெரியும். இவ்விஷயத்தை முடிவு செய்வதை உங்களுக் கும், அவைக்கும் விட்டு விடுகிறேன். கூறு 55 மற்றும் சில அட்ட வணைகளுடன் இப்போது முடித்துக் கொள்ளுவது தான் நம்முடைய நோக்கமாகும். இந்த விளக்கம் நிலைமையைத் தெளிவாக்கி இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. ஜவஹர்லால் நேரு :** என்னுடைய மாண்புமிகு நண்பர் நிலமையை மிகத் தெளிவாக்கி இருக்கிறார். எனக்கு முற்றிலும் அவருடன் உடன்பாடு உண்டு. தற்போது இரண்டாவது பாகத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அத்துடன் மற்றவைகளுடன் அதை முழுமையாக நிறைவேற்றவும் விரும்புகிறேன். மசோதாவின் மீதியுள்ள பகுதிகளை சிறப்பாக முடித்துக் கொள்வதற்குள்ள சாத்தியக் கூறுகளை அது சார்ந்துள்ளது. இதை தனியாகவே வைத்துக் கொள்ள வேண்டும்.

இக்கூட்டத் தொடர் நடைபெறும் காலம் பற்றி முன்னர் நான் கூறியதைத் திருத்திக் கொள்ள அல்லது மாற்றிக் கொள்ள எனக்கு உரிமை உண்டு. அக்டோபர் 6ஆம் நாள் விவாதத்தை முடித்துக் கொள்ள விரும்புவதாகக் கூறினேன். விவாதம் நடைபெறும் விதத்தைப் பார்க்கும் போது, அக்டோபர் 6 ஆம் நாள் முடித்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே,முக்கிய பணியை முடிக்கும் வரை, விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

**திரு. தேஷ் பந்து குப்தா :** எனக்கு ஒரு விளக்கம் அளிக்க முடியுமா? ஒருதார மணம் மற்றும் விவாகரத்து பற்றிக் கூறுகின்ற முழு விளக்கமான மசோதாவாக இது இருக்குமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். அப்படியானால், பின்னர் கொண்டு வரப்படும் மசோதாக்களும் சுய விளக்கம் உள்ளவை களாகவே இருக்கும். அதனால் இங்கு இந்து சட்டத் தொகுப்பு பற்றிய கேள்வி எழவில்லை. ஆகையால், பல்வேறு மசோதாக்கள் இருக்கும்; தேவைப்பட்டால், சட்டத் தொகுப்பு பின்னர் தயாரிக்கப் பட வேண்டியதிருக்கும். இப்போதுள்ளபடி, மசோதா குறித்து இப்போது மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் நாம் எடுக்கப் போவதில்லை. மசோதாவின் பல்வேறு தலைப்புகள் பற்றித்தான் நாம் விவாதிக்கின்றோம். இம்மூன்று பொருள்கள் பற்றித்தான் இப்போது நாம் விவாதிக்க உள்ளோம்.

**திரு. ராமலிங்கம் செட்டியார்** (சென்னை) : பல்வேறு மாகாணங்களில் ஒருதார மணம் மற்றும் விவாக ரத்து பற்றிய சட்டங்கள் உள்ளன. அனேகமாக, அவை சிறப்பானவைகள். இங்கு நாம் ஏற்றுக் கொள்ள உள்ள ஷரத்துக்கள் ஒரு சமரச ஏற்பாடு மட்டுமே. நாம் ஒரு சட்டத் தொகுப்பினை உருவாக்கிக் கொள்ள இருப் பதால், இச்சமரச ஏற்பாட்டையும் ஏற்றுள்ளோம். விவாகம் மற்றும்

விவாகரத்து ஆகியவை மட்டும் சம்பந்தப்பட்டதாக இப்போதைய சட்டம் இருக்குமானால், பல்வேறு மாகாணங்கள் நிறைவேற்றியுள்ள சட்டங்களை அப்படியே விட்டுவிடலாம், அம்மாகாண மக்கள் தேவையானதை எடுத்துக் கொள்ளட்டும். இவ்வாறு நாம் ஏன் செய்யக் கூடாது? நீங்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினை இது.

**பண்டிட் மாளவியா** (உத்திரப் பிரதேசம்) : இறுதி முடிவுக்காக காத்திருப்பதைக் காட்டிலும் இப்போது இவ்வாறு செய்வது உதவியாக இருக்கும் என்ற ஆலோசனையை மாண்புமிகு சட்ட அமைச்சருக்குக் கூறலாமா?

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** அரசாங்கத்தின் நோக்கங்களைச் சந்தேகிப்பதற்கான காரணங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாங்கள் கூறியவற்றை நிறைவேற்றுவோம் என்று நான் கூறியதிலிருந்து எவ்வித மாறுபாடும் இல்லை.

**பண்டிட் மாளவியா :** நான் கூறியதில் அவர் மீது சந்தேகப்படும் விஷயம் எதுவும் இருப்பதாக அவர் (சட்ட அமைச்சர்) நினைத்தால் அது எனக்கு ஆச்சரியமளிக்கிறது. இத்தருணத்தில் அவர் இதைச் செய்தால் உதவியாக இருக்காதா என்றுதான் கேட்டேன். ஏனெனில், நாம் பரிசீலனை செய்வது அதுவாக இருப்பின், எங்களில் சிலருக்கு அது சிறிது வேறுபட்டதாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** அவ்வாறுதான் இருக்குமென்று நீங்கள் கருதலாம்.

**பண்டிட் மாளவியா :** நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் பணியில் இருக்கும் போது, காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நலமாக இருக்காதா என்று சாதாரணமான முறையில்தான் கேட்டேன்.

**திரு. துணைத் தலைவர் :** அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் தெளிவாகக் கூறியுள்ளார். என்னுடைய ஒரே பிரச்சினை இதுதான் - அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்பதல்ல - கூறு 2ஐ நிறைவேற்றிய பின்னர், கூறு 55ஐ விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் போது, கூறு 2ஐ அக்கால

கட்டத்தில் திருத்த முடியுமா என்பது நிருவாக அடிப்படையில் எனக்குச் சந்தேகமாகவே உள்ளது.

***மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :*** கூறு 2யை விவாதிக்கின்ற போது, நான் கருத்துக் கூற விரும்பவில்லை; கூறு 2க்கு சில தொடர் திருத்தங்களை கொண்டு வருவதற்குத் தேவையான உரிமையை நான் எடுத்துக் கொள்வேன்.

***சில உறுப்பினர்கள் :*** இல்லை; இல்லை, அது எப்படி முடியும்?

***பண்டிட் மாளவியா :*** அது சர்வாதிகாரப் போக்கு; நாடாளு மன்ற முறையல்ல!

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** நாடாளுமன்ற முறை மீறுவதாக இதில் எதுவும் இல்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் பெரிதும் நியாயமாகவே செயல்பட்டு வருகிறார். தம்முடைய நியாய உணர்வை இழந்து விடுவது அல்லது ஒருவர் மீது ஒருவர் குற்றச் சாட்டுகளை அடுக்குவது நல்லது அல்ல.இங்கு நிலவ வேண்டிய அமைதியான சூழ்நிலைக்கு அது துணைபுரியாது. சட்ட அமைச்சர் கூறுவதை நான் புரிந்து கொள்ளுகின்றேன். அவர் எதையும் மறைத்திடுவதில்லை. கூறு 55க்கு ஒரு திருத்தம் கொண்டுவர விரும்பு கிறார். அது சிறிது காலம் கடந்ததாகும் என்று எனக்குள்ளேயே எண்ணியது உண்டு. கூறு 2 பற்றி மாற்று வழி ஒன்றையும் கூறியுள் ளார். மேற்கொண்டு திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி அவர் கருத்து கூறவில்லை. அப்போதும்கூட எனக்கு ஒரு சிரமம் உண்டு. இக்கூறு 2 விவாகம் விவாகரத்து சம்பந்தப்பட்டதாகவே இருக்கும் என்ற பின்னணியில் விவாதத்தை முடித்துக் கொள்வேன். அவை முடிவுக்கு இப்போது விடமாட்டேன். அத்தியாயம் முடிவுற்ற பின்னர், விவாதம் முழுவதையும் முடித்துவிடுவேன். இப்போது கூறப்பட்டதை உறுப்பினர்கள் மனதில் கொண்டு விவாதத்தை இன்று முடித்திடத் தயாராக இருக்க வேண்டும்.

***சர்தார் பி.எஸ். மான் :*** இதர விஷயங்கள் பற்றி அவர் விளக்கிட வேண்டியதில்லை.

***திருமதி துர்க்காபாய் :*** இப்போது ஓர் உறுப்பினர் சில மாகாண சட்டமன்றங்கள் ஏகதார முறை சட்டத்தை நிறைவேற்றியுள்ளன

என்று குறிப்பிட்டார். சென்னை, பம்பாய் மற்றும் பரோடா ஆகிய மூன்று மாநிலங்கள்தான் அத்தகைய சட்டங்களை நிறைவேற்றியுள்ளன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லா மாநில சட்டமன்றங்களும் சட்டங்களை நிறைவேற்றாததாலும், உயர்நீதி மன்றங்கள் பல்வேறு விதமான தீர்ப்புகளை வழங்கியுள்ளதாலும் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே மாநிலங்கள் விரும்புகின்றனவோ அல்லது விரும்பவில்லையோ, அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துகின்ற ஒருதார மணம் மற்றும் விவாகரத்து பற்றிய மத்திய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவது மிக மிக அவசியமாகிறது. ஆகையால், உறுப்பினர்கள் அனைவரும் விவாதம் நடைபெறுவதற்கு ஒத்துழைத்து, கூறு 55 வரை மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்போது விவாதத்திற்கான வாய்ப்பு மிகவும் குறைந்துள்ளதால், எவ்வளவு விரைவில் இதை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்ற வேண்டும். தசரா விடுமுறையில் கூட அமர்ந்து இதை நிறைவேற்றிட வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஜவஹர்லால் நேரு :** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, வரும் சனிக்கிழமை கூட கூட்டத்தை நடத்தலாம் என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவ்வாறு எப்போதும் செய்யலாம். ஆனால், இதை வெகுவிரைவில் நாம் நிறைவேற்ற வேண்டும்; அக்டோபர் 6-ஆம் நாளுக்கு மேல் போக வேண்டாம்; முடிந்தவரை அதனைத் தவிர்ப்போம்.

**பண்டிட் மாளவியா :** அக்டோபர் 6-ஆம் நாளுக்கு மேல் நீடித்தால், தசரா விடுமுறையில் வேண்டாம். அதற்குப் பின்னர் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதை ஏற்றுக் கொள்ளலாம். பொது விடுமுறை நாட்களில் கூட வேண்டாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** உண்மையைச் சொன்னால், இது எனக்கு முற்றிலும் புரியவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** கூறு 2பற்றி விவாதிக்கும் போது, அதற்குப் பின்வரும் கூறுகளின் சிறப்புகள் பற்றி குறிப் பிட்டுக் கூற வேண்டாமென்று நினைக்கிறேன். இங்குமங்கும் சில மேற்கோள்களைக் காட்டுவது போதுமானதாகும். இதர கூறுகள் பொருந்துவது பற்றி சில வகையில் குறிப்பிட்டுக் கூறினாலும் அவை எவ்வாறு இருக்க வேண்டும் அல்லது இருக்கக் கூடாது அல்லது எவ்வாறு திருத்தப்பட வேண்டும் அல்லது திருத்தப்படக் கூடாது என்பன போன்றவற்றை இதர கூறுகள் பற்றி விவாதிக்கும் போது மேற் கொள்ளலாம் என்பதை தற்போது பேசிக் கொண்டு இருக்கும் உறுப்பினர் மற்றும் இதர உறுப்பினர்களின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. சர்வாத்தே (மத்தியப் பிரதேசம்) :** இக்கூறை முடிவாக நிறைவேற்றுவதைத் தள்ளிப் போடும் உத்தேசம் இருந்தால் இக்கூறு பற்றிய விவாதத்தை பின் ஒரு தேதிக்கு நிறுத்தி வைப்பது உகந்தது அல்லவா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இக்கூறு பற்றி விவாதிக்க போதுமான நேரத்தை ஏற்கனவே செலவழித்து விட்டோம். விவாகம் மற்றும் விவாகரத்து பற்றித்தான் இந்த கூறு இருக்கும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியதுதான் அரசாங்கத்தின் கருத்து என்று உறுப் பினர்கள் நிச்சயமாக நம்பலாம். அதன் அடிப்படை யில், சீக்கியர்கள் அல்லது பௌத்தர்கள் அல்லது இந்துக்கள் அல்லது சில பிராந்தியங்கள் போன்றவற்றிற்கு இது பொருந்துமா, இல்லையா என்பதை உறுப்பினர்கள் கூறலாம். இது பற்றித்தான் விவாதம் இருக்கும்; வேறு பொருள் பற்றி அல்ல.

**பண்டிட் மாளவியா:** ஒரு நடைமுறை பற்றி பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு சட்ட அமைச்சரை வேண்டிக் கொள்ள லாமா? கூறு 2 பற்றிய விவாதத்தை இன்று முடித்துக் கொள்ளலாம். விவாதத்திற்குப் பின்னர், அவையின் முடிவிற்கு விடாமல் விட்டு விடலாம். மேற்கொண்டும் விவாதம் எதுவும் இருக்காது. நான் ஓர் ஆக்கபூர்வமான ஆலோசனையைத்தான் கூறுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஏற்கனவே நான் இதைச் சொல்லி இருக்கிறேன். விவாதத்தை முடித்துவிட்டு, ஒரு மணிக்கு சட்ட அமைச்சரை அழைப்பேன்.

**திரு. சியாம் நந்தன் சகாயா (பீகார்) :** விவாகம் மற்றும் விவாகரத்துக்குத்தான் கூறு 2 பொருந்தும் என்றால், இதர கூறுகள் என்ன பொருள் பற்றி விளக்கும்? சட்டத் தொகுப்பின் இதர கூறுகள் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? பொருந்துறும் கூறு என்னவாயிற்று?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதர கூறுகள் அனைத்தும் தகுந்தபடி திருத்தப்படும் அவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் போது, கருத்துக்களை கூறலாம்.

**திரு. சியாம் நந்தன் சகாயா :** ஒரு மசோதாவில் இரண்டு பொருந்துறு கூறுகள் இருக்கலாமா?

**திரு. துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் இங்கு இல்லை அல்லது பேசுவதை முறையாகக் கேட்கவில்லை என்று நினைக் கிறேன்.....

**திரு. சர்வாத்தே:** ஓர் அம்சத்தை விளக்குமாறு வேண்டு கிறேன். சில திருத்தங்களைத் தந்துள்ளோம். கூறு 2க்கு உள்ள வாய்ப்பு வசதியைச் சார்ந்துதான் திருத்தங்கள் இருக்கும். இத்திருத் தங்களை முன்மொழிய அல்லது அவற்றை பின்னர் எடுத்துக்கொள்ள அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எல்லாத் திருத்தங்களும் இப்போது விவாதிக்கப்படுகின்றன. வேறு எந்த திருத்தங்களையும் நான் அனுமதிக்கப் போவதில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் முன்மொழிந்த திருத்தங்கள் உட்பட அத்திருத்தங்களும் விதியும் விவாதிக்கப்பட்டுள்ளன. இப்போது ஒரு கட்டத்தை அடைந்துள் ளோம். விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்ட இதர அனைத்து விதிகளின் தொடராக கூறு 2யைப் பார்ப் போம். தற்செயலாக உள்ள திருத்தங்கள், துணை, பின்விளைவுத் திருத்தங்கள் எதுவும் இருப்பின், அவற்றைப் பற்றி மட் டும் விவாதம் இருக்க வேண்டும். இன்று இதை முடித்து விட நாம் முயற்சிக்க வேண்டும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** இக்கருத்து பற்றி என்னுடைய சந்தேகம் நீக்கப்பட வேண்டும். விவாகம் மற்றும் விவாகரத்து பற்றிய விஷயங்களுக்கு மட்டும் கூறு 2 பொருந்தும் என்று தெரிகிறது.

சொத்துரிமை பற்றிய அத்தியாயம் விவாதிக்கப்படும்போது, அதில் விலக்கு வாசகம் இருக்குமா? மற்றவற்றுக்கு அது பொருந்தாதா? எல்லாருக்கும் அது பொருந்தாது; அதன் அதிகாரத்திற்குள் வர விரும்புபவர்களுக்கு மட்டும் பொருந்தும். அப்பகுதியில் அத்தகைய விலக்கு வாசகம் ஒன்று இருக்குமா?

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** தற்போதைக்கு விவாகம் மற்றும் விவாகரத்துக்கு மட்டும் பொருந்தும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியுள்ளார். இதர பொதுவான கூறுகள் அனைத்தும் தகுந்தவாறு மாற்றப்படும். வேறு ஒரு சட்ட அமைச்சர் அல்லது இந்த சட்ட அமைச்சர் வேறு எதை அறிமுகப்படுத்துவார் என்பது யூகத்தின் அடிப்படையிலான கேள்வி. என்ன நடைபெறும் என்று முன்கூட்டியே இப்போது கூற இயலாது.

***திரு. ஆர்.கே. சௌதுரி :*** இக்கூறு நிறைவேற்றப்படுவதை நீங்கள் எவ்வாறு அனுமதிக்க முடியும்? அனேகமாக தலைக்கு மேல் கத்தி தொங்குவது போன்றுதான் இருக்கும்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** இதேபோன்ற மற்றொரு கூறு தகுந்த திருத்தங்களுடன் அறிமுகப்படுத்தப்படும். அதுகுறித்து உறுப்பினர் தீவிரமாகவே தொடர்ந்து வாதிடலாம். இது குறித்து மேலும் நேரத்தை நாம் செலவழிக்க வேண்டாம்.

***திரு. ஜே.ஆர்.கபூர்:*** எனவே, ஒரு மணிக்கு விவாதத்தை முடித்துவிட நீங்கள் விரும்புவதால், பொது·அம்சங்கள் பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக, திருத்தங்கள் மீது விவாதத்தை ஆரம்பிக்கலாம். மற்றபடி கூறு 2 பொறுத்தவரை முக்கியமாக உள்ள குறிப்பிட்ட திருத்தங்களை விவாதிக்க நமக்கு நேரம் இருக்காது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** கூறு பற்றியும் குறிப்பிட்ட திருத்தங்கள் பற்றியும் விவாதம் இருக்கும். ஓர் உறுப்பினர் திருத்தம் ஒன்றை கொண்டு வந்துள்ளார் என்பதற்காக அவர் தொடர்ந்து பேசிக்கொண்டே போவதை நான் அனுமதிக்கப் போவதில்லை.

***திரு. பட் (பம்பாய்) :*** ஐயா, இன்று இங்கு முடிவு செய்யப்பட்டதும், அவைக்கு நீங்கள் கூறியதும் அவையின் வாக்களிப்புக்கு இன்று கூறு 2 விடப் போவதில்லை என்பதுதான். எனவே, இன்று

மாண்புமிகு சட்ட அமைச்சர் எடுத்துள்ள முடிவைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, நாங்கள் உத்தேசித்துள்ள இதர திருத்தங்களை முன்மொழிய எவ்வித வாய்ப்பும் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன். விவாகம் மற்றும் விவாகரத்து சட்டத்தை தனியாக உருவாக்க அவர் விரும்புகிறார். இந்நிலையில், நான் ஏற்கனவே கூறியது போல் இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்துவதாக இருக்க வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டுவருவது முறையாக இருக்குமா? அதை முன்மொழிய அனுமதி அளிப்பீர்களா?

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** இது தொடர்பாக ஏற்கனவே ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள்.

**திரு. பட் :** சாரதா சட்டம் தொடர்பாக முன்மொழியப்பட்ட திருத்தம் போன்றது அல்ல நான் கொண்டு வந்துள்ள திருத்தம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்துவதாக அது இருக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் விரும்புகிறாரா என்று கேட்பதால் பயன் எதுவும் இல்லை. திருத்தங்கள் ஏற்கனவே அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது அவையில் வாக்கெடுப்பு நடைபெறும். சட்ட அமைச்சருக்கு எதிராக அவை வாக்களித்தால், அதை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார். எனவே, சமுதாயம் அல்லது பிராந்திய வரையறை பற்றி மேலும் திருத்தங்களைக் கொண்டு வரும் கேள்விக்கே இடமில்லை. இவையாவும் அவை முன் உள்ளன. அவற்றைப் பற்றி இன்று வாக்கெடுப்பு நடத்தப் போவதில்லை. பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும். இது சம்பந்தப் பட்ட வரை அவைதான் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியும்.

**பண்டிட் மைத்ரா** (மேற்கு வங்காளம்): தாம் ஏற்றுக் கொள்ள வில்லையென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறுகிறார். அவர் கூறுகிறார்: "நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள மாட்டேன்."

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:** நான் இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று மகிழ்ச்சியோடு கூறினேன்.

**திரு. ராதாலால் வியாஸ்** (மத்திய பாரத்): ஓர் ஒழுங்குப் பிரச்சினை. கூறு 2 மீதான விவாதம் இன்று முடிவடையுமா? மேலும்,

சட்ட அமைச்சர் பதிலளிக்கிறாரா? அடுத்து வரும் நாட்களில் கூறு 2க்குத் திருத்தம் கொண்டு வர அனுமதிக்கப்படுமா? என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தேவையில்லாமல் உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புகின்றனர். ஒரு திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டுமென்பதல்ல. பின் விளைவுத் திருத்தங்கள் முறைப்படியாக இருந்தால், அவற்றை முன் மொழியலாம். அவை அனுமதிக்கச் செய்யும். இரண்டாவதாக இன்று வைக்கப்பட்ட கூறு 2 மீதான திருத்தங்களும் இன்று முடிவடையும். நாம் இன்று நிறைவேற்ற உள்ள கூறு பற்றி பின்விளைவுறு புதிய திருத்தங்கள் வந்தால், அத்திருத்தங்கள் அவையில் வைக்கப்படும்.

அத்தகைய விளைவுறுத் திருத்தங்கள் சட்ட அமைச்சர் அல்லது வேறு எந்த உறுப்பினரும் கொண்டு வரலாம். அவற்றின் மீது விவாதம் நடைபெறும். விளைவுறுத் திருத்தங்களுடன் மூல கூறு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

**திரு. ராமலிங்கம் செட்டியார்:** விளைவுத் திருத்தம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** விவாகரத்து மற்றும் விவாகம் பற்றி மட்டும் விவாதிப்பது நியாயமானதா என்று கேட்கின்றேன். கணவன், மனைவியின் உரிமைகளையும் கடமைகளையும், அதன் விளைவுகளையும் தெரிந்து கொள்ளாமலும், அவர்களில் ஒருவர் எவ்வாறு வெற்றி பெறுவர் என்பதையும் அறிந்து கொள்ளாமலும், விவாகம் மற்றும் விவாகரத்து பற்றி மட்டும் விவாதிக்கலாம் என்ற முறை உலகில் வேறு எந்த சட்ட மன்றத்திலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளதா? இது மிகவும் இரண்டகமாக இருக்கும். உறவு முறை பற்றிய உண்மையான பொருத்த சூழல் மறைந்து போகும்.

**பண்டிட் மாளவியா:** ஐயா, பின் விளைவுறுத் திருத்தங்களை மட்டும்தான் முன்மொழிய அனுமதிக்கப்படும் என்று இப்போதுதான் அறிவித்தீர்கள். திருத்தங்கள் மீது விவாதித்து வாக்கெடுப்பு நடத்தி, அவை 'ஏற்றுக்கொள்ளப்படுவதாகவோ அல்லது நிராகரிக்கப்

படுவதாகவோ உள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டாலொழிய, பின்விளைவுகள் பற்றி எவ்வாறு தெரிந்துகொள்ள முடியும். எனவே, இதுபற்றி விளக்கம் தேவை. எந்தக் குறிப்பிட்ட திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டது என்பதை ஒருவர் அறிந்து கொண்டாலன்றி, பின்விளைவு மாற்றம் என்ற கேள்விக்கு இடமில்லை. நிராகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பிரேரணையின் குறிப்பினை ஒருவர் அறிந்துள்ளபோதுதான் விளைவுறுத் திருத்தத்தைக் கொண்டுவரும் கேள்வி எழும்.

**திருமதி ரேணுகா ரே:** பின்விளைவு என்பது என்ன அல்லது பின் விளைவு அல்லாதது எது என்பது பற்றிய விவாதத்தை பின்னர் எடுத்துக் கொள்ள முடியாதா? இதற்கு ஆறு நாட்கள் ஆகும்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** நான் கூறியுள்ளதுபடி, மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறும் நிபந்தனைக்குட்பட்டு - எனக்கு சில தகவல்கள் தேவை - எந்த குறிப்பிட சமுதாயமும் விலக்கப்படுகிறதா, குறிப்பிட்ட எந்த பிராந்தியங்களிலும் நீக்கப்படுகிறதா - ஏக காலத்தில் அவை முழுமையாகவோ அல்லது பகுதிகளாகவோ பொருந்தப்பட உள்ளனவா போன்றவை பற்றி முன் கூட்டியே உறுப்பினர்கள் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றனர். பல்வேறு திருத்தங்களில் அடங்கியுள்ள விஷயங்களாகும் இவை. விவாகம் மற்றும் விவாகரத்து ஆகியவற்றிற்கு மட்டுமல்ல, இதர விஷயங்களுக்கும் இவை பொருந்தும். விவாகம் மற்றும் விவாகரத்து விஷயத்திற்குப் பொருந்துவது போன்று, பொருந்துவதாக இல்லாத விநோதமானது எதுவும் இதில் இல்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியது போன்று இதர விஷயங்கள் குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. 'இந்து சட்டத் தொகுப்பு' என்ற வார்த்தைகளுக்கு மட்டும் இது ஒரு திருத்தம்......

***மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்:*** ''ஒரு சட்டம்'' என்று கூறுவேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** 'சட்டத் தொகுப்பு' என்ற வார்த்தைக்குப் பதிலாக ''திருமணம் மற்றும் விவாகரத்து'' என்று கூறலாம். இதை அவையின் வாக்கெடுப்பிற்கு விடலாம் என நினைக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் தம்முடைய உரையை முடித்தவுடன், அவையின் வாக்கெடுப்பிற்கு உடனடியாகவே இதை விடுவேன்.

**திரு. ராமலிங்கம் செட்டியார் :** எழுந்தார் -

**மாண்புமிகு துணை சபாநாயகர்: :** உறுப்பினருக்கு ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களில் மிக முற்போக்குச் சட்டங்கள் இருப்பதாக எண்ணுகின்ற உறுப்பினர்கள், ஒவ்வொரு கூறாக விவாதம் நடைபெறும்போது, சில திருத்தங்கள் அவையில் முன் வைக்கலாம். மாநிலங்களிலுள்ள சட்டங்களுக்கேற்ப இதையும் அமைக்க வாய்ப்புண்டு. மூன்று மாநிலங்களில் அத்தகைய சிறு சிறு சட்டங்கள் இருப்பதாக உறுப்பினர் கூறினார். ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்பதற்காகவும், குறிப்பாக இது பொதுப் பட்டியல் விஷயமாக இருப்பதாலும் இருக்க வேண்டும். சமாளிக்க முடியாத சிரமமாகவும் இது இல்லை.

**திரு. ராமலிங்கம் செட்டியார் :** சமாளிக்க முடியாத சிரமம் தான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சட்ட அமைச்சர் அவ்வாறு விட்டுக் கொடுக்கவில்லை.

**திரு. ராமலிங்கம் செட்டியார் :** ஒரு திருத்தத்தை முன்மொழிய நான் அனுமதிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதை முன்மொழிய அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. மேலும் எவ்வித திருத்தங்களும் முன் மொழிய நான் அனுமதிக்கப் போவதில்லை. இதற்கு முன்னர் அவர் ஏன் இந்த குறிப்பிட்ட திருத்தத்தைக் கொண்டு வரவில்லை? நேரம் வரும் போது இத்திருத்தம் பற்றி முடிவு கூறுவேன். கூறுகள், சொத்துரிமை முதலியன அவை முன் இருந்தன. அவை குறித்து தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விவாதித்துள்ளோம். மாநில சட்டப் பேரவைகள் நிறைவேற்றிய சட்டங்களுக்கு இணங்க இந்த மசோதாவை அவர் கொண்டுவரும் வரை காத்திருக்க முடியாது. அவர் கோருவது நியாயமானது அல்ல. கூறு 2 பொறுத்தவரை, அது எப்பாகத்திற்கும் பொருந்தும். இதர பாகங்களைப் பொறுத்தவரை, அவற்றைப் பற்றித்தான் நாம் பரிசீலனை செய்வோம். இதர பாகங்களைப் பரிசீலிக்க மாட்டோம். விளக்கம் தேவை என்பதற்காக, அவையில் வைக்க முடியாத சில கற்பனைகள் மீது முடிவின்றி வந்துப் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. விவாதத்தை குறைக்க விரும்புகிறோம். மாண்புமிகு அமைச்சர் பின் விளைவு திருத்தம்

இச்சட்டத் தொகுப்பின் தலைப்பு பற்றியதாக மட்டும் இருக்கு மென்று விளக்கியுள்ளார். கூறு 55 பற்றி விவாதிக்கும் போது, அதை அவைக்கு விட்டுவிடுவேன். மூன்றாவது வாசிப்பில் அது நிறை வேற்றப்பட்டால், அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஒரே நேரத் தில் விவாதத்தை அனுமதிப்பேன்; பின்னர் மாண்புமிகு சட்ட அமைச்சர் பதிலளிப்பார். பிறகு அனைத்துத் திருத்தங்களையும் வாக்கெடுப்பிற்கு விடுவேன். இது எல்லோருக்குமே பொருந்தும்; மேற்கொண்டும் நடவடிக்கை ஏதேனும் தேவையா என்பது குறித்து சிரமங்கள் எதுவும் இருக்காது.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** ஒரு மணிக்குத்தான் என்னை அழைப்பீர்கள் என்று இப்போது தான் கேள்விப்பட்டேன். ஆனால், ஒரு மணிக்கு அவையில் வேறு பணி இருக்கிறது என்று நினைத்தேன். நான் ஆரம்பிப்பதற்கு ஒரு நிமிட அவகாசம் தேவை.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** விவாகம் மற்றும் விவாகரத்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அது ஒரு விஷயம். பின்னர், விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து விவாதிக்க நீங்கள் அனுமதியளிக்க விரும்புகிறீர்கள். விவாகத்தின் விளைவு கள் என்னவாக இருக்கும். விவாகத்தால் பிறக்கும் குழந்தைகள் ஏதாவது ஒரு வழியில் சொத்துரிமை பெறுமா என்பது பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமலே இது பற்றி விவாதிக்க விரும்புகிறீர்கள். அது பெரிய பிரதிகூலத்தை ஏற்படுத்தும். நான் ஒரு திருமணம் செய்து கொள்ளுகிறேன். ஆனால் திருமணத்தின் பின் விளைவுகள் என்ன என்பதே எனக்குத் தெரியவில்லை......

**திரு. சியாம்நந்தன் சகாயா:** அதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

**திரு. தேஷ்பந்து குப்தா :** இந்த வயதிலும் உறுப்பினருக்கு திருமணத்தின் விளைவுகள் என்ன என்று தெரியாமல் இருக்கிறது என நாங்கள் நம்ப வேண்டுமா?

**திரு. ஆர்.கே. சௌதுரி :** இதை நான் ஆட்சேபிக்கிறேன். நான் என்ன சுட்டிக் காட்டிக் கொண்டு இருந்தேன் என்றால் ........

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** முக்கியமான எல்லா விஷயங் களிலும் ஒரு நகைச் சுவையை சேர்த்திடும் திறமை உறுப்பினருக்கு இருக்கிறது. அந்த வகையில் பதட்டத்தைத் தணித்துள்ளார். திருமண

உறவால் அல்லது வேறு வகையின் காரணமாக அவர் செய்கிற அனைத்துக் காரியங்களுக்கும் அவர்தான் நேரடியாகப் பொறுப் பாவார் என்பதை அவர் நன்கறிவார். இப்போது சர்தார் மான்.

[1]**சர்தார் பி.எஸ். மான் :** துணைத் தலைவர் அவர்களே, நான் இளைய உறுப்பினன். இக்குறுக்கீட்டிற்காக என் மீது நீங்கள் அனுதாபம் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த மசோதா ஏற்கப்பட வேண்டுமா, இல்லையா என்பது குறித்த திருத்தம் பற்றித்தான் உறுப்பினர் பேச வேண்டும். ஏற்கனவே அவர் போதுமான அளவு பேசியுள்ளார்.

**சர்தார் பி.எஸ். மான்:** நான் இளைய உறுப்பினன் என்ற முறையில் எனக்குச் சிறிது சலுகை அளிக்க வேண்டும். அரசாங்கத்தின் நோக்கம் என்னதான் என்பது பற்றி என் மனதில் ஐயப்பாடு உள்ளது. சில திருத்தங்களைக் கொண்டு வருவதில் மனம் விட்டுப் பேசுவ தில்லை. சில மனத்தயக்க அச்சங்கள் இருந்து வருகின்றன. நேர மில்லாத காரணத்தால் இரண்டு பாகங்களைத் தவிர மசோதாவின் இதர பாகங்களை எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்று பிரதமர் விளக்கம் தந்துள்ளார். தற்செயலாக, இதை நாளைக்கு நிறைவேற் றிடும் மனதுடன் அவை இருக்குமானால், அதே நிலைதான் நீடிக்கும்; ஏனெனில் மசோதாவின் இதர பகுதிகளை விவாதிக்க நேரமிருக் கும். இதே கூட்டத் தொடரில் மசோதாவின் இதர பகுதிகளை விட்டு விட அல்லது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இப்போதைய அரசாங்கம் உத்தேசித்து இருக்கிறதா? இதர பகுதிகளை இப்போது அல்லது இதற்குப் பிறகு விட்டுவிடுகிறதா? அக்டோபர் 6-ஆம் நாள் வரை அல்லது இக்கூட்டத் தொடரில் இது எடுத்துக் கொள்ளப் படமாட்டாது அல்லது கால அவகாசம் இல்லாததால் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்னும் வாதம் எனக்கு திருப்தியளிக்க வில்லை. இத்தகைய வாதம் பயனளிக்காது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்போது நான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இம்மசோதாவின் ஆதரவாளரான சட்ட அமைச் சரின் அறிக்கையை அரசாங்கத்தின் அபிப்பராயமாக ஏற்றுக் கொள் கிறேன்.

---

1. அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 19, பக்கங்கள் 2861-72.

அதன் அடிப்படையில் அரசாங்கம் இம்மசோதாவிலுள்ள விவாகம் மற்றும் விவாகரத்து பற்றித் தான் நடவடிக்கை மேற்கொள்ளும். உறுப்பினர்கள் அதுபற்றி விவாதிக்கலாம். இவ்வாறு தான் நிலைமையை நான் புரிந்து கொண்டு இருக்கிறேன். நான் கூறுவதில் தவறு எதுவும் இருந்தால், என்னைத் திருத்தலாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** பிரதம அமைச்சரின் வார்த்தைகளுக்கு நான் முக்கியத்துவம் அளித்துள்ளேன். இம்மசோதாவின் வரம்பிலிருந்து சீக்கியர்கள் விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென்ற என்றுடைய திருத்தம் பற்றித்தான் பேசுவேன்.

சில தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவதாக சீக்கியர்கள் இந்துக்கள் என்பது; இரண்டாவதாக, நீண்ட காலமாக அவர்கள் இந்து சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் இருந்து வந்துள்ளனர் என்பது. என்னுடைய வாதம் இதுதான்: சீக்கியர்கள் இந்துக்கள் அல்ல; அவர்கள் பெரிய அளவில் இந்து சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் இருந்தது இல்லை என்று நான் நிரூபித்துக் காட்டினால், இம்மசோதாவின் வரம்பிற்குள் சீக்கியர்கள் கொண்டு வரப் படக் கூடாது. நான் பேசும்போது பலர் பல்முறை குறுக்கிட்டனர். இச்சட்டத்தின் முக்கிய அம்சத்திலிருந்து எங்கள் சட்டம் எவ்வாறு வேறுபட்டது என்று கேட்டனர். அதுவே என்னுடைய சிரமமாகும். பஞ்சாபில் ஒரு சீக்கிய விவசாயியின் மனப்பாங்கு முஸ்லீம்களின் மனப்பாங்கிலிருந்து அறவே வேறுபட்டதாகும்; தற்போதைய சட்டத்தின் அமைப்பும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

**திரு. பாரதி :** திருமணத்தைப் பொறுத்தவரை?

**சர்தார் பி.எஸ். மான் : *''பஞ்சாபில் ஆதிவாசிகள் சட்டம்''*** என்னும் சர் சார்லஸ் ரோவின் நூலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன். தலைமை நீதிபதி சர் வில்லியம் கிளார்க் 55 பஞ்சாப் ரிக்கார்டு முழு பெஞ்ச் தீர்ப்பில் பாராட்டுடன் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

அவர் கூறுகிறார் :

''பஞ்சாப்பின் இந்து விவசாயி....''

இந்து விவசாயி ஒருவர் சீக்கிய விவசாயி பின்பற்றும் அதே சட்டத்தைப் பின்பற்றுகிறார்.

''..... பிரதிநிதித்துவம் அளிக்கப்படாததைத் தவிர சாதி பற்றி தெரியாது .....''

மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தடை செய்யப் பட்ட சில தீர்ப்புகள் இப்போது விவாக சட்டங்களில் அறிமுகப் படுத்தப்படுகின்றன. திருமணத்தைப் பொறுத்தவரை என்னுடைய சட்டம் வேறுபட்டது, இந்து சட்டத் தொகுப்பைக் காட்டிலும் தாராள மானது. 55 கூறுகள் மட்டும் முடிவு செய்யப்படும் என்ற உறுதி மொழிகள் அளித்த பின்னரும் கூட இது இந்து சட்டத் தொகுப்பா அல்லது வேறு பெயர் கொண்டதா என்பது பற்றி எனக்குத் தெரிய வில்லை என்பதுதான் உண்மை. இம்மசோதாவின் பெயர் அல்லது அதன் அதிகார வரம்பு பற்றி எனக்குத் தெரியாமல் இருக்கும்போது இம்மசோதா பற்றி நான் பேச வேண்டுமென்று அழைக்கிறீர்கள். இருப்பினும், இது ஒரு சிவில் சட்டத் தொகுப்பு அல்லது திருமணச் சட்டம் அல்லது அது போன்ற பெயர் இருக்குமென்று நான் யூகித்துக் கொள்கிறேன். ''இந்து'' என்ற பெயர் விட்டுவிடப்படும். அவர் கூறுகிறார்:

> ''தன்னுடைய பூர்வீக வாசம் தவிர, பஞ்சாப்பிலுள்ள இந்து விவசாயிக்கு சாதி பற்றி எதுவும் தெரியாது. அவன் பிராமணனை மதிக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. மகிழ்ச்சி யான அல்லது துயர நிகழ்ச்சிகளின்போது பிராமணனுக்கு உணவளிக்கிறான். ஆனால், தன்னுடைய அன்றாட வாழ்க்கை யில் அவரையோ அல்லது இந்து சட்டத்தையோ வழி காட்டியாக ஏற்க கனவிலும் கூட அவன் எண்ணுவதில்லை. தர்மசாஸ்திரத்தைப் பற்றி எதுவும் அவனுக்குத் தெரியாது; அப்படி அவனுக்குத் தெரிந்திருந்தால், ஸ்பெயின் நாட்டு உழவன் பைபிள் பற்றி தெரிந்துள்ளது மாதிரிதான் இருக்கும். அதன் பொருளோ அல்லது கொள்கையோ தெரியாது. பிராமணன் அவனுக்குப் போதிப்பதுமில்லை..... இந்து சட்டத்தை என்றும் பின்பற்றியதில்லை. அதை கேள்விப் பட்டதும் கூட இல்லை. இச்சட்டம் இந்து பூர்வீகவாதி களுக்குப் பொருந்தாது. சமுதாயத்தின் ஒரு வேறுபட்ட பிரிவினருக்கு உருவாக்கப்பட்டது இச்சட்டம்.''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நூல்களிலிருந்து எடுக்கப் படும் பகுதிகள் கொஞ்சமாகத்தான் இருக்க வேண்டும்; புத்தகம், அத்தியாயம், வாசகம் முழுமையாக வாசிக்கப்படக் கூடாது.

**சர்தார் பி.எஸ். மான் :** மேற்கோள்காட்டுவதற்கானது நீண்டதாக உள்ளது. நான் அதைச் சுருக்கியுள்ளேன்.

ஆரம்பத்திலும் முடிவிலுமாக குறைத்து வாசித்தேன். எனது சிரமம் இதுதான். சட்டத்தைச் சுட்டிக் காட்ட நான் நிர்ப்பந்திக்கப் படும்போது....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எந்தப் புத்தகம்?

**சர்தார் பி.எஸ். மான்:** ருஸ்டம்ஜியின் பஞ்சாப்பின் மரபு வழி சட்டம் என்ற நூலிலிருந்து நான் மேற்கோள் காட்டினேன். '55 பஞ்சாப் ரிகார்டு 1903 4ல் பெஞ்ச்' தீர்ப்பு தொடர்புள்ளது நான் மேற்கோள் காட்டுவது.

நீண்டகாலமாக சீக்கியர்கள் இந்து சட்டத்தின் அதிகார வரம்பிற்குள் இருந்தார்கள் என்று கூறும் பிரிவி கவுன்சில் தீர்ப்பை டாக்டர் அம்பேத்கர் மேற்கோள் காட்டியுள்ளதால் நான் இச் சட்டத்தைக் குறிப்பிடுகிறேன். அத்தகைய தவறான கருத்தை நீக்கி, நாங்கள் இந்து சட்டத்தைப் பின்பற்றவில்லை என்பதை விளக்குவதற்கு எனக்கு முழு உரிமை உள்ளது. இப்போதைய நிலையில், நாங்கள் பல்வேறு வகை சட்டத் தொகுப்பின் அதிகார வரம்பிற்குள் இருக்கிறோம். அவர் அவருடைய முடிவையையே நம்புகிறார். நானும் என்னுடைய முடிவை சார்ந்து நிற்கின்றேன். அதனால் தான் அவையின் நேரத்தை கொஞ்சம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. நீங்கள் இதை விரைவில் முடித்துவிட ஆவலுடன் இருப்பதை நான் உணர்கிறேன். சீக்கியர்கள் இச்சட்ட வரைவிலிருந்து விதி விலக்களிக்கப்பட வேண்டுமென்ற திருத்தம் இன்று முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது சீக்கிய சமுதாயத்திற்கு வாழ்க்கைப் பிரச்சினையாக இருப்பதால் ஒரு வகையில் இதர விவரங்களைக் கூற அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விவாகம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்டதாகவே இம்மசோதா இருக்கும். எனவே, இது எவ்வாறு பிற்போக்கானது அல்லது அவருடைய சட்டத்திற்கு எவ்வாறு முரண்பட்டது, அதை ஏற்றுக்கொள்ளுவதால் என்ன தீங்கு ஏற்படும் என்பதை உறுப்பினர் கூற வேண்டும்.

**சர்தார் பி.எஸ். மான்:** விவாகம் மற்றும் விவாகரத்து சம்பந்தப் பட்ட சட்டங்களைத்தான் நான் மேற்கோள் காட்டிப் பேசுகிறேன். இப்போதைய சட்டத்தால், சில தடைசெய்யப்பட்ட சட்டங்களும் சேர்க்கப்பட முயற்சி செய்யப்படுகிறது. சீக்கியர் வரலாற்றில் இத்தகைய தடை செய்யப்பட்ட சட்டங்கள் பயன்படுத்தப்பட வில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது ஒரு விதிவிலக்காக இருக்கக்கூடாதா? தாய் மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட பழக்கம் தென் இந்தியாவில் இருப்பது போல், பொதுவாக தடை செய்யப்பட்டுள்ள திருமண உறவு முறையி லிருந்து மாறுபடுவதும் ஒரு விதிவிலக்காகும்.

**சர்தார் பி.எஸ். மான் :** அதேதான்; என்னுடைய உதவிக்கு நீங்கள் வந்துள்ளீர்கள். திருமண வழக்கங்கள் சம்பந்தப்பட்டவரை, பஞ்சாபின் அல்லது சீக்கியர்களின் பழக்க வழக்கங்களை அவர்கள் மதித்தால், எனக்கு எவ்வித கோபமும் இல்லை. நான் இருக்கையில் அமர்ந்து விடுவேன்.

**திரு. பாரதி :** பாகம் (5) ன் கூறு 7யை அவரின் கவனத்திற்குக் கொண்டு வரலாமா? ''அவர்களில் ஒவ்வொருவரையும் கட்டுப் படுத்தும் வழக்கம் அல்லது நடைமுறை இருவரிடையே புனிதமான திருமணத்தை அனுமதிக்கிறது'' என்று அதில் கூறப்பட்டுள்ளது. வட்டாரத்தில் இருப்பது வழக்கம். அதற்கு முழுமையான தாக்கம் உள்ளது. அதற்கு ஏற்கனவே வழிவகை செய்துள்ளோம். தென் இந்தியாவிற்கு மட்டுமல்ல. அதற்கு வழக்கம் அனுமதித்தால், ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**பண்டிட் தாகூர் தாஸ் பார்கவா:** திருமணத்திற்குத் தற்செய லாகத் தொடர்புடைய அனைத்தும் வழக்க நடைமுறைக்குட்பட்ட தாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதைத்தான் அவர் குறிப்பிடுகிறார்.

**திரு. பாரதி :** திருமண உறவு தடைகள் பற்றி அவர் கூறுகிறார். இவ்விதி விலக்குகளுக்கான ஷரத்துக்கள் ஏற்கனவே உள்ளன என்று நான் குறிப்பிட்டுள்ளேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** சகோதரனை ஒரு சகோதரி திருமணம் செய்து கொள்ளலாமென்று எந்த சட்டமும் கூறவில்லை. நீதிமன்றங் களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருமண உறவுத் தடைகள் உள்ளன. கூறு 5 அல்லது கூறு 7 அல்லது இதர கூறுகளின் கீழ் வரக் கூடிய வேறு திருமண உறவு முறைகள் அல்லது வழக்குகள் இருந்தால், தகுந்த திருத்தங்களைக் கொண்டு வரலாம். அவற்றை விவாதிக்கலாம்.

***சர்தார் பி.எஸ். மான் :*** முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர் களின் இச்சட்டம் முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதால் அவர் களுக்கு விதி விலக்களிக்கப்பட்டுள்ளது. எனவே, நாங்கள் எண்ணிக் கையில் குறைவாக இருந்தாலும், அம்மாதிரி விலக்கு.......

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** உறுப்பினர் மீண்டும் மீண்டும் அதே வாதத்தை முன் வைக்க வேண்டாம். முஸ்லீம்கள் , சீக்கியர்கள் போல், விதி விலக்களிக்க வேண்டுமென்று ஏற்கனவே அவர் கூறியிருக்கிறார்.

***சர்தார் பி.எஸ். மான்:*** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மத அமைப்புகள் சம்பந்தப்பட்ட இனச்சட்டம் இந்த அவையில் விவாதிக்கப்படும் போது, அந்த சமுதாய உறுப்பினர் களுடன் கலந் தாலோசிக்க வேண்டும் என்றும் அவர்களின் கருத்து மதிக்கப்பட வேண்டுமென்றும் மரபு உள்ளது. எனவே, அந்த மரபைப் பின்பற்ற வேண்டுகிறேன். எங்களுக்கும் அந்த மரபு பொருந் தாதா? அவ்வாறு பொருந்துவதாக இருந்தால், பிரச்சினை எதுவும் இருக்காது. நானும் இருக்கையில் அமருவேன். அவையிலுள்ள பெரும்பான்மையுடன் இந்த சட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால், ஒன்றை கூறுவதற்கு அனுமதியுங்கள் - இந்து பெரும்பான்மை யினர் - முதன் முறையாக இந்து, சீக்கியர் என்ற சமுதாயப் பெயர்கள் இவ்விவாதத்தில் பயன் படுத்தப்படுகின்றன. அது தான் இச்சட்டத் தின் சாபக்கேடாகும்.....

***டாக்டர் எம்.எம். தாஸ் (மேற்கு வங்காளம்):*** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, ஒரு தகவல் வேண்டும்.

***சர்தார் பி.எஸ். மான்:*** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இது ஓர் ஒழுங்குப் பிரச்சினையா? மற்றபடி, நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.

**டாக்டர் எம்.எம். தாஸ் :** பஞ்சாப்பிலுள்ள சீக்கியர்கள் சார்பாக உறுப்பினர் பேசுகிறாரா? அல்லது பஞ்சாப்பிலுள்ள ஒவ்வொருவரின் சார்பாக பேசுகிறாரா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர் விட்டுக் கொடுப் பதாக இல்லை. மேலும் குறுக்கீடுகளை நான் அனுமதிக்க மாட்டேன்.

**சர்தார் பி.எஸ். மான் :** சட்டத்தைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளாதவர்கள், என்னுடைய கருத்தைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து குறுக்கீடு செய்கின்றனர். ஒரு நல்ல மரபு இருந்தது என்று நான் சொல்லிக் கொண்டிருந்தபோது.....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எந்த ஒரு சமுதாயத்தையும் எவ்வகை யான இனச் சட்டமும் பாதிக்கக் கூடாது என்ற கருத்தை உறுப்பினர் ஏற்கனவே வலியுறுத்தி இருக்கிறார். அக்கருத்தை அவை பரிசீலனை செய்யும். உறுப்பினர் அவருடைய அடுத்த விஷயம் பற்றிப் பேசலாம்.

**சர்தார் பி.எஸ். மான்:** தற்போதுள்ள திருமணச் சட்டங்கள் மிகவும் கண்டிப்பானவைகளாக உள்ளன. சிறப்புமிக்க நீதிபதி யாகப் பணிபுரிந்த என்னுடைய சகாவும், உயர்ந்த நிபுணத்துவமுள்ள வருமான டாக்டர் தேக்சந்த் வார்த்தைகளிலிருந்து மேற்கோள் காட்ட அனுமதி கோருகிறேன். அவருக்கே உரித்தான தெளிவான பாணியில் இருக்கருத்தினை விளக்கியுள்ளார். மேலும் கூறுவேன், சீக்கியர் அல்லாத ஒருவரை நான் மேற்கோள் காட்டுகிறேன். அவர் விவசாயி அல்ல, விவசாயத்தைச் சார்ந்தவருமல்ல. பஞ்சாபிலுள்ள சீக்கியர் சட்டங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றி நன்கறிந்தவர். சரி, அவர் கூறுவது இதுதான் :

> ''**ஜாட்டுகள்** குறிப்பாக சீக்கிய **ஜாட்டுகள்** திருமணம் சம்பந்தப்பட்டவரை மிகவும் தாராளமான கருத்துக்கள் உடையவர்கள். பிராமணர்கள் ஆதிக்கம் மிகுந்து இருந்த போதும் கூட, பின்னர் வந்த இந்து **ஸ்மிருதிகளில்** கூறப்பட்ட கடுமையான விதிகள், சாதிக்கு வெளியே திருமணத் தடைக் கட்டளைகள், திருமணம் நிகழ்ச்சிக்கு விரிவான சடங்குள் செய்தல் போன்றவற்றுக்கு கட்டுப்படுவதற்கு அதிக விருப் பத்தையும் தெரிவிக்கவில்லை. அவர்களிடையே பொதுவாக

விதவை மறுமணம் நீண்டகாலமாக இருந்திருக்கிறது. மிகக் குறைந்த சடங்குகள் உள்ள **சடார்-ஆண்டஜீ** அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட திருமண முறைகளில் ஒன்றாகும்.''

பொறுக்குக் குழுவில் உறுப்பினராகவும் உள்ள, கற்றறிந்த நீதிபதியின் கருத்து இது. இதே பொருள் குறித்து இவ்வகையிலான மாறுபாட்டுக் குறிப்பை அவர் அளித்துள்ள இந்த இந்து சட்ட தொகுப்பில் சேர்க்கப்பட விரும்பப்படாதவைகளாக உள்ள நிர்ண யிக்கப்பட்ட திருமண முறைகளை மட்டும் நீங்கள் ஒத்துக் கொள்ளு வதாக இருந்தால், பஞ்சாப்பில் சீக்கியர்களிடையே நிலவும் வழக் கங்கள் அடிப்படையிலான பல திருமண முறைகளை அதன் அதிகார வரம்பிலிருந்து எடுத்துவிடுவீர்கள். சடங்கு முறையில்லாத **கரேவா** திருமணம் இருக்கிறது. பஞ்சாப்பில் இத்திருமண முறை சாதாரண மாகவே பின்பற்றப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** என்ன திருமண முறை?

**சர்தார் பி.எஸ். மான்:** யாரையும் அழைக்காமலும் படித்த அல்லாத படிக்காத புரோகிதர் இல்லாமலும் எவ்வித சடங்குகளை அனுசரிக்காமலும், நெருப்பு அல்லது **கிரந்த சாகேப்பை** வலம் வராமலும், ஒரு பெண்ணும் ஆணும் ஓர் இடத்தில் அமர்ந்து அவர்கள் மீது சடாரைப் போர்த்துவதுதான் **கரேவா** திருமணம் என்பதாகும். **சடார்-அன்டஜீ** என்பதும் இதுதான்.

**திரு. அமலோக் சந்த் (உத்திரப் பிரதேசம்) :** இது ஒரு தார்மீகத் திருமணமா?

**சர்தார் பி.எஸ். மான் :** இல்லை **தர்மம்** என்னும் சொல் லுக்கான விளக்கம் அவ்வப்போது மாறுபட்டு வருகிறது. தர்மம் பற்றி மனு விளக்கம் அளித்துள்ளார். மற்றொரு விதமான விளக் கத்தை டாக்டர் அம்பேத்கர் அளித்துள்ளார். **தர்மத்தின்** விளக்கம் வெகு வேகமாக மாறிவரும் நிலையில், அத்தகைய ஒரு **தர்மத்தின்** உதவியை நான் நாட மாட்டேன். எனக்கு மிகத் தெளிவாக உள்ள, நான் நீண்டகாலமாக அனுசரித்து வருகின்ற என்னுடைய மத சார்பற்ற சட்டத்தைத்தான் பின்பற்றுவேன்.

**திரு. அமலோக் சந்த்:** குழந்தைகள் சட்டப்படி அங்கீகரிக்கப் பட்டவர்களா?

**சர்தார் பி.எஸ். மான் :** ஆம். சட்ட பாதுகாப்பு உண்டு.

கடைசியாக டாக்டர் அம்பேத்கரின் உரையில் காணும் எதிர் வாதம் எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அவர் கூறுகிறார்: பஞ்சாப் மக்கள் திருமணம் பற்றி பேசும் போது, அவர்கள் பல விஷயங்கள் பற்றி கூறுகிறார்கள். அவை....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** கூறு 8 மற்றும் இதர கூறுகள் அல்லது இதர திருமண முறைகள் உறுப்பினருக்கு பொருந்தும் திருமண உறவினை உருவாக்கும் பழக்க வழக்கங்கள் சீக்கிய சமுதாயத்திற்கு உண்டு. இவைதான் முக்கியம், மேலும் இதுபற்றி ஏன் பேச வேண்டும்?

**சர்தார் பி.எஸ். மான் :** முன்னர் டாக்டர் அம்பேத்கர் பேசிய பேச்சிலிருந்து, அவர் கரேவா திருமணங்களை அனுமதிக்க மாட்டார் என்பது எனக்குப் புரிகிறது. இதுவே என்னுடைய அச்சமாகும்.

சடங்குகள் பற்றிய கூறு 8 இருக்கிறது. நடைமுறையில் இன்னும் இருக்கின்ற மற்றும் ஒரு திருமண முறை வழக்கத்தை குறிப்பிடுகிறேன். இது **கரேவா** திருமணமும் அல்ல; சடங்கு சம்பிரதாய திருமணமும் அல்ல.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருமண முறைகள் எதுவாக இருந்தாலும் துணியை மூடிக்கொள்ளுவது போன்ற வழக்கங்கள் இதில் தடை செய்யப்படுவதில்லை.

**சர்தார் பி.எஸ். மான்:** நீங்கள் தயவு செய்து அனுமதித்தால், என்னுடைய கருத்தை மிகவும் தெளிவாக்கி விடுவேன். இத்தகைய திருமண முறையில், சடங்குகள் இல்லை; சாதாரணமாக ஒரு **சடார்** போடுவதும் இல்லை. கணவனும் மனைவியும் என்று கிராம மக்கள் நம்புகிற வகையில், ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து நீண்ட நாட்களாக கிராமத்தில் வாழ்ந்தார்களேயானால், அவர்கள் இருவரும் சடங்குகள் இல்லாமல் திருமணம் ஆனவர்கள் என்று கருதப்படுவார்கள். நீதிமன்றங்கள் இதை அங்கீகரித்து தீர்ப்பளித்துள்ளன.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதற்குக் கூட, சான்று சட்டத்தின்கீழ் தற்காலிக அனுமதி உண்டு.

**சர்தார் பி.எஸ். மான்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, அவ்வாறு இல்லை. அச்சட்ட அம்சம் பற்றி எனக்கு உங்களுடன் உடன்பாடு இல்லை. வைதீக திருமணம் அல்லது இதர சடங்குகள், சம்பிரதாயங்களின் கீழ் நடைபெறாத அத்தகைய திருமணத்தை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. வழக்கமான சடங்குகளுக்கு அதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சில சடங்குகள் அவசியம் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எவ்வளவு காலம் அவர்கள் இணைந்து வாழ வேண்டும்?

**சர்தார் பி.எஸ். மான் :** முடிவு செய்யப்பட்ட ஒரு வழக்கும் இருக்கிறது. மீண்டும் டாக்டர் தேக் சந்த் கூறுவதை குறிப்பிடுகிறேன்:

"உண்மையில் மாவட்டங்களின் *ரிவாஜ்-இ-ஆம்ஸ்* மற்றும் நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் பதிவேடுகளிலும் எவ்வித கடுமையான திருமண சடங்குமின்றி கணவன், மனைவியாக நீண்ட காலமாக உடல் உறவு மட்டும் வைத்திருந்தால் போதும்; அது செல்லுபடியாகும் திருமணம் என்ற அங்கீகாரத்தைப் பெறும்.

பஞ்சாப்பில் சட்டத்தின் நிலைமை அதுவாகும். ஓர் ஆணும் பெண்ணும் நீண்ட காலம் வாழ்ந்ததன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட திருமணங்களைப் பொறுத்தமட்டில் .....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எவ்வளவு காலம் அவ்வாறு வாழ்ந்திருக்க வேண்டும்?

**திரு. பி.எஸ். மான் :** சில வழக்குகளில் ஏழு ஆண்டுகள் என்றும், வேறு வழக்குகளில் இருபது ஆண்டுகள் என்றும், இன்னும் சில வழக்குகளில் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் என்றும் முடிவு செய்யப்பட்டன. சமுதாயத்தில் அவர்கள் அன்றாடம் வாழும் முறையின் அடிப்படையில்தான் முடிவு செய்யப்படுகின்றதேயன்றி,

சில சடங்குகளின் அடிப்படையில் அல்ல. இத்தகைய திருமண முறையை டாக்டர் அம்பேத்கர் அங்கீகரிப்பதில்லை. ''இத்தகைய ஒழுங்கீனத்தை நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று அவர் கூறுகிறார். இவை ''மலிவு திருமணங்கள்'' என்று அழைக்கிறார். இது எனக்கு எளியதாக இருக்கலாம்; ஆனால் நான் வெறுமையான சடங்குகளை மதிக்க மாட்டேன். திருமணத்திற்கு சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் தருகின்ற பிணைப்பையும், பரஸ்பர நடத்தையும் பொறுத்துத்தான் அதன் புனிதத்தன்மை அமைகிறது. சில சடங்குகள் அனுசரிக்கப்பட்டனவா, இல்லையா என்பது முக்கியமல்ல.

**ரெவரெண்ட் டி சௌஷா (சென்னை):** ஒரு தகவல் தேவை. அத்தகைய திருமணங்கள் செல்லுபடியாவதற்கு சில நிபந்தனைகள் தேவையா? அல்லது அவர்களில் ஒருவர் ஏற்கனவே திருமணமாகி இருந்தாலும் அவர்கள் உறவு மட்டும் வைத்திருந்தால் போதுமா?

**சர்தார் பி.எஸ். மான்:** அதுபற்றி பின்னர் கூறுகிறேன். திருமண முறைகள் பற்றி மட்டும் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** உறுப்பினர் விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை. ஒரு திருமணம் நடந்து இருக்கின்றது என்று யூகித்துக் கொண்டால், உறவுமுறை பற்றி நிபந்தனைகள் இருக்க வேண்டும் அல்லது அத்திருமணம் தடை செய்யப்பட்ட உறவு முறைகளை மீறுவதாகவும் இருக்கக் கூடாது; அல்லது அப்பெண் ஏற்கனவே திருமணமானவளாக இருக்கக்கூடாது. தனக்கு மற்றொருவனைக் கணவனாகக் கொண்டு வாழ்பவள் ஏற்கனவே திருமணம் ஆனவளா? திருமணத்திற்கு முந்திய இத்தகைய நிலைமைகள் இருக்க வேண்டும். உடல் உறவு மட்டும் போதுமானது அல்ல.

**சர்தார் பி.எஸ். மான்:** பொதுச் சட்டத்தின்கீழ், இதர சூழ்நிலைகள் இல்லாவிட்டால், நீதிமன்றங்கள் தலையிடும். இம்மசோதாவின் வரம்பிற்குட்பட்டதல்ல, இது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருமண முறைகள் பற்றி இது குறிப்பிடுகிறது. மணமகளும், மணமகனும் சாதாரணமாக அமர்ந்துகொண்டு, துணியை மேலே போர்த்திக் கொண்டு நடக்கும்

திருமணம் கூட இச்சட்ட வரம்பிற்குட்பட்டதாகும்; அது அனுமதிக்கப் படுகிறது. சடங்கின்போது துணி தூக்கியெறியப்பட்டாலும், அது அனுமதிக்கப்படுகிறது. திருமணத் தடை எவ்வாறு இருப்பினும், ஒரு திருமணம் செல்லுபடியாக வேண்டுமென்ற நிலைப்பாட்டை வலியுறுத்த உறுப்பினர் விரும்புகிறார்.

**சர்தார் பி.எஸ். மான்:** ஒரு சில வழக்கம் காட்டுமிராண்டித் தனமாக அல்லது பொது நல்லொழுக்கத்திற்கும் அல்லது நேர்மைக் கும் எதிராக இருந்தால், அத்தகைய வழக்கத்தை நான் ஒத்துக் கொள்பவன் அல்ல. தார்மிக மற்றும் சிவில் என்னும் இரண்டு திருமண முறைகளைப் பற்றிக் கூறுகிறீர்கள். இதர சில திருமண முறைகளைப் பற்றி நான் கூறுகிறேன். கரேவா திருமணங்கள் சேர்க்கப் படும் என்று நீங்கள் கூறுகின்ற வகையில் நீங்கள் இதைப் புரிந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் சடங்குகள் அல்லது சம்பிரதாயங்கள் எதுவும் இல்லாத, ஆணும் பெண்ணும் நீண்ட காலமாக கணவனும் மனைவியுமாக வாழ்கின்ற திருமணங்கள் பற்றி ஏனையோருடன் கலந்தாலோசனை செய்தேன். அப்பெண் ஏற்கனவே திருமணமானவளா, அவளுடைய கணவன் உயிருடன் இருக்கின்றானா என்பதுதான் கேள்வி. கணவன் உயிருடன் இருந் தாலும், தனியாகப் பிரிந்து அவள் இன்னொருவனின் மனைவி யாக இருந்தால் அது சாதாரண சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றமாகும்.

சடங்குகள், சம்பிரதாயங்களின்றி நடைபெறும் திருமணங்கள் செல்லுபடியாகும் என்று கருதுவது பற்றி கேள்வி எழுகிறது. அத்தகைய திருமணத்தைத் தடைச் செய்யும் அம்சத்தை இணைக்க உத்தேசிக்கப்படுகிறது. பஞ்சாப்பில் சகோதரன் அல்லது சகோதரி யின் பிள்ளைகளை திருமணம் செய்து கொள்ளுகிறார்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சான்று சட்டத்தின் ஷரத்துக்களை இது ரத்து செய்து விடுவதில்லை; சட்டத்தின் சம்பந்தப் பட்ட கூறுக்கு இது முரண்பட்டதல்ல. அதாவது, ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதே திருமணத்திற்கு போதுமான சான்றாகும்.

**சர்தார் பி.எஸ். மான்:** இச்சட்டம் வெளியிடப்பட்ட பின்னர், அத்தகைய திருமணங்கள் குறித்து நீதிமன்றங்கள் ஐயப்பாடுகளை

எழுப்பும். அத்திருமணங்கள் பதிவு செய்யப்படுவது இம் மனக் குறையைப் போக்கும். பரஸ்பர ஒற்றுமை நடத்தையுடன், இருவரும் நீண்டகாலமாக சேர்ந்து வாழ்வதால் அவர்கள் கணவன் மனைவி என்று கருதப்படுவார்கள்; அவர்கள் திருமணத்தை பதிவுசெய்து கொள்ளும்படி வற்புறுத்தப்பட மாட்டார்கள் என்று சட்டம் கூறினால், என்னுடைய அச்சம் நீங்கும்.

**திரு. தியாகி:** இருவரும் விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**சர்தார் பி.எஸ். மான்:** உண்மைதான்; கணவனும் மனைவியும் பரஸ்பரம் ஒருவரையொருவர் விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும். *(குறுக்கீடு)* சீக்கியர் ஜாட்களிடம் அத்தகைய திருமணங்கள் சாதாரணமாக நடைபெறுகின்றனவா என்று நண்பர் பேராசிரியர் யஸ்வந்த்ராய் கேட்கிறார். பஞ்சாப்பில் (பேராசிரியர்) சாதி உட்பட, சீக்கிய ஜாட் மற்றும் ஷெட்யூல்டு சாதிகளிடம் இது சாதாரணமாக நடைபெறுகிறது.

இப்போதைய மசோதாவின் நோக்கம் சட்டத்தைத் தொகுப்பதாகும். சில சட்டங்கள் ஏற்கனவே இருப்பதாக சட்டத் தொகுப்பு முறை கருதுகிறது. உண்மையிலேயே சட்டத் தொகுப்பினை நாம் மேற்கொள்ள வேண்டுமானால், தற்போதுள்ள சட்டங்களையும் தொகுப்பில் சேர்க்க வேண்டும். இப்போதைய தொகுப்பு, அமலில் உள்ள சட்டங்களைத் தொகுப்பதோடு மட்டுமல்லாமல், சீக்கியர்கள் மற்றும் பஞ்சாப் விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை, அவர்களின் சட்டங்களை ஒதுக்கிவிடுகிறது; *(மாற்றம் என்று ஒரு உறுப்பினர் கூறுகிறார்)* அல்லது மூலச் சட்டத்தின் உட்பொருளை முற்றிலும் இழந்துவிட்டு மாற்றம் செய்யப்படும் புதிய சட்டம் எங்களுக்கு அந்நியமானது; பலவழிகளில் எங்களுக்கு வெறுப்பானது; எங்கள் தொண்டைகளில் அது திணிக்கப்படுகிறது.

வால்டேர் கூறினார்:

> ''ஒரு நாடு எந்த அளவுக்குப் பரப்பில் பெரியதாகவும், பல்வேறு மக்களைக் கொண்டதாகவும் இருக்கிறதோ அந்த அளவுக்கு எல்லோரையும் ஒரே மாதிரியான ஒரு சட்டம் மூலம் இணைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது.''

**காலை 11 மணி**

இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் பிரதமரிடம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டார்: இந்தியாவில் ஏன் தேசிய உடை இல்லை என்று அவர் வினவினார். அக் கேள்விக்கு பிரதமர் பின்வருமாறு பதிலளித்தார்: இந்தியா ஒரு விரிந்து பரந்த நாடு; அது மத்திய ஆசிய எல்லைகளிலிருந்து கன்னியாகுமரி வரை வியாபித்திருக்கிறது; இதில் பல்வேறு மக்கள் வதிகின்றனர்; அவர்கள் வெவ்வேறுபட்ட பழக்கவழக்க மரபுகளைப் பின்பற்றுகின்றனர்; இதனால் அவர்கள் ஒரே மாதிரியான தேசிய உடையை அணிவது என்பது மிகவும் சிரமம். நாம் அணியும் ஆடைகளுக்குப் பொருந்துவது சட்டம் என்னும் ஆடைகளுக்கும் பொருந்தும். நமது ஆடைகளைத் தையற் கலைஞர் தைத்துத் தருகிறார்; அதே போன்று சட்ட ஆடைகளை டாக்டர் அம்பேத்கர் தைத்துத் தரவேண்டும். இதே போன்றதொரு முயற்சி முன்னர் மேற்கொள்ளப்பட்டது; ஆனால் இது உசிதமானதல்ல என்று கருதி அம்முயற்சி அப்போது கைவிடப்பட்டது. பஞ்சாப் சட்டங்கள் ஏறத்தாழ ஒரு பைபிளைப் போல நமக்கு இருந்து வந்தன; பிரதான மரபு வழக்குச் சட்டங்கள் அவற்றில் இணைக்கப்பட்டிருந்தன. சட்டத்தின் 5ஆவது பிரிவுதான் இன்று மேலோங்கி நிற்கும் சட்ட வடிவமாகும். இங்கு ஒரு விஷயத்தை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்; 1872ஆம் ஆண்டு முதலே நீண்ட நெடுங்காலமாக இந்த சட்டம் நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால் இப்போது திடீரென்று இச்சட்டத் தொடர் முடிவடையும் தறுவாயில் இருக்கையில், அத்தனை புரட்சிகரமானதாக இல்லாத, அதே சமயம் முற்றிலும் முன்பின் தெரியாத, மிகவும் பிற்போக்கான இச் சட்டத்தை, இதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளாதிருக்கும்போது இதனை ஏற்றுக் கொள்ளும்படித் திடீரென நம்மிடம் கூறப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் இச்சட்டத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் நீண்ட நெடுங்காலம் நிலைத்து வந்திருக்கிற மிக நல்ல பழக்க வழக்கங்களின் அடித்தளத்தின் மீது நிர்மாணிக்கப்பட்டிருப்பது எனது சமுதாய அமைப்பு; வாரிசுரிமை, பெண்களின் சொத்துரிமை, திருமணம், விவாக ரத்து, சீதனம் முதலியவை சம்பந்தப்பட்டவை இந்த மரபு வழக்கங்கள். இது பலதரப்பட்ட சட்டங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. இவற்றில் ஒரு சட்டம் பின்வருமாறு கூறுகிறது:

> ''நீதி, சமத்துவம், நல்ல மனச்சான்று ஆகியவற்றிற்குப் புறம்பாக இல்லாத, எந்த ஒரு சட்டத்தாலும் மாற்றப்படாத அல்லது ரத்து செய்யப்படாத, எந்த உயரிய அதிகார அமைப் பாலும் செல்லாதது என்று அறிவிக்கப்படாத, சம்பந்தப் பட்ட தரப்பினர் அனைவருக்கும் பொருந்தக்கூடிய எந்த வழக்கமும் வழக்கியல் சட்டமாகக் கருதப்படும்.''

இத்தகையதோர் முயற்சி மேற்கொள்ளப்பட்டுவந்தபோது டாக்டர் அம்பேத்கரைப் போன்ற அறிஞரும், அச்சமயம் சட்டத் துறைக்குப் பொறுப்பாக இருந்தவருமான சர் ஜார்ஜ் காம்பெல் மேற்கண்டவாறு கூறினார்; அவரது இந்தக் கூற்று இன்றைக்கும் பொருந்தக் கூடியதாகும். இந்து சட்டமும், முஸ்லீம் சட்டமும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் பொருந்துறும் என்று இந்த மசோதா கூறுகிறது. இது சம்பந்தமான திருத்தம் வெற்றிகரமாகக் கொண்டு வரப்பட்டது; அதன் விளைவே இப்போதைய சட்டம் அதாவது இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் அமைந்த 1872 ஆம் வருடச் சட்டத்தின் 5ஆவது பிரிவு; வழக்கங்கள் ஏதும் இல்லாத போதுதான் இந்து சட்டமோ முஸ்லீம் சட்டமோ நடைமுறைக்கு வரும். சர் ஜார்ஜ் கேம்பல் பின்வருமாறு கூறினார்:

> ''தாம் முன்மொழிந்துள்ள திருத்தத்தை அவை ஏற்றுக் கொள்ளுமானால் மசோதாவுக்கான ஆட்சேபனைகளில் பெரும் பகுதி அகற்றப்படும் என்பது அவரது கருத்து... அவ்வாறு சட்டமாக்கப்பட்டால்.... தரப்பினர்கள் முகமதியர்களாக இருக்கும்பட்சத்தில் முகமதிய சட்டமும், இந்துக்களாக இருக்கும்பட்சத்தில் இந்து சட்டமும் பொருந்தும்; சட்டத்தின் மூலம் சட்டம் திருத்தப்பட்டோ அல்லது அகற்றப்பட்டோ, அல்லது சட்ட விதிகளுக்குப் புறம்பாகவோ இருந்தால் இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும். இந்து சட்டத்தி லிருந்தும் முகமதியர் சட்டத்திலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப் பட்ட சில சாதாரண சட்டங்கள் பஞ்சாபில் ஓரளவுக்கு நடைமுறையிலிருந்து வருகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள அவர் சித்தமாக இருக்கிறார்; ஆனால் இவ்வகையான சட்டங் களின் ஒரு பகுதி பஞ்சாபுக்குள் இறக்குமதி செய்யப்படும் என்றும், அது அந்த மாகாணத்தின் எளிமையான சட்டமாக இருக்காது என்றும், மாறாக எழுதப்பட்ட இந்து சட்டங்கள் மற்றும் முகமதிய சட்டங்களின் சிக்கல் மிகுந்த ஒரு கலப்பாக

இருக்குமென்றும், நாடெங்கும் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பு களின் ஒரு தொகுப்பாக இருக்குமென்றும் அவர் கருதுகிறார். இதுதான் அவருக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வழக்குரைஞர்களுக்கு கதவுகளை அகலத் திறந்துவிடுவது மட்டுமன்றி, பஞ்சாபுக்குரிய சட்டமாகவும் அது இருக்காது என்றும் அவர் அஞ்சுகிறார். பஞ்சாபில் பத்தில் ஒருவர் இன்னும் சொல்லப்போனால் நூறில் ஒருவர் கூட இந்து மற்றும் முகமதிய சட்டங்களின் கண்டிப்பான விதிமுறை களுக்கு உட்பட்டிருக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.''

அச்சமயம்கூட சட்டத்தைத் தொகுப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது; ஆனால் வழக்கம் கட்டிறுக்கமானதாக இல்லாதபோது, சட்டத்தை தொகுப்பது .என்பது அச்சட்டத்தை இறுக்கமானதாக்கும் என்றே கூறுவேன். சட்டங்களைத் தொகுப் பதும் இயற்றுவதும் மேலிடத்திலிருந்தே நடைபெறுகின்றன. ஆனால் பழக்கவழக்கங்களோ சமூகத்தின் வாழ்க்கை நிலைமை களையும் விவேகத்தையுமே பிரதிபலிக்கின்றன. வழக்க நெறிச் சட்டம் சமூகத்தில் கீழிலிருந்து தோன்றி மேல் நோக்கி வளர்கிறது; இதில்தான் அதன் வளர்ச்சியும் வலிமையும் பொதிந்துள்ளன; வளர்ச்சியைக் குன்றச் செய்ய இயற்றப்படும் சட்டத்தைப் போல் அது பிற்போக்கானதல்ல. இயற்றப்படும் சட்டம் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால் வழக்க நெறியோ சிறந்த அம்சங் களை உள்ளீர்த்துக் கொள்கிறது; எதார்த்த நிலைமையைக் கணக்கி லெடுத்துக் கொள்கிறது.

இறுதியாக ஒன்று கூற விரும்புகிறேன்; தற்போதைய சட்டத் தொகுப்பு முறையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் இதனால் ஏற்படக்கூடிய அபாயங்களை உணர வேண்டும்; இதன் விளைவு விபரீதமானது; சமூகங்களின் பகுத்துணர்வையும் விருப்பாற்றல் சுதந்திரத்தையும் அவற்றின் வளர்ச்சியையும் அது எப்போதுமே தடை செய்யும்; இந்தப் பகுத்துணர்வும் விருப்பாற்றல் சுதந் திரமும் மக்களின் பலதரப்பட்ட தேவைகளுக்கும், உணர்வுக்கும் ஏற்ப வேறுபடக்கூடும். நமது உடைகளை, சட்ட உடைகளை தெற்கிலிருந்து வடக்கு வரை அனைத்துப் பிணிகளையும் குணப் படுத்தக்கூடிய ஒரு வகையான **அமிர்ததாரையை** தயாரித்தளிக்கும் ஆற்றல் டாக்டர் அம்பேத்கருக்கு உண்டு; இவ்வகையில் அவரிடம் பெருமதிப்பு வைத்துள்ள நான் அவர் தயாரித்தளிக்க முயலும் உடைகள் தெற்கத்தியர்களுக்கு மிகவும் தளர்த்தியானதாகவும்

வடக்கத்தியர்களுக்குப் பெரிதும் இறுக்கமானதாகவும் இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அவர் என் அளவைக் கணக்கிட்டு - சமுதாயத்தின் உருவளவையும் தேவைகளையும் மதிப்பிட்டு - அதற்கேற்ப ஆடைகளை தைத்துத் தர வேண்டும், அவ்வாறின்றி அவர் 'ரெடிமேட்' ஆடைகளை, சர்வரோக நிவாரணியான **அமிர்ததாரையை** அளிக்கக்கூடாது. நான் ஒரு சீக்கியன்; என் உணர்வுக்குப் புறம்பான, அன்னியமான எந்த சட்டத்தையும் என்மீது திணிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதனை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன்; எவ்வகையிலும் அதனை மதிக்க மாட்டேன். ஏனென்றால் நான் பண்டைக் காலப் பிராமணர்களை மதித்ததில்லை; அதேபோல் இன்றைய எந்தப் பிராமணர்களையும் மதிக்க மாட்டேன்.

***பண்டிட் மாளவியா:** இந்து சட்டத் தொகுப்பு மசோதா சம்பந்தமாக என் கருத்தினை எடுத்துரைக்க இதுவரை இந்த அவையின் நேரத்தை எந்தக் கட்டத்திலும் நான் பயன்படுத்திக் கொண்டதில்லை. தற்போது நம்முன் உள்ளது போன்ற ஒரு பிரேரணையின்பால் நம்மை ஆழமாக ஈடுபடுத்திக் கொள்ளும் அவல நாள் ஒருபோதும் வராது என்றே இதுகாறும் நான் நம்பிக் கொண்டிருந்தேன். இந்தச் சட்டத் தொகுப்பு எப்படியும் சட்டமாக்கப்பட வேண்டும் என்பதில் தீரா ஆர்வமும் அக்கறையும் கொண்ட சிலர் இந்த அவைக்குள்ளும் வெளியிலும் இருக்கின்றனர் என்பதை நான் அறிந்துள்ளேன்; இதேபோன்று நம்மில் பலரும் அறிந்திருப்பார்கள். ஆனால் எதார்த்த நிலைமையை நம்மால் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது; இந்த நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மேலோங்கி நிற்கும் பொதுமக்கள் அபிப்பிராயத்தை நாம் உதாசீனம் செய்ய முடியாது என்ற உண்மையையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நாட்டு மக்களின் சமுதாயக் கட்டுக்கோப்பையோ, அடித்தளத்தையே கடுமையாக பாதிக்கக் கூடிய ஒரு மசோதாவை இப்போது செய்து வருவதுபோல் ஏனோதானோ என்ற முறையில் சட்டப்புத்தகத்தில் இடம் பெறச் செய்ய முயலக்கூடாது. இத்தகைய ஒரு முயற்சியை எதிர்த்தோ, ஆதரித்தோ இந்த நாட்டில் மக்கள் கிளர்ந்தெழுந்து வருகிறார்கள். இத்தகைய ஒரு சட்டம் இயற்றப் படும் சாத்தியக்கூறு பற்றி வேதனையுற்றுள்ள மக்கள் இதற்கு எதிராகப் பெருமளவில் நிலவும் அதிருப்தியையும் சீற்றத்தையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர தங்களால் இயன்றதைச்

★ அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, செப்டம்பர் 19, 1951, பக்கங்கள் 2872-96.

செய்து வருகிறார்கள். எனினும் நான் என் எதிர்ப்பைக் காட்ட தனிப்பட்ட முறையில் எங்கும் என்றும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மேடையேறியதில்லை; இத்தகைய ஒரு கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள முயன்றதும் இல்லை; கோட்பாட்டளவில் மிகவும் தவறான, மிகக் கொடிய, அடாத, அறவே தேவையில்லாத ஒரு மசோதா இந்த அவை முன் கொண்டுவரப்படமாட்டாது என்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். ஆனால் இன்று நான் காணும் காட்சி என்ன? தனது பயணத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் இந்த நாடாளுமன்றத்தில் 30 கோடி மக்களின் வாழ்வைப் பாதிக்கக்கூடிய மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு மசோதா கொண்டு வரப்படுவதைப் பார்க்கிறேன்; கடும் எதிர்ப்புக்கிடையே அதனை சட்டமாக்கவும், சட்டப் புத்தகத்தில் அதனை இடம்பெறச் செய்யவும் தீவிர முயற்சி செய்யப்படுவதைக் காண்கிறேன். இந்த மசோதாவின் கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் எவருமே இல்லை என்று நான் கூறவில்லை. (**பண்டிட் மைத்ரா:** வெகு சிலரே இருக்கிறார்கள்). இத்தகைய ஒரு சட்டம் இயற்றப்படுவது சமுதாயத்தின் நலன்களுக்கு உகந்தது என்று நேர்மையான முறையில் கருதாத எவருமே இல்லை என்று நான் கூறவும் விரும்பவில்லை. இத்தகையவர்களுடன் எனக்கு எந்த சச்சரவும் இல்லை. நான் ஓர் இந்து; சகித்துக் கொள்ளாத்தன்மை எந்த உருவத்திலும் வடிவத்திலும், அறிவார்ந்த ரீதியிலோ அல்லது சித்தாந்த ரீதியாலோ என்னிடம் ஒருபோதும் குடிகொள்வதில்லை. எனவே, இத்தகைய ஒரு நடவடிக்கை அல்லது இதைவிட மிகவும் புரட்சிகரமான தன்மையுடைய ஒரு நடவடிக்கை சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுபவர்கள் இந்த நாட்டில் இருப்பார்களேயானால் அவர்களுடன் நான் உடன்பாடு கொள்ள மாட்டேன் - அவர்களது நிலைப்பாட்டுக்காக வருந்தவும் செய்வேன் - ஆனால் அத்தகையவர்களுடன் நான் சண்டையிட மாட்டேன். ஆதலால் இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள் இந்த நாட்டில் எவருமே இல்லை என்ற நிலையை நான் மேற்கொள்ளவில்லை. ஆனால் மக்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்த மசோதாவுக்கு ஆதரவாக இல்லை என்பது தெள்ளத் தெளிவு, உண்மையைப் பார்க்க விரும்பாதவர்களே இதனைத் தெள்ளத் தெளிவாகக் காணத் தவறுவார்கள்...

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்:** உங்கள் கருத்து கேள்விக்குரியது.

**பண்டிட் மைத்ரா:** .... ஆனால் இது குறித்த அவர்களது உணர்வுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பெரிதும்

குழம்பிப் போயுள்ளனர்; இத்தகைய ஒரு சட்டம் இயற்றப்படும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலைமையில் என்ன செய்வது என்று தெரியாது திகைத்துப் போயுள்ளனர். (குறுக்கீடு). என்னுடைய நண்பர் களில் சிலர் அநேகமாகப் பழக்கத்தின் காரணமாக பணிந்து போய், கிளிப்பிள்ளை போல் 'கேள்வி' என்று கூறுகின்றனர். இந்த நாட்டில் எந்தப் பகுதியிலும் எனது இந்தக் கூற்றினை மறுதலிக்கும் படி மனித குலத்தை அறைகூவி அழைக்கிறேன். இந்த நாடாளு மன்றத்திலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டமொன்றில் பேசும்போது பின்கண்ட கருத்தினை வலியுறுத்தினேன்: இத்தகைய அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தில், இம்மாதிரி யான முறையில் சட்டம் இயற்றுவது சட்டரீதியில் தவறு இல்லை என்றாலும் இதனால் பாதிக்கப்படும் மக்களின் கருத்தறியாமல் இதனைச் செய்வது தார்மிக ரீதியில் உச்சக்கட்டத் தவறாகும். இதுபோன்ற விஷயத்தில் நாம் குறைந்தபட்சம் எதிர்பார்ப்பது ஒன்று இந்தப் பிரச்சினையை ஒரு பொதுத் தேர்தலின்போது வாக்காளர் முன்வைக்க வேண்டும் அல்லது இது குறித்து ஒரு பொதுஜன வாக் கெடுப்பு நடத்த வேண்டும் என்பதே ஆகும்.

**திரு. பாரதி :** ஒருதார மண விஷயத்திலா?

**பண்டிட் மாளவியா :** என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. பாரதி சரியோ, தவறோ, பொருத்தமானதோ, பொருத்தமற்றதோ எல்லா சந்தர்ப்பங்களிலும் விளையாட ஒரே ஒரு மக்கிப்போன துருப்புச் சீட்டையே வைத்திருக்கிறார். விரைவில் அந்தத் துருப்புச் சீட்டு விஷயத்திற்கு வருகிறேன்; அவர் கையிலுள்ள அந்தத் துருப்புச் சீட்டின் லட்சணம் என்ன என்பதைக் காட்டுகிறேன். ஆனால் 'ஒருதார மணம்' என்ற குறுக்கீடு என் வாதத்தை திசைதிருப்பி விடாது. என் வாதம்தான் என்ன? இன்றைய நிலைமையில் நாம் மேற் கொள்ளக்கூடிய சரியான வழி இந்தப் பிரச்சினை குறித்து ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும், இது விஷயத்தில் மக்களின் கருத்தறிய வேண்டும், அந்தக் கருத்துக்கணிப்பில் மக்களில் ஒரு கணிசமான சிறுபான்மையினர் இத்தகைய நடவடிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தால்கூட நாம் அனைவரும் ஒன்றாக அமர்ந்து இந்த மசோதாவைத் தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவோம்; இந்த அளவுக்குச் செல்வதற்கு எனக்கு எத்தகைய அச்சமோ, தயக்கமோ இல்லை. இது சாத்தியமில்லை என்றால் என் நிலையை எதிர்க்கும் மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர்கள் ஒரு காரியத்தைச்

செய்யலாம்: அதாவது அரசாங்கமும் சட்ட அமைச்சரும் முன்னின்று அரை டஜன் பேர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யும்படித் தூண்டலாம் அவ்வாறு ராஜினாமா செய்பவர்களில் நான் ஒருவனாக இருப்பதற்குத் தயாராக இருக்கிறேன் - இதனைத் தொடர்ந்து இந்த சட்டத் தொகுப்பு பிரச்சினை குறித்து நான்கு வார காலத்தில் உப தேர்தல்கள் நடத்தலாம்....

**திரு. பாரதி :** ஒருதார மண விஷயத்திலா?

***பண்டிட் மாளவியா:*** .... அந்த உபதேர்தல்களில் ஏழு தொகுதி களில் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை ஆதரிப்பவர்கள் ஒரு சில தொகுதிகளில் வெற்றியடைந்தால் கூட....

***மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :*** வட இந்தியாவிலா?

***பண்டிட் மாளவியா:*** நாடு முழுவதிலும் எந்த ஓர் இடத் தில் அவர்கள் வெற்றி பெற்றால்கூட இந்த மசோதாவுக்கான என் எதிர்ப்பைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

**திரு. முனாவல்லி (பம்பாய்) :** இந்த சவாலை ஏற்கிறேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** இந்தப் பிரச்சினைக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அவர் தமது பேச்சைத் தொட ரட்டும்.

***பண்டிட் மாளவியா:*** குறுக்கீடு குறித்து நான் கவலைப் படவில்லை. சொற்களில் இரண்டு வகை உண்டு. ஒருவகை சொற்கள் வெறும் ஓசை மட்டும் கொண்டவை; மற்றொரு வகை சொற்கள் அர்த்தபுஷ்டி கொண்டவை. எனவே, எந்த ஓர் உறுப்பினராவது 'நான் சவாலை ஏற்றுக் கொள்கிறேன்' என்றால் அவர் அவற்றை பொருள் பொதிந்தே சொல்கிறார், வெறும் ஓசையை எழுப்ப வில்லை என்றே அர்த்தம் கொள்வேன்.

**திரு. முனாவல்லி :** அந்த அர்த்த்தில்தான் நானும் கூறுகிறேன்.

***பண்டிட் மாளவியா :*** இந்த சந்தர்ப்பத்தில் எனது வேண்டு கோள் இதுதான். அரசாங்கமும், சட்ட அமைச்சரும் மசோதாவை இந்த சோதனைக்கு உட்படுத்தட்டும்; இதற்கு அவர்கள் தயாராக

இருந்தால் தேர்தல்கள் நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே கூட அவையின் கூட்டத்தைக் கூட்டுவோம்; அந்த உபதேர்தல்களின் முடிவுகள் தெரிந்த பிறகு அந்த முடிவுகளுக்கு இணங்க செயல்படுவோம். இந்த சவாலை ஏற்பதாகக் கூறும் உறுப்பினர்கள் அதைத் தெரிவிக்கட்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரே வழி இந்த வழி முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதேயாகும்; ''இந்த சவாலை ஏற்றுக் கொள்கிறேன்'' என யார் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு நான் எந்த அவமரியாதையும் காட்டாமல் இதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நாம் செய்யாது போனால் இந்த நாட்டிலுள்ள மிகப் பெரும்பாலான மக்கள் இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள் என்பதை எவ்வாறு தீர்மானிக்க முடியும். **(மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** கேள்வி.) இதை நான் கூறும்போது ''வைதிகர்கள்'' எனப்படுவோரை மட்டுமே இங்கு குறிப்பிடவில்லை; இந்த நாட்டின் முன்னேறிய மக்களில் மிக முன்னேறிய மக்களையும், இந்தத் தேசத்தின் அனுபவமிக்க பெரியவர்கள் நிர்ணயித்துத் தந்துள்ள கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்குரிய வலுவைப் பெற்றிராதப் பலவீனமானவர்களையும், சிரமமின்றி வாழ்க்கை நடத்த விரும்புபவர்களையும், இரு உலகங்களின் நற்பேற்றினைப் பெற விழைபவர்களையும், நினைவறியா காலம் தொட்டு தொடர்ந்து உன்னத உயரிய பாரம்பரியங்களையும் கலாசாரத்தையும், வாழ்க்கையையும், சித்தாந்தத்தையும், கோட்பாடுகளையும் கொண்ட பெருமிதத்துக்குரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் என்று உரிமை கொண்டாடுபவர்களையும் சேர்த்தே இங்கு நான் குறிப்பிடுகிறேன். இந்தக் கனவான்கள் இப்போது பொறுமை இழந்து காணப்படுகிறார்கள்; இவர்களுடைய கண்ணோட்டத்திலிருந்து மட்டுமல்ல, தற்போதுள்ள கட்டுப்பாடுகள் குறித்துப் பொறுமை இழந்து போயிருப்பவர்கள், நமது சமுதாயம் வேறு எங்கேயேனுமுள்ள ஒரு சமுதாயத்தை அதன் தகுதியையும் தராதரத்தையும் பற்றிக் கவலைப்படாமல் கண்களை மூடிக் கொண்டு பின்பற்ற வேண்டும் என்று வாதிப்பவர்கள் போன்றோரின் கண்ணோட்டத்திலிருந்தும்கூட இந்த மசோதா ஏற்புடையதல்ல. இந்த நாட்டிலுள்ள மிகப் பெரும்பாலான மக்கள் இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள் என்று இந்த அடிப்படையில்தான் நான் உறுதியாகக் கூறுகிறேன். பண்டைப் பாரம்பரியங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட வைதிக மக்கள் இம்மசோதாவைக் கண்டு பெரிதும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆனால் சமூகநீதியில் ஓரளவு பறந்த மனப்பான்மை கொண்டவர்கள்....

**டாக்டர் எம்.எம். தாஸ்:** ஓர் ஒழுங்கு பிரச்சினை. இந்த அவையில் ஏற்கெனவே கூறப்பட்டதையே மதிப்பிற்குரிய உறுப் பினர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். அவர் புதிதாக எந்த வாதத் தையும் முன்வைக்கவில்லை. ஏனைய உறுப்பினர்கள் கூறியதையே இவர் திரும்பவும் சொல்லுகிறார்.

**பண்டிட் மாளவியா:** போதனையூட்டும் பழக்கத்திற்கு ஆளான சிலர் மனித வர்க்கத்தில் இருக்கிறார்கள்; அவர்கள் முன் அறுசுவை உணவை வைத்தாலும் குமட்டும் உணர்வையே வெளிப் படுத்துவார்கள்! எனவே, மதிப்பிற்குரிய என் நண்பரின் போக்கு எனக்கு வியப்பேதும் அளிக்கவில்லை!

**திரு. பாரதி:** தற்போது விவாதிக்கப்பட்டு வரும் திருமணம் மற்றும் விவாகரத்து என்னும் பொருள் பற்றி மட்டும் மதிப்பிற் குரிய உறுப்பினர் பேசினாரேயானால் அது புரிந்து கொள்வதற் குரிய தெளிவினை அளிக்குமல்லவா?

**பண்டிட் மாளவியா :** மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் திரு. பாரதிக்குள்ள தெளிவும் திறமையும் எனக்கு இல்லையோ என்னவோ.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** தற்போது நாம் விவாதத் திற்கு எடுத்துக் கொண்டுள்ள பொருள் திருமணமும் விவாகரத்தும் என்பதேயாதலால் மதிப்பிற்குரிய உறுப்பினர் அது பற்றியே பேச வேண்டுமென்று அவருக்கு நானே யோசனை கூறலாமென்றிருந் தேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது கருத்துகளை இப்போது அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கும் அளவுக்கு முன்னர் செய்த தில்லை என்று கருதக்கூடும். எனினும் இவற்றில் சில கருத்துகள் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளன; எனவே, அவற்றை மீண்டும் விரிவாக எடுத்துரைக்க வேண்டியதில்லை; இதுவரை எடுத்துரைக் கப்படாத கருத்துக்களோடு அவர் நிறுத்திக்கொள்வது உசிதமானது.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** ஏற்கெனவே சொல்லப்பட்ட கருத்து களே திரும்பவும் கூறப்பட்டாலும் பண்டிட் மாளவியா போன்ற மேன்மை மிக்க ஓர் அறிஞரின் கருத்தைக் கேட்கவே நாங்கள் விரும்புகிறோம் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

**டாக்டர் எம்.எம். தாஸ்:** ஓர் ஒழுங்கு பிரச்சினை. மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த அவையின் உறுப்பினர்களிடையே வேறுபாடு காட்டிப் பேசுகிறார்.

**பண்டிட் மாளவியா :** அத்தகைய கௌரவத்துக்கு நான் உரிமை கொண்டாடவில்லை. இது குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர் எவரும் பீதியடையத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இந்த விவாதம் இன்றுடன் முடிவுறும் என்று எதிர்பார்க்கிறேன்; மேற்கொண்டு எந்தக் குறுக்கீடுகளும் வேண்டாம்.

**பண்டிட் மாளவியா:** உங்களது வழிகாட்டுதலுக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம் இதுதான். இந்துக்களின் சமூகக் கட்டமைப்புப் பற்றி இந்த மசோதாவில் ஒரு சட்டக்கூறு இருக்கலாம் அல்லது பொதுவாக சமூகக் கட்டமைப்புப் பற்றி நூறு சட்டக் கூறுகள் இதில் இருக்கலாம். ஆனால் அது இந்துக்களின் சமூகக் கட்டமைப்பைப் பாதிப்பதாக இருக்கும் பட்சத்தில் யாரும் அந்த சமூகக் கட்டமைப்பைப் பற்றியும் இந்த சட்டக்கூறு அதனை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பதைப் பற்றியும் விவாதிக்காமல் மேலே செல்ல முடியாது. சமூகக் கட்டமைப்பை செயற்கையான முறையில் துண்டு துணுக்காகப் பரிசீலிக்க முடியாது. இது காரிய சாத்தியமானதும் அல்ல.

இதற்கு முன்னர் நடைபெற்ற விவாதத்தைக் கொண்டு பார்க்கும்போது, பொதுவான அம்சத்தை விட்டுவிட்டு ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்து மட்டும் ஏறுமாறான போக்கைக் கடைப்பிடிப்பது அறவே சாத்தியமல்ல, சரியானதுமல்ல என்ற எண்ணமே எனக்கு ஏற்படுகிறது. எனினும் ஒன்றை உங்களுக்கு உறுதிகூறுகிறேன் ஐயா, இந்த வாதத்தின் நெடுகிலும் உங்கள் வழிகாட்டுதலின் படியே நடப்பேன், ஏதாவது ஒரு கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வாதத்தை நான் மேற்கொண்டு தொடரக்கூடாது என்று நீங்கள் கருதினால், உடனே உங்கள் விருப்பத்திற்கு உடன்படுவேன்.

இந்த மசோதா தற்போது திருமணம் மற்றும் விவாகரத்து ஆகிய இரண்டு விஷயங்களுடன் மட்டுமே சம்பந்தப்பட்டது என்று கூறப்படுகிறது. இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரையில்,

அதன் முழுக் கட்டுமானமும் திருமணம் என்னும் அஸ்திவாரத்தின் மீதுதான் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்துக்களின் திருமண முறையுடன் சம்பந்தப்படாதது என்று பிரித்துக் காட்டக்கூடிய எதுவுமே இந்து சமுதாயத்தில் இல்லை. எனவே, இந்து சமுதாயத்தின் திருமணப் பகுதியை ஒட்டுமொத்த சமுதாயத்தின் பொது அம்சத்தைக் குறிப்பிடாமல் விவாதிப்பது என்பது சாத்தியமல்ல. இப்போது நான் கூறுவது யாவும் திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப் பட்ட விஷயத்துக்கும் நேரடியாகப் பொருந்தும். நான் கூறுவதெல் லாம் என்னவென்றால் ஏனையோரைப் போலவே வைதீகப் பிரி வினரும் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர் என்பதுதான். மக்கட் தொகையில் ஏறத்தாழ எண்பது சதவீதத்தினராக உள்ள இவர்களைப் பற்றி நேற்றும் நேற்றைக்கு முன் தினமும் இந்த அவையின் சில உறுப்பினர்கள் என்னவெல்லாமோ பேசினர். இந்த மசோதாவில் பிரேரேபிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் இன்றளவும் இவர் களிடையே நடைமுறையில் உள்ளன என்றும் கூறப்பட்டது. இது உண்மையானால் அது குறித்த ஐயப்பாடு எனக்குள் இருந்து கொண்டே இருக்கிறது. விவாகரத்து செய்து கொள்வதற்கும் சுலப மாகத் திருமணம் செய்து கொள்வதற்கும் இன்று வாய்ப்பு வசதிகள் பெற்றுள்ள ஏராளமான மக்களுக்கு இந்த மசோதாவிலுள்ள ஷரத்துகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்தப் பிரேரணை களின் தகுதிகள் குறித்து எனது சொந்தக் கருத்து எதையும் இங்கு கூறவில்லை. இன்று கிராமங்களில் வதியும் சாமானிய மக்கள் என்னுடைய பெருமதிப்புக்குரிய நண்பரான சட்ட அமைச்சரைப் போன்ற சமுதாயத்தின் இதர சில உறுப்பினர்கள் அறிவு ரீதியிலும், தார்மிக ரீதியிலும், உணர்வு ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் எய்தி யுள்ள அதே வளர்ச்சிப் பரிமாணத்தை எட்டுவதற்கான வாய்ப்பை யும், அனுகூலத்தையும் பெற்றிருக்கவில்லை; இத்தகையவர்களுக்குக் கட்டுப்பாட்டுத் திறனும், சிறந்ததையும் மிகச் சிறந்ததையும், மோசமானதையும் மிக மோசமானதையும் பகுத்தறியும் திறனும் சில விஷயங்களில் ஏனையோர்களைப் போல் இயல்பாகவும், தானாகவும் வந்து விடுவதில்லை. இந்து சமுதாயம் பல பிரிவு களாகப் பிரிந்துள்ளது; எந்த ஒரு பிரிவினருக்கும் தீங்கு செய்வதோ அல்லது அநீதி இழைப்பதோ போன்ற எத்தகைய மனிதாபிமான மற்ற, அல்லது கெடுநோக்குடைய குறிக்கோளுடன் அது பிரிந்திருக்க வில்லை. இந்து சமுதாயத்தின் சில பிரிவினருக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது என்பதை நான் நம்பவில்லை என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதை நான் விரும்பவில்லை. அநீதி இழைக்கப்பட் டுள்ளது, துன்பங்கள் சுமத்தப்பட்டுள்ளன, அட்டூழியங்கள் புரியப்

பட்டுள்ளன, நியாயமும் நேர்மையும் உள்ள மனிதன் எவனும் இவற்றிற்கெல்லாம் வக்காலத்து வாங்க மாட்டான். ஆனால் இந்த வேறுபாடுகளுக்கு அடிப்படையாக உள்ள கோட்பாடுகளையும் பரந்த கண்ணோட்டத்தையும் பற்றியே இங்கு பேசிக் கொண்டிருக்கிறேன். எவ்வகையிலும் ஊறுபடுத்தும் நோக்கமோ, தீங்கு இழைக்கும் நோக்கமோ அவற்றிற்கு இல்லை.

**திரு. முனாவல்லி:** ஆனால் இதன் விளைவு என்னவாக இருக்கும்?

**பண்டிட் மாளவியா:** இந்த விளைவுகளைப் பற்றி விவரிக்க எனக்கு நீண்ட நேரம் பிடிக்கும். எனென்றால் இந்த விளைவுகள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளன. மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் சற்றுச் சிரமம் மேற்கொண்டு வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பாரேயானால் அவற்றை அவர் நன்கு தெரிந்து கொள்வார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருமணம் மற்றும் விவாகரத்து பற்றி இத்தகைய விவாதம் நடைபெறுவது அவசியமா?

**பண்டிட் மாளவியா :** இங்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; விஷயங்களின் தன்மையை வைத்துப் பார்க்கும்போது ஒரு விஷயத்தை ஒருவரிடமிருந்தும் இன்னொரு விஷயத்தை இன்னொருவரிடமிருந்தும்தான் எதிர்பார்க்க முடியும். சிக்கலான சட்டப் பிரச்சினை எதுவும் எழுமானால் அதன் அனைத்து அம்சங்களையும் பற்றி நமக்கு விளக்கிக் கூறும்படி நமது கற்றறிந்த சட்ட அமைச்சரை நியாயமாகவும், கட்டரீதியாகவும் நாம் கேட்டுக் கொள்ள முடியும். இத்தகைய தகவல்களை மிகவும் தெளிவான முறையில் என்னைப் போன்ற அறிவிலியிடமிருந்து நீங்கள் பெற முடியாது. (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** இல்லை, இல்லை, அப்படிச் சொல்லாதீர்கள்) (**மதிப்பிற்குரிய மற்றோர் உறுப்பினர் :** இது அவரது தன்னடக்கத்தையே காட்டுகிறது). இதே போன்ற இன்னொரு விஷயத்தைப் பற்றி வேறொருவர் எவ்வளவோ விஷயங்களைக் கூற முடியும்; ஆனால் இந்த விஷயத்தில் மதிப்புக்கும் மரியாதைக்கும் அன்புக்குமுரிய எனது கற்றறிந்த நண்பர் திரு. பாரதி அறவே எதுவும் அறியாதவராக இருக்கக்கூடும். சமுதாயத்தில் ஒரு வகையான மக்கள் இருக்கிறார்கள்; இவர்கள் வாழ்க்கையை கணத்துக்குக் கணம், மணிக்கு மணி, காலையிலிருந்து மாலை

வரை, இரவிலிருந்து அருணோதயம் வரை அணு அணுவாக சுவைப்பதே தங்களது பிறவிப் பெருங்கடனாகக் கருதுவார்கள். இத்தகையவர்களுக்கு இன்றைய திருமணம் மற்றும் விவாகரத்து பற்றிய சட்டங்கள் மிகவும் எளிமையானவையாகவும் சுலபமானவை யாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கிலும் போக்கிலும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. இன்று ஓர் ஆணோ அல்லது பெண்ணோ திருமண உறவை உதறியெறிந்துவிட்டு கண்சிமிட்டும் நேரத்தில் மற்றொரு திருமணத்தை செய்து கொள்ள முடியும். இத்தகையவர்கள் இனி அப்படிச் செய்ய முடியாது. இந்த மசோதாவின் ஷரத்துகளின்படி இதைச் செய்ய அவர்கள் மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டி யிருக்கும்; ஒவ்வொரு நீதிமன்றமாக ஏறியிறங்க வேண்டியிருக்கும்; எத்தனை எத்தனையோ நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டி யிருக்கும். இந்த மசோதாவின் தகுதிகள் குறித்து எனது கருத்தைக் கூறவில்லை. ஆனால் இத்தகைய முன்னேற்றத்திற்கு வழிவகுத் தமைக்காக தனிப்பட்ட முறையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன், சட்ட அமைச்சரை இதன் பொருட்டு பாராட்டவும் விரும்பு கிறேன். ஆனால் இதன் நடைமுறை விளைவுகளைப் பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். நடைமுறையில் இதனால் கிராமங்களில் படுகொலைகள் நிகழும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**டாக்டர் அம்பேத்கர் :** எந்த நிலைமையையும் சமாளிக்க நம்மிடம் போதுமான காவலர்கள் இருக்கிறார்கள்.

**பண்டிட் மாளவியா :** இன்று மனிதன் பெருமளவில் மிருக நிலையில்தான் இருக்கிறான்....

**திருமதி ரேணுகா ரே :** கேள்வி.

**பண்டிட் மாளவியா:** எவரையும் அவமானப்படுத்த வேண்டும் என்று இதனை நான் கூறவில்லை. ஒரு சமூகவியலாளன் என்ற முறையில்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். மக்கள் தங்கள் பாதையில் புதிய தடைக் கற்கள் வைக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, தங்களுக்குப் பழக்கப்படாத இடர்ப்பாடுகள் தங்கள் பாதையில் குறுக்கிடும்போது, அவர்கள் சோர்வுறுகின் றனர்; அப்போது அவர்களால் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடிவதில்லை; சட்டத்திற்காகக் காத்துக் கொண்டிருக்க முடிவ தில்லை; கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு

சமுதாயம் எழுச்சி கொள்ளும் நாளுக்காக அவர்களால் ஏங்கிக் கொண்டிருக்க முடிவதில்லை. இன்று அதிகமாகப் பேசப்படுபவர்களில் இந்த எண்பது சதவீதத்தினரின் உணர்வை இதிலிருந்து ஒருவாறாகக் கற்பனை செய்துகொள்ள முடியும். ஆகவேதான் என்னைப் போன்றவர்கள் இந்த மசோதாவை வரவேற்க மாட்டார்கள் என்று கூறினேன்; காலம் காலமாக, தொன்று தொட்டு நிலவி வரும் பாரம்பரியங்களைப் போற்றிப் பேண வேண்டும், மதிக்க வேண்டும் என்று கருதுபவர்கள் நாங்கள். நாங்கள் மட்டுமல்ல, இந்த மசோதாவால் உடனடியாகப் பெரிதும் பாதிக்கப்படக் கூடியவர்களும் இதனை நிச்சயமாக வரவேற்க மாட்டார்கள். இன்னொன்றையும் இந்த சந்தர்ப்பத்தில் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்: இந்த மசோதாவை தங்கள் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுபவர்கள் அந்த மக்களுடன் ஒட்டும் உறவும் இல்லாதவர்கள்.

**டாக்டர் அம்பேத்கர் :** நானும் கூடவா?

**பண்டிட் மாளவியா:** நிச்சயமாக மாண்புமிகு சட்ட அமைச்சர் இல்லை! எப்படியோ அவர் இக்கால மனுவாகச் சித்தரிக்கப்பட்டு வருகிறார். இங்கு ஒரு சுலோகம் என் நினைவுக்கு வருகிறது. *(குறுக்கீடு)*. நீங்கள் ஏன் பொறாமைப்படுகிறீர்கள் என்று சிலர் என்னைக் கேட்கிறார்கள். அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ மாண்புமிகு சட்ட அமைச்சரிடம் பொறாமை கொள்ளும் வகையில் நான் வளர்க்கப்படவில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** ஒரு பிராமணர் ஒரு தீண்டப்படாதவரிடம் எப்படிப் பொறாமை கொள்ள முடியும்?

**பண்டிட் மாளவியா :** இதை அவர்களுக்குச் சொல்லுங்கள்! இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு சுலோகம் நினைவுக்கு வருகிறது. *(குறுக்கீடு)*. அந்த சுலோகம் என்ன சொல்லுகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பொறுமையுடன் கேட்டால் முன்னைவிட ஓரளவு சிறந்த மனிதப் பிறவிகளாக அவர்கள் தங்களை உணர்வார்கள். சரி, இனி விஷயத்துக்கு வருகிறேன். கும்பகர்ணன் ராவணனிடம் பின் வருமாறு கேட்கிறான்: ''நீங்கள் தோற்றங்களை நினைத்தபடி எல்லாம் மாற்றிக் கொள்ளும் அபூர்வ சக்தி படைத்தவராயிற்றே, அப்படியிருக்கும்போது சீதையை வசப்படுத்த நீங்கள் ஏன் ராமன் உருவத்தில் அவளிடம் செல்லக்கூடாது?'' இதற்கு

ராவணன் பின்வருமாறு பதிலளிக்கிறான்: ''இதில் பெரிய சிரமம் இருக்கிறது. எந்தக் கணம் ராமனது உருவத்தை மேற்கொள்கிறேனோ அல்லது அவனைப் பற்றி நினைக்கிறேனோ அந்தக் கணமே ராமனைப் பற்றிய எண்ணத்துடனான வெறும் தொடர்பேகூட என் மனத்தில் எத்தகைய தீய எண்ணமும் தோன்றுவதைத் தடுத்து விடுகிறது! (சபாஷ், சபாஷ்). (**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் :** அந்த சுலோகத்தை மீண்டும் கூறுங்கள்). என்னுடைய நண்பர்கள் போதிய அகாசம் பெற்றுத்தந்தால் இன்னும் எத்தனை எத்தனையோ சுலோகங்களைக் கூறுவேன். மனுவின் விஷயமும் இதோ போன்றதுதான். விவாக ரத்து போன்ற விஷயங்களை இந்த அவையின் உறுப்பினர்கள் ஒரு சில நிமிடங்களில் பரிசீலித்துவிட முடியும் என்று எதிர்பார்க்க முடியாது; அப்படியே எதிர்பார்த்தாலும் 80 சதவீத மக்கள் அவ்வாறு செய்ய முடியும் என்று நாம் எதிர்பார்க்க இயலாது. எனவே இந்த விஷயம் குறித்த நமது அணுகுமுறையில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனை மறுத்து எவரேனும் கூற முன்வருவாரேயானால் அதனைக் கேட்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

எனவே, இந்த மசோதாவை வைதிகப் பிரிவினர் மட்டுமன்றி, இந்த நாட்டில் வதியும் மக்களில் மிகப் பெரும்பான்மையோர் எதிர்க்கின்றனர் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்:** இல்லை, இல்லை.) சிலர் பின்வருமாறு கூறுகின்றனர்: ''நீங்கள் தெரிவித்ததை விட வேறு காரணங்களுக்காக இருக்கலாம்.'' எது எப்படி இருப்பினும், ஒரு விஷயம் தெளிவு: என்ன காரணங்களாயினும் மிகப் பெரும்பாலான மக்களால் இது அங்கீகரிக்கப்படவில்லை.

சரி, இனி மசோதா விஷயத்துக்கே வருகிறேன். மசோதாவின் பகுதி II மட்டுமே இப்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது; எனவே, இந்த மசோதாவை இந்து சட்டத் தொகுப்பு மசோதா என்று அழைக்கத் தேவையில்லை. மசோதாவின் இதர பகுதிகள் அதில் சேர்க்கப்பட்டிருந்தாலும் .சரி, சேர்க்கப்படாவிட்டாலும் சரி அது இந்து சட்டத்தொகுப்பு மசோதா என்று அழைக்கப் படாவிட்டால் என்னைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவை அவ்வளவாக எதிர்க்க மாட்டேன். நமது நாட்டுக்கு நமது அரசியல் சாசனத்தில் ''இந்தியா அதாவது பாரதம் என்று பெயரிட்டுள்ளோம். அப்படியானால் இந்த மசோதா ''இந்திய சட்டத் தொகுப்பு'' என்று ஏன் அழைக்கப்படவில்லை? இது அனைவருக்கும் பொருந்த

வேண்டும் என்ற பிரச்சினைக்கு நான் செல்லவில்லை. இதில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் நான் விரும்பவில்லை. அந்த அடிப்படையில் இதனை நான் கூறவுமில்லை. ஆனால் இந்த நாடு ''இந்தியா'' எனப் பெயரிடப்பட்டிருப்பதால், இந்த சட்டத் தொகுப்பு ''இந்திய சட்டத் தொகுப்பு'' என அழைக்கப்பட்டிருந் தால், அது வேறுபட்ட அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றிருக்கும். ''இந்து சட்டத் தொகுப்பு'' என்று கூறும்போது அந்த சொல் குறிக்கும் முழுப் படப்பிடிப்பும் நம் மனத்தில் தோன்று கிறது. எனவே, ''இந்து'' என்னும் சொல் எதைக் குறிக்கிறது என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும்; மனத்தில் கொள்ள வேண்டும். இது கடினமான சொல்; ஒரே வரியில் அதனை விளக்கிவிட முடியாது. எனினும் இந்து மதத்தில் தலைசிறந்த, ஒப்புயர்வற்ற ஓர் அம்சம் இருக்கிறது என்றால் அந்த அமைப்பின் எல்லையற்ற சகிப்புத் தன்மையும், விரிந்துபரந்த மனப்பான்மையும்தான் அது. நமது பிரதமர் ஜவஹர்லால் நேருவே இந்து மதத்தைப் பற்றிக் குறிப்பிட் டிருக்கிறார்; ''வாழு, வாழ விடு'' என்னும் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டது இந்து மதம் என்று கூறியிருக்கிறார். நாம் இந்துக்களிடையே மிகவும் நேரெதிரான கண்ணோட்டங்களை உடையவர்களைக் கொண்டிருக்கிறோம். நாம் புனிதமான உயர்ந்த சமய நூல்களையும் ஆறு **தர்சனங்கள்** என்னும் தத்துவார்த்தப் பிரிவுகளையும் பெற்றுள்ளோம். அவற்றில் ஒன்று ஈடு இணை யற்ற மதிக்கூர்மையும் நுழைபுலமும் கொண்ட மாமேதைகளான ஜைமினி, சங்கரர், குமரில்லா போன்றோரால் சுடர்விட்டு ஒளிர் கிறது. இவர்களை எல்லாம் போற்றிப் புகழ்வதற்கு அடைமொழி களைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை; ஏனென்றால் இதற் குரிய சொற்களைத் தேர்ந்தெடுப்பது கடினம். இது ஒருபுறமிருக்க, இன்னொரு பிரிவும் இருக்கிறது: அது புலனறிவு வகையில் மிகவும் மழுங்கலானது, பண்பற்றது, இன்னும் சொல்லப்போனால் எதையும் நேருக்கு நேராக பிரத்தியட்சமாகப் பார்த்தாலொழிய புரிந்துகொள்ளவோ நம்பவோ மறுப்பது. பாவம், சார்வாகர் தம் முன்னே உள்ளங்கை இருந்தாலும் அதற்குப் பின்புறமும் இருப்பதை நம்ப மறுப்பார்; ஏனென்றால் அது **பிரத்தியக்ஷமாக** இல்லாததால்....

**டாக்டர் எம்.எம். தாஸ்:** ஓர் ஒழுங்கு பிரச்சினை. இந்து சித்தாந்தத்தையும் பண்டைக்கால ரிஷிகளையும் பற்றி உரைகள் ஆற்றப்படுவதைக் கேட்பதற்கு இங்கு நாம் வரவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒழுங்கு, ஒழுங்கு. மதிப்பிற்குரிய உறுப்பினர் மிகவும் பொறுமை இழந்து காணப்படுவதைப் பார்க்கிறேன். மற்ற தரப்பினரது கருத்தையும் அவர் செவிமடுத்துக் கேட்க வேண்டும். மதிப்பிற்குரிய உறுப்பினர் இவ்வாறு தொடர்ந்து குறுக்கிட்டுக் கொண்டே இருப்பார் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இது சர்ச்சைக்குரிய விஷயம் என்பதால் போதுமான நேரம் ஒதுக்கியுள்ளேன் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள் என்பதையும் நன்கு உணர்ந்துள்ளேன். விவாதத்தை இப்போது நான் முடிக்கவில்லை. குறுக்கீடுகள் எந்த அளவுக்குக் குறைவாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவர் தமது உரையை சீக்கிரமே முடித்துக் கொள்வார். இல்லையென்றால் பேசுவதற்கு இன்னொரு நாள் வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுப்பார்.

**பண்டிட் மாளவியா :** இந்துக்களிடையே நிலவும் தத்துவார்த்த, மெய்ஞ்ஞானக் கண்ணோட்டம் எந்த அளவுக்கு வேறுபட்டத் தன்மையும், பரந்த விரிந்த தன்மையும் கொண்டதாக இருக்கிறது என்பதைத்தான் இங்கு சுட்டிக்காட்டினேன். அதனால் எவரும் தத்துவார்த்த நோக்கில் பேச வேண்டிய அவசியமே இல்லை என்று கருதுகிறேன். இது தேவையற்றது என்றே நினைக்கிறேன். ஆனால் சற்று முன்னர் தெரிவிக்கப்பட்ட கருத்துகளைப் பார்க்கும் போது துரதிர்ஷ்டவசமாக இது தேவையானது என்றே தோன்றுகிறது. **தர்சனங்களில்** கூட ஒரு புறம் தூய்மையான **வேதாந்தத்தையும்** இன்னொருபுறம் களியாட்ட தத்துவவாதியான சார்வாகரின் ஐந்து **மகராக்களையும்** காண்கிறோம்! அந்த ஐந்து **மகராக்களைப்** பற்றி இப்போது நான் எதுவும் கூறப்போவதில்லை....

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்:** அவற்றைப் பற்றிப் பேசுங்கள், பேசுங்கள்.

**பண்டிட் மாளவியா :** .... ஏனென்றால், பண்பு நலம் சம்பந்தமான எனது சொந்தக் காரணங்கள் ஒருபுறமிருக்க, தத்துவார்த்த சிந்தனையில் ஆழமான ஆர்வமில்லாத சில உறுப்பினர்களுக்குக் கூட இது தெரிந்திருக்கும்!

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த விஷயம் குறித்த விவாதத்திற்கு இது எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கும்?

**பண்டிட் மாளவியா:** நான் சுட்டிக்காட்ட முயல்வது என்னவென்றால் ....

**டாக்டர் அம்பேத்கர்: மகராக்கள்** மிகவும் பயனுள்ளவை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது **மகராக்களை** எவ்வகையிலாவது கறைப்படுத்துமா?

**பண்டிட் மாளவியா:** பிரதான **தர்சனாக்களில்** கூட பல்வகைமையைக் காண்கிறோம். இவற்றில் **ஆஸ்திக தர்சனாக்களும் நாஸ்திக தர்சனாக்களும்** குறிப்பிடத்தக்கவை. சில **தர்சனாக்கள் பரப்பிரம்மம், பிரம்மம், ஜீவன்** ஆகிய ஆஸ்திகக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன. வேறு சில **தர்சனங்கள் பிரமமில்லை, வேதமில்லை, கடவுள் இல்லை** ஆகிய நாத்திகக் கோட்பாடுகளை முன்னிலைப்படுத்துகின்றன. இதே போன்று இதர துறைகளிலும் வேறுபட்ட கருத்துகளும் மாறுபட்ட நிலையில் பொருள்களும் இருப்பதைக் காண்கிறோம். இந்துக்களில் சில ரிஷிகளும் வேறு சிலரும் மாட்டிறைச்சி உண்பவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று நமக்கு நினைவுபடுத்துவதை சிலர் ஒரு பாணியாகக் கொண்டிருக்கிறார்கள். இதே சமயம் பசுவைப் பயபக்தியுடன் வணங்கிப் போற்றும் காட்சியையும் காண்கிறோம். இந்து சமுதாயத்தில் பாலிய திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்து சமுதாயத்தில் இளம் சன்னியாசிகள் இருக்கிறார்கள். இந்து சமுதாயத்தில் மிகக் கடுமையான, கற்பனை செய்து பார்ப்பதற்குக்கூட கடினமான தவங்கள் நடைபெறுகின்றன. அதே சமயம் இந்து சமுதாயத்தில் மிக ஆடம்பரமான புலனுகர்வு கேளிக்கைகள் நடைபெறுகின்றன. இந்து சமுதாயத்தில் பிராமணர்கள் இருக்கிறார்கள்; **சண்டாளர்கள்** இருக்கிறார்கள். ஆனால் நான் குறிப்பிடும் **சண்டாளர்கள்** கடுமையான கட்டுப்பாடுகளுக்கும் தண்டனைகளுக்கும் ஆளாகுபவர்கள் அல்ல, மாறாக, பிராமணர்களைப் போன்றே பல்வேறு உரிமைகளும் சலுகைகளும் பெறுபவர்கள். *(குறுக்கீடு).*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நமது அரசியல் சாசனத்தின்படி இனி யாரையும் **சண்டாளன்** என்றோ தீண்டப்படாதவன் என்றோ குறிப்பிடுவது சட்டப்படி குற்றமாகும்.

**பண்டிட் மாளவியா:** ஒரே சமயத்தில் பலர் பேசுவதால் நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பது எனக்குக் கேட்கவில்லை, ஐயா.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** அரசியலமைப்பு அம்சம் ஒருபுறமிருக்க, ***சண்டாளர்*** பற்றிக் குறிப்பிடுவது இனியும் உகந்த தல்ல. அரசியலமைப்புச் சட்டப்படி அது ஒரு குற்றமாக ஆக்கப் பட்டுள்ளது.

***டாக்டர் தேஷ்முக் :*** அவர் வரலாறு பற்றி மட்டுமே குறிப் பிட்டுப் பேசுகிறார்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** ஏதேனும் வரலாறு இருக்கக் கூடும், ஆனால் எல்லா வரலாறுமே குறிப்பிடுவதற்கு மிகவும் ஏற்ற தல்ல.

***பண்டிட் மாளவியா :*** எந்த ஒரு தனி நபரையும் நான் குறிப் பிட்டுப் பேசவில்லை. கடந்தகால அமைப்பைப் பற்றித்தான் இங்கு கூறுகிறேன். எனினும் நீங்கள் கூறுவதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறேன்.

***டாக்டர் அம்பேத்கர் :*** நீங்கள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்?

***பண்டிட் மாளவியா:*** நான் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கேட்கிறார். ஏனென்றால் மற்றவர் களைப் போல் அல்லாமல் நான் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் உறுப்பினன்.

இந்து சமுதாயத்தில் பல்வேறு நடைமுறைகள் அருகருகே பரஸ்பரம் அமைதியோடும் பண்போடும் நிலவி வருகின்றன என்பதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். இது இந்து சமயத்தின் ஒரு மகோன்னதமான அம்சமாகும். ஆனால் இந்தப் பரந்த மனோபாவமும் சகிப்புத்தன்மையும் எப்படிச் சாத்திய மாகின்றன? விஷயம் இதுதான்: எல்லாவற்றுக்கும் ஆணிவேராக, ஆதார சுருதியாக இருக்கக்கூடிய சில அடிப்படை கோட்பாடுகள் உள்ளன; இவை முதலில் விதித்தமைக்கப்பட்டு நிர்ணயிக்கப்படு கின்றன; எத்தகைய ஐயத்துக்கும் சர்ச்சைக்கும் இடமின்றி அவை காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன; அவை குறுகிய சமய நெறிகளோ அல்லது சமய வினைமுறைகளோ அல்ல; எத்தகைய சர்ச்சைக்கு இடமான விதிமுறைகளோ அல்ல; மாறாக அவை குறிப்பிட்ட அடிப்படைக் கோட்பாடுகளை

மையமாகக் கொண்டவை; சமுதாயம் தொடர்ந்து, நிலையாக, உறுதியாக நீடித்து வளர்ந்து வளமும் நலமும் பெறுவதற்கு இன்றி யமையாதக் கூறுகளாகத் திகழ்ந்து வருபவை. இந்தக் கோட்பாடு களை எந்தப் பெயரில் வேண்டுமானாலும் நீங்கள் அழைக்கலாம்; ஆனால் எந்த ஆரோக்கியமான சமுதாயமும் உருக்கு உறுதியோடு நிரந்தரமாக நிலை கொள்வதற்கு இந்தக் கோட்பாடுகள்தான் என்றென்றைக்கும் ஆதார அடித்தளமாக அமைந்துள்ளன. இந்த நாட்டில் இந்தக் கோட்பாடுகளுக்கு **சனாதனம்** எனப் பெயரிடப் பட்டுள்ளது. கற்றறிந்த ஒரு பேச்சாளர் நேற்று துரதிர்ஷ்டவசமாகக் குறிப்பிட்டதுபோல் **சனாதனம்** என்பதற்கு சர்வசதாவும் மாறிக் கொண்டிருக்கும் **நித்ய நூதனா** என்று பொருள் அல்ல; மாறாக என்றென்றும், எப்போதும் நீடித்து நிலைத்து வந்திருக்கும் ஒன்று என்றே அதற்குப் பொருள். எனவே, இந்து சமுதாயத்தின் கட்டமைப் பில் ஏதேனும் மாற்றங்கள் செய்யும் பணியை மேற்கொண்டால் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; மரத்தின் இலைகள், கிளைகள் போன்றவற்றில்தான் நாம் கைவைக்க வேண்டும்; மரத்தின் ஆணிவேரையே வெட்டியெறியக் கூடாது; அதாவது வேறுவிதமாகச் சொன்னால் சமுதாயத்துக்கு ஆதாரமாக அமைந் துள்ள அடிப்படைக் கோட்பாடுகளை வெட்டி சாய்த்து வேரறுக்கக் கூடாது; அவற்றுக்கு எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாது; காலத் தின் பாடழிவுகளை எல்லாம் வென்று அது முன்னேறியுள்ளது. உலகில் வேறு எந்த சமுதாயமும் மனித குலத்துக்குத் தெரிந்த வரையில், இவ்வாறு எத்தனை எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு இடையே, இன்னல் இடுக்கண்களுக்கு இடையே தாண்டுகால் போட்டு முன்னேறிவந்ததாகத் தெரியவில்லை. எனவே, இந்த அடிப்படைக் கோட்பாடுகள் யாவை என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

*நண்பகல் 12 மணி* உத்தேச இந்து சட்டத் தொகுப்பு மசோதா இந்து சாஸ்திரங்களின்படியே அமைந்துள்ளது என்று இன்று இந்த நாட்டின் அரசாங்கத்தை அமைக்கப் போகிற மூன்று மேதகு பெரிய மனிதர்கள் கூறியதைக் கேட்டு நான் ஓரளவு அதிந்துபோனேன். இந்த மசோதா உரிய முறையில் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் சாஸ்திரங்கள் மிக ஆழமாக ஆராயப்பட்டன என்று கூறியதையும் கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன். இத்தகைய கற்றறிந்த மேதாவிகளை எதிர்த்து வாதிட எவரும் இயல்பாக தயங்கவே செய்வார்கள். ஆனால் இந்து சாஸ்தி ரங்கள் தொன்னெடுங் காலந்தொட்டே உலகின் சொத்தாக இருந்து

வந்திருக்கின்றன. பலர் அவற்றைப் படித்திருக்கிறார்கள்; பலர் இனி படிக்கவும் செய்வார்கள். நானும் இந்து சாஸ்திரங்களை ஓரளவு படித்திருக்கிறேன். எனவே, மேலேகண்ட வாதத்தில் எத்தகைய நியாயமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை எனவே, இது விஷயத்தில் ஒரு யோசனை கூறுகிறேன்: இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை இந்து சாஸ்திரங்களுக்கு ·இணங்கவே நாங்கள் தயாரித்திருக்கிறோம் என்று அரசாங்கம் உரிமை கொண்டாடினால் அந்தக் கண்ணோட்டத்திலேயே பிரச்சினையை அணுகுவோம். ஆனால் இதற்கு மாறாக வேறொரு நிலையை மேற்கொண்டால் அதாவது இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைத் தயாரிப்பதற்கு இந்து சாஸ்திரங்கள் எவ்வகையிலும் அடிப்படையாக இருக்க வில்லை, இந்த மசோதாவை உருவாக்கியவர்களின் விவேகமும், ஆர்வமும் விருப்பமும் துடிப்பும்தான் இந்த மசோதாவைத் தயாரிப் பதில் தீர்மானமான அம்சமாக இருந்திருக்கின்றன என்று கூறப்படு மானால் அது வேறு விஷயம். எனக்குத் தெரிந்தவரை இதுகாறும் அப்படி எதுவும் கூறப்படவில்லை. எனவே இந்த மசோதா இந்து சாஸ்திரங்களின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது என்ற அனுமானத்தின் அடிப்படையில் தொடர்கிறேன். அப்படியாயின் அதை எவ்வாறு தீர்மானிப்பது? இந்து சாஸ்திரங்களில் தெரிவிக்கப் பட்டிருக்கும் ஒரு கருத்துக்கு சாஸ்திரங்களில் என்ன பொருள் என்பது குறித்து சட்ட அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற விழை கிறேன். நான் சொல்லுவது கற்றறிந்த சட்ட அமைச்சர் போன் றோருக்கு வெறும் கால விரயமாகத் தோன்றக்கூடும்; ஏனெனில் நான் கூறுவதன் பொருள் என்ன என்பதை அவர் அறிவார் என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை. ஆனால் இந்த நாடாளு மன்றத்தின் உறுப்பினர்களாகிய நாம் ஒரு ஜீவாதாரமான விஷயம் குறித்து சட்டம் இயற்ற இங்கு வந்திருக்கிறோம். ஆனால் நாடாளு மன்ற உறுப்பினர்களாகிய நாம் முழுதளாவிய ஒரு முக்கிய பிரச்சினை குறித்து சட்டம் இயற்ற இங்கு வந்திருக்கிறோம் என்றால், ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டின் அடிப்படையில் இதனைச் செய்யப்போகிறோம் என்றால், அதாவது இந்து சாஸ்திர சித்தாந்தங் களுக்கு இணங்க இது செய்யப்படுகிறது என்றால் அப்போது இந்த அவையின் உறுப்பினர்களாகிய நாம் சாஸ்திரங்களின் பொருளை வியாக்யானம் செய்வது சம்பந்தப்பட்ட விதிகளையும், வழிமுறை களையும், அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளையும் கவனத்தில் கொள்வது நமது .கடமை என்பதை நான் உணர்கிறேன். இந்து சமுதாயம் போன்ற ஒரு சமுதாயத்துக்கான சட்டம் அரசாங்கத்திட மிருந்தோ, அமைச்சரிடமிருந்தோ, அல்லது பலமிக்க, உயர்ந்த

வேறு எவரிடமிருந்தே வந்தாலும் அது **மீமாம்சைக்கு** இசைந்ததாக இருக்க வேண்டும்.

**திரு. சித்வா** (மத்தியப் பிரதேசம்) : அன்பு கூர்ந்து சபாநாயகரைப் பார்த்துப் பேசுங்கள்.

**பண்டிட் மாளவியா :** மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் திரு. சித்வா சபாநாயகரைப் பார்த்துப் பேசும்படி கூறுகிறார். இதைத்தான் நான் செய்கிறேன்; வேறுவிதமாக நான் நடந்து கொள்ளவில்லை. நண்பர் சித்வா இதனை அவ்வளவு சலபமாக மறந்துவிடலாகாது என்று கேட்டுக் கொள்கிறேன். இந்துக்களின் சமுதாயம் போன்ற ஒரு சமுதாயத்தில் அனைத்துமே காலம் காலமாக - இது எத்தனை எத்தனை லட்சோபலட்சம் ஆண்டுகள், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் என்பது ஆண்டவன் ஒருவனுக்கே தெரியும் - வழிவழியாக வந்துள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்; அக்காலத்தில் அச்சகங்கள் எதுவும் இல்லை, அச்சடிப்பதற்கான காகிதம் இல்லை; எல்லாமே ஞாபகசக்தியின் மூலமே நடைபெற்றது; ஆசிரியரிடமிருந்து மாணவருக்கும், பெற்றோரிடமிருந்து பிள்ளைக்கும் பரவிற்று; இதில் சகலமுமே சரியான உச்சரிப்பையும், குரல் உயர்வு தாழ்வையும், பிழையற்ற வாசகத்தையும், பண்டையச் சொற்களுக்கான மற்றும் மந்திரங்களுக்கான சரி நுட்பமான வியாக்யானத்தையும் சார்ந்திருந்தன; புதிய சட்டங்கள், புதிய உடன்பாடுகள் முதலியவை காகிதத்தில் அச்சிடப்படாமல், மனிதர்களின் மனங்கள் மற்றும் நினைவுகள் மூலமாக காலம் காலமாக வெளிப்பட்டு வந்தன; அவற்றிற்குரிய முக்கியத்துவமும் இடமும் அளிக்கப்பட்டு வந்தன; இத்தகையதோர் சமுதாயத்தில் மரபுரிமை மூலங்களை வியாக்யானம் செய்வதற்கு மிகவும் நுட்பமான, மிகவும் விரிவான, மிகவும் ஆக்க ரீதியான விதிகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை என்றால் அவற்றிற்கு படுமோசமான அழிவு நேரிட்டிருக்கும். எந்த **ஸ்ருதிகளுக்கும்** அல்லது **ஸ்மிருதிகளுக்கும்** எவ்விதம் வியாக்யானம் செய்ய வேண்டும் என்பது **மீமாம்சையில்** தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது. மேலும், ஓரிடத்தில் காணப்படும் ஒரு வரியைக் கொண்டு மட்டும் மரபொழுங்கின் தாத்பரியத்தைத் தெரிந்து கொள்ள முடியாது என்பதும் **மீமாம்சையில்** சுட்டிக்காட்டப்பட்டிருந்தது; இதற்கு எத்தனை எத்தனையோ

சோதனைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமும் வலியுறுத்தப் பட்டிருந்தது.

*(இப்போது சபாநாயகர் பீடத்தில் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா அமர்ந்தார்)*

ஆதலால், இந்து சட்டத்தொகுப்பு இந்து சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் அடிப் படையாகக் கொண்டது என அரசாங்கம் உரிமை கொண்டாடு மானால் அதன் பல்வேறு ஷரத்துகளை மிகவும் கவனமாகவும், விதிமுறைகளின்படியும் பரிசீலனை செய்ய வேண்டும், சாஸ்திரங் களில் கூறப்பட்டுள்ளவற்றை அவை கடைப்பிடிக்கின்றனவா அல்லது மீறுகின்றனவா என்பதை நாம் கண்டறிய வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளாகும். அவை இந்து சாஸ்திரங்களுக்கு உடன்பாடானவையாக இல்லாததோடு, அவற் றுக்கு நேரெதிராகவும் அமைந்துள்ளன என்பது எனது தாழ்மை யான கருத்தாகும். *(குறுக்கீடு)*. நான் இந்த விஷயத்தைப் போதிய அளவு விளக்கமாகக் கூறவில்லை என்று எனக்குப் பின்னாலிருந்து யாரோ கூறுவது என் செவிகளில் விழுகிறது. இதனை நான் இன்னமும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்புகுந்தால் என் உரையை முடிக்க பல நாட்கள் ஆகும் என்பதை என் நண்பர் புரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்பகிறேன்.

**திரு. முனாவல்லி :** அதுதான் உங்கள் நோக்கமும் கூட.

**பண்டிட் மாளவியா:** நிறைய பேரறிவு தத்துவத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்; இதற்கு இங்கு ஒரு புதிய அம்சம் இருப்பதை இப்போது நாம் காண்கிறோம்; மற்றவர்களின் மனதை அறிந்திருப்பதுதான் அது.

**திரு. முனாவல்லி :** நிச்சயமாக.

**பண்டிட் மாளவியா:** மதிப்பிற்குரிய உறுப்பினரைப் பாராட்டு கிறேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறுகிய நேரத்தில் இரத்தினச் சுருக்கமாக என் கருத்துகளை எடுத்துரைக்க விரும்பு கிறேன். மிகுந்த பொறுப்புணர்வோடுதான் இதனைக் கூறுகிறேன். இங்கு நான் தெரிவிக்கும் கருத்துகளை இன்னும் விரிவாகவும் விளக்க

மாகவும் தெரிந்து கொள்ள எவரேனும் விரும்பினால் இந்த விவாதம் முடிந்த பின்னர் என் அறைக்கு வருமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு அவர் என் அறைக்கு வந்தாரேயானால் மேற்கொண்டு கூறுவதற்கு எவ்வளவு இருக்கிறது என்பதையும், மேலும் ஆராய்வதற்கு எவ்வளவு விஷயம் இருக்கிறது என்பதையும், இங்கு நான் சுருக்கமாகக் கூறும் கருத்துக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் எவ்வளவு ஆழ்ந்து ஆராய வேண்டியிருக்கிறது என்பதையும் அவர் உணரும்படிச் செய்வேன்.

சாஸ்திரங்களின் வழி நாம் செல்லுவோமானால் முழு விஷயமும் தீர்ந்துவிடும்; ஏனென்றால் அப்போது எத்தகைய கருத்து வேறுபாட்டுக்கும் அல்லது வாத எதிர்வாதத்துக்கும் இடம் இருக்காது. எந்த விஷயமானாலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அளவுகோல் குறித்து ஒத்துப்போவார்களேயானால் எத்தகைய பிரச்சினையும் எழாது; ஏனென்றால் இருதரப்பினரும் அந்த அளவுகோலைக் கொண்டே இருவரின் திருப்திக்கேற்ப துணியை அளந்து கொள்ளலாம். இச்சட்டத்தை சாஸ்திரத்தின் அடிப்படையிலும், மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வியாக்யான விதிகளின்படியும் வகுக்கப் போகிறோம் என்பது ஒப்புக் கொள்ளப்படுமானால், அது அனைவருக்கும் எளிதானதாக இருக்கும்; அப்போது சட்ட அமைச்சர் ஆற அமர்ந்து, ஷரத்துவாரியாகப் பரிசீலித்து முடிவெடுக்க முடியும். *(குறுக்கீடு).* மேலும் சட்ட அமைச்சர் மிகவும் தெளிவான ஒரு கண்ணோட்டத்தைப் பெறுவார் என்பதையும் காண்கிறேன். சட்ட அமைச்சருக்கோ அல்லது வேறு எந்த உறுப்பினருக்கோ அல்லது எனக்கோ கூட இது விஷயத்தில் எத்தகைய கருத்தும் இருக்கக்கூடும். எனினும் எந்த ஒரு துணியையும் அளப்பதற்கு ஒரு கஜக்கோல் இருக்கிறது என்பதை சட்ட அமைச்சரும் ஏனையோரும் ஒப்புக்கொள்வார்களேயானால் அப்போது எத்தகைய கருத்து வேறுபாட்டுக்கும், சச்சரவுக்கும் இடம் இருக்காது. *(குறுக்கீடு).* நான் இதனை ஏற்கெனவே தெள்ளத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் தொன்னெடுங்காலமாக, வழிவழியாக வந்துள்ள இந்த அளவுகோலைப் பற்றி திரு. பாரதி போதுமான அளவு தெரிந்துகொள்ளவில்லை; (**திரு. பாரதி :** அந்த அளவுகோல்பெரிதும் மாறுபடுகிறது.) அந்த அளவுகோலின் அடிப்படையிலேயே புனித நூல்கள் வியாக்யானம் செய்யப்பட வேண்டும்.

**திரு. பாரதி:** இந்த அளவுகோலின் வேறுபாடு ஓர் அங்குலம் முதல் ஒரு மைல் வரை இருக்கக்கூடும்.

**பண்டிட் மாளவியா :** அளவுகோல்களுக்கு இடையேயான வேறுபாடு ஓர் அங்குலம் முதல் ஒரு மைல்வரை இருக்கக்கூடும் என என்னுடைய நண்பர் திரு. பாரதி சொல்கிறார். இது குறித்து என்னால் ஏதேனும் சொல்ல முடியுமா என்பது எனக்குத் தெரிய வில்லை. ஏனென்றால் நான் குறிப்பிட்ட அளவுகோலின் தன்மை குறித்து மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் அறவே தெரிந்திருக்க வில்லை என்றே தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஒரு மில்லி மீட்டரில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு வேறுபாடு எதுவும் இருக்கும் என்ற பிரச்சினைக்கே இடமில்லை. எனவே, இது ஏற்றுக்கொள்ளப் படுமானால் இந்த விஷயம் குறித்த எல்லா சர்ச்சையும் முடிவுக்கு வந்துவிடும், இதன் காரணமாக இந்தக் கட்டத்தில் இதற்கு மேல் எதுவும் கூற அவசியம் இருக்காது என்றே கருதுகிறேன். இந்த விஷயத்தை மாண்புமிகு அமைச்சருக்கு விட்டுவிடலாம். இதனை அறவே அவரது முடிவுக்கு விட்டுவிடுகிறேன்; இந்த சட்டத் தொகுப்பை ஆதரிப்பவர்களுக்கு மட்டுமன்றி இதன் ஷரத்துகளை **சாஸ்திரங்களின்** அடிப்படையில் பரிசீலித்து, **மீமாம்சை** மூலம் அவற்றை வியாக்யானம் செய்து, அவற்றை இந்தச் சட்டத் தொகுப் பின் ஷரத்துகளுக்குப் பொருந்துறச் செய்து, அவை இவற்றுக்கு எதிரானதல்ல என்பதை அவர் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பும் என் போன்றோர்களுக்கும் அவர் ஒரு நீதிபதியாக அல்லது நடுவராக செயல்படுவார் என்று நம்புகிறேன். என்னைத் திருப்தியுறச் செய்யும் வகையில் அவர் கூறினால் நான் மேற்கொண்டு என் எதிர்ப்பைத் தெரிவிக்க மாட்டேன். இதற்கும் அதிகமாக நேர்மையோடும் நியாயத்தோடும் எதுவும் கூறமுடியும் என்று நான் நினைக்க வில்லை. எனினும் இதனை அவர் செய்ய முடியாது. ஆதலால் இந்து சட்டத் தொகுப்பின் ஷரத்துகள் அனைத்தும் சாஸ்திரங்களில் அடங்கியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்று உரிமை கொண்டாடுவதை முற்றிலுமாகக் கைவிட வேண்டும்; திரும்பப் பெற வேண்டும் என்றுதான் குறைந்த பட்சம் நாம் கேட்க முடியும். அப்போதுதான் இத்தகைய கருத்துகளின் அடிப்படையைப் பரிசீலிப்பதற்குரிய விமர்சனத் திறமை பெற்றிராத லட்சோப லட்சக் கணக்கான மக்கள் இப்படிப்பட்ட முற்றிலும் தவறான, திசை திருப்பக்கூடிய கூற்றுகளால் வழி தவறி, அபாயகரமான படுகுழி யில் விழாமல் இருக்க முடியும். இந்த மசோதா அநேகமாக பாரபட்ச மற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கக்கூடும்; ஆனால் சொல்ல

முடியாத, அளவிட முடியாத விஷமத்தனம் அதில் உள்ளார்ந்து இடம்பெற்றுள்ளது. இத்தகைய நிலைமையில், இவை பற்றி சாஸ்திரங்களில் என்ன கூறப்பட்டுள்ளது என்ற பகைப்புலனில் இந்தப் பிரேரணைகள் அனைத்தையும் குறித்து விரிவாக, ஆழமாக பரிசீலனை செய்வதைத் தவிர இந்த அவையின் உறுப்பினர்களுக்கோ அல்லது என்னைப் போல் உணர்பவர்களுக்கோ வேறு வழி ஏதும் இல்லை. இது ஒரு நீண்ட நடைமுறையாக இருக்கும்; ஏனென்றால் இம்மசோதாவில் கூறப்பட்டிருப்பது சாஸ்திரங்களில் உள்ளதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று உரிமை கொண்டாடப்படுமானால் அப்போது பரஸ்பர உடன்பாட்டின் படியோ அல்லது கருத்துகளை ஆதாரமாகக் கொண்டல்லாமல் உண்மை விவரங்களை ஆதாரமாகக் கொண்டோதான் இது கைவிடப்பட முடியும்; இந்த உண்மை விவரங்களை நிலைநாட்டுவது என்பது ஒவ்வொரு கூறும், ஒவ்வொரு துணை கூறும், ஒவ்வொரு பொருண்மைக் கூறும், மேலும் ஏறத்தாழ ஒவ்வொரு சொல்லும் சாஸ்திரங்களிலும் இந்துக்களின் சட்ட நூல்களிலும் இது சம்பந்தமாக கூறப்பட்டுள்ளவற்றுக்கு எந்த அளவுக்கு ஒத்துப் போகின்றன என்பதை இந்த அவைக்கு எடுத்துக்காட்டுவதையே குறிக்கும். இவ்வாறு செய்வது சாத்தியமா என்பது எனக்குத் தெரியாது; இது அனுமதிக்கப்படக் கூடியதே என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை; ஆனால் இது நடைமுறைச் சாத்தியமா என்பதை நான் அறியேன். எனவே, நம்முன் உள்ள இந்த விஷயத்தின் நியாயம், நேர்மையின் நலன் கருதியும், இந்த மசோதா இந்த அவையில் மேலும் தொடர வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டும், அரசாங்கம் தனது நிலையை மறு ஆய்வு செய்தாக வேண்டும் அல்லது இந்த மசோதா இந்து சாஸ்திரங்களின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை, மாறாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை அனைத்தும் இதைத் தயாரித்தவர்களது விருப்பார்வத்தின் விளைவே தவிர வேறல்ல என்பதைப் பட்டவர்த்தனமாக, பகிரங்கமாக அறிவிக்க வேண்டும், அல்லது நான் குறிப்பிட்ட முறையை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்; அதாவது ஒவ்வொரு கூறையும் பாரபட்சமின்றி, முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்; முரண்பாடுகளுக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை நீண்ட நெடுங்காலமாக வழக்கில் இருந்துவந்துள்ள **சாஸ்திரங்களின்** அடிப்படையில்தான் உள்ளன என நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் வேறு சில சிக்கல்களும் உள்ளன. இந்த மசோதா திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்டது மட்டுமே என்று இப்போது கூறப்படுகிறது. ஆனால் இதில் எனக்குள்ள சிரமம் என்னவென்றால் எதார்த்த நிலை இந்தப் பிரச்சினையின் தன்மையில் சிறிதளவு வேறுபாட்டைக்கூடத் தோற்றுவிக்கவில்லை என்பதேயாகும். இந்த மசோதாவில் எந்தப் பகுதியாவது ஒட்டுமொத்தத்தில் சர்ச்சைக்கு இடமற்றதாக இருந்து, அது பரிசீலனைக்கு எடுத்துக் கொளளப்படுமானால், எத்தகைய சிரமமுமின்றி, சிக்கலுமின்றி அது இந்த அவையில் நிறைவேற்றப்படும் என்று உணர்கிறேன்.

ஆனால் இந்துக்களின் திருமணம் பற்றிய சட்டங்களை மாற்றும் பிரச்சினையை விட மிகவும் அடிப்படையானதும், அதிக சர்ச்சைக்குரியதுமான வேறு எதுவும் இருக்க முடியுமா? இதைவிட அதிக சர்ச்சைக்குரியது வேறு எதுவும் இருக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். இந்த மசோதாவின் இதர பகுதிகள் மிகுந்த சர்ச்சைக்குரியவையாக உள்ளன என்று சிலர் கூறக் கூடும் - அதே சமயம் வேறு சிலரோ திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட பகுதிதான் மிகவும் சர்ச்சைக்குரியது என்று அழுத்தம் திருத்தமாக வாதிடக் கூடும். எனவே, இந்தப் பகுதிகள் சம்பந்தப்பட்ட அளவில்தான் இந்த மசோதாவை இந்த அவையில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பது இந்தப் பிரச்சினையின் அடிப்படை அம்சத்தில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. எனவே, இந்த மசோதா சம்பந்தப்பட்ட மட்டில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். மக்களில் மிகப் பெரும் பகுதியினர் இந்த மசோதாவுக்கு எதிராக உள்ளனர் என்பதை ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன்; ஆனால் உண்மையில் அடிப்படையிலேயே பெரும் கோளாறு இருக்கிறது. இந்த விஷயம் முன்பொரு முறை விவாதத்திற்கு வந்த சமயம் ஒரு கட்டத்தில் மாண்புமிகு சட்ட அமைச்சர் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, அச்சமயம் இந்திய சமஸ்தானங்கள் என்று அழைக்கப்படுபவற்றின் மக்களுக்கு இந்த மசோதாவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது நோக்கமாக இருக்கவில்லை என்று கூறினார். அப்படி எப்போதேனும் சமஸ்தானங்களின் பிரச்சினை எழுமானால், சமஸ்தானங்களின் மக்களுக்கும் இந்த மசோதாவைப் பொருந்துறச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அப்போது அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமுன்னர் அது முற்றிலுமாகப் பரிசீலிக்கப்படும் என்று அவர் தமக்கே உரித்தான வழக்கமான முறையில், மிக

எச்சரிக்கையாகவும், துல்லியமாகவும் கூறினார்; அவர் கூறியதை இங்கு நான் அப்படியே மேற்கோள் காட்டவில்லை. இந்த மசோதா இந்த சமஸ்தானங்கள் எவற்றின் அரசிதழிலும் பிரசுரிக்கப்பட வில்லை என்பதை ஒவ்வொருவருமே அறிவர். அது இந்திய அரசாங் கத்தின் அரசிதழிலும், சில மாகாணங்களின் அரசிதழ்களிலும் மட்டுமே பிரசுரிக்கப்பட்டது; இதைத் தவிர வேறு எந்த சமஸ்தானங் களின் அரசிதழ்களிலும் அது பிரசுரிக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த மசோதாவைப் பரிசீலிக்கும்படியான வாய்ப்பு சமஸ்தானங்களின் மக்களுக்குக் கிட்டவில்லை; சொல்லப்போனால் இது விஷயத்தில் அந்த மக்களுக்கு எத்தகைய அக்கறையும் இருக்க வில்லை. இதன் விளைவு என்ன? இன்று, நமது புதிய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்திருப்பதன் விளைவாக அனைத்துப் பிரதேசங்களும் இந்த நாட்டின் ஒன்றிணைந்த பகுதியாக்கப்பட் டுள்ளன; இன்று எந்த சட்டம் இயற்றப்பட்டாலும் இந்தப் பகுதிகள் அனைத்தின் மக்களுக்கும் அது பொருந்துறச் செய்யப் படப் போகிறது. இந்த ஏறுமாறான நிலை பற்றி யாரேனும் சிந்தித்துப் பார்த்தார்களா? இந்த நாட்டின் மூன்றிலொரு பகுதி - இங்கு ஒரு பகுதியும் அங்கு ஒரு பகுதியும் அல்ல - மாறாக இந்த விரிந்து பரந்த நாட்டின் மூன்றிலொரு பகுதி....

**திரு. முனாவல்லி:** அது அப்படியல்ல, ஏனென்றால் பல சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் இணைந்து விட்டன.

**பண்டிட் மாளவியா:** ''அது அப்படியல்ல, ஏனென்றால் பல சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் இணைந்து விட்டன'' என்று என்னுடைய நண்பர் கூறுகிறார். இப்படிப்பட்ட புத்திசாலித்தன மான விளக்கத்தை மறுதலிக்க நான் விரும்பவில்லை. ஆனால் அந்த சமஸ்தானங்கள் இணைவதற்கு முன்னரும் சரி, இணைந்த பின்னரும் சரி இந்த மசோதா அங்கு எங்கும் பிரசுரிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. முனாவல்லி :** கேள்வி.

**பண்டிட் மாளவியா :** எனது நண்பர் நான் கூறியது பற்றி ஐயம் எழும்புகிறார். என்னை மீறிச்செல்லுகிறார் அவர். நான் சொன்னதையே திரும்பச் சொல்லுகிறேன். இந்த மாபெரும் துணைக் கண்டத்தின் மூன்றிலொரு பகுதி இந்தச் சட்டத்திற்கு உள்ளாகப் போகிறது; இது அவர்களது வாழ்வின், ஜீவிதத்தின் அஸ்திவாரங்

களை அடிப்படையிலேயே பாதிக்கப் போகிறது; இச்சட்டம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்காமலேயே இது நிகழப்போகிறது.

**திரு. லட்சுமணன்** (திருவாங்கூர், கொச்சி) : சமஸ்தானங்கள் சிலவற்றில் உதாரணமாக திருவாங்கூர் - கொச்சியில் இம்மசோதா பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டலாமா?

**திரு. பாரதி:** இதர எந்த சமஸ்தானங்களைப் பற்றியும் மதிப்பிற்குரிய நண்பர் அறிந்திருப்பாரா என்று தெரியவில்லை.

**பண்டிட் மாளவியா:** கரத்தின் உள்ளங்கை பகுதியைத் தவிர வேறு எதையும் பார்க்க மறுக்கும் ரகத்தைச் சேர்ந்தவனல்ல நான். குறுக்கீடுகளை நான் பொருட்படுத்துவதில்லை. ஏனென்றால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்பது எனக்குத் தெரியும்; அதே போல் நான் என்ன சொல்லுகிறேன் என்பதும் எனக்குத் தெரியும். நான் ஏதேனும் சொல்ல வேண்டும் என்பதற்காக இதனைச் சொல்லவில்லை; அல்லது அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக ஏதேனும் சொல்ல வேண்டும் என்பதற்காகவும் இதைச் சொல்லவில்லை; மாறாக நான் எதை நம்புகிறேனோ அதையே சொல்ல விரும்புகிறேன். எத்தனை எத்தனை குறுக்கீடுகளாலும், 'கேள்வி' என்பது போன்ற கூக்குரல்களாலும் உண்மையை அசைத்துவிட முடியாது. ஒரு விஷயம் உண்மையானதாகவும், சரியானதாகவும் இருந்தால், யார் என்னதான் கூறினாலும், 'கேள்வி' என்று கூக்குரல்கள் எழுப்பினாலும் அவை விஷயத்தைத் தெளிவுபடுத்தவே உதவும்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** குறுக்கீடுகளும் உதவிகரமானவையே.

**பண்டிட் மாளவியா :** அவை உதவிகரமாக இருந்தாலும் சரி, வேறு விதமாக இருந்தாலும் சரி, அது பற்றி நான் கவலைப்படவில்லை. இத்தகைய முக்கியத்துவமும் முதன்மையும் வாய்ந்த ஒரு விஷயத்தில் எவர் மனதிலும் ஐயங்கள் எழக்கூடும். இது இந்த அவையின் எந்த ஓர் உறுப்பினருக்கும் பொருந்தும். தமது மனத்தில் எழும் ஐயங்களை வெளியிடுவதற்கும், அது சம்பந்தமாகக் கேள்விகள் கேட்பதற்கும் இந்த அவையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். பேசுவதற்கு எழுந்து நிற்கும் உறுப்பினர் இத்தகைய கேள்விகளுக்கு தம்மால் முடிந்தளவு பதிலளிக்க

வேண்டும். இவ்வாறு இல்லை என்றால் சட்டமியற்றும் நாடாளு மன்ற அமைப்பு முறையின் இலட்சிய நோக்கே தோற்றுப்போகும். எனவே, குறுக்கீடுகளை நான் எவ்வகையிலும் ஆட்சேபிக்கவில்லை.

**திரு. ராதேலால் வியாஸ் :** சென்னையிலும் பம்பாயிலும் நடைமுறையில் இருந்துவரும் ஏகதார மணம் மற்றும் விவகாரத்து பற்றிய சட்டம் இந்து சமுதாயத்தை எந்த அளவுக்குப் பாதித்துள்ளது என்பது பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் விளக்கிக் கூறுவாரா?

**மாண்புமிகு அவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வாதக் கோவை அறுந்துவிடாதபடியும், குறுக்கீடுகளால் தடம் புரண்டு சென்று விடாதபடியும் பார்த்துக் கொள்ளுமாறு அவரை நான் கேட்டுக் கொள்ளலாமா?

**பண்டிட் மாளவியா:** உங்களுக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளேன், ஐயா, எவ்விதத்திலும் வழி தவறி சென்றுவிட மாட்டேன் என்று தங்களுக்கு உறுதி கூறுகிறேன். இந்த மசோதா எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ள இந்த சமஸ்தானங் களைச் சேர்ந்த மக்களுக்கு வாய்ப்பு ஏதும் இருக்கவில்லை என்பதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இந்த விஷயத்தை விரிவாகப் பரிசீலிக்கவும் சட்டம் இயற்றுவது சம்பந்தமாக எல்லோ ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, புகழ்பெற்ற கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் ஆராயவும், நேர்மைக்கேடான, தவறான நடைமுறையைச் சுட்டிக்காட்டவும் என்னால் முடியும். ஆனால் இவ்வாறு செய்வதற்குப் பதிலாக நிதர்சனமான உண்மைகளின் பால் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதிலும், அது எத்தகைய கொடுமையினை, அநீதியினைச் செய்ய முனைந்துள்ளது என்பதை உணர்த்துவதிலும்தான் நான் ஆர்வமுடன் இருக்கிறேன். அரசாங்கம் முழுமையாக இல்லாவிட்டாலும் முடிந்த அளவிலாவது தனது தவறினைத் திருத்திக்கொள்ளும் மார்க்கத்தைப் பின்பற்றினால் இதற்கு ஒரு விடிவு வரும். அரசாங்கம் அறிவித்துள்ளபடி இந்த மசோதாவை உடனடியாக நிறைவேற்ற அது முற்படும் நிலையில், மக்கள் தெரிந்து கொள்வதற்காக அதனைச் சுற்றுக்கு விடுவதோ அல்லது பிரசுரிப்பதோ இப்போது சாத்தியமில்லை. எனவே, இந்த நடைமுறையைப் பின்பற்றும்படி ஆலோசனை கூறி நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை.

ஒரு சகோதரி என் அருகில் இருந்தபடி எந்த நேரமும் என்

காதில் எதையோ முணுமுணுத்தபடி எனக்கு உதவிக்கொண்டிருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன்.

**திருமதி ரேணுகா ரே:** இந்த மசோதாவில் உத்தேசிக்கப் பட்டுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவான மிகச் சிறந்த சொற்பொழிவு இது என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண் டிருந்தேன்.

**திரு. முனாவல்லி:** இந்த விஷயம் குறித்து என் நண்பருக்குத் தெளிவு ஏற்படுத்த விரும்புகிறேன்; ஏனென்றால்....

**சர்தார் பி.எஸ். மான்:** தற்போது உரையாற்றிக் கொண் டிருக்கும் மரியாதைக்குரிய உறுப்பினர் இந்த அவைக்கு தெளிவு உண்டாக்க இதுவே தக்க தருணமாகும்.

**பண்டிட் மைத்ரா:** இந்த மசோதா சமஸ்தானங்களில் பிரசுரிக்கப்படவில்லை என்ற மிக முக்கியமான விஷயத்தை மதிப்பிற் குரிய உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்....

**மாண்புமிகு அவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவரது உதவிக்கு ஏன் செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரிய வில்லை.

**பண்டிட் மாளவியா:** இந்த மசோதா சமஸ்தானங்களில் பிரசுரிக்கப்படவில்லை என்றாலும் அங்கு அநேகமாக அது அமல் படுத்தப்படவிருக்கிறது. இந்த வெளிப்படையான அநீதியைக் களைய ஏதேனும் செய்தாக வேண்டும். இதை எவ்வாறு செய்வது என்ப தற்கு மாண்புமிகு அமைச்சர்தான் உகந்த வழி காண வேண்டும். நான் ஏற்கெனவே கூறியது போன்று நடைமுறைப்படுத்த முடியாத ஒரு கட்டத்தில் காரியசாத்தியமற்ற கோட்பாட்டளவிலான ஒரு யோசனையாகத் தெரிவிப்பது பயனற்றதாகும். எனவேதான் அவர்கள் இந்த மசோதா குறித்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இதனை வெளியிட வேண்டுமென்றோ அல்லது சுற்றுக்குவிட வேண்டும் என்றோ நான் கூறவில்லை. எனினும் இந்த இக்கட்டை ஓரளவுக் காவது சமாளிக்கும் பொருட்டு அநேகமாக வேறு ஏதேனும் வழி காண முடியும் என்று நம்புகிறேன். நாட்டின் இத்தகைய ஒரு பரந்த பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு சட்டரீதியில் இப்படிப்பட்ட ஒரு குறை இருக்கக்கூடாது என்பதை சட்ட அமைச்சரின் கவனத்திற்குக்

கொண்டுவருகிறேன்; இந்த மசோதாவை எதிர்க்கும் ஒருவனாக அல்லாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் தன்னை ஆட்படுத்திக் கொண்ட ஒருவனாக இதனைக் கூறுகிறேன். எல்லோருக்கும் அல்லாவிட்டாலும் சம்பந்தப்பட்ட சமஸ்தானங்களின் பொருட்டாவது இந்த முன்மொழிவைப் பரிசீலிக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு திருத்தத்துக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளேன். அந்தத் திருத்தம் கூறுவது என்ன? இந்த மசோதாவை எவருக்குப் பொருந்துறச் செய்ய வேண்டும் என்றாலும் முதலில் அவர் சார்ந்துள்ள மாநிலத்தில் ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், அந்த வாக்கெடுப்பின் முடிவின்படி அந்த மாநிலத்தின் சட்ட மன்றம் இந்த மசோதா செல்லும் என்று தீர்மானிக்க வேண்டும். இது குறித்து உரிய நேரத்தில் நான் விரிவாகப் பேசுவேன். எனது திருத்தம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் இப்போது நான் பரிந்துரைப்பதெல்லாம் இதுதான் : இந்திய சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்ட நாட்டின் பகுதிகளில் இந்த மசோதா பிரசுரிக்கப்படவில்லை; இங்கு மசோதா உரிய முறையில் பிரசுரிக்கப்பட்டுச் சுற்றுக்கு விடப்பட வேண்டும்; அந்தப் பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்றங்களில் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டும்; அதன் பின்னரே இந்த மசோதாவை இங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்; இதற்கு இந்த மசோதாவில் வழிவகை செய்வது குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சர் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்தால் இன்று நம்மை எதிர்நோக்கும் இந்த வெளிப்படையான தவறை அகற்றிட முடியும்.

**திருமதி ரேணுகாரே:** அடுத்த ஆயிரம் ஆண்டுக் காலத்துக்கு பிராமணீய சமுதாயத்தின் கொடுங்கோன்மையை அனுபவித்துக் கொண்டிருப்போம்!

**பண்டிட் மாளவியா:** ''அடுத்த ஆயிரம் ஆண்டுக் காலத்துக்கு பிராமணீய சமுதாயத்தின் கொடுங்கோன்மையை அனுபவித்துக் கொண்டிருப்போம்'' என்று என்னுடைய பெருமதிப்பிற்குரிய சகோதரி கூறுகிறார். நல்லது, ஆயிரம் ஆண்டுகளுக்கு அல்ல, என்றென்றைக்குமாக, நிரந்தரமாக அனுபவித்துக் கொண்டிருப்போம். அப்போதுதான் என் மரியாதைக்குரிய சகோதரி மட்டுமல்ல, இந்த உலகம் முழுவதுமே சீரிய பிராமணீயக் கோட்பாட்டின் அளவுக்கு உயர முடியும் - இந்தக் கோட்பாடு அனைவருக்கும் நீதியும் நேர்மையும் கிட்ட எப்போதுமே பாடுபட்டு வந்துள்ளது; தனது

சொந்த உரிமைகளையும் சலுகைகளையும் வலியுறுத்துவதை விட மற்றவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளை முன்னிறுத்தி வந்துள்ளது; பேராசை வெறியுடன் அளவுக்கு மீறி செல்வத்தைத் திரட்டிக் குவிக்கும் வாழ்க்கைப் பாதையை அது கடைப்பிடிப்ப தில்லை; சுயநல வாழ்க்கை முறையை, கீழ்த்தரமாக சிந்திக்கும் வாழ்க்கை முறையை, இழிவான வாழ்க்கைப் பாதையை அது பின்பற்றுவதில்லை; மாறாக மேதக்க, விழுமிய, சுயநலமற்ற வாழ்க்கை நெறியையே அது பின்பற்றி நடக்கிறது; மற்றவர்கள் வளர்ந்து வளம் பெறுவதற்காக, செழித்துக் கொழிப்பதற்காக பிராமணன் மட்டுமன்றி சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தன்னைத் தானே மறுதலிக்கிறான், உதாசீனம் செய்கிறான், எத்தனை எத்தனையோ இன்னல் இடுக்கண்களுக்கு உள்ளாக்கிக் கொள்கிறான். இந்தக் கோட்பாட்டின் விழுப்பம், உயர்நிலை, மேதகைமை மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டன என்பதை நானறிவேன். **(கேளுங்கள், கேளுங்கள்)**. எனினும் சமுதாயமும் மனித குலமும் தார்மீக ரீதியிலும், சமூக ரீதியிலும், அறநெறி ரீதியிலும், ஆன்மீக ரீதியிலும், சித்தாந்த ரீதியிலும் உயர்வுற முடியும் என்று நம்புகிறேன், பிரார்த்திக்கிறேன்; அப்போது பிராமணன் உண்மையான பிராமணனாக இருப்பான், சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களும் காலத்திற் கேற்ப உயர்வடைவார்கள்! இதர எல்லோரையும் போன்றே பிராமணனும் சீர்கெட்டு வருகிறான் என்ற உண்மையையும் நான் உதாசீனம் செய்யவில்லை....

**திருமதி துர்க்காபாய்:** உபதேசம், நடைமுறை ஆகிய இரண்டிலும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** இந்தப் பெண் உறுப்பினர் ஏன் அடிக்கடி குறுக்கிடுகிறார்?

**பண்டிட் மாளவியா:** இந்த அம்மையாரும் நானும் வெவ்வேறு பெற்றோர்களுக்குப் பிறந்திருந்தாலும் அவர் என்னுடைய உண்மையான சகோதரி போன்றவர்; ஏனென்றால் நாங்கள் இருவருமே ஒரே அமைப்பில் பிறந்தவர்கள். பிராமணன் சொல்லிலும் செயலிலும் உயர்ந்து உன்னத இடத்தைப் பெற வேண்டும் என்று என்னுடைய இந்த சகோதரி என்னிடம் கூறுகிறார். அப்படித்தான் இருக்க வேண்டும், மற்றவர்களிடமும் இது அவசியம் இருக்க வேண்டும் என்று விழைகிறேன், பிரார்த்திக்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** இது ஒரு புறமிருக்கட்டும், இந்து சட்டத் தொகுப்பைப் பற்றி நாம் பார்ப்போம்.

**பண்டிட் மாளவியா :** நாம் மீண்டும் அந்தத் தூய, விழுமிய பிராமணீயக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்போமானால் இந்து சமுதாயத்தைப் பீடித்திருக்கும் அனைத்துக் கேடுகளும், தீமைகளும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிப் போகும், முன்பொரு காலத்தில் இருந்ததுபோல் மனிதகுலம் முழுமைக்கும் தலைமை ஏற்கும்; சமுதாயத்தின் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்கு எதிராக அநீதி இழைத்த காலத்தை, கொடுங்கோன்மை புரிந்த காலத்தை இங்கு நான் குறிப்பிடவில்லை; மாறாக ஒவ்வொரு உறுப்பினரும்....

**திருமதி ரேணுகா ரே:** எல்லாவற்றையும் நினைத்துப் பாருங்கள்.

**பண்டிட் மாளவியா:** நிச்சயமாக எல்லாவற்றையும் நினைத்துத்தான் பார்க்கிறேன். இல்லையென்றால் இவ்வாறெல்லாம் பேசமாட்டேன். திருமதி ரேணுகாதான் இதைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

**திருமதி ரேணுகா ரே:** ஒரு காலத்தில் நலிந்த நிலையிலிருந்த இந்து சமுதாயத்தைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். தயவு செய்து **வேதங்களையும் உபநிடதங்களையும்** நினைவு கூருங்கள்.

**மாண்புமிகு அவைத் தலைவர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வாதத்தைத் தொடரலாம்; குறுக்கீடுகளுக்கு செவி சாய்க்க வேண்டியதில்லை. இல்லையென்றால் அவர் கூற வந்த விஷயம் தொடர்பற்றுப் போய்விடும். அவரது பேச்சில் குறுக்கிட வேண்டாம் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி துர்க்காபாய் :** இங்கு நான் குறுக்கிடலாமா, ஐயா? ராமரின் உதாரணத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதே இந்த மசோதாவின் நோக்கம் இல்லையா? அது இப்போது நமது வாதத்துக்குரிய விஷயம் இல்லையா?

**மாண்புமிகு அவைத் தலைவர் :** நிச்சயமாக இது குறுக்கீடு தான்.

**சர்தார் பி.எஸ். மான் :** மதிப்பிற்குரிய பெண் உறுப்பினர்களிடமிருந்து வரும் குறுக்கீடுகளை உதாசீனம் செய்வது இக்காலத்தில் மிகவும் அபாயகரமானது.

**திருமதி துர்க்காபாய் :** குறுக்கீடு விஷயத்தில் பெண் உறுப்பினர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் இடையே வேறுபாடு ஏதுமில்லை.

**பண்டிட் மாளவியா:** பிராமண சமுதாயத்தில் பெண்ணுக்கு மிக உயர்ந்த இடம் தரப்பட்டிருந்தது. தாயைவிட உயர்ந்தது எதுவும் இல்லை.

**டாக்டர் எம்.எம். தாஸ் :** ஓர் ஆண் 250 மனைவிகளைத் திருமணம் செய்து கொள்கிறார்; இதுதான் பெண்களுக்குத் தரப்படும் மதிப்பா?

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அமைதி, அமைதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும்.

**பண்டிட் மைத்ரா :** எந்த ஆண் 250 மனைவிகளைத் திருமணம் செய்துகொண்டார்!

**டாக்டர் எம்.எம். தாஸ் :** நான் குறிப்பிடுவது .....

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அமைதி, அமைதி. உங்களுக்கிடையே சச்சரவிட்டுக் கொள்ள வேண்டாம். அவையின் நன்மதிப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

**பண்டிட் மாளவியா:** நான் விட்ட இடத்துக்கு மீண்டும் செல்லுகிறேன். எனவே, வேறு எதுவும் செய்ய இயலாவிட்டால், இந்திய சமஸ்தானங்கள் என்று முன்பு அழைக்கப்பட்ட பகுதிகளில் இந்த மசோதாவை நடைமுறைப்படுத்தலாம். இதற்குரிய விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்; அதாவது அப்பகுதிகளில் இம்மசோதா பிரசுரிக்கப்பட வேண்டும்; சுற்றுக்கு விடப்பட வேண்டும்; சம்பந்தப்பட்ட சட்டமன்றங்களில் இது அங்கீகரிக்கப்பட வேண்டும்; அதன் பின்னரே இம்மசோதாவை அங்கு செயல்படுத்த வேண்டும்.

இதில் எனக்கு மற்றொரு சிரமமும் இருக்கிறது; அதாவது இந்த நாட்டில் அச்சமயம் நடைமுறையிலிருந்த அரசியல் சாசனத்துக்கு இணங்க இந்து சட்டத்தொகுப்பு தயாரிக்கப்பட்டபோது விவசாய சொத்து மத்திய சட்டமன்றத்தால் சட்டமாக்குவதற்குரிய ஒரு **விஷயமாக** இருக்கவில்லை. இதன் காரணம் நிலச்சொத்து மத்திய சட்டமன்றம் சட்டம் இயற்றுதற்குரியதாக இருக்கவில்லை. இதன் விளைவாக, இந்த நாட்டிலுள்ள நிலச் சொத்தில் 90 சதவிகிம் இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமான சதவிகிதம் இந்த மசோதாவின் அதிகார வரம்பிற்குள் வரவில்லை.

(மாண்புமிகு துணை சபாநாயகர் தலைமை தாங்குகிறார்).

ஆனால் இப்போதோ நிலச்செர்த்து பொது அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது; எனவே இந்த மசோதா நிறைவேற்றப் படுமானால் நாடெங்கும் நிலச் சொத்துக்கும் அது பொருந்தும். இதனால் இந்த மசோதாவின் செயற்பரப்பெல்லை ஏறத்தாழ 900 மடங்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் இந்த சொத்து நாட்டின் மொத்த சொத்தில் மிகச் சிறிய பகுதிதான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருமணத்தின் விளைவாகப் பிள்ளைகளுக்கும் உரிமை உண்டு என மதிப்பிற்குரிய உறுப்பினர் கருதினாலொழிய, இது இந்த மசோதா சம்பந்தப்பட்ட விஷயமல்ல.

**பண்டிட் மாளவியா:** இந்த மசோதா பொருந்துறும் விஷயம் பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். நான் சுட்டிக் காட்டுவது என்னவென்றால்....

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த அவையில் இருக்கவில்லையோ என்பது போல் தோன்றுகிறது. இந்த மசோதா திருமணம் மற்றும் விவாகரத்து பற்றியது மட்டும்தான் என்று நாங்கள் கூறியிருக்கிறோம். சொத்துரிமை, வாரிசுரிமை போன்ற விஷயங்களுக்கு எல்லாம் இப்போது நாம் செல்லவில்லை. அப்படியிருக்கும்போது திருமணத்தின் விளைவாக குழந்தைகள் உண்டாகி, அவர்களுக்கு நிலச்சொத்தில் பங்களிக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் ஏதேதோ பேசுகிறார்.

**பண்டிட் மாளவியா:** எனக்கு முன்னர் ஏற்பட்டது போன்ற அதே சிரமம் இப்போதும் ஏற்பட்டிருக்கிறது. பலர் பேசுவதால்

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பதை என்னால் கேட்க முடியவில்லை!

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சொத்துரிமை அத்தியாயமும் மற்ற சில பகுதிகளும் இப்போது இந்த மசோதாவில் தவிர்க்கப்பட்டுள்ளன. திருமணம் மற்றும் விவாகரத்து விஷயத்தை மட்டும் இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் வேறு விஷயங்களைப் பற்றி இங்கு பேச வேண்டியதில்லை.

**பண்டிட் மாளவியா:** சொத்துரிமை சம்பந்தப்பட்ட விஷயத்தை இங்கு நான் எடுத்துக்கொள்ளவில்லை. மற்றொரு விஷயத்தைத்தான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது அவை முன் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவில் பல்வேறு ஆட்சேபகரமான அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அது மட்டுமன்றி இந்த மசோதா தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சூழ்நிலைமையும் பெருமளவுக்கு மாறியுள்ளது. இந்த மசோதா முதலில் உருவாக்கப்பட்டபோது இந்த நாட்டின் 90 சதவிகிதப் பகுதிகளுக்கு பொருந்தாதாக அமைந்திருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. அரசியல் சாசனத்தில் பொது அதிகாரப்பட்டியல் இடம் பெற்றிருப்பதன் காரணமாக விவசாய நிலங்களும் சொத்துகளும்....

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இந்த மசோதா இப்போது வலியுறுத்தப்படவில்லை. திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட பகுதிதான் தற் சமயம் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மற்றொரு மசோதா வரும்போது அது விவசாய நிலத்தை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதைப் பரிசீலிப்பதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குப் போதிய அவகாசம் இருக்கிறது. இன்று இந்த விஷயத்தைப் பற்றி நாம் அலட்டிக்கொள்ள வேண்டிய தேவையில்லை. விவசாய நிலங்களைப் பொது அதிகாரப் பட்டியலில் இடம்பெறச் செய்திருப்பதன் காரணமாக எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் அது பற்றி இப்போது நாம் விசாரப்பட வேண்டியதில்லை.

**பண்டிட் மாளவியா :** ஐயா, உங்களது தீர்ப்புக்கு அல்லது முடிவுக்கு நான் கீழ்ப்படிகிறேன். நான் என்ன செய்ய வேண்டு

மென்று நீங்கள் சொன்னாலும் அதன்படி செய்கிறேன். விவசாய சொத்துகள் சம்பந்தப்பட்ட ஷரத்துகளை உள்ளடக்கிய எந்த மசோதா வும் எந்த சமயத்தில் வந்தாலும், அந்த மசோதாவின் ஷரத்துகள் பற்றி விரிவாக விவாதிப்பதற்கும் நமது அபிப்பிராயங்களைக் கூறுவதற்கும் போதிய வாய்ப்பும் அவகாசமும் இருக்கும். எனவே, நீங்கள் கூறியபடி, இந்த நாட்டின் நிலச் சொத்து சம்பந்தப் பட்ட பிரச்சினை பற்றியோ, அதனை விநியோகிக்கும் முறைகள் பற்றியோ இந்தக் கட்டத்தில் என் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க நான் முயற்சிக்கவில்லை. அந்த விஷயம் பற்றி இப்போது நான் எதுவும் பேசப்போவதில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவதெல்லாம் மசோதாவின் குறியிலக்குப் பற்றித் தான். அதன் வகையங்கள் எத்தகையவையாக இருந்தபோதிலும், அது திருமணம் சம்பந்தப்பட்டதாகவோ, மரம் சம்பந்தப்பட்ட தாகவோ அல்லது வேறு எந்த விஷயம் சம்பந்தப்பட்டதாகவோ இருந்தாலும் அது எவ்வகையிலேனும் அனைவருக்கும் பொருந்து வதாக இருக்க வேண்டும். இந்த வகையங்களை எவருக்குப் பொருந்துறச் செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட நான் விரும்புகிறேன். உதாரணமாக நீங்கள் தலைமை ஏற்க வந்து கொண்டிருந்தபோது ஒரு விஷயத்தை வாதிட்டுக் கொண்டிருந்தேன்: அதாவது இந்த மசோதா பிரசுரிக்கப்படாத மாநிலங்கள் இந்த மசோதாவின் கீழ் நேரடியாகக் கொண்டுவரப்படக்கூடாது; மாறாக சம்பந்தப்பட்ட மாநிலங்களில் இம்மசோதா பிரசுரிக்கப்பட்டு, இது சம்பந்தமாக அந்தந்த மாநிலங்களின் சட்டமன்றங்களது முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டும்; இதற்கு இந்த மசோதா வில் வழிவகை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கொண் டிருந்தேன். இவ்வாறே, இப்போது நான் வாதித்துக் கொண்டிருப்பது எந்த நிலச் சொத்து பற்றியோ அல்லது வேறு எந்த சொத்து பற்றியோ அல்ல, மாறாக இந்த மசோதாவையோ அல்லது இது போன்ற வேறு எந்த மசோதாவையோ எவ்வாறு நடைமுறைப் படுத்துவது, அது முன்னர் எப்படிப் புரிந்து கொள்ளப்பட்டது, இப்போது எப்படிப் புரிந்து கொள்ளப்படுகிறது என்பன போன்றவைப் பற்றித்தான் எடுத்துரைத்துக் கொண்டுள்ளேன். ஆதலால் விஷயத்தின் இந்த அம்சத்தோடு நிறுத்திக் கொள் கிறேன்; சொத்து பற்றிய பிரச்சினைக்குச் செல்ல நான் விரும்ப வில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் இரண்டு மணி நேரத்தை எடுத்துக் கொண்டுவிட்டார். நாம் வேறு சில பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது பேச்சை முடித்துவிட்டார் என்று நினைத்து, மாண்புமிகு சட்ட அமைச்சரைப் பேச அழைக்கலாம் என்றிருந்தேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் இன்னும் எவ்வளவு நேரம் பேச உத்தேசித்திருக்கிறார் என்பதை இப்போது நான் தெரிந்து கொள்ளலாமா? மதிப்பிற் குரிய உறுப்பினர் விரைவிலேயே தமது உரையை முடிப்பதாக இருந்தால் அரை மணி நேர விவாதத்தை வேறொரு நாளுக்கு ஒத்திவைக்கலாம். இப்போது நமக்கு பதினைந்து நிமிட நேர அவகாசம் இருக்கிறது.

**பண்டிட் மாளவியா :** மதிப்பிற்குரிய நண்பர்கள் சிலர் சிரிக்கக்கூடும். ஏனெனில் எவ்வளவு நேரம் நான் எடுத்துக் கொள்வேன் என்பதை சொல்வது எனக்குக் கடினம். என்னுடைய வாதங்களை விரிவுபடுத்தவோ - அதிகப்படுத்தவோ நான் முயற் சிக்கவில்லை என்று நீங்கள் நம்புவதாக கருதுகிறேன். என்னுடைய விவாதத்தை நான் விரிவுபடுத்துவதாக மதிப்பிற்குரிய உறுப் பினர்கள் சிலர் சொன்னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் யாராவது ஒருவர் அவைக்கு வெளியே என்னை சந்திக்கும் வாய்ப்பை அளித்தால், இங்கே நான் சுட்டிக்காட்டுகிற விவரங் களில் ஏதாவது ஒன்றை என்னுடைய கோணத்தில் விவரிக்க அனுமதித்தால், இந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் எவ்வளவு விஷயம் இருக்கிறது என்பதையும் இவற்றில் மிக முக்கிய விஷயங்களில் மட்டுமே ஈடுபாடு கொள்ள முயற்சிக்கிறேன் என்பதையும் புரிந்து கொள்வார்கள். எனவே....

**துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் இன்னொரு பதினைந்து நிமிடங்களில் முடித்துக்கொள்ள இயலுமா?

**பண்டிட் மாளவியா:** அது முடியும் என்று எனக்குத் தோன்ற வில்லை. நான் இங்கே கொண்டு வந்துள்ள ஏராளமான குறிப்பு களையும், புத்தகங்களையும் ஒரு முறை கூட தொடவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சில முக்கிய பிரச்சினை களில் என்னை உட்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறேன்.

முழு விசுவாசத்தோடும் உண்மையோடும் இதைச் சொல்கிறேன். இதே போதிலும் இந்த விஷயத்தை மிக உறுதியாகவும் ஆழமாகவும் உணருகிறேன். விஷயம் மிகவும் பெரிது, முக்கியமானது; எனவே இன்றைக்கு முடிக்க இயலாது என்று அஞ்சுகிறேன். ஆனால் நான் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறேன்..

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** மதிப்பிற்குரிய உறுப்பினர் எவ்வளவு நேரம்தான் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்?

***டாக்டர் அம்பேத்கர் :*** ஐந்து நாட்கள்.

***பண்டிட் மாளவியா :*** ஐந்து நாட்கள் என்று சட்ட அமைச்சர் சொல்கிறார். 5 நாட்கள் என்றால் நான் கவலைப்பட மாட்டேன்.

***திரு. சோந்தி (பஞ்சாப்) :*** சவால் ஏற்கப்பட்டது.

***திருமதி துர்க்காபாய்:*** எனது சகோதர உறுப்பினர் தமது ஆய்வை அச்சிட்டு ''சுற்றுக்கு விடலாம் என்று நான் ஆலோசனை கூறலாமா?

***மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் :*** வேண்டாம்... வேண்டாம்.

***பண்டிட் மாளவியா:*** மதிப்பிற்குரிய சகோதரர் இந்த நாட்டின் அரசியல் சட்டத்தையும், நாடாளுமன்றத்தின் விதிகளையும் அச்சிட்டு சுற்றுக்கு விடுவாரேயானால், இந்த விஷயத்திலும் அந்த நடைமுறையைப் பின்பற்றலாம்.

***சர்தார் பி.எஸ். மான் :*** அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை.

***பண்டிட் மாளவியா :*** தேவையில்லாமல் அதிக நேரத்தை நான் எடுத்துக் கொள்ள மாட்டேன். ஆனால் இன்றைக்கு என்னால் முடிக்க இயலாது.

***துணை சபாநாயகர்:*** இப்போதிருந்து எவ்வளவு நேரம் அவர் எடுத்துக் கொள்வார் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்.

***டாக்டர் அம்பேத்கர்:*** 5 நாட்கள் இல்லையென்றால் 5 மணி நேரம்.

***பண்டிட் மாளவியா :*** நான் சொல்வதற்கு நிறைய விஷயம் இருக்கிறது. நான் முழுதும் உங்களால் வழிநடத்தப்படுவேன். நீங்கள் அனுமதித்தால் இந்தப் பிரச்சினையை உங்களிடமே விட்டு விடுகிறேன். நான் உங்களிடம் வரவும், எனது தஸ்தாவேஜுகளை உங்களுக்குக் காட்டவும் தயாராக இருக்கிறேன். இந்த அவையின் அனைத்து உறுப்பினரின் உரிமைகளுக்கான பாதுகாவலர் என்ற வகையில் நான் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை எனக்குக் கூறுங்கள்.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** விவாதத்தை தடுக்க வேண்டும் என்பதோ துண்டிக்க வேண்டும் என்பதோ எனது நோக்க மல்ல. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஏற்கெனவே இரண்டு மணி நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். அது தவிர கடந்த ஆறு நாட் களாக இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டபடி, இப்பிரச்சினை சம்பந்தமாக விரிவாக விவாதிக்க ஏராளமான புத்தகங்கள் மற்றும் இதர குறிப்புகள் இருக்கின்றன. எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வாய்ப்பை இழக்கமாட்டார். அவர் இதர பிரிவுகள் குறித்துப் பேசுகிறபோது தமது அறிவாற்றலைப் பயன்படுத்தலாம். எனவே தற்போதுள்ள சூழலில் மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு மேலும் அரை மணி நேரம் போதும்.

***பண்டிட் மாளவியா:*** அரைமணி நேரம் போதாது என்று அஞ்சுகிறேன். நீங்கள் என்னை அனுமதித்தால் அதை இன்னொரு வழியில் எடுத்துரைப்பேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முயற்சிக்கிறேன். அந்த நேரத்தை மேலும் நான் குறுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் திருமணம் மற்றும் விவாகரத்து என்ற இரண்டு விஷயங்களில் நான் கவனம் செலுத்த விரும்புகிறேன். நாளைய தினம் எவ்வளவு சீக்கிரத்தில் பேசி முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பேசி முடிப்பேன். எனக்குத் தேவை....

***டாக்டர் அம்பேத்கர் :*** ஐந்து மணி நேரம்.

***பண்டிட் மாளவியா:*** ஐந்து நாட்களிலிருந்து ஐந்து மணி நேரத்திற்கு அவர் இறங்கி வந்துவிட்டார். அது தேவையற்றது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுருக்கமாகப் பேச முயற்சிக்கிறேன். உண்மையாகவே எவ்வளவு

சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்கி, ஒரு வேளை இரண்டு அல்லது இரண்டரை மணி நேரத்திற்குள் பேசி முடிக்க முயற்சிக்கிறேன்.

திருமதி ரேணுகா ரே : ஐயா, நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த இரண்டாவது பிரிவு பொருத்தமாக இருக்கிறது. ஆய்வுக்குரிய நிலை கடந்த பிறகு திருமணம் மற்றும் விவாக ரத்து விஷயம் முழுவதையும் இப்போது எடுத்துக்கொள்ளலாமா என்று மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் மீண்டும் மீண்டும் எனது தீர்ப்பை விரும்புகிறார். விவாதத்தின் இறுதியில் ஒரு தீர்ப்பை வழங்குவது தேவையா என்று கேட்க விரும்புகிறேன். எப்படியிருந்த போதிலும், மதிப்பிற்குரிய உறுப்பினர் நாளைய தினம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தமது பேச்சை முடிக்க முயற்சிப்பார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை அவர் பேசி முடித்த பிறகு உடனடியாக அரைமணி நேர விவாதத்தை பிற்பகல் 1-30 வரை எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் அரை மணி நேரம் உட்கார்ந்தால் மதிப்பிற்குரிய உறுப்பினர் பண்டிட் மாளவியா முடித்துக் கொள்வார் என்று நினைத்தேன். ஆனால் அதற்குரிய அறிகுறி தென்படவில்லை. எனவே, நாளைக்கு அவர் மேலும் சிறிது நேரம் எடுத்துக் கொண்டால், அவருக்குப் பிறகு உடனடியாக மாண்புமிகு சட்ட அமைச்சரை அழைக்க முன்மொழிகிறேன்.

திரு. பி. தாஸ் (ஒரிசா) : இந்த அவையில் சீர்திருத்தவாதிகள் மிகவும் அமைதியாக இருக்கிறார்கள். சர்தார் மான் மற்றும் பண்டிட் மாளவியா ஆகிய எனது நண்பர்களால் மிகத் தீவிரமான - மிகச் சிறந்த இரண்டு உரைகள் ஆற்றப்பட்டுள்ளன - எமது அரசின் சார்பில் டாக்டர் அம்பேத்கர் தமது இறுதி பதிலில் என்ன சொல்கிறாரோ அத்துடன் இந்த அவையில் பெரும்பான்மையினராக உள்ள நாங்கள் எங்கள் கருத்தையும் வெளிப்படுத்த நீங்கள் எங்களை அனுமதிக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்: ஆமாம்....

திரு. சியாம்நந்தன் சகாயா : எங்களிடம் சில திருத்தங்கள் இருக்கின்றன. அவற்றின் மீது நாங்கள் பேச விரும்புகிறோம்.

**திரு. சிவ்சரண்லால் (உத்திரபிரதேசம்):** இந்தியர்கள் அனைவரையும் உள்ளடக்கிய வகையில் இந்தப் பிரிவைக் கொண்டு வருவதற்காக ஏராளமான நிகழ்வுகள் முன்மொழியப்பட்டிருக்கின்றன. அந்த விஷயம் சம்பந்தமாக நிறைய பேசப்பட்டிருக்கிறது. எனவே இஸ்லாமியர் பார்வையில் சில கருத்துக்கள் சொல்ல நான் விரும்புகிறேன். இஸ்லாமியர்கள் அதை ஏற்பார்களா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் பேசுவதற்கு மேற்கொண்டு சிறிது நேரம் வேண்டும்.

**திரு. ஆர்.கே. சௌதுரி :** ஒரு திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இக்கேள்வியை நேற்று நான் எழுப்பியபோது அத்தகைய எதிர்ப்புக் கேள்வி அனுமதிக்கப்படும் என்று தாங்கள் சொன்னீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்டலாமா?

குறிப்பாக மிக முக்கிய விஷயமான 'மலைவாழ்' என்ற வார்த்தையை அறிமுகம் செய்ய டாக்டர் அம்பேத்கர் விரும்பிய போது நான் என் கருத்தை வலியுறுத்திச் சொன்னேன். அது சம்பந்தமாக நான் பேச விரும்புகிறேன். இதர விஷயங்கள் பற்றி நான் பேசப் போவதில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் ஒரு திருத்தத்தை முன்வைத்து விடுவதாலேயே அவர் பேசியாக வேண்டும் என்று பொருளல்ல, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீதான அனைத்துக் கருத்துக்களையும் வெளியிட நான் அனுமதித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரே மாதிரியான திருத்தங்கள் முன்மொழியப்படும்போது, மதிப்பிற்குரிய ஒன்றிரண்டு உறுப்பினர்கள் பேசிய பிறகு, ஏற்கெனவே நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டால், திருத்தம் கொண்டு வந்த உறுப்பினர்கள் பேச முடியாமல் போனால், அதற்காக நான் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நான் கருதவில்லை. பிரிவு 2 சம்பந்தமாக நாம் மீண்டும் பரிசீலிக்கப் போகிறோம், எனது நண்பர் மதிப்பிற்குரிய குவாஜா இனய்த் உல்லாவின் வேண்டுகோளைப் பொறுத்தவரை, முஸ்லீம்கள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோருக்கு பொருந்துகிற வகையில் அந்த திருத்தம், அந்த மசோதாவின் குறிக்கோளை விரிவுபடுத்துமா? என்று தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். இவ்விஷயம் மீது மேலும் விவாதம் தேவை என்று நான் கருதவில்லை. இருந்த போதிலும், பண்டிட் மாளவியாவிற்குப் பிறகு உடனடியாக நான் மாண்புமிகு அமைச்சரை அழைக்கப் போகிறேன்.

திரு. ஆர்.கே. சௌதுரி: 'மலைவாழ்' என்ற வார்த்தையின் அறிமுகம் சம்பந்தமான டாக்டர் அம்பேத்கரின் திருத்தத்தை நான் எதிர்க்க விரும்புகிறேன்.

திரு. ஜே.ஆர். கபூர் : திருத்தத்தை அனுமதிப்பது சம்பந்தமான இந்த விஷயம் எடுத்துக்கொள்ளப்படும் துவக்க நிலையில், எந்தத் தீர்ப்பையும் வழங்குவதற்கு முன்னால், அந்த விஷயத்தின் மீது எங்கள் கருத்தை சொல்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படும் என்று மாண்புமிகு சபாநாயகரால் அப்போது உறுதி கூறப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் அது ஒரு வேளை இருக்காது என்று சபாநாயகர் முடிவில் கருதியிருக்கக்கூடும். ஆனால் அது எவ்வளவு எளிதாக அதன் வரையறைக்குள் வருகிறது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காக எங்களைப் பேச தயவுசெய்து நீங்கள் அனுமதிக்க வேண்டும். உங்களுடைய தீர்ப்பு அதுவாக இருந்தால் எனது நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரின் பல திருத்தங்கள்கூட வரம்புக்கு அப்பாற்பட்டவை என்று அறிவிக்கப்படக் கூடியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு துணை சபாநாயகர்: டாக்டர் அம்பேத்கரே இந்த அவையிலிருந்து நீக்கப்பட வேண்டுமா?

திரு. ஜே.ஆர். கபூர்: அவர் அல்ல. அவரது சில சட்டத் திருத்தங்கள். ஏனெனில் அவை இந்தத் திருத்தம் போலவே இருக்கின்றன.

மாண்புமிகு துணை சபாநாயகர் : ஒரு தவறான சட்டத் திருத்தம் இன்னொரு சட்டத்திருத்தத்தை சரியானதாக ஆக்காது. மாண்புமிகு சட்ட அமைச்சரின் சட்டத்திருத்தங்களில் ஏதாவது முறையற்றதாக இருந்தால், அவ்விஷயத்தை நாம் பரிசீலிப்போம்.

பண்டிட் மாளவியா : இன்னொரு சட்டத் திருத்தத்திற்கான - ஒரு சிறிய திருத்தத்திற்கான - அறிவிப்பை நான் கொடுத்திருக்கிறேன். நாளை எனது உரையின் இறுதியில் அதை கொண்டு வருவேன்.

மாண்புமிகு துணை சபாநாயகர் : முழுமையான - முறையான திருத்தமாக இருந்தால் அனுமதிப்பேன்.

**பண்டிட் மாளவியா:** நேற்று முன்தினம் நான் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**குவாஜா இனய்த் உல்லா :** ஒரு சில நிமிடங்களுக்கு மேல் நான் எடுத்துக்கொள்ள மாட்டேன.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இல்லை, ஐயா,

**திரு. ஆர்.கே. சௌதுரி:** நான் சொன்ன விஷயம் பற்றி என்ன ஐயா?

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மதிப்பிற்குரிய உறுப்பின ருக்கு 'ஆமாம்' என்று சொல்லக்கூடியவர்களும் 'இல்லை' என்று சொல்லக் கூடியவர்களும் உண்டு. அவர் விரும்பினால் அந்த ஷரத்தை எதிர்த்து வாக்களிக்கலாம்.

நமக்கு இப்போது மிகவும் காலதாமதமாகிவிட்டது. இன்னொரு நாளைக்கு அது எடுத்துக் கொள்ளப்படும்.

*இதன் பிறகு 1951, செப்டம்பர் 20ஆம் நாள் வியாழக்கிழமை காலை 8-30 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

## *இந்து சட்டத் தொகுப்பு (தொடர்ச்சி)

**திரு. அமலோக் சந்த் (உத்திரபிரதேசம்) :** பண்டிட் மாளவியா பேசுவதற்கு முன்பு, இன்றைய இந்தியன் ''நியூஸ் கிரானிக்கல்'' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கேலிச்சித்திரம் பற்றி, உங்கள் கவனத்தை நான் ஈர்க்கலாமா? அது சம்பந்தமாக நான் தங்களுக்கு ஒரு குறிப்பை அனுப்பியிருந்தேன். அது இப்போது எடுத்துக் கொள்ளப்படுமா? அல்லது இன்னொரு நாளில் எடுத்துக்கொள்ளப் படுமா? இதை நான் தெரிந்து கொள்ளலாமா?

**மதிப்பிற்குரிய உறுப்பினர்:** அந்தக் கேலிச்சித்திரத்தின் முக்கிய கருத்து என்ன?

**திரு. அமலோக் சந்த் :** அவைத் தலைவரின் அனுமதியுடன் மதிப்பிற்குரிய உறுப்பினரின் ஆவலை திருப்திப்படுத்த, அந்தக் கேலிச்சித்திரம் பற்றி நான் பேசலாமா?

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ''இந்தியன் நியூஸ் சிரானிக் கல்லில்'' வெளியிடப்பட்ட கேலிச் சித்திரத்தைப் பார்த்தேன். எனது விருப்பத்தை அது எடுத்துக்காட்டுவதாக உள்ளது எனக் கருது கிறேன். அது ஒரு கடிகாரத்தைப் பற்றிய கேலிச்சித்திரம். அந்த கடிகாரத்தின் இரண்டு முட்களும், இந்த மசோதாவுக்கு எதிராகப் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிலரால் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கு அடியில் உள்ள ஊசலியோ (பெண்டுலமோ) முன்னாலும் போகாமல் பின்னாலும் போகாமல், அசையாமல் இருக்கிறது. அது என்னை சுட்டிக்காட்டுகிறது.

சபாநாயகர் இங்கே இருந்தால், அது வேறு விஷயம். அவை தலைமை மீது களங்கம் கற்பிப்பது நியாயமற்றது மட்டுமல்ல, மரியாதைக் குறைவானதுமாகும். அதுமட்டுமல்ல, எதார்த்த உண்மை களுக்கு எதிராகவே இந்தக் கேலிச்சித்திரம் இருக்கிறது. எனது கருத் துக்கள் என்னதான் மாறுபட்டிருந்தாலும் இந்த அவையில் நியாய மற்ற முறையில் நான் செயல்பட்டதாக மதிப்பிற்குரிய உறுப்பினர் களில் யாரும் எந்தப் பிரச்சினையையும் இதுவரை எழுப்பியதாக எனக்குத் தெரியவில்லை.

**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் :** இல்லை.... இல்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** எனவே, இந்த விஷயத்தை நான் எடுத்துக்கொள்கிறேன். தலைவர் ஆசனத்தில் யார் வேண்டுமானாலும் இருக்கலாம் - அது பிரச்சினையல்ல - ஆனால் அவைத் தலைவரை களங்கப்படுத்துவது என்பது மிகவும் கவலைக்குரிய விஷயம். அவைத்தலைவர் இருக்கையில் தாற்காலிகமாக யார் அமர்கிறாரோ அந்தக் கணமே அவர் பாரபட்சமான முறையில் செயல்படவில்லை என்பதை இந்த அவை உணருகிறது. ஆனால் வெளியார் இதை கேலிச்சித்திரமாக வரைவது என்பது இந்த முழு அவையையுமே களங்கப்படுத்துவது ஆகும். இந்த விஷயத்தை சாவகாசமான முறையில் பரிசீலித்து, என்ன நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என்பது குறித்து முடிவு செய்கிறேன். எப்படியிருந்த போதிலும் இந்த மசோதா சம்பந்தமான விவாதங்களை இது பாதித்துவிடக் கூடாது என்று விரும்புகிறேன்.

**திரு. டி.என் சிங் (உத்திரப்பிரதேசம்) :** அதே நேரத்தில், குறிப் பிட்ட அந்த கேலிச்சித்திரம் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதனை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்த மாமன்றத் தின் தலைவரை களங்கப்படுத்தும் வகையில் எதையும் பத்திரிகைகள் செய்யக்கூடாது என்று நாங்களும் கருதுகிறோம். அது ஒடுக்கப்பட வேண்டும். இப்பிரச்சினை இப்போது எழுப்பப்பட்டு விட்டதால் இது மிக முக்கியமானது என்று கருதுகிறேன். எனவே இதை தள்ளிப்போடக்கூடாது. எப்போது இந்த பிரச்சினை எழுப்பப்பட்டு விட்டதோ, அப்போதே, உடனடியாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்த அவை அதை அங்கீகரிக்கவில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இதை பரிசீலிக்க நான் அவகாசம் எடுத்துக்கொள்கிறேன்.

**பண்டிட் மாளவியா (உத்திரப்பிரதேசம்):** நேற்று நான் விடை பெற்றுச் சென்ற போது, எனக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும் என்று தாங்கள் என்னைக் கேட்டீர்கள். நேர அளவு பற்றி என்னால் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது என்று மரியாதைக்குரிய வகையில் நான் தங்களுக்குத் தெரிவித்தேன். என்னால் முடிந்த வரை சுருக்கமாக பேச முயற்சிப்பேன் என்றும், அதன் அடிப்படையில் என்னை அனுமதிக்கும்படியும் தங்களிடம் வேண்டுகோள் விடுத்தேன். ஏறக் குறைய இரண்டரை மணி நேரத்திற்கு மேல் நான் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தாங்கள் எனக்கு உணர்த்தினீர்கள்.

திரு. சித்வா (மத்திய பிரதேசம்) : நீங்கள் சொன்னது அரைமணி நேரம்.

பண்டிட் மாளவியா : இது வரை நான்....

மாண்புமிகு துணை சபாநாயகர் : ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல முடியும். மாண்புமிகு சட்ட அமைச்சர் தமாஷாக சொன்ன யோசனையின் பேரில் தூண்டப்பட்டு மதிப்பிற்குரிய உறுப்பினர் ஐந்து நாட்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்) : அவர் விரும்பியது ஐந்து நாட்கள் - நான் பரிந்துரைத்தது ஐந்து மணி நேரம்.

மாண்புமிகு துணை சபாநாயகர்: எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்கள் என்று மதிப்பிற்குரிய உறுப்பினரை நான் கேட்டபோது, மாண்புமிகு சட்ட அமைச்சர் ஐந்து நாட்கள் என்று நகைச்சுவையோடு கூறினார். நான் அரை மணி நேரம் என்றேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் இன்னும் அதிக நேரம் தேவை என்கிறார். எனவே இப்போது நான் முன்மொழிவது என்னவென்றால்....

பண்டிட் மாளவியா : நான் ஒன்று சொல்லலாமா?

மாண்புமிகு துணை சபாநாயகர்: மதிப்பிற்குரிய உறுப்பினருக்குப் போதுமான நீதியை நான் வழங்கிடுவேன். இப்போது, பதிலளிப்பதற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?

டாக்டர் அம்பேத்கர்: சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்பதுதான் என் நோக்கம். ஆனால் இங்கே கொடுக்கப்பட்ட சில பிரச்சினைகள் சம்பந்தமாக நான் பதிலளிக்க விரும்புகிறேன். ஒரு மணி நேரம் அல்லது ஒன்றே கால் மணி நேரமே எனது தேவைக்கு அதிகமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு துணை சபாநாயகர்: தற்போது நின்று கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசி முடித்த உடனே மாண்புமிகு சட்ட அமைச்சரை அழைக்க நான் முன்மொழிகிறேன். இரண்டரை மணி நேரத்தையே எடுத்துக்கொண்டாலும், மாண்புமிகு சட்ட அமைச்சரை 12 மணிக்கு அழைத்தாலும், பதிலளிப்பதற்கு போதுமான நேரம் இருக்கிறது.

*திருமதி துர்க்காபாய் (சென்னை) :* நின்று கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர் ஐந்து மணி நேரம் வேண்டும் என்றும் அல்லது ஐந்து நிமிடம் வேண்டும் என்றும் கேட்டாலும் அல்லது எதுவாக இருந்தாலும் அவைத் தலைவரின் ஆணைக்குக் கட்டுப் படுவதாக சொன்னார். அரைமணி நேரத்திற்கு மேல் அவருக்கு தேவைப்படாது என்று அன்பாகத் தாங்கள் சொன்னீர்கள். அவைத் தலைவரின் ஆணைக்கு ஒரு முறை கட்டுப்பட்டுவிட்ட பிறகு அதிலிருந்து பின்வாங்குவதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் அனுமதிக்கப்படுவாரா?

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்கே இதை விட்டுவிடுகிறேன்.

*பண்டிட் மாளவியா:* நேற்று நான் இன்னொரு விஷயத்தைச் சொன்னேன். எனது சகோதரி விதிகளை உருவாக்குவதாக இருந்தால் - நல்லவேளையாக இப்போது நான் சாவகாசமாகத்தான் இருக்கிறேன். நாங்களும் பல விஷயங்களை முன்வைப்போம்.

*திருமதி துர்க்காபாய்:* இது ஏற்கெனவே விதிகளில் இருக்கிறது.

*பண்டிட் மாளவியா:* நான் என்ன சொல்ல விரும்பினேன் என்றால்....

*மாண்புமிகு துணை சபாநாயகர்:* நிதி மசோதாக்களை பொறுத்தவரை, விதிகள் படி, ஒரு எல்லையை என்னால் வகுக்க முடியும். இதர மசோதாக்கள் என்று வருகிற போது, அவை சம்பந்த மான உரைகளுக்கு காலக்கெடு விதிக்க விதிகளில் இடமில்லை.

*திருமதி துர்க்காபாய்:* எனது கருத்து என்னவென்றால் அவைத்தலைவர் தமது தீர்ப்பை கொடுத்த பிறகு....

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* தீர்ப்பு அல்ல.

*திருமதி துர்க்காபாய்:* அந்த தீர்ப்புக்கு எதிராகச் செல்ல மதிப் பிற்குரிய உறுப்பினர் அனுமதிக்கப்படுவாரா?

*மாண்புமிகு துணை சபாநாயகர்:* அதை தீர்ப்பு என்று வியாக்கி யானம் செய்யக்கூடாது. அது வெறுமனே ஒரு யோசனைதான்.

சட்டத் திருத்தங்கள் சம்பந்தமாக அவையின் வாக்கெடுப்பிற்கு விட வேண்டும் என்பதை மறந்துவிட்டேன். எனவே இரண்டு மணி நேரம் தமக்கு கட்டாயம் வேண்டும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் விடாப்பிடியாக இருந்தால், மாண்புமிகு சட்ட அமைச்சரை நான் 11.30 மணிக்கு அழைக்கிறேன். அப்போது இன்றைய தினத்திற்குள் இந்தப் பிரிவையும் அத்துடன் திருத்தங்கள் அனைத்தையும் நாம் முடித்துக்கொள்ளலாம். அப்போது மதிப்பிற்குரிய உறுப்பினர் இரண்டு மணி நேரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**பண்டிட் மாளவியா :** தாங்கள் சொன்னதற்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். துவக்கத்தில் நான் என்ன சொல்ல வந்தேன் என்றால்....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அந்த விஷயத்தை வலியுறுத்த வேண்டாம்.

**பண்டிட் மாளவியா :** எனது மேலான சில நண்பர்கள் பாலும் அவர்களின் கருத்துக்கள்பாலும் இந்த அவையில் நம்மில் உள்ள பெரும்பாலானவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. இந்த அவையின் உறுப்பினர் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவான நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்த அவைக்குள் இப்போது நான் வந்தபோது, நான் ஒரு சில நிமிடங்களிலேயே பேசி முடித்துவிட வேண்டும் என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது. விதிகளின்படி ஒருவர் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள் விரும்புகிறாரோ அவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளலாம் என்பதை நான் அறிவேன். லட்சக்கணக்கான மக்களிடமிருந்து வந்துள்ள இது போன்ற மிக முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்படவிருக்கிறபோது, நிமிடங்களும், மணிகளும் கணக்கிடப்படக் கூடாது என்று கருதுகிறேன். இந்த பிரச்சினையின் மீது யாராவது எதையாவது சொல்ல வேண்டும் என்று விரும்பினால் அது விவேகமற்றதோ, பொருத்தமற்றதோ அல்ல. அவர் ஒரு நாள் எடுத்துக்கொள்கிறாரா? இரண்டு நாள் அல்லது 20 நாட்கள் எடுத்துக் கொள்கிறாரா? என்கிற கேள்வி எழக்கூடாது.

ஆனால் நமது தலைவர்கள் மற்றும் மூத்தோர்களின் விருப்பத்தை மதிக்கிறேன். விதிகளின்படி எனக்கு நீண்டதொரு வாய்ப்பை நீங்கள் மனமுவந்து கொடுத்தால் கூட, நான் எதைச் சொல்ல விரும்புகிறேனோ அவையனைத்தையும் ஒரு சில நிமிஷங்களி

லேயே சொல்ல முயற்சிப்பேன் என்றுதான் சொல்ல விரும்பினேன். ஆழ்ந்த புண்பட்ட உணர்வோடும், எனக்கும் இந்த சட்டப் பிரிவுக்கும் இழைக்கப்பட்ட அநீதியோடும் இதைச் சொல்கிறேன். ஏற்கெனவே நான் சொன்னபடி நியாயமற்ற விஷயம் திணிக்கப்பட்டாலும் கூட இந்து சமயத்தின் சகிப்புத் தன்மையை நம்புகிற மனிதன் நான்...

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* மதிப்பிற்குரிய உறுப்பினர் அன்பு கூர்ந்து தமது இருக்கையில் அமர வேண்டும். இந்த மசோதாவை தேவையில்லாமல் இழுத்தடிப்பதாகவும், முரட்டுத்தனமாக கையாள்வதாகவும் ஓர் அபிப்பிராயம் உருவாகிவிடக் கூடாது என்பதைத் தவிர்க்க நான் முயன்று கொண்டிருக்கிறேன். இதுமாதிரி ஒரு அபிப்பிராயமோ அல்லது வேறொரு அபிப்பிராயமோ உருவாகிவிடக்கூடாது என்று நான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியிருக்கிறது. இறுதி மசோதா கொண்டு வரப்பட்டு அதன் விவாதத்தை முடிக்கும்போதே, போதுமான நேரத்தை அதற்காக செலவழித்து விட்டோம். தனிப்பட்ட உறுப்பினர்கள் பேசாமல் போனாலும் ஒட்டுமொத்தமாக எல்லோரும் எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் போதுமான விவாதம் நடந்துள்ளது என்று நான் திருப்தியடைந்துள்ளேன்.

நேரத்தின் தேவை கருதியோ, ஒரு வகையான வரையறை மற்றும் நிர்ப்பந்தம் காரணமாகவோ தமது எல்லாக் கருத்துக்களையும் முன்வைக்க முடியவில்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கருதினால் இங்கிருக்கும் நபர்களில் யாருக்குமே அவர் நீதி வழங்கவில்லை என்றே பொருளாகும். இந்த மசோதாவை நாம் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறோம் என்ற அபிப்பிராயம் உருவாவதைத் தவிர்க்க விரும்புகிறேன். ஒரு கருத்துக்கோ, இன்னொரு கருத்துக்கோ போதுமான அளவு இல்லாமல் இருக்கக்கூடும். ஆனால் அதே சமயம் இந்த அவையில் பெரும்பான்மையினரின் கருத்து அடிப்படையில் நாம் செயல்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். தங்கள் கருத்தை வெளிப்படுத்தவும், வலியுறுத்தவும் அனைத்து உறுப்பினர்களுக்கும் முழு உரிமையும் சுதந்திரமும் இருக்கின்றன. ஆனால் இந்த மசோதாவை நாம் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறோம் என்ற பேச்சு வரக்கூடாது. மதிப்பிற்குரிய உறுப்பினர் இரண்டு மணி நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் விரும்பினால் இன்னும் இரண்டு மணி நேரம் கூட எடுத்துக்கொள்ளட்டும். ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டு அதற்கும் அதிகமான நேரத்தை அவர் எடுத்துக் கொள்ளக்கூடாது. உண்மையிலேயே இந்த விஷ

யத்தைப் பற்றி சாவகாசமாக நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் போது நாம் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறோம் என்ற அபிப் பிராயத்தை அவர் உருவாக்கி விடக்கூடாது. எனவே அத்தகைய அபிப்பிராயம் உருவாக்கப்படக்கூடாது. வேறு பல காரணிகளுக்காக அவர் பேசுவதற்கோ, பேசாமல் இருப்பதற்கோ அவருக்கு உரிமை உண்டு. இந்த அவையின் விதிகளைப் பற்றியும், வழக்கத்தைப் பற்றியும் மட்டுமே நான் கவலைப்படுகிறேன். நாம் இது போன்ற ஒரு முக்கிய பிரச்சினையை இழுத்தடிக்கவில்லை என்றும் தேவை யில்லாமல் இந்த விவாதத்தை நீட்டித்துக் கொண்டிருக்கவில்லை என்றும் அவைக்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு சரியான அபிப் பிராயம் ஏற்பட வேண்டும் என்றும் விரும்புகிறேன். எனவே இந்த இரண்டு அபிப்பிராயங்களுக்கும் நடுவே இந்த மசோதாவை எடுத்துச் செல்ல நான் முயன்றுகொண்டிருக்கிறேன். மதிப்பிற் குரிய உறுப்பினர் அனைத்து விஷயங்களையும் இங்கு குறிப்பிட வேண்டடிய அவசியமில்லை. அவர் எதை சொல்ல விரும்புகிறாரோ அதை சொல்வதற்குரிய உரிமை அவருக்கு உண்டு. மேலும் பல விதிகளை எடுத்துக்காட்டுவது அல்லது அவை அனைத்தையும் சுட்டிக்காட்டாமல் இருப்பதும் அல்லது பொருத்தமானது என்றும் முறையானது என்றும் கருதி பல்வேறு காரணங்களுக்காக வேறு எந்தக் கருத்துக்களைக் கூறுவதும் அவரது விருப்பத்தைப் பொறுத்தது.

**பண்டிட் மாளவியா:** உங்கள் இதழ்களிலிருந்து உதிர்ந்த கருத்துக்களுடன் முழுமையாக நான் உடன்படுகிறேன். எந்த புகாரையும் நான் சொல்லவில்லை. தேவைப்படுகிற எல்லா நேரத்தையும் நான் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தாங்கள், குறிப்பிட்டதால்தான் இதைக் கூறுகிறேன். நான் தங்களிடம் சமர்ப்பிக்க விரும்பிய அனைத்துக் கருத்தும் இதுவே. அது இந்த அவையில் உள்ள இதர பல உறுப்பினர்களுக்கும்கூட பொருந்தும். ஏதாவது ஒன்றைச் சொல்லும் வாய்ப்பு தங்களுக்கு கிடைக்காதா என்பதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மிகுந்த ஆவலாக இருந்ததை நேற்று நான் பார்த்தேன். இதை ஒரு புகாராக நான் சொல்லவில்லை. இப்போது ஒன்று இரண்டு கருத்துக்களை நேரடியாகவே சொல்ல விரும்புகிறேன்.

நேற்று நாம் கலைந்தபோது நான் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை - அதாவது மசோதாவின் தன்மையை விரிவுபடுத்த வேண்டும் என்பதை, உதாரணமாக சொல்ல வேண்டுமானால் நிகழ் பட்டியலில் விவசாய நிலங்களை புதிய அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதைக் கைவிடுகிறேன்.

இன்னொரு மிக முக்கிய விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த மசோதா முதலில் அறிமுகம் செய்யப்பட்ட போது, அப்போது இருந்ததற்கும், இப்போது நம்முன் இருப் பதற்கும் இடையே ஒப்பிடும்போது அது மிகப் பெரிய அளவில் மாறுதலடைந்துள்ளது, பெரும்பாலும் அடையாளம் காணமுடியாத அளவிற்கு மாறிப்போயுள்ளது. பொறுக்குக் குழுவானது தனது அறிக்கையின் இறுதியில், நாங்கள் ஒரு மசோதாவில் ஒரு சில மாறுதல்களைச் செய்தோமே தவிர, தாங்கள் நினைத்தபடியெல்லாம் அதை அடியோடு மாற்றி விடவில்லை என்றும் திருத்தியமைக்கப் பட்ட மசோதாவை மறு சுற்றுக்கோ மறு வெளியீட்டுக்கோ விட வேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிட வேண்டியுள்ளது. பொறுக்குக் குழுவில் ஒரு மசோதா சாராம்ச அடிப்படையில் மாற்றப்படுமேயானால் அது மறுவெளியீடு செய்யப்பட வேண்டும் என்றும் மறு சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிற ஒரு கோட்பாடு இதன் மூலம் நிரூபிக்கப்படுகிறது. சட்டம் சம்பந்தப் பட்ட விஷயங்களில் விதிகளின் புனிதத் தன்மையை நாம் கடைப் பிடிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் விதிகள் என்பவை அமைதியும், விருப்பு வெறுப்புமற்ற சூழலிலும் தான் உருவாக்கப்படுகின்றன. எனவே அத்தகைய விதிகள் மிகுந்த மதிப்பு வாய்ந்தவையாகும். குறிப்பிட்ட சில பிரச்சினைகளிலும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களிலும் நமது கருத்துக்களின் வசதிக் கேற்ப அந்த விதிகளை நாம் மாற்றத் துவங்கினால் ஆரோக்கிய மான நாடாளுமன்ற மரபுகளின் மற்றும் நாடாளுமன்ற நிறுவனங் களின் வளர்ச்சிக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாகவே இருக்கும். எனவே, இந்த மசோதா இப்போது முழுமையாக மாற்றப்பட்டு விட்டதாகவே நான் கருதுகிறேன். எனவே இந்த மசோதாவையோ அதன் எந்த ஒரு பகுதியையோ தொடர்ந்து விவாதிப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. இந்தக் கருத்தையும் உங்களிடம் விட்டு விடுகிறேன்.

மேலும் ஒன்று அல்லது இரண்டு கருத்துக்களை மட்டும் தொட்டுக் காட்டிவிட்டு எனது இருக்கைக்குத் திரும்புகிறேன். தர்ம சாஸ்திரங் களையும் ஸ்மிருதிகளையும் அடிப்படையாக வைத்து இந்த மசோதா உருவாக்கப்பட்டிருப்பதாக இந்த மசோதாவை ஆதரிக்கும் எனது நண்பர்கள் பலர் சொன்னார்கள். எனக்கு நேரமிருந்தால் அவர்கள் சொன்னதில் உண்மையில்லை என்பதை தர்ம சாஸ்திரங் களிலிருந்தும், ஸ்மிருதிகளிலிருந்தும் சில மேற்கோள்களை நான் எடுத்துக் கூறுவேன். அதை என்னால் இப்போது செய்யமுடியாது. எனவே இந்த மசோதா சம்பந்தப்பட்ட இரண்டு முக்கிய கோட்பாடு

களுக்கு நேரடியாகவே வருகிறேன். ஒன்று **சபிண்டா** திருமணங்கள் சம்பந்தமான பிரச்சினை - இரண்டாவது பிரச்சினை - இந்துக் களில் மணமான பெண்கள் மறுமணம் செய்து கொள்ள முடியுமா? என்பது.

இந்த இரண்டு விஷயங்கள் சம்பந்தமாகவும் **ஸ்மிருதிகளி** லிருந்து சில மேற்கோள்கள் காட்டப்பட்டன. **சபிண்டா** பிரச்சினை சம்பந்தமாக விவாதிக்கப்படும்போது, **ஸ்மிருதிகள்** நேரத்திற்கு நேரம் அப்போதைக்கப்போது பல்வேறு கோட்பாடுகளை வரை யறுத்துள்ளன என்றும் ஒரு **ஸ்மிருதி** ஒரு நேரத்தில் ஒரு கருத்தை சொல்கிறது, இன்னொரு **ஸ்மிருதி** இன்னொரு நேரத்தில் இன்னொரு கருத்தைச் சொல்கிறது என்றும், எனவே அவை மாற்றக்கூடாத ஒன்று என்று சொல்லக்கூடிய வகையில் அவ்வளவு முக்கியமானது அல்ல என்றும் வாதிக்கப்டுகிறது. ஆனால் காலத்தின் பயன்பாடு கருதி, நேரத்திற்கு நேரம் விதவிதமான **ஸ்மிருதிகள்** விதம் விதமான பாடங்களை உருவாக்கியுள்ளன. **தர்ம சாஸ்திரங் களைப்** பொறுத்தவரை சில விதிகளின் வியாக்யானங்கள் அணுகு முறைக்கான கோட்பாடுகளையும், வழிமுறைகளையும் வகுத்தளித் துள்ளன என்பதை நேற்று நான் குறிப்பிட்டிருந்தேன். **தர்ம சாஸ்தி ரங்கள் மீமாம்சையின்** விதிகளைப் பயன்படுத்தித்தான் வியாக்கி யானம் செய்யப்படவேண்டும். அவற்றை உறுதிப்படுத்த பதினான்கு ஆதாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அவையெல்லாம் குறிப் பிடப்பட்டிருக்கின்றன. எனவே இந்த விஷயங்களைப் புரிந்து கொள்ள நேர்மையாகவே யாராவது விரும்பினால் அந்த விஷயத் தின் ஆழத்திற்கு அவர் செல்ல வேண்டும்.

**சபிண்டாவில்** எந்த அளவிற்கு தடை செய்யலாம் என்கிற அளவுகோல் **ஸ்மிருதிகளிலும், தர்மசாஸ்திரங்களிலும்** வரையறுக்கப் பட்டுள்ளது. தந்தைவழி தரப்பில் ஏழு படிநிலைகளும், தாய்வழி தரப்பில் ஐந்து படிநிலைகளும் அல்லது அதற்கு அதிகமாகவும் இருக்கின்றன. யாரும் அதை மறுத்ததில்லை. இன்னும் சில **ஸ்மிருதி களில்** மட்டும் ஏழு மற்றும் ஐந்து படிநிலைகள் என்பதற்குப் பதிலாக ஐந்து மற்றும் மூன்று படிநிலைகள் என்று குறிப்பிடப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. **பைத்திநாசி ஸ்மிருதியை** அடிப் படையாக வைத்து இது சொல்லப்படுகிறது என்று நம்புகிறேன். **ஸ்மிருதியில்** ஐந்து மற்றும் மூன்று என்ற படிநிலைகள் வரை யறுக்கப்பட்டிருக்கிறதா என்கிற விஷயத்தை இங்கு அவையில் உள்ள உறுப்பினர்கள் உண்மையாகவே பரிசீலிப்பார்களேயானால் இவ்விஷயத்தை நான் தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன். **பைத்தினாசி ஸ்மிருதி** என்பது....

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்த விஷயத்தில் பிடிவாதமாக இருப்பதாக நான் நினைக்க வில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* சமயம் வரும்போது இதனை நாம் பரிசீலிப்போம்.

*பண்டிட் மாளவியா :* இந்த மசோதாவின் ஷரத்துகள் அனைத்தும் எவ்வாறு முற்றிலும் தவறான கண்ணோட்டத்தில் அமைந்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஓர் உதாரண மாகவே இதனைக் கூறுகிறேன்.

***பைத்தினாசி ஸ்மிருதியில்*** பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

**पंचमीं मातृत : परिहरेत् सप्तमीं पितृत :**

ஆக, தாயிடமிருந்து ஐந்து படிநிலைகளும் தந்தையிட மிருந்து ஏழு படிநிலைகளும் என்பது தெள்ளத் தெளிவு. ***பைத்தினாசி ஸ்மிருதியும்*** இதையேதான் கூறுகிறது. அது மேலும் பின்வருமாறு கூறுகிறது:

**त्रीन् मातृत : पंचपितृतो वा ।**

அது மேலும் ஒரு கருத்தை வழங்குகிறது; தாயிடமிருந்து மூன்று படிநிலைகளும் தந்தையிடமிருந்து மூன்று படிநிலைகளும் என்று கூறுகிறது. **ஸ்மிருதிகள்** வெவ்வேறு வகைப்பட்ட விதிகளை வழங்குகின்றன, ஒரு சந்தர்ப்பத்தில் ஏழும் ஐந்தும் என்றும்; மற்றொரு சந்தர்ப்பத்தில் ஐந்தும் மூன்றும் என்றும் கூறுகின்றன, இவற்றில் நமக்குப் பிடித்தமானவற்றை நாம்தான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கின்றன. இவ்வாறு சில நண்பர்கள் கூறுகின்றனர். எனக்கு அவகாசம் மட்டும் இருந்தால் இந்தக் கூற்று தவறு என்பதைக் காட்ட எல்லா **ஸ்மிருதிகளையுமே** உங்கள் முன் எடுத்து வைத்திருப்பேன்.

இந்த வாசகங்களுக்குப் பொருள் விளக்கம் காணும் முறையை **மீமாம்சை** வகுத்துத் தந்துள்ளது. இந்து சட்டத்தின் அடிப்படை முழுவதுமே **ஸ்ருதியிலிருந்துதான்** சட்டம் பிறக்கிறது என்ற உண்மையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. **ஸ்ருதிகள்** என்பவை

ஸ்வாத பிரமாணாக்களாகும் (स्वत : प्रमाण :). ஸ்ருதியில் இருப்பவை யாவும் நிரூபணமானவை; அவற்றை நிலைநாட்ட மேற்கொண்டு விளக்கம் எதுவும் தேவையில்லை. ஸ்மிருதிகள் பர்த ப்ரமாணங்கள் ( परत : प्रमाण :); அவை தமக்குத் தாமே அந்த அதிகார வலிமையைப் பெற்றிருக்கவில்லை; ஏனென்றால் அவை ஸ்ருதி மூலங்கள் ( श्रुति मूल. ). ஸ்ருதிகளிலிருந்து அதிகாரம் பெறப்படும் இனத்தைச் சேர்ந்தவை அவை. எல்லா ஸ்மிருதிகளும் ஒரே ஆதார மூலத் திலிருந்துதான் பெறப்படுகின்றன என்றால் இங்கு ஓர் ஆட்சேபம் எழக்கூடும்; அந்த ஆட்சேபம் இயல்பானதும்கூட என்று கருதுகிறேன். அத்தகைய ஆட்சேபம் என்ன? அது இதுதான் - எல்லா ஸ்மிருதிகளும் ஒரே ஆதார மூலத் திலிருந்து பிறக்கின்றன என்று நீங்கள் வாதித்தால் அவற்றில் ஏன் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறது. இத்தகைய கேள்வி, ஆட்சேபனை நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான்.

ஸ்ருதியிலேயே அயுவிகல்பம் இருக்கக்கூடும் என்று மீமாம்சை கூறுகிறது; அதாவது ஸ்ருதியே ஒன்று இப்படி இருக்கும் அல்லது அப்படி இருக்கும் என்று இரண்டு வேறுபட்ட கருத்துகளை முன்வைக்கக்கூடும்.

இதனை ஸ்ருதிகளில் ஆங்காங்கு காணலாம்!
(காலை 10 மணி)

उदिते जुहोति। अनुदिते जुहोति।

இவ்வாறு ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதன் பொருள் என்ன? ஒரு குறிப்பிட்ட யாகத்தை சூரியோதயத்துக்கு முன்னர் நடத்தலாம் என்று அவை கூறுகின்றன; சூரியோதயத்துக்குப் பின்னரும் அந்த யாகத்தை நடத்தலாம் என்றும் அவை தெரிவிக்கின்றன. ஆனால் இதில் முரண்பாடு ஏதும் இல்லை; ஏனென்றால் இவை இரண்டுமே ஸ்ருதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், மீமாம்சை சாஸ்திரத்தின் கோட்பாடுகளின்படி வேறு சில அம்சங்களும் இங்கு செயலாற்று கின்றன. துறை மரப்படி இது ஆத்ம துஷ்டி எனப்படுகிறது. ஆத்ம துஷ்டி என்பதற்கு மனம் போன போக்கில் நடந்து கொள்வது என்று பொருள் அல்ல; இன்று ஒன்றை விரும்புவது, நாளை மற்றொன்றை விரும்புவது என்று அர்த்தமல்ல; இன்று சாதம் சாப்பிடுவது மறுநாள் சப்பாத்தி சாப்பிடுவது என்று கருத்தல்ல. எனினும் ஆத்ம துஷ்டிக்கு சமயத் துறையில் அடிப்படையான முக்கியத்துவம் உண்டு.

**ஆத்ம துஷ்டி**யின்படி ஒருவர் தர்மத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். எப்போது தர்மம் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டதோ அப்போது அது அப்படியே நிரந்தரமாக நிலைபெற்றிருக்க வேண்டும். ஆனால் இவை இரண்டுமே **ஸ்ருதியில்** குறிப்பிடப்பட்டிருந்தால் தான் இது சாத்தியம். இவ்வாறு **ஸ்ருதியில்** இரண்டு விஷயங் களுமே குறிப்பிடப்பட்டிருக்கும்போதுதான் **விகல்பம்** தோன்றும். உதாரணமாக பின்கண்ட வாசகத்தைப் பார்க்கவும்:

**अतिरात्रे षोड़शिनं गृह्णाति। नातिरात्रे षोड़शिनं गृह्णति।**

(இரவு வெகுநேரம் கழித்து, இரவு வெகுநேரம் கழிக்காமல்)

இந்த **ஸ்ருதியில்** நேரடியாக முரண்பட்ட இரண்டு விஷயங் களைக் காணலாம். இவை இரண்டும் அதில் இருப்பதால் **விகல்பம்** சாத்தியம். **ஸ்மிருதி** இரண்டு வெவ்வேறு விஷயங்களைக் கூறும் போது, அந்த இரண்டு விஷயங்களும் ஸ்ருதியில் இடம் பெற்றிருந் தால் **விகல்பம்** ஏற்படுவது இயல்பு. அப்போது இந்த ஷரத்துகள் எல்லாம் **ஸ்ருதிகள்** என்ன கூறுகின்றனவோ அவற்றை அடிப்படை யாகக் கொண்டவை என்று எனது நண்பர் மாண்புமிகு சட்ட அமைச்சரும் ஏனையோரும் கூறுவது சரியானது என்று ஆகிறது. ஆனால் உண்மையில் அப்படியல்ல; ஏனென்றால் நமக்குக் கிடைத் துள்ள **ஸ்ருதிகள்** இந்த விஷயத்தில் மௌனம் சாதிக்கின்றன; இது குறித்து நமக்கு எந்த வழிகாட்டுதலும் இல்லை. **ஸ்ருதிகளிலிருந்து ஸ்மிருதிகள்** பெறப்பட்டவையாக இருக்குமானால் **ஸ்மிருதிகள்** ஏன் பல்வேறு விதிகளைக் கொண்டிருக்கின்றன என்ற கேள்வி நியாயமாகவே எழுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவசியமானால் **ஸ்மிருதி** கள் இல்லாமலேயே சாத்தியமானால் **ஸ்ருதிகளின்** வழியில் இந்த மசோதா அமைந்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறேன். இந்தக் கருத்தையே சட்ட அமைச்சர் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். எனவே, கண்டிப்பான வியாக்யான விதிகளின்படி அது மூன்றா அல்லது ஐந்தா என்ற ஐயப்பாடு இருப்பினும் அவை உடன்பாடானவையாக ஆக்கப்பட வேண்டும் என்பது தெளிவு; எத்தகைய முரண்பாட்டையும் தவிர்க்கும் வகையில் அதனை உடன்பாடானவையாக ஆக்க அவர்கள் முயல்கிறார்கள் என்ற கருத்தை அவர் மறுதலிப்பதாக நான் நினைக்கவில்லை; பிந்தைய கருத்தையே அவர் ஆதரிக்கிறார். கண்டிப்பான வியாக்யான விதி

களுக்கு அது இசைந்ததாக இல்லாவிட்டாலும் அதுதான் சரியானது என்று அவர் கருதுகிறார்; அவையின் அனுமதியோடு அது ஏற்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இதுவே சட்ட அமைச்சரின் கருத்து என்று நினைக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எனவே, வியாக்யானத்தைப் பற்றி வீண் சர்ச்சை செய்து கொண்டிருப்பது நல்லதல்ல.

**பண்டிட் மாளவியா :** நான் ஏற்கெனவே கூறியது போல், இது பற்றிய வியாக்யானத்தில் அவசியம் ஈடுபட வேண்டுமென்ற கருத்தில் இதை நான் செய்யவில்லை. இந்த விஷயத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்பதைக் காட்டுவதற்கு ஓர் உதாரணமாகவே இதைக் கூறுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான் : **மீமாம்சை** சாஸ்திரத்தின்படி அது ஐந்தாகவும் ஏழாகவும் இருக்க வேண்டும் என்ற வாசகமும், அது மூன்றாகவும் ஐந்தாகவும் இருக்கலாம் என்ற வாசகமும் இணக்குவிக்கப்பட வேண்டும், தவறற்ற, ஐயத்துக்கு இடமற்ற முறையில் வியாக்யானம் செய்யப் பட வேண்டும் - அந்த வியாக்யானம் தவறற்றதாக மட்டுமன்றி சர்ச்சைக்கு இடமற்றதாகவும் இருப்பது அவசியம். இல்லையென் றால் **ஸ்மிருதி** ஒரு **ஸ்மிருதியாக** இருக்காது. **பைதினி** என்பது **ஸ்மிருதிகளில்** ஒன்று. இதனைப் பார்த்தோமானால், ஸ்மிருதி **சங்கிரஹத்திலும் நிபந்தகாராக்களிலும்** இந்த வேறுபாடு குறித்த தெள்ளத் தெளிவான வியாக்யானத்தைக் காணலாம்; **பைதினியி** லுள்ள இந்த ஷரத்து எல்லோருக்கும், **அயுராசாக்களுக்கும்** மற்றவர் களுக்கும் பொருந்தாது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இவர்கள் விஷயத்தில் ஏழும் ஐந்தும்தான் பொருந்தும்; அதேபோல் ஐந்து மற்றும் மூன்று என்ற இந்த மாறுபாடு **தாத்தகா புத்திரர்களுக்கும்** அல்லது **சபத்னி மாதாக்களுக்கும்** மட்டுமே பொருந்தும். **மீமாம்சை** சாஸ்திரம் இவ்வாறுதான் இவை இரண்டையும் இணக்குவிக் கின்றன. இவற்றை எல்லாம் இங்கு விவரித்துக் கூறுவதென்றால் அதிக நேரம் ஆகும். எனவே இந்த விளக்கம் போதும் என்று நினைக்கிறேன்.

**சாஸ்திரங்களை** வியாக்யானம் செய்வதற்கு ஒரு தெள்ளத் தெளிவான வழி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த உதாரணத்தைக் கூறினேன். **சாஸ்திரங்களின்படி** நாம் நடந்து

கொள்ள விரும்பினால் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும்; **சபிண்டா** திருமணத் தடையிலிருந்து ஏழு மற்றும் ஐந்து படிநிலைகளில் விலகிச் செல்ல ஒப்புதல் பெற முடியாது.

இதேபோல், இங்கு மற்றொரு விஷயத்தையும் எடுத்துக் கொள்கிறேன். ஒரு தடவை திருமணம் செய்து கொண்ட பெண்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்வதற்கு **ஸ்மிருதிகளிலேயே** வழிவகைகள் உள்ளன என்று ஓர் உறுப்பினர் ஓரளவு நியாயமான திருப்தியோடும் உணர்ச்சித் துடிப்போடும் வாசித்துக் காட்டினார். ஒரு பெண் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று **ஸ்மிருதிகளே** கூறுகின்றன என்பதை நிலைநாட்ட மதிப்பிற்குரிய என் நண்பர் - அவர் இதோ இங்கு இருக்கிறார் - பிரபலமான **நாரத ஸ்மிருதி** மற்றும் **பராசர ஸ்மிருதியிலிருந்து** மேற்கோள் காட்டிப் பேசினார். இது பற்றி சில நண்பர்கள் திருப்தி அடைந்திருப்பதைப் பார்க்கிறேன். இது ஓர் அவலக் காட்சியாகும். ஏனென்றால் இந்த **சுலோகம்** திருமணமான தம்பதியரைப் பற்றியது என்று வியாக்யானம் செய்யப்படுமானால் அதன் பொருளையே திரித்துக் கூறுவதாகி விடுகிறது. நான் ஏதோ கற்பனை உலகில் உலவுவதாக உறுப்பினர்கள் நினைக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** இல்லை, இல்லை). அந்த வரி மிகவும் எளிமையானது.

**नष्टे मृते प्रव्रजिने, क्लीबे च पतिते पतौ।**
**पञ्चस्वापत्सु नारीणां, पतिरन्यो विधीयते।**

கணவன் ஓடிவிடும்போது, அவன் மரணமடைந்து விடும் போது, துறவியாகிவிடும்போது, ஆண்மையற்றவனாகிவிடும் போது, பாபாத்மாகி விடும்போது பெண் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

எடுத்த எடுப்பில் பார்க்கும்போது இது மிகவும் எளிதானதாகத் தோன்றக்கூடும். இம்மாதிரியான 'கணவர்களுக்கு'ப் பதிலாக மாற்று கணவர்கள் அனுமதிக்கப்படுவதாக இந்த நண்பர்கள் நினைக்கின்றனர். அவை உறுப்பினர்கள் இதில் தங்கள் மனத்தை செலுத்த வேண்டும் என்று விரும்புகிறேன். **வியாகரண** விதிகள் இங்கு பிரச்சினைக்கு உள்ளாகின்றன.

**வியாகர்ண பதௌ** என்று மதிப்பிற்குரிய ஒரு நண்பர் கூறு கிறார். போதனாசிரியராக செயல்பட வேண்டும் என்ற ஆசை ஒருவருக்கு இருக்கக்கூடும். ஆனால் அத்தகைய ஆசை ஏதும் எனக்கு இல்லை. மாறாக இந்த விஷயத்தை மிகச் சுருக்கமாகவே விளக்கு வேன்; ஏனென்றால் இந்து சட்டத் தொகுப்பின் முழுக் கட்டுக் கோப்பே இதன் மீதுதான் எழுப்பப்பட்டுள்ளது. இந்த ஒரு வரியின் மீதுதான் ஒவ்வொருவருமே தமது நிலையை மேற்கொள்வதாகத் தோன்றுகிறது. இது சிக்கலற்ற மிகவும் எளிமையான விஷயம். இலக்கண விதிகளின்படி **சப்தமி பதி** என்பதன் **ஏக வசனம் பதௌ** ஆகும். குறிப்பிட்ட **சூத்திரங்களின்படி** இந்த சொல் உருவாக்கப் படுகிறது. **பத்யௌ, பதௌ** என்னும் சொற்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதை விரிவாக விளக்குவதற்கு நீங்கள் என்னை அனுமதிப்பீர்களா என்பதை நான் அறியேன். இந்த விளக்கம் மிகவும் சுவையாக இருக்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை; ஆனால் இதற்கு அதிக நேரம் ஆகும். ஆனால் அதனை நாம் புரிந்துகொண்டால் எல்லாமே தெள்ளத் தெளிவாகிவிடும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஹரிக்கு என்ன நேரும்? அது ஆண்பாலா?

**பண்டிட் மாளவியா :** ஐயா, இதனைத் தெரிந்துகொள்ள நீங்கள் ஆவலாக இருப்பதாகத் தெரிகிறது. நீங்கள் அனுமதித்தால்...

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அப்படியானால், **ஹரி** என்பது **இகரந்த புல்லிங்கமாகவும், சப்தமி** என்பது **ஹரௌவாக வும், பதி** என்பது **பதௌவாகவும்** இருக்க வேண்டும். இதுதான் எனக்குள்ள சிரமம். இது வேறுவிதமாக இருக்குமா என்பது எனக்குத் தெரியாது.

**பண்டிட் மாளவியா:** ஐயா, உங்கள் கேள்வி முற்றிலும் நியாயமானது. விஷயம் இதுதான். **ஹரி** என்பதுதான் **ஹரௌ** ஆகிறது. எனவே, **பதி** என்பதிலிருந்து **பதௌ** தோன்றியிருக்க வேண்டும். ஆனால் அது **பத்யௌ** ஆகியிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இது ஏன்? இந்த வேறுபாடு பின்வருமாறு தோன்றுகிறது: அது **சப்தமியாக** இருக்கும்போது **ஏக் வசன் கி** அதில் இடம் பெறுகிறது. பின்னர் சூத்ர பதிஹ் சமச ஈவ தன் பங்கை ஆற்றுகிறது; அப்போது கி சங்கிய விலக்கப்பட்டு, **சூத்ர ஔ**

முன்னணிக்கு வருகிறது; அது பதி மற்றும் ஔ ஆகிறது. பின்னர் **சூத்ர இகோயனசி** மூலம் 'ஐ' என்பது **ய** வாக மாறி, **பத்யௌ** என்னும் சொல் உருவாகிறது. பதி என்ற சொல்லின் பொதுவான பொருள் கணவன் என்பதாகும். **பதிஹ் சமச ஈவ** என்பதற்கான விதி மிகத் தெளிவாக வகுத்துத் தரப்பட்டிருக்கிறது. இப்போது ஐயா, **பத்யௌ** என்பதற்குப் பதிலாக **பதௌ** என்பது ஏன் பயன்படுத்தப் பட்டுள்ளது என்ற கேள்வி இங்கு எழுகிறது. இதில் ஓரளவு வேறுபாடு இருக்கிறது, குறிப்பிட்ட ஏதோ நோக்கம் இருக்கிறது என்பதைப் பார்வையற்றவர்கள்கூடக் காணக்கூடிய அளவுக்கு இது தெள்ளத்தெளிவானதாகும். **சப்தமியில் பதி** என்பதன் இயல்பான வடிவம் **(ரூபம்) பத்யௌ** என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் எனக்கு எண்பித்துக் காட்ட வேண்டும். ஆனால் இந்த வாசகத்தில் **பதௌ** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (குறுக்கீடு). இந்த விஷயத்தில் தாம் பெரிதும் ஐயப்படுவதாக மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் கூறுகிறார். அவருக்குள்ள அறிவுநுட்பம் எனக்கு இருப் பதாக நான் உரிமை கொண்டாடவில்லை. ஆனால், பாணினியின் **அஷ்டதியாயி** உள்ளது; நான் கூறியதற்கு மாறாக ஏதேனும் இருப் பதாக மதிப்பிற்குரிய எந்த உறுப்பினராவது சுட்டிக்காட்டினால், அவர் என்ன கூறினாலும் அதனைச் செய்வேன்.

**திரு. அமலோக் சந்த்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் **ஷ்லோகா** விலிருந்தும் மேற்கோள் காட்டுவாரா?

**பண்டிட் மாளவியா:** அந்த விஷயத்துக்கு வருகிறேன். எனவே, இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சொல் இயல்பான சொல்லான **பத்யௌ**விலிருந்து வேறுபட்டது. இங்கு **பதௌ** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது சமஸ்கிருத இலக்கண விதிகளின்படி....

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அது அவசியமில்லை. அது தவறானது என்பதே மதிப்பிற்குரிய உறுப்பினரின் கருத்து.

**பண்டிட் மாளவியா:** இல்லை, இல்லை. அது தவறான தல்ல. இங்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது என்ன? இங்கு **பதி** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக் கிறது; ஆனால் கணவனைக் குறிக்கும் **பதி** என்ற பொருளில் இங்கு அது பயன்படுத்தப்படவில்லை; மாறாக இலக்கண விதிகளின் படியே அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை என் சொந்த

முறையில் கூறவில்லை. இலக்கண விதிகளின்படி ஆச்சாரதே என்ற பொருள் வரும் இடங்களில்தான் ( पत्तौ ) பதௌ என்னும் சொல் பயன்படுத்தப்பட முடியும். அப்போது (अच्च घे :।) அதாவது கணவன் என்ற பொருளில் அல்லாமல் சூத்திரம் ( 'पति : समास एव' ) பயன் படுத்தப்படுகிறது; இதன் விளைவாக ( पत्यौ.) பயன்படுத்தப்படுவ தில்லை; அதன் இடத்தை 'கி' சங்கியா ( 'घि संज्ञा ) பெறுகிறது; அவ்வாறு 'கி' சங்கியா ( 'घि संज्ञा ) இடம்பெறும்போது சூத்ர அச்சகே ( अच्च घे :। ) பயன்படுத்தப்பட்டு பதி + 'ஐ' என்பது பதா + 'அவ்' ஆகிறது; பின்னர் விருத்தி விதியின்படி அது பதவ் ( पत्तौ ) ஆகிறது. பாணினியின் சமஸ்கிருத இலக்கணத்தில் இது அங்கீகரிக்கப் பட்ட சொல்லாகும்; அந்த வடிவத்தில் இங்கு பயன்படுத்தப்பட் டிருப்பது தவறு ஒன்றுமல்ல; ஆராயாது அது இங்கு பயன்படுத்தப் படவில்லை. ஆனால் பத்யௌ ( पत्तौ ) என்று சொல்லுக்குப் பதிலாக பதௌ ( पत्यौ ) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருப் பதற்குப் பொருள் உண்டு; அந்தப் பதௌ ( पत्तौ ) என்னும் சொல் பதியாகப் போகிறவரைக் குறிக்குமே தவிர பதியாக இருப்பவரைக் குறிக்காது. அந்த சொல்லுக்கு இதுதான் பொருள். நான் கூறுவதை யாரேனும் மறுதலிக்க முடியுமா? இந்த இலக்கணம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது; அது குறித்து எவருமே எத்தகைய ஐயப்பாடும் எழுப்பியதில்லை; பதௌ என்னும் சொல் ஒரு கணவரைக் குறிக்கவில்லை; அதற்கு மாறாக கணவராகும் நிலையிலுள்ளவரையே அது குறிக்கிறது. இந்த ஷ்லோகாவின் சரியான பொருள் முற்றிலும் மாறுகிறது....

பேராசிரியர் கே.டி. ஷா (பீகார்) : அனயு என்னும் சொல் இங்கு இடம்பெறுகிறது.

மாண்புமிகு துணை சபாநாயகர் : பத்ரன்யோ வீதியதே இங்கு வருகிறது. அது ஒரு கணவனை குறிப்பதாக இருக்கக்கூடும்.

பண்டிட் மாளவியா : அந்த விஷயத்துக்கு வருகிறேன். இந்தப் பிரச்சினையை நீங்கள் எழுப்பியது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பிரதமாவில் ஒரே ஒரு தொகுதி சூத்திரங்கள்தான் இருக்கின்றன; ஆனால் சப்தமியிலோ நான் ஏற்கெனவே குறிப் பிட்ட இரண்டு தொகுதி சூத்திரங்கள் இருக்கின்றன;

மாண்புமிகு துணை சபாநாயகர்: அன்யோ என்பது முற்பட்டதையும் குறிக்கும்.

*பண்டிட் மாளவியா : அன்யோ மீண்டும் பிரதமா ஆகிறது.*

*மாண்புமிகு துணை சபாநாயகர்: பிரதமன்யா என்பதும் கணவனாகத்தான் இருக்க வேண்டும்.*

*பண்டிட் மாளவியா :* இரண்டுமே ஒன்று என்றால் இந்நிலையில் **பத்யௌ** முதலிடம் பெறுகிறது.

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* இந்த வகையங்கள் என்ன நோக்கமுடையவையாக இருந்தாலும் ஒன்றுக்கொன்று ஒத்திசைவானவையாக இருக்க வேண்டும்.

*பண்டிட் மாளவியா :* குறிக்கோள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும்போது இது எப்படி சாத்தியமாகும், ஐயா, மற்ற மொழியில் ஒரு வரியில் சொல்லக் கூடிய விஷயத்தை சமஸ்கிருதத்தில் ஒரே வார்த்தையில் எடுத்துரைத்துவிட முடியும்; இதுதான் சமஸ்கிருத மொழியின் சிறப்பு. ''மாம்பழம் கிடைக்கவில்லை என்றால் கொய்யாப்பழம் சாப்பிடலாம்'' என்று ஒரு வாக்கியம் கூறுகிறது என்றால், அதை வைத்து மாம்பழமும் கொய்யாப் பழமும் ஒன்று என நாம் கூற முடியாது.

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* முற்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத விஷயங்களை ஒப்பிடமுடியாது. **அன்யோ** என்ற சொல் பயன்படுத்தப்பட்டால் அந்த சொல்லும் சரி, வேறு எந்த சொல்லும் சரி அதே வகையினத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் திருமணத்தைக் குறிக்கவில்லை என்றால், மற்ற சந்தர்ப்பத்திலும் அது திருமணத்தைக் குறிக்காது. ஒரு சந்தர்ப்பத்தில் அது திருமணத்தைக் குறிக்கிறது என்றால் மற்ற சந்தர்ப்பத்திலும் அது திருமணத்தைக் குறிக்கும். இரண்டுமே கணவனின் திருமணத்தைக் குறிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

*பண்டிட் மாளவியா :* சொற்களின் பொருளை நம்மால் மாற்ற முடியாது....

*திரு. பி.கே.பி. சின்ஹா (பீகார்) :* ஐயா, இங்கு ஓர் ஒழுங்கு பிரச்சினை. இந்த விவாதங்கள் அனைத்தும் கருத்து ரீதியானவையே. **பதி, பத்யௌ** என்ற சொற்கள் இந்த சுலோகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளனவே தவிர **பதௌ** அல்ல.

**பண்டிட் மாளவியா:** அது அச்சுப் பிழையாக இருக்கலாம். முன்பின் யோசனை இல்லாமல் இதைக் கூறவில்லை. மூல வாசகம் **பதௌ** என்பது. **சௌதா....**

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பதித்தே **பத்யௌ** என்பது தவறாக இருக்க வேண்டும்; ஏனென்றால் அது குரு என்றிருக்க வேண்டும். **பதியும் பதௌவும்** வெவ்வேறானவை என்பதற்கு சொல்லமைப்பு இயல் குறுக்கே நிற்கிறது. இது தவறு என்பது தெளிவு.

**பண்டிட் மாளவியா:** அது **பத்யௌவாக** இருக்க முடியாது என்பது கண்கூடு. நான் சொல்ல விரும்புவது இதுதான் : இந்த மாளிகைக்கு அஸ்திவாரமே இல்லை, இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல்லின் பொருள் கணவன் என்பதல்ல; அது **பத்யௌ** அல்ல, **பதௌ;** கணவனாகக் கூடிய நிலையிலுள்ள ஒருவர்தான் **பதௌ** எனப்படுகிறார். எனவே, திருமணமான ஓர் இந்து பெண் மீண்டும் திருமணம் செய்துகொள்ளலாம் என்று சாஸ்திரங்களில் எங்கும் கூறப்படவில்லை.

அவையின் பெரும்பாலான நேரத்தை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. ஆனால் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், எவர்களுடைய விருப்பங்களும் சொற்களும் நமக்கு சட்டங்களாக விளங்குகின்றனவோ அவற்றுக்கு எதிராகச் செயல்படுவதற்கு நான் விரும்பவில்லை. எனவே, பல விஷயங்கள் கூறுவதற்கு நான் விரும்பினாலும் மேலும் அதிக நேரம் எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. இந்து சட்டத் தொகுப்பு எத்தகைய தவறான ஆதார அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த இரண்டு உதாரணங்கள் மூலம் காட்டுவதற்கு முயன்றிருக்கிறேன்.

மேலும் ஒரு விஷயத்தைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். இந்து சமுதாயத்தில் அரசின் எத்தகைய ஆணையுரிமையுமின்றி, காவல் துறையின் ஆணையுரிமையுமின்றி, எத்தகைய சட்டமன்றத்தின் ஆணையுரிமையுமின்றி தொன்னெடுங் காலந் தொட்டே சட்டங்கள் நடப்பில் இருந்து வந்திருக்கின்றன. நடைமுறையிலுள்ள சட்டங்களுக்குப் பின்னால் எத்தகைய அரசாங்க இசைவாணையும் இருக்கவில்லை. மனிதன் எந்த அளவுக்கு முடியுமோ

அந்த அளவுக்கு ஏறத்தாழ பூரணத்துவம் அடையப் பெற்றவர்களால், அனைவரது நன்மதிப்பையும் ஈட்டப் பெற்றவர்களால், மக்களின் நலனுக்கு, நன்மைக்குப் பாடுபட்டவர்களால் சட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. **சாஸ்திரங்களில்** இடம்பெற்றிருக்கும் **அபூர்வ** என்னும் சித்தாந்தத்தின் அங்கீகாரத்தை அவை பெற்றிருந்தன. இந்த சித்தாந்தம் கூறுவது என்ன? அது பின்வருமாறு கூறுகிறது: சாஸ்திரங்களில் அபூர்வம் என அழைக்கப்படும் ஒரு சித்தாந்தம் உண்டு. இந்த சித்தாந்தம் பின்வருமாறு கூறுகிறது: சில சந்தர்ப்பங்களில் கட்புலனாகாத சில நிகழ்வுகள் நடைபெறும்; ஒருவர் இன்று புரியும் கருமத்திற்கு பின்னால் பிரதிபலிப்பு இருக்கும்; மனித ஆன்மா, **ஜீவன்** ஒரு பிறவி மட்டுமே எடுப்பதில்லை; சங்கிலித் தொடர்போல் பல பிறவிகளை அது எடுக்கிறது; ஒரு பிறவியில் ஒருவர் புரியும் கருமம் முந்திய பிறவிகளின் மற்றும் வரப்போகும் பிறவிகளின் கருமங்களுடன் பரஸ்பரம் சம்பந்தப்பட்டவை. ஒழுக்கம், நற்பண்பு, நற்குணத்துடன் புரியும் செயல்கள் இந்தப் பிறவியில் ஒருவர் பெறக்கூடிய இன்னலத்தை விட உண்மையில் மிக மேன்மையானதாக இருக்கும். நிலையற்ற விஷயங்களின் உண்மையான மதிப்பீடு குறித்த ஒரு தெளிவான கண்ணோட்டம் எப்போதுமே நினைவில் கொள்ளப்பட்டு வந்துள்ளது; இதனடிப்படையில்தான் சட்டங்கள் பிரகடனம் செய்யப்பட்டுப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. நாடு முழுவதும் வடக்கு முதல் தெற்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை இந்துக்களின் சட்டம் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? பொறுப்பு வாய்ந்த முதியவர் போல் அல்லாமல் குஷியான இளைஞர்போல் இந்த அவைக்குள் வந்து தமக்குத் தெரிந்ததை சண்டபிரசண்டமாகத் தெரிவித்த என் மரியாதைக்குரிய காகாசாகேப் போன்றோர் இந்து சட்டத்தை தங்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவோ, அல்லது மகிழ்ச்சியூட்டுவதாகவோ அல்லது வெறுப்பூட்டுவதாகவோ காண்பதல்ல இதற்குக் காரணம். மாறாக காகாசாகேபும் கோவிந்த மாளவியாவும் மற்றும் அவர்களைப் போன்ற ஒரு கோடிப்பேரும் தாங்கள் இன்று செய்வது எதிர்காலத்தில் விளைவுகளை ஏற்படுத்தும், இப்போது தாங்கள் நல்லது செய்தால் பின்னால் நற்பயன் கிட்டும் என்ற நம்பிக்கையில் அவர்கள் ஆழமாக மூழ்கிப்போயிருப்பதே இதற்குக் காரணம். வாழ்க்கையில் **பிரேய** மட்டுமே முக்கியத்துவமுடையதல்ல; **ஸ்ரேயத்தையும்** மனத்தில் ஆழப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் திடமாக நம்புகின்றனர். இந்த நாட்டி

லும், இந்த சமுதாயத்திலும் இவ்வாறுதான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. சட்டத்தை மதிக்க வேண்டும், அதனைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ள நிலைமையில், அதற்கு ஆதாரமாக உள்ள கட்டுமானத்தை உடைத்துச் சிதைக்கும் சிந்தனை யற்ற, விவேகமற்ற, அவசரகோலமான தவறை அரசாங்கம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவகைப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ஒருவகைப்பட்ட மேதைகள் அல்லது போலி மேதைகள் தங்களுக்கு உசிதமானது என்று தோன்றும் ஒரு குறிப்பிட்ட முறையில் இன்று சட்டங்கள் இயற்றினால் மக்கள் அபூர்வத்தைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்திக்கொள்வார்கள். அடுத்த நாளே தங்கள் வசதிக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற ஒரு சட்டத்தை இயற்றுவது சாத்தியம் என்பது மக்களுக்குத் தெரியும். இதனால் தார்மிகக் கட்டுக்கோப்பு மறைந்துவிடும்; அப்போது திருமணங்கள் முறையோ, அமைப்போ இருந்திராத பண்டைக் காலத்துக்கு, ஒரு பண்பான சமுதாயத்தில் குறிப்பிடுவதற்குத் தகுதி யற்றவையான நிலைமை நிலவும் பழங்காலத்துக்கு மனிதன் திரும்பிச் செல்லக் கூடும். இத்தகைய அபாயம் இதில் பொதிந் துள்ளது.

விவாகரத்துப் பிரச்சினை பற்றிப் பேச எனக்கு விருப்பம் இருக்கிறது; விதவைத் திருமணம் பற்றிப் பேச எனக்கு விருப்பம் இருக்கிறது; கலப்புத் திருமணம் பற்றிப் பேச எனக்கு விருப்பம் இருக்கிறது: ஏகதார மணம் பற்றிப் பேச எனக்கு விருப்பம் இருக் கிறது. இவை சம்பந்தப்பட்ட சட்டக்கூறுகள் பரிசீலிக்கப்படும் போது, உரிய சமயத்தில், இப்பிரச்சினைகள் குறித்துப் பேச எனக்கு வாய்ப்பு கிட்டும் என்று நம்புகிறேன். வைதீகக் காரணங்களுக்காக மட்டும் இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதல்ல. சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலன் கண்ணோட்டத்திலிருந்தும், சுபிட்சக் கண்ணோட்டத்திலிருந்தும் இந்தப் பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டும். சமுதாயம் என்று இங்கு கூறினேன். சமுதாயம் என்பது மக்கள் அனைவரையும் குறிக்கும். சமுதாயம் மக்கள் தொகுதி களால், தனிநபர்களால் ஆனது. ஆயின், தொகுதியும் முழுமையும் பிரிக்க முடியாதபடி பரஸ்பரம் ஒன்றையொன்று சார்ந்திருந்த போதிலும், அவை தமக்கே உரிய தனித்தன்மையை, தனித் துவத்தைப் பெற்றுள்ளன. உடல் என்பது அனைத்து உறுப்புகளை யும் கொண்டது. ஆனால் கை தனக்கே உரிய தனித்துவத்தைப்

பெற்றுள்ளது; அதே போல்தான் தலையும், இதர உறுப்புகளும். கைகள், கால்கள், பாதங்கள், தலை இல்லாமல் மொத்த உடல் இருக்க முடியாது.

*(திருமதி துர்க்காபாய் சபாநாயகர் பீடத்தில் அமர்கிறார்)*

ஆனால் உடல் என்பது வெறும் கையோ, அல்லது பாதங்களோ அல்லது தலையோ மட்டும் அல்ல. அது முழுமையின் ஒட்டு மொத்தமாகும். எனவே, நாம் ஒட்டுமொத்த சமுதாயத்தின் நன்மையை, நலனை கருத்தில் கொள்ள வேண்டும். எதுவும் அனைவரது நலனுக்கும், சுபிட்சத்துக்கும் உரியதாக, உகந்ததாக இருக்கும் பட்சத்தில் ஒருவருக்கு பெரிதும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகவும், இன்னொருவருக்குக் குறைந்த அளவு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவும் இருந்தாலும் அது ஏற்கப்பட வேண்டும். இந்த விஷயங்கள் விவாதத்திற்கு வரும்போது அவற்றைப் பற்றிப் பேச எனக்கு வாய்ப்பு கிட்டும் என்று நம்புகிறேன். சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஒரு தெள்ளத் தெளிவான கண்ணோட்டத்தை வழங்குவதற்கும், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அணுகுமுறையின் தவறை அல்லது சரித்தன்மையைச் சுட்டிக் காட்டுவதற்கும், தவிர்க்க முடியாதபடி நாம் எடுக்க வேண்டிய முடிவை எடுத்தியம்புவதற்கும் நான் நிறைய பேச விரும்புகிறேன். அம்மையாரே, இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த அவையின் மிகவும் மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் தலைமை பீடத்தில் அமர்ந்திருக்கும் நிலைமையில், அவருக்குள்ள இயல்பான நற்பண்புகள் காரணமாக, ஏனைய எவரிடத்திலும் போலவே என் விஷயத்திலும் நேரிய முறையில் நடந்து கொள்ளக்கூடிய அனுகூலத்தை நான் பெற்றுள்ளேன். எனினும் நான் ஏற்கெனவே கூறியதுபோல் அதிக நேரத்தை நான் எடுத்துக் கொள்ள மாட்டேன்; இந்த அவையின் மதிப்பிற்குரிய தலைவரது விருப்பங்களையும் முடிவுகளையும் மதித்து நடந்து கொள்வேன். எனவே, எனது உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்; 30 கோடி மக்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய இந்த விஷயத்தை மிகக் கடுமையாகவும், மனிதநேயத்துடனும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். இப்போது நான் செய்ய வேண்டிய கடமை ஒன்று உள்ளது; மூன்று தினங்களுக்கு முன்னர் நான் அறிவிப்பு கொடுத்த திருத்தங்களை முன்மொழிய கடமைப்பட்டிருக்கிறேன். பின்வருமாறு முன்மொழிகிறேன்:

i) கூறு 2 உட்கூறு (i)ன் பகுதி (அ) வில் ''உட்பட'' என்னும் சொல்லுக்குப் பிறகு ''பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள்'' என்பதைச் சேர்க்கவும்.

ii) கூறு 2 உட்கூறு (i)ன் (ஆ) பகுதியை நீக்கவும்.

முதல் திருத்தத்தைத் தொடர்ந்து கூறு பின்கண்டவாறு அமைந்திருக்கும்:

''அனைத்து இந்துக்களுக்கும், அதாவது பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், வீர சைவர்கள் அல்லது லிங்காயத்து கள் மற்றும் பிரமோ, பிரார்த்தனா பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட இந்து மதத்தை அதன் பல்வேறு வடிவங்களில் அல்லது விரிவாக் கங்களில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றும் அனைவர்க்கும் இத்யாதி, இத்யாதி.''

ஒரு வெளிப்படையான காரணத்திற்காகத்தான் இந்தத் திருத்தத்தை முன்மொழிந்திருக்கிறேன். நான் ஒரு சமயப்பற்றுள்ள ஓர் இந்து என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விதம் உரிமை கொண்டாட முடியுமா என்பதை நான் அறியேன் - மேலும்....

*டாக்டர் அம்பேத்கர்:* இத்தகைய உரைக்குப் பின்னர் வேறு யார் உரிமை கொண்டாட முடியும்?

**பண்டிட் மாளவியா :** எல்லா சந்தர்ப்பங்களிலும் நாங்கள் வினையாற்றும் சங்கல்பத்தில் பௌத்தவதரே என்று கூறுகிறோம். பௌத்தம், ஜைனம், சீக்கியம் முதலியவை தமக்குரிய சுதந்திரமான இடத்தையும் அந்தஸ்தையும் பெற்றிருந்தாலும் இந்து மதத்தின் செல்வாக்குக்கு அவை அப்பாற்பட்டவை என்று எவ்வகையிலும் கூற முடியாது. எனக்கு அவகாசம் மட்டும் இருந்தால் இந்த உண்மையை நிலைநிறுத்திக் காட்டுவேன். ஆனால் அதே சமயம் இந்து மதம் அவற்றின் மீது உரிமை கொண்டாடுகிறது என்றோ, அவற்றின் சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் எவ்வகையிலும் கட்டுப்படுத்த விரும்புகிறது என்றோ இதற்குப் பொருள் கொள்ளலாகாது. எதார்த்தம் அதுவல்ல. வரலாற்று உறவைப் பற்றியே இங்கு பேசிக் கொண்டிருக்கிறேன். பௌத்தம், ஜைனம், சீக்கியம் முதலியவை எல்லாம் இந்து மதத்திலிருந்து தோன்றியவை; எப்போதுமே அதன்

பகுதியாக இருந்து வருபவை. இவற்றின் சமய நூல்களிலும் செயற்படும் முறைகளிலும் கூட, அவற்றின் அன்றாட நடைமுறை ஒழுங்குகளிலும், அன்றாட வாழ்க்கையிலும்கூட ஏராளமான ஒத்த தன்மைகள் இருப்பது மட்டுமல்ல, அவை இன்றளவும் நீடித்து வருகின்றன. எனவே, இந்த தேசத்தில் அவற்றைத் தனியாகப் பிரித்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மொத்தத்தில் எனது திருத்தங்கள் எந்த வேறுபாட்டையும் வலியுறுத்தவில்லை. இந்தக் கூறு ஒரு தனிப்பட்ட கூறாக வருவதற்குப் பதிலாக முந்தியக் கூறுக்குள் வருகிறது.

இந்த விஷயத்தை உணர்ச்சிவசப்படாமல் நடுநிலை நோக்கோடு பார்க்கும்படி இந்த அவையின் உறுப்பினர்களை இப்போது வேண்டிக் கொள்கிறேன். இத்தகைய சட்டம் இயற்றப் பட்டால் அது சமுதாயத்துக்கு நன்மை பயக்கும் என்று கருதும் சில உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இந்த விஷயத்தில் சரியான பாதையைப் பின்பற்றும்படி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். சிறிது காலத்திற்கு முன்னர் கலப்புத் திருமணச் சட்டம் கொண்டுவரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது; ஆரியசமாஜிகளிடையே நடைபெறும் திருமணங்கள் இதன் மூலம் செல்லத்தக்கவை ஆக்கப்பட்டன. இதே காலகட்டத்தில் மூதறிஞரும் மனுவின் பக்தருமான டாக்டர் பகவான் தாஸ்ஜி அப்போதைய மத்திய சட்டமன்றத்தில் மேலே குறிப்பிடப்பட்ட சட்டக்கூறை இந்துக்கள் அனைவருக்கும் பொருந்தும்படிச் செய்ய வேண்டும் என்று கோரும் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அந்த மசோதா முன்கொண்டுசெல்லப்படவில்லை. நீண்டகால விவாதத் திற்குப் பிறகு அது கைவிடப்பட்டது. ஆரியசமாஜிகளிடையே சில பல பத்தாண்டுகளாகக் கலப்புத் திருமணங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன; இது சம்பந்தமான தங்கள் இயக்கத்தை அவர்கள் நீண்ட காலம் நடத்திவந்தனர்; கலப்புத் திருமணங்கள் நடைபெறுவது சர்வசாதாரணமாகிவிட்டது; இந்நிலையில் காலம் நன்கு கனிந்ததால் அந்த மசோதா சிரமமின்றி ஏற்கப்பட்டது. இதிலிருந்து நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொள்ள வேண்டும். சமூக சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினால், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அவற்றை வரவேற்றால் எவரும் அதனை ஆட்சேபிக்க முடியாது. எனவே, இந்தப் பாதையை நாம் பின்பற்றலாம். நீங்கள் செய்ய விரும்புவது எத்தகைய பலனு மின்றி வெறும் காகித அளவில் இருப்பதைவிட இந்தப் பாதை யைப் பின்பற்றுவது உசிதமாக இருக்கும்.

சட்டத் தொகுப்பில் திருமணம், விவாகரத்து சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டுமே இப்போது எடுத்துக்கொள்கிறோம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இதைவிட அகில இந்திய அளவில் எல்லா சமூகங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு சட்டத் தொகுப்பை உருவாக்குவது உசிதமாக இருக்கும். ஒருதார மணம் நல்லது என்றால் அது எல்லோர் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வாதிப்பவர்களில் நான் ஒருவனல்ல. அவ்வாறு நான் கூறவில்லை. அதற்கு மாறாக நான் கூறுவது இதுதான்: ஒரு தார மணம் நல்லது என்றால் மற்றவர்கள் விஷயத்தில் பின்பற்றப் பட்டாலும் இல்லை என்றாலும் அது இந்துக்கள் விஷயத்தில் பின்பற்றப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒருதார மண சட்டம் இந்துக்களுக்கு நல்லது என்றால், மற்ற எல்லோர் விஷயத் திலும் அனுஷ்டிக்கப்படாதவரை அதனை இந்துக்களுக்குப் பயன் படுத்தக்கூடாது என்று வாதிட நான் விரும்பவில்லை. இது மற்ற வர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்; ஒருதார மண சட்டத்தை அவர்கள் விரும்பவில்லை என்றால் அதனை அவர்கள் விஷயத் தில் பயன்படுத்த வேண்டாம்; அந்த சட்டம் இந்துக்களுக்கு நல்லது என்றால் அவர்கள் விஷயத்தில் அதனை கைக்கொள்ளலாம். (**மதிப் பிற்குரிய ஓர் உறுப்பினர்:** அது நல்லதுதானா?) அது நல்லதுதான்; அது ஒன்றே நல்லது என்று நான் நினைக்கிறேன்; ஆனால் ஒரு விஷயம் நல்லது என்பதற்காக அதனைக் குருட்டுத்தனமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது, அது சம்பந்தப்பட்ட இதர அம்சங்களையும் நாம் பரிசீலிக்க வேண்டும். ஒருதார மணக் கோட்பாட்டைப் பொறுத்த வரையில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, வேறு எவருக்கும் எந்த ஆட்சேபமும் இருக்க முடியாது. ஆனால் ஒருதார மணம் தவிர வேறு எதுவும் எங்கேயும் நடைமுறையில் இருக்குமானால் நான் மகிழ்ச்சி அடைய மாட்டேன்....

**கியானி ஜி.எஸ். முசாபிர் (பஞ்சாப்) :** நல்லது எதையும் விரும்புவதில் தவறு ஏதும் இல்லை.

**பண்டிட் மாளவியா :** அது எல்லோர் விஷயத்திலும் பயன் படுத்தப்படக் கூடாது என்று நான் கூறவில்லை; மற்றவர்களைப் பற்றி அரசாங்கமும் சம்பந்தப்பட்டவர்களும்தான் முடிவு செய்ய வேண்டும். திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட ஒரு வரையறைக்குட்பட்ட மசோதாவைத்தான் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நாடு முழுவதற்கும் இதனைப் பயன்படுத்துவது

உகந்தது என்று அவர்கள் கருதினால் அவ்வாறே செய்யட்டும். இது அரசாங்கம் அவசியம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய மற்றோர் அம்சமாகும்.

**திரு. பட் (பம்பாய்) :** இது அனைவர் விஷயத்திலும் பயன் படுத்தப்பட வேண்டும் என்று உறுப்பினர்களாகிய நாங்கள் அரசாங் கத்தை வலியுறுத்தாமல் இருக்க முடியுமா?

**பண்டிட் மாளவியா :** நீங்கள் கூறியதையே பலரும் கூறியிருக் கிறார்கள்.

**கியானி ஜி.எஸ். முசாபிர் :** இதைக் கேட்பது நமது கடமை என்று கருதுகிறேன்.

**பண்டிட் மாளவியா :** இது முக்கியமான விஷயம். அரசாங்கம் இதனைப் பரிசீலிக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** மற்றவர்களுக்கு நாம் போதனை செய்வதற்கு முன்னர் நாம் அதனை நடைமுறைப் படுத்துவது விரும்பத்தக்கது என்று அவர் நினைக்கவில்லையா என மதிப்பிற்குரிய உறுப்பினரை நான் கேட்கலாமா?

**பண்டிட் மாளவியா :** அம்மையாரே, அவைத் தலைவருடன் வாதாடும் அளவுக்கு மட்டு மரியாதையற்று நடந்து கொள்ள நான் விரும்பவில்லை. இந்த அவையின் உறுப்பினர்கள் தாங்கள் வகிக்கும் பதவிக்கேற்ப செயல்பட வேண்டும், இந்த மசோதா விஷயத்தில் அவர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும், அப்போதுதான் இந்து சமூக வாழ்க்கையின் நினைவுக்கெட்டாத, தொல் பழமையான பாரம்பரியங்களும் அடித் தளங்களும் ஆழ்ந்த சிந்தனையற்ற முறையில், புனித நிலை கெட்ட முறையில் அழிந்துவிடாதபடிப் பாதுகாக்க முடியும் என்று ஏற்கெனவே கூறினேன். அதையே மீண்டும் கூறி இப்போது என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜாஜு (மத்திய பாரத்):** தீர்மானத்தை இப்போது முன்வைக்கலாம். (குறுக்கீடுகள்).

**பாபு ராம்நாராயண் சிங் (பீகார்) :** நான் பேச விரும்புகிறேன், அம்மையாரே.

*மாண்புமிகு அவைத் தலைவர்:* பிரச்சினையை நானே முடிவு செய்யப் போவதில்லை. அதனை அவைக்கு விட்டு விடுகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் எப்போது தமது பதிலை அளிக்கப்போகிறார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?

*டாக்டர் அம்பேத்கர் :* நீண்ட உரைகள் நிகழ்த்தப்பட்டு, பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், நான் பதிலளிப்பதற்கு சுமார் ஒன்றேகால் மணி நேரம் பிடிக்கக்கூடும், இதைவிட இன்னும் அதிக நேரம் ஆனாலும் ஆகலாம், எதையும் என்னால் திட்டவட்டமாகக் கூற இயலாது.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* திருத்தங்களை முன்வைக்க அரைமணி நேரம் ஆகும். விவாதத்திற்குப் பதிலளிக்க சட்ட அமைச்சர் ஒன்றேகால் மணி நேரம் எடுத்துக் கொள்ளப்போகிறார். ஆக, 11.30 மணி வாக்கில் விவாதத்தை நாம் முடித்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதற்கிடையே ஒரு வேண்டுகோள். மதிப்புக்குரிய உறுப்பினர்கள் தமது உரைகளைப் பத்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்வார்களேயானால் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியும். சரியாக 11.30 மணிக்கு விவாதத்தை முடிக்க விரும்புகிறேன்.

*திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்கம்) :* திருத்தங்களை அவையில் முன்வைக்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப் பட்டது.

*பண்டிட் மாளவியா:* சட்ட அமைச்சரை 11.30 மணிக்கு அழைப்பதாக துணை சபாநாயகர் கூறினார். எனவே, நமக்குப் போதிய நேரமிருப்பதால் இதர உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கலாம். இது அவசியமில்லை என்று நீங்கள் கருதினால் பத்து நிமிடங்கள் என்ற விதியை வலியுறுத்தாமல் இருக்கலாம்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* ஒரு பெண்மணி தலைமை வகிக்கிறார், எனவே அவர் அவைக்கு நடுநிலையோடு நடந்து கொள்ள மாட்டார் என்ற முடிவுக்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் வந்துவிட வேண்டாம். வேறு எவரையும் போன்றே அவையின் சமய உணர்வுகளை நான் மதிக்க விரும்புகிறேன். திருத்தங்களுக்கு அரை மணி நேரம் ஒதுக்கப்படும் என்று துணை சபாநாயகர் அவையில் கூறினார். விவாதங்களுக்கு 11.30 மணி அளவில்

பதிலளிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அழைக்கப்படுவார் என்பது உண்மையே. மற்றொரு சம்பிரதாய முறையும் இருக்கிறது. விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்மானம்தான் அது. இந்த இரண்டு விஷயங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு விவாதம் 11.30 மணி அளவில் முடிய வேண்டும் என்று விரும்புகிறேன்.

**திரு. வி.ஜே. குப்தா** (சென்னை) : விவாத முடிவு தீர்மானம் குறித்து என்ன சொல்லுகிறீர்கள்?

**மாண்புமிகு அவைத் தலைவர் :** விவாதத்திற்கு 11.30 மணி அளவில் பதிலளிக்குமாறு மாண்புமிகு சட்ட அமைச்சரை அழைப்பதற்கு தற்போது அவை ஒப்புக் கொண்டுள்ளது. எனவே இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை.

**குவாஜா இனய்த் உல்லா** (பீகார்) : (உருது மொழியில் நிகழ்த்தப்பட்ட உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு) நீண்ட நேரம் யோசித்த பிறகு இந்த மசோதா பற்றி எதுவும் கூறுவதில்லை என்று தீர்மானித்தேன். இந்து தொகுப்பு மசோதா நிறைவேற்றப்பட்டாலும் நிறைவேற்றப்படாவிட்டாலும் நான் ஏற்கெனவே மேற்கொண்ட முடிவுக்கு இணங்க இது பற்றி இன்றுங்கூட நான் பேசப் போவதில்லை. நல்லது, இது முற்றிலும் வேறான விஷயம்....

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** அவசியம் நீங்கள் பேச வேண்டும்.

**குவாஜா இனய்த் உல்லா :** நான் பேச விரும்பவில்லை. நான் செய்வது போல நமது சோதரர்களும் தங்கள் சகோதரிகளையும் புதல்விகளையும் நடத்த வேண்டும். இந்த மசோதாவுக்கு 'இந்து சட்டத்தொகுப்பு மசோதா' எனப் பெயரிடப்பட்டுள்ளது; இந்து சமயத்தைப் பின்பற்றுவோர்களுக்காக குறிப்பாக இந்த சட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, சமயக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, முஸ்லீமாகிய நான் இந்துக்களின் சமூக சட்டத்தில் தலையிடுவது முறையல்ல. இந்த மசோதாவின் மூலம் இதில் சில மாற்றங்களைச் செய்ய அவர்கள் விரும்புகிறார்கள்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** ஒரு மானுடப் பிறவி என்ற கண்ணோட்டத்தில் இது செய்யப்பட வேண்டும்.

குவாஜா இனய்த் உல்லா : ஆம், மானுடப் பிறவி என்ற முறையில் இதனை நான் செய்து வருகிறேன். ஆனால் ஒரு மானுடனாக இருக்கும் அதே சமயம் நான் ஓர் இந்தியனாகவும், முஸ்லீமாகவும் இருக்கிறேன். எனவே, என் சமயத்துக்கு இயைந்த முறையில் என் கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து விதிவிலக்கு பெற்றுள்ள முஸ்லீம்கள், கிறித்தவர்கள் முதலிய எல்லோரும் இதில் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறும் ஒரு திருத்தம் உள்ளது.

திரு. ஜே.ஆர். கபூர் (உத்திரப்பிரதேசம்) : அவர்கள் விரும்பினால் மட்டும்தான்.

குவாஜா இனய்த் உல்லா : இவ்வாறு விரும்புவர்களும் விரும்பாதவர்களும் கூடத்தான். 90ஆம் எண் திருத்தம் பின்வருமாறு கூறுகிறது: "இந்த சட்டத் தொகுப்பு எல்லா இந்தியர்களுக்கும் அவர்களுடைய சமயம், சாதி, இனம் எதுவாக இருந்தாலும் பொருந்தும்." இதே போன்று 91, 92, 93 ஆவது திருத்தங்களிலும் கூறப்பட்டுள்ளது. சில உறுப்பினர்கள் - மதிப்பிற்குரிய என் நண்பர் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இந்தத் திருத்தத்தை முன்மொழியும்போது எடுத்த எடுப்பிலேயே ஒரு கருத்தை வெளியிட்டார்: அதாவது "சமய சார்பின்மை சித்தாந்தம்" இந்தியாவில் ஒரு நோய்போல் பரவி வருகிறது என்று கூறினார். என்னுடைய நண்பர் மிகவும் திறமையானவர். அப்படிப்பட்டவர் மதச்சார்பின்மை என்பது ஒரு நோயல்ல, நோய் தீர்க்கும் மருந்து என்பதை மறந்து அதனை ஒரு நோய் என்கிறார்; அதன் கீழ் இயற்றப்படும் எல்லா சட்டங்களும் ஒரே மாதிரியானவையாக இருக்க வேண்டும். அதாவது இந்துக்களுக்காக இயற்றப்படும் சட்டங்கள் முஸ்லீம்களுக்கும் பொருந்தக் கூடியவையாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அது பொருளாதார சட்டமாக, அரசியல் சட்டமாக, சிலரது மன இயல்பை அல்லது இந்தியாவின் சமூக வாழ்வை மாற்றக்கூடிய சட்டமாக இருந்தால் அது முற்றிலும் நியாயமானது, சரியானது; இப்படிப்பட்ட சட்டம் நிச்சயமாக ஒரே சட்டமாக இருக்க வேண்டும்; எனினும் சமயச் சார்பின்மை என்பதற்கு இத்தகைய சட்டங்களும் இன முறைச் சட்டங்களும் ஓர் இந்தியனுக்கும் ஒரு முஸ்லீமுக்கும் ஒரே மாதிரியானவையாக இயற்றப்பட வேண்டும் என்று ஒருபோதும் அர்த்தமாகாது. இந்துக்களைப் பற்றிச் சொல்லப்

பட்டது போன்றே முஸ்லீம்களைப் பற்றியும் சொல்லப்பட வேண்டும் என்பதே இதற்குப் பொருள். எனினும் இனச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இது பொருந்தாது; ஏனென்றால் இந்துக்களின் சட்டங் களிலிருந்து வேறுபடும் பல சட்டங்களை நாம் பெற்றுள்ளோம். தங்கள் சட்டங்கள் இந்துக்களின் சட்டங்களிலிருந்து மாறுபடுவ தாக நேற்றுதான் என்னுடைய ஒரு சீக்கிய நண்பர் என்னிடம் தெரிவித்தார்: இந்த அம்சம் பற்றி விவாதிக்கும் உத்தேசம் எதும் எனக்கு இல்லை. ஆனால் இது முஸ்லீம்களுக்கும் பொருந்தும் என்று மட்டுமே கூற விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் காட்கில் நேற்று நிகழ்த்திய தமது உரையில் இந்துக்களின் சமூக சட்டத்தை மாற்ற விரும்பு வதாகக் கூறினார்; இதற்கு ஆதரவாக ஒரு வாதத்தையும் முன் வைத்தார்; அதனை அவர் வெற்றிகரமாகவே செய்தார் என்றே நினைக்கிறேன்; இந்த சட்டம் மாற்றங்களைக் காணப்போவதால் அதனை மாற்ற நமக்கும் உரிமை உண்டு என்று கூறினார். ஆனால் அவர் மேலும் கூறும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்; அதாவது வருங்காலத்தில் சட்ட மாற்றங்களில் முஸ்லீம்களின் சட்டங் களும் இடம் பெறக்கூடும் என்று கூறினார். அவருக்குப் பின்கண்ட வாறு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்: இந்து சட்டம் மாற்றப்பட்டு வருவதால் அதே போன்று முஸ்லீம் சட்டத்தையும் மாற்றலாம் என்று அவர் நினைக்கக்கூடும். ஆனால் இங்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்: முஸ்லீம் சட்டம் கடந்த 1350 ஆண்டுகளாக மாற்றப்படவில்லை; வருங்காலத்திலும் அது மாற்றப்பட மாட்டாது. ஏனென்றால் திருமணம், பாகப்பிரிவினை போன்றவை சம்பந்தப்பட்ட சட்டங்கள் அல்லாவால் உருவாக்கப் பட்டுப் புனித குரானில் இடம் பெற்றுள்ளன, எனவே, அவற்றை மாற்ற இந்த உலகில் எவருக்குமே உரிமை கிடையாது.

**சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்) : பஞ்சாப் முஸ்லீம்கள் ஷரியத் சட்டத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்களா அல்லது ஷரியத்தி லிருந்து முற்றிலும் வேறுபட்ட வழக்கநெறி சட்டத்துக்குக் கட்டுப் பட்டிருக்கிறார்களா?

**குவாஜா இனய்த் உல்லா:** பஞ்சாப் முஸ்லீம்கள் குடிக் கிறார்கள் என்று யாரேனும் கூறினால் எல்லா முஸ்லீம்களும்

ஒயின் அருந்த அனுமதிக்கப்படுவார்கள் என்று அதற்கு அர்த்தமா? எவரேனும் முசல்மான் தீய காரியம் எதையேனும் செய்தால் மற்ற முஸ்லீம்கள் அனைவரும் அதே போன்று செய்ய அனுமதிக்கப் படுவார்கள் என்று அதற்குப் பொருளா? எந்த முஸ்லீமாவது இஸ்லாம் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை என்றால், அவ்வாறு அவர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அவரை நிர்ப்பந்திக்க நான் தயாராக இல்லை. அவருக்கு முழு சுதந்திரம் உண்டு; அவர் தமது மனச்சான்றுக்கு எதிராக, தமது சமயத்துக்கு எதிராக, தமது சமுதாயத்துக்கு எதிராக செயல்படக்கூடும். ஆயினும் அவரது செயல்பாடுகள் சமுதாயத்துக்குத் தீங்கு விளைவிப்பதாக இல்லாதவரை நானோ அல்லது அரசாங்கமோ அதில் தடையிட முடியாது.

**சர்தார் மான்சிங்:** இஸ்லாமிய சட்டப்படி ஒரு திருடன் உயிரோடு புதைக்கப்பட வேண்டும் அல்லது அவனது கைகள் துண்டிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த சட்டம் எந்த இஸ்லாமிய நாட்டிலாவது செயல்படுத்தப்படுகிறதா?

**குவாஜா இனயத் உல்லா :** என்னுடைய நண்பர் திரு. மான் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பியுள்ளார். அவர் இந்த அவைக்கு வெளியே என்னைச் சந்தித்தால் அவர் திருப்தியடையும் வகையில் இந்த விஷயத்தை அவருக்கு விளக்கிக் கூறுவேன். இங்கு அவையின் நேரத்தை மேற்கொண்டு எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. இஸ்லாமிய சட்டங்களை நாட்டின் சட்டங் களுக்கு எந்த அளவுக்கு இசைந்துபோக அனுமதிக்கலாம் என்பது இஸ்லாமில் குறிப்பிடப்பட்டுள்ளது; அதே சமயம் இதற்கு ஒரு வரம்பும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இந்த வரம்பு மீற அனுமதிக்கப் பட மாட்டாது. நண்பருக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஓர் இஸ்லாமிய நாட்டில் ஒரு திருடன் இஸ்லாமிய சட்டப்படி தண்டிக்கப்படவில்லை என்றால், அந்த சட்டத்தை மாற்ற நாங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளோம்; ஆனால் அதேசமயம் எங்களால் மாற்ற முடியாத சில சட்டங்களும் உள்ளன. எனவே, என்னுடைய இந்த நண்பர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புவது....

என்னுடைய நண்பர்களின் குறுக்கீடுகளால் என்னுடைய நேரத்தில் பெரும் பகுதி வீணாகி விட்டது. அந்த வீணான நேரம் அளவுக்கு எனக்கு நேரம் ஒதுக்க வேண்டும்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அவ்வாறு செய்வது சாத்திய மல்ல.

**குவாஜா இனய்த் உல்லா:** முஸ்லீம்களுக்கு அவர்களது சமயக் கட்டளைகளுக்கு எதிராக சட்டங்கள் இயற்ற முயல்வது உசிதமானதல்ல. பெரும்பான்மை பலத்துடன் இந்த மசோதா சட்ட மாக்கப்படலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட சட்டத்தைப் பின்பற்றும் படி எவரையும் நிர்ப்பந்திக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பான்மையினர் எங்களை எவ்வகையிலும் நிர்ப்பந்திக்கக்கூடாது. இந்த சட்டத்திற்கு ஒப்புதல் தருமாறு முஸ்லீம் களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. பெரும்பான்மையினரின் ஏனைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிய எவரும் மறுக்க மாட்டார்கள்.

இந்தியாவில் வசிப்பவர்கள் அனைவரும் இந்துக்கள்தான் என்று என்னுடைய நண்பர்கள் சிலர் கூறினார். என்னை ஓர் இந்து என்று அழைத்துக் கொள்ள நான் பெருமைப்படுகிறேன். இந்தியா வில் வதிபவர்கள் எல்லோரும் இந்துக்களே என்று கூடக் கூறுவேன். நான் சந்தேகமின்றி ஓர் அரசியல் ரீதியான இந்து. இன்றல்ல, கடந்த இருபது முதல் இருபத்தைந்து ஆண்டுகளாகவே என்னை ஓர் அரசியல் ரீதியான இந்துவாக அழைத்து வந்திருக்கிறேன். நான் ஓர் அரசியல் ரீதியான இந்துவாக இருப்பது மட்டுமன்றி, சமய ரீதியில் ஒரு முஸ்லீமாக இருந்து வந்திருக்கிறேன்; இனியும் அவ்வாறே தொடர்ந்து இருந்து வருவேன்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** இன ரீதியில் நீங்கள் என்ன வாக இருக்கிறீர்கள்?

**குவாஜா இனய்த் உல்லா :** நான் ஓர் இந்து. என்னுடைய முன்னோர்கள் பிராமணர்கள். பிராமண இரத்தம் எனது குருதி நாளங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது - அந்தத் தூய இரத்தம் இன்று வரை கலப்புறவில்லை.

நல்லது, என் உரையின் சத்தும் சாரமும் இதுதான் : எங்களது மதத்தின், ஆண்டவனின் கட்டளைகளுக்கு எதிரான எந்தச் சட்டமும் எங்கள்மீது திணிக்கப்படலாகாது. ஆனால் அதேசமயம் எத்தகைய சமூக அல்லது பொருளாதார சட்டங்களை ஏற்க ஓர் இந்தியன் என்ற முறையில் எனக்கு ஆட்சேபம் இல்லை.

*குமாரி பத்மஜா நாயுடு (ஹைதராபாத்) : இந்த மசோதாவுக்கு எனது நிபந்தனையற்ற ஆதரவைத் தெரிவிப்பதற்கு இந்த வாய்ப்பு கிடைத்தமையை நான் வரவேற்கிறேன். பிற்போக்கு சக்திகளால் தீய முறையில் தூண்டிவிடப்பட உக்கிரமான எதிர்ப்புக்கிடையே யும் இந்த மசோதாவை துணிச்சலோடு கொண்டு வந்தமைக்காக முதற்கண் அரசாங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன். இந்த நாட்டின் சில பகுதியினரிடையே இந்தப் பிற்போக்கு சக்திகள் இன்னமும் ஆதிக்கம் செலுத்தி வருவது பரிதாபத்திலும் பரிதாபமாகும். இந்த மசோதாவின் கர்த்தா என்னிடமிருந்து பாராட்டுகளைப் பெறும் அவசியம் அவருக்கு இல்லை. இந்த மசோதாவை இந்த அவை ஏற்றாலும் சரி, நிராகரித்தாலும் சரி ஒன்றை மட்டும் கூற விரும்பு கிறேன்: சமூக அநீதியை ஒழித்துக்கட்டி, மனித வாழ்வை மேம் படுத்துவதற்காக கடுமையான எதிர்ப்புக்கிடையே, கொடிய ஒடுக்குமுறைக்கிடையே காலம் காலமாக பல சமூக சட்டமியற்றும் வல்லுநர்கள் அயராது சோராது பாடுபட்டு வந்திருக்கின்றனர்; இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் மூலம் டாக்டர் அம்பேத்கர் இந்த அறிஞர்களின் நீண்ட அணி வரிசையில் இடம்பெறுகிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த விரிந்து பரந்த நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கும் எண்ணற்ற ஆண்களும் பெண்களும் இந்த மசோதா சட்ட மாக்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாகவே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மசோதாவின் ஆரம்பகால வேகம், உந்துவிசை, ஜீவன் படிப்படியாக சிதைக்கப்பட்டு வருவதை அவர்கள் பீதியோடு, வேதனையோடு கவனித்து வருகின்றனர். மசோதாவுக்கு அதிகப்பட்ச ஆதரவைத் திரட்டும் பொருட்டே சமரச ரீதியில் மேலும் மேலும் விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது என்பது தெள்ளத் தெளிவு. எனினும் இப்போதைய சிதைக்கப்பட்ட வடிவத்தில்கூட இந்த மசோதா ஓர் அருமையான மசோதாவாகும். நமது இந்து பெண்கள் சமத்துவமற்ற சட்டங்களின் கொடிய, கோரப் பிடியில் சிக்கி பன்னெடுங்காலமாக அவதிப்பட்டு வந்தனர்; இன்னும் அவதிப்பட்டு வருகின்றனர்; இந்நிலையில் இந்த மசோதா அவர்களை இந்தப் படுபாதாளத்திலிருந்து மீட்க ஓரளவு பாடுபடு

★ அ.நி.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 20, பக்கங்கள் 2929-33.

கிறது. ஏழைப் பெண்கள் இந்த மசோதாவுக்குக் காட்டும் எதிர்ப்பை நான் உதாசீனம் செய்துவிடவில்லை; அதேபோல் இந்த எதிர்ப்பை மிகை மதிப்பீடு செய்யும் தவறையும் நான் இழைக்கவில்லை. ஏனென்றால் இந்த ஏழைப் பெண்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்; அவர்களது அறியாமையையும் மூடநம்பிக்கையையும் எப்படியும் தங்களது கொத்தளங்களைப் பாதுகாத்துக் கொள்ள உறுதி கொண்டுள்ள சுயநலமிக்க மதவெறியர்கள் சூட்சுமமாக, தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். சட்டத்தின்முன் பெண்கள் சமத்துவம் பெறும் உரிமையை அரசியல் சட்டம் உத்தரவாதம் செய்துள்ளது. இத்தகைய உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற நன்னோக்கோடு மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்டுள்ள மசோதாவை இந்துப் பெண்கள் ஏதோ மாயையில் வீழ்ந்து எதிர்ப்பது பரிதாபத்திலும் பரிதாபமான காட்சியாகும். இந்த மசோதாவை ஆதரிக்கும்படி நான் வேண்டுவது ஒரு பெண் என்ற முறையிலோ அல்லது இந்து என்ற முறையிலோ அல்ல, மாறாக ஓர் இந்தியன் என்ற முறையில் பேசுகிறேன்; இந்தியாவின் நன்மதிப்பு இந்த மசோதாவை மட்டுமன்றி, பெருங்கேடு விளைவிக்கும் தவறுகளைத் தவிர்ப்பதற்கும், இத்தகைய நியாயமற்ற சட்டங்களினால் மக்களுக்கு ஏற்படும் துயரங்களைத் துடைப்பதற்கும் அவசியமான இதர சமூக சட்டங்களையும் சார்ந்துள்ளது என்ற ஆழமான உணர்வோடு பேசுகிறேன். இந்த நாட்டின் எந்த மக்கள் பகுதியினரும் சமத்துவ உரிமைகளை முழு அளவுக்கு அனுபவிப்பதிலிருந்து பால், இன, சாதி அடிப்படையில் தொடர்ந்து எந்த அளவுக்குத் தடுக்கப்பட்டு வருகின்றனரோ அந்த அளவுக்கு நமது அரசியல் சாசனம் வெறும் கேலிக்கூத்தானதாகத்தான் இருக்கும். சுதந்திரத்திற்காக நீண்ட நெடும் வீரஞ்செறிந்த போராட்டம் நடைபெற்றதே அதனால் என்ன பயன்? ஆயிரக்கணக்கான இந்துப் பெண்கள் உணர்ச்சி பீறிட தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறி இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டார்களே அதனால் என்ன பயன்? அவர்கள் தங்கள் சோதரர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் குதித்து வெஞ்சிறையையும் தடியடியையும் எதிர்கொண்டார்களே, மரணத்தை விட மோசமான அவமதிப்புக்கு உள்ளானார்களே அதனால் என்ன பயன்? இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக வீரதீரத்தோடு போராடிய இந்த ஆயிரம் ஆயிரம் இந்துப் பெண்களுக்கு இன்று அவர்களது நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அப்படியானால்

எண்ணற்ற தலைகளும் விலைகளும் கொடுத்து நாம் பெற்ற சுதந்திரம் கைப்பிடியளவு தூசி என்பதைத் தவிர வேறு என்ன சொல்லுவது!

இந்த அவையைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் நிகழ்த்திய எண்ணற்ற உரைகளையும், அறிக்கைகளையும் ஓரளவு கவனத்தோடு அலசி ஆராய்ந்தேன்; இந்த மசோதாவின் நுட்பக் கூறுகளையும் சட்ட நுணுக்கங்களையும் மதிப்பிடுவதில் சிலர் என்னைவிட அதிகத் தகுதி வாய்ந்தவர்கள். எனினும் எவ்வளவோ சட்ட ஆற்றலும், வாதத்திறமையும் இருந்தும் இந்த மசோதாவுக்கு மரண அடி கொடுக்கக் கூடிய ஆயுதங்களை உருவாக்க முடியவில்லை என்பதைக் காண எனக்கு ஓரளவு வியப்பாக இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்து சமுதாயத்தின் அடித்தளத்தையே, கட்டமைப்பையே அழித்து உடைத்து நொறுக்கக் கூடியதாக இருக்கிறது இந்த மசோதா என்று வீடுவீடாக, தெருத்தெருவாக, மூலைக்கு மூலை, சந்து பொந்தெல்லாம் கூக்குரல் எழுப்பப் படுவதைக் கேட்டுக் கேட்டு நமக்குக் காது புளித்து விட்டது. இந்த மசோதா ஐயாயிரம் ஆண்டுக் காலமாக நீடித்து நிலைத்து இருந்து வரும் தொல்பழமை வாய்ந்த, மேன்மை மிக்க மதத்தின் மீது தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதலாகும் என்று இந்த அவையின் மிகவும் மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக இந்த அறிக்கை அமெரிக்காவில் தேச வியாபகமான விளம்பரம் பெற்றது. இந்து சமுதாயத்தின் அடித்தளத்துக்கே இப்போது ஆபத்து ஏற்பட்டிருப்பதால் ''அதை எதிர்த்து மிக மிக உறுதியாகப் போராடப் போவதாக'' அறிவித்துள்ளார். மனிதகுல வரலாற்றில் நூற்றாண்டு நூற்றாண்டுக் காலமாக நிலைத்து நின்று வந்திருக்கும் உலகின் மாபெரும் சமயங்களை சமூக சட்டங்கள் மூலமோ, அல்லது உரைகள் மூலமோ அல்லது எழுத்துகள் மூலமோ அல்லது வேறு எந்த மனித முயற்சியின் மூலமோ ஆபத்துக்குள்ளாக்க முடியும் என்று தம்மை இந்து என்று அழைத்துக் கொள்ளும் ஒருவர் எவ்வாறு பேசமுடியும் அல்லது நினைக்க முடியும் என்பதை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை; எந்த மதத்தைப் பாதுகாப்பதாக அவர் உரிமை கொண்டாடுகிறாரோ அந்த மதத்தையே அவர் அவமதிக்கிறார் என்றுதான் கூற வேண்டும். இத்தகைய அற்ப காரணங்களுக்காக ஆபத்துக்குள்ளாகக் கூடிய எந்த மதமும் உலகில் இருக்குமானால், அத்தகைய மதம் அழிந்து போவதே மேல்.

மூன்று தினங்களுக்கு முன்னர் இந்த அவையில் பேசும்போது டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இந்து மத போதனைகளின் தொன்று தொட்ட எழிலையும் விவேகத்தையும் மிகவும் உணர்ச்சி கரமாக வருணித்தார். அதன் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பற்றிக் கூறும்போது நெகிழ்ந்த தன்மை என்ற சொல்லை அவர் பயன்படுத்தினார் என்று நினைக்கிறேன். இதுதான் பல நூற்றாண்டுக்கால அந்நியப் படையெடுப்புகளையும், அந்நிய ஆதிக்கத்தையும், அலை அலையாக வந்த உக்கிரமான அரசியல், சமய, பொருளாதாரத் தாக்குதலையும் இந்து சித்தாந்தம் சமாளித்து நிற்கத் துணைபுரிந்தது. சமுதாயத்தில் அடிமட்டத்திலுள்ள பிரிவினருக்கு நீதி வழங்கும் நோக்கம் கொண்ட எந்த சமூக சட்டமும் வாழ்வின் புனிதம் குறித்த விழுமிய கண்ணோட்டங்களையும் அனைத்து ஜீவன்களின் பிரிக்க முடியாத ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பண்டைய சமயத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற வீணான, முட்டாள்தனமான வாதத்துக்கு டாக்டர் முகர்ஜி மரண அடி கொடுத்துள்ளார்.

இந்த மசோதாவுக்கு எதிராக மற்றொரு கடுமையான குற்றச் சாட்டு கூறப்படுகிறது; விவாகரத்துக்கு சட்ட ரீதியாக வழிவகை செய்யப்பட்டிருப்பது ஒழுக்கக்கேடுக்குக் கதவுகளைத் திறந்துவிடும் என்று குற்றம் சாட்டப்படுகிறது. பண்டைக் காலத்தில் கூட விவாகரத்துக்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது என்பது பேச்சாளர் பின் பேச்சாளர்களால் மெய்ப்பிக்கப்பட்டது. இந்த நாட்டிலுள்ள இந்துக்களில் 75 சதவீதத்தினருக்கும் அதிகமானோர் எளிய, சுலபமான, பயனுள்ள விவாகரத்து முறையை எப்போதுமே கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, இந்த வாதத்துக்கு உண்மையில் ஆதார அடிப்படை ஏதும் இல்லை என்பது தெள்ளத் தெளிவு. மேலைய நாடுகளையும் மேலைய முறைகளையும் பழித்துரைப்பது இந்த நாட்டில் ஒரு தேசியப் பொழுதுபோக்காகி விட்டது; அத்தகைய பொழுது போக்கில் ஈடுபடுவதற்காகவே இந்த வாதம் கைக்கொள்ளப் பட்டுள்ளதாக நான் கருதுகிறேன். பிற நாடுகளிலுள்ள இனங்களின் ஒழுக்க நெறிகளையும் பழக்க வழக்க நடைமுறைகளையும் ஐயத்துக் கிடமானதாக்கும் **325 பிஎஸ்டி** உளப்போக்கு அதிகரித்து வருவது குறித்து எனது வருத்தத்தைத் தெரிவிக்க என்னை அனுமதிப் பீர்களா? இந்தப் போக்கு மிகவும் வருந்தத்தக்கது. ஏனென்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தரங்கெட்டவர்களின் செயல் பாடுகளுக்கு தரப்படும் பரபரப்பான ஆரவாரப் புகழாரத்திலிருந்து

பொதுவாகப் பெறப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டு முடிவெடுக்கப்படுகிறது. இத்தகைய ஒரு நிலைமையை உலகில் ஒவ்வொரு நாட்டிலும் காணலாம். இந்த நிலைமையை நிச்சயம் இந்தியாவின் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் காணமுடியும். மேலைய நாடுகளின் உளநூல் வல்லுநர்களைக் கவலைக்குள்ளாக்கியுள்ள ஒரு கடுமையான பிரச்சினையை டாக்டர் முகர்ஜி மிகச் சரியாகவே நம் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். விவாக ரத்து எந்த அளவுக்கு அதிகரித்து வருகிறதோ அந்த அளவுக்கு பைத்தியம் பெருகி வருவதே அந்தப் பிரச்சினை. ஆனால் டாக்டர் முகர்ஜி இந்தப் பிரச்சினையை நின்று நிதானித்துத் தீர எண்ணிப் பார்க்குமாறுப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்; அப்போது, மேலைய நாடுகளில் பைத்தியம் அதிகரித்து வருவதற்குக் காரணம் விவாகரத்து என்பதை விட அதற்கு ஆணிவேரே, அடி மூலமே விவாகரத்துதான் என்ற நிதர்சன உண்மையை அவர் காண்பார் என்பதில் எனக்குக் கிஞ்சித்தும் ஐயமில்லை. பல மேலைய நாடுகளில், அதிலும் குறிப்பாக கடந்த இரண்டு உலகப் போர்களில் பெருநாசத்துக்கு, பாடழிவுக்கு உள்ளான நாடுகளில் வாழ்க்கையின் முழு அமைதியே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தீவிர பொருளாதார நெருக்கடி, அணுகுண்டு பற்றிய பீதி, மற்றொரு உலகப் போர் வெடித்து விடுமோ என்ற அச்சம் - இவை யாவும் பதற்றங்களை அதிகரிக்கச் செய்து, மக்களது உடல் நிலையையும் மனநிலையையும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. இவை தவிர்க்க முடியாதபடி மன ரீதியான ஸ்திரமின்மையைத் தோற்றுவிக்கின்றன; குடும்ப வாழ்க்கையிலும் இதனால் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆனால் இங்கு ஓர் உண்மையை நாம் காணவேண்டும்: சில நாடுகளில் எத்தகைய அசாதாரணமான நிலைமைகள் நிலவிய போதிலும், பல்வேறு இனங்களின் தார்மிக நெறி முறைகளிலும், பழக்க வழக்க நடைமுறைகளிலும் மேலீடான வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும் மனித குலம் எங்கும் ஒன்றே தான்; இன்றளவும் கூட உலகின் ஒவ்வொரு நாட்டிலும் குடும்பம் என்பது மனித சமுதாயத்தின் இதயமாக, உள்ளீடாக நீடிக்கிறது. பொதுவாக நற்குணம் படைத்த ஆண்களும் பெண்களும் மனித உறவுகளில் குறிப்பிட்ட நயமும் பண்பும் மதிப்பும் இருப்பதைக் காண்கின்றனர்; அவர்கள் விவாகரத்தை ஆழ்ந்த சிந்தனையற்று, ஏனோதானோ என்ற முறையில் எளிதானதாகப் பார்ப்பதில்லை. சகிக்கமுடியாத, தாங்கிக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இது ஒன்றுதான் இறுதியான ஒரே தீர்வு என்று எண்ணும்படியான

சூழ்நிலைக்கு தள்ளப்படும்போதுதான் இதில் அவர்கள் ஈடுபடு கின்றனர். இது ஆண்கள் விஷயத்தில் உண்மையானால் இதை விடப் பெண்கள் விஷயத்தில் இது நூற்றுக்கு நூறு உண்மையாகும் என்பது என் கருத்து. ஏனென்றால் மாறிவரும், நிலையற்ற இந்த உலகில், போர்களாலும் புரட்சிகளாலும் பஞ்சங்களாலும் அலைக் குலைந்துபோன, நிலை குலைந்து போன இந்த உலகில், அறநெறிக் கோட்பாடுகள் அனைத்தும் தள்ளாடித் தடுமாறிவரும் இந்த உலகில், எல்லா தேசிய, சர்வதேசிய தார்மிக நெறிமுறைகளும் ஊசலாடிவரும் இந்த உலகில் மாறாத, நிலைகுலையாத ஒன்று இருக்கிறது, உலக சிருஷ்டி காலத்தில் எப்படியிருந்ததோ கால முடி விலும் அது அப்படியே இருக்கும். அந்த ஒன்று என்ன? அதுதான் புனித வாழ்க்கை தீபத்தை ஏற்றிவைத்தவள், அதனை அணையாது பாதுகாத்துவருபவள் என்கிற அடிப்படையில் தனக்குள்ள மகத்தான பொறுப்பு குறித்த ஒரு பெண்ணின் உள்ளார்ந்த உணர்வாகும். இந்த உள்ளார்ந்த உணர்வு நமது இந்தப் பண்டைப் பெரும் நாட்டில் போல், நமது பெண் திலகங்களின் உன்னத உயர்ந்த லட்சியங்களால் உந்தப்பட்டு எத்தனை எத்தனையோ இலக்கியங் கள் தோன்றியுள்ள இந்த நாட்டிப்போல் வேறு எந்த நாட்டிலும் இத்தனை எழிலோடு பூத்து மலர்ந்ததில்லை எனலாம். எனவே, தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்தியப் பெண்மணிக்கு உள்ள ஆற்றல் குறித்து வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற முறையில் ஏளனமாக, பொறுப்பற்றுப் பேசுவது முறையல்ல. அவ்வாறு பேசுவது நமது இனத்தின் மாண்பை, மேன்மையை, தனிச் சிறப்பை நாம் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்பதை நாமே ஒப்புக்கொள்வது போலாகும்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும், ஏனென்றால் அந்நிய நாடுகளின் கண்கள் எல்லாம் நம்மையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன என்ற கூற்றை ஆட்சேபித்து மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் தங்கள் சினத்தை வெளியிட்டனர். இவர்களது நிலையை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். ஏனைய நாடுகளின் நல்லெண்ணத்தை நாம் என்னதான் மதித்தாலும் மற்றவர்களது தரங்களுக்கு ஒப்ப முறையில் நமது வாழ்க்கையையும் சட்டங்களை யும் உருவாக்கிக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்யக்கூடாது. ஆனால் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு பெரிதும் ஒப்புக் கொள்ளத்தக்க, மிக அவசரமான காரணம் ஒன்று இருக்கிறது; நமது தேசிய ஒருமைப்பாடும் மக்கள் என்ற முறையில் நமது சுய மரியாதையும் அபாயத்தில் இருக்கிறது என்பதுதான் அந்தக் காரணம்.

இந்த அவையின் மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தைத் தயாரிக்கும் பெரும் பேற்றினைப் பெற்றுள்ளனர். அந்த அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் மகத்தான கடமை, பொறுப்பு இவர்கள் மீது சுமர்ந்துள்ளது; எனவே, இந்த மசோதாவை ஏற்கும் அல்லது மறுக்கும் பிரச்சினை நமது அரசியல் சாசனத்திற்கு ஆதாரமாக உள்ள அடிப்படைக் கோட்பாடுகளை உறுதி செய்யும் அல்லது நிராகரிக்கும் பிரச்சினையாகி விட்டது.

*திரு. பிரஜேஷ்வர் பிரசாத் (பீகார்) : இந்து சட்டத் தொகுப்பின் கூறு 2க்கு தகுதியற்ற எனது ஆதரவை அளிக்க எழுந்து நிற்கிறேன். இவ்வாறு செய்யும்போது ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: இந்தக் கூறு ஏற்கப்படுமானால் இந்து சமூதாயத்தைப் பீடித்துள்ள ஒரு பெரும் தவறை நீடித்திருக்கச் செய்வதையே அது குறிக்கும் - சட்டபூர்வமான குழந்தைகள் சட்ட பூர்வமற்ற குழந்தைகள் என்று நெறியற்ற முறையில் குழந்தைகளைப் பாகுபடுத்திக் காட்டுவதே அந்தப் பெரிய தவறாகும். சட்டப்பூர்வமான குழந்தையோ சட்ட பூர்வமற்ற குழந்தையோ எந்தக் குழந்தைக்கும் இது பொருந்தும் என்று அந்தக் கூறு கூறுகிறது. இந்திய அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்பும் அளவுக்கு அரசு செல்ல முடியாது என்பதை நான் அறிவேன். சட்டபூர்வமான குழந்தைகளுக்கும் சட்டபூர்வமற்ற குழந்தைகளுக்கும் இடையேயான வேறுபாட்டை அரசு ரத்து செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். முறைகேடாகப் பிறந்தது என்ற கறை, வடு சம்பந்தப்பட்ட குழந்தையின் தனிப் பண்பையே சீரழிக்கிறது. இந்த நாட்டில் லட்சோபலட்சக் கணக்கான மக்கள் தங்களது அல்லாத தவறுக்காக தங்கள் வாழ்நாள் முழுதும் மனரீதியிலும் சமூக ரீதியிலும் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகும் கொடுமை மனிதாபிமானமற்றதும், காட்டுமிராண்டித்தனமானதுமாகும். சட்டரீதியாகப் பிறந்த குழந்தைகளுக்கும் சட்டரீதியற்ற முறையில் பிறந்த குழந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடு துடைத்தழிக்கப்படுமானால் திருமணம் என்ற பழக்கவழக்க மரபு பலவீனமடையும் என்று சிலர் வாதிக்கக் கூடும். அவ்வாறு திருமணம் என்ற பழக்க வழக்க மரபு எவ்வகையிலும் பலவீனமடைவதால் வானம் இடிந்து நம் மீது விழுந்து விடப் போவதில்லை.

★ நாடாளுமன்ற விவாதங்கள், தொகுதி XV, பாகம் II, 1951 செப்டம்பர் 20, பக்கங்கள் 2933-35.

*பண்டிட் மைத்ரா (மேற்கு வங்கம்)* : திருமண முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் விரும்பு கிறாரா?

*மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:* அதிரடித் திருமணங்கள் வேண்டாம்.

*திரு. பிரஜேஷ்வர் பிரசாத்* : திருமணமுறை சமுதாயத்துக்குச் செய்யும் நன்மை மிகப் பெரியது; இதேபோல் சட்ட இசைவு பெறாத தாம்பத்ய முறை சமுதாயத்துக்கு இழைக்கும் தீமை மிகப் பெரியது, கடுமையானது. அவப் பெயர் உண்டுபண்ணும் ஒரு சமூக அமைப்பின் அடித்தளங்களை வலுப்படுத்துவது அரசுக்கு சாத்தியமானதோ, விரும்பத்தக்கதோ அல்ல. திருமணம் நடைபெறாத ஒரு சமுதாயம் பற்றி நான் நன்கு அறிவேன். மனைவிகளிலும் குழந்தைகளிலும் பொதுவுடைமை நிலவும் பிளேட்டோ சித்தாந்தம் அவர் காலத்தில் போலவே இன்றும் போதிய வாத ஆதாரமுடைய தாக இருக்கிறது. மதச் சார்பின்மையில் உண்மையிலேயே நமக்கு நம்பிக்கை இருக்குமானால் சமயத்தின் கட்டுத்தளைகளிலிருந்து சொத்து மற்றும் திருமணம் குறித்த பழக்க வழக்க மரபுகளை விடுவிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். இது விஷயத்தில் நாம் ஒளிவுமறைவற்ற நிலையை மேற்கொள்வது நல்லது. மத சார்பின்மை இலட்சியம் உலகின் எந்தப் பகுதியிலும் செயல் படுத்தப்படவில்லை என்பது உண்மை.

அமெரிக்காவிலும் சரி, ஐரோப்பாவிலும் சரி திருமணம் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பு முறைகள் கிறித்தவ சமயத்தால் வழிகாட்டப்படுகின்றனவே தவிர மதச் சார்பின்மை சித்தாந்தத்தால் அல்ல. சட்டபூர்வமாகப் பிறந்த குழந்தைகள், சட்டபூர்வமற்ற முறையில் பிறந்த குழந்தைகள் என்ற வேறுபாட் டால் திருமண அமைப்பு முறை எவ்வகையிலும் பலவீனப்படாது என்பது என் கருத்து....

*மாண்புமிகு அவைத் தலைவர்* : மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்தக் கருத்துகளை திருமணம் சம்பந்தப்பட்ட அத்தியாயத்துக்கு ஒதுக்கி வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

*திரு. பிரஜேஷ்வர் பிரசாத்:* திருமண அத்தியாயம் பற்றி என் கருத்துகளை நான் கூறவில்லை. சட்டபூர்வமாகப் பிறந்த குழந்தை

களுக்கும் சட்டபூர்வமற்ற முறையில் பிறந்த குழந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடு ஒழிக்கப்பட வேண்டும் என்ற எனது யோசனை சம்பந்தமாக எழக்கூடிய சில ஆட்சேபங்களை அகக் காட்சியாக உருவாக்கிக் காண மட்டுமே செய்கிறேன். திருமணத் திற்கான அடிப்படை என்ன? திருமண முறை ஏன் தொடர்ந்து நீடித்து இருந்து வருகிறது? திருமண முறை நிலைத்திருந்து வருவதற்கு முதிய வயதுதான் - மனமும் உள்ளமும் மனோதத்துவ ரீதியில் தளர்ந்து நலிவுறுவதுதான் - காரணம். உடலுறவு இன்பத் துக்காகவோ, குழந்தைகளை ஈன்றெடுப்பதற்காகவோ சமுதாயத் தில் திருமண முறை நிலைத்திருக்கவில்லை. இந்த இரண்டு குறிக் கோள்களையும் திருமணப் பந்தத்துக்கு புறத்தே கூட எய்த முடியும். ஆண் பெண்களுக்கிடையேயான முறைகேடான உறவை நான் எதிர்க்கிறேன். ஏனென்றால் கருச்சிதைவு, விபசாரம், கைவிடுதல், உரிய காலத்துக்கு முன் பிறத்தல், செத்துப் பிறத்தல், பல்வேறு குற்றங்கள், சிசுக் கொலை, பால்வினை நோய், பெண்டிர்க்கும் குழந்தைகளுக்கும் கொடுமை இழைத்தல் முதலியவற்றுக்கு இதுவே காரணம்.

நமது சமுதாயத்தில் இழைக்கப்பட்டுள்ள மிகக் கொடிய குற்றம் நீடிப்பதற்கு வழிவகை செய்யும் ஒரு சட்ட விதிக்குத் தார்மிக ஆதரவு அளிக்க நான் தயாராக இல்லை.

திரு. பி. தாஸ் (ஒரிசா): இந்து சட்டத்தைத் தொகுக்கும் துணிகரமான நடவடிக்கையை மேற்கொண்டமைக்காக என் சார்பிலும், இந்த அவையில் உறுப்பினர்களாக உள்ள சீர்திருத்த வாதிகள் சார்பிலும், வெளியே உள்ள சீர்திருத்தவாதிகள் சார்பிலும் முதற்கண் டாக்டர் அம்பேத்கரைப் பாராட்ட விரும்புகிறேன். அவர் மிகுந்த பொறுமையைக் காட்டியுள்ளார். நம் காலத்தின் மனு என வருணிக்கப்படுகிறார். ஆனால் அவர் புத்தரின் போதனை களைப் பின்பற்றுகிறார். திருமணம், விவாகரத்து சம்பந்தப்பட்ட அத்தியாயங்கள் மட்டுமே இப்போதைக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள இணங்கியிருப்பதன் மூலம் எல்லையற்ற பொறுமையை வெளிப்படுத்தியுள்ளார். திருமணம் மற்றும் விவாகரத்து சட்டக் கூறுகளை நான் ஆதரிக்கிறேன்.

இந்த அவையில் மகத்தான சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. மசோதாவுக்கு ஆதரவாக மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. காட்கில் அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கிறார்;

பண்டிட் குன்ஸ்ருவும் அவ்வாறே செய்திருக்கிறார். எதிர்த்தரப்பில் நம்மைக் கவர்ந்த சொற்பொழிவுகள் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி, சர்தார் மான், என்னுடைய இளம் நண்பர் பண்டிட் கோவிந்த மாளவியா ஆகியோர் நிகழ்த்தியவையாகும்.

புத்தர் முதல் காந்திஜி வரையிலான சீர்திருத்தவாதிகளின் அணியில் இடைப்பட்ட இடத்தை ராஜாராம் மோகன் ராய், கேசவ சந்திர சென், ராமகிருஷ்ண பரம ஹம்சர் போன்ற புகழ் சான்ற வங்காளிகள் வகித்தனர் என்பதை டாக்டர் முகர்ஜி ஒரு வேளை மறந்திருக்கக்கூடும். ஒரு வங்கத் தலைவர் இந்த சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டை போடுவது நல்லதல்ல. இது சரியான மார்க்கம் அல்ல. இந்து மதம் ஒரு முற்போக்கான மதமாக இருந்து வந்திருக் கிறது. பல்வேறு **ஸ்மிருதிகளும் மீமாம்சை**யும் இந்து சட்டத்தின் ஒரு தொகுப்பு அமைப்பே தவிர வேறு அல்ல. அம்பேத்கருக்கு கவிதை பாணியில் புகழாரம் சூட்டிய என்னுடைய நண்பரான திருமதி பத்மஜா நாயுடு குறிப்பிட்டதுபோல் நமது அரசியல் சாசனம் இந்தியப் பெண்களுக்கு சில குறிப்பிட்ட உரிமைகளை வழங்கியுள்ளது; நமது அரசியல் சாசனத்தின் லட்சியங்களுக்குச் செயலுருவம் கொடுக்கும் பணியைத்தான் டாக்டர் அம்பேத்கர் செய்திருக்கிறார்.

மதிப்பிற்குரிய என்னுடைய நண்பரான சர்தார் மான் ஒரு மாபெரும் இனத்தை, இந்தியாவின் சுதந்திரத்தைப் பாதுகாத்து நிலைநாட்டிய இனத்தைச் சேர்ந்தவர். எனினும் சீக்கியர்கள் இந்துக்கள் அல்ல என்ற ஒரு மாறுபட்ட கருத்தை அவர் வெளி யிட்டார். பல சீக்கியத் தலைவர்களுடன் இணைந்து நின்று பணி யாற்றிய நல்வாய்ப்பினைப் பெற்றவன் நான். ஆதலால் இந்து சட்டத்தொகுப்பு மசோதா பற்றி நமக்குள்ள கருத்து வேறுபாடு களைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. சீக்கியர்களின் கருத்தை ஆழ்ந்து நோக்கும்போது இப்போதோ, இனிமேலோ அவர்கள் அசைந்து கொடுக்காமல் ஒருபோதும் இருக்க மாட்டார்கள். இத்தகைய அபிப்பிராயங்களைக் கருத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, முன்னேற்றத்தையும் வளர்ச்சியையுமே சீக்கிய பெண்கள் விரும்புகிறார்கள் என்பதைக் காண்போம்.

பண்டிட் கோவிந்த மாளவியாவைப் பொறுத்த வரையில் அவர்பால் எனக்கு மிகுந்த பற்றும் பாசமும் உண்டு; ஏனென்றால் மதிப்பும் மரியாதையும் மிக்க அவரது மேதக்க தந்தையான பண்டிட்

மதன்மோகன் மாளவியரின் உதவியாளனாக இருந்தவன் நான். என் நினைவுகள் முப்பதாம் ஆண்டுகளுக்குச் சிறகடித்துப் பறந்து செல்லுகின்றன. அப்போது நாங்கள் குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். சாரதா சட்டம் எனப்படும் குழந்தைத் திருமணச் சட்டத்தை இந்த அவை நிறை வேற்றுவது குறித்து பண்டிட் மதன் மோகன் மாளவியா வருத்த மடைந்தார். எனினும் மகா மேதையான அவர் என்ன செய்தார் தெரியுமா? காலத்தின் போக்கை உணர்ந்து நிதானத்தைக் கடைப் பிடித்தார். இன்று என்னுடைய இளம் நண்பர் பண்டிட் கோவிந்த மாளவியா செய்ததுபோல் இடி இடித்ததுபோல் கடும் சொற்களை அள்ளி வாரி இறைக்கவில்லை; பண்பட்ட முறையில் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார், அவ்வளவுதான்.

*பண்டிட் மாளவியா :* ஏனென்றால் இவை போன்ற விஷயங்கள் அப்போது முன்வைக்கப்படவில்லை.

**திரு. பி. தாஸ்:** உண்மைதான். எனது தலைவரும் அவருடைய தந்தையும் கூறியதைத்தான் இங்கு மேற்கோள் காட்டுகிறேன். அவருடைய தந்தை சமுதாயம் முன்னேற வேண்டும் என்று விரும்பினார். இதைத்தான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. ஏ.சி. சுக்லா (மத்தியப் பிரதேசம்) :** பலவீனமானவர்கள் விஷயத்தில் உயர்ந்த லட்சியத்தைப் பின்பற்ற முடியாது?

**திரு. பி. தாஸ்:** இந்தியாவில் வைதீகப் பிரிவையும் மிதவாதப் பிரிவையும் சேர்ந்தவர்கள் அரசியல் சாசனத்தை நிறைவேற்றுவதில் நமக்கு உதவி புரிந்துள்ளனர். நாட்டின் சுதந்திரத்திற்காக பல ஆண்டுக்காலம் நாம் நடத்திய போராட்டத்திலும் பெரிய அளவில் அல்லாவிட்டாலும் அவர்கள் நமக்கு உதவி புரிந்துள்ளனர். 1947 முதல் நாம் அனைவரும் முன்னேறி வருகிறோம். எனவே ''முன்னேறுவதே'' இப்போது நமது இலட்சியமாக இருந்தால் இந்தியாவோ அல்லது நமது சமுதாயத்தின் இந்து, முஸ்லீம், அல்லது வேறு எந்தப் பிரிவினரோ ஏற்றமடைவதை அல்லது மேம்பாடடைவதை எதுவும் தடுத்து நிறுத்திவிட முடியாது. எனவே இவர்கள் நம்முடன் கடுமையான வேறுபாடு கொள்வதைக் கைவிட்டு, ஒரு தேசம் என்ற முறையில் இந்தியா முன்னேற்ற வேண்டும், ஆசியாவிலும், உலகிலும் முன்னணி நாடு என்ற உயர்நிலையை நாம் அடைந்தோமானால் நாம் முன்னேறவும்

வளர்ச்சியடையவும் அவர்கள் நமக்கு உதவுவார்களேயன்றி எவ்வகையிலும் நமக்கு இடையூறு செய்யமாட்டார்கள்.

இந்து சட்டத் தொகுப்பும் திருமண சட்டங்களும் புதியவை ஒன்றுமல்ல என்பதை என் உரையை முடிப்பதற்கு முன்னர் இந்த அவையிலுள்ள மிதவாத நண்பர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்து சட்டங்களின், குறிப்பாக திருமண சட்டங்களின் பழைய பாரம்பரியங்களையும் பழக்கவழக்கங்களையும் சர் ஹரிசிங் கௌர், டாக்டர் எம்.ஆர். ஜெயகர் போன்ற அண்மைக்கால சீர்திருத்த வாதிகள் சாடியிருப்பதை நாம் மறந்து விட்டோம். எனவே, நமது மிதவாத நண்பர்கள் மீது டாக்டர் அம்பேத்கர் வெடிகுண்டு வீசுகிறார் என்று குற்றம் சாட்டுவதில் அர்த்தம் ஏதுமில்லை. நாம் முன்னேறி வருகிறோம்; டாக்டர் அம்பேத்கர் ஒரு காரியம் செய் திருக்கிறார். அவர் பிரச்சினை முழுவதையும் எதிர் கொண்டிருக் கிறாரே தவிர துண்டுதுண்டாக சட்டம் இயற்றுவதில் ஈடுபட வில்லை. எனினும் நமது மிதவாத நண்பர்களுக்கு ஓரளவு விட்டுக் கொடுக்கும் வகையில் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் ஒரு பாகத்தை மட்டும் நிறைவேற்ற இந்த அவை ஏறத்தாழ ஒப்புக் கொண்டுள்ளது. இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** இந்த நாடாளுமன்றத்தின் வரலாற் றில் இது ஓர் அசாதாரணமாக நிகழ்ச்சி என்று கருதுகிறேன்; தனியொரு சட்டக்கூறு பற்றி ஏழு தினங்களுக்குக் குறைவாக விவாதிக்கப்பட்டதை கடந்த சட்ட மன்றங்களின் வரலாற்றில் நாம் என்றும் கண்டதில்லை. இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றி ருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த மசோதா தங்கள் மனச்சான்றின் ஒரு பகுதியைத் தொடுவதால், நமது பிரதமரும் அவைத் தலைவரும் இந்த விஷயம் பற்றி ஓர் உறுப்பினர் தாம் விரும்புகிறபடி நீண்ட நேரம் பேசத் தங்களுக்கு அனுமதியளித்துள் ளனர் என்று பல உறுப்பினர்கள் கூறுகின்றனர். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** இது தவறு). இது குறித்து எனக்கு ஆட்சேபம் ஏதுமில்லை. இந்த விஷயத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் முழு வாய்ப்பளிக்க வேண்டும்; அவர் மசோதாவை ஆதரித்துப் பேசி னாலும் எதிர்த்துப் பேசினாலும் அது இதற்கு ஒரு தடையாக இருக்கக்கூடாது. அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் தாங்கள் வாயடைக் கப்பட்டுவிட்டதாக முணுமுணுத்துக் கொண்டு வீடு திரும்பும் நிலை ஏற்படக் கூடாது; அவர்கள் பேசுவதற்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இதுதான் நல்லது, உசிதமானது. இந்தச்

சட்டக்கூறு பற்றிய விவாதத்துக்காக ஏழு நாட்கள் செலவிடப் பட்டுள்ளன. இந்தக் கூறு வாக்கெடுப்புக்கு விடப்படும்போது, தாங்கள் பேசுவதற்கு போதிய நேரம் ஒதுக்கப்படவில்லை என்று எந்த உறுப்பினரும் புகார் கூறும் நிலைமை ஏற்படக் கூடாது.

*பாபு ராம்நாராயண் சிங் :* எனக்கு அந்த நிலைமை இருக்கிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த சட்டக் கூறு பற்றிய விவாதம் உண்மையில் இரண்டு பகுதிகளாக நடைபெற்றிருக்கிறது. விவாதத்தின் ஒரு பகுதி கடந்த நாடாளுமன்ற அமர்வில் நடைபெற்றது; இதனை மூல விவாதத்துக்கு ஒரு வகையான துணை விவாதமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். நான் குறிப்பிட்ட துணை விவாதத்தின்போது பிரதான விவாதத்தில் எழுப்பப்படாத என்ன புதிய கருத்து தெரிவிக்கப்பட்டது என்பதை அந்தத் துணை விவாதத்தை ஒட்டி நிகழ்த்தப்பட்ட உரைகளை நான் எவ்வளவோ கவனமாக செவிமடுத்துக் கேட்டும்கூட என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதைக் கூறுவதற்கு வருந்துகிறேன். இந்தத் துணை விவாதத்தின்போது நான் எதிர்ப்பட்ட புதிய அம்சம் என்னுடைய நண்பர் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி நிகழ்த்திய சொற்பொழிவும் அதேபோல் நமது நண்பர் திரு. மான் நிகழ்த்திய சொற்பொழிவுமாகும். பிரதான விவாதத்தில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் பற்றி மீண்டும் மிக விரிவான விவாதம் நடைபெற்றதைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை.

டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜியைப் பொறுத்தவரையில் அவரைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்ற எண்ணமே என்னிடம் மேலோங்கியுள்ளது. அவருக்கென சொந்தக் கருத்து எதுவும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

*பாபு ராம்நாராயண் சிங் :* உங்களுக்கு இருக்கிறது?

*டாக்டர் அம்பேத்கர்:* நிச்சயமாக இருக்கிறது. டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இந்த அரசாங்கத்தின் ஓர் உறுப்பினராக ஏறத்தாழ நான்காண்டுக் காலம் இருந்திருக்கிறார். அப்போது அதிகாரத்திலிருந்த அரசாங்கத்தால் இந்த மசோதா இந்த அவையில் கொண்டுவரப்பட்டது. மசோதா குறித்து அவை உறுப்பினர்களால்

★ அ.நி.விவாதங்கள், தொகுதி XV, பாகம் II, செப். 20, 1951, பக்கங்கள் 2937-59.

அவ்வப்போது துண்டு துண்டாக விவாதம் நடைபெற்றது. எனக்குத் தெரிந்தவரை அந்நாட்களில் இந்த மசோதா குறித்து டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி அமைச்சரவைக்குள் அணுவளவுகூட கருத்து வேறுபாடு தெரிவிக்கவில்லை.

**திரு. சியாமானந்தன் சகாயா (பீகார்)** : அமைச்சரவைக்குள் என்ன நடந்தது, என்ன நடக்கவில்லை என்பதை எல்லாம் மாண்பு மிகு அமைச்சர் வெளியிடலாமா?

**டாக்டர் அம்பேத்கர்:** இது மட்டுமல்ல, வேறு சில சம்பவங்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் என் நினைவுக்கு வருகின்றன. இந்தக் குறிப்பிட்ட மசோதா சம்பந்தமாக என்ன செய்ய வேண்டும் என்பதை விவாதிப்பதற்காக பல கட்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. இத்தகைய கூட்டங்கள் பெரும்பாலானவற்றில் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி கலந்துகொண்டார். கூட்டுப் பொறுப்பு காரணமாக வெளியே சொல்ல முடியாத கருத்துகளை இத்தகைய கட்சிக் கூட்டங்களில் தெரிவிக்கலாம். இவ்வாறிருக்கும்போது இந்தக் கூட்டங்கள் எதிலும் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி இந்த மசோதாவுக்கு எதிராக வாய் திறந்து ஒரு வார்த்தையும் கூறியதில்லை. ஆகவே, நான் ஏற்கெனவே கூறியதுபோல இது மன நிலையைப் பொறுத்த விஷயம் (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** கொள்கை பற்று.) ஒரு மனிதனுக்கு கொள்கை இருக்கலாம், கொள்கை இல்லாமலும் இருக்கலாம். இது என் கருத்து. (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** அவர் அமைச்சரவையிலிருந்து விலகிவிட்டார்). அவரது விஷயம் பரிதாபகரமானது என்று கூறுவதற்கு மிகவும் வருந்துகிறேன். ஒரு நல்ல மனிதன் எப்படியோ நிலை தடுமாறி சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து, குடிகாரனாகி விடுகிறான். அதுபோன்றது தான் இவரது நிலைமையும்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** அருமையான ஒப்பீடு.

**டாக்டர் அம்பேத்கர்:** இரண்டாவதாக அரசுப் பொறுப்புகளிலிருந்து விலகி, எதிர்க்கட்சி உறுப்பினராக, அதிலும் ஒரு முக்கியமான எதிர்க்கட்சி உறுப்பினராக ஆனது முதல் அவரது நடவடிக்கைகளை நான் உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன். சில சமயங்களில் சில எதிர்க்கட்சித் தலைவர்களிடம் ஒரு துரதிர்ஷ்ட வசமான மனப்பான்மை உருவாகி இருப்பதைப் பார்த்திருக்கிறேன்; அரசாங்கம் என்ன செய்தாலும் அதை எதிர்க்க வேண்டும்

என்பதற்காக எதிர்ப்பார்கள். அத்தகைய மனப்போக்கு இவரையும் பீடித்துக் கொண்டதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தகுதியின் அடிப்படையில் எந்தப் பிரச்சினை பற்றியும் விவாதிக்க ஒருவர் தயாராக இல்லை என்றால், எதிர்க்க வேண்டுமென்பதற்காக எதையும் அவர் எதிர்க்கிறார் என்றால் அத்தகையவருடன் விவாதித்து நமது நேரத்தையும் சக்தியையும் வீண் விரயம் செய்வது உகந்ததல்ல என்று கருதுகிறேன். இதனால்தான் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி கூறியதை பெரிதாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் ஏதும் எனக்கு இல்லை என்று கூறினேன்.

எனவே, சட்டக்கூறு 2க்கு எதிராக பல்வேறு உறுப்பினர் தெரிவித்துள்ள கருத்துகள் பற்றி இப்போது பார்ப்போம். முதலாவதாக, நாங்கள் இப்போது கொண்டு வந்துள்ள மசோதாவுக்கு உண்மையில் தற்போது அவசியமே இல்லை என்று கூறப்படுகிறது. இது சம்பந்தமாகப் பின்கண்டவாறு வாதிக்கப்படுகிறது: இந்து சமுதாயம் மிகவும் தொன்மையான சமுதாயம்; கிரேக்க அல்லது ரோமானிய சமுதாயத்தை விடப் பழமையானது; எகிப்திய சமுதாயத்தைப் போன்று தொன்மையானது. ரோமானிய சமுதாயத்தையோ, கிரேக்க சமுதாயத்தையோ அல்லது எகிப்திய சமுதாயத்தையோ பற்றி நமக்குத் தெரிந்தது எல்லாம் அவற்றின் வரலாறுதான்; அந்த சமுதாயங்கள் இப்போது இல்லை, அவை மறைந்து விட்டன. எஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரே தொன்மையான சமுதாயம் இந்து சமுதாயம்தான். பண்டைய ஏனைய சமுதாயங்கள் அனைத்தும் மறைந்துவிட்ட நிலையில் இந்து சமுதாயம் மட்டும் இன்றளவும் நின்று நிலைத்திருக்கிறது என்றால், அதன் சட்டங்களும், சமூக அமைப்பும், அதன் கோட்பாடுகளும் சிறந்தவையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அந்த சமுதாயம் இன்று ஜீவித்திருக்க முடியாது.

இந்த வாதத்தை நான் கேட்பது இது முதல் முறையல்ல. இந்த வாதத்தை நீண்ட காலத்துக்கு முன்பே கேட்டிருக்கிறேன்; சாமான்யர்களிடமிருந்து மட்டுமன்றி புகழ்பெற்ற இந்திய சரித்திர ஆசிரியர்களாக உயர்நிலையில் இருப்பவர்களிடமிருந்தும் கேட்டிருக்கிறேன். இந்த சமுதாயத்தின் தொன்மையான கட்டுக்கோப்பின் புனிதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோர் எப்போதும் முன்வைக்கும் விவாதம் இது. நானும் இந்திய வரலாற்றின் ஒரு மாணவனாக இருந்திருக்கிறேன் என்பதை மனம் திறந்து கூறுகிறேன்.

அதே சமயம் நமது பல்கலைக்கழகங்கள் பலவற்றில் வரலாற்றுப் பேராசிரியர்கள் பீடங்களை அலங்கரிப்போர் போன்று அத்தனை திறமை வாய்ந்தவன் என்று என்னால் உரிமை கொண்டாட முடியாது. எனினும் இந்திய வரலாறு பற்றிப் போதுமான விஷய ஞானம் எனக்கு இருக்கிறது என்று நம்புகிறேன். இந்த அடிப்படையில் நான் எழுப்ப விரும்பும் கேள்வி இதுதான்: தப்பிப் பிழைப்பது மட்டும் போதுமா அல்லது நாம் தப்பிப்பிழைத்த அடித்தளம் நாம் தப்பிப்பிழைத்ததை விட அதிக முக்கியத்துவம் உடையதா? தனது எதிராளியுடன் போரில் மோதும் ஒருவனும் அவனைத் தீர்த்துக் கட்டிவிட்டு வெற்றி பெற்றுத் தப்பிப் பிழைக்கிறான். தனது எதிரியுடன் மோதும் ஒருவன் தாக்குப்பிடித்து நிற்க முடியாமல் கோழைபோல் ஓடி அவனும் தப்பிப் பிழைக்கிறான். வெற்றி பெற்றவன் தப்பிப் பிழைப்பதும் கோழை தப்பிப் பிழைப்பதும் ஒன்றுதானா? எந்த அடித்தளத்தின்மீது இந்து சமுதாயம் ஜீவித்திருக்கிறது என்ற இந்தக் கேள்வியை நாம் பரிசீலிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்** : மிகவும் தகுதியுள்ளவர் தப்பிப்பிழைப்பார்). உண்மைதான், ஆனால் அது சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது. இவ்வாறு நான் இங்கு கூறுவதற்கு என்னுடைய நண்பர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்திய வரலாற்றை ஆராயும்போது நாம் தப்பிப் பிழைத்திருப்பதைக் காண்கிறேன், ஆனால் அவ்வப்போது அடிமைப்படுத்தப்பட்டவர்களாக, அடிமைப்படுத்தப்பட்டவர்களாக, வென்றெடுக்கப்பட்டவர்களாகவே தப்பிப் பிழைத்திருக்கிறோம். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்** : எந்த மக்கள்தான் இந்த நிலைக்கு ஆளாகவில்லை?) உண்மைதான். மதிப்பிற்குரிய என் நண்பர் கேட்கிறார்: ''யார்தான் இந்நிலைக்கு உள்ளாகவில்லை'' என்று. போரில் தோல்வியுற்ற, அடிமைப்படுத்தப்பட்ட பல பல நாடுகள், பல சமுதாயங்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால் மதிப்பிற்குரிய என்னுடைய நண்பருக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்; வென்றெடுக்கப்பட்ட மக்கள் அனைவரின் வரலாற்றைப் பார்ப்பாரேயானால் உலகின் ஏனைய பகுதிகளில் வென்றடக்கப்பட்ட மக்கள் என்றாவது ஒரு நாள், என்றாவது ஒரு சமயம் தங்கள் சுதந்திரத்தை ஈட்ட, விடுதலை பெற முயற்சித்திருப்பதைக் காண்பார். இந்த நாட்டில் இத்தகைய நிலை எதையும் நான் காணவில்லை. எனவே, மற்ற நாடுகள் தோல்வியுற்று வரலாற்றில் பதிக்கப்பெற்ற நிலையில் நாம் தப்பிப் பிழைத்திருப்பது நாம் வாழ்ந்து வந்திருக்கிற சமூக அமைப்பு சிறந்தது, முழு நலம் வாய்ந்தது என்பதை மெய்ப்பிக்கிறது என்ற வாதத்தை நான் ஏற்கத் தயாராக இல்லை. இந்து சமுதாயம் மிகவும் முற்போக்கான சமுதாயமாக இருந்து வந்திருக்கிறது என்று கூறப்

படுகிறது. இதை வைத்துத்தான் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி விரிவாகப் பேசினார். புத்தர் போன்ற ஒரு தீவிர சீர்திருத்த செம்மலை மகா புருஷராக இந்து சமுதாயம் ஏற்றுக் கொண்டது, இவ்வாறு அவரை ஒரு மாமேதையாக அங்கீகரித்தது மட்டுமன்றி அவர் தமது வாழ்க்கையில் பின்பற்றிய கோட்பாடுகளில் சிலவற்றையும் ஏற்றுக் கடைப்பிடித்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தன்னை எதிர்ப்போரிடமிருந்து சில நல்லவற்றை ஈர்த்துக் கொள்வது இந்து சமுதாயத்தின் அரிய பண்புக்கூறுகளில் ஒன்று என்பதில் ஐயமில்லை. ஆனால் இங்கு நான் எழுப்பும் கேள்வி இதுதான்: தனது எதிராளிகளின் சித்தாந்தத்தை சுவீகரித்துக் கொண் டதன் மூலம் இந்து சமுதாயம் தனது கட்டமைப்பை மாற்றிக் கொண்டுவிட்டதா? இங்கு புத்தரை எடுத்துக் கொள்வோம். அவர் என்ன போதித்தார்? அவர் சமத்துவத்தைப் போதித்தார். **சதுர்வருண** சித்தாந்தத்தைக் கடுமையாக எதிர்த்தார்; அவர் **வேதங்களை** நம்பு வதை தீவிரமாகக் கண்டித்தார்; ஏனென்றால் அவர் பகுத்தறிவை நம்பினார்; எந்த ஒரு நூலும் மிகப் புனிதமானது, தவறற்றது என்பதை நம்பவில்லை. அவர் அகிம்சையில் நம்பிக்கை வைத்தார். பிராமணீய சமுதாயம் சிலவற்றை ஏற்றுக் கொண்டது. எவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்? எவ்வகையிலும் தீங்கற்ற சித்தாந்த மான **அகிம்சையை** அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் புத்தர் போதித்த சமத்துவத்தை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை, அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர், அதனை எதிர்த்தனர். புத்தரின் போதனை களில் இங்குமங்குமாக சிற்சிலவற்றை இந்து சமுதாயம் தன்வயப் படுத்திக் கொண்டபோதிலும் அது பிரதான விஷயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை; இதில் இந்து சமயவாதிகள் அனைவரும் ஒன்று பட்டிருந்தனர்; **சதுர்வருண** சித்தாந்தத்தை எப்படியும் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் அந்தப் பிரதான விஷயம். பிறரிடமிருந்து நல்லதை ஏற்றுக் கொள்ளும், தன்னியற்படுத்தும் இந்த இயல்பு இருந்தபோதிலும் அவர்கள் எப்போதும் இருந்ததைப் போலவே இப்போதும் இருந்து வருகின்றனர். இந்த நாட்டில் பிறந்த அல்லது வெளிநாட்டில் பிறந்த மேதைகள் உபதேசம் செய்த சித்தாந்தங் களை ஈர்த்துக்கொண்டதன் விளைவாக இந்து சமுதாயம் தனது சமூகக் கட்டுக்கோப்பை மாற்றிக் கொள்ளுமா என்பதைக் காண பல ஆண்டுகள் காத்திருந்தோம். இதில் நம்மில் பலர் முற்றிலும் ஏமாற்றமடைந்தோம்; இவர்களில் நானும் ஒருவன். இந்து சமுதாயம் வேறு எதனை ஏற்றுக் கொண்டாலும் **சூத்திரர்களையும்** பெண்

களையும் அடிமைப்படுத்தும் தனது சமூகக் கட்டமைப்பை மட்டும் ஒருபோதும் கைவிடாது. இந்தக் காரணத்திற்காகத்தான் இவர்களை மீட்பதற்கும் இப்போது சட்டம் இயற்ற வேண்டியுள்ளது; அப்போது தான் அந்த சமுதாயம் முன்னேற முடியும்.

**பண்டிட் மாளவியா:** புத்தர் கூட செய்ய முடியாததை நீங்கள் செய்வீர்கள் போலிருக்கிறது. நடக்கட்டும்.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்து சமுதாயம் மாறி வருகிறது என்று பலர் கூறி வருகிறார்கள். இது சம்பந்தமாக ஒன்று கேட்க விரும்புகிறேன்: இது முன்னேற்ற திசையில் நடைபெறும் மாற்றமா அல்லது வேறு திசையில் நடைபெறும் மாற்றமா? தொடக்கம் முதல் இன்றுவரை ஆரிய சமுதாயத்தின் வரலாற்றை ஆராயும் எவரும் இத்தகைய மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் அது சீரழிவுக்கே இட்டுச் சென்றுள்ளது என்பதை ஒப்புக் கொள்வர்; நேர்மையான யாரும் இந்த முடிவுக்கே வருவர். ஆரியர்களிடையே சாதி முறை இருக்க வில்லை என்பதை அனைவரும் அறிவர். ஒருவகையான வருண முறை இருந்திருக்கலாம்; ஆனால் வருண முறை கலப்புத் திருமணங் களுக்கு எவ்வகையிலும் குறுக்கே நிற்கவில்லை, பிராமணர்கள் தீண்டப்படாத இனத்தைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சிகள் பலவற்றைக் காண்கிறோம். க்ஷத்திரியர்கள் சூத்திரர்களைத் திருமணம் செய்து கொள்வதும், சூத்திரர்கள் மேல்தட்டு வர்க்கப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன.

**பண்டிட் மாளவியா :** இதற்கு நீங்கள் உதாரணங்களைக் கூற முடியுமா?

**டாக்டர் அம்பேத்கர் :** என் அறைக்கு நீங்கள் வந்தால் பல உதாரணங்களை என்னால் கூற முடியும்.

**பண்டிட் மாளவியா :** ஏன் இப்போதே கூறக்கூடாதா?

**டாக்டர் அம்பேத்கர் :** ஆரியர்கள் ஆரம்பத்தில் குறுகிய நோக் குடைய வகுப்புப் பிரிவினை கொண்ட சமூக அமைப்பு முறை யைக் கொண்டிருக்கவில்லை; பின்னர்தான் இது அவர்களுடைய வாழ்க்கையில் புகுந்தது. இது பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றம்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்துப் பெண்களின் நிலைமையை கூர்ந்தாராய்ந்து பாருங்கள், நம்முடைய மதிப்பிற்குரிய நண்பரான டாக்டர் மைத்ரா ராவ் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தார்; கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெறும் பொருட்டு அவர் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதினார்; அந்தக் கட்டுரை **இந்து சாஸ்திரங்களில் பெண்களின் நிலைமை** என்ற பெயரில் ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது. அக்காலத்தில் சொத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்குப் பங்கு இருந்தது என்பதை இந்தப் புத்தகத்தைப் படிக்கும் எவரும் காணலாம். மனு நூலில்கூட இது இடம்பெற்றுள்ளது. இந்து சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக இன்று நாம் என்ன காண்கிறோம்? பெண்களிடமிருந்து சொத்துரிமை முற்றிலுமாகப் பறிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை நீங்கள் முற்போக்கானது என்று கருதுகிறீர்களா, அல்லது பிற்போக்கானது என்று கருதுகிறீர்களா? எனவே, இந்தப் பிரச்சினையை நாம் வேறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது. சட்டம் சமுதாயத்தை முன்னேறும்படிச் செய்தாலொழிய இந்த சமுதாயம் முன்னேறாது.

இந்த அவையில் மற்றொரு வாதமும் முன்வைக்கப்பட்டுள்ளது: நமக்கென்று கொள்கை இல்லை, கோட்பாடு இல்லை; நாம் செயல்படுவதற்கு எதுவுமில்லை; நாம் செயல்படுவதற்கு அடிப்படையாக உள்ள ஒரே விஷயம் மேலைய நாடுகளை ஒருவிதத்தில் போலி செய்து பின்பற்றுவதாகும். மேலைய நாடுகளில் ஒருதார மணமுறை இருக்கிறது; மேலைய நாடுகளில் விவாக ரத்து முறை இருக்கிறது; இந்தத் திசைவழியில் ஏதேனும் செய்ய சீனர்கள் முயன்று வருகிறார்கள்; எனவே, உலக நாடுகளிடம் நல்ல பெயர் வாங்குவதற்கு அவற்றின் வழியில் ஏதேனும் செய்ய நாம் முயன்று வருகிறோம் என்று கூறப்படுகிறது. நாம் யாரைப் பின்பற்றி நமது குறிக்கோளை நிர்ணயிக்க வேண்டும்? சிலர் ராமர் என்றார்கள்; வேறு சிலர் தசரதர் என்றார்கள்; மற்றும் சிலர் கிருஷ்ணன் என்றார்கள்; இவ்வாறு யார் யாரையோ கூறினார்கள். அவையில் பலரும் பல்வேறு குறிக்கோள்களைத் தெரிவித்துள்ளனர். அவற்றில் எதைப் பற்றியும் நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** இவ்வாறு செய்ய வேண்டாம் என்று உங்களுக்கு நல்ல ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

**மாண்புமிகு அவைத் தலைவர் :** அமைதி, அமைதி.

**டாக்டர் அம்பேத்கர் :** எனது லட்சியங்களை நாம் தயாரித்துத் தந்திருக்கும் அரசியல் சாசனத்திலிருந்து வரித்துக்கொண்டுள்ளேன். அரசியல் சாசனத்தின் முகப்புரை சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவத்தைப் பற்றிக் கூறுகிறது. எனவே, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூக அமைப்பையும் ஆராய நாம் கடமைப்பட்டுள் ளோம்; அரசியல் சாசனத்தில் வகுத்துத் தரப்பட்டுள்ள கோட்பாடு களை அது நிலைநாட்டுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது நீங்கள் கூறும் சமயச் சடங்கு ரீதியான திருமணம் விஷ யத்துக்கு வருவோம். நேர்மையான, நியாயமான, பாரபட்சமற்ற உணர்வோடு சடங்கு ரீதியான திருமணத்தை ஆராயும் எவரும் இவ்வகையான திருமணம் சுதந்திரத்தையோ அல்லது சமத்துவத் தையோ நிலைநாட்டுவதில்லை என்ற முடிவுக்கே வருவர் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. சடங்கு ரீதியான திருமணத்தை ஒரு சில வார்த்தைகளில் கூறுவதென்றால் அது ஆணுக்குப் பலதார மணத்தையும் பெண்ணுக்கு நிரந்தர அடிமைத்தனத்தையும் குறிக்கிறது.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** அற்புதமான வருணனை.

**டாக்டர் அம்பேத்கர்:** இது ஏன் என்றால், ஒரு கணவன் எவ்வளவுதான் மோசமானவனாக இருந்தாலும், விரும்பத்தகாத வனாக இருந்தாலும் எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் ஒரு பெண் தனது கணவனிடமிருந்து சுதந்திரம் பெற முடியாது. அவையிடம் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: நாம் அடிமைத்தனத்தை ஆதரிக்கிறோமா அல்லது சுதந்திர உழைப்பை விரும்புகிறோமா? நாம் எதை ஆதரிக்கிறோம்? தற்போது, எல்லாப் பொருளாதார விஷயங்களிலும் சுதந்திர உழைப்பு இருக்க வேண்டும் என்று எப்போதுமே நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அடிமைத்தனத்தை நாம் சகித்துக் கொள்ள மாட்டோம்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** இது அடிமைத்தனமா?

**டாக்டர் அம்பேத்கர்:** அடிமைத்தனத்துக்கும் சுதந்திர உழைப் புக்கும் உள்ள வேறுபாடு என்ன? இதனை நீங்கள் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்தால் ஒப்பந்தத்தை முறிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அதனை முறிக்கக் கூடிய ஆற்றலையே சுதந்திர உழைப்பு என்று கூறுகிறோம்.

திரு. ஆர்.கே. சௌதுரி (அசாம்) : இது என்ன ஒப்பந்தமா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், அது ஒப்பந்தம்தான். அந்த விஷயத்துக்கு வருகிறேன்.

சமயச் சடங்கு ரீதியான திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்மணி சுதந்திரம் பெறுவதற்கு வகை செய்ய இந்த மசோதாவில் இடம் பெற்றிருக்கும் விவாகரத்துக்கான நிபந்தனைகளைக் குறைக்கக் கூடிய எந்த யோசனையையும் இந்த அவையின் உறுப்பினர் எவரும் தெரிவித்தால் அதனைப் பரிசீலிக்க நான் தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் நமது அரசியல் சாசனம் உத்தரவாதம் செய்கிறது, இதன் பொருட்டு நமது அரசியல் சாசனம் பாராட்டப்படுகிறது. எனவே இந்த சுதந்திரத்தைப் பெண்களுக்கு நீங்கள் மறுக்க முடியாது. அவ்வாறு மறுக்கும் அமைப்பு முறையை நீங்கள் அனுமதிக்க முடியாது. நாம் இந்த மசோதாவை முன்மொழிந்திருப்பதற்கு இதுதான் காரணம்; மேலும், வேறு எந்த மக்களையும் போலி செய்ய நாம் விரும்பவில்லை; இப்போது வழக்கில் இல்லாத, எவரும் நடைமுறைப்படுத்த சாத்தியமற்ற நமது பண்டைய இலட்சியங்களைக் கடைப்பிடிக்கவும் நாம் விரும்பவில்லை.

டாக்டர் சி.டி. பாண்டே (உத்தரப் பிரதேசம்): இந்த மசோதாவை ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தச் சுடுசொற்களை நாங்கள் விரும்பவில்லை. இந்த விஷயத்தைக் கையாளும்போது இத்தகைய வசைமாரிகளை மாண்புமிகு அமைச்சர் பயன்படுத்துவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நான் அறியேன்?

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: ஏன் இவ்வாறு இந்து மதத்தை நிந்திக்கிறீர்கள்?

டாக்டர் அம்பேத்கர் : கூறு 2க்கு பல்வேறு உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள திருத்தங்களுக்கு இப்போது வருகிறேன்.

திரு. கிருஷ்ணானந்த ராய் (உத்தரப்பிரதேசம்) : இந்த அவை விவாகரத்தையும் ஒருதார மணத்தையும் ஆதரிக்கிறதே தவிர, இவ்வகையான வசவுகளை அல்ல.

*டாக்டர் சி.டி. பாண்டே:* இந்த ஷரத்துகளை நாங்கள் விரும்புகிறோம். ஆனால் இந்தத் திட்டுகளையும் வசைமாரிகளையும் நாங்கள் விரும்பவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* இதனை நீங்கள் முன்பே சொல்லியிருந்தால், இந்த உரையையே நிகழ்த்தி இருக்க மாட்டேன், இந்த மசோதாவிற்காக ஏழு நாள்களைச் செலவிட்டிருக்க மாட்டேன்.

*பிரதம அமைச்சர் (மாண்புமிகு ஜவஹர்லால் நேரு) :* மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் மிகவும் மென்னுணர்ச்சி உடையவர்களாக இருப்பது கண்டு வியப்படைகிறேன். பற்பல சொற்பொழிவுகளைச் செவிமடுத்துக் கேட்டோம்; நம்மைப் பெரிதும் புண்படுத்தக் கூடிய பல விஷயங்கள் கூறப்பட்டன. இதற்கு ஆட்சேபம் இல்லை என்றால், டாக்டர் அம்பேத்கருடன் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் இப்போது ஆட்சேபம் எதுவும் எழுப்பக்கூடாது.

*பண்டிட் மைத்ரா:* டாக்டர் அம்பேத்கரின் பேச்சை நாங்கள் மிகவும் கவனத்துடன் கேட்டு வருகிறோம். ஆனால் நாங்கள் போற்றிப் பேணும் மிகச் சிறந்த சில இலட்சியங்கள் பற்றிய இந்த அவதூறுகளையும் வசைச் சொற்களையும் நாங்கள் விரும்பவில்லை.

*மாண்புமிகு அவைத் தலைவர்:* மனக் கொந்தளிப்பு அடைய எத்தகைய அவசியமும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. பிரதமர் கூறியதுபோல் மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் பேசும்போது எத்தனை எத்தனையோ விஷயங்களைக் கூறினர். அவர்களுக்குப் பதிலளிக்கும்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் சில விஷயங்களைக் கூற வேண்டியிருப்பது இயல்பு. அவர் பேசுவதை அமைதியோடு கேட்பதுதான் முறை.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த சட்டக்கூறுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட திருத்தங்களுக்கு இப்போது வருகிறேன், நீங்கள் கூர்ந்து நோக்கினால் (குறுக்கீடுகள்).

*மாண்புமிகு அவைத் தலைவர்:* .மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஆங்காங்கு தங்களுக்குள் பேசிக் கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* ஒரு பொதுவான திருத்தம் இருக்கிறது; இந்த மசோதா கட்டாயமற்றதாக ஆக்கப்பட வேண்டும் என்று அது கூறுகிறது. இந்தத் திருத்தம் பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது. திருத்தத்தின் ஒரு வடிவம் இம்மசோதா யாருக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த இந்துக்கள் இதனை ஏற்கவோ அல்லது மறுக்கவோ அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்று கூறுகிறது. திருத்தத்தின் மற்றொரு வடிவம் இந்த மசோதா எவருக்குப் பயன்படுத்தப்படாதோ அவர்கள் உதாரணமாக முஸ்லீம்கள் போன்றவர்கள் தங்களுக்கும் இந்த மசோதாவை அமல் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அவ்வாறே செய்ய வேண்டும் என்று கூறுகிறது. திருத்தத்தின் இன்னொரு வடிவம் இம்மசோதாவை நடைமுறைப்படுத்தும் அல்லது நடைமுறைப்படுத்தாதிருக்கும் உரிமை மாநிலங்களுக்கு இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்த மூன்று வடிவங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொது மசோதாவை இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

முதலாவது அம்சத்தைப் பொறுத்தவரையில் இந்துக்கள் விஷயத்தில் கூட இம் மசோதாவை நடைமுறைப்படுத்துவது கட்டாயமற்றதாக, விருப்பப்படியானதாக இருக்கும். சென்ற முறை, துணை சபாநாயகர் பல உறுப்பினர்களது ஐயத்தைப் போக்கும் வகையில் இதுபோன்ற விஷயத்திற்கு ஒரு முன்னுதாரணம் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். ஷரியத் சட்டத்தையும், கோஜா மோமின் அல்லது கோஜா சட்டத்தையும் இவ்வகையில் அவர் சுட்டிக்காட்டினார் என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். எனவே, இந்த மசோதாவை இந்துக்களுக்குப் பயன்படுத்துவதில் எத்தகைய ஆபத்தோ, வழக்கு மீறியதோ இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். இதற்குப் பிறகு, மாண்புமிகு துணை சபாநாயகர் - அவர் இப்போது இங்கு இல்லை என்பதற்காக வருந்துகிறேன் - கூறியது உண்மைதானா என்பதை ஆராய்வதில் நீண்ட நேரம் செலவிட்டிருக்கிறேன்.

*திரு. சியாம்நந்தன் சகாயா :* நீங்கள் துணை சபாநாயகரின் தீர்ப்பை விமர்சிக்கிறீர்களா அல்லது திரு. அனந்த சயனம் அய்யங்கார் கூறியதை விமர்சிக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* திரு. அனந்த சயனம் அய்யங்காரின் அறிக்கையைப் பற்றித்தான் இங்கு விமர்சிக்கிறேன். மதிப்பிற்குரிய

உறுப்பினர் மிகவும் சட்ட நுணுக்கத்துடன் இருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** எப்போதுமே இப்படித்தான் இருந்து வருகிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அமைச்சரவையின் ஓர் உறுப்பினர் என்ற தமது அந்தஸ்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த மசோதா பற்றி 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. அனந்தசயனம் அய்யங்காரே இந்த மசோதாவைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினையை எழுப்பினார்; அவரது உரை இரண்டு பக்கங்களுக்கு விரிந்திருப்பதைக் காண்கிறேன். கோஜாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விருப்புரிமையை இந்த மசோதா அகற்றிவிடுகிறதா என்ற இதே கேள்வியை அவர் அப்போது கேட்டார். இந்தக் கேள்வியை நேரடியாக திரு. ஜின்னாவிடமே கேட்டார். ஏனென்றால் **ஷரியத்** மசோதா ஓர் அரசாங்க மசோதா அல்ல என்பதை இந்த அவை அறியும். இது ஒரு தனி நபர் மசோதா; திரு. ஜின்னா இந்த மசோதாவுக்குப் பொறுப்பாக இருந்தார். இந்த மசோதா கட்டாயமானது என்று அவர் திரு. அனந்த சயனம் அய்யங்காருக்குத் திட்டவட்டமாகப் பதிலளித்தது மட்டுமன்றி, கோஜாக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விருப்புரிமைகூட இந்த மசோதாவால் நீக்கப்படும் என்று தெளிவுபடுத்தினார்.

**பண்டிட் மைத்ரா:** அந்த மசோதாவின் பின்னணியையும் அவைக்கு ஏன் எடுத்துரைக்கக் கூடாது? மசோதா விவாதிக்கப்பட்டு வந்தபோது நான் அங்கிருந்தேன். எந்த இந்து சட்டமும் முஸ்லீம்களுக்குப் பொருந்துவதாக இருக்கக்கூடாது என்று திரு. ஜின்னா கூறியதையும் நான் அறிவேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** அந்தப் புத்தகம் இதோ இருக்கிறது. முழு விவாதத்தையும் படிக்க விரும்பும் எவருக்கும் அதை என்னால் கொடுக்க முடியும்; இந்த விஷயம் குறித்து மேற்கொண்டு நேரத்தை என்னால் செலவிட முடியாது; ஏனென்றால் திருத்தங்களை நான் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

**திரு. ஜே.ஆர். கபூர் :** அந்த விவாதம் நடைபெற்றது எந்த வருடம்?

டாக்டர் அம்பேத்கர்: 1937. இதிலுள்ள ஒரே சிரமம் என்னவென்றால்...

திரு. பாட்: ஷரியத் மசோதா அப்போது ஏற்கப்பட்டதா, அல்லது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டதா அல்லது கைவிடப்பட்டதா?

டாக்டர் அம்பேத்கர்: மசோதா ஏற்கப்பட்டது. எந்த விருப் புரிமையையும் அனுமதிக்கக் கூடாது என்றும் முடிவு செய்யப் பட்டது. இதில் எழுந்த ஒரே சிரமம் என்னவென்றால், கூறு 3 ஆவணங்கள் தயாரிப்பவரின் உதவியின்றிப் பிரேரேபிக்கப்பட்டது; இதன் விளைவாக ''சட்டக் கூறு'' என்பதற்குப் பதில் ''சட்டம்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுவிட்டது. இந்தப் பிழை என் னுடைய நண்பர் திரு. காஸ்மியால் திருத்தப்பட்டது; அவர் 1943ல் கொண்டுவந்த மசோதாவில் ''சட்டம்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''சட்டக்கூறு'' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். எனவே, முற்சான்று இருக்கிறது என்பதற்கான ஆதாரம் இதன் மூலம் இல்லாதொழிகிறது.

(நண்பகல் 12 மணி)

திரு. ஜே.ஆர். கபூர்: இந்த 1937 ஆம் வருடச் சட்டம் முந்திய குட்சி மெமோன் சட்டத்தை ரத்து செய்கிறது என்பதை சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்தச் சட்டத் தின்படி விருப்புரிமை அளிக்கப்பட்டது. மேலும், விருப்புரிமை அளிக்கும் ஒரு சட்டம் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது என்ற உண்மையை இந்த அவையின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் துணை சபாநாயகர் நம் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

டாக்டர் அம்பேத்கர்: அது முன்னர் நடைபெற்ற விஷயம், பின்னர் அது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. ஜே.ஆர். கபூர்: எது எப்படியிருந்தாலும் இவ்வகையான ஒரு சட்டம் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்திருக் கிறது. இதுவே அவர் சுட்டிக்காட்டும் விஷயம்.

டாக்டர் அம்பேத்கர்: 1937ஆம் வருடச் சட்டம் விருப்புரிமை யைக் கொடுத்ததா என்ற விஷயத்தைப் பற்றியே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் நிலைமை.

திரு. ஜே.ஆர். கபூர் : 1923ஆம் வருடச் சட்டமே இத்தகைய விருப்புரிமையை அளித்தது என்பது ஐயங்காரின் வாதம்.

டாக்டர் அம்பேத்கர் : இதை ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூற வருந்துகிறேன்.

மாண்புமிகுத் துணைத் தலைவர்: எவரது உரையிலாவது முரண்பாடு இருக்குமாயின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அதனைப் பின்னர் சுட்டிக்காட்டலாம். இதற்கு அவர்களுக்கு நிறைய வாய்ப்பு கிட்டும்.

திரு. அமலோக் சந்த் : சமீபத்திய நிலைமை என்ன?

டாக்டர் அம்பேத்கர் : விருப்புரிமை எதுவும் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது : விருப்புரிமை நீண்ட காலம் இருந்து வந்தது.

டாக்டர் அம்பேத்கர் : குட்சிகளுக்கு விருப்புரிமை வழங்க வேண்டும் என்ற பிரேரணையை இப்போது எடுத்துக் கொள்கிறேன். முன்னிழ்வுகள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். விளைவுகள் என்ன வாக இருக்கும்? விருப்புரிமை வழங்கும் இந்தப் பிரேரணையை நாம் ஏற்பதாக வைத்துக் கொள்வோம். திருமணம், விவாகரத்து ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் சட்டங்களை பம்பாய், சென்னை போன்ற சில மாநிலங்கள் இயற்றியுள்ளன என்பதை மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த இரண்டு சட்டங்களிலும் விருப்புரிமை எதுவும் வழங்கப்படவில்லை. இந்த நாட்டை வாழ்விடமாகக் கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் இவை கட்டாயமானவை. இந்த சட்டத்தை நாம் நிறைவேற்றினோமானால், அது மத்திய அரசு சட்டம் என்பதாலும், அது பொது அதிகாரப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாலும் இதற்கு முரணான மாகாண சட்டங்கள் செல்லுபடியாகாதவையாகிவிடும். இதன் ஒரு விளைவு என்னவெனில் ஒருதார மணம், விவாகரத்து போன்ற விஷயங் களில் பம்பாய், சென்னை போன்ற மாநிலங்கள் என்னதான் முன்னேற்றமடைந்திருந்தாலும் அந்த முன்னேற்றம் முற்றிலும் நசித்துப் போகும்.

திரு. கௌதம் (உத்திரப்பிரதேசம்) : பம்பாயிலுள்ள முஸ்லீம் களின் நிலை என்னவாகும்?

*டாக்டர் அம்பேத்கர் :* தற்போது இந்தச் சட்டம் இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும். விரைவில் முஸ்லீம்கள் விஷயத்துக்கும் வருவேன். கவலைப்படாதீர்கள். எடுத்துக்கொண்ட விஷயத்திலிருந்து ஓடிவிட மாட்டேன். எனவே, இவற்றின் ஒரு விளைவு என்னவெனில் ஓரளவு சமூக முன்னேற்றமடைந்துள்ள இரண்டு மாநிலங்களுக்கு பின்னடைவு ஏற்படும்.

*திரு. ஆர்.ஜே. கபூர் :* இதைச் சரி செய்ய பாருங்கள்.

*டாக்டர் அம்பேத்கர் :* எப்படி முடியும்?

*திரு. ஆர்.ஜே. கபூர் :* "இதில் எது எப்படிக் கூறப்பட்டிருந்தாலும் இந்த சட்டம்..." என்று கூறுவதன் மூலம்.

*டாக்டர் அம்பேத்கர்:* இது மதிப்பிற்குரிய என்னுடைய நண்பரைத் திருப்தி செய்வதற்கான விசித்திரமான சட்டமாக இருக்கும். ஆக, இந்த விளைவையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றுள்ள நிலைமை என்ன? ஒருதார மணம், விவாகரத்து சம்பந்தப்பட்ட சட்டங்களை சில மாநிலங்கள் பெற்றிருக்கின்றன. வேறு சில மாநிலங்கள் இத்தகைய சட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. எனினும் ஒரு விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது அரசியல் சாசனத்தின் கீழ் எந்த மாநிலமும் ஆட்சி எல்லைக்கு அப்பாற்பட்டு சட்ட அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஒருவர் அங்கு குடியிருப்பாளராக இருந்தால் அவருக்கோ அல்லது அதனை வாழ்விடமாகக் கொண்டிருப்பவருக்கோ சட்டம் பொருந்தும். பம்பாயில் ஒருவர் திருமணம் செய்து கொள்வதாக இருந்தால் அந்த மாநிலத்தின் சட்டத்துக்கிணங்க திருமணம் செய்து கொள்ள வேண்டும். பம்பாய் சட்டத்தின்படி அனுமதிக்க முடியாத காரணங்களின் அடிப்படையில் அவர் தமது மனைவியை விவாகரத்து செய்ய விரும்பினால் அவர் இத்தகைய சட்டம் நடைமுறையில் இல்லாத உத்திரப்பிரதேசத்துக்குச் செல்லலாம், தமது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு வேறொரு திருமணம் செய்து கொள்ளலாம், இதன் மூலம் பம்பாய் சட்டத்தை முற்றிலும் செல்லாக்காசாக்கி விடலாம். இது மதுவிலக்கைப் போன்றது. தனியொரு மாநிலம் மட்டும் மதுவிலக்கை அமல் நடத்தமுடியாது. மதுவிலக்கு எங்கும் கைக்கொள்ளப்பட வேண்டும்; அப்போதுதான் எவரும் இன்னொரு

மாநிலத்துக்குச் சென்று தான் வழக்கமாக வசிக்கும் மாநிலத்தின் சட்டத்தை மீற முடியாது. எனவே, இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் எந்த சட்டமும் இருக்கக்கூடாது, ஒன்று உள்ளது உள்ளபடி விட்டுவிட வேண்டும் அல்லது சட்டம் வேண்டுமென்றால் அது ஓர் அகில இந்தியச் சட்டமாக இருக்க வேண்டும், அந்த நிலையில் எந்த ஆணோ அல்லது பெண்ணோ சட்டத்தை மீற இயலாது.

மூன்றாவது சிரமம் என்னவெனில், விருப்புரிமை வழங்கப் பட வேண்டும் என்று சிலர் திருத்தங்களை முன்மொழிந்துள்ள போதிலும் அந்த விருப்புரிமை எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர்கள் குறிப்பிடத் தவறி விட்டனர். இத்தகைய விருப்புரிமை பெறுவதற்கு ஒரு பெண்ணுக்கு உரிமை உண்டா, இல்லையா? இந்தச் சட்டம் தனக்குப் பொருந்தும் என்று ஒரு தந்தை விருப் புரிமை கோரினால் அவருடைய மனைவிக்கு அவள் அவருடைய மனைவி என்ற காரணத்தால் அவளுக்குப் பொருந்துமா? கணவன் இந்த விருப்புரிமையைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளாத போது, அதனைப் பயன்படுத்திக் கொள்ள மனைவிக்குச் சுதந்திரம் உண்டா?

**திரு. பாரதி** (சென்னை) : எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** இத்தகைய ஒரு திருத்தம் ஏற்கப்படு மானால் அனைத்தும் குழப்பமாகத்தான் இருக்கும்.

**திரு. ஜே.ஆர். கபூர்** : சட்டக் கூறு 2-க்கு முன்மொழியப்பட் டுள்ள வரம்புரை என்ன கூறுகிறது?

**டாக்டர் அம்பேத்கர் :** இத்தகைய வரம்புரை எதையும் நான் சேர்க்க இயலாது என்று அஞ்சுகிறேன். நமது சட்டம் ஒருவகை யில் உருச்சிதையலாம். ஆனால் அது முற்றிலும் தனது அழகுணர்ச் சியை இழந்து விடக்கூடாது; அது பார்ப்பதற்கு நல்லதாக இருக்க வேண்டும்.

அடுத்து, வாதத்தின் மற்றொரு அம்சத்துக்கு இப்போது வருகிறேன்; இந்த சட்டத்தை தங்கள் விஷயத்தில் பயன்படுத்திக் கொள்ள ஏனைய மக்களை அனுமதிப்பதுதான் அந்த அம்சம். இந்த சட்டம் முஸ்லீம்களுக்குப் பொருந்தாது என்பதை டாக்டர் முகர்ஜி

சுட்டிக்காட்டியிருக்கவில்லை என்றால் இந்த விஷயத்துக்கு நான் வந்திருக்க மாட்டேன். முஸ்லீம் சமூகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற நல்லெண்ணமோ, துணிச்சலோ அரசாங்கத்திற்கு இல்லை என்று அவர் குற்றம் சாட்டினார். இந்த விஷயம் சம்பந்தமாக சில உறுப்பினர்கள் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளனர்; அதாவது நண்பர் ஒரு பாரபட்ச மான சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகவும், ஒரு பெண்ணுக்கும் அதிகமாகத் திருமணம் செய்துகொள்ள இந்துக்களுக்கு இப்போது உரிமை இருக்கிறது, முஸ்லீம்கள் நான்கு பெண்களை திருமணம் செய்துகொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள், இந்துக் களுக்குள்ள இந்த உரிமை இப்போது பறிக்கப்படுகிறது, ஆனால் அதே சமயம் முஸ்லீம்களுக்கு உள்ள உரிமை எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை என்று எங்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. நாங்கள் பாரபட்சப் போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கூறுவது முற்றிலும் தவறு. இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் சாசனத்தின் 25ஆவது உறுப்பை உறுப்பினர்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். அந்த உறுப்பு கூறுவதாவது :

> ''பொது ஒழுங்கமைதி, ஒழுக்க நெறி, நல்வாழ்வு ஆகிய வற்றிற்கும் இந்தப் பகுதியின் பிற வகையங்களுக்கும் உட் பட்டு, அனைவரும், மனச்சான்று வழி ஒழுகுவதற்கான சுதந் திரத்திற்கும் சுதந்திரமாகச் சமய நெறி ஓம்புதல், ஒழுகுதல், ஓதிப்பரப்புதல் ஆகியவற்றிற்கான உரிமைக்கும் சரிசமமாக உரிமை கொண்டவர் ஆவர்.''

''சுதந்திரமாக சமய நெறி ஓம்புதல், ஒழுகுதல், ஓதிப் பரப் புதல் ஆகியவற்றிற்கான உரிமை'' என்னும் சொற்களை உறுப்பினர் களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமயத்தைப் பரப்பும் விஷயம் தற்போது என் கவனத்தை ஈர்க்கவில்லை.

சென்ற முறை இந்த மசோதாவைப் பற்றிப் பேசும்போது, நமது நாட்டில் அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவச மாகவோ ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றுவது தனி நபரின் இனமுறைச் சட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது என்று முற்றிலும் தெளிவுபடுத்தினேன். இந்த நிலையிலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. இதேபோல், ஒரு முஸ்லீமிடம் சென்று அரசியல் சாசனத்தின்படி அவர் தமது மதத்தைக் கொண்டொழுக முழு சுதந்திரம் இருக்கிறது என்று நாம் கூறும்போது, அவர் தமது

இன முறைச் சட்டத்தைப் பின்பற்றும் உரிமையையே உண்மையில் அவருக்கு வழங்குகிறோம். பல்வேறு சமூகத்தினரும் தங்கள் மதத்தையும் அதேபோல் தங்கள் இனமுறைச் சட்டத்தையும் பின்பற்ற அரசியல் சாசனம் அனுமதிக்கும்போது ஒரு குறிப்பிட்ட சமூகம் தனது சொந்த சட்டத்தைக் கொண்டிருக்கவோ, அல்லது அது விரும்பும் வகையில் அதனை மாற்றவோ, பிற சமூகத்தினரின் சட்டத்தை வேறுபட்ட முறையில் பாலிக்கவோ அல்லது அதனை மாற்றவோ அனுமதிப்பதில் பாரபட்சம் எதுவும் இல்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (பஞ்சாப்) :** இந்து சட்டத்தின்படி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளலாம்; இதேபோல் முகமதிய சட்டத்தின்படி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களைக் கொண்டிருக்க உரிமை உண்டு; ஆனால் அதே சமயம் எந்த முஸ்லீமும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ அதேபோல் ஓர் இந்து ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ கட்டாயம் ஏதுமில்லை. இந்த விஷயத்தில் இரு தரப்பினரது மதங்களும் ஒன்றே. இவ்வாறே, ஒரு முசல்மான் குழந்தைத் திருமண முறையைச் செயல்படுத்த வேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை; இந்துக்கள் விஷயத்திலும் இத்தகைய கட்டாயம் ஏதுமில்லை; ஏனென்றால் **ஸ்மிருதியும் ஹதீசும்** இது விஷயத்தில் ஒரே கருத்தையே கொண்டுள்ளன. ஆதலால் குழந்தை திருமணச் சட்டம் முஸ்லீம்களுக்கும் பொருந்தும். இன்று இந்த சட்டத்தை அவர்களுக்குப் பொருந்தும்படியாக ஆக்கினால் அது முஸ்லீம் சட்டத்துக்கோ அல்லது **ஷரியத்** சட்டத்துக்கோ புறம்பானதாக இருக்காது. உறுப்பு 25ஐ பொறுத்தவரையில் நீங்கள் இதனைப் பின்பற்ற மாட்டீர்கள்....

**டாக்டர் அம்பேத்கர் :** நாங்கள் பாரபட்சம் காட்டுகிறோம் என்ற வாதத்திற்குத்தான் நான் பதிலளித்துக் கொண்டிருக்கிறேன். எனது பதில் இதுதான்; வெவ்வேறு சமூகங்களையும் வெவ்வேறாக நடத்த அரசியல் சாசனம் எங்களை அனுமதிக்கிறது; அவற்றை அவ்வாறு வெவ்வேறுவிதமாக நடத்தினால், பாரபட்சம் காட்டுவதாக எவரும் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்ட முடியாது. இதுதான் விஷயம். இது இவ்வாறிருக்க மற்றொன்றையும் இங்கு

குறிப்பிட விரும்புகிறோம். மேலே கூறிய காரணத்தினால் உறுப்பு 25 மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உறுப்பாகும். ஐரோப்பா வின் வரலாறு நெடுகிலும் திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே பெரும் சர்ச்சை இருந்து வந்ததை அவை அறியும். திருச்சபை மதத்தில் தலையிடக்கூடாது, அரசு திருச்சபையை விட உயர் அதிகாரம் படைத்தது என்று அரசு வலியுறுத்திற்று. ஆனால் திருச்சபையோ வேறுவிதமாக வாதிட்டது: அரசு திருச்சபைக்குக் கீழ்ப்பட்டது, திருச்சபை அனுமதித்தால்தான் அரசு சட்டங்கள் இயற்ற முடியும் என்று பதிலடி தந்தது. இது பொதுவான நிலை. நமது அரசியல் சாசனத்தில் நாம் ஓர் இடைப்பட்ட நிலையை மேற்கொண்டோம்; நாம் மேற்கொண்ட நிலை இதுதான்: மக்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற அனுமதிக்கப்படுவார்கள், தங்களது இனமுறைச் சட்டத்தைக் கடைப்பிடிக்கவும் அனுமதிக்கப்படுவார்கள், ஏனென் றால் இனமுறைச் சட்டம் அவர்களது மதத்தில் உள்ளடங்கி யுள்ளது; எனினும் இந்த நாட்டில் எந்த சமூகத்தின் இனமுறைச் சட்டத்திலும் தலையிடும் உரிமையை உறுப்பு 25 மூலம் அரசு எப்போதுமே பெற்று வந்துள்ளது. இந்த உரிமைக்கு எதிராக எத்தகைய வாதமும் செல்லுபடியாகாது. இதுவே என் கருத்து. காலம், வாய்ப்பு, சந்தர்ப்பச் சூழ்நிலைகள் முதலியவை அதிலுள்ள ஒரே பிரச்சினை.

தங்களுடைய இனமுறைச் சட்டத்திலோ அல்லது வேறு எந்தச் சட்டங்களிலோ தலையிட நாடாளுமன்றத்துக்கு உரிமை இல்லை என்ற வாதத்தை எந்த சமூகத்திடமிருந்தும் கேட்க நான் தயாராக இல்லை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன். இந்த நாடாளுமன்றம் முழுக்க முழுக்க உச்ச உயர் அதிகாரம் படைத்தது. இன முறைச் சட்டத்தையும் சமயத்தையும் பொறுத்த வரையில் நாங்கள் எந்த சமூகத்தையும் கையாள்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறோம். இந்த நாடாளுமன்றத்தின் அரசாண்மை அதிகாரத்திலிருந்து தாங்கள் தனி விலக்குரிமை பெற்றிருப்பதாக எந்த சமூகமும் மனக்கோட்டை கட்ட வேண்டாம்.

திரு. ஏ.சி. சுக்லா: நீங்கள் சட்டம் இயற்றலாம், ஆனால் நடைமுறைப்படுத்த முடியாது.

டாக்டர் அம்பேத்கர் : விஷயம் உண்மையில் குறுகியது; அந்த விஷயம் இதுதான் : இப்போதே நமது மசோதாவை முஸ்லீம் களுக்குப் பயன்படுத்த வேண்டுமா? இந்து சட்டத் தொகுப்பு மசோதா இந்துக்களுக்குப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுத் தயாரிக்கப் பட்டதாகும்.

*திரு. ஜே.ஆர். கபூர் : இந்துக்களல்லாதவர்களுக்காகவும்.*

*டாக்டர் அம்பேத்கர்: இவ்வகையான சட்டத்தை இயற்றும் போது, ஒரு முன்நிபந்தனையாக அவசியமான ஒரு குறிப்பிட்ட நடைமுறையை நாங்கள் பின்பற்றுகிறோம். சமூக சட்டங்களை இயற்றும்போது அரசாங்கம் ஒரு மரபுநெறியைக் கட்டாயமாகப் பின்பற்றுகிறது; மேற்கொள்ளப்படும் எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்திலும் பாதிக்கப்படக்கூடிய மக்களை அந்த சட்டம் இயற்றப் படுவதற்கு முன்னர் கலந்தாலோசிப்பதே அந்த மரபுநெறி. இந்த மசோதா சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டதை உறுப் பினர்கள் அறிவார்கள்; மாகாணம் மாகாணமாக, மாநிலம் மாநில மாக அது சுற்றுப்பயணம் செய்தது; இந்த மசோதா குறித்த கருத்தறிய ஒவ்வொரு பிரிவினர், ஒவ்வொரு சமூகத்தினர், தனி நபர்கள், ஸ்தாபன ரீதியாக தங்களை இணைத்துக் கொண்டுள்ள மக்கள் போன்றோரிடமிருந்து சாட்சியங்களைப் பெற்றது. ஒருதார மணம் சம்பந்தமாக சட்டம் இயற்றப் போகிறோம், இந்துக்களைப் பொறுத்த வரையில் விவாகரத்துச் சட்டத்தைத் திருத்தப் போகிறோம், இன்னின்ன ஷரத்துகளை அவர்கள் விஷயத்தில் நடைமுறைப் படுத்தப்போகிறோம், இதைப்பற்றி எல்லாம் நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று எந்த ஒரு குழுவோ அல்லது அரசாங்கமோ - எச்சமயத்திலும் முஸ்லீம்களைக் கலந்தாலோசித்ததாக எவரும் கூறமுடியாது. இத்தகைய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் பட்டதாக யாரும் கூற இயலாது. அத்தகைய நடவடிக்கை எதுவும் ஒருபோதும் எடுக்கப்படவில்லை. முன்கூட்டியே முஸ்லீம்களை கலந்தாலோசிக்காமல் அத்தகைய சமூகத்தினரை இத்தகைய சட்டப் பிரிவுக்கு உட்படுத்துவது பெரிதும் விவேகமற்ற நடவடிக்கை மட்டுமல்லாது, மிகவும் கொடுங்கோன்மையான ஓர் அரசியல் நடவடிக்கை எனவும் கருதுகிறேன்.*

*பண்டிட் மைத்ரா: இதை ஏன் நீங்கள் முன்கூட்டியே செய்ய வில்லை?*

*டாக்டர் அம்பேத்கர் : இந்து சமூகம் போன்ற சில சமூகங் களுக்கு சீர்திருத்தம் மிகவும் அவசர அவசியமாகத் தேவை செய்யப் பட்டதே நாங்கள் இதைச் செய்யாததற்குக் காரணம் - இது ஒரு வகையான சேரி சுத்திகரிப்பு போன்றது.*

*பண்டிட் மைத்ரா : இல்லை, இதைச் செய்வதற்கு உங்க ளுக்குத் தைரியமில்லை. அதுதான் உண்மை.*

டாக்டர் அம்பேத்கர் : இது சேரி சீர்திருத்தம் போன்றது.

திரு. சியாம்நந்தன் சகாயா: சீக்கிய சமூகத்தினரைக் கலந் தாலோசித்தீர்களா?

டாக்டர் அம்பேத்கர் : ஓ, ஆம். அதைப் பற்றிச் சொல்லு கிறேன். பொறுமை இழக்காதீர்கள், அவர்களைக் கலந்தாலோ சித்தேன். நீங்கள் தவறே செய்வதில்லையா?

திரு. பாட்: நாடாளுமன்றம் விரும்பினால் முஸ்லீம்கள், கிறித்தவர்களின் அபிப்பிராயங்கள் இனிமேலாவது பெறப்படுமா, இல்லையா என்பதை மாண்புமிகு ராஜாங்க அமைச்சர் தெரிவிப் பாரா? இதற்கு என்ன தடங்கல் இருக்கிறது?

டாக்டர் அம்பேத்கர் : தடங்கல் என்னவென்றால் மேஜை மீது சாப்பாடு பரிமாறப்பட்டிருக்கிறது. நாம் இப்போது சாப்பிட ஆரம்பிப்போம். மற்றவர்களை அழைப்பதற்கு நேரமாகும். அதே சமயம் மற்றவர்களுக்குப் பரிமாறுமளவுக்கு நம்மிடம் உணவு இல்லை.

மாண்புமிகு அவைத் தலைவர்: விவாதம் நெடுகிலும் மதிப் பிற்குரிய உறுப்பினர்கள் தொடர்ந்து குறுக்கீடு செய்து கொண் டிருப்பதை நான் விரும்பவில்லை.

திரு. சியாம்நந்தன் சகாயா : மசோதாவை எதிர்ப்பவர் களுக்கு எதிராக மாண்புமிகு அமைச்சர் இத்தகைய அவதூறுகளைப் பொழிந்தால் அவர் பேசும்போது குறுக்கிடுவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

திரு. சியாம்நந்தன் சகாயா : இவ்வாறு அவர் தொடர்ந்து நடந்துகொண்டால் நிலைமை மிகவும் மோசமாகக் கூடும்.

டாக்டர் அம்பேத்கர் : என் கருத்தைத் தெரிவிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

*திரு. ஆர்.கே. சௌதுரி:* அமைச்சரை அமரும்படி நீங்கள் ஏன் கூறக்கூடாது?

*மாண்புமிகு அவைத் தலைவர் :* இதற்கு என்ன அர்த்தம்? கூச்சல் பொறுக்க முடியவில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

*திரு. ஆர்.கே. சௌதுரி :* மாண்புமிகு அமைச்சர் அமர மறுக்கிறார். அது என்ன ஒழுங்கா? நீங்கள் எங்களைத்தான் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள், மற்றவர்களை அல்ல.

*டாக்டர் அம்பேத்கர்:* என் அபிப்பிராயம் என்னவெனில் (குறுக்கீடுகள்).

*சர்தார் பி.எஸ். மான்:* அவரது எதிருரையைப் பெருந் தன்மையோடு சகித்துக் கொள்கிறோம். அவரது பேச்சு இன்று எங்களுக்குப் பெரிதும் வெறுப்பூட்டுவதாக உள்ளது.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

*மாண்புமிகு அவைத் தலைவர் :* நான் சொல்லக் கூடியதெல்லாம் அமைச்சரின் கூற்று யாரைக் குறிக்கிறதோ அந்த உறுப்பினர்களைப் பதில் சொல்ல மற்ற உறுப்பினர்கள் விட்டு விடுவதே நல்லது.

*டாக்டர் அம்பேத்கர் :* எனது கருத்து இதுதான். முஸ்லீம்களைத் தவிர்த்து மற்றவர்கள் எல்லாம் இந்தியர்கள் என்று கூறுவதில் சர்ச்சை ஏதும் இருக்காது என்று நினைக்கிறேன்.

*திரு. சோந்தி (பஞ்சாப்) :* அவர்கள் எல்லாம் இந்தியர்கள் அல்ல. அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* என் இஷ்டப்படிச் சொல்லவிடுங்கள். ஏனென்றால் சரியான தகுதியான வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை. முஸ்லீம்கள் அல்லாதவர்களாகிய நாம் ஓர் ஒன்றுபட்ட குடும்பத்தினர் அல்ல. எதார்த்தமற்ற ஓர் கண்ணோட்டத்தை மேற்கொண்டு நாம் எல்லோரும் ஒன்றே என்ற நிலையைக் கைக்

கொள்வது விரும்பத்தக்கது என்று நான் கருதவில்லை. நாம் அனைவரும் ஒன்றல்ல. ஆனால் கூடிய மட்டும் நாம் அனைவரும் ஒன்றுபட நாம் முயற்சிக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன்; எப்போது பார்த்தாலும் வேற்றுமை விதைகளை விதைப்பதில் நாம் ஈடுபடக் கூடாது. ஒன்றுபடுத்தும் இயல்புள்ள எந்த ஒரு விஷயமும் அவையின் முன் வரும்போது, ஒருவர் எழுந்து ''நாங்கள் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களல்ல, இந்த சட்டத்திற்கு எங்களை உட்படுத்திக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை'' என்று கூறுகிறார்....

*சர்தார் ஹுக்கம் சிங் (பஞ்சாப்):* யார் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாக இருப்பார்கள் என்று கூறும் ஒரு பிரகடனத்தை குடியரசுத் தலைவர் வெளியிட்டபோது நீங்கள் ஏன் அவருக்கு மேல் முறையீடு செய்யவில்லை? அவர்தான் அந்த வேறுபாட்டைக் குறிப்பிட்டிருக்கிறார்.

*டாக்டர் அம்பேத்கர் :* அவர் தம்முடைய பரந்த மனோ பாவம் காரணமாக இதைச் செய்திருக்கலாம், என்ன நடந்தது என்பதை நினைவுகூர்ந்து பாருங்கள்.

அப்போது நடந்ததை நான் விரும்பவில்லை. எப்படியும் நாம் ஒன்றுபடுவதற்கு நாம் அனைவரும் மிகவும் உளப்பூர்வமான முயற்சி மேற்கொண்டிருக்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் தமக்கே உரிய சமய நம்பிக்கைகளைக் கொண்டிருக்கலாம். ஒருவர் கடவுளை நம்பக்கூடும்; இன்னொருவர் ஆன்மாவை நம்பக்கூடும். இவை எல்லாம் ஆன்மீக விஷயங்கள். எனினும் நமது ஆன்மீக நம்பிக்கைகளைப் பொறுத்தவரையில் நம்மிடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும் நமது பரஸ்பர உறவுகளால் பிணைந்திருக்க வழிவகை செய்யும் ஒரே விதமான சட்டமுறைமையை உருவாக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

*சர்தார் ஹுக்கம் சிங்:* இது உங்களிடமிருந்து தொடங்கக் கூடாதா?

*டாக்டர் அம்பேத்கர் :* எப்போது பார்த்தாலும் ஏன் பின்வருமாறு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்: ''நான் வேறு மாதிரியானவன். இது எனக்குப் பொருந்தாது, அது எனக்குப் பொருந்தாது. எனவே, உங்கள் சட்டம் என்னைக் கட்டுப்படுத்தும்படிச் செய்யாதீர்கள்.'' இதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன்.

**திரு. ஏ.சி. சுக்லா :** இயல்பு மாறுபடுகிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த விஷயத்தில் சீக்கியர்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதுதான் மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் சர்தார் மானின் குற்றச்சாட்டின் சாரம். இதற்கு எனது பதில் இருவகைப்பட்டது. சீக்கியர்கள் சீக்கியர்கள் என்ற முறையில் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றால் அவர்களைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை என்பது என் வாதம்....

**சர்தார் பி.எஸ். மான் :** ஓ!

**டாக்டர் அம்பேத்கர் :** தயவு செய்து என்னைத் தொடர்ந்து பேச அனுமதியுங்கள்.

... ஏனென்றால் சட்ட விஷயங்களைப் பொறுத்தவரையில் சீக்கியர்கள் இந்துக்களே என்று சட்டம் நீண்ட நெடுங்காலமாகவே பாவித்து வந்தள்ளது. முல்லாவின் இந்து சட்டத்தை நான் படித்திருக்கிறேன். அது கையடக்கமான ஒரு தொகுப்பு நூல். அதன் பொருளடக்க அட்டவணையை என் நண்பர் பார்த்தாரேயானால் இந்து சட்டத்தைத் திருத்துவதற்கு இந்த நாட்டின் சட்டமன்றங்கள் எத்தனை எத்தனையோ சட்டங்கள் இயற்றியிருப்பதைக் காண்பார். ஆனால் இந்து சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு இந்த நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் எது சம்பந்தமாகவாவது சீக்கியர்கள் கலந்தாலோசிக்கப்பட்டதையோ அல்லது சீக்கியர்கள் விடப்பட்டுப் போனதையோ நண்பர் எனக்குச் சுட்டிக் காட்டுவாரா?

**சர்தார் ஹுக்கம் சிங்கம்:** ஏனென்றால் அங்கு வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** இத்தகைய கலந்தாலோசனை நடைபெற்ற நிகழ்ச்சி எதையும் நான் காணவில்லை. இந்து சட்டத்தைத் திருத்த ஒரு சட்டம் நிறைவேற்றப்படும்போதெல்லாம் ''இந்து'' என்னும் சொல்லின் சட்டப்படியான பொருளின் கீழ்வரும் அனைவருக்கும் அது பொருந்தக்கூடியதாக இருக்கும்.

**பண்டிட் மைத்ரா :** அப்படியானால் அதை இங்கு கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன?

டாக்டர் அம்பேத்கர் : ஏனென்றால் உங்களைப் போன்றவர்கள் சந்தேகிக்கக்கூடும் என்பதற்காகத்தான்.

இப்போது பிரச்சினையின் அடுத்த பகுதிக்கு வருகிறேன். சீக்கியர்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது. உண்மைக்குப் புறம்பானது என்பதை மெய்ப்பிக்க விரும்புகிறேன். ராவ் குழு பல்வேறு இடங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தது; அவ்வாறே லாகூருக்கும் சென்றது; அங்கு பலரது கருத்துகளைக் கேட்டறிந்தது. இதன் பேரில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. ராவ் குழுவின் அந்த அறிக்கையை ஆராய்ந்தேன். குழுவின்முன் பின்வருபவர்கள் தோன்றியதை அல்லது அறிக்கைகள் சமர்ப்பித்ததைத் தெரிந்து கொண்டேன். இவர்களில் லாகூர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி தேஜா சிங்கை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாப் உயர்நீதிமன்றத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் ராவ் குழுவிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். அந்த அறிக்கை முழுவதை மிக உன்னிப்பாகப் படித்துப் பார்த்தேன். இந்த சட்டம் சீக்கியர்களுக்குப் பயன்படுத்தப்படக் கூடாது என்று நீதிபதி தேஜா சிங் அந்த அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. சீக்கிய சமூகத்தின் சார்பில் பேசுவதற்கு நீதிபதி தேஜா சிங்குக்கு ஓரளவு உரிமை இருக்கிறது என்பதை என்னுடைய நண்பர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதை நானறியேன்.

ஆவணங்களில் மற்றொரு கனவானின் பெயர் காணப்படுகிறது; அவர் பெயர் சர்தார் வர்யாம் சிங். அவர் அகாலி தர்பாரின் பிரதிநிதி. இந்த மசோதாவை சீக்கியர் விஷயத்தில் பயன்படுத்தக் கூடாது என்று அவர் கூறினார்; ஏனென்றால் சீக்கியர்கள் முற்போக்கு மனோபாவம் படைத்தவர்கள் என்று அவர் வாதிட்டார்.

சர்தார் ஹுக்கம் சிங் : யார் இந்தக் கனவான்? அவரைப் பற்றி ஏதேனும் விவரங்கள் இருக்கின்றனவா?

டாக்டர் அம்பேத்கர்: அகாலி தர்பாரின் செயலாளர் - ஆவணங்களில் இவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராவ் குழுவின் முன்னர் சாட்சியம் அளித்த மற்றொருவர் சர்தார் இக்பால் சிங். அவர் ஓர் வழக்கறிஞர். அவர் தமது சொந்த முறையிலேயே வந்து சாட்சியம் அளித்தார்.

*(மாண்புமிகு துணை சபாநாயகர் அவைத் தலைவர் பீடத்தில் அமர்கிறார்.)*

***சர்தார் பி.எஸ். மான் :*** *அவர் என்ன கூறியிருக்கிறார்?*

***டாக்டர் அம்பேத்கர் :*** *அவர் எதுவும் கூறவில்லை.*

***சர்தார் ஹுக்கம் சிங்:*** *அப்படியானால் அவரது அறிக்கையைத் தாராளமாக மேற்கோள் காட்டலாம்.*

***மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:*** *அவரது அறிக்கையைப் படிக்கட்டும்.*

***டாக்டர் அம்பேத்கர் :*** *இதோ இருக்கிறது அவர் அறிக்கை. நீங்கள் பெற விரும்பும் முழுத் தகவலையும் பெறலாம். இந்தச் சட்டத்தை சீக்கியர்களுக்குப் பயன்படுத்துவதற்கு எதிராக அவர் எதுவும் கூறவில்லை.*

*பின்னர், தற்போது பஞ்சாப் உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள சர்தார் ஹர்நாம் சிங் நேரில் வந்து, சீக்கியர் என்ற முறையின்றி வழக்கறிஞர் கழகத்தின் ஒரு பிரதிநிதி என்ற முறையில் சாட்சியம் அளித்தார். அப்போது, இந்த சட்டம் சீக்கியர்கள் விஷயத்தில் பயன்படுத்தப்படக்கூடாது என்பது போன்ற பிரச்சினை எதையும் அவர் எழுப்பவில்லை.*

***சர்தார் ஹுக்கம் சிங்:*** *ஆனால் இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றி அவரது கருத்து என்ன?*

***டாக்டர் அம்பேத்கர்:*** *அதை அவர் எதிர்க்கவில்லை. இப்போது நான் அவசியம் குறிப்பிட வேண்டிய ஒரு விஷயத்துக்கு வருகிறேன். ராவ் குழுவின் விசாரணை முடிவடைந்ததும், அரசாங்கம் ஒரு வாக்குறுதி அளித்தது: அதாவது பல்வேறு மாகாண அரசாங்கங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி இந்த மசோதா குறித்து அவற்றின் கருத்து பெறப்படும் என்றும் அது தெரிவித்தது. இந்தச் சுற்றறிக்கை பஞ்சாப்புக்கும் அனுப்பப்பட்டது.*

***திரு. சோந்தி :*** *பிரிவினைக்கு முன்னரா?*

டாக்டர் அம்பேத்கர்: இல்லை, ஏனென்றால் பிரிவினைக்குப் பின்னர்தான் கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பப் பட்டது. கிழக்குப் பஞ்சாப் அரசாங்கத்தின் உள்துறைச் செயலாளர் இந்திய அரசாங்கத்தின் சட்ட இலாகா செயலாளருக்கு எழுதிய கடிதத்தின் சாராம்சத்தை இங்கு தருகிறேன். 1947 அக்டோபர் 3ஆம் தேதியிட்ட 211ஆம் எண் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப் பட்டிருந்தது:

> ''மாண்புமிகு நீதிபதிகளின் கருத்துகள் அடங்கிய கடிதத்தின் ஒரு நகலை அனுப்பும்படி லாகூர் உயர்நீதிமன்றப் பதிவாளரிட மிருந்து எனக்கு தாக்கீது வந்தது. ஆணையர்கள், துணை ஆணையர்கள், உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம், ஐந்து வட்டார தலைமையகங்கள், இந்து மற்றும் சீக்கியர்களின் கருத்துகளைப் பிரதிபலிப்பதாக நம்பப்படும் தெரிந்தெடுக்கப் பட்ட ஒன்பது அலுவல் சார்பற்ற அமைப்புகள் முதலியவற் றுக்கும் அவற்றின் கருத்துகளைத் தெரிவிக்கும்படி பஞ்சாப் அரசாங்கம் கேட்டுக்கொண்டது. இவர்களில் ஒருவர் மட்டும் அதாவது சனாதன தர்ம பிரதிநிதி, லாகூர் பதிலனுப்பி இருந்தார்.

இவற்றை எல்லாம் பார்த்த பிறகு சீக்கிய சமூகத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்று மதிப்பிற்குரிய என் நண்பர் கூறுவார் என்று நான் நினைக்க வில்லை. கலந்தாலோசிக்கப்பட்ட ஏழு பேரில் ஆறு பேர் அதனை எதிர்த்தனர் என்றும் மதிப்பிற்குரிய என் நண்பர் கூறினார். இதுகுறித்து அவர் இன்னும் அதிகம் தெரிந்திருக்கக்கூடும். எனினும் இங்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். மதிப்பிற்குரிய என் நண்பர் பேசுவதற்கு முன்னர் அவருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண் டிருந்தேன். ஆனந்த் திருமணத்தைப் பற்றி அதாவது வழக்க முறையான சடங்குகள் பற்றிப் பெரிதும் அக்கறை கொண்டிருப் பதாக அப்போது அவர் என்னிடம் தெரிவித்தார். இந்த மசோதாவை நாங்கள் நிறைவேற்றினாலும், சீக்கியர்கள் தங்கள் திருமண வினைமுறைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு சட்டமன்றம் நிறைவேற்றிய ஆனந்த் திருமணச் சட்டத்தை நாங்கள் ரத்து செய்ய மாட்டோம் என்று நான் அவரிடம் கூறினேன்; இதில் அவர் முழுத் திருப்தியடைந்தார் என்றே நினைத்தேன். ஆனால் தமது உள்ளத்தில் அடைப்பட்டுக் கிடந்த உணர்ச்சிகளை இப்போது அவர் வெளியிடுவதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கக்கூடும்.

மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் நீதிபதி டாக்டர் பக்ஷி தேக்சந்த் வழக்கில் ஒரு தீர்ப்பை வாசித்துக் காட்டினார். அது காபூல் சிங் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, இந்த வழக்கின் விவரங்களையும் அதற்கான காரணங்களையும் ஆழமாக ஆராய்ந்தேன். ஒரு ஜாட் சீக்கியருக்கும் மழாபி பெண்ணுக்கும் நடைபெற்ற திருமணம் செல்லத்தக்கதா, இல்லையா என்பதுதான் சர்ச்சைக்குள்ளான ஒரே விஷயம். இது சட்டபூர்வமான திருமணம் அல்ல, ஏனென்றால் ஜாட் உயர் வகுப்பைச் சேர்ந்தவன்; பெண்ணோ கீழ் சாதியைச் சேர்ந்தவள், கலப்புத் திருமணங்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று வாதிக்கப்பட்டது. நீதிபதி தேக்சந்த் வேறுவிதமாக வாதிட்டார்; ஜாட்டுகள் சூத்திரர்கள், திரய்வாரணிக்குப் பிரயோகிக்கப்படும் விதி சூத்திரர்களுக்குப் பொருந்தாது, மேலும் தீண்டப்படாதவர்கள் சாஸ்திரங்களில் சூத்திரர்களாகப் பாவிக்கப்படுகின்றனர்; எனவே, இந்தத் திருமணம் செல்லத்தக்கதுதான் என்று கூறினார்.

**சர்தார் பி.எஸ். மான் :** தீண்டப்படாதவனுக்கும் சூத்திரனுக்கும் இடையே வேறுபாடிருக்கிறது.

**டாக்டர் அம்பேத்கர் :** ஆனால் இது நீதிமன்றத்தின் தீர்ப்பு, என் அருமை நண்பரே. நீதிமன்றங்கள் இருவரையுமே சூத்திரர்களாக பாவித்துள்ளன. இதில் தனிச் சிறப்பு இருக்கிறது என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.

என் மதிப்பிற்குரிய நண்பர் நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரே விஷயம் சீக்கியர்கள் முற்போக்காளர்கள், அவர்கள் ஜாதி முறையைப் பின்பற்றுவதில்லை என்பதாகும். இந்த அடிப்படையில் அவர் இதனை வரவேற்க வேண்டும்; ஏனென்றால் ஜாதிக் கொடுமையை அறவே ஒழித்துக்கட்ட நாம் கங்கணம் கட்டியுள்ளோம். எனவே, சீக்கிய சமூகத்தில் நடைபெற்று வருவதற்கு இது எவ்வகையிலும் முரண்பாடானதல்ல.

**சர்தார் ஹுக்கம் சிங்:** நாங்கள் வெகுதூரம் முன்னேறிய கட்டத்தில் இருக்கிறோம். தயை கூர்ந்து எங்களைப் பின்னுக்கு இழுத்துவிடாதீர்கள்.

**டாக்டர் அம்பேத்கர்:** முன்னேற்றம் என்பது குறித்துப் பல்வேறு மக்களுக்கும் பல்வேறு கண்ணோட்டங்கள் இருக்கின்றன. இது விஷயத்தில் எனக்கும் என் சொந்தக் கண்ணோட்டங்கள் உண்டு.

முன்னேற்றம் என்பது சட்டம் இன்மை, அராஜகம் முதலியவற்றை யும் கூடக் குறிக்கும் - அதுவும் நிகழலாம். பல்வேறு உறுப்பினர்கள் தங்களது திருத்தங்கள் குறித்து எழுப்பிய எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டுவிட்டேன் என்று நினைக்கிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா :** விவாகரத்து வழக்குகளை முடிவு செய்யும் பொறுப்பு ஜாதி பஞ்சாயத்துக்களிடம் விட்டுவிட வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஜாதி அமைப்பு முறையை நீங்கள் நிரந்தரமாக்கவில்லையா?

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த விஷயத்துக்கு இன்னும் நாம் வராதபோது அதைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? அந்தப் பிரச்சினைக்கு இன்னும் நாம் வரவில்லை. அது பற்றிப் பிறகு பார்ப்போம். மதிப் பிற்குரிய உறுப்பினர்கள் பிரேரேபித்த திருத்தங்கள் சம்பந்தமாக என் கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்தேன்; அவற்றில் எதையும் நான் ஏற்க இயலாததற்கான காரணங்களையும் சவிஸ்தாரமாக விளக்கினேன். நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் ஒரே திருத்தம் பக்ஷி தேக்சந்த் முன்மொழிந்த திருத்தமாகும்; ''உறுப் பினர்கள்'' என்பதற்குப் பதில் ''பின்பற்றி நடப்பவர்கள்'' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்பதே அந்தத் திருத்தம்.

**திரு. நசிருத்தீன் அகமது:** விவாதத்தின்போது டாக்டர் அம்பேத்கர் உரையில் புகுந்துவிட்ட ஒரு தவறைத் திருத்த எனக்குத் தங்களது அனுமதி கிடைக்குமா? (குறுக்கீடு)

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் ஏதேனும் தவறு செய்தால் அதைத் திருத்திக் கொள்வது அவரது பொறுப்பு. மதிப்பிற் குரிய உறுப்பினர் அந்தத் தவறை எனக்குச் சுட்டிக்காட்டலாம். இதுகுறித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. அவர் தமது உரையில் என்ன கூறியபோதிலும் இவ்வகையான விதிவிலக்கை மேற்கொள்ளலாம். ஆனால் உரைகளைத் திருத்திய வண்ணம் இருப்பது நமது பணியல்ல.

அவையில் ஏராளமான திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட் டுள்ளன. தாங்கள் என்ன திருத்தங்களை முன்மொழிந்தோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களேகூட மறந்திருக்கக்கூடும். எனவே, இந்தத் திருத்தங்களை சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு ஏற்பவும், சட்டக் கூறுகளுக்கு ஏற்பவும் இனவாரியாகப் பிரித்து வைத்திருக்கிறேன்.

**பணித்துறை, உற்பத்தித் துறை மற்றும் வழங்கீட்டுத் துறை அமைச்சர் (திரு. காட்கில்) :** இந்தச் சட்டக்கூறுக்கு மாண்புமிகு அமைச்சரே பிரேரேபித்துள்ள இரண்டு திருத்தங்கள் உள்ளன.

**டாக்டர் அம்பேத்கர் :** இரண்டு திருத்தங்கள் மட்டும்தான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அனைத்துத் திருத்தங் களையும் இங்கு குறிப்பிடுகிறேன். மாண்புமிகு அமைச்சரே முன் மொழிந்துள்ள திருத்தங்களும் டாக்டர் தேக் சந்த் பெயரிலுள்ள, மாண்புமிகு அமைச்சர் ஏற்கத் தயாராக இருக்கும் திருத்தங்களும் உள்ளன என்பதை மனத்திற் கொள்ள வேண்டும். எந்தெந்த திருத் தங்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பதைத் துல்லியமாக அவைக்கு அறிவிப்பது எனது கடமை. அவை உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலுமுள்ள திருத் தங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்கிறேன். முதலில் பின்கண்ட பிரிவை எடுத்துக் கொள்கிறேன்: ''அனைத்து இந்தியர் களுக்கும் பொருந்தச் செய்தல்'' அதாவது இந்துக்களுக்கு மட்டு மன்றி இந்த மசோதாவின் செயல்பாட்டின் கீழ் வரும் பௌத்தர்கள், ஜைனர்கள், இந்துக்களல்லாதவர்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் முதலியோர் விஷயத்தில் பயன்படுத்துதல்

திருத்தம் இதுதான்.

கூறு 2க்குப் பின்கண்டதை மாற்றீடு செய்க:

''2. **சட்டத் தொகுப்பைப் பொருந்துறச் செய்தல்** - (1) இந்த சட்டத் தொகுப்பு எல்லா இந்துக்களுக்கும் பொருந்தும்.

2) இந்த சட்டத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ''இந்து'' என்ற பதப்பிரயோகம் வேறு விதமாக வகை செய்யப்பட் டிருந்தாலன்றி இந்தியாவின் ஒரு குடிமகனைக் குறிக்கும்.

3) சிறப்பு திருமணச் சட்டம் 1872ல் (1872-ன் III) என்ன அடங்கியிருந்த போதிலும் அந்த சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளபடி இந்துக்களுக்குப் பொருந்தும்; ஆனால் இவர்களுடைய திருமணங்கள் இந்தச் சட்டத் தொகுப்பு

அமலுக்கு வருவதற்கு முன்பிருந்த சட்டத்தின் வகையங்களின் படி நடைபெற்றிருக்கலாகாது.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2க்கு பின்கண்டதை மாற்றீடு செய்க:

''இந்தச் சட்டத்தொகுப்பு எல்லா இந்தியர்களுக்கும் அவர்களது சமயம், சாதி, கோட்பாடு எவ்வாறு இருந்தபோதிலும் பொருந்தும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** கூறு 2க்கு மாற்றீடு செய்ய திரு. ஜுன்ஜுன்வாலா கொடுத்திருக்கும் திருத்தம் நிராகரிக்கப் படுகிறது; ஏனென்றால் இது குறித்து அவை ஏற்கெனவே முடிவு செய்துள்ளது.

அடுத்து, மற்ற திருத்தத்துக்கு வருகிறேன்: இந்த சட்டத் தொகுப்பு சாற்றுகை செய்வோருக்கு மட்டும்தான் பொருந்தும்; அப்போதும்கூட அறிவிக்கப்பட்ட பகுதிகள் பொருந்துறுதல் வேண்டும்.

திருத்தம் வருமாறு :

கூறு 2க்கு பின்கண்டதை மாற்றீடு செய்க:

''**2. சட்டத் தொகுப்பைப் பொருந்துறச் செய்தல்** - இந்த சட்டத் தொகுப்பு அல்லது அதன் எந்தப் பகுதி அல்லது பகுதிகள் பாரத் எனப்படும் இந்தியாவின் அனைத்துப் பிரஜைகளுக்கும் பொருந்துறும்; இவர்கள் உரிய வயது வந்த பிறகு, தாங்கள் இந்தச் சட்டத்தொகுப்புக்கு அல்லது அதன் எந்தப் பகுதிக்கு அல்லது பகுதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வோம் என்று எழுத்துப்பூர்வமாக சாற்றுகை செய்ய வேண்டும். அந்த சாற்றுகையை மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள விதிமுறைக்கு இணங்கப் பதிவு செய்ய வேண்டும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திரு. ஜே.ஆர். கபூரின் அடுத்த இரண்டு திருத்தங்களும் சற்றுமுன்னர் நிராகரிக்கப்பட்ட திருத்தத்தைப் போன்றே உள்ளன. எனவே அவையும் நிராகரிக்கப் பட்டதாகக் கருதப்பட வேண்டும். அடுத்து, மற்றொரு திருத்தம் வருமாறு :

கூறு 2க்கு பிரேரேபிக்கப்பட்டுள்ள வரம்புரையில் ''இத்தகைய நபர்கள் அன்றி'' என்று தொடங்கி முடியும் வரையுள்ள சொற் களுக்குப் பதில் பின்கண்டவற்றை மாற்றீடு செய்க:

> ''இத்தகைய நபர் உரிய வயது வந்த பிறகு இந்த சட்டத் தொகுப்புக்கு தான் கட்டுப்பட்டு நடப்பதாக எழுத்துமூலமாக சாற்றி, அந்த சாற்றுகையை மத்திய அரசாங்கம் நிர்ணயித் துள்ள விதிமுறைகளுக்கு இணங்கப் பதிவு செய்ய வேண்டும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 உடன் பின்கண்ட வரம்புரையை இணைக்கவும் :

''எது எவ்வாறு இருப்பினும் மேலே கூறிய சட்டக் கூறுகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், ஒருவருக்கு இந்த சட்டத் தொகுப்புப் பொருந்துற வேண்டுமானால் அவர் இந்த சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள், அவர் உரிய வயது வராதவராக இருந்தால் அந்த இளவர் உரிய வயதுக்கு வந்த பிறகு ஓராண்டுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் நாடாளுமன்றம் வகுத்துரைக்கும் முறையில் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் இதுதான் :

''திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை முதலியவை சம்பந்தப் பட்ட வகையங்கள் எவர் ஒருவருக்கும் பொருந்துற வேண்டுமெனில் அத்தயைவர் உரிய வயது வந்த பிறகு மேலே கூறிய வகையங் களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக எழுத்து மூலமாக சாற்றுதல் செய்து மத்திய அரசாங்கம் வகுத்துத் தந்துள்ள விதிமுறைகளின் படி அத்தகைய சாற்றுதலைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும், திருமணத்திற்கு முன்னர் மணமகனும் மணமகளும் அல்லது திருமணத்திற்குப் பின்னர் கணவனும் மனைவியும் இத்தகைய சாற்றுதலை செய்ய வேண்டும். அத்தகைய சாற்றுதலைச் செய்வோருக்குத்தான் திருமணம், விவாகரத்து சம்பந்தப்பட்ட பாகம் II-ன் வகையங்கள் பொருந்துவனவாகும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

திரு. ஜே.ஆர். கபூர்: மாறிய சூழ்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு எனது 97 மற்றும் 272 ஆம் எண் திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள அவையின் அனுமதியை வேண்டுகிறேன். எனினும், இந்தப் பாகத்தைப் பற்றித் துல்லியமாகத் தெரிந்த பிறகு, திருமணம், விவாகரத்து குறித்து இந்த அத்தியாயம் முழுவதையும் பரிசீலித்த பிறகு பிந்தைய கட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அவையின் அனுமதியோடு திருத்தங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு துணை சபாநாயகர்: அடுத்து, திரு.ஜே.ஆர். கபூர் பெயரில் 336 ஆம் எண் திருத்தம் உள்ளது. இந்தத் திருத்தத்தை அவர் வலியுறுத்துகிறாரா?

திரு.ஜே.ஆர். கபூர்: ஆம், ஐயா, மாண்புமிகு சட்ட அமைச்சர் அதனைப் பரிசீலிப்பார் என்றும், அதன் அடிப்படைக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வார் என்றும் நம்புகிறேன். இல்லையென்றால் அவர் எதை செயல்படுத்த விரும்புகிறாரோ அதைச் செயல்படுத்துவது கடினமாகிவிடும்.

மாண்புமிகு துணை சபாநாயகர்: இந்தக் கட்டத்தில் என் கருத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கான எல்லா முயற்சியும் ஏற்கெனவே செய்யப்பட்டு விட்டது.

திருத்தம் இதுதான் :

''மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கூறுகளுக்குப் பிரேரேபித்துள்ள 3ஆம் எண் திருத்தத்தில் பாகம் (1)க்குப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும்:

''துணைக் கூறு (3) (1A) ல் ''வகையங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதில் ''எந்த அல்லது மேலும் அதிக வகையங்கள்'' என்னும் சொற்களை மாற்றீடு செய்யவும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்போது மற்றொரு விஷயத்தை எடுத்துக் கொள்கிறேன் - அதாவது மக்கள் வகைப் பிரிவுகளைச் சேர்த்தல் அல்லது விலக்கல்.

திருத்தம் இதுதான் :

''மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கூறு 2 உப கூறு (1)க்கு பிரேரேபித்துள்ள 3ஆம் எண் திருத்தத்தில் பாகம் (1) (ii)ல் ''சீக்கிய மதம்'' என்பதற்குப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும் :

''அல்லது முஸ்லீம், கிறிஸ்துவ, பார்சி அல்லது யூத சமயத்தைத் தவிர வேறு எந்த மதத்துக்கும் அல்லது சமயக் கோட்பாட்டுக்கும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 உபகூறு 1-ன் (D) பகுதியின் இறுதியில் பின்கண்டதைச் சேர்க்கவும் :

''அவரது மதமாற்றத்துக்கு முன்னர் அவருடைய உரிமைகளுக்கும் கடமைப் பொறுப்புகளுக்கும் உட்பட்டு''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 உபகூறு (1)ன் பகுதி (d) க்குப் பிறகு பின்வருவதைச் சேர்க்கவும் :

''(e) தனது வாழ்நாள் காலத்தில் பௌத்தம், ஜைனம், சீக்கிய மதம் அல்லது இந்து சமயத்திலிருந்து மதம் மாறிய முஸ்லீம் அல்லது கிறித்தவருக்கு.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 உபகூறு (1) பகுதி (6)ல் "ஜைனர் அல்லது சீக்கியர்" என்பதற்குப் பதில் "அல்லது ஜைனர்" என்பதைச் சேர்க்கவும்."

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தங்கள் எண் 101-ம், 102ம் முந்திய திருத்தங்கள்தான்; அவையால் சற்று முன்னர் நிராகரிக்கப்பட்ட திருத்தங்கள் போன்றே அவை உள்ளன. எனவே அந்தத் திருத்தங்களை நான் ஏற்கவில்லை.

திருத்தம் வருமாறு:

கூறு 2 உப கூறு(1)ன் பகுதி (6)ல் "அல்லது சீக்கியர்" என்பதை நீக்கவும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

உபகூறு(1) பகுதி (i) (c) ல் "முறை கேடாகப் பிறந்த" என்ற சொல்லுக்குப் பிறகு பின்வருவதை சேர்க்கவும் :

"பதினெட்டு வயதை அடைந்ததும் அவனே ஓர் இந்து வாகிறான், மற்றும்"

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

(பிற்பகல் 1 மணி)

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் எண் 277 முந்தைய திருத்தத்தால் அவசியமற்றதாகிறது.

**திரு. ஜே.ஆர். கபூர் :** எனது அடுத்தத் திருத்தம் ஏற்றுக் கொள் வதற்குத் தகுதியானது. மொழி நடையில் அது மேம்பட்டது.

**டாக்டர் அம்பேத்கர்:** எனது மொழி நடையை நான் மேம் படுத்திக் கொள்வேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** அது இலக்கண ரீதியான மாற்றம் மட்டுமே. நிகழ்காலத்தை மட்டுமல்லாமல் கடந்த காலத்தை யும் சேர்த்துக்கொள்ள அது முயல்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** கூறின் சொல்லமைப்பு நிகழ்காலத்தைக் குறிக்கிறது. இதில் வேறுபாடு உள்ளது. இது முறைப்படியான திருத்தம் அல்ல.

திருத்தம் வருமாறு :

கூறு 2 உபகூறு (1) ன் பகுதி (6) (i) ல் ''பெற்றோர்கள் இருக்கிறார்கள்'' என்பதுடன் ''அல்லது இருந்திருக்கிறார்கள்'' என்பதைச் சேர்க்கவும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் எண் 105 இதில் உள்ளடங்கியிருப்பதால் அதனை முன்வைக்க வேண்டியதில்லை.

அடுத்து, திருத்தம் வருமாறு :

கூறு 2 உபகூறு (1)ன் பகுதி (6) (ii) க்குப் பின்னர் பின்வருவதைச் சேர்க்கவும்:

''இத்தகைய பெற்றோர் சார்ந்த சமூகம், குழு அல்லது குடும்பத்தின் ஓர் உறுப்பினராக வளர்ந்து ஆளாக்கப்பட்ட கைவிடப்பட்ட எந்தக் குழந்தைக்கும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

''கூறு 2 உபகூறு (1) பகுதி (6) (ii) க்குப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும்.

"(iii) எந்த அனாதைக் குழந்தைக்கும், கைவிடப்பட்டு அரசால் வளர்த்து ஆளாக்கப்படும் குழந்தைக்கும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 துணைக் கூறு (2)ப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும்:

''2 (A) ஓர் இந்துவையோ, பௌத்தரையோ, ஜைனரையோ அல்லது சீக்கியரையோ திருமணம் செய்து கொண்ட எந்த மதத்தையும் பின்பற்றுகின்ற எப்பொண்ணுக்கும் இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்தும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு துணை சபாநாயகர் : திருத்தம் வருமாறு :

கூறு 2-ன் துணைக் கூறு (2) ஐ நீக்குக.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு துணை சபாநாயகர் : திருத்தம் வருமாறு :

கூறு 2ன் துணைக்கூறு (2)க்கு பின்வருவதை மாற்றீடு செய்க :

"(2) எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் அவருக்கு இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்துறும்; அவர் இதில் சம்பந்தப்பட்ட எந்த விஷயங்கள் சம்பந்தமாகவும் இந்து சட்டத்துக்கு அல்லது அந்தச் சட்டத்தின் பகுதியாக உள்ள வழக்கத்துக்கு அல்லது வழக்காறுக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்."

திருத்தம் நிராகரிக்கப்பட்டது

மாண்புமிகு துணை சபாநாயகர் : திருத்தம் வருமாறு :

கூறு 2 துணைக்கூறு (2)ல் "பார்சி" என்ற சொல்லை அடுத்து "சீக்கியர்" என்ற சொல்லைச் சேர்க்கவும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு துணை சபாநாயகர் : திருத்தம் வருமாறு : கூறு 2 துணைக் கூறு (2)க்கான வரம்புரையில் இறுதியில் வரும் "இந்த விஷயங்கள் சம்பந்தமாக" என்பதற்குப் பதிலாகப் பின்கண்டதை மாற்றீடு செய்க:

"அந்த நபர் தன் விருப்பப்படி தேர்ந்தெடுத்து கொள்ளாத விஷயங்கள் சம்பந்தமாக."

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு துணை சபாநாயகர் : திருத்தம் வருமாறு :

கூறு 2-ன் துணைக்கூறு (1)க்குப் பின்னர் பின்கண்டதைச் சேர்க்கவும்.

"(1A) இந்த சட்டத் தொகுப்பு தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் பொருந்துறாது."

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்: 281 ஆம் எண் திருத்தம் கைவிடப்பட்டது.** சொல்லளவிலான திருத்தங்களுக்கு இப்போது வருகிறேன். டாக்டர் அம்பேத்கர் சமர்ப்பித்த திருத்தம் எண் 3ஐ இப்போது முன்வைக்கிறேன்.

திருத்தம் வருமாறு :

கூறு 2

(1) துணைக்கூறு (1)ல் -

(i) பகுதி (a) ல் ''இந்துக்கள் அதாவது இந்த மதத்தைப் பின்பற்றும் அனைவரும்'' என்பதற்குப் பதில் ''மதரீதியில் இந்துக்களாக உள்ளவர்கள்'' என்ற சொற்களை மாற்றீடு செய்க.''

(ii) பகுதி (d) ல் ''இந்து மதம்'' என்பதற்குப் பதில் ''இந்து, பௌத்த, ஜைன, சீக்கிய சமயம்'' என்ற சொற்களை மாற்றீடு செய்க.

(2) துணைகூறு 4ஐ நீக்குக.

திருத்தம் ஏற்கப்பட்டது.

**திரு. ஆர்.கே. சௌதுரி:** ஐயா, டாக்டர் அம்பேத்கரின் அடுத்த திருத்தத்தை நான் எதிர்க்க விரும்புகிறேன். அவர் தமது வாழ்க்கையிலே மிகப் பெரிய தவறுகளில் ஒன்றை செய்கிறார் என்று கருதுகிறேன்.

**திரு.ஜே.ஆர். கபூர் :** விஷயம் என்ன?

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ''சமூகம் என்பதற்குப் பதில்'' குல மரபுக் குழு அல்லது சமூகம்'' என்பதைப் பயன்படுத்த டாக்டர் அம்பேத்கர் விரும்புகிறார்; அதனை திரு. சௌதுரி எதிர்க்கிறார். ''சமூகம்'' என்பதில் குலமரபுக் குழு உள்ளடங்காது போகுமோ என்பது டாக்டர் அம்பேத்கரின் அச்சம். எனவே, இது வரையறுத்துக் குறிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

திருத்தம் இதுதான் :

டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்துள்ள திருத்தம் எண் 3ல் பகுதி (1) (i) க்குப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும்:

''பகுதி (6) (ii) (ia) ல் ''சமூகம்'' என்பதற்குப் பதிலாக 'குலமரபுக்குழு' அல்லது சமூகம் என மாற்றீடு செய்க.''

திருத்தம் ஏற்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 துணைக்கூறு (1)ன் பகுதி (a)ல் ''இந்துக்கள் அல்லது இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் அனைவரும்'' என்பதற்குப் பதில் ''சமய ரீதியில் இந்துக்களாக இருப்பவர்கள்'' என்பதை மாற்றீடு செய்க.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2 துணைக்கூறு (1) பகுதி (b) க்குப் பதிலாக பின் கண்டதை மாற்றீடு செய்க :

'' (b) சமய ரீதியில் பௌத்தர்கள், ஜைனர்கள் அல்லது சீக்கியர்களாக உள்ள எல்லா நபர்களுக்கும்;''

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

**டாக்டர் தேஷ்முக் (மத்தியப் பிரதேசம்) :** கூறு 2 நிறைவேற்றப் படுவதை நிறுத்திவைக்கத் தாம் விரும்புவதாக மாண்புமிகு டாக்டர் தெரிவித்ததை நான் சுட்டிக்காட்டலாமா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதனை இந்து சட்டத் தொகுப்பு என்று கூறலாமா அல்லது இந்து திருமண மற்றும் விவாகரத்து (திருத்த) சட்டத் தொகுப்பு என்று கூறலாமா என்பது வெறும் பெயரளவிலான மாற்றங்கள் மட்டுமே என்று நான் கூறியபோது மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் இல்லை என நினைக்கிறேன்.

திருத்தம் வருமாறு :

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் பிரேரேபித்து எண் 3 என அச்சிடப்பட்டுள்ள திருத்தம் பின்வருமாறு கூறுகிறது: கூறு 2 துணைக்கூறு (1)க்கு முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங் களில் பாகம் (1) (ii) க்குப் பிறகு பின்கண்டதைச் சேர்க்கவும் :

''(iii) பின்கண்டவாறு ஒரு பகுதியை (e) இணைக்கவும்.

"(e) இந்த சட்டத்தொகுப்பு நடைமுறைக்கு வந்தபிறகு எந்த மதத்துக்கு அல்லது மதக் கோட்பாட்டுக்கு மாறியவருக்கு"

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா முன்மொழிந்த திருத்தம் என்னவாயிற்று?

***பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:*** அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்.

திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** திருத்தம் வருமாறு :

எண் 3 என்று அச்சிடப்பட்டு மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன்மொழிந்துள்ள திருத்தத்தில் கூறு 2க்கு பிரேரேபிக்கப்பட்டுள்ள திருத்தத்தில் பகுதி (1)க்குப் பிறகு பின்வருவதைச் சேர்க்கவும் :

"(1A) துணை கூறு (2)க்கான வரம்புரையின் இறுதியில் "இத்தகைய விஷயங்களிலும்கூட இந்தச் சட்டத் தொகுப்பின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு மத்திய அரசால் நிர்ணயிக்கப் பட்ட முறையில் அவர் தமது சம்மதத்தைத் தெரிவித்தா லன்றி" என்பதைச் சேர்க்கவும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** 'திருத்தம் எண் 93 நிரா கரிக்கப்படுகிறது; ஏனென்றால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட திருத்தத்தை ஒத்ததாக இது இருக்கிறது.

இப்போது திருத்தம் வருமாறு :

கூறு 2-ன் துணைக் கூறு (3)ஐ நீக்குக.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** திருத்தம் எண் 283 முந்தைய திருத்தம் ஒன்றை ஒத்திருப்பதால் அது ஏற்கப்படவில்லை. திரு. ஜஸ்பத் ராய் கபூர் முன்மொழிந்த திருத்தம் எண் 238 என்னவாயிற்று? மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** உங்கள் திருத்தங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

**திரு.ஜே.ஆர். கபூர் :** நான் வருந்துகிறேன், ஐயா. இப்படிப் பட்ட பேச்சு இங்கு தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மதிப்பிற்குரிய உறுப் பினரே விடாது பேசுகிறார். ஏனைய உறுப்பினர்களுடன் சண்டை போடுகிறார்.

**திரு.ஜே.ஆர். கபூர் :** ஐயா, என் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

*திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திரு. கோகுல்பாய் பாட் முன்மொழிந்த திருத்தம் என்னவாயிற்று?

**திரு.பாட் :** என் திருதத்தத்தை திரும்பப் பெற்றுக் கொள் கிறேன். அது தேவையற்றது.

*திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** *அடுத்த திருத்தம் வருமாறு :*

*கூறு 2ன் துணை கூறு(4)ஐ நீக்குக.*

*திருத்தம் நிராகரிக்கப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் எண் 284 மற்றொரு திருத்தம் போலவே இருப்பதால் அது நிராகரிக்கப் படுகிறது. அடுத்த திருத்தம் எண் 118 திரு. நசிருத்தீனுடையது. அந்தத் திருத்தம் கூறுவதாவது : கூறு 2 துணைக்கூறு (4)க்குப் பிறகு ஒரு புதிய துணைக்கூறு சேர்க்கப்பட வேண்டும் : அந்தத் துணைக் கூறு வருமாறு : ''(5) இந்தப் பிரிவில் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும் இந்த சட்டத் தொகுப்பு எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகைய பிரதேசங் களுக்கு அல்லது இத்தகைய நபர்களுக்கு அல்லது இத்தகைய பிரிவு களைச் சேர்ந்த நபர்களுக்கு மட்டுமே பொருந்தும் ....... இத்யாதி.''

இது கூறு 1 உடன் சம்பந்தப்பட்டது. திருத்தங்கள் 118-ம், 285-ம் ஒரே மாதிரியானவை; ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை. மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறு 1 உடன் சேர்த்து இவற்றை விவாதிக்க விரும்பினால் இதன் பொருட்டு அவர் ஒரு தனி திருத்தம் கொண்டு வரலாம்.

**திரு. நசிருத்தீன் அகமது** : கூறு 1க்கு ஏற்ப நான் ஒரு தனி திருத்தத்தை முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்** : திருத்தம் வருமாறு : கூறு 2 துணைக்கூறு (1) பகுதி (d) க்குப் பதிலாகப் பின்கண்டதை மாற்றீடு செய்க :

> ''(d) மதமாற்றத்துக்கு முன்னர் தனது உரிமைகளுக்கும் சட்டக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு இந்து சமயத்துக்கு மதம் மாறியவருக்கு.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்** : திருத்தம் வருமாறு : கூறு 2க்குப் பின்கண்ட வரம்புரையைச் சேர்க்கவும்;

> ''எது எவ்வாறு இருப்பினும் மேலே கூறிய சட்டக் கூறுகளில் என்ன அடங்கியிருந்த போதிலும் ஒருவருக்கு இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்துற வேண்டுமானால் அவர் இந்தச் சட்டத்தொகுப்பு நடைமுறைக்கு வந்த ஐந்தாண்டுகளுக்குள், அவர் உரிய வயது வராதவராக இருந்தால் அந்த இளவர் உரிய வயதுக்கு வந்த பிறகு ஐந்தாண்டுகளுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் நாடாளுமன்றம் வகுத்துரைக்கும் முறையில் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்** : திருத்தம் வருமாறு :

கூறு 2க்குப் பின்வரும் வரம்புரையைச் சேர்க்கவும்:

> ''எது எவ்வாறிருப்பினும் இந்த சட்டத் தொகுப்பின் இந்தப் பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், ஒருவர் இந்த சட்டத் தொகுப்புக்கு தான் கட்டுப்பட்டு நடப்பதாக எழுத்து மூலமாக சாற்றி, அந்த சாற்றுகையை நிர்ணயிக்கப்பட்ட விதி முறைகளுக்கு இணங்க சம்பந்தபட்ட அதிகாரியிடம் தமது

பெயரைப் பதிவு செய்து கொண்டாலொழிய அவருக்கு இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்துறாது.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு : கூறு 2 உடன் பின்கண்ட வரம்புரையைச் சேர்க்கவும்;

''இந்தச் சட்டத்தில் மாறுபட்ட எதுவும் இருந்தபோதிலும், ஒருவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவரோ அந்த மாநிலத்தில் பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தி, அதன் முடிவுக்கு இணங்க இந்த சட்டத்தின் வகையங்கள் அந்த மாநிலவாசிகளுக்குப் பொருந்தும் என்று முடிவு செய்தாலொழிய இந்த சட்டத்தின் எந்த வகையமும் அவருக்குப் பொருந்துறாது. மேலும், இதன் பின்னர் இந்த சட்டத்தின் கட்டுப்பாட்டுக்குத் தன்னை உட்படுத்தக் கூடாது என்று கூற எவருக்கும் உரிமை உண்டு. அத்தகைய சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டம் அவருக்குப் பொருந்துறாது.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** திருத்தம் வருமாறு :

கூறு 2, துணைக்கூறு 1, பகுதி (a)யில் ''உள்ளிட்ட'' என்ற சொல்லுக்குப் பிறகு ''பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள்'' என்ற சொற்களைச் சேர்க்கவும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**பண்டிட் மாளவியா :** எனது அடுத்த திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இப்போது, நாம் எல்லாத் திருத்தங்கள் சம்பந்தமாகவும் செய்ய வேண்டியதைச் செய்து முடித்துவிட்டோம். மதிப்பிற்குரிய எந்த உறுப்பினரது திருத்தத்தையாவது அவையில் நான் முன்வைக்கத் தவறிவிட்டேனா? அப்படி எதுவும் இல்லை என்று நினைக்கிறேன்.

''திருத்தப்பட்ட கூறு 2 மசோதாவின் பகுதியாகிறது.''

திருத்தம் ஏற்கப்பட்டது.

திருத்தப்பட்டபடி கூறு 2 மசோதாவில் சேர்க்கப்பட்டது.

## *இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** பொறுக்குக் குழு அறிவித்த படி இந்து சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தவும் தொகுக்கவுமான மசோதாவை மேற்கொண்டு பரிசீலனை செய்யும் பணியை அவை இப்போது மேற்கொள்ளும். நேற்று கூறு 2 பற்றி முடிவு செய்தோம். மிகவும் சர்ச்சைக்குரிய இந்தக் கூறு விஷயம் முடிந்து விட்டது. மற்ற கூறுகள் விரைவாக நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்.

*கூறு 3 - (பொருள் வரையறைகள்)*

*சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்):* பின்வருமாறு முன்மொழிகிறேன் :

கூறு 3ல், - (i) ''பொருளுரை அல்லது தறுவாயில் முரணாக ஏதேனும் இருந்தாலன்றி'' என்ற வாசகத்துக்குப் பதிலாக ''தறுவாயின் தேவை வேறானாலன்றி'' என்ற வாசகத்தை மாற்றீடு செய்க.

(ii) இப்போதுள்ள தொடரெண்களான (i), (ii), (iii), (iv) ஆகியவற்றை (ii), (iii), (iv), (v) என மாற்றியமைக்கவும்; பின்கண்டதை தொடரெண் (i) ஆக மாற்றவும்:

(i) ''அலியசந்தான சட்டம்'' என்பது இந்தச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் 1949 ஆம் வருட சென்னை அலியசந்தான சட்டத்துக்கு (சென்னை சட்டம் IX, 1949) உட்பட்டிருக்கக்கூடிய நபர்களுக்குப் பொருந்துறக்கூடிய சட்ட முறைமையைக் குறிக்கும்;

(ii) ல் தொடரெண் (iii) மாற்றியமைக்கப்படும்போது பின்கண்டதை நீக்கவும் ''பிரிவுகள் 41 மற்றும் 49 தவிர'';

(iv) தொடரெண் மாற்றியமைக்கப்பட்ட (v) க்கான விளக்கத்தில் ''இந்தக் கூறு'' என்பதற்குப் பதில் ''கூறு (iv) மற்றும் (v)'' என்று மாற்றீடு செய்க;

(v) இப்போதுள்ள தொடரெண்களான (v), (vi), (vii), (viii) ஆகியவற்றை (viii), (ix), (x), (xi) என மாற்றியமைக்கவும். இனங்கள் (vi) மற்றும் (vii) ஐ பின்வருமாறு மாற்றியமைக்கவும்:

(vi) ''மருமக்கதாய சட்டம்'' பின்கண்ட நபர்களுக்குப் பொருந்தும் -

(a) இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் மதராஸ் மருமக்கதாய சட்டம், 1932 (மதராஸ் சட்டம் xxii, 1933), திருவாங்கூர் நாயர் சட்டம் II, 1100, திருவாங்கூர் ஈழவா சட்டம் III, 1100, நாஞ்சில்நாடு வெள்ளாள சட்டம் 1101, திருவாங்கூர் க்ஷத்திரியா சட்டம், 1108, திருவாங்கூர் கிருஷ்ண வாகா மருமக்கதாயி சட்டம் 1115, கொச்சி திய்யா சட்டம், VIII, 1107; கொச்சி நாயர் சட்டம் XXIX, 1113, கொச்சி மருமக்க தாய சட்டம் XXXIII, 1113 முதலான சட்டங்களுக்கு உட்பட்ட வர்கள் அல்லது

(b) திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தை அல்லது மதராசைப் பெரும்பாலும் வாழ்விடமாகக் கொண்ட எந்த சமூகத்தையும் சேர்ந்தவர்கள், இந்த சட்டத் தொகுப்பு நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் பெண் வழி மூலம் மரபுரிமை நிர்ணயிக்கப்படும் எந்தப் பிதுரார்ஜித முறையை யும் பின்பற்றுபவர்கள்; ஆனால் இதில் அலிய சந்தான சட்டம் இடம் பெறாது.

(vii) ''நம்பூதிரி சட்டம்'' என்பது இந்தச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் மதராஸ் நம்பூதிரி சட்டம், 1932 (மதராஸ் சட்டம் XXI, 1933), கொச்சி நம்பூதிரி சட்டம் (XVIII, 1114) அல்லது திருவாங்கூர் மலையாளப் பிராமணர் சட்டம் 1106 (ஒழுங்கு முறைச்சட்டம் III, 1106) ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டவர்களுக்குப் பொருந்துறத்தக்க சட்டத்தைக் குறிக்கும்.

(vi) இவ்வாறு தொடரெண் மாற்றியமைக்கப்பட்ட (viii) இனத்தில் ''எந்த'' என்பதற்குப் பதில் ''ஒரு'' என்று மாற்றீடு செய்க.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம்) : வரிசை முறைப் படியும், துணைக்கூறு பின் துணைக்கூறாகவும், தலைப்புப் பொருள் பின் தலைப்புப் பொருளாகவும் பரிசீலிப்பது உகந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். இல்லையென்றால் விவாதம் மிகவும் பொதுப் படையானதாக அமையும். கூறு 2 பற்றிய விவாதம் பெரிதும் பொதுப்படையானதாக இருந்தது; விஷயங்களைத் தனித்தனியாக வும், தொகுதி தொகுதியாகவும் எடுத்துக் கொள்ளாததே இதற்குக் காரணம்.

*மாண்புமிகு துணை சபாநாயகர் :* நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்கிறேன். ஒழுங்கு முறை வரிசைப்படி இவ்விஷயங்களை எடுத்துக் கொள்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* சொல்லப்போனால் எனது திருத்தம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி வெறும் சொல் அளவிலான மாற்றத்தைக் கொண்டது. இப்போதைய கூறில் பயன் படுத்தப்பட்டுள்ள ''பொருளுரை அல்லது தறுவாயில் முரணாக ஏதேனும் இருந்தாலன்றி'' என்னும் சொற்கள் அரசியல் சாசனத்தை இயற்றியதிலிருந்து நாம் பயன்படுத்தி வந்திருக்கும் மொழிநடைக்கு இசைந்தவையாக இல்லை. ''தறுவாயின் தேவை வேறானாலன்றி'' என்ற சொற்றொடரை அரசியல் சாசனம் பயன்படுத்துகிறது. இந்த மசோதாவின் மொழிநடையை அரசியல் சாசனத்தின் மொழி நடைக்கு இசைந்ததாகக் கொண்டு வரும்பொருட்டு அந்தக் குறிப் பிட்ட திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளேன். இது வெறும் சொற்கள் மாற்றமே அன்றி வேறல்ல.

இதர திருத்தங்களைப் பொறுத்தவரை அவை அவசிய மானவை; மருமக்கதாயம், அலியசந்தானச் சட்டம் ஆகியவற்றின் வரம்புக்குட்பட்ட நபர்களுக்கும் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் பொருந்துறச் செய்ய வேண்டுமென இப்போது பிரேரேபிக்கப் பட்டிருப்பதே இதற்குக் காரணம். இதன் தொடர்ச்சியான பிரிவுகள் இந்த அம்சத்தைக் கையாள்வதால் பொருள்வரையறை கூறை விரிவு படுத்துவது அவசியமாகிறது; அப்போதுதான் இந்த விஷயம் குறித்த தேவையான பொருள் வரையறையைக் கொண்டுவர முடியும்; பொருள்வரையறை சட்டக் கூறையும் நிறைவு செய்ய முடியும்.

*மாண்புமிகு துணை சபாநாயகர்:* முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் வருமாறு :

கூறு 3ல்

(i) ''பொருளுரை அல்லது தறுவாயில் முரணாக ஏதேனும் இருந்தாலன்றி'' என்னும் சொற்களுக்குப் பதில் ''தறுவாயின் தேவை வேறானாலன்றி'' என்றும் மாற்றீடு செய்க''

(ii) இப்போதுள்ள தொடரெண்களான (i), (ii), (iii), மற்றும் (iv) ஆகியவற்றை (ii), (iii), (iv) மற்றும் (v) என மாற்றியமைக்கவும்; பின்கண்டதைத் தொடரெண் (i) ஆக மாற்றவும்:

(i) ''அலிய சந்தான சட்டம்'' என்பது இந்தச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் 1949 ஆம் வருட சென்னை அலிய சந்தான சட்டத்துக்கு (சென்னை சட்டம் (IX, 1949) உட்பட்டிருக்கக் கூடிய நபர்களுக்குப் பொருந்துறக் கூடிய சட்டமுறைமையைக் குறிக்கும்.

(iii) ல் தொடரெண் (iii) மாற்றியமைக்கப்படும்போது பின் கண்டதை நீக்கவும் ''பிரிவுகள் 41 மற்றும் 49 தவிர'';

(iv) தொடரெண் மாற்றியமைக்கப்பட்ட (v)க்கான **விளக்கத்தில்** ''இந்தக் கூறு'' என்பதற்குப் பதில் கூறு (iv) மற்றும் (v) என்று மாற்றீடு செய்க.

(v) இப்போதுள்ள தொடரெண்களான (v), (vi), (vii), (viii), ஆகியவற்றை (viii), (ix), (x), (xi) என மாற்றியமைக்கவும்.

(vi) ''மருமக்கதாய சட்டம்'' பின்கண்ட நபர்களுக்குப் பொருந்தும் -

(a) இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் மதராஸ் மருமக்கதாய சட்டம், 1932 (மதராஸ் சட்டம் XXII, 1933), திருவாங்கூர் நாயர் சட்டம் II, 1100, நாஞ்சில் நாடு வெள்ளாள சட்டம், 1101, திருவாங்கூர் க்ஷத்திரியா சட்டம், 1108, திருவாங்கூர் கிருஷ்ணவாக - மருமக்கதாயி சட்டம் 1115, கொச்சி திய்யா சட்டம், VIII 1107; கொச்சி நாயர் சட்டம் XXIX, 1113, கொச்சி மருமக்கதாய சட்டம் XXXIII, 1113 முதலான சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் அல்லது

(b) திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தை அல்லது மதராஸைப் பெரும்பாலும் வாழ்விடமாகக் கொண்ட எந்த சமூகத்தையும் சேர்ந்தவர்கள், இந்த சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் பெண் வழி மூலம் மரபுரிமை நிர்ணயிக்கப்படும் எந்தப் பிதுரார்ஜித முறையையும் பின்பற்றுபவர்கள்; ஆனால் இதில் அலிய சந்தான சட்டம் இடம் பெறாது;

(vii) ''நம்பூதிரி சட்டம்'' என்பது இந்தச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்றால் மதராஸ் நம்பூதிரி சட்டம், 1932 (மதராஸ் சட்டம் XXI, 1933), கொச்சி நம்பூதிரி சட்டம் (xviii), 1114 அல்லது திருவாங்கூர் மலையாளப் பிராமணர் சட்டம் 1106 (ஒழுங்கு முறைச் சட்டம் III, 1106) ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டவர்களுக்குப் பொருந்துறத்தக்க சட்டத்தைக் குறிக்கும்.

(vi) இவ்வாறு தொடரெண் மாற்றியமைக்கப்பட்ட (viii) இனத்தில் ''எந்த'' என்பதற்குப் பதில் ''ஒரு'' என்று மாற்றீடு செய்க.

**திரு. நசிருத்தீன் அகமது:** தலைப்புப் பொருளைப் பொறுத்த வரையில் எனது திருத்தம் எண் 410 முன்னுரிமை பெறுகிறது; ஏனென்றால் இந்தத் திருத்தம்தான் உண்மையான சட்டக்கூறாகும். 'அலியசந்தான சட்டத்தை' நீக்கும்படி எனது திருத்தம் கோருகிறது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது திருத்தத்தை முன்மொழியலாம்.

***திரு. நசிருத்தீன் அகமது :*** பின்வருமாறு முன்மொழிகிறேன்:

*டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்த திருத்தத்தில் பகுதி (ii)ல் கூறு 3ன் உத்தேசப் பகுதி (1)ஐ நீக்குக.*

ஆனால் மசோதா குறிப்பிடும் பல்வேறு வழக்கங்களுக்கு டாக்டர் அம்பேத்கர் இசைவு தெரிவிப்பதைப் பார்க்கும்போது இந்த சட்டத் தொகுப்புக்கு ஆதார அடிப்படையாக உள்ள பிரதான கோட்பாடு சந்தர்ப்பவாதத்தின் காலடியில் பலியிடப்படுவதைக் காண்கிறேன். அவர் இக்கட்டான நிலையில் இருக்கிறார். அவருக்காக அனுதாபப்படுகிறேன். அவர் விருப்பத்துக்கு விட்டிருந்தால் இந்தப் பழக்க வழக்கங்களை அவர் ஆதரிக்க மாட்டார் என்பது எனக்கு நிச்சயம் தெரியும். என் இஷ்டத்துக்கு விட்டிருந்தால் நானும் இதே மாதிரிதான் நடந்து கொண்டிருப்பேன். இந்தப் போக்கைப் பொறுத்த வரையில் அவருக்கும் எனக்கும் இடையே வேறுபாடு ஏதும் இல்லை.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** பொருள் வரையறை குறித்தே இப்போது நாம் விவாதித்து வருகிறோம். சபிண்டா, சகோத்ரம் அல்லது படிநிலை போன்ற விஷயங்களில் வழக்கம் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டுமா என்பது குறித்துப் பரிசீலிப்போம், தனித்தனி நிகழ்வுகள் குறித்து விவாதிப்போம். வழக்கங்கள் பற்றிய பொருள் வரையறை போக வேண்டும் என்பது மதிப்பிற் குரிய உறுப்பினரின் கருத்தா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** ''வழக்கம்'' என்னும் சொல்லின் பொருள் வரையறை பின்தொடர்பான கூறுகளில் எங்கெல்லாம் அந்த சொல் வருகிறதோ அங்கெல்லாம் அது நடை முறையிலிருக்கும். இப்போது நாம் நிர்ணயித்துத் தரும் அர்த்தத்தை அந்த சொல் கொண்டிருக்கும். எனவே, ''வழக்கம்'' என்ற சொல்லின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும், அது நமது கோட்பாடு கள் சம்பந்தமாக எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைக் காண்பதும் அவசியம். இந்த சொல்லின் முழு அர்த்தத் தையும் நாம் தெரிந்து கொள்வதற்கு, உத்தேசிக்கப்பட்ட முறையில் ''வழக்கங்கள்'' என்பதற்கு பொருள்வரையறை செய்யும்போது, சட்டத் தொகுப்பின் முழு மொத்த வகையங்களை எவ்வாறு நாம் மாற்றுகிறோம் என்பதை நாம் உணர்ந்திருப்பது முக்கியம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நிலைமையைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு மதிப்பிற்குரிய உறுப்பினருக்குப் போதிய நாடாளுமன்ற அனுபவம் உள்ளது. ஆனால் விஷயங்களை எனக்கு நானே புரிந்துகொள்ள விரும்புகிறேன். திருமணம் அல்லது விவாகரத்து போன்ற விஷயங்கள் நம் பரிசீலனைக்கு வரும்போது அவற்றில் எந்தப் பகுதியில் மேற்கொண்டு என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். ''எது எப்படியிருந்தாலும் இது நடைபெற அனுமதிக்கக் கூடாது'' என்று நாம் கூற வேண்டும். இப்போது நாம் பொருள்வரையறை செய்யும் பணியில் ஈடுபட்டிருக் கிறோம். நாம் நமது குறியிலக்கை மேலும் மேலும் விஸ்தரிக்க வேண்டாம். ஒவ்வொரு விஷயத்தையும் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டாம். ஒரு குறிப்பிட்ட வழக்கம் எவ்வாறு பல்வேறு தொல்லை களைத் தோற்றுவிக்கிறது என்பது போன்ற ஆராய்ச்சியில் இறங்க வேண்டாம். இது மேலும் ஒரு பொது விவாதத்தில் கொண்டு போய்விடும்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** நீங்கள் அன்புகூர்ந்து அளித்த விளக்கம் இல்லாமலேயே உங்களை நான் நன்கு புரிந்து கொண் டேன், ஐயா. நீங்கள் எடுத்துக்காட்டிய உண்மையின் வலிமையை நான் உணர்கிறேன். இங்கு நீங்கள் பழக்க வழக்கங்களின் கருப்பொருளைத் தொகுத்துக் கூறியிருக்கிறீர்கள்; இங்கு நீங்கள் தந்துள்ள பொருள்வரையறை சில விஷயங்கள் சம்பந்தமாக

அனுமதிக்கப்பட்டுள்ள எல்லாப் பழக்க வழக்கங்களுக்கும் பொருந்துறும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவ்வாறில்லை. சீக்கியர்கள் மற்றும் வேறு சிலர் விஷயத்தில் ''எது எப்படியிருந்தாலும் இந்த வழக்கம் நடப்பில் இருக்காது'' என்று நாம் கூறக்கூடும்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** திருமணம் சம்பந்தமான பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இருந்துவரும் என்று நாம் கூறுவதன் பொருள் என்ன? சில வகையான விதிமுறை நடப்பிலிருக்கும், இங்கு நாம் வரையறுத்துக் கூறும் அந்த விதிமுறை அல்லது கோட்பாடு பொதுக் கொள்கைக்கு எதிரானதாக இருந்தாலும் அது சட்ட வலிமையைப் பெற்றிருக்கும் என்பதுதான் இதன் பொருள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வழக்கம் எவ்விதம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமாக மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கட்டுப்பாடுகளை விதிக்க விரும்பினால் நடப்பிலுள்ள பல்வேறு பழக்கவழக்கங்கள் பற்றிய விவரங்களுக்குள் புகாமலேயே அவ்வாறு செய்ய வாய்ப்பு உண்டு.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** தற்போதைக்கு நான் விவரங்களுக்குச் செல்லவில்லை. இந்த விஷயங்கள் விஷயத்தில் வழக்கம் செல்வாக்கு பெறுவதற்கு அனுமதிக்கலாமா என்பதை சமயம் வரும்போது பரிசீலிப்போம். இங்கு சில பொதுவான கருத்துக்களை மட்டுமே டாக்டர் அம்பேத்கரிடம் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபநாயகர் :** எந்தப் பழக்க வழக்கங்களுமே அங்கீகாரம் பெறக்கூடாது என்ற பொதுவான கருத்து பற்றி முதலாவது, மற்றும் இரண்டாவது கட்டத்தில் பரிசீலிப்போம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** எந்த வழக்கமும் அனுமதிக்கப்படலாகாது என்று நான் கூறவில்லை. மாறாக, அவர் மிதமிஞ்சி தாராளம் காட்டக்கூடாது. மசோதாவின் பயனுறுதியைப் பாதிக்கக் கூடிய பலவகையான பழக்கங்களை அவர் அனுமதிக்கக் கூடாது என்றுதான் கூறுகிறேன். ஒவ்வொரு விஷயத்திலும் வழக்கம்

மேலோங்கி நிற்க நீங்கள் அனுமதித்தால் இந்தச் சட்டத் தொகுப்பை உருவாக்குவதில் எந்தப் பலனும் கிட்டாது போய்விடும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நாம் எல்லாவற்றையும் மீண்டும் பரிசீலிப்போம். இனிமேல் எந்த வழக்கமும் மேலோங்கி நிற்காது என்று கூறுவது ஒரு விஷயம். ஆனால் சில பழக்கங்களை நாம் அனுமதிக்க வேண்டியிருக்கும் என்று கூறுவது மற்றொரு விஷயம். அத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் எல்லா விவரங்களையும் ஆழ்ந்து ஆராயும்போது எந்தப் பழக்கங்களை அனுமதிக்கலாம், எவற்றை அனுமதிக்கக்கூடாது என்பதை முடிவு செய்ய முடியும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** இந்த சொற்பொருள் விளக்கத்தின் மூலம் வழக்கங்களின் வீச்சைக் கட்டுப்படுத்துகிறேன். சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழக்கங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்று நிர்ணயித்தால், அது வழக்கங்களின் வீச்சை நிச்சயமாகக் கட்டுப்படுத்தும். அவ்வாறின்றி வழக்க விஷயத்தில் எந்த வரையறுப்பும் இல்லை என்றால் அதனால் மக்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படும். அதனால்தான் வழக்கத்தின் வீச்சு கட்டுப் படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறேன். வழக்கங்கள் விஷயத்தில் டாக்டர் அம்பேத்கர் அளவுக்கு மீறி தாராளம் காட்டுவது நகைப்புக் கிடமானதாக இருக்கிறது. அவர் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் சில திருத்தங்களைத் தந்துள்ளேன். இவ்வகையில் எனது 446 ஆம் எண் திருத்தம் பின்வருமாறு கூறுகிறது:

> ''அல்லது நிச்சயமானதான, நியாயத்துக்கு ஒவ்வாதது அல்லாததான, எந்த ஸ்தலப் பிரதேசத்திலும், பழங்குடியினரிடையேயும், சமூகத்திலும், குழுவிலும் அல்லது குடும்பத்திலும் சட்ட ரீதியில் செல்லத்தக்க, கட்டுப்படுத்துகிற எந்த விதியும்.''

சில வழக்கங்கள் வளர்ந்து வருகின்றன, வேறு சில வழக்கங்கள் இறுகிப் போயுள்ளன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியும். வளர்ந்துவரும் வழக்கங்களைப் பொறுத்தவரையில், அவை வளரக் கூடாது என்று நாம் விரும்புகிறோம். ஏனென்றால் சட்டமுறை விதி ரீதியான செயல் விளைவை ஈட்டுவதற்கு இதுதான் ஒரே வழி. சட்டரீதியில் அங்கீகரிக்கப்படாத வழக்கங்களைப்

பொறுத்தவரையில் அவற்றை குறியெல்லைக்குள் கொண்டு வரக் கூடாது என்பது என் சொந்தக் கருத்தாகும். வழக்கத்தை நடத்தைக் கான ஒரே விதிமுறையாக சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்பிருந்தது போன்றே இந்து சமுதாயத்துக்கு வேறு எந்த விதி முறையும் இருக்கக் கூடாது; இத்தகைய நிலையில் நாம் விரும்பு வதை அடையக் கூடிய வகையில் வழக்கம் மாற்ற முடியாததாகக் கூடிய ஒரு கட்டத்தை நாம் அடைவோம் - இது ஒரு வழி. இன்னொரு வழி இருக்கிறது. அதில் கோட்பாட்டளவினதாயிராமல் அனுபவ முறையில் இதுதான் விதிமுறையாக இருக்க வேண்டும் என்று சட்டரீதியாக நிர்ணயிக்க நாம் முன்வர வேண்டும். எது எப்படியிருப் பினும், சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழக்கங்களை நாம் ஏற்பது உசிதமானதாக இருக்கும். இங்கு தரப்பட்டுள்ள சொற்பொருள் விளக்கத்தில் எந்த வழக்கங்களையும் சட்ட ரீதியாக அங்கீகரிப்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தோன்றக்கூடும். இதற்கு முற்றிலும் மாறாக, முதலாவது வரம்புரையில் இடம் பெற்றுள்ள சொற்கள் வருமாறு :

> ''இந்த விதிமுறை தெளிவுறுதியானதாகவும் நியாயமற்ற தாக இல்லாததாகவும், பொதுநலக் கொள்கைக்கு எதிரானதாக இல்லாததாகவும் இருக்க வேண்டும்.''

''பொதுநலக் கொள்கைக்கு எதிரானதாக'' என்ற சொற் றொடரை நான் ஆட்சேபிக்கிறேன். ''பொதுநலக் கொள்கை'' என்றால் என்ன என்பதை நான் அறியேன். ஒருதார மணத்தைப் பொறுத்தவரையில் பொது நலக் கொள்கை இந்துக்களுக்கு நன்மை பயக்கக் கூடியது, ஆனால் சமுதாயத்தின் மற்ற பகுதி யினருக்கு அது பொருந்தாது என்று அரசாங்கம் கருதுவதாக நான் புரிந்து கொள்கிறேன். என்னுடைய முசல்மான் நண்பர் களைப் பொறுத்தவரையில், எனக்குத் தெரிந்த பலர் ஒருதார மணத்தை விரும்பவில்லை என்றாலும் அரசாங்கம் அது பற்றி எந்த முடிவும் எடுக்காமல் அவர்களைக் கலந்தாலோசித்து வருகிறோம் என்ற போலியான வாதத்திரைக்குள் புகுந்து கொண்டிருக்கிறது. எந்த ஒன்றும் பொதுநலனுக்கு எதிரானது என்றால் அது எல்லோர் விஷயத்திலும் பொருந்தும். பஞ்சாபில் நடைமுறையிலுள்ள ஒரு வழக்கத்தை நான் அறிவேன். **கார்வா** திருமணங்கள் என்பதுதான் அந்த வழக்கம். அத்திருமணங்

களை இருதார மணங்கள் என்று முற்றிலும் கூறிவிட முடியாது. ஆனால் அதே சமயம் அதனை இருதார மணத்தின் வேறுபட்ட தொரு பதிப்பு எனக் கூறலாம். **கார்வா** திருமணங்கள் என்றால் என்ன என்பதை இப்போது பார்ப்போம். ஒருவன் இறந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இறந்த வனின் தம்பி அவனுக்கு மனைவி இருந்தபோதிலும் அண்ண னின் விதவையைத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப் படுகிறான். சொத்து குடும்பத்துடனேயே இருக்கிறது. இறந்த வனின் விதவை மனைவியும் குடும்பத்துடனேயே இருக் கிறாள். ஆக, பொது நலக் கொள்கையை எதிர்ப்பது என்பது எதையும் குறிக்கலாம். இது நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய ஒரு பதப்பிரயோகமாகும். சட்ட அமைச்சரின் உசிதம்போல் அது வேறுபடக்கூடும். எனவே, இந்தச் சொற்களை நான் ஆட்சே பிக்கிறேன். சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டதும், காலத்தின் சோதனையில் வென்றதுமான எந்த வழக்கமும் அங்கீகரிக்கப் பட வேண்டும் என்று கருதுகிறேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** இனிமேல் எந்த வழக்கமும் இருக்காது.

***பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:*** இந்த சட்டத் தொகுப்பு வழங்க முற்படும் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் வழக்கம் எதுவும் இருக்கக்கூடாது என்பதே எனது பணிவான வேண்டுகோள். இல்லையென்றால் இந்த சட்டத் தொகுப்பின் முழு நோக்கமே பயனற்றுப் போய்விடும். இந்து சட்டத் தொகுப்பு வழங்கும் விஷயங்களில் எதிர்காலத்தில் வழக்கம் இடம் பெறாது. ஏனைய விஷயங்களில் இவை சம்பந்தமாக இந்து சட்டத் தொகுப்பு எவ் வகையிலும் சம்பந்தப்படாது என்று நீங்கள் கூறியது முற்றிலும் சரியானது, ஐயா .......

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** சர்ச்சைக்கு இடமற்ற ஒரு குறிப்பிட்ட வழக்கம் இருந்தால் என்ன நடைபெறும்? அது நீதிமன்றத் துக்குக் கொண்டுவரப்பட வேண்டியதில்லை. சர்ச்சைக்குரிய ஒரு வழக்கம்தான் நீதிமன்றத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டு ஒன்று அங்கீகரிக்கப்படுகிறது அல்லது நிராகரிக்கப்படுகிறது.

பொதுநலக் கொள்கைக்குத் தீங்கு விளைவிக்காத எந்த வழக்கமும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப் படவில்லை என்ற காரணத்தால் மட்டும் ஒரு வழக்கம் அதன் அந்தஸ்தை இழந்துவிடுமா?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** சட்டத் தொகுப்பில் இதற்கென ஒரு கட்டுப்பாட்டு விதி இருந்தால் அது வளர்ச்சியடை யாது என்பது என் கருத்து. அத்தகைய கட்டுப்பாட்டு விதி இல்லை என்றால் அது நிலைத்து நிற்பதோடு வளரவும் செய்யும். ''பொது நலக்கொள்கைக்கு எதிரானது'' என்ற சொற்களை நீக்கிவிட்டால் கூட அப்போதும் அது நிலைத்து நிற்கும். ஏனென்றால் அது சட்டத் தின் விதி. பொதுமக்கள் கொள்கைக்கு எதிரானது என்ற சொற்களை நீங்கள் பயன்படுத்தினால், அப்போது ஒரு வழக்கம் நல்லதாக இருந்து சமுதாயத்தில் ஏராளமானோரால் கடைப்பிடிக்கப்பட்டாலும், இது பொதுக் கொள்கைக்கு எதிரானது என்று எவரேனும் கூறினால் அது வளர்ச்சியடையாது.

**மாண்புமிகு சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒரு நல்ல வழக்கறிஞர். ஆனால் என்னுடைய சொந்தக் கருத்து வேறுவித மானது. இந்தச் சட்டத் தொகுப்பு எங்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட விஷயத்துக்கு வழிவகை செய்துள்ளதோ அங்கெல்லாம் ஒரு வழக்கம் பொதுக் கொள்கைக்கு எதிரானதாக இருந்தாலும் இல்லாவிட் டாலும், ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அந்த அளவுக்கு அது ரத்து செய்யப்படுகிறது. அங்கீகரிக்கப்பட வேண்டிய சில வழக்கங்கள் இருக்கின்றன, இதேபோல் வெறுப்பூட்டக்கூடிய, பொதுக் கொள்கைக்கு எதிரான சில வழக்கங்களும் இருக்கின்றன. பொதுக் கொள்கை என்பது ஒரு நீதிபதியால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயமேயாகும். இத்தகைய விஷயங்களைப் பொறுத்த வரையில், அவற்றை நீதிமன்றம் தீர்மானிக்க ஏன் விட்டுவிடக் கூடாது என்று நாம் கூறலாம்; இந்த வழக்கங்கள் முற்றிலும் வெறுக்கத் தக்கவை. ஆனால் மற்ற வழக்கங்களைப் பொறுத்தவரையில் அவை ஒரு நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று ஏன் கூற வேண்டும்? எல்லாவற்றுக்கும் சட்டங்கள் இயற்றுவது சாத்தியம் அல்ல.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** ஐயா, தாங்கள் வெளியிட்டதைப் போன்ற அதே கருத்தைத்தான் நானும் கொண்டிருக்கிறேன். ஆனால் நான் அதை வேறுவிதமாகக் கூறுகிறேன். வளர்ந்து வருகின்ற, நல்ல பழக்க வழக்கங்களை, நான் தலையிட்டுக் கெடுக்க விரும்பவில்லை. ஆனால் ஏதாவது ஒரு நீதிமன்றம், தானே முன்வந்து, இது பொதுக் கருத்திற்கு எதிரானது என்று கூறிவிடுமோ என்று அஞ்சுகிறேன். எல்லாப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் நாம் இங்கு பேசவில்லை. ஏனென்றால், நாடு முழுவதிலும் உள்ள எல்லா பழக்க வழக்கங்களைப் பற்றியும் பேசுவதற்கான நேரமோ, சக்தியோ நம்மிடமில்லை. எந்த பழக்க வழக்கங்கள் பாதுகாக்கப்படும் என்று நம்மால் கூற முடியாததால், ஒரு குறிப்பிட்ட வழக்கம் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றால், அது பொதுக் கருத்திற்கு மாறானதல்ல என்று சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படுவது அவசியம் என்று நாம் கூறவேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர்:** என்னுடைய நண்பர் பண்டிட் பர்கவா எழுப்பியிருக்கும் ஐயப்பாடு மிக முக்கியமானதாகும். என்னைப் பொறுத்தவரை, நான் கொண்டிருக்கும் கருத்திற்கும் அவர் கொண்டிருக்கும் கருத்திற்கும் சிறிதளவு கூட வேறுபாடில்லை. ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், அவர் தவறான பிரிவில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறார். அதனால்தான் சரியான நிலை என்ன என்பதில் அவர் குழம்பிப் போய் இருக்கிறார். வழக்கத்திற்கும் சட்டத் தொகுப்பிற்கும் இடையில் உள்ள எதிர்நிலையில் அக்கறை கொண்டுள்ள இந்த அவையின் உறுப்பினர்கள், பிரிவு 3-இன் மீதல்லாமல், பிரிவு 4-ன் மீது தங்களது கவ்னத்தைச் செலுத்துவது நல்லது. அதுதான், சட்டத் தொகுப்பு மற்றும் சட்டத்தின் உரிமைக் கெதிராக பழக்க வழக்கத்தின் உரிமையைப் பற்றி விவாதிக்கும் முக்கிய பிரிவாகும். ஒரு வழக்கம் திட்டவட்டமாகப் பாதுகாக்கப்படா விட்டால், அந்த வழக்கம் சட்டத்திற்கெதிராக எந்த நடைமுறையிலும் இருக்காது என்று அதில் தெளிவான அறிவிப்பு இருப்பதைக் காணலாம். ஆகவே, ஏதாவதொரு குறிப்பிட்ட வழக்கம் திட்டவட்டமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை இந்தக் குறிப்பிட்ட மசோதாவின் ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் நாம் விவாதிக்கும்போது பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட பிரிவு ஏற்கனவே வரையப்பட்ட அதே வடிவில் முழுமையாக அப்படியே இருக்கலாமா அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட வழக்கத்தினடிப்படையில் மாற்றலாமா என்பதைக் குறித்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக் களைக் கூறலாம். இந்த மசோதாவில், ஏதாவது ஒரு குறிப்பிட்ட

பிரிவானது, ''வழக்கத்தின் மூலம் வகை செய்யப்பட்டிருந்தாலொழிய'' அல்லது ''வழக்கத்துக்கு மாறாக இல்லாதிருந்தாலொழிய'' என்று குறிப்பிடவில்லையென்றால், இந்த மசோதா எந்த வழக்கத்தையும் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. ஆகவே இந்த விஷயத்தில் எந்த ஐயமும் தேவையில்லை. இந்தச் சட்டத் தொகுப்பின் சட்டப் பிரிவுகளை, பொதுவான வகையில் வழக்கம் மேலாதிக்கம் செய்ய அனுமதிக்கும் எண்ணம் ஒரு சிறிதும் இல்லை.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் நான் மிகவும் மிதமாக இருப்பதாக மரியாதைக்குரிய என் நண்பர் ஐயுறுவது அல்லது மனதில் எண்ணுவது எனக்குத் தெரியும். இந்தக் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பில், ஏதாவதொரு குறிப்பிட்ட வகையில் ஒரு வழக்கம் மேலாதிக்கம் செய்ய வேண்டும் என்று என்னை வற்புறுத்துகிற யாராயிருந்தாலும், அவர்கள் இந்தக் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பிலுள்ள சட்டப் பிரிவுகளை விட அந்த வழக்கம் முற்போக்கானது என்று நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அத்தகைய மிக மிக அரிய நிலைமைகளில் மட்டுமே இந்த விஷயத்தில் நான் விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பேன் என்பதை அவருக்குக் கூறிக் கொள்கிறேன்.

நாம் வெவ்வேறு பொருள்களைப் பற்றி விவாதிக்கிறபோது, அந்தப் பிரிவு நடைமுறையிலிருக்கும் ஏதாவதொரு வழக்கம் அல்லது அதுபோன்ற ஒன்றிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்கிற ஒரு தகுதியுறு அறிவிப்பைச் சேர்ப்பதாகக் கொண்டாலும், அப்போதும் ஒரு கேள்வி எழுகிறது: மேலாதிக்க விளைவை அது பெறுவதற்கு முன்னால், அந்தக் குறிப்பிட்ட வழக்கம் என்ன தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்? அந்தக் கேள்விதான் வரையறைப் பிரிவில் விவாதிக்கப்படுகிறது. எந்த ஒரு வழக்கமும் பாதுகாக்கப் படும் பொழுதெல்லாம், இந்த மசோதாவின் சட்டப் பிரிவுகளை மேலாதிக்கம் செய்ய அந்தக் குறிப்பிட்ட பிரிவினால் அனுமதிக்கப் பட்ட வழக்கம், நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படுவதற்கு முன்னால், அந்த வழக்கம் அடைய வேண்டிய தகுதிகளை முறைப் படுத்தியளிக்கும் உண்மையான வரையறைக்கு ஒத்திருக்கிறதா என்று அறிந்துகொள்ள உதவும். இதுதான் நிலை.

பிரிவு 3-இன் (ii)ஐப் பொறுத்தவரை, தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டிய வழக்கம் எது என்பது பற்றி ஆராய்ந்த, நமது நாட்டின் பல்வேறு உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து அப்படியே

எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்கள் எடுத்துவைத்த வழக்கத்தின் உட்கூறுகளெல்லாம் அப்படியே எழுத்துக்கெழுத்து பிரிவு 3-இன் (ii)ல் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே வரையறையோடு சண்டையிட வேண்டிய அவசியம் இருக்காதென்று நினைக்கிறேன். ஏனெனில் வரையறை அவசியமாகிறது. வழக்கத்தைச் செல்வாக்கடைய அனுமதிக்கிற போதும் கூட, நாம் எல்லாவிதமான வழக்கத்தையும் செல்வாக்கடைய அனுமதித்து விடுவதில்லை. உயர்நீதிமன்றங்களால் வழிமுறைப் படுத்தப்பட்ட தகுதிகளை ஒத்திருக்கும் வழக்கங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. பிரிவு (ii)இல் கூறப்பட்டுள்ள தகுதிகளெல்லாம், நமது நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களால் நேர்மைப் படுத்தப்பட்டு ஒப்புதலிளிக்கப்பட்ட தகுதிகள்தான் என்பதை உறுப்பினர்கள் காணவேண்டும்.

**திரு. நசிருத்தீன் அகமது:** அயல்நாட்டு நீதிமன்றங்களில் கூட இப்படித்தான் இருக்கும்.

**டாக்டர் அம்பேத்கர்:** எல்லா இடங்களிலும் இதே மாதிரி தான். ஆங்கிலச் சட்டம் பற்றிய ஸ்டீபனின் சட்டத் தொகுப்பைக் கூடப் பார்த்து விட்டேன். அதன் வார்த்தை அமைப்புக்கூட கிட்டத் தட்ட நாம் இங்கே பயன்படுத்தியிருப்பதைப் போலவே இருக்கிறது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** சம்பந்தப்பட்ட விஷயத்தை அன்புகூர்ந்து விளக்கியமைக்காக எனது மாண்புமிகு நண்பராகிய சட்ட அமைச்சருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் (உத்திரபிரதேசம்):** மரியாதைக்குரிய நண்பர் இன்னும் முடிக்கவில்லையா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இல்லை. அவர் தொடருவார். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், வெளியிலிருப்பவர்களும் இந்த மசோதா தொடர்ந்து விவாதிக்கப்படுவதைக் கவனித்து வருகிறார்கள். அதில் என் நிலை பற்றி ஓரளவு தப்பெண்ணம் நிலவுகிறது. நான் இங்கு அமர்ந்து விட்டேனென்றால் எனக்கு நிறம், சாதி, சமயம் எதுவும் அறவே கிடையாது. அதுதான் எனது உண்மையான நிலை ஆகும். என்னுடைய மனச்சாட்சிக்குப் பொதுவாக, நடுநிலை தவறாமல் எனது பணிகளைச் செய்ய முயன்றிருக்கிறேன். மரியாதைக்குரிய எந்த

ஓர் உறுப்பினராவது, நான் எனது கடமையை முறையாக செய்ய வில்லை என்று சரியாகவோ, தவறாகவோ எண்ணினால், அவர் என்னிடம் வந்து தனியாக, நான் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று கூறுவதை எப்பொழுதும் வரவேற்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, நான் அவரை அமரச் சொல்லலாம் என்று இந்த அவையில் உள்ள மரியாதைக்குரிய உறுப்பினர்களே கூட எண்ணுகிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். முக்கியமான செய்திகள் வரும்பொழுது, கண்டிப்பாகப் போதுமான நேரமும் வாய்ப்பும் அவசியமாகிறது. அவர்கள் பேச அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால், பல்வேறு கட்டங்களில் விவாதிக்கப்பட்ட செய்திகளை அவர்கள் திரும்பப் பேசினால், அது சரியல்ல என்பதை மரியாதைக்குரிய உறுப்பினர் களுக்கு நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறேன். மற்றபடி, காலக்கெடு எதுவும் விதிக்கும் நிலையில் நான் இல்லை. பேச்சுக் களுக்கு நான் சட்டப்படி காலக்கெடு விதிக்கலாம் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறினால், அதை மிக்க மகிழ்வுடன் ஏற்றுச் செயல் படுத்துவேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** அவ்வாறு செய்ய முடியாது. ஆனால் தன்னல மறுப்புக் கோட்பாட்டை ஏற்பதாக நாம் நமக்குள்ளேயே ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதுகுறித்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்தப் பாரத்தைத் தலைமையின் மீது சுமத்தக்கூடாது. நிதி மசோதா விஷயத்தில் நான் விவாதவெட்டை கொண்டுவர முடியும். இது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறை யாகும். இதுவரையில் வரவு செலவு மானியக் கோரிக்கை யில் மட்டும்தான் இந்த நடைமுறை கைக்கொள்ளப்பட்டது. ஆனால் சமீபத்தில் நிதி மசோதா விஷயத்திலும் இது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. நான் ஒரு காலக்கெடுவை நிர்ணயிக்க முடியும். அந்தக் காலக் கெடுவுக்குள் தீர்மானங்களெல்லாம் முன்மொழியப்பட்டு அவை ஏற்கப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அத்தீர்மானங்கள் காலாவதியாகிவிடும். ஆனால், பிற மசோதாக்களைப் பொறுத்தவரையிலும், மசோதா முழுமைக்கு மாகக் கூட, காலக்கெடு நிர்ணயிக்கும் உரிமை எனக்கில்லை. இந்தக் கட்டுப்பாட்டுடன், நான் அதிக நேரம் அனுமதிப்பதாக எந்த ஒரு உறுப்பினராவது நினைத்தால், நான் மிகுந்த மன உளைச்சலுக்

குள்ளாகிறேன். இது என்னுடைய நிலை. இந்த நாற்காலியில் அமரும் யாராக இருந்தாலும் அவர்களுடைய நிலையும் இவ்வாறு தான் இருக்கும்.

கடைசியாக, ஒரு குறிப்பிட்ட பிரிவின் மீது போதுமான அளவு விவாதம் நடந்திருப்பதாக எந்த ஓர் உறுப்பினர் உணர்ந்தாலும், அவர் தயவுசெய்து என்னிடம் கூறலாம். பிறகு, ஐயம் இன்றி என் விருப்பப்படி நடவடிக்கை எடுப்பேன். குறிப்பிட்ட ஒரு விஷயம் குறித்து மிக விரிவான விவாதம் நடந்திருப்பதாக நானே நினைத்தால் கூட, அது சம்பந்தப்பட்ட தீர்மானத்தை முடித்துவிட ஒப்புக் கொள்வேன். அந்த அளவிற்கு எனக்கு உரிமை இருக்கிறது. ஆலோசனைகள் கூறுகிற மரியாதைக்குரிய உறுப்பினர்கள் இவற்றையெல்லாம் தயை கூர்ந்து மனதில் கொள்ள வேண்டும். மரியாதைக் குரிய உறுப்பினர்களின் ஆலோசனைக்கு மாறாக நான் குறுக்கே நிற்பதாகவும், காலத்தை வீணடிப்பதாகவும் ஓர் எண்ணம் வெளியி லிருப்பவர்களிடம் உருவாகியிருப்பதால்தான் நான் இந்த விபரங் களையெல்லாம் கூறுகிறேன்.

இதுதொடர்பாக, **இந்தியன் நியூஸ் கிரானிகள்** பத்திரிகை யின் நிர்வாக ஆசிரியரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று இந்தப் பத்திரிகையில் வெளிவந்த கேலிப்படத்தைப் பற்றி திரு. அம்லோக் சந்த் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததை இந்த அவை நினைவுகூர வேண்டும். சில உறுப்பினர்கள் நிமிட முள்ளையும், மணி முள்ளையும் பிடித்துத் தொங்கிக் கொண்டு, கடிகாரம் முன் செல்வதைத் தடுப்பது போலவும், இப்பக்கமோ அப்பக்கமோ நகர முடியாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பது போலவும் அப்படம் சித்தரித்திருந்தது.

உண்மையிலேயே, யார் அந்தக் கடிகாரத்தை முன்னேற விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என உறுப்பினர்கள் கீழே பார்க்காமல், மேலேயே பார்த்துக் கொண்டிருப்பதுபோல் காட்டப் பட்டிருக்கிறது. இந்த உணர்வுதான் அந்தப் கேலிப்படத்தால் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை குறித்து நான் நேற்று குறிப்பிட்டிருந்தாலும், உண்மையிலேயே இது அவையின் உரிமைப் பிரச்சினையானதாலும், நான் மட்டுமே அவையின் செய்தித் தொடர்பாளனாதலாலும், இந்தக் கடிதத்தைப் படிக்க விரும்பு கிறேன். இது நிர்வாக ஆசிரியர் திரு. தேஷ்பந்து குப்தாவினால் எழுதப் பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:

''எனது அன்பிற்குரிய திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கட்கு,

நேற்று காலை இந்தியன் நியூஸ் கிராணிகிள், பத்திரிகையில், 'காலத்தைப் பின்னுக்குத் தள்ளுகிறார்கள்' என்ற தலைப்பில் வெளிவந்த கேலிப்படத்திற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவைத் தலைமை மீது அவதூறு பரப்பும் திட்டத்துடன் வெளியிடப்பட்ட கேலிப்படம் இது என்று உங்கள் கருத்தை வெளியிட்டதாக அறிகிறேன். தனிப்பட்ட முறையிலோ அல்லது அவைத் துணைத் தலைவர் என்ற தகுதியிலோ அந்தக் கேலிப்படம் தங்கள் உணர்வைப் புண்படுத்துவதாக அமைந்து விட்டதற்கு மிகவும் வருந்துகிறேன். அவைத் தலைமைக்கோ அல்லது அவைக்கோ அவமதிப்புச் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் தமக்குக் கிஞ்சித்தும் இல்லை என்று கேலிப்பட ஓவியர் உறுதியளிக்கிறார். அவைத் தலைவர் மற்றும் அவையின் கண்ணியத்தையும் உயர்த்திப் பிடிக்க விழையும் இந்தியன் நியூஸ் கிராணிக்கிளின் விருப்பத்தை என்னுடன் சேர்ந்து உறுதியளிக்க அவரும் முன்வருகிறார். கூடுமானவரையிலும் கால அட்டவணைக்கு இயைந்து விவாதங்களை ஒழுங்கபடுத்த அவைத் தலைவர் விரும்பிய போதிலும், விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்கிற சில உறுப்பினர்கள் விவாதத்தை நீட்டிக்கப் பெருமுயற்சி எடுத்து, மசோதாவின் முன்னேற்றத்தைத் தடை செய்கிறார்கள் என்னும் நாடாளு மன்றத்தின் இன்றைய நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதுதான் அந்தக் கேலிப்படத்தின் மையக் கருத்து என்பதைத் தாங்கள் தயவு செய்து காணவேண்டும். துணை அவைத் தலைவரை இந்தப் பணியில் கேலிப்படத்தில் காட்டியதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்று என்னிடம் கேலிப்பட ஓவியர் உறுதியாகக் கூறுகிறார். கேலிப்படத்தில் உள்ள எது தங்களைப் புண்படுத்தியிருந்தாலும் அதற்காக வருந்துகிற அதே நேரத்தில், தாங்கள் இந்த விளக்கத்தைப் பெருமனதுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். அவைத் தலைமைக்கும் அவைக்கும் அவமதிப்பு ஏற்படுத்தும் எண்ணம் எதுவும் இல்லை என்பதைப் பணிவுடன் உறுதியளிக்கிறோம்.''

இதுபோதும் என்று நினைக்கிறேன்.

**டாக்டர் தேஷ்முக்:** அவைத் தலைமையிலிருந்து அவர் உறுப்பினர்கள் பக்கம் திரும்பியிருக்கிறார். அவர் உறுப்பினர்களைக் குற்றம் சாட்டுகிறார். இது மோசம்.

**திரு. ராதேலால் வியாஸ்:** (மத்திய பாரத்): இந்த விஷயத்தை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கருதுகிறேன்.

**திரு. பட்:** எந்த உறுப்பினர் மீதும் அவதூறு கிளப்பும் எண்ணத்துடன் இது செய்யப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

**டாக்டர் தேஷ்முக்:** தேசபந்து குப்தாவை, அவையில் மன்னிப்புக் கேட்கச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த மசோதா, அவர் எதிர்பார்த்த வேகத்தில் முன்னேறவில்லை என்று அவர் எண்ணுகிறார். இந்த அவையின் மரியாதைக்குரிய எந்த உறுப்பினர் மீதாவது அவதூறோ அல்லது குற்றச்சாட்டோ சுமத்தப்பட்டிருக்கிறதா என்பதைப் பிறகு கவனிக்கிறேன்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** உங்களுடைய கருத்துகளைப் பொறுத்த வரையிலும், தங்களுடைய அனுமதியுடன் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த அவைத் தலைமை புனிதமானது என்பதை அவை உறுப்பினர்கள் உணருவார்கள். இங்கு தான் வித்தல்பாய் படேல் அமர்ந்திருந்தார் - அவருடைய உருவப் படத்தை நம் முன்னே பார்க்கிறோம். அவருக்குப் பின்னர், அது சிறந்தவர்களாலும், உயர்ந்தவர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக் கிறது. இந்த அவைத் தலைமை தராசுத் தட்டு எப்பக்கமும் சாயாமல் நடுநிலையோடு பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாங்க ளெல்லாம் அறிவோம். அவைத் தலைமை பாரபட்சமாக நடந்து கொள்கிறது, பிரச்சினைகளை நியாயமாக அணுகவில்லை என்று வெளியிலிருப்பவர்களோ, அவை உறுப்பினர்களோ எண்ணுவது ஆதாரமற்றதாகும்.

ஆனால், அதே சமயம் உணர்வுகள் மேலோங்கி நிற்கும்போது, உறுப்பினர்கள் ஒருசார்பு நிலையை எடுக்கிறபோது, இந்த அவை உறுப்பினர்களின் அல்லது அவைத் தலைமையின் நடவடிக்கை களை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நோக்குகிறார்கள். இப்பொழுது சில உறுப்பினர்களால் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஓர்

உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது அவர் பேசுவதை நிறுத்தும் படிக்கூட உங்களைக் கேட்டார்கள். நீண்ட சொற்பொழிவுகளை நிகழ்த்த விரும்புகிற ஒவ்வொரு உறுப்பினரின் நோக்கத்தையும் நான் நன்கு அறிவேன். டாக்டர் அம்பேத்கர் கூட சில விபரங்களைக் கூறிய போது சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர்களில் நான் ஒருவனல்ல. ஒவ்வொரு உறுப்பினருக்கும் விமர்சனம் செய்ய உரிமை உண்டு. எங்களைப் பொறுத்த வரையிலும், அத்தகைய விமர்சனங்களால் புண்படாத அளவிற்கு இப்போது எங்கள் தோல்கள் மரத்துப் போய்விட்டன. இந்த அவையில் அவைத் தலைவரைப் பொறுத்த வரையிலும், அவர் நடவடிக்கைகளைப் பாரபட்சமாக நடத்துவதாக எந்த உறுப்பினரும் ஒரு கணம் கூட நினைத்ததில்லை. யாரை வேண்டுமானாலும் விமர்சனம் செய்யும் உரிமை பத்திரிகை களுக்கு உண்டு. யாராவது ஒரு பத்திரிகையாளர் என்னை விமர்சனம் செய்தால், நான் கவலைப்பட மாட்டேன். அவர்கள் விமர்சிக்கட்டும் - அவர்களுக்கென்று சொந்தக் கருத்துக்கள் உண்டு. நாம் எளிதில் உணர்ச்சிவசப்பட்டு விடக்கூடாது. அவைத் தலைவரின் மீது கூறப்படும் அவதூறைப் பொறுத்தவரையிலும், அதை அவைக்குள் ளிருந்தோ வெளியிலிருந்தோ யார் கூறியிருந்தாலும், அதற்கு நான் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். தெரிவிக்கப்பட்ட வருத்தம் திருப்திகரமாக இல்லை என்று நீங்கள் நினைத்தால், சம்பந்தப்பட்ட நபர் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** என்னைப் பொறுத்த வரைக்கும், அவர் எழுதியவற்றில் திருப்தி அடைகிறேன். ஆகவே, இந்த விஷயத்தைத் தொடருவது தேவையற்றதாகும். இருந்தாலும், எந்த ஓர் உறுப்பினராவது இந்தக் கடிதம் தன் மீது அவதூறு பொழிவ தாகக் கருதினால், அதை நாம் கவனிப்போம். இப்போதைக்கு, எந்த உறுப்பினர் மீதோ அல்லது இந்த அவையின் மீதோ பழி கூறப் பட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை.

**திரு. சந்தானம்:** அரசு மட்டும்தான் விமர்சனத்திற்கு ஆட்படும், உறுப்பினர்கள் அல்ல என்று கூறுகிறீர்களா?

**டாக்டர் தேஷ்முக் :** இந்தக் கேலிப்படத்தைப் பொறுத்தவரை, தனது நிலையை விளக்கும் எண்ணத்தோடு இக்கடிதத்தை திரு. குப்தா எழுதியிருக்கிறார். ஆனால் அதே சமயம் அனாவசியமாக வரம்பு மீறிச் சென்று, இந்த நடவடிக்கைகளுக்கு இடையூறு செய் வதாக ஒரு பகுதி உறுப்பினர்கள் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தக் கடிதம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. அவைத் தலைமையையும் அவையின் உரிமையையும் பொறுத்தவரையில், இந்த விஷயத்தை என்னிடமே விட்டுவிடலாம். அவர் எழுதியதில் நான் திருப்தி அடைகிறேன். இருந்தாலும், எந்த உறுப்பினராவது தன் மீது அவதூறு கூறப்பட்டிருப்பதாகக் கருதினால், அவர் என்னை என் அறையில் சந்திக்கலாம். இந்த விவகாரத்தைப் பற்றி நாம் பின்னர் விவாதிப்போம்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** இதற்கு என்ன எதிர்ப்புக் கூற முடியும்? திரு. தேசபந்துவே பத்திரிகை மசோதா மீது நான்கு மணிநேரம் எடுத்துக் கொண்டார். நமது நண்பர் திரு. நசிருத்தீன் அகமது இந்த மசோதாவின் மேல் ஏழு மணி நேரம் எடுத்துக் கொண்டார்.

**டாக்டர் தேஷ்முக் :** இது ஈயத்தைப் பார்த்து பித்தளை இளித்த கதையாக இருக்கிறது. நீங்கள் உங்களையும் இந்த அவையின் நடவடிக்கையும் பற்றியும் கூறியவற்றைக் குறித்து தங்கள் அனுமதியுடன் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தங்களுடைய குறுக்கீடுகள் அனைத்தையும், இந்த அவையின் நடவடிக்கைகளுக்காக தாங்கள் அளிக்கும் உதவிகளையும் மனமார வரவேற்கிறேன். அதே சமயம் இந்த விவாதம் மேற்செல்ல அனுமதிக்கப்படுமானால் நமக்குக் குறைந்த நேரம் தன் எஞ்சியிருக்கும் என்பதை மிக்கப் பணிவோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவைத்தலைமையின் பால் நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்கத்தோடுதான் அவைத்தலைமை குறுக்கிடுகிறது. ஆனால் அந்தக் குறுக்கீடு குறைக்கப்படக் கூடுமானால், தேவைப்படும் போது மட்டுமே குறுக்கீடு இருக்குமானால் அவை நடவடிக்கைகள் இன்னும் சிறப்பாக இருக்க முடியும்.

**திரு. பாரதி:** (மதராஸ்) இது தலைமைக்கே வழிகாட்டுவதாக இருக்கிறது. இது தேவையில்லாதது.

**டாக்டர் தேஷ்முக் :** தலைமை தான் நமது கருத்துக்களைக் கேட்டது.

**திரு. பாரதி :** தலைமைக்கு வழிகாட்டுவதற்காக அல்ல.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்காவா:** இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில், இந்த தடையற்ற பேச்சு விதி தொடர்ந்து

பின்பற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த மசோதாவின் முன்னேற்றத்தில் எவ்விதத் தடையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. இருந்த போதிலும், மேலும் மேலும் பேசுவதற்கு எனது உள்ளுணர்வு தூண்டும் போது, என்னை முழுவதும் பேச அனுமதிக்காமல் அவைத் தலைவர் தடுத்தால் நான் மிகவும் வேதனையடைகிறேன். எல்லா உறுப்பினர்களும் தங்களுக்குத் தாங்கள் சுயக் கட்டுப்பாடு விதித்துக் கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். இப்பொழுது நான் விஷயத்துக்கு வருகிறேன்.

இந்தச் சட்டப் பிரச்சினையை மிக்க அன்போடு விளக்கியதற்காக டாக்டர் அம்பேத்கருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். பல சட்டத் தீர்ப்புகளில் வழக்கம் என்பது வரையறுக்கப்பட்டிருப்பதை நன்கு காண்கிறேன். ஆனால் நான் கூற வந்தது அதுவல்ல. வழக்கத்தை அங்கீகரிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விதியானது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைக்க விரும்புகிறேன். சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழக்கங்கள், பொதுக் கருத்திற்கு எதிரானவையாக இருந்தாலும் அவை கைவிடப்படக் கூடாது. ஒரு வழக்கம் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படுகிறதென்றால், அது எத்தனையோ நீதிமன்றங்களைக் கடந்து, நீதிமன்றங்களின் வாயிலாக அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது என்று பொருள்.

**டாக்டர் அம்பேத்கர் :** இங்கு நான் ஒரு கணம் குறுக்கிடலாமா? நாம் ஒவ்வொரு குறிப்பிட்ட பிரிவையும் பற்றி விவாதிக்கும் பொழுது அந்தப் பிரச்சினை மறுபடியும் எழும் அல்லது எழலாம் அல்லது எழுப்பப்படும். மரியாதைக்குரிய எனது நண்பர் "சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட எந்த வழக்கமும்" என்று குறிப்பிட்டார். அப்படிக் கூறுவதற்கு அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால் நீங்கள் மிகச் சரியாகக் குறிப்பிட்டது போல், நாம் நமது அங்கீகாரத்தை, சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழக்கத்திற்கென்று கட்டுப்படுத்தினால், அது மிகுந்த இடையூறுகளைத் தோற்றுவிக்கும். ஏனென்றால், இந்த வரையறையின் ஆக்கக் கூறுகள் அனைத்தையும் நிறைவு செய்யும் நல்ல வழக்கங்கள் இருக்கின்றன. இருந்தும் சட்டரீதியான அங்கீகாரத்திற்கு அவை இன்னும் நீதிமன்றங்களுக்கு வரவில்லை. இந்த இடையூறுகளையெல்லாம் நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. சந்தானம்:** 'சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட' என்ற வார்த்தை, மாவட்ட நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தின்

அங்கீகாரத்தைக் குறிக்கலாம். சட்ட ரீதியான அங்கீகாரம் என்றால் உச்சநீதிமன்றத்தின் அங்கீகாரம் என்று நாம் கூற முடியாது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அது சட்டரீதியாக அங்கீகரிக்கப் பட்டிருக்க வேண்டும். மேலும் அது உறுதியானதாக இருக்க வேண்டும். நியாயமற்றதாக இருக்கக் கூடாது. தொடர்ச்சியான தாகவும் சட்டத்தின் வலிமையைப் பெற்றதாகவும் இருக்க வேண்டும். சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வழக்கத்தை பொதுக்கருத்து என்பதன் பெயரால் கைவிடக் கூடாது என்றுதான் கூறினேன். நீதிமன்றங்களால் வரையறுக்கப்பட்ட ஒரு செல்லத்தக்க வழக்கத்தின் இத்தகைய ஆக்கக் கூறுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 'இந்த விதி உறுதியானது' என்பது சட்ட காப்பு வாசகத்தில் தேவைப்படுகிறது.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** அது உறுதியானதாக, நியாய மானதாக, சட்டத்தின் வலிமை பெற்றதாக இருக்க வேண்டும். 'மேலும் ஒரே சீரானதாக' மற்றும் 'அல்லது பொதுக்கருத்திற்கு எதிரானதாக' என்ற வார்த்தைகள் இருக்க வேண்டியதில்லை. இந்த வேறுபாடுதான் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் விரும்பு கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மனித குலத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பொருந்தும்படியான ஒரே வழக்கம் இருக்கும் பொழுது, அங்கு இயற்கையாகவே ..............

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** மன்னிக்க வேண்டும். மனித குலம் முழுமைக்கும் ஒரு வழக்கம் பொருந்த வேண்டும் என்று கூறும் பொழுது அது கிட்டத்தட்ட உலகளாவிய விதி அல்லது சட்டமாக இருக்க வேண்டும். இங்கு வரையறுக்கப்பட்டிருப்பது போல அது ஒரு குழுவிற்கு, சமுதாயத்திற்கு, அல்லது குடும்பத் திற்குப் பொருந்தும். 'ஒரே சீராக' என்று நீங்கள் கூறினால், ஏதாவது ஒரு குடும்பத்திற்கு அல்லது சாதிக்கு அல்லது சமுதாயத்திற்கு அல்லது குலக்குழுவிற்குப் பொருந்துகிற வழக்கம் போய்விடும் என்று பொருளாகும். 'தொடர்ச்சியாக' என்ற வார்த்தை அங்கு இருக்கும்பொழுதும், 'சட்டம்' என்ற வார்த்தை அங்கிருக்கும் பொழுதும், 'ஒரே சீராக' என்ற வார்த்தையின் தேவையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 'ஒரே சீராக' என்பது மாறுபாடு இல்லாமல் என்ற பொருளில் வருவதாக அறிகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** அதுதான் பொருள். கிட்டத்தட்ட அதைத்தான் நான் கூற வந்தேன்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** வேறுபட்ட குடும்பத்தினரிடையே வேறுபட்ட வழக்கங்கள் இருக்கின்றன. அவை எவ்வாறு 'ஒரே சீராக' இருக்க முடியும்?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மரியாதைக்குரிய உறுப்பினர் விஷயத்தைச் சரியாகக் கணிக்கவில்லை. ஒரு வழக்கம் தொடர்ச்சியானதாக இருப்பதாகக் கொள்வோம். ஆனால் அது மாறுபாடுகளுடன் கடைப்பிடிக்கப்படுகிறது. சிலர் ஒரு காலகட்டத்தில் 10 ரூபாய் வசூலிப்பதாகவும், அடுத்த காலகட்டத்தில் பதினைந்து ரூபாய் வசூலிப்பதாகவும், மூன்றாவது காலகட்டத்தில் இருபது ரூபாய் வசூலிப்பதாகவும் கொள்வோம். செயற்படுத்துதல் என்பது வழக்கத்திற்கு மட்டுமல்ல, சட்டங்களுக்கும் மானியங்களுக்கும் கூடத்தான் என்று கூறப்படுமா? சட்ட முடிவுப்படி இது ஒரே சீரானதல்ல என்று கூறப்பட்டால், நீங்கள் அதை உண்மையென ஒத்துக் கொள்ள முடியாது. அதைப் போலத்தான் ஒரே சீராக என்றால் சாதி அல்லது குடும்பம் ஆகியவற்றைப் பொறுத்தவரை, ஒரேசீராக என்று பொருளல்ல. ஆனால், ஒரு குடும்பத்திலேயே அது தொடர்ச்சியாக மட்டுமல்ல, வேறுபாடில்லாமல் ஒரே சீராகவும் இருக்க வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர்:** அதற்கு அதுதான் பொருள் - வேறுபாடில்லாமல்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** மாறுபட்ட வழக்கம் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாது என்பதுபோல். ஒரு வழக்கம் நடைமுறையில் இல்லாது போய்விட்டால்...........

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எங்கெல்லாம் மாறுதல் இருக்கிறதோ அந்த மாறுதல் தொடர்ச்சியானதாகவும், மிக நாட்பட்டதாகவும், மிகுந்த உறுதியானதாகவும் இருக்க வேண்டும்........

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா :** 'தொடர்ச்சியான' என்ற வார்த்தை இருக்கிறது. அதை நான் எதிர்க்கவில்லை. 'ஒரே சீராக' என்ற வார்த்தையைத்தான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திரு. நசிருத்தீன் அகமது ஏதாவது உருப்படியான திருத்தம் வைத்திருக்கிறாரா? இல்லை என்று நினைக்கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் 'வழக்க'த்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** முதலில் திருத்தங்கள் வைத்திருப்பவர்களைக் கவனிப்போம். ஜுன்ஜுன்வாலா தமது தீர்மானம் குறித்துப் பேச விரும்புகிறாரா? நான் அவரை அதற்கு அழைக்கவில்லை.

**ஜுன்ஜுன்வாலா:** ஆமாம் ஐயா, நான் அதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். என்னுடைய திருத்தத்தில், 'குலமரபுக் குழு' என்ற வார்த்தைக்குப் பிறகு 'வர்ணம்' என்ற வார்த்தையைச் சேர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சாதி வழக்கம் கூட அதில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பல்வேறு வகையினங்களில், 'குலமரபுக் குழு' என்ற வார்த்தைக்குப் பிறகு 'சாதி' என்பதைச் சேர்க்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதற்காக ஒரு திருத்தத்தை அவர் ஏற்கெனவே முன் வைத்திருக் கிறார். இப்பொழுது 'சாதி' என்னும் வார்த்தையை 'வர்ணம்' என்று மாற்ற விரும்புகிறார்.

**ஜுன்ஜுன்வாலா:** பிரிவு 3 (i) இல் 'குலமரபுக் குழு' என்ற வார்த்தைக்குப் பிறகு 'வர்ணம்' என்ற வார்த்தை இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன். நான் இந்தத் திருத்தத்தை முன் வைப்பதற்கான நோக்கம் என்னவென்றால், வழக்கங்களும் பயன்பாடுகளும் பிரதேசம், குலமரபுக்குழு, சமுதாயம், அல்லது குடும்பம் ஆகியவற்றிற் கேற்ப அங்கீகரிக்கப்படும் பொழுது, அத்தகைய பயன்பாடுகள் மற்றும் வழக்கங்கள் அங்கீகரிக்கப் படுவதற்கான காரணங்களை மாண்புமிகு டாக்டர் அவர்கள் விளக்க வில்லை. குறிப்பிட்ட வழக்கங்களும் பயன்பாடுகளும் முற்போக் கானவை என்று நிரூபிக்கப்பட்டால் அவை அங்கீகரிக்கப்படும் என்கிற அடிப்படைக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டால், பிறகு மாண்புமிகு டாக்டர் முன்வைக்கிற நிபந்தனைகள் நிறைவளிக்கு மானால் வர்ணாஸ்ரம தர்மத்தின்படி வெவ்வேறு வர்ணங்களில் செல்வாக்குப் பெற்றுள்ள வழக்கங்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

வர்ணாசிரம தர்மம் சமீப காலத்தில் தோன்றியதல்ல. புராண காலத்தில் தான் இந்த வர்ணங்களும், சாதிகளும் இது போன்ற மற்றெல்லாமும் தோன்றின என்று மக்கள் கூறுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. இவையெல்லாம் மிக நீண்ட காலத்திற்கு முன்னால், அதாவது 3000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்திருக்

கின்றன. அவை நமது வாழ்க்கை, சமூக அமைப்பு, நமது பொருளாதார அமைப்பு ஆகியவற்றோடு மிகவும் தொடர்பு கொண்டவை. நான்கு வர்ணங்களும் வெவ்வேறு பயன்பாடுகள் உள்ளவை; வெவ்வேறு வழக்கங்கள் கொண்டவை; அவற்றிற்குத் தக்க காரணங்களும் உடையவை. ஒவ்வொரு பயன்பாடு மற்றும் வழக்கத்திற்குப் பின்னாலும் பொருள் உண்டு. வெவ்வேறு வர்ணங்களுக்கும் அவற்றின் திறமைக்கேற்ப கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அன்றொருநாள், நீங்கள் பூணூல் அணிந்திருக்கிறீர்களா என்று கேட்ட போது, 'ஆம், நான் பூணூல் அணிந்திருந்தேன்' என்று கூறிய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. காட்கில், தன்மேற்சட்டையைக் கழற்றிவிட்டு, 'பாருங்கள் அதை நான் எடுத்து எறிந்துவிட்டேன்' என்று கூறினார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அவர் மேற்சட்டையைக் கழற்றவில்லை.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** திருத்தத்தை ஏற்கிறேன். அவர் முழு மேற்சட்டையையும் கழற்றவில்லை. பூணூல் அணிவிக்கப்படுவதற்கான பிராமண தர்மத்தைக் கடைப்பிடிக்கும் தகுதி தனக்கில்லை என்றும், 'ஆகவே ஒரு நேர்மையான மனிதன் என்ற முறையில் அதைக் கழற்றி எறிந்து விடுவது என் கடமை என்று கருதினேன்' என்றும் அவர் கூறிய காரணத்திற்கு முன்னால் பூணூல் அணிவதிலும், பயன்பாட்டிலும் உள்ள உயர்வான தன்மையையும் புனிதத் தன்மையையும் மரியாதைக்குரிய திரு. காட்கில் கூட அங்கீகரிக்கிறார் என்பதை இது காட்டுகிறது. இதே போல, மற்ற வர்ணங்களிலும் கூட இதையொத்த வழக்கங்கள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு சட்ட அமைச்சர் உருவாக்கியிருக்கிற நிபந்தனைகளை நிறைவு செய்வதாயிருந்தால், வெவ்வேறு வர்ணங்களிலும் செல்வாக்குப் பெற்றுள்ள எல்லா வழக்கங்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது மிக அவசியம். திருமணம், விவாகரத்து அல்லது இதைப் போன்ற ஏதாவதொன்றைப் பற்றிய எந்த ஒரு பிரிவும் தொடர்ந்து வருமானால், இத்தகைய வழக்கங்கள் எந்தக் குலக் குழுவிலோ, சமுதாயத்திலோ, அல்லது குடும்பத்திலோ செல்வாக்குப் பெறாமலிருந்தாலும், வெவ்வேறு வர்ணங்களில் செல்வாக்குப் பெற்றிருப்பதால் அவை மிகவும் இன்றியமையாதனவாகும் என்று எடுத்துக்காட்டும் நிலையில் நாம் இருப்போம் என்ற நோக்கத்தோடு தான் நான் இந்தத் திருத்தத்தை முன் வைத்திருக்கிறேன். 'வர்ணம்' என்ற வார்த்தையை அங்கே சேர்க்க வேண்டும் என்று நான் விரும்புவதற்கான காரணங்கள் இவைதான்.

**திரு. பி.கே.பி. சின்ஹா:** (பீகார்) மரியாதைக்குரிய உறுப்பினரிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ளலாமா? ஸ்மிருதிகளையும் ஸ்ருதிகளையும் ஒழிக்கும் போது வழக்கம் மற்றும் அதன் பயன்பாட்டை நாம் அழிக்கக்கூடாது என்பது அவருடைய நிலையா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஸ்ருதிகளும் ஸ்மிருதிகளும் ஒழிக்கப்பட வில்லை. அவை ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** சட்ட அமைச்சர் அவற்றை அங்கீகரிப்பதை அவர் காண்பார்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** 'வழக்கம் மற்றும் பயன்பாடு' பற்றிய துணைப்பிரிவில் உள்ள இரண்டு சட்டப் பிரிவுகளை நீக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் பிரேரணையாகும். மாண்புமிகு சட்ட அமைச்சர் குறிப்பிடுகின்ற அதே காரணங்கள்தான், இந்தத் தீர்மானத்தின் நோக்கமுமாகும். ஏறக்குறைய இந்த விஷயம் குறித்த நீதிமன்றத்தீர்ப்பின் அடிப்படையிலேயே இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரையறை அமைந்திருப்பதாக மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறினார். 'வழக்கம் மற்றும் பயன்பாடு' என்னும் வார்த்தைகள் வரையறையில் கூறப்பட்டுள்ளவற்றை எடுத்துக் காட்டுவனவாய் அமைய வேண்டும் என்பதைத்தான் எல்லா நீதிமன்றத் தீர்ப்புகளும் கூறுகின்றன. 'வழக்கம் மற்றும் பயன்பாடு' என்னும் வார்த்தைகள், பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளின் பொருளாய் அமைந்திருக்க வேண்டும், அமைந்திருக்கின்றன. ஆகவே, 'வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட சட்டம் அல்லது நீதிமன்றம் சார்ந்த பொருள் அதுதான் என்றால், இந்த சட்டப் பிரிவுகளின் மூலம் இந்த வரையறையை நிரப்புவதோ, பளுவாக்குவதோ விரும்பத்தக்கதல்ல என்று நினைத்தேன். ஏனென்றால், அதையே தான் அவர்கள் பொருள் கொள்வார்கள். இதைத் தெரிவிப்பதற்குக் காரணம் என்னவென்றால்......

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எனக்குப் புரிகிறது. வரையறையே இல்லாதபொழுது, அவர் நீதிமன்ற முடிவுகளைச் சார்ந்திருக்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** நீதிமன்றங்கள் கூடத் திறந்திருக்கும்....

**துணை சபாநாயகர் :** வழக்கம் என்பது தொடர்ச்சியானது. மேலும் ஒரே சீரானது.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நீதிமன்ற விளக்கத்திற்குள்ளான ஒரு குறிப்பிட்ட வார்த்தையை, சட்டத் துறையில் பயன்படுத்தினால், பிறகு அந்த வார்த்தை எவ்வெப்பொழுது நீதிமன்ற விளக்கத்திற் குள்ளாக்கப்பட்டாலும், அந்த நீதிமன்ற முடிவு கொடுத்த விளக் கத்திற்கு உட்படும். அதற்கு மாறாக, என்னுடைய எண்ணம் என்ன வென்றால், இந்தச் சட்டமானது புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துகிறது. அதாவது, சாதாரண நிலையில் இந்துச் சட்டம் விளக்கப்படுகிற போதே கூட, நினைத்துப் பார்க்க முடியாத மாற்றங் களை அது அடையும். சட்டக்காப்பு வாசகங்கள் இருப்பதால், விளக்கங்களும் தீர்ப்புகளும் புதிதாக ஆலோசிக்கப்பட நீதித்துறை யோசிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 'வழக்கம் மற்றும் பயன்பாடு' ஆகிய வார்த்தைகள் இப்போது விவாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, அது தொடர்ச்சியாக என்பது மட்டுமல்லாமல், அந்த விதி உறுதியானது, நியாயமானது அல்லது பொதுக் கருத்துக்களுக்கு எதிரானதல்ல என்பவற்றையும் காணவேண்டும். நீங்கள் இடர்பாட்டைக் காண்பீர்கள். இதில், உங்களுக்குத் தெரிந்தது போலவே, பொதுக் கருத்து என்பது எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் நிகழ்வாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதை யாரும் மறுக்கவில்லை. குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் எது பொதுக் கொள்கையோ அதுதான் தீர்மானிக்கப்படும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமல்ல; அரசின் மாறுபட்ட நிலைகளிலும்தான். ஓர் அரசு ஒரு பொதுக் கொள்கையைக் கொண்டிருக்கலாம். நாளைக்கு வேறொரு அரசு வேறொரு பொதுக் கொள்கையைக் கொண்டிருக்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** ஒப்பந்த சட்டத்தில் கூட 'பொதுக் கொள்கை' என்ற வார்த்தை இடம் பெறுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சொத்து மாற்றச் சட்டத்தின் படி, 'பொதுக் கொள்கை'க்கு முரணான எந்த மாற்றமும் செல்லுபடி யாகாது.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** 'சீரான' என்ற வார்த்தையைப் பற்றி, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா கொண்டு வந்துள்ள திருத்

த்தை நானும் ஆதரிக்கிறேன். என்னுடைய கருத்தில், 'வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகள் சிக்கலுக்கும் மேலே வில்லங்கத்திற்கும் இட்டுச் செல்லக் கூடியவை. ஒரு குறிப்பிட்ட சட்டமோ அல்லது பயன்பாடோ அல்லது வழக்கமோ ஒரு குறிப் பிட்ட குடும்பத்தில் ஒரே சீராகப் பின்பற்றப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு ஆட்சேபம் இல்லையென்றால் ஒரு பிரிவி கவுன்சில் வழக்கை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொகலாயப் பேரரசர்களின் வழித் தோன்றல் களால் பிரிவி கவுன்சிலுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மிக முக்கிய மான வழக்கு இது. இந்திய அரசு வழங்கும் ஓய்வூதியத்தை, மொகலாயப் பேரரசின் மரபு வழி வந்தவர்களில் யார் பெற்றுக் கொள்வது என்பதுதான் அந்த வழக்கு. பல பேர் அந்த உரிமைக்குப் போட்டியிட்டனர். 'நான்தான் மொகலாயப் பேரரசின் வாரிசு' என்று ஒருவர் கூறினார். 'நான்தான் வாரிசு' என்று மற்றொருவர் கூறினார். இந்த விஷயம் பிரிவி கவுன்சில் வரை சென்றது. அதில் யார் 'சுன்னத்' செய்தவர் என்ற பிரச்சினை எழுந்தது. ஏனென்றால் அவர்களில் ஒருவர்......

**டாக்டர் அம்பேத்கர் :** அந்த வழக்கு எனக்குத் தெரியும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** பொதுவாக முஸ்லீம் குடும்பங் களில் சுன்னத் செய்வதை விதியாகவும், வழக்கமாகவும் ஏற்றுக் கொண்டாலும், மொகலாயப் பேரரசர்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு இந்து மனைவி மூலம் பிறந்த குழந்தைகளுக்கு சுன்னத் செய்வது தேவையில்லை என்றும், அவர்கள் ஓய்வூதியம் மற்றும் அது போன்றவற்றிற்குத் தகுதியுடையவர்கள் என்றும் இந்த வழக்கில் பிரிவு கவுன்சில் தீர்ப்பளித்தது. ஆகவே, ஒரே குடும்பத்திலேயேகூட அந்த வழக்கங்கள் ஒரேசீராகக் கடைப் பிடிக்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் புரிந்துகொள்வார் என்றும் 'ஒரே சீரான' என்ற வார்த்தையை நீக்க வேண்டும் என்கிற பண்டிட் தாகூர் தாஸ் பர்காவா வின் திருத்தத்தைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்வாரென்றும் நினைக் கிறேன்.

ஆகவே சட்ட வரைமுறைகளை நம்பியிருப்பதைவிட, இத்தகைய மிக முக்கியமான ஆக்கக் கூறுகளை நம்புவது மிகவும்

சிறப்பாகும். ஏனென்றால், ஒரு குறிப்பிட்ட வழக்கின் சிக்கல் களுக்கேற்ப சட்ட வரைமுறைகளுக்கு வண்ணம் பூசப்படும். ஆகவே சட்ட முடிவுகளை நம்பியிருப்பதற்குப் பதிலாக நன்கு அறிந்த சொல்லமைப்பை நம்பியிருந்தல் மிகவும் நல்லதாகும்.

**டாக்டர் அம்பேத்கர் :** இதற்குச் சட்ட அங்கீகாரம் இல்லை. வழக்கத்திற்கு நடைமுறைக்கும் உள்ள வேறுபாடு அங்கு எடுத்துக் காட்டப்பட்டது. நடைமுறைக்குச் சட்ட அங்கீகாரம் இல்லை.

**திரு. நசிருத்தீன் அகமது:** முதலாவதாக, 'வழக்கம்' என்ற வார்த்தையின் வரையறை பற்றிப் பேச விரும்புகிறேன். மேலும் அதிகார பூர்வ வரைவாளரோடு நான் முற்றிலும் உடன்படுகிறேன் என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** ஒரேயடியாகவா?

**திரு. நசிருத்தீன் அகமது:** மாண்புமிகு அமைச்சர் நியாயமாக நடந்து கொள்ள முடியாத தருணங்கள் நீங்கலாக, நான் பொதுவாக அவரோடு உடன்படுகிறேன். 'வழக்கம்' என்ற வார்த்தையின் வரை யறையைப் பொறுத்தவரை அது வெறும் இந்தியச் சட்டம் மட்டு மல்ல. அது உலகம் முழுமையிலும் உள்ள சட்டமாகும். ஹாலந்து நாட்டின் சட்ட நூல் பிரதி என்னிடம் இருக்கிறது. ஒரு வழக்கம் பின்பற்றப்பட வேண்டுமானால், அது நியாயமானதாகவும், தொடர்ச்சியானதாகவும், இடையில் விட்டுப் போகாததாகவும் மிகத் தொன்மையான நிலைபாடுடையதாகவும் இருக்க வேண்டும் என்று அது கூறுகிறது. இவ்வளவுதான் அதில் கூறப்பட்டுள்ளது. சட்டத்தில், சீரான தன்மை முழுக்கவும் அவசியமானதாகக் கருதப் படுகிறது. ஒரு வழக்கம் இடையில் விட்டுப் போயிருந்தால், அது வழக்கம் என்ற இலக்கணத்தையே இழந்து விடுகிறது. இப்படித் தான் எப்பொழுதும் கருதப்படுகிறது. எனவே, ஒரு வழக்கம் இடையில் விட்டுப் போயிருக்கிறது என்கிற சாதாரண விஷயமே, அந்த வழக்கத்தை முறியடிக்கப் போதுமானது. ஆகவே, இந்த வரையறை அப்படியே ஆதரிக்கப்பட வேண்டுமென்று கருது கிறேன். சட்ட முடிவுகளைப் பொறுத்தவரை, எல்லா வழக்கு களின் சட்ட முடிவுகளும் இத்தகைய ஆராய்வுகளின் அடிப்படை யிலேயே கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்தகைய மிக முக்கியமான ஆராய்வுகள் சட்ட நூல்களில்

காணப்பட வேண்டியவை. ஆகவே சட்ட வரைமுறைகளை நம்பி யிருப்பதைவிட, இத்தகைய மிக முக்கியமான ஆக்கக் கூறுகளை நம்புவது மிகவும் சிறப்பாகும். ஏனென்றால், ஒரு குறிப்பிட்ட வழக்கின் சிக்கல்களுக்கேற்ப சட்ட வரைமுறைகளுக்கு வண்ணம் பூசப்படும். ஆகவே சட்ட முடிவுகளை நம்பியிருப்பதற்குப் பதிலாக நன்கு அறிந்த சொல்லமைப்பை நம்பியிருந்தல் மிகவும் நல்ல தாகும்.

**திரு.ஜே.ஆர். கபூர்:** மரியாதைக்குரிய என்னுடைய நண்பர் பண்டிட் தாகூர் தாஸ் பர்காவா கொண்டு வந்திருக்கும் இரண்டு திருத்தங்களின் தேவையை, குறிப்பாக அவருடைய கருத்தோட்டத் தின் காரணமாக என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வழக்கம் என்பதின் வரையறை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டிருக்க வேண்டும், பல்வேறு வகையான வழக்கங்கள் ஒரு நாட்டின் வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு முறைகளில், வெவ்வேறு வடிவங்களில் நடைமுறையில் நீடித்திருக்க அனுமதிக்கக் கூடாது என்பது அவரது கருத்து என்று நினைக்கிறேன். நான் முழு உடன்பாடு கொண்டிருக்கிற அவரது கருத்து அப்படி இருக்கும் போது, பண்டிட் தாகூர் தாஸ் பர்காவா பிரேரணை செய்திருக்கும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், வழக்கம் என்ற வார்த்தையின் குறிக் கோளும், பொருட்பரப்பும் பெருமளவு விரிந்து பரவும். ஆனால் அது கூடாது. இந்த மசோதாவின் ஒரு பயன் என்னவென்றால், இந்து சமுதாயத்தை இது ஏதோ ஒரு வகையில் ஒன்றுபடுத்தி வலுப்படுத்தப் போகிறது என்பதுதான். ஆகவே இந்து சமுதாயத்திற்குப் பொருந்தக் கூடிய நடத்தை விதிகள், வழக்கங்கள், சட்டங்கள் ஆகியவற்றில் எவ்வளவுக் கெவ்வளவு வேறுபாடுகள் குறைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. இந்தச் சட்டத்தின் மிக முக்கியமான அடிப்படையே ஒரேசீரான தன்மைதான். அதைச் சட்டம் கொண்டு வரும். இந்த நிலைபாட்டிலிருந்து நாம் விலகிவிடக் கூடாது. இந்தச் சட்டத்தின் ஒவ்வொரு பிரிவின் ஆராய்வுகளிலும் இந்த விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இதை நாம் மறந்துவிட்டோ மானால், இந்தப் புதிய சட்ட மியற்றலின் அடிப்படையை அறவே கைவிட்டவர்களாவோம்.

*காலை 11 மணி*

பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா என்ன யோசனை தெரிவிக்கிறார்? முதலில், 'ஒரே சீரான' என்ற வார்த்தை நீக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். ஒரு வழக்கம் ஒரே சீராகக் கடைப்பிடிக்கப் படாவிட்டாலும் கூட, இந்த வரையறையின் கீழ் வழக்கம் என்றே கொள்ளப்படும் என்று

பொருளாகும். வெளிப்படையாகவே அது வழக்கம் என்ற சொல்லின் வரையறையின் குறிக்கோளையே விரிவடையச் செய்யும். இரண்டாவதாக, 'பொதுக் கொள்கைக்கு எதிரான' என்ற வார்த்தைகள் நீக்கப்பட வேண்டுமென்று அவர் யோசனை தெரிவிக்கிறார். மறுபடியும், இங்கு வரையறுத்தபடி, ஒரு வழக்கம் பொதுக் கொள்கைக்கு எதிரானதாக இருந்தாலும், பரவலான கருத்தின்படி வழக்கம் என்பதன் புனிதத் தகுதியைப் பெற்றுவிடும். அது மறுபடியும் வழக்கம் என்பதன் குறிக்கோளை வலுவடையச் செய்யும்; ஒரு எல்லைக்குட்படுத்தாது. இந்த யோசனைகளை ஏற்கக் கூடாது என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்த வரை, 'பொதுக் கொள்கைக்கு எதிரான' என்ற வார்த்தைகள் மிகவும் தேவையானவையாக, மிகவுட் முக்கியமானவையாக எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், நமது சமுதாயமும் சரி வேறு எந்தச் சமுதாயமும் சரி சதா வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் சமுதாயமாகும். நடத்தை ஒழுக்கம், தகுதி உசிதத்தன்மை ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய விரும்பத்தக்க மாற்றத்திற்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் சட்டபூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கமானது, பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பின் அந்தச் சமுதாயத்திற்கு சரியான அல்லது விரும்பத்தக்க வழக்கமாக இல்லாமல் போகலாம். அந்தச் சமயத்தில், இந்த வழக்கம், சட்டப்படி அங்கீகாரம் பெற்றிருந்தாலும், சமுதாயத்தின் மாறுபட்ட சூழ்நிலைகளில், சமுதாயம் ஏற்றுக்கொண்டுள்ள மாறுபட்ட பொருளாதார சமூக அமைப்பில், இது அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று அறிவிக்க சமுதாயத்திற்கும், வழக்கு மன்றங்களுக்கும் கூட உரிமை வேண்டும். ஆகவே, இந்தப் பகுதி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

மரியாதைக்குரிய எனது நண்பர் ஜுன்ஜுன்வாலா பிரேரேபித்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்று வேண்டுகிறேன். ஏனென்றால் அது தீங்கற்றதாகத் தெரிகிறது. இந்தச் சமயத்தில் காலம் கடந்து விட்டதாக நினைக்கவில்லை வார்த்தைகளை நீக்கிவிட மாண்புமிகு சட்ட அமைச்சருக்குப் பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் எனக்குத் தோன்றுவதாவது......

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் எங்கே?

**திரு.ஜே.ஆர். கபூர் :** ஒரு குடும்பத்தில் மட்டுமே நடைமுறை யில் இருக்கிற வழக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வழக்கத்திற்குரிய மரியாதையைக் கொடுக்கக் கூடாது.

**டாக்டர் தேஷ்முக்:** அது ஏற்கெனவே இந்து சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு.ஜே.ஆர். கபூர் :** துணை விதியில் பின்கண்ட சொற்கள் இடம்பெற்றிருக்கின்றன: ''தொடர்ச்சியாகவும், ஒரே சீராகவும் மிக நீண்ட காலமாகவும் கடைப்பிடிக்கப்படுவதால் எந்த ஒரு ஸ்தலத் திலும் இனக் குழுக்களிலும் சமுதாயத்திலும் உள்ள இந்துக்களிடையே சட்ட அங்கீகாரத்தைப் பெற்ற விதியை இது குறிக்கிறது.''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அந்தச் சொல்லாக்கம் இந்த அவைக்குத் தெரியும். மரியாதைக்குரிய உறுப்பினர் ஏராளமான திருத்தங்களை முன்வைத்திருக்கிறார். எந்தக் குறிப்பிட்ட கட்டத் திலும் இந்த வார்த்தைகள் நீக்கப்பட வேண்டுமென்று அவர் நினைக்கவேயில்லை. இந்த விஷயம் பற்றி மேலும் நேரத்தை செலவழிக்க நான் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. ஜே.ஆர். கபூர் :** நான் எந்தத் திருத்தத்தையும் கொண்டு வரவில்லை. அந்தப் பிரிவில் உள்ள இந்தக் குறிப்பிட்ட பகுதியை நான் எதிர்க்கிறேன். இதைப் பிரேரேபிக்க வேறு எந்த வாய்ப்பும் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. என்னுடைய எந்தத் திருத்தமும் மாண்புமிகு அமைச்சருக்கு ஏற்புடையதாயில்லை என்பதைக் கண்டு நான் மிகவும் ஏமாற்றம் அடைந்திருந்ததால், சம்பிரதாயத்துக்குத் திருத்தத்தை முன்மொழிவதைவிட, நான் தனிப் பட்ட முறையில், அந்த விஷயத்தை அவரிடம் கூறி, அதனால் அவர், உரிய பலனைத் தரும் வகையில் தானே திருத்தத்தை முன்மொழிவார் என்று நான் நினைத்ததால்தான் எந்தத் திருத்தத் தையும் நான் கொண்டுவரவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அந்த நிலைமையில் அது இந்த அவைக்கு மிக எளிதில் ஏற்புடைய தாகும். எப்படியானாலும், இந்த விஷயம் குறித்து மேலும் கூறுவதற்கு எதுவுமில்லை.

**திரு. சிவ சரண் லால்** (உத்திரப்பிரதேசம்) எல்லாத் திருத்தங் களும் நிராகரிக்கப்பட்டு, இந்தப் பிரிவு அப்படியே ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். வழக்கறிஞராயிருந்தும் -

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது — 'பொதுக் கொள்கைக்கு எதிரான' என்ற வார்த்தைகள் நீக்கப்பட வேண்டும் என்று பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா கூறுகிறார். அது மிகவும் அவசியமான ஒன்று. சமுதாயம் முன்னேறுகிறபோது, சமுதாயத்தின் கருத்துக்கள் மிகுந்த மதிப்பைப் பெறுகின்றன. அந்தக் கருத்துக்கு மாறான எதுவும், அது பழைய வழக்கமாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. 'ஒரேசீரான' என்ற வார்த்தையை நீக்கவேண்டும் என்று பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா விரும்புகிறார். 'ஒரே சீரான' என்ற வார்த்தையை எல்லா மக்களுக்கும் சமமான என்று அவர் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அது அப்படி இல்லை. அது ஒரு குடும்பத்தின் வழக்க மாக இருக்கலாம். 'ஒரே சீரான' என்றால், தொடர்ச்சியாக அல்லது ஒரேசீராக மாறாமல் கடைப்பிடிக்கப்படுகிறது என்று பொருள். ஆகவே 'ஒரே சீரான' என்ற வார்த்தை இடம்பெறுவது அவசியம்.

சட்ட அங்கீகாரம் உள்ள வழக்கங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார். இது மிகவும் தவறு. பொது மக்களின் கருத்து மாறிவிட்டதால், சில குறிப்பிட்ட சட்ட அதிகார அறிவிப்புகள் இப்பொழுது நல்ல சட்ட மாக இல்லை. வழக்கம் என்பது தொடர வேண்டும் என்று மக்கள் விரும்பவில்லை. சில குறிப்பிட்ட வழக்கங்கள் மிக நல்ல அங்கீ காரத்தைப் பெற்றிருக்கின்றன. ஆனால் அவை வழக்கு மன்றங் களுக்குச் சென்றதுமில்லை. அவற்றின் மீது சட்ட அதிகார அறிவிப்பு களும் இல்லை. ஆகவே பண்டிட் தாகூர் தாஸ் பர்கவாவின் எல்லாத் திருத்தங்களும் எங்கும் நிற்காது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'வருணம்' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளும்படி திரு. ஜுன்ஜுன்வாலா தமது திருத்தத்தில் கூறுகிறார். எந்த வருணத் தோடும் தொடர்புடையதாக எந்த வழக்கமும் இல்லை. எல்லா வழக்கங்களும் சாதி, குடும்பங்கள், குறிப்பிட்ட இடங்கள் ஆகிய வற்றோடுதான் தொடர்புடையன. எந்த வழக்கமும் அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளால் வழக்கம் என்று அங்கீகரிக்கப்பட்ட எந்த முடிவும் வருணத்தின் வழக்கமாக இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. அது எந்த வழக்குமன்றத்தின் முன்னாலும் வந்ததில்லை. இரண்டு நிபந்தனைகளையும் நீக்க வேண்டுமென்று திரு. சியாம் நந்தன் சகாயா தமது திருத்தத்தில் கூறுகிறார். இந்த இரண்டு நிபந்தனைகளும் மொத்த வரையறையின் உயிரும் உள்ளமுமாய் இருக்கின்றன. ஆகவே அவை நீக்கப்பட முடியாது. எனவே, பிரிவு (i)ஐ அப்படியே நான் ஆதரிக்கிறேன்.

**திரு.பி.கே.பி. சின்ஹா:** இந்தப் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட திருத்தங்களில் வலு இல்லை என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் முன்வைத்திருக்கிற இந்த பிரிவு எளிமையானது. சட்டத்தை அப்படியே உள்ளடக்கியிருக்கிறது. 'சீரான தன்மை' மற்றும் 'பொதுக்கொள்கை' என்ற வார்த்தைகளுக்கு விமர்சகர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு வழக்கம் செல்லுபடியானதாக இருக்க வேண்டுமானால், அது ஒரே சீராக கடைப்பிடிக்கப்படு வதாக இருக்க வேண்டும் என்று பல்வேறு உயர்நீதிமன்றங்களின் முடிவுகளாலும், தீர்ப்புகளாலும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கத்திற்கு ஒரே சீரான தன்மை முக்கியமான தல்ல என்ற மறு கருத்திற்கு ஆதரவாக பிரிவி கவுன்சில் வழக்கு ஒன்றை திரு. சியாம்நந்தன் சகாயா குறிப்பிட்டார். நான் அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே நான் இப்போது பேசுவது திருத்தத்திற்குரியது. சமூக, மத வழக்கங்கள் மற்றும் விவசாய, வியாபாரக் களங்களில் பரவலாகக் காணப்படும் வழக்கங்கள் ஆகிய வற்றுக்கிடையே வேறுபாடு உண்டு. சமூகம் மற்றும் மதத்தைப் பொறுத்தவரையில், வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவை ஒன்றுக் கொன்று இடைமாற்றமாகக் கூடிய சொற்கள். ஆனால் வேளாண்மை, வாணிபம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காணப்பட்டிருக்கிறது. வழக்கம் என்பது அதன் தொல்பழமைக்குப் பெயர் பெற்றது. அது நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து தொடர்ந்து வருவது. பயன்பாடு என்பது வளர்ச்சியின் வழியில் ஏற்படுவது. இது புதியது. எனக்குத் தெரிந்த பிரிவி கவுன்சில் வழக்கு, வாணிபம் மற்றும் வேளாண்மை யைப் பொறுத்தவரையில் மட்டும்தான் வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் சமூக மற்றும் ஒருசார் சமயச் சார்புள்ள இந்தப் பிரச் சினைக்கு உகந்ததாகவோ, நெருங்கியதாகவோ அது இல்லை. வழக்கத்தின் அங்கீகாரத்தைக் காணும் சோதனையாக ஒரே சீரான தன்மையைத்தான் வகுத்துரைத்திருக்கிறார்கள் என்பதை பல முடிவு களிலிருந்து கண்டிருக்கிறேன். பொதுக் கொள்கையைப் பொறுத்த வரைக்கும், ஏன் மக்கள் இதைப் பற்றிப் பயப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், பொதுக் கொள்கைக்கு எதிரான வழக்கம் செல்லுபடியாகாது என்று பிரிவி கவுன்சில், பாட்னா உயர்நீதிமன்றம், கல்கத்தா உயர்நீதிமன்றம் மற்றும் பல உயர்நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருப்பதைக் காண்கிறேன். இந்த விஷயத்தில் கூட, மாண்புமிகு சட்ட அமைச்சர், அவர் சமர்ப்பித்த பிரிவில், இந்த சட்டத்தை அப்படியே உள்ளடக்கியிருக்கிறார். மேலும், எல்லா வகையான வழக்கங்களுக்கும் நாம் விதிவிலக்கு

அளித்துக் கொண்டே போனால், இந்த சட்ட ஒழுங்குபடுத்தலுக்கு என்ன அடிப்படையான நியாயம் இருக்க முடியும்? ஒரே சீரான தன்மையையும், உறுதித் தன்மையையும் புகுத்துவதற்காகத்தான் இந்த சட்ட ஒழுங்குபடுத்தல் முக்கியமாக நடைபெறுகிறது. குடும்பங்களிலும், நாட்டின் பல பாகங்களிலும் பரவலாகக் காணப்படும் வழக்கங்களுக்கு நாம் விதிவிலக்குகளைச் செய்தால், இந்த நாடு முழுமைக்குமான ஒரே சீரான சட்டம் இருக்காது. சட்ட ஒழுங்கு படுத்தலின் முழு நோக்கமும் தோற்கடிக்கப்படும். ஒவ்வொருவரும் உறுதியுடன் எடுத்துப் பார்க்க வாய்ப்பானதாக இருக்க வேண்டும் என்பது தான் சட்ட ஒழுங்குபடுத்தலின் இரண்டாவது நோக்கம். வழக்கம் முதலானவற்றிற்கு நாம் விதிவிலக்குகளை அளித்தோமானால் இந்த உறுதித்தன்மை போய்விடும். ஆகவே எந்த நோக்கத்திலிருந்து பார்த்தாலும், திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டு, இந்தப் பிரிவு அப்படியே நிறைவேற்றப்பட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சரைப் பேச அழைக்கிறேன்.

**திரு. பாபு ராம்நாராயன் சிங்** *(பீகார்):* ஐயா, நானும் பேச வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** போதுமான அளவு ஏற்கெனவே பேசப்படவில்லையா?

[1]**திரு. பட் :** நீங்கள் அதை அனுமதித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஆனால் அதில் எந்த குறிப்பிட்ட முக்கியத்துவமும் இல்லை. அதில் வார்த்தைகள் சிறிதளவு மாற்றி யமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

**திரு.பட் :** அதை ஏன் கொண்டு வந்தேன் என்பதை நான் விளக்க வேண்டும். வெறும் வார்த்தை மாற்றியமைப்புக்காக மட்டும் அதை நான் கொண்டுவரவில்லை.

**பாபுராம்நாராயண் சிங் :** நான் நீண்ட நேரமாக நின்று கொண்டிருக்கிறேன்.

1. நா.வி., தொகுதி XV, செப்டம்பர் 21, 1951, பக். 3014-54.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நான் என்ன செய்வது?

**திரு.வி.ஜே.குப்தா (சென்னை):** ஐயா, நான் சொற்பொழி வாற்ற விரும்பவில்லை. ஆனால் ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.

**பாபுராம்நாராயண் சிங் :** தங்கள் பார்வை என் மீது விழ வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மரியாதைக்குரிய உறுப் பினர் எண்ணற்ற முறை எழுந்து நிற்பதாலேயே என் கண்ணில் பட வேண்டும் என்று அர்த்தமில்லை. விவாதங்களை ஒழுங்குபடுத்த எனக்கு சில உரிமைகள் வேண்டும். நான் சில உறுப்பினர்களைப் பேச அழைப்பேன். சிலரை அழைக்கமாட்டேன். ஆனால், இன்னும் நேரம் இருக்குமானால் பார்க்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** ஒரே ஒரு செய்தியை மட்டும் விளக்க வேண்டியிருக்கிறது. மற்றும் ........

**திரு. பட் :** நீங்கள் எனக்கு நேரம் ஒதுக்கியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சரி, சட்ட அமைச்சரை நான் பிறகு அழைக்கிறேன். ஆனால், மொத்தத்தில் இந்தத் திருத்தத்தில் மிகவும் பொதுப்படையான சொல் சார்ந்த தகவல்தான் தரப்பட்டிருக் கிறது.

**பாபுராம்நாராயண் சிங் :** இல்லை ஐயா, அது முக்கிய மானதும் கூட.

**திரு. பட்:** என்னால் கொடுக்கப்பட்ட திருத்தம் சொல் சார்ந்த தல்ல. இதில் நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிற விஷயம் சட்ட அமைச்சருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அவர் தம்முடைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ள விரும்பாமலும் இருக்கலாம். உண்மையாகவே, நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில், அவரை ஒப்ப வைக்கும் தகுதி எனக்கு இல்லை. ஆனால் அவரால் கொண்டு வரப்பட்ட விஷயங்களில் உள்ள சில குறைபாடு களை அவரிடம் கூறி அவரது கவனத்தைக் கவர விரும்புகிறேன்.

முதல் விஷயம் 'வழக்கம் மற்றும் பயன்பாடு' ஆகியவற்றின் வரையறை பற்றியது. அந்த வரையறையை அவர் இங்கே அரை குறையான வடிவத்தில் கொடுத்திருக்கிறார். மறுபரிசீலனையில், சில வார்த்தைகளைக் கூட்டியோ குறைத்தோ அதன் முழுமையான பொருளை உணர்த்த அவர் தாமே முன்வருவார் என்று நம்பு கிறேன்.

'வழக்கம் மற்றும் பயன்பாடு' என்றால் மரபு, எழுதாச் சட்டம், நடைமுறைச் செயல்பாடு என நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் அவர் முன்வைத்திருக்கும் வரையறையோ தொடர்ச்சி, ஒரேசீரான தன்மை, உறுதித் தன்மை மற்றும் பொதுக் கொள்கைக்கு எதிரானதாயில்லாத் தன்மை ஆகிய நான்கு முக்கியக் கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. அதன் இடத்தில், துல்லியமாக அதே கருத்தைத் தெரிவிக்கும் எளிய வரையறையொன்றை முன்வைக்க நினைக்கிறேன். ஆனால் அவர் ஒரே சீரான தன்மை பற்றிப் பேசுகிறார். இந்த ஒரே சீரான தன்மை என்றால் என்ன? வெவ்வேறு சாதிகள் வெவ்வேறு வகையான வழக்கங்களைக் கடைப்பிடிக் கின்றன. ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களில் பரவியிருக்கிற ஒரே சாதி கூட வெவ்வேறு வகையான சலுகைகளை அனுமதிக்கின்றன. வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு பயன்பாடுகளைக் கொண் டிருக்கின்றன. ஆகவே ஒரே சாதியிலும் கூட வெவ்வேறு பிரதேசங் களில் வெவ்வேறு வகையான சீரான தன்மை நிலவுகிறது; வேறுபாடுகள் இருக்கின்றன. எனவே ஒரே சீரான தன்மை என்ற வார்த்தை ஏராளமான சிக்கலுக்கு வழிவகுக்கும். வழக்கறிஞர்கள் தான் பயனடைவார்கள். ஆகவே, மாறுபடுதல் தவிர்க்க முடியாது என்பதால், அது நீக்கப்படலாம்.

ஒரு சமூகம் குறிப்பிட்ட மாறுபாடுகளைச் செய்தால், அது அதனுடைய பயன்பாடாக இருப்பதால், அது ஐம்பது ரூபாய் அபராதம் கட்ட வேண்டியிருக்கும். இன்றைய நாளில் ஐம்பது ரூபாய்க்கு மதிப்பில்லை. அதனால் விரும்பிய அளவு பயன் இருக்காது. ஆகவே அபராதத் தொகையை நூறு ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்று எவரேனும் யோசனை கூறினால் இதில் ஒரே சீரான தன்மை இல்லை என்று நீங்கள் கூறலாம். நேற்றுவரை நன்றாக இருந்த ஒன்றை, இன்றைக்கு மாற்றுகிறீர்கள். பின் ஒரே சீரான தன்மை எங்கே இருக்கிறது? ஆகவே, ஒரே சீரான தன்மை யைப் பொறுத்தவரை, மாறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

'சட்டம்' என்ற வார்த்தை எவ்வாறு வரையறுக்கப்பட்டிருக்கிறதென்பதை விளக்குவதற்கு, அரசியல் சாசனத்தின் 13-வது விதியை இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

''சட்டம் என்பதில் அவசரப் பிரகடனம், ஆணை, துணை விதி, விதி, ஒழுங்குமுறை, விளம்பர அறிவிப்பு, சட்டம் அமலில் இருக்கும் இந்திய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவை அடங்கும்.''

இங்கு 'இந்திய எல்லைக்குட்பட்ட பகுதி' என்பதால் இந்தியா முழுமைக்கும் ஒரே வழக்கம்தான் இருக்கப் போகிறது என்று பொருள் இல்லை. இந்தியா முழுமைக்குமாக ஒரே ஆணை அல்லது விளம்பர அறிவிப்பு பிரயோகிக்கப்படும் என்பதும் இல்லை. அந்தந்தப் பிரதேசங்களில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப, ஒவ்வொரு மாநிலத்திற்குமான கொள்கையை இந்திய அரசு முடிவு செய்கிறது.

'அமுலில் இருக்கும் சட்டம்' என்றால் என்ன என்று கூற விரும்புகிறேன். அதுவே, 'மாறுபாடுகள்' மற்றும் 'ஒரே சீரான தன்மை' என்ற வார்த்தைகளிலிருந்து நான் என்ன புரிந்து கொண்டிருக்கிறேன் என்பதை விளக்கும்.

''எந்த ஒரு சட்டமும் அல்லது அதன் பகுதியும் நாடு முழுவதிலுமாக அல்லது குறிப்பிட்ட பகுதிகளில் நடைமுறையில் இல்லாத நிலையில், இந்த இந்திய அரசியல் சாசனம் அமலுக்கு வருவதற்கு முன்னால், ஒரு சட்டமன்றமோ அல்லது இந்தியாவில் உள்ள தகுதி உரிமையுள்ள அமைப்போ நிறைவேற்றிய அல்லது வெளியிட்ட, அதற்கு முன்னால் நீக்கப்படாத சட்டங்கள், 'அமுலில் இருக்கும் சட்டங்களில்' அடங்கும்.

ஆகவே இங்கே பயன்படுத்தப்பட்ட 'ஒரே சீரான தன்மை' என்ற வார்த்தை சிக்கலை உருவாக்கும் என்றும், அது நீக்கப்பட்டால் எந்த இழப்பும் ஏற்படாது என்றும் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தத்தில் வழக்கம் என்பதற்கு என்ன பொருள்? 'வழக்கம்' என்பது நமது முன்னோர்கள் காலத்திலிருந்து பரவலாக இருந்து வருகிற பயன்பாடு என்பதைப் புரிந்து கொள்ளகின்ற அளவிற்கு நாம் கற்றவர்களாக இருக்கிறோம். நேற்று வரை பரவலாகப் பயன்பட்ட குறிப்பிட்ட ஒரு செய்தியை நீங்கள் எடுத்துக் காட்டலாம். அதில்

இன்று நீங்கள் ஒரு மாற்றத்தைச் செய்கிறீர்கள். அந்தக் காரணத்திற்காகவே அதை நாம் 'வழக்கம்' என்று கொள்ள மாட்டோமா? அது நமக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதா? பொருளாதாரவாதிகளைப் பாதிக்காமல் இருக்கலாம். ஆனால் அது முறையானதல்ல. ஆகவே 'வழக்கம்' என்ற வார்த்தையைக் கொண்டு அதற்கேற்ப சில சலுகைகளை அளிப்பதாயிருந்தால், மக்கள் அதன் மூலம் பலனடையும் வகையில் அது வைக்கப்பட வேண்டும்.

சட்ட அகராதியில் 'வழக்கம்' என்பது கீழ்க்கண்ட வகையில் வரையறுக்கப்படுகிறது:

> ''தொடர்ச்சியானதாகவும், அமைதியானதாகவும், போதிய அளவு உறுதியானதாகவும், கட்டுப்பாடுடையதாகவும், ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்தினாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் விருப்பத்திற்கு விடப்படாததாகவும், ஒரு வழக்கம் மற்றொன்றோடு முரண்பட முடியாததாகையால் மற்ற வழக்கங்களோடு உடன்பாடுடையதாகவும் இருக்க வேண்டும்.''

இந்த செய்திகளையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். 'தொடர்ச்சியான' என்ற வார்த்தை 'நடைமுறையில் இருக்கின்ற' என்பதற்கு இணையானது என்று நான் குறிப்பிட்டேன். இது தவறான வார்த்தை அல்ல. 'நடைமுறையில்' என்கிற சொல் ஆங்கில மொழியில் உள்ள விரிவான பொருளுடைய வார்த்தை. பரவலாகவும் நடைமுறையிலும் உள்ள ஒன்று என்று இதற்குப் பொருள். அதனால்தான் 'நீண்ட காலமாக நடப்பில் இருக்கிற' 'நீண்ட காலமாக நடைமுறையில் இருக்கிற' என்ற சொற்களை நான் பிரேரணை செய்தேன்.

'சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற....' என்பது நான் முன்வைத்த இரண்டாவது விஷயம். இது மிகவும் எளிதானது. ஏற்றுக்கொள்ளப் பட்டால் இது அங்கீகரிக்கப்பட்ட மரபு ஆகிவிடும்.

நான் எடுத்துக் கொண்ட மூன்றாவது விஷயம், 'பொதுக் கொள்கை' அல்லது 'பொது நடத்தை ஒழுக்கம்' பற்றியது. பிரேரேபிக்கப்படுபவற்றில், மரபுகள் இடம்பெறும்போது, 'பொதுக் கொள்கை' என்ற வார்த்தைக்கு தேவை என்ன என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கங்கள் மட்டுமே

ஓரிடத்தில் அனுமதிக்கப்படும், மற்றவை அல்ல என்று நீங்கள் கூறக் கூடும். பிறகு எந்த வழக்கங்கள்தான் பொது கொள்கைக்கு எதிராக இருக்கும்? 'பொதுக்கொள்கை' என்றால் என்ன? இந்த வார்த்தை யாரேனும் ஒரு வழக்கறிஞர் அல்லது நீதிபதியிடமிருந்து வந்திருக்கும். அதை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் 'பொதுக் கொள்கை' பற்றி தெளிவாக இருக்க வேண்டும். 'பொதுக் கொள்கை' அல்லது 'பொது நடத்தை ஒழுக்கம்' போன்ற எந்த ஒரு சொல்லுக்கும் தேவை இல்லை என்று நான் நினைக்கிறேன். மொத்தத்தில், சட்டத்தில் மரபுகளுக்கு எங்கு இடம் இருக்கிறதோ அங்குதான் மரபுகள் பின்பற்றப்படும். ஆகவே இந்த வார்த்தைகளுக்குத் தேவை இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நான் இப்போது சாதி மற்றும் கிளை சாதி பற்றி சிறிது கூற விரும்புகிறேன். இந்த வார்த்தைகள் என்னுடையவையல்ல. இவை நமது அரசியல் சாசனம் 15 மற்றும் 16-வது பிரிவுகளில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. நேற்று இரண்டாவது · பிரிவில் 'சமுதாயம்' என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தினோம். ஆனால் அரசியல் சாசனத்தில் 'சமுதாயம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. ஆனால் 'சாதி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினோம். 'சமுதாயம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'சாதி மற்றும் கிளை சாதி' என்ற வார்த்தைகள்தான் மிகவும் தகுதியாக இருக்கும் என்பது என் கருத்து. 'சமுதாயம்' என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டுமென்று கூற வில்லை. ஆனால் இந்த இரண்டு வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்வதால் தீங்கு ஏதுமில்லை.

இந்த வார்த்தைகளோடு நான் எனது திருத்தங்களை முன் வைக்கிறேன். இது நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை. ஆனாலும், தயவு செய்து மாண்புமிகு சட்ட அமைச்சர் இதுபற்றி சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பாபுராம்நாராயண் சிங் :** *(இந்தி பேச்சின் மொழியாக்கம்)* ஐயா, உங்களால் மேற்கொள்ளப்பட்ட முடிவு மிகவும் நேர்த்தி யானது. எல்லோருக்கும் ஏற்புடையது. ஆனால் சில சமயங்களில் நீங்கள் மிக அவசரமாக முடிவெடுக்கிறீர்கள். அது எங்களை வருத்து கிறது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருள் பற்றி போதுமான அளவு விவாதம் நடைபெறுவதால், தாங்கள் அவசர முடிவு எடுக்க வேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நானும் கூட பலமுறை எழுந்து நின்றேன். தங்களது பார்வை என் மீது பட்டு, நானும்கூடப் பேச அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**திரு.வி.ஜே. குப்தா :** என்னுடைய சந்தேகம் ஒன்று தீர்க்கப்பட வேண்டும். வரையறையில் கூறப்பட்டிருப்பதாவது : 'வழக்கம்' மற்றும் 'பயன்பாடு' எனும் சொற்பிரயோகங்கள், தொடர்ச்சியாகவும், ஒரே சீராகவும் மிக நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்படுவதால், உள்ளூர்ப் பிரதேசங்களில், இனக் குழுக்களில், சமுதாயத்தில், அல்லது குடும்பத்தில் உள்ள இந்துக்களிடையே சட்ட அங்கீகாரத்தைப் பெற்ற விதியைக் குறிக்கிறது.''

நமது பகுதிகளில் பல சமூகங்களில் ஓர் இளைஞனுக்கும் அவனுடைய தாய்மாமன் மகளுக்குமிடையே நடைபெறும் திருமணம் ஏற்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். தொடர்ச்சியாகவும் ஒரே சீராகவும் கடைப்பிடிக்கப்படாவிட்டாலும் கூட அது ஒரு பொதுப் பழக்கமாக இருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நீங்கள் அந்த முழுச் சட்டப் பிரிவையும் படிக்க வேண்டும். அதில் ஒரு விசேஷ விதிவிலக்கு அளிக்கப்பட் டிருக்கிறது.

**திரு. வி.ஜே. குப்தா:** மேலும், ''பொதுக் கொள்கைக்கு எதிராக'' என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு நடைமுறை, ஒரு பகுதியில் வாழும் மக்கள் அனைவராலும் கடைப்பிடிக்கப்படுகிறபொழுது அது எப்படி பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும்?

**டாக்டர் தேஷ்முக் :** நான் இதை எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதற்கு எதிராக நீங்கள் வாக்களிக்கலாம்.

**பாபுராம் நாராயண் சிங் :** நானும் அதைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குப் பேச உரிமை இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் ஆய்ந்து பார்த்தபோது, போதுமான அளவு விவாதம் நடைபெற்றிட வைக்கும் சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், யாராவது அதை முன்மொழியட்டும். நான் அதை அவை முன் வைக்கிறேன்.

**திரு. சந்தானம்:** ஐயா, இப்போது விஷயத்தை முன் வைக்கலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** விஷயம் இதுதான் :

''விஷயத்தை இப்போது முன்வைக்கலாம்''.

தீர்மானம் நிறைவேறியது.

**பாபுராம்நாராயண் சிங் :** அவர்களின் குரலைவிட என் குரல் ஓங்கியிருந்தது.

**டாக்டர் அம்பேத்கர் :** பிரிவு 4-டன் தொடர்புடைய இந்த உபபிரிவின் நிலை பற்றியும், வழக்கம் என்பது பொதுவாகவும் மாறாக சட்ட நிலையிலும் எவ்வாறு கையாளப்படுகிறது என்பது பற்றியும் ஏற்கெனவே எனது முந்தைய குறுக்கீட்டில் விளக்கியிருக்கிறேன்.

வழக்கம் என்ற சொல்லை வரையறுக்க உபயோகிக்கப் பட்டிருக்கும் சரியான சொற்கூறுகளைப் பொறுத்தவரையிலும், பிரேரேபிக்கப்பட்ட எந்தத் திருத்தத்தையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கூறியதைப் போல, இந்த வரையறை, நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள உச்சநீதிமன்றங்களில், வழக்கம் என்பதை வரையறுத்திருக்கும் நீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து சொற்பிறழாமல் அப்படியே நகலெடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் துணைப் பிரிவில் பிரேரேபிக்கப்பட்டிருக்கும் வரையறையிலிருந்து விலகிச் செல்ல எந்த ஒரு காரணமும் இல்லை என்று கருதுகிறேன்.

**துணை சபாநாயகர்:** விஷயம் என்னவென்றால் பிரிவு 3-ல் ''பொருளுரை அல்லது தறுவாயில் முரணாக ஏதேனும் இருந்தாலன்றி" என்ற சொற்களுக்குப் பதில் ''தறுவாயின் தேவை வேறானாலன்றி" என்ற சொற்களை மாற்றீடு செய்யலாம்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் என்னவென்றால், பிரிவு 3-ல் இனங்கள் (i), (ii), (iii) மற்றும் (iv) ஆகியவற்றை இனங்கள் (ii), (iii), (iv) மற்றும் (v) ஆக மாற்றியமைக்கவும். மேலும் (i) ஆகக் கீழ்க்கண்டவற்றை இடையில் சேர்க்கவும்:

(i) 'அலியசந்தான சட்டம்' என்றால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்காவிட்டால், மெட்ராஸ் அலியசந்தான சட்டம் 1949 (மெட்ராஸ் சட்டம் 1949இன் IX) கீழ் கட்டுப்படுத்தக்கூடிய மக்களுக்குப் பொருந்தக்கூடிய சட்ட அமைப்பு என்று பொருள்."

*தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நிறைவேற்றப்பட்ட முந்தைய தீர்மானத்தின் மூலம் பகுதிகளின் தொடர் எண்கள் மாற்றப்பட்டுவிட்டதால், பகுதி (i) உடன் தொடர்புடைய எல்லாத் திருத்தங்களும், இப்பொழுது பகுதி (ii) உடன் தொடர்புடையன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அவை முன்வைக்கிறேன்.

*பிரிவு 3ல் பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i) ல் 'இந்துக்களுக்கிடையில்' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, 'இந்தச் சட்டம் பொருந்தக்கூடிய மக்களுக்கிடையில்' என்பதை மாற்றீடு செய்யவும்.*

*தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

*பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i)ல் 'மற்றும் ஒரே சீரான தன்மை' என்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்.*

*தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

*பிரிவு 3-ல் பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i)ல்*

*(அ) 4-வது வரியில் காணப்படுகிற 'குழு அல்லது குடும்பம்' என்ற வார்த்தைகளுக்குப் பின், கீழுள்ளவாறு சேர்க்கவும்:*

*''அல்லது உறுதியானதாகவும், நியாயமானதாகவும், செல்லத் தக்கது என்று சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டதாகவும், உள்ளூர் பிரதேசங்கள், இனக்குழு, சமுதாயம், குழு அல்லது குடும்பத்தில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்துவதாகவும் உள்ள எந்த விதியும்''*

மேலும்

(ஆ) முதல் நிபந்தனை வாசகத்தை நீக்கவும்.

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i)ல் 'இனக்குழு' என்ற வார்த்தைக்குப் பிறகு 'வருணம்' என்ற வார்த்தையை இடையில் சேர்க்கவும்.

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் எண் 413. நிராகரிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், திருத்தம் எண் 414-க்குத் தேவையே இல்லை.

விஷயம் வருமாறு:

பிரிவு 3-இல் பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i)க்கு முன்னுள்ள நிபந்தனை வாசகங்களை நீக்கி விடவும்.

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

பிரிவு 3-ல் பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்டுள்ள பகுதி (i)க்கு கீழ்க்கண்டவற்றை மாற்றீடு செய்யவும்.

'' 'வழக்கம்'' மற்றும் ''பயன்பாடு'' என்னும் சொல் பிரயோகங்கள், நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்படுவதால் உள்ளூர் பிரதேசங்கள், சாதி, துணை சாதி, இனக்குழு, சமுதாயம், குழு அல்லது குடும்பத்தில் வாழும் இந்துக்களிடையே சட்ட அங்கீகாரத்தைப் பெற்று வருகிறது:

அந்த விதி உறுதியானதாகவும் நேர்மையானதாகவும் இருக்குமானால், அந்தக் குடும்பத்தினரால் இடையில் அது கைவிடப் படாது இருக்குமேயானால்''

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** விஷயம் வருமாறு:

பிரிவு 3-இன் பகுதி (ii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (i) மசோதாவின் பகுதியாகிறது.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

***திரு. நசிருத்தீன் அகமது:*** பகுதி (ii)க்கு திருத்தம் எண் 377 என்னிடம் உள்ளது.

***டாக்டர் அம்பேத்கர்:*** நான் இங்கு ஒரு யோசனை வெளியிட விரும்புகிறேன். ஏனென்றால் அது நம் வேலைச்சுமையைக் குறைக்கும். பகுதி (ii)இல் கொடுக்கப்பட்ட சில வரையறைகள் திருமணம் மற்றும் விவாகரத்துக்கு மட்டுமல்லாமல், இந்தச் சட்டத்தின் மற்ற பகுதிகளுக்கும் பொருந்தும் எண்ணத்துடன் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்கள் காரணமாக, அடுத்து வருகிற கட்டங்களில், திருமணம் மற்றும் விவாகரத்துக்குத் தொடர்பான சட்ட வாசகங்களைக் குறுக்கி இந்த வரையறைகளைத் திருத்தும் அவசியம் எனக்கிருக்கிறது. ஆகவே, இதற்கு பெரிய முக்கியத்துவம் எதுவும் கொடுக்காமல், சம்பிரதாய முறையில் நிறைவேற்ற இந்த அவைக்கு யோசனை கூறுகிறேன். ஏனென்றால், இதற்குப்பின் தொடர்ந்து வருகின்ற திருத்தங்களைப் பற்றி விவாதிக்க நான் மீண்டும் வருவேன். அப்பொழுது, அவர்கள் விரும்பினால் இந்த விஷயங்களைப் பற்றி மிக விரிவாகப் பேசலாம். இப்போதைக்கு இந்த வரையறை பற்றி நான் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில் அதை நான் திருத்த வேண்டியிருக்கிறது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** இந்தப் பகுதியை மட்டும் தள்ளிவைக்க அனுமதிப்பதில் ஏதாவது எதிர்ப்பு இருக்கிறதா?

***டாக்டர் அம்பேத்கர்:*** எனக்கு எந்த எதிர்ப்பும் இல்லை.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** நடந்த கருத்துப் பரிமாற்றங்களின் காரணமாக, தொடர்ந்து சில திருத்தங்களைப் பின்னர் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே இந்தப் பகுதியைத் தள்ளிவைக்க அனுமதிக்கிறேன்.

***திரு. சந்தானம்:*** இதனால் மொத்தப் பிரிவும் தள்ளிவைக்கப்படுவதாகப் பொருள்படும். ஆனால் பகுதி (viii) மற்றும் (ix)

ஆகியவற்றையும் நிறைவேற்றிவிட்டு, பிறகு முழுப் பிரிவையும் அவை முன் வைக்கலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** முழுப் பிரிவையும் முன் வைப்பதா அல்லது பகுதி பகுதியாக முன்வைப்பதா என்பது அவைத் தலைவரின் விருப்பத்தைப் பொறுத்தது. இயல்பாகவே, நான் பகுதி பகுதியாக முன்வைத்திருக்கிறேன். ஏற்கெனவே நாம் இரண்டு பகுதிகளை நிறைவேற்றிவிட்டோம்.

**திரு. பாரதி:** பொருள் வரையறைகள் எப்பொழுது வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தச் சட்டம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் எல்லைக்கு உட்படுத்தப்படுகிறதென்றால், அவ்வாறு செய்வதில் என்ன தீங்கு நேர்ந்துவிடும்?

**திரு. நசிருத்தீன் அகமது:** என்னுடைய தீர்மானம் இந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காகத்தான், ஐயா.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் அதிகமாக முன்னோக்கிச் சிந்திக்கிறார். மாண்புமிகு அமைச்சர் தான் சொல்வதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார். ஆகவே இந்த விஷயம் தள்ளிவைக்கப்படுகிறது.

**திரு. நசிருதீன் அகமது:** எனக்கு ஆட்சேபனை இல்லை.

**திரு. பாரதி:** நாம் நிறைவேற்ற இருக்கிற இந்தச் சட்டப் பகுதியில் 'முழு இரத்த உறவு' மற்றும் 'பாதி இரத்த உறவு' என்னும் வார்த்தைகள் இடம்பெறவில்லை. முதலில் நாம் இந்தச் சட்டத்தை முழுவதுமாக நிறைவேற்ற இருந்தோம். எனவே இந்த வார்த்தைகள் அவசியமாக இருந்தன. இப்பொழுது இந்த வார்த்தைகள் இந்தப் பகுதியில் இடம்பெறாததால் அவற்றை விட்டுவிடலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:**

தடுக்கப்பட்ட உறவு முறைகள், சபிண்டா உறவு முறை சம்பந்தமாக இவை எழக்கூடும். ஆகவே, இந்தப் பகுதியை இப்போது நிறைவேற்றுவதுதான் உசிதமாக இருக்கும் என்பது எனது யோசனை. பிறகு, திருத்தங்கள் செய்ய வேண்டுவது அவசியம் என உணர்ந்தால், நான் அவ்வாறே செய்கிறேன்.

**திரு. பாரதி:** மொத்தத்தில் இவை எல்லாம் வார்த்தைகளாலான வரையறைகள். இவை பின்வரும் சட்டப் பிரிவுகளில் காணப்படும் வார்த்தைகளைப் பற்றிய குறிப்பீடுகளைக் கொண்டிருக்கும், திருமணம் மற்றும் விவாகரத்துப் பற்றிய சட்டப் பிரிவில் இந்த வார்த்தைகளை நாம் காணவில்லை என்றால், இந்த வரையறையைக் கொண்டிருப்பதில் எந்தத் தகுதியுமில்லை என நினைக்கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** இந்தப் பகுதி திருத்தம் எண் 360 மூலம் திருத்தப்பட்டுள்ளது. அதுதான் இந்தப் பகுதியின் சமீபத்திய வடிவமாகும். அங்குகூட 'பெண்வழி மரபினர்' என்பன போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த வரையறைகள் அப்படியே நீடிக்குமாறு விட்டுவிடுவதுதான் சிறந்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். பின்னர் தொடர்ந்து வரும்பொழுது, மாற்றம் தேவை என்று கண்டால், நாம் மாற்றம் செய்யலாம். ஏனென்றால் நான் முன்னர் கூறியதுபோல, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து தகுந்த திருத்தங்களைக் கொண்டுவரும் உரிமையைப் பெற்றிருக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எப்படியிருந்தாலும், சந்தேகமில்லாமல், திருமணம் மற்றும் விவாகரத்து பற்றிய சட்டப் பிரிவுகளில் இவை தேவைப்படுபவைதான். இந்த சொற்கள் மூலப் பகுதியிலும் திருத்தப்பட்ட பகுதியிலும் இருக்கின்றன.

பகுதி (iii)ஐ வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

விஷயம் வருமாறு:

பிரிவு 3-இன் பகுதி (iv) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (iii) மசோதாவின் பகுதியாகிறது.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

பகுதி (v) என்று எண் மாற்றி அமைக்கப்பட்ட எண் (iv)க்குக் கொடுக்கப்பட்ட விளக்கத்தில், 'இந்தப் பிரிவு' என்பதற்குப் பதிலாக 'பிரிவுகள் (iv) மற்றும் (v) என்று மாற்றீடு செய்யவும்.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:**

பகுதி (V) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (iV), திருத்தியபடி, மசோதாவின் பகுதியாகிறது.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** விஷயம் வருமாறு:

பிரிவு 3-ல் பகுதி (V) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (iV)க்குப் பிறகு கீழ்க்கண்ட புதிய பகுதியைச் சேர்க்கவும்.

'மருமக்கள்தாயம் சட்டம்' என்றால்,

(a) இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தால், மெட்ராஸ் மருமக்கள்தாயம் சட்டம், 1932 (மெட்ராஸ் சட்டம் XXII / 1933), திருவாங்கூர் நாயர் சட்டம் 1100இன் II, திருவாங்கூர் ஈழவா சட்டம் 1100 இன் III, நாஞ்சில்நாடு வெள்ளாளா சட்டம் 1101, திருவாங்கூர் க்ஷத்திரியா சட்டம் 1108, திருவாங்கூர் கிருஷ்ணவாக மருமக்கட்தாயீ சட்டம் 1115, கொச்சின் தியா சட்டம் 1107 இன் VIII, கொச்சின் நாயர் சட்டம் 1113, கொச்சின் மருமக்கள்தாய சட்டம் 1113இன் XXXIII ஆகியவற்றுக்கு உட்பட்ட மக்கள் அல்லது

(b) திருவாங்கூர்-கொச்சி அல்லது மெட்ராஸ் மாநிலத்தில் வந்து பெருமளவில் குடியேறிய எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்களானாலும், இந்தச் சட்டம் நிறைவேற்றப் படாமலிருந்தால், அலியசந்தான சட்டம் நீங்கலாக, தங்கள் வாரிசுகளை பெண்வழியில் நிர்ணயிக்கும் வழிவழி வந்த எந்த சட்ட அமைப்புக்கும் மக்கள் ஆகியோருக்கும் பொருந்தக் கூடிய சட்ட அமைப்பு என்று பொருள்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**திரு. நசிருத்தீன் அகமது:** இது மறுபரிசீலனைக்குரியது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இல்லை. நாம் அலியசந்தான சட்டத்தை நிறைவேற்றிவிட்டோம்.

**டாக்டர் அம்பேத்கர்:** அதன் சாரத்தை மறுபரிசீலனை செய்யலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மொழியைப் பொறுத்த வரையிலும், எந்த வகை மாற்றத்திற்கான யோசனை கூறவும் எப்பொழுதும் மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை உண்டு.

விஷயம் வருமாறு:

பிரிவு 3-இல் 'மருமக்கள் தாயம் சட்டத்திற்கான' வரையறைக்குப் பின்னால் கீழ்க்கண்ட புதிய பகுதியைச் சேர்க்கவும்:

(vii) நம்பூதிரி சட்டம் என்றால், இந்தச் சட்டம் நிறைவேற்றப் படாதிருந்தால், மெட்ராஸ் நம்பூதிரி சட்டம் 1932 (மெட்ராஸ் சட்டம் 1933-இன் XXI), கொச்சி நம்பூதிரி சட்டம் 1114-இன் XVI), அல்லது திருவாங்கூர் மலையாள பிராமணர் சட்டம் 1106 (ஒழுங்குபடுத்தப்பட்ட 1106-இன் 111) ஆகிய சட்டங்களுக்கு உட்பட்ட மக்களுக்குப் பொருந்தக்கூடிய சட்டம் என்று பொருள்.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நாம் இப்பொழுது பகுதி (Viii)க்கு வருகிறோம். அதன் மூலப்பகுதி (V). 'பகுதி' என்றால் இந்தச் சட்டத்தின் எந்தப் பகுதியும்' என்று அது கூறுகிறது. அதைச் சேர்த்துக்கொள்ள அவர் விரும்புகிறாரா?

**டாக்டர் அம்பேத்கர்:** இப்போதைக்கு, நான் எதைத் திருத்த வேண்டும், எதை நீக்க வேண்டும் என்று சொல்வது மிகவும் கடினம். இதைப் பற்றி ஆலோசிக்க எனக்கு அவகாசம் வேண்டும். பிறகு நான் இதை மசோதாவாகவோ, சட்டப் பிரிவாகவோ மாற்றுவேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அப்படியானால், மூலப் பகுதி (V)Z (தற்போதைய (viii))ஐ தள்ளி வைக்கிறேன்.

இப்பொழுது, 'வகுத்தமைக்கப்பட்டது' என்பதன் வரையறைக்கு வருகிறேன்.

**கேப்டன் ஏ.பி. சிங் (விந்தியப் பிரதேசம்):** வரையறை பிரிவில், 'குலம்' என்பதன் வரையறையையும் சேர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இவற்றை முதலில் முடிப்போம். விஷயம் வருமாறு:

பிரிவு 3-இல் பகுதி (ix) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (vi), மசோதாவின் பகுதியாகிறது.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**திரு. பாரதி:** 'சட்டத் தொகுப்பு' என்ற வார்த்தை மாற்றப்படும் என்று கொள்ளலாமா?

**டாக்டர் அம்பேத்கர்:** அது பொருத்தமாக மாற்றப்படும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 'வகுத்தமைக்கப்பட்டது' என்பதன் வரையறையோடு தொடர்புடைய பகுதி (vi), எண் மாற்றி யமைக்கப்பட்டபடி, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்போது 'தொடர்புடையது' என்பதன் வரையறையோடு தொடர்புடைய பகுதி (vii)க்கு வருவோம். அது (X) என்று எண் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. விஷயம் வருமாறு: பிரிவு 3-இன் பகுதி (X) என்று எண் மாற்றி யமைக்கப்பட்ட பகுதி (vii), மசோதாவின் பகுதியாகிறது.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** டாக்டர் அம்பேத்கரின் திருத்தம் எண் 5-இன் பகுதி (vi)க்கு வருவோம். (viii) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதியில் 'ஏதாவது' என்பதற்குப் பதிலாக 'ஒரு' என்று மாற்றீடு செய்யவும்.

**டாக்டர் அம்பேத்கர்:** முதலில் அது 'ஏதாவதொரு பகுதி' என்று இருந்தது. இப்பொழுது அதை 'ஒரு பகுதி' என்கிறேன். ஆனால் எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (viii)ஐ நீங்கள் நிறுத்தி வைத்திருப்பது நினைவிருக்கும். ஆகவே இதுவும் தள்ளி வைக்கப் படும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மூலப் பிரிவின் பகுதி (viii) - 'மகன்' என்பதற்கான வரையறைக்கு வருவோம்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** நான் இங்கு ஒரு திருத்தம் வைத்திருக்கிறேன். அதன் எண் 127.

**டாக்டர் அம்பேத்கர்:** அது ஒரு வகையான அதிகாரப் பத்திரம்.

**திரு. இராஜகோபாலாச்சாரி:** பஞ்சாபில் இது ஒரு வகையான 'தத்து எடுத்தல்' ஆகும்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** இது அதிகாரப் பத்திரம் அல்ல. எளிதாக்கப்பட்ட ஒன்று.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** நான் பின்வருவதை முன் மொழிகிறேன்:

> பிரிவு 3-இல் பகுதி (xi) என்று எண் மாற்றியமைக்கப் பட்ட பகுதி (viii) பகுதிக்கு கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்யவும்:
>
> (xi) ''மகன்' என்பது நியமிக்கப்பட்ட வாரிசு மற்றும் தத்தெடுக்கப்பட்ட மகன், அவர்கள் இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ, வந்தபின்போ நியமிக்கப் பட்டிருந்தாலும், தத்தெடுக்கப்பட்டிருந்தாலும், அத்தகைய வனை உள்ளடக்கும். ஆனால் முறைகேடாகப் பிறந்த மகனை உள்ளடக்காது.'' வாரிசை நியமிப்பது என்பது பஞ்சாபில் ஒரு சிறப்பு வழக்கம் என்பதை இந்த அவை அறிந்திருக்கும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 'மகன்' என்பதற்கான வரையுறைகளை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு வாரிசை அல்லது வாரிசாக நியமிக்கப்பட்டவரைப் பொறுத்தவரையில், அவர் சொத்துக் காரணங்களுக்காக நியமிக்கப்படலாம். உண்மை யில், அவரை வாரிசாக நியமிப்பவரின் மகளைத் திருமணம் செய்து கொள்ளத் தகுதியுடையவராக அவர் இருக்க வேண்டும்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** வழக்கத்தில் அவர் மகனுக்கு ஒப்பாகிறார். ஆகவே அவர் தன் சொந்த சகோதரியைத் திருமணம் செய்துகொள்ள முடியாது. வாரிசாக நியமிக்கப்படுகிறவர் மிக நெருங்கிய உறவுடையவராகிறார். எல்லா நடைமுறைச் செயல்பாடு களிலும் அவர் மகனைப் போலவே இருக்கிறார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மிகவும் நெருங்கிய உறவு வளையத்திற்குள் வருகின்ற அளவிற்கா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** ஆம். அவர் அந்தக் குடும் பத்திற்குள் வந்துவிடுகிறார். இப்பொழுது அம்பாலா ஆணையரின்

ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் பகுதியில் வாரிசு நியமனத்தில் பல்வேறு வழக்கங்கள் இருக்கின்றன. இது ஏறத்தாழ தத்து எடுத்தல் போலவே இருக்கும். தத்து எடுத்தலுக்கும் வாரிசை நியமிப்பதற்கும் இடையே முழுக்க முழுக்க எந்த வேறுபாடும் இல்லை. சடங்குகள் கூட சில சமயங்களில் ஒன்றாகவே இருக்கும். வாரிசாக நியமிக்கப் படுகிற நபர், கிட்டத்தட்ட மகனாகவே கருதப்படுகிறார். நியமிக் கிறவரின் மகள் அவருக்குச் சகோதரியாகிறார். எனவே நியமிக் கிறவரின் மகளை அவர் திருமணம் செய்து கொள்ள முடியாது. நியமிக்கிற தந்தையின் மகளை, அந்தப் பையனுக்குத் திருமணம் செய்யக்கூடும் என்று பஞ்சாபில் எவரும் நினைப்பதில்லை. பெற் றோரின் உடன்பிறந்தார் மகளைக்கூட அவர் திருமணம் செய்து கொள்ள முடியாது. அவர் மகனைப் போலவே கருதப்படுகிறார். ஒரே வேறுபாடு என்னவென்றால், வாரிசின் தகுதியைப் பொறுத்த வரைக்கும், அவர் மகன்கள் மகள்களோடு கூடிய திருமணமான வராக இருக்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** அவர் தாடியோடு (தாடி என்றால் பஞ்சாபில் அப்பா என்று பொருள்) கூடிய மனிதராகவும் இருக்கலாம்.

**திரு. இராஜகோபாலாச்சாரி:** இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் எங்களுக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். அந்த வழக்கப்படி, ஒருவர் தன்னுடைய சொந்த மருமகனையே மகனாக்கிக் கொள்ள முடியுமா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** அப்படிச் செய்யும்பொழுது அவர் வீட்டோடு மாப்பிள்ளை என்று அழைக்கப்படுவார்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தெற்கில் இதையொத்த வழக்கம் ஒன்றிருக்கிறது. அது 'இல்லத்து தத்தெடுத்தல்' எனப்படும்.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** இந்த வழக்கம் சட்ட அங்கீ காரம் பெற்றிருக்கிறது என்பது மட்டுமல்ல, சட்டமாகவே பாவிக்கப் பட்டு மிகப் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. இது நன்கு நிலை நாட்டப்பட்ட வழக்கமாகியிருக்கிறது. இந்த மண்ணின் சாதாரணச் சட்டங்களைக் காட்டிலும் அதிக வலிமை பெற்றதாக இருக்கிறது. இது இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் முஸ்லீம் மக்களிடையே உலகளாவிய ஒப்புதலைப் பெற்றிருக்கிறது. இந்த உறவுமுறை ஏதோ கொடை அளிப்பதோடோ அல்லது வெறுமனே வாரிசை

நியமிப்பதோடோ நின்றுவிடுவதில்லை. உறவு முறை என்பது அன்னியோன்யமானது. நியமிக்கப்பட்ட வாரிசு மகனைப் போல மதிக்கப்படுகிறார். அவர் தந்தையோடு வாழ்கிறார்.

**டாக்டர் அம்பேத்கர்:** சொத்துப் பற்றிய காரணங்களுக்காக.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** சொத்துக் காரணங்களுக்காகவும், உறவு முறைக்காகவும். வெளியாரைப் போல, இவர் மகளைத் திருமணம் செய்துகொள்ள முடியாது. ஆகவே இது சொத்து சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, தனிப்பட்ட உறவுமுறைக் காரணங்கள் சம்பந்தப்பட்டதும் கூட.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மகன், தந்தையை விட வயதானவராக இருக்க முடியுமா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** தத்தெடுப்பவரை விட, அவரின் உடன்பிறந்தார் மகன் மூத்தவராக இருக்க முடியும் என்பதைப் போல் இவரும் மூத்தவராக இருக்கலாம். ஒருவர் தனது சகோதரரின் மகனைத் தத்தெடுப்பதாகக் கொள்வோம். தத்தெடுப்பவரைவிட அவருடைய சகோதரரின் மகன் வயதில் மூத்தவராக இருக்கலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதற்கு ஏதாவது சடங்கு இருக்கிறதா?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அது பலவழிகளில் செய்யப்படுகிறது. அது வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். சில நிகழ்ச்சிகளில் பத்திரப் பதிவு செய்யப்படுகிறது. குடும்பம் முழுவதும் கூடுகிறது. அந்தப் பையன் வாரிசாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான். சில இடங்களில் சடங்குகளே நடைபெறுகின்றன. நடைமுறையில் அது தத்தெடுத்தலுக்கு ஒப்பானது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த வழக்கம் பரவலாக இருக்கும் பகுதிகளில், முறையான தத்தெடுத்தலும் நடைபெறுகிறதா? அல்லது வாரிசு நியமிக்கப்படுகிற வழக்கம் பரவலாக இருக்குமிடங்களில் முறையான தத்தெடுத்தல் நிகழாது என்ற நிலை இருக்கிறதா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** உண்மையிலேயே, இது அதோடுகூட நடைபெறுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒருவர், தத்துப்பிள்ளை மற்றும் நியமிக்கப்பட்ட வாரிசு ஆகிய இருவரையும் பெற்றிருக்க லாமா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** ஒரே குடும்பத்தில் கூட ஒரு சகோதரர் தத்துப்பிள்ளையை எடுத்துக் கொள்ளலாம். மற்றொரு சகோதரர் வாரிசை நியமித்துக் கொள்ளலாம். ஆனால் உறவு முறை யைப் பொறுத்தவரையிலும் எந்த வேறுபாடும் இல்லை. இந்த வழக்கம் முஸ்லீம்களிடையேகூடப் பரவியிருக்கிறது.

**குவாஜா இனயத் உல்லா (பீகார்):** முஸ்லீம் சட்டத்தில் தத்து எடுப்பதில்லை.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** நான் முஸ்லீம் சட்டத்தைப் பற்றிப் பேசவில்லை. முஸ்லீம் வழக்கங்களைப் பற்றிப் பேசுகிறேன். அனேகமாக ஒவ்வொரு பஞ்சாபி முஸ்லீமும் வழக்கத்தைப் பின்பற்று கிறார்கள்.

**துணை சபாநாயகர்:** ஆனால் அது இந்த வரையறைக்குள் கொண்டு வருகிற அளவிற்கு மிகப் பரவலாக உள்ளது.

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** இந்த வழக்கத்தின் செல்லுபடித் தன்மையை யாரும் மறுக்க முடியாது. வழக்கம் பற்றிய சட்டத்தின் மீதான எந்த ஆய்வுக் கட்டுரையை எடுத்துக் கொண்டாலும் வாரிசை நியமிப்பது நடைமுறை வழக்கம் என்பதை உணருவீர்கள்.

**ராதேலால் வியாஸ்:** பெண்ணை வாரிசாக நியமிக்கிறார்களா?

**பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா:** அவளால் மகனாக முடியாதே.

**டாக்டர் அம்பேத்கர்:** திருமணம் மற்றும் விவாகரத்தோடு மட்டும் இந்த மசோதாவைக் கட்டுப்படுத்த முடிவெடுத்திருக்கிற காரணத்தால், என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் எழுப்பியிருக்கிற பிரச்சினைகள், தத்தெடுத்தல் பற்றி நாம் விவாதிக்கும்போது எடுத்துக் கொள்ளப்படும். தத்து எடுத்த மகன் பற்றிய வரையறை யில் நியமிக்கப்படும் மகன் பற்றி சேர்த்துக் கொள்ளலாமா என்பது பற்றி அப்போது விவாதிக்கலாம். இப்பொழுது நாம் நிறைவேற்றி யிருக்கிற வரையறையின் அடிப்படையில், இந்த அவை ஏற்றுக் கொள்ளும் வழக்கமாக அந்த வழக்கம் இருக்கிறதென்பதை நமக்கு

விளங்க வைத்தால், அந்தப் பிரச்சினையை நாம் கவனிக்கலாம். இந்தக் கணத்தில் நாம் திருமணம் மற்றும் விவாகரத்துப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** நீங்கள் இங்கு 'மகன்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள். இல்லாவிட்டால் எந்த வரையறைக்கும் தேவையிருந்திருக்காது.

**டாக்டர் அம்பேத்கர்:** தத்து எடுத்தல் பற்றிய சட்டப் பிரிவில் ஒரே சீரான ஒழுங்குமுறையைப் புகுத்த முயற்சித்தோம் என்பது உங்களுக்குத் தெரியும். தத்து எடுத்தலில் மாறுபட்ட வடிவங்களை நாம் அங்கீகரிக்கவில்லை. தத்து எடுத்தல் என்பது எல்லா இடங்களிலும் பொதுவான ஒரே ஒழுங்குமுறையில் இருக்க வேண்டும் என்கிறோம். தத்து எடுத்தலில் நடைபெறும் சடங்குகளைப் பொறுத்த வரை அவை வெவ்வேறாக இருக்கலாம். அதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. மகனின் நியமனம் மனதுக்குத் திருப்தியாக இருந்தாலும், தத்து எடுத்தலுக்குரிய நெறிமுறைகளான கொடுக்கல், வாங்கல், பையன் வாயில் சக்கரை போடுதல், படையல், பலியிடுதல் போன்ற குறிப்பிட்ட சடங்குகளைச் செய்தாலும், அவை நியமன மகனை தத்து மகனாக்காது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** துரதிர்ஷ்டவசமாக, டாக்டர் அம்பேத்கர் உணர்ந்து ஏற்றுக்கொள்ளும்படியாக என்னால் சரியாக எடுத்துரைக்க முடியவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பண்டிட் பர்கவா எழுப்பிய விஷயம் திருமணத்திற்கும் தொடர்புடையதாக இருக்கிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** வழக்கத்தைப் பற்றி மிகச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், சூழ்நிலைகள், வழக்கம், நியாயத்தன்மை மற்றும் அதற்கெதிரான நிலை ஆகியவை பற்றி எந்த முடிவுக்கும் என்னால் வர முடியவில்லை. அன்றியும் எனது நண்பரால் எவ்விதத் தெளிவான விவரங்களையும் கொடுக்க முடியவில்லை. நான் இந்தப் பொருள் பற்றி ஆழமாகச் சிந்தித்து முன்வைக்கப்பட்ட கருத்தை அரசு ஏற்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர விரும்புகிறேன். திடீரென்று இது முடியாது.
(பகல் 12 மணி)

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இதை நிறுத்தி வைக்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** இதைப் பிறகு சேர்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் ஒரு வழி கூறவா? இப்பொழுதுள்ள நிலையில் இதை நிறைவேற்றுவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை. வேறு சில இனங்களைச் சேர்ப்பதற்குத்தான் முயற்சி நடக்கிறது. ஆகவே இதை இப்பொழுது நிறைவேற்றலாம். ஏனென்றால், நாம் பிரிவு 3 முழுவதையும் இப்போது நிறை வேற்றவில்லை. மேலும் ஒரு இனத்தைப் பிறகு சேர்த்துக் கொள்ள லாம். அந்த ஒப்புதலுடன் அந்தப் பகுதியை அவையின் வாக்கெடுப் புக்கு விடுகிறேன். விஷயம் வருமாறு:

''பிரிவு 3-இன் பகுதி (xi) என்று எண் மாற்றியமைக்கப்பட்ட பகுதி (viii) மசோதாவின் பகுதியாகிறது.''

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நாம் இப்போது பிரிவு 4-க்குச் செல்வோம்.

**கேப்டன் ஏ.பி. சிங்:** பகுதி (viii) க்குப் பிறகு ஒரு வரையறை யைச் சேர்க்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டுக் கொண் டிருக்கிறேன். அந்த திருத்தம் எண் 378. அது 'குலம்' என்பதற்கான வரையறை பற்றியது. இந்த வார்த்தை வரையறை செய்யப்பட வேண்டுமென்று நான் ஏன் விரும்புகிறேன் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும். நீங்கள் திருத்தம் எண் 387-ஐப் பார்த்தால், வழக்கப்படி இத்தகைய திருமணங்கள் தடைசெய்யப்படுவதால், இருமணக் குழுவினரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள் என்று நான் கூறியிருக்கிறேன். இங்கே அந்த வார்த்தை வரையறை செய்யப்பட வேண்டுகிறேன். அதனால் ஒரே குலத்தில் திருமணங்கள் நடைபெறாதிருக்கலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** நிலைமையை உள்ளபடி தெளிவாக்கு கிறேன். இது ஒரு வரைமுறையானாலும், இந்தத் திருத்தம், முறைப் படியான சமயச் சடங்குகள் ரீதியான திருமணத்திற்கான இன்றி யமையாக் கூறுகள் பற்றிய பிரிவு 7-உடன் தொடர்புடையது. அங்கே முறைப்படியான சமயச் சடங்கு ரீதியான திருமணத்திற்கான சில நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. திருமணத்திற்கான குழுக்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. மேலும் ஒரு நிபந் தனையை நிலையாகச் சேர்க்க எனது நண்பர் விரும்புகிறார். குலம் என்பது மிகவும் தெரிந்த வார்த்தை - அதற்கு வரையறை தேவை

யில்லை என்று வாதிட்டாலும், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டால், அப்போதுதான் ‘குலம்’ என்பதற்கான வரையறை தேவைப்படும். ஆனால், நாம் பிரிவு 7-ஐப் பற்றி விவாதிக்கிற பொழுது, இந்தச் செய்தி எடுத்துக்கொள்ளப்பட்டு, அவையும் இந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், அங்கேயே அப்போதே ‘குலம்’ என்பதற்கான வரையறையை நாம் புகுத்திவிடலாம். ஆகவே ‘குலம்’ என்பதற்கான வரையறை இப்போது தேவையில்லை.

**கேப்டன் ஏ.பி. சிங்:** எனக்குள்ள கஷ்டம் இதுதான். எப்பொழுது என்ன விஷயம் வந்தாலும், ‘இந்த வார்த்தை வரை யறுக்கப்படவில்லை’ என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, ‘குலம்’ என்ற வார்த்தை இப்போது வரையறுக்கப்பட வேண்டுகிறேன். இந்த விஷயத்தில் நாம் தெளிவாகயிருப்போம். ஆனால், இது பிறகு செய்யப்படலாமென்றால் எனக்கு மறுப்பேது மில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** பிரிவு 7-ல் இது ஏற்கப் படப் போவதில்லை என்றால், இங்கே அந்த வரையறை பயனில் லாததாகிவிடும். ஆனால் அதற்கு மாறாக, அது ஏற்கப்பட்டு, வரையறை தேவையானால் தொடர்ச்சியாக இங்கே திருத்தம் செய்யப்படும். நான் பிரச்சினையை முடித்துவிடவில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** அல்லது ‘குலம்’ என்றால் என்ன என்று மாண்புமிகு விளக்கம் கொடுத்துவிடலாம்.

**துணை சபாநாயகர்:** பிரிவு 3 நிறைவடையவில்லை. அல்லது, மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியதுபோல, அதற்கு விளக்கம் கொடுத்துவிடலாம்.

**கேப்டன் ஏ.பி.சிங்:** அப்படியானால் அது நிறுத்தி வைக்கப் படலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நாம் இப்போது பிரிவு 4-ஐ எடுத்துக்கொள்வோம்.

**பிரிவு 4** - (சட்டத் தொகுப்பின் மேலோங்கு செல்திறம்)

**டாக்டர் அம்பேத்கர்:** நான் பின்வருமாறு முன்மொழிய விழைகிறேன்: பிரிவு 4-க்குப் பதிலாக பின்கண்டதை மாற்றீடு செய்க:

"4. சட்டத் தொகுப்பின் மேலோங்கு செல்திறம் - இந்தச் சட்டத் தொகுப்பில் தெள்ளத் தெளிவாக வேறுவிதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய :

(அ) இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் இந்துச் சட்டத்தின் வாசகம், விதி, பொருள் விளக்கம், அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவை இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கிற விஷயங்களைப் பொறுத்தவரை முடிவு பெற்று விடும்; மற்றும்

(ஆ) இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் வேறு எந்தச் சட்டமும், இந்த சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள நிபந்தனை வாசகங்களுக்கு முரண்பாடாக இருந்தால் அவை முடிவுக்கு வரும்."

இந்தத் திருத்தத்திற்கான காரணம் இதுதான்: துணைப் பிரிவுகள் இல்லாமல் முதலில் ஒரே ஒரு பிரிவாகத்தான் நாம் வைத்திருந்தோம் என்பதை அவை அறியும். பிறகு இந்தச் சட்டத் தொகுப்பின் நிபந்தனை விதிகள் தொடர்பான வழக்கம், சட்டப் பொருள் விளக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்டு நடைமுறையிலிருக்கிற சட்டங்கள் சம்பந்தப்பட்டவை எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டன. எல்லாச் சட்டங்களையும் ரத்து செய்வது இந்த மசோதாவின் விருப்பம் அல்ல. ஆனால் இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ள நிபந்தனைப் பிரிவுகளுக்கு முரண்பாடானவற்றை மட்டும்தான் ரத்து செய்ய வேண்டும் என்பது உணரப்பட்டது. ஆகவே பிரிவு 4-ஐ (அ) மற்றும் (ஆ) என்று பிரிப்பதுதான் சரியான வழி என்று உணர்ந்தேன். விதி, பொருள் விளக்கம் மற்றும் வழக்கம் ஆகியவை (அ)வில் அடங்கும். இந்தச் சட்டத் தொகுப்பிற்கு முரண்பாடான விதிகள் நீங்கலாக மற்றெந்த விதியும் ரத்து செய்யப்பட மாட்டாது என்ற கட்டுப்பாட்டுடன், நடைமுறையிலிருக்கும் எல்லாச் சட்டங்களும் (ஆ)வில் அடங்கும். இதுதான் திருத்தத்திற்கு காரணம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் முன்மொழியப் படுகிறது: பிரிவு 4-க்கு மாற்றீடு செய்க.

"4. சட்டத் தொகுப்பின் மேலோங்கு செல்திறம் - இந்தச் சட்டத் தொகுப்பில் தெள்ளத் தெளிவாக வேறுவிதமாகக் கூறப்பட்டு இருந்தாலொழிய

(அ) இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் இந்துச் சட்டத்தின் வாசகம், விதி, பொருள் விளக்கம் அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவை இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கிற விஷயங்களைப் பொறுத்தவரை முடிவுபெற்றுவிடும், மற்றும்,

(ஆ) இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் வேறெந்தச் சட்டமும், இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள நிபந்தனை வாசகங்களுக்கு முரண்பாடாக இருந்தால் அவை முடிவுக்கு வரும்.

**டாக்டர் தேஷ்முக்:** நான் பின்வருமாறு முன்மொழிய விரும்புகிறேன்:

டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்த திருத்தத்தில், குறிப்பிட்ட பிரிவு 4-இல் பகுதி (அ)வில், 'அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகளை நீக்கிவிடவும். அதைப் பற்றி நான் இப்போது பேசலாமா? பிறகு பேசவா?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிய இருக்கும் எல்லாத் திருத்தங்களும் வரட்டும். பிறகு நான் விவாதத்திற்கு அனுமதிக்கிறேன். திருத்தம் முன்மொழியப்படுகிறது: டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்த திருத்தத்தில் குறிப்பிட்ட பிரிவு 4-ல் பகுதி (அ)வில் 'அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்.

**டாக்டர் அம்பேத்கர்:** எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதாவது, வழக்கம் என்றிருந்தால் அது தொடரும். இந்தத் திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால், இந்தச் சட்டத் தொகுப்பின் விதிப் பகுதிகள் எப்படியிருந்தாலும், இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன் நடைமுறை யிலிருக்கும் எந்த வழக்கமும், இப்போது ரத்து செய்ய முனையும் எவற்றையும் மீறி நிற்கும் என்பதாகும் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?

**டாக்டர் தேஷ்முக்:** ஆம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நாம் இரு விஷயங்களைக் கருத்தில் கொள்வோம். எங்கெல்லாம் நிபந்தனை விதிகள் இல்லையோ, அங்கெல்லாம் வழக்கம் பரவலாக இருக்கும். இதில் சந்தேகமே இல்லை. ஆனால் எங்கெல்லாம் நிபந்தனை விதிகள் உள்ளனவோ, அங்கு வழக்கம் ரத்து செய்யப்படும். வழக்கம் முரண்பாடாக இருக்கிற இடங்களிலெல்லாம், திருத்தத்தினால் ரத்து செய்யப்படும். நிபந்தனை விதிகள் உள்ள இடங்களிலும், இல்லாத இடங்களிலும் வழக்கம், சட்டத்தின் வாசகங்களை மீறி நிற்க வேண்டும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் விரும்புகிறார். அதுதான் நிலை. இதற்கு, பிறகு பதிலளிக்குமாறு கேட்பேன்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** நான் பின்வருமாறு மொழிகிறேன்:

பிரிவு 4-இல் 'அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இதுவும் அதேதான்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** இந்தச் சட்டம் இருந்தபோதிலும் வழக்கம் தொடர வேண்டும் என்பது எனது யோசனை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் முன்மொழியப் படுகிறது:

பிரிவு 4-இல் 'அல்லது வழக்கம் மற்றும் பயன்பாடு' என்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** நான் பின்வருமாறு முன் மொழிய விரும்புகிறேன்: பிரிவு 4-இல் கீழ்க்கண்டவற்றை மாற்றீடு செய்யவும்:

''4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையிலிருக்கும் இந்து சட்டத்தின் வாசகம் விதி, பொருள் விளக்கம் அல்லது எந்த வழக்க நடைமுறைகளும், இந்தச் சட்டத் தொகுப்பில் இடம்பெறாதவற்றின் மீது செயலாக்கம் பெற்றிருக்கும்.

இது ஆக்கபூர்வமான அம்சமாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்படாத யாவும் செயலாக்கத்தில் இருக்கும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நாம் 55-ஆவது பிரிவை முடிக்கும் போது அப்படி இருக்கும்.

*பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:* இந்த விஷயங்கள் ஆக்க முறைச் செய்திகளாகத் தொடர்ந்து நீடிக்கும். இந்த இரண்டிற்கு மிடையே அதிக வேறுபாடு இல்லை.

*மாண்புமிகு துணை சபாநாயகர்:* திருத்தம் முன்மொழியப் படுகிறது:

> "4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் இந்து சட்டத்தின் வாசகம், விதி, பொருள் விளக்கம் அல்லது அந்த வழக்க நடைமுறைகளும் இந்தச் சட்டத் தொகுப்பில் இடம்பெறாதவற்றின் மீது செயல் முறையில் இருக்கும்."

*பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:* 449-ஆம் எண்ணுள்ள இன்னொரு திருத்தம் என் பெயரில் இருக்கிறது. அதை நான் முன் மொழிகிறேன்:

> பிரிவு 4-க்குக் கீழ்க்கண்டவற்றை மாற்றீடு செய்யவும்:
>
> "இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருந்த எந்த வழக்கமும் அல்லது பயன்பாடும் கட்டுப்படுத்தக் கூடியவை. அவை இந்து சட்டத்தின் எல்லா வாசகங்களையும், விதி மற்றும் பொருள் விளக்கத்தையும் அல்லது பிற ஏனைய சட்டங்களின் எந்தப் பிரிவுகளையும் புறக்கணிக்கும். மேலும் அது, திருமணம் மற்றும் விவாக ரத்தைப் பொறுத்தவரை எல்லாச் செயல்களிலும் முந்துரிமை பெறும்."

இது பிரிவு 4-க்கு முரணான வாதம். மாண்புமிகு நண்பர் டாக்டர் அம்பேத்கர் 'வழக்கத்'திற்குக் கொடுக்க நினைக்கும் இடத்தை வஞ்சப் புகழ்ச்சியோடு குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தனிப்பட்ட முறையில் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த மசோதாவில் எங்கெல்லாம் சட்டத்தின் நிபந்தனை விதிகள் கூறப்பட வில்லையோ, அங்கெல்லாம் வழக்கத்தைத் தொடர்புப்படுத்துவது திருத்தம் எண் 128. இந்த மசோதாவில் சட்ட நிபந்தனைகள் எப்படி இருந்தாலும், முந்திய வழக்கங்கள் எல்லாம் தொடரும் என்று திருத்தம் எண் 449 கூறுகிறது.

**திரு. சந்தானம்:** இது பிரிவு 4-க்கு நேர்எதிர்மறையானது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் முன்மொழியப் படுகிறது: பிரிவு 4-க்குக் கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:

*"4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த எந்த வழக்கமும் அல்லது பயன்பாடும் கட்டுப்படுத்தக் கூடியவை. அவை இந்து சட்டத்தின் எல்லா வாசகங்களையும், விதி மற்றும் பொருள் விளக்கத்தையும் அல்லது பிற ஏனைய சட்டங்களின் எந்தப் பிரிவுகளையும் புறக்கணிக்கும். மேலும் அது, திருமணம் மற்றும் விவாகரத்தைப் பொறுத்தவரை எல்லாச் செயல்களிலும் முந்துரிமை பெறும்."*

**திரு. நசிருத்தீன் அகமது:** நான் பின்வருமாறு முன்மொழி கிறேன்: பிரிவு 4-க்கு, கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:

*"4. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எல்லா வாசகங் களும், விதிகள் அல்லது பொருள் விளக்கங்களும் அல்லது எல்லா வழக்கங்களும், பயன்பாடுகளும் மற்றும் பிற எல்லாச் சட்டங்களும், இந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்குமே யானால், முரண்பாடாக உள்ள பகுதிகள் வரைக்கும் செய லிழந்து போகும்."*

என்னிடம் இன்னொரு திருத்தமும் இருக்கிறது ஐயா.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது தேவையா?

**திரு. நசிருத்தீன் அகமது:** அது மிகவும் விரிவானது. நான் முன்மொழிகிறேன். பிரிவு 4-க்கு, கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:

*"4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர், நடைமுறையில் இருந்த, புனிதப் புத்தகங்களில் அல்லது இந்தியாவின் உயர்ந்த வழக்குமன்றங்களில் கூறப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகள், பிரிவி கவுன்சிலினது சட்டக் குழுவின் முடிவுகள் அல்லது கற்றறிந்த எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர் களின் புத்தகங்கள் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றில் காணப் படுகின்ற இந்து சட்டத்தின் எல்லா வாசகங்களும் மற்றும் விதிகள், விளக்கங்கள் ஆகியவையும் இந்தச் சட்டத் தொகுப் பிற்கு முரண்பாடாக இருக்குமானால், முரண்பாடான பகுதிகள் வரை செயலற்றுப் போகும்."*

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது மற்றொரு வடிவத்தில் இருக்கிறது.

**திரு. நசிருத்தீன் அகமது:** இது அதிகமான கூறுகளைக் கொண்டு மிக விளக்கமாக இருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது சாரத்தில் வேறுபடுகிறது.

**திரு. நசிருத்தீன் அகமது:** சிறு விவரங்களில்தான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் முன்மொழியப் படுகிறது:

*பிரிவு 4-க்கு, கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:*

*''4. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர், நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எல்லா வாசகங்களும், விதிகள் அல்லது பொருள் விளக்கங்களும் அல்லது எல்லா வழக்கங்களும், பயன்பாடுகளும் மற்றும் பிற எல்லாச் சட்டங்களும் இந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்குமேயானால், முரண்பாடாக உள்ள பகுதிகள் வரைக்கும் செயலிழந்து போகும்.''*

*பிரிவு 4-க்கு, கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:*

*''4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த, புனிதப் புத்தகங்களில் அல்லது இந்தியாவின் உயர்ந்த வழக்கு மன்றங்களில் கூறப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகள், பிரிவி கவுன்சில் சட்டக் குழுவின் முடிவுகள் அல்லது கற்றறிந்த எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் புத்தகங்கள் மற்றும் விமரிசனங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்ற இந்து சட்டத்தின் எல்லா வாசகங்களும் மற்றும் விதிகள், விளக்கங்கள் ஆகியவையும் இந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்குமேயானால், முரண்பாடான பகுதிகள் வரை செயலற்றுப்போகும்.''*

**திரு. ஜுன்ஜுன் வாலா:** நான் பின்கண்டபடி முன்மொழிகிறேன்:

*பிரிவு 4-க்கு கீழ்க்கண்ட நிபந்தனையைச் சேர்க்கவும்:*

*''இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர், இந்து மதம் அல்லது இந்தச் சட்டத் தொகுப்பு யாருக்குப்*

பொருந்துகிறதோ, அவர் சார்ந்திருக்கிற வேறு எந்த மதத்தினுடையவும் அங்கீகாரத்தைப் பெற்ற, நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எந்த வாசகங்களையும், விதி அல்லது பொருள் விளக்கங்களையும் அல்லது எந்த வழக்கம் அல்லது நடைமுறைகளையும் அல்லது வேறு எந்தச் சட்டங்களையும், இந்தச் சட்டத் தொகுப்பு புறக்கணிக்காது என்ற நிபந்தனையுடன்.''

நடைமுறை நடத்தை ஒழுங்கின் இசைவைப் பெற்ற, ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிற இந்து சட்டத்தின் வாசகம், விதி அல்லது பொருள் விளக்கம் அல்லது எந்த வழக்கம் அல்லது நடைமுறை அல்லது வேறு எந்தச் சட்டத்தையும் இந்தச் சட்டத் தொகுப்பு புறக்கணிக்காது.''

இன்னும் ஒரு திருத்தம் எண் 418 என்னிடம் உள்ளது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது எண் 130-ன் மறுபகர்ப்பா?

**திரு. ஜுன்ஜுன்வாலா:** அது மறுபகர்ப்பல்ல. ஆனால் சிறிது மாறுபட்டது. நான் அதை முன்மொழிகிறேன்:

''பிரேரேபிக்கப்பட்ட பிரிவு 4-க்கு டாக்டர் அம்பேத்கர் கொடுத்துள்ள திருத்தத்தில், கீழ்க்கண்ட நிபந்தனையையும் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்:

இந்தச் சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்துகிறதோ, அந்தப் பிரிவு மக்களின் தனிவேறுபட்ட கலாசாரத்தின் பகுதியாகிவிட்ட, ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிற பயன்பாடு, வழக்கம் மற்றும் சட்டம் ஆகியவற்றை இந்தச் சட்டப் பிரிவு புறக்கணிக்காது என்ற நிபந்தனையுடன்..''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தனி வேறுபட்ட கலாசாரம் என்பதை யார் முடிவு செய்வது? எந்தச் சட்டத் தொகுப்பின் சாரமும் எதுவாக இருந்தாலும், நான் அவையில் முன்மொழிவதற்கு முன்னால் அது வழக்கு மன்றத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய அளவு தெளிவாக வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** சமுதாயத்தின் வெவ்வேறு பிரிவு மக்கள் வெவ்வேறு கலாசாரத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசியல் சாசனத்தின் விதி 29-ல் காணப்படுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தனிவேறுபட்ட கலாசாரம் என்பது நீதிமன்றங்களில் சட்டப்படி நிலைநாட்டப்பட வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** அது அரசியல் சாசனத்திலேயே இருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வழக்கம் என்பதற்கான வரையறை இங்கு கொடுக்கப்பட்டிருப்பதைப் போல, கலாசாரம் என்பதற்கான வரையறை இல்லை. தனி வேறுபட்ட கலாசாரம் என்பதற்கு எந்த நீதிமன்றப் பொருள் விளக்கமும் இதுவரை கொடுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** அது ஏற்கெனவே அரசியல் சாசனத்தில் இருக்கிறது.

**திரு. சந்தானம்:** அது வழிகாட்டு நெறிமுறையில் இருக்க வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர்:** அது வழிகாட்டு நெறிமுறையில் எங்காவது இருக்க வேண்டும். அல்லது மதம் போன்றவற்றின் தொடர்புடைய நிபந்தனை வாசகங்களில் இருக்க வேண்டும்.

**மாண்புமிக துணை சபாநாயகர்:** திருத்தங்கள் முன்மொழியப் படுகின்றன. பிரிவு 4-க்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளைச் சேர்க்கவும்:

> ''இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர், இந்து மதம் அல்லது இந்தச் சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்துகிறதோ அவர் சார்ந்திருக்கிற வேறு எந்த மதத்தி னுடையவும் அங்கீகாரத்தைப் பெற்ற, நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எந்த வாசகங்களையும், விதி அல்லது பொருள் விளக்கங்களையும் அல்லது எந்த வழக்கம் அல்லது நடைமுறைகளையும் அல்லது வேறு எந்தச் சட்டங்களையும் இந்தச் சட்டத் தொகுப்பு புறக்கணிக்காது என்ற நிபந்தனை யுடன்..

நடைமுறை நடத்தை ஒழுங்கின் இசைவைப் பெற்ற, ஏற் கெனவே நடைமுறையில் இருக்கிற இந்து சட்டத்தின் வாசகம், விதி அல்லது பொருள் விளக்கம் அல்லது எந்த வழக்கம் அல்லது

நடைமுறை அல்லது வேறு எந்தச் சட்டத்தையும் இந்தச் சட்டத் தொகுப்பு புறக்கணிக்காது.

பிரேரேபிக்கப்பட்ட பிரிவு 4-க்கு டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்திருக்கும் திருத்தத்துடன் கீழ்க்கண்ட நிபந்தனையைச் சேர்க்கவும்:

''இந்தச் சட்டத் தொகுப்பு யாருக்குப் பொருந்துகிறதோ அந்தப் பிரிவு மக்களின் தனி வேறுபட்ட கலாசாரத்தின் பகுதியாகிவிட்ட, ஏற்கெனவே நடைமுறையிலிருக்கிற பயன்பாடு, வழக்கம் மற்றும் சட்டம் ஆகியவற்றை இந்தச் சட்டப் பிரிவு புறக்கணிக்காது என்ற நிபந்தனையுடன்''

**திரு. சர்வாத்தே** (மத்திய பாரத்): நான் பின்வருமாறு முன்மொழிகிறேன்:

பிரிவு 4-உடன் கீழ்க்கண்ட நிபந்தனையைச் சேர்க்கவும்:

''ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவை, இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்த நிபந்தனைப் பிரிவும் தன் மாநிலத்திற்குப் பொருந்தாது அல்லது சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் திருத்தத்துடன் தன் மாநிலத்திற்குப் பொருந்தும் என்று மொத்தமுள்ள உறுப்பினர்களில் பெருவாரியானவர்களின் ஆதரவுடன் சட்டமியற்றிக் கொள்ளலாம்.''

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது இந்தப் பிரிவில் எப்படி வருகிறது? எந்தத் திருத்தமானாலும் கையிலிருக்கும் பிரிவுக்குத் தொடர்புடையதாயிருக்க வேண்டும்.

**திரு. சர்வாத்தே:** ஏனென்றால் முரண்படுகிற எல்லாச் சட்டங்களையும் இது அகற்றி இடம் பற்றிக் கொள்ளும். இந்தப் பிரிவு இப்பொழுது உள்ள நிலையில், மாநிலம் ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கும் சட்டங்களை அகற்ற அந்த இடத்தை நிரப்பும் தன்மையுடையதாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் மூலம், எதிர்காலத்தில் அவற்றைத் திரும்பப் பெற அவர்கள் விரும்பினால், அந்த உரிமையைக் கொடுக்க விரும்புகிறேன். சில சட்ட நிபந்தனைகள் அந்த மாநிலத்திற்குப் பொருந்தாததாக இருக்கலாம். அரசியல் சாசனத்தின்படி, அந்த மாநிலம், சட்டமியற்றிக் கொள்ளும் உரிமை

இல்லாததாக இருந்தால், அதற்கு அந்த உரிமை வேண்டும். இந்தப் பிரிவின் விளைவாக இந்தப் பொருள் தொடர்பாக மீண்டும் சட்டமியற்றிக் கொள்ளுவது தடுக்கப்படக்கூடாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தத் தீர்மானம் என்ன கூறுகிறது என்று எனக்குப் புரியவில்லை. எந்த வகையிலும் இந்தத் தீர்மானம், பிரிவு ஒன்றுடன் தொடர்புடையதாயிருக்க வேண்டும். அப்படியானால், பிரிவு 2-வுடன் தொடர்புடைய இதேபோன்ற தீர்மானத்தை நாம் ஏற்கவில்லை என நினைக்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** பண்டிட் மாளவியாவின் தீர்மானமும் ஏறக்குறைய இதே மாதிரியான விளைவை உடையதுதான்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதைத் தவிரவும், இது பொதுப் பட்டியலில் உள்ள விஷயம். உள்ளூர் நிலைமைகளாலும், சூழ்நிலைகளாலும், ஒரு மாநிலச் சட்டமன்றம் ஏதாவது சட்டமியற்ற வேண்டியிருந்தால், அந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறவேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுமானால், அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை, மாநிலச் சட்டம் செயலற்றதாக்கும் அல்லது மாற்றியமைக்கும். அரசியல் சாசனத்தில் இந்த ஏற்பாடு இருக்கிறது. பொதுப்பட்டியலில் உள்ள விஷயங்களுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறும் தேவையை மீறுகிற அல்லது நீக்குகிற ஒரு சட்டத்தை நாம் இங்கே நிறைவேற்ற முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இல்லாதவரை, ஒரு மாநிலச் சட்டம் மேம்பட்டு நிற்க முடியாது. அரசியல் சாசனத்தின்படி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறும் தேவையில்லாமல், பொதுப்பட்டியலில் உள்ள விஷயத்துக்குக் கூட ஒரு மாநில அரசு சட்டமியற்ற முடியும் என்று மறைமுகமாக நாம் கூற முயற்சிக்கிறோம். குடியரசுத் தலைவரின் உரிமையை நீங்கள் எப்படி நிராகரிக்க முடியும்? இது அரசியல் சாசனத்திற்கு முரண்பட்டதாகத் தெரிகிறது.

**திரு. சர்வாத்தே:** அரசியலல் சாசனத்தின் விதிகள் எதுவும் அகற்றப்படவில்லை. அவையும் இதனுடன் கூடவே இருக்கின்றன. ஒரு மாநில சட்டமாக்கலுக்கு அந்த முன்நிபந்தனை அவசியமென்றால், அந்த முன்நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளலாம். அதனால், அது நீக்கப்பட்டுவிட்டது என்று பொருள் அல்ல.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மத்திய நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றம் ஆகியவை நிறைவேற்றுகிற சட்டங்களுக்கிடையே எந்தவித முரண்பாடும் இருக்கக் கூடாதென்கிற, நலந்தருகிற சட்ட நிபந்தனைகளை இது நிராகரித்து விடுகிறது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் நீங்கலாக, இத்தகைய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரங்கள் மாநில சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடாது. குடியரசுத் தலைவர் தமது ஒப்புதலைத் தர வேண்டும். இவற்றையெல்லாம் மீறி இச்சட்ட நிபந்தனைகளை நாம் எவ்வாறு நிறைவேற்ற முடியுமென்று தெரியவில்லை. இவற்றின் அடிப்படையில், பிரிவு 2-ன்கீழ் இந்த அவை ஏற்கெனவே வாக்களித்திருக்கிறது. மேலும் அரசியல் சாசனத்தின் நிபந்தனைகளுக்கு இது எதிரானதாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது தேவையா? வேறு ஏதாவது தீர்மானம் உள்ளதா?

**டாக்டர் சி.டி. பாண்டே (உ.பி.):** ஐயா, என்னிடம் ஒரு திருத்தம் இருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஏற்கனவே விவாதத்திற்கு வைக்கப் பட்டதா?

**டாக்டர் சி.டி. பாண்டே:** ஏற்கனவே விவாதத்திற்கு வைக்கப் பட்டது. ஆனால் இதுவரை பட்டியலில் பதிவு செய்யப்பட வில்லை. என்னிடம் ஒரு பிரதி இருக்கிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** என்னிடம் பிரதி இல்லை.

**டாக்டர் சி.டி. பாண்டே:** எனக்காவது ஒரு பிரதி கொடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எப்பொழுது அறிவிப்புக் கொடுக்கப்பட்டது?

**டாக்டர் சி.டி. பாண்டே:** இன்று காலையில் சட்டப்பேரவை அலுவலகத்தில் அறிவிப்பைக் கொடுத்தேன். அவர்கள் இந்தப் பிரதியை என்னிடம் தந்தார்கள். இது முன்மொழியப்பட வேண்டும். எப்படி இருந்தாலும், இந்தப் பிரதியை அலுவலகம் என்னிடம்

கொடுத்தது. மாண்புமிகு சட்ட அமைச்சரிடம் அது கொடுக்கப்பட்டிருக்கலாம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒவ்வொரு நாளும் காலையில் திருத்தங்கள் ஏராளமாக வருகின்றன. அவ்வகையில் இதுதான் முதலாவது. இதே மாதிரியான திருத்தங்களும் கூட இருக்கின்றன. இந்த மசோதாவை முன்மொழிந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவற்றை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையென்றால், இத்தகைய திருத்தங் களுக்கான இந்த அறிவிப்பை தள்ளுபடி செய்ய நான் விரும்பவில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** என் பெயரிலிருக்கிற திருத்தம் எண் 420ஐ தங்கள் அனுமதியுடன் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வேறு வடிவத்தில் அதே திருத்தம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** வேறுபாடு இருக்கிறது. இங்கு ஒரு சிறு தவறு இருக்கிறது. இது தவறாக தட்டச்சு செய்யப்பட்டிருக்கிறது.

'அது முரண்பாடாக இருக்கிற வரையில்' என்று இருக்க வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அது கொடுக்கப்படவில்லை. மூல பிரிவு 4, கூறுகிறது:

> ''இந்தச் சட்டத் தொகுப்பில் தெள்ளத் தெளிவாக வேறுவிதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய முதலியன...'' இந்த வார்த்தைகள் அங்கு இல்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த வார்த்தைகள் அங்கு உள்ளன.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இந்தச் சட்டத் தொகுப்பு போகிற போக்கில், எந்த வழக்கமும் வழக்கழிந்துபோகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த செய்திகளெல்லாம் மசோதாவில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அது தேவையில்லை. வழக்கம் பாதுகாக்கப்பட நாம் ஒரு காப்பு ஏற்பாடு செய்கிறோம். அந்தச் சட்டப் பிரிவின் வலிமையால் வழக்கம் பாதுகாக்கப்படுகிறது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** கொள்கை அளவில் என்ன எதிர்ப்பு என்று பார்க்கலாம். இந்தப் பிரிவு என்ன சொல்ல விரும்புகிறதென்றால், இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கிற அளவில் வழக்கம் என்னவாயிருந்தாலும், இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள சட்ட நிபந்தனைகள், குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டாலொழிய, பரவலாக அமுலில் இருக்கும் என்பதுதான். அவருடைய எதிர்ப்பு என்ன?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இது பழைய பிரிவு 4-க்கான திருத்தம். அதில் முரண்படுதல் போன்ற எவையுமே இல்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** முரண்படுகிற சூழ்நிலைகளில் மட்டும்தான், சட்டம் அதைப் புறக்கணிக்கும். இல்லாவிட்டால் அது தொடரும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** இது முதல் பிரிவு 4-க்குத் திருத்தம். இது புதிய பிரிவு 4-க்கு முற்றிலும் வேறுபட்டது. டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை நிறைவேற்றினால், பிறகு, இது தேவையற்றது.

**டாக்டர் அம்பேத்கர்:** இது எனது திருத்தம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** உங்களுடைய திருத்தத்தோடு நான் உடன்படுகிறேன். ஆனால் நான் வேறு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** அவையின் முன்னால் இருப்பது என்னுடைய திருத்தம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** முதலில் கொடுக்கப்பட்ட பிரிவு 4, முரண்பாடு பற்றிச் சிந்திக்கவே இல்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்தத் திருத்தத்தின் தேவை பற்றி என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திரு. சந்தானம்:** முரண்பாடுகள் உள்ளவரை, வழக்கம் செல்லுபடியாகாது என்னும் அசல் வாசகங்களைத் திரும்பப் பெற அவர் விரும்புகிறார்.

**டாக்டர் அம்பேத்கர்:** மூல விதியில் கூட 'முரண்பாடு' என்ற சொல்லை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. மூலவிதி பின்வருமாறு இருந்தது:

> ''இந்த சட்டத் தொகுப்பில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலொழிய இந்தச் சட்டத் .தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருக்கும் இந்துச் சட்டத்தின் வாசகம், விதி, பொருள் விளக்கம் அல்லது பழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவை இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கிற விஷயங்களைப் பொறுத்தவரை முடிவு பெற்றுவிடும்.''

இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எந்த வாசகமும், விதி அல்லது பொருள் விளக்கமும் அல்லது எந்த வழக்கம் அல்லது பயன்பாடும் இந்தச் சட்டக் குறிப்புகளைப் பொறுத்தவரைக்கும் செயலிழந்து போகும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** அசல் மசோதாவில் உள்ளபடி பிரிவு 4-இல் முரண்பாடு பற்றி எதுவும் கூறப்படவில்லை. அது முழுமையானது. எனது திருத்தம் இந்தப் பிரிவில் இரண்டு வழிகளில் சீர்ப்படுத்தும் நோக்கமுடையது. முதலில், ''தெள்ளத்தெளிவாக வேறுவிதமாக் கூறப்பட்டிருந்தாலொழிய...'' முதலிய வார்த்தைகள் அங்கு இல்லை. இரண்டாவதாக, மூலப்பிரிவில் முரண்பாடு பற்றிக் கூறப்படவில்லை. பிறகு, இந்துச் சட்டத்தின் வழக்கங்களும், வாசகங்களும் பரவலாக நீடிக்கும். முரண்பாடுகள் உள்ளவரை மட்டும் செயலிழந்துபோகும். மற்றபடி, இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்டக் கூறுகள் முழுவதும் நடைமுறையில் இருக்கும். இந்தத் திருத்தத்துடன், தங்கள் அனுமதியுடன் நான் திருத்தம் எண். 420-ஐ முன்மொழிகிறேன்.

பிரிவு 4-க்கு, கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்க:

''4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எந்த வாசகமும், விதி அல்லது பொருள் விளக்கமும் மற்றும் எந்த சட்டம், வழக்கம் அல்லது பயன்பாடும், இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கிற சட்ட விஷயங்களைப் பொறுத்தவரை எந்த அளவு முரண்படுகிறதோ அதுவரை செயலிழந்து போகும்.''

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** திருத்தம் முன்மொழியப் படுகிறது:

''4. இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த இந்து சட்டத்தின் எந்த வாசகமும், விதி அல்லது பொருள் விளக்கமும் மற்றும் எந்த சட்டம், வழக்கம் அல்லது பயன்பாடும், இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கிற சட்ட விஷயங்களைப் பொறுத்தவரை, எந்த அளவு முரண்படுகிறதோ அதுவரை செயலிழந்து போகும்.''

***திரு. சியாம்நந்தன் சகாயா:*** நான் பின்வருமாறு முன்மொழிய அனுமதிக்க வேண்டுகிறேன். டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந் திருக்கிற திருத்தத்தில், பிரேரேபிக்கப்பட்ட பிரிவு 4-இன் பகுதி (அ)வில், 'இந்தச் சட்டத் தொகுப்பு' என்று இரண்டாம் முறையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதற்குப் பின்னால் 'இந்தச் சட்டத் தொகுப்பில் உள்ள எந்தச் சட்ட நிபந்தனைகளுக்கும் அது முரண்பட்டதாக இருக்கிற வரையில்' என்ற வார்த்தைகளைச் செருகிக் கொள்ளவும்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** பகுதி (அ)விலா?

***திரு. சியாம்நந்தன் சகாயா:*** ஆம்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** ஒருமுறை ஒரு குறிப்பிட்ட விஷயம் இங்கு விவாதிக்கப்பட்டால், நீங்கள் வேறு எந்த சட்டத் தொகுப்பிற்கும் போக வேண்டாம் என்பதுதான் சட்ட அமைச்சரின் நோக்கமாகத் தெரிகிறது. ஆனால், இந்த சட்டத் தொகுப்பின் சட்ட நிபந்தனைகளோடு, எங்கெங்கு சட்ட நிபந்தனைகள் முரண்பாடாக

இருக்கிறதோ அச்சூழ்நிலைகளில் மட்டும்தான் சட்டத் தொகுப்பின் சட்ட நிபந்தனைகள் நிலைத்திருக்கும் என்பதுதான் இத்திருத்தத்தின் யோசனையாகத் தெரிகிறது.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** மிகச் சரியாகக் கூறினீர்கள். அதுவேதான் எனது கருத்து.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தம் முன்மொழியப் படுகிறது. டாக்டர் அம்பேத்கர் முன்மொழிந்திருக்கிற திருத்தத்தில், பிரேரே பிக்கப்பட்ட பிரிவு 4-இன் பகுதி (அ)வில், 'இந்தச் சட்டத் தொகுப்பு என்று இரண்டாம் முறையாகக் குறிப்பிடப்பட்டிருப் பதற்குப் பின்னால் 'இந்தச் சட்டத் தொகுப்பில் உள்ள எந்தச் சட்ட நிபந்தனைகளுக்கும் அது முரண்பாடாக இருக்கிற வரையில்' என்ற வார்த்தைகளைச் செருகிக் கொள்ளவும். டாக்டர் அம்பேத்கரின் எண் 6, டாக்டர் தேஷ்முக்கின் எண் 450, சர்தார் ஹுக்கம் சிங்கின் எண் 129, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவின் எண்கள் 128, 429 மற்றும் 449, நசிருத்தீன் அகமதுவின் எண்கள் 380 மற்றும் 419, ஜுன்ஜுன் வாலாவின் எண்கள் 130 மற்றும் 418 மற்றும் சியாம் நந்தன் சகாயாவின் எண் 417. இந்தத் திருத்தங்களும் இந்தப் பிரிவும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**டாக்டர் தேஷ்முக்:** இது மிகவும் முக்கியமான பிரிவு. தற்போதைய சட்டத்தின் சட்ட நிபந்தனைகளெல்லாம், திருமணம் மற்றும் விவாகரத்தோடு தொடர்புடையவைகளை மட்டுமே கட்டுப் படுத்தவிருப்பதால் அது பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருக் கிறது. அந்தக் காரணத்தினால்தான், பிரிவு 3-ஐப் பொறுத்தவரை யிலும், பழக்கம் மற்றும் பயன்பாடு என்னும் வார்த்தைகளுக்கான வரையறைக்கு முக்கிய தேவை எதுவுமில்லை என்று கூறவந்தேன். திருமணம் மற்றும் விவாகரத்தைப் பொறுத்தவரை, வழக்கம் என்பது சமூகக் கட்டாக இருக்கக்கூடாது, மற்றும் சட்டத் தொகுப்பில் உள்ள சட்ட நிபந்தனைகளில் வாரிசுரிமை, மரபுரிமை ஆகியவற்றைச் சேர்த்தால் என்ன பயன் விளையுமோ அதே அளவிற்கு நடைமுறை யிலிருந்து தடுக்கப்படவும் கூடாது என்பது பரவலான கருத்தாகும். ஆகவே, இதை நாம் இப்போது திருமணம் மற்றும் விவாகரத் தோடு மட்டும் கட்டுப்படுத்தப் போவதால், வழக்கம் மற்றும் பயன்பாட்டின் வரையறையைப் பற்றி வற்புறுத்துவதோ, பிரிவு 4-இல் சட்ட நிபந்தனைகளை உருவாக்குவதோ அவ்வளவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று நினைத்தேன். அதனால், பிரிவு

3-லிருந்து வரையறை கூட நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டேன். வரையறையின் வார்த்தை அமைப்புகளைப் பொறுத்தவரை, அறிவார்ந்த டாக்டரோடு முற்றிலும் உடன்படுகிறேன். ஏனென்றால், வாதப் பொருள் சம்பந்தமான தீர்ப்புடன் அது முழுமையாக ஒத்திருக்கிறது. மேலும் அதில் ஒரு வார்த்தையைக்கூட மறுக்க முடியாது. உண்மையில், அது குறியிலக்கை தாராளமாக்கி விரிவடையச் செய்திருக்கிறது. நீண்டகாலமாக ஒரே சீராக அனுசரிக்கப்படுகிற எதற்கும் அது விரிவடைகிறது. குடும்ப வழக்கங்களுக்குக் கூட அங்கீகாரமளிக்கிறது. (திருமதி துர்காபாய் அவைத் தலைமையேற்கிறார்). இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், இந்த வரையறைக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது. தற்போதைய மசோதாவில் உள்ள பெரும்பாலான சட்ட நிபந்தனைகளைப் பொறுத்தவரை, இந்தச் சட்டக் கூறுகளெல்லாம் திருமணம் மற்றும் விவாகரத்துக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படும் என்ற நோக்கில் மிக விரைவில் முழு விபரங்களையும் பரிசீலிக்குமாறு மாண்புமிகு சட்ட அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அவரே ஒப்புக்கொண்டதைப் போல, இந்த மசோதாவில் ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட முறையில் குறிப்பாகச் சில சட்டக் கூறுகளை ஆளுவதற்கேற்ற பல சட்ட நிபந்தனைகள் இருக்கின்றன. இந்தக் கோணத்திலேயே விவாதத்திற்காக நம்மையே கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய சில சட்ட நிபந்தனைகளையும் கூட அவர் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அவர் அவ்வாறு செய்தால், இன்றைய சட்டத்தில் பரவலாக நடைமுறையில் இருக்கும் வழக்கம், பயன்பாடு மற்றும் இந்து சட்டத்தின் பொருள் விளக்கங்கள் ஆகியவற்றிற்கு எதிராக இந்தச் சட்டத்திற்கு மேலாதிக்க வலுவைக் கொடுக்கக்கூடிய இந்தப் பிரிவிற்கு சில மாறுபாடுகள் தேவை என நினைக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கரின் தீர்மானம் குறிப்பிட்டிருப்பதைப் போல, இந்தப் பிரிவை நாம் நிறைவேற்றினால், நம்முடைய எதிர்பார்ப்புக்கும் மேலாக கண்டிப்பாக முன்னோக்கிச் செல்வோம்.

பிரிவு 4-இன் உபபிரிவு (அ) கூறுவது:

''இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த எந்த வாசகமும், விதி அல்லது இந்து சட்டத்தின் பொருள் விளக்கமும் அல்லது எந்த வழக்கம்

அல்லது பயன்பாடும் இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள எந்த விஷயத்தையும் பொறுத்தவரை செயலிழக்கும்.''

இது சரியாக பொருள்படுத்தப்பட்டால், திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட எல்லா வழக்கங்களும் பயன்பாடுகளும் தடை செய்யப்படும். ஏனென்றால், அவை இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள விஷயங்கள்.

**திரு. ஜே.ஆர். கபூர்:** சிறப்பாகப் பாதுகாக்கப்படாவிட்டால்.

**டாக்டர் தேஷ்முக்:** எனது நண்பர் திரு. சகாயா கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். நீங்கள் இந்த வார்த்தைகளை இங்கு பயன்படுத்தியிருப்பதால், திருமணம் மற்றும் விவாகரத்துப் பற்றி சட்டமியற்றப்படும் வரை, எனக்குத் தெரிந்த வரை, எந்த வழக்கம் அல்லது பயன்பாட்டையும் அங்கீகரிப்பது இயலாததாக இருக்கும்.

**டாக்டர் அம்பேத்கர்:** சில விஷயங்களை நாம் பாதுகாக்கிறோம்.

**டாக்டர் தேஷ்முக்:** பாதுகாக்கப்பட்டது எழுத்து வடிவமாகிற வரை அது நடக்காது.

**டாக்டர் அம்பேத்கர்:** 'தெள்ளத் தெளிவாக வேறுவிதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய' என்ற வார்த்தைகளுடன்தான் அந்தப் பிரிவு தொடங்குகிறது.

**டாக்டர் தேஷ்முக்:** இந்த விஷயத்தில் எனது கருத்து என்னவென்றால், திருமணம் மற்றும் விவாகரத்தைப் பொறுத்தவரையில், வழக்கம் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும். நமக்கு பஞ்சாபின் எடுத்துக்காட்டு இருக்கிறது. குறிப்பிட்ட சட்ட நிபந்தனைகளை விடப் பெரும்பாலும் வழக்கத்தால்தான் அது ஆளப்படுகிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** பஞ்சாப் மக்களையும் நமது நிலைக்கு உயர்த்த நாம் விரும்புகிறோம்.

**டாக்டர் தேஷ்முக்:** முரண்படாத அல்லது 3-வது பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற எந்த வழக்கம் அல்லது பயன்பாடும் தொடர்ந்து பரவலாயிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 'எந்த வழக்கம் அல்லது பயன்பாடு' என்னும் வார்த்தைகளை நீக்கிவிடக் கோரி நான் ஒரு திருத்தத்தை விவாதத்திற்கு வைத்திருக்கிறேன். இவ்வாறு செய்யப்படாவிட்டால், பின்வருகிற பிரிவுகளில் இருக்கும் வேறு எந்தச் சட்ட நிபந்தனைகளும் நமக்கு உதவ மாட்டா என்று அஞ்சுகிறேன். நான் புரிந்துகொண்ட அளவில், பிரிவு 4-இன் பாகம் (அ) அப்படியே நிறைவேற்றப்பட்டால், வழக்கமும் பயன்பாடும் சட்ட நிபந்தனைகளுடன் இணையாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது அவையின் விருப்பமாயிருந்தாலும், அவற்றிற்கு அந்த அங்கீகாரத்தை அளிக்க முடியாது. ஆகவே, 'எந்த வழக்கமும் அல்லது பயன்பாடும்' என்ற வார்த்தைகளை நீக்கி விடுவதே நல்லது. பண்டிட் பர்கவா குறிப்பிட்டதைப் போல, சட்டக் கூறுகளை அது எல்லா இடங்களிலும் மீறியிருக்க வேண்டும் என்று கூறுகிற அளவிற்கு எனது சில நண்பர்கள் சென்றிருக்கிறார்கள். அது பிரிவு 4-க்கு முழுமையும் எதிரானதாக இருக்கும். அது, அந்தப் பிரிவை நீக்குவதற்கு ஒப்பானது மட்டுமல்ல, அதை எதிரானதாகக் கொண்டு நிறுத்துவதற்கும் சமமாகும்.

**திரு. ஜே.ஆர்.கபூர் :** சட்டத் தொகுப்பே எதிர்மறையானதாகி விடும்.

**டாக்டர் தேஷ்முக்:** இந்தச் சட்டத் தொகுப்பே எதிர்மறையாகும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். நாம் இந்தச் சட்டத்தால் தடை செய்யாதவரைக்கும், அங்கீகரிக்கப்பட்ட எந்த வழக்கமும் பயன்பாடும் தொடர்ந்திருக்க போதிய வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். துணைப் பிரிவு (அ) வை அப்படியே விட்டு விடுவது சரியல்ல என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் நடைமுறையில் இருந்த எந்த வழக்கமும், பயன்பாடும் அல்லது எந்த சட்டமும், இந்த சட்டத் தொகுப்பில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பொறுத்தவரை செயலிழந்து போகும் என்ற கருத்தமைவில் அசல் பிரிவு இருந்தது. அதிலிருந்து அந்த நிலையை சிறிதளவு மாற்றியிருக்கிறோம். இந்தச் சட்டம், திருமணம் மற்றும் விவாகரத்துக்கு மட்டும் என்று நாம் கட்டுப்படுத்தியிருப்பதால், பயன்பாடு மற்றும் வழக்கம் ஆகியவை தொடர்ந்து நடைமுறை

யிலிருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். ஏனென்றால் அது காலத்தை வென்று நிற்கிறது. மக்களுக்கு மிகவும் வசதியானதாகவும் குறைந்த செலவுடையதாகவும், பெருஞ்சுமை இல்லாததாகவும் இருக்கும். நான் முன் மொழிந்திருக்கும் திருத் தத்திற்கு ஆதரவாகத் தெரிவிக்க வேண்டியவற்றைத் தெரிவித்து விட்டேன்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** நான் என் தீர்மானத்தை முன்மொழிந் திருக்கிறேன். அதன் மூலக்கருத்து, டாக்டர் தேஷ்முக் முன்மொழிந் திருக்கும் தீர்மானத்துக்கு ஒத்தது. எனது அறிவார்ந்த நண்பர் இப்பொழுது என்ன கூறினாரோ அவற்றில் நான் முழுமையாகப் பங்குகொள்கிறேன். ஆனால், அதோடு கூட இன்னும் சில விவரங் களை நான் கூறவேண்டியிருக்கிறது. பிரிவு 3-இல் நாம் வழக்கம் மற்றும் பயன்பாட்டை வரையறை மட்டும் செய்திருக்கிறோம். அதை எவ்வளவு உயர்ந்ததாகவும் பெருமைக்குரியதாகவும் காட்டி யிருக்கிறோம் என்பது, பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளிலிருந்து ஓரளவு தெரியும்;

> ''வழக்கம்' மற்றும் 'பயன்பாடு' என்னும் சொல் அமைப்பு கள், தொடர்ச்சியாகவும், ஒரே சீராகவும், நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்படுவதால், உள்ளூர் பிரதேசம், இனக்குழு, சமுதாயம், குழு அல்லது குடும்பத்திலுள்ள இந்துக்களிடையே சட்ட அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு விதியைக் குறிக்கிறது:

ஆனால் இந்தச் சட்டம் நியாயமானதாகவும், உறுதியான தாகவும், பொதுக் கொள்கைக்கு எதிராக இல்லாததாகவும் இருக்க வேண்டும்.

நடைமுறையில் அங்கீகரிக்கப்படக் கூடிய பயன்பாடு, வழக்கம் ஆகியவற்றை ஒரு எல்லைக்குட்படுத்தி, அவற்றிற்கு வரையறையும் வகுத்த பின்னால், உடனேயே பிரிவு 4-இல் அதற்கு ஒரு மரண அடி கொடுத்திருக்கிறோம் எனக் கூற விழைகிறேன்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** அது பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

**சர்தார் ஹுக்கம் சிங் :** பாதுகாக்கப்பட்டிருக்கிறது - எல்லா இடத்திலும், எல்லாப் பிரிவிலும், எதையாவது பாதுகாக்கச் சொல்லு

கிறீர்கள். அது சரியானதெனக் கருதப்படுகிறது. ஆனால் அதை நான் வேறு மாதிரியாகப் பார்க்கிறேன். ஒவ்வொரு பிரிவிலும், தவிர்ப்பு தேவையாகக் கருதப்படுகிற இடங்களிலெல்லாம், இந்த வழக்கம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறி ஒரு பாதுகாப்புப் பிரிவை சேர்ப்பது என்பது எண்ணிப் பார்க்க முடியாதது. அது, ஒரு சட்டத் தின் தகுதியைப் பெற்றிருக்கும் போது, அதை ஏன் முழுமையாகப் பாதுகாக்கக் கூடாது? நீங்கள் அடைய முடியாத அல்லது கண்டு பிடிக்க முடியாத அளவு மிகத் தெளிவற்றதாகவும், மிக உறுதி யற்றதாகவும், மிக வரைமுறையற்றதாகவும் அது இருப்பதாக எண்ணிக் கொண்டு விடக் கூடாது. பொதுவாக அது மக்களின் உதடுகளிலும் உள்ளங்களிலும் இருப்பதோடு மட்டுமல்ல, பொது ஆவணங்களிலும் இடம்பெற்றிருக்கிறது. விருப்பப்படியெல்லாம் அதை மாற்றிவிட முடியாது என்பதையும் கூற விழைகிறேன். இது வில்லங்கத்திற்கு இட்டுச் செல்லும் என்று யாராவது கூறினால், முறைப்படுத்தப்பட்ட சட்டங்களிலும் எப்பொழுதும் கருத்து வேறுபாடு இருக்கிறது, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களிலும், பதிவு செய்யப்பட்ட விஷயங்களிலும் கருத்து வேறுபாடு இருக் கிறது என்று நான் எதிர்க் குற்றச்சாட்டு வைக்க முடியும். மேய்னே எழுதியதிலிருந்து வாசிக்கிறேன்.

> ''ரிவாஜ்-இ-அம் என்பது அரசு விதிகளின்படி, தனது பணிகளினூடே ஓர் அரசு அதிகாரி தயாரித்த பொது ஆவணம்-அதிலுள்ள விவரங்களையெல்லாம் எடுத்துக்காட்டு ஆதாரங் களோடு இல்லாமலிருந்தாலும் அவை ஒப்புக்கொள்ளப்படும்.
>
> ரிவாஜ்-இ-அம்-மோடு ஒத்ததாகவுள்ள வழக்கச் சட்டக் கையேடுகள் அரசு ஆணையோடு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.''

ஆகவே, கருத்து வேறுபாடுகள் ஏற்படக் கூடும் என்பதால், வழக்கங்கள் எல்லாம் வாய்மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுவ தில்லை. அவை பொது ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு முறை அறுதி செய்யும் போதும், நடைமுறையில் உள்ள வழக்கத்தின்படி எல்லாம் சரியாக இருக்கிறதாவென்று பார்ப் பதற்காக, அவை திருத்தம் செய்யப்படுகின்றன. மற்றும் ஆய்வு செய்யப்படுகின்றன. அதற்கு எந்த ஆபத்தும் இல்லை. இவ்வளவு நாட்களாக நாம் மிக எளிய சட்டங்களால் ஆளப்பட்டிருக்கிறோம்

என்பதுதான் எனது கவலை. பஞ்சாபியர்கள் சேர்ந்தெழுந்து, அவர்கள் இந்து சட்டத்தினால் ஆளப்படவில்லை என்று கூறுவதற்கு ஏற்கெனவே காலம் மிகக் கடந்து விட்டதென்று கூறுகிறார்கள். சந்தேகமின்றி அது எங்கள் கோரிக்கை. இந்து சட்டத்தைவிட வழக்கச் சட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதனால் நாங்கள் ஆளப்படுகிறோம் என்று பஞ்சாப் சட்டம், பிரிவு 5 - வரையறுத் திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் வழக்கச் சட்டம் தெரியும். மேலும் அதை நன்கு அறிந்தும் வைத்திருக்கிறார்கள்.

***டாக்டர் அம்பேத்கர் :*** இது வழக்கச் சட்டத்தை விட மிகவும் எளிதானது.

***சர்தார் ஹுக்கம் சிங்:*** நாமெல்லாம் இது நாள் வரை இந்து சட்டத்தால் ஆளப்பட்டிருப்பதாக ஒரே மூச்சில் கூறினார்கள். நல்லது. ஆனால் அது சரியான இந்து சட்டமல்ல என்று மறு மூச்சில் கூறினார்கள். இந்து சட்டம் இப்போது மறுபடியும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு சட்டத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு நம்மீது திணிக்கப்படுகின்றன. இந்துச் சட்டம் என்று சட்டம் உருவாக்குபவர் கூறுகிறார். இந்தக் கண்டுபிடிப்பானது இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின் இன்னொரு கண்டுபிடிப்புக்கு இட்டுச் செல்லாதென்பதற்கும், முன்னர் எடுத்துரைக்கப்பட்ட சட்டம் சரியானதல்ல, அதனை இயற்றியவர்கள் எல்லாம் தவறு செய்து விட்டார்கள் என்று நம்முன்னே முரணான அறிக்கை வைக்கமாட்டார்களென்பதற்கும் என்ன உத்திரவாதம் இருக்கிறது? இது முற்போக்கு என்றால், இப்போது முன்வைக்கப்பட்டிருக்கிற சட்டத்தைக் காட்டிலும் எங்களது வழக்கம் மிகவும் முற்போக்கானது என்று நாங்கள் உரிமை கொண்டாடுவோம். முன்னேற்றம் என்பதுதான் அடிப்படை அளவீடாக இருக்க வேண்டுமென்றால், பிறகு நான் கூறுகிறேன்: எங்களைத் தொடாதீர்கள். நீங்கள் முன்னேற விரும்பினால், நாங்கள் ஏற்கெனவே உங்களைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறோம். எங்கள் பின்னால் வாருங்கள். திருமணம் மற்றும் விவாகரத்தைப் பொறுத்தவரையிலும் கூட, நாங்கள் உங்களைக் காட்டிலும் மிகவும் முன்னணியில் இருக்கிறோம். எங்களைப் பின்னுக்கு இழுக்காதீர்கள். சமுதாயம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை சட்டங்கள் பிரதிபலிக்க வேண்டும். இந்தக் கட்டத்திற்கு நாங்கள் இப்பொழுதுதான் முன்னேறியிருக்கிறோம்

என்று சட்டம் செய்பவர் நினைத்தால், அவர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். இது ஒரே சீரான நிலையைக் கொண்டு வரு வதற்காக மட்டும்தான் என்றாலும் கூட, அவர் வெற்றிபெற மாட்டார் என்று கருதுகிறேன். கலாசாரம் மற்றும் மொழிகளில் உள்ள வழக்கம், பயன்பாட்டு வேறுபாடுகளை இவ்வளவு குறுகிய காலத்தில் ஒன்றிணைக்க முடியாது.

பழைய நாட்களை மறந்துவிட்ட, தேசத்தின் ஒரு பகுதியாக மாற முயற்சிக்க வேண்டுமென்று சீக்கியர்களுக்கு நேற்று ஒரு வேண்டுகோள் விடப்பட்டது. அதை நாங்கள் நெஞ்சாரப் பாராட்டு வோம். நாங்கள் அதற்கு எதிர்ப்பானவர்கள் அல்ல. ஆனால் நான் கூறுவதையும் டாக்டர் அம்பேத்கர் கேட்பாரானால்.....

**சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்): அவர் யாரிடமோ பேசிக் கொண்டிருக்கிறார். அவர் எங்களைக் கலந்தாலோசிக்கவில்லை. எங்களுடைய கருத்துக்கள் பற்றியும் அவர் கவலைப்படவில்லை.

**சர்தார் ஹுக்கம் சிங் :** அவர் இப்போது என் பக்கம் திரும்பி யிருப்பதாகக் காணமுடிகிறது.

நாங்கள் தேசத்தின் ஒரு பகுதியாக மாற முயற்சிக்க வேண்டும் என்றும், தனியாக இருக்கும் மனப்போக்கு எங்களுக்கு இருக்கக் கூடாதென்றும் எங்களுக்கு நேற்று நினைவூட்டப்பட்டது. எங்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டது. அது அவருடைய நல்ல எண்ணம். அவருக்கு மனதார நன்றி கூறுகிறேன். பாதிக்கு மேல் முன் வந்து அவரைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அரசாங்கம் மற்றும் அமைச்சரவையிலேயே அவர் அதைத் துவங்க வேண்டும் என்று, நேற்றைப் போலவே அவருக்கு நினைவுறுத்துவேன். ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறபொழுது, தாழ்த்தப்பட்டோர் ஆணை 1950-ஐக் குறிப்பாகக் கூறுகிறேன், வேறுபாடுகள் பார்க்கக் கூடாதென்று குடியரசுத் தலைவருக்கு அவர் ஆலோசனை கூற வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர் :** மதிப்பிற்குரிய எனது நண்பர் உரிமை யுடன் அரசை விமர்சிக்கலாம். ஆனால் குடியரசுத் தலைவரை இழுக்க வேண்டாமென்று நினைக்கிறேன். ஏனென்றால், குடியரசுத்

தலைவர் எதைச் செய்தாலும், அமைச்சரவையின் ஆலோசனைப் படிதான் அவர் அதைச் செய்கிறார். மதிப்பிற்குரிய எனது நண்பர் என் மீது வீசுகின்ற எல்லா விமர்சனங்களையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

***மாண்புமிகு அவைத் தலைவர்:*** குடியரசுத் தலைவரின் கருத்துக்களுக்கு அவையில் ஆதரவு தேடுவதோ விமர்சனம் செய்வதோ கூடாது என்று துணை சபாநாயகர் முன்னொரு தறுவாயில் கூறியபோதே, இந்த விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

***சர்தார் ஹுக்கம் சிங்:*** ஒருவேளை நான் கூறியது கேட்டிறாமல் இருக்கலாம். டாக்டர் அம்பேத்கர் குடியரசுத் தலைவருக்கு 'ஆலோசனை' கூறவேண்டுமென்று கூறினேன். எனக்குரிய வரம்பிற்குள் இருந்துதான் நான் அதைச் சொன்னதாக நினைக்கிறேன். குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளை நான் விமர்சனம் செய்யவில்லை. குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூறுமாறு மட்டும்தான் நான் டாக்டர் அம்பேத்கரைக் கேட்டுக் கொண்டேன். டாக்டர் அம்பேத்கர் மற்றும் பிற அமைச்சர்களால் அவர் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறார். இப்போதும் அவருக்கு ஆலோசனை கூறுமாறு டாக்டர் அம்பேத்கரை கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

***சர்தார் பி.எஸ். மான் :*** பெருமாட்டி அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. எனக்குச் சில சந்தேகங்கள் உள்ளன. அரசின் ஆலோசனையின் பேரில்தான் குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகள் அமைவதால், குறிப்பாக, குடியரசுத் தலைவரின் நேரடி ஆளுகையின் கீழ், பஞ்சாப் இருக்கிற இந்த நேரத்தில், குடியரசுத் தலைவரின் ஒரு நடவடிக்கை அவையில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகிறது என்று கொண்டால், அது என்னுடைய மனதுக்கு நியாயமற்றது என்று பட்டால், குடியரசுத் தலைவரின் அந்த ஆணைகளின் உசிதத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை ஆகியவை பற்றி கேள்வி கேட்க முடியாதா? அப்படியானால், இப்போதுள்ள நிலையில் குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளை என்னால் கேள்வி கேட்க முடியாது என்று அர்த்தமா?

***டாக்டர் அம்பேத்கர் :*** நான் அதில் மிகத் தெளிவாக இருக்கிறேன். குடியரசுத் தலைவர் வெளியிட்ட எந்த ஆணையையாவது

விமர்சனம் செய்யும் வாய்ப்பு எனது மரியாதைக்குரிய நண்பருக்கு ஏற்பட்டாலும் கூட, குடியரசுத் தலைவரை விமர்சிக்கும் உரிமை அவருக்குக் கிடையாது. அவர் விரும்பினால் அரசைக் கண்டிக்கலாம்.

**சர்தார் பி.எஸ். மான் :** ஆணைகள் நேரடியாகக் குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்டால் கூடவா? உண்மையிலேயே, இந்த ஆணைகளெல்லாம் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் வெளியிடப்படுகின்றன என்பதுதான் அரசியல் சாசனத்தின் பொதுக் கருத்தாகும். நேரடியாகக் குடியரசுத் தலைவரின் ஆளுகையின்கீழ் இருக்கிறதென்பது தான் பஞ்சாபின் நிலை. அவர் வெளி யிடுகின்ற எந்த ஆணைக்கும் அமைச்சரவைதான் பொறுப்பாகும். ஆனால் குடியரசுத் தலைவரின் ஆணைகளைப் பற்றி விவாதிக்கும்போது, குடியரசுத் தலைவரின் ஆணைகள் என்று கூறாமல் நான் வேறெப்படிக் கூற முடியும்?

**மாண்புமிகு அவைத் தலைவர்:** குடியரசுத் தலைவர் செய்கிற ஒவ்வொன்றும் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் செய்யப்படுகிறது என்று அரசியல் சாசனம் மிகத் திட்டவட்டமாகக் கூறுகிறது. அதுவே குடியரசுத் தலைவரின் ஒவ்வொரு செயலையும் விளக்குகிறது.

**சர்தார் பி.எஸ்.மான்:** ஒருவேளை, பஞ்சாப் சம்பந்தமாக குடியரசுத் தலைவர் வெளியிட்ட ஆணைகளைப் பற்றி நான் குறிப்பிட வேண்டியிருந்தால், அவை அமைச்சரவையின் ஆலோ சனையின் பேரில் குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்டவை என்பது பொதுக் கருத்தாக இருந்தாலும், குடியரசுத் தலைவரின் ஆணைகள் என்றுதான் என்னால் கூற முடியும். இதுகுறித்து தங்களிடமிருந்து தெளிவான தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** ஏற்கனவே டாக்டர் அம்பேத் கரால் இந்த விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. என்னவெல்லாம் அவர் விளக்கம் கொடுத்திருக்கிறாரோ அவையெல்லாம் மரியாதைக் குரிய உறுப்பினர் இப்போது குறிப்பிடுகிற வகையான ஆணை களுக்கும் பொருந்தும்.

இரண்டு நிலைகள் உள்ளன: குடியரசுத் தலைவர் விமர் சிக்கப்படக் கூடாது என்பது ஒன்று. குடியரசுத் தலைவர் என்ன

செய்தாலும், அமைச்சரவையின் ஆணைப்படி செய்கிறார் என்பது மற்றொன்று. இந்த இரண்டையும் சேர்த்து வைத்துப் பார்த்தால், அவருடைய செயல்களெல்லாம் அமைச்சரவையின் ஆலோசனையின் பெயரில்தான் நடைபெறுகின்றன என்றாலும் அவை விமர்சிக்கப்பட முடியாதவை என்பதுதான் முடிவு.

**சர்தார் பி.எஸ். மான் :** அவை சட்ட விரோதமானவையாக, மோசமானவையாக இருந்தால் கூடவா? குடியரசுத் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட இந்த ஆலோசனை, மோசமான ஆலோசனை என்று இப்பொழுதும் எப்பொழுதும் கூறுவேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யக் கூடாது என்னும் அரசியல் சாசனத்தின் நிபந்தனை விதிகளை நாம் ஏற்றுக்கொண்டிருக் கிறோம்.

**சர்தார் பி.எஸ்.மான் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கூட நாம் முன்மொழியலாம்........

**டாக்டர் அம்பேத்கர்:** அரசின் மீது நீங்கள் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். குடியரசுத் தலைவர் மீது அல்ல.

**திரு. தாமோதர் மேனன்** (திருவாங்கூர்-கொச்சி): குடியரசுத் தலைவரைக் குற்றம்சாட்டிக் கண்டிக்க இந்த அவைக்கு உரிமை கிடையாதா?

**டாக்டர் அம்பேத்கர்:** அது முழுக்கவுமே வேறு விஷய மாகும்.

**மாண்புமிகு அவைத் தலைவர் :** இது தொடர்பாக சட்டங் களின் நடைமுறைத் தன்மை சட்டம் 159, பிரிவு (VI) ஐ இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது கூறுவதாவது :

''ஓர் உறுப்பினர் பேசும்போது -

* * (VI) தனது விவாதத்திற்கு வலிமை சேர்ப்பதற்காக குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்தக் கூடாது''

**சர்தார் பி.எஸ்.மான்:** உண்மையில் அரசுதான் குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. குடியரசுத் தலைவரின் சில நடவடிக்கைகளை நான் விமர்சனம் செய்தால், அதிலுள்ள பழியெல்லாம் அரசையோ, குடியரசுத் தலைவரின் ஆலோசகர்களையோதான் சாரும். யாரைச் சேர வேண்டும் என்பதை மக்களே முடிவு செய்து கொள்ளட்டும். ஆனால், பிறப்பிக்கப் படுகிற ஆணைகள் குடியரசுத் தலைவரின் பெயரில் தான் இருக்க வேண்டும். தற்போது பஞ்சாபில் நாங்களெல்லாம் குடியரசுத் தலைவரால் ஆளப்பட்டுக் கொண்டிருப்பதால், விமர்சனம் செய்யும் உரிமையை நான் இழக்க வேண்டுமா? அது எதிர்கால முழுமைக்கு மாகக் கதவுகளை அடைத்துவிடும். அதுதான் எனது பிரச்சினை.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** இப்பொழுது அவர்கள் அவையில் செய்து கொண்டிருப்பதைப் போல, விமர்சனம் செய்வதி லிருந்து மரியாதைக்குரிய உறுப்பினர்கள் தடுக்கப்படாமலிருந்தால், அவர்கள் கருத்தில் அது பாதகமான ஆலோசனையாக இருக்கு மானால், அத்தகைய பாதகமான ஆலோசனையைக் கொடுக்கின்ற அரசின்மீது அவர்களுடைய விமர்சனத்தைத் திருப்பலாம். குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளுக்கு அரசே காரணமாக இருந்தால், இத்தகைய நடவடிக்கைகளுக்கு குடியரசுத் தலைவரல்ல காரணம், ஆனால் பாதகமான ஆலோசனை கொடுக்கின்ற இந்த அரசே காரணம் என்று அவர்கள் கருதினால், குடியரசுத் தலைவரின் பெயரை இழுக்காமல், அரசின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யும் முழு உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு.

**டாக்டர் தேஷ்முக் :** குடியரசுத் தலைவரை நாங்கள் விமர்சிக்க வில்லை. அரசைத்தான் விமர்சிக்கிறோம்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அதிலென்ன இடையூறு இருக்கிறது? அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் சுதந்திரம் உறுப்பினர்களுக்கு இருக்கும்போது, அவர்களுடைய கருத்துக்களை நேர்மை யாகவும் வெளிப்படையாகவும் வெளியிடுவதற்கு எவ்விதத் தடையு மில்லாத போது, குடியரசுத் தலைவரின் பெயரை நேரடி யாகக் குறிப்பிட முடியவில்லையே என்கிற வருத்தமோ வெறுப்போ அவர்கள் கொள்ளத் தேவையில்லை.

**சர்தார் பி.எஸ். மான் :** நாங்கள் குடியரசுத் தலைவரின் பெயரை இழுக்க வில்லை. ஆனால் அவரது நடவடிக்கைகளை, அது

அரசின் நடவடிக்கைகளாக இருப்பதனால், விமர்சனம் செய்கிறோம். விமர்சிக்கும் உரிமை எங்களுக்கு இருப்பதைப் போல, ஊகித்துக் கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** என்னுடைய கருத்தை நான் மிகத் தெளிவாகக் கூறி விட்டேன். குடியரசுத் தலைவரின் நடவடிக்கைகளுக்கு அரசுதான் காரணம். குடியரசுத் தலைவருக்கு அரசு சரியாக ஆலோசனை கூறவில்லை என்று அவர்கள் நினைத்தால், அவர்கள் தாராளமாக அரசை விமர்சிக்கலாம். அவர்களை எதுவும் தடை செய்யாது.

**சர்தார் ஹுக்கம் சிங்:** குடியரசுத் தலைவரை நாம் விமர்சிக்கலாமா, கூடாதா, என்னும் பிரச்சினையில் எழுந்த இந்த விவாதத்தில் என்னுடைய வேண்டுகோள் அமுங்கி விட்டது கண்டு வருந்துகிறேன். குடியரசுத் தலைவரை விமர்சிக்க வேண்டும் என்பது எனது நோக்கமே அல்ல. என்னைப் பொறுத்தவரை அவரைக் குறை கூற முடியாது. நான் டாக்டர் அம்பேத்கரை நேரடியாகக் குற்றம் சாட்டுகிறேன். ஏனென்றால், பிரிவினை நோக்கில் நாங்கள் சிந்திக்கக் கூடாது என்று எனக்கும் மற்ற சீக்கியர்களுக்கும் அவர்தான் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அந்தக் குறை எதிர்தரப்பில் இருக்கிறது. இந்த விளையாட்டை அவர்தான் துவக்கினார். தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிய ஆணை பிறப்பிக்கும்படி அவர் குடியரசுத் தலைவரிடம் ஆலோசனை கூறிக் கொண்டிருந்த போது, எங்களைத் தூர விலக்கி வைத்து விட்டார். அதுதான் எனது குற்றச்சாட்டு. எனது மனதை நான் மாற்றிக் கொள்ள வேண்டுமென்று எனக்கு வேண்டுகோள் விடுவதற்கு முன்னால், அவர்தான் இதற்கு அடியெடுத்துத் தர வேண்டும். மேலும் அந்த அநீதியைக் களைய வேண்டும். அதுதான் எனது முதல் விஷயமாகும்.

இரண்டாவது செய்தி என்னவென்றால், பஞ்சாபில் உள்ள வழக்கம் மிக எளிமையானது, சாதாரண குடிமக்களாலும் எளிதில் புரிந்துகொள்ளப்படக் கூடியது என்று நாங்கள் கூறுகிறபோது, நாங்கள் ஒருதார முறையை ஏற்கிறோமா, இல்லையா என்ற எதிர்க் கேள்வி முன் வைக்கப்படுகிறது. அது அல்ல கேள்வி. ஒருதார முறையைக் கண்டிப்பாக நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் அதை ஆதரிக்கிறோம். வரவேற்கிறோம். எல்லோரும் ஒருதார முறையை விரும்புகின்றனர். யாரும் அதற்கு எதிராக இல்லை. பொதுவாக எல்லோரும் ஒருதார முறையைத் தான் ஆதரிக்கிறார்கள் என்னும் பலமான பொதுக் கருத்து ஏற்கெனவே இருக்கிறது.

மேலும், ஒரு மனைவிக்கு மேல் யாரும் வைத்துப் பராமரிக்க முடியாது என்ற அளவில்தான் நாட்டின் பொருளாதார நிலையும் இருக்கிறது. நமது டாக்டரைப் போன்ற உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களைத் தவிர சாதாரண மனிதர்களால், இரண்டாவது மனைவியை வைத்துப் பராமரிக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே ஒருதார முறை பற்றி எந்தக் கேள்வியும் எழவில்லை. அப்படியே வந்தாலும் நாங்கள் ஒருதார முறைக்கு எதிரானவர்கள் அல்ல. நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் இதில் இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தடுக்கப்பட்ட உறவுமுறைகள் இருக்கின்றன. பிற சடங்குகள் இருக்கின்றன. பஞ்சாபைப் பொறுத்த வரையிலும், தடுக்கப்பட்ட உறவுமுறைகள் குறைவானவை. இந்த மசோதாவினால் நீங்கள் அதைச் சுருக்கியிருக்கிறீர்கள். அதை மேலும் நீங்கள் சுருக்க வேண்டி வரும். வாரிசுரிமை சம்பந்தப்பட்ட பகுதியை நாம் இந்த நேரத்தில் நிறைவேற்றவில்லையென்றாலும், கூடிய விரைவில் அதை நிறைவேற்ற நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பெண் தனது சகோதரனுடன் பாகப்பிரிவினை செய்து கொள்ள வேண்டுமென்றால், தடுக்கப்பட்ட உறவுகளைப் பற்றிய இந்த நீண்ட பட்டியல் இருக்கக்கூடாது. கண்டிப்பாக முஸ்லீம்களைப் போல, எங்களது ஒன்றுவிட்ட சகோதர, சகோதரிகளுக்கும் மற்றும் பிறருக்கும் வாரிசுரிமை கொடுக்காவிட்டால், சந்தேகமில்லாமல், இந்தப் பட்டியலை மேலும் மேலும் சுருக்க நிர்ப்பந்திக்கப்படுவோம். *(குறுக்கீடு)* இரண்டும் ஒன்றாகச் செல்ல வேண்டும். ஏற்கெனவே பஞ்சாப் வழக்கத்தில், தடுக்கப்பட்ட உறவுகள் பற்றிய ஒரு பட்டியலே இருக்கிறது. அது வழக்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டிருக்கிறது. முன்னேறுவதற்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டு இந்த முன்னேற்றத்திற்கெதிராக நீங்கள் ஏதாவது செய்தால், மிக முன்னேறிய நிலையில் இருக்கும் எங்களை நிச்சயமாக நீங்கள் பின்னிழுப்பதாகும். *(மரியாதைக்குரிய ஓர் உறுப் பினர்: வழிநடத்திச் செல்கிறீர்கள்)* ஆம். நாங்கள் இந்தியா முழுவதையும் வழிநடத்திச் செல்கிறோம்.

*பிற்பகல் 1 மணி*

*(மாண்புமிகு துணை சபாநாயகர் தலைமையேற்கிறார்)*

மற்றவற்றைப் பொறுத்தவரையிலும், தத்து எடுக்கப்பட்ட மகனுடன் நியமிக்கப்பட்ட வாரிசும் சேர்க்கப்பட வேண்டுமென்று எனது மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா ஒரு திருத்தத்தை முன்மொழிந்தபோது, சிறிது நேரத்திற்கு முன்னால் அந்தக் கேள்வி எழுந்தது. அது சில மறுப்புகள் மற்றும் குறுக்கீடுகள்

காரணமாக, எதிர்க்கப்பட்டது. இந்தியாவின் மற்ற பகுதிகளில் உள்ளதைப் போல, தத்தெடுக்கப்பட்ட வாரிசும், தத்தெடுக்கப்பட்ட மகனும் ஒரே நிலையாவர். இதில் ஒரு முன்னேற்றம் என்னவென்றால், குறிப்பிட்ட சடங்குகள் எதுவும் செய்யப்படுவதில்லை. வயது வரம்பில்லை. உறவுகளைப் பொறுத்தவரையிலும், அதற்கு எந்தத் தடையுமில்லை.

**டாக்டர் அம்பேத்கர்:** தத்தெடுக்கப்பட்ட வாரிசு பற்றிய விவகாரத்தை பின்னால் எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் முடிவு செய்யவில்லையா? இந்த அவை அதை ஏற்றுக் கொண்டதென நான் நினைத்தேன். நாம் பிரிவு - 3-இல் மகனுக்கான வரையறை பற்றி விவாதித்துக் கொண்டிருந்த பொழுது, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா இந்தக் கேள்வியை எழுப்பினார். இந்தப் பிரச்சினை பின்னால் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று இந்த அவையில் கூறினேன். பின்னால் என்றால், தக்க தருணத்தில், நாம் முடிவுக்கு வருகிறபோதா ....

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வரையறை செய்கிற நிலையிலோ.

**டாக்டர் அம்பேத்கர் :** மரியாதைக்குரிய என்னுடைய நண்பர், தத்தெடுக்கப்பட்ட மகனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதற்கு நாம் இன்னும் வரவில்லை. நாம் நேரத்தை மீதப்படுத்தி பிரிவு 4-ஐ நிறைவேற்றலாம் என்று தான் கூறுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** பாகம் (vii) வரைக்கும் நிறுத்திவைக்க நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். பின்னொரு நாளில் இந்த விஷயம் வரும்போது இதை நாம் விவாதிக்கலாம்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** மாண்புமிகு அமைச்சரின் இந்தக் குறுக்கீடு, அவர் புரிந்து கொள்ளவில்லையா அல்லது நான்தான் தெளிவு பெறவில்லையா என்ற ஐயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மற்ற எல்லோரையும் விட பஞ்சாப் முழுவதும் மிகவும் முற்போக்கானது என்பதையும் புரிந்துகொண்டேன்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** அதை அவர் புரிந்து கொண்டார். மிகவும் சரி, ஆனால் நான் சில காரணங்களையும் உதாரணங்களையும்

கொடுத்தால், அதை அவர் கவனிப்பதேயில்லை. வழக்கமும் பயன்பாடும் மிகவும் தேவைப்படுகிற ஓர் உதாரணம் பற்றிக் கூறுகிறேன். நான் கூறுவதாவது :-

**டாக்டர் அம்பேத்கர் :** இது பற்றி எனக்குக் கற்றுக் கொடுப்பதை இப்போது நிறுத்திக் கொள்வது நல்லது. இதை நான் பிறகு கற்றுக்கொள்கிறேன்.

**பாபு ராம்நாராயண் சிங்:** அதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** கற்பிக்கப்பட வேண்டியவர் டாக்டர் மட்டுமல்ல. இன்னும் மற்றவர்களும் இருக்கிறார்கள். மரியாதைக்குரிய உறுப்பினர்களை என் திருத்தத்துக்கு வாக்களிக்கும்படி கேட்க வேண்டுமானால் அவர்களை என் பக்கம் ஈர்க்க வேண்டும்.

**டாக்டர் அம்பேத்கர் :** பிறகு?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்பொழுது கூறப்படுகின்ற யோசனை என்னவென்றால், இந்த விவாதம் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் மற்றொரு இடத்தில் இதே விஷயம் பிரிவு 3-ல் எழுப்பப்பட்ட போது, மகன் என்பதற்கான வரையறையில் தத்தெடுக்கப்பட்ட வாரிசும் மகன்தான் என்று கூறப்பட்டது. தடுக்கப்பட்ட உறவுமுறைகள் விளக்கப்பட்டிருக்கிற பிரிவு 7-க்கு நாம் வருகிறபோது அது சேர்க்கப்பட வேண்டுமா அல்லது ஒரு விளக்கத்தைச் சேர்க்கலாமா என்பது பற்றி ஆலோசிக்கலாம். நாம் பிரிவு 7-க்கு வரும்போது இதை எடுத்துக் கொள்ளலாம்.

**சர்தார் ஹுக்கம் சிங்:** நான் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதற்காக மிகவும் வருந்துகிறேன். நான் கூற வந்தது இதுதான்: பயன்பாடும் வழக்கமும் தொடர்ந்து இந்தச் சட்டத்தில் மேலாதிக்கம் செய்ய வேண்டும் என்றுதான் பரிந்துரைக்கின்றேன். அவ்வாறு பரிந்துரைக்கும்போது, வழக்கம் மற்றும் பயன்பாட்டின் பயனுடைமை, சட்டத்தைக் காட்டிலும் அது அடைந்திருக்கிற வளர்ச்சி, அது ஏன் தொடர்ந்து வைத்திருக்கப்பட வேண்டும், வழக்கத்திற்கும் மற்ற சட்டங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை என்பனவற்றை நான் விளக்கிக் கொண்டிருக்கிறேன். அது

தொடர்பாக, மகன் பற்றி நான் குறிப்பிட்டேன். 'மகன்' அல்லது வேறு யாரைப்பற்றியும் வரையறை கொடுக்க நான் முயற்சிக்கவில்லை. அதுதான் எனது நோக்கம். ஆனால், நான் தொடர்ந்து பேசக்கூடாது என்று டாக்டர் அவர்கள் கூறினால், நான் நிறுத்திக் கொள்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர் :** இதைப் பின்னால் விவாதிக்கலாம் என்றுதான் கூறினேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அதைப் பற்றி நாம் பின்னால் விவாதிக் கலாம்.

**சர்தார் ஹுக்கம் சிங் :** பஞ்சாபில் வழக்கம் மற்றும் பயன் பாட்டைப் பொறுத்தவரை, அது அங்கீகரிக்கப்பட்டு நன்கு அறியப் பட்டிருக்கிறது என்று கூற விழைகிறேன். சாதாரண மனிதர்களாலும் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள், வழக்கறிஞர்களாலும் நன்கறியப் பட்டிருப்பதால், தொடர்ந்து இந்து சட்டத்தில் அது மேலாதிக்கம் செய்து வருகிறது. ஒரு புதிய சட்டம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை ஒரு சட்டம் செய்பவர் கொண்டுவந்திருப்பதால் அது தொடர வேண்டும் என்பதற்காக, இந்து சட்டத்தை நீண்ட நாட்களாக மேலாதிக்கம் செய்து, காலத்தின் சோதனைகளை வென்று, வழக்கு மன்றங்களின் தீர்ப்புகள் மற்றும் சோதனைகளைக் கடந்து நிற்கும் வழக்கத்தை வழக்கொழியச் செய்வதில் நியாயம் இல்லை. அது உறுதியானது. அது நியாயமானது. அது காலத்தின் சோதனைகளை வென்று நிற்கிறது. ஒரே சீராக இருக்கிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் அது பொது ஆவணங்களில் காணக்கிடக்கிறது. மேலும் அதை எளிதில் உறுதிப்படுத்தலாம். அதைப் பற்றி எந்தக் குழப்பமும் தேவையில்லை. ஆகவே, இந்தப் பிரிவிலிருந்து 'பயன்பாடு மற்றும் வழக்கம்' என்னும் வார்த்தைகளை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த அவை அனுமதிக்குமானால், நாம் கலைவதற்கு முன்னால் இந்தப் பிரிவை அவை முன்னால் முன்மொழிய விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் :** இல்லை. இல்லை. அது மிகவும் சர்ச்சைக்குரிய பிரிவு.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருத்தங்களை முன்மொழிந்திருக்கிற உறுப்பினர்களுக்கு, நான் வாய்ப்புத் தருகிறேன். முதலில் டாக்டர் தேஷ்முக், பிறகு சர்தார் ஹுக்கம் சிங், அதற்குப் பிறகு பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, பிறகு நசிருத்தீன் அகமது மற்றும் ஜுன்ஜுன்வாலா. மேலும் பலருக்கு வாய்ப்பு தரும் எண்ணம் இருந்தாலும் இதற்கு மேல் முடியாது போலிருக்கிறது.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்:** இது மிகவும் கருத்து மாறுபாடு உடைய பிரிவு.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நாளை நாம் அமர வேண்டும் என நினைக்கிறேன்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் :** ஆமாம். ஆமாம்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் :** முடியாது. முடியாது.

**கேப்டன் ஏ.பி. சிங் :** நாளை நமக்கு விடுமுறை வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இந்த ஆணைத் தாளில் மிகுந்த வேலை இருக்கிறது. நாம் இன்னும் 4-வது பிரிவைக்கூட முடிக்கவில்லை. இந்தச் சட்டப்பெரும் பிரிவில் மொத்தம் 55 பிரிவுகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில், நாம் நாளையும் அமர வேண்டியிருக்கும்.

**கேப்டன் ஏ.பி. சிங்:** இந்த மசோதாவைப் பற்றியும் இன்னும் பல விஷயங்கள் பற்றியும் நாங்கள் நிறையப் படிக்க வேண்டியிருக்கிறது. எங்களுக்குக் கால அவகாசம் வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நாளைக்கு கேள்விகள் எதுவும் கிடையாது. 9-30 முதல் அமரத் தடை ஏதும் இல்லை. நாம் காலை 9-30 மணிக்கு அமரலாம். இது மட்டுமே நாளைய வேலை.

**சில உறுப்பினர்கள் :** சரி.

**ஓர் உறுப்பினர் :** எதுவரைக்கும்?

**துணை சபாநாயகர் :** வழக்கம் போல் 1.15 வரை.

**ஓர் உறுப்பினர் :** 9-30 முதல் 2 மணி வரை.

**பண்டிட் மைத்ரா (மேற்கு வங்கம்):** 12 மணி வரை. எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** இந்த மசோதா முழுமையிலும், இது மிகவும் சச்சரவுக்குரிய பிரிவு (குறுக்கீடுகள்) ஐயா, இந்த முழு மசோதாவிலும், பிரிவு 4 மிகுந்த சர்ச்சைக்குள்ள பிரிவு என்று கூறுகின்றேன். உண்மையிலேயே, இந்த அவையின் மிகுந்த நேரத்தை எடுத்துக்கொண்ட பிரிவு 2-ஐ நாம் விவாதித்துக் கொண்டிருந்த போது, விவாதங்களெல்லாம் உண்மையிலேயே 4-வது பிரிவுக்குப் பொருந்துவது போலிருந்தது. சட்டமியற்றும் ஆற்றல் இன்னும் முழுமையடையாத சமுதாயங்களில், மக்களின் நடவடிக்கைகள் வழக்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மக்களின் உணர்வுகளோடு வழக்கம் ஒன்றி விடுகிறது. திணிக்கப்படுகின்ற சட்டத்தைக் காட்டிலும் இதை விரும்புகிற அளவிற்கு வழக்கம், மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆகவே, நாங்கள் கிராமப் பகுதிக்குள் செல்கின்றபோது, 'எங்களுடைய வழக்கங்கள் பாதுகாப்பாக இருக்கின்றனவா? அல்லவா?' என்றுதான் எங்களிடம் கேட்கப்படுகிறது. இந்திய அரசின் அமைச்சராக இருக்கும் எனது நண்பரொருவர் வீட்டிற்குச் சில நாட்களுக்கு முன் சென்றிருந்தேன். ''இந்து சட்டத் தொகுப்பைப் பொறுத்தவரை நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று அவருடைய பணியாள் என்னிடம் கேட்டான். இந்து சட்டத் தொகுப்பு விவாதிக்கப்பட்டு வருகிறது - அதனுடைய சில பகுதிகள் நிறைவேற்றப்படும் என்று கூறினேன். உடனே அவன் கேட்ட அடுத்த கேள்வி: 'நமது விவாகரத்து வழக்கத்தை அது நீக்கிவிடுமா?' என்பதுதான். 'ஆம். அனேகமாக விவாகரத்து சட்டப்பிரிவுகள் நிறைவேற்றப்படும். வழக்கங்களைப் பொறுத்தவரை, சிறப்புச் சோதனைகளைச் சமாளித்து நின்றால் மட்டுமே அவ்வழக்கங்கள் அங்கீகரிக்கப்படும். மேலும் எல்லா வழக்கங்களும் தொடராது' என்று நான் கூறினேன். அவன் திருப்தியடையவில்லை. அவனுடைய சொந்த வழக்கம், அது நியாயமானதோ, இல்லையா, அது அங்கீகரிக்கப்பட்டு முழுமையாக அமுலில் இருக்க வேண்டும் என விரும்புகிறான். அதுதான் உண்மையிலேயே இப்பொழுது மக்கள் மனதில் இருக்கிறது. அதே சமயம், இந்த அவையைப் பொறுத்த வரையிலும், மக்களின் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையிலும், வழக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவு வரையில்தான் சட்டத்திற்குள் வர வேண்டும் என்பதில் நாங்கள் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறோம். மக்களின் உள்ளங்களின் ஆழத்தில் பதிந்துவிட்ட வழக்கங்கள் தொடரப்பட வேண்டும்

என்று நாங்கள் விரும்புகிறோம். தென்னிந்தியாவைப் பொறுத்த வரை, சில தொடர்புகளும், திருமணங்களும் நடைபெறுவது நமக்குத் தெரியும். அவை வட இந்தியாவில் மிகவும் ஆட்சேபகரமானதாகக் கருதப்படுகின்றன. ஆனால் அவை தென்னிந்தியாவில் சரியானவை யாகவும் தகுதியானவையாகவும் கருதப்படுகின்றன. அவற்றில் தலையிடக்கூடாது. அதேபோல இந்தியாவின் மற்ற பகுதிகளில் சில வழக்கங்கள் அல்லது நன்கு நிலைநாட்டப்பட்ட நடைமுறைகள் உள்ளன. அவற்றில் தலையிட யாரும் விரும்பமாட்டார்கள். இது தொடர்பாக, நாம் இங்கே செய்கின்ற சில சட்ட நிபந்தனைகளின் மூலமாகக் குலையப்போகின்ற, பஞ்சாப் விவசாய வர்க்கத்தின ரிடையே மிகவும் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு வழக்கத்தைச் சுட்டிக்காட்டவதன் மூலம் என் கருத்தை விளக்குவேன். அங்கு **கரேவா** திருமணம் என்றழைக்கப்படும் ஒருவிதத் திருமணம் நடை பெறுகிறது. ஒருவன் இறந்தால், அந்த விதவைப் பெண்ணை அவ னுடைய தம்பிக்கோ, அல்லது சகோதரனாகும் தகுதியுடைய எந்த ஒரு நபருக்கோ, அந்த சகோதரன் அப்பெண்ணிற்கு சம வயதுடைய வனாக இருந்தாலும் அல்லது சிறியவனாக இருந்தாலும்கூட திருமணம் செய்து வைப்பார்கள். சில பிரிவுகளில் அவனுடைய அண்ணனுக்கே கூட திருமணம் செய்து வைப்பார்கள். ஆனால் இந்தப் பழக்கம் மற்ற பிரிவுகளில் இல்லை. இந்த வகைத் திருமணங் களில், ***'சப்தபாதா'*** போன்ற வழக்கமான திருமணங்களில் கடைப் பிடிக்கிற நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அவர்கள் வழக்க மான சடங்கொன்றைச் செய்கிறார்கள். திருமணம் நடந்து முடிந் ததாகக் கருதப்படுகிறது. இந்த நடைமுறையின் மொத்த விளைவு என்னவென்றால், சொத்தோ அல்லது பெண்ணோ அந்தக் குடும்பத் திலிருந்து வெளியே போவதில்லை. முந்திய கணவன் வழிப்பிறந்த குழந்தைகள் நன்கு கவனித்துக் கொள்ளப்படுவார்கள். இந்த வழக்கம் இந்த மக்களிடையே தொன்றுதொட்டு நிலவி வருகிறது. இத்தகைய விதவைத் திருமண வழக்கத்தை இப்போது உயர்சாதி இந்துக்கள் சிறிது சிறிதாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். பஞ்சாப் விவசாயி களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இத்தகைய விதவை மறுமணம் உயர் சாதி இந்துக்களாலும் கூட இப்போது கடைப் பிடிக்கப்படுகிறது. ஆக இப்பொழுதைய வழக்கம் என்னவென் றால், இறந்தவனின் தம்பிக்கு மனைவி உயிரோடு இருந்தாலுங்கூட, அவன் அண்ணனின் விதவையை மணந்து கொண்டு கணவன் மனைவியாக வாழ வேண்டும். இது நடைமுறையில் இந்து சட்டப் படி இருதாரமணம் ஆகும்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** எப்படி?

***பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:*** தம்பியின் மனைவி உயிரோடு இருக்கலாம். தம்பிக்கு நடந்த திருமணத்தின் மூலம் ஏற்கெனவே ஒரு மனைவி இருந்தும்கூட, வழக்கப்படி அண்ணனின் விதவை அவனுக்கு மணம் முடிக்கப்படுகிறார். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** குறிப்பிட்ட பகுதிகளில் சில வழக்கங்கள் பரவலாக இருக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரையிலும் அவை ஒப்புக்கொள்ளத்தக்கவை; சாதாரணமானவை. நாம் எந்த வகையிலும் ஏளனம் செய்வது அல்லது சிரிப்பது போன்ற இழிசெயல்களில் இறங்கக் கூடாது. அப்படிச் செய்தால் நாம் அவர்களது உணர்வுகளைப் புண்படுத்தியவர்களாவோம். இதுபோன்ற வழக்கங்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது பேச்சை நாளை தொடரலாம்.

*1951 செப்டம்பர் 22 சனிக்கிழமை ஒன்பதரை மணி வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.*

---

# *இந்து சட்டத் தொகுப்பு - தொடர்கிறது

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா** (இந்திப் பேச்சின் மொழி யாக்கம்) : நான் இந்தியில் பேச வேண்டும் என்று மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் தமது ஆவலை வெளியிட்டார். அதற்கிணங்க அந்த மொழிவழியே என் கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

நான் நேற்று இந்த அவையில் கூறியபடி, நமது வழக்கங்கள் எல்லாம் பல்வேறு முரண் கூறுகளை உடையன. அவை ஒன்றுக் கொன்று மிகவும் வேறுபட்டதாக இருக்கும். நாட்டின் ஒரு பகுதியில் நல்லது என்று கருதப்படுகிற ஒரு வழக்கம், இன்னொரு பகுதி யில் மிகவும் கண்டிக்கத்தக்கதாகக் கருதப்படலாம். எனவே இந்த மசோதாவை மிகவும் கவனத்துடன் எடுத்துச் செல்ல வேண்டும். நேற்று நான் *கரேவா* முறைத் திருமணத்தைப் பற்றிக் குறிப் பிட்டேன். அதைக் கேட்டு, மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் சிரித்தார்கள். இந்த வழக்கம் பஞ்சாபிலும் 'ஔத்'திலும் மிகப் பரவலாகக் காணப் படுகிறது. இது சிரிப்பதற்குரிய செய்தி அல்ல. இந்து சமுதாயத்தின் உயரிய குறிக்கோள் அடிப்படையில் நோக்கி னால் மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் இந்தக் *கரேவா* முறைத் திருமணத்தை விரும்ப மாட்டார்கள். ஏனென்றால் பண்டைக் காலத்திய நியதிப்படி, அண்ணனின் மனைவி தாயைப் போல் கருதப் பட்டார். இராமாயணப் படி, இராமனோடு காட்டுக்குச் செல்ல இலக்குமணனுக்கு அவனது தாய் ஒப்புதல் கொடுத்துவிட்டுச் சொல் கிறார்:

> ''ராமம் தசரதம் வித்தி, மம் வித்தி ஜனகத் மஜம்;
> அயோத்திய மத்ராம் வித்தி, காச்தாத் யதாசுகம்''

அதாவது இராமனைத் தந்தையாகப் பார். சீதையை என்னைப் போல் (தாயைப் போல்) பார். ஆரண்யத்தை அயோத்தியாகப் பார்.' அப்படிப்பட்டது நமது சமுதாயத்தின் உயர்ந்த குறிக்கோள். தந்தையர்கள் ஆணையிட்டால் காட்டுக்குப் போக எத்தனை இளை ஞர்கள் தயாராக இருக்கிறார்கள்? எத்தனை பேர் அண்ணனுக்குத்

---

★ நா.வி., தொகுதி XV, பாகம் II, செப்டம்பர் 22 1951, பக். 3072-82.

தந்தையரைப் போன்று மதிப்புத் தருகிறார்கள்? இப்படிப்பட்ட நடத்தைதான் முழுமையானது. சமுதாயத்தில் பரவலாகக் காணப் படுகின்ற வழக்கங்களைப் பொறுத்தவரையில், சாஸ்திரங்கள் கூட கணவனின் தம்பியை வருங்கால வாழ்விற்குரிய இரண்டாவது கணவனாக கருதி வந்திருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் அண்ணன் மார்கள் இறந்தபிறகு அவர்களின் மனைவியரை, தம்பிகள் மணந்து கொள்ள சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன. அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. மெட்ராஸ் மற்றும் பிற மாநிலங்களில் பரவலாக உள்ள வழக்கங்களை நான் நன்கறிவேன். ஒப்புதல் குழுவின் உறுப் பினர் என்ற முறையில் இந்தியா முழுவதும் சுற்றியிருக்கிறேன். பல்வகையான வழக்கங்களைப் பற்றி விசாரித்தறிந்திருக்கிறேன். ஆகவேதான், வெவ்வேறான சிறப்பியல்புகளைக் கொண்ட ஏராள மான வழக்கங்கள் நம்மிடையே இருக்கின்றன என்கிறேன். அவற்றின் சிக்கல்கள் பற்றி அதிகம் நான் பேச விரும்பவில்லை. ஒரு குழுவின் உணர்வுகளை, ஒரு குறிப்பிட்ட வழக்கத்திற்கு அடிப்படையான உணர்வுகளை ஆராய்ந்தறியக் கூடாது. இந்த *கரேவா* முறை திருமணத்தைப் பற்றிக் கேட்டுச் சிரிப்பது நல்லதல்ல என்று கூற விரும்புகிறேன். உண்மையிலேயே இம் முறையினால் பல நன்மைகள் வந்து சேருகின்றன. பல நூற்றாண்டுகளாக இந்த வழக்கத்தைப் பின்பற்றி வரும் சமுதாயங்கள் இதனால் பெருமளவு பயனடைந் திருக்கின்றன. உதாரணமாக, இந்தியாவில் பழங்காலத்தில், ஏன் இன்றும் கூட, ஒரு பெண் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் மணம் முடிக்கப்பட்டால், அவள் ஒருவனுக்குத்தான் மணம் முடிக்கப்படு கிறாள் என்றாலும் கூட, அந்தக் குடும்பத்தின் உறுப்பினர் ஆகி விடுகிறாள். அவளுக்குக் கிடைக்கிற சொத்தின் பங்கு எவ்வளவாக இருந்தாலும், அது அந்தக் குடும்பத்தின் சொத்தாக ஆகிவிடுகிறது. அவனுடைய சொத்தையும், அவளுடைய பங்கையும் அந்தக் குடும் பத்திலேயே நீடித்து வைத்திருக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அவளுடைய கணவனின் மறைவுக்குப்பின், அவளுடைய குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு, அந்தக் குடும்பம் முழுவதையுமே சார்ந்து விடுகிறது. இதுதான் *கரேவா* முறையின் அடிப்படையாகும். இதைப் பின்பற்றி, கணவனின் மறைவுக்குப் பிறகும்கூட, அவனது தம்பி அல்லது ஒன்றுவிட்ட சகோதரனை மணந்துகொண்டு, அந்தக் குடும்பத்தின் உறுப்பினராகத் தொடர்ந்து இருக்கிறாள். இந்த வழியில், அவளுடைய முதல் கணவனின் குழந்தைகள் முன்னைப் போலவே அன்பு செலுத்தி வளர்க்கப்

படுகிறார்கள். அவர்கள் எந்த வகையிலும் குறைவற்றவர்களாக வளர்கிறார்கள். இத்தகைய மக்கள் வரவேற்கும் வழக்கங்கள் இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருக்கிறார்கள். விதவை மறுமணச் சட்டம் 1856 பிரிவு 2-இன்படி, ஒரு விதவை மீண்டும் திருமணம் செய்து கொண்டால், கணவனின் சொத்தின் மீதுள்ள எல்லா உரிமைகளையும் அவள் இழந்து விடுகிறாள். ஒரு விதவை, தனது மறுமணத்திற்குப் பிறகு, தனது வாழ்க்கைப் பராமரிப்பு உரிமையை அல்லது தனது முன்னாள் கணவனின் சொத்தில் தனக்குள்ள பங்கு ஆகியவற்றின் மீதுள்ள உரிமையை இழந்து விடுகிறாள் என்பதை உங்கள் கவனத்திற்கு அதிலும் குறிப்பாக மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மறுமணத்திற்குப் பிறகு ஒரு விதவை மற்றொரு குடும்பத்தின் உறுப்பினராகி விடுகிறார் என்பதுதான் இதற்குக் காரணம். ஆனால் **கரேவா** முறையை, அதாவது கணவனின் மறைவிற்குப் பின் அவனது சகோதரனை மணந்து கெள்ளும் முறையைப் பின்பற்றுவதன் மூலம், முன்னாள் கணவனின் சொத்துக்களில் தனக்குள்ள பங்கைத் தக்க வைத்துக் கொள்கிறாள். பஞ்சாபில் உள்ள ஜாட் சீக்கிய சமுதாயத்தில் இந்த முறை மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. கணவன் மறைந்த பிறகு, அந்த விதவை கணவனின் சகோதரனைத் திருமணம் செய்து கொண்டு அந்தக் குடும்பத்திலேயே தொடர்ந்து உறுப்பினராக இருப்பதன் மூலம், நிலத்தின் மீது தனக்குள்ள உரிமையை அவள் இழப்பதில்லை.

**மாண்புமிகு சட்ட அமைச்சர்** (டாக்டர் அம்பேத்கர்): திருமணம் குறித்தபிரிவு பற்றி நாம் விவாதிக்கிறபோது, இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவது மிகவும் பொருத்தமாக இருக்குமல்லவா? நாம் இப்போது பொதுவாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பிரிவு வருகிறபோதும், எந்த அளவிற்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு அப்பிரிவை வழக்கத்தோடு தொடர்புப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறேன். அவரின் குறிப்புகளெல்லாம், நாம் அந்தப் பாகத்திற்கு வரும்போது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று எனது நண்பருக்குக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த மசோதாவில் வழக்கத்திற்கு முரணில்

லாமல் இருக்கிற பகுதிகள் மட்டும் தொடர்ந்திருக்கட்டும் என்று அவர் முன்மொழிந்திருக்கிற தீர்மானம் கூறுகிறது. பிறகு அவர் சில வழக்கங்களைப் பாதுகாக்க விரும்புகிறார். பாதுகாக்கப்படுகிற அந்த வழக்கங்களைப் பொறுத்தவரையிலும், திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தமான பகுதி வருகிறபோது, அவை மிகவும் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படும். இது, முரண்படுகிற இடத்தில் மட்டும் செயல்படுமா அல்லது நிகழ்வுகளை எதிர்கொள்கிற போது பொதுவாகச் செயல்படுமா என்பது பற்றிய பொதுவான கேள்வியை, நாம் அதைப் பற்றி விரிவாகப் பேசும்போது விவாதிக்க லாம்.

**மாண்புமிகு சட்ட அமைச்சர் (டாக்டர் அம்பேத்கர்):** அவற் றிற்கிடையே வேறுபாடு மிக அதிகமாக இருக்குமா? முரண்படாத வழக்கம், பாதுகாப்பாக இருக்கும் என்று நாம் கூறினாலும் அல்லது விளைவு ஏற்படுத்தக்கூடியது என்று கூறினாலும், அவற்றின் பலன் ஒன்றாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் வழக்கம் பற்றி மிக விரிவாகப் பேச வேண்டாம். வழக்கத்தைப் பற்றிப் பொதுவாகக் கோடிட்டுக் காட்டினால் போதும். பொருத்த மான பிரிவு வருகின்றபோது நாம் விபரங்களைப் பற்றி விரிவாகப் பேசலாம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** மாண்புமிகு டாக்டர் அம்பேத் கரது எதிர்ப்பின் தாக்கத்தை நான் உணர்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** நான் எதிர்க்கவில்லை. நான் கூற வந்த தெல்லாம், அது பிரிதொரு சூழ்நிலையில் பொருத்தமாக இருக்கும் என்பதுதான்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** நான் எந்த வழக்கத்தின் விவரங்கள் பற்றியும் விரிவாகப் பேச மாட்டேன். மாண்புமிகு துணை சபாநாயகர் கூறியதைப் போல நான் முன்மொழிந்த நான்கு திருத் தங்களும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. எல்லாச் சட்டங் கள் மீதும் வழக்கம் மேலாதிக்கம் செலுத்த வேண்டும், மற்றும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில் கூட அது மேம்பட்டிருக்க

வேண்டும் என்பது இத்திருத்தங்களில் ஒன்று. இந்தத் திருத்தத்திற்கு ஆதார அடிப்படையான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டால், நாம் நமது நிலையைத் தவற விடுவோம் என்பதை இந்த அவைக்கு உணர்த்துவதற்காக நமது வழக்கங்களிலிருந்து ஓர் உதாரணத்தைக் கொடுத்தேன். வழக்கம் சட்டங்களின் மீது மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்று கூறுகிற எனது திருத்தம் நிறைவேற்றப்படுவதை நான் விரும்பவில்லை. அது நீக்கப்பட வேண்டும். நமது வழக்கங் களின் தன்மையை எடுத்துக்காட்ட *கரேவா* முறையைப் பற்றிக் குறிப்பிட்டேன். இந்த வழக்கத்தை அப்படியே நீடித்து வைத்திருக்க இந்த அவை முயற்சிக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. நான் முறையானவை என்று கருதாத அந்த வழக்கங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அவையை வற்புறுத்த மாட்டேன்.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** அது, இந்தச் சட்டத் தொகுப்பின் அடிப்படைக் கருத்துக்கே எதிராகப் போகாதா? (வெவ்வேறு வகையான வழக்கங்களையெல்லாம் திரட்டி அவற்றை ஒரே சட்டத் தொகுப்பில் சேர்க்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத் தொகுப்பின் நோக்கம்) இதுவரை வழக்கங்கள் எல்லாம் முறைப் படுத்தப்படவில்லை. சில வழக்கங்கள் நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், இவற்றிற்கு விதிவிலக்குகளை அளித்துக் கொண்டே போனால், மொத்தச் சட்டமும் தெளிவற்ற தாகிவிடும். இந்தச் சட்டத் தொகுப்பின் நோக்கமே குலைந்து போகும். வழக்கு மன்றங்களினால் நிலைநிறுத்தப்பட்ட வழக்கங் களை இந்தச் சட்டத் தொகுப்பு ஒன்றிணைக்க முனைகிறது. தேவை யானால் மேலும் இணைத்துக்கொள்ளும் அடிப்படையிலான அறிமுகப்படுத்தத்தக்க ஆவணம் ஒன்று நாட்டின் முன்னால் வைக்கப் படுகிறது. ஆனால், எல்லா வழக்கங்களுக்கும் விதிவிலக்களிக்கப் பட்டால், அது இந்த மசோதாவின் அடிப்படைக் கூறுக்கே எதிரான தாகும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், வழக்கங்களுக்கு விசேட சட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். மதிப்பிற்குரிய உறுப்பினர் தடம் தவறிப் போவதாக நான் தீர்ப்பளிக்கவில்லை. சில செய்திகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்கிற அடிப்படைக் கூறை நாம் ஏற்றுக் கொண்டிருப்பதால், இந்தச் சட்டத்தோடு முரண்படுகிற எந்த வழக்கமும் நீக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** மாண்புமிகு துணை சபாநாயகர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஆதரிக்கிறேன் என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்ள விழைகிறேன். ஏனென்றால் அது சரியானது. என்னுடைய கருத்துக் குறிப்புகளுடன் அது ஒத்துப் போகிறது. நீண்ட காலமாக, பஞ்சாபில் உள்ள வழக்கச் சட்டங்கள் நடுநிலை, நேர்மை, நல்ல உள்ளுணர்வு ஆகியவற்றுடன் ஒத்துப் போகின்றவை; இந்த அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. நமது வழக்கங்கள் மீது போடப்பட்ட ஆயிரக்கணக்கான வழக்குகளை எதிர்த்துப் போராடியிருக்கிறோம். ஆகவே அவற்றை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு வழக்கத்திற்கும் விதிவிலக்குக் கொடுத்துக் கொண்டே போனால், நாம் ஒரு தெளிவற்ற நிலைக்குப் போய் விடுவோம், மேலும் இந்தச் சட்டத் தொகுப்பு பயனற்றதாகப் போய்விடும் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். நான் ஒருபடி மேலே போய்க்கூறுகிறேன். *கரேவா* முறை போல சரியானதென்று கருதப்படுகிற பரவலாகக் காணப்படுகிற வழக்கங்களுக்கு மட்டுமே விதிவிலக்குக் கொடுக்கவேண்டும். அவை சில காலத்திற்கு நடைமுறையில் இருக்க அனுமதிக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் வழக்கத்தின் அடிப்படையில் விவாகரத்து மேற்கொள்ளப்படுகிறதோ அங்கெல்லாம் அவை நடைமுறையில் தொடரச் செய்ய மெட்ராஸ் மற்றும் பம்பாய் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எங்கு இத்தகு வழக்கங்கள் பாதுகாக்கப்படுகின்றனவோ, அங்கு எல்லா வழக்கங்களும் நடைமுறையில் இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும். சட்ட ஒழுங்குபடுத்தலை, தவறான வழக்கங்களை நெறிப்படுத்தும் முயற்சி என்று நான் எடுத்துக் கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் என்னுடன் ஒத்துக் கொள்ள மாட்டார். அவர் எல்லா வழக்கங்களையும் ஒழுங்குபடுத்த விழைகிறார். ஒழுங்குபடுத்துகிறபோது நல்லனவற்றை மட்டும் நீடித்து வைத்துக் கொண்டு, தீயனவற்றை விட்டுவிட வேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தவறான வழக்கங்களையும்கூட சேர்த்துக் கொள்ளும் வகையான ஒழுங்குபடுத்தலை நான் எதிர்க்கிறேன். ஒழுங்குபடுத்தலின் மூலம் தவறான வழக்கங்களையும் நீடித்திருக்கச் செய்ய வேண்டுமென்பது நமது நோக்கமல்ல.

(வழக்கங்கள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று எனது திருத்தங்கள் மூலம் தெளிவாகக் கூறியிருக்கிறேன்) பரந்துபட்ட சட்டங்கள் மற்றும் அடிப்படை உண்மைக் கூறுகள் ஆகியவற்றுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று வேண்டுகிறேன். எது தேவை என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு ஓர் ஆய்வு நடத்தப்பட வேண்டும். மேலும் எல்லா நன்மைகளும், நியாயமான பரந்துபட்ட சட்டங்களும், பயன்பாடுகளும், வழக்கங்களும் நீடிக்கச் செய்யப்பட வேண்டும்.

நமது பயன்பாடுகளையும் வழக்கங்களையும் நாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று விரும்பினால், (விவாகரத்தை நாம் அனுமதிக்கக் கூடாது என்பதுதான் நமது வழக்கங்களில் மிக முக்கியமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.) நமது பெண்களுக்கு விவாகரத்து உரிமையை நாம் கொடுக்கப் போகிறோம். ஏனென்றால், அரசியல் சாசனமோ, நீதி உணர்வோ, பெண்கள் இந்த சுதந்திரத்தை இழப்பதை அனுமதிக்கவில்லை. முன்னே செல்வோம்: இந்த உரிமையை அவர்களுக்குக் கொடுப்போம். ஆனால் இருதார முறை ஏற்கப்பட்ட வழக்கமாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக அது நடைமுறையில் இருந்து வருகிறது. அது நமது சமுதாயத்தின் சில பிரிவுகளிலும் கூடப் பரவலாக இருக்கிறது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, ஒரு தாரச் சட்டம் அமுலுக்கு வந்ததும் தனது முதல் மனைவி உயிரோடு இருக்கிற வரைக்கும் ***கரேவா*** முறை மூலம் ஒருவன் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள முடியாது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஒரே விஷயம் இதுதான். ***கரேவா*** முறையைப் பொறுத்த வரையில், அது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இருதார மணத்தை அனுமதிக்கிறது. நாம் ஒருதார மணத்தைப் பற்றிப் பேசும்போது இதை விவாதிக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் பொதுக் கருத்துக்களில், தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக இங்குமங்குமாக அவர் எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் நீங்கலாக மற்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்துவதாகச் செய்யப்பட வேண்டும் என்று மட்டும்தான் மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறமுடியும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** நான் எந்தக் குறிப்பிட்ட வழக்கத்தையும் தொடவில்லை. இந்தச் சட்டத் தொகுப்பில் வழக்கத்தின் இடம் எது என்று காட்ட மட்டும்தான் நான் விரும்புகிறேன். இதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான், நான் உதாரணம் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த மசோதாவைப் பிரேரேபித்திருக்கிறவர், எல்லா வழக்கங்களையும் ஆய்ந்தறிந்து, அவரைப் பொறுத்தவரைக்கும் சட்டத்தின் ஒப்புதலைக் கண்டிப்பாகப் பெற வேண்டிய வழக்கங்களை மட்டும் சேர்த்திருப்பதாக எண்ணுகிறார். வேறுசில வழக்கங்கள் நடைமுறையில் இருப்பதாகவும், அவற்றிற்கு மசோதாவில் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் வேறு சில உறுப்பினர்கள் நினைக்கலாம். அப்படியானால், அது தகுந்த தருணத்தில் செய்யப்படும். நாம் இப்பொழுது பொது சட்டப்பிரிவில் இருக்கிறோம். அது சமூக நலத்திற்கு ஒவ்வாததாக இருந்து அதனால் இந்தச் சட்டப் பிரிவிற்கு முரணானதாகவுள்ள எந்த வழக்கமும் நீக்கப்படும் என்று கூறுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பினால் கட்டுப்படுத்தப்படுகிற செய்திகளைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட வழக்கம் நடைமுறையில் இருக்கக் கூடாது என்று கூறும் வகையில் நாம் ஒரு சட்டப் பிரிவை உண்டாக்கக் கூடாதா? ஆகவே இந்தப் பிரிவில் பொருத்தமானதென்னவென்றால், இந்த வழக்கத்தின் பொதுவான தன்மையும் இங்குமங்குமாகக் காட்டப்படும் சில எடுத்துக்காட்டுகளும்தான். இந்த மசோதாவினால் நீக்கப்படக்கூடிய ஒரு வழக்கம் இருந்தால் கூட, இது மாதிரியான பிரிவு தேவை. இப்பொழுது நாம் விஷயத்தின் ஆழத்திற்குச் செல்கிறோம். ஒரு வழக்கம் ஒரே சீரான தன்மை, தொடர்ச்சி அல்லது பழைமைத் தன்மை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறதா என்று கண்டிப்பாக ஆராயவேண்டும். மேலும் உறுப்பினர்களால் சில சேர்க்கைகள் குறிப்பிடப்பட்டால் அவையும் கவனிக்கப்படும்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** சட்டத்தொகுப்பு முழுவதையும் நாம் விவாதிப்பதாக இருந்தால், இந்தப் பிரிவு முழுமையாகத் தேவைப்பட்டிருக்கும். ஆனால், ஒரு சட்டப் பெரும்பிரிவை மட்டும்தான் நிறைவேற்றப் போகிறோம். அதில் ஒவ்வொரு படிநிலையிலும், இன்னின்ன சூழல்களில் வழக்கம் நடைமுறையில் இருக்கும் என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான், அப்படிப்

பட்ட ஒரு வழக்கம் பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருக்கிறது என்பதைக் காட்ட ஓர் உதாரணத்தைக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** திருமணம் மற்றும் விவாகரத்தோடு தொடர்புடைய, சமூக நலத்திற்கொவ்வாத ஒரு வழக்கம் இருந்தால்கூட, இந்தப் பிரிவு அவசியமானது. உதாரணமாக, என்னதான் விதிவிலக்குகள் வழங்கப்பட்டாலும், ஒரு மாமன் தன் சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்வது, அதாவது ஒரு சகோதரன், தனது சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்வதற்கு விதிவிலக்கு வழங்கப்படவே கூடாது என்று இந்த மசோதாவைத் தாக்கல் செய்தவர் எண்ணுகிறார்.

**டாக்டர் அம்பேத்கர்:** இந்த விஷயத்தை தக்க தருணத்தில் விவாதிப்போம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அப்படிப்பட்ட வழக்கம், சட்டத்தின் அந்தஸ்தைப் பெறக் கூடாது என்று சட்ட அமைச்சர் எண்ணுகிறார் என்று கொண்டால், இதைப் போன்ற பொதுப் பிரிவு ஒன்றை நாம் பெறவேண்டும். திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட வழக்கங்கள் கூட, பொது ஒழுக்கம், பொது நலன் அல்லது பொதுக் கருத்திற்கு எதிரானதாக இருந்தால், அவற்றுக்கு இடமளிக்கக்கூடாது. ஆனால் ஏதாவது ஒரு வடிவத்தில் அல்லது படிவத்தில் இப்படிப்பட்ட பொதுப் பிரிவுகளை எப்படி நீக்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** நீங்கள் பட்டியலைப் பார்த்தால், பிரிவு 4-ஐ நீக்குவதற்காகன எந்தத் திருத்தத்திற்கும் நான் அறிவிப்புக் கொடுக்கவில்லை என்பதைக் காண்பீர்கள். ஆனால் இந்தப் பொதுப் பிரிவில் வழக்கத்திற்கு என்ன இடம் ஒதுக்கப் போகிறோம் என்று அறிவதற்காக அதை நான் குறிப்பிட்டு ஒரு உதாரணமும் கொடுத்தேன். எந்தத் தீர்ப்புக்குமான முதல் விதியே வழக்கம் தான் என்று கூறும் திரு. மேனேயுடன் நான் உடன்படுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** 4-வது பிரிவைப் பொறுத்த வரையிலும், ஏற்படுத்தப்படவிருக்கின்ற வரையறைக்குள் இந்த விவாதம் கட்டுப் படுத்தப்படாது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** வழக்கம் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிற பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவை ஒன்றுடனொன்று ஓரளவு ஒத்திருக்கின்றன என்பதைப் பணிவிணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று நான் பிரிவு 3-ஐப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த பொழுது, டாக்டர் அம்பேத்கர் தன் பதிலில் பிரிவு 4-ஐ மேற்கோளிட்டுக் காட்டினார். பிரிவு 3 மற்றும் 4 ஆகியவை ஓரளவு ஒத்திருக்கின்றன. எனவே சூழ்நிலைப் பொருத்தம் காரணமாக, ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுவது மற்றொன்றிற்கும் பொருந்துவதாக அமைகிறது. **சூத்திரங்களும் ஸ்மிருதிகளும்** பின்வருமாறு கூறுகின்றன:

*''வேதா விபின்னா ஸ்மிருதியோ விபின்னா நைக்கோ முனிர்யாஸ்ய வாச்ச பிரமாணம் தர்மஸ்யா தத்வன் நிகிதம் குஹயம் மகாஜனோ யேனா கடா சா பாந்தா''*

*('ஸ்ருதி ஒன்றைச் சொல்கிறது. ஸ்மிருதி மற்றொன்றைச் சொல்லுகிறது. இவருடைய வார்த்தையை முடிவாக எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுமளவுக்கு ஒரு முனிவருமில்லை. தர்மத்தின் ரகசியம் மிக ஆழமானது. மகான்கள் கடந்து வந்த பாதையைப் பின்பற்றுக.')*

வழக்கத்திற்குச் சிறப்பிடம் உண்டு என்று கூற விழைகிறேன். பஞ்சாப் விதிகள் சட்டம் 1872-ன் பிரிவு - 5. எடுத்துக் காட்டுவது போல, வழக்கம் இல்லாவிட்டால் தனிநபர் சட்டத்திற்குப் பொருளே இல்லை. தனி நபர் சட்டத்தில் வழக்கத்திற்கு இடம் உண்டு என்று பல தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. தனி நபர் சட்டங்களை உருவாக்குகிற போது அங்கு வழக்கம் இருப்பதாகப் பாவித்துச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேன். பஞ்சாபில், கடந்த நூறு ஆண்டுகளில், விவசாய சமூகத்தினர் சம்பந்தப்பட்ட வழக்குகளில், அவர்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட வழக்கங்களால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றே கொள்ளப்பட்டிருக்கிறது. நகர்ப்புறக் குழுக்களிடையேயுள்ள வழக்குகளில், அவை தனிநபர் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. உண்மையிலேயே பஞ்சாப் முதன்மை நீதிமன்றத் தீர்ப்பின்படி (1887-இன் 107, 1906-இன் 100 மற்றும் பல) வழக்கில் ஈடுபட்டிருக்கும் குழுவினர் விவசாய சமூகத்தினராய் இருந்தால் தவிர மற்றபடி பொது வழக்கம் என்றொன்றில்லை என்ற ஒருவகையான சட்டம் உருவாகியிருக்

கிறது. அங்கேயும் கூட அந்த குறிப்பிட்ட வழக்கத்தை நிரூபிக்கும் பொறுப்பும், வழக்குத் தொடுப்பவன் மீது விழுகிறது. இந்தக் கோணத்திலிருந்து இந்து சட்டத்தொகுப்பைப் பார்த்தால், எந்த வழக்கத்திலும் அளவு மீறிய குறுக்கீடுகள் இருக்கக்கூடாது என்று நினைக்கிறேன். மெட்ராஸ் மற்றும் பம்பாய் சட்டங்களில் உள்ளது போல், வழக்கத்தின் அடிப்படையிலான விவாகரத்தை சேர்த்துக் கொள்ள டாக்டர் அம்பேத்கர் தயார் செய்கிறார் என்று கூறினேன். இந்த முயற்சியை நான் எதிர்க்க விரும்புகிறேன். விவாகரத்துச் சட்டத்தை உருவாக்குவது இதுதான் முதன் முறையாகையால், அந்த அடிப்படையை மேற்கொண்டு நமது விவாகரத்துச் சட்டத்தை சேதப்படுத்திவிடக் கூடாது. உயர் வர்க்க இந்தியர்களின் சமூகப் பொருளாதாரத்தில் நீங்கள் குறுக்கிடுகிறீர்கள். விவாகரத்துச் சட்டத்திற்கு நான் ஆதரவாக இருக்கிறேன்.

இந்த நாடு முழுவதற்கும் ஒரே விவாகரத்துச் சட்டம் இருக்க வேண்டுமென்று கூறுவதற்கு நான் தயங்க மாட்டேன். (இந்த நாட்டை ஒருமைப்படுத்தும் உங்கள் முயற்சியில் நானும் உடனிருப்பேன்) நான் சார்ந்திருக்கும் பஞ்சாபிலும், நான் சிறிது அறிந்திருக்கிற நாட்டின் பிற பகுதிகளிலும், விவாகரத்து என்பது மிகவும் எளிதாக இருக்கிறது. 'இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்டால் வழக்கு மன்றம் செல்ல வேண்டாம்' என்ற சொல் வழக்கும் இருக்கிறது. கேட்டவுடன் கிடைப்பதாக விவாகரத்து இருப்பதை நான் விரும்பவில்லை. அது மிகவும் அநீதியானது. கணவன் செலவழித்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, பெண் விவாகரத்துப் பெறும் ஒரு வழக்கமும் இருக்கிறது. இந்த வழக்கத்திற்கு முற்றிலும் எதிராக நான் இருக்கிறேன். ஏனெனில், இது நமது நல்லொழுக்கத்தை நாசம் செய்கிறது. என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல, உங்களது நேரத்தை நான் எடுத்துக் கொள்கிறேன். டாக்டர் அம்பேத்கர் என்னுடைய பேச்சைக் கவனிக்கவில்லை. அவருடைய பணியில் சுறுசுறுப்பாக இருக்கிறார். விவாகரத்துக்குச் சில பொதுவான ஒரே சீரான காரணங்களை நீங்கள் சட்டப் பிரிவில் உருவாக்க வேண்டும். விவாகரத்துக்கான காரணங்களில் எந்த வழக்கமும் குறுக்கிட அனுமதிக்காதீர்கள்.

பம்பாய் மற்றும் மெட்ராஸ் சட்டங்களில் உள்ள சட்டப் பிரிவுகளுக்கு நான் ஆதரவு தெரிவிக்க மாட்டேன். அவற்றை எதிர்த்து நான் குரல் கொடுப்பது, பம்பாய் மற்றும் மெட்ராஸ்

சட்டங்களில் உள்ள இருதார மணத்தைப் பொறுத்தவரை அவற்றிற்கு நான் எதிர்ப்பாளன் என்பதனாலல்ல. அவற்றை அப்படியே மொத்தமாக எதிர்க்கிறேன். நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிற திருத்தங்களைப் பொறுத்தவரைக்கும் ஒரே நோக்கம்தான் உண்டு. நமது திருமணங்கள் தொடர்பான சட்டங்களில் உள்ள நல்ல அடிப்படைக் கூறுகளுக்கு விடை கொடுக்க நான் தயாராக இல்லை. வழக்க அடிப்படைகளை ஏற்றுக் கொள்வதற்கான ஒப்புதலை டாக்டர் அம்பேத்கர் கேட்டார். நடைமுறையில் உள்ள ஒவ்வொரு வழக்கமும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. இந்த மசோதாவில் உள்ளதுபோல், அப்படிச் செய்தால், இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் மொத்த நோக்கமும் சிதறிப் போகும். விவாகரத்துக்கு ஒரே ஒரு அடிப்படைதான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இதன் பொறுப்பு கணவனுடையதாகுமானால், மனைவி மறுமணம் செய்து கொள்ளுகிற வரையில் அவள் செலவுகளுக்கு வழிவகை செய்யுமாறு அவன் பணிக்கப்பட வேண்டும். இவற்றிற்கு வழக்கத்தின் அடிப்படையிலான ஆதாரங்கள் இல்லை என்பதை மசோதாவிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆனாலும், அயல்நாடுகளில் அமலில் உள்ள சட்டங்களுக்கு ஒப்பான பல சட்டங்களை இங்கு உருவாக்குவது பொருத்தமாக இருக்கும் என உணரப்படுகிறது. பிற நாடுகளின் சட்டங்களோடு நமக்குச் சண்டை ஏதுமில்லை. ஆனால் எல்லா வழக்கத்தையும் சேர்ப்பதை நான் எதிர்க்கிறேன். ஏனென்றால், நியாயமல்லாத வழக்கங்களும் இருக்கின்றன. வழக்க அடிப்படைகள் மிகுந்த ஆதிக்கத்தில் இருக்கிறபோது, நீதி, சமத்துவம் மற்றும் நல்ல மன உணர்வு ஆகிய மூன்று வார்த்தைகள் இல்லாமல் போவதை நான் பார்க்கிறேன். நெறியற்ற வழக்கங்கள் நமது உயர்நீதிமன்றங்களால் செல்லாததாக்கப்பட்டுள்ளன. ஏனென்றால் அவை நியாயமற்றவை. சில வழக்கங்களைப் புகலிடமாகக் கொண்டு, வற்புறுத்தி விவாகரத்து பெற்றதாக நிரூபிக்கப்பட்டால், இந்த வழக்கங்கள் மற்றவற்றோடு நடைமுறையிலிருந்தாலும் அவை நெறியற்றவை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும். உண்மையில் நீதி, நல்லொழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையாத இதே விஷயங்கள் பிரிவு 4-இன் கொல்லைப்புறக் கதவு வழியாக உள்ளே நுழைய விரும்புகின்றன. இந்து சட்டத் தொகுப்பின் உயிரையே மாய்க்கத்தக்க இந்த வழக்கங்களை அனுமதிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்னவாக இருந்தாலும் நாங்கள் அதை ஏற்கப் போவதில்லை. இவற்றிற்கெல்லாம் நாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். நல்ல

பயனுள்ள வழக்கங்கள், நீங்கள் இப்போது குறிப்பிட்டது போன்ற, மிகவும் ஆழமாக வேரூன்றிவிட்ட தென்னிந்தியப் பழக்கங்கள் போன்றவற்றிற்கு நான் எதிர்ப்புக் காட்டவில்லை. 24 (a)இல் இணைக்கப்பட்டுள்ள அலியசந்தான சட்டத்திற்கும் நான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் தீங்கான விளைவுகளை தோற்றுவிக்கும் வழக்கங்களுக்கு இடமளிக்கக் கூடாது. வழக்கங்கள் பின்பற்றப்பட வேண்டுமென்று இந்து சட்டம் கூறுகிறது. உண்மையில் வழக்கங்கள் என்பவை புராதன சமுதாயத்துக்குத்தான். ஆனால், உலகத்தின் வளர்ச்சி வேகத்தோடு வளர்ந்து வருகிற முன்னேறிய சமுதாயத்திற்கு, பொதுவான சில அடிப்படைக் கூறுகள் உள்ளன. அவற்றைச் சட்டமன்றங்கள் சட்டங்களாக இயற்றித் தரும். அவைதாம் நமக்கு அடிப்படையாகும். ஆகவேதான் வழக்கங்களை அனாவசியமாக உள்ளே இழுக்காதீர்கள் என்று வற்புறுத்துகிறேன். அதைத்தான் எனது திருத்தம் செய்ய விரும்புகிறது. அந்தப் பிரிவு ஏற்றுக் கொள்ளப்பட்டால், நாம் எத்தகைய அபாயக் கட்டத்திற்குச் சென்றடைவோம் என்பதைக் காட்டுவதுதான் என்னுடைய திருத்தம் எண். 446-இன் நோக்கம் ஆகும். மற்றபடி, அந்தத் திருத்தத்திற்கான அறிவிப்பை வெறும் விவாதத்திற்காக மட்டும்தான் கொடுத்தேன். ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக அல்ல. என்னுடைய மற்ற திருத்தங்களை நான் ஏற்கெனவே முன்மொழிந்துவிட்டேன்.

இந்தச் சூழ்நிலையில், நீதி வழங்கப்பட வேண்டும், யாரும் தேவையற்ற தொந்திரவுக்கு உள்ளாகக் கூடாது என்று டாக்டர் அம்பேத்கரையும் இந்த அவையையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நீதி, சமத்துவம் மற்றும் நல்ல உள்ளுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் என்ன நினைக்கிறாரோ அவ்வாறே செய்துகொள்ளட்டும். அந்த அடிப்படையில் அவர் தேர்ந்தெடுத்ததற்குச் சமமான இடத்தை விட்டு வைக்க வேண்டும். ஆனால் புதிதாக நிறைவேற்றப்படுகிற எந்தச் சட்டமானாலும், அது நியாயமானதாக இருக்க வேண்டும். ஆம், அங்கு வழக்கங்கள் அவற்றுக்குரிய இடத்தைப் பெறவேண்டும். அடிப்படைக் கூறுகளுக்கு எதிராகப் போகிற தவறான வழக்கங்கள் ஆதரிக்கப்படக்கூடாது. வழக்கங்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்க நாம் விரும்புகிறோம். நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு இட்டுச் செல்லும் வழக்கங்களுக்கு எதிராக இருக்கின்றவரையில் நாம் அவற்றை மதிப்போம். ஏனென்றால், அத்தகைய வழக்கங்கள் இந்து சாஸ்திரங்களுக்கும், நமது குறிக்கோள்களுக்கும் எதிரானவை. விவாகரத்துச்

சட்டப் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதில் வேறுபாடுகள் உள்ளன. ஆனால், இன்றைய நாட்களில் பெரும் அநீதியைச் சந்தித்து வரும் பெண்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிற நான் அதை ஆதரிக்கிறேன். சீதாதேவியின் வாயிலாக கவி துளசிதாஸ் கூறுகிறார்:

*மிதம் தாத்தி ஹி பிதா மிதம் பாரதா மிதம் சுதா*
*அமதஸியா டோ தாதாராம் பாரத்ராம் கா நோ புஜ்யத்*

அப்பாவிப் பெண், பொருளாதார ரீதியாகக் கணவனைச் சார்ந்திருக்கிறாள். அது காரணமாகவே அவள் அவனைத் தொழுகிறாள். எவ்வகையிலாயினும், இது சமுதாயத்தின் நலனுக்கு உகந்ததல்ல. மேலும், இது நீதிக் கோட்பாட்டின் அடிப்படையிலும் இல்லை. இதை துளசிதாஸர் கூறாமல் இருந்திருக்கலாம். ஸ்ரீராமச்சந்திரருக்கும், திரு. துளசிதாசருக்கும் நாம் என்னதான் மரியாதை தெரிவித்தாலும், இனிமேல் பெண்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை நான் அனுமதிக்க மாட்டேன். இந்த விவாகரத்துக் கோட்பாடு, ஒருவருடைய விருப்பம், சமத்துவ உணர்வு மற்றும் நீதி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறபோது நான் கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது. இளைஞர்கள் தங்கள் மனைவியரை விலக்கிவிடுவது என்பது இப்போது தினசரி நடவடிக்கையாகி விட்டது. இந்த சகோதரிகள் எங்கோ போவார்கள் என்று அவர்களைக் கேட்கிறேன். ஆகவே விவாகரத்து என்பது சரியான ஏற்பாடு என்று நம்புகிறேன். மக்கள் சதி (உடன் கட்டை) பற்றி குறிப்பிடுகிறார்கள். ஆனால் எப்போதாவது மனிதன் 'சதா' (உடன் கட்டை) செய்கிறானா? பெண்களுக்கு உரிமைகளை மறுக்கும் கோட்பாடு உலகம் முழுவதும் கடந்த காலத்தில் பரவலாக இருந்தது. மணமான பெண்களுக்கான சொத்துச் சட்டம் 1883-இல் நிறைவேற்றப் பட்டது.

**திரு. டி.என். சிங் (உ.பி.):** 'சதா' என்றால் என்ன?

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:** 'சதா'வின் பொருளைக் கூட நீங்கள் அறியவில்லையா? எல்லாப் பெண்களும் 'சதி' என்றால் என்னவென்று தெரிந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆணுக்கு 'சதா' என்றால் என்னவென்று தெரியவில்லை.

ஆகவே, வழக்கங்களின் அடிப்படையில் - முக்கியமாக தீய வழக்கங்களின் அடிப்படையில் - சட்டப் பிரிவுகளை உண்டாக்கக் கூடாது என்பது எனது வேண்டுகோள். அதற்கு மாறாக, வழக்கங்களை, இன்றைக்கு வழக்கிழந்து போன அந்தப் பழைய வழக்கங்களை விட்டொழிப்பதற்கான துணிவை நாம் பெற வேண்டும். நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசு சட்டமியற்ற வேண்டும்.

**திரு. பட்:** என்னுடைய திருத்தம் ஒன்று, என்னுடைய தவறு காரணமாக நின்று போய்விட்டது. நீங்கள் அனுமதித்தால், அதை நான் இப்பொழுது முன்மொழிவேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது ஏற்கெனவே பட்டியலில் இருக்கிறதா? அதன் எண் என்ன?

**திரு. பட் :** பட்டியல் எண். 5இல் எண். 288.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இது ஏன் நேற்றே முன்மொழியப்படவில்லை.

**திரு. பட்:** சரியான நேரத்தில் நான் அவையில் இல்லை. அவையில் நான் நுழைந்தபோது, விவாதம் தொடங்கிவிட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அவர் முன்மொழியலாம்.

**திரு. பட் :** நான் முன்மொழிகிறேன்.

டாக்டர் அம்பேத்கரால் பிரேரேபிக்கப்பட்ட திருத்தத்தில் முன்மொழியப்பட்ட புதிய பிரிவு 4, -

(i) பகுதி (அ)வில் 'இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள' என்பதற்குப்பிறகு 'இந்தச் சட்டத் தொகுப்பு அமுலுக்கு வந்ததிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு' என்பதைச் செருகிக் கொள்ளவும். மற்றும்,

(ii) பாகம் (ஆ)விற்குப் பிறகு பின்வரும் விளக்கத்தைச் சேர்க்கவும்:

*''விளக்கம்:- துணைப் பிரிவு (அ)வில் கூறப்பட்டிருப்பவை எப்படி இருந்தாலும், இந்தச் சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததிலிருந்து பத்தாண்டுகள் வரை, நடைமுறையில் உள்ள எந்த வாசகமும், சட்டமும், எந்த வழக்கமும், பயன்பாடும் செயலில் இருக்கும்.'*

[1]**பாபுராம்நாராயண் சிங்:** *(பீகார்) (இந்தி பேச்சின் மொழியாக்கம்) இன்றைக்கு இந்த ஆபத்தான பொருள் பற்றிப் பேசுவதற்கு மிக முன்னதாகவே வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பொருள் மிகவும் முக்கியமானதாகையால், நேற்றும் அதற்கு முன்தினமும் உங்கள் பார்வையில்பட பல முறை முயற்சித்தேன். பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் பொறுப்பில் இருந்து கொண்டு நீங்கள் முற்றிலும் நியாயமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். அதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.*

**திரு. சியாம்நந்தன் சகாயா** *(பீகார்) : யாருக்கும் இல்லை.*

**பாபு ராம்நாராயண் சிங்:** *ஆம். உண்மையிலேயே யாருக்கும் இல்லை. ஆனால் நீங்கள் உங்கள் தீர்ப்பைப் பாரபட்சமின்றி வழங்க வேண்டும். உங்களுக்கெதிரான எண்ணம் நிலவிவருவதாக நீங்கள் நேற்றுக் குறுப்பிட்டீர்கள். பணியில் பொதுவான திருப்தி ஏற்படுவதற்கு, அப்படிப்பட்ட எண்ணங்களை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டீர்கள். ஆனால் எதையும் கூர்மதியுடன் செய்ய வேண்டும். மக்கள் தன்னைத் தவறு இழைக்காதவனாக எப்பொழுதும் கருத வேண்டும் என்று ஒருவன் நினைத்து வருந்திக் கொண்டிருந்தால் அவன் சில தவறுகள் இழைக்க நேரிடும். ஆகவே தாங்கள் இதுவரை செய்து வந்ததைப் போலவே உங்கள் பங்கை நேர்மையுடன் செய்து வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் பணியைச் சரியாகச் செய்யவில்லை என்று மக்கள் நினைத்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் நீங்கள் துயருற்றுக் கொண்டிருக்கக்கூடாது.*

---

*1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3095-3112.*

**திரு. ஜாங்டே (மத்தியப் பிரதேசம்):** தயவு செய்து விஷயத்துக்கு வாருங்கள்.

**பாபு ராம்நாராயண் சிங்:** இன்னும் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நான் பேச எழுந்தபோது, போதுமான அளவு விஷயத்தின் மீது விவாதம் நடந்து விட்டதாகவும் எந்த ஓர் உறுப்பினரும் அப்படிப்பட்டதோர் கருத்தை வெளியிடாத போதிலும் அதை முடிவு செய்ய வேண்டியதுதான் இப்போதுள்ள பிரச்சினை என்றும் நீங்கள் கூறினீர்கள். எது எப்படி இருந்தாலும், இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. ஜாங்டே:** மதிப்பிற்குரிய உறுப்பினர் இப்பொழுது விஷயத்துக்கு வரவேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** போதுமான அளவு விவாதம் நடைபெற்றதா? இல்லையா என்று முடிவு செய்யும் பொறுப்பை யாராவது ஒருவரிடம் விட்டு விடலாம் என்று நினைக்கிறேன். அவைத் தலைவர் முடிவை ஏற்பார். மாண்புமிகு சட்ட அமைச்சரை பதில் கூறுமாறு அழைத்தேன். முடிவு செய்யும் உரிமை அவைத் தலைவருடையதாக இருக்கும்போது, அந்த முடிவுகளையெல்லாம் குறிப்பிட்டுப் பேசிக்கொண்டிருப்பது நல்லதல்ல. மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு இப்பொழுது வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். அது வரையறை செய்யும் பிரிவு பற்றியது. இது பிரிவு 4. அவர் ஏதாவது கூறவிரும்பினால் அதை இப்பொழுது கூறட்டும். இதை விட்டு எனக்கு நீங்கள் எந்த வாய்ப்பும் கொடுக்கவில்லை'' என்று கூறுவதால் என்ன பயன்? இவையெல்லாம் பொருத்தமாக இல்லை.

**பாபுராம்நாராயண் சிங்:** ஐயா, உங்களுடைய முடிவு எதுவானாலும் ஏற்கத்தக்கது. ஆனால், நியாயமற்ற எதையும் நான் கூறவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த விஷயம் பற்றி பேசி நேரத்தை வீணாக்குவதால் என்ன பயன்?

**பாபு ராம்நாராயண் சிங் :** அதுவல்ல செய்தி. இங்குள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பேச உரிமை உண்டு. இங்கு விவாதித்துக் கொண்டிருக்கும் விஷயம் விவாதத்திற்கே வந்திருக்கக்கூடாத

விஷயமாகும். என்னைப் பொறுத்தவரை, இதை இங்கே கொண்டு வந்த அரசுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் என்ன தண்டனை கொடுத்தாலும் அது நியாயமாகும்.

ஐயா, இங்கு வெளியில் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு, பத்து இருபது மைல்களுக்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்படுகிறார்கள். என்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். இது மதச் சார்பற்ற அரசு என்று கூறப் படுகிறது. மதச் சார்பின்மை என்ற போர்வையில் எல்லாவிதமான அநியாயங்களையும் செய்வதற்கு மதச்சார்பற்ற அரசு உரிமை அளிக்கிறதா? இந்த நாடாளுமன்றம், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது. நீங்கள் அதன் தலைமை அதிகாரி. இந்தச் செய்திகளெல்லாம் உங்கள் கவனத்திற்கு வரவேண்டும். அதற்குத் தகுந்த முக்கியத்துவத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். காவலர்களை நாள் முழுவதும் பணியிலமர்த்தி, அவ்வழியே யாரும் போக முடியாமல் செய்வது என்ன நியாயம்? இது மிகவும் தவறானது. முழுக்க நியாயமற்றது.

இந்து சட்டத்தின் முந்திய எல்லா வாசகங்களையும், மற்றும் எல்லாச் சட்டங்களையும், இவை தொடர்பாகக் கொடுக்கப்பட்ட பொருள் விளக்கங்களையும் இந்த மசோதா ரத்து செய்கிறது. நான் வழக்கங்களைப்பற்றிப் பேசவில்லை. (வாசகங்களைப் பற்றி மட்டும் தான் பேசுகிறேன்) ஐயா, நீங்கள் கற்றறிந்தவர். உலகம் தோன்றி, சமுதாய அமைப்பு உருவானவுடனே, நமது நாட்டின் வேதங்களெல்லாம் வெளிப்படுத்தப்பட்டன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நம்நாட்டு மக்களின் நடத்தை ஒழுங்குகளும், கடமைகளும் வேதங்களினால் நிர்ணயிக்கப்படுகின்றன. இன்றைக்கு நாம் பண்டிட் நேருவின் ஆட்சியிலிருக்கிறோம். அவருடைய பிரதிநிதியாகிய டாக்டர் அம்பேத்கரோ உலக ஆரம்பத்திலிருந்து நடைமுறையிலிருந்துவருகிற எல்லாச் சட்டங்களையும் ஒரேயடியாக ஒழித்துக் கட்ட விரும்புகிறார். இத்தகைய நடவடிக்கையை எல்லா உறுப்பினர்களும் எதிர்க்க வேண்டும். முதலில், அது நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், குறைந்த அளவு இந்தப் பகுதி, பிரிவு 4, எக்காரணம் கொண்டும் நிறைவேறக் கூடாது. வேதங்களின் பிழையைத் தகர்ப்பதற்காக புத்த பகவானால் புத்தமதம் பரப்பப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். டாக்டர் அம்பேத்கர் அதை நன்கு அறிவார். ஆனால் வேத மதம் அழியவில்லை. பண்டிட் நேரு ஆட்சிக்கு வந்து, டாக்டர் அம்பேத்கர் பொறுப்பேற்று சில ஆண்டுகள்

கூட ஆகவில்லை. அதற்குள்ளாக வேதக் கோட்பாடுகளை உதறித் தள்ளுவதற்கு முயற்சிக்கிறார்கள். இத்தகைய சட்டங்கள் நிறை வேற்றப்படக்கூடாதென்று அவர்கள் எண்ணவில்லையா? இந்த நாட்டில் யாருமே இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** பாபுராம்நாராயண் சிங் கூறுவது முற்றிலும் சரி.

**பாபு ராம்நாரயண் சிங் :** நினைவிற்கெட்டாக் காலத்திலிருந்து, உலகம் தோன்றிய காலத்திலிருந்து, சந்திரனும் சூரியனும் தோன்றிய காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவனவற்றை இப்போது பின்பற்றக் கூடாதென்று இவர் எந்தத் துணிவோடு கூற முடியும்? எங்கிருந்து இவர்கள் இந்த உரிமையைப் பெற்றார்கள்? வேதமதத்தைத் தூக்கி எறியத்தான் புத்தமதம் பரப்பப்பட்டது. இஸ்லாம் உட்பட மற்ற மதங்களும் வந்தன. ஆனால் எல்லாம் வந்தன; வீழ்ந்தன. எனினும் வேத மதம் இன்னும் இங்கே இருக்கிறது. இனியும் இப்படியே இருக்கும். யாராலும் அதை அழிக்க முடியாது. அதை அழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி முற்றிலும் தவறாக வழிநடத்தப்படும் முயற்சியேயாகும். நமது நாடாளுமன்றத்தில் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுவது எனக்கு வருத்தமளிக்கிறது. நமது நண்பர் தாகூர் தாஸ் பர்கவா இப்போது கூறியதைப் போல, மதமும் நல்லொழுக்க விதிமுறைகளும் வேதத்தினாலும், ஸ்மிருதியினாலும் நிர்ணயிக்கப்பட்டவை :

*வேத, ஸ்மிருதி, சடாசரா*
*ஆத்மன்ஸ்துஷித்ரேவா சா,*
*இடாசச்சதுர்விதா பிராஹுஸ் -*
*சக்ஷத்தர்மஹியா லக்ஷணம்*

இதன் பொருள் வருமாறு: மதத்தின் வரையறை, வேதம், ஸ்மிருதி, நல்லொழுக்கம், சுய திருப்தி என்ற நான்கு அம்சங்களைக் கொண்டது.

இவ்வாறு, நல்லொழுக்க விதிகள் வேதங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டன. ஆனால், அது மட்டுமல்ல. வேதங்கள் எவற்றை வகுத்துரைக்கின்றனவோ, என்ன ஆணையிடுகின்றனவோ அவையெல்லாம் சாஸ்திரங்களிலும் இருக்க வேண்டும் என்பதையும் பார்க்க வேண்டும். மதங்களின் பாதையை வேதங்கள் அமைக்கின்றன.

சாஸ்திரங்கள் அவற்றை வளமாக்குகின்றன. ஆனால் அதுவே முடிவல்ல. **வேதங்களில்** ஒழுங்கு திரட்டி, உருவாக்கப்பட்டு, சாஸ்திரங்களால் வலியூட்டப்பட்ட விதிகள், நல்ல மனிதர்களின் நடத்தைகளிலும், செயல்களிலும், நடவடிக்கைகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதுதான் நன்நடத்தையின் விதியாகக் கருதப்பட்டது. **வேதங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும்** காணப்படுகின்ற காரணத்தினாலும், நல்ல மனிதர்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற காரணத்தினாலும் இவற்றை மேற்கொள்ள வேண்டுமென்று யாரும் கட்டுப்படுத்தப்படவில்லை. கடைசியாக, அவனது உள் உணர்வு, நல்லது கெட்டது அறியும் அவனது அறிவு ஆகியவை எவ்வளவு தூரம் இவற்றோடு ஒத்துப்போகின்றதென்பதை அவன் கண்டறிய வேண்டும். இந்தக் காரணிகளையெல்லாம் ஆய்ந்தறிந்த பிறகு அவனுடைய கடமை கடைசியாக நிர்ணயிக்கப்படும்.

காலை 10.15 மணி

**வேதங்கள், சாஸ்திரங்கள்,** நல்லொழுக்கம் ஆகியவை மட்டுமல்ல, உள் உணர்வு கூட விட்டுவைக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சரும் இந்த அரசினரும் நமது உள்ளுணர்வுகளை புறந்தள்ளிவிட்டு இந்த மசோதாவை நிறைவேற்ற எண்ணுகிறார்கள். அதற்கான பணி நடைபெற்று வருகிறது. இது எவ்வளவு அநியாயம் என்று எண்ணிப் பாருங்கள். நான் இன்னும் கூற வேண்டுமானால், அகராதியில் 'லா' (சட்டம்) என்ற வார்த்தைக்கான பொருளை நீங்கள் பாருங்கள். மொத்தத்தில் அதன் பொருள் என்ன? அந்த வார்த்தையை அகராதியில் நீங்கள் பார்க்க முடியும். சிலபேர் ஏற்கெனவே பார்த்திருப்பீர்கள். டாக்டர் அம்பேத்கர் கற்றறிந்தவர். சந்தேகமில்லை. அவர் அகராதியில் அதைப் பார்த்திருப்பார்.

**டாக்டர் அம்பேத்கர் :** இல்லை. நான் பார்க்கவில்லை.

**பாபு ராம்நாராயண் சிங்:** அவர் தமது புலமையைத் தள்ளி வைத்து விட்டு விசித்திரமாக நடந்து கொள்கிறார். மொத்தத்தில் சட்டம் என்றால் என்ன? சட்டம் இன்று உயர் ஆதிக்கம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஒரு வலிமை மிக்க சமூகமானது, ராணுவம், காவல்துறை ஆகியவற்றின் உதவியோடு சமுதாயத்தினுள் ஊடுருவிச் சென்று தகாத தலையீடு செய்தல் சட்டமல்ல. சட்டம் என்பதற்கு இதுவல்ல பொருள். ''மக்களுடைய விருப்பம் சட்டம் என்ற சொற்றொகுதியால் வெளியிடப்படுதலே சட்டம்'' என்று சொற்களஞ்சியத்தில் கூறப்பட்டிருக்கிறது. மற்றொரு வகையில் கூறுவதானால்,

சமுதாயத்தின் விருப்பம் எதுவானாலும், அது சட்டம் என்ற வடிவத்தில் வடிக்கப்படுகிறது. அதுவே சட்டம் எனப்படுகிறது. இந்த மனிதர்கள் இப்போது உயர் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள். காவல் துறையும் இராணுவமும் இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. காவல்துறை, இராணுவம் ஆகியவற்றின் உதவியோடும், கட்சியின் பெயர், கட்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றின் உதவியோடும் அவர்கள் எதையும் நிறைவேற்றிக் கொள்வார்கள்.

**திருமதி. தீக்ஷித்** (மத்தியப் பிரதேசம்): கட்சிக் கட்டுப்பாடு ஒன்றுமில்லை.

**பாபு ராம்நாராயண் சிங் :** கட்சிக் கட்டுப்பாடு இருக்கிறது. நீங்கள் அதை செயல்படுத்துவீர்கள்.

**திருமதி தீக்ஷித் :** இல்லை. அப்படி இல்லை.

**பாபு ராம்நாராயண் சிங் :** 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதன் முடிவு என்னவாக இருக்கும்? நிலைமை எனக்குத் தெரியும்.

இத்தகைய சட்டத்தால் ஏராளமான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று கூற விழைகிறேன். இது இந்த நாட்டின் நலனுக்காகவும் இல்லை. இந்த நாட்டு மக்கள் இதை விரும்பவும் இல்லை. ஆகவே, இது சட்டமாக இயற்றப்படக் கூடாது. பெரும் மதப் புரட்சிகள் உட்பட ஏராளமான புரட்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டேன். ஆனால் வேதங்களின் அடிப்படை மாறவில்லை. டாக்டர் அம்பேத்கர் ஒரே வரியில் வேதங்களைக் குற்றம் சாட்டி நிராகரிக்க முயற்சிக்கிறார். இந்த மசோதா எந்தக் காரணம் கொண்டும் நிறைவேற்றப்படக்கூடாது. ஏனென்றால், வெவ்வேறு வகையான வாசகங்கள், விதிகள், பொருள் விளக்கங்கள் எல்லாம் இதனைத் தொடர்கின்றன. ஏராளமான முனிவர்கள் நமது மண்ணில் பிறந்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றி திரு. தாகூர்தாஸ் குறிப்பிட்டார்.

> *''வேதா விபின்னா ஸ்மிருதியோ விபின்னா,*
> *நைகோ முனிரியசயா வாச்சா பிரமாணம்,*
> *தர்மஸ்யா தத்வம் நிஹிதம் குஹயாம்,*
> *மஹாஜனோ, யேனா கதா சா பந்தா''.*

''வேதங்களும் **ஸ்மிருதிகளும்** ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடு கின்றன. இவர் மாபெரும் முனிவர்; இவருடைய வார்த்தைகளை முடிவாக எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணுமளவிற்கு எந்த முனிவருமில்லை. தர்மத்தின் இரகசியம் மிக ஆழமானது. மகான்கள் கடந்து வந்த பாதையைப் பின்பற்று'' என்று கூறப்படுகிறது.

அதாவது, ஒரு வேதம் ஒரு கருத்தைச் சொல்கிறது. ஆனால் மற்றொன்று வேறுபட்ட கருத்தைக் கூறுகிறது. வேதத்தில் உள்ள சில செய்திகள் பற்றி, மக்களுக்குச் சந்தேகங்கள் வரலாம். அதைப் போலத்தான் ஸ்மிருதிகளும் தர்மசாஸ்திரங்களும். அவையெல்லாம் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றன என்று கூற முடியாது. ஒரு தர்ம சாஸ்திரம் ஒன்றைக் கூறுகிறது. மற்றொன்று வேறுவிதமாகக் கூறுகிறது. அங்கேயும் கருத்து வேறுபாடு இருக்கிறது. 'இவருடைய வார்த்தையை முடிவாக எடுத்துக் கொள்ளலாம் என்றெண்ணும் அளவில் ஒரு முனிவரும் இல்லை.' 'இவருடைய கருத்துக்கள் தகுதி யுடையவை. ஆகவே அவற்றை முழு உண்மையாக எடுத்துக் கொள்ளலாம். மற்றவற்றையெல்லாம் விலக்கி விடலாம்' என்று கூறுமளவு அப்படிப்பட்ட ஒரு முனிவரும் பிறக்கவில்லை. ஆனால் இதற்குப் பிறகு நம்மில் சிலர் மனு மகராஜ் பற்றிக் குறிப்பிட்டனர். அதாவது இன்றைய மனு, டாக்டர் அம்பேத்கர் என்று.

**டாக்டர் அம்பேத்கர்:** அந்தப் பட்டத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

**பாபு ராம்நாராயண் சிங் :** தயவு செய்து ஏற்றுக் கொள்ளா தீர்கள். அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள். ஏனெனில் உண்மை யில் நீங்கள் அதற்குத் தகுதியானவர் அல்ல. இது ஏற்றுக் கொள்ளக் கூடியதுமல்ல. இந்தப் பட்டத்தை உங்களுக்கு அளித்தவர்கள், புகழ்ச்சிக்காகச் செய்திருக்கிறார்கள். நீங்கள் 'மனு' என்று அழைக்கப் பட்டால், நாங்களெல்லாம் அதுபோலவே அழைக்கப்பட விரும்பு வோம். உங்களுக்கு மட்டுமென்ன தனிக் கௌரவம்!

'மனு'வினுடைய கட்டளைகள் எதுவாக இருந்தாலும், ஆணைகள் எதுவாக இருந்தாலும், அவையெல்லாம் அனைவ ராலும் தானாகவே பின்பற்றப்பட்டன. அவையெல்லாம் வாளின் முனையில் பரப்பப்படவில்லை. சட்டத்தை இயற்ற அவர் அமரும் போதெல்லாம் எந்தக் காவல் படையும் இராணுவமும் அவருக்குக் காவலாக நின்றதில்லை. அப்படிப்பட்ட விஷயத்தைப் பற்றி நாம்

விவாதித்துக் கொண்டிருக்கிறபோது, நாமெல்லாம் காவல்துறையாலும் இராணுவத்தாலும் சூழப்பட்டு காவல் காக்கப்படுகிறோம் என்பதற்காக வெட்கப்பட வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இல்லாவிட்டால் யாராவது உள்ளே வந்து நமக்கு இடையூறு செய்வார்கள். மேலும் கூறப்பட்டிருப்பதாவது : ''தர்மஸ்யா தத்வம் நிஹிதம் குஹயாம்'' அதாவது 'தர்மத்தின் ரகசியம் ஆழமானது. அது குகைகளில் மறைந்திருக்கிறது.' தர்மம் என்னும் பொருள் மிகவும் சிக்கலானது, அதைப் புரிந்துகொள்ள முடியாது என்று இந்த மக்கள் சில சமயங்களில் நினைத்திருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏதோ குகையில் மறைந்திருப்பதாகக் கூறப்படும் அதன் இரகசியத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஆகவே, எவ்வளவு ஆழமாக அதைக் கூறியிருக்கிறார்கள்: ''மஹா ஜனோ, யேனா கதா பந்தா'' . அதாவது 'அதுதான் உண்மையிலேயே, மகான்கள் கடந்து வந்த பாதை.' இந்தச் சூழ்நிலையில், வேதங்கள் ஒன்றைக் கூறுகிற போது, சாஸ்திரங்கள் மற்றொன்றை நிலைநிறுத்துகிறபோது, நடத்தை விதிகள் பிறிதொன்றைக் காட்டுகிறபோது சரியான வழியைத் தேர்ந்தெடுப்பது மிகக் கடினமாகிவிடும். அப்போது என்ன செய்வது? ஆகவேதான் பின்வருமாறு கூறப்பட்டது: 'மகான்கள் கடந்து வந்த பாதையைப் பின்பற்று.

இன்றைக்கு நம் நாட்டில் பெரியவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள், இன்றும் கூட யாரும் ஒப்புக்கொள்ளாத விஷயங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் செய்ய முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வருகிற நாட்களில் யார் அவர்களை ஏற்றுக் கொள்வார்கள்? இந்தப் பொருள் பற்றி ஒரு குறிப்பிட்ட விளக்கத்தின் அடிப்படையில், ஒவ்வொருவரும் சிந்தித்து அவரவர் கூறவந்த கருத்துக்களைக் கூற வாய்ப்பளிக்கும் வகையில் ஆய்வு செய்யப் பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐயா, பயன்பாடுகள் மற்றும் வழக்கத்தைப் பொறுத்தவரையில், வழக்கம் தொடர்ந்து நீடிக்கக் கூடாதென்று அவர்கள் கூறுகிறார்கள். இவர்கள் வழக்கங்களை ஒழித்துக்கட்டத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் கண்டிப்பாக அவற்றை ஒழித்து விடுவார்கள். திருமறை நூல்கள், வேதங்கள், புராணங்கள் ஆகியவையெல்லாம் வாளின் முனையிலோ அல்லது எவ்விதக் கட்டாயப்படுத்தல் மூலமோ பரப்பப்படவில்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும். அவை உருவாக்கப்படுகிறபோதே எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்

வகையில் தகுந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. சிலர் அதற்கு 'வழக்கங்கள்', 'குடும்ப வழக்கங்கள்' எனப் பெயர் கொடுக்கிறார்கள். சிலர், 'குடும்ப நடத்தை' எனப் பெயரிடுகிறார்கள். இன்னும் மற்றவர்கள், 'வழக்கங்கள் மற்றும் மரபுகள்' எனப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இராமாயணத்தில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

*''ரகுகுல் ரிதி சதா சாலி அயி,*
*பிராண் ஜஹின் பர் வச்சன் நா ஜாயி''*

(''ரகுவம்சத்திற்குக் காலங்காலமாய் வழக்கம் ஒன்றுள்ளது. உயிரையும் கொடுப்பார்கள். ஆனால் வார்த்தை தவற மாட்டார்கள்'')

ரகு குடும்பத்தின் தனிக் கூறு அது. ஆம். ஒரு மரபு, ஒரு வழக்கம். உயிரின் மீது அக்கறை கூடாது. அதைத் தியாகம் கூடச் செய்யலாம். ஆனால் அவர்களால் கொடுக்கப்பட்ட வார்த்தை, எக்காரணம் கொண்டும் தவறக் கூடாது. இதை இன்று ஏன் கூறுகிறேன்? டாக்டர் அம்பேத்கரின் அறிவாற்றலுக்குப் பாராட்டுக்கள். அல்லது வழக்கங்களைப் பற்றிப் பேச வேண்டாமென்றும், உண்மை மற்றும் வழக்கங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும் நமக்குச் சொல்லும் அரசின் திறமைக்குப் பாராட்டுக்கள். எல்லா வழக்கங்களும் மரபுகளும் ஒழிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். வழக்கங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் போலவே இதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். நமது 'மனு' ஆக விரும்புகிற அந்த மனிதர், எந்த ஒரு வழக்கமும் மரபுகளும் இவை போன்ற எதுவும் இருக்கக் கூடாது, அவற்றை நாம் ஒழித்துவிட வேண்டும் என்கிறார். இதை சற்று எண்ணிப் பாருங்கள்!

**திருமதி தீக்ஷித் :** ஆனால் என்ன நடந்துகொண்டிருக்கிறது?

**பாபுராம்நாராயண் சிங்:** இப்பொழுது விவாகரத்துப் பிரச்சினைக்கு வருவோம். நம் நாட்டில் இப்படிப்பட்ட ஐந்து அல்லது ஆறு இனங்கள் இருக்கின்றன. அவர்களின் தொகை இரண்டு அல்லது நான்கு கோடிக்கு மேல் போகாது என்பதை நாம் அறிவோம். அவர்களுக்காகத்தான் இவர்கள் இந்தச் சட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் விஷயத்தில் விவாகரத்துக்கான உரிமை பாதுகாக்கப்படும். சமுதாயத்திலுள்ள

எஞ்சிய 90 சதவீதத்தினருக்கு விவாகரத்து என்பது தினசரி நடைமுறையாக இருந்து வருகிறது. அவர்களுக்கு இந்த விவாகரத்து எப்படிக் கொடுக்கப்படுகிறது? அவர்களில் இரண்டு, நான்கு அல்லது ஐந்து பேர் ஒன்றாக அமருகிறார்கள். இரு தரப்பினரும் வாதிடுகிறார்கள். அவர்கள் சில புல்லின் தண்டை முறிக்கிறார்கள். அத்துடன் அவர்களது பரஸ்பர உறவுகள் முறிந்து போகின்றன. விவாகரத்து நடைமுறைக்கு வருகிறது. இதில் ஒரு பைசாக் கூட செலவழிக்கப்படுவதில்லை. தொல்லை எதுவுமில்லை. மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்டவர்களின் நலம் விரும்பி யாவார். இத்தகைய நலம் விரும்பிகள் தவிர்த்து ஒதுக்கப்பட வேண்டுமென்பதை தாழ்த்தப்பட்ட இந்த மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அவர்களெல்லாம், விவாகரத்துக்காக மாவட்ட நீதிபதியிடம் செல்ல வேண்டியுள்ளது. இத்தகைய நடைமுறைகளால் எவ்வளவு அதிகச் செலவும் எத்தனை எத்தனை தொல்லைகளும் ஏற்படும்? இவ்வளவுக்குப் பிறகுதான் விவாகரத்து அனுமதிக்கப்படும்.

**திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்கம்): வழக்கறிஞர்களுக்கும் நல்ல யோகம்.

**பாபு ராம்நாராயண் சிங் :** வழக்கறிஞர்களே வழக்கறிஞர்களுக்கு வாழ்வூதியம் கொடுக்கிறார்கள்.

**பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா :** விவாகரத்தைப் பதிவு செய்யும் அதிகாரம் ஊராட்சிக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பாபு ராம்நாரயண் சிங் :** நல்லது. அது ஊராட்சித் தலைவரிடம் இருந்தால் கூட, ஓரளவிற்கு நல்லது. ஆனால் அது கூட அரசுப் பணிதானே. இந்த மசோதா அட்டவணைப்படுத்தப்பட வேண்டுமென்று உறுதியாகக் கூறுகிறேன். இந்தச் சட்டம் எங்காவது போய்த் தொலையட்டும். பிறகு இந்த முழுத் திட்டமும் எவ்வளவு எளிதாகச் செயல்படுகிறது என்பதைக் காணுவீர்கள். நம்மிடம் ஊராட்சிகளும் தலைவர்களும் இருக்கிறார்கள். நமது நாட்டில் வழக்கங்களும் பயன்பாடுகளும் மிகவும் ஒத்திசைவாக இருக்கின்றன. அவை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். மக்களும் அவற்றைத் தாமாகவே விரும்பி ஏற்பார்கள். ஏதாவது ஒரு சட்டம் இயற்றப்பட்டால், அல்லது ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அது மிகத் தெளிவானதாகவும், முழுமனதோடு மக்கள் ஏற்றுக்கொள்ளுமளவில்

நன்கு வரையறுக்கப்பட்டதாகவும், அதை எதிர்த்துச் செயல் பட மக்கள் விரும்பாததாகவும் இருக்க வேண்டும். ஆனால் இங்கு நிறைவேற்றப்படுகிற சட்டமானது, நமது நாட்டில் உள்ள மக்கள் அதைத் தகர்ப்பதில் பெருமை கொள்ளும் அளவில் இருக்கிறது. அவர்கள் அச்சட்டத்தின்படி நடக்கமாட்டார்கள். இது இன்றைக்கு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள சிலரின் தற்போக்கு எண்ணமே தவிர வேறில்லை. அவர்கள் பிடிவாதம் நிறைந்தவர்களாக இருக் கிறார்கள். அவர்கள் எப்படியாவது இந்த மசோதா நிறைவேற்றப் பட வேண்டுமென்கிறார்கள். இந்த நாடு என்ன நினைக்கிறது, நாட்டிற்கு என்ன தேவை என்பதைப் பற்றி அரசு கவலைப்படுவதே இல்லை. அதற்கு இங்கே என்ன செலவு செய்யப்படுகிறது, மொத்தத் தில் அதற்கு என்ன தேவை இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் யாரும் கவலைப்படுவதில்லை. இந்த அரசு பணத்தை ஊதாரித் தனமாகச் செலவு செய்து, நாட்டைப் பாழாக்கிக்கொண்டிருக் கிறது. மக்களின் விருப்பத்துக்கு எதிராக அடிப்படையல்லாத, பய னில்லாத சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டுமென்று ராஜாஜியையும் டாக்டர் அம்பேத்கரையும் வற்புறுத்துகிறேன். இந்த நாடு அதை விரும்பவில்லை. இந்த நாட்டின் நன்மையும், எல்லோரின் நன்மை யும், அதைத் திரும்பப் பெறுவதில்தான் இருக்கிறது. ராஜாஜி போன்ற பெரியவர்களெல்லாம் இருக்கும்போது இங்கு இத்தகைய அநீதி நடைபெறுவது என்னைத் திகைப்படையச் செய்கிறது. இதைக் காட்டிலும் மிகவும் வெட்கக் கேடான, துயரமான செய்தி வேறெதுவும் இருக்க முடியாது.

ஐயா, நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்ப வில்லை. இது மிகுந்த கவலையுடன் கவனிக்க வேண்டிய விஷயம். இதற்குத் தகுந்த விவாதம் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எந்த ஓர் உறுப்பினர் இது குறித்துப் பேசுவதற்கு விரும்பி னாலும், அவர் பேச அனுமதிக்கப்பட வேண்டும். இந்த மசோதா வானது, இந்த நாடு முழுவதும், இந்த நகரத்தில் கூட ஒரு சலசலப்பை உண்டாக்கியிருக்கிறது. அவர்கள் இந்த மசோதா தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படக் கூடாதென்று கூறுகிறார்கள். இந்த அரசு அதைத் திரும்பப் பெற வேண்டும். அது திரும்பப் பெறப் படாமல் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகிறதென்றால், தகுந்த விதத்தில் விவாதம் நடைபெற வேண்டும். அதன்மீது பேசு

வதிலிருந்து உறுப்பினர்கள் தடுக்கப்படக் கூடாது. அதிலுள்ள எல்லா நன்மை தீமைகளையும் புரிந்துகொண்டு, பிறகு அதை நிறைவேற்றும்படி எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். கெடுபிடியான இந்தச் சட்டத்தினால் இந்த நாட்டின், சமுதாயத்தின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாதென்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் இந்தப் பிரிவை நீக்கிவிடும்படி எல்லா உறுப்பினர்களையும் மீண்டும் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சர்வாதே (மத்திய பாரத்):*** *திருத்தத்தின் பகுதி (ஆ) தேவையில்லாதது, மற்றும் தேவைக்கு மிக அதிகமானது என்று நான் கருதுவதால் டாக்டர் அம்பேத்கரின் திருத்தத்தை எதிர்க்கிறேன்.*

**டாக்டர் அம்பேத்கர்:** அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் என்னை எவ்வளவு வேண்டுமானாலும் பழி கூறலாம். பழியைவிட நேரத்தில்தான் நான் மிக அக்கறையுடையவனாக இருக்கிறேன்.

[1]***திரு. சர்வாத்தே :*** *ஐயா, நான் அவரைப் பழி கூறவில்லை. அவருடைய திருத்தத்தை எதிர்க்க மட்டும்தான் செய்கிறேன். குறுக்கீடுகள் எதுவும் இல்லையென்றால், நான் மிகக் குறைந்த நேரம் தான் எடுத்துக் கொள்வேன்.*

*அரசியல் சாசனத்தின் 254-வது விதிப்படி, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு நேரெதிராகவும், முரண்பாடாகவும் இருக்கிற, மாநில அரசுகளால் உண்டாக்கப்பட்ட சட்டங்கள் அனைத்தும், அது காரணமாகவே, செயலற்றதாக்கப்படும். இது தொடர்பாகக் குறிப்பிடப்படுகிற மற்ற சட்டங்கள் எல்லாம், இந்தச் சட்டத் தொகுப்பிற்கு முன்னாலேயே மத்திய அரசினால் உண்டாக்கப்பட்ட சட்டங்களாகும். அவர்கள் விஷயத்தில், பிந்திய சட்டங்கள், முந்திய சட்டங்களை விட முற்படுவிக்கப்படும். ஆகவே, இந்த இரண்டு சூழ்நிலகளிலும், அதாவது, மத்திய அரசினால் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கும் சூழலில், அவை சட்டத் தொகுப்பிற்கு முரணாக இருக்கின்ற பகுதி வரையிலும், இது காரணமாகவே செயலற்றுப் போகும். ஆகவே பகுதி (ஆ)*

---

*1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3103-7.*

தேவையற்றது மற்றும் தேவைக்கு மிக அதிகமானது என்று கூறுகின்றேன். பகுதி (அ)வைப் பொறுத்தவரையிலும், இந்தத் தீர்மானத்தின் விளைவு, இப்படிப்பட்ட எல்லா வழக்கங்களும் பின்னர் வரும் ஏதாவதொரு சட்ட நிபந்தனைப் பிரிவில் சேர்க்கப்படுவதன் மூலம் பாதுகாக்கப்படும் என்று முதலில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவிற்குட்பட்டு, இந்து சட்டத்தின் எல்லா வழக்கங்களும், எல்லா வாசகங்களும் அல்லது விதிகள் மற்றும் பொருள் விளக்கங்களும் செயலற்றதாக்கப்படும். நான் கூறுவதென்னவென்றால், இது முழுக்க விரும்பத்தகாதது. இந்து மதம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அது இறந்து கொண்டிருப்பதாகவும், சீர்கேடடைந்து வருவதாகவும் கூறப்படுகிறது. யுத்த களத்திலிருந்து ஓடிவிட்ட ஒரு கோழையின் வெட்கக் கேடான வாழ்க்கையுடன் இது ஒப்பிடப்படுகிறது. யுத்த களத்திலிருந்து ஓடுகிறவர்கள், முன்னாளில் வெற்றியாளர்களாக இருந்தவர்களை முறியடிப்பதற்காகவே திரும்பி வருவார்கள் என்பதை அடிக்கடி புறக்கணித்து விடுகிறோம் எனக் கூற விழைகிறேன். தங்களைச் சிலகாலம், அதுவும் தற்காலிகமாக மட்டுமே வெற்றி பெற்றவர்களை இந்துக்கள் விரட்டியடித்திருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த நூற்றாண்டில், டாக்டர் அம்பேத்கரின் சொந்த மாநிலமான மகாராஷ்டிராவில் உள்ள மராத்தியர்கள் மற்றும் வடக்கில் உள்ள சீக்கியர்கள் ஆகியோர் தாங்கள் விடுதலை அடைவதில் வெற்றி பெற்றுத் தங்களின் ஆட்சியை அமைத்துக் கொண்டார்கள். ஆனால், பண்டைய மற்றும் தற்கால வரலாற்றுக்குள் நான் போகத் தேவையில்லை. நமது காலத்திலேயே, நமது கண்ணெதிரே இது வெற்றிகரமாக நிறைவேறியதைப் பார்த்தோம். டாக்டர் அம்பேத்கர் சிறப்புமிக்க உறுப்பினராக இருக்கும் தற்போதைய நாடாளுமன்றம் எதன் விளைவு என்பதை நாம் மறந்துவிட்டோமா?

**டாக்டர் அம்பேத்கர்:** நான் இங்கிருக்க உரிமையில்லை. நான் திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்தவன்.

**திரு. சர்வாத்தே:** இத்தகைய குற்ற ஒப்புதல்களைச் செய்ய வேண்டாமென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களைத் தற்காலிகமாக ஆதிக்கம் செய்த அன்னியர்களை இந்துக்கள் விரட்டியடித்ததின் பலன்தான் இந்த நாடாளுமன்றம்.

இந்து மதத்திற்கு இத்தகைய புத்துணர்ச்சி மனப்பாங்கை அளித்த கூறு அல்லது காரணி எது? எனது மதிப்பீட்டின்படி அது 'வழக்கம்'. வழக்கம் என்றால், பிரிவு 3-இன்கீழ் இந்த அவையில் வரையறக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே வழக்கம்தான். அந்த வழக்கம், உறுதியான, நியாயமான, பொதுக் கொள்கைக்கு எதிராயில்லாத விதியாகும். வழக்கம் என்பது தீங்கான இயல்புடையதாகும் என்று கூறப்படுகிறது. ஆகவே, அதைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அப்படிக் கூறுவது, இன்றைக்குள்ள விலைமாதரின் முரண்பாட்டைப் போலவே, விளக்கங்களின் வேறுபாடாக அமையும். ஏனெனில், இங்கு வழக்கம் என்பது பொதுக் கொள்கைக்கு எதிரானதாக இல்லாதது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுக் கொள்கைக்கு அல்லது நடத்தை ஒழுக்கத்திற்கு எதிரான அத்தகைய வழக்கங்கள், அதன் காரணமாகவே நீக்கம் செய்யப்படும். நல்ல வழக்கங்கள் எனக் கருதப்படுபவை பாது காக்கப்படும்.

இந்து சட்டத்தின் மூலங்களாகக் கூறப்படுவன :

श्रुति स्मृतिः सदाचार् स्वस्य च प्रियमात्मनः ।

'வேதங்களும் மனுஸ்மிருதிகளும் (நீதிநெறிகளும்) நல்லொழுக்கமுமே இந்து தர்மத்தின் அடிப்படைத் தளங்களாகும்.' இதை இந்த அவை உணர வேண்டும்.

முதலாவதாக, **ஸ்ருதிகளும், ஸ்மிருதிகளும்** அடிப்படைப் பொதுப் பின்னணியை உருவாக்கிக் கொடுத்தன.

மேலும் सदाचार மற்றும் स्वस्य प्रियम् இந்த நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்குப் பொருந்துமாறு வழக்கங்களும், இனிய பழக்கங்களும் மாறுபட்ட வடிவங்களில் வழங்கப்பட்டன. இந்தியா, அதன் பரப்பளவில் ஒரு கண்டமாக இருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதன் மக்கள் தொகை, கிழக்கில் சோவியத் யூனியனிலிருந்து மேற்கில் அமெரிக்கா வரையிலுள்ள மொத்த மக்கள் தொகைக்குச் சமம் ஆகும். ஆகவே, வெவ்வேறு வகையான சட்டங்கள் இல்லாவிட்டால், அந்தச் சட்டம் முழுக்க முழுக்க அடக்கியாள்வதாக இருக்கும். வெவ்வேறு பகுதி மக்களின் வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வது அச்சட்டத்திற்கு மிகக் கடினமாய் இருக்கும்.

இப்பொழுது இந்து சட்டத்தின் மற்றொரு வாசகத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது அந்தச் சட்டம் இப்பொழுது இருக்கிற நிலையில் யாக்ஞவல்கியர் கூறுகிறார்:

**यस्मिन् देशे य आचारो व्यवहारः कुलस्थितिः । तथैव परिपाल्यो सौ ॥**

இந்த நாட்டில் எந்த வழக்கங்கள், நடைமுறைகள் அல்லது குடும்பப் பயன்பாடுகள் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனவோ அவையெல்லாம் அப்படியே காக்கப்பட வேண்டும்.

***வியவஸ்தா*** அல்லது விதி கூறுவதாவது:

**येषां परम्परा प्राप्ता पूर्वजैप्यनुष्ठिता । त एव तैर्न पुष्येदुः आचारौर्नरे पुनः ॥**

'எவர்களுடைய முன்னோர்களால் ஆசாரங்கள் அனுஷ்டிக்கப் பட்டனவோ, அவை அவர்களது சந்ததியினரால் பின்பற்றப் படுவதில்லை. அவர்களின் மூதாதையர்கள் நடைமுறையில் பயன் படுத்தி வந்த இந்தப் பயன்பாடுகளை அவர்கள் பழித்துரைக்க முடியாது.'

இன்றைய மொழிப்படி கூறுவதானால், வழக்கங்கள் மிகத் தொன்மையானவை. அவை நினைவிற்கெட்டாக் காலத்திலிருந்து வழங்கி வருபவை. அப்படியில்லாத மற்றவற்றையெல்லாம் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

ஆகவே இந்த விதியினால், இந்து மதம் உத்வேகம் பெற்று வெவ்வேறு பகுதிகளுக்கும் தன்னை தகவமைத்துக் கொண்டு வருகிறது.

இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, வழக்கங்களை முழுமையாக நாம் நிராகரித்து விட்டால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை இப்பொழுது ஒரு சிறிய எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குகிறேன். இந்தத் தீர்மானம் அப்படியே ஏற்கப்படக் கூடாதென்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே இமயம் வரை, நம் நாட்டில் பரவலாக உள்ள நல்ல பயன்பாடுகளைப்பற்றி, மாண்புமிகு சட்ட அமைச்சர் நன்கு அறிந்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன். உறுப் பினர்களே கூட, அவற்றைப் பற்றியெல்லாம் நன்கு அறிந்திருக்க மாட்டார்கள். அப்படியே அவர்கள் அறிந்திருந்தாலும், அந்தப் பயன்பாடுகளின் பயனுடைமை அல்லது தனிச் சிறப்பு மற்றும்

நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் அந்தப் பயன்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றி, நமது டாக்டரையோ அல்லது மற்ற உறுப்பினர்களையோ நம்ப வைக்க முடியாதவர்களாய் இருப்பார்கள். ஒரு சட்ட நுணுக்கத்தால் ஏற்கப் படாத அல்லது முன்வைக்கப்படாத எனது திருத்தத்தில் இதற்கு ஓர் எளிய உபாயம் கொடுத்திருக்கிறேன். அதன்படி மாநில சட்டமன்றங்கள் இந்த சட்டத்தை ஈடுசெய்து கொள்ளலாம். ஆயினும் அது இப்போது போய்விட்டது. ஆகவே இந்த நாட்டி லுள்ள எல்லா நல்ல பயன்பாடுகளைப் பற்றியும் நமக்குள்ள அறியாமையால், ''சட்ட ஷரத்துகளில் வேறு விதமாகச் சொல்லப் பட்டிருந்தாலொழிய...'' என்று கூறக்கூடாது. இந்த விலக்கு வாசகத் தின் விளைவு ஒன்றுமில்லை. மேலும் திருத்தத்தின் பகுதி (அ)வானது, எல்லா வழக்கங்களையும், அவை முரண்பாடாக இருந்தாலும் அல்லது சட்டத்திற்கு ஒவ்வாததாக இருந்தாலும், செயலற்றதாக்கிவிடும்.

பகுதி (ஆ)வைப் பொறுத்தவரையில், இப்போதுள்ள சட்டத் தோடு முரண்படுகிற சட்டங்கள் மட்டுமே நீக்கப்படுகின்றன. ஆனால், வழக்கங்களைப் பொறுத்தவரையில் முரண்படுகிறதோ இல்லையோ, அவை அனைத்தும் ஒழிக்கப்படுகின்றன. இது மிகவும் விரிந்த சட்டப் பிரிவு. இது முற்றிலும் நீக்கப்பட்டால் காணாமலே போய்விடும். வழக்கம் என்பது பிரிவு 3-இல் கூறப் பட்டுள்ள எல்லாத் தேவையான தகுதிகளாலும் ஆளப்படுகிறது. இந்த அவை இதை ஏற்கெனவே நிறைவேற்றிவிட்டது. மேலும் அரசியல் சாசன விதி 254-ன்படி சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

இப்பொழுது நான் மேலும் ஒரு சான்று கூறுகிறேன். மொத்தத்தில் திருமணம் என்பது சமுதாயத் தேவையைத் திருப்தி படுத்த நடைபெறும் சமுதாய பழக்க வழக்க மரபாகும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் சமுதாய சூழ்நிலைகள் பெருமளவு மாறுபட்டால், இப்போது நிறைவேற்றப்படவுள்ள சட்டத்தில் பல்வேறு சட்ட நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டியிருக்கும். இப்போதுள்ள இந்து சட்டத்தில் இது இரண்டு வழிகளில் அடையப் பட்டிருக்கிறது. முதலில், வெவ்வேறு வகையான இந்துக் குழுக்கள் இருக்கின்றன. *'தாயபாகா'* மற்றும் *'மிதாக்ஷரா'* சட்டம் ஒன்று இருந்தது. யாக்ஞவல்கியருடையதும் மனுவினுடைய **ஸ்மிருதிகளும்**

தான் இதற்குப் பொதுப் பின்னணியானவை. *தாயபாகா* மற்றும் *மிதாக்ஷராவி*னால் மாறுபட்ட வடிவங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் *மிதாக்ஷராவி*லுள்ள பல்வேறு குழாம்கள் வெவ்வேறு பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தின. மிதிலா குழாம், பனாரஸ் குழாம், மெட்ராஸ் குழாம், மகாராஷ்டிரா குழாம் ஆகிய குழாம்கள் இருந்தன. இது, இந்து சமுதாயத்திற்குப் பல்வேறு வடிவங்களைக் கொடுத்த வழிகளில் ஒன்று. இதன் காரணமாகவே இந்து சமுதாயம் ஒரு நாளும் சாகாது என்று உறுதியாகக் கூறுவேன். இரண்டாவதாக, ஆசாரம் ஒன்றிருந்தது. அதன் காரணமாக இந்து சட்டமும், மதமும் முன்னேற்றமடைந்தன. மேலும் எல்லோருடைய தேவைகளையும் அவை பூர்த்தி செய்தன. இவைதான் இதனைச் செயல் துடிப்பாக்கும் காரணிகளாகும். இந்த மாறுபட்ட வடிவம், பொதுப் பின்னணி யோடு சேருகிறபோது நூற்றாண்டு முழுவதும் மதத்தை உயிர்த் துடிப்புடன் வைத்திருந்தது. படையெடுப்பாளர்கள் வந்தார்கள்; போனார்கள். ஆனால் இந்து மதம் இன்னும் முன்னேறிக் கொண் டிருக்கிறது.

இப்போது நான் ஒருதார மணப் பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன். சட்டமியற்றுபவர்கள் என்ன சட்டம் உருவாக்கி னாலும், ஒருதார மணம் அல்லது வேறு திருமண வகைகளை தேவைக்கேற்ப, சமுதாயம் ஏற்றுக் கொள்ளும். ஆகையால், நல்ல சட்ட அமைப்பாளர்கள், இவ்வாறான மாறுபட்ட தேவைக்கேற்ப சட்டங்களை இயற்ற வேண்டும். திருமண மரபு வடிவத்தைத் தீர் மானிக்கும் காரணிகளில் ஒன்று ஆண் பெண் விகிதாச்சாரம் ஆகும். இருபாலாரும் சம விகிதத்தில் இருந்தால், ஒரு தாரமணம் நடைமுறை யிலிருக்கும். இரு பாலாருக்குமிடையே விகிதாசார வேற்றுமை மிக அதிக அளவில் இருந்தால், அதற்கேற்றவாறு திருமண வடிவத்தை உருவாக்கி சமுதாயம் அதனை ஏற்றுக்கொள்ளும். ஆண்களின் எண்ணிக்கையைவிடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமானால், இருதார மணம் அல்லது பலதாரமணம் அனுமதிக்கப்படும். இல்லா விட்டால், கூடாஒழுக்கம் மிகுந்து போகும். அல்லது முறைகேடாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**திரு. நசிருத்தின் அகமது :** இந்த மசோதாவில் கூடா ஒழுக்கம் அனுமதிக்கப்படுகிறது.

**திரு. சர்வாத்தே:** அதை நான் கவனத்தில் கொள்ளமாட்டேன். யுத்த காலத்தில் குறிப்பிடத்தக்க பொது நிகழ்வு ஒன்று காணப்பட்டது.

இங்கிலாந்தில் வயதுவந்த ஆண்களெல்லாம் போர் முனைக்குச் சென்று விட்டார்கள். நாட்டில் தங்கிவிட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதன் காரணமாக முறைகேடாகப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் பெருகிவிட்டது. இப்போது அது தீர்க்க முடியாத பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மற்ற நாடு களில் கூட இதே மாதிரியான நிகழ்வு காணப்பட்டது. அதே போல் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமானால் கூட, ஏதாவதொரு வடிவத்தில் பல கணவருடமை நிகழும். அந்நிலையிலும் கூட இதே விளைவு நிகழும். நான் ஒரு தாரமணத்தை ஆதரிக்கிறேன். ஏனென்றால் அது இயற்கை விதி. சமூகம் அதையே வற்புறுத்துகிறது. மேலும் அது தற்காலப் போக் குக்கு உகந்ததாக இருக்கிறது. அந்த வகையில் அதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் இருபாலாரின் விகிதமும் சமமாக இருக்கிறது. ஆனால் இதிலும்கூட, வேறு சில காரணிகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களிலுள்ள விகிதாசாரம் குறித்த சில கணக்குகளை நான் வைத்திருக்கிறேன். மெட்ராசிலும் பம்பாயிலும் சம விகிதத்திலிருப்பதாக அந்த விப ரங்கள் காட்டுகின்றன.

**டாக்டர் அம்பேத்கர்:** நீங்கள் பலதார மணத்துக்காக வாதாடு கிறீர்களா?

**திரு. சர்வாத்தே:** என்னைப் பேச அனுமதியுங்கள். வங்காளத் திலும் இன்னும் சில மாநிலங்களிலும் ஆண்கள் மிக அதிகமாக வும் பெண்கள் குறைவாகவும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த எல்லா மாநிலங்களுக்கும் நீங்கள் ஒரே ஒரு வகையான திருமண முறையை ஏற்படுத்தினால் அது ஒத்து வராது.

**திரு. பிரஜேஸ்வர் பிரசாத்** (பீகார்): எனது மரியாதைக்குரிய நண்பர், வெவ்வேறு வயதுப் பிரிவினரிடையேயுள்ள விகித்ததை 16லிருந்து 35 வயது வரையுள்ள ஆண்களுக்கும் 16-லிருந்து 35 வயது வரை உள்ள பெண்களுக்கும் இடையேயுள்ள விகிதத்தை ஆராய்ந் திருக்கிறாரா? ஒரு தாரமணம் இருக்க வேண்டுமா? பலதார மணம் இருக்க வேண்டுமா? என்னும் பிரச்சினைக்கு அது தீர்வளிக்கும்.

**டாக்டர் அம்பேத்கர்:** இருபாலாருக்கும் வெவ்வேறு வயதுக் குழுவினரிடையேயுள்ள விகிதத்தை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும்

என்கிறார். நீங்கள் இந்த விவாதத்தை ஏன் இளைஞர்களிடம் விட்டுவிடக் கூடாது?

**திரு. சர்வாத்தே:** ஒவ்வொருவரும் அவரவர் பணியைச் செய்ய வேண்டும். டாக்டர் அம்பேத்கர் அவருடைய பணியைச் செய்ய வேண்டும். நான் என் பணியைச் செய்கிறேன். என்னுடைய விவாதத்தைத் தொடரும்போது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே வெவ்வேறு வயதுக் குழுவினரின் விகிதாசாரத்தை எடுத்துக்காட்டுவதற்கு என் விவாதத்தை வளர்ப்பதென்பது பொருந்தாது அல்லது தேவையில்லாதது. வெவ்வேறு வட்டாரங்களில் வெவ்வேறு நிலைமைகள் இருக்கின்றன என எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நடைமுறையில் இருக்கும் இந்து சட்டத்திற்கு வெவ்வேறு குழாம்கள் மூலமாகவும் ஆசாரங்கள் மூலமாகவும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருப்பதைப் போலவே, இதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டும். இந்த விஷயத்தில் வெவ்வேறு வடிவங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுவது முழுக்க முழுக்க அவசியமாகும். அதுவும் வழக்கங்களை, தொன்மையான மற்றும் பொது ஒழுக்கத்தால் ஆளப்படுகிற வழக்கங்களை அனுமதிப்பதன் மூலமே இது சாத்தியம்.

இந்தத் திருத்தம் முழுக்கவும் தேவையற்றது என்னும் என் குறிப்புரையோடு நான் முடிக்கிறேன். துணைப் பிரிவு (அ) விரும்பத் தகாதது, மற்றும் பிரிவு (ஆ) தேவையற்றது. ஆகவே இந்தப் பிரிவு முழுவதும் கைவிடப்பட வேண்டும். இந்தத் திருத்தம் அனுமதிக்கப் படக் கூடாது.

[1]**டாக்டர் சி.டி. பாண்டே** (உத்தரப்பிரதேசம்): வழக்குச் சட்டத்தின் தகுதியை ஒழித்துக் கட்ட விழையும் இந்தப் பிரிவை நீக்குவதற்கு ஆதரவாகப் பேச நிற்கிறேன். இந்து சட்டத் தொகுப்பின் நோக்கத்தை இந்தப் பிரிவு விரிவாக்குகிறது என்று நினைக்கிறேன். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் தோற்றத்தைப் பற்றி நான் இப்போது சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவின் தேவை என்ன? இதன் பின்னணியை நீங்கள் அறிந்தால், இந்த சட்டத் தொகுப்பில் இந்தப் பிரிவை வைத்திருப்பது எவ்வளவு பொருளற்றது என்பதை உணருவீர்கள். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் தோற்றத்தின் வரலாறு என்னவென்றால், அதற்கான

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3095-3112.

தொடர்ச்சியான கோரிக்கை ஒன்றிருந்தது. மேலும் மனித குலத்தின் நாகரிக கருத்தமைவிற்கு இணக்கமான ஒரு சட்டம் வேண்டும் என்ற உணர்வு, இந்து சமுதாயத் தலைவர்களின் மனதில் இருந்தது. அதற்கு இரண்டு விஷயங்கள் அடிப்படையாக உள்ளன. முடிவாக அதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாம் அவற்றிற்காக நிற்கிறோம். ஒன்று, தவிர்க்க இயலாமலும், தவிர்ப்பு இல்லா மலும் ஒருதார மணத்தை ஏற்றுக் கொள்ளுதல். மற்றொன்று, சில குறிப்பிட்ட துன்பச் சூழல்களில் விவாகரத்துக் கேட்பவர்கள், அவ்வாறான பிரிவினையை, விலக்கை அல்லது விவாகரத்தைப் பெறும் வழிமுறைகளில் எவ்வித இடையூறும் இல்லாமல் அவர்கள் அதைப் பெற வேண்டும். இந்த இரண்டு விஷயங்களுக்குத்தான் இங்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கச் சட்டத்தின் தகுதியை ஒழிப்பதற்காக இதைப் போன்ற வாதம் ஏதும் முன் வைக்கப்பட்டதா? என்பது எனக்குத் தெரியவில்லை. வழக்குச் சட்டத்தால் ஆளப்படுகிறவர்கள், இந்த சட்டம் மாற்றப்பட வேண்டும், மனுவின் சட்டத்திற்கிையந்த வகையில் இது கொண்டு வரப்பட வேண்டும் எனக் கேட்டு ஏதாவதொரு கோரிக்கை வைத் ததையோ, ஏதாவது ஒரு கூட்டம் போட்டதையோ எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அல்லது அவர்களுடைய வழக்கச் சட்டத்தால் அவர்கள் சோர்வுற்று விட்டதாகவும், அதனால் மனுவின் சட்ட வரம்பிற்கு வருவதற்கு விரும்புவதாகவும் கூறக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லை. இந்தக் கோரிக்கையை வைத்து, ஏதாவது ஒரு முறையீடு செய்ததாகவோ, ஒரு கூட்டம் நடத்தியதாகவோ, பத்திரிகைகளிலோ, மேடைகளிலோ நான் கேள்விப்படவில்லை. ஒரு தாரமணத்தையும் விவாகரத்தையும் பொறுத்தவரையிலும் கூட, சட்டத்தில் திருத்தம் வேண்டுமென்று தொடர்ச்சியான கோரிக்கை இருந்து வருகிறது. அயல்நாடுகளில் நமது பெயருக்குக் களங்கம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் கூறுகிறார் கள். நல்லது. அப்படி இருக்கலாம். அதற்காகத்தான் நாம் இப்போது ஒருதாரமணக் கோட்பாடு மற்றும் விவாகரத்தை ஏற்றுக் கொண் டிருக்கிறோம். ஆனால், இந்து சட்டத்தில் மாற்றத்தை உருவாக் குவது என்ற போர்வையில், இந்த நாட்டின் 80 சதத்துக்கு மேலான மக்களின் நலனுக்குப் பெரிதும் ஊறுவிளைவிக்கும் விஷயங்களை நீங்கள் புகுத்துவதை நான் விரும்பவில்லை. இந்த நாட்டின் மக்கள் தொகையை ஆய்ந்து பார்த்தால், இவர்களில் எத்தனை பேர் மனு வின் சட்டத்தால் ஆளப்படுகிறவர்களாக இருப்பார்கள்? மிகக் குறைந்த அளவுள்ள பிராமணர்களும், சத்திரியர்களும் வைசியர்

களும்தான். அவர்களும் கூட பிராந்தியச் சட்டங்களால் கட்டுப்படுத்தப் படுகிறார்கள். பிராந்தியச் சட்டங்கள், இந்துச் சட்டத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையில் உள்ளன. இந்துச் சட்டம் என்பது முதலில் எழுதப்பட்ட சட்டமாக இல்லாமல் வழக்கமுறைச் சட்ட மாக இருந்தது. அது நாளடைவில் மனு, யாக்ஞவல்கியர் மற்றும் பிறரால் ஒழுங்குப்படுத்தப்பட்டது.

இந்த விஷயங்களில் கடந்த நூறாண்டுகளாக இந்தியச் சட்டமன்றத்தில் இடையூறு எதிர்கொள்ளப்பட்டு வந்தது. அவர்கள், குறிப்பிட்ட பின்னடைவுகளுக்குச் சில சட்டங்களை இயற்றி, இடையூறைக் களைந்தார்கள். இப்போது ஒரு தாரமணம் மற்றும் விவாகரத்து ஆகியவற்றில் மாறறம் வேண்டுமெனக் கோரிக்கை எழுந்திருக்கிறது. நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், வழக்க சட்டத்தைப் பொறுத்தவரையிலும் இவ்வாறான மாற்றத்திற்கு விருப்பம் இருக்கிறது என்று எப்படி நீங்கள் ஊகிக்கலாம். வழக்கச் சட்டம் என்பது என்ன? அது இயற்கையான சட்டம். அது ஆற்றல் வாய்ந்த சட்டம். அது வளருகின்ற சட்டம். அது காலத்தின் தேவை களுக்கேற்ற வேகத்தைக் கொண்ட சட்டம். அதன் வளர்ச்சியை நீங்கள் அனுமதிக்கவில்லையானால், சமுதாயத்தின் ஆற்றல் பெரிதும் பாதிக்கப்படும். கடந்த 3000 ஆண்டுகளாக மனுவின் சட்டம் தீங்கிழைத்திருக்கிறது என்று நீங்கள் கூறுவதைப் போலவே, நீங்கள் இந்து சமுதாயத்திற்குத் தீங்கிழைத்தவர்கள் ஆவீர்கள். இந்தச் சட்டத் தினால் ஆளப்படாத இந்த சமுதாயத்தின் பெரும்பகுதிக்குள்ளும் இத்தீங்கு சென்றடைய விரும்புகிறீர்களா? இந்த அவை ஒருதார மணக் கோட்பாடு மற்றும் விவாகரத்திற்கு ஆதரவாக இருக்கிறது. இன்றைய முற்போக்கு யுகத்தில், நீங்கள் வாய்ப்பு நலங்களைக் கொடுக்க விரும்புகிற அதே விஷயங்களுக்கு நீங்கள் இடையூறு விளைவிக்கலாமா? நீங்கள் அவ்வாறு செய்ய நினைக்கிறீர்கள் என்பது, என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாததாக இருக்கிறது. அது ஒரு பிற்போக்கான நடவடிக்கையாகும்.

காலை 11 மணி

வழக்கச் சட்டம் தொடர்ந்து செயல்படச் செய்வதற்கு மற்றொரு காரணம் உண்டு. விவாகரத்து அல்லது சட்ட ரீதியான விலகல் பற்றிய வழக்குகளை நடத்துவதற்குப் போதுமான எண்ணிக்கையுள்ள நீதிமன்ற அதிகாரிகளையும் நீதிபதி களையும் வைத்துப் பராமரிக்க அரசினால் முடியாது. (**ஓர் உறுப் பினர்:** அரசிடம் போதுமான நிதி இருக்கிறது).

பல மாதங்களாக நிலுவையில் உள்ள சாதாரண வழக்குளை நடத்துவதற்கான நீதிபதிகளை வைத்துப் பராமரிப்பதற்குக் கூடப் போதுமான நிதி அவர்களிடமில்லை. இன்னும் எத்தனை நீதிபதிகள் அதிகமாகத் தேவைப்படுவார்கள் என்று உங்களுக்குத் தெரியாது. உங்களிடம் நிதி இருந்தாலும், நீங்கள் அதைச் செய்வதில் உறுதியாக இருந்தாலும், அதில் உள்ளடங்கியிருக்கிற இன்னல்கள் உங்களுக்குத் தெரியுமா? செலவு புறக்கணிக்கப்படலாம். ஆனால் இன்னல்கள் புறக்கணிக்கப்பட முடியாது. ஏனென்றால், இந்த நாட்டில் துரதிருஷ்ட வசமாக ஒரு குடிமகன் அரசு இயந்திரத்தோடு எப்பொழுதெல் லாம் தொடர்பு கொள்கிறானோ, அப்பொழுதெல்லாம் அவன் ஒவ்வொரு கட்டத்திலும் அலைக்கழிக்கப்படுகிறான். நானே அரசு அதிகாரியாக இருந்திருக்கிறேன். இவற்றைப் பற்றி எனக்குத் தெளிவான கருத்து உண்டு. எனக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் நான் அதிகாரியல்லாத சாதாரண நிலையில் இருந்திருந்து, நான் வழக்கு மன்றம் சென்றால், என்மீது எவ்வளவு கவனம் செலுத்தப் பட்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஒரு சாதாரணக் குடிமகன், பங்கீட்டு அட்டை பெறக்கூட கஷ்டப்படுகிறான். படிப்பறிவில்லாத ஏழைக் குடிமகன் ஒருவனுக்கு வழக்கு மன்றத்திலிருந்து விவாக ரத்துச் சான்றிதழ் பெறுவது எளிதாயிருக்குமென்று நீங்கள் நினைக் கிறீர்களா?

**பண்டிட் எம்.பி. பர்கவா (ஆஜ்மீர்):** இனிமேல் வழக்கு மன்றங்களெல்லாம் அதிகத் திறமையுடையனவாகிவிடும்.

**டாக்டர் சி.டி. பாண்டே:** எதையும் இருக்கிறவாறு ஏற்றுக் கொள்ள வேண்டும். எதுவும் திடீரென்று முன்னேறிவிடும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இடையூறுகளை விளைவிப்பதற்கு நியாயம் கற்பிக்க முடியாது. வழக்கச் சட்டத்தை ஏன் நீங்கள் ஒழிக்க விரும்புகிறீர்கள்? வழக்கச் சட்டத்தை ஒழிக்கக் கோரி ஏதாவது கோரிக்கையை நீங்கள் வைத்திருக்கிறீர்களா? அதை ஏன் வற்புறுத்து கிறீர்கள்? இடையூறுகளை ஏற்படுத்த ஏன் வற்புறுத்துகிறீர்கள்?

**திரு. ஏ.சி. சுக்லா (மத்தியப் பிரதேசம்):** ஏனென்றால், அது பொது ஒழுக்கத்திற்கு எதிராக இருக்கிறது.

**டாக்டர் சி.டி. பாண்டே:** ஒழுக்கங்களை எல்லாம் சட்டத் தினால் நெறிப்படுத்தி விடலாம் என்று நினைக்காதீர்கள். மக்களின்

ஒழுக்கத்தைச் சட்டத்தினால் நெறிப்படுத்தலாம் என்ற மயக்கம் உங்களுக்கு இருந்தால், அது தவறானது.

**திரு. லட்சுமணன்** (திருவாங்கூர் - கொச்சி): அவர், அவைத் தலைவரைப் பார்த்துப் பேசவில்லை. அவர் தனிப்பட்ட உறுப்பினர் களை 'நீங்கள்' என்றழைத்துப் பேசுகிறார்.

**டாக்டர் சி.டி. பாண்டே :** நான் வருந்துகிறேன். 'நீங்கள்' என்பது விளித்துப் பேசும் பாணியாகும். 'நீங்கள்' என்பது தனி உறுப்பினர்களைக் குறிப்பதில்லை. அது இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் குறிக்கும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** தயவு செய்து குறுக்கீடுகள் வேண்டாம்.

**டாக்டர் சி.டி. பாண்டே:** குறுக்கீடுகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால், இப்பொழுது உங்கள் முன்னால் நான் வைக்கிற இந்த நிகழ்வுக் கூற்றை, வெளியில் மக்கள் தங்கள் மனவலிமையால் நிலைநிறுத்தியிருக்கிறார்கள். மக்களை நானறிவேன். அவர்களின் இன்னல்களும் எனக்குத் தெரியும். வழக்கங்களின் செல்வாக்கை நான் அறிவேன். ஏற்படுத்தப்படப் போகிற இடையூறுகள் ஏராளமாயிருக்கும். இந்த வழக்குகளை எதிர்கொள்ளத்தக்க அரசு அதிகார அமைப்பு உங்களிடம் இல்லை. இந்த வழக்குகள் மிகத் தொலைவான இடங்களில் இருக்கலாம். அங்கே அரசு அதிகார அமைப்புகள் இருக்காது. மக்கள் தங்கள் விவகாரங்களைத் தாமாகவே நிறைவேற்றிக் கொள்கிறார்கள். சமுதாய விவகாரங்கள் தாமாகவே சரிப்படுத்திக் கொள்ளப்படு கின்றன. அச்சமுதாயத்தின் தானாகவே சீர்படுத்திக்கொள்ளும் முறை தொல்லைக்கு உள்ளாக்கப்படும். நீங்கள் தயாராக இல்லாத ஒன்றிற்குப் பொறுப்பேற்க விரும்புகிறீர்கள். மேலும் அது அவசிய மில்லாதது. அதற்கு நியாயம் கற்பிக்க முடியாது. வழக்கச் சட் டத்தை நீக்கிவிடுமாறு கேட்டு ஒரு வேண்டுகோளும் இல்லை. விவாகரத்தை எளிதாகப் பெறச் செய்ய வேண்டுகோள் இருக்கிறது. விவாகரத்தின் நோக்கத்தைக் குறுக்குவதற்காக அல்ல. மக்களின் விருப்பத்திற்கு உடன்பாடில்லாத, இந்தச் சட்டத் தொகுப்பின் அடிநாதமான கொள்கைக்கு எதிராயிருக்கிற ஒன்றை சட்டமாக்க வேண்டுமென்று ஏன் விரும்புகிறீர்கள்? இந்தச் சட்டத் தொகுப்பு விவாகரத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் நீங்கள் விவாகரத்தை வரையறைப்படுத்த விரும்புகிறீர்கள். இந்த வாதத்தில்

ஏதாவது நேர்மை இருக்குமானால், இந்த விஷயத்தில் சட்ட அமைச்சர் கவனமாகவும் பரிவுடனும் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

[1]**திரு. ஓரான்** *(இந்திப் பேச்சின் மொழியாக்கம்)*: இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றி நான் அதிகம் பேசுவதாக இல்லை. இப்பொழுது நாம் முரண்பட்ட சூழ்நிலையில் இருக்கிறோம். அச்சூழ்நிலை என்னைக் கொஞ்சம் பேச நிர்ப்பந்திக்கிறது. தாழ்த்தப் பட்ட மக்களும், தொன் முதுமக்களும் இந்துக்களும் இல்லை; முஸ்லீம்களும் இல்லை; கிறிஸ்தவர்களும் இல்லை. அவர்களுக்கு எந்த மதமும் இல்லை. முதலில் அவர்கள் இந்த மசோதாவில் சேர்க்கப்படவில்லை. அவர்களும் இந்தப் பிரச்சினையில் தாங்கள் இழுக்கப்படுவதை விரும்பவில்லை. இப்பொழுது, நாமும்கூட இம்மசோதாவிற்குள் இழுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். நமது சமுதாயத்தில் நிகழுகிற விவாகரத்துக்களெல்லாம், உலகத்தின் வேறெந்தப் பகுதியிலும் நிகழாமல் இருக்கலாம். திருமணத்தின் மூலம் ஒரு குழந்தை கூடப் பிறப்பதற்கு முன்னரே, 80 முதல் 85 சதவிகிதத்திற்குக் குறைவாக விவாகரத்துக்கள் நிகழ்கின்றன என்பதை நாம் அறிவோம். அதற்கு ஏதாவதொரு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றால் அல்லது விவாகரத்துச் செய்யப்பட வேண்டுமென் றால், ஊராட்சித் தலைவரிடம் வழக்கைப் பதிவு செய்வதில் நமக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. நமது சொந்த ஊராட்சிகளிலேயே வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டுமென்று கூறப்படுகிறது. அந்த ஊரின் தலைவர் வழக்கு மன்றம் சென்று பதிவு செய்வார். விவாக ரத்துக்காக வருகிற இருவரில் ஆணோ பெண்ணோ அவருடைய முடிவை ஏற்றுக் கொள்ளவில்லையானால், வழக்கு நீதிமன்றத் திற்குக் கொண்டு செல்லப்பட்டு தொடர்ந்து நடக்கும். எத்தனை விவாக ரத்துக்கள் நிகழ்கின்றன என்பது நமக்குத் தெரியும். 18 மாதங்களில் கூட இல்லை - வழக்குகள் பதிவு செய்யப்பட்ட 12 மாதங்களில் முடிக்கப்படுகின்றன. ஆகவே, இந்து சட்டத் தொகுப் பிற்குள் நம்மையும் இழுப்பது என்பது, அநீதி மட்டுமல்ல; நடை முறையில் அது சாவிற்கு ஒப்பாகும். ஆகவே அதிலிருந்து நம்மை விடுவிக்க, கற்றறிந்த டாக்டரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3112-13.

அடுத்ததாக, இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில் நாம் பார்க்கிற எல்லாமே நல்லதும் கெட்டதுமாக இருக்கிறது. நகரத்தில் வசிக்கிறவர்களுக்கு ஒருவேளை இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் நாங்கள் கிராமத்தவர்கள். எல்லா வகையான மக்களை யும் நாங்கள் பார்க்கின்றோம். எல்லோருமே அதற்கு எதிராக இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரை யிலும், இது சரியான நடைமுறையாக இருக்காது. அரசாங்கமும் இந்த மசோதாவை நிறைவேற்றுவது சரியானதல்ல. ஆகவே புதிய தேர்தல்கள் நடைபெறும்வரை, இந்த மசோதா நிறைவேற்றப்படக் கூடாது என்று கூறுவேன்.

[1]**திரு. ஜாங்டே** (இந்தி பேச்சின் மொழியாக்கம்): கடந்த நான்கைந்து நாட்களாக மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் பேச்சுக் களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களுடைய பேச்சுக்களி லிருந்து, சட்டப் பிரிவுகளெல்லாம் ஆராயப்படாமல் பொதுவான விவாதம் தொடங்கிவிட்டதுபோல் எனக்குத் தோன்றுகிறது.

திருமணம் மற்றும் விவாகரத்துப் பற்றிய இந்த மசோதா விற்கு எதிராக உறுப்பினர்கள் எழுப்பிய மறுப்புக்களை நான் திரும் பவும் எண்ணிப் பார்த்து அதற்குப் பதில் கூறுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

90 சதம் மக்களிடையே நிலவும் திருமணம் மற்றும் விவாக ரத்துப் பற்றிய கட்டுப்பாடற்ற வழக்கம் அப்படியே விட்டுவைக்கப் பட வேண்டும் என்று இப்பொழுதுதான் திரு. சி.டி. பாண்டே கூறினார். விவாகரத்து வழக்கம் நடைமுறையில் இல்லாத **த்விஜா** இனத்தார் அதை ஏற்கும்படி ஏன் வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டார்.

**பண்டிட் எம்.பி. பார்கவா :** அவர் இதைக் கூறவில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** இப்படி அவர் பேசவில்லை. அவருக்கு ஏன் நியாயம் செய்கிறீர்கள்?

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3117-20.

**திரு. ஜாங்டே:** நிறைவேற்றப்படவிருக்கும் இந்த திருமண சட்டத்தொகுப்பு, திருமணம் மற்றும் இதர சடங்குகளைப் பெரிதும் நீளச் செய்யுமென்றும் கிராம மக்களுக்கு அனேக இன்னல்களை விளைவிக்குமென்றும் அவர் கூறினார்.

**பாபுராம்நாராயண் சிங்:** அவர் நமக்கு நீதி போதனை செய்ய மட்டுமே வந்தார். அவர் குறிப்பாக எந்த சட்டப் பிரிவைப் பற்றியும் பேசவில்லை.

**பாபு ராம்நாராயண் சிங் :** உங்களுக்கு அது வேண்டும்.

**திரு. ஜாங்டே:** இத்தகைய 90 சதம் மக்களிடையே நான் சமூக சேவை செய்து கொண்டிருக்கிறேன். அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய திருமணம் மற்றும் விவாகரத்து வழக்கங்கள் எனக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்கள் சார்பாகப் பேசுகிறவர்களுக்கு அவர்களைத் தெரியாது. இந்த மசோதாவின் முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படுத்துவதற்காகவே அவர்கள் பேசுகிறார்கள். எளிய முறையிலான விவாகரத்து மிகவும் நல்லது என்று கூறப்பட்டது. **சூத்திரர்**களிடையேயுள்ள விவாகரத்து வழக்கம் மிகவும் பழமையானது; பயனில்லாதது. மேலும் அது மிகத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று கூற விரும்புகிறேன். இதனால் இன்றைக்கு நமது தாய்மார்கள், சகோதரிகளின் நன்மதிப்பே இடர் நிலையில் இருக்கிறது. அவர்கள் கல்கத்தாவிலும் பம்பாயிலும் விற்கப்படுகிறார்கள். அவர்கள் பிற மதங்களைத் தழுவுகிறார்கள். இன்றைக்கு **சூத்திரர்**களிடையே ஒரு பெண், ஒரு பசுமாட்டிற்குக் கொடுக்கப்படும் மரியாதையைக் கூடப் பெறுவதில்லை. ஒரு பசு ஒரே ஒரு முறைதான் விற்கப்படுகிறது. ஆனால் பெண்கள் பலமுறை விற்கப்படுகின்றனர். இப்பொழுது அவர்களிடையே நிலவிவரும் வழக்கமானது அடக்குமுறையாளர்களின் வழக்கமாக மாறிவிட்டது. அது இனிமேல் ஏழைகளின் வழக்கமாக இல்லை. இந்த வழக்கம் ஒழிக்கப்பட்டால், வழக்குமன்றங்களுக்காக மக்கள் அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கும் என்று கூறுகிறீர்கள். அரசின் அனுமதி கிடைக்கும் வரை, ஜாதித் தலைவர்களின் முடிவு கட்டுப்படுத்தாது என்று தீர்வு கூறிய டாக்டர் அம்பேத்கரின் அறிவு நுட்பத்தை நான் பாராட்டாமலிருக்க முடியாது. இன்றைக்கு நாம் என்ன செய்கிறோம் என்றால், திருமணம் செய்துகொண்டு, **சப்தபதி** என்னும்

வழக்கத்தையும் செய்துவிட்டு, பிறகு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து அவளை (மனைவியை) விற்றுவிடுகிறோம். அவளை விற்கவும், விவாகரத்துச் செய்யவும் மக்கள் தயாராகி வருகிறார்கள். இந்த நிலையில் புனிதச் சடங்கு முறைத் திருமணம் மற்றும் ***சப்தபதி*** என்பனவற்றிற்கு என்ன பொருள்? பழைய வழக்கங்கள் சிதைந்து கெட்டுவிட்டன. நீங்கள் அவற்றை நீடிக்கச் செய்ய விரும்புகிறீர்கள். அவற்றை இந்து மதத்தின் பெயரால் தொடரச் செய்ய விரும்புகிறீர்கள். ஆனால், இந்து சமுதாயத்தின் 90 சதம் மக்கள் அவற்றிற்கு எதிராக இருக்கிறார்கள் என்று கூறுகிறேன். பெண்களுக்கு எந்த மரியாதையும் காட்டப்படுவதில்லை. அவர்கள் இன்னல்களுக்கிடையே உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை ***தேவிகளாகவும் சௌபாக்கிய லட்சுமி***களாகவும் மதிப்பாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அவையெல்லாம் தவறான கருத்துக்களாகும்.

***'த்விஜா'*** சமூகத்தினருக்கு விவாகரத்து தேவையில்லையென்றும், அவர்கள் ஏன் அதை ஏற்க வற்புறுத்தப்பட வேண்டுமென்றும் இப்பொழுதுதான் சில உறுப்பினர்கள் கூறினார்கள். பல உறுப்பினர்களின் கருத்து இதுதான். சிங்கத்தையும் பசுவையும் ஒரேயினத்தில் வைப்பதற்கு விரும்புகிறீர்கள். வேட்டையாடுகிறவனையும் அவனுடைய இரையையும் ஒன்றாக வைக்கலாமா? கிழக்கையும் மேற்கையும் இணைக்க விரும்புகிறீர்களா? அவை ஒருபோதும் இணையா. ***'த்விஜா'*** மக்களுக்கு விவாகரத்து கூடாது என்று ஒரு பக்கம் கூறுகிறீர்கள். சூத்திரர்களிடையே கட்டுப்பாடற்ற வழக்கம் நீடிக்க வேண்டும் என்று மறுபக்கம் கூறுகிறீர்கள். இந்த முறைகேடு, ஒழுக்க நியதி, மனித நியதி, ஆகியவற்றின் வீழ்ச்சிக்குக் கொண்டு செல்கிறது. இத்தகைய உச்ச அளவிலான வேறுபாடுகளைக் களையவும், குமரி முனையிலிருந்து காஷ்மீர் வரையிலுள்ள ***த்விஜாக்களையும்*** மற்றும் ***சூத்திரர்களையும்*** ஒன்றிணைக்கவுமே இந்து சட்டத் தொகுப்பு மசோதா வரையப்பட்டிருக்கிறது. இந்துக்களிடையே விழிப்புணர்வைப் பரப்ப நீங்கள் விரும்புகிறீர்கள். இந்தச் செயலுக்கு இந்து சட்டத் தொகுப்பு மசோதா மிகுந்த உதவியாக இருக்கும். இந்த மசோதாவை வரைவதில் டாக்டர் அம்பேத்கர் காட்டிய அதே ஒழுக்க நியதி உணர்வுகளை நீங்கள் காட்ட விரும்பவில்லை. ***த்விஜாக்களையும் சூத்திரர்களையும்*** ஒருசேரக் கொண்டுவர ஏதாவதொரு வழி உண்டென்றால், அது இந்து

சட்டத் தொகுப்பு மசோதா மட்டும்தான் எனக் கூற விரும்புகிறேன். யார் இதை விரும்புகிறார்களோ அவர்களுக்கு மட்டும் இது பொருந்துவதாக இருக்க வேண்டுமென்றும், இதை விரும்பாதவர்களிடம் இதை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாதென்றும், யாருமே ஒருதாரமணத்தையும் விவாகரத்தையும் ஏற்றுக் கொள்ள வற்புறுத்தப்படக் கூடாதென்றும் நீங்கள் கூறுகிறீர்கள். என்னைப் பொறுத்த வரையில் இது தொடர்பாக தவறான முறையில் பிரசாரம் செய்யப் படுவதாகக் கருதுகிறேன். அரசிடம் நிதி இல்லை. மேலும் இது குறித்து அது பிரசாரம் செய்ய விரும்பவில்லை. இந்து சட்டத் தொகுப்பின் எதிர்ப்பாளர்கள் மிக வலிமையாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதரவாளர்கள் பிரசாரம் செய்வதில்லை. தந்தைக்கும் மகளுக்குமிடையே கூட திருமணம் நிகழக்கூடியதாக இது செய்துவிடும் என்று, தனது பேச்சில் கர்பத்ரிஜி பேசியதை ஒருமுறை கேட்டிருக்கிறேன். இதேபோல வேறு தவறான பிரச் சாரங்களும் செய்யப்படுகின்றன. சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கு மிடையே திருமணம் செய்வதில் இது கொண்டுபோய் விடும், மற்றும் இந்து மதம் சுக்குநூறாகச் சிதறப் போகிறது என்று கூறப் படுகிறது. இந்து மதத்திற்குள் புகுந்துவிட்ட நோய்களை வைத்தியத்தின் மூலம் தீர்க்க வேண்டப்படுகிறது. இதுதான் இந்து சட்டத் தொகுப்பின் குறிக்கோள். இது தொடர்பாக இத்தகைய பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. விவாகரத்தை விரும்பவில்லையென்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் மற்றொருபுறம், அது எங்களுக்கு அறிமுகப்படத்தப்பட விரும்புகிறீர்கள். ***த்விஜாக்களில்,*** திருமணமான ஒரு பெண் விதவையானால், அவள் எவ்வகையிலும் மறுமணம் செய்து கொள்ள முடியாது. ஆனால் ஆண்கள் விரும்பினால் நூறு முறை திருமணம் செய்து கொள்ள முடியும். இது நியாயமில்லை. ராமர் ஒரு முறை திருமணம் செய்துகொண்டது போல்....

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ராமரை விட்டுவிடுங்கள்.

**திரு. பட் :** அவர் அனுமதிக்கப்பட வேண்டும்.

**திரு. ஜாங்டே:** சூத்திரர்களிடையே நடைமுறையில் உள்ள தீய பழக்கம் பற்றி நான் பேசிக் கொண்டிருந்தேன். நாம் அதை மாற்ற விரும்புகிறோம். ஒவ்வொருவரும் ஐந்து அல்லது ஆறு பெண்களை மணந்துகொள்ளலாம். எந்த வீட்டிலும் ***சப்தபதி*** முறைப்

படி திருமணமான பெண்களைக் காண முடியாது. அவர்கள் வலிமை யானவர்களுடன் போய் விடுகிறார்கள். பெண்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பதால் அவர்கள் அதிகப் பணம் செலவழிக் கிறார்கள். இந்தப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதி லேயே அவர்களின் சொத்தில் பாதிக்கு மேல் செலவழிக்கப்படு கிறது. ஓர் ஆணுக்குத் திருமணம் செய்யப்பட்ட பெண், மற்றொரு வனுடன் செல்வது நியாயமா? இந்து மதத்தின் இறுதியாக நீங்கள் பார்க்கிற இந்த மசோதா, இத்தகைய தீமைகளை நீக்குவதற்காகத் தான் இங்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆகவே, இந்து மதத்தின் மறுமலர்ச்சிக் காலத்தை நீங்கள் காண வேண்டுமானால், அதை நீடித்திருக்கச் செய்ய வேண்டுமானால், ***த்விஜாக்களையும், சூத்திரர்*** ***களையும்*** ஒன்றிணைக்க வேண்டுமானால், இந்த சட்ட மசோதா வின் திருமணம் மற்றும் விவாகரத்துப் பிரிவிற்கான திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி, அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் முடித்துக் கொள்கிறேன்.

[1]**திரு. டி.என். சிங்** *(இந்திப் பேச்சின் மொழியாக்கம்)* : ஐயா, நான் வேண்டுமென்றே இந்தியில் பேசுகிறேன். ஏனென்றால், மதிப் பிற்குரிய உறுப்பினர்கள் சிலர், குறிப்பாக திரு. ஓரான் இந்து சட்டத் தொகுப்பு மசோதா மீது இந்தியில் பேசி, ஏதோ ஒரு வகை யில் எங்களையும் அவ்வாறே செய்யத் தூண்டியிருக்கிறார்கள். இந்த குறிப்பிட்ட 4-வது பிரிவைப் பற்றி விவாதிக்கும்பொழுது, ஒரு விஷயம் குறிப்பாக எங்கள் மனதில் படுகிறது. ***மனு, பராசரர்*** மற்றும் ***யாக்ஞவல்கியர்*** ஆகியோரின் வழிமுறையைப் பின்பற்று வதன் மூலம், டாக்டர் அம்பேத்கர் அந்த அறிவாளிகள் அணியில் ஓர் இடம் பிடிக்க உறுதியாக முயன்றுள்ளார். ஆனால் அது அவரின் நேர்மையற்ற முயற்சி என்றெண்ணுகிறேன். ஏனென்றால் நமது மரபுகள், காலம் மற்றும் சூழ்நிலை ஆகியவற்றின் கட்டளைப் படி படிப்படியாக உருவாக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவை ஒட்டு மொத்தமான அறிவாற்றல், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படை யில் அமைந்தவை. ஆகவே, எந்த ஒரு குறிப்பிட்ட தனிமனிதரின் அறிவாற்றலும் அவற்றின்மீது எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது; நான் என்ன கூற வருகிறேன் என்றால், நாம் நமது மரபு

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, *1951 செப். 22, பக். 3126-28.*

களை அவ்வளவு எளிமையாகவும், சுலபமாகவும் மீற முடியாது. இத்தகைய மரபுகள் எல்லாவற்றையும் ஒருவேளை நாம் அறிந்திருக்கக் கூட மாட்டோம். பாரதவர்ஷம் என்கிற இந்த பரந்து விரிந்த நம் நாட்டில், இந்த இந்து சட்டத்தொகுப்பால் அவர் முழுவதுமாக அழித்தொழிக்க விரும்புகிற நமது மரபுகள் மொத்தம் எத்தனை இருக்கும் என்று கூற முடியுமாவென்று நமது சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கரைக் கேட்க விரும்புகிறேன். ஒருவேளை அவர் அறிந்திராத இந்த மரபுகளை முற்றிலுமாக அழிக்க வேண்டுமென்று அவர் கூறுவது எவ்வளவு தூரம் நியாயமாகும்? ஆகவே, பராசரர், யாக்ஞவல்கியர் அல்லது வேறு எந்த சட்ட அமைப்பாளரையும் பின்பற்ற நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால், தயவு செய்து இத்தகைய மரபுகள் மீது பொறுப்பற்ற தாக்குதல்களைத் தொடுக்காதீர்கள்.

ஐயா, ஏராளமானோரால் மிக அதிகமான மரபுகள் நமது நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பின்பற்றப்படுகின்றன என்று கூற விரும்புகிறேன். ஒரு வேளை அவை மனு, பராசரர் அல்லது வேறு ஏதாவது சட்ட அமைப்பாளர் (ஸ்மிருதிகாரர்) வழங்கியதைப் போன்ற உயர்ந்த ஒழுக்க நெறிமுறைகளால் பின்பற்றப்பட்டிருக்கலாம். நமது நாட்டில் திரு. தெப்லே ஓரான் பிறந்த மதிப்பு மிக்க மண்ணில் வழங்கும் பல விஷயங்கள், பல மரபுகள், பல சட்டங்கள் ஆகியவை நமது சட்டங்களுக்கு ஒப்பான அல்லது உரியனவாக இல்லை என்று யாராவது கூற முடியுமா? எனது கருத்தில், இந்த விவாகரத்து (இதற்கு இந்தியில் ஒரே வார்த்தை இல்லை) (ஒரு உறுப்பினர் : விவாஹ் - விச்சேடா) நீங்கள் விவாஹ்-விச்சேடா என்று கூறலாம். ஆனால் அது ஒரே வார்த்தை அல்ல. எப்படியும், இது சம்பந்தமாக அங்கு நடைமுறையிலிருக்கும் விதிகள், நமது சட்டத் தொகுப்பிலுள்ள விதிகளைவிட அல்லது இங்கிலாந்து, அமெரிக்கா அல்லது வேறெங்கும் காணப்படுகிற விதிகளைவிட மிகவும் உயர்ந்தவை. எங்கள் கருத்தில், அவற்றைச் சுருக்குவது அல்லது இந்த சட்டத் தொகுப்பு மற்றும் இந்த நடவடிக்கை உயர்ந்தது என்று வீண்பெருமை பேசி அவற்றை மாற்றீடு செய்ய முனைவது நல்லதல்ல. இந்த மரபுகளையெல்லாம் நாம் அறியாமலிருக்கும்பொழுது, இந்த மரபுகளைப்பற்றி இந்த வகையில் நாம் அணுகுவது நமக்குத் தகுதியுடையதல்ல என்று அரசுக்கும் நமது மாண்புமிகு சட்ட அமைச்சருக்கும் கூறிக் கொள்ள விழை

கிறேன். இரண்டாவதாக, இந்த மரபுகள், குறிப்பாக இந்த மசோதா விற்கும் அல்லது எந்த விதிக்கும் எதிராக இல்லாத போது, அவற்றை முழுவதுமாக ஒழிப்பது விவேகமாகாது. நம் நாட்டின் சில பகுதி களில் சில சூழ்நிலைகளில் இந்த வழக்கங்களும் மரபுகளும் அவற்றிற்குரிய இடமளிக்கப்படுகின்றன என்று கேள்விப்பட்டிருக் கிறேன். ஆனால் நம்முன் அவற்றைப் பற்றிய திருத்தங்கள் வர வில்லை.

**ஓர் உறுப்பினர் :** திருமணம் பற்றிய திருத்தங்கள் வந்துள்ளன.

**திரு. டி.என். சிங் :** ஆனால் மற்றவற்றைப் பற்றிய திருத் தங்கள் வரவில்லை. ஒருவேளை அவை இனிமேல் வரலாம். அவற்றை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயம், அவற்றை அடியோடு அழிக்கும் நோக்கோடு, விதி விலக்கற்ற முறையில் அவற்றிற்குச் சட்டங்களை வகுத்தல் சரியல்ல என்று கூறிக்கொள் கிறேன். ஆகவேதான் குறிப்பாக இந்த நடவடிக்கையை நான் எதிர்க்கிறேன். நீங்கள் இந்தப் பிரிவைப் படிப்பீர்களேயானால், இப்பொழுது புதிதாக உருவாக்கியிருக்கிற பிரிவோடு, 'நடைமுறை யில் இருக்கிற வேறு எந்தச் சட்டங்களும்' என்னும் வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதாவது வேறு எந்தச் சட்டமும் அல்லது அதனோடு முரண்படுகிற எந்தச் சட்டமும் கூட நீக்கப்படும். அது பயன்படுத்தப்படாது. மேலும் அடிப்படைக் குறிக்கோளுக்கோ அல்லது கோட்பாட்டிற்கோ எதிரான எந்த வழக்கமும் அல்லது மரபும் பயன்படுத்தப்படாது என்று நீங்கள் கூறினால் அது சரியானதாக இருக்காதா? அப்படியானால் அது புரிந்து கொள்ளத்தக்கதாக இருக்கும். ஆனால் ஒரு மரபும் பயன் படுத்தப்படாது என்று கூறுவது நல்லதல்ல. மேலும் கவனத்தோடு அதை மாற்றுவது அல்லது திருத்துவது இன்றியமையாதது என்று நம்புகிறேன். நமது மரபுகளில் பல முரணானவையாகவும், காலத் திற்கு ஒவ்வாதவையாகவும் இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். தற்போதுள்ள சில மரபுகளின்படி 60 அல்லது 70 வயதுள்ள மனிதன்கூட திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் இது இந்து சட்டத் தொகுப்பிற்கு முரணாயில்லாமலிருப்பது, வருத்தம் அளிக்கிறது. நான் கூற வருவதெல்லாம் நீங்கள் ஏதாவது ஒரு மரபை

துண்டிக்க வேண்டும் என்றால் இத்தகைய மரபுகளை துண்டி யுங்கள்.

**திரு. ஏ.சி. சுக்லா :** வரதட்சிணை பற்றி.

**திரு. டி.என். சிங் :** ஆம். விதவை மறுமணம் போன்ற இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைப் பற்றி எண்ணற்ற சட்டங்களை உருவாக்கினீர்கள். மேலும் பலவற்றைச் செய்தீர்கள். ஆனால் அவற்றால் நாம் வெற்றி பெற்றோமா? அதனால்தான் ஒவ்வொரு மரபும் முழுக்கவும் கண்டிப்புடனும் ஆராயப்பட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அவை எல்லாவற்றையும் நீக்குவதை நான் எதிர்க்கிறேன். அதனால், நமது மரபு எதுவுமே தவறில்லை என்று கூறவில்லை.

**திரு. ஏ.சி. சுக்லா:** நான் ஒரு கேள்வி கேட்கலாமா? ஒரு குறிப்பிட்ட மரபு நல்லது அல்லது கெட்டது என்று நீங்கள் எப்படி நிர்ணயிக்கிறீர்கள்? ஒரு சமூகத்தின் 75 சதவீத மக்கள் ஒரு வழக்கத்தைத் தொடர விரும்பினால், அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமா? திரு. ஜாங்டே கூறியதுபோல் வழக்கச் சட்டம் சீரமைக்கப்படுமா? நல்லதல்லாத வழக்கங்களை சீரமைக்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். ஆகவே, அது எவ்வாறு நிர்ணயிக்கப்பட வேண்டும்?

**திரு. டி.என். சிங்:** திரு. சுக்லா முன் வைத்த கேள்விகள் எளிதானவை. நீங்களோ நானோ மரபுகளைச் சீரழிக்கப் போவதில்லை. காலத்தின் கட்டளைக்கேற்ப, சமுதாயம் முழுவதினாலும், இனம் முழுவதினாலும் அவை உருவாக்கப்படுகின்றன. எல்லா மரபுகளும் மாறாமல் அப்படியே இருக்கின்றன என்று கூறவே முடியாது. எல்லாமே மாறுபாட்டுக்கு உள்ளாகியிருக்கின்றன. அனைவரும் கூடி எடுத்த விவேகமான முடிவிற்கெதிராக நாம் தனியொருவரின் முடிவை அமுலாக்கும்போது, அவற்றை முழுக்கவும் ஆராய வேண்டியது நமது கடமையாகிறது. அவ்வளவுதான் நான் கூற முடியும். வழக்கங்களை மாற்றக் கூடாதென்று நான் கூறவில்லை. நாம் நமது கூட்டு அறிவு நுட்பத்தின் மூலம் அவற்றை மாற்ற வேண்டும். இந்த முறையில் செய்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் சட்ட ரீதியாக அவற்றைச் செய்யக்கூடாது. இதுதான் நான் கூற நினைத்தது.

**திரு. ஏ.சி. சுக்லா :** எப்படி?

**திரு. டி.என். சிங்:** மோசமானவை என்று நாம் கருதுகிற பல மரபுகள், பொதுக் கருத்தின் வலிமை காரணமாக மாறி விட்டன. இன்னும் பல மரபுகள், காலத்தின் கட்டளை காரணமாக மாறிவிட்டன. ஒரு காலத்தில், ஸ்பார்ட்டாவில் ஒரு குழந்தை பிறந்தவுடன், அது வெளியே தூக்கி எறியப்படுமாம். அது ஒரு பகல், ஓர் இரவு உயிர் பிழைத்திருக்குமானால், திரும்ப எடுத்து வரப்பட்டு உயிர் வாழ வைக்கப்படுமாம். இது சரி. அந்தக் காலத்தில், அத்தகைய மரபிற்கு முக்கிய தேவை இரந்தது. சமுதாயத்தின் தேவை மாறுபடுவதால், இத்தகைய மரபுகளும் காலப்போக்கில் மாறிவிட்டன.

**டாக்டர் அம்பேத்கர்:** நீங்கள் தவறான வழக்கை இப்போது விவாதிக்கிறீர்கள்.

**திரு. டி.என். சிங்:** இது எனக்குப் புரியவில்லை. நீங்கள் வீணான முயற்சி மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிற போது, நான் தவறான நேர்வை ஆதரிப்பதாக நீங்கள் நினைக் கலாம். விஷயம் என்னவென்றால், நமது மரபுகள் பற்றி முழு அறிவு நமக்கு இல்லை. அவற்றை முழுவதும் அறிந்த பிறகுதான் நாம் எந்த மாற்றமும் செய்ய முடியும். மேலும் மிக நல்ல மரபுகள், அவை இந்தச் சட்டத் தொகுப்பினால் நீடிக்க வைக்கப்படு கின்றனவா இல்லை.....

**திரு. ஏ.சி. சுக்லா :** இவை பதிவு செய்யப்படுகிறதா?

**திரு. டி.என். சிங்:** நாம் இந்த நாட்டில்தான் வாழ்கிறோம், ஆகவே அவற்றை அறிவோம். ஆகவே, நல்ல மரபுகளைத் துண்டித் தெறிவது தவறானது. இந்தப் பிரிவு முழுவதுமாக நீக்கப்பட வேண்டும் அல்லது இது அடுத்த பிரிவோடு சரிசெய்யப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் இதைக் கவனிக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். இதே வடிவத்தில் இப்போதே இதை நிறைவேற்றுவது நல்லதல்ல.

**ரண்பீர் சிங் :** (பஞ்சாப்) (இந்தி பேச்சின் மொழியாக்கம்) பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா முன் மொழிந்திருக்கிற திருத்தம் எண். 420 மற்றும் திரு. பட்டின் திருத்தம் எண். 288 ஆகியவற்றை ஆதரிக்க இங்கு நிற்கிறேன். ஏதாவது சில வழக்கங்களும் பயன்பாடுகளும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவோடு முரண்படுமானால், அந்த வழக்கம் நீக்கப்பட்டதாகக் கருதி, முரண்பாடு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் விடப்படும். ஆனால் அது பத்தாண்டுகள் நடைமுறையில் இருக்க அனுமதிக்கப்படும். அந்தக் காலத்திற்குப் பிறகு அது முடிவடைந்ததாகக் கருதப்படும் என்று தமது திருத்தத்தில் திரு. பட் கூறியுள்ளார். பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா தமது திருத்தம் எண். 420-ல் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவோடு இயைந்து இருக்கும் வழக்கங்கள் நீக்கப்பட்டதாகக் கருதப்படும், மேலும் விடுபட்டுப் போன வழக்கங்கள், அவற்றின் செல்வாக்கு அல்லது அவற்றின் சட்ட உரிமை ஆகியவை நிலைநிறுத்தப்படும் என்று கூறுகிறார். என்னுடைய கற்றறிந்த நண்பர் திரு. பாண்டே கூறிய அனைத்துக் கருத்துக்களோடும் உடன்படுகிறேன். இந்த விஷயம் சரி. இது பெரிதும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. சமுதாயத்தில் நிலவி வரும் சமூகக் கேடுகளை நீக்கி, சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக இந்த நாட்டில் சில சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்தும் நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்படுவதுதான் இந்தச் சட்டத்தொகுப்பு மசோதாவின் உண்மையான காரணம் என்று கருதப்படுகிறது. இதனால் எத்தனை மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தின் ஆளுகைக்குள் வராமல் இதுவரை சுதந்திரமாக இருந்த இந்த நாட்டு மக்களின் மீது இந்து சட்டத்தொகுப்பு மசோதாவை பின்புறம் வழியாகப் புகுத்துவதை அதிகார துஷ்பிரயோகம் என்று கருதுகிறேன்.

**திரு. ஏ.சி.சுக்லா:** அவர்கள் விரும்பாவிட்டாலும்கூட, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**திரு. ரண்பீர் சிங்:** நான் பயன்படுத்திய ‘புகுத்துவது’ என்ற வார்த்தையின் பொருளை திரு. சுக்லா புரிந்துகொள்ளவில்லை. அல்லது அவர் அதைச் சரியாகக் கேட்கவில்லை. நான் பயன்படுத்திய ‘புகுத்துவது’ என்ற சொல் தவறு என்று அவர் கூறுவாரானால், அவரிடமிருந்து ஒன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தங்களுடைய வழக்கச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் அந்த இடத்தில் மனு அல்லது யாக்ஞவல்கியர் அல்லது வேறு யாராவது

ஒருவருடைய சட்டத்தை ஏற்றுக்கொள்வதாகவும் யாராவது ஒரு பஞ்சாபி, அவர் இந்துவோ, சீக்கியரோ, முஸ்லீமோ - குரலெழுப்பியதாக ஏதாவது ஓர் உதாரணத்தை அவர் சுட்டிக்காட்ட முடியுமா என்று கேட்கிறேன்.

**திரு. ஏ.சி. சுக்லா :** அவர்கள் கல்வியறிவு பெற்றுவிட்டால், அந்தக் கோரிக்கையை வைப்பார்கள்.

**ரண்பீர் சிங் :** நமது நாட்டின் அதிகார வர்க்கத்திற்குச் சவால் விட்ட ஆற்றல் வாய்ந்த மாமனிதர்கள் நமது பஞ்சாபில் பிறந்திருக்கிறார்கள். இதை ஒரு வேளை திரு. சுக்லா அறியாதிருக்கலாம். நான் அவர்களை ஆதரிக்கவில்லை என்றாலும் கூட, இது ஒரு வரலாற்று உண்மை. சமீப ஆண்டுகளில் இந்து பெரும்பான்மையுள்ள பிரதேசங்களில் காங்கிரஸ் வேட்பாளரை யாரும் தோற்கடிக்க முடியவில்லை. ஆனால் பஞ்சாபில், அரியானாவில் ஒரு தொகுதி இருந்தது. அது இந்து பெரும்பான்மையுள்ள பகுதி. அதில் சோட்டுராம், ஒரு காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்திருக்கிறார்.

**டாக்டர் அம்பேத்கர்:** சோட்டுராம் இந்துக்களின் சிறந்த நண்பர்.

**ரண்பீர் சிங்:** மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் அதைப்பற்றி ஏதாவது ஆவணம் வைத்திருந்தாலோ அல்லது ஏதாவது சான்று வைத்திருந்தாலோ அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவருடைய குறிக்கோளைப் பொறுத்தவரையிலும் நான் அதற்கு எதிரானவன் அல்ல. நான் ஒருதார மணத்திற்கு ஆதரவாளன். மேலும் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் விவாகரத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதனால் இரு சாராரில் ஆணோ பெண்ணோ, ஒன்றாக வாழ்வதில் சில இடையூறுகளை அனுபவிப்பார்களானால், அவ்விடையூறிலிருந்து அவர்களைக் காப்பாற்ற ஒரு வழி காணப்படும். ஆனால் அதனோடு கூட, இந்த முயற்சி ஒரு அதிகார துஷ்பிரயோகம் தவிர வேறில்லை என்று என்னால் கூறாமலிருக்க முடியவில்லை. ஏனென்றால், இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை, அதனால் ஆளப்பட விரும்புகிறவர்களுக்கு மட்டும் தான் இதைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா இந்த அவையில் முன்வைக்கப்பட்டதிலிருந்து, பல மாதங்கள், பல நாட்கள் அதற்காகச்

செலவழிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி என் கருத்துக்களைக் கூற சில நிமிடங்கள் பெறுவதற்கு நான் மிகவும் முயற்சி செய்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. திரு. சர்தார் மான் அதைப்பற்றிப் பேசியபோது, சரியான திசை வழியில் பேசுவதற்குப் பதிலாக, துரதிருஷ்டவசமாக, சீக்கிய மதத்தின் சிக்கலுக்குள் சிக்கிக் கொண்டார். ஒருவேளை இப்படிப் பேசினால் தனது கருத்துக்களுக்கு அதிக வலிமை கிடைக்கும் என்று நினைத்திருக்கலாம்; அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கலாம். எப்படியிருந்தாலும், இந்த விஷயம் சீக்கிய மதத்தை மட்டும் பொறுத்ததல்ல. இது பஞ்சாப் முழுவதும் உள்ள வழக்கச் சட்டத்தைக் குறித்தது. இந்த நாட்டின், இந்த சமுதாயத்தின் வாழ்வு முறை வழக்கங்களைப் பொறுத்தவரையிலும், பிராமணீய விதிகளும் ஒழுங்குமுறைகளும் மிகக் கடுமையாகச் செயல்படுத்தப்பட்ட அந்த நேரத்தில் கூட, - அதாவது ஒரு குறிப்பிட்ட திசையில் திங்கட்கிழமையோ, செவ்வாய்க்கிழமையோ அல்லது சனிக்கிழமையோ எவரும் போகக்கூடாது என்பது போன்ற வழக்கங்கள் - மாண்புமிகு சர்தார் பல்தேவ் சிங்கும் நானும் சார்ந்திருக்கிற பஞ்சாபில் உள்ள வீரமிக்க ஜாட் இனத்தவர், பிராமணீய விதிகளுக்குப் பணியவில்லை. இப்பொழுதும் கூட பணியவில்லை என்பதை டாக்டர் அம்பேத்கரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உண்மையிலேயே நமது சமூகத்தில் ஒரு தாரமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட இரண்டு ஏற்பாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க எதிர்ப்பு ஏதும் இல்லை. என்னைப் பொறுத்தவரை நான் அவற்றிற்கு எதிரல்ல. ஆனால் நீங்கள் கடைப்பிடிக்கிற வழிமுறைகளுக்கு நான் எதிரானவன். இது கொல்லைப்புற வழியாகக் கொண்டுவரப்பட்ட பாணி அல்லது தகுதியற்ற முறை. இது சரியல்ல. இந்து அல்லாதவன் என்று என்னைக் கருதிக்கொள்வதால் இதைக் கூறவில்லை. நாங்கள் எப்போதுமே இந்து சட்டத் தொகுப்பினால் ஆளப்படவில்லை என்பதை உணருகிறேன். எங்கள் மீது அது எப்போதுமே செயல்படுத்தப்படவில்லை. அறிவு பூர்வமாக அடிமையாக்க முடியாதவர்களை, தகுதியற்ற திட்டத்தின் மூலம் ஆள விரும்பும் உங்கள் உள்ளெண்ணத்தை நான் சந்தேகிக்கிறேன். நடைமுறையில் உள்ள வழக்கங்களைப் பொருட்படுத்தாமல், திருமணம் மற்றும் விவாகரத்துப் பற்றி நீங்கள் சட்டமாக்கவிருக்கின்ற விதிகள் மற்றும் ஒழுங்குமுறை குறித்து நான் முற்றிலும் வேறுபடுகிறேன். இது குறித்து ஒன்று கூற விரும்புகிறேன்: சமூக சீர்திருத்தவாதிகள் பலர், விதவைகளின் நிலைமை குறித்து இந்து சமுதாயத்தில் மிகப்பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் நினைவறியாக்

காலத்திலிருந்தே நமது சமுதாயத்திற்கு இளம் விதவை என்பது அறியப்படாத ஒன்றாகவே இருந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது சமுதாயத்திற்கு இளம் விதவையின் பெயர் தெரியாது. ஏனென்றால், நம்முடைய சமுதாய வழக்கம் என்ன வென்றால், ஒரு பெண்ணின் கணவன் இறந்தால், இறந்து ஓராண்டு கழித்து விதவையின் சகோதரர்கள், பெற்றோர் மற்றும் அவளுடைய மறைந்த கணவனின் உறவினர்கள் ஆகியோர் ஒன்றாகச் சந்திக் கிறார்கள். நமது இந்து சமுதாயத்தில் எல்லா இடங்களிலும் பொதுவாகக் காணப்படுகின்ற தயக்க மனப்பான்மை இருந்த போதிலும், தனக்கு நேர்ந்திட்ட அவலத்தைத் தானே தாங்கிக் கொள் வதாகக் கூறும் அவளுடைய சம்பிரதாய வேண்டுகோளுக்கு எதிராக, அவள் மறுத்த போதிலும், அது முடியாதென்று அவளிடம் கூறப் படுகிறது. அவளுடைய குறிக்கோள் நிலை நல்லது என்று கூறப் படலாம். ஆனால், அத்தகைய உயர்ந்த குறிக்கோளை எத்தனை பேர் பின்பற்ற முடியும்? நமது சமுதாயத்தில் நீங்கள் நிலைநாட்ட விருக்கிற இத்தகைய உயர்வான குறிக்கோள், நமது சமுதாயத்தில் தீமை விளைவிக்காதா என்று நமது சமுதாய மக்கள் சந்தேகிக் கிறார்கள். ஆகவே, மறுமணம் என்னும் எளிய வழக்கத்தை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். அதைச் செல்லாததாக்கி விடக் கூடாது. ஆகவே திரு. பட் முன்மொழிந்தவற்றை நான் ஆதரிக்கிறேன். இப்பொழுது அதற்கான காரணங்களைக் கூறுகிறேன்.

ஒரு புறம், உங்கள் விதிகளும் ஒழுங்கு முறைகளும் நமது பெண்களின் இடர்ப்பாடுகளைக் குறைக்க விரும்புகின்றன. அவை அவ்விடர்ப்பாடுகளைப் பெருமளவு குறைத்திருக்கின்றன. மறுபுறம், அவர்களின் இடர்ப்பாடுகள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. அவர்கள் எங்கு வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ள லாம் என்று நீங்கள் கொடுத்திருக்கும் ஒரு வகையான உரிமையே அதற்குக் காரணம். சாதாரண நிலையில் வழக்கம் மீறிய இடர்ப் பாடுகள் எழவில்லை என்றால், அவர்கள் மறுமணம் செய்து கொள்ள லாம் என்ற வழக்கம் எளிதாக உருவாகிவிடும். ஆனால் நீங்கள் ஏன் இந்தத் தடையை விதிக்கிறீர்கள்? பொதுவாக மக்கள் தாங்கள் விருப்பப்பட்டு இருதார மணம் புரிந்து கொள்வதில்லை. ஆனால் அவர்கள் சூழ்நிலை காரணமாக நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சகோதரன் இறந்தால், அவனுடைய சகோதரன் தனது விருப்பங் களுக்கு எதிராக, இருதார மண வழக்கத்திற்கு இணங்க வேண்டி யிருக்கிறது.

**திருமதி தீக்ஷித்:** நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன். நான்கு அல்லது ஆறு குழந்தைகளையுடைய பெண் இருக்கிறாள். அவருடைய கணவனுடைய சகோதரனின் மனைவி இருக்கிறாள். அவளுக்கும் நான்கு அல்லது ஆறு குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் ஒன்றாக வாழுமாறு செய்யப்பட்டால், சக மனைவிகள் என்ற உணர்வினால் அவர்களிடையே இடர்ப்பாடுகள் ஏற்படாதா? விருப்பத்திற்கு மாறாக ஒரு பெண் மற்றொருவனை மணக்க நிர்ப்பந்திப்பது ஒழுக்க நியதிப்படி அநீதியாகாதா?

**சர்தார் ஹுக்கம் சிங் (பஞ்சாப்):** கடவுளின் விருப்பம்.

**ரண்பீர் சிங் :** நீங்கள் மறுமணத்தைக் குறிப்பதாகக் கூறினால் நான் இல்லை என்பேன். சமுதாயத்தினால் முறைப்படி அனுமதிக்கப் பட்டால்தான் மறுமணம் நடைபெறும். ஆனால் தங்கள் விருப்பங் களை வெளியிட முடியாத ஏராளமான பெண்கள் இருக்கிறார்கள். தனது மனைவி இறந்த பதின்மூன்று பதினான்கு நாட்கள் கழித்து, ஒரு மனிதன் தனது விருப்பத்தை வெளியிடுவான். ஆனால் பெண்கள் அவ்வாறு செய்ய முடியாது. நமது சமுதாயத்தின் தனித்தன்மை கொண்ட அமைப்பினால் அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற முடியாது. அதை மாற்ற போதிய அவகாசம் தேவைப்படுகிறது. இரண்டு மூன்று குழந்தைகளையும் மனைவியையும் உடைய சகோதரன் இருக்கிறான். அவன் சாகப் போகிறான். அவர்கள் ஒன்றாக வாழ வைக்கப்படுகிறார்கள். அது இடர்ப்பாடுகளை உண்டாக்கி குழப்பம் எழும். அதைப்பற்றி அவர்கள் அறிந்து கொள்ள விரும்பி னால் அந்தப் பிரச்சினைக்கும் பதில் கூறுகிறேன். யாரும் விரும்பி இருதார மணத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்பதை ஒப்புக் கொள் கிறேன். எங்கள் சமுதாயத்தில் உள்ள எல்லோரும் ஒப்புக் கொள் வார்கள். பெண்கூட ஆதரவற்றிருக்கிறாள்; ஏனென்றால் அவள் அவளுடைய குழந்தைகளை நேசிக்கிறாள். அவள் இரண்டு மூன்று குழந்தைகளையும் அனாதையாக விட்டுவிட முடியாது. பிறகு அவர்கள் எங்கு போய்த் தங்குவார்கள்? அவள் மறுமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொல்ல முடியாது. அக்குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்களும் குழந்தைகளை விட்டுவிட முடியாது. பிறகு அவள் குழந்தைகளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டுமா என்ற கேள்வி எழும். ஆனால் இதுதான் எங்கள் சமூகத்தில் உள்ள வழக்கம். நீங்கள் என்ன சட்டம் வேண்டுமானாலும் இயற்றிக்

கொள்ளலாம். ஆனால் நீங்கள் இதை மாற்ற முடியாது. இது வேடிக்கையான செய்தி அல்ல. அவர்கள், அவர்களாகவே மாற வேண்டும். ஆனால் நீங்கள் இன்று மாற்ற முடியாது.

எங்கள் சமூகத்தில் மற்றொரு வழக்கம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட குடும்பத்திலுள்ள மிகவும் முட்டாள்தனமான மனிதன் கூட தன்னுடைய குழந்தைகள் அடுத்த குடும்பத்திற்குப் போவதை அனுமதிக்க மாட்டான் என்பது அவர்கள் நம்பிக்கை. அப்படி ஒருவன் அனுப்ப முயன்றால், எங்கள் சமுதாயத்தில் அவனுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படுகிறது. எங்கள் சமூகம் பிற்போக்காக இருக்கிறது, அதை முன்னேற்றுவது கடினம் என்று நீங்கள் கூறினாலும், எங்களிடையே இத்தகைய நடவடிக்கைகளுக்கு முடிவு கொலைதான். எங்கள் சமுதாயத்தில் கொலைகளும் படுகொலைகளும் அதிகமாக வேண்டுமென்று நினைத்தால், - ஏற்கெனவே கொலைகளுக்கும் படுகொலைகளுக்கும் பஞ்சாப் இழிபெயர் பெற்றது - அதனால் இத்தகைய கொலைகளுக்காக எத்தனையோ பேர் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்கள், - இந்த எண்ணிக்கையை அதிகரிக்க நினைத்தால், எந்த விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் உடனடியாக அவர்கள் மீது தாராளமாகத் திணிக்கலாம். கொலைகள், படுகொலைகள் அதனால் விளையும் மரணதண்டனைகளின் எண்ணிக்கையைக் குறைக்க விரும்பினால், திரு. பட் அல்லது திரு. பர்கவாவின் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

ஆக ஒரு பெண், அவளது குழந்தைகளை நேசித்தால், அவளது சமுதாயத்தில் இதற்கு முன் எப்போதும் நடந்திராதபடி, அவளின் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் விதவையாகவே வாழ நிர்ப்பந்திக்கப்படுவாள் என்பதை நான் கூறிக் கொண்டிருந்தேன். அல்லது, அவள் தனது குழந்தைகளை நேசிக்கவில்லையென்றால், அவள் திருட்டுத் தனமாக இரவு நேரத்தில் அவர்களை வேறு ஏதாவது இடத்திற்கு அழைத்துச் செல்வாள். என்னை யார் என்ன செய்துவிட முடியும் என்று கூறுகிற துணிவுள்ள ஒருவனை அவள் சந்தித்து விட்டால், அதனுடைய விளைவு, ஒன்று அவள் மீண்டும் விதவையாகி விடுவாள் அல்லது அவளது கணவன் தூக்கிலிடப் படுவான். ஆக எந்த வகையிலும் அவள் பாக்கியஞ் செய்த மனைவியாக இருக்க முடியாது. இது ஒரு பெரிய திகிலடையச் செய்யும் விவகாரமாக இருந்தாலும், இதுதான் உண்மை.

பிறகு, *சகோத்ர* திருமண விஷயம் ஒன்றிருக்கிறது. நகரங்களில் எவ்வளவு ஆண்களும் பெண்களும் வசிக்கிறார்கள்? இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய என்னுடைய கருத்துக்களை எடுத்து முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நகர்ப் புறத்திலிருந்து வருகிறவர்கள். நகரங்களில் பிறந்து வளர்ந்தவர்கள்; தங்களது எண்ணங்களை, நகரத்துச் சட்டங்கள், ஒழுங்கு முறைகள், பாணிகள் மற்றும் வழக்கங்களோடு கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். நகரத்து வாழ்க்கைக்கும் கிராமத்து வாழ்க்கைக்கும் மிகப் பெரும் வேறுபாடு இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அதைப்பற்றி அவர்களுக்கு அனுபவம் இல்லை. ஓர் எளிய உதாரணம் கூறுகிறேன். உதாரணமாக நகரத்துப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுங்கள். அங்குள்ள பெண் ஒருத்தி, திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லையென்றால், யாரும் மறுப்புக் கூற மாட்டார்கள். ஆனால் கிராமத்தில் ஒரு பெண் பதினாறு வயதை அடைந்து விட்டால், அவளுடைய பெற்றோர்க்குத் துன்பம் துவங்கி விடுகிறது. பெண்ணும் துன்புறுத்தப்படுகிறாள். ஒவ்வொருவரும் அவளுடைய தந்தையிடம் வந்து, 'உங்கள் பெண்ணின் திருமணத்திற்கு ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது?' என்று கேட்கிறார்கள். அந்தப் பெண், திருமணத்தைக் கடுமையாக எதிர்க்கலாம். ஆனால் திருமணத்தை அவள் தவிர்க்க முடியாது. அவள் அதற்கு வற்புறுத்தப் படுகிறாள். இந்த நடைமுறைக் கோட்பாடு நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை. இந்த ஓர் உதாரணத்தின் மூலம் நகரப் புறத்து வாழ்க்கை முறைக்கும் கிராமப் புறத்து வாழ்க்கை முறைக்கும் உள்ள வேறுபாட்டைக் காணலாம். இவை இரண்டிற்குமிடையே எவ்வளவு வித்தியாசம் உள்ளதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். இருந்தும், இருவரக்கும் பொதுவான சட்டத்தை இயற்ற நீங்கள் விரும்புகிறீர்கள். எனது நண்பர் திரு. ஜாங்டே மிகவும் உணர்ச்சியோடு பேசினார். அவர் மற்றவர்களுக்காகப் பேசினார். ஆனால் திரு. ஜாங்டே நகரப் புறத்துக்காரராகி விட்டாரா அல்லது அவர்கள் பக்கம் சாய்ந்து விட்டாரா எனச் சந்தேகமாக இருக்கிறது. அவர் நகர்ப்புறத்து வாழ்க்கை முறையைப் பாராட்டிப் பேசுகிறார். அவர் தன் சொந்தக் கதையைக் கூற விரும்புகிறார், அவரின் சொந்த இடத்து மனிதர்களைப்பற்றி அல்ல. ஆக, இரண்டு வாழ்க்கை முறைகளுக்கு மிடையே மிக அதிகமான வேறுபாடு இருக்கும்பொழுது, அவர்களின் சமூக நிலைமைகளுக்கிடையே மிகுந்த வேறுபாடு இருக்கும்

பொழுது, அவர்களின் வழக்கங்கள் மற்றும் பயன்பாடுகளைப் பற்றிக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் எல்லோருக்கும் பொருந்தும் படியான ஒரு சட்டத்தை நிறைவேற்ற நினைப்பது அவர்களுக்கு இழைக்கும் மிகப் பெரிய அநீதி என்று கூற விழைகிறேன்.

இது தொடர்பாக மற்றொரு விஷயத்தையும் இங்கு கூற விரும்புகிறேன். அது *சகோத்ர* திருமணம் பற்றியது. பஞ்சாபில் எங்களிடையே நிலவும் வழக்கம் போலல்லாமல், இங்கு பெரும் பாலான பெண்கள் வழக்கமாக உள்ளூரிலேயே திருமணம் செய்து கொள்வதைக் காண்கிறோம். டில்லி உதாரணத்தையே எடுத்துக் கொண்டால், நகரத்தின் ஒரு புறத்திலுள்ள பெண்கள், நகரத்தின் மறுபுறத்திலுள்ளவருக்குத் திருமணம் செய்யப்படுவதைக் காணலாம். பத்தாயிரம் பேர் மக்கள் தொகையுள்ள சிற்றூர்களிலும் கூட இதே போல் அவர்கள் திருமணம் செய்விக்கப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் எங்களிடையே பரவலாகவுள்ள திருமண வழக்கம் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருக்கவில்லை. எங்களிடையே உள்ள வழக்கத்தைப் பொறுத்தவரையில், நான் என் மகனுக்கு, பத்து மைல் சுற்றளவில் அமைந்துள்ள 24 கிராமங்களில் பரவியுள்ள எனது சொந்த உட்சாதியில் திருமணம் செய்ய முடியாது. இந்த 24 கிராமங்களில் மட்டும்தான் என்பதல்ல, அவனுடைய தாயி னுடைய உட்சாதியைச் சேர்ந்த குடும்பங்கள் குடியேறியுள்ள சுமார் 30 முதல் 40 கிராமங்களிலும் திருமணம் செய்ய முடியாது. விஷயம் அதோடு முடிந்துவிடவில்லை. என்னுடைய தாயின் உட்சாதியைச் சேர்ந்தவர்கள் வாழுகின்ற 30 முதல் 40 கிராமங் களிலுள்ள பெண்ணை என் மகனுக்குத் திருமணம் செய்ய முடியாது. கூறப்போனால், அண்டையிலுள்ள சுமார் நூறு கிராமங்களிலிருந்து என் மகனுக்குப் பெண் எடுக்க முடியாது.

**திரு. ஏ.சி. சுக்லா:** இது ஆரோக்கியமான நடைமுறையா? இல்லையா?

**ரண்பீர் சிங்:** இதுகுறித்து கருத்து தெரிவிக்க எனக்குத் தகுதியிருப்பதாக நான் எப்போதும் உரிமை கொண்டாடியதில்லை. மாண்புமிகு டாக்டர் செய்ததைப் போல அவருக்குத் தொந்தரவு கொடுப்பது எனது உள்நோக்கமல்ல. அவரைப்போல் அல்லாமல், இங்கிதமற்ற எதையும் நான் கூறத் துணிவதில்லை. மாமனிதரான மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரின் முன்னால் நான் ஓர் எளிய உறுப்பினர்.

**திரு. ராதேலால் வியாஸ்** (மத்திய பாரத்): ஆனால் நீங்களும் ஜாட்தானே.

**திரு. ரண்பீர் சிங் :** சந்தேகமில்லாமல். ஆனால் சர்தார் பூபிந்தர் சிங் மான் போல நான் சீக்கிய ஜாட் அல்ல. நான் எந்தவிதக் கருத்து வேறுபாடுக்குள்ளும் நுழைய விரும்பவில்லை. நமது வழக்கம் நல்லதா அல்லது அவர்களின் வழக்கமா? அல்லது இந்த நடவடிக்கையினால் ஏதாவது பயன் உண்டா? இல்லையா? என்ற ஆய்வில் யாருடைய உள்ளுணர்வையும் புண்படுத்த விரும்பவில்லை. நூறு முதல் நூற்றியிருபது கிராமங்களில் என் மகனுக்குத் திருமணம் செய்ய முடியாமல் தடுக்கின்ற எங்கள் வழக்கங்கள் பற்றி எளிமையாக உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். இத்தகைய சூழ்நிலையில், சிறிய ஊர்களிலும் பெரிய நகரங்களிலும் வசிக்கும் பெண்கள், இத்தகைய செயல் முறைகளை எதிர்நோக்கும்போது எங்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் இடையூறுகளின் அளவை உள்ளவாறு மதிப்பிட முடியுமா? ஏனென்றால் அவர்களுக்குத் திருமணம் என்பது ஒரு மொகல்லாவிலிருந்து இன்னொரு மொகல்லாவுக்கு வழக்கமாக நடைபெறும் ஒரு சாதாரண விஷயமல்ல.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, இந்து சட்டத்திற்கும் உங்கள் சட்டத்திற்கும் வேறுபாடு இல்லை, அப்படித்தானே?

**ரண்பீர் சிங்:** சட்டங்களில் வேறுபாடு எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால் முன்னேற்றத்தில் வேறுபாடு உண்டு. எங்களுடைய வழக்கப்படி, சில குறிப்பிட்ட கோத்திரங்களுக்கிடையே நாங்கள் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. அந்த வழக்கத்தை மீறிச் செய்யும் துணிவு யாருக்கும் கிடையாது. மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள ஒருவர் கூட - எதிர்காலத்தில் அவர் முற்போக்காளர் என்று அழைக்கப்படலாம் என்றாலும் இன்றைய சமூக அமைப்பில் அத்தகைய மனிதர் இன்றுள்ளவாறுதான் நடத்தப்படுவார் - அத்தகைய ஒரு நிலையை எடுக்க முடியாது. கூறப்போனால், உண்மையில் யாருக்கும் அவ்வளவு துணிவு கிடையாது. ஆனால், இன்றைக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால், அத்தகைய மனிதர் அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தின் மூலம் எளிதாக நீங்கள் உரிமை தருகிறீர்கள்.

**திரு. ஏ.சி. சுக்லா:** மரியாதைக்குரிய உறுப்பினர் என்னதான் விரும்புகிறார்?

**ரண்பீர் சிங்:** எனக்கு என்ன வேண்டும் என்பதை நான் கூறப்போவதில்லை. அதற்கு மாறாக, நடைமுறையில் உள்ள பல்வேறு வழக்கங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க மட்டும் விரும்புகிறேன். அதனால்தான் திரு. பட்டின் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி வாதாடிக் கொண்டிருக்கிறேன். அடுத்து வருகின்ற பத்தாண்டுகளில் ஏற்படும் முன்னேற்றம் உன்னிப்பாகக் கவனிக்கப் பட வேண்டும். சரியான வடிவில், உண்மை தன்னை வெளிப் படுத்திக் கொள்ளும். நமது செயல் வடிவம் சரியாக இருக்க வேண்டு மானால், நீங்கள் கண்டிப்பாக எங்கள் பக்கத்திற்கு வாருங்கள். இல்லாவிட்டால், நாம் செய்ததையே செய்து கொண்டிருப்போம்.

ஆக, இன்றைய நாளில்கூட *சகோத்ர* திருமணங்கள் நடை பெறுவதில்லை என்னும் செய்தியைக் கூறிக்கொண்டிருந்தேன். ஆனால் விதிகளும் ஒழுங்குமுறைகளும் அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஒருவன் இந்தச் சட்டத்தின் துணை கொண்டு, அதே கிராமத்தில் அல்லது அதே கோத்திரத்தில் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறானென்று கொண்டால், அதனால் நிகழக்கூடிய விளைவுகள் என்னவாக இருக்கும்? நான் முன்னர் விவரித்தபடி சாவைதான் அவர் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். எந்த வகையிலும் நான் செய்திகளை மிகைபடக்கூற விரும்பவில்லை. இருந்த போதிலும், இன்றைய எமது சமூகத்தில் கவலைதரத்தக்க பின்னடைவாக நான் கருதுகின்ற வற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய குடும்பத் தில் உள்ள யாராவது ஒருவர் இதே முறையில் திருமணம் செய்து கொண்டால், இந்த விவகாரத்தில் என்னுடைய கருத்தை அறிய யாரும் அக்கறை கொள்ள மாட்டார்கள். என்னுடைய சகோதரன் இதே மாதிரியான தவறைச் செய்தால், நான் அவனுடைய கருத்துக் களை ஆதரிக்கிறேனா, இல்லையா என்று கூடப் பாராமல், நான் அவனுடைய சகோதரனாக இருக்கிற ஒரே காரணத்துக்காக நானும் கொலை செய்யப்படக்கூடும். என்னுடைய கருத்தை விளக்கிச் சொன்னாலும் யாரும் அதைக் கேட்கப் போவதில்லை. இதுதான் எங்கள் சமூகத்தின் அவலநிலை. ஒரு சகோதரனுடைய செயலை மற்றவர்களின் செயல்களிலிருந்து அவர்கள் தீர்மானிப்பது எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது. இங்கு, உங்களுடைய சமூகத்தில், மூன்று சகோதரர்கள் மூன்று விதமான கருத்துக்களை உடையவர்களாக இருக்கலாம் - ஒருவர் கம்யூனிஸ்ட்டாக, இரண்டாமவர் சோசலிஸ்ட் டாக, மூன்றாமவர் காங்கிரஸ்காரராக இருக்கலாம். தெளிவாகச்

சொல்வதானால், இங்குள்ள ஒருவர் பாரதீய ஜனசங்கத்தின் உறுப்பினராக இருந்தால், அவருடைய சகோதரர் வேறு எந்தக் கட்சியிலும் சேர உரிமை உண்டு. ஆனால் எங்கள் பக்கத்தில் விஷயம் நேர்மாறானது. ஒரு குறிப்பிட்ட குடும்பத்திலுள்ள ஏதாவது ஒரு உறுப்பினர் காங்கிரசில் சேர்ந்தால், அக்குடும்பத்திலுள்ள அனைவரும், அவர்கள் அப்படி இருக்கிறார்களோ இல்லையோ, தானாகவே காங்கிரஸ்காரர்களாகி விட்டதாகக் கருதப்படுவார்கள். இதுதான் எங்கள் சமுதாயத்தின் நிலை. இப்பொழுது, இதை முற்போக்கு என்றோ பிற்போக்கு என்றோ நீங்கள் விரும்பியபடி அழைக்கலாம். இத்தகைய சூழ்நிலையில், எங்கள் சமுதாயத்தில் ஒருதார மணத்திற்கு நான் ஆதரவளிக்கிறேன். நமது நாடு போன்ற ஒரு நாட்டில், குறிப்பாக நான் சார்ந்திருக்கிற ஜாட் இனத்தில், ஒருதார முறை மிகக் குறிப்பாக இன்றியமையாதது. ஏனென்றால், பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை அதிகம். தன் கூட இருப்பவர்களில் யாராவது ஒருவரின் பங்கை ஆக்கிரமிப்பதன் மூலமாகவே ஒருவர் இரண்டு மனைவிகளைக் கொள்ள முடியும். ஒருதார மண நடைமுறையினால் ஓரளவு அதிக எண்ணிக்கையுள்ள ஆண்கள் மனைவியரைப் பெற முடியும். இல்லாவிட்டால் முடியாது. நமது நாட்டில் ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள பிரதேசங்களில் இது சாத்தியமாகும்.

**சர்தார் பி.எஸ். மான்** (பஞ்சாப்): மெட்ராஸில் அவர்கள் பெறுகிறார்களா?

**திரு. ரண்பீர் சிங்** : மெட்றாஸ் வரையிலும் செல்வதற்கு எங்கள் பகுதியிலுள்ள இந்து ஜாட்களுக்குப் பரந்த மனப்பான்மை இல்லை என்பதுதான் சிரமம். சீக்கிய ஜாட் போகலாம். ஒருதார மணம் என்பது சரியான திசைவழியிலான நடவடிக்கை என்று நான் கருதுகிறேன். ஆனால் எங்கள் சமுதாயம் இன்னும் முன்னேறவில்லை என்பதுதான் இடையூறு. இன்னும் சொல்லப்போனால் *சகோத்ர* திருமணத்தை ஏற்றுக் கொள்ளுமளவிற்குச் சீரழிந்திருக்கிறது. இதைப் பத்தாண்டுகள் தள்ளிப் போடுங்கள். அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையைப் புதிதாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம். அதற்குள்ளாக இந்தச் சமுதாயம் முன்னேற்றத்தின் உச்சிக்குச் செல்வதில் வெற்றிபெற்றால், இத்தகைய நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும். அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அல்லது அதை நிலுவையில் வைத்துக் கொள்ளலாம். எவ்வகையிலும்

திணிக்கப்படுகின்ற இருதாரமண நடைமுறையை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. இருந்தபோதிலும், அது அவ்வளவாகப் பழக்கத்தில் இல்லாதபோதும், எங்கள் சமுதாயத்தில் அந்த நடைமுறை தொடர்கிறது. பத்தாண்டு கால அவகாசம் தாருங்கள். அந்தக் கால கட்டத்தில், இத்தகைய நடைமுறையை இல்லாதொழிக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம்.

முடிவாக, மீண்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் அம்பேத்கரைக் கேட்டுக் கொள்வேன். இந்த நடவடிக்கையை நான் முழு மனதோடு ஆதரிப்பவனாக இருந்தாலும், திரு. பட்டின் திருத்தத்தையோ அல்லது திரு. பர்கவாவினால் முன்மொழியப்பட்ட (420-வது எண்) திருத்தத்தையோ ஏற்றுக்கொள்ளுமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சிவன் பிள்ளை** (திருவாங்கூர் - கொச்சி): இந்தத் திருத்தத்தை இப்போது முன்வைக்கலாம்.

**கேப்டன் ஏ.பி. சிங் (விந்திய பிரதேஷ்)**: இல்லை ஐயா. குறைந்தது திருத்தங்களை முன்மொழிந்தவர்களாவது பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**சர்தார் பி.எஸ். மான்** : ஆம் ஐயா. இது மிகவும் முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நான் திரு. ஜுன்ஜுன் வாலாவை அழைக்கிறேன். அவருக்குப் பிறகு திரு. பட், இவர்கள் இருவரும் திருத்தங்களை முன்வைத்திருக்கிறார்கள்.

**திரு. சியாம்நந்தன் சகாயா** : ஐயா, நானும் கூடத் திருத்தங்களை முன்வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இந்த வரிசையில் அவர்களை அழைக்கிறேன். அதற்குப் பிறகு வேறு பெயர்கள் இருந்தால் பார்க்கலாம்.

*நண்பகல் 12 மணி*

[1]**திரு. ஜுன்ஜுன் வாலா** (பீகார்) (இந்தியிலிருந்து மொழியாக்கம்): என்னுடைய மூன்று திருத்தங்களும் அரசியல் சாசனத்தின்

1. நா.வி., தொகுதி XV, பாகம் II, 1951 செப். 22, பக். 3168-88.

விதிகளோடு இயைந்தவை. இந்தச் சட்டத் தொகுப்பு, எந்த மதத்திற்கெதிராகவும் எதையாவது கொண்டிருந்தால், இந்த மசோதாவின் எந்தப் பிரிவும் நடைமுறையிலுள்ள சட்டப் பிரிவுகளின் மீது மேலாதிக்கம் செலுத்த முடியாது என்று எனது முதல் திருத்தம் கூறுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பு, ஒழுக்கமுறைக்கெதிராக எதையாவது கொண்டிருந்தால், இந்த மசோதாவானது நடைமுறையில் உள்ள சட்டப் பிரிவுகள் அல்லது வழக்கம் அல்லது பயன்பாட்டின் மீது மேலாதிக்கம் செலுத்த முடியாது என்று இரண்டாவது திருத்தம் கூறுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பு, எந்தப் பிரிவையும் சேர்ந்த மக்களின் கலாசாரத்திற்கெதிராக எதையாவது கொண்டிருந்தால், இந்த மசோதா நடைமுறையிலுள்ள சட்டத்தின் மீதுமே மேலாதிக்கம் செலுத்த முடியாது.

ஐயா, நான் மூன்றாவது திருத்தத்தை முன்மொழிந்த போது, ‘கலாசாரம்’ என்ற வார்த்தையின் படிவமும் வரைமுறையும் என்ன என்று நீங்கள் கேட்டீர்கள். இது தொடர்பாக, ஒவ்வொரு பிரதேச மக்களுக்கும் தங்களுக்கேற்ற கலாசாரத்தைக் கொள்ளவும், அதைப் பாதுகாக்கவும் அதிகாரமளிக்கும் அரசியல் சாசனத்தின் விதி 129-ஐ நேற்று நான் தவறாக மேற்கோள் காட்டிவிட்டேன். உண்மையில் அது விதி 129 அல்ல. அது 29 ஆகும். அது கூறுவதாவது :-

> ‘‘29(1) குறிப்பிட்ட மொழி, எழுத்து வடிவம் அல்லது கலாசாரத்தைத் தங்களுக்கென்று சொந்தமாகக் கொண்டிருக்கிற, இந்தியாவின் எல்லைக்குள்ளோ அல்லது எந்தப் பகுதியிலுமோ வாழும் எந்தப் பிரிவைச் சேர்ந்த மக்களும், அவற்றைப் பாதுகாக்கின்ற உரிமையை உடையவர்களாகிறார்கள்.’’

அதனால்தான் கலாசாரம் என்ற வார்த்தையை உபயோகித்தேன். அரசியல் சாசனத்தின்படி, எந்த ஒரு சமுதாயம் அல்லது பகுதி மக்கள் தங்கள் மதத்தை அல்லது கலாசாரத்தைக் காக்கிற உரிமையை இழக்கச் செய்யும் எதையும், இந்து சட்டத் தொகுப்பு கொண்டிருக்க முடியாது. நான் எனது தீர்மானத்தைப் பற்றிப் பிறகு பேசுகிறேன். ஒருவர் தன்னுடைய சொந்தத் திருத்தத்தைப் பற்றி பேசுகிறபோது, வேறு எந்தத் திருத்தம் அல்லது பிரிவைப் பற்றியும் பேசுகிற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால், அதன் பிறகு அவருக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு

பட்ட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என்று நீங்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை இங்கு நினைவுபடுத்துகிறேன். அதனால்தான், இப்போது இந்தப் பிரிவை முதலிலும், திருத்தங்களைப் பிறகும் எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறேன். அது எனக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

'திருமணம் மற்றும் விவாகரத்து மசோதா' என்ற வேறொரு தலைப்பில் இங்கு நிறைவேற்றப்படுவதற்காக விவாதிக்கப்படும் இந்து சட்டத்தொகுப்பு மசோதா, இந்த அவை முன்னால் வைக்கப் படுகிறபோது, அது இரண்டு முக்கியச் செய்திகளைக் கொண் டிருப்பதாகக் கூறப்பட்டது. இந்து சட்டத் தொகுப்பு மசோதா அல்லது திருமணம் மற்றும் விவாகரத்து திருத்த மசோதா, அது உள்ளடக்கி இருக்கும் இரண்டு முக்கிய குறிக்கோள்களுக்காகவே நிறைவேற்றப்பட வேண்டுமென்று இது தொடர்பாக விவாதிக்கப் பட்டது. முதலாவதாக, இந்த நடவடிக்கை முற்போக்கானது எனக் கூறப்பட்டது. இரண்டாவதாக, இதுவரை பெண்களுக்கு மறுக்கப்பட்டுவந்த, அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகளைப் பெற்றுத்தர இந்தச் சட்டம் பெருமளவு உதவும் என்று விவரிக்கப்பட்டது. இதுவரை ஆண்கள், பெண்களுக்குப் பெரும் அநீதி இழைத்து வந்திருக்கிறார்கள். இந்தத் தீமையை ஒழிக்கும் நோக்கத்துடன்தான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட விருக்கிறது. இந்த நடவடிக்கை முற்போக்கானதா இல்லையா என்பதை இப்போது நாம் பார்க்கலாம். முற்போக்கானவற்றை யும் அல்லாதவற்றையும் வேறுபடுத்திப் பார்க்க மாண்புமிகு சட்ட அமைச்சர், 'முற்போக்கு' என்னும் வார்த்தைக்கு எந்த வரையறை யும் கொடுக்கவில்லை. இந்து மதம் மிக நீண்ட காலம் வாழ்ந் திருக்கும் மதங்களில் ஒன்று எனவும், அது உண்மையான அறிவியல் அடிப்படையில் அமைந்திருக்கிறதென்றும், அதனால்தான் எத்தனையோ அட்டூழியங்களுக்கிடையிலும் நீண்டகாலமாக நிலைத்து நிற்கிறதென்றும் இந்தப் பகுதியிலிருந்து கூறப்பட்டது. இதற்குப் பதிலளிக்கிறபோது, மகான் புத்தர்தான் மதத்திற்கான உண்மையான மார்க்கத்தைக் காட்டினார் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறினார். பெண்கள் எந்தவிதமான உரிமையும் இல்லாமல், ஆண்களின் தொடர்ந்த அடக்குமுறைக்கு உள்ளாவதைப் புத்தர் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றும் அவர் கூறினார். பெண் களைவிட ஆண்கள் அதிக உரிமை பெற்றிருப்பதையும் பெண் களின் மீது அவர்கள் எல்லாவிதமான அட்டூழியங்கள் புரிவதையும் காண புத்தரின் நெஞ்சில் ரத்தம் கசிந்தது. இத்தகைய ஒருதலைப்

பட்சமான பாகுபாடுதான் ஆண் பெண் சமத்துவம் பற்றி மகான் புத்தரை போதிக்க வைத்தது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் மேலும் கூறினார். மாண்புமிகு டாக்டரை மேற்கோள் கட்டுவதன் மூலம், புத்தரின் போதனைகளை அடியொற்றித்தான் இங்கு முன்மொழியப்பட்ட மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று வலியுறுத்திக் கூறுகிறேன். மிகப் பெரிய மனிதராகிய மகான் புத்தர் ஐயத்திற்கிடமின்றி மத மனப்பாங்குடையவர்தான். ஆகவே அவர் அடைய விரும்பிய உண்மையான கோட்பாடு என்ன என்பதைக் கவனமுடன் ஆராய வேண்டும். ஐயா, பிரபல மகாராஷ்டிர கவிஞர் ஞானேஷ்வரின் கவிதையொன்று என் நினைவிற்கு வருகிறது. கவிதையின் அதே வரிகளை இப்பொழுது என்னால் நினைவுகூர முடியவில்லை. ஆனால் அதன் பொருள் இதுதான்: ''தாமரை மலர்கள் பூத்திருந்த தடாகத்தினுள் ஒரு வண்டுடன் ஒரு தவளை இறங்கிற்று. அந்த வண்டு தாமரை மலர்மேல் அமர்ந்து தேனை உறிஞ்சியது. அது தேனையும் நறுமணத்தையும் தன்னோடு எடுத்துச் சென்றது. ஆனால், தடாகத்திற்குள் வண்டுடன் சென்ற தவளை, கொஞ்சம் சேற்றையும் சகதியையும்தான் கொண்டுவர முடிந்தது.

*(சர்தார் ஹுக்கம் சிங் அவைத் தலைவர் பொறுப்பேற்கிறார்)*

ஐயா, எவ்வளவுக்கெவ்வளவு தீய எண்ணங்களை அடக்கு கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ஏனென்றால், இதன் மூலம் நாம் இந்தச் சமூகத்திற்கும், மனிதகுலம் முழுமைக்கும் சிறந்த முறையில் சேவை செய்ய இயலும் என்று புத்தர் போதித்தார். இதுதான் அவர் போதனையின் சிறப்பான பகுதி. ஆனால் அவ ருடைய போதனைகளில் இத்தகைய புதுக் கருத்துக்கள் எதையும் நமது சட்ட அமைச்சர் காணமுடியாதது மிகவும் வியப்பும் வேதனை யும் தருவதாக உள்ளது. ஆண்களுக்குப் பலதார மண உரிமை இருப்பதால், அதன் விளைவுகளை ஈடுகட்ட, பெண்களும் விவாக ரத்து உரிமை பெறவேண்டும் என்று டாக்டர் வலியுறுத்துகிறார். இந்த மசோதாவில் என்ன வகையான சமத்துவம் எதிர்பார்க்கப் படுகிறது என்பதைத் தாங்களும் மரியாதைக்குரிய உறுப்பினர் களும் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** இவையெல்லாம் பிரிவு 4-க்குப் பொருத்தமானதுதானா? பொருத்தத்திற்கு நாம் ஓரளவு மரியாதை கொடுப்போம். பொருத்தம் சம்பந்தப்பட்ட விதியை ஒரேயடியாக நாம் உதறித் தள்ளிவிடக்கூடாது.

**பண்டிட் எம்.பி. பர்கவா:** பொருத்தம் என்பது சட்ட அமைச்சரின் ஏகபோக உரிமையல்ல.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை என்னிடம் விட்டு விடும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். முடிவு செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பண்டிட் எம்.பி. பர்கவா:** அவர் உங்களிடம் விட்டுவிட வில்லை. ஆனால் அவரே தீர்ப்பைக் கூறிவிட்டார்.

**டாக்டர் அம்பேத்கர்:** பொருத்தம் என்பது உங்களுடைய ஏகபோகமாகவும் இருக்கட்டும் - என்னுடையது மட்டுமல்ல.

**பண்டிட் எம்.பி. பர்கவா :** அது உங்களுடையதுதான்....

**மாண்புமிகு அவைத் தலைவர்:** இங்கே, குறுக்குக் கேள்விகளும் பதில்களும் கூடாது. உறுப்பினர்கள் தங்களுக்குள் மிகவும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர், தாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு மிகவும் பொருத்தமாகப் பேச வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** எங்கே சமத்துவம் இருக்கிறது என்பதையும் நாம் எங்கெங்கே பெண்களுக்கு சம உரிமை கொடுக்க வேண்டும் என்பதையும் மிகவும் பொருத்தமாகச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய நண்பர் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா கூறினார்....

**மாண்புமிகு அவைத் தலைவர்:** சமத்துவம் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது இப்போது உண்மையான வாதப்பொருள் அல்ல என்பதை அவருக்குக் கூறியாக வேண்டும். அவர் வழக்கங்களையும் பிறவற்றையும் சுட்டிக்காட்டலாம். ஆனால் இப்போதைக்கு சமத்துவம் என்பது நேரடியான பிரச்சினை இல்லை. அதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** உண்மையான வாதப் பொருளுக்கு இவையெல்லாம் எவ்வாறு தொடர்புடையன என்று நான் தங்களுக்கு

விளக்கலாமா? இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக இரண்டு முக்கிய செய்திகளை மாண்புமிகு சட்ட அமைச்சர் முன்வைத்தார் என்பதை நான் ஆரம்பத்திலேயே கூறினேன். முதலாவதாக, இந்த மசோதா முற்போக்கானது என விளக்கினார். இரண்டாவதாக, சம உரிமை பெறாத பெண்களை ஆண்களுக்குச் சமமாக வைப்பதற்கு இந்த மசோதா முயற்சிக்கிறது என்று கூறினார். இப்பொழுது, இந்த மசோதாவில் உள்ள சட்டப் பிரிவுகள் மற்ற எல்லாவற்றையும் புறக்கணிக்கும் என்று இந்தப் பிரிவு 4-இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான் முன் கூறியதுபோல, இந்தப் பிரிவைப் பற்றி முதலில் பேசுகிறேன். இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக முன் வைக்கப்பட்ட இரண்டு விஷயங்களில் எதையுமே அது பூர்த்தி செய்ய முடியாத போது, என்னுடைய கணிப்பில், இந்த நடவடிக்கையே பயனற்றது என்கிறேன். இந்த அவையின் முன் வைத்திருக்கிற இந்த நடவடிக்கை முற்றிலும் பொருளற்றது, அவர் வாதத்திற்காக முன்வைத்த இரண்டு முக்கிய விஷயங்களுக்கும் சம்பந்தமில்லாதது என்று மாண்புமிகு சட்ட அமைச்சரை நம்ப வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். உண்மையில், இந்த நடவடிக்கை முன்வைக்கப் பட்டிருக்கவே கூடாது. இந்த விஷயத்தை இந்த அவை கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். உங்களுடைய அனுமதியுடன் இது தொடர்பாக இன்னும் சில கருத்துக்களை முன்வைக்கிறேன். எல்லாவற்றையும் அவை தெளிவாக்கும். இல்லாவிட்டால் இந்த விவாதமே பொருளற்றதாகிவிடும். இந்த மசோதா முன்வைக்கப் பட்டபோது கூறப்பட்டதைப் போல இந்த நடவடிக்கை முற் போக்கானதல்ல, பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமையை இது பெற்றுக் கொடுக்கப் போவதுமில்லை என்ற உண்மையை நீங்கள் உணர வேண்டும் என விரும்புகிறேன். சொத்து சம்பந்த மான பிரிவு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால், நான் புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால், சொத்தைப் பொறுத்த வரையிலும், நமது பெண்களுக்குச் சம உரிமை கிடையாது. இதனால் அவர்கள் பேரிடர்களால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான அட்டூழியங்களுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். திருமதி துர்க்காபாய் இந்தச் சமயத்தில் இங்கில்லையே என வருந்துகிறேன். அவர்கள் மதறாஸில் உள்ள பெண்களைப் பற்றி நெஞ்சு பிளக்கும் செய்தியை விவரித்தார்கள். அது இங்குள்ள எல்லோரையும் வேதனை யுறச் செய்தது. சொத்துப் பற்றிய பிரிவு விவாதத்தின்போது, இந்தப் பிரச்சினையை விரிவாகப் பேசலாம். உண்மையிலேயே நமது பெண்களின் முன்னேற்றத்தில் சட்ட அமைச்சர் அதிக

அக்கறை உடையவராக இருந்தால், அவர் சொத்துப் பற்றிய பிரிவை முதலில் எடுத்திருக்க வேண்டும். ஏனென்றால், பெண்களுடைய பொருளாதார நிலைமை நன்கு முன்னேறாவிட்டால், அவர்கள் பொருளாதார ரீதியாக முற்றிலும் சுதந்திரமானவர்களாக ஆக்கப் படாவிட்டால், பெண்கள் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற நாம் உதவ முடியாது. ஆகவே, அந்தப் பிரிவு ஏன் முதலில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவரது நோக்கத்தை விமர்சிப்பது எனது எண்ண மல்ல. இருந்தபோதிலும் அவருடைய உண்மையான குறிக்கோள், அவர் என்ன முன்வைத்திருக்கிறாரோ அதிலிருந்து வெளிப்படை யாகவே மாறுபட்டது என்பதைக் கூறியாக வேண்டும். இந்த நட வடிக்கை எடுப்பதன் மூலம், இந்து மதம், இந்து சமுதாயம், இந்து வழக்கங்கள் மற்றும் பயன்பாடுகள் ஆகிய அனைத்தையும் பூண்டோடு ஒழித்து, அதன் மூலம் இந்து சமுதாயத்திற்கு ஒழுக்கச் சீரழிவை உண்டாக்க முனைவதாகத் தெரிகிறது. அவருடைய நோக்கம் இதைத் தவிர வேறில்லை. சொத்து பற்றிய பிரிவை முதலில் எடுத்துக் கொண்டு, அதன் மூலம் பெண்களின் பொரு ளாதார நிலைமை முன்னேறுவதற்கு ஆவன செய்திருந்தால் நாம் அவர்களுக்குக் கணிசமான நிவாரணம் அளித்திருக்க முடியும். ஏராளமான உறுப்பினர்கள் இதற்காக வாதாடினார்கள். ஆனால் நமது சட்ட அமைச்சர் தொடர்ந்து அதை நிராகரித்துத் தலையை ஆட்டிக்கொண்டே இருந்தார். நமது பெண்களுக்கு நாம் ஏதாவது செய்து, அதனால் அவர்களின் துன்பங்கள் தீர உதவி, அதனால் வரும் நல்ல பெயரை நாம் பெறக் கூடாதென்று ஒருவேளை அவர் நினைத்தாரோ என்னவோ.

விவாகரத்தைத் தான் விரும்பவில்லையென்றும் அதை வெகு சிலரே ஆதரிக்கின்றனர் என்றும் எனது நண்பர் திரு. பர்கவா தெரிவித்த கருத்துக்கு இப்போது வருகிறேன். விவாகரத்து நல்ல தல்ல. விவாகரத்து நடைமுறைப்படுத்தப்பட்டால் என்ன நடக்கும் என்பதைப் பற்றிக் கூறுகிறேன். இன்றைக்கு எத்தனை விவாக ரத்துக்கள் நடைபெற்றன, இன்னின்னார் தங்கள் துணைவரை இன்று விவாகரத்துச் செய்தார்கள் என்பன போன்ற செய்திகளை நம் நாட்டு இளைஞர்கள் தினமும் செய்தித் தாள்களில் படிப் பார்கள். பீகாரில் எனது நண்பர் பிரிஜ்கிஷோரின் கிராமத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை, மேலும் திரு. சியாம்நந்தன் சகாயா கொண்டுவரவிருக்கும் பத்திரிகை ஆகியன இத்தகைய செய்திகளை

வெளியிடும். அவர்கள் படிப்பார்கள். மற்றெல்லோரையும் விட, பிரிஜ்கிஷோர்தான் விவாகரத்தில் பெரும் அனுகூலங்கள் இருப்பதாகக் கருதுகிறார். இந்தப் பத்திரிகைகளை அவர் மிகுந்த ஆர்வத்துடன் படிப்பார். அவர் இப்போது இந்த அவையில் இல்லை என்பதற்காக வருந்துகிறேன். இல்லாவிட்டால், இப்படிப் பேசுவதன் மூலம் அவர் எவ்வளவு பைத்தியக்காரத்தனத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை உணர்ந்திருப்பார்.

என்னுடைய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, விவாகரத்து நல்லதல்ல என்று தெரிவித்ததைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் இந்தக் கருத்தை ஆதரிப்பதற்கான காரணத்தையும் கூறியுள்ளார். விவாகரத்துக் குறித்த பிரிவில், அதை விருப்பப்படியாக்குவதற்கான ஏற்பாடு செய்யப்படுவதாக அவர் கூறினார். அவர் கருத்துப்படி, அது மிகவும் முக்கியமான ஏற்பாடு. அது ஒரு உரிமை தரும் சட்டப்பிரிவுதான் என்று கூறுகிறார். ஆனால், ஏராளமான உரிமை தரும் சட்டப் பிரிவுகள் இங்கு நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழில்துறை அமைச்சரும் மாண்புமிகு வர்த்தகத்துறை அமைச்சரும் இத்தகைய உரிமை தரும் சட்டப் பிரிவுகளுக்கு அடியில் அடிக்கடி அடைக்கலம் தேடுவார்கள். அவர்கள் கோககோலாவைப் பற்றி இதே செய்தியைத்தான் கூறினார்கள். அது தயாரிக்கப்படுகிறதென்றால், இருந்துவிட்டுப் போகட்டும் அது உரிமைதரும் சட்டப்பிரிவு மட்டும்தான் என்கிறார்கள். அதே போல விவாகரத்து சம்பந்தப்பட்ட உரிமை தரும் சட்டப்பிரிவு இருக்கிறது. பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு தந்தைக்கு இரண்டு மகன்கள் இருந்து, அதில் ஒருவன் மூன்று மனைவிகளை மணந்துகொள்கிறான் என்று கொள்வோம். மற்றொரு மகன் தந்தையிடம் சென்று, என் சகோதரன் மூன்று பேரை மணந்து கொண்டு இவ்வளவு அதிகமாகச் செலவழிக்கலாமா என்று கேட்டால், அவர் என்ன செய்வார்?

**டாக்டர் அம்பேத்கர்:** அவன் நான்கு பேரை மணந்து கொள்ளலாம்.

**ஜுன்ஜுன்வாலா :** அவன் ஐந்து பேரை மணந்து கொள்ளலாம் என்று அவன் தந்தை பதிலளித்தார். ஆக, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவின் கருத்துப்படி, ஒரு மகன் மூன்று பேரை மணந்து கொண்டால், மற்றொருவன் ஐவரை மணக்க வேண்டும். அவன் ஏன் பின் தங்க வேண்டும்? இந்த உரிமையைத் தான் அவர் கொடுக்க

விரும்புகிறார். ஆனால் நமது நண்பர் திரு. சியாம் நந்தன் சகாயா ஒரு கடைந்தெடுத்த பனியா. அவர் என்ன கூறுவார்? அவன் மூன்று மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டால், அவனை உடனடியாக வெளியே அனுப்பிவிடுவதாக அவர் கூறுவார்.

***மாண்புமிகு அவைத் தலைவர்:*** திருமணங்கள் பற்றிய விவகாரத்தை, ஒருதார மணம் பற்றி நாம் எடுத்துக்கொள்ளும்போது விவாதிக்கலாம் என்று உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். நாம் இப்போது வழக்கங்கள் மற்றும் விதிகள் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்த விஷயம் பற்றி மட்டும் பேசுவதில் அவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது.

***பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா:*** ஒரு மகன் மூன்று மனைவிகளையும், மற்றொருவன் ஐந்து மனைவிகளையும் விவாகரத்துச் செய்வார்கள் என்று அவர் கூற வருகிறார்.

***ஜுன்ஜுன்வாலா :*** ஐயா, நான் உங்கள் முடிவிற்குக் கட்டுப் பட்டு கண்டிப்பாக அதைப் பின்பற்றுவேன். ஆனால் நான் ஆரம் பத்தில் கூறியது....

***மாண்புமிகுஅவைத் தலைவர்:*** அவர் நிச்சயமாக இந்தப் பிரிவைப் பற்றிப் பேசலாம்.

***ஜுன்ஜுன்வாலா:*** நான் திருமணப் பிரிவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்.

***மாண்புமிகு அவைத் தலைவர்:*** திருமணப் பிரிவு பற்றியல்ல. பிரிவு 4, இப்பொழுது விவாதத்திலிருக்கிறது.

***சர்தார் பி.எஸ். மான் :*** ஒரு தகவலுக்காக, தற்போதைய பிரிவைப் பற்றி விவாதிக்கும்போது, சில வழக்கங்கள் தவிர்க்கப் படலாம் என்ற கருத்தோடு சில திருத்தங்களை முன்மொழியும் போது, தகுந்த காரணங்களுக்காகத்தான் அந்த வழக்கங்கள் தவிர்க்கப் பட வேண்டும் என்பதைக் காட்ட எங்களுடைய வாதத்தை முன் வைக்க வேண்டியிருக்கிறது. இந்து சட்டப் பிரிவிலிருந்து மாறுபடு கின்ற வழக்கங்களைச் சுட்டிக்காட்ட எங்களுக்கு உரிமை இருக்கிற தென்று நினைக்கிறேன். அதன் மூலம், பொதுக் கொள்கைக்கு முரண்படாத, உள்ளவாறே அங்கீகரிக்கப்பட்ட நீண்ட வரலாறுடைய

வழக்கங்கள், இக்காரணங்களால் சட்டத்தின் வலிமையைப் பெற்றிருப்பதால், அனுமதிக்கப்பட வேண்டும் என்று எங்கள் வாதத்தை முன்வைப்போம். அந்த வகையில், வழக்கங்களை விரிவாக விவாதிப்பது என்பது மிகச் சரியாக உறுப்பினர்களின் உரிமைக்குள் தான் இருக்கிறது எனக் கூற விழைகிறேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** குறிப்பிட்ட வழக்கங்களைப் பொறுத்த வரையிலும் குறிப்பிட்ட பிரிவுகள் விவாதிக்கப்படும் பொழுது, எடுத்துக்கொள்ளப்படலாம் என்று ஏற்கனவே விதிக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பொதுப் பிரிவின் பொருத்தத்தைப் பொறுத்த வரையிலும், நீங்கள் பொதுவான முறையில் விவாதிக்கலாம். இன்னின்ன வழக்கங்கள் மிகப் பழமையானவை, அவை ஒரே சீராகக் கடைப் பிடிக்கப்படுபவை என்பவற்றைக் கூறலாம். ஒரு வழக்கத்தின் தகுதி பற்றி அதிகமாகக் கூறலாம். ஆனால் எல்லா வழக்கங்களையும் எடுத்துக் கொண்டு அவற்றைப் பற்றி விவாதித்தால், அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும். பொருத்தமான பிரிவுகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது அதற்குரிய குறிப்பிட்ட வழக்கம் விவாதிக்கப்படலாம். அதுதான் சரியானதாக இருக்கும். நான் இந்த விவாதத்தைத் தடுக்கவில்லை. அதுதான் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று உறுப்பினருக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே அவர் பொதுவான வகையில் விவாதிக்கலாம்.

**திரு-ஜுன்ஜுன்வாலா:** உங்கள் முடிவுப்படியே நான் பேசுகிறேன். பிரிவு 2-குறித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. பிரிவு 4-ஐப் பற்றி விவாதிக்கும்போது உறுப்பினர்கள் எல்லா விவகாரங்களைப் பற்றியும் பேசலாம் என்று மாண்புமிகு அவைத் தலைவர் கூறிவிட்டார். சொத்துத் தொடர்பான பிரிவு மட்டும் விவாதிக்க முடியாமற் போய்விட்டது. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்ட விதிகளின் நன்மைகள் மற்றும் தீங்குகளை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தேன். நான் ஒருபோதும் தொடர்பில்லாமல் பேசவில்லை என நினைக்கிறேன். இருந்தாலும், இப்போது உங்கள் முடிவிற்குக் கட்டுப்பட்டு என்னுடைய கருத்தைச் சுருக்கமாக முன்வைக்கிறேன். நான் இப்போது என்னுடைய தீர்மானத்துக்கு வருகிறேன்.

**பாபுராம்நாராயண் சிங் :** மிகவும் நல்லது.

**டாக்டர் அம்பேத்கர் :** இப்பொழுது நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நான் உட்காருகிறேன். நீங்கள் இந்தச் சட்டத் தொகுப்பை திரும்பப் பெற்று இந்து சமுதாயத்தைத் துன்பத்திலிருந்து விடுவியுங்கள்.

**டாக்டர் அம்பேத்கர்:** தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நீங்கள் வெளியேறுங்கள். நான் உட்காருகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர்:** நீங்கள் உட்காருங்கள் அல்லது நான் போய்விடுவேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நீங்கள் போகலாம். நானும் உட்காருவேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினரைத் தொடர்ந்து பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நான் என் பேச்சைத் தொடருகிறேன். ஆனால் பொறுப்புள்ளவரான சட்ட அமைச்சர் தேவையில்லாமல் குறுக்கீடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இந்தப் பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அரசுப் பணம் எப்படியாவது செலவழிக்கப்பட வேண்டுமென்றும் நினைக்கிறார். பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கப்படுவதில் அவர் அக்கறையுடையவராக இல்லை. ஆனால், எப்படியாவது அரசுப் பணம் செலவழிக்கப் படுவதில் ஆர்வமாக இருக்கிறார். அதனால் சட்ட அமைச்சர் சும்மா இருக்கவில்லை என்று வெளியிலிருப்பவர்கள் நினைக்க வேண்டுமென்று எண்ணுகிறார்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது பேச்சைத் தொடருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா :** ஐயா, தங்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறேன். ஆனால் உறுப்பினர் யாராவது குறுக்கீடு செய்வார்களானால், தொடர்ந்து பேசுவது கடினமாகி விடுகிறது. பிறகு முறையான பேச்சுக்குத் திரும்புவதற்கு மிகவும் நேரமாகி விடுகிறது.

**டாக்டர் அம்பேத்கர்:** கூச்சப்படாதீர்கள். அவர்களெல்லாம் உங்களுடைய நண்பர்கள்.

**திரு. ஜுன்ஜுன்வாலா :** சில நேரங்களில் நண்பர்கள் கூடக் கைவிட்டு விடுகிறார்கள். உங்களைப் போல எண்ணற்ற நண்பர்கள் எனக்கிருந்தார்கள். பெண்கள் நலனில் அக்கறையுள்ளவராக உங்களை நீங்கள் முன்னிறுத்திக் கொண்டிருந்தீர்கள். ஆனால் கடைசியில் அவர்களைக் கைவிட்டுவிட்டீர்கள். ஆக, நான் பேச்சைத் தொடருகிறேன். ஆனால் சட்ட அமைச்சர் குறுக்கிடுகிறார்.

**சர்தார் பி.எஸ். மான் :** குறுக்கீடுகளைப் புறக்கணித்து, அவற்றிற்குப் பதில் அளிக்காமலிருப்பது மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு அவமரியாதையாகாதா?

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நான் கூற.வேண்டிய இன்னொரு விஷயம் இருக்கிறது. தீங்கிழைக்கிற யோசனை ஒன்று கூறப்பட்டு, யாராவது ஒருவர் அந்தத் தவறைச் செய்கிறார் என்றால், மற்றவர்களும் அதையே செய்ய வேண்டுமென்று கூறுவது எந்த வகையில் நியாயமாகும் என்று பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா வினவினார். ஆண்கள் தீங்கிழைக்கும் வகையில் நடந்து கொண்டால், ஆண்களுக்குத் தவறிழைக்குமாறு பெண்களைக் கேட்டுக் கொள்வது எவ்வளவு தூரம் நியாயமாகும்? அதைத்தான் நான் சுட்டிக் காட்டப் போகிறேன்.

அதன்பிறகு இந்தச் செயல் முற்போக்கா இல்லையா என்று நாம் பார்க்கலாம். நமது மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. ராஜாஜி இப்போது இங்கு இல்லை. பத்திரிகை மசோதாவை ஆய்வுக் குழுவிற்கு அனுப்பும்போது அவர் சில கருத்துக்களைக் கூறினார். அவரைப் பற்றிய ஒரு கட்டுரையோ அல்லது கேலிச் சித்திரமோ (அது என்ன என்பது பற்றி சரியாக எனக்கு நினைவில்லை.) ஏதோ ஒரு பத்திரிகையில் வந்ததாக அவர் கூறினார். அதை அவர் பார்த்தபோது, அது மிகவும் கிளர்ச்சியூட்டுவதாகவும் அதே சமயம் மிகவும் கீழ்த்தரமானதாக இருந்ததாகவும் கண்டார். அது ஏன் பிரசுரமாயிற்று என்று அவருக்குத் தெரியவில்லை. அவர் மிகவும் வேதனையடைந்தார். ஆனால், இன்றைய செய்தித் தாள்களைப் பார்க்கிறபோது, அவரை அவமதிக்கிறமாதிரி குறிப்பாக அவற்றில் எதுவும் இல்லை என்று கூறினார். *(குறுக்கீடுகள்)* எனது மதிப்பிற்குரிய நண்பர்கள் குறுக்கிட விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** நீங்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேசினால், ஒருவேளை உங்களுக்கு அந்தத் தொல்லை இருக்காது.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** பேசுகிறபோது எல்லாப் புறமும் பார்ப்பது எனக்குப் பழக்கமாகிப் போய்விட்டது.

ஆக அது மிகவும் அற்பமானது என்று அவர் கூறினார். இன்றைய பத்திரிகைகளில் காணப்படுகின்ற கட்டுரைகளையும் கேலிச் சித்திரங்களையும் ஒப்பிடுகிற போது, அது கீழ்த்தரமான தாகத் தோன்றவில்லை. அனாவசியமாக வருத்தப்பட்டதாக அவர் கூறினார். நாம் பார்க்க விரும்பாதனவற்றை எல்லாம் பார்க்கவும் படிக்கவும் இந்தச் செய்திப் பத்திரிகைகள் நம்மைக் கட்டாயப் படுத்துகின்றன. இந்நாட்டில் உள்ள இளம் ஆண்களும் பெண்களும் அவற்றைப் படிக்கிறார்கள். அவையெல்லாம் நமது இளைஞர் களிடையே என்ன விளைவை ஏற்படுத்தும் என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம். நமது பத்திரிகைகளில் வெளியாகிற கட்டுரைகள் முதலியவையெல்லாம் முற்போக்கானவையா? என்று அப்போதே கேட்க விரும்பினேன். நீங்கள் மிகவும் இழிவானது என்று நினைத்துக் கொண்டிருப்பவற்றைவிட இவை மிகவும் கீழானவை... பிறகு, இவையெல்லாம் முற்போக்கானவையா? அவை முற்போக் கானவையென்றால், நமக்கு அவற்றால் நன்மையுண்டா? ஆகவே நான் கூற வந்ததென்னவென்றால், நமது சட்ட அமைச்சரான கலி யுகத்தின் மனு....

**திரு. சியாம்நந்தன் சகாயா:** *கலியுகத்தின்* மனுவல்ல. *கலியுகி* மனு.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நாம் கலியுகத்தில் வாழ்ந்து கொண் டிருக்கிறோம். ஆகவே கலியுகத்தின் மனு என்று குறிப்பிட்டேன். தன்னை ஒரு சாதி நீக்கம் செய்யப்பட்ட பிராமணனாகவும், பண்டித ராகவும் கருதிக் கொண்டிருக்கிற நமது மாண்புமிகு அமைச்சர் திரு. காட்கில், அவருக்கு இந்தப் பட்டத்தைக் கொடுத்தார். இந்தக் காலத்தின் மனு என்று நான் கூற வந்தேன். இந்த முற்போக்கு நடவடிக்கையின் நோக்கம், நமது சமுதாயத்தை உயர்த்துவதா அல்லது இழிவுபடுத்தி சீர்குலையச் செய்வதா என்று அறிய விரும்பு கிறேன். நான் என்னுடைய திருத்தங்களை முன்மொழிவதற்கு முன்னால், இந்த நடவடிக்கையானது இன்னின்ன வகைகளில்

முற்போக்கானது என்று என்னை நம்பவைத்திருந்தால், நான் முழு விவகாரங்களையும் அறிந்துகொண்டிருப்பேன். அது முற்போக்கானது என்றும் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டுமென்றும் அவர்தான் கூறினார். அவர்கள் மிகவும் விரும்புகிற, அவர்களுக்குப் பெரிதும் பயனளித்திருக்கக் கூடிய அத்தகைய உரிமைகளை அவர்களுக்குத் தர அவர் மறுத்து விட்டார். அவர்களுக்கு அவர் தருகிற உரிமை விவாகரத்து. ஆகவேதான் இது உண்மையிலேயே முற்போக்கா என்று நான் கேட்க விரும்புகிறேன். இது ஒருக்காலும் முற்போக்காக இருக்க முடியாது. ஒருவன் ஏதாவது ஒரு தவறைச் செய்து விட்டால், அதே காரணத்திற்காக, நானும் அதையே திரும்பச் செய்வது விவேகமாகாது. அதற்கு மாறாக, தவறு செய்கிற ஒருவன், எதிர்காலத்தில் அதே தவறைச் செய்யாமல் தடுக்க இத்தகைய சட்டங்களை இயற்ற வேண்டும். அடுத்தவர்களும் அவனைப் பின்பற்றக் கேட்டுக் கொள்ளும் வகையில் அது இருக்கக் கூடாது.

இந்தப் பிரிவைப் பொறுத்தவரைக்கும் நான் பேச வேண்டியது அவ்வளவுதான். நான் என்னுடைய திருத்தங்களை முன் மொழிந்து அவை குறித்த என் கருத்துக்களை முழுவதுமாக வெளிப்படுத்துவேன். நான் அவற்றை ஏற்கெனவே படித்துவிட்டேன். ஆகவே அவற்றை மீண்டும் படிக்க மாட்டேன். அது அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** நாங்கள் எப்படிப் புரிந்து கொண்டு அதன் மீது வாக்களிக்க முடியும்?

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அவற்றை அவர் ஏற்கெனவே படித்து விட்டாரா?

**திரு. ஜுன்ஜுன்வாலா:** ஆம். நான் ஏற்கெனவே படித்து விட்டேன்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அப்படியானால், அவற்றை மீண்டும் படிக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** நாங்கள் அதன்மீது வாக்களிக்க வேண்டும். நீங்கள் அவற்றைப் படிக்க வேண்டும்.

**திரு. ஜுன் ஜுன் வாலா :** என்னுடைய முதல் திருத்தம் இதுதான்: இந்த சட்டத் தொகுப்பில் இந்து, சீக்கிய, ஜைன புத்த மதங்களுக்கோ அல்லது மருமக்கள் தாயம் மற்றும் அலிய சந்தானம் விதிகளுக்கோ எதிராக எது இருந்தாலும் அது அவற்றுக்குப் பொருந்தாது.

**டாக்டர் அம்பேத்கர்:** அது மார்வாரிகளுக்கு மட்டும் பொருந்தும்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** மார்வாரிகளுக்கு இது பொருந்த வில்லையானால், அதற்குப் பிறகும் நான் அமர மாட்டேன். இந்தச் சட்டத் தொகுப்பு சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பயங்கரமான தீங்கு விளைவிக்கக் கூடியது.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடர வேண்டும்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** மாண்புமிகு அமைச்சர் குறுக்கீடுகள் செய்து என்மீது அவதூறு சுமத்துகிறார். நமது அரசியல் சாசனம் சம உரிமை வழங்குகிறது. அவருடைய கருத்துக்களுக்குப் பதில் கூற என்னை ஏன் அனுமதிக்க மறுக்கிறீர்கள்?

**மாண்புமிகு அவைத் தலைவர்:** அவர் குறுக்கிட வேண்டா மென்று நானும் கூட கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய உறுப் பினர் தொடரலாம்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** நீங்கள் அவர் பக்கம் திரும்பிக் கூறுங்கள். அவர் கேட்கட்டும்.

**மாண்புமிகு அவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினரிட மிருந்துதான் இந்தப் பழக்கத்தை நான் பெற்றேன். மாண்புமிகு அமைச்சர் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜுன்ஜுன்வாலா:** இப்பொழுது இது தொடர்பாக, அரசியல் சாசனத்தின் விதி 25-ஐ அவை முன் படிக்க விரும்பு கிறேன். உறுப்பினர்கள் பொறுமையாகக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

> ''25(1) பொது ஆணை, ஒழுக்கமுறை, உடல் நலம் ஆகிய வற்றிற்குட்பட்டும், இந்தப் பகுதியின் பிற சட்டப் பிரிவு களுக்குட்பட்டும், சமமான மனச்சாட்சியுடையவர்களாக இருப்பதற்கும், மதத்தின் மீது உரிமை கொண்டாடி, நடை முறைப்படுத்தி, பரப்புவதற்கும் எல்லோரும் சமமான உரிமை யுடையவர்களாகிறார்கள்.
>
> ''(2) இந்த விதியில் உள்ள எதுவும், நடைமுறையில் உள்ள எந்தச் சட்டத்தின் செயல்பாடுகளையும் பாதிக்காது. அல்லது

(அ) மத நடவடிக்கையோடு தொடர்புடைய பொருளாதாரம், நிதி, அரசியல் மற்றும் சமயச் சார்பற்ற செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தியும் கட்டுப்படுத்தியும் அரசு எந்தச் சட்டம் இயற்றுவதையும் தடுக்காது''

**பாபு ராம்நாராயண் சிங்:** தயவு செய்து இந்தியில் மொழி பெயர்க்கவும்.

**திரு. ஜான்ஜான்வாலா :** அதற்கு நீங்கள் ஒரு ஆசிரியரை அமர்த்திக் கொள்ளுங்கள். பிறகு,

''(ஆ) சமூக நலன் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஏற்பாடு செய்தல் அல்லது பொதுத் தன்மையுள்ள இந்து மத அமைப்புக்களை இந்துக்களின் எல்லாப் பிரிவினருக்கும், பகுதியினருக்கும் திறந்து விடுதல்.'' அதற்குப் பிறகு விளக்கவுரை இருக்கிறது. அதை நான் படிக்கத் தேவை இல்லை. சீர்திருத்தங்களைப் புகுத்த நீங்கள் முயற்சிக்கிறபோது, எங்களது தர்ம சாஸ்திரங்களில் தலையிடுவதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்பதைக் கூறுவதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம் என்று அவைத் தலைவருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், எங்களுடைய சாஸ்திரங்களுக்கும் மதத்திற்கும் முரண்படாத வகையில் எந்த நடவடிக்கையை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய திருத்தம் வருமாறு :

''இந்தச் சட்டத் தொகுப்பு அமுலாவதற்கு உடனடி முன்பாக நடைமுறையிலிருக்கும் எந்த வாசகமும், விதியும், இந்து சட்டத்தின் விளக்கவுரையும் அல்லது எந்த வழக்கமும், பயன்பாடும் அல்லது வேறு எந்தச் சட்டமும், இந்தச் சட்டத் தொகுப்பில் கூறப்பட்டுள்ளவற்றைப் பொறுத்த வரையிலும் நடைமுறையற்றுப் போகும்.''

''இந்தச் சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு உடனடி முன்பாக நடைமுறையிலிருக்கும் எந்தச் சட்டமும், இந்தச் சட்டத் தொகுப்பின் சட்டப்பிரிவுகளுக்கு முரண்பாடாக இருக்கிறவரை, பயனற்றுப் போகும்.''

இது சட்டமாக்கப்படுவதில் எனக்கு எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது எனக் கூற விரும்புகிறேன். இது மிகச் சரி. ஆனால் இந்து, சீக்கிய, ஜைனம் போன்ற எந்த மதத்திற்கு எதிராகவும் ஏதாவது இருந்தால், அது இதற்குப் பொருந்தாது.

**திரு. நசிருத்தீன் அகமது :** முஸ்லீம்களுக்கு?

**திரு. ஜுன்ஜுன்வாலா:** முஸ்லீம்கள் இந்த மசோதாவின் வரம்பிற்குள் வரவில்லை. பிறகு அடுத்த திருத்தத்தில், மதத்திற்குப் பதிலாக ஒழுக்க முறை இடம் பெறுகிறது. மக்களின் ஒழுக்க நிலையைப் பாதித்து, அவர்களின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு இட்டுச் செல்லுவதைத் தடுக்க இந்தச் சட்டத்தில் நீங்கள் எந்த ஏற்பாட்டையும் செய்ய முடியாது. இதுதான் நான் கூற முடியும். இந்தத் திருத்தம் சேர்க்கப்பட வேண்டும். அரசியல் சாசனத்தின்கீழ் இந்த உரிமை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தம் ஏற்கப்படவில்லையானால், நமது அரசு நமது மதத்தை அவதூறு செய்கிறது, இழிவுபடுத்துகிறது என்றுதான் நான் எண்ண முடியும். அவர்கள் அதைச் செய்யக் கூடாது.

என்னுடைய மூன்றாவது திருத்தம் சட்டம் 29-ஐ அடிப்படையாகக் கொண்டது. அதில் கலாசாரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> "29(1) குறிப்பிட்ட மொழி, எழுத்து வடிவம் அல்லது கலாசாரத்தைத் தங்களுக்கென்று சொந்தமாகக் கொண்டிருக்கின்ற, இந்தியாவின் எல்லைக்குள்ளோ அல்லது எந்தப் பகுதியிலுமோ வாழும் எந்தப் பிரிவைச் சேர்ந்த மக்களும் அவற்றைப் பாதுகாக்கிற உரிமையை உடையவர்களாகிறார்கள்."

இந்தச் சட்டத் தொகுப்பானது இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்களின் கலை, கலாசாரத்திற்கோ, இந்துக்களின் எந்த ஒரு பிரிவினரின் கலாசாரத்திற்கு முரண்பட்டதாகவோ அல்லது பாதிப்பை உண்டாக்குவதாகவோ இருந்தால், பிறகு, அந்தச் சூழ்நிலைகளில் இது பொருந்தாததாகும்.

*(துணை சபாநாயகர் பொறுப்பேற்கிறார்).*

ஆகவே, இந்த அவையின் முன்னே இந்த மூன்று திருத்தங்களையும் முன் மொழிகிற போது, என்னுடைய திருத்தங்களை முதலில் ஏற்றுக் கொண்டு, பிறகு இந்தப் பிரிவை நிறைவேற்றும்படி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முதலில், இந்தப் பிரிவை நிறைவேற்றவே வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், அதை அவர்கள் நிறைவேற்றினால், என்னுடைய திருத்தங்களும் அதோடுகூட ஏற்கப்பட வேண்டும். இதற்கு மேல் நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் முடித்துக் கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** வாதம் முடிந்துவிட்டதா ஐயா,

**திரு. பாரதி:** இப்போது தீர்மானம் முன்வைக்கப்படலாம் என்று கூறுகிறேன்.

**மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் :** இல்லை. இல்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளிலேயே அமரவும், அவைக்கான தீர்மானத்தை நானே முன்வைக்கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது :** ஐயா, நாங்கள் அதற்கு முன்னர் சில திருத்தங்களை சமர்ப்பித்திருக்கிறோம் என்பதைக் கூற அனுமதிக்குமாறு மன்றாடிக் கேட்கிறேன். அவற்றைக் குறித்துப் பேச எங்களுக்கு உரிமை உள்ளது. அவை சம்பந்தமாக எங்களிடம் சில விஷயங்களும் உள்ளன. எங்களது திருத்தங்களின் தகுதிகளைப் பற்றியும் விவாதிக்க வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. சியாம் நந்தன் சகாயா :** ஐயா, மற்றுமொரு முறையீட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஜுன்ஜுன்வாலாவிற்குப் பின்னர் திரு. பட் பேசுவார் என்றும், அதற்குப் பின்னர் என்ன நடக்க வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்வீர்கள் என்றும் தாங்கள் இப்போது அறிவித்துள்ளீர்கள்.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** மதிப்பிற்குரிய திரு. ஜுன்ஜுன்வாலா இவ்வளவு நேரத்தை எடுத்துக்கொள்வார் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவருடைய திருத்தம் மிகச் சிறிய ஒன்றுதான். ஆனால் அவர் ஏராளமான நேரத்தை எடுத்துள்ளார். அதே நேரத்தில் மதிப்பிற்குரிய இரு உறுப்பினர்கள் பேசியிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். இக்குறிப்பிட்ட விதி குறித்து நேற்றிலிருந்து நாம் ஒரு விவாதத்தை நடத்திக் கொண்டிருந்தோம். இத்துணை வாசகத்தைப் பொறுத்தவரை அது தனியாக இருந்திருக்குமேயானால், நான் எந்த முடிவுக்கும் தனித்து வந்திருக்க மாட்டேன். விளக்கமளிக்கும் கூறு குறித்துப் பெருமளவிற்கு நாம் விவாதித்

திருக்கிறோம், நடைமுறை என்னவெனில், இதன் ஆக்கக்கூறு என்ன என்பது போன்ற விளக்கம் அளிப்பதுதான் வழக்கமாகும். இந்த இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு, இது குறித்துப் போதுமான விவாதம் நடைபெற்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே நான் இந்தத் தீர்மானத்தை அவையின் முன்வைக்கிறேன். இதை இந்த அவை ஏற்றுக் கொள்ளட்டும் அல்லது நிராகரிக்கட்டும்.

**திரு. பட்:** என் பெயரிலும் கூட ஒரு திருத்தம் உள்ளது.

**திரு. சியாம் நந்தன் சகாயா:** திரு. நசிருத்தீன் அகமது கூறியது போன்று நாங்கள் சில திருத்தங்களின் பட்டியலையும் முன் வைத்துள்ளோம். கூறு எண். 2-ப் பற்றியும் கூட நாங்கள் பேச விரும்புகிறோம். இன்றைக்கே இப்பட்டியலுக்கு நீங்கள் அனுமதி கொடுத்தாலும் கூட இவ்விஷயம் முடிந்துவிடாது. மொத்தம் 50 அல்லது 55 கூறுகள் படித்துக் காட்டவேண்டியுள்ளன. ஆகவே இப்பணியை நான் முன்வைக்க விரும்புகிறேன். இது மிக முக்கியமான ஒரு கூறாகும், ஏனெனில் இங்குதான் மூலவாசகங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்ள முடியாது என்று நாங்கள் முன்வைக்கிறோம். இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். செயல்முறை விஷயத்தைப் பற்றிய கூறுகளுடன் நாம் தொடர்பு கொண்டுள்ள மற்றுமொரு விஷயமாக இது இருக்கும். திருமணம் மற்றும் விவாகரத்துக்கான செயல்முறையை பொது நிலைப்படுத்தும் கூறுகளாகும் இவை. ஒரு முடிவுக்கு அல்லது தொடர் நடவடிக்கைக்கு ஒப்பீட்டு முறையில் விரைவாகச் செயல்பட நீங்கள் ஒப்புக் கொள்ளக்கூடும். ஆனால் மூல வாசகங்கள் வழக்கொழியப்பட வேண்டுமா, ஒருவேளை வழக்கம் ஒழிக்கப்படுமா என்பதுதான் பிரச்சினை. இது இன்றியமையாத விஷயமாகும். ஆகவே இதை மிகவும் மதிப்பிற்குரியதாக நான் மீண்டும் சமர்ப்பிப்பேன். இன்றைக்கு இப்பட்டியலை நீங்கள் முடித்துக் கொள்ளப் போகிறீர்கள், சட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது என்றால் அப்போது இது வேறுபட்ட விஷயமாக இருக்கும். மேலும் அதை முடிவுக்குக் கொண்டுவர நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இது அப்படிப்பட்ட விஷயம் அல்ல. ஆகவே திருத்தங்கள் கொண்டு வருபவர்களுக்கு நாம் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** நீங்கள் எப்படி அதைக் கூற முடியும்?

**திரு. சியாம்நந்தன் சகாயா:** சட்டத்தின் 55 கூறுகளை நாம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. இந்தக் கூறைப் பொறுத்த வரை சற்றுக் கூடுதல் விவாதத்தை நீங்கள் அனுமதிக்கவேண்டும். இந்த விஷயத்தில் எனக்கு ஆதரவாகப் பல உறுப்பினர்கள் உள்ளனர் என்ற கருத்து எனக்கு உள்ளது.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா :** மிகுந்த பணிவோடு இதை முன்வைக்கிறேன். ஐயா, பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர் கள் இந்த அவையில் சில சமயங்களில் திருத்தங்களைக் கொண்டு வரும்போது, உண்மையான உள்நோக்கமே பேசுவதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவதேயாகும்; அப்போது நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். ஒரு மசோதா குறித்து குறிப்பிட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, அத்திருத்தத்தில் சாரம் ஏதும் இருக்கிறதா என்பதைத் தயவு செய்து பார்க்குமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன். அப்போது இத்திருத்தங்களைக் கொண்டு வரும் நபரை, சாதாரணமாகப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

**திரு. பாரதி :** அது தலைவரின் முடிவுக்கு விடப்படுகிறது.

**பண்டிட் மாளவியா (உத்திரப் பிரதேசம்) :** இந்த விஷயம் குறித்துப் பேச இன்னும் பலர் விரும்பக்கூடும். இந்த விஷயத்தை இந்த அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது இது சம்பந்த மான ஒரு விஷயத்தில் நான் உணருவது என்னவெனில், அவர்களது கருத்தைக் கேட்டுப் பின்னர்தான் எந்த ஒரு முடிவுக்கும் நாம் வர வேண்டும் என்பதுதான். ஆகவே அவர்கள் பேசுவதற்கு ஒரு வாய்ப்பை நாம் அளிக்கவேண்டும். இத்தகைய வாய்ப்பு எனக்கும் கிடைக்குமானால், இந்தக் கூறு குறித்து எனது கருத்தைக் கூற விரும்புகிறேன். ஐயா, எங்கள் கருத்தைக் கூற குறைந்தபட்சம் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். எங்களது கருத்தை இந்த அவை ஏற்றுக்கொள்ளாதிருக்கக்கூடும்; ஆனால் எங்களுடைய கருத்தை கூறுவதற்குக் கூட நாங்கள் வாய்ப்பளிக்கப்பட மாட்டோம் என்றால் அது ஒரு கொடுமையாகத்தான் இருக்கும் என்று உணரு கிறேன். எந்த ஒரு விஷயம் குறித்தும் நிறைய விவாதிக்கப்பட் டிருக்கக் கூடும், ஆனால் தங்கள் கருத்தைக் கூறமுடிந்த நிலை ஏற்பட்டுள்ளவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்பது இதற்கு அர்த்தமல்ல. ஆகவே இது குறித்து இந்த விவாதத்தைத் தயவு செய்து நீங்கள் அனுமதிக்கலாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பாரதி:** சூழ்நிலையின் மொத்த அம்சங்களையும் கருத்தில் கொண்டு இது குறித்து நீங்கள் உங்கள் உசிதம் போல் முடிவு செய்யலாம். நாங்கள் இதில் எதுவும் செய்வதற்கில்லை.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** நான் தலைவரைக் கேட்டுக் கொள்ளக்கூடிய ஒரே விஷயம் என்னவெனில், இன்னமும் பலர் பேசவேண்டியுள்ளது.

**டாக்டர் அம்பேத்கர்:** போதுமான வாதம் ஏற்கெனவே நடைபெற்றுள்ளது (குறுக்கீடுகள்). ஐயா, விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரலாமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதில் இவ்விஷயம் குறித்துப் பேச விரும்பிய ஒவ்வொரு உறுப்பினரும் பேசிவிட்டாரா என்பதல்ல இங்கு பிரச்சினை, மாறாக போதுமான அளவு விவாதம் நடைபெற்றதா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** பேச விரும்பிய ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், ஐயா, இந்த சட்டக்கூறுக்கு ஒத்திருக்கக் கூடிய வகையில் திருத்தம் கொண்டுவர அனுமதிப்பதாக நீங்களேதான் கூறினீர்கள்.

**பண்டிட் மாளவியா:** ஓர் உறுப்பினர் தமது உரையில் பாதி நிலையில் இருக்கும்போது, விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பிரச்சினையை எழுப்புவது உண்மையில் அவர் தமது உரையை அத்துடன் முடித்துக்கொள்ளும்படி கோருவதை ஒத்ததே யாகும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** ஆனால் இப்போது எந்த உறுப்பினரும் பேசிக்கொண்டிருக்கவில்லை.

**பண்டிட் மாளவியா:** போதுமான அளவுக்கு முக்கியத்துவ முடைய விஷயமாகும் இது. பேசவிரும்பும் எவரும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவேயில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். உதாரணமாக நான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஒரு திருத்தம் அல்லது தீர்மானம் குறித்துப் பேச விரும்பும் எந்த ஓர்

உறுப்பினருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது கட்டாய மல்ல. இதை சட்ட அமைச்சரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

**திரு. நசிருத்தீன் அகமது:** ஆனால் திருத்தங்களைக் கொடுத்த வர்கள் விஷயத்தில்?

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அப்போது பேச வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு திருத்தத்தை முன்வைக்கக் கூடும். இது ஓர் அளவுகோலாக இருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டம் பற்றி போதுமான விவாதம் நடைபெற்றிருக்கிறதா, இல்லையா என்பதை அதன் சாதகபாதகங்களைக் கணக்கிட்டு தலைவர் ஒரு முடிவுக்கு வரமுடியும். இத் திருத்தத்தை முன்வைத்த குறிப்பிட்ட மதிப்பிற்குரிய உறுப்பினர் அதை வலியுறுத்தாதிருக்கக் கூடும்; ஆனால் வேறொரு மதிப்பிற்குரிய உறுப்பினர் மிகுந்த சொல்வன்மையோடும், அழுத்தம் திருத்தமாகவும் அதை செய் திருக்கக்கூடும்.

**திரு. நசிருத்தீன் அகமது :** இல்லை, அய்யா.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** ஒரு மூன்றாம் நபர்தான் இது குறித்துத் தீர்ப்பு வழங்க முடியும். மேலும், இந்த விஷயம் குறித்துப் போதுமான விவாதம் நடந்துள்ளது என்று நான் உணரு கிறேன்.

**சியாம்நந்தன் சகாயா:** இத்திருத்தங்களில் எழுப்பப் பட் டுள்ள விஷயங்கள் வெவ்வேறானவை. ஒரே வகையான திருத் தங்கள் ஒரே நேரத்தில் விவாதிக்கப்படுகின்றன என்றால் அது முற்றிலும் வேறு ஒரு விஷயமாகும். ஆனால் இத்திருத்தங்களில் குறிப்பிட்ட சில அம்சங்கள் வலியுறுத்தப்படவில்லை. அந்த அம்சங் களைப் பரிசீலனை செய்ய வேண்டும். இது ஒரு கருத்தாகும். எந்த வாசகங்கள், வழக்கங்கள், பயன்பாடுகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதை இங்கே, இப்போதே முடிவு செய்யவிருக் கிறோம். ஆகவே இந்தக் கூறானது இச்சட்ட மசோதா முழுவதிலும் நீங்கள் விவா திக்கக்கூடிய வேறு எந்த விஷயத்தையும் விட மிக முக்கியமானதாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்போது இந்த விஷயம் எழுப்பப் பட்டுள்ளதால், இந்த இரு பிரிவுகளிலும் 'முரண்பாடான'

என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது சாத்தியமா என்று மாண்புமிகு சட்ட அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

***டாக்டர் அம்பேத்கர்:*** அது வேறு ஒரு விஷயம். இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. எனக்கு ஒரு வாய்ப்பை நீங்கள் கொடுப்பீர்களேயானால், ஏன் என்பதை விளக்குகிறேன்.

***பண்டிட் மாளவியா :*** ஐயா, அவையின் தலைவர் இப்போது இங்கு இருப்பதால், நாங்கள் ஒரு வேண்டுகோளை அவருக்கு விடுக்கலாமா?

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** இல்லை. போதுமான வாதங்கள் ஏற்கெனவே நடந்துள்ளன என்பதை உணருகிறேன்.

விஷயம் இதுதான் :

''விஷயத்தை இப்போது வாக்கெடுப்புக்கு விடலாம்.'' வாக்கெடுப்பு முறை; ஆம்: 63; இல்லை: 34.

| பிரிவு 3 | **ஆம்** | பிற்பகல் **12.54** |
|---|---|---|

திரு. அளகேசன்
டாக்டர் அம்பேத்கர்
திரு. அன்சாரி
சர்தார் பல்தேவ் சிங்
திரு. பர்மான்
திரு. பாரதி
திரு. பரூவா
திரு. பிரஜேஸ்வர் பிரசாத்
திருமதி சௌதுரி
கைமாலா
திரு. ஜங்டே
திருமதி ஜயஸ்ரீ
திரு. கனகசபை
டாக்டர் கேசார்
திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி
பண்டிட் குன்ஸ்ரு
திரு. லட்சுமணன்
திரு. மிர்ஜா
திரு. பி.கே. தாஸ்
திரு. ராம் தானி தாஸ்
தேவி சிங்
திருமதி துர்க்காபாய்
திரு. காட்கில்
திரு. காலிப்
திரு. பெரோஸ் காந்தி
திரு. எஸ்.எம். கோஸ்
திரு. குலே
திரு. கோபாலசுவாமி
மொய்து மௌலவி
திரு. ஜவஹர்லால் நேரு

திரு. உமயதுல்லா
திரு. டி.டி. பந்த்
திரு. சிவன் பிள்ளை
திரு. பூனச்சா
திரு. புஸ்தகே
திரு. ராஜ்பகதூர்
திரு. ஜி.எஸ். குஹா
திரு. எம்.ஏ. ஹாசன்
டாக்டர் ஜே.என். ஹசாரிகா
திரு. எம். ஹசாரிகா
மேஜர் ஜெனரல் ஹிமத்சிங்ஜி
திரு. ஐயுண்ணி
திரு. ஜகஜீவன் ராம்
திரு. ஏ.பி. ஜெயின்
திரு. ஜாஜூ
திரு. சதீஷ் சந்திரா
பம்டிட் சர்மா
திரு. சந்திரா
திரு. ஷி. சரண்லால்
திரு. எஸ்.என். சுக்ளா
திரு. சித்வா
திரு. சுப்பையா,
டாக்டர் வி. சுப்பரமணியம்
திரு. வெங்கடராமன்

## இல்லை

ஆசிந்த் ஆர்.எம். லாலா
பண்டிட் எம்பி. பர்கவா
பண்டிட் பர்கவா
தாகூர்தாஸ்
திரு. பட்
திரு. சந்திரிகா ராம்
திரு. நந்த் கிஷோர் தாஸ்
திரு. சாரங்தார் தாஸ்
திரு. எஸ்.என். தாஸ்
திரு. தொலாகியா
திரு. வி.ஜே. குப்தா
சர்தார் ஹூக்கம் சிங்
திரு. இந்திரா வித்தியா வாசஸ்பதி
திரு. ஜூன்ஜூன்வாலா
பண்டிட் மைத்ரா
பண்டிட் மாளவியா
சந்தார் பி.எஸ். மான்
திரு. நசிருத்தீன் அகமது
திரு. ஒராகோன்
திரு. பன்னாலால் பன்சிலால்
திரு. பாபுராம் நாராயண் சிங்
சி.எச். ரன்பீர்சிங்
திரு. ராவுக்
திரு. சியாம் நந்தன் சகாயா
பேராசிரியர் கே.டி. ஷா
பண்டிட் பாலகிருஷ்ண சர்மா
திரு. ஏ.சி. சுக்லா
கேப்டன் ஏ.பி. சிங்
திரு. என். ஸ்நாடக்
திரு. சோந்தி
டாக்டர் தேக் சந்த்
திரு. வி.பி. வைத்யா
பேராசிரியர் யஷ்வந்த் ராய்

*டாக்டர் அம்பேத்கர்: முன்னதாக நான் குறுக்கிட்டுப் பேசியபோது விவாதத்தில் உள்ள சட்டக்கூறு 4-ன் படி வழக்கத்தின் துல்லியமான நிலை என்ன என்பதை விளக்கிக் கூறினேன். சட்டக் கூறு 4ஐ பொறுத்தவரை எந்த ஒரு வழக்கமும் அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று அது கூறவில்லை என அப்போது விளக்கினேன். சட்டக்கூறு 4-க்கு எனது திருத்தம் ''இச்சட்டத் தொகுப்பில் வேறு விதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி'' என்பதாகும். எந்த ஒரு குறிப்பிட்ட கூறையும் செயல்பாட்டிலிருந்து விலக்குவதற்கு நாடாளுமன்றம் ஒப்புக்கொள்ளுமானால் அவ்வாறே அது செய்ய லாம். ஆகவே வழக்கத்திற்கு எந்த இடமும் ஒதுக்காத வகையில் இந்தக் கூறின் சொல்லமைப்பு அமைந்துள்ளது என்று நாடாளு மன்ற உறுப்பினர்கள் எண்ணுவது தவறாகும். வழக்கத்தை ஒட்டு மொத்தமாக ஒழித்துக்கட்ட இந்த சட்டத்தொகுப்பு முயலுகிறது என்று கூறப்படுவது விஷயத்தை முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவுதான் என்று என்னால் கூறமுடியும். ஏற்கெனவே நான் சொல்லியது போல், ஒரு குறிப்பிட்ட வழக்கத்தின்பால் ஆர்வம் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விஷயத்தை இந்த மசோதாவில் உள்ள அது சம்பந்தப்பட்ட கூறின் கீழ் எழுப்ப லாம்; இதன் பேரில் நடைபெறும் விவாதத்தின்போது அந்தக் குறிப்பிட்ட வழக்கத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நான் இருக் கிறேனா அல்லது அந்த வழக்கத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நான் இல்லையா என்பதை வெளிப்படுத்த என்னால் முடியும். ஆகவே ஏற்றுக்கொள்ளலாம் என்று நான் யோசனை கூறிய வடிவத்தில் வாசகம் 4 ஏற்றுக்கொள்ளப்படுமானால் அந்த நிலைமை முழுவதுமாகப் பாதுகாக்கப்படுகிறது.

குலமரபுக் குழு ஒன்றிலிருந்து வந்துள்ள எனது நண்பர் திரு. தெப்ளே ஒரகோன் கூறிய விஷயம் ஒன்றுதான் நான் குறிப்பிட விரும்பும் மற்றொரு விஷயமாகும். இந்த அவை ஏற்கெனவே நிறைவேற்றிய கூறு 2-ன் வகையங்களை அவர் படிக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. எந்த நபர்களுக்கு அது பொருந்தாது என்பதை கூறு 2-ன் துணை கூறு (2) கூறுகிறது. அதற்கென்று வரம்புரை உள்ளது. ஒட்டுமொத்தமாக இந்துமதத்தில் முழுமை யாக இணையாத சில குலங்களைச் சேர்ந்த நபர்கள் விஷயத்தில் முன்வைக்கப்படும் எனது கருத்து இதுதான்: அப்போதுதான் இந்து

★ அ.நி.விவாதங்கள், தொகுதி 15, பாகம் 2, செப். 22, 1951, பக். 3183-88.

சட்டம் சட்டப்படியும் சூழ்நிலைப்படியும் மற்றவர்களுக்கு எப்படிப் பொருந்துகிறதோ அவ்வாறே இவர்களுக்கும் எவ்விதம் பொருந்தும் என்பதை நாம் கூற முடியும். அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள இந்து மதச் சட்டத்தின் அந்தப் பகுதிகள் மட்டுமே அவர்களுக்குப் பொருந்துவதாக இருக்கும் என்று கருதப்படுமேயன்றி சட்டத்தொகுப்பு முழுவதும் பொருந்துவதாக இருக்கும் என்று கருதப்படமாட்டாது. எனவே, தங்கள் சமூக நலன்களின் சூழ்நிலையில் இன்னமும் வாழ்க்கை நடத்தக்கூடிய உறுப்பினர்கள் மனதில் எத்தகைய அச்சமும் ஏற்பட வேண்டிய தேவையே இல்லை. தங்களுடைய திருமணம் மற்றும் திருமண விலக்கு சம்பந்தமாக வெவ்வேறு வழக்கங்களையும் வழிகளையும் கொண்டுள்ள இந்து மதச் சட்டத்தின் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியையும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைத் தவிர அவர்கள் இன்னமும் பாதுகாப்பான நிலையில்தான் உள்ளனர். அந்த அளவுக்குத்தான் அவர்கள் இந்த ச்சட்டத் தொகுப்பினால் சேர்க்கப்படுவார்களேயன்றி வேறு விதத்தில் அல்ல. துணை கூறு (2) உடன் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் ஒவ்வொரு முன்னெச்சரிக்கையையும் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோமேயன்றி அவர்கள் மீது பகுதி II-இல் நிர்ணயிக்கப்படும் இந்து மதச் சட்டம் முழுவதையும் திணிப்பதற்காக அல்ல என்பது எனது கருத்தாகும். இந்தக் காப்பு வாசகத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுக்கு தங்களது வழியில் செல்ல அவர்களுக்கு இன்னமும் சுதந்திரம் உள்ளது.

எனது நண்பர் டாக்டர் பாண்டேயும் எனது நண்பர் திரு. டி.என். சிங்கும் தெரிவித்த விஷயம் சம்பந்தமாக ஒரு தகவலைக் கொடுக்க விரும்புகிறேன். அநேகமாக நான் ஐயத்துக்கிடமற்ற குறிப்பீடுகளை விரும்புகிறேன். இன்றைக்கு நடப்பிலுள்ள மரபுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை மீறும் எதையும் செய்யக் கூடாது என்று அவர்கள் கூறியுள்ளனர். எனது நண்பர் திரு. பாண்டே ஓர் இளம் பட்டதாரி என்று கருதுகிறேன். கடுமையான வார்த்தைகளைக் கூற விரும்பவில்லை. ஆனால் பழக்கமில்லாத, தற்போது தான் பல்கலைக் கழகத்திலிருந்து வந்துள்ள ஓர் இளம் பட்டதாரி நாடாளுமன்றம் என்ற அமைப்பின் அர்த்தம் என்ன என்பதை இன்னமும் ஆய்வு செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.

**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** அவர் ஒரு பேராசிரியரும், ஒரு செயலாளரும் ஆவார்.

**டாக்டர் அம்பேத்கர்:** நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆனால் அவர் இன்னமும் சில குறிப்பிட்ட அம்சங்கள் பற்றி எதையும் அறியாதவராக இருக்கிறார். நாட்டின் வழக்கமான மரபு களைப் பற்றி இன்னமும் மக்கள் பேசிவருகின்றனர். நல்லது, மரபு வழக்கங்கள் ஏன் வளர்ந்துள்ளன? **ஸ்மிருதிகராக்கள்** மரபு வழக் கங்கள் தொடர்ந்து நடைபெற ஏன் அனுமதியளிக்கின்றனர்? இந்த நாட்டைப் பொறுத்தவரை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்றம் போன்ற ஓர் அமைப்பு இதற்கு முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை; இங்கு வந்து தங்களது சமூக உறவைப் பற்றி சட்டமன்றத்தில் உரையாடுவதும் நடந்ததில்லை; இத்தகைய ஒரு விஷயம் ஒருபோதும் இருந்ததே இல்லை. (குறுக்கீடு). நாம் நல்ல நிலையில் இருக்கிறோமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இந்த நாட்டில் மக்களின் வாழ்க்கையைக் கடுமையான தாக்க ஏன் வழக்கம் அனுமதிக்கப்பட்டது? உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு கூடுதல் அதிகக் கடுமையானதாக இருக்கும் விதத்தில் அது அனுமதிக்கப்பட்டது என்பதுதான் முக்கியக் காரணமாக உள்ளது.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** பல்லாண்டுகளாக நாடாளு மன்றம் இருந்து வந்த போதிலும் கூட இங்கிலாந்தில் இன்னமும் பொதுச் சட்டம் நடப்பில் உள்ளது என்ற உண்மையைச் சுட்டிக் காட்டுவதால் என்னைத் தவறாக எண்ண வேண்டாம்.

**டாக்டர் அம்பேத்கர் :** சில விஷயங்களில் என்னைவிட இவர் கூடுதல் தகவல்களைப் பெற்றிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

**திரு. சியாம்நந்தன் சகாயா :** டாக்டர் அம்பேத்கர் அவர் களே, நீங்கள் எல்லாம் அறிந்தவர் என்றும் உங்களிடம் எல்லா அறிவுத் தகுதியும் உள்ளது என்றும் நான் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. சில விஷயங்களில் சிறந்த தகவல்களை நான் கொண்டிருக்கக்கூடும்.

**டாக்டர் அம்பேத்கர்:** நீங்கள் அனைத்தும் அறிந்தவர் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். உண்மையில் எனது கருத்து இதுதான்....

**திரு. பட்: பரிஷத்** என்ற சொல்லை நாம் எங்கிருந்து பெற்றோம் என்பதையும் **ராஜ்ய - பரிஷத்** என்ற சொல் எப்படி

நடப்பிற்கு வந்தது என்பதையும் மாண்புமிகு டாக்டருக்கு நினை ஊட்ட விரும்புகிறேன்.

**டாக்டர் அம்பேத்கர் : பரிஷத்** என்பது வேறு விஷயம்.

**திரு. பட் :** அந்த **பரிஷத்** என்பது மற்றொரு விஷயம்.

**திரு. பட் :** அது **பரிஷத்தின்** ஒரு வடிவமே தவிர வேறல்ல.

**டாக்டர் அம்பேத்கர்: பரிஷத்** என்பது ஓர் அவை மட்டுமே; அது ஒரு நாடாளுமன்றமல்ல. அது ஒரு நாடாளுமன்றமாக ஒருபோதும் இருந்ததில்லை. மக்கள் தங்களது வாழ்க்கையை ஒருங்குபடுத்திக் கொள்வதற்கு தங்களுக்குச் சொந்தமான வழக்கத்தைத் தவிர நாடாளுமன்றமோ, சட்டமன்றமோ அல்லது அது போன்ற வேறு எதுவுமோ இல்லாத நிலைமையில் அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆனால் நாம் ஒரு நாடாளுமன்றத்தைக் கொண்டிருக்கிறோம்; அதனுடைய செயல்பாடே சட்டத்தை இயற்றுவதுதான். இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டிய, மிக உன்னிப்பாகக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் உள்ளது. அது என்ன? நாடாளுமன்றத்திற்கு வெளியே உள்ள மக்களை நாடாளுமன்றத்திற்கு இணையான அதிகாரம் படைத்தவர்களாக்கி அவர்கள் தங்களது வழக்கங்களைச் சட்டங்களாக்கிக் கொள்ளவும், இதில் தலையிட நாடாளுமன்றத்திற்கு உரிமை இல்லை என ஆக்கவும் நாம் அனுமதிக்கப்போகிறோமா என்பதுதான் இங்கு எழும் கேள்வி. வழக்கம் வளர்ச்சியடைந்துள்ள இடத்தில் அவை சட்டப்படி செல்லக்கூடியவையே என்பதில் ஐயமில்லை. இப்பட்டியலின் வாசகம் 2-இல் சட்டப்படி செல்லக்கூடிய ஒரு வழக்கம் விளக்கப்பட்டிருக்கும் விதத்தில் வளர்ந்திருந்தால் அது செல்லக்கூடியதுதான். இது முற்றிலும் வேறுபட்ட ஒரு விஷயம். ஆனால் எங்குமே வழக்கம் திருத்தப்படவோ, சீர்திருத்தஞ் செய்யப் படவோ, மாற்றப்படவோ கூடாது என்று கூறுவது உண்மையில் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை ஒழித்துக் கட்டுவதேயாகும். கணிசமான அளவுக்கு நான் சந்தேகத்துடன் காணும் ஒரு விஷயமாகும் இது. வழக்கமான சட்டங்கள் சம்பந்தமாக நாடாளுமன்றம் எந்தவித சட்டவரம்பும் கொண்டிருக்கக்கூடாது என்று திருவாளர்கள் பாண்டே யும் டி.என். சிங்கும் தெரிவித்த கருத்துகள் ஏற்றுக் கொள்ளப்படு மானால் நாடாளுமன்றம் ஏன் வடிவமைக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோள் நிறைவேறாது; மக்களின் வாழ்க்கை முறைகளை

மாற்றுவதற்கு தேவையான, பயனுள்ள ஒரு கருவியாக நாடாளு மன்றம் தொடர முடியாமல் போகும் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்...

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** மாண்புமிகு சட்ட அமைச்சர் நீண்ட நேரம் எடுத்துக் கொள்வாரா?

***டாக்டர் அம்பேத்கர்:*** என் உரையை முடித்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறேன்.

**திரு. நசிருத்தீன் அகமது:** நாங்கள் எழுப்பிய பிரச்சினைகள் அனைத்தையும் அவர் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. நாங்கள் முன்வைத்துள்ள திருத்தங்களின் கதி என்ன? அவை துடைத்தெறியப்படுமா?...

**திரு. டி.என். சிங்:** வழக்கங்கள் ஒவ்வொன்றும் கண்டிப்பான முறையில் அனுசரிக்கப்பட வேண்டும் என்று நான் கூறியதாக மாண்புமிகு அமைச்சர் கூறினார். ஒருவேளை அவர் எனது இந்தியைப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

***டாக்டர் அம்பேத்கர்:*** அவ்வாறும் இருக்கக்கூடும்.

**திரு. டி.என். சிங் :** வழக்கங்கள் அனைத்தும் சட்டத்தினால் எளிதாக வழக்கொழியச் செய்துவிடப்படக்கூடாது என்றுதான் நான் கூறினேன். நான் விரும்புவது என்னவெனில்...

***டாக்டர் அம்பேத்கர்:*** அந்த விஷயத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. டி.என். சிங்:** நாட்டில் நடப்பிலுள்ள வழக்கங்கள் பற்றிய விளக்கமான பட்டியல் ஏதேனும் மாண்புமிகு சட்ட அமைச்சர் வசம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். நாட்டின் வழக்கங்கள் அனைத்தையும் அறியாது, எல்லா வழக்கங்களும் பயன்படுத்தத் தகுந்தவை என்று கூறுவது முறையானதல்ல. இதைத்தான் நான் சொன்னேன்.

***டாக்டர் சி.டி. பாண்டே:*** ஒரு விஷயம் சொல்லப்பட்டுள்ளது, ஐயா...

**டாக்டர் அம்பேத்கர் :** நீங்கள் எனது அறைக்கு வந்து அதைச் சொல்லலாம்.

**டாக்டர் சி.டி. பாண்டே:** நாடாளுமன்றத்தில் வைத்துத் தான் டாக்டர் அம்பேத்கர் இதைச் சொல்லியிருக்கிறார், நாடாளுமன்றத்திலேயே அது விளக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வழக்கம் சம்பந்தமான விஷயங்களுக்கென சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை என்று நான் கூறவில்லை. அவர்களுடைய சட்டங்களைத் தொட வேண்டாம் என்று நாடாளுமன்றத்திடம் நான் வேண்டுகோள் விடுத்தேன். சட்ட அமைச்சர் கூறுவதிலிருந்து அது முற்றிலும் வேறுபட்ட நிலையாகும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** சட்டக் கூறையும் திருத்தங்களையும் இந்த வரிசையில் முன்வைப்பேன்.

**திரு. சியாம் நந்தன் சகாயா :** ஐயா, அவற்றை நீங்கள் முன் வைப்பதற்கு முன்னால் 1-15 என அவற்றை நான் முன்வைக்கிறேன். நான் முன்னமே கூறியது போல இது மிக முக்கியமான சட்டக் கூறாகும். அதில் மூல வாசகங்களும் வழக்கங்களும் பழக்கங்களும் வழக்கொழிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே பிரரேபிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து பகுதி பகுதியாக வாக்கெடுப்பு நடத்த நாங்கள் விரும்புகிறோம். இதற்கு நீண்டநேரம் ஆகக்கூடும். ஆகவே வேறு ஏதாவது ஒரு நாளில் அசல் தீர்மானத்தை நான் சமர்ப்பிக்கிறேன்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்:** சரி, சரி, அப்படியே செய்யலாம்.

**டாக்டர் அம்பேத்கர்:** இதற்கு ஐந்து நிமிடத்திற்கு மேல் ஆகாது.

**மதிப்பிற்குரிய வேறு சில உறுப்பினர்கள் :** இல்லை. இல்லை.

**கேப்டன் ஏ.பி. சிங்:** எவ்வளவோ திருத்தங்கள் உள்ளன. இவற்றைப் பற்றிப் பேச நான்கு மணி நேரத்திற்கு மேல் ஆகக் கூடும் (குறுக்கீடு).

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** அமைதி, அமைதி, இதனால் என்ன பலன் கிட்டப்போகிறது...

**திரு. சோந்தி** (பஞ்சாப்) : வாக்கெடுப்பு இருக்கக்கூடும்.

**திரு. நசிருத்தீன் அகமது :** ஒவ்வொரு கட்டத்திலும் வாக்கெடுப்பு நடத்தும்படி நாங்கள் கேட்டோம். நியாயத்தையே நாங்கள் விரும்புகிறோம். எதேச்சாதிகாரமான விதிகளை அல்ல.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** நீதி வழங்கப்படும் என்று மதிப் பிற்குரிய உறுப்பினர் உறுதியாக நம்பலாம். ஆனால் விஷயம் என்னவெனில் விவாதத்தை முடிப்பதற்கு அவை ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது. வாதங்கள் முடிந்துவிட்டன; மாண்புமிகு சட்ட அமைச்சரும் பதிலளித்து விட்டார்.

**பண்டிட் மாளவியா:** விவாதம் தொடங்கியதற்கு ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நீங்கள் கோரியிருந்தால் இந்த அவை அதற்கு ஒப்புக்கொண்டிருக்கும். பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை தான் எங்கள் மீது திணிக்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடு).

**திருமதி துர்க்காபாய்** (சென்னை): சிறுபான்மையினர் பெரும் பான்மையினர் மீது திணிக்கும் கொடுங்கோன்மைதான் இது; பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை அல்ல.

**திரு. நசிருத்தீன் அகமது :** மாதர்களின் கொடுங்கோன்மை.

**போக்குவரத்து மற்றும் ரயில்வேத்துறை துணை அமைச்சர்** (திரு. சந்தானம்) : மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது நாடாளுமன்றத்தை அவமதிப்பதாக உள்ளது என்று கருதுகிறேன்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் :** இல்லை, இல்லை, இது அவமதிப்பல்ல.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அது குறித்து நாம் மிகவும் உணர்ச்சிவசப்பட வேண்டியதில்லை. நாடாளுமன்ற நடவடிக்கைகள் நாகரிகமான முறையில் நடைபெற வேண்டும். மேலும் அமைதி

யானதாக அது இருக்கவேண்டும் என்பதில் சந்தேகம் ஏதும் கிடையாது. மொத்தத்தில் கிட்டத்தட்ட பதினோரு திருத்தங்கள் உள்ளன.

**திரு. சியாம்நந்தன் சகாயா:** குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்தை அது எடுத்துக் கொள்ளும்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** எது எப்படியிருந்தாலும் இத்திருத்தங்களை நாம் வினாவில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கருதினேன்.

**மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் :** இல்லை. இல்லை.

*1951 செப்டம்பர் 24 திங்கள் கிழமையன்று எட்டரைமணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

---

## இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

**சட்டக்கூறு 4.** (சட்டத் தொகுப்பின் மேலோங்கு செல்திறம்)

[1]**மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்** (டாக்டர் அம்பேத்கர்) : இந்து சட்டத் தொகுப்பின் கூறு 4-சம்பந்தமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த எனது தீர்மானத்தை இப்போது முன்வைக்கலாமா? இதர அலுவல்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படலாம் என்று நினைக் கிறேன்.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** மசோதாவின் இப் பகுதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் விரும்புகிறார். இந்தச் சட்டக்கூறு மீதான விவாதமும் பதிலும் முன்னொரு நாள் முடிவடைந்த நேரத்தில் அவையில் அதனை வாக்கெடுப்புக்கு விடலாம் என்றிருந்தேன். அப்போது நேரம் பிற்பகல் மணி 1.15 என்றும், வாக்கெடுப்புக்கு நீண்ட நேரம் ஆகும் என்றும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கூறினர். இதனால் நாம் அதை ஒத்திவைக்க வேண்டியது ஏற்பட்டது. இப்போது நாம் அதை முடித்துக் கொள்வோம்.

இப்போது பண்டிட் தாகூர் தாஸ் பர்கவாவின் சட்டத்திருத்தத்தை முன்வைக்கிறேன்.

திருத்தம் இதுதான்:

''இந்துச் சட்டத்தின் எந்த விதிமுறையும் அல்லது பொருள் விளக்கமும் அல்லது இந்தச் சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அமலிலிருந்த எந்த வழக்காறும் இந்த சட்டத்தொகுப்பில் கையாளப்படாத எந்த விஷயத்துக்கும் பொருந்தும்.''

இந்தத் திருத்தம் தள்ளுபடி செய்யப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இப்போது நாம் சட்டத் திருத்தம் எண் 449-க்கு வருகிறோம்.

**பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா** (பஞ்சாப்) : எனது திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** விஷயம் இதுதான்:

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரினால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தில் முன்மொழியப்பட்ட கூறு 4-ன் பகுதி (ஏ)யில் ''அல்லது எந்த வழக்கமும் அல்லது வழக்காறும்'' என்ற சொற்கள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** விஷயம் இதுதான் :

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரினால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தில் முன்மொழியப்பட்ட புதிய வாசகம் - 4-ல்

(i) (ஏ) பகுதியில் ''இந்த சட்டத் தொகுப்பு சம்பந்தப்பட்ட வரை'' என்ற சொற்களுக்குப் பின்னர் ''இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்; மேலும்

(ii) (ஆ) பகுதிக்குப் பின்னர் பின்வரும் விளக்கம் சேர்க்கப்பட வேண்டும் :

''விளக்கம். துணைப் பிரிவு (ஏ)யில் எது எப்படிக் கூறப்பட்டிருந்தாலும் இந்த சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வந்ததிலிருந்து பத்தாண்டுக் காலத்திற்கு எந்த மூலவாசகமும், சட்டம் அல்லது எந்த வழக்கமும் அல்லது வழக்காறும் செயற்பாட்டில் இருக்கும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர் :*** விஷயம் இதுதான்:

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தில் ''இந்த சட்டத் தொகுப்பு'' என்ற சொற்கள் இரண்டாம் தடவையாக வரும் இடங்களிலெல்லாம் ''இந்த சட்டத் தொகுப்பில் அடங்கியுள்ள வகையங்கள் எதற்கும் முரண்பாடாக இல்லாது இருக்கும்வரை'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

திருத்தம் நிராகரிக்கப்பட்டது:

★ நாடாளுமன்ற விவாதங்கள், XV, செப்டம்பர் 25, 1951, பக்கம் 3728-3301.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** இப்போது நாம் அடுத்த சட்டத் திருத்தத்தை எடுத்துக் கொள்வோம்.

விஷயம் இதுதான் :

முன்வைக்கப்பட்ட கூறு 4-க்கிற்கு மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் முன்வைத்த சட்டத் திருத்தத்தில் பின்வரும் வாசகம் சேர்க்கப்பட வேண்டும்:

''இந்த சட்டத் தொகுப்பு யாருக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அந்தப் பிரிவு மக்களது தனித்த கலாசாரத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள மரபுகள், வழக்காறுகள், சட்டம் முதலியவற்றை இந்தச் சட்டத் தொகுப்பு புறக்கணித்து நடக்காத பட்சத்தில்.''

தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** அடுத்த சட்டத் திருத்தம் 380 ஆகும். விஷயம் இதுதான்:

சட்டக்கூறு 4-க்குப் பதிலாக பின்வருவது இடம்பெற வேண்டும் :

''இந்துச் சட்டத்தின் எல்லா மூலவாசகங்கள், விதிகள் அல்லது விளக்கங்கள் அல்லது எல்லா வழக்கங்கள் மற்றும் பழக்கங்கள் மற்றும் இந்த விதி தொடங்குவதற்கு முன்னர் உடனடி நடப்பில் உள்ள எல்லா இதர சட்டங்கள் இந்த சட்டத்துடன் முரண்பாடானவையாக இருக்கும் வரை, எந்த அளவுக்கு அவை ஒவ்வாதவையாக உள்ளனவோ அந்த அளவுக்கு அவை செயலிழந்துவிடும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** விஷயம் இதுதான் :

சட்டக்கூறு 4-க்குப் பதிலாக பின்வருவது மாற்றீடு செய்யப்பட வேண்டும்:

''4. இந்து சட்டம் சம்பந்தப்பட்ட எல்லா மூலவாசகங்களும் சமய நூல்களில் அல்லது இந்தியாவில் உள்ள மேல் நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் அல்லது பிரிவு கவுன்சிலின் சட்டக் குழுவில் அல்லது நூலாசிரியர்களின் நூல்களில் மற்றும் விரிவுரைகளில், பாடப்புத்தகங்களில் இந்து சட்டம்

குறித்த வியாக்யானங்களும் வேறுவிதமான தகவல்களும் இந்த சட்டத் தொகுப்பின் தொடக்கத்திற்கு முன்னர் நடப்பில் இருந்த அனைத்துப் பழக்கவழக்கங்களும் இந்த சட்டத் தொகுப்புடன் எந்த அளவுக்கு முரண்பாடானவையாக உள்ளனவோ அந்த அளவுக்கு அவை செயலிழந்தவையாகி விடும்.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

***மாண்புமிகு துணை சபாநாயகர்:*** அடுத்த திருத்தம் 420 குறித்ததாகும்.

***பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா:*** அதை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

இந்த சட்டத் திருத்தம் வாபஸ் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப் பட்டது.

***மாண்புமிகு துணைசபாநாயகர் :*** சர்தார் ஹுக்கம் சிங்கினால் கொடுக்கப்பட்ட சட்டத் திருத்தம் 129க்கு அனுமதி மறுக்கப் படுகிறது. இப்போது திருத்தம் 130ஐ எடுத்துக் கொள்வோம். விஷயம் இதுதான்;

கூறு 4 உடன் பின்கண்ட வரம்புரையைச் சேர்க்க வேண்டும்:

''எனினும் இந்து சமயத்தின் அல்லது வேறு எந்த சமயத்தின் அங்கீகாரம் பெற்ற இந்த சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அமுலிலுள்ள இந்து சட்டத்தின் எந்த வாசகத்தையும், விதியையும் அல்லது விளக்கத்தையும் அல்லது எந்தப் பழக்கத்தையும் அல்லது வழக்காறு மரபையும் அல்லது இதர எந்த சட்டத்தையும் இந்த சட்டத் தொகுப்பு மீறாதிருந்தால் அது இந்த சமயத்தையோ வேறு எந்த சமயங்களையோ பின்பற்றுபவர்கள் விஷயத்தில் பொருந்தும்;

மேலும் ஒழுக்கப்பண்பை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்து சட்டத்தின் இப்போதைய எந்த வாசகத்தையும், விதியையும் அல்லது வியாக்கியானத்தையும் அல்லது எந்தப் பழக்கத்தையும் வழக்காறு மரபையும் வேறு எந்தச் சட்டத்தையும் இந்தச் சட்டத் தொகுப்பு மீறுவதாக இருக்கக்கூடாது.''

திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இப்போது நான் டாக்டர் அம்பேத்கரின் சட்டத் திருத்தம் 6-ஐ முன்வைக்கிறேன்.

> "**சட்டத் தொகுப்புக்குள்ள மேலோங்கு அதிகாரம்** - இந்தத் தொகுப்பில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி :-
>
> அ) இந்து சட்டத்தின் எந்த வாசகமும், விதியும், வியாக்யானமும் அல்லது இந்தச் சட்டத்தொகுப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அமலிலுள்ள எந்தப் பழக்கமும் வழக்காறு மரபும் அல்லது வேறு எந்தச் சட்டமும் இந்த சட்டத் தொகுப்பில் கையாளப்பட்டுள்ள இதர எந்த நடவடிக்கைகள் விஷயத்திலும் செல்லுபடியாக மாட்டா; மேலும்
>
> ஆ) இந்த சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையிலிருந்துவரும் எந்தச் சட்டமும் இந்த சட்டத் தொகுப்பில் அடங்கியுள்ள ஏதேனும் வகையங்களுக்கு ஒவ்வா திருக்குமாயின் அது செல்லுபடியாகாது."

திருத்தம் ஏற்கப்பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர் :** விஷயம் இதுதான்:

திருத்தப்பட்ட விதத்தில் கூறு 4 மசோதாவில் சேர்க்கப் பட்டது.

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** இனி இதர சட்ட நடவடிக்கைகளை அவை மேற்கொள்ளும்.

**பண்டிட் மைத்ரா** (மேற்கு வங்காளம்) : இதர சட்டக் கூறுகளின் நிலை என்ன?

**மாண்புமிகு துணை சபாநாயகர்:** வேறு சில அலுவலர்கள் உள்ளன. அவை முடிவடைந்த பின்னர் இவை எடுத்துக் கொள்ளப் படும்.

□□□

# பின் இணைப்புகளும்
# அகர வரிசைத் தொகுப்பு
# அட்டவணையும்

# பின் இணைப்பு - I

அமைச்சரவையிலிருந்து
தமது பதவி விலகலுக்கான காரணங்களை விளக்கி
நாடாளுமன்றத்தில்

## டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சமர்ப்பித்த அறிக்கை

**புதுடில்லி**
***10, அக்டோபர் 1951***

*(பம்பாய் உயர்நீதிமன்றத்திலிருந்து மஹாராஷ்டிர அரசாங்கம் பெற்ற அம்பேத்கரின் ஆவணங்களில் அம்பேத்கர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் பிரதியிலிருந்து இது நகல் செய்யப்பட்டது. நாடாளுமன்றத்தில் தமது அறிக்கையை வெளியிட சபாநாயகர், டாக்டர் அம்பேத்கருக்கு அனுமதி மறுத்துவிட்டார். ஆகவே அவர் அவையை விட்டு வெளியேறி நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தமது அறிக்கையின் நகல்களை விநியோகித்தார் - ஆசிரியர்)*

# தமது பதவி விலகல் குறித்து டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் விடுத்த அறிக்கை

மந்திரி சபையின் ஓர் உறுப்பினராக இருப்பதிலிருந்து நான் விலகிவிட்டேன் என்பதை அதிகாரப் பூர்வமாக அல்லாவிட்டாலும் அதிகாரபூர்வமற்ற முறையில் அவை நிச்சயமாக அறியும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். செப்டம்பர் 27, வியாழன் அன்று பிரதமரிடம் எனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தேன். உடனடியாக என்னை விடுவிக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன்; அடுத்த நாளே என் வேண்டுகோளை பிரதமர் ஏற்றுக் கொண்டார். 28 வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் மந்திரியாக நான் தொடர்ந்தேன் என்றால் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடியும்வரை பதவியில் தொடருமாறு பிரதமர் என்னை வேண்டிக் கொண்டதே அதற்குக் காரணம். அரசியல் சட்டநெறிமுறைமைக்கு இணங்கவே இந்த வேண்டுகோளை நான் ஏற்றுக்கொண்டேன்.

தமது பதவியிலிருந்து விலகிக்கொண்ட ஓர் அமைச்சர் தமது பதவி விலகலுக்கான காரணங்களை விளக்கி தனிப்பட்ட முறையில் ஓர் அறிக்கையை வெளியிட நமது சட்டமன்ற நடைமுறை விதிகள் அனுமதிக்கின்றன. எனது பதவிக்காலத்தின்போது அமைச்சரவையின் பல உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர். எனினும் பதவி விலகியவர்கள் தமது பதவி விலகலுக்கான காரணத்தை விளக்கி அறிக்கையை வெளியிடும் நடைமுறை ஒரேமாதிரியாக இதுவரை பின்பற்றப்பட்டதில்லை. அறிக்கை எதுவும் வெளியிடாமலேயே சிலர் பதவி விலகியுள்ளனர். மற்றவர்களோ ஓர் அறிக்கையை வெளியிட்டுப் பின்னர் விலகியுள்ளனர். எந்த முறையைப் பின்பற்றுவது என்று முடிவு செய்யாமல் நான் சில நாட்கள் தயங்கிக் கொண்டிருந்தேன். எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்ட பின்னர், ஓர் அறிக்கையை வெளியிடுவது தேவை மட்டுமல்ல, பதவி விலகும் ஓர் உறுப்பினர் நாடாளுமன்றத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையுமாகும் என்ற முடிவுக்கு வந்தேன்.

அமைச்சரவை உள்ளுக்குள் எவ்வாறு செயல்படுகிறது, அங்கு ஒற்றுமை உள்ளதா அல்லது கருத்து வேறுபாடு உள்ளதா என்பதை

அறிவதற்குரிய வாய்ப்பே நாடாளுமன்றத்திற்கு இல்லை . கூட்டுப் பொறுப்பு காரணமாக தமது கருத்து வேறுபாடுகளை அவையில் வெளிப்படுத்த சிறுபான்மையினருக்கு உரிமை இல்லாததே இதற்குக் காரணம். இதன் விளைவு என்ன? ஒரு சச்சரவு நீடிக்கிறது என்ற உண்மை நிலவும்போதுகூட அமைச்சரவை உறுப்பினர் களிடையே சச்சரவு எதுவும் இல்லை என்ற கருத்தை அவை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே பதவியிலிருந்து ஓய்வுபெறும் ஓர் அமைச்சர் தாம் ஏன் வெளியேற விரும்புகிறார், தம்மால் ஏன் கூட்டுப் பொறுப்பைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியவில்லை என்று ஓர் அறிக்கையின் மூலம் அவைக்குத் தெரிவிப்பது தமது கடமை என்று அவர் கருதுகிறார்.

இரண்டாவதாக, அறிக்கை எதுவும் வெளிவிடாமல் பதவி யிலிருந்து அமைச்சரொருவர் விலகுகிறார் என்றால் தமது பதவிப் பொறுப்பாலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவர் தவறு ஏதோ செய்திருக்கிறார் என்று மக்கள் சந்தேகிக்கக்கூடும். எனவே எந்த அமைச்சரும் இத்தகைய சந்தேகத்திற்கு இடமளிக்கக் கூடாது, பதவி விலகலுக்கான காரணத்தை விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிடுவதே பாதுகாப்பான வழி என்று நான் கருதுகிறேன்.

மூன்றாவதாக, நமது செய்தித் தாள்கள் உள்ளன. சிலரை ஆதரிக்கும் சிலரை எதிர்க்கும் பாரபட்சமான போக்கை காலம் காலமாக அவை கடைப்பிடித்து வருகின்றன. அவற்றின் தீர்ப்புகள் ஒருபோதும் தகுதிகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. எங்கெல்லாம் வாய்ப்புகள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் அவை தமது கைவரிசையைக் காட்டுகின்றன; தமது ஆதரவாளர்கள் பதவி விலகும்போது அது குறித்த நல்ல தகவல்களையும் தமக்குப் பிடிக்காதவர்கள் பதவி விலகும்போது அது குறித்த மோசமான தகவல்களையும் வெளியிடுகின்றன. எனது விஷயத்தில்கூட இத்தகைய ஒரு விஷமம் நடந்துள்ளதாக நான் காண்கிறேன்.

இக்காரணங்களால்தான் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் ஓர் அறிக்கையை வெளியிட நான் முடிவு செய்தேன்.

தமது அமைச்சரவையில் சட்ட அமைச்சரின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு பிரதமர் என்னைக் கேட்டுக்கொண்டு 4 ஆண்டுகள், 1 மாதம், 26 நாட்கள் ஆகின்றன. இது எனக்கு மிகப் பெரிய வியப்பை அளித்தது. நான் எதிர் பாசறையில் இருந்தேன்.

1946 ஆகஸ்டில் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட்டபோது தோழமை கொள்வதற்கு நான் தகுதியற்றவன் என்று ஏற்கனவே கண்டனம் செய்யப்பட்டேன். பிரதமரின் போக்கில் இந்த மாற்றம் ஏற்பட என்ன நடந்தது என்பதைக் கண்டறிய நான் ஆழ்ந்த ஆராய்ச்சியில் இறங்கினேன். எனக்கு சில ஐயப்பாடுகள் இருந்தன. ஒருபோதும் என்னுடைய நண்பர்களாக இல்லாதிருந்தவர்களுடன் சேர்ந்து நான் எப்படிச் செயலாற்ற முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. மேலும் எனக்கு முன் இந்திய அரசாங்கத்தின் சட்ட அமைச்சர்களாக இருந்தவர்கள் வெளிப்படுத்திய சட்ட அறிவையும் நுன்புலத்தையும் சட்ட அமைச்சர் என்ற முறையில் என்னால் தொடர்ந்து நிலைநாட்ட முடியுமா? என்ற ஐயமும் என்னுள் எழுந்தது. நமது தேச நிர்மாணப் பணியில் எனது ஒத்துழைப்பு கோரப்படும்போது மறுக்கக்கூடாது என்ற அடிப்படையில் பிரதமரின் அழைப்பை ஏற்றுக் கொண்டேன். எனது சந்தேகங்களை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டேன். அமைச்சரவையின் ஓர் உறுப்பினராகவும் சட்ட அமைச்சராகவும் நான் ஆற்றிய பணியின் தரம் பற்றி மற்றவர்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

எனது சகாக்களுடன் எனக்கிருந்த தொடர்பைத் துண்டித்துக் கொள்ள என்னை நிர்ப்பந்தித்த விஷயங்களைப் பற்றி இப்போது கூறுகிறேன். பல்வேறு காரணங்களினால் பதவி விலக வேண்டும் என்ற உந்தல் நீண்ட காலமாகவே என்னுள் வளர்ந்து வந்தது. முதலாவதாக என்னைப் பதவி விலகும்படித் தூண்டிய தனிப்பட்ட என் சொந்தக் காரணங்களைக் கூறுகிறேன். வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராக நான் இருந்ததன் காரணமாக, சட்ட அமைச்சகம் என்பது நிர்வாக ரீதியில் முக்கியத்துவமுடையதல்ல என்பதை நான் அறிவேன். இந்திய அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்குவதற்கான எந்த வாய்ப்பையும் அது வழங்கவில்லை. அதை ஒரு காலியான சோப்புப் பெட்டி என்றும், அது பழைய மூத்த வக்கீல்களுக்கு விளையாடுவதற்கு மட்டுமே உகந்தது என்றும் நாங்கள் வழக்கமாகக் கூறுவது உண்டு. பிரதமர் எனக்கு இந்த வாய்ப்பை வழங்க முன்வந்தபோது, நான் அனுபவமிக்க ஒரு வழக்கறிஞராக இருப்பதோடு, எந்த நிர்வாகத்துறையையும் நடத்தும் திறமையையும் பெற்றிருக்கிறேன், பழைய வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் தொழிலாளர் நலத்துறை மற்றும் மத்திய பொதுப்பணித் துறை ஆகிய இரண்டு அமைச்சர் பதவிகளை வகித்து வந்திருக்கிறேன், அப்போது பெருமளவில் திட்டமிடும் பணிகளைச் செய்து வந்திருக் கிறேன், எனவே ஏதேனும் நிர்வாகத் துறையை எனக்கு

வழங்குங்கள் என்று அவரிடம் கூறினேன். இதை ஏற்றுக்கொண்ட பிரதமர் சட்டத் துறையுடன் தாம் உருவாக்கவிருக்கும் திட்டமிடுதல் துறையையும் எனக்குக் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் துரதிருஷ்ட வசமாகத் திட்டமிடும் துறை மிகப் பிந்தைய நாளில்தான் உருவாக்கப் பட்டது. அப்போது அத்துறை எனக்குத் தரப்படவில்லை. எனது காலத்தில் ஓர் அமைச்சரிடமிருந்து மற்றொரு அமைச்சருக்கு இலாகாக்கள் மாற்றம் செய்யப்பட்டு வந்தன. அவற்றில் ஒன்றை நானும் பெறலாம் என்று எண்ணினேன். ஆனால் எப்போதுமே நான் ஒதுக்கப்பட்டு வந்தேன். பல அமைச்சர்கள் வசம் இரண்டு அல்லது மூன்று இலாகாக்கள் கொடுக்கப்பட்டன. இதனால் அவர்கள் கடும் வேலைப் பளுவுக்கு உள்ளாயினர். என்னைப் போல் பிறரும் கூடுதல் பொறுப்புகளை விரும்பிக் கேட்டுக் கொண் டிருந்தனர். யாரேனும் ஓர் அமைச்சர் சில நாட்களுக்கு வெளிநாடு களுக்குச் சென்றிருக்கும்போது அவரது இலாகா தற்காலிகமாகக் கூட எனக்குத் தரப்படுவதில்லை. அரசாங்கப் பணிகளை அமைச்சர் களிடம் பகிர்ந்தளிப்பதில் என்ன அடிப்படைக் கோட்பாட்டை பிரதமர் பின்பற்றுகிறார் என்பதைப் புரிந்துகொள்வதே எனக்குக் கடினமாக இருந்தது. அது திறமையா? நம்பிக்கையா? நட்பு முறையா? செல்வாக்கா? வெளியுறவுத்துறைக் குழு அல்லது பாதுகாப்புத் துறைக் குழு போன்ற அமைச்சரவையின் முக்கியமான குழுக்களில் ஓர் உறுப்பினராகக்கூட நான் நியமிக்கப்படவில்லை. பொருளாதார விவகாரக்குழு அமைக்கப்பட்ட போது பொருளா தாரம் மற்றும் நிதித் துறைகளில் நான் முக்கியமாக பெரிதும் தேர்ச்சி பெற்றவன் என்ற கண்ணோட்டத்தில் இக்குழுவில் எனக்குப் பணி யிடம் தரப்பட்டு அமர்த்தப்படுவேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நான் பின்னுக்குத் தள்ளப்பட்டேன். பிரதமர் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது நான் அப்பணியில் அமைச்சரவையால் அமர்த்தப் பட்டேன். ஆனால் அவர் திரும்பி வந்தபோது, அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டது; அதில் அவர் என்னைத் தவிர்த்து விட்டார். இதற்குப் பின்னர் நடைபெற்ற புனரமைப்பில், எனது பெயரும் சேர்க்கப்பட்டது. ஆனால் அதுவும் எனது ஆட்சேபத்தின் பலனாகத் தான் நடந்தது.

இது சம்பந்தமாக ஒருபோதும் நான் பிரதமரிடம் புகார் எதையும் கொடுக்கவில்லை என்பதை அவரே ஒப்புக் கொள்வார் என்று நிச்சயமாக நம்புகிறேன். அமைச்சரவைக்குள் அரசியல் சாணக்கியத்திலோ அல்லது காலி இடம் ஏற்படும்போது இலாகாக் களை அபகரித்துக் கொள்ளும் விளையாட்டிலோ நான் ஒருபோதும்

ஈடுபட்டதில்லை. அமைச்சரவையின் தலைவர் என்ற முறையில் பிரதமர் எனக்குத் தகுதியானது என்று கருதி என்னிடம் எந்தப் பணியை ஒப்படைத்தாரோ அந்தப் பணியை முறையாக செய்வது தான் உசிதமானது என்பதில் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனினும் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது இந்த விஷயத்தில் எனக்கு தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உணராதிருப்பது மனிதத் தன்மையற்றதாக இருந்திருக்கும்.

அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொள்ளச் செய்த மற்றொரு விஷயத்தை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பினர் மற்றும் ஒதுக்கப்பட்ட ஜாதியினருக்கு இழைக்கப்பட்ட கொடுமை சம்பந்தமானதாகும் அது. பின்தங்கிய வகுப்பினருக்காக எந்தவிதப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசியல் சாசனம் முன்வைக்கவில்லை என்பது கண்டு மிகவும் வருத்தமடைந்தேன். ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ள ஓர் ஆணையத்தின் பரிந் துரைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தை நாம் அங்கீகரித்து ஓராண்டிற்குமேல் ஆகிவிட்டது. ஆனால் அரசாங்கமோ ஓர் ஆணையம் அமைப்பது குறித்துச் சிந்தித்துப் பார்க்கக்கூட இல்லை. நான் பதவியிலிருந்து வெளியேறிய 1946 ஆம் ஆண்டு எனக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரிலே தலைமையை ஏற்றிருந்த உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய கவலையை அளித்து ஓர் ஆண்டாக இருந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்புகள் குறித்த விஷயத்தில், தாங்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளிலிருந்து பிரிட்டிஷார் பின்வாங்கி விட்டனர். மேலும் தங்களுக்காக அரசியல் நிர்ணயசபை என்ன செய்யும் என்பது பற்றி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எதையும் அறிந்திருக்கவில்லை. கவலையளித்த இக் காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்குவதற்காக, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலைகுறித்து ஓர் அறிக்கையை நான் தயாரித்திருந்தேன். ஆனால் அதை நான் ஐ.நா. சபையில் சமர்ப் பிக்கவில்லை. அரசியல் நிர்ணய சபையும் வருங்கால நாடாளு மன்றமும் இந்த விஷயம் குறித்து ஒரு முடிவுக்கு வரும் வரை காத்திருப்பது உகந்தது என்று நான் உணர்ந்தேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலையைப் பாதுகாப்பதற்காக அரசியல் சாசனத் தில் செய்யப்பட்டிருந்த வழிவகை ஏற்பாடுகள் எனக்குத் திருப்தி யளிக்கவில்லை. ஆயினும் அரசாங்கம் அவற்றைப் பயனுறுதி யுடையதாக்க ஓரளவு முயற்சி செய்யும் என்ற நம்பிக்கையில்

அவற்றை நான் ஏற்றுக்கொண்டேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது? எனக்குத் தெரிந்தவரை அது பழைய நிலையிலேயே இருக்கிறது. அதே பழைய கொடுங் கோன்மை, அதே பழைய கொடுமை, பாரபட்சம் காட்டும் அதே பழைய நிலை ஆகியவை முன்னர் இருந்தது போலவே, இன்னமும் இருந்துவருகின்றன; சொல்லப்போனால் மிக மோசமான முறை யில் நடைமுறையில் உள்ளன. டில்லி மற்றும் பக்கத்திலுள்ள இடங்களைச் சுற்றியுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் என்னிடம் வந்து, ஜாதி இந்துக்கள் தங்களுக்கு இழைத்து வரும் கோரக் கொடுமைகள் பற்றியும், இது சம்பந்தமாக தங்களது புகார்களைப் பதிவு செய்ய மறுத்து வரும் காவல் துறையினரின் விபரீத போக்கு குறித்தும் உள்ளம் உருக்கும் சோகக் கதைகளைக் கூறினர். இத்தகைய நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை என்னால் கூற முடியும். இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் போல் நரக வேதனைப்படும் மக்கள் உலகில் வேறு எங்கேனும் உள்ளனரா என்று நான் ஆச்சரியத்துடன் நோக்கினேன். வேறு எவரையும் நான் காணவில்லை. இருந்தும்கூட தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்காக உதவிகள் எதுவும் ஏன் வழங்கப்படவில்லை? முஸ்லீம்களைப் பாதுகாப்பது குறித்து அரசாங்கம் காட்டிவரும் அக்கறையை இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். பிரதமரின் முழு நேரமும் கவனமும் முஸ்லீம்களின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு எங்கெல்லாம் எவ்வெப்போதெல்லாம் பாதுகாப்பு தேவைப்படுகிறதோ அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற விருப்பத்தில் நான் யாருக்கும், பிரதமருக்கும் கூடப் பின்தங்கியவனில்லை. ஆனால் நான் அறிந்து கொள்ள விரும்புவது என்னவெனில் பாதுகாப்பு தேவைப்படும் ஒரே பிரிவு மக்கள் முஸ்லீம்கள் மட்டும்தானா? தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஒதுக்கப் பட்ட மரபினர் மற்றும் இந்தியக் கிறிஸ்தவர்கள் ஆகியோர் பாதுகாப்பு தேவையற்றவர்களா? இந்த இனங்களைக் காக்க அவர் எத்தகைய அக்கறையைக் காட்டினார்? இதுவரை நான் எதையும் காணவில்லை. உண்மையில் முஸ்லீம்களைவிடக் கூடுதல் அக்கறை யும் கவனமும் தேவைப்படும் மக்கள் இவர்களேயாவர்.

* இந்த அறிக்கையைக் கண்டுபிடிக்க தன்னால் இயலவில்லை என்பதற்காக ஆசிரியர் வருத்தமடைகிறார். இது சம்பந்தமாக எந்த உதவியையும் தாம் வரவேற்பதாகவும் கூறுகிறார். - ஆசிரியர்.

அரசாங்கத்தினால் தாழ்த்தப்பட்ட இன மக்கள் புறக்கணிக்கப் படுவது குறித்து எனது கடுஞ்சினத்தை, உளக் கொதிப்பை என் மனதிற்குள்ளேயே அடக்கிவைக்க என்னால் முடியவில்லை. தாழ்த்தப்பட்ட இன மக்களின் பொதுக்கூட்டம் ஒன்றில் எனது உணர்வுகளை வெளிப்படையாகக் கூறினேன். அவர்களுக்கு 121/2 சதவிகிதப் பிரதிநிதித்துவத்தை உத்தவாதம் செய்த சட்டத்தினால் தாழ்த்தப்பட்ட இன மக்கள் பலனடையவில்லை என்ற எனது குற்றச்சாட்டு உண்மையா என மாண்புமிகு உள்துறை அமைச்சர் கேட்டார். அக்கேள்விக்கான பதிலில் மாண்புமிகு உள்துறை அமைச்சர் எனது குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று கூறினார். அதைத் தொடர்ந்து ஏதோ சில காரணங்களுக்காக - ஒருவேளை தமது மனச்சாட்சியின் உறுத்தலைத் திருப்திப்படுத்துவதாக அது இருக்கக்கூடும் - அரசாட்சிப் பணிகளில் அண்மையில் தாழ்த்தப் பட்ட இன மக்களின் பிரதிநிதிகள் எத்தனை பேர் தேர்வு செய்யப் பட்டனர் என்ற அறிக்கையைக் கேட்டு இந்திய அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. பல இலாகாக்கள் ‘இல்லை’ என்ற பதிலை அனுப்பியது என்று என்னிடம் கூறப்பட்டது. எனக்குக் கிடைத்த தகவல் சரியானதாக இருக்குமானால் மாண்பு மிகு உள்துறை அமைச்சர் கொடுத்த பதில் குறித்து நான் எந்தவிதக் கருத்தையும் கூறத் தேவையில்லை.

யாருடன் நான் பிறந்தேனோ அந்த தாழ்த்தப்பட்ட இனங் களின் மேம்பட்ட நிலைக்காக் குழந்தைப் பருவம் முதல் நான் என்னை அர்ப்பணித்துக் கொண்டேன். என் மனத்தில் வேறு எந்த உணர்வுகளும் இல்லை என்பதல்ல. எனது சொந்த நலன்களை மட்டும் நான் கருத்தில் கொண்டிருப்பேனேயானால், நான் விரும்பி யதைப் பெற்றிருப்பேன்; காங்கிரசில் நான் சேர்ந்திருப்பேனே யானால் அந்த அமைப்பின் மிக உயர்ந்த பதவியையும் பெற்றி ருப்பேன். ஆனால் நான் கூறியதுபோல, தாழ்த்தப்பட்ட இன மக்களின் மேம்பாட்டிற்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டேன். எந்த நோக்கத்தை அடைய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதில் குறுகிய மனச் சிந்தனையில் இருப்பது நல்லது என்ற முதுமொழியை நான் பின்பற்றியிருக்கின்றேன். ஆகவே தாழ்த்தப் பட்ட இன மக்களின் இலட்சியம் எவ்வளவு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதைக் காணும்போது என் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும் என்பதை நீங்கள் நன்கு ஊகித்துக் கொள்ளலாம்.

எனது உணர்வைத் தூண்டிய மூன்றாவது விஷயம் எனக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது மட்டுமல்ல; ஆனால் உண்மையில் பெரும் சஞ்சலத்தையும் கவலையையும் கூட ஏற்படுத்தியது; நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கைதான் அது. நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையையும் அத்துடன் இந்தியாவின்பால் இதர நாடுகள் கொண்டிருக்கும் அணுகுமுறையையும் தொடர்ந்து கவனித்து வருபவர்கள் நம்பால் அவர்கள் கொண்டுள்ள போக்கில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை உணராதிருக்க முடியாது. 1947 ஆகஸ்டு 15 அன்று ஒரு சுதந்திர நாடாக நாம் வாழ்வைத் தொடங்கிய போது எந்தநாடும் நமக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்று எண்ணவில்லை. உலகின் ஒவ்வொரு நாடும் நமது நண்பனாகத் தான் இருந்தது. நான்காண்டுகளுக்குப் பின்னர் இன்றோ நமது நண்பர்கள் அனைவரும் நம்மை கைவிட்டுவிட்டனர். நமக்கென நண்பர்கள் யாரும் இல்லை, நாமும் நம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டோம், தன்னந்தனியாகப் போய்க் கொண்டிருக்கிறோம். ஐக்கிய நாடுகள் சபையில் நமது தீர்மானங்களை ஆதரிக்க யாரும் இல்லை. நமது வெளியுறவுத் துறைக் கொள்கையை நினைக்கும் போது பிஸ்மார்க்கும் பெர்னார்ட் ஷாவும் கூறியதை நான் நினைத்துப் பார்க்கிறேன். அரசியல் என்பது லட்சியத்தை அடைவதற்கான பந்தய ஆட்டமல்ல: மாறாக அரசியல் என்பது சாத்தியக் கூறுகளை எய்தும் பந்தய ஆட்டமாகும்'' என்று பிஸ்மார்க் கூறியுள்ளார். நல்ல குறிக்கோள்கள் சிறந்தவைதான். ஆனால் அவை மிகவும் நல்லவையாக இருப்பது பல சந்தர்ப்பங்களில் ஆபத்தானவையாக இருக்கும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது என்று அண்மையில் பெர்னார்ட் ஷா கூறினார். உலகின் இரு பெரும் மேதைகள் கூறிய இந்த விவேகமிக்க கருத்துகளுக்கு முற்றிலும் எதிரானவையாக நமது வெளியுறவுக் கொள்கை உள்ளது.

அசாத்தியமானதைச் செய்ய முனையும் இந்தக் கொள்கை மிகவும் அபாயகரமானது. இதனால் ராணுவத்துக்குக் கோடி கோடியாகக் கொட்டி அழ வேண்டியிருக்கிறது. இதன் விபரீத விளைவு என்ன? பட்டினி கிடக்கும் கோடானுகோடி மக்களுக்கு உணவளிக்க முடியாதிருக்கிறது; நமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்ய இயலாதிருக்கிறது.

ஆண்டுதோறும் நாம் பெறும் 350 கோடி ரூபாய் வருமானத்திலிருந்து கிட்டத்தட்ட 180 கோடி ரூபாயை ராணுவத்திற்காகச்

செலவிடுகிறோம். இது மிகப் பெரிய செலவாகும்; இந்த ராட்சதத் தனமான செலவினம் நமது வெளியுறவுத் துறைக் கொள்கையின் நேரடி விளைவாகும். அவசரம் எழும்போது நம் உதவிக்காக நாம் நம்பியிருக்கக்கூடிய நண்பர்கள் எவரும் நமக்கு இல்லை என்பதினால் நமது பாதுகாப்புக்கான செலவு முழுவதையும் நாமே ஏற்க வேண்டியுள்ளது. இத்தகைய நமது வெளியுறவுக் கொள்கை சரி யானதுதானா என நான் வியப்படைகிறேன்.

பாகிஸ்தானுடனான நமது சச்சரவு நமது வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகும்; இது குறித்து நான் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளேன். பாகிஸ்தானுடனான நமது உறவுகள் பாதிக்கப்பட்டதற்கு இரு முக்கியக் காரணங்கள் உள்ளன - ஒன்று காஷ்மீர், மற்றொன்று கிழக்கு வங்காளத்திலுள்ள நமது மக்களின் நிலைமை. கிழக்கு வங்காளத்தில் நமது மக்களின் நிலைமை காஷ்மீரில் இருப்பதைவிட சகிக்கவொண்ணாததாக இருக்கிறது. அனைத்து செய்தி ஏடுகளும் இதனை உறுதி செய்துள்ளன. எனவே நாம் கிழக்கு வங்காள விஷயத்தில் ஆழ்ந்த அக்கறை காட்டியிருக்க வேண்டும் என்பதை உணர்கிறேன். இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் காஷ்மீர் பிரச்சினையில் நம் சக்தி முழுவதையும் வீண்விரயம் செய்து வருகிறோம். ஒரு போலியான பிரச்சினைக்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்றே எனக்குத் தோன்று கிறது. யார் செய்வது சரி, யார் செய்வது தவறு என்ற பிரச்சினைக் காகவே நாம் பெரும்பாலும் போராடிக் கொண்டிருக்கிறோம். உண்மையான பிரச்சினை யார் செய்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே உண்மையான பிரச்சினை. இதுவே பிரதான பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, காஷ்மீரைப் பிரிவினை செய்வதே சரியான தீர்வு என்பது எப்போதுமே என் கருத்தாக இருந்து வந்திருக்கிறது. இந்தியாவின் விஷயத்தில் நாம் செய்தது போல இந்து மற்றும் புத்த மதத்தினர் வாழும் பகுதியை இந்தியா வுக்கும் முஸ்லீம்கள் வாழும் பகுதியைப் பாகிஸ்தானுக்கும் கொடுங்கள். காஷ்மீரில் முஸ்லீம் பகுதிகளைப் பற்றி உண்மையில் நாம் எந்த அக்கறையும் கொண்டிருக்கவில்லை. காஷ்மீர் முஸ்லீம் களுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்சினை அது. இப் பிரச்சினை குறித்து அவர்கள் விரும்பு வதுபோல முடிவு செய்யட்டும். அல்லது நீங்கள் விரும்பினால் அதை மூன்று பகுதிகளாகப் பிரிக்க லாம்; அதாவது போர் நிறுத்தப் பகுதி, பள்ளத்தாக்குப் பிராந்தியம் மற்றும் ஜம்மு-லடாக் பிராந்தியம் என்று பிரிக்கலாம். பள்ளத்தாக்கில் மட்டும் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தலாம். இது விஷயமாக

எனக்கு ஓர் அச்சம் உள்ளது; அதாவது ஒட்டுமொத்த வாக்கெடுப்பாக இருக்கக்கூடிய உத்தேச பொதுமக்கள் வாக்கெடுப்பில், காஷ்மீரைச் சேர்ந்த இந்துக்களும் பௌத்தர்களும் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக பாகிஸ்தானுடன் பிணைக்கப்படும் அபாயம் உள்ளது. இந்நிலைமையில் கிழக்கு வங்கத்தில் இன்று நாம் எதிர்ப்படும் அதே பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள நேரிடும்.

எனது பதவி விலகலுடன் பெரிதும் சம்பந்தப்பட்ட நான்காவது விஷயத்துக்கு இப்போது வருகிறேன். அமைச்சரவை என்பது ஏற்கெனவே பல்வேறு குழுக்களால் எட்டப்பட்ட முடிவுகளைப் பதிவு செய்யும் வெறும் பதிவேடு அலுவலகமாக மாறியுள்ளது. ஏற்கெனவே நான் சொல்லியது போல அமைச்சரவை இப்போது குழுக்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பாதுகாப்புத் துறைக் குழு ஒன்று உள்ளது. வெளியுறவுத் துறைக் குழு ஒன்று உள்ளது. வெளியுறவுத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து முக்கிய விஷயங்களையும் அக்குழுவே கையாண்டு வருகிறது. பாதுகாப்பு சம்பந்தப் பட்ட அனைத்து விஷயங்களும் பாதுகாப்புக் குழுவினால் பைசல் செய்யப்படுகின்றன. அமைச்சரவையின் உறுப்பினர்கள் இக் குழுக்களால்தான் நியமிக்கப்படுகின்றனர். இக்குழுக்கள் எதிலும் நான் இல்லை. இரும்புத் திரைக்குப் பின்னால் அவர்கள் செயல் படுகின்றனர். இங்கு முக்கிய உறுப்பினர்கள் அல்லாத மற்றவர்கள் கொள்கையை உருவாக்குவதில் பங்கு கொள்ளும் எந்த வாய்ப்பும் இல்லாமல், கூட்டுப் பொறுப்பை மட்டுமே அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஓர் ஏடாகூடமான நிலையாகும்.

பதவி விலகவேண்டும் என்ற முடிவுக்கு நான் வர என்னை இறுதியாக இட்டுச்சென்ற ஒரு விஷயம் குறித்து இப்போது கூறுகிறேன். இந்து சட்டத் தொகுப்பிற்கு நேர்ந்த கதிதான் அது. 1947 ஏப்ரல் 11 அன்றுதான் இந்த சட்டத்தொகுப்பு மசோதா சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ''அது நான்காண்டு காலம் உயிரோ டிருந்து அதன் நான்கு சட்டக்கூறுகள் ஏற்கப்பட்ட பின்னர் கேட்பார் நாதியின்றி அது செத்து மடிந்தது. மசோதா அவையின் முன்னால் இருந்தபோது வலிப்பும் இசிப்புமாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. ஓர் ஆண்டுவரை அதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவது அவசியம் என்று அரசாங்கம் எண்ணவில்லை. 1948 ஏப்ரல் 9 அன்றுதான் அது பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 1948 ஆகஸ்டு 12 அன்று அந்த மசோதா குறித்த அறிக்கை அவைக்கு வழங்கப்பட்டது. 1948 ஆகஸ்டு 31

அன்று அந்த அறிக்கையை ஆய்வு செய்யக் கோரும் தீர்மானத்தை அவையில் கொண்டுவந்தேன். தீர்மானத்தைக் கொண்டு வருவதற்காகவே மசோதா அவையின் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டிருந்தது. 1949 ஆம் ஆண்டின் பிப்ரவரி கூட்டத்தொடர் வரை இந்தத் தீர்மானம் குறித்து விவாதம் நடைபெற அனுமதிக்கப்படவில்லை. பின்னர் விவாதம் அனுமதிக்கப்பட்டது. அப்போதும் கூட தொடர்ந்த விவாதத்திற்காக அது அனுமதிக்கப்படவில்லை. அது விட்டுவிட்டுப் பத்து மாதங்களும் பிப்ரவரியில் 4 நாட்களும் மார்ச்சில் 1 நாளும் 1949 ஏப்ரலில் 2 நாட்களும் நடைபெற்றது. இதற்குப் பின்னர் 1949 டிசம்பரில் இம்மசோதாவிற்கு ஒரு நாள் ஒதுக்கப்பட்டது. அது டிசம்பர் 19-ஆகும். அன்றுதான், பொறுக்குக்குழுவினால் பரிந்துரைத்தபடியான எனது மசோதா பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1950-ம் ஆண்டில் மசோதாவுக்கு நேரம் எதுவும் கொடுக்கப்படவில்லை. அடுத்தபடியாக அவையின் முன் மசோதா வந்தது 1951 பிப்ரவரி 5-ம் தேதியாகும். அப்போது மசோதா ஷரத்து ஷரத்தாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிப்ரவரி 5, 6 மற்றும் 7 ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே மசோதாவுக்கு ஒதுக்கப்பட்டு, பின்னர் அது கிடப்பில் போடப்பட்டது.

இது இப்போதைய நாடாளுமன்றத்தின் இறுதிக் கூட்டத் தொடராதலால் இந்த நாடாளுமன்றம் முடிவடைவதற்கு முன் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை நிறைவேற்றுவதா அல்லது புதிய நாடாளுமன்றத்திற்கு அதனை விட்டு விடுவதா என்பதை அமைச்சரவை தீர்மானிக்க வேண்டியிருந்தது. இந்த நாடாளுமன்றத் தொடரிலேயே இந்த மசோதாவை நிறைவேற்றுவது என்று அமைச்சரவை ஒருமித்ததாக முடிவு செய்தது. ஆகவே மசோதா நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டது. மேற்கொண்டு ஷரத்து வாரியான பரிசீலனைக்காக 1951 செப்டம்பர் 17 அன்று அது எடுத்துச் செல்லப்பட்டது. விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பிரதமர் ஒரு புதிய யோசனையை முன்வைத்தார்; அதாவது கிடைக்கக்கூடிய அவகாசத்திற்குள் மசோதாவை முற்றிலுமாக நிறைவேற்ற இயலாது. ஆகவே மசோதா முழுவதையும் நிறைவேற்ற அனுமதியளிப்பதற்குப் பதிலாக அதன் ஒரு பகுதியை சட்டமாக இயற்றுவது விரும்பத்தக்கது என்று அவர் யோசனை கூறினார். ''மொத்தமும் இழந்துவிடக்கூடிய நிலையில் இருக்கும் போது ஒரு பகுதியையாவது பாதுகாப்பது நல்லது'' என்ற முதுமொழிக்கு இணங்க நானும் அதை ஏற்றுக் கொண்டேன். திருமணம் மற்றும் மணவிலக்குக்கான பகுதியை நாம் பரிசீலனைக்கு

எடுத்துக்கொள்ளலாம் என்று பிரதமர் யோசனை கூறினார். இதன் பேரில் சிதைக்கப்பட்ட வடிவத்தில் மசோதா தொடர்ந்தது. மசோதா குறித்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் விவாதங்களுக்குப் பின்னர், பிரதமர் மற்றுமொரு யோசனையை முன்வைத்தார். திருமணம் மணவிலக்குப் பகுதி உட்பட, மசோதா முழுவதையுமே கைவிட்டுவிடலாம் என்பது அவரது யோசனையில் இருந்தது. தலைமீது இடிவிழுந்தது போல இது எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திற்று. நான் பெரிதும் திகைத்துத் திணறிப் போய் எதையும் சொல்லமுடியாத நிலைக்கு வந்தேன். இந்த சிதைக்கப்பட்ட மசோதா அவகாசம் இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. அமைச்சரவையின் ஏனைய மிகவும் சக்திவாய்ந்த உறுப்பினர்கள் தங்கள் மசோதாக்களுக்கும் பத்திரிகைத் துறை மசோதாவுக்கும் எப்படி முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள என்னால் முடியவில்லை. அலிகார் பல்கலைக் கழகம், காசி பல்கலைக்கழகம் சம்பந்தமாக சட்டப் புத்தகத்தில் எந்த சட்டமும் இல்லை என்று கூற முடியாது. இக்கூட்டத் தொடரில் இம்மசோதாக்கள் நிறைவேற்றப்படாவிட்டால் இப்பல்கலைக் கழகங்கள் சிதைந்து சின்னாபின்னமாகிவிட மாட்டா. பத்திரிகை மசோதா அவசரமானது அல்ல. இது சம்பந்தமாக சட்டப்புத்தகத்தில் ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. எனவே இந்த மசோதா காத்திருக்கலாம். பிரதமர் நேர்மையானவரானாலும் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆர்வமும் உறுதியும் அவருக்கு இல்லை என்ற முடிவுக்கே நான் வந்தேன்.

இந்த மசோதா சம்பந்தமாக மிகப் பெரிய மன உளைச்சலுக்கு நான் ஆளானேன். கட்சியின் ஒத்துழைப்பு எனக்கு மறுக்கப்பட்டது. வாக்களிப்பு சுதந்திரத்தைப் பிரதமர் வழங்கினார், கட்சியின் வரலாற்றில் இது ஓர் அசாதாரணமான விஷயமாகும். அதை நான் மனதில் கொள்ளவில்லை. ஆனால் இரு விஷயங்களை நான் எதிர்பார்த்தேன். சொற்பொழிவுகளுக்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்படும் என்றும், போதிய அளவு விவாதம் நடைபெற்றதும் அதை முடிவுக்குக் கொண்டுவர கட்சித் தலைமைக் கொறடா நடவடிக்கை எடுப்பார் என்றும் எதிர்பார்த்தேன். ஏனெனில் வாக்களிப்பு சுதந்திரம் தரப்பட்டிருக்கும்போது சொற்பொழிவுகளுக்கு ஒரு காலவரையறை, நிர்ணயிப்பதற்கு எந்த ஆட்சேபமும் இருக்கமுடியாது. ஆனால் இத்தகைய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்து சட்டத் தொகுப்பு மசோதா சம்பந்தமாக

தலைமைக் கொறடாவாக உள்ள நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சரின் போக்கு மிகவும் அசாதாரணமானதாக இருந்தது. அவர் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் பரம வைரியாக இருக்கிறார். விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் என் முயற்சிக்கு உதவ அவர் ஒருபோதும் முன் வந்ததில்லை. மசோதாவின் ஒவ்வொரு ஷரத்து குறித்தும் நாட்கணக்கில், மணிக்கணக்கில் சொற்சிலம்பம் ஆடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் நேரத்தை மிச்சப்படுத்தி, அரசு அலுவலகங்களைத் துரிதப் படுத்துவது தலைமைக் கொறடாவின் கடமையாகும்; ஆனால் இந்து சட்டத் தொகுப்பு மசோதா அவையின் பரிசீலனையில் இருக்கும்போது அவர் திட்டமிட்டு அவைக்கு வருவதில்லை. பிரதமரிடம் இவ்வளவு விசுவாசமற்ற ஒரு தலைமைக் கொறடாவையும், அதேபோல் விசுவாசமற்ற ஒரு கொறடாவிடம் இத்தனை விசுவாசமுள்ள ஒரு பிரதமரையும் நான் ஒருபோதும் கண்டதில்லை. இவ்வாறு தலைமைக் கொறடா அரசியல் சாசனத்துக்கு முரண்பாடாக நடந்துகொண்ட போதிலும் உண்மையில் அவர் பிரதமரின் பேரன்புக்குரியவராக இருக்கிறார். அது மட்டுமல்ல விசுவாசமற்ற அவருக்கு கட்சியில் பதவி உயர்வும் தரப்பட் டிருக்கிறது.

எதிர்ப்புக் கடுமையாக இருப்பதால் மசோதாவைக் கைவிட வேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது. அப்படி அந்த எதிர்ப்பு எவ்வளவு வலுவானது? இந்த மசோதா குறித்து கட்சியில் அநேக சந்தர்ப்பங்களில் விவாதம் நடைபெற்றது; மசோதாவின் எதிர்ப்பாளர்கள் இது குறித்து வாக்கெடுப்பு நடத்த நிர்ப்பந்தித்தனர். ஒவ்வொரு முறையும் எதிர்ப்பாளர்கள் முறியடிக்கப்பட்டனர். சென்ற தடவை கட்சிக் கூட்டத்தில் மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 120 பேரில் 20 பேர் மட்டுமே மசோதாவை எதிர்ப்பது தெரியவந்தது. கட்சியில் மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சுமார் மூன்றரை மணி நேரத்தில் 44 கூறுகள் அதாவது ஷரத்துகள் அங்கீகரிக்கப்பட்டன. இந்த மசோதாவுக்கு கட்சிக்குள் எந்த அளவுக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை இது புலப்படுத்துகிறது. அவையிலே கூட மசோதாவின் 2, 3, மற்றும் 4 ஆவது கூறுகள் பற்றி வாக்கெடுப்புகள் நடைபெற்றன. ஒவ்வொரு முறையும் இவற்றிற்கு அபரிதமான பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன; இந்து சட்டத் தொகுப்பின் உயிர்நாடியாக விளங்கும் 4-ஆவது கூறும் அமோக ஆதரவைப் பெற்றது.

இந்த நடவடிக்கைகளைப் பொறுக்காமல் இருந்த கட்சிக் கட்டுப்பாட்டுத் தலைவர் உண்மையில் பிரதமரின் அன்புக்குரிய ஒருவராக இருந்தார். தமது வாய்மை தவறிய நிலையைப் பொருட் படுத்தாமல் கட்சி அமைப்பில் ஒரு பதவி உயர்வையும் அவர் பெற்றார். இத்தகைய சூழ்நிலைகளில் இப்பணி தொடருவது சாத்திய மற்றதாகும்.

எதிர்க்கட்சியினர் வலுவாக இருந்த காரணத்தினால் இம் மசோதா கைவிடப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி யினர் எந்த அளவுக்கு வலுவானவர்களாக இருந்தனர்? கட்சியில் இப்பிரச்சினை பலமுறை விவாதிக்கப்பட்டது, மேலும் எதிராளி களினால் பிரச்சினை வாக்கெடுப்புக்கு கொண்டு செல்லப்பட்டது. எதிர்க்கட்சியினர் ஒவ்வொரு முறையும் வீழ்த்தப்பட்டனர். கட்சிக் கூட்டத்தில் இம்மசோதா கடைசியாகக் கொண்டுசெல்லப்பட்ட போது 120 பேரில் 20 பேர் மட்டுமே அதற்கு எதிராக இருந்தது காணப்பட்டது. விவாதத்திற்காக மசோதா கட்சியில் எடுத்துச் செல்லப்பட்டபோது 3 1/2 மணி நேரத்தில் 44 கூறுகள் அங்கீகரிக்கப் பட்டன. கட்சிக்குள் இம்மசோதாவுக்கு எந்த அளவு எதிர்ப்பு இருந்தது என்பதை இது காட்டுகிறது. மசோதாவின் 2, 3 மற்றும் 4 கூறுகள் மீது சட்டமன்றத்தில் கூட வாக்கெடுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு முறையும் அங்கு பாராட்டத்தக்க பெரும்பான்மை யினர் இந்து சட்டத் தொகுப்பின் அடிப்படையாக உள்ள கூறு 4க்கு மகத்தான ஆதரவளித்தனர்.

ஆகவே அவகாசம் இல்லை என்பதால் மசோதாவைக் கைவிடும் பிரதமரின் முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. எனது பதவி விலகலுக்காக இந்த விரிவான விளக்கத்தை நான் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் நான் நோய்வாய்ப்பட்டிருப்பதன் காரணமாகவே பதவி விலகுவதாகக் கூறும்படி என்னிடம் சிலர் யோசனை கூறியுள்ளர். இத்தகைய யோசனைகளில் எதையும் நான் ஏற்கத் தயாரில்லை. நோய்வாய்ப் பட்டிருப்பதன் காரணமாக எனது கடமையைக் கைவிடும் கடைசி மனிதன் நான்தான்.

எனது பதவி விலகல் காலங்கடந்து நடந்துள்ளது என்றும், அரசாங்கத்தின் வெளியுறவுத் துறைக் கொள்கை மற்றும் பின்தங்கிய இன மக்களும் தாழ்த்தப்பட்ட இன மக்களும் நடத்தப்படும்விதம் எனக்குத் திருப்தியளிப்பதாக இல்லை என்று நான் எண்ணியிருந்தால்

முன்னதாகவே நான் பதவி விலகியிருக்க வேண்டும் என்று சிலர் கூறலாம். இக்குற்றச் சாட்டு நியாயமானது போல் தோன்றக்கூடும். ஆனால் நான் காலங்கடந்து இந்த முடிவு எடுத்ததற்குக் காரணங் கள் உண்டு. முதலாவதாக, அமைச்சரவையின் ஓர் உறுப்பினராக இருந்த பெரும்பாலான காலத்தில், அரசியல் சாசனத்தை உருவாக்கு வதில் நான் மும்முரமாக ஈடுபட்டு இருந்தேன். 1950 ஜனவரி 26-ம் தேதிவரை அப்பணியிலேயே மூழ்கிப் போயிருந்தேன். அதற்குப் பின்னர் மக்கள் பிரதிநிதித்துவ மசோதாவிலும் எல்லைகளை நிர்ணயிக்கும் பணியிலும் கவனம் செலுத்தி வந்தேன். இதனால் நமது வெளியுறவுத் துறைக் கொள்கைகள் சம்பந்தமாகக் கவனம் செலுத்த எனக்கு நேரம் கிடைக்கவில்லை. ஏற்றுக்கொண்ட பணியைச் செய்யாமல் விட்டு விட்டுச் செல்வது உசிதமானதாக எனக்குத் தோன்றவில்லை.

இரண்டாவதாக, இந்து சட்டத் தொகுப்பின் பொருட்டு தொடர்ந்து பதவியில் இருப்பது அவசியம் என்று எண்ணினேன். இந்து சட்டத் தொகுப்பிற்காக பதவியில் நான் நீடித்தது தவறு என்று சிலர் எண்ணக்கூடும். நான் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந் தேன். இந்து சட்டத் தொகுப்பு இந்த நாட்டின் சட்டமன்றம் மேற்கொண்ட மிகப் பெரிய சமூக சீர்திருத்த நடவடிக்கையாகும். கடந்த காலத்தில் சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட எந்த சட்டமோ அல்லது இனி இயற்றப்போகும் எந்த சட்டமோ இதற்கு இணையாக இருக்க முடியாது. இன ஏற்றத்தாழ்வும் பாலின ஏற்றத்தாழ்வும் இந்து சமுதாயத்தைப் பீடித்துள்ள பெரும் பிணியாகும். இதை அப்படியே விட்டுவிட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தப் பட்ட சட்டங்களை இயற்றிக்கொண்டே போவது நமது அரசியல் சாசனத்தைக் கேலிக்கூத்தாக்குவதாகும். சாணிக் குவியலின் மீது அரண்மனையைக் கட்டுவது போலாகும். இந்து சட்டத் தொகுப் புக்கு நான் வழங்கும் முக்கியத்துவம் இதுதான். ஆகவே நான் ஏதேனும் தவறைச் செய்திருப்பேனாகில் ஏதோ நல்லதைச் செய் கிறோம் என்ற நம்பிக்கையில்தான் அவ்வாறு செய்திருப்பேன். எதிராளிகளின் முட்டுக்கட்டையிடும் சாகசங்களை சமாளிக்க எனக்கு உரிமை இல்லையா? இது சம்பந்தமாக அவையில் பிரதமர் கொடுத்த மூன்று அறிக்கைகளை மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1949 நவம்பர் 28 ஆம் தேதி பின்வரும் உறுதிமொழிகளைப் பிரதமர் வழங்கினார். அவர் கூறியதாவது:

"இந்து சட்டத்தொகுப்பை செயல்படுத்த அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது. இது சம்பந்தமான மசோதாவை அது பரிசீலித்து வருகிறது."

★ ★ ★

''அரசாங்கம் இந்த சட்டத் தொகுப்பு விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளும். இந்நடவடிக்கையை ஏற்றுக்கொள்வது இந்த அவையின் விருப்பத்தைப் பொறுத்துள்ளது. ஆனால் ஒரு முக்கியமான நடவடிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு இந்த அவை அதை நிராகரிக்குமானால், அந்த அரசாங்கத்தை அவை நிராகரிக்கிறது. அதற்குப் பதில் வேறொரு அரசாங்கம் வருகிறது. இது அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் ஒரு நடவடிக்கை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் நீடித்து நிற்பது அல்லது வீழ்ச்சியடைவது இதையே பொறுத்துள்ளது.

1949 டிசம்பர் 19-அன்று மீண்டும் பிரதமர் கூறியதாவது :

''இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா முக்கியமானதல்ல என்று நாங்கள் கருதுவதாக இந்த அவை சிறிதளவும் எண்ணுவதை நான் விரும்பவில்லை; ஏனெனில் அதற்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கிறோம்; எந்த ஒரு குறிப்பிட்ட ஷரத்தோ அல்லது வேறு எதுவுமோ அதற்குக் காரணம் அல்ல. மாறாக பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகளை அது அடிப்படையான முறையில் அணுகுவதே இதற்குக் காரணம். இந்த நாட்டில் நாம் அரசியல் சுதந்திரத்தை பெற்றிருக்கிறோம். நமது பயணத்தில் இது ஒரு கட்டமாகும். பொருளாதாரம், சமூக மற்றும் இதர பல கட்டங்கள் உள்ளன. நமது சமுதாயம் முன்னேற வேண்டுமானால் எல்லா முனைகளிலும் ஒருங்கிணைந்த முன்னேற்றம் தேவை.''

1951 செப்டம்பர் 26 அன்று பிரதமர் கூறியதாவது:

''நமக்குள்ள சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் இந்த விஷயம் குறித்து செயல்பட அரசாங்கம் விரும்புகிறது என்று இந்த அவைக்கு உறுதியளிப்பது அவசியம் என்று நான் நினைக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை அடுத்த வாய்ப்பு கிட்டும்வரை இந்த நடவடிக்கை ஒத்திவைக்கப்படுகிறதாக கருதுகிறோம் - அந்த வாய்ப்பு இந்த நாடாளுமன்றத்திலேயே கிட்டும் என்று நம்புகிறேன்.''

இதன் பின்னர்தான் இந்த மசோதாவைக் கைவிடுவதாகப் பிரதமர் அறிவித்தார். பிரதம மந்திரியின் இந்த அறிவிப்புக்களை யார்தான் நம்பாமல் இருக்க முடியும்? பிரதம மந்திரியின் வாக்குறுதிகளுக்கும் செயல்களுக்கும் இடையில் ஒரு வேறுபாடு இருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை என்றால் அத்தவறு நிச்சயமாக என்னுடையதல்ல. அமைச்சரவையிலிருந்து நான் வெளியேறியது இந்நாட்டில் எவருக்கும் பெரும் கவலையளிக்கும் விஷயமாக இருந்திருக்காதிருக்கலாம். ஆனால் எனக்கு நானே உண்மையாக இருக்க வேண்டும்; நான் வெளியேறுவதன் மூலம் தான் அவ்வாறு உண்மையாக இருக்க முடியும். அமைச்சரவையின் ஓர் உறுப்பினராக இருந்தபோது என்மீது வைத்திருந்த அன்புக்காகவும் பாசத்திற்காகவும் எனது சகாக்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு நான் விலகாத நிலையில் என்பால் மிகுந்த பொறுமை காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுடில்லி
195. அக்டோபர் - 10

பி.ஆர். அம்பேத்கர்